Mallika Manivannan



# Sangeetha jaathi mullai

All parts together

# மல்லிகா மணிவண்ணனின் சங்கீத ஜாதி முல்லை

கணபதியே அருள்வாய்

## சங்கீத ஜாதி முல்லை

**அத்தியாயம் ஒன்று :**

**யாருக்காகவும் எவருக்காகவும் நிற்பதில்லை காலமும்.... நேரமும்...... தனி மனித வாழ்க்கைப் பயணமும்!**

காரை ஓட்டிக் கொண்டிருந்த ஈஸ்வர் என்கின்ற விஷ்வேஸ்வரனின் மனதில் தோன்றிக் கொண்டிருந்த வரிகள் இவை. தோன்றிய நேரம் அவனையறியாமல் ஒரு பெருமூச்சு எழுந்தது. அதற்குள் மண்டபம் வந்திருந்தது. நெருங்கிய நண்பன் முரளிதரனின் திருமணம். விண்ணுலகை மண்ணுலகத்திற்கு கொண்டு வந்தது போல அலங்காரம்.

முரளியின் தாத்தா முன்பொரு காலத்தில் மத்திய, மாநில அமைச்சராக இருந்தவர். இப்போது இல்லை. ஆனாலும் அரசியலில் தான் இருக்கிறார். அதனால் அரசியல் பிரமுகர்கள் நிறைய பேர். அவனின் அப்பா முன்பு ஹைவேஸ் ரோடு காண்ட்ராக்ட், இப்போது ஹைவேஸ் டோல் டெண்டர் எடுதிருக்கிறார். சோ பணம் கொட்டோ கொட்டென்று கொட்டிக் கொண்டிருக்கிறது.

அவனுடைய ஜாகுவாரை நிறுத்த இடமே இல்லை. இடம் பார்த்து நிறுத்தி வந்தான். அதுவரை இருந்த சீரியஸ் முக பாவனை மாறியது. உள்ளே நுழைந்ததும் முகத்தை மலர்ச்சியாக வைத்துக் கொண்டான்.

அவனைப் பார்த்ததும் முரளியின் வீட்டில் பலத்த வரவேற்ப்பு. எத்தனை பிரமுகர்கள் இருந்தாலும் ஈஸ்வருக்கு ஸ்பெஷல் வரவேற்ப்பு. அவனின் குடும்ப பாரம்பர்யம் அப்படி. பெரிய மனிதர்கள்.

முரளியின் தாத்தாவைப் பார்த்து ஒரு வணக்கம் வைக்க “அப்பா அம்மா வரலையா ஈஸ்வர்” என்றார்.

“காலையில வருவாங்க” என்றான் புன்னகை முகமாக. மேடையில் இருந்து முரளி “மேலே வா” என்பது போலக் கையசைக்க, “வர்றேன் இருடா” என்பது போல சைகை காட்டி அப்படியே தான் அமர்ந்திருந்தான்.

அந்தப்புறம் வந்த முரளியின் அப்பா ராஜாராம் இவனைப் பார்த்ததும் நின்றவர் “ஈஸ்வர், நீ மட்டுமா வந்த, அப்பா அம்மா வரலையா” என்றார் அவரும்.

“காலையில வருவாங்க அங்கிள்” என்றான். பிறகு அவரும் கடந்து விட்டார். வருவோர் போவோரை வேடிக்கைப் பார்த்து அமர்ந்திருந்தான். அதிலும் அழகான பெண்கள் சற்று அதிகம் அவனை கவர்வர். வஞ்சனையின்றி அவர்களை ரசித்து அமர்ந்திருந்தான்.

அவனின் எண்ணத்தில் ஓடியது ஒன்று தான் அப்பொழுது, சினிமாவில் வருபவர்களைக் கவர்ச்சியாக வருகிறார்கள் என்று சொல்வது எந்த வகையில் நியாயம். மினி ஸ்கர்ட், பிகினி எல்லாம் கவர்ச்சி இல்லை என்றே தோன்றியது.

பலர் அழகாக உடையணிந்திருந்த போதும், சிலர் தங்களைப் பார் பார் என்று எடுத்துக் காட்டுவது போல அணிந்திருப்பதாக தோன்றியது. “எப்படி இவங்க வீட்டுக்காரங்க எல்லாம் இவங்களைக் கேட்கவே மாட்டாங்களா” என்று அவர்களை விட அவர்களின் ஆண்மக்களை சாடியது.

“உனக்கு என்னடா? காட்டுறவங்களை ரசி, காட்டாதவங்களை எதிர்பார்க்காத, என்சாய் டா மச்சான்” என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

அவனை அங்கு வந்த பிரமுகர்கள் பலருக்குத் தெரிந்திருந்தது, பலரும் ஒரு ஹாய் ஹலோ சொல்லியே சென்றனர்.

இரு கண்கள் ஆர்வத்துடன் தாத்தா அவனிடம் பேச ஆரம்பித்ததில் இருந்து பார்த்துக் கொண்டு இருந்தது. ஓரமாக அமர்ந்து அனைவரையும் வேடிக்கை தான் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். எல்லோரையும் பார்த்தாலும் கண்கள் ஈஸ்வரிடத்தில் அதிக நேரம் நிலைத்தது.

விருந்தினர்கள் சூழ்ந்து இருந்த போதும் அவளின் அருகில் வந்த ராஜாராம் “ஜூஸ் குடிச்சியாம்மா” என்றார்.

“எஸ் பா! கொண்டு வந்து கொடுத்தாங்க” என்றவள், “யு கேரி ஆன், நான் இந்த கிரௌவுட் ரொம்ப என்ஜாய் பண்றேன். அது யாருப்பா அது” என்றாள் ஈஸ்வரை காட்டி.

திரும்பிப் பார்த்தவர் “அது ஈஸ்வர் டா! முரளி பிரிண்ட், ஹேன்சம்மா இருக்கான்ல” என்று கூடவே பிடித்திருக்கிறதா என்று மகளை ஆராய்ந்தபடி சொன்னார்.

அப்போது தான் அவனின் தோற்றத்தையே கவனித்தாள் “எஸ் பா லுக்கிங் ஹேண்ட்சம்” என்றாள் அதை அமோதிப்பது போல,

ஈஸ்வரின் தோற்றத்தை அப்போது தான் கவனிக்கிறாள் என்றுணர்ந்தவர் “அப்போ என்னடா அவன் கிட்டப் பார்த்துட்டு இருந்த”

“அதுப்பா, எல்லோரும் அவர்கிட்ட பேசறாங்க, சிலர் பவ்யமா, சிலர் மரியாதையா, பலர் ஃபிரண்ட்லியா, இங்க நம்ம ரிலேடிவ்ஸ் நிறைய பேருக்கு என்னைத் தெரியும், ஆனா என்னைப் பார்த்தா சிரிக்க வேண்டி வந்திடுமோன்னு கவனமா பார்க்காம சுத்திட்டு இருக்காங்க”

“அதான் கேட்டேன் யார் அவர்ன்னு, இந்த மாதிரி பிறக்கறது லக்கி இல்லை” என்றாள்.

“வருத்தப்படுகிறாளோ?” என்பது போல கவலையாகப் பார்த்தார் ராஜாராம். முகத்தில் இருந்து ஒன்றும் தெரியவில்லை. மிகுந்த பக்குவம் கொண்டவள் அவரின் மகள்.

“யாரு பார்த்து பார்க்காதது மாதிரி போனது” என்று கோபப்பட,

“அப்பா எனக்கு யார் பேசலைன்னாலும் வருத்தம் இல்லை, எனக்கு பேச நிறைய பேர் இருக்காங்க, நீங்க போங்க” என்று சமாதானம் செய்து அனுப்பினாள்.

போக ஆரம்பித்தவரிடம் “யார்கிட்டயும் சண்டை போடாதீங்க ப்ளீஸ்! என்னை வெச்சு இங்க ஒரு பிரச்சனையும் வரக் கூடாது. நீங்க எந்த கலாட்டாவும் செய்யக் கூடாது. கல்யாணத்தை நல்லபடியா முடிங்க” என்றாள் சிறு கண்டிப்புடன்.

சரி என்பது போல தலையசைத்துக் சென்றார். மீண்டும் தனியாக அமர்ந்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள். இதனிடையில் கமலா வந்து அவள் என்ன செய்கிறாள் என்பது

போலப் பார்த்துப் போனார். ஆனால் பேசவெல்லாம் இல்லை. அவளும் அதை பார்த்து தான் இருந்தாள், அவளும் பேச முயற்சி செய்யவில்லை.

கமலா ராஜாராமின் மனைவி, முரளியின் தாயார். பின்பு மீண்டும் உறவினர்களை கவனிக்க சென்று விட்டார். அவளைத் தெரிந்த யாரும் அவளுடன் பேசவில்லை தான். ஆனாலும் என்ன செய்கிறாள் என்பது போல கவனித்தே இருந்தனர்.

மூன்று மணிநேரம் இடத்தை விட்டு அசையாது அமர்ந்தே இருந்தாள். ஓரளவு கூட்டம் குறைந்து மணமக்கள் வீட்டினர் சற்று ஆசுவாசப்பட, அப்போது தான் இடத்தை விட்டு எழுந்தாள்.

கமலாவிடம் சென்று “நான் எப்போ வீட்டுக்குப் போகட்டும் பெரியம்மா” என்று கேட்க,

“நீ இன்னும் அண்ணாவோட போட்டோ எடுக்கலை”

“பரவாயில்லைம்மா” என்றாள் இதற்காக மேடை ஏற வேண்டுமா மணப்பெண் வீட்டினர் எப்படியோ என்பது போன்ற யோசனைகள் ஓட,

“அப்பா வருத்தப்படுவாங்க” என்ற கமலாவின் வார்த்தை மறுபேச்சு பேசாமல் மேடை ஏற வைத்தது.

அவள் ஏறவும் அவளோடு கமலாவும் ஏறினார். அப்போதுதான் ஈஸ்வர் நண்பனோடு புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தான்.

அதனால் அவர்கள் நெருங்காமல் தள்ளி நிற்க,

அப்போதுதான் ஈஸ்வர் அவர்களைப் பார்த்தான். அவளைப் பார்த்ததும் முரளியைப் பார்க்க “வளர்ந்துட்டா அடையாளம் தெரியுதா உனக்கு”

ஸ்கூல் நாட்களில் இருந்து முரளியும் ஈஸ்வரும் நண்பர்கள். இருவருக்கும் இடையில் அவர்களின் ரகசியங்கள் என்று எதுவும் கிடையாது. அடுத்தவர்களின் ரகசியங்கள் மட்டுமே பகிர மாட்டார்கள்.

“உங்கப்பாவோட பொண்ணா” என்றான் மெல்லிய குரலில்.

“ஆம்” என்பது போல ஒரு சிறு சைகை செய்தவன் “பிளஸ் டூ முடிச்சிட்டா, இப்ப காலேஜ் சேர வந்திருக்கா” என்றான் மெல்லிய குரலில்.

போட்டோ எடுத்து விட்டார்கள் என்றதும் கமலாவும் அவளும் நெருங்கினர்.

அப்போது தான் மணமகள் ஷாலினிக்கு முரளி அவளை அறிமுகப்படுத்த நினைத்து, அவளைப் பற்றி சொல்லியிருக்கிறான் என்றாலும் ஒரு சில நொடி தயங்க “ஹலோ அண்ணி! நான் சங்கீதவர்ஷினி, அண்ணா என்னைப் பத்தி சொல்லியிருப்பாங்க” என்று புன்னகைத்தாள்.

முரளி சொல்லி அவளைப் பற்றி ஈஸ்வருக்கு தெரியும், சில வருடங்களுக்கு முன் அவளை ஒரு முறை பார்த்தும் இருக்கிறான். அறிமுகமில்லை. அப்போது சிறு பெண். இப்போது வளர்ந்து விட்டாள். உயரமாக பூசின உடல் வாகோடு கொழுக் மொழுக் என்று இருந்தாள். குழந்தைத்தனமான முகம். அமுல் பேபி என்று தோன்றியது.

ஷாலினி என்ன சொல்வது என்று தெரியாமல் விழிக்க, பதிலை எல்லாம் வர்ஷினி எதிர்பார்த்த மாதிரியே தெரியவில்லை, ஷாலினியின் பக்கத்தில் நின்றாள்.

என்ன பேசுவது என்று தெரியாமல் “என்ன படிச்சிருக்க வர்ஷினி” என்று சம்ப்ரதாயதிற்கு ஷாலினி கேட்க,

“இப்ப தான் அண்ணி ப்ளஸ் டூ எழுதியிருக்கேன், நேத்து தான் எக்ஸாம் முடிஞ்சது, இன்னைக்கு தான் இங்க வந்தேன்” என்றாள் சகஜமாக.

“அம்மா வாங்கம்மா” என்று முரளி கண்ணசைக்க மகனின் பக்கத்தில் கமலா நிற்க, அதை கீழிருந்து பார்த்த ராஜாராம் மேலே வர , கூடவே அவரின் இன்னொரு மகன் பத்மநாபன் தாத்தாவை அழைத்துக் கொண்டு வந்தான்.

குடும்ப சகிதம் நின்று போட்டோ எடுக்க, எல்லோரும் அவர்களை முக்கியமாக சங்கீதவர்ஷினியை பார்த்தனர். தன் மகள் என்று அவர் யாரிடமும் மறைத்தது இல்லை, ஆனாலும் இது போல குடும்ப நிகழ்வுகளில் வர்ஷினி முன் நிற்க மாட்டாள் ஒதுங்கி தான் நிற்பாள். சிறு வயதில் இருந்தே அறிவாளிக் குழந்தை.

இந்த முறை ராஜாராம் அவளை ஒதுங்கி நிற்க விடவில்லை. அவரை மீறி யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை. அதனால் நடப்பது நடக்கட்டும் என்று விட்டு விட்டனர்.

ஈஸ்வர் அவர்களின் குடும்ப போட்டோ வைபவத்தை பார்த்துக் கொண்டுதான் இருந்தான். எப்படி தான் இப்படி இவர்களால் முடிகின்றதோ என்றுதான் தோன்றியது. ஒரு இல்லீகல் சைல்ட், அதை எப்படி கொஞ்சமும் கூச்சம் இல்லாமல் நிற்க வைக்கிறார். அந்தப் பெண்ணும் எப்படி நிமிர்வோடு நிற்கிறது என்று தான் அவனின் நினைப்பு ஓடியது. காசு பணம் இருந்தால் எல்லாம் சரியாகி விடுமா. சமூக அமைப்பு என்று ஒன்று இல்லையா என்று ஏகத்திற்கும் நினைப்புகள்.

முரளியின் அப்பா பெரிய ப்ளேபாய் என்பது ஊரறிந்த ரகசியம். ஆனாலும் அப்படி பிறந்த மகளை இப்படி எப்படி நடு சபையில் மகள் என்று சொல்லாமல் மகள் என்று ஒரு அங்கீகாரம் கொடுக்கிறார் என்று பார்த்து நின்றான். அவருக்கு தைரியமா இல்லை குடும்ப உறுப்பினர்கள் யாரும் கேள்வி கேட்பது இல்லையா, கமலா அம்மா பாவம் என்று தோன்றியது.

நமக்கு எதற்கு அவர்களின் கதை, கவலைப்பட நமக்கு என்ன பிரச்சனையா இல்லை என்று மனதிற்குள் கொண்டுவந்தவன் முரளியைப் பார்த்து கண்ணசைத்து கிளம்பினான்.

காலம் எவ்வளவோ மாறிவிட்டது என்பதை அவன் மனம் உணரவில்லை. அவருடைய இன்னொரு மனைவிக்கு பிறந்த மகள் என்று நினைக்கத் தோன்றவில்லை. மிகவும் பழமையில் ஊறிய குடும்பம் அவனது. அதனால் எண்ண ஓட்டங்கள் எப்பொழுதும் அதனை ஒட்டியே இருக்கும்.

ராஜாராம் மட்டும் தான் அவரின் வீட்டில் அப்படி மற்றபடி அவரின் மகன்கள் சொக்கத் தங்கங்கள், ஒழுக்கத்தில் மட்டுமல்ல எல்லா வகையிலும். அதனால் தான் வர்ஷினியை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடிந்தது.

வெளியே வந்து கார் கதவை திறக்கும் வரை தான் முரளியின் வீட்டைப் பற்றிய நினைவு. அதன் பின் அவனின் கவலைகள் சூழ்ந்து கொண்டன. முகமும் தீவிரம் காட்டியது.

அவனின் கார் ஹாரன் கேட்டதும் செக்யுரிட்டி கதவை திறந்தான். உள்ளே சென்றால் வீடு இன்னும் உறங்க ஆரம்பிக்கவில்லை.

குழந்தைகள் உறங்கியிருந்தனர். மற்றபடி எல்லோர் ரூமும் திறந்து தான் இருந்தது. அவனது கூட்டுக் குடும்பம், அதாவது அவனது பெரியப்பாவும் அப்பாவும் ஒரே கூரையின் கீழ். அவர்களை இந்தத் தமிழ் நாட்டில் தெரியாத ஆண்மக்கள் குறைவு, ஏனென்றால் அவர்களது தொழில் அப்படி, ஈஸ்வர் ஃபினான்ஸ் இந்தியா ப்ரைவேட் லிமிடெட்.

இப்போது பெரியப்பா இல்லை. அப்பா தான் குடும்பத் தலைவர். பெரியப்பாவிற்கு ஒரு ஆண், ஒரு பெண். இவனின் அப்பாவிற்கும் ஒரு ஆண், ஒரு பெண். இன்னமும் சிறு வேலை என்றாலும் அந்த வீட்டில் பூஜைகளும்...... புனஸ்காரம், ஆச்சார்யம், ஐதீகம் என்று எல்லாம் அணி வகுக்கும், காரணம் அவனின் பாட்டி சௌந்தரி அம்மாள்.

வெளி உலகிற்கு அவன் ஈஸ்வர் ஆனால் வீட்டில் விஷ்வா, “ஏண்டா இவ்வளவு நேரம் விஷ்வா” என்ற பாட்டியின் குரல் ஓங்கி ஒலிக்க,

“நீங்க தூங்காம என்ன பண்றீங்க பாட்டி, முரளி கல்யாணம் நாளைக்கு காலையில ஞாபகமில்லையா அங்க போயிட்டு வர்றேன்”,

“பட்டு வேஷ்டி சட்டையில போயிருக்கக்கூடாது”

“பாட்டி கல்யாணம் அவனுக்கு, எனக்கு இல்லை”

“நீ சரின்னு சொல்லு, இப்ப பொண்ணுங்களை வரிசையா நிறுத்தறேன்”

அவர் அப்படி சொன்னதும் தான் சைலண்டில் இருந்த மொபைலை எடுத்துப் பார்த்தான், ஐஸ்வர்யாவிடம் இருந்து பல மிஸ்ட் கால்கள், “தோ வந்தர்றேன் பாட்டி” என்று ரூமிற்கு விரைந்தவன், போனை எடுத்து அவளை அழைத்தான்,

“சாரி ஐஷ், கவனிக்கலை, முரளி மேரேஜ்ல இருந்தனா, போன் எடுத்துப் பார்க்கவேயில்லை” என்றான்.

எதிர்புறம் ஒரு பதிலும் இல்லை “அதான் சாரி சொல்றேன் இல்லை”

“நீங்க சாரி சொல்லலைன்னா தான் அதிசயம். டெய்லி சொல்றது தானே! எப்பவாவது நான் கூப்பிட்டு ஃபோன் உடனே

அட்டென்ட் செஞ்சு இருக்கீங்களா! கிடையவே கிடையாது! அந்த ஃபோனை தலையில சுத்தி விட்டது ஏதோன்னு தூக்கிப் போடுங்க" என்றாள் கோபமாக.

"அதைத் தூக்கிப் போட்டா அப்புறம் கால் பார்த்து உன்னை எப்படி கூப்பிடறதாம்",

"கூப்பிட வேண்டிய அவசியமேயில்லை! கூப்பிட்டு மட்டும் என்ன பண்ணப் போறீங்க, படிச்சியா, சாப்பிட்டியா, தூங்குனியா கேட்பீங்க" என்றாள் கடுப்பாக.

"ஹலோ டாக்டரம்மா! கூல் இப்படிக் கோபப்படக்கூடாது புரிஞ்சதா! எப்படி போகுது பீ ஜி என்டரன்ஸ் ப்ரிபரேஷன்"

"எங்கயோ போயிடுச்சு, அதான் தேடிட்டு இருக்கேன்"

"இரு, நான் கண்டுபிடிச்சு குடுக்கறேன்" என்று பேச ஆரம்பித்தவன், பத்து நிமிடமாக பேசி, அவளின் மூடை சற்று சரியாக்கி "என்னை நினைக்கறதை விட்டு ஒழுங்கா படிங்க" என்று சொல்லி வைத்தான்.

வைத்தவுடன் தோன்றியது ஒன்று தான் "யாருடா சொன்னது காதலிக்கறது ஈசின்னு, வேலையிருக்குன்னு அப்பா அம்மா எல்லோரையும் ஒரே வார்த்தைல கட் பண்றேன். இவளை முடியுதா?" என்று நினைத்தாலும் ஐஸ்வர்யாவின் முகம் கண்களில் தோன்றியதும், ஒரு புன்னகை தானாக முகத்தில் ஒட்டியது. மனதில் இருந்த கவலைகள் சற்று மட்டுப்பட்டது.

அது ரூமை விட்டு வெளியே வரும் வரை தான், வந்த க்ஷணம் அண்ணன் ஜகன்னாதனை கண்டதும் அப்படியே மாறியது.

"என்ன சொல்றான்" என்றான் உஷ்ணமாக.

"ஆளையே பிடிக்க முடியலை விஷ்வா! பிடிச்சா தானே பதிலை வாங்க முடியும்" என்றான் கவலையாக.

"இந்த பதிலை இன்னும் எத்தனை நாள் சொல்வீங்க" என்று அடிக் குரலில் சீறினான் வீட்டினர் யாரும் கேட்டு விடாதபடி,

ஜகன்னாதனின் முகம் முற்றிலும் இயலாமையைக் காட்டியது.

“என்கிட்ட விடுங்க, நான் பார்த்துக்கறேன்னு சொன்னாலும் கேட்க மாட்டேங்கறீங்க, தொழிலையும் சொந்தத்தையும் நட்பையும் குழப்பாதீங்க! அது வேற! இது வேற! நாளைக்குதான் உங்களுக்கு டைம், அவனைப் பிடிக்க முடியலையா என் கிட்ட விட்டுடுங்க, நான் பார்த்துக்கறேன்” என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பிக் கொண்டு இருந்தான்.

அதற்குள் ஜகனின் மனைவி ரூபா வர... பேச்சு நின்றது. இருவரும் அப்படியே நிற்பதைப் பார்த்து “என்ன விஷ்வா” என்றாள்.

“ஒன்னுமில்லை ரூப்ஸ்” என்று சொல்லி ஈஸ்வர் அந்த இடத்தை விட்டுச் சென்று விட,

“என்ன?” என்றாள் கணவனைப் பார்த்து.

“அதான் அவன் ஒன்னுமில்லைன்னு சொல்றானே!” என்று ஜகன் சொல்ல,

“இல்லை, ஏதோ கண்டிப்பா இருக்கு, அவன் ரூப்ஸ் சொல்லிட்டு போறான். கண்டிப்பா கான்சியஸ்ல இருந்தா அண்ணி தான் சொல்வான். என்ன செஞ்சு வெச்சிருக்கீங்க” என்றாள் கணவனின் புத்திசாலித்தனத்தை அறிந்தவளாக.

ஒரு பார்வை மட்டுமே பதிலாய்க் கொடுத்தவன், வேறு பேசாமல் சென்று விட, ஏதாவது பிரச்சனையா என்னவென்று தெரியவில்லையே என்று கவலை எட்டிப் பார்த்தது. கூடவே எதுவாகினும் ஈஸ்வர் பார்த்துக் கொள்வான் என்ற எண்ணம் எழ, ஒரு ஆசுவாசப் பெருமூச்சோடு ரூமை நோக்கி சென்றாள்.

அம்மாவையும் அப்பாவையும் தேடிக் கீழே இறங்கினான் ஈஸ்வர். அதற்குள் உறங்கப் போயிருந்தனர். வெகு நேரமாகிவிட்டது அப்போது தான் தெரிந்தது.

தன் ரூமிற்கு சென்று படுக்கையில் விழுந்தவனால் உறங்கத்தான் முடியவில்லை.

**ஒரு மனிதனை நல்லவனாக்குவதும் தீயவனாக்குவதும் அவனின் சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்பது எழுதப்படாத உண்மை.**

## அத்தியாயம் இரண்டு :

## அணைகள் இட்டாலும் வழியில் நில்லாது
## பொன்னி நதி... கன்னி நதி... ஜீவ நதி..

அடுத்த நாள் முரளியின் திருமணமும் வெகு சிறப்பாக நடந்தது. ஈஸ்வர் குடும்ப சகிதமாக கலந்து கொண்டான். எல்லோரும் வந்தனர், அப்பா நமஷிவாயம், அம்மா மலர், தங்கை ரஞ்சனி, அண்ணன் ஜகன், அண்ணி ரூபா என்று அனைவரும். ஈஸ்வரின் தங்கைக்கு இன்னும் திருமணமாகவில்லை. ஜகனுக்கு மூத்தவள் சித்ரா அவளுக்கு திருமணம் ஆகியிருந்தது. பாட்டியும் பெரியம்மாவும் மட்டும் வரவில்லை.

முரளி அவர்கள் வீட்டினில் ஒருவன் போல, அங்கே வருவதும் போவதும் அதிகம். எல்லோரும் கட்டாயம் வரவேண்டும் என்று அழைத்திருந்தான். அதனால் எல்லோரும் வந்தனர்.

முரளி வீட்டினர் இன்றைய நிலையில் பெரும் பெரும் பணக்காரர்கள் தான். ஆனால் புது பணக்காரர்கள். ஈஸ்வரின் வீட்டினர் பரம்பரை பணக்காரர்கள். அந்த ஹோதா எப்பொழுதும் அந்த வகை ஆட்களுக்கு தனி தான்.

சங்கீதவர்ஷினி அன்று முரளியின் அருகில் தான் இருந்தாள், அவளின் அப்பா அங்கே தான் நிற்க வேண்டும் என்று கண்டிப்பாக சொல்லியிருந்தார். ஒதுங்கி தனியாக அமரக் கூடாது என்று கட்டளையே இட்டு இருந்தார்.

இன்னம் இரண்டு மூன்று வருடங்களில் அவளுக்கு திருமணம் செய்ய உத்தேசித்து இருந்ததால் தன்னுடைய மகள் என்று ஊருக்கே காட்ட விரும்பி அங்கே தான் இருக்க வைத்தார். முரளியும் ஷாலினியும் மணமேடையில் அமர்ந்து இருக்க அவர்களின் பின்புறம் மற்ற உறவினர்களோடு இருந்தாள்.

கமலாவிற்கும் உத்தரவு தான், சங்கீதாவை எதற்கும் விடக் கூடாது என்பது போல. தன் கணவரைப் பற்றி நன்கு அறிந்தவர். மகள் என்ற பாசம் அதிகம் என்றாலும் அதையும் விட அவருடைய செல்வலக்ஷ்மி சங்கீதா அவரைப் பொறுத்தவரை, ஆம் அவர்களுடைய செல்வ நிலை சங்கீதவர்ஷினி அவர்களின் வாழ்க்கையில் வந்த பிறகு தான் அதலபாதாளத்தில் இருந்து விண்ணைத் தொட்டது.

அது வரை சாதாரண ஜீவனம் கூட கிடையாது கஷ்ட ஜீவனம் தான். ராஜாராமின் அப்பா, அப்போது தான் எம் ல் ஏ சீட் கிடைத்து அரசியலில் நிற்கிறார். ஜெயித்து உடனே மந்திரியாகிறார்.

ஆனாலும் உடனே ஊழலில் மாட்டி மந்திரி பதவி பறிபோகும் நிலை. வர்ஷினி உருவான நேரம், அதை  கர்ப்பத்தில் அழிக்கும் நாள் தாண்டிவிட, வேறு வழியில்லாமல் பிறந்த குழந்தை. பிறந்த பின் அவளின் அம்மா ராஜாராமின் வாழ்க்கையில் இருந்து விலகிவிட...

அவள் பிறந்த நேரம் ராஜாராம் அப்பாவின் மந்திரி பதவி நின்று விட, அதன் பிறகு ஏறுமுகம் தான் அவரின் வாழ்க்கையில். திரும்பி பார்க்கவேயில்லை.

பணம், பகட்டு, மரியாதை என்ற ஒரு உலகம்... பெண்கள், உல்லாசம், உலகம் சுற்றுதல் என்று ஒரு உலகம். வாழ்க்கையின் ஒவ்வொறு நிமிடத்தையும் அனுபவிப்பவர்.

அதனால் யாரையும் விட மகள் மிகவும் முக்கியம். மகள் என்ற பாசம் இருந்தாலும், என்னவோ ஒரு மரியாதையும் கூட. அவளால் தான் இந்த செல்வ நிலை என்பதால், அதனால் தந்தை என்ற முறையில் சகஜமாக பேசினாலும், ஏதோ ஒன்று தள்ளி நிற்பார்.

அது கொண்டு தான், சங்கீத வர்ஷினியால் என்பது நிஜமோ பொய்யோ, அந்த வறுமையில் இருந்து வசதி என்ற ஏறுமுகத்தை வாழ்க்கையில் பார்த்தவர்கள், கமலாவும் முரளியும் பத்மநாபனும். அதனால் வர்ஷினி அவர்களுக்கும் முக்கியமானவள்.

இன்னும் நன்றாக பேசுவார்கள் தான். ஆனால் வர்ஷினி தள்ளியே நிற்பாள். அது அவளின் இயல்பா என்ன யாருக்கும் தெரியாது. அதனாலேயே மற்றவர்களும் ஒதுங்கிக் கொள்வர். என்னைப் பார்த்தா சிரிக்கணும்னு பார்க்காத மாதிரி போகறாங்க என்ற குற்றச்சாட்டு பாதி அவளின் பிறப்பைக் கொண்டு என்றாலும் மீதி அவளைக் கொண்டே. எல்லோரையும் பார்த்து எப்போதும் புன்னகைப்பதில் வஞ்சனை கிடையாது. ஆனால் அதற்கு மேல் பேசமாட்டாள். கேட்பதற்கு பதில் மட்டும். அதனால் பேசுபவர்களுக்கு மேலே என்ன பேசுவது என்றே தெரியாது.

இப்போதும் பதுமையாய் பின் நின்று எல்லோரையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு, யாரவது ஏதாவது கேட்டால் மட்டும் பதில் சொல்லி என்று நின்று கொண்டிருந்தாள். ஏதோ ஒரு ஈர்ப்பு அவளின் தோற்றத்திலா இல்லை உடல் மொழியிலா எல்லோர் கவனத்தையும் கவர்ந்தாள். பார்வையை சில நொடிகளில் இருந்து சில நிமிடங்கள் பலரும் அவள் மேல் நிலைக்க விட்டே திருப்பினர்.

ரூபாவும் ரஞ்சனியும் “யார் அது” என்று ஈஸ்வரிடம் கேட்டனர். “அவளா...”, என்று அசட்டையாக பதில் சொன்னான், “முரளியோட

அப்பாவோட பொண்ணு"

"தங்கையா?", என்று ரஞ்சனி ஆர்வமாக கேட்க, "தங்கை தான்", என்று என்று இழுத்ததில்,

"என்ன" என்றனர் குழப்பமாக.

"கூடப் பொறந்தவ இல்லை, ஆனா அவங்க அப்பாக்கு பொறந்தவ" என்றான்.

"ஓஹ்" என்று யோசனையாக பார்த்தனர். ரஞ்சனி "உனக்குத் தெரியுமா நீ பேசியிருக்கியா" என்று ஆர்வமாக கேட்க..

"எப்பவோ பார்த்திருக்கேன். அவ சின்னப் பொண்ணா இருக்கும் போது, பேசினது இல்லை, அவ தேடித் போய் பேசற அளவுக்கு பெரிய ஆளோ முக்கியமானோ ஆளோ கிடையாது. அது சரியான முசுடு கூட முரளி சொல்லியிருக்கான். இவன் பத்து வார்த்தை பேசினா ஒரு வார்த்தை பேசுமாம்" என்றான் அலட்சியமாக, இயற்கையில் உடம்பில் ஊரிய திமிர் அப்படித்தான் கணிக்க வைத்தது.

"எப்படித் தான் தப்பு பண்ணிட்டு தைரியமா அவங்கப்பா இப்படி செய்யறாரோ, அதுவும் நடு சபையில நிக்க வெச்சு இவ்வளவு முக்கியத்துவம்" என்று மனதில் உள்ளதை மறைக்காமல் சொல்லவும் செய்தான். ரூபாவும் ரஞ்சனியும் யாரவது கேட்டுவிட்டார்களோ என்று பயந்து பார்த்தனர்

அந்த பயமெல்லாம் ஈஸ்வருக்கு இல்லை, "அவர் செஞ்சதை தானே சொன்னேன், அவருக்கே இல்லாத போது எனக்கென்ன" என்றான்.

ஈஸ்வரைப் பற்றி தெரிந்தவர்களாக கப்பென்று வாயை மூடிக் கொண்டனர் ரூபாவும் ரஞ்சனியும். முகத்தில் அடித்தார் போல எப்பொழுதும் பேசிவிடுவான். எதிரில் நிற்பவர் மனது காயப்படுமா இல்லையா என்று பார்க்க மாட்டான் என்று சொல்வதை விட, பட்டால் படட்டுமே அதுதானே உண்மை! என்பது போலத்தான் அவனின் பேசுக்கள் இருக்கும்.

அதற்குள் கையில் இருந்த ரூபா, ஜகனின் குழந்தை பிரணவி சிணுங்க, அவளைக் கையில் வாங்கினான். அது குண்டு குண்டென்று அழகாக இருந்தது. அவளுக்கு அண்ணன் சரண் யுகேஜி படித்துக் கொண்டிருந்தான். அவனைப் பள்ளியில் விட்டு தான் இவர்கள் திருமணத்திற்கு வந்திருந்தனர்.

மேடையில் தாலிக் கட்டி முடித்து மற்ற சடங்குகள் முடிந்திருக்க, முரளி எதற்கோ ஈஸ்வரைத் தேடியவன், யாரிடம் சொல்வது என்று தெரியாமல், வர்ஷினியிடம் “என் பிரெண்ட் ஈஸ்வர் இங்க இருப்பான். கூப்பிடு” என்று அவனைத் தேடி அடையாளம் காட்ட,

“அங்க இருக்காங்க அவங்க தானே” என்று காட்டினாள்.

“உனக்கு எப்படித் தெரியும்” என்றதற்கு, “அப்பா சொன்னாங்க” என்றாள்.

அப்பா எதற்கு இவளிடம் சொல்ல வேண்டும் என்ற யோசனை ஓடிய போதும் “கூப்பிடேன்” என்றான்.

கீழே இறங்கி அவர்களை நோக்கி வந்தவள் “அண்ணா கூப்பிடறாங்க” என்றாள் ஈஸ்வரிடம், குரல் அவ்வளவு இனிமையாய் மென்மையாய் சற்று குழந்தைத்தனம் மாறாமல் இருந்தது.

தன்னிடமா பேசினாள் என்று ஒரு நொடி கேள்வியாய் ஈஸ்வர் பார்க்க, அவனின் கையில் இருந்த பிரணவியின் அழகில் லயித்தவள், “உங்க குழந்தையா அழகா இருக்கா?” என்று கூடவே சொன்னாள்.

ரஞ்சனிக்கு சிரிப்பு பொங்கியது, ரூபா “என் குழந்தை” என்று சொல்ல வந்தவள் ரஞ்சனியின் சிரிப்பில் அடங்கினாள்.

ரஞ்சனியின் சிரிப்பிற்கு காரணம் “ஒரு அழகான பொண்ணு உன்னைப் பார்த்து ஒரு குழந்தைக்கு அப்பான்னு சொல்லிடிச்சே” என்ற எண்ணம். அதை அண்ணனிடம் பார்வையில் காட்டினாள். ஈஸ்வர் ரஞ்சனியின் சிரிப்பை பார்த்தாலும் அவனிடம் ஒரு ரியாக்ஷனும் இல்லை.

“நீங்க தப்பா எடுக்கலைன்னா நான் குழந்தையை தூக்கட்டுமா” என்று வர்ஷினி ஆர்வமாய் ஈஸ்வரிடம் கேட்க,

சில நொடிகள் அவளின் சகஜ மனப்பான்மையில் விழித்து தயங்கி நின்றான்.

அதற்குள் வர்ஷினி கையை வேறு நீட்டி விட, கொடுப்பதா வேண்டாமா என்று மனம் பெரிய பட்டி மன்றம் நடத்திய போதும் கைகள் தானாக நீட்டியது.

“குட்டிப் பாப்பா உங்க பேர் என்ன?” என்று வர்ஷினி குழந்தையிடம் பேச... இவன் கண்களால் பார்த்துக்கொள்ளுங்கள் என்று ரூபாவிற்கும் ரஞ்சனிக்கும் காட்டிச் சென்றான்.

“உங்க பாப்பா வா?” என்று ரூபாவை நோக்கியும் கேட்க,

“இப்ப தான் சரியா கேட்டிருக்க நீ” என்ற ரஞ்சனி,

“இது இவங்க பாப்பா” என்று ரூபாவை காட்டியவள் பின்பு சென்று கொண்டிருந்த ஈஸ்வரை காட்டி, “அவர் பாப்பா இல்லை, அவருக்கு கல்யாணமாகலை, இது அவங்க அண்ணி, நான் தங்கச்சி, இது அண்ணன், இது எங்க அப்பா அம்மா” என்று மொத்த குடும்பத்தையும் ஒரே நிமிடத்தில் அறிமுகம் செய்தாள்.

எல்லோரையும் பார்த்து மரியாதைக்கு புன்னகை செய்தவள், “பேர் என்ன?” என்றாள்.

“ரஞ்சனி” என்று ரஞ்சனி சொல்ல,

“ரஞ்சனி பாப்பா” என்றாள் குழந்தையை நோக்கி,

“அய்ய இல்லை, அது என் பேரு, பாப்பா பேரு பிரணவி” என்றாள் ரஞ்சனி.

“நல்லா இருக்கு” என்று சொன்னவள், “நான் கொஞ்சம் நேரம் வெச்சு இருக்கட்டா” என்றாள் தயங்கி.

“எங்க வெச்சு இருப்ப” என்று ரஞ்சனி கேட்க,

“அங்க” என்று மேடையைக் காட்டியவள், கூடவே “நீங்களும் வாங்க” என்று அழைக்க,

என்னவோ குழந்தையை வர்ஷினி அணைத்துப் பிடித்திருந்த விதத்தில் அதை வாங்க மனது வராத ரூபா, “இல்லை, அவ வேண்டாம்! நாங்க இங்க தானே இருக்கோம், நீ போ” என்றாள்.

“தேங்க்யு அக்கா” என்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு வேடிக்கை காட்டிக் கொண்டு நடந்தாள்.

மேடையில் இவள் கையில் குழந்தையைப் பார்த்ததும் “யார் குழந்தை” என்றார் கமலா, கீழே இருந்த ரூபாவை காட்டினாள். அவருக்கு ஈஸ்வரை தெரியும் அவனின் அப்பா அம்மாவை தெரியும்

வேறு யாரையும் தெரியாது. ரூபாவின் பக்கத்தில் இருந்த அவர்கள் கவனத்தில் பதியவில்லை.

“யார் அவங்க” என்றவர், “யார் குழந்தையாவது தூக்காத வர்ஷினி தப்பா நினைக்க போறாங்க” என்றார்.

“ஓஹ்” என்றவள் கீழே இறங்கப் போக,

“அது எங்கண்ணா குழந்தை தான் ம்மா” என்றான் ஈஸ்வர், வர்ஷினி குழந்தையைத் தூக்கிக் கொண்டு மேடை ஏறும் போதே பார்த்து விட்டான். அதனால் அவனால் பதில் சொல்ல முடிந்தது.

“அப்போ சரி” என்றவர் விருந்தினர்களை கவனிக்கப் போய் விட,

இப்போது குழந்தையை வைத்திருப்பதா கொடுப்பதா என்று குழப்பம், அது அவளின் கண்களிலும் பிரதிபலித்தது.

அந்தப் பார்வை ஈஸ்வருக்கு நன்கு புரிந்தது. அப்போது தான் அந்தக் கண்களை பார்த்தான், நீல நிறக் கண்கள். நம் பெண்களில் பார்க்க அரிதான கண்கள். அந்தக் கண்கள்… அதைப் பார்த்தவுடன் சட்டென்று மூழ்கிப் போகத் தோன்ற, “சே, என்ன நினைப்பு” என்று மனதை ஒருமைப் படுத்தினான்.

அவன் பாட்டிற்க்கு முரளியின் புறம் சென்று விட்டான்.

அந்த ஒரு நொடி, அவனின் பார்வை, அது என்ன என்று வர்ஷினி ஆராயும் முன், அந்த இடத்தை விட்டு அகன்றிருந்தான் ஈஸ்வர்.

அப்போது பார்த்து பத்மநாபன் வந்தவன், அவன் ஒரு புறம் யார் குழந்தை என்று கேட்க, என்னவோ மாற்றி மாற்றி கேட்டதில் மனம் துவள, “அவங்களது” என்று ஈஸ்வர் வீட்டைக் காட்டியவள், ஒரு நொடி கூட நிற்காமல் குழந்தையைக் கொண்டு போய் ரஞ்சனியிடம் கொடுத்தாள்.

அதையும் ஈஸ்வர் பார்த்துக் கொண்டு தான் இருந்தான். ரொம்ப ரோஷம் போல என்று ஒரு நக்கல் புன்னகை உதட்டில்.

“பிரணவி அழுதாளா” என்றபடி ரஞ்சனி வாங்க, “இல்லை” என்று வாய்த் திறந்து கூட சொல்லாமல், இல்லை என்பது போலத் தலையாட்டி “தேங்க்ஸ் கா” என்று சொல்லி போகத் திரும்பவும்,

“என்ன நான் உனக்கு அக்காவா?” என்றாள் ரஞ்சனி சற்று கோபமாக,

இருந்த மனநிலையில் அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று புரியாமல், தான் எதுவும் தவறு செய்து விட்டோமா என்று மிரட்சியோடு பார்க்க,

அந்த நீல நிறக் கண்கள் இப்போது ரஞ்சனியையும் கவர்ந்தது, “ஹேய்! உன் கண்ணு ரொம்ப அழகு, நத்திங் டு வொர்ரி, இவ்வளவு அழகான பொண்ணு என்னை அக்கான்னு கூப்பிட்டா நான் வயசான மாதிரி தெரிவேன்ல, அதான்!” என்றாள் தோளைக் குலுக்கி ஒரு சிநேக பாவத்தோடு.

அது ரஞ்சனியின் ஸ்பெஷல். எல்லோரிடமும் நன்றாக பேசுவாள், அவர்களையும் பேச வைத்து விடுவாள்.

அப்போதுதான் ரஞ்சனி தன்னோடு விளையாடுகிறாள் என்று புரிய,

“நீங்க நிறைய பொய் சொல்வீங்களா?” என்றாள் வர்ஷினி.

“என்ன பொய் சொல்றேன்”

“என்னைப் போய் அழகு சொல்றீங்க” என்று சொல்லி சிறிது பல் வரிசைக் காட்டி வர்ஷினி சிரிக்க,

ரஞ்சனி “ஹ ஹ” என்று சிரித்தவள், “பொய் சொல்லலை, நீ நிஜமா அழகு” என்றவள், “பேர் என்ன? என்ன படிச்சிருக்க?” என்று கேட்க ஆரம்பிக்க,

“சங்கீதவர்ஷினி, ப்ளஸ் டூ எழுதியிருக்கேன்” என்று சொல்ல,

அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ரூபா, இப்போது சிரித்தாள்.

“எதுக்கண்ணி சிரிக்கிறீங்க” என்று இடுப்பில் கைவைத்துக் ரஞ்சனி கேட்க,

“அவ இப்ப தான் பிளஸ் டூ எழுதியிருக்கா நீ எம் பி பி எஸ் முடிச்சிட்ட, அவ உன்னை அக்கா கூப்பிடக் கூடாதா? என்ன அநியாயம் இது? அவ்வளவு சின்னா பொண்ணா நீ” என்றாள்.

அவர்கள் கலகலப்பாக பேசுவது வர்ஷினியைக் கவர, வேடிக்கை பார்த்தபடி நின்றாள். அவள் அப்படி வேடிக்கைப் பார்ப்பது இவர்களைக் கவர, அவளிடம் பேச்சுக் கொடுத்தனர்.

“உன் டிரஸ் ரொம்ப அழகா இருக்கு” என்ற ரஞ்சனி, “எங்க ஸ்டிச் பண்ணின” என்றாள்.

“கமலாம்மா தான் கூட்டிட்டுப் போனாங்க” என்று ஒரு தேர்ந்த டிரஸ் டிசைனரின் பேரை சொன்னாள். ரஞ்சனிக்கு யாரென்றே தெரியவில்லை, ரூபாவிற்கு நாளிதழில் சிறப்புக் கட்டுரையாக அந்த பேரை பார்த்த ஞாபகம்.

அது ஒரு காக்ரா சோலி தான், ஆனால் மிகுந்த வேலைப்பாடு இருந்தது. நகைகள் கூட எல்லாம் எப்பொழுதும் போடும் நகைகள் போல இல்லாமல் தேர்ந்து இருந்தது.

அந்த வார்த்தையில் இருந்தே தெரிந்தது, அவளை மிகவும் நன்றாக அக்கறை எடுத்துப் பார்த்துக் கொள்கிறார்கள் என்று.

“ஜ்வல்ஸ் கூட அழகா இருக்கு” என்றாள்.

“எல்லாம் கமலாம்மா செலக்ஷன்” என்றாள் வர்ஷினி. கூடவே “நீங்க டாக்டர்க்குப் படிச்சு இருக்கீங்களா” என்றும் கேட்டாள். யாரோடும் அதிகம் பேசப் பிரியப்படாதவள் ரஞ்சனியின் பேச்சிலும் அவளின் படிப்பிலும் ஒரு மரியாதை வர பேசினாள்.

ரஞ்சனி பேசிக்கொண்டு இருந்தாலும் எப்போதும் சுற்றுப் புறமும் கண்வைத்து இருப்பாள். அவள் கவனித்தது ஒன்று தான். யாரவது ஒருவர் ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை வர்ஷனி என்ன செய்கிறாள் என்பது போல பார்த்துச் சென்றனர்.

தான் என்னவோ புத்திசாலி என்று ரஞ்சனி நினைத்திருக்க, பேசிக் கொண்டு இருந்த போதும் பேச்சு வாக்கில் வர்ஷினி, “எப்பவும் அப்படி தான்” என்றாள்.

“என்ன?” என்பது போல ரஞ்சனி பார்க்க,

“என்னை வந்து வந்து பார்த்துட்டுப் போறதைத் தானே பார்த்தீங்க,  எப்பவும் அப்படி தான், யாரும் என்னை ஒரு வார்த்தையும் பேசிடக் கூடாதுன்னு பார்த்துகிட்டே இருப்பாங்க, அது என்னை ப்ரொடக்ட் பண்ண, அந்த அவசியமில்லைன்னு

அவங்களுக்கு புரியாது. அப்பாவோட ஆர்டர்” என்று அவள் சொல்லும்போதே அங்கே ராஜாராமும் கமலாவும் வந்தனர்.

வர்ஷினி யாருடனாவது இவ்வளவு நேரம் பேசினாள் என்றால் அது ஒரு அதிசயம் தான் அவர்களுக்கு. அதனோடு சேர்த்து முரளிக்காகவும் சிறிது நேரம் நமஷிவாயதிடம் அவரின் மனைவி மலரிடம் என்று பேசி சென்றனர்.

எல்லாம் பார்த்து இருந்தார் நமஷிவாயம், அவருக்கு சில வேலைகள் ஆக வேண்டி இருந்தது. அதனால் தான் திருமணதிற்குக் குடும்பத்தோடு வந்திருந்தார், பொறுமையாகவும் அமர்ந்திருதார்.

அவர்கள் செல்லும் போது வர்ஷினி உடன் சென்று விட்டாள்.

முரளியின் அருகில் இருந்த ஈஸ்வர் எப்போதோ மேடையில் இருந்து இறங்கி வந்து விட்டான். ஆனால் வர்ஷினி, ரஞ்சனியிடம் ரூபாவிடம் பேசிக் கொண்டு இருந்ததால் என்னவோ அருகில் வரத் தோன்றவில்லை. ஆனால் பார்வை வர்ஷினியின் மீது படிவதைத் தவிர்க்க முடியவில்லை. நொடிக்கொரு முறை கண்கள் சென்று மீண்டது.

என்ன இது என்று மனதில் ஒரு கேள்வி எழுவதை தடுக்க முடியவில்லை.

கட்டாயமாக பார்வையைத் திருப்பி வேறு இடம் பார்த்தான். மனதினில் ஒரு உஷ்ணம். மொபைல் ஒலிக்க எடுத்துப் பார்த்தால் ஐஸ்வர்யா, சலிப்பாக இருந்தது.

எடுத்தான் “சொல்லு ஐஷு”

“என்ன பண்றீங்க”

கடுப்பாக வந்தது “என்ன பண்ணுவாங்க, உன்கிட்ட எத்தனை தடவை சொல்றது, லவ் பண்ணினா எப்போ பார்த்தாலும் பேசணும்னு ஏதாவது அவசியமா? நேத்து நைட் தான் ஒரு ஹால்ப் அன் ஹவர் பேசினோம், காலையில கல்யாணத்துக்கு கிளம்பும் முன்ன ரெடி ஆகிட்டீங்களான்னு பேசின, ரீச் ஆனதுக்கு அப்புறம் ரீச் ஆகிட்டீங்களான்னு மெசேஜ் பண்ணின, இப்ப போன் பண்ற, வாட் இஸ் திஸ்? ஐ ஆம் நாட் திஸ் மேக், எரிச்சலா வருது” என்று வார்த்தைகளைக் கடித்து துப்பினான்.

அந்தப் புறம் ஐஸ்வர்யாவின் கண்களில் மளமளவென்று கண்ணீர் இறங்கியது. அழுதால் சமாதானம் எல்லாம் செய்ய மாட்டான், இன்னுமும் கத்துவான் “என்ன பழக்கம் இது? சும்மா சும்மா அழுதுட்டு! உனக்கு வேற வேலையே கிடையாதா?” என்று நான்கு நாட்கள் ஆனாலும் பேசமாட்டான், ஃபோன் எடுக்கக் கூட மாட்டான்.

கண்ணீரை அடக்கினாள் ஐஸ்வர்யா.

**கண்ணுக்குள்ளே கண்ணீர் வெப்பம்.**

## அத்தியாயம் மூன்று :

**வாழ்க்கையில் எது முக்கியம் என்று தீர்மானிப்பது அந்த அந்த நிமிட தேவைகளே!!!**

ஐஸ்வர்யாவிடம் கத்திவிட்டான் ஈஸ்வர், ஏன் இப்படி பேசுகிறோம் என்று உள்ளுக்குள் ஒரு சிறு உறுத்தல் இருந்தாலும் சமாதானம் செய்ய பிடிக்கவில்லை. எத்தனை தடவை சொல்வது என்ற எண்ணம் தான். ஆனாலும் அழுவாள் என்று அனுமானித்தவன்,

“உன்னோட ப்ரொஃபஸன்க்கு இது கொஞ்சமும் மேட்ச் ஆகாது. அதுக்கு நீ வேற ஏதாவது கோர்ஸ் படிச்சிருக்கணும்” என்றான் பொறுமையாக.

அப்போது பார்த்து அவன் அருகில் ரஞ்சனி வந்து அமர, அவளிடம் வாயசைவில் “ஐஷ், டார்ச்சர் பண்றா” என்றான்.

“நீ திட்டியிருப்ப?” என்று ரஞ்சனி சொல்ல,

“அவ செய்யறதுக்கு திட்டாம கொஞ்சுவாங்களா” என்றான்.

அதைக் கையில் வாங்கிய ரஞ்சனி “சொல்லு ஐஷ்” எனவும்,

“ஒன்னுமில்லை” என்று அவள் சொல்லிய விதத்திலேயே அழுகிறாள் என்று தெரிந்தது.

“நான் பொறந்ததுல இருந்து இவனைப் பார்க்கிறேன், இப்ப சில வருஷமா நீயும் பார்க்கிற, அவனோட குணமே அப்படி, இந்த மாதிரி சின்ன சின்ன விஷயத்துக்கு அப்செட் ஆகாத, எனக்கு தெரிஞ்சு

விஷ்வா இந்த உலகத்துல கொஞ்சம் பொறுமையா தன்மையா அக்கறையோட பேசற ஒரே ஜீவன் நீதான், எங்க கிட்ட அதுக்கு மேல கத்துவான். புரிஞ்சு நடந்துக்கோ” என்றாள்.

“ம், சரி” என்றவள் “நான் அப்புறம் கூப்பிடறேன்” என்று வைத்து விட்டாள்.

“என்ன விஷ்வா?” என்ற தங்கையைப் பார்த்து,

“ப்ச், நைட் பேசறேன், காலையில பேசறேன், இங்க வந்து மெசேஜ் பண்றேன், திரும்ப கூப்பிட்டு என்ன பண்றன்னு கேட்டா”

“எனக்கு வேற வேலையே இல்லையா? இவ பின்னாடி சுத்தறது தான் வேலையா? பல தடவை நல்ல மாதிரி சொல்லிட்டேன், திட்டிட்டேன், கெஞ்சிட்டேன், ஏன் கொஞ்சிக் கூட சொல்லிட்டேன், இதுக்கு மேல என்ன பண்ண? இப்போவே இப்படின்னா! வாழ்க்கை முழுமைக்கும் என்ன பண்ணன்னு பயம் வருது” என்றான் சீரியசாக.

ஈஸ்வர் வெளியில் சொல்லிவிட்டான் ரஞ்சனி சொல்லவில்லை, ஈஸ்வரின் வேகத்திற்கும் விவேகத்திற்கும் ஐஸ்வர்யாவால் ஈடு கொடுக்கவே முடியாது. அது ரஞ்சனியை விட நன்கு அறிந்தவர் எவரும் கிடையாது. ஏனென்றால் ஈஸ்வரையும் நன்கு அறிவாள், ஐஸ்வர்யாவையும்.

ஐஸ்வர்யா ரஞ்சனியின் தோழி, எம் பி பி எஸ் படிப்பில் கூட படித்தவள் என்பதோடு கூடவே ரூபாவின் தங்கை, அப்படி உறவுக்காரர்கள் கூட. எப்படியோ சுற்றி வளைத்து ரூபாவின் வீட்டினர் இவர்களுக்கு உறவு, அப்படி வந்த சம்மந்தம் தான் அவர்கள். ஈஸ்வரின் வீட்டினருக்கு அவ்வளவு திருப்தியில்லை, ஏனென்றால் ரூபாவின் அப்பாவைப் பற்றி அவ்வளவு நல்ல அப்பிராயம் ஈஸ்வரின் தந்தைக்கும் அவனின் பெரியப்பாவிற்கும் இல்லை.

இவர்கள் வேண்டாம் என்று நினைக்க ஜகனுக்கு ரூபாவைப் பிடித்து விட்டதால் அவள் தான் வேண்டும் என்று நின்றான்.

ஈஸ்வர் தான் துணை நின்றான், “அப்பா ரூபாவை எனக்குத் தெரியும், என்னோட கிளாஸ் மேட் ஸ்கூல்ல நல்ல பொண்ணு” என்றான். ஆம் ரூபா அவனின் பள்ளி வகுப்புத் தோழி சிறு வயதில் இருந்தே, பல வருடம் ஒன்றாகப் படித்தவர்கள் அதனால் அவனுக்கு நன்கு தெரியும்.

ஜகன் அப்படி ஒன்றும் பெரிய புத்திசாலி என்று சொல்லிவிட முடியாது. ஆனால் ரூபா அப்படிக் கிடையாது மிகுந்த புத்திக் கூர்மை உடையவள், நல்ல அழகியும் கூட. அதனால் அண்ணனுக்கு இப்படி மனைவி அமைந்தால் அவனின் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்று தான் அப்பாவிடமும் பெரியப்பாவிடமும் சொன்னான்.

ஈஸ்வர் வயதில் சிறியவன் என்றாலும் எப்போதும் மிகவும் பொறுப்பானவன், ஆட்களை தெரிந்தவன் என்பதால் சரி என்று திருமணத்தை நடத்தினர்.

ஈஸ்வர் செய்த முட்டாள் தனம் அவன், ரூபாவை மட்டும் தான் பார்த்தான், பெண் தானே நம் வீட்டிற்கு தானே வரபோகிறாள் என்பது போல. அவன் அதிகம் கருத்தில் கொள்ளாத அவளின் தந்தை பிரகாசம்... ஈஸ்வரின் புத்திசாலித்தனதிற்கும் அப்பாற்பட்டவர்.

அவருக்கு மூன்று மக்கள், ரூபா பெரியவள், அதற்கு அடுத்து அஷ்வின், அதற்கு பிறகு தான் ஐஸ்வர்யா, வரிசையாக இருபத்தி ஐந்து, இருபத்தி நான்கு, இருபத்தி மூன்று வயதில் இருந்தனர்.

அஸ்வின் அவனின் அப்பாவிற்கும் மேல், ஆண்மக்கள் இப்படி இருக்க பெண்கள் ரூபா, ஐஸ்வர்யா அவளின் அம்மா மூவருமே நல்ல குணத்தை உடையவர்கள்.

அந்த குணமே ஐஸ்வர்யாவின் பால் ஈஸ்வரை ஈர்த்தது. சில வருடங்களாக தெரியும் என்றாலும், இப்போது ஒரு ஆறு மாதத்திற்கு முன் தான் காதல் என்ற வார்த்தையை இருவருமே பரிமாறிக் கொண்டனர். அதுவும் ரஞ்சனிக்கு மட்டும் தான் தெரியும். இன்னமும் வேறு யாருக்கும் தெரியாது.

“விடு விஷ்வா சரியாகிடுவா” என்றாள் ரஞ்சனி. அண்ணனுக்கும் தங்கைக்கும் இடையில் நல்ல தோழமை உண்டு. அண்ணன் என்ற மரியாதை, அன்பு, பாசம் எல்லாம் இருந்தாலும் “அண்ணா” என்ற வார்த்தை ரஞ்சனியின் வாயில் இருந்து வராது.

இவர்கள் பேசியபடி அமர்ந்திருக்க, மேடையில் நிற்காமல் இப்போது ஒரு ஓரமாக ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்த வர்ஷினி ரஞ்சனியின் பால் பார்வையை செலுத்த, அருகில் இருந்த ஈஸ்வரும் பார்வை வட்டத்திற்குள் வந்தான்.

சற்று நேரம் அவனைப் பார்த்திருந்தாள் அப்பா சொல்லிய ஹேண்ட்சம் வார்த்தையைக் கொண்டு.

“எஸ், ஹி இஸ் ஹேண்ட்சம் அண்ட் மேன்லி” என்ற எண்ணம் அவளின் பருவ வயதை ஒட்டிய எண்ணமாக தானாக உதித்தது. சிறிது நேரம் அவனை யாரும் அறியாமல் ரஞ்சனியைப் பார்ப்பது போல சைட் அடித்தாள்.

ஈஸ்வரின் வீட்டினர் எல்லோரும் சிறிது நேரத்தில் கிளம்பிவிட, மதிய உணவு உண்ணும் வரை இருந்தே கிளம்பினான்.

கண்கள் என்ன முயன்றாலும் வர்ஷினியை நிமிடத்திற்கு ஒரு முறை வட்டமிட்டு தான் இருந்தது. கண்கள் அவளின் ஒவ்வொரு அசைவையும் படம் பிடித்தது.

காதல் சொன்ன ஐஸ்வர்யாவிடம் கூட இப்படிப் பார்வை நிலைத்ததில்லை. இது ரசிக்கும் பார்வை அல்ல, கட்டுப்பாட்டையும் மீறி செல்லும் பார்வை. அதை ஈஸ்வரும் உணர்ந்தான்.

“what am i doing , developing a crush at this stage, oops” என்று மனம் அவனை அவனே கேள்வி கேட்டது. தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் “நீ வேறொரு பெண்ணைக் காதலிக்கிறாய்” என்று.

அவனாகவே ஐஸ்வர்யாவிற்கு அழைத்துப் பேசி மனதை திசை திருப்பினான்.

காலையில் அழுதது எல்லாம் பின்னுக்கு தள்ள முகம் மலர்ந்து அவனுடன் ஆசையாய் பேசினாள்.

முரளியிடம் சொல்லிக் கொள்ளப் பார்க்க, அவனருகில் தான் வர்ஷினியும் இருந்தாள், அதன் பொருட்டு அருகே போக மனமின்றி அங்கிருந்தே முரளிக்கு கிளம்புகிறேன் என்பது போல கையசைத்துக் கிளம்பினான்.

அவன் காரிடம் வந்து காரை ரிவர்ஸ் எடுத்து திருப்பின சமயம், காரருகில் வேகமாக வந்தாள் வர்ஷினி,

“ஏதடா இது? இவள் என் கண்ணில் படவேண்டாம் என்று தப்பி ஓடி வந்தால் இந்தப் பெண் எதற்கு இப்போது வெளியில் வந்தாள்” என்று மனதினில் ஓடினாலும் அவன் பாட்டிற்கு காரை நேரே செலுத்த முயல,

தன்னைப் பார்த்தவன் தான் அவனிடம் தான் வருகிறோம் என்று நிறுத்துவான் என்று வர்ஷினி நினைக்க, ஈஸ்வர் பாட்டிற்கு செல்ல, சட்டென்று எப்படி அழைப்பது என்று தெரியாமல்,

“ஹலோ மிஸ்டர், இருங்க” என்று அவனைப் பார்த்து சப்தமாக கூறிக் கொண்டு கையை வேறு ஆட்டினாள்,

“என்னையா? வேறு யாரையுமா?” என்று பார்வையை மட்டும் ஈஸ்வர் சுழல விடாமல், தலையையும் வேறு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திருப்பி பார்த்தான்.

அவனை புரிந்தவளாக “உங்களைதான்” என்றாள்.

“ஹலோ மிஸ்டர் ரர்ர்ர்ர்ரா” என்று சற்றுக் கடுப்பானவன், காரை நிறுத்தினான், ஆனாலும் இறங்கவில்லை.

இறங்கவில்லை என்றதும் அருகில் வந்தவள், “கமலம்மா இதை உங்க கிட்ட குடுக்கக் சொன்னாங்க” என்று ஒரு பெரிய பேக்கிங்கை நீட்டினாள்.

மிக நெங்கிய உறவினர்களுக்கு வழங்கும் பரிசுகளும் பலகார வகைகளும், கார் கதவு திறந்து தான் வாங்க முடியும், அதனால் அப்படியே டிக்கியின் லாக்கை விடுவித்து, “டிக்கி திறந்து வெச்சிடு” என்று சொல்ல,

வர்ஷினியின் முகம் நொடியில் மாறியது, ஏனென்றால் ஈஸ்வர் சிநேக பாவத்தோடு சொல்லவில்லை, ஏதோ வேலையாளை ஏவுவது போல சொன்னான்.

“கமலம்மா கைல தான் குடுக்க சொன்னாங்க”, என்று அப்படியே நின்றாள்.

டிக்கியில் வைப்பது அவளுக்கு ஒன்றும் பெரிதில்லை ஆனால் ஈஸ்வர் ஒரு அலட்சியத்தோடு சொல்ல, நேற்றில் இருந்து இருந்த அவனைப் பற்றின பிரமிப்பு விலகியது.

என்ன ஒரு அலட்சியம், ஒரு வேளை தன் பிறப்பைக் கொண்டோ என்று தோன்றிய நொடி, முகம் இறுகியது ஒரு கடினம் தானாக முகத்தில் ஏறியது.

“பாருடா ரோஷத்தை” என்று ஈஸ்வரின் மனதில் மீண்டும் ஓட,

அவன் பார்க்கும் போதே அந்தப் பேக்கிங்கை தூக்கிக் கொண்டு திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.

அவள் திரும்ப கொண்டு போனால் அது மரியாதையில்ல என்று உணர்ந்தவன் அவசரமாக இறங்கி அவளை நெருங்கும் முன்னே மீண்டும் மண்டப படியை எட்டி இருந்தாள்.

என்ன வேகம் என்று தோன்ற, வேகமாக முன் சென்று நின்று, கொடு என்பது போல கையை நீட்டினான்,

அவனைப் பாராது அதைக் கையினில் கொடுத்து நகர முயல,

“அதென்ன ஹலோ மிஸ்டர்ன்னு கூப்பிடற, மரியாதையா அண்ணா கூப்பிடத் தெரியாதா?” என்றான்.

“நான் ஏன் உங்களை அண்ணா கூப்பிடணும்”,

“என்ன பதில் இது” என்பது போலப் பார்த்தவன், “உங்க அண்ணனை அண்ணான்னு தானே கூப்பிடுவ,  உங்க அண்ணாக்கு ஃபிரண்ட் அப்போ என்னை அப்படிதானே கூப்பிடணும்”

“நான் இனிமே அண்ணனை அண்ணா கூப்பிடலை is that fine”, என்றவள் பார்த்த பார்வை, அது என்ன என்று ஈஸ்வர் எடை போடும் முன்  வர்ஷினி நிற்காமல் சென்று விட, வர்ஷினியின் பதில் சொன்ன விதத்தில், பார்வையில், அசந்து நின்று விட்டான் ஈஸ்வர்,,

பின்பு “மரியாதை தெரியாதவ, என்ன ரோஷம்? என்ன வேகம்? ஆளையும் அவளையும் பாரு, இப்ப தான் ப்ளஸ் டூ முடிச்சிருக்கா, அதுக்குள்ள என்ன திமிர், இதெல்லாம் இன்னும் முறையா பொறந்திருந்தா” என்று மனதிற்குள் சாடிக் கொண்டே சென்றான்.

யாரிடமும் பயம் இல்லாதவன் ஈஸ்வர், தப்பென்று தெரிந்தாலும் நான் இப்படி தான் என்று துணிந்து செய்பவன், இந்த வார்த்தைகளை சத்தமாக உச்சரிக்க நினைத்தாலும் வெளியில் வரவில்லை என்பது தான் உண்மை.

வர்ஷினியின் பார்வை, ஹப்பா என்ன உக்கிரம் பார்வையில், எரிப்பாளோ என்று தான் தோன்றியது.

ஈஸ்வருக்கு தெரியவில்லை பார்வையே இப்படி என்றாள், வார்த்தைகள், அவளின் செயல்கள்... அதற்கு எந்தக் கட்டுப் பாடும் வார்ஷினியிடம் கிடையாது என்று.

உள் சென்ற வர்ஷினிக்கு ஒரே யோசனை நேற்று இருந்து “எல்லோரும் இவனிடம் நன்றாக பேசினார்கள், இவனும் நன்றாகத்

தான் எல்லோரிடமும் பேசினான், மரியாதையான தோற்றம், அப்படி தான் அவன் நடத்தை எல்லோரிடமும் அவள் பார்த்த வரையிலும், ஆனால் என்னிடம் மட்டும் எவ்வளவு அலட்சியம் அவனின் பார்வையில். வேலையாள் மாதிரி டிக்கியில் வை என்கின்றான்".

"அதுவும் என்னை அடிக்கடி பார்த்த மாதிரி வேறு இருந்தது. அதனால் தானே பெரியம்மா கொடுத்து அனுப்பிய உடன் நான் சென்றேன், இல்லை சென்றிருக்க மாட்டேனே"

"எது கொடுத்த தைரியம் இது, என் பிறப்போ!!!", என்ற எண்ணம் உதித்த நேரம், வர்ஷினி அவனைத் திட்ட உதிர்த்த கெட்ட ஆங்கில வார்த்தை, ஒரு பெண் தன்னை இப்படித் திட்டக் கூடும் என்று அதுனாள் வரையிலும் விஷ்வேஷ்வரன் கனவிலும் நினைத்திருக்க மாட்டான்.

இருவருள்ளும் அந்த நாள் முழுவதும் ஏதோ ஒன்று கனன்று கொண்டிருந்தது. ஈஸ்வர் தன்னை இயல்பாக காட்டிக் கொண்டிருந்தான். ஆனால் வர்ஷினி அதற்கு முயலவேயில்லை.

முரளியின் திருமண நாளாக இல்லாதிருந்தால் அவனிடமே சென்று கேட்டிருப்பாள், "நீங்க உங்க ஃபிரிண்ட் கிட்ட என்னைப் பத்தி என்ன சொல்லியிருக்கீங்க? ஏன் என்னை வேலைக்காரங்க மாதிரி கைல வாங்காம டிக்கில வை சொன்னாங்க" என்று.

கேட்காவிட்டாலும் முகத்தில் கோபம் அப்படியே இருந்தது. ஒதுங்கி அமர்ந்து கொண்டாள். வீடு வந்ததும் ரூமின் உள் புகுந்து கொண்டாள்.

முகம் பார்த்தே ஏதோ சரியில்லை என்று சுற்றம் மொத்தமும் அறிந்தது. ஏனென்றால் சங்கீத வர்ஷினியின் முகம் பல சமயம் பாவனைகளை மறைக்க முற்பட்டாலும் சில சமயம் உள்ளதை உள்ளபடி காட்டும் மாயக் கண்ணாடி.

கமலா கேட்க விழைய, பத்மநாபன் ஒரே வார்த்தையால் அடக்கினான் "வேண்டாம்" என்று,

ராஜாராம் "ஏன்" என்க,

"கல்யாண வீடு, இத்தனைப் பேர் இருக்காங்க, காட்சிப் பொருள் ஆக்க வேண்டாம். அவ ரூம்ல தான் இருப்பா, நாளைக்குப் பேசிக்கலாம்" என்று விட்டான்.

அவன் சொல்வதும் நியாயமாக பட்டதால் அவரவர் அவரவர் வேலையைப் பார்த்தனர்.

அடுத்த நாள் சற்று தெளிந்திருந்தால் வர்ஷினி, “யாரோ எவனோ விட்டுத் தள்ளு, கொஞ்சம் அப்நார்மல் போல அவன்” என்றது மனது.

“என்ன அப்னார்மலா? ஏன்?” என்று ஒரு புறம் அறிவு கேட்க

“பின்ன ரொம்ப அழகு இல்லைன்னாலும் நான் அழகு தான், என்னைப் போய் அண்ணான்னு மரியாதையா கூப்பிட மாட்டாயான்னு கேட்கறான். அப்போ அவன் அப்நார்மல் தான்” என்று மனது சொல்ல,

அறிவு சிரித்தது. அதைப் பார்த்து மனதும் சிரித்தது.

இது சிரிக்க வேண்டிய விஷயமல்ல என்று வர்ஷினிக்கு புரியவில்லை, பின்னே “அண்ணா என்று அழைக்க மாட்டாயா” என்று ஈஸ்வர் கேட்டது,

அவளின் புறம் செல்லும் கண்களையும் மனதையும் அடக்க,

அவனை அவனே கட்டுக்குள் வைத்துக் கொள்ள,

அடங்காமல் அலைபாயும் உணர்வுகளைக் கடிவாளமிட,

இது ஒரு புது வித உணர்வு அவனுக்கு, பெண்ணைப் பார்த்தால் மனதில் மட்டுமல்ல உடலிலும் மாற்றங்கள் நிகழும் என்று அவன் முதன் முதலில் உணர்ந்து கொண்டது வர்ஷினியை கண்ட பிறகு தான்.

இவளானால் “உன்னை அண்ணான்னு கூப்பிடணும்னா என்னோட அண்ணனையே அப்படிக் கூப்பிட மாட்டேன்” என்று திமிர் செய்து வந்திருந்தாள்.

இளம் கன்று பயமறியாது என்பது இதுதானோ..

மண்ணாசை, பொன்னாசை, இதை விட பெண்ணாசை மிகவும் கொடிது... மனிதனின் நற்பண்புகள் இயல்புகள் என்று அத்தனையும் மாற்ற வல்லது.

அழித்தது ஆண்.... அழிவது பெண்.... என்பது முடிவா என்று அறியப் படாத போதும், பெண்ணாசை வைத்த ஆண் வைத்த

நிமிடத்தில் இருந்து அழிவை நோக்கி பயணத்தை தொடங்குகிறான்.

அது இயற்கை உடனுக்குடனோ அல்லது ஜென்மங்கள் கழித்தோ அவனுக்குக் கொடுப்பது.

இது அவனுக்கு நேராமல் இருக்க ஒரே வழி, அந்தப் பெண்ணும் ஆசைவைத்தால் மட்டுமே,

வைத்து விட்டால், அது அழிவிலிருந்து அவனை மீட்டு விடும், உலகின் மாபாதக செயலான காமம், உலகின் உன்னத செயலான காதலாக மாறிவிடுகிறது.

மீட்சியோ? மாட்சியோ?

**காதலில்லாத காமம் உண்டு!!!**
**காமமில்லாத காதல் இல்லை!!!**

## அத்தியாயம் நான்கு :

**நிஜமா? நிழலா?**
**நிஜமின்றி நிழல் சாத்தியமல்ல!!!**

இந்த ஜகன் செய்து வைத்த வேலையால், ஈஸ்வர் மிகுந்த மனக்குழப்பத்தில் இருந்தான். என்ன செய்வது என்று தெரியவில்லை. எவ்வளவு பணம் எப்படிச் சரி செய்வது... தெரியவில்லை.

இருபத்தி ஐந்து வயது இளைஞன், இப்போது தான் ஃபைனான்ஸ் கவனித்துக் கொள்ள ஆரம்பித்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. ஓரளவிற்கு இப்போது தான் பிடிபட ஆரம்பித்து இருக்கிறது.

பெரியப்பாவிற்கு மிகுந்த புத்தி கூர்மை, அவர் வளர்த்தது தான் இந்த தொழில். அவரின் இழப்பு குடும்பத்தை விட நிறுவனத்திற்குத் தான் மிகுந்த இழப்பு.

அவரின் கூர்மை நமசிவாயதிற்கோ ஜகனிற்கோ இல்லை. இப்போது தான் ஈஸ்வர் புரிந்து அதைச் சற்றுத் திறம்பட நடத்த துவங்கியிருக்கிறான். ஆனாலும் அனுபவமின்மை அவனைத் தடுமாற வைக்கிறது.

இப்போது ஜகன் இழுத்து விட்டிருக்கும் பிரச்சனை, பணம் திரும்ப வாங்க வேண்டும். எப்படி என்று தான் தெரியவில்லை.

ஆம்! ஜகனுடன் எப்போதும் சுற்றிக் கொண்டு இருப்பவன் ரூபாவின் தம்பி அஸ்வின். அவன் மாட்ட வைத்திருக்கும் பணம் இவர்களின் பைனான்ஸ் தொழிலையே அழித்து விடும். சிறிது சிறிதாக ஆரம்பித்து இப்போது பெரிய அளவில் தொகை ஒன்று சிக்கிக் கொண்டு இருக்கிறது.

சிறிது என்பது அவர்களைப் பொறுத்தவரை ஆயிரமோ லட்சமோ அல்ல கோடிகளில் தான். இதில் பெரிது என்பது சில கோடிகளில் அல்ல பல கோடிகளில்.

அந்த அஸ்வின்னானால் ஆள் பதினைந்து நாட்களாக கண்ணில் படக் காணோம்.

அப்பாவிடம் மெதுவாக விஷயத்தை ஒருவாறு சொல்லி விட்டான் ஈஸ்வர். விஷயம் கேள்விப் பட்டதில் இருந்து நமசிவாயம் அப்படியே அமர்ந்தது அமர்ந்த படி இருந்து விட்டார்.

பணப் பிரச்சனை என்று தெரியும், ஆனால் இவ்வளவு பெரிது என்று தெரியாது. பணப் பிரச்னையை சரி செய்ய தான் முரளியின் அப்பாவிடம் உதவி கேட்க வேண்டி திருமணதிற்கு சென்று அவ்வளவு நேரம் இருந்து வந்தார்.

இப்போது ஈஸ்வர் சொல்லும் தொகை கண்டிப்பாக கேட்க முடியாது. எப்படி எப்படி இப்படி தவறு நேர்ந்தது என்றால் ஜகன், அவனின் நல்ல தன்மையை அஸ்வின் உபயோகித்துக் கொண்ட விதம். அப்படிதான் நமசிவாயமும் ஈஸ்வரும் நினைத்துக் கொண்டிருந்தனர்.

“என்னடா பண்ணலாம் விஷ்வா, இன்னும் ரெண்டு மாசத்துல ஒரு க்ரூப் மக்களுக்கு நாம் அறிவிச்ச ஸ்கீம் படி பணம் மெச்சூர் ஆகுது! எல்லோருக்கும் பணம் திரும்பக் கொடுக்கணும், என்னடா இது எப்படி கொடுக்க போறோம்”.

“ஒருத்தனுக்குக் கொடுக்கலைன்னா கூட பிரச்சனை பெருசாகிடுமே, என்ன பண்ண?”

“இன்னும் ரெண்டு மாசம் இருக்கு தானேப்பா, இந்த அஸ்வினைப் பிடிக்கறேன். பணத்தை வாங்கப் பார்க்கிறேன்”

“ஜகன் என்ன சொல்றாண்டா?”

“அவனுக்கு எதுவுமே தெரியலைப்பா, முழிக்கறான், கேட்டா அஸ்வினைப் பிடிக்க முடியலை சொல்றான், குடுத்த சரி அவ்வளவு பெரிய தொகை எதுக்குன்னு கேட்டான், பணம் இருக்க இல்லையா என்னடா பண்ணுனீங்கன்னு கேட்டா ஒண்ணுமே பேச மாட்டேங்கறான்”.

இருவரும் அதற்கு மேல் பேசிக் கொள்ளவில்லை.

என்ன செய்யலாம் என்று எப்போதும் முரளியிடம் கேட்பான், இப்போது திருமண நேரம் என்பதால் அவனுடனும் பேச முடியவில்லை.

பணம் திரும்ப வாங்கியே ஆக வேண்டும், அஸ்வின் என்ன செய்து வைத்திருக்கிறான் தெரியவில்லை ஜகன் வேறுக் கூட இருந்திருக்கிறான். மனம் வழியை யோசிக்க முடியவில்லை.

இனி தயங்குவதில் பிரயோஜனமில்லை என்று புரிந்து, ஜகனை அழைத்துக் கொண்டு அடுத்த நாள் காலையிலேயே ரூபாவின் வீட்டிற்கு சென்றான், காலை என்றால் கிட்ட தட்ட ஆறு மணிக்கே சென்றனர்.

அவர்கள் வீடு விழிக்கவேயில்லை. கதவை ரூபாவின் அம்மா தான் திறந்தார். காலையில் இவர்களை பார்த்ததும், என்ன இந்த நேரத்தில் என்று முகம் குழப்பத்தைக் காட்டிய போதும், “வாங்க வாங்க” என்று உபசரித்தார்.

கூட ஈஸ்வரை பார்த்ததும் ஏதோ தொழில் விஷயம் என்று புரிந்தது. ஏனென்றால் ரூபாவிற்கு திருமணமாகி இத்தனை வருடத்தில் ஈஸ்வர் அவர்களின் வீட்டிற்கு வந்தது மூன்று நான்கு முறை இருக்கும் அவ்வளவு தான்.

“அஸ்வின் இருக்கானா” என்று எடுத்தவுடனே ஈஸ்வர் விஷயத்திற்கு வர.

“அவன் ஊருக்கு போயிருக்கான்”

“எந்த ஊருக்கு?”

“மலேசியா” என்றார்.

“என்ன?” என்று அதிர்ந்தான் ஈஸ்வர்.

ஜகனை பார்த்து முறைக்க,

“நேத்து வரைக்கும் என் கூட போன்ல காண்டாக்ட்ல தான் இருந்தான். அவன் மலேசியா போறது தெரியாது”

“நேத்து நைட் தான் போனான்” என்று அவனின் அம்மா சொல்ல,

“எதுக்கு போனான்? எப்போ வருவான்?”

“தெரியாதுங்க, ஏதாவது பிரச்சனையா” என்றார்.

“அவங்கப்பாவை வரச் சொல்லுங்க” என்றான் ஈஸ்வர், “மாமா” என்ற அழைப்பு எல்லாம் வரவில்லை.

அதுவே தெரியப்படுத்தியது பிரச்சனை பெரிது என்று

அவர் கணவரை எழுப்ப செல்ல, அப்போதுதான் ஐஸ்வர்யா எழுந்து வந்தாள், இருவரையும் பார்த்தவள், “வாங்க மாமா” என்று ஜகனை வரவேற்ற போதும், நொடியும் விடாமல் கண்கள் ஈஸ்வரைப் பார்த்தது. பார்த்து ஒரு வாரம் இருக்கும், நேற்றிலிருந்து அவளின் போன் எடுக்கவில்லை, பார்த்து அவனாகக் கூப்பிடுவான், அதுவுமில்லை, மெசேஜ்ஜிற்கு எந்த பதிலுமில்லை.

காலையில் இங்கே வந்திருக்கிறார்கள், தன்னைப் பார்க்க ஏதாவது சாக்கிட்டு வந்திருக்கிறானோ என்று சில நொடிகள் அந்த பேதை நெஞ்சம் நினைத்தது, ஆனால் அறிவு இல்லை என்று அடித்து சொன்னது அவன் அமர்ந்து இருந்த பாவனையைப் பார்த்து.

எப்போதும் ஐஸ்வர்யாவைப் பார்த்ததும் கண்களில் தோன்றும் ஒரு ஆர்வம், பளபளப்பு, எதுவும் இல்லை. இவள் வருவதைப் பார்த்தும் பார்வையைத் திருப்பியவன், இவளின் புறம் திரும்பவேயில்லை.

அடி வயிற்றில் ஏனென்று புரியாத ஒரு கலக்கம் ஐஸ்வர்யாவிற்கு. அற்புத அழகி ஐஸ்வர்யா. ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் வியக்கும் அழகி. அவளைப் பார்க்கும் போதே ரசனையாய்த் தான் பார்ப்பான் ஈஸ்வர். இன்று பார்க்கக் கூட இல்லை. எங்கோ பார்த்து அமர்ந்து இருந்தான்.

“ரூபா வரலையா மாமா” என்றாள் ஜகனைப் பார்த்து.

“இல்லை” என்பது போல ஜகனும் தலையை மட்டும் அசைத்தான் பதில் சொல்லவில்லை.

“என்ன மாமா? ஏதும் பிரச்சனையா?”

“அஸ்வின் எங்கே?” என்றான் ஜகன்.

“எங்களை விட அவன் எங்க இருக்கான்னு உங்களுக்கு தானே மாமா தெரியும்” என்று ஐஸ்வர்யா சொல்ல,

“உனக்குத் தெரிஞ்சா தெரியும்னு சொல்லு, அதை விட்டுட்டு உங்களுக்குத் தானே தெரியும்னு சொன்னா, என்ன பதில் இது? கேட்டா கேட்ட கேள்விக்கு பதில் சொல்லணும்” என்று ஈஸ்வர் கோபத்தில் கர்ஜித்தான்.

எதற்கு இவ்வளவு கோபம் என்று புரியாமல், ஈஸ்வர் பேசிய விதத்தில் பயந்து, நின்ற இடத்தில் இருந்து இரண்டடி தள்ளி நின்றாள் ஐஷ்வர்யா.

கூடவே “அஸ்வின் எங்கேன்னு தெரியாது” என்று கலக்கமாக சொல்ல...

யாரையும் எதையும் செய்ய முடியாத இயலாமையில், அவளை முறைத்துப் பார்த்தான்.

“அவகிட்ட எதுக்கு இப்பக் கத்துற” என்று ஜகன் சொல்ல,

“உன்னைக் கத்த முடியலை, அதுதான் அவளைக் கத்துறேன். வேற என்ன பண்ண?” என்றவன் மீண்டும் அவளை மேலிருந்து கீழ் பார்த்து முறைத்தான்,

அப்போது தான் தன் உடையைப் பார்த்தால், அது ஒரு சேட்டின் நைட்டி, உடலோடு ஒட்டி இருந்தது, ஸ்லீவ் லெஸ் என்று சொல்ல முடியாவிட்டாலும் குட்டைக் கை, அவனின் பார்வையை உணர்ந்தவள், வேகமாக உடை மாற்ற விரைந்தாள்.

எப்போதும் பெண்களின் உடை விஷயம் என்று வரும் போது ஈஸ்வர் அவ்வளவு பார்ப்பான். அழகாக அணியலாம், ஆனால் அடுத்தவரின் கண்களை உறுத்தும் விதமாக அணியக் கூடாது. “நீங்க ஏன் இப்படி டிரஸ் பண்ணறீங்க அப்புறம் பசங்க பார்க்கக் கூடாது அவனுங்க கிண்டல் பண்ணக் கூடாது ஏன் சொல்றீங்க”

“டிரஸ் பண்றது எங்க உரிமைன்னு சொன்னா? அதை பேசறது எங்க உரிமைன்னு அவனுங்க சொல்வானுங்க. ஏன் இப்படி ஒரு சினாரியோ க்ரியேட் பண்றீங்க” என்று பேச ஆரம்பித்தான் என்றால் நிறுத்தவே மாட்டான்.

ரஞ்சனி “அண்ணா...... டேய்!!!!! வாயை மூடுடா, உன் வீட்டு பொண்ணுங்களுக்கு சொல்றதோட நிறுத்து, அடுத்தவங்க வாழ்க்கை அவங்க அவங்க உரிமை” என்று சொல்வது எப்போதும் வழமை.

“நீ இப்படி எங்கள் முன் வந்து நிற்பாயா, ஜகன் இருக்கின்றான்” என்று அவனின் பார்வை குற்றம் சொல்லியதைத் தொடர்ந்து தான் ஐஸ்வர்யா வேகமாக விரைந்தாள் உடை மாற்ற...

அவள் மாற்றி பத்து நிமிடம் கழித்து வந்த போதும், அவளின் அப்பாவோ அம்மாவோ வரவில்லை.

இவள் சென்று பார்த்தால் அங்கே தாழ்ந்த குரலில் பெரிய வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது, “எனக்கு உடம்பு சரியில்லை, தூங்கறேன்னு சொல்லு போ”

“வீட்டு மாப்பிள்ளை அவர் கிட்ட எப்படி சொல்ல, கூட ஈஸ்வர் தம்பியும் வந்திருக்காங்க”

“எவன் வந்தா என்ன? தூங்கறேன்னு சொல்லு போ” என்று நின்றார்.

“மாட்டேன்” என்பது போல அவளின் அம்மா நிற்க,

“போ சொல்லு!” என்று அதட்டி அனுப்பினார்.

வேறு வழியில்லாமல் அவர் செல்ல, என்ன நடக்கிறது என்று புரியாமல் பார்த்து நின்ற ஐஸ்வர்யாவை “உனக்கு வேற தனியா சொல்லணுமா அனுப்பு அவங்களை” என்றார்.

இருவரும் வந்து நிற்க, யார் சொல்வது என்று தெரியாமல் தடுமாறினர்.

“அவருக்கு உடம்பு சரியில்லை, தூங்கறார்” என்றனர்,

“என்ன பதில் இது?” என்று அதிர்ந்து எழுந்து நின்று விட்டான், சில நொடிகள்.

கண்மண் தெரியாத கோபம் ஈஸ்வருக்கு “என்ன?” என்றவன், கண்களை மூடி நின்றான். “இதில் கோபம் வேண்டாமடா” என்று கட்டுக்குள் வந்தான்.

பொறுமையாக திரும்பவும் அமர்ந்தவன், “அவர் எழுந்துக்கற வரைக்கும் உட்கார்ந்து இருக்கேன்” என்ற படி அமர்ந்து கொண்டான்.

அஸ்வின் தான் ஏதோ செய்து விட்டான் என்று நினைத்திருக்க இப்போதுதான் தோன்றியது அவனின் அப்பாவிற்கும் பங்கு இருக்குமோ என்று.

யாரை நொந்தும் பயனில்லை, தன்னைத் தான் நொந்து கொள்ள வேண்டு என்றும் தோன்றியது. ஜகனின் புத்திசாலித்தனம் தெரிந்தும் அவனிடம் பண வரவுகளை பார்க்க விட்டது தப்பு தானே.

ஆனால் என்ன செய்ய முடியும்? அவனும் இதில் ஒரு நிர்வாகி. அவனை பார்க்க வேண்டாம் என்று சொல்லும் உரிமை ஈஸ்வருக்கு இல்லை. யாருடனும் அதிகம் பழகாத ஜகன், அஸ்வின் உடன் பழகவும், சரி பழகுகிறானே என்று அனுமதித்தது தன் தவறு தானே?

இது யாரிடமும் கோபம் காட்டும் நேரமில்லை, பணம் எங்கிருக்கிறது என்று தெரிய வேண்டும். முதலில் அதைக் கைப்பற்ற வேண்டும். பின்பு பார்த்துக் கொள்ளலாம் இவர்களை என்று அமைதியாக அமர்ந்து இருந்தான்.

மனதில் எதுவும் ஓடவில்லை, பணத்தை தங்கள் ஃபைனான்சில் போட்டவர்களுக்கு திரும்பக் கொடுக்க வேண்டும், அது ஒன்றே பிரதான எண்ணமாக மனதினில் ஓடிக் கொண்டிருந்தது.

ஐந்து வருடங்களக்கு முன் பணத்தை அப்படியே இரட்டிப்பாக தருகிறோம் ஐந்து வருட டிபாசிட்டில் என்று சொன்ன ஸ்கீம், நிறைய பேர் டிபாசிட் செய்திருந்தனர்.

இன்னும் இரண்டு மாதங்களில் அது முடிகிறது, அப்போது பெரிய அமௌன்ட் கொடுக்க வேண்டும். அது  மட்டுமின்றி சிறு சிறுக முதலீடு செய்தவர்கள் நடைமுறையில் வரும் பொழுது கொடுக்க வேண்டும், அது மட்டுமின்றி இந்த மாதிரி சிறு பணப் பிரச்சனை ஃபைனான்சில் என்று தெரிந்தாலும் பணத்தை லோனாக வாங்கியவன் எவனும் சரியாக திரும்பக் கட்ட மாட்டான், மொத்தமாக எல்லாம் முடிந்து விடும்.

நிறைய பணம் லோனாக தான் வெளியில் சுற்றிக் கொண்டு உள்ளது. அது வராது பிறகு, எல்லாம் சரியாக இருக்கும் பட்சத்தில் பணத்தை ஒழுங்காகக் கட்டுவார்கள், அதிலும் சில பேர் ஏமாற்ற முயலுவார்கள். இப்படி சிறு பிரச்சனை என்றாலும் எப்படி பணத்தைக் கட்டாமல் ஏமாற்றலாம் என்று தான் அநேகம் பேர் பார்ப்பார்கள்.

கத்தி மேல் நடக்கும் தொழில் இது. அதனால் தான் எவ்வளவு நன்றாகச் செய்தாலும் பல நிறுவனங்கள் சறுக்கி விடுகின்றன. சிறு நிறுவனங்களுக்கே அந்த கதி என்றால் இவர்களது பெரியது.

தாங்கள் சறுக்குவது ஒரு புறம் இருந்தாலும், நம்பி டெபாசிட் செய்த சாதாரண மக்கள், நினைக்கும் போதே நெஞ்சுக்குள் பிசைந்தது.

ஐஸ்வர்யா அவர்களுக்கு குடிக்க காஃபி எடுத்து வந்தாள். ஜகன் எடுப்பதா வேண்டாமா என்று ஈஸ்வரின் முகத்தைப் பார்த்தான்.

“கோடிக்கணக்குல பணத்தை விடும் போது என்னைப் பார்க்கலை, இந்த ஃகாபிக்கு எதுக்குடா என்னை பார்க்குற” என்று வார்த்தைகளை கடித்துத் துப்பினான்.

ஜகனின் முகம் அப்படியே விழுந்து விட்டது, தனியாக அவனை ஈஸ்வர் என்ன பேசினாலும் பிரச்சனை இல்லை, ஆனால் எல்லோர் முன்னிலையிலும் பேசினால் அதை அவனால் தாங்க முடியவில்லை.

என்ன பிரச்சனை என்று ஐஸ்வர்யாவிர்க்கும் அவளின் அம்மாவிற்கும் புரியவில்லை ஆனால் பிரச்சனை பெரிது என்று புரிந்தது. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்த கதையாய், எல்லோரையும் ஏமாற்றும் தன் கணவர், தங்கள் மகளைக் கொடுத்த வீட்டிலும் கை வைத்து விட்டாரா அவரின் நெஞ்சு பதறியது.

கிட்ட தட்ட ஒரு மணி நேரம் அமர்ந்து இருந்தனர், திரும்ப திரும்ப மனைவி போய் சொல்லவும், மெதுவாக எழுந்து வந்தார்.

பார்த்தவுடன், “அடடே, வாங்க மாப்பிள்ளை!” என்று ஜகனை பலமாக உபசரித்தவர், “கூட சின்ன மாப்பிள்ளையும் வந்திருக்கீங்களா” என்றார்.

கூடவே மனைவியைப் பார்த்து, “ஏண்டி முதல்லயே சொல்லலை, நான் தூங்கிட்டு இருந்தா எழுப்ப மாட்டியா” என்று அவரிடம் ஏதோ மனைவியிடம் தான் தவறு என்பது போல பேசினார்.

அவரின் வார்த்தை ஜாலங்கள் புரிந்தாலும், நேராக விஷயத்திற்கு வந்தான் ஈஸ்வர், “அஸ்வின் எங்க போயிருக்கான்”

“வேர்ல்ட் டூர் போயிருக்கான் தம்பி” என்றார் அசால்டாக.

மலேசியா போய் இப்போது வேர்ல்ட் டூரா கண்ணைக் கட்டியது ஈஸ்வரிற்கு, “எப்ப வருவான்”

“தெரியலை, தோணின போது வருவான்” என்றார் அலட்சியமாக.

அவரின் பாவனையில் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட வேண்டும் என்று கைகள் பரபரத்த போதும் பொறுமை பொறுமை என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

ஒரு தொகையைச் சொன்ன ஈஸ்வர், “அவ்வளவு பணத்தை ஜகன் அவன் கிட்ட கொடுத்திருக்கான், எங்களுக்கு அது திரும்ப வேணும்” என்றான் பொறுமையாகவே.

“என்னது அவ்வளவு தொகையா?”, என்று வெகுவாக வாயை பிளந்து ஆச்சர்யத்தைக் காட்டினார். “அவன் சின்ன பையன், அவனை நம்பி எதுக்கு அவ்வளவு பணம் கொடுத்தீங்க”

“அதெல்லாம் அப்புறம் பேசலாம், இப்ப பணம் வேணும்”

“குடுத்தது உங்க தப்பு, அதை விட அதை என்கிட்டே கேட்கறது இன்னும் தப்பு! யார் கிட்ட குடுத்தீங்களோ அவன் கிட்ட கேளுங்க” என்றார் அலட்சியமாகவே.

அவர் பேச பேச ஆத்திரம் ஓங்கியது, கண்கள் ரத்தமென சிவக்க, கைகளை இறுகக் கட்டிக் கொண்டான் ஈஸ்வர், “அடித்து கிடித்து விடாதே! பொறுமை! பொறுமை! பணத்தை வாங்க வேண்டும்” என்று சொல்லிக் கொண்டு.

என்ன நடக்கிறது என்று சரி வர புரியாத போதும், அப்பாவும் அஸ்வினும் ஏதோ செய்து விட்டனர் என்று புரிந்து கண்ணில் நீர் கலங்க ஐஸ்வர்யா ஈஸ்வரைப் பார்த்து நின்றாள்.

**கண்ணுக்குள்ளே கண்ணீர் வெப்பம்!!!**

**அத்தியாயம் ஐந்து :**

**நிபந்தனைகளுக்கு உட்பட்டது!!! இந்த வாசகம், இது செய்யும் சதி அதற்கு எந்த நிபந்தனையும் கிடையாது!!!**

ஜகன் கோபமாக “என்ன பேசறீங்க மாமா நீங்க! அவன் என்ன செய்யறான்னு உங்களுக்கு எப்பவும் தெரியும்! தெரியாம இருக்காது!”

“தெரியுது! தெரியலை! அது வேற விஷயம் மாப்பிள்ளை! என்னைக் கேட்டா பணத்தைக் குடுத்தீங்க! எனக்கு தெரியாது!” என்றார் கறாராக.

என்ன இப்படி பேசுகிறார் என்று தோன்றிய போதும் “நீங்க பேசறது சரியில்லீங்க எங்களுக்கு பணம் வேணும்” என்றான் ஈஸ்வர்.

“தோ பாருங்க! என்கிட்டே பணம் கிடையாது! இருந்தா எடுத்துக்கங்க! உங்களுக்கு இல்லாததா!” என்றார் தாராள மனது போல.

ஈஸ்வரும் ஜகனும் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்து நிற்க,

“தம்பி, ஃபைனான்ஸ் நடத்தறது பணத்தை திரும்பக் கொடுக்க இல்லை நாம எடுத்துக்க தான். இதெல்லாம் சகஜம்... இருக்குற பணத்தை ஃசேப் பண்ணிக்கிட்டு திவால் அறிவிச்சிடுங்க சோ சிம்பிள்” என்றார்.

“நாங்க ஒன்னும் ஆர்டினரி ஃபைனான்ஸ் நடத்தலை, ரிசர்வ பேங்க் ஆஃப் இந்தியால ரெஜிஸ்டர் பண்ணியிருக்கோம். அதுக்கு கீழ வர்றோம். ஆல் ஓவர் தமிழ் நாடு பிரான்ச் இருக்கு, எவ்வளவு ரெபுடெஷன் தெரியுமா எங்களுக்கு”

“அவ்வளவு இருந்தா சமாளிங்க... இதெல்லாம் ஒரு அமௌண்டா” என்றார் அசால்டாக.

ஈஸ்வருக்கு என்ன செய்வது என்பதை விட என்ன பேசுவது என்று கூடத் தெரியவில்லை... இப்படி ஒரு சூழலை அவன் எதிர்பார்க்கவில்லை. அவரை கொன்று புதைத்துவிடும் ஆத்திரம் முளைத்த போதும் பணம் வராமல் எதுவும் முடியாது, முழுப்பணம் இல்லாவிட்டாலும் ஏதாவது பணத்தைக் கைப்பற்றியே ஆக வேண்டிய சூழ்நிலை.

“சமாளிக்கறது! எப்படி நடத்தறது! எல்லாம் நாங்க பார்த்துக்கறோம்! நீங்க உங்க பையன் எங்க? அதை மட்டும் சொல்லுங்க!” என்றான் இவனும் கறாராக.

“அதான் சொல்றனே வேர்ல்ட் டூர் போயிருக்கான்னு. வரும் போது பாருங்க”

“யார் வீட்டுக் காசுல யார் வேர்ல்ட் டூர் போறது”

“என்ன உங்க வீட்டுக் காசு மாதிரி குதிக்கறீங்க, இது உங்களது இல்லை, எவனோ போட்ட பணம் தானே”

“பணம் எங்களுக்கு வரணும்! வந்தே ஆகணும்!” என்று பொறுமையா விட்டுக் கோபமாக கத்தினான்.

“என்ன தம்பி மிரட்டுறீங்களா?”

“எப்படி வேணா வெச்சிக்கங்க, எனக்கு பணம் வரணும்”

“என்கிட்டே இல்லை! யார் கிட்ட குடுத்தீங்களோ கேளுங்க!” என்றவர் அப்புறம் எனக்கு அவசர வேலை, நீங்க இருந்து சாப்பிடிட்டு போங்க, மாப்பிள்ளையைக் கவனி” என்று மனைவியிடம் சொன்னவர், கூட நின்ற ஐஸ்வர்யாயைப் பார்த்தார்.

கண்கள் கலங்க உதடு துடிக்க முகமெல்லாம் சிவந்து ஈஸ்வரையே பார்த்து நின்றிருந்தாள்.

“எம் பொண்ணு என்னடா இப்படி நிக்கறா?” என்று யோசனையாகப் பார்த்த போதும், அப்போது அங்கே நிற்க முடியாது என்பதால் வெளியே விட்டார்.

ஈஸ்வருக்கு ஒன்றுமே ஓடவில்லை, இப்படி ஒரு நிலையை கற்பனைக் கூட செய்ததில்லை எனும் போது அதை எப்படி அணுகுவது என்று கூடத் தெரியவில்லை. சாதாரணமாக பேசும் ஆளுமையான பேச்சுக் கூட வரவில்லை

படித்து படித்து அப்பாவும் பெரியப்பாவும் சொன்னார்களே, இந்த சம்மந்தம் வேண்டாம் என்று, இவன் ஆசைப்படுகிறான் என்று தான் தானே  இந்த சம்மந்தத்தை ஆதரித்தோம்! எத்தகைய முட்டாள் தனம்! தாங்கள் மீள முடியாவிட்டாலும் பரவாயில்லை, ஆனால் பணம் செலுத்தியவர்கள்... நினைக்க நினைக்க நெஞ்சுக்குள் பாரமாக அழுத்தியது.

எதுவும் பேசாமல் வெளியே வந்தான், காரை எடுக்க ஜகன் அவசரமாக உடன் அமர்ந்தான்.

சென்னை மாநகரின் சாலை போக்குவரத்தில் கலந்தவன், சிறிது தூரம் வந்ததும் “நீ வீட்டுக்குப் போ, எனக்கு வேலை இருக்கு” என்று ஜகனை இறக்கி விட்டு, நேரே அவன் சென்றது முரளியின் வீடு,

இவனின் காரைப் பார்த்ததும் காவலாளி திறந்து விட்டான். அடிக்கடி வருபவன் தானே! காரைப் போர்டிகோவில் நிறுத்தி வீட்டின் உள் சென்றான். காலை அப்போது எட்டரை மணி.

வீடு வெறிச்சென்று இருந்தது. இவன் வந்ததைப் பார்த்து வேலையாள் வந்தவன், “வாங்க சர், விடியக்காலைலே எல்லோரும் கோவிலுக்கு போயிட்டாங்க. முரளி சார் இல்லை” என்றான்.

“எந்தக் கோவிலுக்கு?”

“அவங்க குல தெய்வம் கோவிலுக்கு, கல்யாணம் முடிஞ்சது இல்லையா, போயிருக்காங்க!” என்றதும் அப்படியே அமர்ந்து விட்டான்.

அப்போதுதான் முரளிக்கு திருமணமாகி இரண்டு நாட்கள் தான் ஆகியிருந்தது ஞாபகம் வந்தது. தான் ஒரு போன் செய்தாவது வந்திருக்க வேண்டும் என்று உரைத்தது.

“எப்ப வருவாங்க?”

“சாயந்தரம் ஆகிடும்னு நினைக்கிறேன், அப்படி தான் பேசிக்கிட்டாங்க”,

ஈஸ்வரின் முகம் எப்போதும் இருப்பதை போல இல்லாததைக் கண்டு, “சின்ன அம்மாக்குத் தெரியும், அவங்க இருக்காங்க, நான் கூப்பிடறேன்” என்று அவன் விரைந்து விட்டான்.

யார் சின்ன அம்மா என்றுக் கூட அவனுக்கு தெரியவில்லை, மூளை மழுங்கி அப்படியே அமர்ந்து இருந்தான்.

மேலேயிருந்து வர்ஷினி யார் என்பதுப் போல எட்டிப் பார்த்தாள், அவள் கோவிலுக்குப் போகவில்லை, அவள் கோவிலுக்கு போகக் கூடாத் சூழல்.

ஈஸ்வரை பார்த்தவள், இவனுக்கு பதில் சொல்ல வேண்டுமா தேவையில்லை என்பது போல திரும்ப போனவள் அவனின் தோற்றத்தை பார்த்து நின்றாள்.

மேலேயிருந்து வர்ஷினி பார்த்துக் கொண்டிருந்ததால் ஈஸ்வருக்கு தெரியவில்லை. ஆனால் எதிரே இருந்திருந்தால் கூட அவனுக்கு தெரிந்திருக்குமா தெரியவில்லை

இரண்டு நாட்களுக்கு முன் பளபள வென்று இருந்தவன் முகம் இப்போது இரண்டு நாள் தாடியுடன், தோற்றம் பொலிவிழந்து இவனையா ஹேண்ட்சம் என்று சொன்னோம் என்று தோன்றும் படி இருந்தான்.

அந்தத் தோற்றத்தில் ஏனோ இன்னும் வர்ஷினியை ஈர்த்தான், ஒரு முரட்டு தோற்றம். என்னை வேலையாள் மாதிரி பேசினானே போவதா வேண்டாமா என்று பட்டி மன்றம் மனதிற்குள் நடத்தி மெதுவாக இறங்கி வந்தாள்.

இவளைப் பார்த்ததும், இவளையா சின்ன அம்மான்னு சொன்னான் என்று திகைத்தவன், வேறு யாரும் இருக்கிறார்களா என்று அவளின் பின் பார்வையை ஓட்டினான்

“யாரைத் தேடுறீங்க”

“சின்ன அம்மான்னு யாரையோ சொன்னான், யார் இருக்காங்க”

“ஏன் என்னைப் பார்த்தா சின்ன அம்மா மாதிரி தெரியலையா? நீங்க வேலைக்காரங்க மாதிரி பார்த்து ட்ரீட் பண்ணினதால, நான் அப்படி ஆகிட மாட்டேன்” என்றாள் அன்றைய நிகழ்வைக் கொண்டு,

சாதாரண நேரமாக இருந்தால் நன்றாக திருப்பிக் கொடுத்திருப்பான், விட்டுக் கொடுத்துப் போவது என்பது அவனின் அகராதியிலியே கிடையாது. சரியோ தவறோ கடைசிப் பேச்சு அவனதாக தான் இருக்க வேண்டும் சிறு வயதில் இருந்து அப்படிதான். இன்று முடியவில்லை.

“முரளி எப்ப வருவான்?”

“ஈவினிங் ஆகிடும்”

தலையை அசைத்து திரும்ப நடந்தான், கவனமில்லாமல் நடந்ததால் வழியில் இருந்த கண்ணாடி டீபாயில் நன்கு இடித்துக் கொண்டான்,

“ஊப்ஸ்” என்றவன் காலைப் பிடித்து அப்படியே மண்டியிட,

“அச்சோ! இடிச்சிகிட்டீங்களா பார்த்துப் போகக் கூடாது” என்று விரைந்து அவனின் அருகில் வந்தாள்,

சுதாரித்து எழுந்தான், “இல்லை, ஓகே” என்றபடி நடந்த போதும் சற்று விந்தி விந்தி வந்தது.

அவன் பாட்டிற்கு நடந்தான், வேகமாக அவன் முன் சென்று “ஒரு நிமிஷம் இருங்க” என்று மீண்டும் ஓடி ஒரு பீன் பேக் கொண்டு வந்தவள் “உட்காருங்க” என்றாள்.

என்ன வென்று புரியாமல் ஈஸ்வர் பார்க்க, “இடிச்சிட்டு போகக் கூடாது, சகுனம் சரியில்லைன்னு கமலாம்மா சொல்வாங்க! நான் இதெல்லாம் நமபறது இல்லை! ஆனா ஃபாலோ பண்றதுல நஷ்டம் ஒன்னும் இல்லை”.

எதுவும் பேசமால் அமர்ந்தான்.

சமீபமாக திருமணத்தில் இரண்டு நாட்கள் ஈஸ்வரைப் பார்த்து இருந்ததினால், அவனின் மாற்றம் நன்கு தெரிந்தது. “ஏதாவது ப்ராப்ளமா என்னால ஏதாவது ஹெல்ப் பண்ண முடியுமா” என்றாள்.

எல்லோருக்கும் தெரியும்படியா இருக்கிறோம் என்று முகத்தை சுருக்கினான். “நீயா நீயென்ன ஹெல்ப் பண்ண முடியும்” என்றான்.

“சொல்லி தான் பாருங்களேன்”

இவள் என்ன கையில் இருக்கும் மிட்டாயை கொடுப்பது போலக் கேட்கிறாள். விரக்தி புன்னகை ஒன்றை சிந்தியவன் “உன்னால முடியாது” என்றான்.

“நீங்களே முடிவு பண்ணிக்கிடீங்க. நானென்ன செய்ய முடியும்” என்றவளின் பேச்சு எல்லாம் பெரிய மனித தோரணையுடன் தான் இருந்தது. ஆனால் அந்தக் குரலில் ஒரு குழந்தை தன்மையும் கூட இருந்தது. இரண்டும் அவனையும் மீறி வர்ஷினியின் பால் வசீகரித்தது.

“வேலுண்ணா ஒரு இளநீர் கொண்டு வாங்க” என்று கத்தினாள்.

சொல்லி முடித்த இரண்டு நிமிடத்தில் வந்தது, “குடிங்க” என்றாள்.

எல்லாம் மறந்து ஈஸ்வரின் முகத்தில் ஒரு புன்னகை, “நான் இளநீர் குடிக்கும் விதம் என்ன? பதம் என்ன? இவள் எப்படிக் கொடுக்கிறாள்” என்பதுப் போல அவளைப் பார்த்தான்.

வர்ஷினியும் ஈஸ்வரைத் தான் பார்த்தாள், இரண்டு நாட்களுக்கு முன் இவன் என்னைப் பார்த்த அலட்சிய பார்வை என்ன, இப்போது அந்த அலட்சியம் இல்லையே. அவனுக்கு ஏதோ கஷ்டம் என்று புரிந்தது. மனிதரின் கஷ்டங்கள் தான் அவர்களை பக்குவப் படுத்துகின்றன என்று கூடவே தோன்றியது.

சற்று மனநிலை மாறி, ஈஸ்வர் அதைக் கையில் வாங்கினாலும், குடிக்க முடியவில்லை, குடிக்கக் குடிக்க நெஞ்சை அடைத்தது, ஒரு வழியாக குடித்து கிளம்பினான்.

வலி இருக்க மெதுவாக தான் நடந்தான், அவன் சென்று கார் கதவை திறக்க, படியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தவள் அவன் ஏதோ தடுமாறுவது தெரிந்து, இறங்கி வந்தாள்.

“டிரைவர் யாரும் இல்லை, ஐ திங்க் யு ஆர் நாட் ஓகே. நான் டிரைவ் பண்ணட்டுமா” என்றாள்.

அவளின் கேள்வியை கேட்டு அந்த நிலையிலும் திரும்பவும் மெல்லிய புன்னகை ஈஸ்வர் முகத்தில். “இவள் என்னடா நான் என்னவோ இவளுக்கு சிறியவன் போல உதவி செய்யட்டுமா என்கிறாள், டிரைவ் பண்ணட்டுமா என்கின்றாள். இன்னும் டீன் ஏஜ் கூடத் தாண்டவில்லை, இவள் ஈஸ்வருக்கு உதவி செய்வாளா” என்று அவனின் இயற்கையான கர்வம் திமிர் எட்டிப் பார்த்தது.

“நான் சோழாவரம் ரேஸ் போவேன்” என்றான்.

“உங்களுக்குக் கார் ஓட்டத் தெரியாதுன்னு எப்போ சொன்னேன் நான், இப்ப நான் ஓட்டறேன்னு தானே சொன்னேன்”

“நீயா? நீ சின்ன பொண்ணு, டிரைவ் பண்ணுவியா?”

“நான் ஒன்னும் சின்னப் பொண்ணு இல்லை, எங்க கிளாஸ்லயே நான் தான் ஹைட், உங்க கண்ணுக் கிட்ட என் தலை இருக்கு” என்று சொல்லி அவனை நேருக்கு நேர் பார்த்தாள், அந்த நீல நிற கண்கள் மீண்டும் என்னுள் மூழ்கிவிடு என்று தான் அழைத்தது.

அந்தக் கண்களுக்குள் மூழ்காமல் மீட்டெடுத்தவன் பார்வை கட்டுப் பாட்டை மீறி அவளின் வனப்பை தான் ஆராய்ந்தது.

முட்டி வரை இருந்த உடை, அதன் கீழ் தெரிந்த அந்தக் கால்களின் பளபளப்பு, மேலே இருந்த ஒரு டாப்ஸ், உடையின் உள் இருக்கும் அங்கங்களை கற்பனை செய்ய துடிக்கும் மனது, வேகமாக பார்வை வேறு இடம் திருப்பினான்.

ஒரு மெல்லிய பயம் மனதினில், இந்தப் பணப் பிரச்னையை விட வர்ஷினி இப்போது மிகவும் பெரிய பிரச்சனையாகத் தெரிந்தாள். பருவ வயது பெண் யாரிடமும் அதிகம் பேசாதவள் தன்னோடு பேசுகிறாள். ஏதோ ஒரு மரியாதை தன்னிடம் இருக்கவும் தான் பேசுகிறாள் என்று சரியாகக் கணித்தான்.

இதில் தான் செய்வது என்ன? மாபாதகம் என்று புரிந்தது. அதுவும் இரண்டாவது முறை பார்க்கும் சிறு பெண். என்னுடைய இத்தனை பிரச்சனைகளையும் மீறி நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்.

தன் இந்த பார்வை.. அது போகும் இடங்கள்... மிகவும் தவறு என்று புரிந்தது. தானா இப்படி? அதுவும் இந்த நிலையில்? ஒரு அச்சம் மனதினில்.

“நான் டிரைவ் பண்ணட்டுமா?” அவளின் குரல் குழந்தைத்தனமாக இருந்தாலும் அதில் ஒரு பெரிய மனிதத் தன்மையும் இருந்தது. அதெல்லாம் ஈஸ்வரின் கவனத்தில் இல்லை,

கண்ணின் முன் ஒரு மாயை!!!!

அவளையே விடாமல் பார்க்க, அந்தப் பார்வையின் தீவிரம், மாற்றம் வர்ஷினிக்குப் புரியவில்லை,

ஏதோ தடுமாற்றத்தில் இருகின்றான் அவனுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் தான் வர்ஷினியிடம், அவனின் பார்வை மாற்றத்தை புரிந்து கொள்ளாமல் அவள் கையை நீட்ட,

"என் கண்ணு முன்னாடி இவ ஏன் வர்றா, இவளுக்கு யாரு சொல்லுவா" என்று மனது நினைத்த போதும், நீயே எடுத்துக் கொள் என்பது போல ஈஸ்வர் கைகளை நீட்டினான்.

கை தொட்டு எடுப்பாளா இல்லையா என்று உடலும் பார்வையும் எதிர்பார்த்துக் காத்திருக்க,

மிகவும் இயல்பாக விரல்கள் சற்றும் அவனின் கைகளில் படாமல் வர்ஷினி அதை எடுத்தாள்.

**பொன்னி நதி!!! கன்னி நதி!!! ஜீவ நதி!!!**

**அத்தியாயம் ஆறு :**

**பார்வை மாற்றங்கள் எப்போதும் பரிமாற்றங்கள் ஆவதில்லை!!!**

வர்ஷினி ஆர்வத்தோடு காரில் ஏறி அமர்ந்தாள்,

அவளையே ஈஸ்வர் பார்த்திருக்க, அவனின் எண்ணம், பார்வை ஓடும் திசை புரியாமல், "Cheers வாழ்க்கையில தீர்க்க முடியாத பிரச்சனைன்னு எதுவும் கிடையாது"

தான் இவளைப் பார்க்கும் பார்வை என்ன? இவள் எனக்கு சொல்லும் தேறுதல் என்ன? சற்று குற்ற உணர்ச்சியாகியது.

அதை மாற்ற "உனக்கு நிஜமா ஓட்டத் தெரியுமா" என்றான் திரும்பவும் ஈஸ்வர்.

"தெரியும், நான் பொய் சொல்ல மாட்டேன்" என்றாள் முகத்தை சுருக்கி "நீ ஏன் நம்பவில்லை" என்ற பாவனையில்.

அவள் சொன்ன விதம் ஒரு பிடிவாதத்தைக் காட்டியது,

"அவ்வளவு நல்ல பழக்கமா?" என்றான்

“ப்ச், அப்படி எல்லாம் இல்லை. பொய் சொன்னா ஞாபகம் வைக்கறது கஷ்டம், அப்புறம் தெரியாம தடுமாறணும், திரும்ப பொய் சொல்லணும், ஒன்னு மேல ஒன்னு வளர்ந்துட்டே போகும். இப்படிப் பல கஷ்டம், அதுக்கு உண்மையை பேசுனம்னா ஒரே கஷ்டம் தான்”

“அப்போ அதனால தான் பொய் சொல்ல மாட்டியா அது தப்புன்னு இல்லையா” என்றான் ஈஸ்வர் ஆழ்ந்த குரலில்.

“தப்பு சரின்றது அந்த அந்த சூழ்நிலையைப் பொருத்தது, நம்ம தப்பு நினைக்கறது சிலருக்கு சரியா படும், ஒரு பொய் சொல்றதுனால சில நன்மை விளையும்னா சொல்லலாம் இப்படி நிறைய இருக்கு, அதுவே அடுத்தவங்களை ஏமாத்த சொல்றோம்னா அது ரொம்ப தப்பு”.

மிகவும் அறிவு சார்ந்த பேச்சு அவளின் வயதோடு ஒட்டாத பேச்சு.

“நல்லா பேசற, ஆனா முரளி என்கிட்டே நீ அதிகம் பேச மாட்டேன்னு சொன்னான்” என்று சொல்லி விட்டப் பிறகு, ப்ச் சொல்லியிருக்க வேண்டாமோ என்று தோன்றியது. தாங்கள் அவளைப் பற்றி பேசியிருக்கிறோம் என்று தெரிய வேண்டிய அவசியம் என்ன.

அவளின் முகத்தை அவசரமாக பார்க்க, அதில் இருந்து ஒன்றும் தெரியவில்லை... “ஓஹ் நிறையப் பேசறனா? என்ன பேசறேன்?” என்று கேட்டவள், அவள் பேசிய விதத்தை ஆராய்ந்து மனதினில் ஓட்டினாள் ஏதாவது நிறைய பேசிட்டோமா என்பதுப் போல, அதில் அப்படியே திரும்ப அமைதியானவள் இப்போது போவதா? வேண்டாமா? சரியாகச் செய்கிறோமா? என்று அவனை திரும்பப் பார்த்தாள், அந்த நீல நிறக் கண்களில் ஒரு கலக்கம்

“தப்பா எதுவும் சொன்னதில்லை, கம்மியா பேசுவான்னு சொல்லியிருக்கான் அவ்வளவு தான்”

“அண்ணா எதுக்கு தப்பாப் பேசுவார். என்ன தப்பு என்கிட்டே இருக்கு” என்றாள் கூடவே,

“ஊப்ஸ், வாய் வார்த்தையாகக் கூட அர்த்தமில்லாத வார்த்தைகளை இவளிடம் பேச முடியாது” என்று நொடியில் ஈஸ்வருக்கு புரிந்தது.

எந்த பூச்சு மின்றி “அப்புறம் நீ கம்மியா பேசுவேன்னு முரளி சொன்னான்னு சொன்னதுக்கு எதுக்கு அப்செட் ஆன”

“அப்செட் ஆகலை, இப்ப என்ன அதிகமா பேசினேன்னு யோசிச்சேன்! ஜஸ்ட் ஒரு ஸெல்ப் அனாலிசிஸ்”

அதற்குள் வேலு இவள் காரில் அமர்ந்திருப்பதைப் பார்த்து “அம்மா எங்க போறீங்க” என்று ஓடி வந்தான்.

“அய்யோ வேலுண்ணா, என்னை அம்மா கூப்பிடாதீங்க”

“எங்கம்மா போறீங்க” என்றான் பாவமாக.

“இவர் கால்ல இடிச்சிக்கிட்டார். நான் வீட்ல விடப் போறேன்”

அவரின் முகத்தில் பதட்டம் ஏறியது. “உங்களை பத்திரமா பார்த்துக்க சொல்லியிருக்காங்கம்மா. ஏதாவது தப்பாச்சுன்னா என்னைக் கட்டி வெச்சு அடிப்பாரு அய்யா” என்றார் பரிதாபமாக.

“என்ன தப்பாகும்” என்றாள்.

மெலிலிய சிரிப்பு ஈஸ்வர் முகத்தினில்,

“நீங்க எப்படித் திரும்ப வருவீங்க”

“ஆட்டோ இல்லைன்னா டேக்ஸி”

“என்ன ஆட்டோ இல்லைன்னா தேக்ஸியா. எனக்கு மயக்கமே வருது. தனியா வருவீங்களா, அது தான் தப்பாகும்” என்று அவர் சொல்லும் போதே.

தட தட வென்று ஒரு புல்லட் சத்தம், “அச்சோ தாசண்ணா” என்று கன்னத்தில் கை வைத்தாள் வர்ஷினி. ஹப்பாடா என்று வேலு முகத்தில் ஒரு விடுதலை உணர்வு.

அந்த புல்லட்டின் சத்தம் தாஸ்சினுடையது, தாஸ் வர்ஷினியின் அப்பா ராஜாராமின் வலது இடது என்று எல்லா கரமும்.

சில முறை பார்த்திருக்கிறான் ஈஸ்வர், முரளியின் தோழன் என்பதால் மரியாதையாக தாஸ் வணக்கம் வைப்பான். நாற்பது வயதை தொட இருப்பவன். ஈஸ்வருக்கு எப்போதும் சற்று திமிர்

என்பதால் சகஜமாக பேசமாட்டான். ஒரு அடியாளிடம் தான் சகஜமாக பேசுவதா என்ற இறுமாப்பு.

தாஸ் வந்தவன் புல்லட்டை நிறுத்தி வந்தான்,

“தாஸூ அம்மா பாரு, இவரைக் கொண்டு போய் விடுவேன்னு அடைமா நிக்கறாங்க”

“போகட்டும்! என்ன இப்போ?”

“அய்யா திட்டுவாரு! நீ கொண்டு போய் விடு!”

“தாஸண்ணா என்னை வெளில விடாம வீடுக்குள்ள அடைச்சி வைக்கிறாங்க. நான் இப்ப கொண்டு போய் விட்டா என்ன தப்பு! இவர் நமக்கு தெரிஞ்சவங்க தானே! அதுவுமில்லாம நான் தனியா உலகத்தை சந்திக்க வேண்டாமா! எப்பவும் யாராவது நான் என்ன செய்யறேன்னு பார்த்துகிட்டு இருப்பீங்களா. நான் என்ன சின்ன குழந்தையா”

வரும் போதே ஈஸ்வரை பார்த்துவிட்டான் தாஸ். இவனுடன் காரில் வர்ஷினி என்ன செய்கிறாள் என்று யோசித்த போதும் பயமொன்றுமில்லை. அவனுக்கு ஈஸ்வரை நன்கு தெரியும். முரளி எப்படியோ அப்படிதான் ஈஸ்வர் என்பது போல. ஈஸ்வருக்கு எல்லோரிடமும் மிகவும் நல்ல பெயர் தான்.

எந்த புற்றில் எந்த பாம்பு என்று தாஸ் அறியான். அனால் அறிந்து விட்டால்?????

“நீங்க ஏன் கொண்டு போய் விடறீங்க”

“இவர் முரளின்னாவைப் பார்க்க வந்தார், கால்ல இடிச்சிக்கிட்டார் நான் கொண்டுப் போய் விடறேன்னு சொன்னேன். இவர் வேண்டாம்ன்னு சாவி தரவே இல்லை. நான் நல்லா கார் ஓட்டுவேன்னு இப்ப தான் வாங்கினேன். அதுக்குள்ள வேலண்ணா பயப்படறார்”

“எதுக்கு வேலு பயம். சார் நமக்கு தெரிஞ்சவர். நம்ம முரளி சார் போல தான். பாப்பா போகட்டும். தாஸ் இருக்குறவரைக்கும் பாப்பாக்கு எந்த பயமும் கிடையாது” என்று சொன்னான்.

“அதில்லை திரும்ப எப்படி வருவாங்க, தனியா வரணுமேன்னு” என்று வேலு இழுக்க...

“எவனாவது தப்பா பார்த்தாக் கூட கண்ணை நோண்டி காக்கைக்கு போட்டுடுவேன்”

அந்தக் குரல்... அதில் தெரிந்த உறுதி... ஈஸ்வரை என்ன என்பது போலப் பார்க்க வைத்தது,

“ஹ, ஹ, தாஸண்ணா” என்று கல கல வென சிரித்த வர்ஷினி, “அப்படியே விஜயகாந்த் மாதிரி பேசறீங்க”

தாஸை ஆராய்ந்தான் ஈஸ்வர், ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவான தோற்றத்தில், கருமை நிறத்தோடு, எதிராளியை அடித்து என்ன, பார்வையிலேயே வீழ்த்தி விடுபவன் போல இருந்தான்.

வர்ஷினியின் கிண்டலை பற்றிக் கவலைப்படாமல் “அடி பலமா சார்” என்றான் ஈஸ்வரைப் பார்த்து.

“இல்லை, ஆனா சொன்னாக் கேட்க மாட்டேங்கறா. நான் ஓட்டுறேன்னு சொல்றா” என்றவன், “நீ இறங்கிக்கோ தாஸ் ஓட்டட்டும்” என்று சொல்ல,

வர்ஷினியின் முகம் சுருங்கியது. வேகமாக இறங்கப் போக,

“இருக்கட்டும் சார்! அம்மா ஆசைப் படறாங்க இருக்கட்டும். உங்களுக்கு ஆட்சேபனையில்லைன்னா நான் பின்னாடி உட்காரவா” என்றான்.

Varshini is sealed and completely protected என்று தோன்றியது ஈஸ்வருக்கு. அவளின் அருகில் இருந்து விலகினால் போதும் என்று தோன்றியது. அவளின் ஈர்ப்பு அதிகமா இருந்தது, கழுத்தை இறுக்கிப் பிடிக்கும் பிரச்சனைக் கூட கவனத்தில் வராத அளவிற்கு.

“ம் சரி” என்று தலையாட்ட, “தேங்க்ஸ் தாஸண்ணா” என்று வர்ஷினி தாஸைப் பார்த்து மலர்ந்து சிரித்த புன்னகை, “wow beauty” என்று தோன்ற,

“என்ன செய்துக் கொண்டிருக்கிறேன் நான்”. எதிரில் இருந்த காரின் கண்ணாடியில் அவனின் மண்டையை அவனே உடைத்துக் கொள்ள வேண்டும் போல ஒரு ஆவேசம் தோன்றியது,

“போகலாம்” என்றான்.

காரை ஸ்டார்ட் செய்து வெளியே வரும் சமயம், “எங்கேப் போகணும்” என்றாள்.

“உனக்குச் சென்னைத் தெரியுமா”

“தாஸண்ணா என்ன ஒரு இன்சல்ட் வர்ஷினிக்குப் பார்த்தீங்களா” என்று தாஸைப் பேச்சில் இழுத்தாள்.

“நீங்க சொல்லுங்க சார்” என்று தாஸ் சொல்ல,

“மவுண்ட் ரோடு, அங்க தான் எங்க ஆபிஸ் இருக்கு”

“ஓகே, அப்போ அங்கே போய் கேட்டுக்கறேன்” என்றவள், சென்னையின் போக்குவரத்தில் இயல்பாகக் காரை செலுத்தினாள். பார்வையை அவளிடம் இருந்து கட்டாயமாக விலக்கி, கண்களை மூடிக் கொண்டான்.

“இவளை மற”, என்று மனதிற்குக் கட்டளையிட்டு, ஒரு நிலைப் படுத்தி இருக்கும் பிரச்சனையை முன் நிறுத்தினான்.

ஒரு வேலை பணம் வரவில்லை என்றால் என்ன செய்வது அடுத்த கட்டம் என்று யோசிக்க ஆரம்பித்தான். இதை யோசிக்க பயமாக இருந்த போதும் யோசித்து தானே ஆக வேண்டும். இதை நீ எதிர் கொள்ள வேண்டும் என்று மனதை நிலைப்படுத்த ஆரம்பித்தான்.

இதில் யாரும் எதுவும் செய்ய முடியாது. நான் மட்டுமே செய்ய வேண்டும். என்ன செய்வது என்ற யோசனை. என்ன? என்ன? சொத்துக்கள் இருக்கிறது தங்களிடம், அதை ஏதாவது செய்ய முடியுமா, இதெல்லாம் யோசிக்கும் போதே மவுண்ட் ரோடு வந்திருந்தது.

எங்கே ஆபிஸ் என்பதை கேட்க அவள் ஈஸ்வரைப் பார்க்க அவன் கண்மூடி தான் அமர்ந்திருந்தான்.

தாஸும் அதைப் பார்த்திருந்தவன் வர்ஷினியிடம் அவனே வழி காட்டினான். அவர்கள் அலுவலகம் நுழைந்த போது மணி ஒன்பதரை தான் ஆகியிருந்தது. அலுவலகம் பத்து மணிக்கு தான் முழுவதுமாக இயங்க துவங்கும்,

இந்த நேரத்தில் எம் டீ யின் கார் நுழைவதை பார்த்தவர்கள், அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருந்தவர்கள் வேகமாக

அலுவலகம் உள் நுழைந்தனர்.

படியேறும் வாயிலில் காரை நிறுத்தியவள், தாஸிற்கு கண்ஜாடை காட்டினாள், பிறகு அவளும் இறங்கினாள். அது கூட ஈஸ்வர்க்கு தெரியவில்லை. தாஸ் இறங்கி, அவன் புறக் கார் கதவை திறந்து, “சார்” என்று அழைக்கவும் தான் கண்திறந்தவன், தாஸ் கார் கதவை பிடித்து நிற்கவும், வர்ஷினி எங்கே என்பது போலப் பார்க்க,

“பாப்பா இங்க நிக்கறாங்க” என்று தாஸ் சொல்ல இறங்கினான்,

“நீங்க எப்படிப் போவீங்க” என்று கேட்டபடி இறங்கினான்.

“அதானே நாம எப்படிப் போவோம் தாஸண்ணா” என்று வர்ஷினி கேட்கும் போதே ஈஸ்வரின் கவனம் சிதறியது. தங்களின் ஆபிஸ் வாயிலைப் பார்த்து, அங்கே ஐஸ்வர்யா நின்றுக் கொண்டிருந்தாள்.

முகமெல்லாம் வாடி, இவனையே ஏக்கமா பார்த்து நின்றிருந்தாள், பார்த்ததும் ஒரே நிமிஷம் என்று தாஸிடம் சொல்லி விரைந்தான், “ஐஷ் இங்க என்ன பண்ற”

“என்ன பிரச்சனை? என்ன ஆச்சு?” என்று முகம் முழுக்க தவிப்போடு அவள் கேட்க,

“ப்ச்” என்றவன், “வா, அவங்க வெயிட் பண்றாங்க” என்று தாஸையும் வர்ஷினியையும் காட்டினான்.

“யார் அவங்க?”

“அது என் ஃபிரண்ட் முரளி தங்கை, அவன் அவங்க கிட்ட வேலை செய்யறவன்”.

“ப்ளீஸ், என்னால யாரையும் இப்பப் பார்த்து பேச முடியாது” என்றாள். பின்னொரு நாளில் பார்த்திருக்கலாமோ வர்ஷினியை என்று எண்ணி எண்ணித் தான் வருந்தப் போவதை அறியாமல்.

அவனின் கேபின் சாவியை எடுத்துக் கொடுத்தவன் “போ, என் ரூம்ல வெயிட் பண்ணு” என்று அவளை அனுப்பி வந்தான்.

“என் ரூம் கீ கொடுக்கப் போனேன்” என்று மட்டும் சொன்னான், யார் என்ன என்று சொல்லவில்லை, ஐஸ்வர்யா அவனுடன் வர்ஷினியைப் பார்க்க வந்திருந்தால், ஃபிரண்ட் என்றோ இல்லை

உறவினள் என்றோ அறிமுகம் செய்திருப்பான். இப்போது என்ன சொல்லி செய்வான்.

வர்ஷினியோ தாஸோ ஐஸ்வர்யாவைக் கவனிக்கவில்லை, ஈஸ்வர் விலகியதும் “நான் எப்படிக் கார் ஓட்டினேன்” என்று தாஸிடம் வர்ஷினி பேசிக் கொண்டிருந்ததால் இருவருமே ஐஸ்வர்யாவைக் கவனிக்கவில்லை.

“தாஸ், நீங்க கார் எடுத்துகிட்டு போங்க, அப்புறம் கொண்டு வந்து விடுங்க” என்றவன், “தேங்க்யு” என்றான் பொதுவாக வர்ஷினியைப் பார்த்து,

“இட்ஸ் மை ப்ளஷர்” என்றவள் தாஸிடம் திரும்பி, “நான் தான் கார் ஓட்டுவேன்” என்று சொல்லி டிரைவர் சீட்டில் அமர்ந்தாள்.

“அம்மா, உங்களோட” என்று பெருமையாக சலித்து, பின்புறம் ஏறி அமர்ந்தான்.

“என்ன தாஸ்? சின்ன பொண்ணு, வயசான மாதிரி அம்மா கூப்பிடறீங்க” என்று ஈஸ்வர் சொல்ல,

“சம்பளம் கொடுக்கற முதலாளி அம்மா சார், எங்க அய்யாவுக்கே இவங்க தான் முதலாளி” என்று தாஸ் பெருமை பேச, இந்த வார்த்தைகளினால் வர்ஷினியின் வாழ்க்கையை சிக்கலில் மாட்டி விடப் போகிறோம் என்று தாஸ் அறியவில்லை.

“அய்யான்னா முரளியையும் பத்மநாபனையும் சொல்றீங்களா”

“எங்க பெரியய்யாவை சொன்னேன் சார்” என்றான்.

“என்னது பெரியய்யாவா” என்ற ஆச்சர்யம் மனதினில் ஓடியது, அவன் ராஜாராமை சொல்கிறான் என்று புரிந்தது.

அதற்குள் “நான் எப்படி ஓட்டினேன்னு நீங்க சொல்லவேயில்லை”

“சாரி, கவனிக்கலை”

“இட்ஸ் ஓகே! தீர்க்க முடியாத பிரச்சனைன்னு எதுவும் இல்லை!” என்று சொல்லி, ஈஸ்வரிடம் தலையசைத்தவள் லாவகமாகக் காரைத் திருப்பி வெளியே செல்ல, அப்போதுதான் ஊன்றி கவனித்தான், வர்ஷினி நன்றாகக் கார் ஓட்டுவதை.

பலமுறை ரஞ்சனி கேட்டிருக்கிறாள் “டேய் அண்ணா, நான் ஓட்டுறேன் நீ உட்காரு” என்பது போல, எப்போதும் அனுமதித்தது இல்லை, இதற்கு அப்படி ஒன்றும் வலி இல்லை, இடித்த நேரம் வலித்தது அவ்வளவே. இல்லை வேண்டாம் என்று பிடிவாதமாக மறுத்திருக்கலாம் முடியவில்லை.

அவனுடைய காரை யாருக்கும் கொடுத்தது இல்லை.

தன்னுடைய கேபின் நோக்கி சென்றான், இவனைப் பார்த்தும் “என்ன பிரச்சனை” என்றாள் ஐஸ்வர்யா மீண்டும்,

“உன் அண்ணன் நிறையப் பணம் ஜகன் கிட்ட வாங்கியிருக்கான், இப்ப அவனைக் காணோம், எங்க இருக்கான்னு தெரியலை. உங்கப்பா கேட்டா அலட்சியமா பதில் சொல்றார். என்ன நடக்குதுன்னே தெரியலை”

“நம்மளால சமாளிக்க முடியாத பணமா”

“ஆம்” என்பது போலத் தலையசைத்தான், கூடவே “அஷ்வின் எங்க இருக்கான்னு ட்ரேஸ் பண்ண முடியுமா? பணத்தை என்ன பண்ணினான்னு தெரியணும். ரொம்ப பெரிய அமௌன்ட். கண்டிப்பா செலவு பண்ண முடியாது. என்ன பண்ணினான்னு தெரிஞ்சே ஆகணும்”.

“என்னால முடிஞ்ச அளவு முயற்சி செய்யறேன். என் மேல கோபமா இருக்கீங்களா”

“தெரியலை எல்லார் மேலயும் கோபமா வருது” என்றான் மறையாது.

“டென்ஷன் ஆகாம யோசிங்க! கண்டிப்பா உங்களால சமாளிக்க முடியும் என்றவளைப் பார்த்து,

“சரி! நீ கிளம்பு! அப்பா வர்ற நேரம் ஆகிடுச்சு. உன்னைப் பார்த்தார் என்ன ஏதுன்னு விசாரிப்பார், இப்ப இருக்குற பிரச்சனையில காதலிக்கறேன் அது இதுன்னு எதுவும் சொல்ல முடியாது”

“நீங்க ஏன் இப்படி இருக்கீங்க ஷேவ் பண்ணலை, டிரஸ் சரியா பண்ணலை. இது ஆஃபிஸ் லுக் இல்லை. பார்த்தாலே எல்லோரும் ஆர் யு ஓகேன்னு கேட்கற மாதிரி இருக்கீங்க, அதுவே காட்டிக் கொடுத்திடும்”,

“சரி, பார்த்துக்கறேன், நீ கிளம்பு! எப்படி வந்த?”,

“என் ஆக்டிவால. என் மேல எதுவும் கோபம் இல்லையே” என்றாள் திரும்ப,

“இல்லை, கிளம்பு நான் பார்த்துக்குவேன். தீர்க்க முடியாத பிரச்சனைன்னு ஏதும் இல்லை” என்றான் வர்ஷினியின் வார்த்தைகளை. குரல் மிகவும் தீவிரமாக ஒலிக்க கிளம்பினாள்.

அவளுக்கு தெரியவில்லை, யாரையாவது தீர்த்தாவது பிரச்னையை முடிக்கும் தீவிரம் அது என்று.

**தீர்த்தாவது தீர்க்கப்படுவது தீர்ப்பாவது என்றது திண்ணிய நெஞ்சம்.**

**அத்தியாயம் ஏழு :**

**காதலும் கற்று மற!!!!**

ஐஸ்வர்யாவை அனுப்பிய ஈஸ்வர், இது தன்னுடைய பிரச்சனையில்லை யாரோ ஒருவனுடைய பிரச்சனை என்று மனதில் கொண்டு வந்தான். அடுத்தவனுடைய பிரச்சனை என்றால், தான் என்ன ஆலோசனை சொல்வோம் என்று நினைக்க ஆரம்பித்தான்.

பிரச்னையின் தீவிரம் அதிகம், பல நூற்றுக்கணக்கான மக்கள், இதில் ஓரிரெண்டு பேர் பாதிக்கப்படுவது ஒன்றுமில்லை, தானே பாதிக்கப் பட்டாலும் ஒன்றுமில்லை. அவர்களுக்கு நியாயம் செய்ய வேண்டும்.

“நிதி நிறுவன மோசடி” என்ற வார்த்தைத் தன்னுடைய உடலில் இந்த உயிர் இருக்கும் வரை வரக்கூடாது என்ற உறுதி எரிமலையாய் அவனுள் வெடித்து சிதறியது.

இது வராமல் இருக்க எதுவும் செய்யத் தயாரானான்.

எவன் இருந்தால் என்ன? இறந்தால் என்ன? தோன்றிய நொடி, எப்போதும் யாரோடும் பேசாத தன்னுடைய ஆணவத்தை எல்லாம் விட்டு தொலைபேசிய எடுத்தான்.

“நான் ஈஸ்வர், ஈஸ்வர் பைனான்ஸ்ல இருந்து பேசறேன், ஒரு வேலை இருக்கு பண்ண முடியுமா சுரேஷ்”

“என்ன தல? இப்படி சொல்லிட்ட! உனக்கு இல்லாததா, நான் பல தடவை உன்கிட்ட சொல்லியிருக்கேன் எதுன்னாலும் கூப்பிடுன்னு. நீங்க்காட்டி ஒரு தடவைக் கூட கூப்பிட்டதே இல்லை என்னை” என்று குறைபட்டான்.

“எதுக்கெல்லாம் குறைபடரதுன்னு ஒரு விவஸ்தை இல்லாம போச்சு”

“எல்லா வேலைலயும் ஒரு தொழில் தர்மம் வேணும் தல. நம்மகிட்ட வேல அவ்வளவு நீட் தல. அதாங்காட்டி சொன்னேன்”

“அதான் இப்ப கூப்பிட்டுட்டேன் இல்லை. உடனே வா”

“எங்க வர ஆபிஸ்கா”

“வேண்டாம், வேண்டாம், சத்யம் சினிமாஸ் வா, கூட்டமில்லாத படத்துக்கு ரெண்டு டிக்கெட் எடுத்துக்கோ, வெயிட் பண்ணு, நான் வந்து சேர்ந்துக்கறேன், எவனையும் கூட கூப்பிடாம வா”

“நீ சொன்னா சரி தல”,

உடனே கிளம்பினான், தியேட்டர் சென்றவன், அங்கே சுரேஷை பார்த்து செய்ய வேண்டிய வேலைகளை சொன்னவன், “பிரச்சனை வராம செய், மீறி வந்தா பார்த்துக்கலாம்” என்றான்.

“என்ன தல எல்லோரும் என் பேர் வராம செய்ன்னு சொல்லுவாங்க! நீ என்னடான்னா இப்படி சொல்ற”

அதற்கு பதில் சொல்லாதவன் “செய்வியா, மாட்டியா” என்றான். மனதில் ஓடியது, “தெரியாம செய்ய நிறைய வேலை வெச்சிருகேண்டா” என்று.

“முடிச்சிட்டுக் கூப்பிடறேன்”

திரும்ப ஆபிஸ் சென்றவன், எப்போதும் போல வேலைகளை கவனித்தான்,

ஜகன் அவனைப் பார்க்க அவனின் கேபின் வந்தவன், “விஷ்வா என்ன பண்ணலாம்” என்றான் பணத்தை முன்னிட்டு.

“என்ன பண்ணின பணத்தை” என்றான் ஜகனை பார்த்து.

“அஸ்வின் கிட்ட தான் கொடுத்தேன்” என்றான் சற்று தடுமாற்றமாக.

“அவ்வளவு பணம் ஏன் கொடுத்த, சும்மா திரும்ப திரும்ப, கேட்டான்! கொடுதேன்! சொல்லாத, அது நம்ம பணம் இல்லை! அடுத்தவன் பணம்! நேர்மை நாணயம் நம்பிக்கைன்னு ஏதேதோ சொல்றோமே! அதை எல்லாம் கட்டிக் காப்பாத்தணும்! என்ன பண்ணின?” என்றான் ஜகனை தீர்க்கமாகப் பார்த்து.

“நான் ஒன்னும் பண்ணலை” என்று தடுமாறியவன், எழுந்து போய் விட்டான்.

போகும் அவனை யோசனையாகப் பார்த்திருந்தான் ஈஸ்வர்.

பிறகு அவனின் பீ ஏ பார்க்க வந்தான், “சர், இன்னும் ரெண்டு மாசத்துல நம்ம ஸ்கீம் ஒன்னு முடியப் போகுது இல்லையா, ரெண்டு மூணு நாளாவே அதைக் கன்ஃபார்ம் பண்ணிக்க நிறைய கால்ஸ். நம்ம  மோட் ஆஃப் பேமென்ட் எப்படி?”

“எப்படிச் சொல்லியிருக்கோம்”

“அவங்க அக்கௌன்ட்க்கு ட்ரான்ஸ்பர் பண்ணற மாதிரி”

“எஸ், அப்படியே தான்! சொன்ன டேட்ல இருந்து அதிக பட்சம் ஒரு பத்து நாள் கிரெடிட் ஆகிடும்னு சொல்லுங்க, எல்லோர் கிட்டயும் ஒரு செக் லீஃப் வாங்குங்க, அந்த ப்ராசெஸ் உடனடியா ஆரம்பிங்க”

“எதுக்கு செக்ன்னு கேட்டா”

“எத்தனை வருஷ எக்ஸ்பீரியன்ஸ் எப்பக் கத்துக்குவீங்க, நான் வந்து ரெண்டு வருஷம் தான் ஆகுது. நீங்க பத்து வருஷமா இருக்கீங்க. இதுல இப்ப வந்தவன் முதலாளின்ற ஹோதால ஆர்டர் போடறான், கத்துக்குட்டின்னு கமெண்ட் வேற”

பீ ஏ விழித்தான். தாங்கள் பேசுவது இவனுக்கு எப்படித் தெரியும் என்பது போல.

“அவங்க அக்கௌன்ட் நம்பர்காக..... இல்லைன்னா மாத்தி மாத்தி கொடுப்பாங்க ஏதாவது தப்பாகும்”

“கேட்டா ஏதாவது மிஸ் யூஸ் பண்ணுவோம்னு கேள்வி கேட்பாங்க”

“கிராஸ் பண்ணி யாரும் உபயோகிக்க முயாதபடி குடுக்கச் சொல்லுங்க”

“சரிங்க சர்”

“நாளைக்கு காலையில எனக்கு ஆடிட்டர் கூட மீட்டிங் ஃபிக்ஸ் பண்ணுங்க, நாளைக்கு மதியம் ரெண்டு மணிக்கு போர்ட் மீட்டிங் சொல்லுங்க, அதுக்கு அப்புறம் ஆல் ஓவர் தமிழ்நாடுல இருக்குற எல்லா பிரான்ச் மேனேஜர்சும் என்னை பார்க்கணும் சொல்லுங்க, சென்னைக் கிளம்பி வரச் சொல்லுங்க”

“சர், உடனேவா! டிக்கெட் கிடைக்கலைன்ற மாதிரி ஏதாவது சொல்வாங்க”

“என்ன டிக்கட் கிடைக்காதா? அப்போ நடந்து வரச் சொல்லுங்க, இல்லை சைக்கில்ல வரச் சொல்லுங்க, இல்லை ஆட்டோல வரச் சொல்லுங்க” என்றான்

“என்ன பேசுகிறான்” என்பது போல பீ ஏ பார்க்க..

“முடியாதுல்ல... வித்தவுட்ல வர சொல்லுயா! அவன் சொல்லுமுன்ன நீ சொல்ற! உன்னை என்ன செய்யலாம், வரணும்னா வரணும் வரமுடியலைன்னா அப்படியே ஆஃபிஸ் விட்டு வெளில போயிட சொல்லு, வந்ததுக்கு அப்புறம் எவனாவது ட்ராவல் அலவன்ஸ் கேட்டான், அந்த பில்லை கிழிச்சு உங்க முகத்துல தான் எறிவேன், எவனும் கேட்காதபடி நீங்க தான் பார்க்கணும் போங்க” என்று கத்தினான்.

“ஓகே சர்” என்றபடி வெளியே வந்தான் பீ ஏ. நாய் பொழப்பு நம்மளது என்று நினைத்தபடி. எதிர் பட்ட இன்னொரு ஸ்டாஃபிடம் “கத்தறார், என்ன விஷயம்னு தெரியலை” என்று நொந்து கொண்டான்.

முரளி வீட்டினர் மாலையில் தான் கோவிலில் இருந்து எல்லோரும் வீடு வந்தனர், அவர்கள் வந்ததும் வர்ஷினி முரளியிடம், “அண்ணா! உன் ஃபிரண்ட் மிஸ்டர் ஈஸ்வர் வந்தாங்க, உங்களைப் பார்க்க” என்றாள்.

“ஈஸ்வரா, ஃபோன் பண்ணலையே அவன்”

“தெரியலை அண்ணா! பட் ரொம்ப ஒரு மாதிரி டிஸ்டர்ப்டா இருந்தாங்க! இதுல கால்ல இடிச்சிகிட்டாங்க! நான் தான் அவங்க

ஆபிஸ்ல டிராப் பண்ணினேன்” என்றாள்.

“என்ன நீ டிராப் பண்ணினியா” என்றான் ஆச்சர்யமாக முரளி.

“ஆம்” என்றாள்.

“என்னடா நடக்குது” என்று மனதிற்குள் வியந்தான், முதலில் அப்படி ஒன்றும் ஈஸ்வர் டிஸ்டர்ப் ஆகும் ஆளில்லை அதுவும் அடுத்தவர் கவனம் கவரும் அளவிற்கு, அதிலும் அதிசயம் வர்ஷினி கொண்டு போய் விட்டேன் என்று சொல்வது, யாரோடும் பேசவே மாட்டாள், இதில் கொண்டு போய் விட்டாளா? ஈஸ்வர் ஒரு பெண் கார் ஓட்ட அருகில் அமர்ந்து போனானா? அதுவும் இவளை நம்பி, இவள் நன்றாக கார் ஓட்டுவது அவனுக்கு எப்படி தெரியும்?

இந்த சம்பாஷணையை ராஜாராமும் கேட்டுக் கொண்டு தான் இருந்தார்.

“என்ன பாப்பா? நீங்க தனியா கொண்டு போய் விட்டீங்களா”

“இல்லைப்பா! தாசண்ணாக் கூட வந்தாங்க”

“அப்போ சரி” என்றவர், கூடவே “தாஸையே கொண்டு போய் விட சொல்லியிருக்கலாமே! நீங்க ஏன் போனீங்க?”

“தோணிச்சு! போனேன்! தப்பா!”

“தம்பி நமக்குத் தெரிஞ்சவர் தான், இப்படி யாரும் தெரியாதவங்க கூடப் போகக் கூடாது”

“பா! நான் என்ன சின்ன பொண்ணா எனக்குத் தெரியாதா” என்று முகத்தை சுருக்கியவள், தன் ரூம் நோக்கி செல்லப் போக,

“இரு, வர்ஷினி! அப்பா பேசிக்கிட்டு இருக்காங்க” என்று அதட்டினான் பத்மநாபன்,

அவன் அதட்டியதற்கு கோபமாக அவனைப் பார்த்த போதும் இருந்தாள்.

ராஜாராமிற்கு என்ன சொல்வது என்று தெரியாமல் நிற்க,

“முதல்ல மரியாதையைக் கத்துக்கோ வர்ஷினி! அப்பா பேசிட்டே இருக்காங்க! நீ போற!” என்று அதட்டினான் பத்மநாபன்.

அப்படியே நின்றிருந்தாள், முகத்தை உர்ரென்று வைத்து,

ராஜாராமும் முரளியும் அவளுக்குப் பரிந்து ஏதோப் பேச வர, அவர்களைக் கண்களால் அடக்கியவன், “உட்காரு” என்று அதட்டினான்.

தொப்பென்று அவள் உட்கார, அவளருகில் அமர்ந்தான் பத்மநாபன்.

“நீங்கள் செல்லுங்கள்” என்பது போல முரளியையும் ராஜாராமையும் சைகை செய்தான். அவர்கள் அகன்று விட,

“வர்ஷினி, நீ போனது கண்டிப்பா தப்புக் கிடையாது, ஆனா நீ எல்லோருக்கும் போறது இல்லை, இப்படி திடீர்ன்னு ஒருத்தரோட சகஜமா போனா எல்லோர் கவனத்தையும் கவரும். அதை தான் அப்பா சொல்றாங்க” என்றான் பொறுமையாக.

அப்போதும் அப்படியே அமர்ந்திருந்தாள், “ஹேய் வர்ஷ், cool.. கோபப்படாத! நீ ஒரு அழகான பொண்ணு இல்லையா? தெரிஞ்சவங்கன்னாலும், இப்படி சட்டுன்னு யாரோடையும் தனியா போகக்கூடாது. நல்லவங்க தான்னாலும் எல்லா நேரமும் சில சமயம் நல்லவங்களா இருக்க மாட்டாங்க”.

“ஐ நோ ஈஸ்வர், நல்லவன் தான் தப்பு சொல்ல முடியாது! ஆனா ரொம்ப கர்வம் பிடிச்சவன், தான்ற அகங்காரம் அவனுக்கு நிறைய. இங்க எல்லோரும் அவனைத் தலையில தூக்கி வெச்சு ஆடுவாங்க. கீப் டிஸ்டன்ஸ் வித் ஹிம்”

அவன் சொல்லாமல் விட்டது, “கல்யாணத்துல அவன் உன்னை அடிக்கடிப் பார்த்தான்” என்பது. கூடவே முரளி இல்லாத போது இவன் ஏன் வரவேண்டும் என்ற கேள்வி. அவன் என்ன கண்டான் ஈஸ்வரின் நிலையை.

“அண்ணா, உன் நல்லதுக்கு தானே சொல்வேன்” என்றான் தணிவாக ஆழ்ந்த குரலில்.

வர்ஷினி நிமிர்ந்து அவனைப் பார்க்க, “ஈஸ்வர், நல்லவன் தான் எனக்குத் தெரியும். ஆனா எல்லோரும் எப்படி நினைப்பாங்க சொல்ல முடியாது we should not give room for others to talk”.

“தாசண்ணாக் கூட வந்தாங்க”

“இதை விடு, இனிமே போகாத! யார்க் கூட வந்தாலும்!” என்றான் உறுதியாக.

“சரி” என்பதுப் போலத் தலையசைத்தாள்.

“உனக்கு எங்கே போகணும்னாலும் சொல்லு! நான் கூட வருவேன்!”

“ம், சரி!” என்று தலையசைத்தாள்.

“எங்களோட சகஜமா இரு! தள்ளி தள்ளி நிற்காத, முரளி எப்படியோ அப்படி தான் நீ எனக்கு, நிறைய முறை சொல்லணும்னு நினைச்சிருக்கேன், ஆனா சொன்னதில்லை you are my sweet little sister” என்று சொல்லிப் புன்னகைத்தான்.

அந்த புன்னகை வர்ஷினியையும் தொற்ற, புன்னகைத்தவள், “நான் இப்போ போகட்டுமா”

“போ, ஆனா ஒரு ரெண்டு வார்த்தை அப்பாக் கூட பேசிட்டுப் போ!”

அவர் எங்கே என்பது போல பார்த்தவள், “தாத்தாக் கூட இருக்காங்க” என்றாள்.

“சரி, அப்புறம் பேசு! போ!” என்று அனுப்பினான்.

ஆம்! ராஜாராமின் அப்பா வர்ஷினியை சற்று தள்ளித் தான் வைப்பார். திட்டுவார், மனம் நோகும் படி பேசுவார் என்று எதுவும் கிடையாது. ஆனால் ஒரு விலகல் தன்மை இருக்கும். ஒரு பாசம் இருக்காது, நீ வருகிறாயா வா! போகிறாயா போ! என்பது போலத் தான்.

அதனால் வர்ஷினியும் முடிந்தவரை தள்ளி நிற்பாள்.

“மேல என்ன படிக்கப் ப்ளான் பண்ணியிருக்க, மெடிசின், எஞ்சிநீயரிங், மானேஜ்மென்ட் ஸ்டடீஸ்” என்று லிஸ்ட் அடுக்க,

“விஷுவல் கம்யுனிகேஷன்” என்றாள் தெளிவாக.

“ஓஹ், ப்ளான் பண்ணிட்டியா” என்றான்.

“ம்ம்ம்” என்பது போல வர்ஷினி தலையசைக்க..

அதே சமயம் “என்ன, என்னுடைய ப்ளான்” என்பது போல ஈஸ்வரும் யோசனையில் இருந்தான். ஒரு பேப்பர் எடுத்தவன்,

பணம் வந்தால் எப்படி மேனேஜ் செய்வது, வராவிட்டால் எப்படி மேனேஜ் செய்வது, என்று லிஸ்ட் எடுத்தான்.

வந்தால் ஒரு பிரச்னையும் இல்லை வராவிட்டால் என்ன செய்வது என்று பல வழிகளை எழுதியவன், அதில் வரக் கூடிய சிக்கல்கள் என்ன என்றும் வரிசைப் படுத்தினான்.

அவன் இதைச் செய்து கொண்டிருக்கும் போதே முரளி அவனை அழைத்தான், “ஈஸ்வர், பார்க்க வந்தியா”

“ஆமாம்”

“நீ ரொம்ப அப்செட்ன்னு வர்ஷினி சொன்னா! என்ன விஷயம்?”

“போன்ல பேச முடியாது! நேர்ல தான் பார்க்கணும். என்ன பண்ணலாம், நீ பிசியா?”

“என்ன பெரிய பிசி! என்ன இது புதுசா ஃபார்மலான பேச்சு! வாடான்னா வர்றேன்”

“ம்ம்ம்ம்! உனக்கு புதுசாக் கல்யாணமாகியிருக்கு! அதான்!”

“ப்ச்! எங்க வரணும், சொல்லு! இல்லை நீ வர்றியா!”

“இல்லை, நான் வரலை! நீ வா!” என்று ஹோட்டலின் பெயரை சொன்னான்.

ஒரு மணி நேரத்தில் இருவருமே அங்கே இருந்தனர்,

ஈஸ்வரை பார்த்தவன் “என்னடா இப்படி இருக்க” என்றான் கவலையாக.

ஷேவ் செய்யாமல், ஒரு மாதிரி களையிழந்து, இப்படி ஈஸ்வரை இதுநாள் வரை முரளி பார்த்ததில்லை.

ஏன் முரளி என்றாவது ஒரு மேட்ச் இல்லாமல் அவசரமாக டிரஸ் செய்து சென்றால் கூட கடிவான். “எப்பவும் நம்ம லுக் அடுத்தவன் பார்க்கற போது பாராட்டுற மாதிரி இருக்கணும்” என்பான், அப்படி தான் இருப்பான்.

“உட்காரு” என்றவன், ஜகன் அஸ்வினிடம் பணம் கொடுத்தது, இப்போது அவன் எங்கே இருக்கிறான் என்று தெரியாமல் இருப்பது, அஸ்வினின் தந்தையிடம் கேட்டால், அவர் மரியாதையில்லாமல் அலட்சியமாக பதிலளித்தது என்று எல்லாமும் சொன்னான்.

“டைம்க்கு பணம் குடுக்கலை, பிரச்சனை ரொம்பப் பெருசாகும், அப்புறம் நம்ம திரும்ப கொடுத்தாக் கூட இந்த பேர் இருக்காது. பிசினஸ் டவுன் ஆகிடும். அதுவுமில்லாம கடனா நம்ம கஸ்டமர்ஸ்க்கு குடுத்த பணம் திரும்ப வரவே வராது. லாஸ் அப்படின்றதை விட, ஏமாத்திட்டோம்ன்ற பேர், அதுக்கு அப்புறம் எப்படி வெளில தலை காட்டுறது. எல்லாம் முடிஞ்சிடும்”

“என்ன பண்ணலாம்?”

“தெரியலை”

“எவ்வளவு பணம்?”

தொகையைச் சொல்லவும்,

“எப்படிடா இவ்வளவு பணம் கொடுக்க முடியும்” என்று வாயை பிளந்தான் முரளி. “இவ்வளவு பணம் என்ன பண்ணியிருப்பான்?”

“தெரியலை”

“அப்பாக் கிட்ட நான் பேசவா ஏதாவது அமௌன்ட் ஏற்பாடு பண்ண முடியுமான்னு?”

“பேசலாம்! ஆனா நான் எப்படித் திரும்ப குடுப்பேன்”

“இதுக்கெல்லாம் நான் எப்படிடா பதில் சொல்ல முடியும், என்ன அப்பாக் கிட்ட பேசட்டுமா”,

“உன் இஷ்டம்”

“இவனை!!!!!” என்பது போல முறைத்துப் பார்த்தான் முரளி. “உதவி செய்யட்டுமா என்று கேட்டால் உன் இஷ்டம் என்கிறான். உதவியைக் கூட எப்படி திமிராக கேட்கிறான், இவனை என்ன செய்ய” என்பது போலப் பார்த்தான்.

ஈஸ்வர் பேரரை கூப்பிட்டு “ரெண்டு லார்ஜ்” எனவும்,

“எனக்கு வேண்டாம்! கல்யாணமாகி ரெண்டு நாள் தான் ஆகுது! பயந்துடப் போறா” என்றான் மனைவியை நினைத்து.

“சரி, நான் குடிக்கறேன்! நீ வேடிக்கைப் பாரு”

“ஒன்னு கேன்சல் பண்ணுடா”

“நோ, நோ, ரெண்டும் எனக்கு வேணும்” என்று அவன் சொன்ன போது ஃபோன் வர அதை எடுக்கவும்,

“தல முடிச்சிட்டேன்! இனி என்ன பண்ண?”

“இருட்டு ரூம்ல நாள் முழுசும் போடு, சாப்பிட எதுவும் குடுக்காத, பாத்ரூம் போகணும்னா கூட அனுப்பாத! அடைஞ்சு கெடக்கட்டும்! நாளைக்கு இந்த நேரம் என்ன பண்றதுன்னு யோசிக்கலாம்” என்று போனை வைத்தான்.

“என்னடா? என்ன பண்ற?” என்று முரளி கவலையாகக் கேட்க,

“அதான் அவன் அந்த பிரகாசம்! அவனை தூக்க சொல்லியிருக்கேன்! என்ன தெனாவெட்டா பேசினான் தெரியுமா? இந்த விஷ்வேஸ்வரன் யாருன்னு அவனுக்கு காட்டணும்!” சொல்லும் போது குரலில் அவ்வளவு தீவிரம்.

“ஈஸ்வர், ஏதாவது பிரச்சனையில மாட்டிக்காத! உன் கிட்டயே அவ்வளவு அலட்சியமா பேசியிருக்கான்னா எதுக்கும் துணிஞ்சவனா இருப்பான்! சொந்தம் வேற!”

“எவனா இருந்தா என்ன? நான் யார்ன்னு அவனுக்குக் காட்டணும்! பணத்தை வாங்கியே ஆகணும்! அவன் இன்னும் உயிரோட இருக்குற நாள் வரை என்கிட்டே பேசினதை நினைச்சு வருத்தப்படணும்!”

முரளி கவலையாகப் பார்த்தான், ஈஸ்வர் நல்லவன், ஆனால் எதிரில் இருப்பவன் அவனுக்கு எதிரியாகும் வரை.

பல சமயம் தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள் என்று யாருக்கும் தெரியாத குணங்கள் நண்பனுக்கு தெரியும்.

எத்தனை வருடமாக ஈஸ்வரைப் பார்க்கிறான்.

“அப்பாக் கிட்ட பேசட்டுமா”

“பேசு! ஆனா எப்படி திரும்பக் கொடுப்பேன்னு கேட்டா என்கிட்டே இப்போதைக்கு பதில் கிடையாது, கண்டிப்பா திரும்பக் கொடுப்பேன்! ஆனா எப்போன்னு சொல்ல முடியாது. ஏன்னா திரும்ப கொடுக்கணும்னு ஒரு கம்பல்ஷனோட வேலை பார்த்தா, அதிக வட்டி போட வேண்டி வரும், வாங்குறவன் வாங்குவான். ஆனா ஒழுங்கா கட்டுவான்னு சொல்ல முடியாது. ஒரு மாதிரி சிஸ்டம் கொலாப்ஸ் ஆகும்!”

“இப்படி எல்லாம் நான் அப்பாக் கிட்ட பேச முடியாது! கேட்கறது கடன்டா பணிவா தான் கேட்கணும்! நீ கொடு, ஆனா நான் எப்பக் குடுப்பேன்னு சொல்ல முடியாதுன்னு எல்லாம் சொல்ல முடியாது! ரொம்ப பெரிய அமௌன்ட் ஏதாவது பதில் ரெடி பண்ணு புரியுதா” என்று முரளி அதட்ட.

“ம்ம்ம், யோசிக்கறேன்!” என்றான் ஈஸ்வர் தெனாவெட்டாக.

“நீ அடங்க மாட்டடா”

பேசப் பேச இரண்டு லார்ஜும் ஈஸ்வரின் உள்ளே இறங்கியது... “என்னடா கொஞ்சம் கூட ஏறவே இல்லை, என்னோட மைன்ட் ரிலாக்ஸ் பண்ணலாம்னா? முடியலை!” சொன்னவன்,

திடீரென்று சிரிக்க துவங்க....

“எதுக்குடா சிரிக்கிற இப்போ” என்றான் முரளி இன்னும் கவலையாக என்ன வாகிற்றோ என்று.

“உன் தங்கை இன்னைக்கு என்னைப் பார்த்து ஒரு காமெடி பண்ணினா”

“என்ன”

“அடி பட்டுச்சா, ஒரு நிமிஷம் கழிச்சு போங்கன்னு எனக்கு இளநி கொண்டு வந்து கொடுக்க சொன்னா” என்றான் சிரிப்புடன்.

முரளியின் முகத்திலும் புன்னகை “என்னவோ ஊருக்குள்ள உன்னை பார்த்தா நல்லவன்னு நினைக்கறாங்க” என்று அவனும் சிரித்தான்.

கூடவே “எவ்வளவு அடிச்சாலும் உனக்கு ஏறாதுன்னு, இளநியோட தான் எப்பவும் நீ மிக்ஸ் பண்ணி அடிப்பன்னு யாருக்கு தெரியும்” என்று சொல்ல....

"என்ன சொல்லு? அதோட டேஸ்டே தனி!, போதையும் ரொம்ப நேரம் நிற்கும், இப்போ பாரு எனக்கு போதையே இல்லை" என்று சொல்லி வெளியே வந்தான்..

"நீ கிளம்பு" என்று முரளியை அனுப்பி ஈஸ்வர் காரை எடுத்தான்.

காலையிலிருந்து முயன்று வர்ஷினியை ஒதுக்கி பிரச்சனைகளை முன் நிறுத்தி இருந்தான், இப்போது முரளியிடம் பேசவும் மீண்டும் அவளின் ஞாபகம்.

மனது "அவளையும் டேஸ்ட் பண்ணேன்டா. அந்த போதை எப்படி இருக்கும்ன்னு பார்க்கணும்" என்று சொல்லியது.

இத்தனை வருடம் பிறந்தது முதலாக வளர்த்த நற்பண்புகள் அவனை விட்டு ஒதுங்கியது.

**கற்றது களவு!!!!**

## அத்தியாயம் எட்டு :

**செய்கின்ற செயல்கள் சில சமயம் மட்டுமே விளக்கத்திற்கு அப்பாற்பட்டது!!!!**

வீடு சென்றவன், சரண் அவனைப் பார்த்ததும் "சித்தப்பா" என்று வர, அவனைக் கண்டு கொள்ளாமல் யாரோடும் பேசாமல் ரூமிற்குள் புகுந்தான். அதுவே சொன்னது வீட்டினருக்கு அவன் குடித்திருக்கிறான் என்பது. மொடாக் குடியன் அல்ல, எப்போதாவது அரிதாக குடிப்பான் பார்ட்டி ஏதாவது போனால். எதுவும் சொன்னாலும் கேட்டுக் கொள்ள மாட்டான். அதனால் யாரும் சொல்லி அவர்கள் டென்ஷனாவது இல்லை.

எந்த விஷயத்தையும் ரசித்து செய்பவன் ஈஸ்வர், சரியான விஷயங்கள் என்றாலும் தப்பான விஷயங்கள் என்றாலும்.

அவன் பின்னோடு வந்த அம்மா "சாப்பிடலையா"

"பசியில்லைம்மா"

"குடிச்சிருக்கியா"

"ம்" என்பது போல தலையாட்டினான்.

“ஏன் விஷ்வா இப்படி பண்ற?”

“மா! காலையில பேசுங்க!” என்றான் அவர் பதிலை எதிர்பார்க்காமல், பாத்ரூமினுள் புகுந்து கொண்டான்.

வேறு வழியில்லாமல் அவர் கதவை மூடி சென்றார்.

காலையில் அவன் விழித்து கீழே வந்த போது வீடு பரபரப்பாக இருந்தது,

அவனின் பாட்டி சௌந்தரி அம்மாள், “விஷ்வா, நம்ம ரூபாவோட அப்பாவை காணோமாம்” என்றார்.

“சரி அதுக்கு?” என்று பேப்பரை பிடித்துக் கொண்டு அவன் அமர,

“என்னடா இப்படி சொல்ற?”

“வேற எப்படிச் சொல்வாங்க. அந்த ஆளுக்கெல்லாம் இவ்வளவு மரியாதை குடுக்கறதே பெருசு”

ரூபாவின் காதுகளில் அந்த வார்த்தை விழ அப்படியே நின்று விட்டாள். ஜகன் எங்கே என்பது போலப் பார்க்க, அவனும் ஈஸ்வரைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

என்ன நடக்கிறது தன்னைச் சுற்றி, “என்ன ஈஸ்வர் இப்படிப் பேசற” என்று அருகில் வந்தாள்.

“உன் வீட்டுக்காரனைக் கேளு, நேத்துக் காலையில உங்க வீட்டுக்கு போனோம் சொன்னானா”

“சொன்னார்...”

“போய் உட்கார்ந்து இருக்கோம், உங்கப்பா ஒரு மணிநேரம் கழிச்சு வர்றார் அவ்வளவு அலட்சியமா பேசறார்” என்றான் கோபமாக.

“என்ன” என்பது போல ரூபா ஜகனை பார்க்க, அவன் ரூபாவின் பார்வையைக் கூட சந்திக்கவில்லை.

“உன்கிட்ட அதை சொன்னானா இல்லையா”,

“சொல்லவில்லை” என்பது போல ரூபா தலையாட்டா,

“ஏன் சொல்லலை, அப்போ இவனும் ஏதாவது சேர்ந்து பண்றானா?” என்றான் கோபமாக.

ரூபா அதற்கு பதில் சொல்லாமல் “அப்போ அவர் காணாம போனதுக்கும் உனக்கும் சமந்தம் இருக்கா”

“கண்டிப்பா இருக்கு” என்றான்.

“என்ன நடக்குது?” என்று அவள் அப்படியே அமர்ந்து விட,

“கேளு, இவன் கிட்டக் கேட்டு என்னன்னு சொல்லு, அப்புறம் உங்கப்பாவை என்ன செய்யறதுன்னு யோசிக்கறேன்”

“விஷ்வா, நீ என்ன செய்யற” என்று குடும்பம் மொத்தமும் பதற... யாருக்கும் பதில் சொல்லவில்லை, பெரியம்மாவிடம் மட்டும், “இவன் என்னவோ பண்றான் பெரியம்மா. எனக்கு கண்டுபிடிக்க முடியலை. என்னன்னு பாருங்க” என்று சொல்ல.

“என்ன விஷயம்?” என்று நமசிவாயதிடம் கேட்க, அப்போது தான் குடும்பத்தில் உள்ள எல்லோருக்கும் பணப் பிரச்சனை தெரிந்தது.

“பிரச்சனையை தீர்க்கலை, ரெண்டு மாசத்துக்கு அப்புறம் நம்ம ஒண்ணுமில்லாம போயிடுவோம், மோசடி குடும்பம்ன்னு பேர் எடுப்போம். அதையும் விட அப்பா நான் ஜகன் மூணு பேரும் ஜெயிலுக்கு போவோம்”

“இதையெல்லாம் விட நம்மை நம்பி பணம் போட்டவன் குடும்பம் மொத்தமும் என்ன ஆகும். அந்தப் பாவத்தை எங்க கொண்டு போய் தொலைப்போம் பாட்டி” என்றான்.

எப்போதும் பாவ புண்ணியத்தை பற்றி சௌந்தரி பாட்டி அதிகம் பேசுவார். அதனால் அவரிடம் சொல்ல, அவன் சொல்லி முடிக்கக்கூட இல்லை, “சரி படுத்திக் கொடு கடவுளே” என்று கடவுளை தொந்தரவு செய்ய பூஜை அறையைத் தஞ்சம் அடைந்தார்.

ரஞ்சனி அப்பாவின் அருகில் அமர்ந்தவள் “அப்பா! கவலைப்படாதீங்க. உங்க அம்மா கடவுளை தொந்தரவு பண்ண போயிட்டாங்க, அவங்க தொந்தரவு தாங்காம கடவுள் சரி பண்ணிடுவார்” என்று சூழலை இலகுவாக்க முயன்றவள்,

“நீ பெரிய இவன் மாதிரி எல்லோரையும் பயமுறுத்தாத சமாளிக்கலாம்” என்று ஈஸ்வரை அதட்டியவள் பெரியம்மாவிடம் சைகை செய்தால், “ஜகனை கூட்டிக் கொண்டு போய்க் கேளுங்கள்” என்பது போல.

ரூபாவை சமாதானம் செய்தால் “அண்ணி, பண விஷயம். ஏதோ கோபத்துல பண்ணிட்டான் அண்ணா, உங்க அப்பாக்கு எதுவும் ஆகாது, போய் என்ன விஷயம்னு ஜகன் அண்ணாக்கிட்ட தெரிஞ்சிக்கங்க” என்று ரூபாவையும் அனுப்பினாள்.

பிரணவியை தூக்கிக் கொண்டவள், சரணிடம் “சித்தப்பாக் கிட்ட இரு, அத்தை வந்து குளிக்க வைப்பேன்” என்று அவனையும் பார்த்தாள்.

எல்லாவற்றையும் மௌனமாக பார்த்திருந்தான் ஈஸ்வர். “அவனை தூக்கி மடில வை விஷ்வா. நேத்து நைட்டே நீ அவன் கூப்பிடக் கூப்பிட போன, குழந்தை முகமே சுருங்கிடுச்சு. தூக்கு அவனை!” என்று அண்ணனை அதட்ட, சரணை தூக்கி மடியில் வைத்தான் ஈஸ்வர்.

அம்மாவிடமும் அப்பாவிடமும் “நான் பேசறேன்” என்பது போல சைகை செய்தவள்,

“நீ பண்றது தப்பு விஷ்வா! பணத்துக்காக அவங்கப்பாவை ஒளிச்சு வைப்பியா? என்ன பண்ற நீ? அண்ணியோட அப்பா மட்டுமில்லை அவர். ஐஷ்ஷோட அப்பாக்கூட அவர்தான்” என்றாள் அவனுக்கு மட்டும் கேட்பது போல்.

“ரஞ்சனி புரிஞ்சிக்கோ அந்த வீட்ல பொண்ணு எடுத்ததுக்காக நாம பிரச்சனையில மாட்டலாம்! ஆனா நம்மை நம்பி பணம் போட்டவங்க, நீங்க எல்லோரும் ஈஸ்வர் ஃபைனான்ஸ்ஸோடா ஒரு அங்கம் தான். ஆனா ஈஸ்வர் ஃபைனான்ஸ் என்னோட அடையாளம். ஈஸ்வர் என் பேரு, அதுக்கு எந்த பங்கமும் நான் வர விடமாட்டேன்”.

“இதுக்கு நடுவுல யாரும் வரவேண்டாம்! அப்பா அம்மா சொந்தம் பந்தம்ன்னு யாரையும் இழுக்காதீங்க! என்ன பண்ணனும்ன்னு நான் பார்த்துக்கறேன்!” என்று கத்தினான்.

“விஷ்வா! கோபப்படாத பொறுமையா ஹேண்டில் பண்ணு! கடத்தல் எல்லாம் தேர்ட் ரேட் ஆசாமிங்க செய்யற வேலை”.

“ஒன்னு நல்லா புரிஞ்சிக்கோ ரஞ்சனி! நல்லவனா இருக்குறவன் எல்லாம் ஃபைனான்ஸ் தொழிலுக்கு லாயக்கில்லை, அவன் ஃப்ராடா இருக்கணும்! தேர்ட் ரேட்டா இருக்கணும்! அப்போதான் அடுத்தவன் நம்ம கிட்ட அவன் வேலையைக் காட்ட மாட்டான்”

“நான் இனிமே அப்படித்தான் இருக்கப் போறேன், சும்மா எனக்கு அட்வைஸ் பண்ணாத ரஞ்சனி. அட்வைஸ் பண்ற அளவுக்கு கெப்பாசிட்டி இருக்குன்னு நினச்சா, அந்த தொலஞ்சு போன பணத்தைக் கொண்டு வந்து கொடு பார்ப்போம்”

ரஞ்சனி என்ன பேச்சு என்பது போலப் பார்த்தாள்.

“முடியாதில்ல! நான் செய்யறதை மட்டும் வேடிக்கை பாரு!” என்று சொல்லி இடத்தை விட்டுச் சென்றான்.

“என்ன அகங்காரம் இவனுள்” என்று தான் ரஞ்சனிக்கு தோன்றியது.

காலையில் ஆடிட்டருடன் மீட்டிங் சென்றவன், என்ன செய்யலாம் என்று அவருடன் பேசினான். பின்பு போர்ட் மீட்டிங் செல்ல, அங்கே அப்பா மட்டுமே வந்திருந்தார்,

“ஜகன் எங்கப்பா?”

“வரலை” என்றார். பெரியம்மாவும் ரூபாவும் அவனைக் கேள்வியால் துளைத்து எடுக்கிறார்களோ. ஜகன் இதில் இருக்கிறானா, பணத்தை என்ன செய்திருப்பான் கவலையாக இருந்தது.

பின்பு அந்த மீட்டிங்கை முடித்து மதியம் எல்லா பிரான்ச் மேனேஜர்களையும் சந்தித்தான். “மூணு மாசத்துக்கு யாருக்கும் எந்த லோனும் கொடுக்க வேண்டாம். லோன் திரும்ப கட்டாம இருக்குறவங்களுக்கு கொஞ்சம் பிரஷர் கொடுங்க” என்பது போல பல ரூல்ஸ் போட்டான்.

இத்தனை வேலைகள் செய்தாலும் இந்த முரளி ஏன் இன்னம் அழைக்கவேயில்லை என்று மனதின் ஒரு ஓரம் அரித்துக் கொண்டே இருந்தது.

பிரான்ச் மேனேஜர்களுடன் மீட்டிங் முடிந்ததும், பிரகாசத்தை என்ன செய்வது என்று யோசித்தவன், சுரேஷை அழைக்கத் தொலைபேசியை எடுத்தான்.

அவன் எடுக்கவும் அது அடிக்கவும் சரியாக இருந்தது. ரஞ்சனி அழைத்து இருந்தாள், எடுக்கவும் அவளின் குரல் பதட்டமாக ஒலித்தது, “விஷ்வா! ஜகன் அண்ணா தூக்க மாத்திரை சாப்பிட்டுட்டான், அப்போல்லோ கொண்டு போறோம்! வா!” என்று சொல்லி வைத்துவிட,

கேட்டதும் அதிர்ந்து விட்டான், கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை, விரைந்து ஓட வேண்டும் என்று நினைத்தாலும் கால்கள் அசைய மறுத்தது.

“என்ன? என்னவாகிற்று? ஏன் இப்படி செய்தான்? பணத்தை இவன் தான் ஏதாவது செய்து விட்டானோ. எதுவாகினும் சரி படுத்திக் கொள்ளலாம். கடவுளே அவனுக்கு எதுவும் ஆகக் கூடாது” என்று பிரார்த்திக்க ஆரம்பித்தது.

ஒருவழியாக ட்ராபிக்கில் கலந்து இவன் ஹாஸ்பிடல் அடைய கிட்ட தட்ட ஒரு மணிநேரம் ஆகியிருந்தது.

ஹாஸ்பிடல் முன் இருந்த படியில் பிரணவியை வைத்துக் கொண்டு வர்ஷினி நின்றிருந்தாள். இவள் எங்கே இங்கே என்பது போலப் பார்க்க, இவனைப் பார்த்ததும் “ஐ சீ யு ல இருக்காங்க” என்று தகவல் சொல்ல பதில் ஏதும் பேசாமல் விரைந்தான்.

அங்கே ஐ சீ யு முன் ஈஸ்வர் குடும்பம் மொத்தமும் நின்றிருக்க, கூடவே முரளியின் குடும்பமும், இவர்கள் எங்கே இங்கே என்று தோன்றிய போதும் ரஞ்சனியை தேடினான்.

இவனைப் பார்த்ததும் விரைந்து வந்தவள், “வீட்லயே ஜகனை வாமிட் பண்ண வெச்சிட்டேன் ப்ராப்லம் இருக்காது! பார்த்துட்டு இருக்காங்க!” என்றாள்.

பெரியம்மாவும் ரூபாவும் எங்கே என்பது போலப் பார்க்க, ரூபா சரணை மடியில் வைத்து எங்கோ வெறித்தபடி அமர்ந்திருந்தாள். அவளிடம் முதலில் விரைந்தவன் “ஒன்னும் ஆகாது ரூப்ஸ்” என்று சொன்னான்.

ஈஸ்வரைத் திரும்பியும் பாராது அவள் அமர்ந்து இருந்தாள். பெரியம்மாவும் பக்கத்தில் இருக்க, “என்ன ஆச்சு பெரியம்மா” என்று அவன் கேட்க அவரும் ஒரு பதிலும் சொல்லவில்லை.

எழுந்து முரளியிடம் சென்றான், “நீங்க எங்கடா இங்க”

“அப்பாக்கு காலையில நெஞ்சு வலி! இங்க தான் அட்மிட் பண்ணியிருக்கோம், மேசிவ் ஹார்ட் அட்டாக், இன்னும் ஒன்னும் சொல்லலை ஐ சீ யு ல இருக்கார்” என்றான்.

முரளியின் கையை ஈஸ்வர் பிடிக்க, அந்தக் கையை இன்னொரு கையால் அழுத்திப் பிடித்தவன் “யாருக்கும் எதுவும் ஆகாது” என்றான்.

அப்போதுதான் ஐஸ்வர்யாவும் அவளின் அம்மாவும் பதட்டமாக வந்தனர், ரஞ்சனி அவர்களிடம் விரைந்தவள், “அண்ணாக்கு ஒன்னும் ஆகாது! வாமிட் பண்ண வெச்சிட்டேன்!” என்றாள் தேறுதலாக.

அவர்களைப் பார்த்ததும் தான் பிரகாசத்தின் ஞாபகம் வர, சுரேஷிற்கு அழைத்தவன், “அவருக்கு ஏதாவது சாப்பிட வாங்கி குடுத்து அனுப்பிடு!” என்று சொல்லி வைத்து விட்டான்.

பிறகு ஒரு சேரில் யாரிடமும் எதுவும் பேசாமல் அமர்ந்து கொண்டான். ரஞ்சனியிடம் பேசி முடித்து வந்த ஐஸ்வர்யா, “எங்க அப்பா எங்கே” என்றாள் ஈஸ்வரை பார்த்து.

“வருவார்”

“நான் தான் அஸ்வின் எங்க இருக்கான்னு பார்த்து சொல்றேன்னு தானே சொன்னேன்! அதுக்குள்ள ஏன் இப்படிப் பண்ணுனீங்க, மாமா ஏன் இப்படி பண்ணினார்? என்ன பண்ணுனீங்க?” என்று பொரிய..

எல்லோரும் அவர்களின் மீது பார்வையை திருப்பினர்.

“அவன் என் அண்ணன் ஞாபகம் இருக்கா? அவனை நான் எதுவும் பண்ண மாட்டேன்! அவனுக்கு எதுவும் ஆகவும் விட மாட்டேன்! உனக்கு இந்த ஐஞ்சு வருஷமா தான் அக்காவோட வீட்டுக்காரர். நான் பொறந்ததுல இருந்து அவனுக்கும் என்னைத் தெரியும்! எனக்கும் அவனைத் தெரியும்! போ! போய் உட்கார்!” என்றான் கோபமாக.

அந்த பேச்சில் தெரிந்த உஷ்ணம் திரும்ப யாரையும் எந்த கேள்வியும் ஈஸ்வரைப் பார்த்துக் கேட்கவிடவில்லை.

ஒரு அரை மணிநேரம் கழித்து வந்த டாக்டர், “குட் வொர்க் டாக்டர்” என்று ரஞ்சனியைப் பார்த்து சொன்னவர், அவரை உடனே

வாமிட் பண்ண வெச்சிட்டதால ஹி இஸ் அவுட் ஆஃப் டேஞ்சர். இன்னைக்கு ஒரு நாள் ஐ சீ யு ல அப்செர்வேஷன்ல இருக்கட்டும், நாளைக்கு மார்னிங் ரூம்க்கு ஷிஃப்ட் பண்ணிட்டு ஈவ்னிங் டிஸ்சார்ஜ் பண்ணலாம்" என்றார்.

"ஒன்னும் அவசரமில்லை டாக்டர்! நல்லா ஆகட்டும்! அப்புறம் நாங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறோம்" என்றார் நமசிவாயம்.

இவர்கள் பேசி முடித்ததும் முரளி தந்தையைப் பற்றிக் கேட்க, கூட பத்மனாபனும் இருந்தான். "க்ரிடிகள் சொல்ல முடியாது, நல்லா இருக்கார்ன்னும் சொல்ல முடியாது! ஒரு நாள் ஆகணும்" என்றார்.

"பட் டோன்ட் வொர்ரி! ஹி இஸ் ஸ்டேபிள்!" என்றார் கூடவே. பின்பு அவர் சென்று விட, முரளி அமர்ந்திருந்த அம்மாவிடமும் அவன் மனைவி ஷாலினியிடமும் சொல்லப் போக, பத்மநாபன் வர்ஷினி எங்கே என்று பார்க்கச் சென்றான்.

பிரணவி அங்கே ஒரே அழுகை, எந்த சமாதானமும் எடுபடவில்லை. சரணும் அப்பாவுக்கு என்ன என்று புரியாத போதும் அப்பாவை அங்கே கொண்டு செல்வதை பார்த்ததும் அழுகை. இரண்டு பேரையும் சமாளிக்க முடியாமல் வீட்டினர் திணறினர். ரூபா இருந்த பதட்டத்தில் சரணுக்கு அடி வேறு வைக்க,

வர்ஷினியாக "நான் பிரணவியை வெளியில வெச்சிட்டு இருக்கேன் அக்கா. நீங்க இவனை பாருங்க, அடிக்காதீங்க! சரியாகிடும்" என்று ரூபாவிடம் சொல்லி பிரணவிக்கு கை நீட்ட,

சரியாகிடும் என்ற அந்த வார்த்தை ரூபாவிற்கு சற்று மன தைரியம் கொடுக்க, ரூபாவும் தயங்காமல் அவளிடம் கொடுத்து விட்டாள். அப்போது இருந்து குழந்தையை வெளியில் வைத்து அதற்கு வேடிக்கைக் காட்டிக் கொண்டு இருந்தாள் வர்ஷினி.

அங்கே வெளியில் தான் தாஸும் நின்று கொண்டிருந்தான். அதனால் யாரும் இதுவரை அவர்களைத் தேடவில்லை.

அப்பாவிடமும் அம்மாவிடமும் சென்ற ஈஸ்வர், "நீங்க வீட்டுக்குப் போங்க! பாட்டி என்னவோ ஏதோன்னு பச்சை தண்ணிக் கூட பல்லுல படாம சாமி முன்னாடி உட்கார்ந்து இருப்பாங்க, போங்கப்பா! இங்க நான் பார்த்துக்கறேன்"

"என்ன? என்ன நீ பார்த்துக்கற? உன்னால தான் எல்லாம்!" என்று நமசிவாயம் அவனிடம் கோபத்தைக் காட்டினார். ஒரு மாதிரி பயந்து

போயிருந்தார், ஜகன் இப்படி செய்ததை அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

அவனுக்கு ஏதாவது ஆகிவிட்டால் ரூபாவின் நிலை, இந்த இரண்டு குழந்தைகள். அண்ணன் இறந்ததும் அண்ணன் மகனை சொத்துக்காக இவர்கள் ஏதோ செய்து விட்டார்கள் என்று ஊர் உலகம் பேசினால் என்ன செய்வது. இதில் ரூபாவின் அப்பாவை இவன் கடத்தி வைத்திருக்கிறான்.

“நான்? நான் என்ன பண்ணினேன்?”

“அவங்கப்பாவை எதுக்கு இப்படி பண்ணின? ஜகன் இப்ப இப்படி பண்ணிகிட்டான்! என்ன செய்யற நீ?”

“நான் என்னப்பா செஞ்சேன்! எதுவும் பிரச்சனையாகிடக் கூடாதுன்னு தான் நினைக்கிறேன்!”

“முடிஞ்சா பணம் கொடுக்கறோம்! இல்லை என்ன இருக்கோ கொடுத்துட்டு திவால் அறிவிச்சிட்டு போகலாம்! ஜகனுக்கு ஏதாவது ஆச்சு....” என்று அவர் சொல்ல,

“அப்பா! ப்ளீஸ், இது ஹாஸ்பிடல், வீட்டுக்குப் போய் எதுனாலும் பேசிக்கலாம்” என்றாள் ரஞ்சனி.

அப்போது பார்த்து ஜகனின் அக்கா சித்ரா வந்தவள், “என்ன? என்ன  பண்ணுனீங்க அவனை? எதுக்கு இப்படி ஒரு முடிவெடுத்தான்” என்று கோபமாக கேட்க,

“கேட்கறாங்க தானே! பதில் சொல்லு!” என்று அம்மாவும் பேச,

அப்போது பார்த்து ஓய்ந்து களைத்த தோற்றத்துடன் பிரகாசம் வர, அவரைப் பார்த்தவர்கள் “இவருக்கு என்ன பதில் சொல்லப் போற?” என்றனர்.

“நான் என்ன செய்தேன்” என்று கேள்வி பலமாக அவனைத் தாக்கியது, “இவ்வளவு பணத்தை என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. நான் கேட்டால் அது தப்பா? திவால் அறிவிப்பாரா? என்ன அநியாயம்?” மனம் கொதித்தது.

“நம்ம கிட்ட பணத்தைப் போட்டவன் எப்படி நாசமாப் போனா எனக்கென்ன, நானும் என் குடும்பமும் நல்லா இருக்கணும்ன்னு நினைக்கறீங்க” என்றான் அப்பாவை பார்த்து.

அவனின் கேள்வியில் அங்கிருந்தவர்கள் ஸ்தம்பித்து நிற்க “நான் யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை” என்று சொன்னவன், முன்னே ரிசப்ஷன் சென்று அங்கே இருந்த வெயிட்டிங் சேரில் அமர்ந்து கொண்டான்.

இந்த நிகழ்வுகளை அங்கிருந்த எல்லோரும் பார்த்திருந்தனர். ரஞ்சனி, ரூபா, பெரியம்மா, ஐஸ்வர்யா, அவளின் அம்மா, முரளி, ஷாலினி, கமலம்மா என்று அனைவரும்.

அவன் பின்னே செல்ல பரபரத்த கால்களை, எல்லோரும் இருக்கிறார்கள் என்பதைக் கொண்டு கட்டுப்படுத்தி நின்றாள் ஐஸ்வர்யா.

“நான் என்ன செய்தேன்? செய்கிறேன்?” என்ற கேள்வி மீண்டும் மீண்டும் ஈஸ்வரின் உள் ஓடியது. “இந்தக் கேள்வியே என்னால் தாள முடியவில்லையே! நாளை பணம் போட்டவர்கள் கேட்கும் போது....” ரிசெப்ஷனில் அவன் வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்தான்.

அப்போதுதான் பத்மநாபன் வர்ஷினியிடம், “பயமில்லை, ஆனா நல்லா இருக்கார்ன்னு சொல்ல முடியாதுன்னு டாக்டர் சொன்னார். ஒன்னும் ஆகாது அப்பாக்கு” என்று தேறுதல் சொல்லி, உள்ளே அழைத்துக் கொண்டு வந்தான்.

வர்ஷினியின் மேலேயே பிரணவி உறங்கியிருந்தாள். இருவரும் ஈஸ்வர் அமர்ந்து இருந்ததை பார்த்தனர்.

எல்லாம் முடிந்த ஒரு தோற்றம்!

ஈஸ்வர் இவர்களை கவனிக்கவில்லை. ஏன் யாரையும் கவனிக்கும் மனநிலையில் அவன் இல்லை. “என்ன அச்சு அண்ணா, ப்ரணவியோட அப்பாவுக்கு” என்று ஈஸ்வர் அமர்ந்திருந்த தோற்றத்தைப் பார்த்ததும் வர்ஷினி கேட்க,

“அவருக்கு ஒன்னுமில்லை! நல்லா இருக்கார்!”

“அப்புறம் ஏன் இப்படி இருக்காங்க” என்று ஈஸ்வரைக் காட்டி வர்ஷினி கவலையாகக் கேட்க,

“தெரியலை, நாம என்ன பண்ண முடியும்! வா! அப்பாவைப் பார்ப்போம்” என்று சொன்ன விதமே, நாம் அவனுடன் பேச வேண்டிய அவசியமில்லை என்று சொல்லாமல் சொன்னது.

“அப்பாவைப் பார்ப்போம்” என்று பத்மநாபன் சொன்னது வர்ஷினியைக் கட்டிப் போட்டது.

ஆனாலும் ஈஸ்வரையேத் திரும்ப திரும்ப பார்த்தவாறு நடந்தாள் வர்ஷினி.

**நீ! நான்! நாம்! என்ன நடக்கிறது நமக்குள்! விளக்கம் கொடுக்க முடியாது! இது விளக்கத்திற்கும் அப்பாற்பட்டது!!!**

## அத்தியாயம் ஒன்பது :

**நடப்பவை நன்மைக்கா தீமைக்கா என்று நாம் யோசித்துக் கொண்டு இருந்தாலும் நடப்பவை நடந்து தான் தீரும்!!!**

பிரணவியை ரூபாவிடம் வர்ஷினி நீட்ட, அதை பார்த்து இருந்தார்கள் ஐஸ்வர்யாவும் ரஞ்சனியையும்.

“இந்தப் பொண்ணு இங்க எங்க” என்று ஐஸ்வர்யா ரஞ்சனியிடம் கேட்க,

“முரளி தங்கை”,

“எஸ் தெரியும்! நேத்து விஷ்வா ஆஃபிஸ்ல பார்த்தேன்”

“அங்க எதுக்கு வந்தா? நீ எதுக்கு அங்க போன?”

“இவ விஷ்வா டிராப் பண்ண வந்தா, நான் விஷ்வா பார்க்க வெயிட் பண்ணிட்டு இருந்தேன்”,

“என்ன? இவ வண்டி ஓட்டினாளா”

“எஸ், அதுவும் விஷ்வா காரை!”

“என்ன?” என்றாள் மனதிற்குள் இப்போது ரஞ்சனி! “என்ன? அவன் காரைக் கொடுத்தானா, அன்றைக்கு இந்தப் பெண்ணை தெரியுமா என்று கேட்டதற்கு, தெரிந்து வைத்துக்கொள்ளும் அளவிற்கு இவள் பெரிய ஆள் அல்ல என்று சொன்னான்! என்ன நடக்கிறது”.

“நீ பேசினியா” என்றாள் ஐஸ்வர்யாவைப் பார்த்து,

“இல்லை, விஷ்வா கூப்பிட்டாங்க, ரொம்ப டென்ஷன்ல இருந்தேன். அதனால பேசலை”

இதனிடையில் “ரொம்ப அழுதாளா” என்றாள் ரூபா வர்ஷினியிடம்.

“இல்லைக்கா கொஞ்ச நேரம்! அப்புறம் சரியாகிட்டா, கேண்டீன்ல சூப் குடிக்க வெச்சேன், ஒன்னும் ப்ராப்ளம் இல்லையே”

“இல்லை, தேங்க்ஸ்”

“இவங்கப்பா எப்படி இருக்காங்க”

“ஹி இஸ் ஓகே” என்று ரூபா சொல்ல,

அதற்குள் பத்மநாபன் “நம்ம போகலாம்” என்றான் தணிந்த குரலில்.

“ஓகே கா! டேக் கேர்!” என்றவள் ரஞ்சனியையும் பார்த்து தலையசைத்து  நகர்ந்து விட,

“உனக்கு அந்தப் பொண்ணைத் தெரியுமா” என்றாள் ஐஸ்வர்யா.

“ஓஹ், எஸ்! முரளிண்ணா கல்யாணத்துல பார்த்தோம், ஸோ ஸ்வீட் பார்க்கத்தான் கொஞ்சம் பெரிய பொண்ணா தெரியறா, இப்ப தான் ப்ளஸ் டூ முடிச்சிருக்கா”

கமலம்மாவும் பத்மநாபனும் ஹாஸ்பிடலில் இருக்க, முரளி ஷாலினி வர்ஷினி மூவரும் வீடு கிளம்பினர். “நான் நைட் வர்றேன்” என்று சொல்லி முரளி சென்றான்.

ஐ சீ யு விட்டு வெளியே வந்தவர்கள், வெயிடிங் ஹாலில் இருந்த ஈஸ்வரை பார்த்தார்கள், “ஒரு நிமிஷம்” என்ற முரளி அவனிடம் விரைந்தவன்,

அருகில் சென்று அவனின் தோளைத் தொட, அப்போது தான் சற்று உணர்வு பெற்று திரும்பினான் ஈஸ்வர்,

“coolலா இரு! டென்ஷன் ஆகாத, எதுன்னாலும் பார்த்துக்கலாம், எதையாவது செஞ்சு சிக்கல்ல மாட்டிக்காத, இப்போதைக்கு உங்க அண்ணனை பாரு, இன்னும் ரெண்டு மாசம் இருக்குடா, பார்த்துக்கலாம்!” என்றான் நண்பனை தேற்றும் விதமாக.

அப்பா ஹாஸ்பிடலில் இருக்கும் போதும், தனக்கும் தைரியம் சொல்லும் நண்பனை பார்த்தவன், “தேங்க்ஸ் டா, நீ அப்பாவைப் பாரு, நானா எதுவும் பண்ணலை. எல்லாம் அப்புறம் பார்க்கலாம்” என்றான் பதிலுக்கு.

பின்பு முரளி பெண்கள் இருவரையும் பார்க்க, இருவரும் முரளியின் பின் சென்றனர்.

அப்போது தான் வர்ஷினியைப் பார்த்தான் ஈஸ்வர், அவளும் அவனைப் பார்த்தாள். புன்னகைப்பதா வேண்டாமா என்ற தயக்கம் வர்ஷினிக்கு, ஈஸ்வர் அவளைப் பார்க்கும் போதே தன்னை பார்க்கும் அந்த நீல நிறக் கண்களைத் தான் பார்த்தான்.

அதையே விடாது பார்க்க, எதற்குத் தன்னை இப்படிப் பார்க்கிறான் என்று புரியாத போதும், ஏதோ ஒரு தயக்கம் ஈஸ்வரைப் பார்க்க விடாமல் செய்ய தலையை திருப்பிக் கொண்டாள்.

திரும்பி அவள் செல்லவும் அவளின் உடையை தான் பார்த்தான் இன்று ஒரு த்ரீ ஃபோர்த் பேன்ட், ஒரு ஷார்ட் ஷர்ட், அவர்கள் அவனின் பார்வையில் இருந்து மறையும் வரை விடாமல் வர்ஷினி செல்வதையே பார்த்திருந்தான்.

இவன் அவர்கள் மறைந்ததும் தான் சுற்றம் பார்க்க ரஞ்சனியும் ஐஸ்வர்யாவும் அவனை நோக்கி வந்தனர். ஐஸ்வர்யாவின் கையை பிடித்தபடி சரண்.

அவர்கள் அருகில் வரவும் சரண் மேல் தான் ஈஸ்வரின் பார்வை நிலைத்தது, ஐந்து வயது, யு கே ஜி படிக்கின்றான், ஸ்கூல் யுனிபார்ம் கூட மாற்றவில்லை. சரண் வரவும் தான் ஜகனைப் பார்த்தனர், அப்படியே இங்கே வந்திருந்தனர்.

அழுது அழுது குழந்தையின் முகம் களைத்து இருந்தது, அவனைப் பார்த்தும் ஈஸ்வர் கையை நீட்ட, அவனிடம் ஓடி வந்தது குழந்தை, “சித்தப்பா பசிக்குது” என்று சொல்ல, அவனை வாரி எடுத்தவன், ஐஸ்வர்யாவிடமோ ரஞ்சனியிடமோ பேசாமல் எங்கே கேண்டீன் என்பது போல தேடித் போக,

“விஷ்வா” என்ற ரஞ்சனியின் அழைப்பிற்குத் திரும்பியவன்,

“தயவு செஞ்சு என் பின்னாடி வராத. என்னைக் கொஞ்சம் தனியா விடு” என்றவன்,

ஐஸ்வர்யாவைப் பார்த்து “உங்கப்பா வந்துட்டார் தானே! போ! போய் அவரைப் பாரு! என் பின்னாடி வந்த தொலைச்சிடுவேன்!” என்று அவளைப் பார்த்து கர்ஜித்தான்.

மளமள வென்று கண்களில் நீர் நிறைந்த போதும், அவனை பார்த்து முறைத்து நின்றாள்.

“அப்போ நான் எதுவும் உங்களை கேட்கக் கூடாது இல்லையா, இப்படி எங்கப்பாவைப் பண்ணப் போறீங்கன்னு ஏன் சொல்லை?”

“எதுக்குச் சொல்லணும், சொன்னா நீ என்ன கிழிப்ப”

“ஏதாவது கேட்கணும்னா திமிரா பேசினான் பாரு உங்கப்பா! அவனைக் கேள், அவனைக் கேட்டியா நீ”

“நீங்க போன உடனே அவரும் போய்ட்டார்! அதுக்கு அப்புறம் வீட்டுக்கு வரவேயில்லை! வந்திருந்தா தானேக் கேட்பேன், கண்டிப்பா கேட்டிருப்பேன்”

“விஷ்வா, மரியாதையில்லாம பேசாத” என்றாள் ரஞ்சனி கெஞ்சல் குரலில்,

“பிரச்சனை பெருசு தான், இல்லைன்னு சொல்லலை, அதுக்காக நம்ம தப்பு வழில போறதா, அவர் ஒரு பேஷன்ட்! அதுக்கு தான் சொல்றேன், அவருக்கும் ஏதாவது ஆகியிருக்கும்! அந்தப் பழியும் உங்களை தான் வந்திருக்கும்! அவருக்கு ஏதாவது ஆகியிருந்தா” என்று ஐஸ்வர்யா தன் கேள்விக்கு விளக்கம் சொல்ல முற்பட,

“செத்து தொலையறான், இல்லை நானே கொல்றேன்!” என்றபடி ஈஸ்வர் நகர்ந்து விட,

இவனை என்ன செய்வது என்று இரு பெண்களும் பார்த்து நின்றனர். ரஞ்சனி, கோபத்தால் நிறைய பிரச்சனகளை இழுத்துக் கொள்வானோ என்று நினைக்க,

ஐஸ்வர்யாவிற்கு யோசனைகளே செல்லவில்லை, மனதிற்கு எதுவும் சரியாகப் படவில்லை, இனி என்ன நடக்குமோ என்ற பயம். தான் சொல்வதும் செய்வதும் அவனிற்குத்தான் என்று அவனுக்கு புரியாதா? நான் எல்லாம் சொல்லி தான் புரிய வைக்க வேண்டுமா? அப்படி சொன்னாலும் புரியவில்லையே. என் செய்வேன்.

ஈஸ்வர் எங்கே என்றபடி அப்போது பிரணவியைத் தூக்கிக்கொண்டு ரூபா வரவும், “ரொம்பக் கோபமா இருக்கான் அண்ணி, சரணைக் கூட்டிட்டு கேண்டீன் போனான்” என்று ரஞ்சனி சொல்ல,

அவளும் கேண்டீன் நோக்கி செல்ல, பின்னோடு ரஞ்சனியும் ஐஸ்வர்யாவும் செல்ல முற்பட,

“ப்ளீஸ்! நான் ஈஸ்வர் கிட்ட தனியாப் பேசணும்” என்று அவர்களை நிறுத்தி சென்றாள்.

கேண்டீனில் சூடான இட்லியை வாங்கி சாம்பாரில் முக்கி ஒரு ஸ்பூன் போட்டுக் கொடுக்க, சரண் அதை ஸ்பூனினால் உண்டு கொண்டு இருந்தான்.

இவர்கள் அருகே செல்லும் வரை ஈஸ்வர் அவர்களைப் பார்க்க வில்லை. அருகில் வந்ததும் தான் பார்த்தான்.

அவர்களின் எதிரில் அமர்ந்தவள், “சாரி ஈஸ்வர்” என்றாள்.

“எதுக்கு” என்று அவன் கேட்க,

“இவர் பண்ணினதுக்கு எல்லோரும் உன்னை ப்ளேம் பண்றாங்க”

“ப்ச், அது ஒன்னும் பிரச்சனையில்லை. ஏன் பண்ணினான் அப்படி? பணத்தை இவன் ஏதாவது பண்ணிட்டானா”

“அது நான் சொல்ல மாட்டேன், என்னால அதை சொல்ல முடியாது! அவரே சரியாகி சொல்லட்டும். பட் சொல்லும் போது மறுபடியும் அவரை திட்டாத, ஆனா பணம் திரும்ப வராது! இனி என்ன பண்ணனும்னு வேற தான் நீ யோசிக்கணும்”.

“என்ன?”, என்றபடி அப்படியே பார்த்திருந்தான், மனதின் ஒரு மூலையில் பணம் கிடைத்து விட வேண்டும், கிடைத்து விடும் என்று நினைத்துக் கொண்டிருந்த நம்பிக்கை பொய்யானது. முகம் முழுக்க நிராசையை பிரதிபலித்தது.

“எல்லாம் இவரோட முட்டாள்தனம் மட்டும்” என்று ரூபா சொல்லும் போது கண்களில் நீர் தளும்பியது.

“அப்போ உங்கப்பா… அஸ்வின்….”

“ப்ச், என்னால எதுவும் சொல்ல முடியலை! எனக்கே அசிங்கமா இருக்கு, ஆறு வருஷம் கல்யாணமாகி, ரெண்டு குழந்தைங்க, இவர் இப்படி பண்ணிட்டார், என்ன சொல்ல, நீ என்ன முடிவெடுத்தாலும் சரி, நாங்க போகறதுன்னாலும் போயிடறோம்”

“என்ன உளர்ற? எங்க போவீங்க?”

பசி இருக்கும் வரை வேகமாக உண்டு கொண்டு இருந்த குழந்தை இப்போது இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கவனித்து, “எங்க போறோம் மா” என்று கேட்டது.

“எங்கேயும் போகலை” என்றான் ஈஸ்வர் சரணைப் பார்த்து.

“உன் உளறலை நிறுத்து குழந்தைங்களை கவனி, ஜகனைப் பாரு, அவன் சரியாகட்டும். நான் அவன்கிட்ட கேட்கறேன். அவன் சொன்னாலும் சரி சொல்லலைன்னாலும் சரி! இந்த ப்ரச்சனையைப் பார்த்துக்கலாம் விடு”

“எப்படிப் பார்ப்பாயடா நீ” என்று மனதிற்குள் ஒரு குரல் ஓங்கி ஒலித்த போதும் ரூபாவிற்காகச் சொன்னான்.

“ஆனா கண்டிப்பா பணம் குடுக்காம ஏமாத்த முடியாது, இருக்குற அத்தனையும் வித்தாவது, நான் பணம் கொடுப்பேன். அந்த முடிவுல எந்த மாற்றமும் இல்லை”

“செய் ஈஸ்வர், என் குழந்தைங்க பணம் அதிகமில்லாத சாதாரண மனிதர்களா வாழறதுல எனக்கு எந்த வருத்தமும் இல்லை. ஆனா ஏமாத்துனவங்க குழந்தையா வளர வேண்டாம்” என்று சொன்னவளுக்கு என்ன முயன்றும் அழுகை கட்டுப்படுத்த முடியாமல் வந்துவிட்டது.

அவளின் உடல் அழுகையில் குலுங்க, அந்த அசைவில் பிரணவி விழிக்க, அவசரமாக எழுந்து குழந்தையை கையினில் வாங்கிய ஈஸ்வர், தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்தான்.

இப்படி ஒரு சூழல் எல்லாம் ரூபா நினைத்தும் பார்த்ததில்லை. என் கணவன் தற்கொலைக்கு முயன்றிருக்கிறான். ஒரு நிமிடம் கூட மனைவி குழந்தைகள் நினைவிற்கு வரவில்லையா. அப்போது நான் என் கணவனுடன் என்ன வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றேன். என்னவானாலும் நான் அவனுடன் நிற்பேன் என்று அவனுக்கு தோன்றவில்லையா. என்ன செய்யலாம் என்று என்னிடம் கேட்க தோன்றவில்லையா.

“ரூபா அழாத”

“ஒரு நிமிஷம் கூட என்னைக் குழந்தைங்களை அவர் நினைக்கவேயில்லை, காப்பாத்திட்டோம். ஆனா ஒருவேளை அவருக்கு ஏதாவது ஆகியிருந்தா” என்று தேம்பி தேம்பி அழ,

“ரூப்ஸ் இது கேண்டீன்! ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர்செல்ப்! எல்லோரும் பார்க்கறாங்க! சரியாகிடும்! நான் சரி பண்றேன்! நம்பு!” என்றான்.

“உன்னை நம்பாம, ஆனா உனக்கு பயந்து தான் இப்படி பண்ணிகிட்டார். அதுதான் நிஜம். நீ அவரை விட்டிடுவியோன்னு”

“என்ன சொல்கிறாய்” என்று ஈஸ்வர் ரூபாவை அதிர்ச்சியாகப் பார்த்தான்.

“ஒரு உண்மை சொல்லணும் ஈஸ்வர். நீ ரொம்ப டாமினேடிங். ஆனா அது உன்னோட இயல்பு. அதுக்காக இவர் இப்படி செஞ்சிருக்க வேண்டாம்! என்கிட்டே சொல்லியிருந்தா நான் பார்த்துக்கிட்டிருப்பேன், அவர் பண்ணின விஷயம் சொன்னதும் நானும் திட்டினேன், அத்தையும் ரொம்ப திட்டினாங்க, அவர் அப்பா வளர்த்த கம்பனி அவரால நாசமாகப் போகுதுன்னு, கூடவே உன்னோட பயம்! நீ முன்ன பின்ன யோசிக்காம எங்க அப்பாவைக் கடத்தினது, நாளைக்கு எங்களை வீட்டை விட்டு துரத்திடுவியோன்னு... இப்படி நிறைய, மதியம் என்னோட இதெல்லாம் பேசினார், நானும் கோபத்துல நீங்க பண்ணின வேலைக்கு நாங்க நடுத்தெருவுல தான் நிற்போம் சொன்னேன். எல்லாம் சேர்ந்து, பாட்டியோட தூக்க மாத்திரை எடுத்து சாப்பிட்டிட்டார். இப்படி பண்ணுவார்ன்னு நான் கொஞ்சமும் யோசிக்கலை”

“நீங்க பெரிய ஆளுங்களா இருக்கலாம்! எங்க வீட்ல இந்தக் கல்யாணத்துக்கு சொல்லியிருக்கலாம்! ஆனா எங்க அண்ணா, ஹி இஸ் குட், அப்படின்னு நீ சொன்ன வார்த்தை தானே என்னை இந்த கல்யாணத்துக்கு ஓகே சொல்ல வெச்சிச்சு”

உண்மை தான்! ஈஸ்வருக்குத் தெரியும். பி பி ஏ முடித்து எம் பி ஏ விற்கு ரூபா அப்ளை செய்த போது அவர்களின் திருமணம் நடந்தது. நான் படிக்க வேண்டும் இப்போது திருமணம் வேண்டாம் என்று பிடிவாதமாக இருந்த ரூபாவிடம் அவர்களின் வீட்டினர் வற்புறுத்திய போதும்,

“என்னோட அண்ணா, உன்னை ரொம்ப லவ் பண்றான்” என்று ஈஸ்வர் வந்து ஜகனை அறிமுகப்படுத்த, பின்பு ஈஸ்வரும் கன்வின்ஸ் செய்ய அதன் பிறகே சம்மதித்தாள்.

திருமணதிற்குப் பிறகு இதுநாள் வரை அவளுக்கு அதில் எந்த வருத்தமும் இல்லை. ஜகனுடனான அவளின் வாழ்க்கை நன்றாக இருந்தது. பெரிய இடத்து மருமகள், மற்றவர்களின் பார்வையில் இன்னம் மரியாதை கூடியது. ஆனால் இப்போது,

செய்தது தப்பு! அதையும் செய்து விட்டு இப்போது தற்கொலை முயற்சி! என்ன ஒரு கோழைத்தனம் என்று கணவனை இப்போது தான் முதல் முறை பிடிக்காமல் போனது.

அவளின் முன் காபி வைத்த ஈஸ்வர் “குடி, நீ ரொம்ப தைரியமா இருக்கணும். நம்ம எல்லோருமே அப்படிதான் இருக்கணும், சமாளிக்கலாம் குடி” என்று அவளை குடிக்க வைத்து அவர்களை ஐ ஸீ யு அழைத்து வந்தவன்,

அம்மாவிடமும் அப்பாவிடமும் எதுவும் பேசாமல், “பெரியம்மா குழந்தைங்க அழறாங்க, ரூபா இங்க இருக்கட்டும், ரஞ்சனி நைட் வரட்டும், நீங்க வாங்க” என்று அழைத்துக் கொண்டு ரஞ்சனியிடம் பார்த்துக் கொள் என்று கண்ஜாடை காட்டி சென்றே விட்டான்.

அங்கே தான் ஐஸ்வர்யா, அவளின் அம்மா, அப்பா என்று அனைவரும் அமர்ந்து இருந்தனர். ஐஸ்வர்யாவை பார்க்கக் கூட இல்லை.

பணம் படைத்தவன் அல்லவா? அந்த திமிரா! இல்லை மனிதர்களை மதிக்க தெரியாதவனா! என்ன சொல்ல? செல்லும் அவனை வெறித்து  பார்த்து இருந்தாள் ஐஸ்வர்யா.

“நானா இவனைப் பிடித்திருக்கிறது என்று சொன்னேன், இவன் தானே சொன்னான். அவன் பேசும் போது பேச வேண்டும், அவன் பேசாத போது நான் எதுவும் கேட்கக் கூடாது. எல்லாம் இவன் இஷ்டம். போனால் போகிறான்” என்று நினைத்த போதும் அழுகை பொங்கியது.

அதை அடக்க முயன்றும் முடியாமல் அந்த இடத்தை விட்டு அகன்று, யாருக்கும் தெரியாமல் கண்ணீரை துடைத்து நின்றிருந்தாள்.

இவளை எங்கே காணோம் என்று தேடி வந்த ரஞ்சனி தான் இவளின் அழுகையை பார்த்து, “வா ஐஷ்! ஈஸ்வர் கோபம் தெரிஞ்சது தானே, உன்கிட்ட மட்டுமில்லை எல்லார் கிட்டயும் தான்”.

“என்ன சண்டை போட்டாலும் திட்டினாலும் உன்னை பார்த்துக்கோன்னு கண்ல காட்டிட்டு தானே போனாங்க. ஆனா என்னை பார்க்கக்கூட இல்லை”,

“அது நான் டாக்டர்ன்னு” என்று சொன்ன ரஞ்சனி, “அச்சோ” என்று சொன்ன பின் நாக்கை கடித்தாள்.

“அப்போ நான் யாரு?” என்பது போல ஐஷ் பார்க்க,

அசடு வழிந்தவள் “வா” என்று ஐ ஸீ யு முன் அழைத்து சென்றாள்.

அங்கு சென்ற ஐஸ்வர்யா “அம்மா! அவரைக் கூட்டிட்டு கிளம்பு” என்று அப்பாவைக் காட்டினாள். “நான் இங்க ரூபா வோட இருக்கேன்”

ரூபாவும் அதையே தான் கூறினாள் “அம்மா! அப்பாவைக் கூட்டிட்டு கிளம்பு” என்று.

பிரகாசம் மனதளவில் நொந்து போயிருந்தார், சிறு பையன் மிரட்டினால் பயந்து விடுவான் என்று நினைக்க இப்படிக் கடத்துவான் என்று நினைக்கவில்லை. அதிலும் ஜகன் இப்படி செய்வான் என்று நினைக்கவில்லை.

ஜகனுக்கு ஏதாவது ஆகிவிட்டால் ரூபாவின் கதி, அந்த பயம் சற்று தூக்கலாக இருக்க, அடங்கி ஒடுங்கி அமர்ந்து இருந்தார்.

“ஒரு மனிதன் நேற்று போனவன் இன்று வந்திருக்கிறேன். அதுவும் கடத்தப்பட்டிருக்கிறேன் யாரும் ஒரு வார்த்தை என்ன என்று கேட்கவில்லை, அப்படியுமா நாதியற்றுப் போய்விட்டேன்!”

“இரு மகள்களும் கேட்கவில்லை! மனைவியும் கேட்கவில்லை! எப்படியோ இவன் சாகவில்லை” என்று நினைத்தவர் எழுந்து மனைவியை பார்க்க, ஒரு வார்த்தையும் பேசாமல் அவரும் எழ, இருவரும் அந்த மருத்துவமனையை விட்டு அகன்றனர்.

ரூபா, ரஞ்சனி, ஐஷ் அங்கே ஒரு புறம் அமர்திருக்க,

பத்மநாபனும் கமலம்மாவும் மற்றொரு புறம் அமர்ந்திருந்தனர். எல்லோரும் அமைதியாக பேசிக்கொள்ளாமல்.

இதில் டாக்டர் அழைக்கிறார், ராஜாராம் பேஷன்ட் உடன் இருப்பவர்களை என்று சிஸ்டர் சொல்ல,

பத்மநாபன் எழுந்து செல்ல முற்பட, "நானும் வர்றேன்" என்று கமலம்மாவும் எழ,

"அம்மா நீங்க இருங்க! நான் போயிட்டு வர்றேன்" என்று பத்மநாபன் சொல்ல,

என்னவோ ஏதோவென்று கவலை அவரின் முகத்தில்,

"அம்மா! ஒண்ணுமிருக்காது எப்படி இருக்கார்ன்னு சொல்லக் கூப்பிடுவாங்க" என்று சொல்லியும் "அவர் நானும் வர்றேன்" என,

இவர்களைப் பார்த்திருந்த ரஞ்சனி, அவளாக அருகில் வந்தவள் "ஒண்ணுமிருக்காதும்மா, நீங்க போங்க!" என்று பத்மநாபனை நோக்கி சொன்னவள்,

"நீங்க வாங்க! நான் உங்களை உள்ள கூட்டிட்டு போறேன்" என்று ராஜாராமை பார்க்கும் ஆசைக் காட்ட,

அப்படியே இருந்து கொண்டார், பின்னே காலையில் இருந்து இரு முறை தான் பார்க்க விட்டிருந்தனர்.

ஆட்களை அணுகும் அவளின் புத்திசாலித்தனம் புரிய, "தேங்க்ஸ்" என்பது போல கண்களால் நன்றி சொன்னவன், டாக்டரைப் பார்த்து வர வெகு நேரம் ஆகிற்று.

**நடப்பவை நடந்து முடிந்த பிறகு அதை சரி செய்வது என்பது எல்லா நேரத்திலும் சாத்தியமல்ல!!!**

## அத்தியாயம் பத்து :

**எதுவும் கட்டுக்குள் இல்லை... எல்லாம் நம்மை மீறிய செயலே!**

இரண்டு நாட்களில் ஜகன் ஹாஸ்பிடலில் இருந்து வீட்டிற்கு வந்தான். ஈஸ்வர் அவனுடன் பேச எந்த முயற்சியும் செய்யவில்லை.

ஈஸ்வருடனும் யாராலும் பேச முடியவில்லை. எப்போதும் இறுகிய முக பாவனையுடன் இருக்க, அப்பா அம்மா யாராலும் பேச முடியவில்லை. மகனுடன் பேச அவர்களுக்கு ஒரு தயக்கம் வந்து ஒட்டிக் கொண்டது.

அவனுடன் பேசியது இரண்டு பேர் மட்டுமே! பாட்டி சௌந்தரி அம்மாள், தங்கை ரஞ்சனி. பெரியம்மா ஒரு வகையான கழிவிரக்கத்தில் இருந்தார். ஜகன் இப்படி செய்ததை அவரால் தாள முடியவில்லை. ஐஸ்வர்யா ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறையாவது அழைப்பாள், ஆனால் ஈஸ்வர் எடுக்கவேயில்லை.

மிகவுமே மனம் உடைந்து போனாள். சாதரணமாக இருந்தால் கூட அவனின் ஞாபங்கள் அதிகம் இருக்காதோ என்னவோ? ஆனால் ஈஸ்வர் இப்படி செய்யச் செய்ய எப்போதும் அவன் நினைவுகளே.

ஈஸ்வருக்குக் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல இருந்தது. அவனின் அப்பாவிற்கு ஒன்றும் தெரியவில்லை, எவ்வளவு லாப நஷ்டம் என்று தெரிந்தது. ஆனால் லாபத்தை வரவழைக்க தெரியவில்லை.

நன்றாக இருக்கும் வண்டியை ஓட்டும் டிரைவர் போல அவர், அதில் ஏதாவது பிரச்சனை என்றால் அவரால் ஓட்ட முடியாது.

முரளியையும் மூன்று நான்கு நாட்களாகப் பிடிக்க முடியவில்லை. இன்னம் அவன் தந்தை ஐ சீ யு வில் தான் இருந்தார், இந்த நிலையில் அவனிடம் பேச முடியவில்லை.

செய்யும் வகை தெரியாது, செய்ய வேலையில்லாத நிலை.

படுக்கையில் படுத்திருந்தவன் மொபைலை எடுத்துப் பார்க்க, அதில் ஐஸ்வர்யாவிடம் இருந்து சில கால்கள், அவள் மீது கோபம் தான் நிலையைப் புரிந்து கொள்ளவில்லை என்று, ஆனால் அவள் மீது எந்த தவறுமில்லை என்று தெரியும். அவளோடு பேச மனம் விழையவில்லை, தனிமையைத்தான் நாடியது.

வீட்டிற்கு வந்து மூன்று நாட்கள் கழித்து ஈஸ்வர் உறங்கும் சமயம் பார்க்க வந்தான் ஜகன் ரூபாவோடு.

இருவரும் வர, உறங்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தவன் அமர்ந்தான்.

அவர்கள் பேசட்டும் என்று இவன் இருக்க, இவன் கேட்கட்டும் என்று ஜகன் இருக்க, ரூபா நீங்கள் பேசிக்கொள்ளுங்கள் என்று அமைதியாக இருந்தாள்.

ஐந்து நிமிடங்கள் இப்படியே கழிய, ஈஸ்வர் பொறுமை இழந்தவனாக, “எதுக்குடா இப்படிப் பண்ணின” என்றான்.

“அது பணம்...” என்று ஜகன் ஆரம்பிக்க....

“நான் அதை சொல்லலை, நீ தூக்க மாத்திரை சாப்பிட்டியே அதை சொன்னேன், அண்ணியை விடு, உன் குழந்தைங்க முகம் கூடவா ஞாபகம் வரலை” என்று கேட்க.

அந்நிகழ்வின் நினைவைத் தாள முடியாமல் ரூபா ரூமை விட்டு வெளியே சென்று விட்டாள்.

“சொல்லுடா! ஏன் இப்படிப் பண்ணின?”

ஜகன் பதில் பேசாமல் அமர்ந்திருக்க, “சொல்லுடா! வாயைத் திறந்து ஏதாவது சொல்லு”, என்றான் கட்டுப்பாட்டை இழந்து ஈஸ்வர்.

“பணத்தை....” என்று மீண்டும் பணத்தைப் பற்றித் தான் பேசினான்.

சரி! அவனே அவனின் தற்கொலை முயற்சியை பற்றிப் பேச விழையாத போது, தான் ஏன் அதைப் பிடித்து தொங்க வேண்டும் என்று விட்டுவிட்டான்.

“பணம்! என்ன பண்ணின?”

“bokkie கிட்டக் கொடுத்தேன்” என்று ஜகன் சொல்லவும்,

ஈஸ்வரின் இதயத் துடிப்பு எகிறியது... “என்ன?” என்று அதிர்ச்சியில் கத்தியே விட்டான்.

ஜகனுக்கு எப்போதும் கிரிகெட் மீது ஒரு மோகம் தெரியும், எல்லோருக்கும் தெரியும், ஆனால் அதற்காக இப்படியா! என்ன ஒரு முட்டாள் தனம்.

ஈஸ்வர் அப்படியே அமர்ந்து விட்டான்,

கிரிகெட் பெட்டிங்!!!!

ஐயோ என்று இருந்தது.

“எப்படி எனக்குத் தெரியாமல் போனது! என்ன செய்து கொண்டிருக்கிறேன் நான்!” தன் மீதே ஈஸ்வருக்குக் கோபம் பெருகியது.

“போட்ட பணம் எல்லாம் போச்சு” என்றான் ஜகன் தளர்வாக.

“அவ்வளவு பணத்தையுமா அதுல போட்ட?”

“டீ ட்வென்டி ல தான் முதல்ல போட்டேன்! அஞ்சு லட்சம், பத்து லட்சம்ன்னு ஆரம்பிச்சு, பத்து கோடி வரை இங்க போட்டேன், எல்லாம் லாபம் தான் பார்த்தேன். ஈசி மணி, பணம் ரொம்ப சுலபமா பெருகிச்சு, அது என்னை மேல மேல இதுல பணம் போட வெச்சது!”

ஜகன் நிறுத்தவும், மேலே சொல்லு என்பதுப் போல ஈஸ்வர் பார்த்தான்!

“இந்தியா பாகிஸ்தான் மேட்ச்! அதுல ஒரு புக்கி கிட்டக் கொடுத்தேன்! பெரிய அமௌன்ட்! லாஸ்ட் மினிட்ல அவன் காணாம போயிட்டான்! என்னால பின் வாங்க முடியலை! ஒரு வெறி அந்த சமயம்! பணம்ன்றதை விட என் நாடு கண்டிப்பா ஜெயிக்கும்! அதுக்கு நான் பணம் கட்டாம விடறதான்னு! இப்ப தெரியுது முட்டாள் தனம்னு! ஆனா அப்ப தெரியலை!”

“திரும்பவும் நெக் ஆஃப் தி மொமென்ட்ல டபுளா பண்ணினேன்! எல்லாம் போச்சு! நான் பெட் வெச்சது தோத்துப் போச்சு!”

“இதுல அஸ்வினும், உன் மாமனாரும் எங்க இருந்து வந்தாங்க”

“முதல்ல ஒருத்தன் கிட்ட பணம் போட்டேன் இல்லையா அவன் எனக்கு அஸ்வின் மூலமா தான் பழக்கம். அவன் காணோம் எங்கேன்னு கேட்டா இவன் காணாம போயிட்டான்”

“நீ சொல்றதுபடி பார்த்தாலும் இன்னும் பணம் இருக்கே”,

“அது ஷேர்ஸ்ல இன்வெஸ்ட் பண்ணியிருக்கேன்”

“என்ன ஷேர்ஸ்ல?”

ஜகன் சொல்லவும், உடனே ஈஸ்வர் ஆன்லைனில் ஸ்டாக் எக்ஸ்சேஞ் செக் செய்தான்.

ஜகன் பணம் செலுத்தியிருந்த போது அது ஏறுமாகத் தான் சென்று கொண்டிருந்தது, இப்போது சற்று இறங்கியிருந்தது. கிட்ட தட்ட அரை மணிநேரம் அதில் மூழ்கினான்.

ஷேர்ஸில் இன்வெஸ்ட் செய்திருந்தை எடுக்க முடியுமா என்று பார்த்தால், இப்போது அது மிகவும் டவுன்னாக இருந்தது. அதில் கைவைத்தால் உள்ளதும் போய் விடும். லாபமில்லாத நிலை போய் நஷ்டமாகி விடும். இன்னுமே பணத் தேவைகள் அதிகரித்து விடும்.

கடைசியாக அவன் மனது சொன்னது ஏறுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் என்பது போல. அதனால் அப்படியே விடு என்று.

“ஏன் என்கிட்டே நீ ஷேர்ஸ் பத்தி சொல்லை?”

“இந்த பணம் அதுல வந்துடும், வந்ததும் சொல்லலாம்னு நினைச்சேன், இப்ப அதுவும் கீழ இறங்கிடுச்சு”

ஒரு தப்பை மறைக்க மேலும் மேலும் தப்பு செய்திருந்தான். ஆனாலும் இந்த ஷேர்ஸ் பற்றி ஜகன் சொல்லவும், ஈஸ்வருக்கு போன உயிர் திரும்ப வந்தது. இப்போது பிரச்சனை என்றாலும் எதிர்காலத்தில் சமாளிக்க ஒரு வாய்ப்பு இந்த ஷேர்ஸ்.

“பரவாயில்லை, அதை எடுக்காம விட்டியே, இப்ப குறைஞ்சிருந்தாலும் அதிகமாக வாய்ப்புகள் இருக்கு... எதுன்னாலும் என்கிட்டே சொல்லுடா! என்கிட்டே மறைக்காத, ஷேர்ஸ் இருக்கு தான, கொஞ்சம் பணம் புரட்டலாம்! சொத்தெல்லாம் விக்கலாம்! ஓரளவுக்கு சமாளிக்க முடியும். இதை ஏண்டா என்கிட்டே முன்னமே சொல்லலை!”

“அது வேல்யு குறைஞ்சிடுச்சே!”

“ப்ச்! அதிகமாகும் நம்புவோம்! இதுக்கு முன்ன இந்த நம்பிக்கைக் கூட எனக்கு இல்லாம இருந்ததேடா” என்று சொன்ன ஈஸ்வரின் முகத்தில் புன்னகையின் கீற்று நம்பிக்கை மனதினில் ஊற்றாக பெருகியது.

“ஷேர்ஸ் இருக்குள்ள, இதை வெச்சு முரளி அப்பாக் கிட்ட பணம் வாங்கலாம்! கண்டிப்பா உதவி செய்வார்”

“இன்னும் என்ன என்ன பண்ணின?”, என்று ஜகனிடம் பேச ஆரம்பித்து, அவனின் பண பரிவர்த்தனைகள் நடந்த விதம், அதில் திரும்ப ஏதாவது சிக்கலில் ஜகன் மாட்டிக் கொள்வானா என்று பார்த்தான்.

அக்கு வேறு ஆணி வேறாக எல்லா விவரத்தையும் கேட்டான், பெட்டிங் பற்றி, பணம் எப்படி பரிமாறியது, எல்லா விவரங்களும், அவனின் ட்ரான்ஸ்சேக்ஷன்ஸ் எல்லாம் பார்த்தான்.

ஏனென்றால் கிரிகெட் பெட்டிங் சட்டத்துக்கு புறம்பானது. பண இழப்போடு, அதில் பெயர் அடிபட்டு ஜகன் ஏதும் சட்டத்தின் பிடியில் சிக்கிக் கொள்வானா என்றும் ஆராய்ந்தான். ஆராய்ந்த வரை சேஃப் டீலிங் எங்கும் பிடிபட வாய்ப்பில்லை. ஆதலால் பணத்தை திரும்ப கைப்பற்றவும் வாய்ப்பில்லை.

பிரச்சனைகள் வரும் வாய்ப்பு குறைவாக தோன்ற மனம் இன்னும் ஆசுவாசப்பட்டது.  பத்து மணிக்கு ஆரம்பித்தவர்களின் பேச்சு பன்னிரண்டு மணிக்கு முடிந்தது.

கிட்ட தட்ட ஒரு வருடமாக ஜகன் தீவிரமாக இதில் இருந்திருக்கிறான் என்று தெரிந்தது.

முதலில் நல்ல லாபம் பார்த்திருக்கிறான். பின்பு தான் சறுக்கி விட்டது புரிந்தது. அதுதானே சூதாட்டம். இதில் யாரும் மாஸ்டர் என்பது கிடையாது.

ஜகனிடம் கடைசியாக சொன்னது “எதுன்னாலும் சொல்லுடா! தப்பு செஞ்சாலும் சொல்லு! நம்ம சாதாரண மனுஷங்க! தப்பு செய்வோம்! நம்ம கடவுளோ மகாத்மாவோ கிடையாது”

“ஆனா செய்யற தப்பை ஒத்துக்கணும், அந்த தைரியம் வளர்க்கணும்! எந்த சூழ்நிலையிலும் கோழையாகக் கூடாது! அதுக்காக வேணும்னு தெரிஞ்சு தெரிஞ்சு தப்பு செய்ன்னு சொல்லலை, நம்மை மீறி நடந்துட்டா ஒத்துக்கோ! அதை சரி பண்ண பார்”

ஈஸ்வருக்கு புரியவில்லை, வாழ்க்கையில் சரி செய்ய முடியாத தப்புக்கள் பல இருக்கின்றன என்று…

அந்த சுழலில் அவன் கூடிய விரைவில் மாட்டப் போகிறான் என்று அவன் கண்டானா என்ன?

அவர்கள் பேசி முடித்து ஜகன் வெளியே வர, ஈஸ்வர் ரூம் கதவை மூட வர, இருவருமே அதிர்ந்து தான் போனார்கள்.

ரூபா ரூமிற்கு வெளியில் கீழே சுவரில் சாய்ந்த வாக்கில் அமர்ந்து அப்படியே உறங்கி இருந்தாள். அவளின் மேலே பிரணவி உறக்கத்தில் இருக்க, சரண் அவளின் மடியில் உறக்கத்தில். அவர்களின் உறக்கம் ஒரு நிராதரவான நிலையை பிரதிபலித்தது.

தங்களின் வீட்டில் ஒரு பெண் இப்படி இருப்பதா? என்ன பெரிய பாரம்பர்யம் தங்களுக்கு என்று தான் ஈஸ்வருக்கு தோன்றியது. “ஒருவேளை உனக்கு ஏதாவது ஆகியிருந்தா இவங்க நிலைமை?” என்று ஈஸ்வர் கேட்க, ஜகனால் பதில் சொல்ல முடியவில்லை.

வீட்டினர் யாரும் பார்க்கவில்லையா என்பது போல வீட்டை சுற்றி பார்வையை ஓட்ட, யாருமில்லை! எல்லோரும் உறங்க சென்ற பிறகு இவர்கள் இங்கே அமர்ந்திருக்க வேண்டும்! அப்படியே உறங்கி இருக்க வேண்டும்.

ஜகன் சரணை தூக்க, “கொடு” என்று ஈஸ்வர் வாங்கினான். பின்பு ஜகன் பிரணவியை தூக்க, அதில் உறக்கம் கலைந்தவளாக எழுந்தவள், சரணை வாங்க கை நீட்ட,

“அவன் என்னோட தூங்கட்டும்”

“ராத்திரில முழிப்பான்”

“நான் தூங்க வெச்சிக்கறேன், இவங்கப்பனே உன்னோட கல்யாணம் ஆகற வரை என்னோட தான் இருந்தான்”

ரூபாவிற்கு சிரிப்பு வர,

“ஐ மீன் நாங்க தான் ரூம் மேட்ஸ்” என அசடு வழிந்தான்.

“குட் நைட்” என அவர்கள் செல்ல, சரணை தூக்கி உள்ளே சென்று படுக்கையில் கிடத்தினான். இந்தக் குழந்தைகளுக்காகவாவது நாங்கள் நிமிர்ந்து நிற்க வேண்டாமா? எல்லாம் சரியாகும்! சரி படுத்துவேன்!” என்று உறுதி எடுத்தான்.

படுத்து எழுந்தவன் காலையிலேயே முரளிக்கு அழைக்க, அவன் ஹாஸ்பிடலில் இருந்தான். ஏன் இத்தனை நாட்கள் என்று கேள்வி எழ உடனே ஈஸ்வரும் அங்கே கிளம்பினான்.

அங்கே சென்றால் ரூமில் முரளி மட்டுமே இருந்தான். சோர்வாக அமர்ந்திருந்தான்.

ராஜாராம் சில உபகரணங்களின் பிடியில், “என்னடா என்ன சொல்றாங்க?”

இவ்வளவு நாள் ஒரு மனஉளைச்சலில் இருந்ததினால் முரளியின் அப்பா நிலையை சரியாக கவனிக்கவில்லை, இப்போது சமாளித்து விடலாம் என்று தெளிவு பிறக்க சுற்றி உள்ளவர்களும் கவனத்தில் பதிய கேட்டான்.

“சொல்லுடா?”

“கிணறு வெட்ட பூதம் கிளம்புது”

“என்னடா?”

“ரொம்ப ஆடிட்டார்! என்ன சொல்ல சொல்ற?” என்ற வார்த்தையை சொல்லி விட்டவன், அவசரமாக ராஜாராம் கேட்டு விட்டாரோ என்று பார்க்க, அவர் உறக்கத்தின் பிடியில்.

தொலைபேசிய எடுத்து தாஸை அழைத்தான், வெளியில் நின்றிருந்த அவன் உள்ளே வர “பார்த்துக்கோ” என்று சொல்லி வெளியில் வந்து அமர்ந்தனர்.

“அம்மாவும் பத்துவும் எங்க?”

“இப்ப தான் அம்மாவைக் கட்டாயப்படுத்தி கொஞ்ச நேரம் வீட்டுக்குப் போய் தூங்கிட்டு வாங்கன்னு அனுப்பிச்சேன்”

“என்ன பிரச்சனை”

“ஹார்ட் அட்டாக் இல்லாம, லிவர் சிர்ரோசிஸ், கூடவே கேன்சர்”, சொல்லும் போதே குரல் கமறியது.

“என்ன” என்று அதிர்ந்தவன், “அதெல்லாம் ஒன்னுமில்லை இப்பல்லாம் ட்ரீட்மென்ட் எவ்வளவோ அட்வான்ஸ்ட் ஆகிடுச்சு”

“ஃபோர்த் ஸ்டேஜ். ஆறு நாளோ! ஆறு மாசமோ! இல்லை ஒரு வருஷமோ! சொல்ல முடியாதுன்னு சொல்றாங்க, ஏன்னா இவ்வளவு நாளா ஒரு அறிகுறியும் இல்லை அப்போ முதல்ல இருந்தே இருந்ததா

இல்லை கொஞ்ச நாள்ல இப்படி வேகமா பரவிடுச்சா தெரியலைன்னு சொல்றாங்க”

அங்கே ஒரு கனமான மௌனம்

“அம்மாவுக்குத் தெரியுமா?”

“தெரியாது... நானும் பத்துவும் சொல்ல வேண்டாம்னு முடிவு செஞ்சிருக்கோம்.. திடீர்னு சாவு வந்தா அது தாங்க முடியாததுதான்னாலும் அது கடந்து போகும்! எப்படியோ சமாளிக்கலாம்! ஆனா சாகப் போறார்ங்கறது தெரிஞ்சு தெரிஞ்சு அதையே யோசிச்சிட்டு இருக்குறது கஷ்டம்”

“அதுவும் எங்கம்மால்லாம் சொல்லவே வேண்டாம். எங்கப்பா எது சொன்னாலும் தலையாட்டுவாங்க, எத்தனை பெண்களோட தொடர்பு எப்படி இதை அனுமதிக்கறாங்கன்றதை விட, ஒரு சின்ன வித்தியாசமும் காட்டமா எங்கப்பா தான் உலகத்துல பெஸ்ட் ஹஸ்பன்ட் மாதிரி பார்த்துக்குவாங்க. வர்ஷினியை எப்படி பார்த்துக்கறாங்க”

“அவரை கண்ட்ரோல் பண்ணவே இல்லை. இப்போ தம்மு, தண்ணி பொண்ணுங்கன்னு வாழ்க்கையை ஏகத்துக்கும் அனுபவிச்சு சாகப் போறார்”

“நீயேன் அப்படி நினைக்கிற முரளி, அவரை கண்ட்ரோல் பண்ண முடியாதுன்னு நினைச்சிருக்கலாம். இல்லை கண்ட்ரோல் பண்ணா இன்னும் அதிகமா பண்ணுவார்ன்னு இருக்கலாம். ஏதோ ஒன்னு தான் தடுத்திருக்கும், உங்களுக்கு தெரியாம இருக்கலாம். பசங்களோட ஷேர் பண்றதுக்கு லிமிட்ஸ் இருக்கு தானே” என்றான் நண்பனை தேற்றும் விதமாக.

“இருக்கலாம், அம்மா அதிகம் படிக்கலைன்னாலும் புத்திசாலி”

“அப்பாக்கு தெரியுமா”

“தெரியும், மனுஷன் ஆனா அசரவேயில்லை, டாக்டர் கிட்ட அவரே விஷயத்தை வாங்கிட்டார்! அதுக்கப்புறம் ஒரே யோசனை!”

“பயந்திருப்பார்”

“பயப்படலைடா இருக்குற காலத்துக்குள்ள முடிக்க வேண்டிய விஷயங்களை யோசிக்கிறார், நானும் பத்துவும் நேத்து ரொம்ப

பயந்துட்டோம். எங்களுக்கு தேறுதல் சொல்றார்”,

“அவரோட இந்த உல்லாச வாழ்க்கையை விடுத்துப் பார்த்தா, அவர் மாதிரி ஒரு ஆசாமியை பார்க்கிறது ரொம்ப கஷ்டம், என்ன வயசு அவருக்குன்னு நினைக்கிற அம்பது தான்”.

“நேத்து நானும் பத்துவும் அப்படியே உட்கார்ந்துட்டோம், எங்களை கூப்பிட்டு அவரோட மொபைலை எடுத்து வரச் சொல்லி. நாங்க வட சென்னையில ஒரு ஒண்டுக் குடுத்தன வீட்ல இருந்தோம், நாங்க சின்ன பசங்களா இருக்கும் போது அங்க இருக்குற தெருல புழுதில விளையாட்டி இருந்தோம்”.

“அந்த மாதிரி இப்ப விளையாடுற பசங்களை காட்டி, நாங்க அங்க இருந்த வீட்டைக் காட்டி, இங்க இப்ப இருக்குற வீட்டைக் காட்டி, இங்க இருந்து நான் உங்களை இங்க கொண்டு வந்து விட்டுடேன்! இனி உங்க வாழ்க்கையைப் பார்த்துகங்க, என்னோட கடமையை நான் நல்லா செஞ்சிருக்கேன்னு சிரிக்கிறார்”

“நீங்க இங்க இருந்து இப்ப இருக்குற வீட்டுக்கு வந்திருக்கீங்கன்னா என்னோட பாப்பா தான் காரணம்! அவளை எக்காரணம் கொண்டும் விடக் கூடாது சொல்றார்! இப்பவும் வர்ஷினி ஞாபகம் தான் அவருக்கு! என்னவோ என்னோட குல சாமின்னு பேசறார்” என்றான் சற்று எரிச்சலாக.

“நல்லா தானேடா பேசுவ! இப்ப எதுக்குடா அவ மேல கோபம் உனக்கு”

“அவ மேல கோபம் இல்லை! எங்கப்பா மேல” மனதின் ஆற்றாமையை முழுவதுமாக கொட்டத்துவங்கினான்.

“எங்களோட எல்லா பிசினெஸ்சும் ரெண்டு பேர் பேர்ல தான் இருக்கு, ஒன்னு எங்கம்மா, இன்னொன்னு வர்ஷினி. அவ பொறந்த உடனே ஸ்டார்ட் பண்ணினது தான் எங்களோட இந்த நிறுவனம்”.

“அதுக்கு முன்ன பலது முயற்சி செஞ்சிருப்பார் போல, எதுவுமே சக்சஸ் ஆகலை! இவ பொறந்த உடனே மூணு மாசமா இருக்கும் போதே அவளோட பேர்ல மட்டும் செய்ய முடியாதுன்னு அவளையும் எங்கம்மாவையும் போட்டு ஆரம்பிச்சது”

“அதுக்கு அப்புறம் இந்த பதினட்டு வருஷத்துல எங்கயோ போயிட்டோம் நாங்க, ஆனா இப்ப எல்லாம் அவங்க ரெண்டு பேர் பேர்ல. எல்லாம்ன்னா சொத்துக்கள் இல்லை தொழில்”

“வர்ஷினியோடது அவளுக்கு மட்டும் தான்னு சொல்லிட்டார், எங்கம்மா பேர்ல இருக்குறது எங்கம்மாக்கு அப்புறம் எங்களுக்காம். அதாவது எனக்கும் பத்துக்கும்... என்ன பைத்தியக்காரத்தனம்”

“எனக்கும் அவனுக்கும் எதுவுமே இல்லை இப்போ. எங்க போய் சொல்ல இதை”

“அம்மா உங்களுக்கு தானேடா குடுப்பாங்க”

“அதுல சந்தேகமில்லை! இப்போ யாருக்கும் சொத்து வரலைன்னா ஒகே! வர்ஷினிக்கு வரும் ஆனா எங்களுக்கு இல்லையா”

“வர்ஷினிக்கு எங்கடா வருது! ஏற்கனவே அவ கிட்ட தான் இருக்குடா!” என்று உண்மையை எடுத்துசொன்னான்.

“அது எங்களுக்கு தெரியும்! ஆனா வெளி உலகத்துக்கு, இவ்வளவு சொத்து இருக்குன்னு தான் எனக்கு பொண்ணு குடுத்தாங்க! ஆனா இப்ப ஒன்னுமேயில்லை! எல்லாம் எதிர்காலத்துலன்னா எனக்கு என்ன மரியாதை இருக்கும் அவங்க வீட்ல”

“சங்கீதவர்ஷினி டு பீ ஃபிரான்க், இஸ் அன் இல்லீகல் சைல்ட். அவளுக்கு இருக்கு எங்களுக்கு இல்லையா” என்று சொல்லிவிட்டான்.

பிறகு முரளியே “இப்படி பேசறது தப்புதான்! ஆனா உண்மை அதுதானே!” என்றான். எல்லாம் அவனுக்கு அவனே சொல்லிக் கொள்வது போல... இப்படி ஒரு வார்த்தை வர்ஷினியை பற்றி முரளி என்றுமே சொன்னது இல்லை. மிகுந்த குழப்பத்தில் இருக்கின்றான் என்று ஈஸ்வருக்கு புரிந்தது.

“அப்பாக்கிட்ட பேசேண்டா”

“என்னால இதை எப்படி பேச முடியும்! நல்லா இருக்குற மனுஷர் கிட்ட பேசலாம்! இப்படி இருக்கும் போது எப்படி சொத்தை பத்தி பேசறது.. நாங்க எங்க இருந்து எங்க வந்திருக்கோம்னு எங்க அப்பா அக்கு வேறு ஆணி வேறா பேசறாரு. நான் எப்படி இதை பேச! என்னவோ ஒரே நாள்ல எங்க வீட்ல இருந்து நான் தள்ளி போன மாதிரி ஆகிடுச்சு. இன்னும் எங்க தாத்தாக்கு இவருக்கு இப்படின்னு தெரியாது”

“இல்லை நான் தான் தப்பா நினைச்சு தப்பா பேசறனா” என்றான் ஈஸ்வரை பார்த்து...

ஈஸ்வர் அவனின் பிரச்னையை விடுத்து நண்பனின் பிரச்னையை ஆராய்ந்தான்.

பிரச்சனைகள் எப்படி திசை திரும்புகின்றன என்று விந்தையாக இருந்தது. நன்றாக இருந்த மனிதர் சாகப் போகிறார். அதன் வருத்தங்கள் சூழ்ந்த போதிலும் சொத்துக்கள் எல்லாம் பின்னுக்குத் தள்ளி விடுகின்றது.

**உலக விந்தைகளுள் இது தான் மிகப் பெரிய விந்தை! பணம் என்று ஒன்று நடுவில் வரும்போது தாய் தந்தை மகன் மகள் எல்லாம் ஆளுக்கொரு திக்காகிப் போவர்.**

**ஒரு பிள்ளை இருக்கும் போது அம்மா விதிவிலக்கு! ஆனால் இரண்டு மூன்று மக்கள் இருக்கும் போது அவரும் பின்னுக்கு போய்விடுவார். அவருக்கு எல்லா மக்களும் சமம் தானே!**

**இதில் விதிவிலக்கு மனைவி மட்டுமே, பல சமயங்களில்! சில சமையங்களில் அதுவும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது!**

## அத்தியாயம் பதினொன்று :

**நீல நயனங்களில் ஒரு நீண்ட கனவு வந்தது!!!**

இவர்கள் பேசிக் கொண்டு இருக்கும் போதே, டாக்டர் ரெளண்ட்ஸ் வந்தார். வந்தவர் ராஜாராமின் நிலை குறித்து விளக்கி சொல்ல, புரிந்தது போலவும் இருந்தது புரியாதது போலவும் இருந்தது இருவருக்குமே... நிறைய காம்ப்ளிகேஷன்ஸ்...

மேலே என்ன செய்யலாம் என்று இரண்டு மூன்று ஆப்ஷன்களை சொல்லி மருத்துவர் கேட்க, முரளிக்கு சட்டென்று சொல்லத் தெரியவில்லை.

“டிஸ்கஸ் பண்ணிட்டு சொல்றோம் டாக்டர்” என்று ஈஸ்வர் தான் சொன்னான்.

அவர் சென்றதும் ரஞ்சனிக்கு அழைத்தவன், “ரஞ், எங்க இருந்தாலும் உடனே இங்க வா” என்றான்.

அரை மணிநேரத்தில் ரஞ்சனியும் வந்துவிட, “என்ன செய்யலாம் சொல்லு” என்று கேட்க...

“இருங்க நான் டாக்டர் பார்த்துட்டு வர்றேன்” என்று அவள் கிளம்பும் நேரம், பத்மநாபனும் கமலம்மாவும் வர்ஷினியும் வந்தனர்.

“டாக்டர் என்ன சொன்னார்” என்று பத்துவும் கேட்க,

“சில ஆப்ஷன்ஸ் சொன்னார் ட்ரீட்மென்ட்க்கு, அதுதான் ரஞ்சனியை கூப்பிடேன், அவளுக்குக் கொஞ்சம் தெரியுமில்லையா” என்று முரளி சொல்ல...

ரஞ்சனியைப் பார்த்தான், “நான் போய்க் கேட்டுட்டு வர்றேன்” என்று அவள் கிளம்ப,

“நானும் வர்றேன்கா” என்றாள் வர்ஷினி.

“நீயா, நீ சின்னப் பொண்ணு! வேண்டாம்!” என்று ஸ்ட்ரிக்டாக மறுத்த ரஞ்சனி, “நீங்க வாங்கண்ணா” என்றாள் முரளியைப் பார்த்து,

அதற்குள் “இல்லை, நான்....!” என்று வர்ஷினி மறுத்துப் பேச, உதட்டின் மேல் கைவைத்து “ஷ், சொன்னாக் கேட்கணும்” என்று கண்டிப்பாக சொன்னாலும், அது ஒரு சிறு குழந்தைக்கு நாம் சொல்லும் த்வனியே,

அந்த த்வனி பத்மனாபனை, ரஞ்சனியின் புறம் சற்றுக் கவனிக்க வைத்தது.

முரளி கிளம்பவும், “நான் வரட்டுமா” என்றான் பத்மநாபன்.

“ஓஹ் எஸ் வாங்க!” என்றாள்.

“நீ இரு” என்று முரளியிடம் சொல்லி பத்மநாபன் ரஞ்சனி உடன் சென்றான்,

செல்லும் போதே “நீங்க என்ன பண்றீங்க?” என்று ரஞ்சனி பத்துவிடம் விசாரித்துக் கொண்டே செல்வது கேட்டது. இருவரும் வரக் கிட்ட தட்ட ஒரு மணி நேரத்திற்கும் மேல் ஆகிற்று.

“கமலம்மா இன்னம் காணோம்... என்னவோ?” என்று பயந்து அமர்ந்து இருந்தார்.

“என்ன? என்ன சொன்னாங்க” என்றார்.

“மா! ஹார்ட் அட்டாக் இல்லையா? அதனால மருந்து மாத்திரை குடுக்கலாமா இல்லை ஆபரேஷன் பண்ணலாமா கேட்டாங்க!” என்றாள். அது கமலம்மாவிற்காக அவள் சொல்லும் பதில் என்று அங்கிருந்த அனைவருக்கும் புரிந்தது அவரைத் தவிர.

“எங்களை விட உங்களுக்குத்தான் தெரியும்! சோ நீங்க எது சரின்னு ஃபீல் பண்றீங்களோ பண்ணுங்கன்னு உங்க பையன் சொல்லிட்டார்” என்று பத்துவைக் காட்டினாள்.

அவனும் “ஆம்” என்பதுப் போல ஆமோதிக்க, இதையெல்லாம் பார்த்திருந்த ராஜாராம் “டாக்டரை நான் பார்க்கணும்னு சொன்னேன்னு சொல்லு” என்றார்.

“சரி, சொல்றேன்” என்று ஒரே வார்த்தையில் பத்மனாபன் முடித்து விட்டான். அவர் முன் எந்த விவரங்களும் பேச முடியவில்லை.

கமலம்மாவை விட்டு எல்லோரும் வெளியில் வர, எல்லோரும் என்ன பேசுகிறார்கள் என்பது போல வர்ஷினி கவனித்து நிற்க “நீ அம்மாவோட இரு, அவங்க ரொம்ப கவலையா இருக்காங்க” என்றான் பத்மநாபன்.

“அம்மா கவலையா இருக்காங்கன்னு சொல்றீங்களா, இல்லை நான் இங்க இருக்க கூடாதுன்னு சொல்றீங்களா” என்றாள் அண்ணனிடம் பளிச்சென்று வர்ஷினி.

“ரெண்டும் தான் போ!” என்று பத்து அதட்ட, அவனை முறைத்துக் கொண்டு அப்படியே தான் நின்றாள்.

“சொன்னாக் கேளு போடா!” என்று சற்று தணிவாக கெஞ்சலாக பத்மநாபன் சொல்லவும் தான் சென்றாள், அப்போதும் முறைத்துக் கொண்டே தான் சென்றாள்.

வர்ஷினி ஹாஸ்பிடல் வந்ததில் இருந்து, அவள் புறம் கண்ணோ, மனமோ, யோசனைகளோ செல்லக் கூடாது என்று கடிவாளமிட்டு இருந்தான். அது அவளின் இந்த பாவனையில் தறி கெட்டு ஓட ஆரம்பித்தது.

வர்ஷினியின் முக பாவனைகளைப் பார்த்திருந்தவன், அவள் திரும்பி நடக்கவும் அவளின் உடைகளை ஆராய்ந்தான், ஒரு பேகி

பேன்ட் அதன் மேல் ஒரு ஷர்ட், இடை வரை நீண்ட கூந்தல், ஒரே அளவாக பின்னல் மேலிருந்து கீழ் வரை, அதுவும் ஒரு மாதிரி அந்த பேன்ட் ஷர்ட்டிற்கு ஸ்டைலாக இருந்தது. அவள் கதவை திறந்து உள் செல்லும் வரை பார்வையை அகற்ற முடியவில்லை.

அந்த கதவு மூடிய பின் சுற்றம் நினைவில் வர, யாரும் கவனித்து விட்டார்களா என்று பார்க்க, மூவரும் கவனிக்கவில்லை.

“ஹப்பா” என்று ஆசுவாசப் பெருமூச்சுவிட்டான்.

ரஞ்சனி ஏதோ தீவிரமாக இருவரிடமும் சொல்லிக் கொண்டு இருந்தாள். “நான் இருக்குறதைச் சொல்றேன், ரொம்ப சீரியஸ் தான், ஆனா கண்டிப்பா வாழ்நாளை ஒரு ஆறு மாசம் இல்லை ஒரு வருஷம் கூட நீட்டிக்கலாம். ஆனா அதுக்கு பேஷன்ட் கோஆபரேட் பண்ணனும்”.

ஆறு மாதம்! ஒரு வருடம்! மக்கள் இருவருக்கும் மனது துடித்தது. உண்மையில் தந்தையின் நிழலில் முழுவதுமாக இதுவரை இருந்தார்கள் என்பது தான் உண்மை.

“அண்ணா! சொல்றதுக்கு கஷ்டமா தான் இருக்கு, ஆனா சொல்லி தான் ஆகணும்! நீங்க அவருக்கு நல்ல மகன்களா இருந்தீங்கன்னா, நீங்க கடவுள் கிட்ட அவர் உயிரோட இருக்கணும்ன்னு வேண்டாதீங்க, அவருக்கு அதிக வலியில்லாத முடிவை கடவுள் கொடுக்கணும்னு வேண்டிக்கங்க” என்றாள் முரளியைப் பார்த்து.

“எப்படி, எப்படி, இவ்வளவு லாஸ்ட் ஸ்டேஜ் வரும்வரை எங்களுக்கு தெரியாம இருந்தது”.

அதற்கு பதில் ரஞ்சனிக்குத் தெரியும்! ஆனால் எப்படி சொல்வாள்! ஒரு டாக்டர் மட்டும் என்றாள் சொல்லி விடுவாள். ஆனால் அண்ணன் இருக்கின்றான், அண்ணனின் நண்பன், அவனின் தம்பி.

அவர்களிடம் எப்படி சொல்லுவாள் உங்களின் தந்தை அவரின் உல்லாச வாழ்க்கைக்கு சில மருந்துகளை எடுத்துக்கொள்ள, அது அவருக்கு அவரின் உண்மை நிலையைத் தெரியவிடவில்லை என்று. இப்போது ஹார்ட் அட்டாக் வந்ததினால் தான் மற்ற பாகங்களின் தொந்தரவுகள் தெரிய வந்தது.

“சில சமயம் ஆகும்” என்று பேச்சை முடித்தாள், டாக்டர் ஆப்ஷன்ஸ் சொல்றாங்க, பட் நாங்க சொல்லிட்டு வந்துட்டோம், நீங்களே முடிவெடுங்கன்னு”

“நான் அம்மாக்கிட்ட உள்ள பேசிட்டு இருக்கேன்” என்று சொல்லி ரூமின் உள் சென்றாள்.

கமலாம்மாவின் அருகில் சென்றவள் “அம்மா பயப்படாதீங்க தைரியமா இருக்கணும், உங்க தைரியம் தான் சீக்கிரம் அவரை குணமாக்கும்” என்றாள்.

இதைப் பார்த்துக்கொண்டு தான் வர்ஷினி அமர்ந்திருந்தாள். ஆனால் என்னவென்று கேட்கவில்லை.

கமலம்மா ரஞ்சனியிடம் மேலும் மேலும் கேள்விகள் கேட்க, எல்லாவற்றிற்கும் பொறுமையாக பதில் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

அதற்குள் ராஜாராமை சி டீ ஸ்கேன் எடுக்க அழைத்துப் போக வந்தனர்.

முரளியும் பத்மநாபனும் அவருடன் செல்ல, கமலம்மாவும் ரஞ்சனியும் பேச, மெதுவாக அந்த இடத்தை விட்டு வெளியே வந்த வர்ஷினி, அந்த இடம் விட்டு அகன்று கார் பார்க்கிங் இருந்த இடத்தில் ஒரு நிழல் குடையில் அமர்ந்து கொண்டாள்.

அவள் ரூம் விட்டு வெளியே வந்த போது ஈஸ்வர் பார்த்துக் கொண்டுதானிருந்தான். வர்ஷினியும் ஈஸ்வரை பார்த்தாள் தான். ஆனால் பேச முற்படவில்லை. அவள் பாட்டிற்கு செல்ல, அவள் பின் செல்ல துடித்த கால்களையும் மனதையும் மீண்டும் கடிவாளமிட்டான்.

எவ்வளவு நேரம் தாங்கும் என்று அவனுக்கு தெரியாத பட்சத்தில், முன்பே ஒரு பெண்ணிடம் காதல் சொல்லி விட்டேன், இப்போது இந்த பெண் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னாலும் மனம் அவளின் பின்னே செல்கிறதே இது என்ன என்ற சுய ஆராய்ச்சி?

சிறிது நேரம் அப்படியே அமர்ந்திருக்க, “டேய் அண்ணா, ஆன்ட்டி ரொம்ப டையர்ட்டா ஃபீல் பண்றாங்க காபி டீ ஜூஸ் ஏதாவது வாங்கிட்டு வர்றியா இல்லை நான் போகட்டுமா” என்று வந்து நிற்க,

“நான் போறேன்!” என்றபடி எழுந்து போனான், கேண்டீன் போய் ஜூஸ் வாங்கி வரும் பொழுது அங்கே ஒரு நிழலில் தனியாக அமர்ந்து வெறித்துக் கொண்டிருந்த வர்ஷினி பட, அதற்கு மேல் கட்டுப்பாடிட மனமே விழையவில்லை.

ஜூஸை சென்று ரஞ்சனியிடம் கொடுத்தவன், நேராக வர்ஷினியிடம் தான் வந்தான்.

வந்தவன் அருகில் அமர்ந்தான், வர்ஷினி அவனைப் பார்க்க, “என்கிட்ட என்ன பிரச்சனைனாலும் சமாளிக்கலாம் சொல்ற, நீயேன் இப்படி உட்கார்ந்து இருக்க”

பதில் சொல்லாமல் “ஒன்றுமில்லை” என்பதுப் போல அவனைப் பார்த்து தோளைக் குலுக்கினாள்,

அந்த நீல நிறக் கண்கள் அவனைப் பார்க்க, இந்த முறை அந்த வார்த்தையை சொல்லியே விட்டான், **“you have beautiful eyes, its calling me to sink”** , என்று வார்த்தையை நிறுத்தினான். அவன் சொல்லாமல் விட்டது “ **sink in you”**

ஆனால் ஈஸ்வர் முழுதாக சொல்லாத போதே, “என்ன சொல்கிறான் இவன்” என்று விழிவிரித்துப் பார்த்தாள்.

“அழகான கண்கள்” என்றான் மீண்டும் அதைப் பார்த்தபடி...

“அது லென்ஸ்” என்றாள்.

“என்ன லென்ஸ்ஸா?” என்ற கேட்ட போது அதிர்வு அவன் கண்களில்,

பின்னே, அவனை எவ்வளவு தடுமாற செய்தது! செய்கிறது!

“கொடு” என்று கையை நீட்டினான்.

“இவன் என்ன லூசா”, என்பது போல வர்ஷினி பார்த்தாள்.

கண்டுகொள்ளாமல் “கண்ல இருக்கிறதை எடுத்துக் கொடு” என்றான் சீரியசாக.

எதற்கு இவ்வளவு சீரியஸ்னஸ் என்று புரியாமல் “no! not! sorry! this is from my mom” என்றுரைக்க,

“do you know your mom”

“sorry this is my very personal!”

அதற்கு மேல் எதையும் ஈஸ்வர் கேட்கவில்லை, என்ன பேசுவது என்றும் தெரியவில்லை, ஈஸ்வரின் பேச்சு அதிகப்படியா என்று வர்ஷினி யோசிக்க முடியாதபடி அவளின் அம்மாவைப் பற்றி பேச்சு வர, அப்படியே அமர்ந்து இருந்தாள்.

அதற்குள் எங்கே இருவரையும் காணோம் என்பது போல ரஞ்சனி இவர்களைத் தேடி வந்தாள், தூரத்தில் ஈஸ்வர் வர்ஷினியிடம் அருகில் அமர்ந்து கொண்டிருப்பது தெரிய, இவன் என்ன செய்கிறான் இங்கே என்ற யோசனையோடு வந்தாள்.

அவர்களைப் பார்த்துக் கொண்டே நடந்து வர வர “இந்த ஐஷ் இவன் பேசமாட்டேன் என்கின்றான் என்று என் உயிரை எடுக்கிறாள். இவன் ஹாயாக உட்கார்ந்து இருக்கிறான். ஒரு வார்த்தை அவளுடன் பேசினால் என்ன?” என்று தான் தோன்றியது.

இதில் வர்ஷினியை மறந்தாள்,

“விஷ்வா என்ன பண்ற இங்க?” அருகில் வந்தவுடனே சற்று அதட்டலாக கேட்டாள்.

சாதரணமாக கேட்டாலே ஈஸ்வர் கோபம் கொள்வான். இதில் வர்ஷினி முன் சொல்லவா வேண்டும் “ஏன்? உனக்கு அதுல என்ன பிரச்சனை” என்றான் அவனும் சுள்ளென்று,

என்ன நடக்கிறது என்றே புரியவில்லை வர்ஷினிக்கு, தன்னுடன் ஈஸ்வர் இருப்பதை தான் ரஞ்சனி சொல்கிறாள் என்று புரிந்து வர்ஷினி எழுந்து செல்ல,

“ஹேய் வர்ஷ்! நீ எங்க போற?” என்றாள் ரஞ்சனி.

“என்னோட இருக்குறதுனால தானே அப்படிக் கேட்டிங்க அக்கா, அதான் போறேன்” என்றாள் முகத்திற்கு நேராக.

“நோ, நோ, அது அப்படியில்லை! இது வேற டென்ஷன்!” என்றாள் அவசரமாக ரஞ்சனி.

“எனக்கு அது எப்படித் தெரியும்! கொஞ்ச நேரம் முன்ன தான் சின்ன பொண்ணு போ சொன்னீங்க! இப்ப இப்படிப் பேசறீங்க!

அப்போ என்னை அவாய்ட் பண்ணறீங்கன்னு தானே தோணும்”

“உன்னையா? உன்னை நான் ஏன் அவாய்ட் பண்ணனும்?”

“எனக்கு அது எப்படி தெரியும்?” என்றாள் தோளைக் குலுக்கி அலட்சியமாக ரஞ்சனியை நேர்ப் பார்வை பார்த்து.

“ஹேய் வர்ஷ்! என்ன பேசற நீ?” என்றாள் ரஞ்சனி, எதற்கு இந்தச் சிறு பெண்ணிற்கு கோபம் என்று புரியாமல்.

“he was talking to me. you just came and shouted at him means what should i think”

ரஞ்சனிக்கு வார்த்தைகளே சட்டென்று வரவில்லை.

“இல்லை, வர்ஷினி ரஞ் அப்படி எப்பவுமே பண்ண மாட்டா” என்று ஈஸ்வர் பேச,

“ஆனா எனக்கு அது எப்படித் தெரியும், அப்பா ஒரு வாரமா ஹாஸ்பிடல்ல இருக்காரு, ஹார்ட் அட்டாக்ன்னு கூட்டிட்டு வந்தாங்க! ஆனா என்கிட்டே யாரும் எதுவும் சொல்ல மாட்டேங்கறாங்க! நானா யாரவது பேசும் போது போய் நின்னா நீ போ! நீ போ சொல்றாங்க!”

“இன்னைக்கு நீங்க இருந்தீங்கன்னு தான் வந்தேன்க்கா” என்று ரஞ்சனிய காட்டியவள் “நீங்களும் போ சொல்லிட்டீங்க! இப்ப வந்து இவர்கிட்ட கத்துறீங்க. நான் என்ன நினைப்பேன்”

“இந்த வீட்டுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு அப்பா மட்டும் தான்! அவருக்கு என்னன்னு எனக்கு தெரியவேணாமா! எல்லோரும் என்னை அவாய்ட் பண்ற மாதிரி தான் தோணுது” என்று சொல்லும் போதே குரல் கம்மியது.

“எல்லோரும் பல சமயம் அப்படித் தான் பார்ப்பாங்க எனக்கு அது ப்ராப்ளம் இல்லை”

“ப்ச்! அப்படி எல்லாம் யாரும் பார்க்கலை! நீ உன்னைக் குறைவா நினைக்காத” என்று ரஞ்சனி பேச,

“நான் எங்க என்னை குறைவா நினைச்சேன். i am just talking about the fact. உங்க அண்ணா இவர் கூட என்னை கல்யாண மண்டபத்துல ஏதோ வேலையாள் மாதிரி பேசினார். ஏன் பேசணும்? முரளி அண்ணா பிரண்ட் தானே. என்னைப் பத்தி தெரியாதா? அப்பவும்

பேசினாங்கன்னா.... எல்லா பொண்ணுங்க கிட்ட இப்படி பேசுவாங்களா? ஆமாவா? இல்லையா? கேளுங்க!” என்று ஈஸ்வரைக் கை காட்டினாள்.

ஐயோ என்றானது ஈஸ்வருக்கு! செய்யும் வகைத் தெரியாது ரஞ்சனியை முறைத்து நின்றான், அப்படி ஒரு அடக்கப்பட்ட கோபம்.

“ஷ்! தப்பு பண்ணிட்டேன் போலவே!” என்று ரஞ்சனி நினைக்க,

“it happens always, no worries” என்று சொன்ன வர்ஷினி, “எதுக்குக் கேட்கறேன்! அப்பாவுக்கு ஏதாவதுன்னா i should mentally prepare my self na” என்று அவள் சொல்லும் போதே கண்களில் கண்ணீர் எட்டி பார்த்துவிட, இப்படி சொல்லி விட்டோமே என்று மனமும் வருந்த,

நிற்காமல் நடந்துவிட்டாள், சரியாக அந்த நேரம் தாஸ் வர, “தாஸண்ணா நம்ம வீட்டுக்குப் போகலாம்” என்று அவள் சொல்ல, ஈஸ்வரியும் ரஞ்சனியையும் பார்த்துக் கொண்டே தாஸ் வண்டியை எடுக்க, கார் போயே விட்டது.

தலையைப் பிடித்து ரஞ்சனி அமர்ந்து விட்டாள்.

“நம்ம தான் உலகத்திலேயே ஸ்மார்ட்ன்னு இருக்கக்கூடாது ரஞ்சனி!” என்று அவன் சொன்ன விதம், என்ன செய்திருக்கிறாய் நீ என்று அடக்கப்பட்ட கோபத்துடன் குற்றம் சுமத்ததியது...

நடந்தது அவளுக்கும் வருத்தமே! ஒரு நூலிழைக் கூட வர்ஷினியை வருத்தப்படுத்த ரஞ்சனி நினைக்கவில்லையே, “உன்னை யாரு என்னை இங்க வர சொல்ல சொன்னா” என்று ஈஸ்வர் மீது பாய,

“என் ஃபிரண்ட்ன்னு நான் ஹெல்ப்க்கு கூப்பிட்டா, நீ இப்படிப் பண்ணுவியா”

“நான் என்ன வேணும்னா பண்ணினேன்! நான் இந்த மாதிரி எல்லாம் யோசிக்கவேயில்லை, உன் ஃபிரண்ட்ஸ்னா நீ பண்ண வேண்டியது தானே! என்னை ஏன் இப்படி கூப்பிட்ட, இப்ப அவ என் மேல கோபமா போறா! நான் அந்த மாதிரி எல்லாம் நினைக்கவேயில்லை! நீ வர்ஷினியை பேட் டா ட்ரீட் பண்ணியிருக்க”

“உனக்குப் பொண்ணுங்கன்னா இளக்காரம்! ஐஷ் எத்தனை தடவை கூப்பிடறா, நீ போன் பேசறியா! கூலா இந்த பொண்ணு கிட்ட

பேசிட்டு இருக்க! அந்த கோபத்துல தான் உன்கிட்ட பேசிட்டேன்" என்று பொரிய,

"எனக்கு இருக்குற பணப் பிரச்சனைக்கு ஐஷ் குடுப்பாளா, பிரச்சனை அதிகமானதே அவங்க அப்பாவால, அஸ்வின்னால, இதுல நான் எப்படி ஒண்ணுமே நடக்காத மாதிரி சகஜமா பேச முடியும். அந்தக் கோபம் இருக்காதா?"

"இந்தப் பொண்ணுக் கிட்ட ஏன் பேசறேன்னா, இவளால நமக்குப் பணம் கொடுக்க முடியும், இல்லை இவ சொன்னா அவங்கப்பா கொடுப்பார்! புரிஞ்சதா!" என்றான் தெளிவாக. ரஞ்சனியிடம் பணத்திற்காக தான் பேசினேன் என்று கொண்டு வர நினைத்தான்.

"அப்போ நீ அவளை ஏமாத்துறியா" என்றாள்.

ஏற்கனவே தன் எண்ணங்கள் தவறு என்பது போல சற்று குற்ற உணர்ச்சியில் இருந்தவன், "என்ன உளர்ற! நான் என்ன அவக்கிட்ட லவ் டைலாக் பேசி அவளை ஏமாத்துறனா! ஜஸ்ட் ஒரு இயல்பான சூழ்நிலை க்ரியேட் பண்றேன்!" என்றான் காட்டமாக.

ஆனால் ரஞ்சனி விடாமல் "அப்போ வர்ஷினியைப் பத்தின உன் ஒப்பினியன் அப்படியே தான் இருக்கா! பணத்துக்காக பேசறியா" என்றாள்.

"எவ்வளவு தெளிவா பேசறா? அவளை ஏமாத்த முடியும்ன்னு நீ நினைக்கறியா?"

"விஷ்வா, நான் எது பேசினாலும் எல்லோரும் தப்பா எடுக்கறீங்க"

தன்னுடைய தப்பு எண்ணங்களை ஒட்டி ரஞ்சனியின் கேள்வி செல்வதாக மனதில் தோன்ற, "ஏய்! உன் பிரச்சனை என்ன? நான் அவக்கிட்ட எதுக்கு பேசினா உனக்கு என்ன? இப்ப எதுக்கு இந்த அனாலிசிஸ், என்னை என்ன நினைச்சிட்டு இருக்குற நீ" என்று கோபமாக அடிக்குரலில் சீறினான்.

ரஞ்சனி ஏதோ பேச வர,

"நீ வாயை மூடிட்டு இரு, தங்கைனாலும் ஒரு லிமிட் இருக்கு! க்ராஸ் பண்ணாத!"

"வா முதல்ல வீட்டுக்கு கிளம்பலாம்" என்று செல்ல,

இப்படி ஈஸ்வர் எப்போதும் பேசியதில்லை, "எப்பவும் நான் என் மனசுல பட்டதை பேசுவனே. இவன் எதுக்கு இப்ப இவ்வளவு கோபப்படறான்" என்று புரியாமல்,

"நான் அங்க ஆன்ட்டி கிட்ட சொல்லிட்டு வரேன்" என்று ரஞ்சனி செல்ல,

"நான் போயிட்டு டிரைவர் அனுப்பறேன்" என்று நிற்காமல் சென்று விட்டான்.

"போடா, எனக்கு உன்கிட்ட எந்த லிமிட்டும் கிடையாது" என்று ஈஸ்வரை வாய் விட்டுத் திட்டினாள், மனதில் "வர்ஷினியை ஹர்ட் பண்ணிட்டோமே" என்ற கவலை தான் இருந்தது.

**நான் செய்வது தவறு! அந்த தவறை தவறில்லாமல் செய்ய வேண்டும்! இல்லை தவறும் தவறாகி விடும்!!!**

## அத்தியாயம் பன்னிரண்டு :

**தடையின்றி செல்வது வாழ்க்கையல்ல! தாண்டுதல் அவசியம்! நம்மை நாமே!!!**

ரஞ்சனி செல்லவும் அவர்கள் ஸ்கேன் முடித்து வரவும் சரியாக இருந்தது.

வந்தவுடனே பத்மநாபன், "எங்கேம்மா வர்ஷினி" என்று கமலம்மாவைக் கேட்டான்.

"வெளில இருப்பா"

"காணோமே காரிடர்ல"

"எங்கேன்னு பாரு" என்று கமலம்மா சொல்ல, பத்மநாபன் செல்லும்முன்னே முரளி சென்றான்.

எல்லாம் பார்த்திருந்த ரஞ்சனி, பத்துவிடம், "வீட்டுக்குப் போயிட்டா" என்றாள்.

"என்ன வீட்டுக்குப் போயிட்டாளா? யார்க் கூட? அவளாப் போயிட்டாளா?"" என்று வரிசையாக கேள்விகளை அடுக்கினான்.

"ஏதோ தாசண்ணான்னு யாரையோக் கூப்பிட்டா"

“அப்போ சரி” என்று விட்டான்.

ஆனாலும் ரஞ்சனி பதில் சொன்ன விதத்தில் ஏதோ வித்தியாசம் தெரிய, அம்மாவும் அப்பாவும் இருப்பதால் அமைதியாக இருந்தான்.

“ரிசல்ட் வர டைம் ஆகும் அம்மா, நான் ஈவ்னிங் வரேன்” என்று ரஞ்சனி கிளம்ப, முரளிக்கு ஃபோன் செய்து கொண்டே, “நான் அனுப்பிட்டு வர்றேன் அம்மா” என்று அம்மாவிடம் சொல்லி பத்துவும் கிளம்பினான்.

“வர்றேன் மா, வர்றேன் பா” என்று தனித்தனியாக கமலாவிடமும் ராஜாராமிடமும் சொல்லி ரஞ்சனி கிளம்பினாள்.

“வர்ஷினி வீட்டுக்குப் போயிட்டாளாம்” என்று முரளியிடம் சொல்ல, “ஈஸ்வர் எங்கே” என்றான் ரஞ்சனியிடம்.

“அண்ணா கிளம்பிட்டான்” என்று அவள் சொல்ல,

“கிளம்பிட்டானா, நீ எப்படிப் போவ ரஞ்சனி?”

“விஷ்வா கார் அனுப்புவான், ஓகே அண்ணா பை” என்று சொல்லிச் சென்றாள்.

பத்து அவள் பின்னோடு சென்றவன், சிறிது தூரம் சென்றதும், “ஏன் டல் ஆகிட்டீங்க”

அதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று ரஞ்சனிக்கு அவசியமில்லை, ஆனாலும் வர்ஷினி தன்னை எல்லோரும் தள்ளி நிறுத்துவது போன்ற மனப்பான்மையில் இருப்பதால் வீட்டினர் யாரிடமாவது சொல்ல வேண்டும் என்று நினைத்தவள்,

“வர்ஷினியோட கொஞ்சம் ஆர்கியுமன்ட், அதுல கொஞ்சம் அவ அப்செட், அதான் வீட்டுக்குப் போயிட்டா”

“என்ன அப்செட்டாகி வீட்டுக்கு போனாளா? என்ன அர்கியுமென்ட்?” என்றான் கவலையாக.

“நான் உங்கப்பாவோட உடல்நிலை பத்தி சொல்லும் போது உள்ள போன்னு அவளை சொன்னேன் இல்லையா, அவளை ஏதோ தள்ளித் தள்ளி நிறுத்தற மாதிரி பேசறா”

“என்ன?” என்று விழித்தவன், “இவ்வளவு உங்ககிட்ட பேசினாளா” என்றான்.

“ஆம்” என்றவள், “என்னை மட்டும் சொல்லலை, உங்களையெல்லாம் கூட. அப்பாக்கு உடம்பு சரியில்லாததுல இருந்து யாரும் அவர் எப்படி இருக்கார்ன்னு கிளியரா சொல்லலை, எல்லோரும் தள்ளி நிறுத்தராங்கன்னு ஃபீல் பண்றா”

“என்ன?” என்று இன்னும் அதிர்ந்தான் பதமநாபன், அதையும் விட மனதிற்கு கஷ்டமாக இருந்தது. ரஞ்சனியிடம் இப்படி ஏன் சொல்ல வேண்டும்? என்ன நினைப்பார்கள் வீட்டினரைப் பற்றி என்று அவன் முகம் சிறுத்து விட்டது.

ஆனால் இப்படி பேசும் பெண் இல்லையே! அவள் ஏன் பேசினாள் என்ற கேள்வியும் எழ, “இப்படி எப்பவுமே பேச மாட்டாளே! ஏன் பேசினா?” என்றான்.

“என் அண்ணனோடு பேசிக் கொண்டு இருந்தாள், நான் அண்ணனை கேள்வி கேட்டேன்” என்று எப்படிச் சொல்ல முடியும், ரஞ்சனி மௌனமாக தான் இருந்தாள்.

கார் வந்து விட்டதா என்று பார்க்க, அது வரவில்லை, அவளின் கண்கள் காரைத் தேடுவதை உணர்ந்தவன் “இன்னம் வரலையா?”

“இல்லை போல” என்றவள் அதற்காகக் காத்திருக்க,

“நான் டிராப் பண்ணட்டுமா”

“இல்லை, வேண்டாம், வந்திடும்”

“நான் வீட்டுக்குப் போகிற வேலை இருக்கு, உங்க ஏரியா ஜஸ்ட் கொஞ்சம் தள்ளி தான் விட்டுடுவேன்” ஆம் அவனுக்கு வர்ஷினியை பார்க்க வேண்டி இருந்தது.

“அப்படியெல்லாம் யாருடனும் சட்டென்று போக முடியாது, வீட்டினர் அனுமதிக்க மாட்டர்” என்று இவனுக்கு எப்படிச் சொல்வது என்று விழித்தாள்.

“இல்லை, கார் வந்துடும்” என்றாள் திரும்ப, கூடவே “நீங்க போங்க” என்றும் சொல்ல,

“என்னுடன் இருப்பது பிடிக்கவில்லையோ” என்று பத்மநாபனிற்கு தோன்ற, அவனும் பேசாமல் உள்ளே வந்தவன், அம்மாவிடம் “நான் வீட்டுக்குப் போயிட்டு வர்றேன் மா” என்றான் வர்ஷினியைப் பார்க்க வேண்டி.

திரும்ப அவன் வெளியே வந்த போதும் ரஞ்சனி அப்போதும் காத்திருக்க, “ஏன்? என்னோட வந்தா என்னவாகிடும். இப்படி வெயிட் பண்ணுவீங்க, ஆனா வரமாட்டீங்களா” என்றான்.

அப்போதுதான் இந்த ஈஸ்வர் அவளுக்காகக் காத்திருக்காமல் விட்டு சென்ற எரிச்சலில் இருந்தவள், “சரி வர்றேன்” என்று எழுந்தாள்.

பத்மநாபன் கார் எடுத்து வர, முன் அமர்வதா பின் அமர்வதா என்று ஒரு குழப்பம், பின்புறமே அமர்ந்தாள்.

சிறிது தூரம் சென்றதும் “வேற ஏதாவது பேசினாளா வர்ஷினி” என்று கேட்டான், அவன் கேட்ட விதமே அவன் சிந்தனை முழுவதும் வர்ஷினி என்று தெரிந்தது,

இல்லை என்றவளுக்கும் மனது ஏதோ மாதிரி இருந்தது, இப்படி நேரடியாக வர்ஷினி பேசியது ரஞ்சனிக்கும் கஷ்டமாக இருக்க,

“உங்க வீட்டு வழியா போறோம்னா, நான் வர்ஷினியைப் பார்த்துட்டு போகட்டா, ஜஸ்ட் ஒரு பத்து நிமிஷம்”

எதற்குப் பார்க்க வேண்டும் என்று வாய்மொழியாக பத்மநாபன் கேட்காத போதும் கண்களில் அந்தக் கேள்வியைத் தாங்கி பின் புறம் திரும்பி ரஞ்சனியைப் பார்த்தான்.

“தப்பா நினைச்சிட்டா என்னைப் பத்தி. ஆனா அதை விட அவ எல்லோரும் அவளை ஒதுக்குற மாதிரி நினைக்கிறா, நான் அப்படி இல்லைன்னு சொல்லணும்னு ஒரு இன்டியுஷன், சொல்லாமயும் இருக்கலாம், ஏனோ சொல்லணும்னு தோணுது”

“வாங்களேன்” என்று வீட்டை நோக்கி விட்டான்.

ஹாலில் யாருமில்லை, “தாத்தா இப்போல்லாம் காலையில கொஞ்சம் தூங்கறார், அண்ணி அப்பாக்கு உடம்பு சரியில்லாத போதே அவங்க அப்பா வீட்ல விட்டுட்டான் முரளி. மேல அவ ரூம், நான் போய்க் கூப்பிடறேன்” என்று சென்றவன், கதவை தட்ட அது திறக்கவேயில்லை,

“வர்ஷினி” என்று கத்தி மீண்டும் மீண்டும் தட்ட, அப்போதும் திறக்க வில்லை.

என்னவோ ஏதோவென்று வேலையாட்கள் வந்து நின்று பார்த்தனர், தாத்தாவும் எழுந்து வந்து விட்டார்.

ரஞ்சனி பயந்து விட்டாள். நான்கைந்து நிமிடங்கள் தட்டியவன் கதவை உடைக்கலாமா என்று யோசிக்க ஆரம்பித்தான். அது தேக்கு மரக் கதவு, எதை கொண்டு உடைப்பது என்று நினைத்த நேரம் கதவு திறந்தது.

வர்ஷினி வெளியே வந்தவள் “என்ன அண்ணா” என்றாள் பதட்டமாக.

“ஏன் கதவை திறக்க இவ்வளவு நேரம்” என்று அதட்டினான்.

“நான் ரெஸ்ட் ரூம்ல இருந்தேன், நீங்க ஏன் இப்படித் தட்டுறீங்க” என்றாள் கலவரமாக.

“ஊப்ஸ்” என்றவன், “நீ திறக்கலையா பயந்துட்டேன்” என்றான்.

அப்போதுதான் சுற்று புறம் பார்த்தாள், வேலையாட்கள், தாத்தா எல்லோரும் பார்த்து நிற்பதை, கூடவே ரஞ்சனியும் இருப்பதை.

“ரஞ்சனிக்கா”

“ம், உன்னைப் பார்க்க வந்தாங்க! நீ அவங்களோட சண்டை போட்டியா”

அவனுக்கு பதில் சொல்லாமல் ரஞ்சனியைப் பார்க்க கீழே விரைந்தவள், “என்னைப் பார்க்க வந்தீங்களா”

“பின்ன, நீ தான் என்னோடா சண்டை போட்டியே, அப்புறம் நான் அதையே யோசிச்சிட்டு இருப்பேன்”

“you are so sweet” என்று ரஞ்சனியை அமர்த்தி அருகமர்ந்தவள் “என்ன சாப்பிடறீங்க” என்று வீட்டினளாக உபசரித்தாள்.

தாத்தா யார் என்பது போலப் பார்த்து நிற்க, பத்மநாபன் “இவங்க முரளிண்ணா ஃபிரண்ட் ஈஸ்வர்ரோட தங்கை” என்று சொல்ல,

ரஞ்சனியும் எழுந்து நின்று மரியாதையாக ஒரு வணக்கம் வைக்க, "ஈஸ்வர் தங்கையா" என்று அவரும் மரியாதையாகப் பார்த்தார்.

"இவங்க டாக்டர், அப்பாவைப் பார்க்க வந்தாங்க" என்று சொல்ல, "ஓஹ்" என்றவர் ரஞ்சனியிடம் தன் மகனின் உடல்நிலைக் குறித்துக் கேட்க, என்ன சொல்வது? உள்ளதை உள்ளபடி சொல்வதா? இல்லை சொல்ல வேண்டாமா? என்று திணறினாள்.

கூட வர்ஷினி வேறு "நான் இருக்கட்டுமா! போகட்டுமா!" என்று கேட்க, ரஞ்சனி வர்ஷினியை முறைத்துப் பார்க்க, அமைதியாக அமர்ந்து கொண்டாள் வர்ஷினி.

முன்னம் இருந்ததற்கு இப்போது உடல்நிலை பரவாயில்லை என்பது போல சொல்லி "நான் கிளம்பறேன்" என்று ரஞ்சனி எழ,

"சாரி அக்கா! கொஞ்சம் எமோஷனல் ஆகிட்டேன்!" என்று வர்ஷினி விளக்க ஆரம்பிக்க,

"மேலே பேசாதே" என்று உதடுகளின் மேல் ஒற்றை விரல் வைத்து வர்ஷினியிடம் காட்டியவள், "you are alright now na" என்றாள்.

"எஸ்" என்பதுப் போல வர்ஷினி சொல்லவும், "ஓகே நான் கிளம்பறேன்" என்று சொல்லிச் செல்ல முற்பட,

அதற்குள் ஜூஸ் வந்திருந்தது, அதைக் குடித்த பிறகே வர்ஷினி விட்டாள்.

எல்லாவற்றையும் பார்வையாளனாய் பார்த்திருந்தான் பத்மநாபன், யாரிடமும் அதிகம் பழகாத வர்ஷினி, ரஞ்சனியிடம் இயல்பாக பழகுவதை. ஏன் ஈஸ்வரிடம் கூட அப்படித்தானே! அதைத் தானே வேண்டாம் என்று அவன் தடுத்திருந்தான்.

அவன் பார்த்த நாளிலிருந்து ரஞ்சனி எல்லோரிடமும் நடந்து கொண்ட விதம், பழகும் தன்மை அதிலும் வர்ஷினியிடம் பழகும் விதம், தன் அண்ணன் ஈஸ்வரைப் போல திமிர் இல்லாமல் நடந்து கொள்வது,

இவற்றை அறிந்து அவனின் நெஞ்சம் ஆர்வமாக ரஞ்சனியைப் பார்த்தது.

“நான் விட்டுட்டு வர்றேன்” என்று பத்மநாபன் கூட சென்றான். கார் ஏறும்வரை வந்து உடன் இருந்தாள் வர்ஷினி, கூடவே மீண்டும் ஒரு சாரி.

“இட்ஸ் ஓகே” என்று சொல்லி ரஞ்சனி காரில் ஏற, செல்ல ஆரம்பித்த சில நேரத்தில் “உங்க வயசு என்ன?” என்றான் பத்மநாபன்.

“ஆங்! இவன் என்ன கேட்கிறான்?” என்று ரஞ்சனிப் பார்க்க,

“சொல்லுங்களேன்!” என்றான் திரும்ப.

“இதேதடா வம்பு?” என்று கலவரமான ரஞ்சனி “எதுக்கு கேட்கறீங்க” என்றாள்.

“இப்பதான் காலேஜ் முடிச்சிருக்கீங்க. நானும் இப்பதான் முடிச்சேன்! நீங்க என்னை விட பெரியவங்களா சின்னவங்களான்னு தெரிய”.

“தெரிஞ்சு என்ன செய்யப் போறீங்க! அதெல்லாம் சொல்ல முடியாது!” என்று கறாராக ரஞ்சனி சொல்ல, அவள் சொன்ன பாவனையில் “ம்ம்மம்மம்ம்ம், சைட் அடிக்கதான் கேட்கறேன்” என்றான்.

“சொல்லிட்டு அடிச்சா அதுக்கு பேர் சைட் இல்லை”

மனதின் இறுக்கம் தளர, புன்னகை அரும்பியது அவன் முகத்தில். “சரி! வயசு சொல்லாதீங்க! உங்க பிறந்த தேதி வருஷம் மட்டும் சொல்லுங்க!” என்றான்.

“ஏங்க? என்னைப் பார்த்தா லூசு மாதிரி தெரியுதா உங்களுக்கு! வயசு சொல்ல மாட்டேன்னா இப்படியா கேட்பீங்க” என்றாள் சீரியசாக.

இதற்கு மேல் எப்படிக் கேட்பது என்று தெரியாதவனாக அமைதியாகி விட்டான்.

அதற்குள் அவர்களின் வீட்டிற்குப் போகும் திருப்பம் வர, “இப்படியே விட்டுடுங்க நான் போயிடுவேன்”

“ஏன்? வீட்ல விடறேன்!”

“இல்லை! வேண்டாம்!” என்று பிடிவாதமாக மறுத்து இறங்கினாள்.

“ஏன் இவ்வளவு பிடிவாதம்”

“முரளிண்ணாவைத் தெரியும், உங்களை வீட்ல யாருக்கும் தெரியாது, ஐ மீன் பழக்கம் இல்லை அதுதான்” என்று சொல்லிவிட்டாள்.

உண்மையில் ரஞ்சனிக்கு சற்று எரிச்சலாக வந்தது, வயதை கேட்கிறான் என்பது போல, ரஞ்சனி விளக்கம் கொடுத்தால் வீட்டினர் யாரும் எதுவும் சொல்லப் போவது இல்லை. ஆனால் இவன் லிமிட் க்ராஸ் செய்கிறானோ என்பது போல ஒரு எண்ணம்.

“ஏன்? என்னைப் பார்த்தா எப்படித் தெரியுது?” என்று கேட்க வந்தவன், வார்த்தைகள் இந்த முறையில் வளர்க்க விருப்பமின்றி விட்டு விட்டான்.

தானும் வர்ஷினிக்கு இப்படித்தான் ஜாக்கிரதைகள் சொல்கிறோம் என்பதே அவனுக்கு மறந்து போனது.

விட்டால் போதும் என்று அவள் விரைந்து சென்று விட்டாள். அவனுக்கு தேங்க்ஸ் சொல்ல வேண்டும் என்று கூட நினைவில் இல்லை. அவளின் எண்ணம் எல்லாம் இப்போது ஈஸ்வரை சுற்றி, “இவன் ஃபிரண்ட்னா இவன் போக வேண்டியதுதானே, என்னைக் கூட்டிக்கொண்டு சென்று தேவையில்லாமல் எனக்கு எவ்வளவு டென்ஷன், எனக்கு இது தேவையா?” என்பது போலத்தான் எண்ணம்.

“இந்தப் பெண் எப்படி ஓடுகின்றது! நான் என்ன செய்து விடுவேன். இவர்கள் எல்லோருக்கும் திமிர் தான், இவள் அண்ணனின் திமிர் இவளிடமும் இருக்கிறது” என்று நினைத்தவனாக அப்பாவைப் பார்க்க மீண்டும் ஹாஸ்பிடல் திருப்பினான்.

பத்து நாட்கள் ஹாஸ்பிடலில் இருந்த பிறகு வீட்டுக்கு திரும்பினார் ராஜாராம், உடல் நிலையில் முன்னேற்றம் என்று சொல்லும்படி ஒன்றுமில்லை, இப்போதைக்கு நடை இருந்தாலும் எப்போது வேண்டுமானாலும் மோசமடைய வாய்ப்புகள் உள்ளன என்பதுதான் நிலை.

வீட்டில் முரளிக்கும் பத்மநாபனுக்கும் தான் தெரியும். வேறு யாருக்கும் தெரியப்படுத்தவில்லை ஆனால் தெரிய

வேண்டியவருக்கு தெரிந்தது, அதாவது ராஜாராமிற்கு.

தன்னுடைய மக்கள் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமைகளை முன் நிறுத்தி தான் அவரின் சிந்தனை இருந்தது.

ரஞ்சனி அன்று பேசியதில் இருந்து ஈஸ்வர் ரஞ்சனியிடம் முறைத்துக் கொண்டு தான் திரிந்தான். ரஞ்சனியிடமே அப்படி எனும் போது ஐஷிடம் சொல்லவா வேண்டும். சில முறை ஐஸ்வர்யா அழைத்த போது தொலைபேசி எடுத்தாலும் என்ன? ஏது? என்ற வகையில் பேச்சுக்கள் இருக்க, அவனிடம் என்ன பேசுவது என்றே அவளுக்கு தெரியவில்லை.

ஐஷ் ஒரு பக்கம் மிகுந்த மனஉளைச்சலில் இருந்தாள். யாரிடமும் பகிரவும் முடியவில்லை.

ஈஸ்வருக்கு இருந்த நினைப்பெல்லாம் நாட்கள் நகர்ந்து கொண்டே இருக்கின்றன. இதில் இன்னும் பண விஷயம் அப்படியே இருக்கின்றது. இந்தப் பிரச்சனைகள் முன் நிற்க, இதில் வர்ஷினியின் நினைவு இல்லை என்பது தான் உண்மை. அவளும் கண்ணில் படவில்லை, ஆதலால் அவளின் நினைவுகள் முன் நிற்கவில்லை.

ராஜாராம் வீட்டிற்கு வந்து விட்டார் எனத் தெரிந்ததும் அவரை நேரில் சென்று பார்க்கலாம், யாரும் தேவையில்லை, தானே பேசலாம் என்ற முடிவுடன் இருந்தான்.

அன்று காலையில் எழுந்ததில் இருந்து அதே சிந்தனையுடன் இருந்தவன், குளித்து, உணவு உண்டு, அங்கே செல்ல ஆயத்தமாகி கொண்டிருந்தான்.

தயாராகி கீழே வந்த போது அங்கே அவன் கண்ட நபர்!!!

அஸ்வின்!!!

ஹாலில் இருந்தான். அவனைப் பார்த்ததும் மெல்ல மெல்ல ஈஸ்வருள் ரௌத்திரம் ஏறத் துவங்கியது.

ரூபா அஸ்வினிடம் அப்போதுதான் கோபமாகப் பேசிக் கொண்டு இருந்தாள். “என்ன செஞ்சிருக்க நீ, எவ்வளவு தைரியம் ஏமாத்தி இருக்க!” என்று சத்தம் போட,

“என்ன ஏமாத்தினேன்? மாமா என்ன சின்ன பையனா! அவருக்குத் தெரியாம ஏதாவது நடக்கறதுக்கு, எவ்வளவு தைரியம் இருந்தா அப்பாவை கடத்தி இருப்பாங்க, நீ இன்னும் இந்த வீட்ல இருக்க” என்று கேட்க, வீடே அங்கே குழும ஆரம்பித்தது.

“என்ன செஞ்சாங்க உங்களை? ஒண்ணுமே செய்யலையே! எனக்காகத் தான் சும்மா விட்டுட்டாங்க, நீ இதுல வந்து சத்தம் போடறியா”

“ஆமாம், போடுவேன்! கேட்க ஆளே இல்லைன்னு எங்கப்பாவை கடத்துவீங்களா!” என்று அவன் கத்த,

“அஸ்வின் பார்த்து பேசு” என்று ஜகனும் கோபமாக பேச,

“நீ பேசாதே ஜகன்” என்ற அதட்டலோடு முன் வந்தான் ஈஸ்வர்.

அத்துணை நேரமாக ஈஸ்வரைக் கவனிக்கவில்லை அஸ்வின், ஈஸ்வரிடம் பார்வையை திருப்பினான்.

“நான் தான் கடத்தினேன்! என்கிட்டே பேசுடா” என்று முன் வந்து நின்ற ஈஸ்வரை கொன்று விடுபவன் போல அஸ்வின் பார்க்க,

“என்னடா பார்க்கற? ஓடி ஒளிஞ்ச! இப்ப என்ன புதுசா தைரியம்! முன்னாடி வந்து நிக்கற, சுருட்டுன பணத்தை திரும்பக் கொடுக்க போறியா”

“நான் ஒன்னும் எந்த பணமும் சுருட்டலை”

“அப்போ ஏண்டா பயந்து ஓடி ஒளிஞ்ச, குடுடா அந்த ஏஜென்ட் டிடெயில் நான் பார்த்துக்கறேன்”

“நான் ஒன்னும் ஒளியலை! டூர் போனேன்!” என்று சொல்லவும்,

“யார் வீட்டுக் காசுல யாருடா டூர் போறது! நீயும் உங்கப்பாவும் என்ன தொழிலா செய்றீங்க இல்லை வேலைக்குப் போறீங்களா! சும்மா இருக்குற வெட்டிப் ஆளுங்க” என

அதற்கு பதில் சொல்லாமல் “எங்கப்பாவைக் கடத்தி ரொம்ப தப்பு பண்ணிட்டீங்க”

“யாரும் உங்கப்பாவை கடத்தலை! நான் தான்! நான் மட்டும் தான்! என்ன பண்ணுவ?”

“நீ பெரிய ஆளா இருக்கலாம்! ஆனா என்னை வீணா பகைச்சிக்கிட்ட விஷ்வா! நான் என்ன பண்ணுவேன்னு உனக்குத் தெரியாது”

“என்னடா பண்ணுவ? என்னடா பண்ணுவ?” என்று ஈஸ்வர் இன்னும் அவனை நெருங்கி நிற்க,

“சொல்ல மாட்டேன்! செஞ்சிக் காட்டுறேன்!” என்று அவன் சொல்ல,

“எங்க வந்து என்னடா பேசற நீ? முதல் வெளிய போ?” என்று ரூபா கத்தினாள்.

“உன் புருஷன் வீடு, பணம்ன்னு வந்துட்டா அப்பா இல்லைன்னு ஆகிட்டாங்க இல்லை, அப்பாவைக் கடத்தி இருக்காங்க! நீ எதுவுமே பண்ணலை! என்னை வெளிய போன்னு சொல்ற! அனுபவிப்ப ரூபா!”

வீட்டினர் மொத்த பேரும் இதனைப் பார்த்து தான் இருந்தனர், ஆனால் அவர்களால் இதற்கு திரும்ப எல்லாம் பேச முடியாது. அவர்களின் பழக்க வழக்கங்களுள் இந்த பேச்சுக்கள் வராது! இப்படிப் பேச்சையும் இதுவரைக் கேட்டது இல்லை.

எல்லோரும் பயந்து பார்த்திருக்க ரூபாவும் ஈஸ்வரும் மட்டுமே பயமின்றி அஸ்வினைப் பார்த்து இருந்தனர்.

ஈஸ்வருக்கு தெரியவில்லை அஸ்வின் எவ்வளவு அபாயகரமானவன் என்று. அஸ்வின் பொருட்டு இன்னும் பல சிக்கல்களைத் தான் எதிர்கொள்ள நேரிடும் என்று அவன் கண்டானா என்ன?

**நின்புகழ்! நின்னை மறைத்த நின் செயல்! நின்னைக் கொல்லும்!!!**

### அத்தியாயம் பதிமூன்று :

**எதிரியை என்றுமே குறைத்து மதிப்பிடக் கூடாது! அதுவும் நம்முடன் இருந்து எதிரியானர்வகளை! நமது பலம் அவர்களுக்கு தெரிவது போல நமது பலவீனமும் தெரியும்!**

“என்ன செய்து விடுவான் பார்த்துக் கொள்ளலாம்” என்ற அலட்சியத்தோடு தான் இருந்தான் ஈஸ்வர்.

முரளிக்கு அழைத்து அப்பாவைப் பார்க்க வருவதாக சொல்லவும் “வாடா” என்றான்.

ரஞ்சனியை “வருகிறாயா” என்று அழைக்க,

“இத்தனை நாளா முகத்தைத் திருப்பிக்கிட்டுப் போன இப்ப ஏன் கூப்பிடற வர முடியாது! போ!” என,

“வராத போடி!” என்று மீண்டும் முறுக்கிக் கொண்டான்.

அப்பாவிடம் பணம் கேட்க இருப்பதை சொல்லவும், “கேட்டே ஆகணுமாடா நம்மாள சமாளிக்க முடியாத” என்றார் அம்மா.

“முடிஞ்சா கேட்பேனா”

பணம் கேட்பதை விடுத்து நமசிவாயம் “அஸ்வினை ஏண்டா பகைச்சிக்குற! இன்னும் ஏதாவது பிரச்சனை இழுத்து விடப்போறான்” என்றார் பயந்தவராக.

“என்ன வேணா இழுத்து விடட்டும், நாமளா போனோம்! அவங்களால தானே இவ்வளவும்! என்ன செய்யச் சொல்றீங்க? திரும்ப நல்ல மாதிரி பேசச் சொல்றீங்களா! போங்கப்பா பார்த்துக்கலாம்!” என்றான் சலிப்பாக.

இப்படி சலிப்பவன் அல்ல அவளின் அண்ணன்! சலிப்பை பார்த்த ரஞ்சனி, “நானும் வரட்டுமா விஷ்வா!” என்றாள். ஒற்றை ஆளாக எல்லாப் பொறுப்பையும் தூக்கித் தலையில் போட்டுக் கொண்டான் தானே. யாரோ? எதற்கோ? நான் ஏன் என் அண்ணனிடம் சண்டையிட வேண்டும்! அவனுக்காக எதையும் பொறுத்துக் கொள்வேன்!

“அதான் வரலை சொன்னதானே! இப்ப என்ன? வேண்டாம் போ!” என்று விட்டுச் சென்றான்.

எதற்கு தான் இவனுக்கு இவ்வளவு கோபமோ என்று தோன்றியது. இந்த ஜகன் அண்ணா யோசிக்காமல் செய்த விஷயம் எல்லோரையும் எப்படி சிக்கலில் மாட்டி விட்டது.

இவள் யோசிக்கும் போதே, “அத்தை” என்று மழலையில் அழைத்து பிரணவி தளிர் நடையிட்டு வர, “இவர்களுக்காகவாவது எல்லாம் சரியாக வேண்டும்” என்று நினைத்து குழந்தையை கையில் தூக்கினாள்.

ஈஸ்வர் முரளியின் வீட்டிற்கு செல்ல, ஹாலில் அவனின் தாத்தா மட்டுமே, மரியாதை நிமித்தம் அவரோடு பேசிக் கொண்டு இருந்தான். சிறிது நேரம் கழித்து பத்மநாபன் ராஜாராமை கை தாங்களாக அழைத்து வந்து ஹாலில் அமர வைத்தான்.

“எப்படி இருக்கீங்க அப்பா” என்று பேச ஆரம்பித்தான். அதுவரையிலும் முரளிக்கு இவன் வந்ததே தெரியவில்லை. “முரளி” என்று பத்மநாபன் குரல் கொடுத்த பிறகே முரளி வந்தான்.

பின்பு சிறிது நேரம் பேசியிருந்தார்கள். “அப்பா! நான் உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்” என்று ஈஸ்வர் நேரடியாக சொல்ல,

“என்கிட்டயா?” என்றார்.

“ஆமாம் பா!” என்று ஈஸ்வர் மீண்டும் சொல்ல.

ஹாலின் ஒரு புறத்தில் இருந்த அவர்களின் அலுவலக அறைக்கு செல்லலாம் என்று கூறி அங்கே சென்றார். அவரை முரளி அழைத்து சென்றவன், “இருப்பதா? செல்வதா?” என்பது போல ஈஸ்வரைப் பார்க்க,

“நீ போ! நான் பேசிக்கறேன்!” என்று அவரின் முன்னே தான் ஈஸ்வர் சொன்னான்.

முரளியும் வெளியே வந்துவிட, பத்மநாபன் என்ன பேச்சாக இருக்கும் என்று யோசனையாக பார்த்து, முரளியிடம் “நீயேன் வந்துட்ட?” என்று கேட்க,

“தனியா பேசணும்னு சொன்னான்”

“உனக்குத் தெரியாதா?”

“பண விஷயம்” எனவும்,

“ஃபைனான்ஸ் ஆட்கள் நம்மிடம் ஏன் பணம் கேட்க வேண்டும்” என்று யோசனை ஓட, அதை முரளியிடம் கேட்க நினைக்கும் முன் முரளி அந்த இடத்தை விட்டு சென்றிருந்தான்.

கிட்ட தட்ட அரை மணிநேரம் பேசினார்கள், ஈஸ்வர் உள்ள நிலைமையை எதுவும் மறைக்காமல் அப்படியே உரைத்தான்.

பின்பு பண உதவி கேட்க,

பெரிய தொகை! ஆனால் ராஜாராமல் முடியாதது அல்ல, ஈஸ்வரையும் நிறைய வருடங்களாகத் தெரியும். அவர்களின் நிறுவனமும் நியாயமானதே.

பணம் தாமதமானாலும் வந்துவிடும் என்று தெரியும். தலையை அடகு வைத்தாவது கொடுத்து விடுவர்! ஆனால் அந்த நிலைமைகெல்லாம் அவசியமில்லாமல் ஈஸ்வர் திறமையானவன்! ஜெயிப்பான்! உள் மனது சொன்னது! அவரின் உள்மனது என்றுமே பொய்த்தது இல்லை.

முன்பெல்லாம் மக்களிடம் கேட்காமலோ சொல்லாமலோ கொடுத்து விடுவார். ஆனால் இன்றைய சூழலில் தனக்கு எது வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் நேரலாம் என்ற நிலையில் மக்களிடம் கலந்து ஆலோசித்து கொடுப்பதே சிறந்தது என்று நினைத்தவர்,

“பசங்க கிட்ட ஒரு வார்த்தை பேசிட்டு நல்ல பதிலா சொல்றேன்” என்றார்.

அந்த நேரம் கதவை தட்டும் ஒலி கேட்க,

“யாரது?” என்ற சத்தத்திற்கு, “அப்பா” என்ற வர்ஷினியின் சத்தம்.

கண்கள் ஆர்வமாக வாயிலின் புறம் திரும்பியது,

என்னடா உள்ள வா ,

வர்ஷினி உள் நுழைந்ததும் ஈஸ்வருக்கு வந்த நோக்கம் மறந்தே விட்டது. வந்தவளும் ஈஸ்வரைப் பார்த்து புன்னகைக்க, அந்த இதழ்களின் புன்னகையை விட கண்களின் புன்னகை! அதில் தெரிந்த சிரிப்பு! முகத்தை விட்டு பார்வையை அகற்ற முடியவில்லை!

“உங்களுக்கு கமலம்மா கஞ்சி கொடுத்தாங்க!” என்று அப்பாவிடம் கொடுத்து அவனின் புறம் திரும்பி, “அப்புறம் இந்த சர்க்கு ஜூஸ்!” என்று கொடுக்க, அந்த பாவனைகளில் மனதில் ஒரு அலைபுருதல், அவளைப் பார்த்து புன்னகைத்தவன். அதன் பிறகு அவள் அங்கு இருந்து செல்லும் வரை கண்களை அவள் புறம் செல்ல விடவில்லை.

ஏதாவது பேசுவானோ என்று ஒரு சில நொடிகள் தயங்கிய வர்ஷினி அவன் பார்வையைக் கூட திருப்பாததை உணர்ந்து சென்று விட்டாள்.

அவள் சென்ற பின் ராஜாராமை பார்த்து புன்னகைத்த ஈஸ்வர், “அப்பா! இன்னும் ஒரு விஷயம்!” என்றான்.

பேச வேண்டும் என்று நினைத்து வரவில்லை! திடீரென்று தான் தோன்றியது! பேசாமல் செல்ல முடியவில்லை!

“சொல்லுப்பா”

“என் விஷயம் இல்லை, உங்க விஷயம்!” என்று இடைவெளி விட்டவன்.....

“ரொம்ப சென்சிடிவ், எனக்கு இது பேசக் கூடாதுன்னு தெரியும், பேசாம போக மனசு வரலை. கண்டிப்பா இது முரளிக்காக இல்லை உங்க பொண்ணுக்காக என்று பீடிகையோடு ஆராம்பித்தவன்,

“பேசட்டுமா! வேண்டாமா!” என்றான் மீண்டும் அவரைப் பார்த்து.

ராஜாராமின் முகம் சற்று சீரியசாக ஆரம்பித்தது.

“நான் பேசினது உங்களுக்கு எப்படி பட்டாலும் சரி! நான் பேசினது யாருக்கும் தெரிய வேண்டாம்! கண்டிப்பா முரளிக்கு இது தெரியவே கூடாது! அவன் என்னை நம்பி சொன்ன விஷயம் பா!”

ராஜாராம் அமைதியாக மேலே சொல் என்பது போல பார்த்திருந்தார்.

முரளி தன்னிடம் அம்மாவுக்கு பாதி வர்ஷினிக்கு பாதி என்று தொழில் இருப்பதையும், எதிர்காலத்தில் அம்மாவிற்கு பிறகு மகன்களுக்கு என்று இருப்பதாக சொன்னதை சொன்னவன்,

“இது சரியிலைப்பா” என்றான்.

“என்ன சரியில்லை?” என்ற சற்று கோபமாக வார்த்தை வந்தது.

“யாருக்கும் குடுக்கலைன்னா ஒன்னுமில்லை. வர்ஷினிக்கு குடுக்கறீங்க.... ஆனா உங்க நேரடி வாரிசுகளுக்கு இல்லைன்னா!” என்று சொல்லியே விட,

ராஜாராமின் முகம் கோபத்தைத் தாங்கியது. “என்ன பேசறேன்னு தெரியுதா ஈஸ்வர்” என்றார்.

“கோபப்படாதீங்க” என்றான் அவரின் கண்களை நேரடியாக பார்த்து. அந்தப் பார்வை “நான் தப்பாய் சொல்லவில்லை” என்று நூறு சதவிகிதம் அவருக்கு உணர்த்தியது.

“முரளி எல்லார்கிட்டயும் வர்ஷினியை தங்கைன்னு தான் சொல்வான், சில சமயம் என்கிட்டே எங்கப்பாவோட பொண்ணு சொல்வான்”

“அதை மீறி ஒரு வார்த்தைக் கூட எப்பவும் வந்ததில்லை! ஆனா இந்த விஷயம் தெரிஞ்சு என்கிட்டே பேசும்போது இந்த தங்கைன்ற வார்த்தை வரலை! அது தப்புன்றதை விட அவனோட கோபம் பா! சொத்து வரலைன்றது கூட இங்க பிரச்சனையில்லை!”

“வர்ஷினிக்குக் குடுத்திருக்கார்! எங்களுக்குக் குடுக்கலை! அப்போ எல்லோரும் என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க! எங்க மாமனார் வீட்ல என்ன நினைப்பாங்க! இப்படி நினைக்கறான்!”

“அவன் நினைக்கறது சரி தப்புன்றது இங்க பேச்சில்லை! நான் கூட சொன்னேன், அது அவளோடது அவளோட பேர்ல ஆரம்பிச்சது! அவளுக்கு யாரும் குடுக்கலைன்னு!”

“என்ன சொல்ல வருகிறான்” என்று கவனித்துப் பார்த்தார்.

“இங்க நம்ம பார்க்க வேண்டியது எந்த வித்தியாசமும் இல்லாம பார்த்துக்குறவங்க மத்தியில, இந்த சொத்துனால நம்ம வித்தியாசத்தை உருவாக்கக் கூடாது!”

“ஏற்கனவே வர்ஷினி இந்த வீட்டுக்கும் அவளுக்கும் இருக்குற பாண்டிங், இணைப்பு நீங்க மட்டும் தான்னு நினைக்கிறா!” என்று சொல்லவும்,

“என்ன சொல்கிறான்?” என்பதுப் போல அதிர்ச்சியாகப் பார்த்தார்.

“என்கிட்ட இல்லை, ரஞ்சனி கிட்ட! உங்க உடல் நிலை பத்தி கேட்டிருப்பாப் போல! அவ சொல்லலைன்னதும் இப்படி ஒரு வார்த்தை!”

ராஜாராமின் முகம் அதீத கவலையைக் காட்டியது.

“எதுவா இருந்தாலும் பணத்துக்காக அப்படின்னு ஒரு நிலை கொண்டு வராதீங்க, அவங்க அண்ணனுங்க அவளை தங்களோட தங்கையா நினைச்சுத் தான் பார்த்துக்கணும்”

“தொழில் அவளுக்கு இருக்கு அவங்களுக்கு இல்லைனா?”

“நல்ல பசங்க தான்! ஆனா சூழ்நிலை எப்படி வேணா மாறலாம்! சொல்லணும்னு தோணிச்சு சொல்லிட்டேன்! கண்டிப்பா இது உங்க பசங்களுக்காக இல்லை! பொண்ணுக்காகவும் அம்மாவுக்காகவும்தான்!”

“அம்மாக்கு எப்படியும் ஒரு நாற்பத்தஞ்சு வயசு தான் இருக்கும், இன்னும் பல வருஷம் அவங்க நல்லா இருக்கணும்! சொத்துக்காக அம்மா எப்போ போவாங்கன்னு பசங்க நினைக்கலைன்னாலும், நாளைக்கு அவங்க மனைவி அவங்க பசங்க நினைக்க வாய்ப்பிருக்கு!”

“சொல்லணும்னு தோணிச்சு சொல்லிட்டேன்! அப்புறம் உங்க விருப்பம் பா!” என்று முடித்தான்.

ஒரு வகையில் ஈஸ்வரின் தைரியம் ராஜாராமிற்கு பிடித்தது.

பணம் கேட்டிருக்கிறான்! பணம் கொடுக்க வேண்டுமே என்பதற்காக பயந்து நினைத்ததை சொல்லாமல் விடவில்லை. நீங்கள் செய்வது தவறு என்று நேரடியாக சொல்கிறான்! எந்த பூச்சு மின்றி தைரியமாக அவன் பேசியது அவரை கவர்ந்தது.

“யோசிங்கப்பா நான் பேசினது உங்க பொண்ணுக்காகத்தான்! நான் உங்க பொண்ணுக்கிட்ட ஒரு ரெண்டு மூணு தடவை தான் பேசியிருக்கேன்! பேசின வரை ரொம்ப ரோஷம்ன்னு தெரியுது!” என்றான் திரும்பவும்.

அவரின் முகம் யோசனையைத் தாங்க...

“சரிப்பா நீங்க ரெஸ்ட் எடுங்க” என்று சொல்லி முரளியை அழைத்தான்.

“நான் பசங்களோட பேசிட்டு சொல்றேன்” என்று அவரும் திரும்பவும் வாக்குறுதி கொடுத்தார்.

வெளியே வந்த ஈஸ்வரின் கண்கள் ஹாலை நோட்டம் விட்டது. அவளுக்காக பேசினது ஒரு திருப்தி. அங்கே வர்ஷினி

இருந்ததற்கான அடையாளமே இல்லை. “என்ன ட்ரெஸ் போட்டிருந்தா” என்ற யோசனையும் ஓடியது.

அந்தோ பரிதாபம்! அவளின் முகம், கண்களைத் தவிர இன்று எதுவுமே அவனின் கவனத்தில் இல்லை.

அதை யோசித்து வாயிலை நோக்கி நகர்ந்தவன், அங்கே பத்மநாபன் இருந்தான், அவனிடம் ஒரு தலையசைப்பாவது கொடுக்க வேண்டும் என்பது நினைவில் இல்லவே இல்லை.

ஈஸ்வர் சென்று விட்ட பிறகு மகன்களிடம் அப்போதே பேச நினைத்தார். எந்த விஷயத்தையும் ஆரப் போடும் பழக்கமில்லை அவருக்கு. எல்லாம் உடனுக்கு உடனே செய்ய வேண்டும்.

முரளியிடம் பேச அவன் உடனே சரி என்றான், பத்மநாபன் எதுவும் பேசவில்லை. ராஜாராம் அவனின் முகத்தைப் பார்க்க, அதில் என்ன என்றும் தெரியவில்லை.

“என்ன செய்யலாம்?” என்று கேட்க,

“உங்க விருப்பம்!” என்றான் பொதுவாக.

முரளி சென்ற பின் “என்னன்னு சொல்லுப்பா” என்றார்.

“எதுக்குப்பா நம்ம பணம் கொடுக்கணும், ரொம்ப திமிர்பா அவங்களுக்கு பணம் இருக்குன்னு எப்பவும்! இப்ப நம்ம எதுக்கு கொடுக்கணும்!” என்றான் கோபமாக

“ஏன் தம்பி? என்ன கோபம்?” என்றார் ஆச்சர்யமாக.

“அவங்களுக்கு எப்பவும் திமிர் பா! பணத்துக்கு மட்டும் எதுக்கு நம்மகிட்ட வரணும்!”

“திமிரா! என்ன திமிர்? ஏதாவது மரியாதை குறைவா நடந்தாங்களா!”

“அப்படி சொல்ல முடியாது! ஆனா என்னவோ பெரிய ஆளுங்கன்னு நினைப்பு! ஈஸ்வர் மட்டுமில்லை எல்லோரும் அப்படித்தான்! அவனோட தங்கை நமக்கு ஹெல்ப் பண்ண தான் அன்னைக்கு ஹாஸ்பிடல் வந்தாங்க! நான் கொண்டு போய் விடறேன்னு சொன்னா முடியவே முடியாது சொல்றாங்க! என்னவோ

நம்ம எல்லாம் அவங்க வீட்டுக்கு வர தகுதியில்லாதவங்க மாதிரி! தெரு முனையிலையே காரை நிறுத்த சொல்லி இறங்கிட்டாங்க!”

“இவங்களுக்கு நாம ஏன் ஹெல்ப் பண்ணனும். நான் ஈஸ்வரை ரொம்ப நாளா பார்க்கிறேன். முரளிக்கு ரொம்ப க்ளோஸ் ஃபிரண்ட் தான்! ஆனாலும் எப்பவும் நம்ம அவங்களுக்கு கீழன்ற மாதிரி தான் நடந்துக்குவான்”

“கஷ்டப்படட்டும்! அப்போ தான் அந்த திமிர் கொஞ்சம் குறையும்! மனுஷங்களை மதிக்க தெரியும்!” என்று பொரிந்தான்.

பத்மநாபன் என்றுமே யாரையுமே இப்படி பேசினது இல்லை இப்போது ஈஸ்வர் பிரச்சனையா இல்லை அவன் தங்கை பிரச்சனையா? “உனக்கு அந்தப் பொண்ணை பிடிச்சிருக்கா” என்றார்.

“அப்பா என்ன பேசறீங்க? என்கூட பேசவே யோசிக்கறாங்க” என்றான்.

“உனக்குப் பிடிச்சிருக்கா சொல்லு! நம்ம பொண்ணு கேட்கலாம்!”

“அப்பா எனக்கு அதுக்கான வயசு இன்னும் வரலைப்பா! என்னை விட அவங்க பெரியவங்களா கூட இருக்கலாம்! ஏன்னா இப்ப தான் அவங்களும் முடிச்சாங்க! நானும் முடிச்சேன்!” என்ற மகனின் வார்த்தை ரஞ்சனியை பற்றி கண்டிப்பாக யோசித்திருக்கிறான்! அதுவும் வயதெல்லாம் ஆராய்ந்திருக்கிறான் என்று புரிந்தது.

கண்டிப்பாக ஒரு ஈடுபாடு என்று புரிந்தது.

அவர் அமைதியாக இருக்க, “வேண்டாம்பா கேட்காதீங்க! நட்புன்றது வேற! உறவுன்றது வேற! கண்டிப்பா ஒத்துக்க மாட்டாங்கப்பா” என்றான்.

குரலில் இது நடக்காது என்ற வருத்தம் இழையோடியது மறைக்க முடியவில்லை.

தன்னுடைய மகனின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாவிட்டால் இத்தனை பணம் சம்பாத்தித்து என்ன பயன் என்று தான் தோன்றியது.

ஆனால் அவருக்கு புரியவில்லை பத்மனாபன் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை!

**நட்பு வேறு! உறவு வேறு!**

## அத்தியாயம் பதினான்கு :

**சொல்லும் வார்த்தைகள் சில சமயம் அதன் உண்மையான அர்த்தத்தை உரைப்பது இல்லை!!!**

ராஜாராமின் மனதில் மகனின் விருப்பத்தை  நிறைவேற்ற ஒரு உறுதி பிறந்தது. யாரிடமும் கலந்து ஆலோசிக்கவில்லை. பத்மநாபன் வேண்டாம் என்று சொன்ன போதும், திருமணம் பற்றி பேச முடிவெடுத்தார்.

ஈஸ்வர் முரளியின் நெருங்கிய நண்பன், அவனிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டும் ஈஸ்வரின் வீட்டினரைப் பற்றி என்று தோன்றவில்லை.

பணப் பிரச்சனை இருப்பதால் அதில் உதவினால் எல்லாம் சுபமாக நடந்து விடும் என்று அவராக மனதில் நினைத்துக் கொண்டார். உலகில் பணம் முக்கியம் என்றாலும் எல்லாவற்றையும் பணம் என்ற அளவுகோலால் அளக்க முடியாது என்று தெரியவில்லை.

ஈஸ்வரும் அப்படியே என்று அவருக்கு புரியவில்லை. இவரின் மக்கள் புழுதியில் புரண்டு இன்று பணத்தில் புரளுகின்றனர். அவன் பணத்தில் தானே புரண்டான். அதனால் அவனுக்கு பணம் முக்கியமில்லை.

“நீ இங்கே இருந்து தான் வந்தாய்” என்று மக்களுக்கு உண்மையை அவர் சொல்லும் போது அந்த உண்மை மற்றவர் மனதிலும் இருக்கும் என்று அவருக்குப் புரியவில்லை.

காதல் திருமணத்தில் தான் திருமணம் என்பது ஆணிற்கும் பெண்ணிற்கும். பெற்றோர் ஏற்பாடு செய்யும் திருமணம் இரு குடும்பங்களின் சங்கமம். ஆதியில் இருந்து எல்லாம் அலசப்படும். பாரம்பர்யம் மட்டுமல்ல முக்கியமாக பெற்றோரின் குணம்.

ராஜாராம் பணத்தை மட்டுமே பிரதானமாக நினைத்தார். தன்னுடைய பலகீனங்களை நினைக்கவில்லை.

மாலையே “ஈஸ்வரை வரச் சொல்லு” என்றார் முரளியிடம்.

“பணம் குடுக்கறோமா பா” என்ற அவனின் கேள்விக்கு பதில் சொல்லாமல் “வர சொல்லு” என்று மட்டும் சொல்ல,

அவர் சொன்ன பாவனையே மேலே கேட்காதே என்று உணர்த்தியது.

முரளி அப்படியே ஈஸ்வரிடம் சொன்னான். “வரச் சொன்னார் டா! பணம் குடுக்கறீங்களா கேட்டதுக்கு ஒன்னும் சொல்லலை”

ஈஸ்வரும் மாலைச் சரியாக வந்து விட்டான்.

அவர் அலுவலக அறைக்கு அழைத்து வரச் செய்தார். யாரும் அவருடனும் இல்லை. எல்லாம் ஹாலில் தான் இருந்தனர். நேரடியாக “ரஞ்சனியை எங்க பத்மநாபனுக்கு கல்யாணம் செய்து கொடுப்பீங்களா?” என்று கேட்க...

ஈஸ்வருக்கு ஒன்றுமே புரியவில்லை. இவர் என்ன பேசுகிறார்? இது எப்படி சாத்தியம் என்று புரியவில்லை. இவர்கள் வேறு ஆட்கள். அவர்கள் வேறு ஆட்கள். நித்தமும் வீட்டில் காலையில் எழுந்ததில் இருந்து இரவு உறங்கும் வரை அத்தனை சாஸ்தரங்கள் சம்ப்ரதாயங்கள் அனுஷ்டானங்கள் என்று பார்ப்பார்.

வீட்டினர் ஒவ்வொருவரின் ரத்தத்தில் ஊறியது. காலையில் பிரம்ம முகூர்த்ததில் விழிக்க வேண்டும் என்று ஆரம்பித்தால், ராகு காலம், எம கண்டம், நல்ல நேரம், சஷ்டி, கிருத்திகை, சங்கடஹர சதுர்த்தி, பௌர்ணமி அமாவாசை, இப்படி ஏதாவது ஒன்று தினமுமே. அவர்களின் பழக்க வழக்கம் முற்றிலும் வேறு.

பாட்டி எடுத்ததிற்கெல்லாம் சகுனம் நல்ல நேரம் என்று பார்ப்பார். வீட்டு வேலையாட்கள் கூட அவருக்கு திருப்தி ஆனால் தான். தொழில் வேறு, வீட்டில் அவரின் ஆலோசனையோ சம்மதமோ இல்லாமல் எதுவும் நடக்காது.

வேறு இனத்தில் திருமணமா சாத்தியமேயில்லை.

முரளி வீட்டினரை இவனுக்கு தெரியாதா என்ன, இவர்கள் முற்றிலும் வேறு ஆட்கள். கடவுளை கையெடுத்து வணங்குவர், அது மட்டுமே செய்வர். தவறென்று சொல்ல முடியாது. ஆனால் ஈஸ்வரின் வீட்டினருக்கு ஒத்து வராது.

இது எல்லாவையும் கூட பின்னுக்கு தள்ளும் விஷயம் ராஜாராம்! இப்படி தன் மகள் என்று தைரியமாக வர்ஷினியை இவர் வீட்டினில் வைத்திருக்கலாம். ஆனால் முறையாக பிறந்தவள் அல்லவே! தாய் யார் என்று இதுவரை யாரிடமும் சொல்லியது இல்லை. இரண்டாவது மனைவிக்கு பிறந்தவள் என்று கூட சொன்னதில்லை.

இவரின் மக்கள் நல்லவர்களே! நாளை இவர் போல் மாறிவிட்டால், எப்படி இந்த வீட்டில் பெண்ணைக் கொடுக்க முடியும்.

அதுவும் இவர்களின் பாரம்பர்யம் ராஜாராம் வீட்டினர் எந்த வகையிலும் அருகில் வரவே முடியாது.

எவ்வளவு உயரமான இடத்தில் இருந்தாலும் ஒரு விஷேஷம் மட்டுமல்ல ஒரு இறப்பு என்றால் கூட இந்த மாதிரியான ஆட்களை சபையில் எப்போதும் ஈஸ்வரின் வகையறா ஆட்கள் அனுமதிக்கவே மாட்டர். அவர்கள் பாட்டிற்கு வந்து ஒரு ஓரமாக அமர்ந்து போக வேண்டியது தான். அவர்களின் ஆட்கள் என்றாலே இப்படி இனி வேறு வகையறா ஆட்களோடு சம்மந்தம் என்றால், இவர்களையும் சேர்த்து ஒதுக்கி விடுவர்.

மனம் விரைவாக எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்தது.

அவனின் முகம் அதீத அதிர்ச்சியைக் காட்டியது நன்கு ராஜாராமிற்கு புரிந்தது.

அவனின் முகம் காட்டிய பாவனையில் எப்படியாவது இந்த திருமணத்தை நடத்தி விட வேண்டும் என்ற உந்துதலில், “எவ்வளவு பணம்னாலும் தர்றேன், நீ திரும்பக் கூட கொடுக்க வேண்டாம், ரஞ்சனியை பத்மநாபனுக்கு கல்யாணம் செய்து கொடுத்தா போதும்” என்ற வார்த்தையை விட,

ஒரு நிமிடம் நின்று துடித்தது ஈஸ்வரின் இதயம், “என் தங்கையை ஒருவர் பணத்தைக் கொண்டு பேசுவதா?”. அதிர்ச்சியில் இருந்து கோபத்திற்கு அவனின் முகம் அப்படியே மாறியது.

“என் தங்கையின் பிறப்பென்ன. இவர் யார் அம்மா என்று கூட சொல்ல முடியாமல், பணம் இருந்தால் எல்லா மரியாதையும் தானாக வந்து விடும் என்பது போல சொத்துக்களை பெண்ணின் பெயரில் வைத்து, என் பெண் என்று வீட்டில் வைத்திருக்கும் வர்ஷினியைப் போல நினைத்து விட்டாரா” என்ற எண்ணம் ஆங்காரமாக மனதில் ஓங்கியது.

சில நொடிகள் இங்கிருந்தால் கூட மிகவும் கீழிறங்கி பேசும் அபாயம் இருப்பதை உணர்ந்தவன் கோபத்தையெல்லாம் கண்களில் தேக்கி அவரைப் பார்த்தான், பேச துடித்த மனதை அடக்கி வெளியே வந்தான்.

முரளி ஹாலில் இருந்தவன் இவன் வெளியே வந்ததும் அருகில் வர,

“இதுக்கு தாண்டா ஆளுங்களைப் பார்த்து பழகணும்னு சொல்றது! புத்தியைக் காமிச்சிட்டீங்க இல்லை” என்று சொன்னவனின் முகம் கோபத்தில் இருந்து மாறி, “சே! என்னால் இப்படி நடந்து விட்டதே” என்ற பாவனையைக் காட்டியது.

“என்னடா? என்ன விஷயம்?” என்றான் முரளி பதை பதைத்து புரியாதவனாக

“பழகிட்டேன்னு விட்டுட்டுப் போறேன்! இதே வேற எவனாவது இருந்தான் நடக்கறதே வேற!” என்றவனின் கண்களில் அவ்வளவு சீற்றம். குரல் சற்று சத்தமாகவும் ஒலிக்க வீட்டின் மற்ற உறுப்பினர்கள் அங்கே வர ஆரம்பித்தனர். கமலம்மா, தாத்தா, வர்ஷினி, ஷாலினி.

பத்மநாபன் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தவன் அப்பா கேட்டுவிட்டார் போல என்றுணர்ந்தான். பெண் கேட்டார் அதற்கு எதற்கு இவன் இவ்வளவு பெரிய வார்த்தைகளைப் பேசுகிறான் என்று கோபம் தான் வந்தது பத்மநாபனுக்கு. இந்த அப்பா சொன்னாலும் ஏன் கேட்கவில்லை என்று எரிச்சலாக வந்தது.

வார்த்தைகளின் சாராம்சம் பத்மனாபனுக்கு புரியவில்லை.

“எதுக்குடா இவ்வளவு கோபம்” என்று முரளி பதைக்க,

ஈஸ்வர் பார்வை வட்டத்தில் நின்ற பத்மநாபனை முறைத்தான்.

“அப்பாக்கிட்ட கேட்க வேண்டாம் சொன்னேன்” என்று பத்மநாபன் இதற்கு எதற்கு இவ்வளவு கோபம் என்ற பாணியில் பேச,

முரளி “என்னடா? என்ன பேசற? எனக்கு புரியல்லை!” என்று இன்னும் பதை பதைத்தான்,

சுற்றிலும் பார்த்தான், அப்போதுதான் வர்ஷினியும் அங்கே நிற்பது தெரிய,

“இங்கே வா” என்றான் அவளைப் பார்த்து,

எதற்கு என்று புரியாத போதும் வர்ஷினி சற்றும் தயங்கவில்லை, அருகில் வந்தாள்.

பத்மநாபனிடம் ஈஸ்வர் பேசவில்லை,

“நான் உங்களுக்கு பணம் கொடுக்கறேன், நீங்க எனக்கு திருப்பிக் கொடுக்க வேண்டாம்! இவளைக் கல்யாணம் பண்ணிக்குடுங்கன்னா அதுக்கு என்ன அர்த்தம்டா?”

முரளி “என்ன பேசுகிறான்?” என்று அதிர்ந்து பார்த்தான், வர்ஷினியை இவன் கேட்கிறானா என்று சில நொடி புரியவில்லை.

வர்ஷினியும் இவன் என்னை திருமணம் செய்ய கேட்கிறானா என்று புரியாத பாவனையில் விழித்தாள். என்ன விஷயம், எதற்கு என்று புரியாத போது இவன் ஏதோ சொல்லிக் காட்டுவதற்காக தன்னை இழுத்திருக்கிறான் என்று மனது சொன்ன போதும், ஒரு சிறு சலனம் அந்தப் பெண்ணின் மனதில், பார்த்த நாளில் அவனை வியந்து ஆர்வமாகப் பார்த்தவள் தானே! அதன் பிறகு எப்படியோ?

வர்ஷினியை குறித்து யாரும் அறியாமல் மனதில் பல தவறுகளை ஈஸ்வர் தெரிந்து செய்த போதும், அப்பொழுது தெரியாமல் நிச்சலனமான அந்த சிறு பெண்ணின் மனதில் ஒரு கல்லெறிந்தான்.

“பொண்ணு கேட்கறது தப்பில்லை. ஆனா குடுக்கறதும் குடுக்காததும் எங்க விருப்பம், நான் பணம் கொடுக்கறேன். நீங்க திரும்ப குடுக்கவேண்டாம், பொண்ணைக் கல்யாணம் செய்து கொடுங்கன்னா எங்க பொண்ணை என்ன நாங்க விக்கறோமா?” என்று கேட்டு விட,

“ரஞ்சனியையா?” அப்படியே வாய் மேல் கைவைத்து முரளி பின் நகர்ந்தான். “அச்சோ!” என்று மனம் பதைக்க அனைவருமே நின்றனர். ராஜாரமிற்கு இதில் இப்படி ஒரு அர்த்தமா என்று செய்வதறியாது அவரும் பார்த்து நின்றார்.

கமலம்மாவிற்கு ஒன்றும் புரியவில்லை.

ரஞ்சனியை முன்னிட்டு தன்னை உவமைக்கு இழுத்திருக்கிறான் என்பது புரிய, இப்படி ஒரு அர்த்தத்தில் அப்பா

பேசியிருக்க மாட்டார் என்ற நம்பிக்கையில், “ஏன் இப்படிப் பேசறீங்க?” என்று வர்ஷினி வாய் விட்டே கேட்டுவிட்டாள்.

பதிலுக்கு ஈஸ்வர் அவளைப் பார்த்த பார்வை அங்கிருந்த எவருக்கும் என்றும் புரியாது. அதன் பரிமாணம், “உன்னைப் பார்த்த நாளாக அலைபாயும் என் மனதை அடக்க முயன்று தோற்றாலும், அதனை வெல்ல நான் பிரயர்த்தனப்பட்டுக் கொண்டிருக்க, உன் வீட்டினர் பேசி விட்ட பேச்சு, இனி என்னை நான் அடக்க முயல மாட்டேன்” என்றது.

“உனக்காக நான் உன் தந்தையிடம் பேச அவர் என்ன கேட்டிருக்கிறார்” என்று குற்றம் சாட்டியது.

சில நொடிகள் என்ன செய்வது என்று தெரியாத முரளி, வேகமாக ஈஸ்வரின் கைப் பற்றியவன், “உன்னைத் தெரிஞ்ச நாளா எனக்கு ரஞ்சனியைத் தெரியும்டா! எனக்கும் அவ ஒரு தங்கை தான், ஒரு நொடி கூட அது மாறினது இல்லை”

“அப்பா! ஏதோ பேசப் போய் ஏதோ தப்பா பேசிட்டார்ன்னு நினைக்கிறேன், ப்ளீஸ் நீ தப்பா எடுக்காத, அப்பா நீ சொல்ற மீனிங்ல பேசியிருக்க மாட்டார். எங்களுக்கு எப்பவுமே உங்க வீட்டைப் பார்த்து பிரமிப்பு தான். அது பணத்துனால இல்லை! உங்க பழக்க வழக்கம், உங்க எல்லாமுமே!”

“அந்த மாதிரி வீட்ல இருந்து பொண்ணு எடுக்குற ஆர்வத்துல ஏதாவது வார்த்தை தெரியாம தப்பாப் போட்டிருப்பார்! ப்ளீஸ்!” என்று கை பிடித்து நின்றான்.

“விடுடா” என்று கையைப் பிடிங்கியவன், “அவர் பேசின வார்த்தைகளைக் கேளு! அவரோட ஆர்வம் அதுவா கூட இருக்கலாம்! ஆனா சொன்ன வார்த்தைக்கு அதைத் தவிர வேற அர்த்தம் கிடையாது!”

“என்னால பணம் ஏற்பாடு செய்ய முடியாதுன்னு நினைச்சியா! கண்டிப்பா முடியும்! ஆனா எப்படி யோசிச்சாலும் முதல்ல என் ஞாபகத்துல நீதானேடா வந்த... எனக்கு வேற யோசனை ஓடவேயில்லை. ஆனா நிச்சயம் நான் இதை எதிர்பார்க்கலை” என்ற ஈஸ்வரின் குரலில் அவ்வளவு வருத்தம் வெளியே சென்று விட்டான்.

அப்பாவிடம் வேண்டாம் என்று சொன்னாலும், மனதின் ஓரம் ஒரு எதிர்பார்ப்பு, இது நடக்க வேண்டும் என்பது போல,

இப்படியாகும் என்று பத்மநாபன் எதிர்பார்க்கவேயில்லை. இனி இது நடக்கவே நடக்காது என்று தோன்ற அப்படியே அமர்ந்து விட்டான்.

அதுவரையிலும் வர்ஷினி என்ன பார்வை ஈஸ்வரினது என்ற ஆராய்ச்சியில் தான் இருந்தாள். “என்னை எதற்கு அழைக்க வேண்டும்! என்னை வைத்து ஏன் பேச வேண்டும்! சில நொடிகள் என்றாலும் என்ன பார்வை அது?” மனதை ஒரு பயம் கவ்வியது. ஏன் என்று தெரியவில்லை.

“என்கிட்டே சொல்லாம ஏன்பா பேசினீங்க?” என்றான் முரளி.

“இப்படி தப்பாகும்னு நான் நினைக்கலை” என்றார். அவருக்கும் வருத்தமே! அதில் இப்படி ஒரு அர்த்தம் வரும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

“யார் கிட்ட என்ன பேசறோம்னு யோசிச்சுப் பேச வேணாமா” என்றார் ராஜாராமின் தந்தை.

அப்போதும் ராஜாராம் பார்த்தது பத்மநாபனின் முகத்தை தான். அதை கவனித்த முரளி “நீ இஷ்டப்பட்டியா?” என்றான்.

பத்மநாபன் எதுவுமே பதில் பேசவில்லை...

அவனருகில் வந்த முரளி “சொல்லு” என்று அதட்ட,

அந்த அதட்டலில் தான் வர்ஷினி சுற்றுபுறம் கவனிக்க ஆரம்பித்தாள்.

“உனக்கு ரஞ்சனியைப் பிடிச்சதா கல்யாணம் பண்ண இஷ்டப்பட்டியா?” என்று கோபமாக கேட்க,

“தெரியாது” என்றான்.

முரளி கேட்ட விதத்தில் அவன் மனைவி ஷாலினி பயந்து போனாள். ராஜாரமிற்கு உடல் நிலை சரியில்லாத போது, திருமணமாகி இரண்டு நாட்களிலும் பிறந்த வீட்டிற்கு அனுப்பினான் முரளி, அவள் வந்த நேரம் என்று யாரும் ஒரு வார்த்தை சொல்லிவிடக் கூடாது என்பதற்காக, அவர் ஹாஸ்பிடலில் இருந்து வந்த பிறகு தான் அழைத்து வந்தான். இந்த நான்கைந்து நாட்களாக தான் ஷாலினி வீட்டில் பழக ஆரம்பித்து இருந்தாள்.

இப்படி எந்த சத்தங்களும் இல்லாத வீட்டில் இருந்து வந்தவள். பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

வர்ஷினி என்ன நடக்கிறது என்ன பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்று கவனிக்க ஆரம்பித்தாள். "என்ன ரஞ்சனி அக்காவை பத்து அண்ணா இஷ்டப்பட்டாங்களா?" என்பது போல கவனித்துப் பார்க்க,

"சொல்லுடா?"

"நிஜமா தெரியாது! நான் அப்பாகிட்ட கல்யாணத்துக்குப் பேசவேண்டாம் அவங்க பொண்ணு குடுக்க மாட்டாங்கன்னு தான் சொன்னேன்"

"என்னடா பேசற நீ? இஷ்டப்படலைன்னா இப்படி ஒரு பேச்சு ஏன் வரணும்? அப்படியே பொண்ணு கேட்டாலும் அதை நிர்பந்திக்கிற மாதிரி அப்பா ஏன் பணத்தை நடுவுல கொண்டு வரணும். அதனால இப்ப அவன் தப்பா புரிஞ்சிகிட்டான்"

"நாம அப்படி இல்லைன்னு சொல்லிப் புரியவைக்கலாம்" என்று தாத்தா சொல்ல,

"அப்படி எல்லாம் அவனுக்குப் புரிய வைக்க முடியாது தாத்தா! அவனாப் புரிஞ்சா தான் உண்டு. ஒரு வார்த்தை என்கிட்டே சொல்லியிருக்க வேண்டாமா! அப்படியே பொண்ணு கேட்கறதுன்னாலும் நான் பக்குவமா கேட்டிருப்பேன் அவன் மூட் பார்த்து, அது நடக்குமா நடக்காதன்னு தெரிஞ்சிருக்கும்! அதுக்கு பிறகு வீட்ல இருந்து முறையா பேசியிருக்கலாம். அதைவிட்டு என்ன பண்ணியிருக்கீங்க நீங்க?" என்று கத்தினான்.

முரளி இப்படிக் கோபப்பட்டு கத்தி பார்ப்பது அபூர்வம், எல்லோருமே ஏதோ தப்பு செய்து விட்டது போன்ற ஒரு மன உளைச்சலுக்கு ஆளாகினர்.

ஈஸ்வர் போன்ற ஒருவனிடம் நிஜத்திலும் பேசின வார்த்தைகள் தவறு தான்.

வர்ஷினிக்கு ஏதோ ரஞ்சனி அக்காவை திருமணதிற்கு பேசின விஷயம் வார்த்தைகள் தப்பாகி விட்டது என்று மட்டும் புரிந்தது. வேறு சாராம்சம் புரியவில்லை. ஈஸ்வர் வீட்டினரின் பணத் தேவைகள் புரியவில்லை.

யாரிடம் கேட்பாள், பத்துவை பார்த்தால் அவன் அமர்ந்திருந்த தோற்றம் அவளை நெருங்க விடவில்லை, முரளியை பார்த்தால் அவன் அவ்வளவு கோபமாக இருந்தான். கமலம்மாவும் தாத்தாவுமே ஒரு புரியாத பாவனையில் நின்றனர். ஷாலினி அண்ணி எல்லோரையும் பயந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்பா, அவரின் முகம் தீவிர யோசனையில் இருந்தது. ஆம்! அவரின் யோசனை ஈஸ்வரின் வருத்தம் பற்றி எல்லாம் இல்லை. ஏதோ தவறாக அர்த்தம் வந்துவிட்டது, அதைப் போக்க என்ன செய்ய? எப்படி இந்த திருமணத்தை நடத்த என்று தான்.

இவர்களின் யோசனைகள் எல்லாம் இப்படி இருக்க, ஈஸ்வரின் மனதில் இந்த திருமண விஷயமே இல்லை. எல்லாம் பின்னுக்கு சென்றிருந்தன. அஸ்வின் தன்னுடைய வேலையைக் காட்ட ஆரம்பித்து இருந்தான்.

அன்று மாலை ஒரு புகழ் பெற்ற செய்தி சேனலில் ஈஸ்வர் ஃபைனான்ஸ் லிமிடட் கடும் நிதி சிக்கலில் மாட்டி இருப்பதாக செய்தி படிக்கப் பட, அது ஸ்க்ரோலிலும் ஓட, அங்கே முதலீடு செய்தவர்களினிடத்தில் தீப்போல பரவ ஆரம்பித்து இருந்தது.

*பட்ட காலிலேயே படும். கெட்ட குடியே கெடும்!!!*

## அத்தியாயம் பதினைந்து :

**தடைகள் நிற்பதற்கு அல்ல! தாண்டுவதற்கு!**

அப்பா தான் முதலில் ஈஸ்வரை அழைத்து விஷயத்தைச் சொன்னார், கேட்டவனுக்கு நன்கு புரிந்தது இது அஸ்வினின் வேலை என்று.

ஆனால் யாருடைய வேலை என்றெல்லாம் இனி யோசிக்க நேரமில்லை. ஏதாவது செய்தாக வேண்டும், அப்படியெல்லாம் இல்லை என்று சொல்லியாக வேண்டும்.

அலுவலகத்திற்கு விரைந்தான். ஆபிசிலிருந்து எல்லோரும் கிளம்பும் நேரம், இந்த செய்தி கேள்விப்பட்டு ஆளாளுக்குப் பேசிக் கொண்டிருக்க,

அப்பாவும் ஜகனும் அங்கு தான் இருந்தனர்.

பீ ஏ விடம் “ஒரு பிரஸ் மீட் ஏற்பாடு செய்ங்க. அப்படியெல்லாம் எதுவுமில்லைன்னு சொல்லணும். முக்கியமா எந்த சேனல்ல இந்த நியூஸ் வந்ததோ அவங்களைக் கண்டிப்பா கூப்பிடுங்க” என்றான்.

“ஜகன் நீ எல்லா பிரான்ச் மனேஜர்ஸ்க்கும் கூப்பிட்டு அப்படி எல்லாம் எதுவுமில்லை, ஒரு ப்ரெஸ் மீட் ஏற்பாடு செஞ்சு இப்போ சொல்ல போறோம் யார் வந்தாலும் தைரியமா பதில் சொல்ல சொல்லு, பயம் வேண்டாம் சொல்லு!”

பிறகு அங்கிருந்த ஊழியர்களிடம் “ஜகன் சர் போன் பண்ணி சொல்லுவார், ஆனா எல்லாருக்கும் சொல்ல நேரம் ஆகும். நீங்க ஒரு நாலு பேர் சொல்லுங்க”

“இன்னும் ரெண்டு பேர் எல்லோருக்கும் மெயில் பண்ணுங்க, இன்னும் ரெண்டு பேர் பேக்ஸ் பண்ணுங்க எப்படியாவது தொடர்புல சொல்லுங்க”.

“அப்பா! தெரிஞ்சவங்க யார் போன் பண்ணினாலும் அப்படியெல்லாம் எதுவும் இல்லை! இது யாரோ வேண்டாதவங்க செஞ்ச வேலைன்னு சொல்லுங்க” என்று விரைவாக எல்லோருக்கும் ஆணைகள் பிறப்பித்தான்.

பீ ஏ விடம் “பிரஸ் ஆளுங்க வர்றவங்களை ரொம்ப நல்லா கவனிக்கணும்! அவங்களுக்கு டின்னர் அரேஞ் பண்ணுங்க, டின்னர் அருமையா இருக்கணும். கவனிப்புல யாருக்கும் ஒரு குறையும் வைக்க கூடாது”.

இத்தனையும் அவன் சொல்லும் போதே ஆஃபிஸின் ஒரு கண்ணாடி உடையும் சத்தம்!!!!

அவன் சொல்லச் சொல்ல வேலைகளை செய்ய முயன்று கொண்டிருந்த எல்லோரும் பயத்தோடு அப்படியே நின்றனர்.

ஈஸ்வரின் உள் மனது நிச்சயமாக சொன்னது, மக்கள் யாரும் இவ்வளவு விரைவாக செயல்பட்டுக் கல் எரிய மாட்டர். இதுவும் அஸ்வினின் வேலை தான் என்று.

“யாருக்கும் எதுவும் ஆகாது பயம் வேண்டாம்” என்றான்.

பின்பு வெளியே வந்து பார்த்தான். பத்து பேருக்கும் மேல் கலாட்டா செய்ய ஆயத்தமாக இருந்தனர். இரண்டு செக்யுரிட்டிக்கள் இருந்த இடத்தில் இருந்து கத்திக் கொண்டு

இருந்தனர். பைனான்ஸ் ஆஃபிஸ் என்பதால் அவர்களிடம் துப்பாக்கி இருந்தது.

“தூரப் போங்க! ஏதாவது கலாட்டா செய்தா சுட்டுடுவோம்” என்பது போல

அவனின் அப்பா அப்படியே ஸ்தம்பித்து நிற்க, “அப்பா! ஒன்னும் ஆகாது! பயப்படாதீங்க நான் சொன்ன வேலையைச் செய்ங்க” என்றான்.

“ஜகன்! நீ எல்லா பிரான்ச்க்கும் சொல்லு. எதையும் நிறுத்தாதீங்க! நான் பார்க்கிறேன்”

பீ ஏ அதற்குள் ஃபோன் எடுத்து அருகில் இருந்த காவல் நிலையத்திற்கு அழைத்து சொல்லிக் கொண்டு இருந்தார்.

ஈஸ்வரும் நேரடியாக சென்னை கமிஷனர்க்கு அழைத்து விஷயத்தைச் சொன்னான். அவரும் உடனே அந்த ஏரியாவின் சர்கிள் இன்ஸ்பெக்டரை இடத்திற்கு அனுப்புவதாக சொன்னார்.

செக்யிரிடியிடம் இன்டர்க்காமில் அழைத்து “சும்மா மிரட்ட மட்டும் செய்ங்க, நீங்க யாரையும் தாக்காதீங்க” என்று சொல்லி உடனே சுரேஷிற்கு அழைத்து, “ஆளுங்களை கூட்டிட்டு இங்க உடனே வா” என்றான்.

பம்பரமாய் சுழன்றான். இப்படி சூழ்நிலைகளை பயமில்லாமல் விவேகமாய் எதிர்கொள்ளும் திறமை மிகச் சிலருக்கே வரும். அது இயல்பாய் ஈஸ்வரிடம் இருந்தது. எல்லோர் முகத்திலும் பதட்டமும் பயமும் இருக்க அவன் முகத்தில் அது கடுகளவும் இல்லை.

ஈஸ்வர் முகத்தில் தெரிந்த தைரியம் எல்லோரையும் பயத்தை விட்டு அவரவர் வேலையை பார்க்க வைத்தது.

அங்கிருந்த மூன்று பெண் ஊழியர்களை பார்த்து “வீட்டுக்குப் ஃபோன் செஞ்சு சொல்லுங்க! உங்களை வீட்டுக்குப் பத்திரமா அனுப்பறது என்னோட பொறுப்பு, யாரும் பயந்து உங்களை தேடி இங்க வர வேண்டாம்” என்று.

சிறு சிறு விஷயத்தையும் கவனத்தில் எடுத்தான்.

எல்லாம் முடித்து தான் ரூபாவிற்கு அழைத்தான், “வீட்ல நியூஸ் பார்த்து யாரும் பயப்பட வேண்டாம்! எல்லோரும் பத்திரமா

இருக்கோம்! வீட்டுக்கு வர நேரம் ஆகும்! எல்லோரும் வீட்ல தானே இருக்கீங்க!”

“ரஞ்சனி வெளில போனா! அவ தான் இன்னும் வீட்டுக்கு வரலை...” நேரம் அப்போது ஏழு,

“எங்கே போனா?”

“ஹாஸ்பிடல் போறேன்னு சொன்னா, பேர் எதுவும் சொல்லலையே”

“வந்துடுவா! எதுக்கும் நான் அவளுக்கு ஃபோன் பண்றேன்! நீங்களும் வந்தா உடனே என்னோட அவளை பேச வைங்க” என்றவன் ரஞ்சனிக்கு அழைக்க அவளின் போன் நாட் ரீச்சபிள் என்றது.

இவ்வளவு நேரமாக வராத பயம் மனதில் வந்தது. வெளியே போய் எங்கே என்றும் பார்க்க முடியாது. அவன் அந்த இடத்தை விட்டு செல்ல முடியாது.

அது நேரம் வரையிலும் பிரச்சனைகள் அணிவகுத்து நின்ற போது கூட அவன் கடவுளை அழைக்கவில்லை, தங்கை தொடர்பில் இல்லை என்றதும் கடவுளை அழைத்தான்.

ஐஸ்வர்யாவிற்கு அழைத்தான், அவளுக்கு இன்னம் விஷயம் தெரியவில்லை.... அவள் ரூமின் உள் படித்துக் கொண்டு இருந்தாள், வீட்டிலும் ஹாலில் சீரியல் மட்டுமே ஓடிக் கொண்டு இருந்தது. அஸ்வினும் பிரகாசமும் வீட்டிலேயே இல்லை. அதனால் அவளுக்கு எதுவும் தெரியவில்லை .

இவன் ஃபோன் என்றதும் பரபரப்பாக எடுத்தவள், “ஹல்லோ” என்க,

“ரஞ்சனி எங்கே போயிருக்கா” என்றான் எடுத்தவுடனே.

“எனக்குத் தெரியாது! என்கிட்டே எதுவும் சொல்லலை!

“ஏதோ ஹாஸ்பிடல் சொன்னாலாமே ரூபா கிட்ட! எந்த ஹாஸ்பிடல் போக வாய்ப்பிருக்கு”

“எனக்கு எந்த ஐடியாவும் இல்லை! ஏன்? என்ன அச்சு? ஏன் இவ்வளவு டென்ஷனா இருக்கீங்க?” என்று அவள் கேட்க,

“என்ன தான் செஞ்சிட்டு இருக்க நீ? உன்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னாவது தெரியுமா, இந்த பிரச்சனை முடியட்டும் அப்புறம் இருக்குடி உங்கப்பனுக்கும் உங்கண்ணனுக்கும்”

என்ன பேசுகிறான் என்று புரியாத போதும் மீண்டும் ஏதோ பிரச்சனை என்று புரிந்தது. மனதில் கவலைகள் மீண்டும் அழுத்த துவங்கின.

“ரஞ்சனி ஃபோன் நாட் ரீச்சபிள்! அவ ஃபிரண்ட்ஸ் யாரையும் எனக்கு கால் பண்ணி பேசற அளவுக்குத் தெரியாது! உன்னைத் தான் தெரியும்! யார் கிட்டயாவது கேளு! கேட்டு சொல்லு!” என்று அதட்டிக் கத்தி வைத்தான்.

“தங்கைக்காகப் பேசுகிறான்! நானும் காணாமல் போனாலாவது என்னை தேடுவானா?” மனம் வெகுவாக ஈஸ்வரின் அக்கறைக்காக காதலுக்காக ஏங்கியது.

அப்பாவும் அஸ்வினும் என்ன செய்திருக்கிறார்கள்! அவளின் தைரியமே ஈஸ்வர் தானே! இந்த அஸ்வின் செய்த வேலையால் அவன் என்னை விட்டு விலகி விடுவானோ! கடவுளே எந்த பிரச்சனையும் ஈஸ்வருக்கு வராமல் பார்த்துக் கொள்! இந்த பிரச்சனைகளை சரி செய்து விடு” என்று வேண்டியது.

அப்பாவும் அஸ்வினும் செய்ததற்கு இவளுக்கு ஏதோ ஒரு குற்ற உணர்ச்சி, முன்பு போல அக்காவிடமோ ரஞ்சனியிடமோ பேச முடியவில்லை. ஒரு வார்த்தை ஈஸ்வர் ஆறுதல் சொல்லியிருந்தாலோ இல்லை சகஜமாக பேசியிருந்தாலோ இவள் இயல்பு நிலை வந்திருப்பாள்! அவன் பேசுவதே இல்லை!

முதலில் ரஞ்சனியை அழைக்க, அவளுக்கு சுவிச் ஆஃப் என்று வர, மற்ற நெருங்கிய தோழிகளுக்கு அழைக்க ஆரம்பித்தாள்.

இங்கே ஈஸ்வருக்கு மெதுவாக பதட்டம் ஏற ஆரம்பித்தது. தலையில் கை வைத்து ஐயோ என்று அமர்ந்த சமயம், அவன் தோளில் ஒரு கை விழ, நிமிர்ந்து யார் என்பது போல பார்த்தான்...

முரளி!!!

அவனைப் பார்த்தும் மனதில் ஒரு ஆசுவாசம் எழுந்தது மறைக்க முடியாத உண்மை! ஆனாலும் தோளில் இருந்த கையை எடுத்து விட முற்பட,

இன்னும் தோளை அழுத்தமாக பற்றியவன், “எதுன்னாலும் அப்புறம் சண்டை போடு! திட்டு! அடி! என்ன வேணா செய், இப்போ போகச் சொல்லாதே, பிரச்னையை மட்டும் பாரு, மீறிப் போக சொன்னாலும் நான் போக மாட்டேன்!” என்றான் குரலிலும் அழுத்தத்தைக் காட்டி.

ஈஸ்வர் திரும்பத் தலையைப் பிடிக்க, “சொல்லு! என்ன செய்யணும் சொல்லு, என்னோட தாஸ் வந்திருக்கான்! வெளில இப்ப எந்த பிரச்சனையும் இல்லை”

“ஷாலினியோட அப்பா கமிஷனருக்கு ரொம்ப க்ளோஸ், இங்க வந்து பார்த்ததுமே நான் அவரை விட்டு பேசச் சொன்னேன்! இன்னேரம் பேசியிருப்பார்!” என்றான்.

இது எதற்குமே பேசவில்லை ஈஸ்வர்.

“இன்னும் என்ன சொல்லு? ஏன் இப்படி இருக்க? இதெல்லாம் ஒன்னுமில்லை! பார்த்துக்கலாம்!” என்று முரளி சொல்ல.

“ரஞ்சனி எங்க இருக்கான்னு தெரியலை” என்றான்.

“என்னடா? என்ன சொல்ற?” என்று முரளி அதிர,

“ஹாஸ்பிடல் போறேன்னு சொல்லிட்டுப் போயிருக்கா! எந்த ஹாஸ்பிடல்ன்னு தெரியலை! ஃபோன் நாட் ரீச்சபிள்! இப்ப சுவிட்ச் ஆஃப்! பயமாயிருக்கு!” என்று சொல்லியே விட்டான். இந்த சென்னை சிட்டில எங்கே போய்த் தேடுவோம்” என்றான் கலக்கமாக.

“இந்த ப்ராப்ளம் இருக்குறதுனால உனக்கு பயம் கொடுக்குது. ஃபோன் சார்ஜ் இல்லாம சுவிட்ச் ஆஃப் ஆகியிருக்கும். அப்படி அவ பயந்த பொண்ணு கிடையாது, ஜாக்கிரதையா தான் இருப்பா, வந்துடுவா! நீ இங்க என்னவோ பாரு!” என்றான்.

ஈஸ்வருக்கு அந்த தருணத்தில் முரளியின் வார்த்தைகள் அவ்வளவு மன வலிமையைக் கொடுத்தது. நிமிர்ந்து அவனைப் பார்த்தான், எவ்வளவு கேவலமாக திட்டி வந்தேன் ஒன்றுமே சொல்லாதது போல வந்து நிற்கின்றான்.

இன்றைய சூழலில் அவர்கள் மேலே! நான் கீழே தான்! வரவேண்டும் என்ற அவசியமே இல்லை! வந்து நிற்கின்றான் என்று தோன்ற, அதனைக் கண்களிலும் பிரதிபலிக்க,

“உன்னை விட்டெலாம் நீயே துரத்தினாலும் போக மாட்டேன்! ரஞ்சனி வந்துடுவா! அவ வெளில போனா வீட்டுக்கு வர நேரம் ஆகிடுச்சா”

“சில சமயம் ஒன்பது மணி கூட ஆகும்!”

“அப்போ என்ன? இப்ப தானே மணி ஏழு, ஒன்னும் ஆகாது! எழுந்துரு!” என்று சொல்லும் போதே போலிஸ் இன்ஸ்பெக்டர் வர, அவரிடம் பேசினார்கள்.

அதற்குள் பிரஸ் ஆட்களும் வர ஆரம்பித்தனர்... அவர்களை கவனிக்க சென்றாலும் முகத்தில் ஒரு உற்சாகமின்மை! அது அவனை நன்கு அறிந்த அவனின் ஊழியர்களிடமும் ஒரு தொய்வைக் கொடுத்தது.

அந்த நேரம் ரூபா அவனை அழைத்தாள், விரைந்து உயிர்பிக்க, “ரஞ்சனி வந்துட்டா, ஃபோன் சார்ஜ் இல்லாம சுவிட்ச் ஆஃப் ஆகிடுச்சாம்! ஹாஸ்பிடல்ல இருந்து வந்தது, குளிக்கப் போயிருக்கா” என்று சொன்னதும் ஈஸ்வரின் மனநிலை அப்படியே மாறியது!

“தேங்க்ஸ் ரூப்ஸ்!” என்றவன், அதை வைத்து “ரஞ்சனி வந்துட்டா” என்றான் முரளியைப் பார்த்து சிறு புன்னகையுடன்.

அதுவே சொன்னது, இன்னம் எது வந்தாலும் ஈஸ்வர் எதிர் கொள்வான் என்று...

ஐஸ்வர்யாவிற்கு ரஞ்சனி வந்து விட்டாள் என்று ஒரு மெசேஜ் அனுப்பினான்.

“நீ அவங்களை கவனி, நான் இங்க இருக்கேன்! தாஸ் வெளில இருக்கான்! போலிஸ் இருக்கு! கூலா ஹேண்டில் செய்!”

“ம்ம்!” என்று தலையாட்டிய படி கான்பரன்ஸ் ஹால் செல்ல, இப்போது அவன் முகத்தில் இருந்த தெளிவு ஊழியர்களிடமும் பிரதிபலிக்க ஆரம்பித்தது.

“இது தவறாக யாராலோ தனிப்பட்ட விரோதம் காரணமாக பரப்பிவிடப்பட்ட செய்தி! இது உண்மையல்ல! எல்லோருக்கும் குறித்த நேரத்தில் கண்டிப்பாகப் பணம் திரும்பக் கொடுக்கப்படும்! யாரும் நம்பாமல் உடனே பணம் வேண்டும் மென்றாலும் வாங்கிக்

கொள்ளலாம்! ஆனால் அந்த ஷரத்தில் குறிபிட்டு இருந்த படி செலுத்தியப் பணத்தில் பாதி தான் வரும்" என்றான்.

திரும்பவும் விரிவாக சொன்னான் "சொன்ன தேதியில் பணம் வாங்கினால் இரட்டிப்பு பணம்! அதற்கு முன் வாங்கினால் செலுத்திய பணத்தில் பாதி என்பது தான் விதி முறை! அதில் எந்த மாற்றமும் இல்லை!"

"இதை நம்பாமல் யாராவது ஏதாவது அங்கங்குள்ள பிரான்ச்சில் கலாட்டா செய்தால், அதனால் நிறுவனத்திற்கு இழப்பு! அதனை முன்னிட்டு பணம் கொடுப்பதில் தாமதம் ஆகலாம்..."

"அதனால் அதிக நாட்கள் இல்லை! இன்னம் நாற்பது நாட்களே உள்ள நிலையில் யார் எந்த செய்தி பரப்பினாலும் நம்பாமல் அமைதியாக இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்றான்.

அதே சமயம் கூட மற்றுமொரு வார்த்தையும், பணத்திற்குத் தான் மட்டுமே முழு பொறுப்பு! அதனால் குழுமத்தில் உள்ள வேறு யார் இருந்தாலும் விலகினாலும் பயம் கொள்ளாமல் தன்னை மட்டுமே நம்புமாறு சொன்னவன்,

தன்னுடைய அலைபேசி எண்ணையும் கொடுத்தான். யாருக்கு எந்த சந்தேகங்கள் என்றாலும் தன்னைத் தொடர்பு கொள்ளுமாறு சொன்னான்.

ஏனென்றால் மனதின் ஒரு புறம் ஏதோ ஒன்று சொல்லியது ஜகன் விஷயத்தையும் அஸ்வின் இழுப்பான் அல்ல இந்த மாதிரி தவறான செய்தியைப் பரப்பக் கூடும். அதனை முன்னிட்டே அந்த வாக்கியங்களை சேர்த்துச் சொன்னான்.

பிறகு வந்திருந்த எல்லோரிடமும் இன்முகமான பேச்சு, சிலருடைய தோற்ற மற்றும் பேச்சு ஈர்ப்பு அவர்கள் சொல்வதை மறு பேச்சின்றி ஏற்றுக் கொள்ள வைக்கும். அப்படி ஒரு ஈர்ப்பு ஈஸ்வரிடம் இருந்தது.

பின்பு ஒரு அறுசுவை விருந்து, அதன் பின் அவர்களின் ஃபைனான்ஸ் சார்பாக வீ ஐ பீ களுக்கு கொடுக்கும் பரிசுப் பொருட்கள்!

அதன் பிறகு "ப்ளீஸ்! யாரவது இந்த மாதிரி எங்களைப் பத்தி, ஐ மீன் எங்க ஃபைனான்ஸ் செயல்பாடு பத்தி நியூஸ் கொடுத்தா ஒரு

வார்த்தை என்கிட்டே கேட்டுட்டு போடுங்க”,

“எங்க மேல இருக்குற காழ்புணர்ச்சினால பணம் கொடுத்துக்கூட செய்தி கொடுக்கலாம், ஆனா இது மக்கள் சம்பத்தப்பட்ட விஷயம்! சோ இந்த மாதிரி தவறான செய்தி பரவாம இருக்குறது, நம்ம தார்மீக கடமை. ஆனா அதையும் மீறி பண லாபம்ன்ற ஒரு விஷயம் நடுவுல நின்னா அதையும் நான் தரத் தயாரா இருக்கேன்”

“தயவு செய்து பணத்தால விஷயத்தை விலைக்கு வாங்கறோம்னு நினைக்க வேண்டாம்.. அப்படி ஒரு விஷயம் இடையில் வரும் போது தான் சொல்றேன், மற்றபடி எல்லா தொழில்லையும் எப்படியாவது பண லாபம் இருக்கும்! அப்படி எதுவும் அதிகம் இல்லாத தொழில்! நீங்க உங்க மன த்ருபத்திக்காக செய்யும் தொழில்! நான் அதை மதிக்கிறேன்!” என்றான்.

அவர்களும் பிறகு மாற்றி மாற்றிக் கேள்விகள் கேட்க எல்லாவற்றிற்கும் பொறுமையாக பதில் சொன்னான்.

ஓரளவு அவன் பேச்சில் எல்லோரும் கன்வின்ஸ் ஆனர். அடுத்த ஒரு மணிநேரத்தில் எல்லா சேனல்களில் மறுப்புச் செய்தி, அடுத்த நாள் காலை பேப்பர்களிலும் அப்படி எதுவும் இல்லை என்ற செய்தி வருமாறு பார்த்துக் கொண்டனர்.

இப்படியாக ஊழியர்கள் வீடு செல்லும் போது மணி பன்னிரண்டு! இவர்கள் வீடு கிளம்பும் போது மணி ஒன்று! அதுவரையிலும் முரளி அவனோடு தான் இருந்தான்.

முரளி அவனோடு இருந்தாலும் அவர்கள் இருவரும் எதுவும் பேசவில்லை. கிளம்பும் போது முரளி பேச முற்பட, “ப்ளீஸ்! எதுவும் பேசாதடா!” என்றான் ஈஸ்வர். பிறகு முரளி பேச முயற்சிக்கவில்லை.

ஆனால் இதை மட்டும் சொன்னான், “மீடியான்றதுனால உடனே தகவல் தெரிஞ்சு வந்துட்டேன்! எதுன்னாலும் கூப்பிடுடா! சொல்லாம விடாத!” என்றான்.

ஈஸ்வர் ஒரு தலையசைப்பை “சரி” என்பது போல கொடுக்கும் வரை அந்த இடத்தை விட்டு நகரவில்லை.

“நான் இன்னைக்கு நைட் இங்க இருக்கேன் சார்” என்று தாஸ் அவனின் ஆட்களுடன் அங்கேயே தங்கிக் கொண்டான். அதுவரையிலும் உடை பட்ட கண்ணாடியை மாற்றி இருந்தனர்.

“தேங்க்ஸ் தாஸ்” என்றான் மனமார்ந்து.

ஒரு வழியாக அப்போதைய பிரச்சனைகள் முடிந்து வீட்டிற்கு வந்தான். அந்த நேரத்திலும் பாட்டி குழந்தைகள் தவிர யாரும் உறங்கவில்லை. அம்மா, பெரியம்மா, ரூபா என்று அனைவரும் விழித்து தான் இருந்தனர்.

“ரஞ்சனி எங்கே?” என்றான் முதல் கேள்வியாக.

“தூங்கப் போயிட்டா” என்று அம்மா சொல்ல,

மனதில் ஒரு நெருடல்! இப்படி பிரச்சனைகள் ஓடும் போது எப்படி தூங்க செல்வாள் என்பது போல, அதை முகத்திலும் காட்ட

“இந்த விஷயம் கேள்விப்பட்டு தலைவலி சொன்னா, போய் படுன்னு நான் தான் அனுப்பினேன்” என்று அம்மா சொன்னார்.

“சரி, தூங்குங்க!” என்று எல்லோரிடமும் சொல்லி, மேலே சென்றான். ரஞ்சனியின் ரூமில் லைட் எரிவது தெரிந்தது. ரூம் கதவை தள்ளிப் பார்க்க அது திறந்து கொண்டது. உள்ளே சென்றான், ரஞ்சனி ஆழ்ந்த உறக்கத்தில், லைட் எரிந்து கொண்டிருந்தது ஏ சீ போடவில்லை, சரியாகப் போர்த்திக் கொள்ளவில்லை, முகமும் மிகவும் சோர்வாக தெரிந்தது.

லைட்டை அணைத்து, ஏ சீ போட்டு, போர்வையை நன்றாகப் போர்த்தி, சத்தம் செய்யாமல் கதவை மூடி வந்தான்.

ரஞ்சனி இவனைப் பார்க்கக் கூடாது என்று தூக்க மாத்திரைப் போட்டு தூக்கத்தை வரவழைத்துக் கொண்டு தூங்குகிறாள் என்று அவனுக்கு தெரியாதே!

எப்படி என் தங்கையை அவர்கள் அப்படிக் கேட்கலாம், பண கஷ்டம் என்ற உடனே அவர்களுக்கு எவ்வளவு தைரியம் என்ற எண்ணம் தான் திரும்பவும்.

“இதில் நீயேனடா வர்ஷினியை இழுத்தாய்!” என்று மனது ஒரு பக்கம் சாட, “அதோடு விட்டேன்” என்று சந்தோஷப்படு என்று இன்னொரு மனம் விளக்கம் கொடுக்க,

அவன் “இங்கே வா” என்று அழைத்ததும் யோசியாமல் வந்து நின்ற வர்ஷினியின் முகம் கண் முன்னே....

முரளி சொன்னது போல சமயம் பார்த்து கேட்டிருந்தால் கூட பெண் கொடுக்கிறானோ இல்லையோ யோசித்தாவது இருப்பான்.

முரளியை தெரிந்த நாளாக பத்மநாபனையும் தெரியும் தானே! அவனின் நல்ல குணங்கள் தெரியும் தானே! அவர்கள் கேட்ட விதம் எதையுமே சிந்திக்க விடவில்லை.

எப்போதும் எல்லாவற்றையும் ரஞ்சனியிடம் ஈஸியாக பகிர்ந்து கொள்வான். வீட்டில் எல்லோரையும் விட, அப்பா, அம்மாவை விட அவளிடம் ஒட்டுதல் அதிகம்.

இன்னும் இரண்டு நாட்களில் அந்தத் தங்கையோடு சண்டை இட போகிறான்! இனி உனக்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்று சொல்லப் போகிறான்! அவளோட பேசாமல் இருக்க போகிறான் என்று அவன் நினைத்தானா என்ன?

**ஒரு சில நிமிடங்கள்! நினையாத பிரிவு உறவுகளுக்குள்! பலர் நம்முள் இதை கடந்திருப்பர்! உறவுகள் அன்னியமாகி விடுகின்றனர்!**

## அத்தியாயம் பதினாறு :

**உன் முடிவுகளை நீ எடுக்கலாம்! அடுத்தவர் முடிவையும் நீ எடுக்கலாம்! அது அவர் விரும்பும் வரை மட்டுமே!**

அன்று இரவு உறங்கி எழுந்தவன், நேராக அப்பாவிடம் தான் வந்தான். “வேற யாரவது நமக்குப் பணம் கொடுப்பாங்களா அப்பா”

“ஏன்பா? முரளி அப்பாக்கிட்ட பேசறேன்னு சொன்ன! அவங்க குடுக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்களா” என்றார் அதிர்ச்சியாக.

“அப்படி எதுவும் இல்லைப்பா! அவங்க குடுக்கறேன்னு தான் சொல்றாங்க! ஆனா எனக்கு வாங்க இஷ்டமில்லை” என்றான் சலிப்பாக.

“ஏன்? ஏன் விஷ்வா?”

“பொண்ணு கேட்டாங்கப்பா! ரஞ்சனியை முரளி தம்பிக்கு” என்று விஷயத்தை சொன்னான்.

“என்ன?” என்று அதிர்ந்து விழித்தார். அவரும் இதை எதிர்பார்க்கவில்லை.

“என்ன திமிர்ப்பா அவனுங்களுக்கு? பணமே திரும்ப குடுக்காதீங்கன்னு சொல்றானுங்க! பொண்ணு குடுத்தா போதும்னு சொல்றாங்க! நம்ம பொண்ணு என்ன அவ்வளவு ஈசியா!” என்று கோபப்பட்டான்.

நமஷிவாயதிற்குமே முரளி வீட்டினர் அப்படி பேசியதில் கோபம் தான் வருத்தம் தான், ஆனாலும் அவர் வேறு சொன்னார். “அது அப்படியில்லை விஷ்வா! நம்ம பொண்ணு குடுக்க மாட்டோம்னு தெரியும், எப்படியாவது நம்மைப் பொண்ணு குடுக்க வைக்கணும்னு ஒரு ஆர்வத்துல சொல்லியிருப்பாங்க! கண்டிப்பா நம்மையோ நம்மப் பொண்ணையோ ஈசியா நினைச்சு இல்லை” என்று விளக்கம் கொடுத்தார்.

“எதுன்னாலும் அப்படிக் கேட்டது தப்பு...” என்று அவனின் பிடியிலேயே நின்றவன், “வேற யாரவது இருக்காங்களா”

“எனக்குத் தெரிஞ்சவங்க எல்லாரையும் உனக்கும் தெரியும்! எனக்கு யார் குடுப்பா இவ்வளவு பெரிய அமௌன்ட்ன்னு எனக்கு தெரியலை. அதையும் விட யார் கிட்டயும் பணம் குடுங்கன்னு என்னால போய் நிற்க முடியாது”

“இத்தனை வருஷமா என்ன பிசினெஸ் பண்ணுனீங்க” என்ற வார்த்தை வர துடித்ததை முயன்று அடக்கி வெளியே சென்றான்.

“யார்? யார்?” என்ற யோசனை மனதில் ஓட ஆரம்பித்தது.

அந்த யோசனை மட்டுமே மனதினில், வேறு ஞாபகமே இல்லை, காலையில் ஆஃபிஸ் விரைந்து விட்டான். எல்லா ப்ரான்சஸிற்கும் தகவல் சென்று விட்டதா என்று பார்க்க.

அவன் செல்லும் வரை அங்கே தாஸ் இருந்தான்.

“நன்றி தாஸ்” என்றான் மீண்டும்.

“அய்ய சாரு? எதுன்னாலும் கூப்பிடுங்க” என்று சொல்லி, “வீட்டுக்குப் போயிட்டுக் கொஞ்ச நேரம் கழிச்சு வர்றேன்” என்று சொல்லி சென்றான்.

தாஸ் இருந்ததினால் சுரேஷ் வெளியில் வரவில்லை, ஆனால் அவனும் அங்கு தான் இருந்தான்.

“நீங்க பாருங்க தல, எவனும் எந்த கலாட்டாவும் பண்ணாம நான் பார்த்துக்கறேன்” என்றான்.

உள்ளே விரைந்தவன் எல்லா பிரான்ச் ஆட்களுடன் தனித்தனியாக பேசினான். கிட்ட தட்ட இரண்டு மணி நேரம் அதே வேலை, அவனுள் தீயாக இந்த விஷயங்கள் கனன்று கொண்டிருந்தது. பணம் எப்படி சரி செய்வது என்றும் ஒரு பக்கம் ஓடியது, ஒரு பக்கம் சொத்துக்களின் மதிப்பு கணக்கிட ஆரம்பித்தான், ஒரு பக்கம் ஷேர்ஸ் ஸ்டாக் செக் செய்தான், அதன் மதிப்பைக் கணக்கிட்டான்.

அப்பா வந்தாரா? ஜகன் என்ன செய்தான்? எதுவும் பார்க்கவில்லை. எல்லாம் அவனின் பொறுப்பு, அவனின் கடன் என்பது போலத்தான் வேலை செய்து கொண்டிருந்தான்.

காலையில் ரஞ்சனியின் தொலைபேசி அடித்ததோ, அதில் வர்ஷினி அவளிடம் பேசியதோ, பத்து அண்ணா உங்கக் கிட்ட சாரி கேட்க சொன்னாங்க என்று சொன்னதோ, ரஞ்சனி எதற்கு என்று கேட்டதோ, வர்ஷினி தனக்குத் தெரிந்த மாதிரி விஷயத்தை சொன்னதோ, உங்க பத்து அண்ணா கிட்ட நான் பேசணுமே என்று ரஞ்சனி சொன்னதோ, எதற்கு என்று வர்ஷினி கேட்டதற்கு, பேசணும்னு மட்டும் சொல்லு, பேசறதும் பேசாததும் அவர் முடிவு பண்ணட்டும் என்று சொன்னதோ...

ஈஸ்வருக்கு தெரியவே தெரியாது!!!

ஒருவரிடம் பெரிய தொகை கேட்பது என்றால் கஷ்டம், அதை பகிர்ந்து கேட்கலாமா என்று ஈஸ்வரின் யோசனை ஓடும் போதே அவனின் தொலைபேசி அடித்தது.

நேற்று வந்த பத்திரிகை ஆட்களில் ஒருவர் அழைத்து “சர், இப்போ உங்க அண்ணன் கிரிகெட் பெட்டிங்ல இருந்திருக்கார்ன்னு செய்தி வந்திருக்கு” என்றார்.

எதிர்பார்த்திருந்தான், ஆனால் இவ்வளவு விரைந்து இல்லை. சமயம் கொடுக்காமல் இந்த அஸ்வின் அடிக்கிறான் என்று தோன்றியது, இப்படி ஒரு எதிராளியை வென்றால் தானே அது வெற்றி என்றும் தோன்றியது.

முகத்தில் ஒரு புன்முறுவல் கூட, “நீங்க என்ன சார் செய்யப் போறீங்க” என்றான்.

“நாங்க போடலை, யாரோ வேணும்னு செய்யற மாதிரி தான் தோணுது. ஏன்னா நேத்து தான் அப்படி புரளி கிளப்பினாங்க” என்றார்.

“எஸ் சர்! நீங்க சொல்றது உண்மை தான்! இது எங்களுக்கு எதிரா நடக்கற சதி! யாரோ புரளியைக் கிளப்பறாங்க” என்று அவரின் வார்த்தைகளையேத் திரும்ப படித்தான்.

“நாங்க போடலைன்னாக் கூட வேற யாராவது போடா வாய்ப்பிருக்கு”

“அது உண்மையில்லை சர், யாரவது போட்டாப் பார்த்துக்கலாம். நீங்க சொன்னதுக்கு ரொம்ப நன்றி” என்று சொல்லி, அவரிடம் நல்ல மாதிரி சில வார்த்தைகள் பேசி அவன் தொலைபேசியை வைத்த போது மனதின் ஓரத்தில் கவலைதான்.

இந்த ஜகன் மாட்டிக் கொள்வானோ, பணமும் போய் விட்டது! இதில் அவனும் மாட்டினான் என்றால், என்ன சொல்ல? ஏதாவது ஆதாரம் இருக்குமா என்று ஜகன் அவனுடன் பகிர்ந்த விவரங்களை வைத்து யோசிக்க ஆரம்பித்தான்.

பின்பு ஜகனுடன் பேச சென்றவன் எல்லாம் அலசி ஆராய்ந்தான். ஈஸ்வருக்கு தெரிந்த வரை மாட்டுவதற்கு வாய்ப்புகள் மிகவும் குறைவு.

அதன் பின்பும் தோன்றியது மாட்டினாலும் அதனால் பெரிதாக என்ன வந்துவிடும்! ஒன்றுமில்லை... நமது அமலாக்கப் பிரிவு விசாரித்து... ஆராய்ந்து... அறிக்கைச் சமர்ப்பித்தாலும்... கேஸ் நடக்கும் அல்லவா? பார்த்துக் கொள்ளலாம்! பயமில்லை! என்று நினைத்தான். அதையே ஜகனிடமும் சொல்லிக் கொடுத்தான்.

“எதுக்கும் பயப்படாத! யார் கேட்டாலும் இல்லைன்னு சொல்லு! அப்படியே மீறி எதுவும் வந்தா அஸ்வின் எனக்கு அப்போ ரொம்ப க்ளோஸ் என் மனைவியோட தம்பி, எவ்வளவு க்ளோஸ்னா என் பண விவகாரம் முழுவதும் அவன் தான் பார்த்துகிட்டான், சோ ஏதாவது நடந்து இருந்தா அது அவன் தான் செய்திருப்பான். நான் இல்லைன்னு சொல்லு! பயம் வேண்டாம்!”

“செஞ்சிட்ட! இனி அதுல இருந்து தப்பிக்கிற வழி பார்! பயம் வேண்டாம்!” என்று திரும்பத் திரும்ப தன் அண்ணனுக்குச் சொன்னான்.

“எதுவாகினும் நான் உன்னுடன் இருக்கின்றேன்” என்ற நம்பிக்கையை அண்ணனுள் விதைத்தான்.

“என்னால் எல்லாம் சரியாக்க முடியும்” என்று அவனுக்குள் அவனேயும் விதைத்துக் கொண்டான்.

பின்பு மீண்டும் அவர்களால் எவ்வளவு பணம் புரட்ட முடியும், வைக்க முடிந்த சொத்துக்கள், விற்க முடிந்த சொத்துக்கள், வீட்டில் பெண்களிடம் இருக்கும் நகைகளின் மதிப்பு வரை அத்தனையும் ஆராய்ந்தான்.

அன்று மாலை மீண்டும் முரளி அவனைப் பார்க்க வந்தவன், அவனின் அப்பா பேசியதற்கு மன்னிப்பு கேட்டு, அதற்கும் பணத்திற்கும் யாதொரு சம்மந்தமுமில்லை என்று கூறிப் பணத்தை கொடுக்கிறோம் வாங்கிக் கொள் என்று கூற,

முரளிக்காக “சரி, யோசித்துச் சொல்கிறேன்!” என்ற வார்த்தையைக் கூறினான், ஆனால் நிச்சயம் பணம் வாங்கும் எண்ணம் அவனிடம் சிறிதுமில்லை. எந்த நிலை வந்தாலும் பணம் வாங்குவது இல்லை என்ற அவனின் முடிவில் மிகவும் தெளிவாக இருந்தான்.

அவனுக்கு ஒரு விஷயம் புரியவில்லை! எல்லாவற்றையும் தூக்கி அவன் தலைமேல் அவனாகப் போட்டுக் கொள்ளலாம், ஆனால் உண்மையில் எல்லோரும் தானே பொறுப்பு.

எல்லோர் மனதிலும் கவலை இருக்கக்கூடும். எல்லோரும் பயத்திலும் இருக்கக்கூடும், கிடைக்கும் பணத்தை மறுத்து, வேறு எப்படி சமாளிக்கலாம் என்ற தைரியம் இவனுக்கு இருக்கலாம், ஆனால் எல்லோரும் அப்படியே இருப்பர் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.

“அவர்கள் உதவுவார்கள்! நாம் ஏன் வேண்டாம் என்று சொல்ல வேண்டும்! திரும்பக் கொடுத்துவிடலாம்! அதை விட்டு ஏன் இன்னும் எல்லாவற்றையும் சிக்கலாக்க வேண்டும்” என்ற எண்ணம் தான் மற்றவர்கள் மனதில் உதிக்கக் கூடும் என்று அனுமானிக்க வேண்டும்.

“நான்! என் சொல் மட்டுமே! என் செயல் மட்டுமே!” என்ற எண்ணம் ஆகாது. மகிழ்ச்சியில் இந்த எண்ணம் சரியாகக் கூட இருக்கலாம். கஷ்டத்தில் இந்த எண்ணம் எப்படி சரி வரும். சரி வராது என்பதை விட, அப்படி நாமும் நினைக்கக் கூடாது என்று

ஈஸ்வர் உணர்ந்திருக்க வேண்டும். ஏனென்றால் அது தான் மனித மனங்களின் இயல்பு.

ஆனால் அதில் தவறி விட்டான் ஈஸ்வர், தான் எது சொன்னாலும் தன் வீட்டினர் கேட்டுக் கொள்வர் என்று நினைத்தான், அவனின் எண்ணம் எல்லாம் தவிடு பொடியாகப் போவது தெரியாமல்.

இப்படி யோசனைகள் வேலைகள் என்று இருந்தவன் வீடு வரும் போது நேரம் இரவு பதினொன்றையும் கடந்து இருந்தது. ஜகன் அவனோடு தான் இருந்தான் “நீ எது செய்தாலும் சரி” என்பதுப் போல.

ஜகன் தனித்து நிற்ப்பது அரிது. அதனைக் கொண்டே முன்பு அஸ்வினை சார்ந்து இருந்தான். இப்போது ஈஸ்வரை!

அவர்கள் வீடு வந்த போது ரூபா மட்டுமே விழித்து இருந்தாள், ரஞ்சனியின் ஞாபகம் அப்போது தான் வந்தது. அவர்களுக்குச் சாப்பாடு எடுத்து வைக்க ரூபா முயல, “நான் சாப்பிட்டுக்கறேன், நீங்க சாப்பிடுங்க” என்று கணவன் மனைவிக்கு தனிமைக் கொடுத்து விலகி மாடி ஏறினான்.

இன்று ரஞ்சனியின் ரூம் கதவு தாளிடப்பட்டு இருந்தது. விளக்குகள் எரிவது போலவும் தெரியவில்லை. மெலிதாக தட்டினான், விழித்து இருந்தால் ரஞ்சனி வந்துத் திறக்கக் கூடும் என்று!

அது திறக்கவில்லை என்றதும் உறங்கிவிட்டாள் போல என்று நினைத்து தனது ரூம் சென்றவனுக்கு தன்னிடம் நேற்று மாலையில் இருந்து ரஞ்சனி பேசவில்லை என்று ஞாபகத்திற்கு வந்தது.

இத்தனை பிரச்சனைகள் தங்களை சுற்றி ஓடிக் கொண்டிருக்க, நான் டாக்டர்க்கு படிச்சாலும் பிசினெஸ் கூடப் பார்ப்பேன் என்று சொல்லிக் கொண்டு இருப்பவள், எப்படி இதைப் பற்றிய விஷயங்களை கேட்காமல் போனாள் என்று மனதிற்குள் நெருடியது.

இரண்டு நாட்களாக சரியாக உறங்காத தன்மை, சிறிது நேரமும் மூளைக்கு ஓய்வு கொடுக்காதது, ஓய்வுத் தேவை என்று கெஞ்ச, எதுவாகினும் நாளை பார்க்கலாம் என்று முடிவு எடுத்தான்.

நாளை இனி எதுவுமே நான் பார்க்க வேண்டாம் என்று முடிவெடுக்க போவது தெரியாமல்.

காலையில் எப்பொழுதும் போல எழுந்து வந்தவன், ரஞ்சனி என்ன செய்கிறாள் என்பது போல அவளின் அறையைப் பார்த்தான். அவள் இல்லை.

“எங்கேம்மா ரஞ்சனி?” என்று கேட்டுக் கொண்டே இறங்கினான்.

“பிரண்ட் யாருக்கோ கல்யாணமாம்! ஆறு மணிக்கேப் போயிட்டா” என்றார்.

அப்பொழுது நேரம் ஒன்பதை தாண்டி இருந்தது. “எப்போ வருவா? நான் ரெண்டு நாளா அவளைப் பார்க்கலை! பார்த்துட்டு தான் ஆபிஸ் போகணும்” என்றவன் ஜகனையும் தந்தையையும் பார்த்தான். இருவரும் தயாராகி இருந்தனர்.

“நீங்க போங்க! நான் ரஞ்சனியைப் பார்த்துட்டு வர்றேன்” என்று சொன்னவன், தொலைபேசியை எடுத்து அவளுக்கு அழைக்க, அது ஹாலில் ஒலித்தது.

“ஃபோன் எடுக்காம போயிருக்கா? என்னமா நீங்க? அதைக் கூடப் பார்க்கலையா” என்று சண்டையிட்டுக் கொண்டிருந்தான்.

“உன் தங்கச்சி என்ன சின்னப் பொண்ணா, நீ அம்மாவைத் திட்டுற? அவ எடுத்துட்டுப் போக வேண்டாமா” என்று சௌந்தரி பாட்டி பதில் பேச,

“ஆமாம்! பேச மட்டும் செய்ங்க! யாரும் எதையும் கவனிக்காதீங்க!” என்று சொல்லிக் கொண்டே ஐஸ்வர்யாவை அழைத்தான், தோழியின் திருமணம் என்றால் கண்டிப்பா ஐஸ்வர்யாவும் உடன் சென்றிருப்பாள் என்ற எண்ணத்தோடு,

அவள் எடுத்ததும் “எங்க இருக்கீங்க?”

“வீட்ல!”

“ரஞ்கிட்ட கொடு!”

“அவ இங்க வரலையே”

“கல்யாணத்துக்கு நீ போகலையா?”

“யாருக்குக் கல்யாணம்” என்று அந்தப் புறம் ஐஸ்வர்யாக் கேட்க,

“எந்தக் கல்யாணத்திற்கு சென்றிருக்கிறாள்” என்ற குழப்பத்தோடு வாயிலை பார்த்தவனின் கண்கள் அப்படியே நின்றது.

அங்கே திருமண கோலத்தில் பத்மநாபனும் ரஞ்சனியும்!!!

அவனின் கையில் இருந்த தொலைபேசி உடலின் தொய்வினால் பிடியில் இருந்து நழுவி, கீழே விழுந்து அதன் பாகங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் சிதறியது.

ரஞ்சனியும் ஈஸ்வரைத் தான் பார்த்து இருந்தாள். அவர்கள் இருவர் மட்டுமே இருந்தனர், கூட யாருமில்லை.

சௌந்தரி பாட்டியும் பார்த்தவர் “ரஞ்சனி” என்று அதிர்ந்து சத்தமாக பேர் சொல்ல,

உள்ளிருந்தவர்கள் என்னவோ ஏதோவென்று பதறி வந்தனர்.

அவர்களின் அம்மா அதைப் பார்த்ததும் “டீ.... ரஞ்சனி.... என்ன காரியம் செஞ்சிருக்க?” என்று கத்தினார்.

யாருக்கும் பத்மநாபனை தெரியவில்லை, எங்கோ பார்த்தது போல இருந்தாலும் சட்டென்று ஞாபகம் வரவில்லை. அங்கு அவனை நன்கு தெரிந்தது ஈஸ்வருக்கும் ரூபாவிற்கும் மட்டும் தான். ஹாஸ்பிடலில் பத்மநாபனை ரூபா பார்த்திருந்ததால் அவளின் ஞாபகத்தில் இருந்தது.

நமஷிவாயதிற்கு தன் மகள் இப்படி செய்தாளா? நம்பாமல் அப்படியே நின்றிருந்தார். ஈஸ்வரும் அப்படியே நிற்க, சித்தப்பாவும் அப்படியே நிற்க, ஜகனிற்கு தான் என்ன செய்ய வேண்டும் என்று புரியாமல் மனைவியைப் பார்த்தான்.

ரூபா தான் ரஞ்சனியை நோக்கி, “காதலிச்சீங்கன்னா ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே ரஞ்சனி, நமக்கு இவங்க என்ன தெரியாதவங்களா? ஏன் இப்படி பண்ணிட்ட?” என்றாள்.

காதல் மட்டுமே இந்த திருமணத்தின் அடிப்படையாக இருக்க முடியும் என்பது ரூபாவின் எண்ணம்.

“யாரு? யாரு இவங்க?” என்று பெரியம்மாவும் பாட்டியும் பதறிக் கேட்க, ஈஸ்வர் ஃபிரண்ட் முரளியோடத் தம்பி” என்று ரூபா சொல்லவும், எல்லோரும் இப்போது ஈஸ்வரைப் பார்த்தனர்.

நமஷிவாயமும் ரஞ்சனி பத்மநாபனை இஷ்டப்பட்டால் போல, அதனால் தான் அவர்கள் பெண் கேட்டிருக்கிறார்கள் என்று நினைத்தார்.

ஈஸ்வரின் பார்வை ரஞ்சனியை விட்டு அகலவில்லை. என்ன சொல்வது என்று தெரியவேயில்லை. ஒரு வேலை பணம் கொடுக்கிறோம் உங்களின் பிரச்சனைகளில் இருந்து வெளியே கொண்டு வருகிறோம் என்று நேரடியாக அவளிடமே முரளி வீட்டினர் பேசி இந்த திருமணதிற்கு சம்மதம் வாங்கிவிட்டனரா?

அப்போது நான் எதற்குமே லாயக்கில்லை என்று ரஞ்சனி நினைத்து இந்த வேலையை செய்து விட்டாளா என்று அவளையே பார்த்திருந்தான்.

அவனால் தாளவே முடியவில்லை... நேற்று முன்தினம் அவர்களின் வீட்டில் அப்படிப் பேசி வந்திருந்தான். பணத்தைக் கொண்டு என் தங்கையை விலைக்கு வாங்குகிறீர்களா என்று கேட்டு வந்தான்.

இப்போது திருமணம் செய்து அவள் நிற்கிறாள்! என்ன சொல்ல? பத்மநாபனைப் பார்த்தான். அவனும் ஈஸ்வரைத் தான் பார்த்து நின்றான்.

கண்களில் ஒரு தயக்கமோ இப்படி செய்துவிட்டோம் என்ற குற்ற உணர்ச்சி சிறிதும் இன்றி தைரியமான பார்வை. அந்தப் பார்வையைக் கொண்டே ஈஸ்வர் அனுமானித்தான் திருமணம் ரஞ்சனியின் முடிவே!

“ஏன்? இப்படிப் பண்ணின?” என்று ரூபா திரும்பவும் கேட்க,

“எங்களுக்குப் பிடிச்சிருந்தது, இவர் வீட்ல பொண்ணு கேட்டாங்க! விஷ்வா முடியாது சொன்னான்! அதனால எனக்கு வேற வழியில்லை!” என்று மனப்பாடம் செய்து வைப்பதை ஒப்பிப்பது போல சொன்னாள்.

வீட்டினர் எல்லோரும் ஏன் சொல்லவில்லை என்பது போல ஈஸ்வரை பார்த்தனர்.

“ஏண்டா? ஏண்டா எங்கக்கிட்ட நீ சொல்லலை?” என்று அம்மா மலர் ஈஸ்வரை சத்தமிட,

பெரியம்மாவும் பாட்டியும் கூட, “நீ ஏன் எங்கக் கிட்ட சொல்லலை! அவளை இப்படி ஒரு முடிவு எடுக்க வெச்சிட்ட” என்று கேள்வி கேட்க,

“உனக்குப் பிடிச்சிருந்ததா.....? உனக்குப் பிடிச்சிருக்குன்னு என்கிட்ட சொன்னியா....? நான் வேண்டாம்னு சொன்னேனா...?” என்று ஈஸ்வர் தீர்க்கமாகப் பார்த்து, ஆத்திரம் அடக்கியக் குரலில் கேட்க.. கேட்க,

அதுவரை தைரியமாக எல்லாம் செய்து வந்த ரஞ்சனியால் ஈஸ்வரின் பார்வையைச் சந்திக்க முடியவில்லை, கண்கள் கலங்க ஆரம்பித்தது.

பத்மநாபனும் “ஏன் இவள் ஈஸ்வரை இழுக்க வேண்டும்? எனக்கு பிடிச்சிருக்கு நீங்க சம்மதிக்க மாட்டீங்கன்னு சொல்லலை” என்று மட்டும் சொல்லியிருக்க கூடாதா, ஈஸ்வரை ஏன் கோபப்படுத்த வேண்டும் என்று தான் தோன்றியது. ஏற்கனவே திமிர் பிடித்தவன்,

கலங்கிய கண்களோடு “விஷ்வா” என்று ஈஸ்வரை நோக்கி ரஞ்சனி  அடியெடுத்து வைக்க,

“பேசாதே” என்பது போல உதட்டின் மேல் கைவைத்து காட்டினான். அவனால் ஆத்திரத்தில் பேசவே முடியவில்லை.

ரஞ்சனி அப்போதும் ஏதோ பேச வர,  “பேசாத!!!” என்று கர்ஜித்தான். அந்தக் குரலில் ரஞ்சனி அப்படியே நிற்க,

“பிடிச்சிருந்ததுன்னு பொய் சொல்லாத” என்று அடிக்குரலில் சீறியவன், ரஞ்சனியை நோக்கி வேகமாக எட்டு வைக்க,

ரஞ்சனியின் கண்களில் இருந்து விரைந்து கண்ணீர் இறங்கியது. ஈஸ்வர் வந்த வேகத்திற்கு எங்கே ரஞ்சனியை அடித்து விடுவானோ என்று பத்மநாபன் ரஞ்சனியின் கைப் பிடிக்க,

அந்த செயல் ஈஸ்வரை அப்படியே தேக்கியது. “ஓஹ்! இனிமே உங்க மனைவி.... என்னோட தங்கையில்லை” என்றான் சொல்லும் போது அவனின் குரலில் அவ்வளவு வருத்தம்.

“ஏன் இப்படி பேசறீங்க? பொண்ணுங்களுக்குக் கல்யாணம் ஆனா அண்ணன் தங்கை உறவு இல்லைன்னு ஆகிடுமா?” என்றான் பத்மநாபன்.

“மத்தவங்களுக்கு எப்படியோ? இனிமே எனக்கு அப்படித்தான்!” என்று பத்மநாபனை நோக்கிச் சொன்னவன்.

ரஞ்சனியை நோக்கி “என்னை நம்பலைல நீ... பிடிச்சிருக்குன்னு பொய் சொல்ற... ஏதோ ஒரு வகையில இந்த ப்ரச்சனை தான் காரணம்! இல்லைன்னு சொல்லாத! எனக்குத் தெரியும்... நான் இதைத் தீர்க்கற அளவுக்கு லாயகில்லைன்னு நினைச்சிட்ட... என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லணும்னு தோணலை... இவன் யாருன்னே உனக்கு தெரியாது கல்யாணம் செய்துகிட்ட” என்று பேசப் பேச...

ரஞ்சனி அவன் அருகில் வர முயல...

“அங்கேயே நில்” என்பதுப் போல... ஒற்றை விரல் நீட்டிக் கை காட்டினான்.

அது வெளியே செல் என்பதுப் போன்ற ஒரு அர்த்தத்தைக் கொடுத்தது. வெளியே சென்றுவிட்டால் எல்லா பிரச்சனைகளும் அப்படியே தான் இருக்கும், பிறகு தன் திருமணதிற்கு எந்த அர்த்தமும் இல்லை என்று உணர்ந்த ரஞ்சனி...

“அதை நீ சொல்லாத! இது உன் வீடு மட்டுமில்லை, எனக்குக் கூட இதுதான் வீடு! என்னோட அப்பா அம்மா இங்க தான் இருக்காங்க! அவங்க சொல்லட்டும்!” என்று கலங்கிய கண்களோடு ஆவேசமாகப் பேசினாள்.

இத்தனை நாள் சீராட்டி பாராட்டி வளர்த்த மகள்! அவளை வெளியே போ என்று சொல்ல அங்கே யாராலும் முடியவில்லை! ஏன் ஈஸ்வர் கூட அப்படி சொல்லவில்லை! ரஞ்சனி தான் தவறாக அர்த்தம் செய்து அதற்கு பேசிக் கொண்டிருந்தாள்.

நமஷிவாயம் தனது அம்மாவையும் அண்ணியையும் மனைவியையும் பார்த்தார்.

“எதுன்னாலும் முதல்ல உள்ளக் கூப்பிடு... இனியும் இதைப் பெருசாக்கி நம்ம மானத்தை நாமளே வாங்க வேண்டாம். அவளோட நமக்கு தொடர்பு வேணுமோ இல்லையோ, அவ வாழ வேண்டியப் பொண்ணு, அப்படியேத் திரும்ப அனுப்ப வேண்டாம்” என்று வீட்டின் மூத்த பெண்மணியாகப் பாட்டிச் சொல்ல...

ஈஸ்வரின் பேச்சினால், ஏதோ ஒரு வகையில் தங்களின் பிரச்சனைகளை முன்னிட்டுத் தான் இந்த திருமணம் என்று

அம்மாவும் பெரியம்மாவும் ரூபாவும் தெரிந்து கொண்டதால் யாரும் ஆட்சேபிக்க வில்லை.

ஜகன் சித்தப்பா என்ன சொல்கிறார் என்று பார்த்து நின்றான்.

“உள்ள வாங்க” என்று மணமக்களைப் பார்த்து அவர் சொல்ல…

க்ஷணத்தில் ஈஸ்வர் அந்த வீட்டில் இருந்து அன்னியப்பட்டு நின்றான்.

**வாழ்வின் பொருளென்ன? நீ வந்த கதை என்ன?**

## அத்தியாயம் பதினேழு :

**கஷ்டங்கள் தான் ஒரு மனிதனை மிகவும் பக்குவப் படுத்துகின்றது!!!**

ஈஸ்வர் அதன் பின் யாரிடமும் எதுவும் பேசவில்லை, அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்றும் கேட்கவில்லை.

நேராக மேலே சென்றவன், குளிக்கக் கூட இல்லை, உடையை மட்டும் மாற்றிக் கிளம்பிவிட்டான்.

நேராக ஆபிஸிற்கு தன்னை போலக் கார் சென்றது. காரை விட்டு இறங்கியவன், அந்த பில்டிங்கை தான் பார்த்திருந்தான். அவன் இங்கே பொறுப்பெடுத்துக் கொண்டு இரு வருடங்கள் தான் ஆகின்றது, ஆனால் நினைவு தெரிந்த நாளாக இது அவனுடையது என்ற எண்ணம் தானே மனதில்.

எல்லாம் அவனை மீறித் தான் நடக்கின்றது, இன்னும் ஒரே ஒரு வாய்ப்பு இது அவனுடையதா இல்லையா என்று தெரிந்து கொள்ள…?

அம்மாவினது அழைப்பு வர, ஃபோனை சுவிச் ஆஃப் செய்து ஜோபில் போட்டுக் கொண்டான்.

அவனது ரூமில் இருந்த குளியலறையில் குளித்து அதே உடைகளை அணிந்து கொண்டான்.

அவன் வெளியே வந்த போது அவனின் ரூமில் ஜெகனும் ரூபாவும் இருந்தனர். “ஏன் விஷ்வா போன் எடுக்கலை?” என்ற ரூபாவின் கேள்விக்கு,

“எடுக்கலை இப்ப அதுக்கு என்ன?”

“அவங்களை என்ன பண்ணலாம்ன்னு வீட்ல கேட்டுட்டு வர சொன்னாங்க”

“உங்க விருப்பம்! நீங்க என்ன வேணா பண்ணுங்க! தயவு செஞ்சு என்னை விட்டுடுங்க... என்னை இதுல யாரும் இழுக்காதீங்க... அவங்க பொண்ணு! அவங்க என்ன வேணா பண்ணட்டும்!”

“விஷ்வா அவ உன்னோட தங்கை, உன்னோட அவ எவ்வளவு க்ளோஸ்ன்னு எனக்கு தெரியும்! இப்படிப் பேசாத!” என்று ரூபா சொல்ல,

“க்ளோஸ்ஸா? அவளே அப்படி நினைக்கலை? நான் நினைச்சு என்ன பண்ண.. ப்ளீஸ் ரூப்ஸ்! தயவு செஞ்சு என்னை யாரும் கன்வின்ஸ் பண்ணாதீங்க” என்றவன்,

ஜகனைப் பார்த்து “என்ன பண்ணனும்ன்னு சொல்றாங்களோ என் சார்பா நீயே செஞ்சிடு! என்னை விட்டுடு! எனக்காக இதை நீங்க ரெண்டு பெரும் செய்ங்க” என்று ஈஸ்வர் கேட்ட பாவனையில்,

“நான் பார்த்துக்கறேன்! நீ இவ்வளவு அப்செட் ஆகாத!” என்று ரூபா சொல்லி, “வாங்க!” என்று ஜகனை அழைத்துக் கிளம்பினாள்.

அவர்கள் சென்ற சில நிமிடங்களில் முரளி வந்து நின்றான், “நிஜமா எனக்குத் தெரியாதுடா, அவன் வீட்ல யார்க் கிட்டயும் சொல்லலை! அப்பாக்கிட்ட கூட சொல்லலை! இப்ப உங்க வீட்ல இருக்கிறோம் கல்யாணம் செஞ்சிக்கிகிட்டோம்னு போன் பண்ணின பிறகு தான் எனக்கு தெரியும் நம்பு ப்ளீஸ்! ரஞ்சனிக்கு பத்துவை பிடிச்சிருந்தது போல இல்லை எப்படி கல்யாண முடிவு இப்படி  சட்டுன்னு எடுத்திருப்பா?” என்று சொன்னான்.

நண்பனின் பதை பதைத்த முகத்தை பார்த்தவன், “உன்னை நான் தப்பா நினைக்கலை விடு, கல்யாணம் நடந்துடுச்சி! என்ன காரணம்னாலும் இனி அது இல்லைன்னு ஆகாது, என்ன பண்ணணுமோ பண்ணுங்க, தயவு செஞ்சு என்னை இதுல இழுக்காதீங்க... இப்போ ரூபா கிட்ட கூட அதுதான் சொன்னேன்! உன்கிட்டயும் சொல்றேன்.. என்னை இழுக்காதீங்க..” என்றான்.

முரளி அப்படியே நிற்க, “போ! போய் பாரு! எனக்காக முகத்தை தூக்கி வெச்சு உன் தம்பியோட எதுக்கு சொல்லாம இப்படி

செஞ்சன்னு சண்டை போடாத, நீங்க எப்பவும் போல இருங்க, நான் இதுலயும் வரக் கூடாது!" என்று திரும்பவும் சொல்லி அவனை அனுப்பினான்.

அன்று நமஷிவாயமும் வரவில்லை ஜகனும் வரவில்லை, இவன் ஆஃபிசிலேயே இருந்தான், வீடு செல்லவில்லை, இவனின் போன் தானே சுவிச் ஆஃப். ஆனால் ஆபிஸ் நம்பர் இருந்ததே! வீட்டில் இருந்து வந்த எந்த அழைப்பையும் பேசவில்லை.

என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று அவனுக்கு தெரியவில்லை! தெரிந்து கொள்ளும் விருப்பமும் இல்லை.

மாலையில் பீ ஏ அருகில் வந்தவன், "சர் வீட்ல இருந்து அப்பா நிறைய முறை போன் பண்ணிட்டார். உங்களைப் பேச சொன்னார்" என்றான்.

அவனிடம் எதுவும் காட்டவில்லை "சரி" என்று சொல்லி விட்டான், அவ்வளவு தான். ஆனால் அழைக்கவில்லை.

கண்கள் தானாக மன சோர்வினால் மூடியது. நான் என்னுடைய காதலை கூட முதலில் இவளிடம் தானே பகிர்ந்தேன், திருமணம் என்பது எவ்வளவு பெரிய முடிவு என்னிடம் ஒரு வார்த்தைக் கூட சொல்லவில்லை. மனது வலித்தது.

இரவு வரை அங்கேயே இருந்தான். வீடு செல்ல பிடிக்கவில்லை, ஆனால் இதுவரை அங்கே சென்னையில் வெளியில் எங்குமே தங்கியதில்லை.  அங்கே இங்கே காரிலேயே சுற்றி வீடு சென்ற போது நேரம் பதினொன்றை தாண்டி இருந்தது.

வீடு முழுவதுமே இவனுக்காக விழித்து இருந்தது. யாரும் உறங்கவில்லை. பாட்டி, பெரியம்மா, அம்மா, அப்பா, ஜகன், ரூபா என்று. சரண் மட்டுமே உறங்கியிருந்தான். பிரணவி கூட ஹாலில் தளிர் நடை போட்டுக் கொண்டிருந்தாள்.

இவனைப் பார்த்ததும் இவனை நோக்கி வர, குழந்தையை கையினில் எடுத்தான்.

"எங்கடா போன? ஏண்டா இப்படி பண்ற? அவ பண்ணினது தப்பு தான்! அதுக்காக அவகிட்ட எதுவும் பேசாம போவியா, எவ்வளவு தடவை உனக்கு கூப்பிடறது! ரொம்ப அழுதாடா!"

"என்னை என்ன பண்ண சொல்றீங்க?"

அதற்கு என்ன சொல்லுவார் அம்மா அப்படியே பார்க்க..

“உங்க பொண்ணு! உங்களை நான் எதுவும் சொல்ல முடியாது, ஆனா என்னை எதுக்கும் யாரும் சொல்லக்கூடாது! சொன்னிங்க, வீட்டை விட்டு போயிடுவேன்! இதுல எந்த மாற்றமும் இல்லை! அம்மா உங்களுக்கு என்ன உங்க பொண்ணுக்கு செய்யணும்னு தோணுதோ செய்ங்க” என்று சொல்லி மேலே ஏறினான்.

பாட்டி, “கோபப்படாத விஷ்வா அவ நம்ம வீட்டு பொண்ணு, சின்ன பொண்ணு இல்லை.. நல்லது கெட்டது தெரிஞ்சவ, நம்ம அப்படியே விட முடியாது! நாம மனசளவுல இதை அங்கீகரிக்கறோம் இல்லை அது வேற! ஒரு ரிசெப்ஷன் வெச்சி அதுக்கு ஒரு அங்கீகாரம் குடுக்கணும்! இல்லை நமக்கு தான் அசிங்கம்! இப்போவே எத்தனை பேருக்கு தெரிஞ்சதோ தெரியலை?”

“அவங்க வீட்ல இருந்து அவங்க தாத்தாவும் அம்மாவும் வந்து மன்னிப்பு கேட்டு முறையா என்ன செய்யணுமோ செய்யலாம்னு பேசினாங்க... நீ சொல்லாம எங்களால அவளை இங்க இருன்னு கூட சொல்ல முடியலை அனுப்பிட்டோம்.. சொல்லுடா!”

“பாட்டி! உங்களுக்கு என்ன செய்யணுமோ செய்ங்க! நான் எல்லாத்துக்கும் சம்மதிக்கணும் அவங்க கிட்ட நல்ல மாதிரி நடந்துக்கணும்னு நினைக்காதீங்க என்னால கண்டிப்பா முடியாது .. தயவு செஞ்சு என்னை விட்டுடுங்க! இல்லை விட முடியாதுன்னு நினைச்சீங்கன்னா....” என்று நிறுத்தியவன்,

“நான் இந்த உலகத்திலயே இல்லை.. என் அம்மா அப்பாக்கு ஒரு பொண்ணு மட்டும் தான்னு நினைச்சிக்கங்க” என்றான் காரமாக.

“விஷ்வா! என்ன இது இப்படி அபசகுனமா பேசற?” என்று அம்மா கண்கள் கலங்க,

“என்னால அழவும் முடியாது, நீங்க அழறதுக்காக என்னை மாத்திக்கவும் முடியாது” என்று சொல்லி கையில் இருந்த பிரணவியை ரூபாவின் கையில் கொடுத்து உறங்க சென்றான். காலையில் இருந்து எதுவும் உண்ணவில்லை. அவ்வபோது குடித்த டீ காஃபி மட்டுமே, மிகவும் களைப்பாக இருந்தது.

“பிடிக்கலைன்னா விட்டுடுங்க அத்தை! ஏன் கம்பெல் பண்றீங்க, நம்ம எல்லோருக்கும் தெரியும் விஷ்வா ரஞ்சனி கூட ரொம்ப க்ளோஸ்ன்னு கண்டிப்பா வருத்தம் இருக்கும்”

“நமக்கெல்லாம் இல்லையா நம்ம சரின்னு போகலை! எனக்குக் கூட தான் அவ்வளவு வருத்தம்! இன்னும் என் பொண்ணு வீட்டுக்குத் தெரியாம கல்யாணம் செஞ்சு வந்து நிக்கறாங்கரதை நம்பவே முடியலை! ஆனா இந்த நேரம் நம்ம முகத்தை திருப்பினா எல்லோரும் அவளை தப்பா பேசுவாங்க! நமக்கு பிடிக்குதோ பிடிக்கலையோ அவ இந்த சமூகத்துல தலை நிமிர்ந்து வாழணும்! அதுக்கு நம்ம இந்தக் கல்யாணத்தை அங்கீகரிக்கணும்!” என்று அம்மா சொல்ல,

அவர் சொல்வது வாஸ்தவமான பேச்சு என்பதால் ரூபா அதற்கு மறுத்து பதில் சொல்லவில்லை.

நமசிவாயம் தான் “விட்டுடு மலர், ரொம்ப ஃபோர்ஸ் பண்ண வேண்டாம், சொன்ன மாதிரி வீட்டை விட்டு போயிடப் போறான், என்ன செய்யணுமோ நம்ம செய்யலாம்”

அதன் பிறகு ஈஸ்வரை எதுவும் கேட்காமல் எல்லா வேலைகளும் நடந்தன. அடுத்த வாரத்தில் ஒரு நல்ல நாளில் ரிசெப்ஷனுக்கு நாள் குறிக்கப்பட்டது. அழைப்பிதழ்கள் ஒரே நாளில் அச்சிடப்பட்டு ஜகனும் ரூபாவும் அழைக்கும் வேலையை ஆரம்பித்தனர்.

ஈஸ்வரும் கவனமாக இருந்தான். அஸ்வின் இன்னும் ஏதாவது இழுத்து வைப்பானோ என்பது போல… அவனுக்கு தெரியாதது தாஸ் அஸ்வினைப் பார்த்து பேசி வந்தது. பேசி என்பது சரியான வார்த்தை அல்ல மிரட்டி வந்தது.

இரண்டாவது நாள் ரஞ்சனி ஆஃபிசில் வந்து அப்பாவை பார்த்தவள், “அவங்க பணம் கொடுக்கறாங்க தானேப்பா வாங்கிக்கலாம்! அப்புறம் திரும்ப கொடுத்துடலாம் வாங்கிக்கங்க!” என்று.

“இல்லைம்மா! வேண்டாம்! விஷ்வா ஒத்துக்க மாட்டான்!”

“அப்பா, திரும்ப குடுக்க தான் போறீங்க! இப்ப நிலைமையை சமாளிப்போம், வீணா பிரச்னையைப் பெருசாக்க வேண்டாம்! இன்னம் கொஞ்ச நாள் தான் இருக்கு நம்ம பணம் குடுக்கறதுக்கு”

“நாள் இருக்கு தானேம்மா இன்னும், முடிஞ்சவரை பார்க்கலாம்! முடியலைன்னா வேணா யோசிக்கலாம்”

“அப்போ எல்லாம் பசங்க தான் செய்யணும்! நான் எதுவும் செய்யக் கூடாது! அப்படி தானே!” என்று தந்தையிடம்

சண்டையிட்டாள். அவர் அசையாமல் அமர்ந்திருக்க,

“அப்பா! ப்ளீஸ்! இன்னும் பிரச்சனைகளை அதிகமாக்கிடாதீங்க!” என்றாள் கண்கள் கலங்க.

“யாரும் என்னோட பேச்சைக் கேட்கறதில்லை! எல்லோரும் என்னை இப்படி செய்ங்க அப்படி செய்ங்கன்னு சொல்றீங்க! நீ ஒன்னு சொல்ற அவன் ஒன்னு சொல்றான்! நான் என்ன செய்ய! எனக்கு ரெண்டு பசங்களும் ஒன்னு தான்”

“என் பொண்ணு இப்படி என்கிட்டே சொல்லாம கொள்ளாம கல்யாணம் பண்ணுவான்னு நான் நினைச்சதே இல்லை” என்றார்.

“நான் மட்டும் நினைச்சனா! நான் மட்டும் நினைச்சனா அப்பா இப்படி நான் கல்யாணம் பண்ற சூழ்நிலை வரும்னு!” என்று கத்தினாள்.

அவள் கத்தவும் அவள் இருப்பது தெரியாமல் ஈஸ்வர் உள்ளே வரவும் அந்த வார்த்தைகள் ஸ்பஷ்டமாக அவனின் காதில் விழுந்தன.

கதவை திறந்தவன் அப்படியே நிற்க, அப்போதுதான் அவனை பார்த்தவள் “விஷ்வா” என்று அவனுடன் பேச வர, அவன் கதவை மூடி விட்டு வெளியே சென்று விட்டான்.

“போங்க! போங்க! எல்லோரும் எப்படியோ போங்க! எனக்கு என்ன வந்தது” என்று அப்பாவிடம் மீண்டும் கத்தி விட்டு அவள் வெளியே சென்றாள்.

திருமணம் செய்து கொண்டாள், புது இடம், புது பழக்க வழக்கம், புது மனிதன் அவளின் வாழ்க்கையில், எதனோடும் அவளால் ஒட்ட முடியவில்லை. எதற்கென்றாலும் அண்ணனிடம் தான் போய் நிற்பாள். இதை அவனுக்கு தெரியாமல் செய்து விட்டாள். யாரிடம் போவாள்.

ஈஸ்வர் அவளுடன் பேசாதது அப்படி ஒரு மன அழுத்தத்தைக் கொடுத்தது, இரண்டு நாட்களாக உறங்கவில்லை. ஒரு டாக்டராக அவளின் நிலை அவளுக்கே பயத்தைக் கொடுத்தது. யாரிடமும் எதையும் பகிரவும் முடியவில்லை.

திருமணம் செய்து கொண்டது அவள்! எனக்கு எதுவும் பிடிக்கவில்லை என்று யாரிடம் சொல்வாள்.

கலகலப்பாக எல்லோரிடம் பேசுபவள், இப்போது இரண்டு நாட்களாக யாரிடம் என்ன பேசுவது என்று கூடத் தெரியவில்லை.

ரஞ்சனியின் நிலை உணர்ந்தவனாக அவளை எந்த வகையிலும் பத்மநாபன் தொந்தரவு செய்யவில்லை. பேச்சு கூட அவளாக பேசினால் மட்டும் தான் பேசினான்.

“அக்கா” என்ற அழைப்பை அண்ணியாக மாற்றிய வர்ஷினி ரஞ்சனியை வீட்டில் என்ன தேவை என்றாலும் நன்றாக பார்த்துக் கொண்டாள். ஆனாலும் ரஞ்சனியால் ஒட்ட முடியவில்லை.

ஈஸ்வரின் வீட்டினர் எல்லோருக்கும் அவள் மீது கோபம் வருத்தம் இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் தங்களுக்காக செய்திருக்கிறாள் என்று எடுத்துக் கொண்டு பேசவாவது செய்தனர், ஆனால் ஈஸ்வர் பேசவில்லை.

ஆஃபிஸ் போக வேண்டும் என்று சொன்னதும் பத்மநாபன் தான் அவளை அழைத்து வந்து விட்டிருந்தான். ஏதோ தொலைபேசி அழைப்பு வர அதனை பேசிக் கொண்டு இருந்தான், அவன் பேசி முடித்து காரை வெளியே எடுக்கும் சமயம் ரஞ்சனி திரும்ப வந்து விட்டாள்.

முகம் அழுகைக்கு தயாராக இருந்தது. ஆம் கண்ணீரை அடக்கி இருப்பது அந்த கண்களிலேயே தெரிந்தது.

டேக்ஸி ஏதாவது பிடிக்க வேண்டும் என்ற யோசனையுடன் தான் வந்தாள், பத்து அவளிடம் “ஒரு அரை மணிநேர வேலை இருக்கிறது, நீ இங்கே இரு நான் வந்து அழைத்து செல்கிறேன்” என்பது போல தான் கூறியிருந்தான்.

அதனால் சென்றிருப்பான் என்று நினைத்து வந்தாள். அவள் எப்படி வந்தாளோ திரும்ப எப்படி போவாள் என்று நினைத்து நமசிவாயமும் அவளின் பின்னே வந்திருந்தார். அவரை அவள் கவனிக்கவில்லை.

பத்மநாபன் நின்றிருப்பதை பார்த்து அவரும் நிற்க, ரஞ்சனி காரில் ஏறியதும் அவருடன் இறங்கி பேசவா இல்லை போகவா என்று பத்மநாபன் யோசித்து நிற்க,

நமஷிவாயதிற்கும் யோசனை பத்மநாபனை போய் வரவேற்க வேண்டுமா இல்லையா என்பது போல..

என்றிருந்தாலும் விட்டுப் போகும் உறவில்லை என்று நினைத்து நமஷிவாயம் கார் வரை சென்று “உள்ள வாங்க மாப்பிள்ளை” என்று சொல்ல,

அவனும் விரைந்து இறங்கி, “அப்புறம் வர்றேன் மாமா! கொஞ்சம் வேலை இருக்கு” என்று சொல்ல, அப்போதுதான் அவர் நீங்க என்ன படிச்சிருக்கீங்க” என்று கேட்டார்.

“லா படிச்சிருக்கேன்” என்று சொல்ல, ரஞ்சனியும் அப்போதுதான் அந்த பதிலை உள் வாங்கினாள்.

“என்ன இவன் லா படித்திருக்கிறானா, நான் முன் எப்பொழுதோ என்ன செய்யறீங்க என்று கேட்டதற்கு அப்பாவின் தொழிலை பார்க்கிறேன் என்று சொன்னதாக தானே ஞாபகம்! ஓஹ் நாம் இவன் படிப்பைக் கேட்கவே இல்லை தானே” என்று யோசனையோடு அவனை பார்த்திருந்தாள்.

இந்த யோசனைகள் அவளுள் ஓடும் போதே பத்மநாபன் அவளின் அப்பாவிடம் பேசி முடித்து காரை கிளப்பி இருந்தான்.

“எதுக்கு இப்போ அழறீங்க நீங்க” என்று ரஞ்சனியிடம் கேட்க,

“நமக்குக் கல்யாணம் ஆகிடுச்சு! நீங்க ஏன் என்னை வாங்க போங்க கூப்பிடறீங்க” என்று அவனை முறைத்துக் கொண்டே ரஞ்சனி கேட்டாள். அவளால் இன்னும் கட்டுக்குள் வர முடியவில்லை, கோபமாக வந்தது ஈஸ்வர் பேசாதது.

அவளின் கோபத்தைப் பார்த்து “நீங்க இன்னும் உங்க வயசை என்கிட்டே சொல்லவேயில்லையே” என்று ஒரு மென் நகையுடன் பத்து கேட்டான். அந்தக் கேள்வி தானே எல்லா நிகழ்வுகளுக்கும் அச்சாரம்.

அதற்கு பதில் சொல்லாமல் “இன்னும் விஷ்வா என்கிட்டே பேசலை” என்று பதில் சொன்னாள்.

“உங்களுக்கு உங்க அண்ணா உங்ககிட்ட பேசணுமா? இல்லை அவங்க ப்ராப்ளம் சால்வ் ஆகணுமா”

“ப்ராப்ளம் சால்வ் ஆகணும்” என்று சொல்லும் போதே தேம்பல் வெடித்தது.

“அப்போ கொஞ்ச நாளைக்கு உங்க அண்ணா போக்குல விடுங்க! டோன்ட் ஃபோர்ஸ் ஹிம்”

ஆனாலும் என்ன முயன்றும் அழுகை நிற்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் ஒரு இயலாமையோடு பார்த்திருந்தான்.

காரை நிறுத்தி வெட் வைபர்ஸ் கொடுத்து வீடு வந்துவிட்டது என்று சொல்ல, முகத்தை துடைத்தவள் “நான் அழுத மாதிரி தெரியுதா?” என்றாள்,

“ஆமாம்” என்பது போல தலையசைத்தான்.

“என்ன பண்ணட்டும்?”

“ஒன்னும் பண்ண வேண்டாம்.. ரெண்டு நாளா நீங்க தூங்கவேயில்லை. பார்த்துட்டு தானே இருக்கேன்! போய்த் தூங்குங்க. ஒரு விஷயம் செஞ்சோம்னா அதோட இம்பேக்ட் கொஞ்ச நாளைக்காவது இருக்கும்! எல்லாம் உடனே சரியாகும்னு நினைக்காதீங்க, அதுவும் உங்க அண்ணன் மாதிரி ஒரு ஆள் எல்லாம் ஈஸியா எதையும் ஏத்துக்கவும் மாட்டாங்க! மாறவும் மாட்டாங்க!”

“என்ன எங்க அண்ணன் மாதிரி ஆள்?” என்று அடுத்த நிமிடம் சண்டைக்கு கிளம்ப,

“ஹய்யோ! நான் எதுவும் தப்பா சொல்லலைங்க! அவர் ரொம்ப அடமென்ட் சொன்னேன்! முரளியோட ஃபிரண்ட் இல்லையா! ரொம்ப வருஷமா தெரியும்! அதுதான் சொன்னேன்!”

அவளிடம் உன் அண்ணன் திமிர் பிடித்தவன் என்றா சொல்ல முடியும்? ஆனால் அதுதான் உண்மை என்பது பத்துவின் ஆணித்தரமான எண்ணம். அதை சொல்லி ரஞ்சனியுடன் ஒரு மனக்கசப்பை வளர்த்துக் கொள்ள அவன் எப்போதும் தயாரில்லை.

ரஞ்சனியுடனான திருமணம் என்பது மனதின் ஓரத்தில் எழுந்த ஒரு ஆசை, அதை அவனே உணரும் முன் விஷயங்கள் வேகமாக நடந்து திருமணமும் முடிந்து விட்டது. ரஞ்சனி ஒன்றும் காதலினால் திருமணம் செய்ய வில்லை... ஏதோ ஒரு நிர்பந்தம் பாதி சொல்லியும் சொல்லாமலும் என்று உணர்ந்திருந்தான்.

எதுவாகினும் இந்த திருமணத்தை அவன் முழு மனதாக வரவேற்றான்.

அதற்குள் கார் நின்று நிறைய நேரம் ஆனதே, எங்கே யாரும் இறங்கவில்லை என்று வர்ஷினி வெளியே வந்து பார்த்தாள். அவள் பார்ப்பது தெரிந்ததும் ரஞ்சனி இறங்கி வர “அண்ணி அழுதீங்களா” என்று முகம் பார்த்ததுமே கேட்க,

“ப்ச்! ஒன்னுமில்லை! வீட்டு ஞாபகம்!” என்று சொல்லி ரஞ்சனி நிற்காமல் சென்று விட்டாள்... நின்றால் மீண்டும் அழுகை வரும் போல தோன்றியது.

போகும் ரஞ்சனியை பார்த்திருந்த வர்ஷினி “ஏன் அண்ணா அழறாங்க?” என்று பத்துவிடம் கேட்க,

“அதுவா அவங்கண்ணன் அவங்க கூட பேசலையாம்” என்று பத்து கிண்டலாக சொல்ல,

“நீங்க ஏன் அதுக்கு கிண்டல் பண்றீங்க?”

“என்ன கிண்டல் இதுல.. நான் உன் கூட பேசலைன்னா நீ அழுவியா என்ன?” என்றான், இதற்கு போய் யாரவது இப்படி அழுவார்களா என்பதை கருத்தில் கொண்டு,

“நான் வேற அண்ணா! நான் இந்த கேட்டகிரிலயே வரமாட்டேன்! நீங்க என்னோட அண்ணா தான்! ஆனா நாம சேர்ந்து ஒரே வீட்ல வளரலையே... நம்மளை அவங்களோட கம்பேர் பண்ணக் கூடாது” என்றாள் ஈசியாக வர்ஷினி.

“ஐயோ! என்ன இது? ஏதோ நாம் சொல்லப் போக இப்படியாகிவிட்டதே” என்று பதறி வர்ஷினியின் முகத்தை ஆராய்ந்தான். ஆனால் அது ஈசியாக இருந்தது.

“ப்ச்! நீ ஏன் இப்படி எடுத்துக்கற நான் அப்படி சொல்லலை?” என்றான்.

“நீங்க ஏன் இப்படி எடுத்துக்கறீங்க, நானும் இப்படி சொல்லலை!” என்றாள் வர்ஷினியும் பாவனையாக.

பத்து அப்போதும் முகம் தெளியாமல் நிற்க “ஈசி ப்ரோ, போங்க அண்ணியை பாருங்க!” என்று அவனை அனுப்பினாள்.

மாலையில் சில பொருட்கள் வாங்க வேண்டியிருந்ததால் தாஸ் துணையுடன் ஷாப்பிங் கிளம்பினாள் வர்ஷினி. ஷாப்பிங் மாலை சுற்றிக் கொண்டு இருந்தாள். கண்ணாடி வழியாக ஒரு காஃபி

ஷாப்பின் உள் தெரிய, அங்கே ஒரு சேரில் அமர்ந்திருந்தது ஈஸ்வர் போல இருக்க, கதவை திறந்து உள்சென்று அவன் தானா என்பது போலப் பார்த்தாள்.

அவன் தான்! அவனே தான்!!!

கால்கள் தானாக ஈஸ்வரின் புறம் சென்றது. தாஸ் எங்கே போகிறாள் என்பது போல அவனும் உள்ளே வந்து நின்றான்.

“ஹாய்” என்றபடி ஈஸ்வரின் அருகில் நின்றவள், தாஸைப் பார்க்கவும்,

“தாசண்ணா! நான் பேசிட்டு வர்றேன்! இவங்க என்ன நமக்கு தெரியாதவங்களா? அண்ணியோட அண்ணா தானே! போங்க!” எனவும் வேறு வழியில்லாமல் தாஸ் வெளியே வந்து அவர்கள் தெரியும் இடத்தில் நின்று கொண்டான்.

தாஸ் வெளியில் போகும் வரை அவனையே பார்த்து இருந்தவன், பிறகு தான் வர்ஷினியிடம் பார்வையை நிலைக்க விட்டான். ஆனால் பேசவில்லை.. வர்ஷினி கண்களுக்கு கூலர்ஸ் அணிந்திருக்க, அதை அகற்றுவாளா மாட்டாளா என்றபடி பார்த்திருந்தான்.

அவனின் முகம் மிகவும் சீரியசாக இருந்தது.

“ஹாய் சொன்னா, ஹாய் சொல்ல மாட்டீங்களா” என்று இன்முகத்தோடே பேச, அந்தப் புன்னகை ஈஸ்வரை வசீகரித்தது.

“உன் அண்ணியோட அண்ணான்னா ஹாய் சொல்ல மாட்டேன், வேணா உங்க அண்ணோவோட ஃபிரண்ட்னா ஹாய் சொல்வேன்” என்றான் மிகவும் சீரியசாக. ஆனால் கோபம் போலவோ ஆத்திரம் போலவோ எதுவும் இல்லை.

“அண்ணியோட அண்ணாவும் வேண்டாம்! அண்ணனோட ஃபிரண்டும் வேண்டாம்! எனக்கு தெரிஞ்சவர் நீங்க அப்படி ஹாய் சொல்லுங்க” என்று லகுவாகச் சொல்ல,

அவளின் பேச்சு மனதிற்கு ஏதோ ஒரு வகையில் இதமாக இருந்தது. “ஹாய்” என்றான் தீர்க்கமான பார்வையோடு.

“நான் உட்காரட்டுமா? போகட்டுமா?” என்று மீண்டும் வர்ஷினி கேட்க,

“போகிறதுதான் நல்லதுன்னு இவளுக்கு எப்போத் தோணும்” என்று மனம் நினைத்த போதும் “உட்காரு” என்றான்.

“ஜஸ்ட் ஒரு ரெண்டு வார்த்தை உங்க பெர்சனல் தான், இருந்தாலும் சொல்லட்டுமா?”

கண்டிப்பாக ரஞ்சனியை பற்றித் தான் என்று தெரிந்ததால் பேசு என்று சொல்லவில்லை.

அவனின் சம்மதத்திற்காகக் காத்திருக்காமல் பேச ஆரம்பித்தாள்.

“அவங்க பண்ணினது சரியாத் தப்பா எனக்குத் தெரியாது, பட் அவங்க வாழ்க்கை. அதுவுமில்லாம பத்து அண்ணா ரொம்ப நல்லவங்க! நீங்க ஏன் இவ்வளவு கோபப்படறீங்க, ஆக்சுவலா நீங்க அப்பாக் கேட்ட போதே ஓகே சொல்லியிருந்தீங்கன்னா, அவங்க இந்த மாதிரி செஞ்சிருக்க மாட்டாங்க” என்று பெரிய மனுஷி போல, ஏதோ தப்பு செய்தவன் ஈஸ்வர் என்பது போல பேசினாள்.

ஈஸ்வருக்கு அவள் பேசப் பேச கோபம் எல்லாம் இல்லை, ஆனாலும் என்ன பேச்சு இது என்பது போல, “இன்னும் என்ன உளற வெச்சிருக்க” என்றான் தீர்க்கமாக.

“என்ன உளறல் இது? இது தானே நடந்திருக்கு! நீங்க இப்போ பேசாததுனால அண்ணி அழுதுகிட்டே இருக்காங்க! பாவமில்லையா, பேசுங்களேன்!” என்று வர்ஷினி சொல்ல,

“உனக்கு இது தேவையில்லாதது! நீ உன் வேலையை பாரு!” என்று பொறுமையாகவே ஈஸ்வர் பதில் சொன்னான். ஏதோ ஒரு வகையில் ரஞ்சனிக்காக அவள் பேசுகிறாள் என்று புரிந்து வர்ஷினி அவனை தப்பு செய்தவன் போலச் சொல்வதையும் கேட்டு இருந்தான்.

“எனக்கு தேவையில்லை தான்! ஆனா நீங்க பேசுங்க!” என்று மீண்டும் வற்புறுத்துவது போலச் சொல்ல,

ஈஸ்வரின் பொறுமைக் குறைய ஆரம்பித்தது. இப்படி யாரிடமும் உரிமை எடுத்து வற்புறுத்துபவள் அல்ல வர்ஷினி, ஆனால் ஈஸ்வரிடம் அது இயல்பாக வந்தது.

“சின்ன பொண்ணுன்றது சரியாத் தான் இருக்கு! என்ன தெரியும் உங்களுக்கு எங்களை பத்தி, இந்த பேட்ச் அப் வொர்க் பண்ண

வந்திருக்க, லிமிட்ஸ் க்ராஸ் பண்ணாத!" என்றான். குரல் கோபத்தைக் காட்டியிருந்தால் டென்ஷனில் பேசுகிறான் என்று நினைக்கலாம். ஆனால் இதை நிறுத்தி நிதானமாகச் சொல்லவும்,

ஈஸ்வரின் வார்த்தைகளில் ஸ்தம்பித்து அப்படியே பார்த்து இருந்தாள், வர்ஷினியின் முகம் அவனைப் பார்த்து இருந்தது. ஆனால் அவளின் நீல நிறக் கண்கள் ஈஸ்வருக்குத் தெரியவில்லை, கறுப்புக் கண்ணாடி மறைத்து இருக்க,

"ஒரு ஃபாமிலி செட் அப்ல வளர்ந்திருந்தா உனக்குப் புரியும், இது உனக்குப் புரியாது" என்று வாய்ப் பேச,

அந்தக் கண்களைப் பார்த்தே ஆக வேண்டும் போல ஒரு உந்துதல், நொடியில் அவனின் செய்கையை தனதாக்க,

அவனையும் மீறி அவனின் கைகள் அவளின் புறம் உயர்ந்து கண்ணாடியைக் கழற்றியது.

**தீ உடலினை எரிக்கும்! பார்வையின் தீப்பொறி மனதினை எரிக்கும்!!!**

## அத்தியாயம் பதினெட்டு :

**பயம் விட்டு..... ஒரு புரட்சி நடத்தலாம்!!!**

கண்ணாடியைக் கழற்றி அவளின் கண்களைப் பார்த்தான். அந்த நீல நிறக் கண்கள் இவனை வெறித்து நோக்கின.

அதனைப் பார்த்து விட்ட ஒரு த்ருப்தியில் இன்னமும் பேசினான், "இதுல நீ வொர்ரி பண்ண அவசியமில்லை! நான் ரியாலிட்டியைத் தான் சொன்னேன், உனக்கு கண்டிப்பாப் புரியாது, ரஞ்சனி எல்லா தங்கைகளையும் போலக் கிடையாது... ஒரு ட்ரெஸ் எடுக்கக் கூட என்கிட்டே கேட்பா நீயும் கூட வான்னு, அவளா சில சமயம் எடுத்து வந்தது இது உனக்கு நல்லா இருக்காதுன்னு சொன்னா அடுத்த நிமிஷம் தூக்கிப் போட்டுடுவா",

"இது ஜஸ்ட் ஒரு எக்ஸாம்பிள், இப்போ எனக்கு வேறத் தோணலை! இப்பக் கூட நான் பத்மனாபனைக் கல்யாணம் பண்ணனும் சொல்லியிருந்தா... அதுல நின்னிருந்தா யாரும் மறுத்து இருக்க முடியாது! எனக்கு பிடிக்குது பிடிக்கலை நான் அவ கூட நின்னிருப்பேன், எனக்கு அவ செய்துகிட்டான்றதை விட என் கிட்ட

சொல்லலை! நிஜம்மா என்னால அதைத் தாங்கவே முடியலை" என்று தலையைப் பிடித்து அமர்ந்து விட்டான்.

"இது காதலினால நடந்த கல்யாணம் இல்லை வேற எதுவே? எதுன்னாலும் அண்ணான்னு என்கிட்டே வந்திருக்க வேண்டாமா? யாரோ? எவனோ நம்ப முடியுது! என்னை நம்பலை? எந்த பிரச்சனைன்னாலும் நான் பார்த்துக்குவேன்னு அவளுக்கு ஏன் தோணலை? இது எனக்கு ஒரு பெரிய தோல்வி, இது உனக்கு புரியாது!"

"மே பீ என்கிட்டே சொன்னா நான் ஏதாவது இன்னம் பிரச்சனையை இழுத்து விட்டுக்குவேன்னு பயந்து கூட இப்படி செஞ்சிருக்கலாம்! ஆனா அது கூட நான் அன் ஃபிட்ன்னு தானே சொல்லுது" என்று தலையை பிடித்துக் கொண்டு குனிந்தபடி பேசிக் கொண்டிருந்தான்.

எல்லாவகையிலும் அவன் ஆராய்ந்திருக்கிறான் என்பது ஒரு புறம் இருக்க, மற்றொரு புறம் இதை யாரிடமும் அவனால் சொல்ல முடியாது. எந்தத் தயக்கமுமின்றி வர்ஷினியிடம் இதை சொல்ல முடிந்தது. இதை அவன் உணரவில்லை.

"நீ குடும்ப சூழலில் வளரவில்லை, உன்னுடைய எல்லையில் நில்!" என்று அவன் சொன்னதைத் தொடர்ந்து அவனுடன் வாதம் செய்ய புயலென மனதில் எழுந்த எண்ணங்கள் அவனின் இந்த வார்த்தைகளில் பாவனைகளில் அப்படியே அடங்கியது.

மிகுந்த மன கஷ்டத்தில் இருப்பவனை இன்னம் கஷ்டப்படுத்த வர்ஷினியின் மனம் விழையவில்லை.

அவன் தலை நிமிர்வதற்காக காத்திருந்தவள், நிமிடத்திற்கு பின் அவன் தலை நிமிர, "நான் கிளம்பறேன்" என்று எழுந்தாள்.

அந்தக் கண்களின் பாவனைகளில் என்ன கண்டானோ "சாரி! கொஞ்சம் ஹார்ஷா பேசிட்டேன்" என்றான்.

பேச வேண்டாம் என்று நினைத்தாலும் எதுவும் பேசாமல் விட்டால் பின்னொரு சந்தர்ப்பத்திலும் பேசுவான், அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று தீர்மானித்து,

"ஏதோ ரியாலிட்டி சொன்னீங்களே! அது உங்களை விட எனக்கு நல்லாத் தெரியும்! இப்போ தான் பத்து அண்ணாக்கிட்ட நீங்க சொன்ன அதே விஷயத்தை சொல்லிட்டு வந்தேன். ஆனா நீங்க

சொன்னதுக்கும் நான் சொன்னதுக்கும் வித்தியாசம் இருக்கு! நம்ம ஒரு கஷ்டத்துல இருக்கோம்ன்றதுக்காக அடுத்தவங்களை எப்படி வேணா பேசக் கூடாது"

"I know what i am and where i stand! ரொம்ப சாரி உங்க பெர்சனல் பேசினதுக்கு" என்று நிறுத்தியவள், "நீங்களும் இந்த அதிகப்ரசிங்கித்தனம் பண்ணாதீங்க" என்ற அவளின் பாவனைகளை மனம் வெகுவாக ரசித்தது.

"என்ன பேசுகிறாய்" என்ற கேள்வியைக் கண்களில் தாங்கி நின்றான்.

"என் கண்ல இருந்து கண்ணாடி கழட்டினீங்க இல்லையா அதைச் சொன்னேன்... நீங்களும் உங்க லிமிட்ல நில்லுங்க!" என்று சொன்னவளை பார்த்தவனின் பார்வை தானாக வெளிபடுத்தியது...

"i dont want any limits with you baby... want to cross all..." என்று.

அது வர்ஷினிக்குப் புரியவில்லை...

ஒரு சில நொடிகள் தான், அடுத்த நொடி "நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்... இதுவா நீ" என்று மனம் அவனையே சாடியது. தவறு அவன் செய்வது மிகவும் தவறு என்று புரியத்தான் செய்தது. அதிகப்ரசிங்கித்தனத்தின் உச்சம் அவளின் கண் கண்ணாடியக் கழற்றியது. கண் கண்ணாடி கழற்றுவது ஒன்றுமில்லை தான். ஆனாலும் இங்கே அவனுக்கு எதற்காக என்பது அதிகம்! மனம் அவனின் செய்கையை வெறுத்தது.

அடுத்த நொடி இதுவும் தோன்றியது! "இவளை யார் என் முன் வரச் சொன்னது! இப்படி என்னைக் கெட்டவன் என்று நானே உணர வா?"

அவள் நிறுத்தியதும் பதில் கொடுத்தான், "அது உன் கையில தான் இருக்கு, முடிஞ்சவரை என் முன்னாடி வராத! அது தான் உனக்கு சேஃப்!"

ஈஸ்வர் அந்த வார்த்தைகளை உணர்ந்து சொன்னான், அவனுக்கே தெரிந்தது தன்னுடைய எண்ணப் போக்கு ஒரு தரம் கெட்ட செயல் என்று.

ஈஸ்வர் அவனின் நிலை கொண்டு சொல்ல....

“என்ன ஒரு திமிர் இவனுக்கு” என்று தான் வர்ஷினிக்குத் தோன்றியது, “ஏன் வந்தா என்ன பண்ணிடுவீங்க?” என்றாள்,

“அது உனக்குத் தெரியவே வேண்டாம், நீ கிளம்பு” என்றான் கூலாக.

ஈஸ்வரின் வார்த்தைகளை விட அவனின் பாவனைகள் ஒரு உச்சபட்ச கோபத்தை வர்ஷினியினுள் கிளப்பியது.

“ரொம்பத் திமிர் உங்களுக்கு” என்று சொல்லியே விட்டாள்.

“தேங்க் யு” என்றான் அதற்கும் ஒரு புன்னகையுடன்.

கடுகளவுக் கூட ஈஸ்வரின் தப்பு வர்ஷினிக்குத் தெரியவில்லை. திமிரானவன் என்று தான் தோன்றியது, தப்பானவன் என்று தோன்றவேயில்லை. அப்படி ஒரு கண்ணோட்டத்தில் ஈஸ்வரை அவள் நினைக்கவேயில்லை.

“எதிரில் வந்தால், திருமணத்தில் பார்த்தது போல அலட்சியமாக தன்னை வேலையாள் போல நடத்துவான், திட்டுவான், மதிக்க மாட்டான், இப்படி உன்னுடைய லிமிட்ல நில் என்று அலட்சியப்படுத்துவான்” என்று தான் எண்ணங்கள் ஓடின.. வேறு தோன்றவில்லை அந்த சிறு பெண்ணிற்கு என்பது தான் நிஜம்.

வர்ஷினி முறைத்துப் பார்க்க.... அந்தக் கண்கள் மீண்டும் அவனை வா வென்று தான் அழைத்தது.

“ப்ளீஸ்! இதைப் போட்டுக்கோ!” என்று கண்ணாடியை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

எப்படி ஒரு மனிதனின் ஒவ்வொரு அணுவிலும் திமிர் இருக்க முடியும் என்று யோசித்துக் கொண்டே “போடா” என்பது போல அவனைப் பார்த்து அதைக் கையினில் வாங்காமல் திரும்பி நடக்கத் துவங்கினாள்.

வர்ஷினியின் நீண்ட கூந்தல் அது அவனின் பார்வையில் விழ, அவள் கதவை திறந்து வெளியே செல்லும் வரை பார்த்திருந்தவன், “அச்சோ! அவ டிரஸ் பார்க்காம போயிட்டேனே” என்று தோன்றியது. ஆம்! இந்த முறை அவள் முகம், அவள் கண்கள், இதைத் தவிர பார்வை செல்லவில்லை.

அதற்கு மேல் அவனின் யோசனைகள் செல்லவில்லை. ஏனென்றால் அவன் காஃபி ஷாப்பில் காத்திருந்தது ஐஸ்வர்யாவிற்காக, பார்க்க வேண்டும் போல இருக்கிறது என்று மெசேஜ் அனுப்பிக் கொண்டே இருந்தாள் நேற்றிலிருந்து.

அதன் பொருட்டே இந்த காஃபி ஷாப்பில் வந்து அமர்ந்து இருந்தான். ஆறு மணிக்கு தான் வரச் சொல்லியிருந்தான், இவன் முன்னமே வந்திருந்தான், அவள் வருவதற்கு முன் தான் வர்ஷினி அவனைப் பார்த்து வந்து பேசி சென்றிருந்தாள்.

அவள் அந்த புறம் சென்றதுமே ஐஸ்வர்யா வந்து விட்டாள். ஜஸ்ட் மிஸ் என்பார்களே அது போல..

வர்ஷினியிடம் பேசியது ஏதோ ஒரு வகையினில் மனதை சற்று லேசாகியிருக்க...

"ரொம்ப நேரமா வெயிட் பண்ணறீங்களா?" என்றபடி வந்து அமர்ந்த ஐஸ்வர்யாவைப் பார்த்து புன்னகைக்க முடிந்தது.

"இல்லை! இப்போ தான் கொஞ்ச நேரம் ஆச்சு!" என்றவனைப் பார்த்து புன்னகைக்க முயன்றாள். ஆனால் அது வருவேனா என்றது.

"வராததை எதுக்குக் கஷ்டப்பட்டு வரவழைக்கிற, என்னை பயப்படுத்துறதற்கா?" என்று இலகுவாகக் கேட்க,

எப்போதும் போல திட்டுவான், சும்மா என்னை எப்போப் பார்த்தாலும் மெசேஜ் போட்டு தொல்லை பண்ற? எதுக்கு என்னை இப்போ வர சொன்ன என்று கடிப்பான் என்று பலதும் நினைத்து பயந்து வந்திருக்க, இந்த புன்னகையை ஐஸ்வர்யா சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"எல்லா பிரச்சனையும் முடிஞ்சிடிச்சா? நீங்க சமாதானம் ஆகிட்டீங்களா?" என்றாள் எதிர்பார்ப்புடன்.

"இல்லை! எல்லாம் அப்படியேத் தான் இருக்கு!"

மேலே என்னக் கேட்பது என்று தெரியாமல் பார்வையில் மிரட்சியோடு பார்த்தாள்.

அதை பார்த்தவன் எல்லா பெண்களுடைய கண்களும் நம்மை வசீகரிக்கின்றனவா... இல்லை அவளுடையது மட்டுமா என்று வர்ஷினியை பற்றி யோசனைகள் ஓடின.

எதிரில் இருந்த ஐஸ்வர்யாவைப் பார்த்தான், நல்ல அழகி! ஆனால் அது ஒன்றும் அவனை அவள் புறம் ஈர்க்கவில்லை, காதல் சொல்ல வைக்கவில்லை.

ரூபாவை பள்ளி நாட்களாக தெரியும் என்றாலும் ஐஸ்வர்யாவை ரூபா ஜகன் திருமணத்தின் பின் தான் தெரியும். எப்போதும் முகம் புன்னகையுடன் இருக்கும், தான் உண்டு தான் வேலையுண்டு என்று இருப்பாள். அதிர்ந்து பேசக் கூட மாட்டாள். அழகி என்ற கர்வம் கொஞ்சமும் இருக்காது.

உறவினள் என்ற முறையிலும் ரஞ்சனியின் தோழி என்ற முறையிலும் அடிக்கடிப் பார்ப்பான். ஒரு முறை கூட எந்தக் காரணம் கொண்டும் தானாக அவனிடம் பேசியது இல்லை. ஒரு அதிகப்படி பார்வை கூட இருக்காது. அதுவே ஈஸ்வரை அவள் பால் ஈர்த்தது. காதலும் சொல்ல வைத்தது.

அவன் காதல் சொன்ன பிறகு வேண்டாம் என்பதுப் போல தலையை மட்டும் அசைத்து, அதற்கு அவன் பார்த்த பார்வையில் பயந்து, அவனின் பார்வை வட்டத்தில் கூட வரவில்லை. ஓடி ஒளிந்து கொண்டாள் அவனை தவிர்த்து..

விடாது அவளை துரத்தி சொல்ல வைத்தான்.. அதன் பிறகு தான் சற்று சகஜமாக அவனுடன் பேச ஆரம்பித்தாள். பேச பேச அவனைப் பிடித்து போக, அவனைத் தேடவும் ஆரம்பித்தாள். அதன் பிறகு தான் அதிகம் மெசேஜஸ், போன் கால்ஸ் எல்லாம். அதுவும் இந்த ஏழு மாதமாக!

தான் தன் படிப்பு என்று இருந்த பெண்ணின் மனதை கலைத்து காதல் சொல்ல வைத்தது ஈஸ்வர் மட்டுமே. இப்போது ஐ அம் நாட் ஹேர் மேக் என்று அவன் நினைப்பது எந்த வகையிலும் சரி கிடையாது.

“எதுக்கு இப்படிப் பார்க்குற! ஈசி!” என்றவன், “இப்ப எதுக்கு என்னை பார்க்கணும்னு சொன்ன?”

“ஏன்? சும்மா பார்க்கக் கூடாதா?” என்றெல்லாம் ஐஸ்வர்யா கேட்கவில்லை..

“நிஜம்மா எனக்கு என்னைச் சுத்தி என்ன நடக்குது தெரியலை... ரூபா இப்போ அதிகம் பேசறதே இல்லை.. என்ன ஏது அவ்வளவு தான்! வீட்டுக்கும் இனி வரமாட்டேன்னு அம்மாக்கிட்ட சொல்லிட்டா போல,

நீங்களும் வரவேண்டாம்னு எங்களையும் சொல்லிட்டா" என்று சொன்ன போது பேச முடியாமல் தொண்டை அடைத்தது.

"ஓஹ்! இதெல்லாம் எனக்குத் தெரியாது, உங்ககிட்ட கூட பேசலையா?" என்றான். ஆம்! பெரியம்மா ரூபாவிடம் இனி உன் வீட்டுடன் எந்தத் தொடர்பும் கூடாது என்று மிகவும் கண்டிப்புடன் சொல்லியிருந்தார். இது எதுவும் ஈஸ்வருக்கு தெரியாது.

"பேசலை... கல்யாணமாகிடுச்சு அவ தப்பிச்சிட்டா! நானும் அம்மாவும் எங்கே போவோம்.." என்று சொன்ன போது...

"எங்க வீட்டுக்கு வந்துடு" என்று ஈஸ்வரால் சொல்ல முடியவில்லை... அவனே அங்கே இருப்பனா? இல்லையா? தெரியாதே..

பாவமாகத் தான் இருந்தது அவள் பேசும் போது... ஆண் என்றால் வீட்டை விட்டு போய் விடலாம். பெண் எங்கே போவாள்?

"நான் இருக்கறன், நான் பார்த்துக்கறன், ரொம்ப மனசை வருத்திக்காத.."

"அஸ்வின் தான் எல்லா ப்ராப்ளம்க்கும் காரணம்! எனக்கே ரொம்ப கில்டியா இருக்கு என்னால ரூபா கூட ரஞ்சனி கூட பேசமுடியலை!"

"ப்ச்! அஸ்வின் மட்டும் இல்லை" என்பது போல தலையாட்டியவன், "ஜகன் அண்ணா! அவனால தான் எல்லாம், அவன் ஏமாந்து இருக்கான்! அஸ்வின் இல்லைன்னா இன்னொருத்தன்.. ஏமாருறவன் இருக்குற வரைக்கும் ஏமாத்துறவங்க இருப்பாங்க.."

"ஆனா இப்போ அஸ்வின் தான் நிறையக் க்ரியேட் பண்ணிட்டு இருக்கான், இன்னம் பண்ணுவான், அடங்குவான்னு தோணலை! எனக்கும் என்னை சுத்தி என்ன நடக்குதுன்னு தெரியலை! பார்க்கலாம்!" என்றவன்,

"அந்தப் பேச்சை விடு, உன்னோட என்ட்ரன்ஸ் என்ன ஆச்சு சொல்லு",

"ரிசல்ட் வந்துடுச்சு" என்றாள் சுரத்தே இல்லாமல்,

"என்ன போயிடுச்சா? போயிட்டுப் போகுது விடு!"

“இல்லை, செலக்ட் ஆகிட்டேன்! delhi AIMS ல OBG!”

“வாவ்! கங்க்ராட்ஸ்!... இதை ஏன் இவ்வளவு லேட்டா சொல்ற!”

“போவனா? இல்லையா தெரியலை?”

“ஏன்? ஏன்?” என்று ஆச்சர்யமாகக் கேட்டான்.

“அம்மா தனியா இருக்கணும்னு யோசிக்கறேன்! ரொம்ப டிஸ்டர்ப்டா இருக்காங்க”

“அதுக்காக இப்படி ஒரு ஆப்பர்ச்சுநிட்டியை மிஸ் பண்ணுவியா, இட்ஸ் ரியலி பேட்! நீ உன்னோட ப்ரொஃபஷனை ரொம்ப நேசிக்கிற, எனக்குத் தெரியும், போ! எதுக்காகவும் தயங்காத! நாளைக்கு நமக்கு கல்யாணம் ஆகும் போது உங்கம்மா தனியா தானே இருப்பாங்க”

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ஈஸ்வரை பார்த்தாள். ஏனென்றால் அவளுக்கு நம்பிக்கையே இல்லை... இத்தனை பிரச்சனைகளுக்கு நடுவினில் தங்கள் திருமணம் நடக்குமா..? ஈஸ்வர் இன்னமும் தன்னை திருமணம் செய்து கொள்ள விரும்புவானா?

இந்த வீட்டில் மீண்டும் பெண்ணெடுக்க ஈஸ்வர் வீட்டினர் ஒத்துக்கொள்வரா.. அதையும் விட அப்பாவும் அஸ்வினும் நடக்க விடுவார்களா.

நம்பிக்கை தரும் வகையில் ஈஸ்வரும் எதுவும் செய்யவில்லையே.. எப்பொழுதும் அவளைத் திட்டிக் கொண்டு... போன் எடுக்காமல்... எதையும் அவளிடம் பகிராமல்...

“நடக்குமா?” என்றாள் நம்பிக்கையின்றி.

“நடக்கும்! நீயாவது என்னை நம்பு!” என்றவன்.. “என்னாச்சு உன் ஃபிரண்ட் ரிசல்ட்?” என்று ரஞ்சனியைப் பற்றிக் கேட்டான்.

“அவளுக்குக் கிடைக்கலை ஏதோ PG Diplamo கிடைச்சிருக்கு”

“அது அவ பண்ண மாட்டா.. விடு! எனக்கென்ன?” என்றவன்,

“வாயேன், டின்னர் போகலாம்! லெட்ஸ் செலப்ரேட்”

“இல்லையில்லை காஃபி போதும்! லேட் ஆகிடுச்சு! நான் போகணும்!”

“ஓகே”, இரண்டு பேருக்கும் cool coffee ஆர்டர் செய்தான்.

அமைதியாக இருவரும் குடித்து முடித்தனர், கிளம்பும் போது தான் ஞாபகம் வந்தவனாக.. “பணம்? பணம் எதுவும் பிரச்சனையில்லையே.. பணம் வேணுமா?”

“இல்லையில்லை! ப்ளீஸ் வேண்டாம்! அங்க ஸ்டைபன்ட் வரும்... அது போதும்.. நான் மேனேஜ் பண்ணிக்குவேன்”.

“ஏன்? உங்கப்பா உங்கண்ணன் கொடுக்கலையா...”

“கொடுப்பாங்க! எனக்கு வேண்டாம்.. நான் என்னைப் பார்த்துக்குவேன்”

“நீ பார்த்துக்குவ! இருந்தாலும் தேவைன்னா என்கிட்டே கேட்க தயங்காதே”.

“கண்டிப்பாத் தேவைன்னா உங்க கிட்ட மட்டும் தான் கேட்பேன்!” என்றாள் சிறு புன்னகையுடன்.

“நம்பிட்டேன்!” என்று ஈஸ்வரும் புன்னகைத்தான். வாங்க மாட்டாள் என்று தெரியும், எத்தனை விசேஷங்களில் பார்த்திருக்கிறான், ரூபாவும் ரஞ்சனியும் வைரங்களில் சுற்றும் போது, தங்க நகைகள் மட்டுமே! அது கூடக் கண்ணுக்கு உறுத்தாத வகையினில்.

“நீங்க ரெண்டு பேரும் எல்லாம் பூட்டிக்கறீங்க உங்களோட தானே அவளும் சுத்தறா! அவளுக்கு கொடுத்தா என்ன?” என்று ஈஸ்வரே சில முறை கேட்டிருக்கிறான்.

“அண்ணா டேய்! அவ வாங்க மாட்டேங்கறா! போட்டுட்டு விசேஷம் முடிஞ்சதும் திருப்பிக் கொடுத்துடு சொன்னாக் கூட வாங்க மாட்டேங்கறா.. அவளோடது அவளுக்கு போதுமாம்! அடுத்தவங்க யூஸ் பண்ணினதை யூஸ் பண்ண மாட்டாளாம், ஆமாம்! நீ எதுக்கு இதைக் கேட்கற” என்று ரஞ்சனி அவனிடம் துருவி, அவன் மாட்டி என்று அசடு வழிந்த தருணங்கள் பல.

இப்போது அதை நினைக்க புன்னகை மலர்ந்தது, எல்லாம் ஏதோ முந்தைய ஜென்ம நிகழ்வுகள் போல தோன்றியது.

“இப்படி ஃபிராடு அப்பா! அண்ணன்! இவள் இப்படி!” என்று நினைத்தவாறே அவளை பார்த்தான்.

“ஜாயின் பண்ணு! மிஸ் பண்ணாத!” என்று சொல்லி, அவள் “சரி” என்று சொல்லும் வரை அவளைக் கிளம்ப விடவில்லை.

அவள் ஒருவாறு “நான் கண்டிப்பா ஜாயின் பண்றேன்” என்று சொன்ன பிறகு ..

“என் மேல ப்ராமிஸ்” என்று அவளின் கைப் பிடிக்க.

“ப்ராமிஸ்! எல்லாம் வேண்டாம்!” என்று கையை உருவியவள், “கண்டிப்பாப் பண்ணுவேன்!” என்று எழுந்தாள்.

அப்போதுதான் மேஜை மீது இருந்த கண்ணாடியை பார்த்தவள் “யாருது இது” என்றாள்.

“ம்! என்னோட கேர்ள் ஃபிரண்ட்து” என்றான் சன்ன சிரிப்புடன்.

“யார் அந்த பியுட்டி?”

“ம்! பியுட்டி இல்லை ஒரு மோகினி பிசாசு! ம்! ஒரு வகையில பியுட்டிபுள் பிசாசு!” என்றான்.

“நம்பிட்டேன்!” என்று அவனைப் போல சொல்லிச் சிரித்தவள், “பயந்துட்டே வந்தேன் திட்டுவீங்களோன்னு, தேன்க் யு” என்று அவள் சொல்ல,

“சாரி! இந்தப் பண விஷயம் வந்ததுல இருந்து நான் நானாவே இல்லை இப்ப ரஞ்சனி விஷயம் வேற.. இன்னம் எதுவும் தீரலை, நடுவுல நீ போன் பண்ணும் போது எடுப்பேனா? மாட்டேனா? எடுத்தாலும் திட்டாம வைப்பேனா? எதுவும் சொல்ல முடியாது”.

“எதுனாலும் பரவாயில்லை! நான் தாங்கிப்பேன்!” என்று புன்னகையுடன் சொல்ல,

“அது எனக்குத் தெரியுமோ என்னவோ? அதுதான் இப்படி கத்துறனோ?” என்றான்.

சிரிப்புடனே அங்கிருந்து சென்றாள்.

**கண்ணுக்குள் நூறு நிலவா? இது ஒரு கனவா?**

## அத்தியாயம் பத்தொன்பது :

## சூழ்நிலைகளின் கைப்பாவைகள் தான் நாம்!!!

அன்று மாலை தான் பத்மநாபன் ரஞ்சனியின் வரவேற்பு... நாட்கள் வேகமாக ஓடின.

ஈஸ்வரும் பணத்திற்கு வெகுவாக முயன்று கொண்டிருந்தான். "ஒரிருவர் ஒகே வாங்கிக்கொள் எவ்வளவு வேண்டுமானாலும் ஆனால் எங்களுக்கு என்ன லாபம்" என்று கன்சர்னின் ஷேர் கேட்டனர்.

"அது எப்படி முடியும்...?" அதுவரையிலும் அவனின் எண்ணம் ஈஸ்வர் பைனான்ஸ் அவனது... அவன் அடையாளம்... அதில் வேற்றாளுக்கு பங்குகள் கிடையாது... அதை விட முடியாது என்பது போலத் தான்...

முரளி வேறு ஒரு பக்கம், "உன்னை சிரமப்படுத்திக் கொள்ளாதே! பணத்தை வாங்கிக் கொள்" கட்டாயப்படுத்திக் கொண்டிருந்தான் என்று சொல்ல முடியாமல் கெஞ்சிக் கொண்டு இருந்தான்.

"டேய்! சொன்னா கேள்றா" என்று...

பணம் ஒரு பக்கம்.... இன்னம் அஸ்வின் என்ன செய்வானோ.... என்று ஒரு பக்கம்.. மனம் ஒரு நிலையில் இல்லை.

வரவேற்பு மிகுந்த பொருட்செலவில் மிகுந்த பிரம்மாண்டமாய் தான் ராஜாராம் ஏற்பாடு செய்திருந்தார். திருமணம் வீட்டினருக்கு தெரியாமல் நடந்த குறையை இதன் மூலம் நிவர்த்தி செய்ய விரும்பினார்.

அது மட்டுமன்று ஈஸ்வருக்கும், உங்கள் பெண்ணை நாங்கள் எவ்வளவு நன்றாக வைத்துக் கொள்வாம் என்று அதன் மூலம் காட்ட விரும்பினார்.

அந்தோ பரிதாபம் ஈஸ்வருக்கு வரவேற்பிற்கு வரும் எண்ணமே இல்லை என்று அவருக்கு எப்படி தெரியும்.

ஈஸ்வர் வீட்டில் மிக நெருங்கிய சொந்தங்களை மட்டுமே அழைத்து இருந்தனர். பெரிய அளவில் அழைக்கவில்லை. ஈஸ்வரின் ஒப்புதல் இல்லாமல் யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

வீட்டினர் அவனின் முகத்தைப் பார்ப்பது, எப்படிக் கேட்பது என்பதாக மாற்றி மாற்றி அவனைப் பார்த்து சென்று கொண்டிருந்தனர். யார் முகத்திலும் சுரத்தில்லை.

காலையில் வந்த ஜகனின் அக்கா சத்யா அவனிடம் வந்து "விஷ்வா, நாம அவளுக்கு என்ன செய்யப் போறோம்" என்றார்.

"என்ன? என்ன செய்யணும்?"

"ம்! சீர் செய்யணும் டா"

"நம்மளால எதுவும் முடியாதுன்னு தான் அவ போய்க் கல்யாணம் பண்ணிகிட்டா! இப்ப நம்ம என்ன செய்ய? ஒன்னும் செய்ய வேண்டாம்! இப்ப நம்ம செய்யற நிலைமைல இல்லை!"

"அப்படி எல்லாம் சொல்லக் கூடாதுடா? அவளுக்குப் பண்ணின நகை அப்படியே தானே இருக்கும்! அதையாவது கொடுப்போம்"

"இல்லை! அதெல்லாம் விக்கப் போறோமோ? வைக்கப் போறோமோ? அதெல்லாம் பேசாதீங்க.."

"நம்ம பண்ணலைன்னா நமக்கு ரொம்ப அசிங்கம்"

"எல்லாம் குடுத்துட்டோம்னா அப்புறம் நம்மக் கிட்ட பணம் செலுத்தினவங்களுக்கு பணம் குடுக்க முடியாம போனா அது இன்னும் அசிங்கம்" என்றான் நிர்தாட்சண்யமாக.

யாரும் அவனிடம் பேச முடியவில்லை... இதில் இன்னும் அவன் வருவானா இல்லையா என்று யார் கேட்பது...

அதன் காரணம் யாராலும் ஒரு உற்சாகத்தோடு இருக்க முடியவில்லை,

ஈஸ்வர் வரவில்லை என்றால் எல்லோருக்கும் பெரிய பிரச்சனை என்று காட்டிக் கொடுத்துவிடும். ஈஸ்வருக்கு விவரம் தெரிந்த நாளாக வீட்டின் எல்லா நிகழ்வுகளிலும் அவன் தான் முன் நிற்பான். அதுவும் "டேய், அண்ணா!" என்ற ரஞ்சனியின் அழைப்பு விசேஷ வீடுகளில் இன்னம் பிரசித்தம். அவன் இல்லாத நிகழ்வு வீட்டினரால் யோசிக்கக் கூட முடியவில்லை.

இப்போதே பலப் பல கேள்விகள்... ஏதோ ஒன்று கூறி சமாளித்தனர். தங்கள் பெண்ணை அவர்களால் என்றும் விட்டுக்

கொடுக்க முடியாது.

அவன் எப்பொழுதும் போல அலுவலகம் கிளம்பிக் கொண்டு இருந்தான்.

கிளம்பும் நேரம் ராஜாராமும் கமலம்மாவும் வந்தனர். இதுவரை ராஜாராம் அவர்கள் வீட்டிற்கு வரவில்லை. எல்லா விஷயத்தையும் அவரின் அப்பாவும் கமலம்மாவும் தான் பேசி முடிவு செய்தனர். அதுவும் அவனில்லாத நேரம் தான் வந்தனர். அதனால் யாரையும் சந்திக்கும் வாய்ப்பு இல்லை. இப்போது அவன் கிளம்பு முன்னர் வந்திருந்தனர்.

இந்த ஈஸ்வர் வரவேற்பானோ இல்லையோ என்று வீட்டினர் தயங்கி நிற்க, சௌந்தரி பாட்டி தான் “விஷ்வா” என்று குரல் கொடுத்தார்.

எதற்குக் கூப்பிடுகிறார் என்று தெரியாமல் மேலே இருந்து எட்டிப் பார்த்தவன், இவர்களைப் பார்த்ததும் நொடிப் பொழுதும் தாமதிக்கவில்லை, “வாங்கப்பா! வாங்கம்மா!” என்று இறங்கி வந்தான்.

“ஹப்பா!” என்று அனைவரும் விடுதலை பெற்றவர்களாக, ரூபா தண்ணீர் கொண்டு வர ஓட, நமசிவாயம் “உட்காருங்க சம்மந்தி” என்று சொல்ல, அங்கே உயிர்ப்பு வந்தது.

“உடம்பு எப்படி இருக்குப்பா?” என்று சம்ப்ரதாயமாக ஈஸ்வர் கேட்க, “பரவாயில்லை” என்றார். ஆனால் அவன் முன்பு பார்த்ததற்கு இன்னம் இளைத்து இருந்தார்.

அவர் அமர்ந்தவர் ஈஸ்வரையும் அருகில் அமருமாறு கைக் காட்ட அமர்ந்தான். அதுவே சொன்னது தன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறார் என்று.

அமர்ந்ததும் மெதுவான குரலில், “நடந்தது எதுன்னாலும் விட்டுடு, வீட்டுக்கு வா, கண்டிப்பா ரிசப்ஷன்க்கு வரணும்..” என்றார்.

“இப்படி எல்லோரும் வருந்தி வருந்தி கூப்பிட்ற அளவுக்கு நான் முக்கியமில்லை! நீங்க இதை நல்லபடியா நடத்துங்க!”

“நீ முக்கியமில்லையா? யார் சொன்னது? உன்னைப் பார்த்து தான் உங்க வீட்டை பத்தி எனக்கு ஒரு பிரமிப்பே. கண்டிப்பா உன் தங்கை நல்லா இருப்பா... பத்து நல்லா பார்த்துக்குவான். நான்

எப்படியோ என் பசங்களை எந்த வகையிலும் குறை சொல்ல முடியாது" என்றார் நேரடியாகவே.

"அதுல எல்லாம் எனக்கு ஒரு சந்தேகமும் இல்லைப்பா, என்னோட கோபம் யார் மேலயும் இப்போ இல்லை. ரஞ்சனி மேல மட்டும் தான்" என்றான் அவனும் நேரடியாக, "அதுக் கூட என்கிட்ட சொல்லலைன்னு தான்".

"எதுன்னாலும் பரவாயில்லை! ரிசப்ஷன் வரணும்.. வராம இருந்துடாத... நம்மளோட இத்தனை நாள் பழக்கதுக்காக, என் பையனோட கல்யாணம்ன்னு நினைச்சு வா.. இந்தக் கோபம் எல்லாம் ஒன்னுமில்லை! நாளடைவுல போயிடும்.. அப்புறம் நீயே நினைப்ப.. போகாம விட்டுட்டோம்னு" என்றார்.

அவர் அவ்வளவு கேட்கும் போது அவனால் மறுக்க முடியவில்லை, "வருகிறேன்" என்றான்.

குடும்பத் தளைகள் தன்னை சுழலாய் இழுக்கக் கண்டவன், முதன் முறையாக நானும் பொறுப்பற்ற பிள்ளையாய் இவ்வுலகில் இல்லாமல் போனேனே என்று வருந்தினான். ஏதோ ஊர் உலகத்திலேயே அவன் தான் பொறுப்பான பிள்ளை என்பது மாதிரி. அந்த நாளின் முடிவில் நானா இப்படி என்று அவனே வருந்தப் போவது தெரியாமல்.

ராஜாராமிற்கு தெரியவில்லை இப்படி வருந்தி அவனை அழைத்து தன் பெண்ணின் வாழ்க்கையில் பெரிய சிக்கலை உண்டு செய்யப் போகிறார் என்று.

அவர் கிளம்பும் சமயம்.. "வீட்ல இருக்குறவங்க சீர் செய்ய ரொம்ப விருப்பப்படறாங்க. எனக்கு அரைகுறையா செய்ய விருப்பமில்லை.. திடீர் திருமணம் எதிர்ப்பார்க்கலை.. கொஞ்சம் சமயம் கொடுத்தீங்கன்னா.." என்று ஈஸ்வர் இழுக்க..

"நீங்க உங்க பொண்ணுக்குச் செய்யப் போறீங்க. எல்லாம் உங்க விருப்பம் தான்" என்றார் கமலம்மா... அதையே ராஜாராமும் உணர்த்த.. தலையசைத்து அதை ஏற்றான். மரியாதை கொடுப்பதிலும் அவனை மிஞ்ச முடியாது... மரியாதையின்றி நடப்பதிலும் அவனை மிஞ்ச முடியாது.

சில தின அவகாசம் என்பதால் பெரிய மண்டபங்கள் எதுவும் கிடைக்க வில்லை.. அதனால் ஒரு பைவ் ஸ்டார் ஹோட்டலில் தான் திருமண வரவேற்பு..

ஹோட்டலின் வாயிலில் ஜண்டை மேளத்துடன் ஆரம்பித்தது வரவேற்ப்பு.

ஹோட்டலின் ஒரு புறத்தில் திறந்த வெளியில் தான் வரவேற்ப்பு.

பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மேடை போடப்பட்டு அங்கே மணமக்கள் இருந்தனர். ஆங்காங்கே சிறு சிறு குழுக்களாக சேர்கள். வண்ண விளக்குகள் அந்த இடத்தை தேவலோகமாய் காட்டியது, அங்கிருந்த மக்களின் நடை உடை பாவனைகளும் அப்படித் தான் இருந்தது.

அங்கு இருந்த ஏற்பாடுகளில், கவனிப்பில் ஈஸ்வர் வீட்டினரின் மன சுணக்கங்கள் குறையத் துவங்கின. உறவுகளும் எதுவும் பேச வாய்ப்பில்லாமல் எல்லாம் சிறப்பாக இருந்தது. முக்கியமாக மாப்பிள்ளை பெண்ணின் பொருத்தம். பத்மநாபன் வசீகரிக்கும் தோற்றத்துடன் கம்பீரமாக இருந்தான். தங்கள் இனம் இல்லை என்பது குறை, அதை அப்போதைக்கு பேச விடாமல் அங்கே எல்லாம் சிறப்பாக இருந்தது.

எல்லாம் ஓடியாடி பார்க்கவில்லை, ஒரே இடத்தில் அமர்ந்து ராஜாராம் எல்லாம் கவனிக்க, தாத்தா வந்த விருந்தினர்களை வரவேற்க, முரளியும் ஷாலினியும் பம்பரமாய் சுழன்று எல்லாவற்றையும் மற்ற நெருங்கிய உறவினர்களோடு கவனித்தனர்.

மேடையில் இருந்த ரஞ்சனியின் கண்கள் விஷ்வா வருகிறேன் என்று சொன்னானாமே வருவானா? இல்லையா? என்று தான் மனதில் ஓட்டிக் கொண்டிருந்தாள்.

திருமணமானது முதல் ரஞ்சனி மனைவியாய் அமைந்ததில் மிகுந்த சந்தோஷத்தில் இருந்த பத்மநாபன், இன்றைய ரஞ்சனியின் அலங்காரத்தில் ஒரு பரவசத்தில் இருந்தான்.

வருபவர்களையும் பார்த்தபடி மனைவியையும் பார்த்தபடி இருந்தான். அதை உணரும் நிலையில் இல்லை ரஞ்சனி. ஒரு வாரத்திற்கும் மேல் ஆகிவிட்டது. ஒரு வார்த்தைக் கூட அதிகப்படியாய் இருவரும் பேசிக் கொள்ளவில்லை, பேச இடமும் ரஞ்சனி கொடுக்கவில்லை, என்ன ஏது அதோடு பேச்சுக்கள் நின்று விடுகின்றன.

அதுவும் இரவில் போர்த்திய போர்வை சற்றும் அசங்காமல் முழுதாக மூடிக் கொண்டு முகத்தைக் கூட காட்டாமல் அவள்

உறங்கும் விதம் பத்மனாபனுக்கு சிரிப்பு தான் வரும். அவள் உறங்கிய பிறகு முகத்தை மூடியிருப்பதை மட்டும் விலக்கி அவள் தடையின்றி சுவாசிக்க ஏதுவாய் செய்து தான் அவன் உறங்குவான்.

அவனாக பேச வேண்டும் என்று நினைத்தாலும், ஒரு தயக்கம் தானாக வந்து அமர்ந்து விடுகின்றது. இப்போதைக்கு அவள் மனைவி என்பதே அவனுக்கு போதுமானதாய் இருந்தது.

இன்று மணப்பெண் அலங்காரத்தில் ஜொலித்தாள். பார்வைத் தானாக நிமிடத்திற்கு ஒரு முறை ரஞ்சனியைத் தழுவி மீண்டது.

ஈஸ்வர் வீட்டினர் வந்ததில் இருந்து பிரணவியைத் தூக்கிக்கொண்டு வர்ஷினி சுற்ற, அவளின் பின்னோடு சரணும் சுற்றிக் கொண்டு இருந்தான்.

குழந்தைகள் இருவரும் வர்ஷினியோடு இருப்பதால்... ரூபா வந்தவர்களை கவனித்துக் கொண்டிருந்தாள்.

மேடையில் அலங்காரம் செய்யப்பட்டிருந்த ஒரு பொருளைக் காட்டி சரண் ஏதோ கேட்க, “வா” என்று அவனை அழைத்துக் கொண்டு மேடையேறினாள் வர்ஷினி. ஏறும் அவளைத் தான் பத்மநாபனும் ரஞ்சனியும் பார்த்துக்கொண்டு இருந்தனர்.

அன்று தான் முதன் முதலில் புடவை உடுத்தி இருந்தாள் வர்ஷினி, அண்ணனின் திருமண வரவேற்பு என்பது ஒரு புறமிருக்க அன்று அவளின் பதினெட்டாவது பிறந்த நாள்.

ஒரு ரோஜா வண்ண பட்டுப் புடவை அவளை பாந்த்தமாய் தழுவி இருந்தது. புடவையில் பெரிய பெண்ணாய் தெரிந்தாள்.

அவள் மேலே வந்ததும் அத்தையிடம் பிரணவி தாவ முயல, ரஞ்சனியும் கை நீட்ட, “வேண்டாம் அண்ணி! உங்க தலையில இருக்குற அந்தச் சுட்டி எல்லாம் பிச்சு எடுத்துடுவா” என்றாள் பெரிய மனுஷியாய் வர்ஷினி.

ரஞ்சனிக்குத் தானாக புன்னகை மலர.. “நிஜம்மா இப்போ தான் என் தலையில இருக்குற எல்லாத்தையும் பிச்சு எடுத்தா, நான் பாருங்க தலை எல்லாம் கலைஞ்சு மறுபடியும் பின்னினேன்”.

“இப்போ என் கழுத்துல இருக்குற நகை எல்லாம் பிச்சிட்டு இருக்கா, இவனுக்கு உங்க பின்னாடி இருக்குற அந்த கார்லண்ட்

வேணுமாம். நான் காட்டிட்டு மட்டும் போறேன்" என்று சொல்லும் போதே,

ரஞ்சனியின் கண்கள் ஒரு இடத்தில் நிலைக்க, தன் பேச்சில் அண்ணி கவனம் செலுத்தாமல் யாரை பார்க்கிறாள் என்று வர்ஷினி பார்வையைத் திருப்ப பத்மநாபனும் அங்கே பார்க்க, அங்கே ஈஸ்வர் இருந்தான்.

கவனமாக மேடையை பார்க்காமல் வேறெங்கோ பார்த்துக் கொண்டு, முரளி அவனைப் பார்த்து வேகமாக அவனிடம் விரைந்து "வாடா" என்று சந்தோஷமாக வரவேற்க, மெலிதான புன்னகை ஈஸ்வரின் முகத்தில்.

க்ரீம் கலர் பேன்ட், வைட் கலர் ஷர்ட் என்று ஒரு ஃபார்மல்ஸ் அவ்வளவே, அதற்குள் அவர்களின் உறவுகள் பலர் வந்திருக்க, அவர்களை வரவேற்கும் அவசியத்தை உணர்ந்தவனாக எல்லோரிடம் பேசத் துவங்கினான்.

தன்னைப் பார்ப்பானா என்று ரஞ்சனி பார்க்க, பார்க்கவேயில்லை. மெலிதாக கண்களில் நீர் நிறைந்தது.

அதைப் பார்த்திருந்த வர்ஷினி "அண்ணி! உங்க அண்ணா பார்ப்பாங்களான்னு நீங்க பார்த்து அழ, உங்க மேக் அப் கலைஞ்சு என் அண்ணா பயந்து ஓடிடப் போறாங்க! அழாதீங்க! டோன்ட் பீ எமோஷனல்!" என்று சொல்ல,

அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் ரஞ்சனி இல்லை... அதற்குள் வாழ்த்துவதற்காக எல்லோரும் மேடை ஏற ஆரம்பித்தனர்.

அவசரமாக வர்ஷினியிடம் "விஷ்வாவை இங்கே வரச் சொல்றியா?" என்றாள் ரஞ்சனி.

"சரி" என்பது போல தலையசைத்து வர்ஷினி இறங்க, அவளை நூல் பிடித்து சரணும் இறங்கினான்.

குழந்தைகளுடன் ஈஸ்வர் இருந்த இடம் நோக்கி வர்ஷினி செல்ல, அதற்குள் கமலம்மா கூப்பிட, "இருங்கம்மா வர்றேன்!" என்று சொல்லி அவன் இருந்த இடம் நோக்கி சென்றாள்.

யாரிடமோ ஈஸ்வர் மும்முரமாக பேசிக் கொண்டு இருந்தான். வர்ஷினியைக் கவனிக்கவில்லை. அவனுடைய இறுகிய தோற்றம்

வர்ஷினியை தயங்கச் செய்தது. இயல்பாக அருகில் செல்ல முடியவில்லை.

சரணிடம் “சித்தப்பா கூப்பிடு” என்று சொல்ல, அவன் சென்று ஈஸ்வரின் சட்டையைப் பிடித்து இழுத்தான். யார் என்று ஈஸ்வர் பார்க்க.. சரண்.

“என்ன சரண்” என, “அக்கா கூப்பிடறாங்க” என்றான்.

“யார்” என்று ஈஸ்வர் பார்க்க அங்கே வர்ஷினி பிரணவியைத் தூக்கி வைத்துக் கொண்டு...

பின்னிருந்த வண்ண விளக்குக்குகள் அவனின் பார்வைக்கு அவளை தேவதையாக காட்டியது. காக்ரா சோலி, ஜீன்ஸ், பேகி, ஸ்கிர்ட் என்று வித விதமான உடைகளில் அவளைப் பார்த்திருக்கிறான். இன்னம் புடவையில் பார்த்ததில்லை.

புடவையில் இருந்த வர்ஷினியிடமிருந்து அவனால் பார்வையைத் திருப்ப முடியவில்லை. ரோஜா வண்ண புடவைக்கும் அவளின் நிறத்திற்கும் எந்த வித்தியாசமும் தெரியவில்லை. அதன் மேல் இருந்த நகைகளும் தெரியவில்லை.

சற்று தூரத்தில் இருந்ததினால் கண்கள் தெரியவில்லை. அதனால் அவன் பார்வை கண்களில் நிலைக்கவில்லை, உடல் முழுவதுமே ஓடியது.

அந்தோ பரிதாபம்! எதுவுமே தெரியவில்லை, புடவை ஒரு சிறு பாகத்தையும் வெளியே காட்டவில்லை. முதல் முறை புடவை கட்டுவதால் கனமான புடவைக் கட்டவில்லை, சாஃப்ட் சில்க் தான் கட்டியிருந்தால்! அது எங்கேயும் நழுவி விடாதபடி எல்லா இடத்திலும் சேஃப்டி பின் குத்தி இருந்தாள்.

கொழுக் மொழுக் என்று இருந்த அவளின் உடல்வாகு தான் தெரிந்தது. பேசிக் கொண்டு இருந்தவரிடம் “இதோ வந்துடறேன்” என்று சொல்லியபடி அவளின் அருகில் போனான்.

கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம் தான் கள்வெறி கொள்ளுதடி! உன்னைத் தழுவிடிளோ கண்ணம்மா உன்மத்தம் ஆகுதடி என்ற கவியின் வரிகள்..... தொட்டால் தான்!

ஆனால் தொடாமலே அந்த உணர்வுகள் அவனுள்.. ஒரு ஊடுருவும் பார்வையோடு அவளைப் பார்த்தான்.

**உடைகள் தடைகளாகிப் போயின!!!**

**அத்தியாயம் இருபது :**

**அடங்காமலே அலைபாயுதே!..... மனம் அல்லவா!!!**

சுற்றிலும் கசகச வென்று உறவுகள்.. ஆங்காங்கே பேசியபடி, சிரித்தபடி... ஒரு பக்கம் பஃபே உணவு ஆரம்பிக்க.. உறவுகள் அந்த இடத்தை நோக்கி சிலர்... மேடையை நோக்கி சிலர்... என்று கலைய ஆரம்பித்தனர்.

தூரத்தில் அமர்ந்திருந்த ராஜாராம் மகளின் மேல் ஒரு பார்வையை வைத்திருக்க, அவளை நோக்கி ஈஸ்வர் செல்வதை பார்த்திருந்தார்.

ஈஸ்வரின் ஊடுருவும் பார்வை ஒரு வித அச்சத்தை மனதிற்கு கொடுத்தது... அருகில் வந்து பார்த்தது பார்த்தபடி நின்றான், பேசவில்லை. கையில் இருந்த பிரணவி அவனை நோக்கித் தாவினாள்.

அவளைக் கையில் வாங்க முற்பட, வர்ஷினியும் அவளைப் பிடித்தபடி நிற்க, “ப்ரணியை விடு ” என்றான்.

வர்ஷினி பிடியைத் தளர்த்த, பிரணவியை ஏந்திக் கொண்டவன், “எதுக்கு கூப்பிட்ட?”

“அண்ணி! உங்களை மேல கூப்பிட்டாங்க” என்றாள்.

“சரி” என்பது போல ஒரு தலையசைப்பு அவ்வளவே, பிறகு அப்படியே நின்று கொண்டிருந்தான்.

“நான் போகவா?” என்று வர்ஷினி கேட்க,

“போ” என்பது போலத் தலையசைப்பு..

குழந்தையை வாங்குவதா? வேண்டாமா? சரணை உடன் அழைத்து செல்வதா? என்று குழப்பம்.. அது முகத்திலும் தெரிந்தது. கண்களும் பிரதிபளித்தது.

அவன் குழந்தையை நீட்டவில்லை.. அந்தக் கண்களை பார்த்து நிற்க, திரும்பி திரும்பி பார்த்தபடி சென்றாள். சென்றவள் அப்பாவின் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள்.

மனதிலும் ஒரு சஞ்சலம்... என்னவென்று தெரியவில்லை... என்ன பார்வை அவன் பார்வை என்று ஆராய முயன்றாள்.

வர்ஷினி சென்றதும் அவனின் கவனம் எல்லாம் மேடையை நோக்கித் திரும்பியது.

அங்கே இன்னம் நிறைய பேர் இருக்க... இவனுக்குப் போக விருப்பமில்லை... ஆனாலும் இது அவர்களின் தினம்... அதில் தன்னால் ரஞ்சனிக்கு மன சுணக்கம் வேண்டாம் என்று அறிவு நினைத்தது... மனம் போகவேண்டாம் என்றது.

மனதிற்கும் அறிவிற்கும் இடையில் போராட ஆரம்பித்தான். ஏற்கனவே நிறைய மனதிற்குள் போராடி தான் இந்த வரவேற்ப்பிற்கு கிளம்பி வந்திருந்தான்.

“நீ மட்டும் உலகம் அல்ல! உன்னைச் சுற்றி எல்லோரும் இருக்கிறார்கள்!” என்று சொல்லிக் கொண்டு.

இத்தனை நேரம் வர்ஷினி குழந்தைகளைப் பார்க்க, இப்போது இவன்... அவர்களை வைத்திருப்பதால் ஒரு ஓரமாக அமர்ந்து கொண்டான். யாரையும் தேடித் போய் பேசும் அவசியமின்றி. எல்லோரும் அவனை தேடி வந்து பேசிப் போனர். முரளியும் வந்து வந்து பார்த்துப் போனான்.

கிட்ட தட்ட ஒரு மணி நேரம் அவர்களுடன். வீட்டினர் வந்து பார்த்து குழந்தையைக் கேட்க, இருக்கட்டும் என்று விட்டான். ஓரளவிற்கு கூட்டம் குறைய ஆரம்பித்தது. ரூபா வந்தவள் “அவளுக்கு பசிக்கும் கொடு! சாப்பிட வைக்கிறேன்!” என்று குழந்தையை ஏறக்குறைய பிடிங்கியவள்...

“நீ மேல போ விஷ்வா” என்றாள்.

“ம்! போறேன்! நீ போ!” என்று அவளிடம் எரிந்து விழுந்தான். அம்மா ஈஸ்வரிடம் மேலே போகலாம் என்று அழைக்க வந்தவர், இவன் இப்படி பேசியதை பார்த்து எல்லோர் முன்னிலும் சத்தம் போட்டு விடக் கூடாதே என்று பயந்து திரும்ப போய் விட்டார்.

இத்தனை நேரம் ஆட்கள் இருந்ததால் ஒன்றும் தெரியவீல்லை இப்போது ரஞ்சனி மீண்டும் அண்ணனை தேட.. அவளின் பார்வை போகும் திக்கை அறிந்து, யோசியாமல் பத்மநாபன் மேடையை விட்டு இறங்கி ஈஸ்வரின் அருகில் வந்தான்.

எங்கே இறங்கி போகிறான் என்று எல்லோரும் பார்க்க... ஈஸ்வரின் அருகில் வந்தவன்... "மேல வாங்களேன்... உங்களை ரொம்ப தேடுறா... அவ செஞ்சது சரியோ? தப்போ? ப்ளீஸ்! வாங்க!" என்று மணமகனே கேட்க...

எல்லோரும் தங்களை பார்ப்பதை வேறு உணர்ந்தவன்.. எழுந்து "வாங்க" என்று பத்துவுடன் மேலே செல்ல... எல்லோரும் நிறைவாய் பார்த்து இருந்தனர்.

ஈஸ்வர் அருகில் வந்ததும் தானாக ரஞ்சனியின் கண்கள் மீண்டும் கலங்க... அவள் கண்கள் கலங்குவதை விரும்பாதவன்... "அழுது! உன் கண்ல இருக்குற மை எல்லாம் கலைஞ்சு, மாப்பிள்ளை பயந்து ஓடிடப் போறார்!" என்றான்.

"மேக் அப் இல்லாத என் முகத்தை பார்த்துட்டார்! ஓடலை!" என்று ரஞ்சனி கண்களில் நீரோடு புன்னகைக்க முயன்று சொல்ல...

"அழுகையை நிறுத்து! நிஜம்மா பயந்துடுவார்!" என்றான் திரும்பவும்,

"சாரி!" என்று ரஞ்சனி ஆரம்பிக்கும் போதே.. "ஷ்" என்று உதட்டில் கைவைத்து மிரட்டியவன்.. "பேசாதே" என்றான்.

கீழேயிருந்த அம்மாவைப் பார்த்து கையசைக்க... அவர்கள் வர.. எல்லோரையும் வரச் சொல்லி புகைப் படம் எடுத்தான். ரஞ்சனிக்குப் பேசும் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை.

ஏதோ இந்த மட்டிலும் வந்தானே என்று ரஞ்சனியும் பின்பு அமைதியாகி விட்டாள்.

பின்பு வீட்டினர் எல்லோரும் உணவு உண்ணச் செல்ல.. ஈஸ்வர் பேருக்கு ஏதோ கொறித்து விட்டு ஜகனிடம் எல்லோரையும் அழைத்து வீட்டிற்கு போகுமாறு சொல்லி, ஹோட்டலின் உள் புறம் சென்றான்.

வர்ஷினிக்கு ரெஸ்ட் ரூம் போக வேண்டும் போல ஒரு உந்துதல். கமலம்மாவிடம் சொல்லிவிட்டு மேலே அவர்களுக்கு ஒதுக்கியிருந்த ரூமிற்கு அதன் சாவியை எடுத்துக் கொண்டு அவளும் சென்றாள்.

ஈஸ்வருக்கு என்னவோ தோற்று விட்ட உணர்வு. எப்போதும் எல்லா விஷயத்திலும் தன்னை முன்னிறுத்தியே பழக்கப்பட்டவன்.. இப்போது பின் செல்வது போன்ற உணர்வு...

“ஏன் கஷ்டப்படுத்திக்கணும், இத்தனைப் பேர் கிட்ட பணம் கேட்கணும்! அவங்க தான் குடுக்கறேன்னு சொல்றாங்கள்ள! இப்போ பார் அவரா வந்து உன்னைக் கூப்பிடறார்.. உன்னை ரொம்பவும் மதிக்கிறார்! வாங்கிக்கலாம்!” என்று அப்பா சற்று வற்புறுத்திக் கேட்டார்.

அதுவே சற்று மனவுளைச்சலை தோற்றுப் போன உணர்வை கொடுத்தது. இப்போது தங்கையை பார்க்கவும், என் மேல் நம்பிக்கையற்று போனாளே என்ற உணர்வு அதிகம் தாக்கியது.

ஹோட்டலின் மற்றொரு புறம் இருந்த பாரை நோக்கி கால்கள் சென்றன, உள்ளே சென்றவன் ஆர்டர் கூடச் செய்து விட்டான். ஆனால் குடிக்கவும் மனமில்லை.. குடிக்காமலேயே பணத்தைக் கொடுத்து எழுந்து விட்டான்.

பாரிலிருந்து வெளியே வந்து சிறிது தூரம் ஹோட்டலின் உள்ளேயே நடந்து வரவும் ஒரு திருப்பத்தில் வர்ஷினி தனியாக லிஃப்டிற்கு நிற்பது தெரிந்தது.

இவள் ஏங்கே இங்கே தனியாக நிற்கிறாள் என்று பார்த்து நின்றான்... மிகவும் பெரிய ஹோட்டல், அதுவும் அது உள்வாயில், அங்கே அந்த சமையத்தில் யாருமில்லை.

வெளியே இருக்கும் திருமண வரவேற்ப்பு இரைச்சலுக்கு சற்றும் சம்பந்தமின்றி உள்ளே அமைதியாக இருந்தது. அந்த இடத்தில் சற்று மங்கிய ஒளி கூட.. மீண்டும் தேவதையாய் தெரிந்தாள்.

ஒரு நான்கைந்து அடி தூரம் தான். சுவற்றில் சாய்ந்து கைகளைக் கட்டியபடி அவளையேப் பார்த்து நின்றிருந்தான்.

எல்லாம் மறந்து போனது ஈஸ்வருக்கு... இதுவரை இருந்த தோற்றுக் கொண்டிருக்கிறேன் என்ற உணர்வு... தங்கையின் வரவேற்ப்பு... எல்லோரும் வெளியில் இருக்கிறார்கள்... இதையெல்லாம் விட... இன்னொரு இவளையும் விட அழகான பெண்ணிடம் காதல் சொல்லியிருக்கிறோம்... அவளைத் திருமணம் செய்ய வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்... எல்லாம்!!!

ஒரு உந்துதல் வர்ஷினிக்கு... திரும்பிப் பார்க்க... ஈஸ்வர் அவளைப் பார்த்து நின்றிருப்பது தெரிந்தது.

முதல் முறையாக புடவை கட்டியதில் சற்று பெரிய பெண்ணாய் உணர்ந்ததாலோ என்னவோ ஈஸ்வரின் பார்வையின்

வித்தியாசத்தை படிக்க முற்பட்டாள்.

அதுவும் அவன் நின்றிருந்த தோற்றம் வர்ஷினியைக் கவர்ந்தது என்று கூடச் சொல்லலாம்...

ஈஸ்வரைப் பார்க்க... விழி எடுக்காது அவளைப் பார்த்திருந்தான். “இவன் என்னை ஆர்வமாய் பார்க்கிறானோ? சைட் அடிக்கிறானோ?” என்று அவளுக்கு உரைக்க... “என்னையா பார்க்கிறாய்” என்று ஒரு பார்வை அவளிடம் வெளிப்பட்டது.

“நீ ரொம்ப அழகா இருக்க.. ரொம்ப என்னை அட்ராக்ட் பண்ற.. உன்னோட அந்தக் கண் கடல் மாதிரி ரொம்ப அழகு” என்றான் அவனையும் மீறி...

“என்னையா சொல்கிறான்? அதுவும் என்னிடமா?” என்ற ஒரு பிரமிப்பு... ஒரு இனிய படபடப்பும் கூட... ஏன் என்று சொல்லத் தெரியவில்லை... அவளின் முகம் சற்று நாணச் சிவப்பை தாங்கியது...

“நீ... உன் டிரஸ்... உன் ஜ்வல்ஸ்... எல்லாம் டிஃபாரன்ஸ் தெரியலை! யு லுக் ப்ரெட்டி ரோஸ்” என்றான்.

ஒரு அழகான கம்பீரமான ஆண்மகன் தன்னிடம் இப்படிச் சொல்ல சற்று தடுமாறிப் போனாள்.

அதற்குள் லிஃப்ட் வந்திருக்க... அதிலிருந்து வெளியே வந்த ஒரு ஆண் வர்ஷினியைப் பார்த்தபடி போக... இவள் அதனுள் போக.. “எங்க போற?” என்றான்.

“ரூம்க்கு?”

“எதுக்கு இப்போ தனியாப் போற?”

எப்படி சொல்வது என்று தெரியாமல் “போகணும்” என்றாள்.

“இங்க யாருமே இல்லை! தனியா போகாத! நானும் வர்றேன்!” என்றபடி அவனும் லிஃப்டினுள் நுழைந்தான். படபடப்பாக இருந்தது அவளுக்கு.. தனியாக பலமுறை அவனுடன் பேசி விட்டாள்... இப்போது ஏதோ ஒரு உணர்வு, சற்று பயம் கூடத் தோன்றியது, ஈஸ்வரின் பார்வை வீச்சினில்.

இவன் இப்போது தான் என்னை பார்க்கிறானா? இல்லை முன்பிருந்தா? என்ற எண்ண ஓட்டமும் ஓடியது. அவளுக்கு தெரியவில்லை. அவனுடன் தனியாக இருப்பது ஒரு மாதிரி பதட்டத்தை அவளுள் விதைக்க ஆரம்பித்தது.

லிஃப்ட் நிமிடத்திற்குள் மூன்றாவது மாடி வந்து விட வெளியே வந்தனர். அங்கிருந்த ரூமின் கதவை திறந்தவள்... அவனை எப்படி வெளியே நிற்க சொல்வது என்று தடுமாறினாள்.

உள் அழைப்பது சரி போல தோன்றவில்லை. அந்த அளவு ஒரு அசௌகரியம் அவனிடம் உணர்ந்தாள்.

“ஜஸ்ட் ஃபைவ் மினிட்ஸ் வந்துடறேன்” என்றாள் தயங்கியபடி.... அதுவே சொன்னது “நீ இங்கே இரு” என்று.

நீல நிறக் கண்கள் அவனோடு கவிதை பேசியது போல ஒரு தோற்றம். அதனை பார்த்தபடி “ஓகே” என்றான். அவனுக்கு அது ஒன்றும் தப்பாக தோன்றவில்லை, உள் செல்ல அவனும் நினைக்கவில்லை. அவளோடு இருப்பதை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

அந்த ஊடுருவும் பார்வை ஒரு தடுமாற்றத்தை பயத்தைக் கொடுத்தது வர்ஷினிக்கு.

அவன் இருக்கும் போது ரூமின் கதவைத் தாளிட்டு செல்வது சரி போல தோன்றாததால் அப்படியே சற்று திறந்த வாக்கில் வைத்துச் சென்றாள்.

ஈஸ்வர் வெளியில் நிற்கின்றான் என்பதே ஒரு பதட்டத்தைக் கொடுத்தது. வேகமாக சென்று வந்தாள்.. ரெஸ்ட் ரூமில் இருந்து வரும் போது வர, வர கதவையும் அவள் மூட, அதில் வர்ஷினியின் புடவை முந்தானையின் தலைப்பு மாட்டியது.

அதைக் கவனிக்காமல் வர்ஷினி எட்டு எடுத்து வைக்க, அதில் புடவை இழுபட்டு... அவள் முந்தானையில் குத்தியிருந்த பின் வந்து விட... அது கீழே நழுவியது... அந்த இடத்தில் புடவையும் சற்று கிழிந்தது.

அது அவளையும் அறியாமல் “அச்சோ” கத்த வைக்க... மெலிதாக தான் இருந்தாலும்...

அந்த இரவின் நிஷப்ததில் ஈஸ்வரின் காதில் அது தெளிவாக விழுந்தது. “என்னவோ?” என்று உள்ளே வந்தான்.

அவன் பார்த்தது புடவை கதவில் சிக்கி இருக்க... கதவை திறக்க முற்படாமல், பதட்டத்தில் புடவையை பிடித்து இழுத்துக் கொண்டிருந்த வர்ஷினி தான்.

ஆடையின் உள் இருக்கும் தெரிந்தும் தெரியாத பாகங்களில் ஈஸ்வரின் மனமும் சிக்கியது. அருகில் செல்ல முயலாமல் வர்ஷினி என்ன செய்கிறாள் என்று பார்த்து நின்றான்.

முன்பே சுற்று புறம் மறந்துவிட்டான். இப்போது தன்னையும் மறக்க ஆரம்பித்தான்.

அவளையேப் பார்த்தபடி நிற்க, மீண்டும் ஒரு உந்துதல் திரும்பி பார்த்தவள் ஈஸ்வர் நிற்பதை பார்த்ததும் பதட்டத்தில் அப்படியே திரும்பி கீழே அமர்ந்து மீண்டும் புடவையை இழுத்தாள். முடிந்தவரை தன்னை மறைத்துக் கொண்டாள்.

ஈஸ்வர் மெதுவாக அருகில் சென்று கதவை திறந்தான், புடவை எளிதாக வந்தது. அவசரமாக எடுத்து அதை தன் மேல் போட்டுக் கொண்டு வர்ஷினி எழ முயல..

எழுவதற்காக கை நீட்டினான். மிகவும் சங்கோஜமாக உணர்ந்த்தவள், ஈஸ்வரின் கை பற்றாமல் எழ முயன்றாள்.

அனிச்சையாக சற்றும் யோசியாமல் ஏதோ உரிமைப்பட்டவன் போல, வர்ஷினியின் கையை அவனாக பிடித்து, அவளை எழ சற்று இழுத்தவன் எழ எழ இடையில் கை கொடுத்தான்.

இதை எதிர்பார்க்காத  வர்ஷினி பயத்தில் விழி விரிக்க.. அந்த நீல நிறக் கண்கள் அருகில் அவனின் மிக அருகில்... அதில் தன்னிலை மறந்து மூழ்கி விருப்பமாக தன்னைத் தொலைக்க ஆரம்பித்தான்.

அவள் திமிறி விலக முற்பட, இந்த முறை அந்தக் கண்கள் தன்னை விட்டு விலக விட விரும்பாதவன்... உன்னை விடேன் என்பது போல பிடியை இறுக்கினான்.

விடுங்க என்ற வார்த்தைக் கூட வர்ஷினியின் வாய் மொழியாக வரவில்லை.

உச்ச பட்ச அதிர்ச்சியில் இருந்தாள்.. ஈஸ்வரிடம் இருந்து இப்படி ஒரு செய்கையை கனவிலும் நினைத்தது இல்லை.

இன்னும் வேகமாக திமிறி அவனைத் தள்ள முயல.. இன்னும் இன்னும் அவனின் பிடி இறுகியது.

அந்தக் கண்களின் பாவனைகளில் தன்னை முழுவதுமாக மறந்தான்... அவனின் உடல் முழுவதுமே வர்ஷினியின் உடலோடு ஒட்டி இருந்தது. அங்கங்கள் ஒன்றோடு ஒன்று மோதி நின்றன, அழுத்தங்கள் கொடுத்தன, சண்டையிடத் துவங்கின. ஈஸ்வருக்கு விருப்பமான சண்டை.. வர்ஷினிக்கு சற்றும் விருப்பமில்லாத சண்டை.

இப்போது கண்கள் மட்டுமல்ல, வர்ஷினியின் உடலின் பாகங்கள் எல்லாமும் ஒரு மயக்கத்தைக் கொடுக்க, புதிதாக உணரும் பெண்மை.. முதன் முதலாக உணர்வுகளுக்கு ஆட்ப்பட்டு உணரும் பெண்மையும் கூட.. சொர்கத்தை காண முயன்று கொண்டிருந்தான்.

ஆனால் அதற்கு சற்றும் பொருந்தாமல் வர்ஷினி நரகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள். புதிதாக ஒரு ஆண்.. மறுக்க மறுக்க பிடியை இறுக்கி கொண்டு.. அவனின் உடல் முழுவதும் தன் மேல் படர்ந்து கொண்டு... தன்னையும் அவன் மேல் படற வைத்துக் கொண்டு..

அதுவும் ஒரு பிரமிப்போடு முதல் நாளிலிருந்து தான் பார்த்தவன்... இப்படி ஒரு செய்கையை கற்பனையிலும் அவனிடம் இருந்து வரும் என்று நினைத்துப் பார்த்திராதவள்..

நரகத்தை உணர்ந்தால் என்றாள் அது மிகையல்ல..

கைகளை வைத்து எவ்வளவு தள்ளினாலும் அசைக்க கூட முடியவில்லை

மனம் தளர்ந்தது... போராட முடியவில்லை.. அவள் தளர.. தளர... ஈஸ்வரின் கைகள் அவளின் உடலில் அத்து மீற ஆரம்பித்தது.

உடலின் மறைத்த பாகங்கள் அனைத்தையும் தொட முயன்றான்.. தொடவும் செய்தான்.

முத்தமிட முயலவில்லை.. அவளைக் கலைக்கவில்லை... வேறு வகையிலும் முன்னேறவில்லை... சிறந்த சிற்பியாய் அவளைத் தன்

கை கொண்டு செதுக்க முற்பட்டான்.. ஒரு கை அவளை விடாது பிடித்திருக்க... மற்றொரு கையால் எல்லாம்... உடை மேலே எல்லாம் நடந்து கொண்டிருக்க.. சேலையின் உள் நுழைந்து... அவளின் வெற்றிடையில் கை ஜாலங்கள் செய்ய முற்பட்டு, அந்த ஸ்பரிசம் இன்னும் மயக்கத்தைக் கொடுக்க... எல்லைகளைக் கடக்க முயல...

முற்றிலுமாக தளர்ந்தவள், கண்களை இறுக்கமாக மூடி அதை சகிக்க முற்பட்டாள். அவளின் கண்கள் மூடிய நொடி, முகம் காட்டிய அசூயையான பாவனை...

ஈஸ்வருக்கு மாய வலை அறுபட.. “ஐயோ! என்ன செய்கிறேன் நான்?” என்று அவன் உணர்ந்த நொடி, அவனின் கைகள் தளர மனது ஓலமிடத் துவங்கியது.

கைகளின் தளர்ச்சியை வர்ஷினி உணர்ந்த நொடி.. தற்காப்பு கலையில் தேர்ந்தவள் என்பதால் தன் கால்களை அவனின் கால்களுக்கு இடையில் செலுத்தி தன் பலம் கொண்ட மட்டும் அவனைத் தட்டி விட்டாள்.

இதை ஈஸ்வர் எதிர்பார்க்கவில்லை. ஒரு மாதிரி அவன் தளர்ந்து இருந்ததினால் அப்படியே நெடுஞ்சாண் கடையாக பின்புறம் சாய்ந்தான்.  தரையில் தலை பட்டு பலமான அடி...

“அம்மா” என்ற கத்தல் அவனிடமிருந்து.

இவை எல்லாம் மிக சில நிமிடங்கள் மட்டுமே...  ஆனால் நடந்தது நடந்தது தானே... அதிர்ந்து.... விழுந்த ஈஸ்வரைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நடந்த நிகழ்வுகள் இப்போது தான் அவளின் கண்களில் கண்ணீரை வர வைக்க ஆரம்பித்தன.

நீரோடு அவனைப் பார்த்து நிற்க.. ஈஸ்வரின் தலையில் பலமான அடி... தலையில் ரத்தம் வர ஆரம்பித்தது.

விழுந்த பின்னும் கூட வர்ஷினியை தான் பார்த்திருந்தான். சில நொடிகள் அவளும் பார்த்திருக்க, அவனும் பார்த்திருக்க... வர்ஷினியின் கண்களில் கண்ணீரை பார்த்தவனின் கண்கள் மன்னிப்பை யாசிக்க...

கூடவே “சாரி” என்றான் வாய் மொழியாக.

அப்போதும் எழ முயலவில்லை.. முயன்றாலும் முடிந்திருக்குமா தெரியவில்லை. தலையில் இருந்து ரத்தம் வழிந்து இப்போது அவனின் வெண்ணிற சட்டையை பின்புறம் நனைக்க ஆரம்பித்தது. ஈஸ்வரை பார்த்து நின்றிருந்தாலும் வர்ஷினிக்கு அது தெரியவில்லை.

“நீயா இப்படி?” என்று இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீளாமல் வர்ஷினி பார்த்திருந்தாள். உடலில் அவன் பிடித்திருந்த.. கொடுத்திருந்த... அழுத்தங்களும் வலித்தது.

வர்ஷினி பார்த்திருக்க.. பார்த்திருக்க.. “தூக்கி விடேன்” என்பது போல ஈஸ்வரின் கைகள் அவளை நோக்கி நீண்டது.

**மோகம் என்னும் தீயில் என் மனம் வெந்து வெந்து உருகும்!**

**வானம் எங்கும் அந்தப் பிம்பம் வந்து வந்து விலகும்!**

**மோகம் என்னும் மாயப் பேயை நானும் கொன்று போட வேண்டும்!**

**இல்லை என்ற போது எந்தன் மூச்சு நின்று போக வேண்டும்!**

**தேகம் எங்கும் மோகம் வந்து யாகம் செய்யும் நேரம் நேரம்!**

**தாயே இங்கு நீயே வந்து தண்ணீர் ஊற்ற வேண்டும் வேண்டும்!**

**மனதில் உனது ஆதிக்கம்! இளமையின் அழகு உயிரை பாதிக்கும்!**

**விரகம் இரவை சோதிக்கும்! கனவுகல் விடியும் வரையில் நீடிக்கும்!**

**ஆசை என்னும் புயல் வீசி விட்டதடி!**

**ஆனி வேர் வரையில் ஆடி விட்டதடி!**

**காப்பாய் தேவி! காப்பாய் தேவி!!!**

**அத்தியாயம் இருபத்தி ஒன்று :**

**ஏன் எனக்கு மட்டும்!!!**

வேறு யாராயிருந்தாலும் அடி பட்டதற்கு மயங்கி இருப்பர்.. ஈஸ்வர் நல்ல திடகாத்திரமான இளைஞன் உடலளவிலும் மனதளவிலும்... அது அவனை மயக்கத்திற்கு போகாமல் காத்து வர்ஷினியிடம் மன்னிப்பை யாசித்துக் கொண்டிருந்தது.

உடல் மயங்காமல் இருந்து என்ன பயன்.. மனம் மயங்கி???.. மன்னிக்க முடியாத குற்றத்தை இழைத்து இருந்ததே.

அவளை நோக்கி கைகள் தூக்கி விடுவதற்காக நீள, வர்ஷினியின் முகத்தில் வெறுப்பு, துவேஷம், அவனைக் கொல்லும் ஆவேசம்.

“செத்துப் போகட்டும்னு தோணுதா? இப்போ வேண்டாம்!” என்று அவன் சொல்லும் போதே கண்கள் வலியில் மூடின.

அதற்குள் வர்ஷினியின் மொபைல் அடித்தது... கமலம்மா அழைத்துக் கொண்டு இருந்தார். அப்போதுதான் சுற்றுப் புறம் ஞாபகத்தில் வர... “ஐயோ! இது எல்லோருக்கும் தெரிந்தால் எனக்கு எவ்வளவு அசிங்கம்?” என்று தோன்ற ஆரம்பித்தது.

எடுக்காவிட்டால் அவர் இங்கே தேடி வரும் அபாயம் இருப்பதை உணர்ந்தவள், அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என தீர்மானித்து தன்னை  சுதாரித்துக் கொண்டு எடுத்தாள்..

வர்ஷிம்மா எங்க இன்னும் உன்னைக் காணோம்...

“இதோ வந்துட்டே இருக்கேன் மா... வயிறு சரியில்லை! அதுதான் லேட், பாத்ரூம்ல தான் இருக்கேன்.. அஞ்சு நிமிஷம் வந்துடுவேன்” என்றாள்.

கண்களில் வழியும் நீரைத் துடைத்தபடி "எழுந்திருங்க! வெளிய போங்க! யாரும் பார்க்கும் முன்ன!" என்றாள்.

"முடியலை" என்றபடி அவளை நோக்கி மீண்டும் கை நீட்ட..

"எழுந்திருங்க! யாரும் வந்திடப் போறாங்க" என்று அவனை கைப் பற்றி இழுத்தாள், அவளாலும் முடியவில்லை.

"என்ன ஆச்சு? ஏன் எழுந்திருக்க மாட்டேங்கறீங்க! யாரும் வந்திடப் போறாங்க!" என்று பதட்டமாக ரூமின் வாயிலைப் பார்த்தபடி பேசி அவனை தம் கொடுத்து இழுக்க.. அவனும் கூட முயல... ஒருவாறு எழுந்து அமர்ந்தான்.

அப்போது தான் தான் தரையில் இருந்த ரத்தம், அவளுக்கு தெரிந்தது. ஈஸ்வரின் முதுகுப் புறம் வெள்ளை சட்டையில் இருந்த ரத்தம்.

"ஐயோ!" என்று அவளின் கைகள் தானாக அவளின் வாயைத் தானே மூடிக் கொண்டது.

இப்படி நடந்தது ஒரு புறம்... இதில் அவனுக்கு அடிப்பட்டு இருக்கிறது. யாரும் வரும் முன் அவனால் அங்கே இருந்து போக முடியாது... இப்படி இவன் தன்னிடம் நடந்து கொண்டது எல்லோருக்கும் தெரிந்து.. அது தனக்கு அசிங்கம் என்பது ஒரு புறம்... பதட்டதில் பயத்தில் அப்படி ஒரு அழுகை வந்தது. அப்படியே சரிந்து அமர்ந்து முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

பின்பு அவசரமாக முகத்தை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.

"ப்ளீஸ்! இங்க இருந்து போயிடுங்க! யாரும் வந்துடப் போறாங்க!" என்று ஏறக்குறைய கெஞ்சினாள் என்றே சொல்ல வேண்டும்.. அவன் அப்படி நடந்து கொண்ட பயத்தை விட எல்லோருக்கும் தெரிந்தால் தன்னை தவறாக நினைப்பர் என்றே தோன்றியது.

ஊர் உலகத்தில் பெரிய உத்தமனாகத் தன்னை காட்டிக் கொண்டிருப்பவன்... என்னுடைய பிறப்பு எல்லோராலும் விமர்சிக்கப் படும் ஒன்று..

அப்படியிருக்க அவன் மீது தவறு என்று எத்தனை பேர் ஒத்துக் கொள்வர் என்று தெரியாது... ஒரு வேலை தவறு என்று

உணர்ந்தாலும் இந்தப் பெண் என்ன செய்ததோ என்ற பேச்சு வர அபாயங்கள் அதிகம்..

நல்லதோ கெட்டதோ தன்னை யாரும் விமர்சிப்பதை அவள் விரும்பவில்லை.

மடிந்து அமர்ந்து இருந்த பெண்ணை பார்த்தான். பார்த்த நாளில் இருந்து தன்னிடம் ஆர்வத்தோடு வந்து பேசுபவள்... வேறு யாரிடமும் பேசாதவள் கூட....

தன்னுடைய செயல்... மற்றவர்களை விட்டுவிட்டாளும்.... அவனுக்கு எப்போதும் யார் என்ன பேசுவர் என்பது எல்லாம் கிடையாது. ஆனால் தன் செயலை தன்னால் எப்போதும் மன்னிக்க முடியாத ஒன்று என்று தெரியும்.

இப்போது வெளியில் தெரிந்து எல்லோரும் தன்னைக் கீழாக பார்க்கும் தண்டனை.. ஏற்றுக் கொள்வான். ஏன் அது மட்டுமல்லாமல் அவளைச் சேர்ந்தவர்கள் என்ன செய்தாலும் தன்னைக் கொன்று போட்டாலும், அதை ஏற்றுக் கொள்ளும் நிலையில் தான் இருந்தான்.

ஆனால் இந்தப் பெண் இப்படிக் கதறுகிறேளே!!!

“அழாதே! அழாதே!” என்றவன்... தம் கட்டி எழுந்தான்... தலையில் ரத்தம் இன்னும் வர... அங்கே சோபா கவரை எடுத்து கிழித்து தலையில் கட்டினான்.

“உன்னை சரி பண்ணு..” என்றான்.

அவன் நிற்பதை பார்த்ததும் அவசரமாக மீண்டும் ரெஸ்ட் ரூமிற்குள் சென்று புடவை ஈரமாவதை எல்லாம் பொருட் படுத்தாமல் தன்னை சரி செய்தாள்.. கிழிசல் தெரியாதவாறு எப்படியோ மீண்டும் பின் செய்தாள்.

அங்கேயே தலை எல்லாம் சரி செய்து, முகம் எல்லாம் துடைத்து.... என்ன செய்த போதும் வித்தியாசம் தெரிந்தது.

மனம் சோர்ந்து போனது... கண்ணாடியில் தெரிந்த தனது முகத்திடம்... எப்படி அவனால் உன்னிடம் இப்படி நடக்க முடிந்தது? என்ன காரணம்? யாரிடமும் அப்படி நடப்பான் என்று தோன்றவில்லை.. இன்னம் தன்னிடம் நடந்து கொண்டதயே நம்ப முடியவில்லை. ஆனால் தொட்ட இடங்கள்... அது கொடுத்துக்

கொண்டிருந்த உணர்வு.. என்ன செய்தால் போகும் என்று தெரியவில்லை”

“என்ன தவறு என்னிடம்...?” மீண்டும் அழுகை வந்தது. என்னால் அங்கே போக முடியாது. யாரையும் பார்க்க முடியாது என்று மனம் ஒரு புறம் நினைக்கத் துவங்கியது.

எல்லோரும் தன்னை பார்த்தால் கண்டு கொள்வர் என்று தோன்றத் துவங்கியது. இதை யோசித்துக் கொண்டே இருந்ததால் நேரம் போவது தெரியவில்லை...

எங்கே வர்ஷினியைக் காணோம் என்று பயந்து போன ஈஸ்வர் கதவைத் தட்ட..

திறந்தாள்.. திறந்தவள்.. “இப்படியே வெளிய போனா எல்லோருக்கும் தெரிஞ்சிடும்” என்று கலங்க...

அந்தக் கண்கள் இப்போது கொல்லாமல் கொன்றது. அப்போதும் கண்களை பார்க்க முற்பட்ட தன் செய்கையை தானே வெறுத்தான்.

எல்லாம் முடிந்தது போன்ற நிராசை அவளிடம்..

“என்னை கீழத் தள்ளிவிட்டு எவ்வளவு தைரியமா சிச்சுவேஷன் ஹேண்டில் பண்ணியிருக்க.. தைரியமா இரு... யு ஆர் அ ப்ரேவ் கேர்ள்” என்றான்.

“அதை நீங்க சொல்லாதீங்க.. யு ......... idiot” என்று திட்ட...

எவ்வளவு மரியாதையாக தமிழில் வாங்க போங்க என்று பேசி... கூடவே ஆங்கிலத்தில் சொல்லும் ஒரு மிக கேவலமான வார்த்தை...

அடிபட்டதை விடவும் வலித்தது. தான் செய்த காரியம் அப்படி? அதுவும் ஒரு பெண் தன்னை பார்த்து இந்த வார்த்தைகளை சொல்லும் அளவிற்கு தான் இருந்திருக்கிறேன்.. என்றுமே அவன் நினைத்துப் பார்த்திராத ஒன்று.

அவனுக்கு தெரியவில்லை தமிழில் இன்னம் கெட்ட வார்த்தைகள் அவளுக்கு பழக்கமில்லை என்று.

அவளைப் பார்ப்பதை தவிர்த்தவன்.. “போகலாமா” என்றான்.

“எங்கே?” என்று அவள் வெடிக்க..

“நீ ஃபங்க்ஷன் நடக்கற இடத்துக்கு… நான் இந்த இடத்தை விட்டு வெளியே!”

எவ்வளவு தைரியம்! எப்படி அசராமல் பேசுகிறான் என்று இன்னம் ஆத்திரமாக வந்தது.

“இப்படியே போனா கண்டிப்பா ஏதோன்னு எல்லோருக்கும் தெரிஞ்சிடும். என்னால போக முடியாது. நான் வீட்டுக்கு போறேன்” என்றபடி ரூமை பூட்ட சாவியை தேடினாள்.

எதுவும் பேச முடியாதவனாகி… அமைதியாக வெளியேறினான். யாரும் பார்க்கும் முன்னர் வெளியேறிவிட வேண்டும் என்று நினைத்தவள் அவசரமாக பூட்டி.. ஈஸ்வர் சென்று விட்டானா என்று பார்க்க.. அங்கே தான் நின்றிருந்தான்.

அவனைப் பார்த்தவள், “உங்களை விட இன்னும் யாரும் எதுவும் என்னை செய்ய முடியாது அண்ட் நீங்கன்றதால தான் உயிரோட இருக்கீங்க.. கிளம்புங்க” என்று சொல்லி அடி எடுத்து வைக்க…

தாஸ் இவளைத் தேடி அங்கே வந்து விட்டான்.

வர்ஷினியின் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது.

“இங்க என்ன பண்றீங்க… அய்யா உங்களை பார்த்துட்டு வர சொன்னார்” என்று பேசிக் கொண்டே வந்தவன்… இவளுடைய அலுங்கிய தோற்றம்.. அழுத முகம்… கூட ஈஸ்வர் தலையில் கட்டுடன்… அதுவும் அவனின் வெண்ணிற சட்டையில் ரத்தம்…

“என்ன? என்ன ஆச்சு?” என்று அருகில் ஓடி வந்தான்.

என்ன சொல்வது என்று தெரியாமல் வர்ஷினி தடுமாற.. கூடவே முகத்தில் பயம்… முகமே வெளுத்து விட்டது.

அவளின் இந்த பாவனையில் இன்னம் பதறி “என்ன ஆச்சு… உங்க தலையில என்ன கட்டு?” என்று ஈஸ்வரையும் கேட்டான். சற்றும் அவனுக்கு ஈஸ்வர் ஏதாவது செய்திருப்பான் என்று தோன்றவேயில்லை.

அந்த நொடியைத் தனக்கு சாதகமாக்கிய ஈஸ்வர்… “எனக்கும் சில பேருக்கும் அடிதடி…. அதைப் பார்த்து பயந்துட்டா” என்றான்.

“எதுக்கு? எதுக்கு அடிதடி?”

“எங்க ஃபைனான்ஸ் பிரச்சனையால” என்றான்.

வர்ஷினியின் முகத்தில் இருந்த பதட்டம் படிப்படியாக குறைந்தது.

“எவன் அவன் சொல்லுங்க, அவனை உண்டு இல்லைன்னு பண்ணிடறேன்” என்று தாஸ் ஆவேசமாக பேச...

“அது பார்த்துக்கலாம்! முதல்ல நீ வர்ஷினியை வீட்டுக்கு கூட்டிட்டு போ!”

“உங்க தலை... ரொம்ப அடி போலவே! நான் முரளி சார்க்கு சொல்றேன்” என்று தொலைபேசி எடுத்தான்.

“தாஸ் எனக்கு ஒன்னுமில்லை..” என்று அதட்டலாக சொன்னவன்... “முதல்ல இவளை வீட்டுக்குக் கூட்டிட்டு போ!”

“ஆனா அய்யாக் கிட்ட சொல்லாம எப்படி?” என்று தாஸ் யோசிக்க...

“நான் சொல்லிக்கறேன்! நீங்க கார் எடுங்க தாஸண்ணா..” என்றவள்.. “போங்க! நான் வர்றேன்!” என்று சொல்லிய விதமே.. தன்னை அங்கே இருந்து வர்ஷினி போக சொல்கிறாள் என்று புரிந்து தாஸ் நடக்க ஆரம்பிக்கவும்..

ஈஸ்வரை பார்த்து அப்போதும் மெல்லிய குரலில் “யார் கிட்டயாவது சொன்னீங்க...” என்று விரல் நீட்டி எச்சரிக்க...

குரல் கடுமையாக எச்சரிக்கும்படி தான் இருந்தது.. ஆனாலும் அந்தக் கண்களில் தெரிந்த பயம்.. ஈஸ்வர் என்ன மாதிரி உணர்ந்தான் என்றே தெரியவில்லை.

“தப்பு செய்தது நான்! ஆனால் நான் பயமின்றி நிற்கின்றேன்... இவள் எப்படி பயம் கொள்கிறாள்.. என்ன செய்திருக்கிறேன்.. இன்னொரு வார்த்தையில் பலாத்காரமா... அன்றாடம் நான் செய்தியில் படித்து... அதில் கூட ஒரு செய்தி என்று கொள்ளாமல் வெறுக்கும் ஒரு செயலை நான் செய்திருக்கின்றேன்”.

“இறைவா! எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடு... ஆனால் எனக்கு மட்டும்... இந்தப் பெண்ணை எந்தத் துயரமும் அண்ட வேண்டாம். என் பாவம் என்னோடு... என்னை மட்டுமே சேர வேண்டும்”.

இதையெல்லாம் வேண்டியபடி வர்ஷினியைப் பார்த்து... “எப்பவுமே வெளில வராது.. என்னோட மட்டும் தான் போகும்” என்றான்.

அவனின் கண்களில் என்ன கண்டாளோ...???

“ஏன் இப்படிப் பண்ணுனீங்க... என்ன தப்பு என்கிட்டே.. யார் கிட்டயும் நீங்க இப்படி பண்ண மாட்டீங்க தானே! ஏன் என்கிட்டே மட்டும் பண்ணுனீங்க!” என்று கண்களில் நீரோடு கேட்க..

ஈஸ்வருக்கு இறக்காமல் இறந்த தருணம்!!!

“இல்லை! உன்கிட்ட எந்த தப்புமில்லை.. நான் நல்லவனில்லை.. தப்பு என் மேல தான்” என்று சொல்லிக் கொண்டே தாஸைப் பார்க்க.. அவன் இவர்களை தான் பார்த்து நின்றிருந்தான்.

“நீ போ!” என்றபடி.. ஈஸ்வர் வேகமாக விரைந்து விட்டான்.

தாஸிற்கு அவர்களைப் பார்த்து ஒரே யோசனை...

கமலம்மாவை அழைத்தவள்... “அம்மா எனக்கு ரொம்ப வயிறு வலி... எனக்கு வீட்டுக்குப் போகணும் தாஸண்ணாவோட போறேன்”

“என்னடா? என்ன ஆச்சு?” என்று வர்ஷினின் குரலைக் கேட்டு அதில் தெரிந்த வலியில் அவர் பதற

“ஒன்னுமில்லைம்மா.. நான் கொஞ்சம் கவனிக்காம விட்டுடேன்.. பீரியட்ஸ்...” என்று பொய் சொல்லி ஈஸ்வர் கேவலப்படுத்தியதையும் விட இப்போது தன்னை தானே கீழாய் உணர்ந்தாள்.

“அப்பாக் கிட்ட ஏதாவது சொல்லி சமாளிங்க அம்மா! எனக்கு போகணும்!” என்றவள் “தாஸண்ணா....” என்றுக் கூப்பிட..

“சொல்லுங்க பாப்பா!” என்று அவன் சொல்வது தொலைபேசியில் கேட்க.. “சரி! பத்திரமா போடா!” என்றார்.

தாஸ் வர்ஷினியை வீட்டில் விடவும்.... அவளின் ரூம் நோக்கி விரைந்து விட்டாள்.

இங்கே கமலம்மா அவளுக்குத் தலைவலி அதிகமாக இருந்தது அதனால் வீட்டிற்கு அனுப்பிவிட்டேன் என்று சொல்லி சமாளித்தார்.

கமலம்மா சொல்வதால் யாருக்கும் எதுவும் தோன்றவில்லை. எல்லாம் நிஜம் என்றே நினைத்தனர்.

ஏன் தன்னிடம் சொல்லாமல் சென்று விட்டாள் என்று ராஜாராமிற்கு யோசனை...

ஒரு வழியாக உறவினர்களுக்கு விடைக் கொடுத்து எல்லோரும் அவரவர் வீடு வந்து சேர பன்னிரண்டு மணி ஆகிவிட்டது.

தாஸ் ராஜாரமிற்காகக் காத்திருந்தான். அவனின் முகத்தை பார்த்ததுமே ஏதோ விஷயம் என்று அவர் பின் தங்க.. எப்போதும் அவர்கள் தனியாக பேசுவது வழமை என்பதால்.. "சீக்கிரம் தூங்குங்கப்பா! நேரம் ஆகிடுச்சு!" என்று பிள்ளைகள் செல்ல.. தாத்தாவும் உறங்க சென்று விட... கமலம்மா உடை மாற்றி வர சென்றார்.

"என்ன தாஸ்?"

"அய்யா!" என்றவன்... தான் பார்த்ததை அப்படியே உரைத்தான்...

"என்ன?" என்று அதிர்ந்தார்... அவருக்கு புரிந்த சாராம்சம்... ஏதோ அடிதடி ஈஸ்வருக்கு அடிப் பட்டு இருக்கின்றது. அதற்காக தன் மகள் அழுதிருக்கின்றாள்... அண்ணனின் திருமண வரவேற்பைக் கூட விட்டு வந்திருக்கிறாள் என்பது தான்.

தாஸை பார்க்க.. "என்னை அனுப்பிட்டு தனியா பேசினாங்க... ஒரு வேலை நம்ம பாப்பாக்கு ஈஸ்வர் சர் மேலே இஷ்டமோ" என்ற அதி முக்கியமான கேள்வியைக் போட்டான்.

"அப்படியும் இருக்குமோ" என்ற யோசனை ராஜாராமின் மனதில் ஓட ஆரம்பித்தது. அவரும் தானே பார்த்தார் ஈஸ்வரும் வர்ஷினியும் அங்கேயே தனியாகப் பேசியதை.

"அப்படியா சொல்ற...?"

"எனக்கு என்னமோ அப்படி தான் தோணுதுங்க அய்யா.. நம்ம பாப்பா யாரோடையும் பேசாது.. நிறைய தடவை ஈஸ்வர் சாரோட தனியா பேசி பார்த்துட்டேன். ஒரு வாரம் முன்னக் கூட ஷாப்பிங் மால்ல பேசினாங்க!"

"நீயேன் என்கிட்டே சொல்லலை...?"

“அது சும்மா நேர்ப் பட்டு இருக்கும்னு நினைச்சேன். இப்படி நினைக்கலை...”

“ரொம்ப அடியா ஈஸ்வருக்கு”

“ஆமாங்கய்யா நிறைய ரத்தம்...”

“ஃபோன் போடு! எடுக்கறானான்னு பார்ப்போம்..”

ஃபோன் எடுக்கப்படவில்லை..

“வீட்டுக்கு பத்திரமா போயிட்டானா தெரியலையே” என்றார் கவலையாக...

எங்கேயும் யாருக்கும் ஈஸ்வர் மேல் சந்தேகம் இல்லை.

“யார் அடிச்சிருப்பா? என்ன தைரியம்..? நீ முதல்ல போய் அங்க ஹோட்டல் காரிடார்ல.. ஸீ ஸீ டீ வீ கேமரா இருக்கும்... எப்படியும் ஆளுங்க பதிஞ்சிருப்பாங்க. என்ன அடி தடி பாரு!” எனவும்...

“தோ! கிளம்பறேன் அய்யா... ஈஸ்வர் சார் வீட்டுக்குப் போயிட்டாரா நான் பார்த்துக்கறேன்... நீங்க தூங்குங்க...” என்று சொல்லி தாஸ் கிளம்ப..

ராஜாராம் ஃபோன் செய்த நேரம்... ஈஸ்வர் அந்த ஹோட்டலின் ஸீ ஸீ டீ வீ கேமரா பதிவுகள் இருக்கும் கம்ப்யுட்டர் அறையில் தான் இருந்தான்.

முதலில் வர்ஷினி அறைக்குள் போவது சிறிது நேரம் கழித்து.. இவன் போவது.. பிறகு நேரம் கழித்து இருவரும் வெளியே வருவது. அதில் அவனின் தலையில் கட்டு... சட்டையில் ரத்தம்.. வர்ஷினியின் அழுது ஒய்ந்த முகம் எல்லாம் தெரிய....

. பக்கத்தில் நின்று இருந்த மேனேஜருக்கு பெரும் பணம் கொடுத்து  அதை அழிக்க ஆரம்பித்தான். “நான் இதை அழிச்சிட்டேன்.. இதுல ஒன்னுமில்லை.. ஒன்னும் நடக்கவும் இல்லை. நான் அழிச்ச காரணம் வேற.. நான் இங்க வந்தேன், என்னவோ அழிச்சேன்னு விஷயம் உன் மூலமா வெளிய வந்தது, உனக்கும் இந்த கதி தான்!” என்று சொல்லியபடி எழுந்தான்.

வார்த்தைகள் என்ன அவனின் பார்வையே பயத்தைக் கொடுக்க... “சே! சே! ஒரு வார்த்தை வராது!” என்றான் மேனேஜர்.

உண்மையில் அதில் ஒன்றுமில்லை தான். என்னவோ காரணம் பா நமக்கு எதுக்கு வம்பு என்று அவன் நகர்ந்து விட்டான்.

மீண்டும் அந்த இரவில் ஈஸ்வர் காரை ஓட்ட... எதுவோ தன்னை துரத்துவது போன்ற உணர்வு.. அந்தக் காரிருள் ஒரு அச்சத்தைக் கொடுத்தது. அவன் செயல்.. அவனுக்குக் கொடுத்தது.

அதுவரை சிறிதாக இருந்த வலி இப்போது பலமடங்காக தோன்ற.. எந்த ஹாஸ்பிடல் போகலாம் என்று யோசித்துக் கொண்டே ஓட்டினான்.

**என் வலி தீர... ஒரு வழி என்ன?**

## அத்தியாயம் இருபத்திரண்டு :

**நம்முடைய நிழல் கூட இருட்டில் மறைந்து விடும், நம் பகைவர்கள் நம்மை அதிலும் அடையாளம் காண்பர்!!!**

அந்த நேரத்தில் ஒரு மருத்துவமனையை அணுக... அங்கே ஆயிரம் கேள்விகள்... கீழே விழுந்து விட்டேன் என்று சொல்லி ஒரு வழியாக அவர்களை நம்பச் செய்ய.. அங்கே இருந்த டியூட்டி டாக்டர்.. காயத்தைச் சுத்தம் செய்தார்.

ஆனாலும் தையல் போட வேண்டும் என்று சொல்ல... "முதலுதவி செய்யுங்கள்! காலையில் பார்த்துக்கொள்ளலாம்!" என்று சொல்லி.. ஒரு கட்டைப் போட்டு, டீ டீ இஞ்சக்ஷன் செய்து, வலிக்கு மாத்திரை வாங்கி வீடு வந்த போது இரண்டு மணி.

ஜகன் மட்டுமே அவனை இன்னம் காணோம் என்று விழித்திருந்தான். இவனைப் பார்த்தும் பதறி விட்டான்... "என்னடா கட்டு?"

"ஷ், கத்தாதே! யாராவது எழுந்துக்கப் போறாங்க... கீழ விழுந்துட்டேன்... ஒன்னுமில்லை! ஹாஸ்பிடல் போயிட்டு தான் வந்தேன்! காலையில பார்க்கலாம், ரொம்ப டயர்ட்" என்று சொல்லி அவனிடம் இருந்து தப்பித்து வந்து... உடை மாற்றி படுக்கையில் விழுந்த போது தான்... அவனின் செயலை அவனால் யோசிக்க முடிந்தது.

அவன் செய்த தப்பின் வீரியம் முற்றிலுமாய் அவனைத் தாக்கியது. “என்ன செய்து விட்டேன் நான்... இதிலிருந்து மீளுவது என்பது ஆகக் கூடியது அல்ல” என்று புரிந்தது.

யார் முகத்திலும் விழிக்க தகுதியற்ற செயல் என்பது ஒரு புறம்... “அச்சோ! அந்தப் பெண்ணை நான் என்ன செய்திருக்கிறேன். அவள் யாரிடமும் சொல்லாததால் தான் நான் தப்பித்து இருக்கிறேன்” என்று புரிந்தது.

இதையெல்லாம் விட அவனின் செய்கை ஒரு முறையற்ற செயல்!!! எப்போதும் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத செயல்!!! உலகில் வாழ சில நிமிடங்களில் நானே என்னை தகுதியற்றவனாகச் செய்து கொண்டேன்.

அதுவும் நண்பனின் தங்கை... என்னை நம்பி வீட்டுக்குள் விட்டதற்கு நான் செய்த செயல் என்ன?

வாழ்க்கையில் அவன் விவரம் தெரிந்த நாளாக செய்யாத ஒரு செயலை செய்தான். அழுகை வர தலையணையில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தான்.

எப்படி ஒரு பெண்ணிடம் காதல் சொல்லி.. இன்னொரு பெண்ணிடம் இப்படி நடந்து? எனக்குப் பெயர் என்ன?

எங்காவது தூரமாய்ப் போய் விட வேண்டும்! யாரையும் இனி பார்க்க முடியும் பேச முடியும் என்றே தோன்றவில்லை.

ஐஷிடம் எப்படி சொல்வது என்னை விட்டு விடு என்று.. நான் உனக்கு சற்றும் தகுதியில்லாதவன் என்று எப்படி சொல்வது. இனி யாரையும் எந்தப் பெண்ணையும் என்னால் திருமணம் செய்ய இயலுமா? என்னுடைய வாழ்க்கையை நானே அழித்துக் கொண்டேன்.

இன்னொரு பெண்ணின் வாழ்க்கையையும் அழிக்க இருந்தேன்... கடவுளே அவளை இந்த நிகழ்வை மறக்க வைத்து விடு.. அவளை இதிலிருந்து மீட்டு எடுத்து விடு? விடாத பிரார்த்தனைகள்.

என்னால் தானாக எல்லாம் சாவை நோக்கிப் போக முடியாது. நீயே என்னைக் கொன்று விடு! கொன்று விடு!

எப்படிப்பட்ட செய்கை? என்னுடைய பிரணவியைக் கூட என்னால் இனி எப்படித் தூக்க முடியும்.. எவ்வளவு நீச்சனாகி

விட்டேன் நான். என் அம்மா! என் தங்கை! என் தோழி! இது தெரிந்தால் அவர்கள் என்னை எப்படிப் பார்பார்கள்.

எது வந்தாலும் எதிர் கொள்ளலாம் என்று இருந்த தைரியம் இப்போது முற்றிலும் தொலைந்தது!!!

எங்காவது யாருமற்ற தீவிற்கு ஓட தோன்றியது!!!

அலைபாய ஆரம்பிக்கும் மனதை முன்பே கடிவாளமிட்டு இருக்க வேண்டும். அவளுடன் தனிமையைத் தவிர்த்திருக்க வேண்டும்! என்ன ஒரு இறுமாப்பில் என்ன முட்டாள் தனம் செய்து விட்டேன்... ஏன் இப்படி செய்தேன்?

அவனின் கர்வம் முற்றிலுமாக அழிய... உயிரோடு தன்னை தானேப் புதைக்க வழி தேடியது நெஞ்சம்.

தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.

அங்கே வீட்டில் வர்ஷினி வந்த நேரமாக அதுவரை ஒரு பத்து தடவையாவது குளித்து இருப்பாள்.. அவன் தொட்டது உடை மேல் தான்... ஆனாலும் ஒரு அருவெறுப்பு. உடையினுள் கை நுழையும் போதே கட்டுக்குள் வந்திருந்தான். அவனும் வீழ்த்தி இருந்தாள். ஆனால் கை தொட்ட அந்த இடத்தை நகத்தைக் கொண்டு தேய்த்து தேய்த்து இப்போது எரியத் துவங்கி இருந்தது.

மனமும் எரிந்தது... இப்போது அவனை விட்டது தவறோ? கொன்றிருக்க வேண்டுமோ.. இன்னம் பெரிதாக ஏதாவது செய்திருக்க வேண்டுமோ... அப்படியே விட்டிருக்க கூடாதோ.. ஏதாவது செய்ய வேண்டுமே அவனை  என்று மனம் பரபரத்தது.

அழுகை எல்லாம் நின்றிருந்தது.. ஆத்திரம்! ஆத்திரம்! ஆத்திரம் மட்டுமே!

“என்ன தைரியம் அவனுக்கு என்னிடம் அப்படி நடக்க... இதில் நான் வேறு அவனிடம் நியாயம் பேசி வந்திருக்கிறேன்.. யாரிடமும் அல்லாமல் என்னிடம் மட்டும் ஏன் என்று...”

“நீ இப்படிப் பட்ட நினைப்பை தவிர்க்க வேண்டும் வர்ஷினி.. உன்னை நெருங்கும் தைரியத்தை எதுவும் யாருக்கும் கொடுக்க கூடாது! அதை நீ வளர்த்துக் கொள்! என்னிடம் மட்டும் ஏன் என்ற கேள்வி அவசியமற்றது! நீ எந்த விதத்தில் குறைவு?” என்று அவளை அவளே திட்டிக் கொண்டாள்.

“அவனை நீ ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டாயே.. அவன் முன் அழுது விட்டாயே! என்ன செய்திருக்கிறாய் நீ!”

மனம் கொதிக்க ஆரம்பித்தது.

ஆனால் அறிவு தெளிவாக சொன்னது “இப்போது எதுவும் செய்து உனக்கு நடந்ததை நீயே காட்டி கொடுத்துக் கொள்ளாதே! பொறு! கடவுள் உனக்கு அந்த வாய்ப்பைக் கொடுப்பார்!”

அறிவு மனதை சமாதானம் செய்ய ஆரம்பித்தது.

**யாருக்காகவும் எவருக்காகவும் நிற்பதில்லை காலமும் நேரமும்!!! தனி மனித வாழ்க்கைப் பயணமும்!!!**

அடுத்த நாள் எப்பொழுதும் போல விடிந்தது..

கதவைத் தாளிட்டு இருந்தான் ஈஸ்வர்... எப்போதும் தாளிட்டு உறங்க மாட்டான். காலையிலேயே ஜகன் வீட்டினரிடம் சொல்லி இருக்க, அம்மாவும் அப்பாவும் வந்து கதவை திறக்கப் பார்க்க.. அது திறக்கவில்லை.

தட்ட ஆரம்பித்தனர்... முதல் தட்டலுக்கே விழித்து விட்டான். ஆனால் எல்லோரையும் எப்படிப் பார்க்க.. இன்னம் யாருக்கும் தெரியாது.. நீயாக காட்டிக் கொடுத்து விடாதே... திரும்பவும் முட்டாள்தனம் செய்து விடாதே..

இது உன் விஷயம் மட்டுமல்ல... வர்ஷினி உன்னிடம் வேண்டியது அது மட்டுமே! யாருக்கும் தெரிய விடாதே!!

கதவைத் திறந்தான்.

“என்ன கண்ணா? என்ன ஆச்சு?” என்று அம்மா பதறி உள்ளே வர... “விஷ்வா என்ன அச்சு?” என்று அவனின் முகம் பார்த்து அப்பா கேட்டார். முகமெல்லாம் சோர்ந்து வீங்கி.. பார்க்கவே பரிதாபமாக இருந்தான்.

அங்கே காலையில் ராஜாராம் மகன்களிடம் ஈஸ்வரை யாரோ அடித்து விட்டனர் என்று சொல்ல..

முரளி ஒருபக்கம் பதறிக் கிளம்ப.. ரஞ்சனி ஒரு பக்கம் பதறிக் கிளம்ப..

தலைவலி என்று வந்து படுத்த பெண்.. இன்னம் கதவை திறந்து வெளியே வரவில்லை! அதை கவனிக்க ஆள் இல்லை! அவளை அவளே சமாதானம் செய்து கொண்டிருந்தாள். யாரையும் மனது தேடவும் இல்லை. தனிமை என்று உணராத தனிமை!!!

திருமண வரவேற்பு அலைச்சல், கமலம்மா எழுந்து கணவருக்கு வேண்டியதை செய்து மீண்டும் சற்று உறங்கலாம் என்று உறங்கினார்.

வீட்டில் இரண்டொரு உறவினர் இருக்க, “அவங்களை கொஞ்ச நேரம் பார்த்துக்கோ ஷாலினி” என்று பெரிய மருமகளிடம் சொல்ல.. அவளுக்கு அவர்களை கவனிக்கவே நேரம் சரியாக இருந்தது.

பத்து மணி வாக்கில் ராஜாராம் “எங்க பாப்பா இன்னும் எழுந்துக்கலையா” என்று கேட்ட பிறகு தான் ஷாலினி கவனித்து, ரூமின் கதவைத் தட்டவும், வெளியே வந்தாள் வர்ஷினி.

“என்ன வர்ஷி? முகமெல்லாம் ஒரு மாதிரி இருக்கு! இன்னம் தலைவலி சரியாகலையா!”

“பரவாயில்லை அண்ணி”

“வா! அப்பாக் கேட்டாங்க! ஒரு வார்த்தை பரவாயில்லைன்னு சொல்லிடு... என்ன குடிக்கற... காஃபி கொடுக்கட்டுமா! தலைவலிக்கு நல்லா இருக்கும்”

“பசிக்குது அண்ணி! சாப்பிட்டு சாப்பிடறேன்!” என்று நேராக டைனிங் டேபிள் செல்ல, ஷாலினி பரிமாற முற்பட,

“நான் எடுத்துக்கறேன் அண்ணி!” என்று அவளைத் தவிர்த்து, உணவை எடுத்துக் கொண்டு அப்பாவை பார்க்கப் போக... அவருடன் தாத்தா பேசிக் கொண்டு இருந்தார்.

எப்போதும் தாத்தா பேசிக் கொண்டு இருந்தால் நகர்ந்து விடுவாள்.. அன்று அப்போதும் போய் அமர்ந்து கொண்டாள்... அதுவும் உணவோடு...

அவர்கள் பேசிக் கொண்டு இருந்தது முக்கியமான பேச்சு.. சொத்துக்களைப் பற்றி.. வர்ஷினி வந்ததும் தாத்தா பேச்சை தொடரவில்லை.

அதைப் பற்றி எல்லாம் வர்ஷினி கவலைப் படவில்லை. அமைதியாக உண்ண ஆராம்பித்தாள்.

சரியாக அப்போது தாஸ் வந்தான். "அய்யா! ஈஸ்வர் சாரை யார் அடிச்சான்னு கண்டு பிடிக்க முடியலை... சீ சீ டீ வீ ல அந்த மாடில நடந்தது எதுவும் ரெகார்ட் ஆகலை! ஏதோ பிரச்சனை போல" என்று சொல்லச் சொல்ல..

வர்ஷினியின் இதயம் துடிக்கும் ஓசை அவளுக்கே கேட்டது. இதை அவள் எதிர்பார்க்கவில்லை.

"நம்ம ஈஸ்வர் சர் கிட்ட தான் பேசணும்" என்றான்.

பிறகு "பாப்பாக்கு தெரியுமா அய்யா? ரொம்ப அழுதுச்சுங்க!" என்று சொல்ல...

வர்ஷினிக்கு வந்ததே கோபம்!!!

"தாஸண்ணா! உங்க வேலை என்ன?" என்று பற்களுக்கிடையில் வார்த்தைகளைக் கடித்து துப்பினாள்.

"ஏன் பாப்பா? ஏன் கேட்கறீங்க?" என்றான் புரியாமல்.

"உங்க வேலை என்னை பார்த்துக்கறது மட்டும் தான்! நான் என்ன பண்றேன்! அழுதேனா சிரிச்சேனான்னு வந்து சொல்ற வேலை கிடையாது. ஏதாவது அப்பாக்கிட்ட சொல்லணும்னா நான் சொல்லுவேன்! இனிமே இந்த அதிகப் பிரசிங்கித்தனம் பண்ணாதீங்க" என்று தாஸைப் பார்த்து சொல்ல, அவளின் அந்த பார்வையில், பாவனையில், தாஸிற்கே சற்று பயம் வந்தது.

அங்கே ஒரு கணம் எல்லோரும் ஸ்தம்பித்தனர்... அப்பா! தாத்தா! என்று அவளைப் பார்க்க..

சொல்லிவிட்டு திரும்ப உண்ணத் துவங்கி இருந்தாள்.

தாஸ் இதை எதிர்பார்க்கவில்லை... "சரிங்க பாப்பா" என்றான்.

"அப்பா! தாஸண்ணா நம்ம என்ன சொல்றோமே கச்சிதமா செய்வார். ஆனா புத்திசாலி எல்லாம் கிடையாது, அவர் ஏதாவது உளறி வைப்பார்" என்றாள் திரும்பவும் தாஸையேப் பார்த்துக் கொண்டு!

“அச்சோ! என்ன பிரச்சனையோ தெரியவில்லையே! அய்யா முன்னிலையிலேயே இவ்வளவு திட்டு தனியாக மாட்டினால் கைமா தான்  போலவே” என்று சரியாக கணித்தான்.

அழுதால் என்று சொன்னதற்கே இப்படி காய்ச்சினால் வர்ஷினி! இதில் விருப்பம் என்று அவன் சொன்னது மட்டும் தெரிந்தால்! அவ்வளவு தான்!

அவள் உண்டு முடித்து எழுந்துப் போக… “சாயந்தரம் ஆறு மணில இருந்து நைட் பண்ணிரண்டு வரை ரெகார்ட் ஆன எல்லாம் கொண்டு வந்துட்டேன்… அந்த நேரம் அந்தத் தளம் மட்டுமில்லை” என்றான்.

“சரி பார்க்கலாம் விடு, முரளி என்னன்னு கேட்டுட்டு வருவான்! பேசிக்கலாம்!” என்றார்.

அதற்குள் வர்ஷினி கை கழுவி வந்து விட…. அவர்களின் பேச்சு நின்றது.

அங்கே ஈஸ்வரின் வீட்டில் முரளி ஒரு பக்கம் “யாருக்குடா இந்த தைரியம்! கை வைக்கிற அளவுக்கு! சொல்லு! அவனை ஒரு வழி பண்ணிடலாம்!” என்று குதிக்க…

ரஞ்சனி “காயம் காட்டு விஷ்வா!” என்று ஒரு பக்கம் கேட்க…

செத்துச் செத்துப் பிழைத்தான் அவர்களின் கவனிப்பில்.

முரளியிடம் “தெரியலை” என்றான்.. ரஞ்சனியிடம் “நீயே பார்த்துக்கோ!” என்றான்.

கட்டவிழ்த்து பார்த்தவள்… “விஷ்வா! இதுக்கு தையல் போடணும். அந்த இடமும் ரொம்ப வீங்கி இருக்கு எம் ஆர் ஐ ஒன்னு பண்ணிடலாம்…”

பத்மநாபன் எல்லாம் வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

அவனும் தான் என்ன செய்வான்? அண்ணன் ஒரு புறம், மனைவி ஒரு புறம் என்று ஒரு மனிதனை அப்படி கவனிக்க, அவனால் வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்தது.

ஹாஸ்பிடல் சென்று அவனை காட்டித் தையல் போட்டு ஸ்கேன் எடுத்து ஒன்றுமில்லை என்று வந்த பிறகு தான் ரஞ்சனி ஓய்ந்தாள்.

முரளியும் பத்துவும் அதுவரை அவர்களுடனே!!! நான் இவர்கள் வீட்டுப் பெண்ணிற்கு என்ன செய்திருக்கிறேன் என்று தெரிய வந்தால் இவர்கள் என்னிடம் எப்படி நடந்து கொள்வார்கள் என்ற யோசனைகள் மனதில் ஓட,,,, அவனுக்கு எதுவுமே மூளையில் ஓட வில்லை.

வெகு நாட்களுக்கு பிறகு அண்ணனின் அருகாமை கிடைக்க ரஞ்சனி வளவளவென்று பேச.. ரஞ்சனி அவ்வளவு பேசுவாள் என்று அன்று தான் பத்மநாபனுக்கு தெரியும்.

ரஞ்சனி தான் பேசுகிறாள், அதை ஈஸ்வர் கவனத்தில் கொள்ளவில்லை என்று பார்த்ததுமே தெரிய... "அவருக்கு வலி போல, அவர் உன்னை கவனிக்கலை" என்று சொன்ன பிறகே அமைதியானாள்.

"எனக்கு உங்க அப்பாவைப் பார்க்கணுமே!!!" என்றான் ஈஸ்வர்.

"எதுக்குடா?" என்று முரளி கேட்க... "பண விஷயமா பேசணும்" என்றான்.

"இப்போ போகலாமா" என்று முரளி கேட்க..

"இல்லை! நாளைக்கு நான் அப்பாவோட ஜகனோட வர்றேன்" என்றான். அவனுக்கும் அப்பாவிடம் பேச வேண்டி இருந்தது.

ரஞ்சனி ஏதோ பேச வர.. "விடு! அவர் இஷ்டம் போல செய்யட்டும்" என்று பத்மநாபன் அதட்ட.. ரஞ்சனி அமைதியானாள்.

அடுத்த நாள் காலை சொன்னது சொன்னபடி வந்து விட்டான் ஈஸ்வர் அப்பாவோடும் ஜகனோடும். வந்து பேசிய விஷயம் யாரும் எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் அப்படியே அமர்ந்து விட்டனர்.

ஆம்! பணம் வாங்கிக் கொள்கிறோம் என்றான். திரும்பக் கொடுக்க மாட்டோம் என்றான். அவனின் பங்குகள் எல்லாம் அப்படியே ரஞ்சனியின் பெயரில் மாற்றி விடுவோம். இனி அவளும் ஜெகனும் மட்டுமே அதன் உரிமையாளர்கள் பங்கு தாரர்கள்.. என்றான்.

இதை யாருமே எதிர்பார்க்கவில்லை.

"இல்லையில்லை! நான் இதுக்கு ஒத்துக்கவே மாட்டேன்" என்று ரஞ்சனி பதறி மறுக்க...

“அப்படின்னா பணம் வாங்கறேன்! இல்லை என்னவோ ஃபேஸ் பண்ணிக்கறோம்!” என்றான்.

ஜகனுக்குமே அது புதிய செய்தி.. நமஷிவாயதிற்கும் ஈஸ்வருக்கும் மட்டுமே தெரியும். அவரிடம் முன்பே பேசியிருந்தான்.

“இல்லையில்லை! நான் ஒத்துக்க மாட்டேன்! தப்பு செஞ்சது நான்! எல்லோருக்கும் தண்டனையா” என்று ஜகனும் பதற..

“இது பெரியப்பா வளர்த்தது ஜகன்... இது உனக்கு உரிமையானது.. இதுல உன் சம்மதம் தேவையேயில்லை” என்றான்.

வார்த்தைக்கு வார்த்தை ஈஸ்வர் பைனான்ஸ் என்னோடது என்ற சொன்னவனா இவன்? இதற்காகவா என்னுடைய இந்த திருமணம்.. ரஞ்சனி மனம் பதறி பார்த்து நின்றாள்.

ராஜாராம் பொறுமையாக “எதுக்கு இப்படி ஒரு முடிவு ஈஸ்வர்! நாங்க தான் உனக்கு உதவ தயாரா இருக்கோமே எப்பவுமே.. என் மகன் விருப்பப்பட்டான்னு தான் பெண் கேட்டேன்! அப்போ தெரியாம தப்பா அர்த்தம் வர்ற மாதிரி சில வார்த்தைகள் விட்டுடேன்... ஆனா கண்டிப்பா எண்ணத்துல எதுவும் தப்பு இல்லை. அதுக்காக நீ இப்படி செய்வியா?” என்றார்.

“உங்க எண்ணத்துல தப்பு இல்லை! நான் தான் தப்பு! எல்லாமே தப்பா போச்சு! எதுக்குமே எனக்கு தகுதியில்லை” என்று மனதிற்குள் நினைத்தான்.

“இல்லை! அதுக்கும் இப்போ என் முடிவுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை... நாங்க சத்யா அக்காக்கு நிறைய செஞ்சோம்... பொண்ணுங்களுக்கு குடும்ப தொழில்ல பங்கில்லைன்றதால அதுக்கு ஈடா சொத்துக்கள் கல்யாணதப்போவே கொடுத்தோம்... பெரியப்பாவோட முடிவு இது... நீங்க முரளியை கேட்டுப் பாருங்க..” என்றான், அது உண்மையும் கூட.

“இப்போ நாங்க ரஞ்சனிக்கு ஒன்னும் பண்ணலை.. இதுல பணம் வேற வாங்கறோம்! இது தான் நியாயம்... ப்ளீஸ் பிரச்சனைங்க அதிகமாகிட்டேப் போகுது! பணத்தைக் கொடுத்து செட்டில் பண்ணிடலாம்!” என்று சொல்ல...

எல்லோரும் அன்று இரவு நடந்த பிரச்சனையில் ஈஸ்வர் பயந்து விட்டான் போல என்று தான் நினைத்தனர்.

“விஷ்வா! ப்ளீஸ் இப்படி சொல்லாத.. உனக்கு வேண்டாம்னா எனக்கும் வேண்டாம்! ஜகன் அண்ணாக்கு வேணா கொடுத்துடுவோம்…”

“ஷ்” என்று ஒற்றை விரல் வைத்துப் பேசாதே என்பது போல காட்டியவன்… “நான் சொல்ற இதையாவது கேளு..”

“நீ… நீ என்ன பண்ணுவ…?”

“ஏதாவது பண்ணுவேன்.. ப்ளீஸ் எல்லோருக்கும் பணத்தைக் குடுத்து முதல்ல கன்சர்ன் பேரைக் காப்பாத்துவோம்” என்றான்.

“ஓகே! நீ சொல்றபடியே பண்ணலாம்! பணத்தைக் கொடுத்து முதல்ல செட்டில் பண்ணலாம்! அப்புறம் பேசிக்கலாம்!” என்று அண்ணனின் மனதை மாற்ற முயன்று கொண்டிருந்தாள்.

அண்ணனும் தங்கையும் பேச எல்லோரும் பார்த்து தான் இருந்தனர்.

எல்லோரும் என்பதில் வர்ஷினியும் அடக்கம்.

இவர்கள் மூவரும் வந்து ஹாலில் அமர்ந்ததுமே பார்த்து விட்டாள்.. ஆனால் கீழே இறங்கவில்லை. ஈஸ்வரின் தலையில் இருந்த கட்டைப் பார்த்து இருந்தாள். “இவன் தலையை மட்டும் உடைத்தோமே.. வேறு எதுவும் செய்யாமல் விட்டு விட்டோமே” என்று பார்த்து இருக்க..

அவள் எதற்கு பார்க்கிறாள் என்று அங்கிருந்தவர்களுக்கு தெரியாது. ஆனால் பார்க்கிறாள் என்று தெரியும் தானே!!!

ஈஸ்வர் வந்ததில் இருந்து மிகவும் கவனமாக கண்களை ஓட்டாமல் அங்கிருந்தவர்களை மட்டும் பார்த்து இருந்தான். ஆனாலும் உள்ளுணர்வு வர்ஷினி மேலேயிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்று சொன்னது. எப்படி இருக்கிறாள் என்று மனம் பார்க்கத் துடித்தது… தேறிக் கொண்டாளா இல்லையா என்று தெரிய வேண்டி இருந்தது.

எது எப்படி என்றாலும் நடந்த அநியாயம் வர்ஷினிக்கு மட்டுமே என்று தெரியும் அளவிற்கு ஈஸ்வரின் மனம் பக்குவப்பட்டு இருந்தது.

இன்னம் தாஸ் ராஜாராம் தவிர வேறு யாருக்கும் இரவு வர்ஷினி ஈஸ்வரோடு இருந்தது தெரியவே தெரியாது.

பேசிக் கொண்டு இருந்த போதே... தாஸ் அரக்க பரக்க வந்தவன் “அய்யா” என்றான்.

“என்னடா?” என்றவரிடம்..

“ஒரு நிமிஷம்” என்று தனியாகக் கூப்பிட்டான்.

முக்கியமான விஷயம் இல்லையென்றால் கூப்பிட மாட்டான் என்றுணர்ந்தவர்...

எழுந்து வர.. அவன் சொல்லி.... கையில் இருந்த பத்திரிக்கையில் காட்டின விஷயத்தைப் பார்த்ததும் ஒரு கணம் உறைந்து நின்றவர்.. மறு கணம் கோபத்தோடு தாஸை ஓங்கி ஒரு அறை விட்டார்.

அப்போதும் அசையாமல் கை கட்டி அவர் முன்னிலையில் நின்றான். அவனுக்குமே மனதில் மிகுந்த குற்ற உணர்ச்சி தான் இருக்க இப்படி ஆகிவிட்டதே என்பது போல..

“என்னடா பண்ற நீ! உனக்குப் பாப்பாவை பார்த்துக்கறது விட்டா என்ன வேலை? ஜாக்கிரதையா பாருடான்னு உன்னை உடனே அனுப்பினேனே! இப்படிக் கோட்டை விட்டு வந்து நிக்கறியே”

தாஸ் யார் ஈஸ்வரை அடித்திருப்பர் என்ற கோணத்தில் தான் பார்த்தான். இப்படி வர்ஷினிக்கு பிரச்சனை வரும் என்று அவன் யோசிக்க வில்லை.

தலை குனிந்து நின்றான்.

“என்னப்பா?” என்று மகன்கள் பதறி வந்தனர். அவர் தாசிற்கு கொடுக்கும் இடம் அவர்களுக்கு தெரியாததா என்ன?, அவனை அடித்திருக்கிறார் என்றால் விஷயம் மிகவும் பெரியது என்று உணர முடிந்தது.

“போங்கடா!” என்று அவர்களையும் திட்டியவர்... “சின்னப் பசங்கன்றது சரியாத் தான் இருக்கு” என்றார். யாரிடம் கோபத்தைக் காட்டுவது என்றே தெரியவில்லை.

அவரின் கையில் இருந்த நாளிதழை முரளி வாங்க, அண்ணனும் தம்பியும் பார்த்தனர்.

அந்த நாளிதழில் தறி கெட்டு வரும் இன்றைய தலைமுறையினர் என்ற டேட்டிங் கலாச்சாரத்தை பற்றி எழுதி.... இளைய தலைமுறையினரின் அச்சமற்ற ரகசிய சந்திப்புகள் என்று விவரித்து... அதில் இருந்தது ஈஸ்வர் மற்றும் வர்ஷினியின் புகைப் படங்கள்.

அவர்கள் லிஃப்டிற்காக நிற்பது, அதில் ஈஸ்வர் வர்ஷினியை பார்த்திருப்பது.. திரும்ப லிஃப்டில் இருந்து வெளியே வருவது, மற்றும் வர்ஷினி ரூம் கதவை திறப்பது, அருகில் ஈஸ்வர் நிற்பது....

ஈஸ்வரை பற்றிய செய்தி என்றால் அவனுக்கு உடனே தகவல் சென்ற விடும் என்று தெரிந்து அஸ்வின் மிகவும் புத்திசாலித்தனமாக இப்படி ஒரு செய்தி வெளியிட வைத்தான். அவர்களின் பெயர் எங்குமில்லை. ஆனால் அவர்கள் இருந்தனர்.

அதுவும் தமிழ் பேப்பர் அல்ல, அது ஒரு ஆங்கில நாளிதழின் இணைப்பு, கலர் ஃபோட்டோவாக வந்திருந்தது. அவர்களின் பெயர் எங்குமே இல்லை. ஆனால் இருவரும் தெளிவாக தெரிந்தார்கள்.

“என்ன?” என்று புரியாமல் ஈஸ்வர் வந்து முரளியின் கையினில் இருந்த நாளிதழை வாங்க... அப்படியே ஸ்தம்பித்து நின்றான். அது படங்கள் என்பதால், இன்னம் என்ன என்ன படங்களோ யார் கையிலோ இருதயம் வேகமாக துடிக்க ஆரம்பித்தது.

உணர்வு வந்து வர்ஷினியைக் கண்கள் தேடி தலை நிமிர்ந்து பார்க்க...

என்ன என்று புரியாமல், ஏதோ சரியில்லை என்று புரிந்து, மனம் பதைத்து பார்த்து நின்றிருந்தாள்.

எல்லோரும் அவளைத் தான் பார்த்தனர்.

**நாம் செய்யாத செயலுக்கு பல சமயம் பதில் சொல்லும் நிலைக்கு ஆளாகிவிடுவோம்! இது தான் விதியின் பெரிய சதி!!!**

## அத்தியாயம் இருபத்தி மூன்று :

**சூதாய் இருந்தால் என்ன? அது தீதாய்**

## இருந்தால் என்ன?

எல்லோரும் பார்வையும் வர்ஷினியைத் துளைத்தது. பத்மநாபனது “நான் படித்துப் படித்து சொன்னேனே கேட்டாயா?” என்று குற்றமே சாட்டியது.

ஈஸ்வரின் மனம் வேகமாகக் கணக்குப் போட்டது.. “இது சீ சீ டீ வீ படங்கள் அல்ல, ஏனென்றால் எல்லாம் தெளிவான கலர் படங்கள்... யாரோ எடுத்து இருகின்றனர்”.

எடுத்து உடனே கிளம்பிவிட்டனர்.. அவர்கள் இருவரும் ரூமில் இருந்து வெளியே வரும் வரை இல்லை என்று புரிந்தது.

படங்களில் எல்லாம் ஈஸ்வர் தான் வர்ஷினியை பார்த்திருந்தான். வர்ஷினி பார்ப்பது போல இல்லை.

அவளை யாரும் தவறாகப் பார்ப்பதை க்ஷணமும் விரும்பாதவன்.. “இதுல அவ தப்பு எதுவும் இல்லை... தனியா போறா அந்த நேரத்துல, யாரும் கூட இல்லைன்னு நான் போனேன். அது இப்படி வரும்னு கொஞ்சமும் யோசிக்கலை..” என்றான் தாழ்ந்த குரலில் அங்கிருப்பவர்களுக்கு மட்டும் கேட்குமாறு.

“என்னோட பிரச்சனையில அவளையும் இழுத்து விட்டுடேன் போல” என்றான்.

“என்னவோ எல்லோரும் தன்னைப் பார்த்து பேசுகிறார்களோ” என்று யோசித்தவள் மெதுவாக மாடியை விட்டு இறங்கி வர..

“அவளுக்குத் தெரிய வேண்டாம்” என்றான் அவசரமாக ஈஸ்வர்.. ராஜாராமை பார்த்து.

அதற்குள் வர்ஷினி இறங்கி வந்திருக்க.. “என்னப்பா எல்லோரும் என்னையே பார்க்கறீங்க?” என்றாள். கண்களில் ஒரு இனம் புரியாத கலக்கம்.

“ஒன்னுமில்லைடா.. சும்மா பேசிக் கிட்டே பார்த்தோம்” என்றார்.

“தாசண்ணாவை ஏன் அடிச்சீங்க?”

அவருக்கு சட்டென்று என்ன சொல்வது என்று தெரியவில்லை.

“அது என்ன பேப்பர் எல்லோரும் பார்த்தீங்க..?”

எல்லோரும் மௌனமாகத்தான் நின்றனர். அவர்கள் எல்லோரும் நிற்கும் போது தான் பேசுவது.. அதிகப் பிரசிங்கித்தனம் என்று தோன்ற ஈஸ்வர் அமைதியாக இருந்தான்.

“ஒன்னுமில்லைன்னு சொல்றேன்ல பாப்பா” என்று ராஜாராம் அதட்ட..

“இப்போ நீங்க என்னை ஏன் அதட்டுறீங்க? என்ன விஷயம்?” என்று வர்ஷினி கேட்ட விதம், ராஜாராமின் அதட்டலுக்கு ஈடு கொடுத்தது. கலக்கம் எல்லாம் மறைந்து எனக்கு என்ன என்று தெரிந்தே ஆக வேண்டிய பிடிவாதம்.

“அதுதான் அப்பா ஒன்னுமில்லைன்னு சொல்றாங்க தானே.. சும்மா இல்லாததை சொல்லுங்கன்னு சொன்னா? என்ன சொல்வாங்க?” என்று பத்மநாபன் இடையில் வர..

“நீங்க யாரும் எப்பவும் என்கிட்டே எதுவுமே சொல்றது இல்லை.. அப்பாக்கு உடம்பு சரியில்லாத போது கூட அப்படித் தான்” என்று அவனிடமும் வார்த்தையாடினாள்.

கமலா தான் நிலைமையைக் கையாண்டார்.. “அவங்க ஏதோ முக்கியமா பேசிட்டு இருக்காங்க... இதுல நீயேன் இப்ப திடீர்ன்னு.. வா! வா! நீ வா!” என்று அவளைக் கை பிடித்து இழுக்க..

நேராக தாஸிடம் சென்றவள்.. “தாசண்ணா! ஏதாவது இருந்தா சொல்லிடுங்க! அப்பா ஏதோ பாப்பான்னு என்னைப் பத்தி தான் உங்க கிட்ட பேசினார்” என்று கைநீட்டி அவள் பேசிய விதம் ஏதோ விட்டால் தாஸை அடித்து விடுவாள் போல இருந்தது.

“ஒன்னுமிலைங்க பாப்பா” என்றான் அவனும்..

“என்ன பாப்பா! நீங்க கை நீட்டிப் பேசறீங்க! உள்ள போங்க!” என்று ராஜராம் அதட்ட.. பத்மநாபன் “நீ வா!” என்று அவளை மேலே இழுத்துப் போனான்.

அதுவரை வர்ஷினி ஈஸ்வரைப் பார்க்கவில்லை.. போகும் போது வர்ஷினி ஈஸ்வரைப் பார்த்த பார்வை “ஏதாவது வெளிய வந்தது உன்னை என்ன செய்வேன் பார்” என்று ஸ்பஷ்டமாக மிரட்டியது. ஆனால் மிக சில நொடிகள்..

பார்வையை திருப்பியவள் பத்மநாபனிடம் “கையை விடுங்க அண்ணா.. நான் போயிக்கறேன்!” என்று அவனையும் அதட்டி

கையை விடுவித்து சென்றாள்.

அப்போது அந்தக் க்ஷணம் விஷயம் அவளுக்கு தெரிய வேண்டாம் என்றே எல்லோரும் நினைத்தனர்.

அதையும் விட “இதுல அவ தப்பு எதுவும் இல்லை” என்று ஈஸ்வர் ஒப்புக் கொடுத்த விதம்.. கூடவே அவளுக்குத் தெரிய வேண்டாம் என்று அவளுக்காகப் பார்த்தது ராஜாரமிற்கு அவன் மேல் இன்னும் மரியாதையை அதிகப்படுத்தியது.

வர்ஷினி சென்றதும்.. “இப்படி ஆகும்னு எனக்குத் தெரியாது... தெரிஞ்சிருந்தா உங்க யாரையாவது கூப்பிட்டு விட்டிருப்பேன்” என்று கை குவித்து மன்னிப்பு கேட்டான்.. நடந்த இந்த நிகழ்வு, கூடவே அவனின் செய்கை.

“அட நீ என்னப்பா... நீ என்ன தெரிஞ்சா செஞ்ச?” என்று முரளியின் தாத்தா சமாதானம் செய்ய..

அதுவரை பேசாதிருந்த நமசிவாயம் “என்ன விஸ்வா? நம்மைச் சுத்தி இவ்வளவு பிரச்சனை இருக்கும் போது கவனமா இருக்க வேண்டாமா.. பொண்ணுங்க விஷயம் இப்படி பண்ணிட்டியே?” என்று மகனை கடிந்தார்.

தலைக் குனிந்து தான் நின்றான். ஈஸ்வர் அப்படி நிற்பதை பார்த்ததும்.. “எவனாயிருந்தாலும் தொலைச்சிடலாம்!” என்று முரளி கோபமாகப் பேச,

“வேண்டாம்!” என்றான் ஈஸ்வர் உடனே...

“இது யாரோ எனக்கு வேண்டாதவங்க செஞ்ச வேலை.. இதனால நம்ம டென்ஷன் ஆகறோம்னு தெரிஞ்சா மேல மேல செய்வாங்க... திரும்ப திரும்ப வர்ஷினியை இழுக்கலாம்.. அதனால இந்த விஷயத்தை நம்ம பெருசு பண்ண வேண்டாம். நம்மை பாதிச்ச மாதிரி காட்டிக்க வேண்டாம்!”

“நாங்க என்ன அரசியல்வாதியா இல்லை நடிகரா.. எதுவும் இல்லை... எத்தனை பேருக்கு எங்களைத் தெரியும்.. இதை பெருசு பண்ண வேண்டாம்.. உங்களுக்கு தெரிஞ்சவங்க யாராவது கேட்டா..

வர்ஷினி மாடலிங் பண்றா சொல்லிடுங்க... நீங்க யார்கிட்டயும் தயங்கி பேச வேண்டாம்” என்றவன்..

“இப்போதைக்கு திரும்ப இந்த மாதிரி எதுவும் வராம பார்த்துக்கறது தான் முக்கியம். எவன்னாலும் எங்க போயிடப் போறான்... பார்த்துக்கலாம்.. நான் பார்த்துக்குவேன்” என்றான் தீவிரமாக..

“திரும்ப திரும்ப ஏதாவது செஞ்சு மாட்டிக்காத” என்று அவனை அதட்டிய முரளி... “கண்ணுக்குத் தெரியாதவன் கிடையாதே நம்ம எதிரி.. யாரு அந்த அஸ்வின்.. எங்க வீட்டுப் பொண்ணை எல்லாம் இழுத்துட்டான் இல்லை.. அவங்க வீட்ல பொண்ணுங்க இல்லையா?”, என்று சொல்ல.

“முரளி!” என்று ஈஸ்வர் கத்த... “முரளிண்ணா  நீங்க எதுவும் பண்ணக் கூடாது!” என்றாள் ரஞ்சனியும் உடனே. ஜகன் நமஷிவாயம் இருவர் முகத்திலும் கூட பதட்டம்.

முரளி அவர்களைப் பார்க்க.. “ரூபாவோட தங்கைடா.. ரஞ்சனிக்கு ரொம்ப க்ளோஸ் பிரெண்ட்.. அவளுக்கு ஏதாவது ஒண்ணுன்னா திரும்ப நாம தான் போய் நிற்கணும்...” என்று ஈஸ்வர் சொல்ல,

“அவ எங்கள்ள ஒருத்தி முரளிண்ணா, அவளுக்கு எதுவும் ஆகக் கூடாது” என்றாள் ரஞ்சனியும்.

“அதுதான் அந்த அஸ்வின் உங்க கிட்ட விளையாடறான்... நீங்க அவங்களை எதுவும் பண்ண மாட்டீங்கன்னு” என்று முரளி சொல்ல..

“யாரும் எதுவும் பண்ண வேண்டாம். என் பொண்ணு விஷயம் எனக்குப் பார்த்துக்க தெரியும். எல்லாம் அவங்க அவங்க வேலையை பாருங்க” என்று சொன்ன ராஜாராமின் குரலில் அவ்வளவு தீவிரம்...

“சின்னப் பசங்க விளையாட்டு இல்லைன்னு நான் காட்டுறேன்!” என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டார்.

அவர்களின் பணத்தைப் பற்றிய பேச்சு வார்த்தை முடியவில்லை. இப்போது அதை பேசவும் முடியவில்லை. “இன்னொரு நாள் வர்றோம்!” என்ற ஈஸ்வர் மீண்டும் “சாரிப்பா” என்றான்.

அவனின் கேடுகெட்ட செயலை நினைத்து அவன் வருந்திக் கேட்க.. ராஜாராமிற்கு என்னவோ தன்னால் அந்த செய்தி வந்து விட்டது என்று அவன் அவ்வளவு வருத்தப் படுகிறான் என்று

தோன்றியது. ஆனாலும் ஈஸ்வர் முகத்தைப் பார்த்தால் அவனே குற்றம் செய்த ஒரு தோற்றம் குழம்பிப் போனார். ராஜாராம் மிகுந்த புத்திசாலி ஏதோ ஒன்று இதையும் மீறி இருப்பதாக தோன்றியது.

ஒரு மௌனமான சூழல்..

ஈஸ்வர் தன் செயலை நினைத்து வெட்க.. அது தெரியாத அனைவரும்.. இந்நிகழ்வுக்காக வருந்துகிறான் என்று நினைத்தனர்.

**நின்புகழ் நின்னை மறைத்த நின்செயல் நின்னைக் கொல்லும்!!!**

ஈஸ்வர் ஜகனுடனும் அப்பாவுடனும் வீடு திரும்பினான். நிச்சயம் வேறு புகைப் படங்கள் இருக்க வாய்ப்பில்லை என்று தோன்றியது.. இருந்தால் அதைத் தான் அவர்கள் போட்டிருப்பர் என்றும் தோன்றியது.

அஸ்வினை துவம்சம் செய்ய வேண்டும் என்ற ஆத்திரம் கிளர்ந்தாலும்.. இப்போதைக்கு வேண்டாம் பொறு.. நான் நினைப்பதை விடவும் அவன் பெரிய கிரிமினல் என்றே தோன்றியது.

இப்போதைக்கு கேட்கப் போய் அவன் மீண்டும் வர்ஷினியை இழுத்து விட்டால்.. அவனால் வர்ஷினியை எதிர்கொள்ள முடியாது. அதனால் அமைதியானான். அதுவுமன்றி ராஜாராம் பார்த்துக் கொள்வார் என்றும் தோன்றியது.

இங்கே ராஜாராமிடம் "அப்பா அவகிட்ட விஷயத்தை மறைக்க முடியாதுப்பா... அவ ஃபிரண்ட்ஸ்க்கு தெரிஞ்சா சொல்லிடுவாங்க.. நிறைய ஃபிரண்ட்ஸ் கூடப் பேசறா பழகறான்னு நம்ம தான் இந்த லீவ் வரை நீ அமைதியா இருக்கணும்.. இது உன்னோட டைம், உன்னோட ஸ்பேஸ்ன்னு, அதை இதை சொல்லி கண்ட்ரோல் செஞ்சிருக்கோம்".

"நீ அவங்களுக்கு அடிக்ட் ஆகற அப்படின்னு ஒரு வார்த்தையை நான் உபயோகிச்சதால தான், நான் யாருக்கு அடிக்ட் இல்லை, என்னால பேசாம இருக்க முடியும்ன்னு சொல்லி இப்போ பேசாம இருக்கா", என்றான் பத்மநாபன்.

"விடுடா பார்த்துக்கலாம்.. எவ்வளவோ நடக்குது, இது ஒரு விஷயமில்லை... இப்போ விஷயமெல்லாம் யாரும் திரும்ப இந்த மாதிரியோ இல்லை இதை விட மோசமாவோ பண்ணிடக் கூடாது.."

என்று தாஸை பார்த்த பார்வை.. “நடந்தது நீ தொலைஞ்சடா” என்று மிரட்டியது.

மேலே சென்ற வர்ஷினிக்கு ஏதோ தன்னிடம் எல்லோரும் எதையோ மறைப்பது போன்ற உணர்வு..

மனது சோர்வாக உணர்ந்தது..

இத்தனை நாட்கள் பள்ளியியில் இருந்த போதோ ஹாஸ்டலில் இருந்த போதோ தனிமை உணர்ந்ததில்லை, ஏனென்றால் அவளின் நட்பு வட்டம், எப்போதும் சுற்றி யாராவது இருப்பர்.

இப்போது ஈஸ்வருடனான அவளின் விஷயம், இது அவளுடைய மிகவும் பர்சனல்! யாரிடமும் இதை பகிரவும் மாட்டாள்! ஆனால் வேறு பேசினால், ஆட்கள் இருந்தால், மனது திசை திரும்பும். இப்போது அதற்கும் வழியில்லை.

இத்தனை பேர் அவளைச் சூழ்ந்திருக்க... தனிமையாய் இருந்தும் உணராத தனிமையை முதல் முறையாக உணர்ந்தாள். வலித்தது! எங்கென்றே தெரியாமல் வலித்தது! உடலா! உள்ளமா! தெரியவில்லை.

அமைதியாகப் படுத்துக் கொண்டாள்.

யார் வந்து பார்த்த போதும் விழிக்க வில்லை. யாரையும் பார்க்கப் பிடிக்கவில்லை. மதிய உணவும் உண்ணவில்லை.. “அப்பா கூப்பிடறாங்க” என்று மாற்றி மாற்றி அம்மா அண்ணி அண்ணன் என்று யார் வந்த போது வரவில்லை, பதிலும் பேசவில்லை.

இரவு வரை ரூமை விட்டு வெளியில் வரவில்லை. எப்போதும் இப்படி எல்லாம் செய்ய மாட்டாள்.

“ஒன்னுமில்லைன்னு சொல்றோம்! எவ்வளவு பிடிவாதம்!” என்று தான் எல்லோர் மனதிலும் தோன்றியது.

தாத்தா ஒரு படி மேலே போய் மகனிடம்.. “ராஜா நீ இல்லாத ஒரு சூழ்நிலையில இவளை சமாளிக்கறது ரொம்ப கஷ்டம்.. பேசாம இவளுக்கு ஒரு கல்யாணத்தை பண்ணிடு..”

“அப்பா அவ சின்னப் பொண்ணு!”

“என்ன சின்னப் பொண்ணு! அதுதான் ப்ளஸ் டூ முடிச்சிட்டா, பதினெட்டு வயசாகிடுச்சு, இவ இவ்வளவு பிடிவாதம் பிடிக்கும் போது யாரு இவளைப் பார்த்துக்குவா.. கூடப் பொறந்தவங்களையே இந்தக் காலத்துல யாரும் பார்த்துக்கறது இல்லை” என்றார்.

“ரெண்டு பசங்களுக்கும் கடமையை முடிச்சிட்ட.. இவளுக்கும் முடிச்சிடு... யார் பேச்சையும் கேட்பான்னு தோணலை!” என்றார்.

அப்படி ஒன்றும் பிடிவாதம் பிடிப்பவள் எல்லாம் இல்லை வர்ஷினி, தன் உணர்வுகளைக் கூட யாரிடமும் அதிகம் காட்ட மாட்டாள். அந்த வயதில் இருக்கும் மற்ற பிள்ளைகளை விட இவள் எவ்வளவோ பிடிவாதம் குறைவு தான்

முதல் முறையாக பிடிவாதம் ஒன்றைக் காட்ட.. அது இப்படி திரிய ஆரம்பித்தது.

பிடிவாதம் பிடிக்காத பெண்ணை, பிடிவாதம் என்று சொல்லி, அவளின் பிடிவாதத்தை அதனின் அதிகப்படியான எல்லைக்கு கொண்டு செல்ல ஆரம்பித்தனர்.

இரவு உணவிற்கு கீழே இறங்கி வந்தவளிடம்... “இத்தனை பேர் கூப்பிடறாங்க! அது என்ன வராம அவ்வளவு பிடிவாதம்!” என்று வேறு தாத்தா கேட்க..

அவர் என்ன பேசினாலும் ஒரு வார்த்தைக் கூட எதிர்த்து பேசாத வர்ஷினி, “என்ன? என்ன பிடிவாதம் பிடிச்சேன்?” என்று அவரிடம் எதிர் கேள்வி கேட்க.. அந்த பாவனையிலும் ஒரு எதிர்ப்பு.

பத்மநாபன் உடனே “என்ன வர்ஷினி இது” என்க,

“என்ன, என்ன? அவர் கேள்வி கேட்டார், நான் பதில் சொன்னேன்!” என்றாள் அலட்சியமாக..

அது அவனுக்கு கோபத்தைக் கொடுக்க... திரும்ப கோபமாக அவன் பேச போக.. பத்மநாபனிடம் ஒற்றை விரல் வாயின் மேல் வைத்து பேசாதே என்று ராஜாராம் சைகைக் காட்ட.. அமைதியானான்.

“பாப்பா நம்ம வெளில போகலாமா?” என்றார் ராஜாராம்.

“வெளிலயா எங்க?” என்றவள் கூடவே, “உங்களுக்கு உடம்பு சரியில்லை! வேண்டாம்!” என்றாள்அவரைப் பார்த்தவாரே.

“நான் நல்லா இருக்கேன் போகலாம்!” என்று அவர் சொல்ல..

“இல்லை! நீங்க டையர்டா தெரியறீங்க” எனச் சொல்ல.. அப்போது தான் எல்லோரும் அவரை ஊன்றி கவனித்தனர். ஆம்! ராஜாராம் களைப்பாகத் தான் தெரிந்தார்.

“அப்பா வேண்டாம்!” என்று மகன்கள் சொல்ல, பார்வையால் எல்லோரையும் அடக்கியவர்.. “போகலாம் பாப்பா!” என்றார்.

“சரி! சாப்பிட்டுட்டு போகலாம்! பசிக்குது!” என்று அவள் சொல்ல.. அடுத்த நிமிடம் மகளின் முன் தட்டோடு கமலாம்மா நிற்க...

அவசரமாக அள்ளி வாயில் போட்டுக் கொண்டவள் “போகலாம்!” என்றாள்.

“போய் ட்ரெஸ் மாத்திட்டு போ வர்ஷினி!” என்று ஷாலினி சொல்ல.. ஒரு த்ரீ ஃபோர்த்ஸ் பேன்ட், டீ ஷர்டில் இருந்தாள்.

“அண்ணி! திஸ் இஸ் ஒகே!” என்று வர்ஷினி கிளம்ப,

எங்கே போகிறார்கள் இவர்கள் என்று வீடு மொத்ததமுமே பார்த்தது. யாரிடமும் எங்கே போகிறார் என்று ராஜாராம் சொல்லவில்லை..

தாஸ் காரை ஓட்ட... கிளம்பினர்.

கடற்கரையில் கார் நிறுத்தி தாஸ் அகன்றுவிட..

“என்னப்பா?” என்ற மகளைப் பார்த்து..

“இது இன்னைக்கு பேப்பர்ல வந்தது!” என்று ராஜாராம் மகளிடம் பேப்பரை நீட்ட...

அதைப் பார்த்த வர்ஷினியின் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி..

வேகமாக செய்தியை படித்தாள், வேறு எதுவும் படங்கள் இருக்கிறதா என்று பார்த்தாள். பின்பு தந்தையை எறிட்டவள், “காலையில எல்லோரும் இதைதான் பார்த்தாங்களாப்பா”

“ஆம்” எனத் தலையாட்ட..

“damn shit” என்றவள் தலையைப் பின்புறமாக சாய்த்துக் கண்களை மூடிக் கொள்ள..

“யாரும் உன்னைத் தப்பா நினைக்கலை” என்று அவசரமாக ராஜாராம் விளக்கம் சொல்ல..

“ஏன் நினைக்கலை? நேச்சுரலி இந்த மாதிரி ஒரு நியூஸ், எங்க பேர் போடலைன்னாலும் ஃபோட்டோவோட இருக்குது... நானும் ஃபங்க்ஷன் நடக்கற இடத்துக்கே வராம திரும்பப் போயிட்டேன்.. ரெண்டு பேருக்குள்ள ஏதோ இருக்குன்னு அப்போ ஏன் நினைக்கலை” என்று கேட்டாள்.

“அதுக்கு தான் பாப்பா, உங்களை இங்கே கூட்டிட்டு வந்திருக்கேன்.. என்ன நடக்குது உங்களுக்குள்ள..?”

மகள் என்ன கேள்வி இது என்பது போல பார்க்கவும்..

“இந்த ஃபோட்டோ பார்த்தவுடனே.. ஈஸ்வர் இது உனக்குத் தெரியணும்னு அவசியமில்லை. இது என்னோட தப்புன்னு சொன்னான்.. அதாவது உன்னை யாரும் எதுவும் சொல்லிடக் கூடாதுன்னு ஒரு துடிப்பு. நான் பார்த்தேன்”.

“ஓஹ்! ஈஸ்வர் சொன்னதால தப்பில்லைன்னு நினைச்சிடாங்களா!” என்றாள் அவரையே தீர்க்கமாக பார்த்தபடி..

“அச்சோ, பாப்பா! யாரும் உன்னை தப்பா நினைக்க மாட்டாங்க! அதை விடு! ஒரு வேலை அந்த போட்டோ அவனே கொடுத்திருப்பானோ!”

“சே! சே! மாட்டாங்கப்பா!” என்றாள் உறுதியாக.

“அப்போ என்ன தான் நடக்குது! காதலா? அப்படியேதாவது உங்களுக்குள்ள இருக்கா” என்று மீண்டும் கேட்க,

“இல்லைப்பா..” என்பது போல தலையசைத்தவள்,

“கண்டிப்பா நல்லதா எதுவும் நடக்கலை! ஆனா அதை என்னால யார்கிட்டயும் சொல்ல முடியாதுப்பா! its my very personal paa!” என்றாள் அவரையேப் பார்த்தபடி.

மகளின் இந்த பதிலில் திகைத்து அவளைப் பார்த்தார் ராஜாராம்.

## அத்தியாயம் இருபத்தி நான்கு :

**ரகசியம் காப்பதின் முதல் நியதி! "எனக்கு ஒரு ரகசியம் தெரியும்" என்று யாரிடமும் சொல்லக் கூடாது!!!**

முதலில் மகனின் பதிலில் திகைப்பாய் பார்த்தவர்... பின்பு அப்படியே பயமாய் மாறி "பர்சனல்னா... என்ன? என்ன பண்ணினான்?" என்று கலவரமாக கேட்டார்.

அவரின் பதட்டத்தை பார்த்தவள் "நத்திங் டு வொர்ரி பா.. just some personal conflicts.."

"பர்சனல்னா?" என்று பயந்து மீண்டும் கேட்டார்... அவரால் சில வார்த்தைகளை மகளிடம் கேட்க முடியவில்லை.. அவளின் பாவனைகளில் பெரிதாக எதுவும் இல்லை என்று தோன்றியது. ஆனாலும் ஒரு பயம் எப்படி கேட்பது என்று தெரியவில்லை... தகப்பனாக பயந்து தடுமாறினார்.

"என்னப்பா நீங்க? அவனை கொல்லுவோமான்னு கோவமா கேட்பீங்கன்னு பார்த்தா இப்படி பயந்து பாக்குறீங்க" என்றாள் ஈசியாக.. இரண்டு நாட்களாக நடந்தவைகளை நினைத்து நினைத்து மனது சிறிது சமனப்பட்டு இருந்தது.

அதுவும் காலையில் பார்த்த ஈஸ்வரின் தோற்றம் அவனின் முகத்தில் திமிரெல்லாம் மறைந்து தெரிந்த ஒரு குற்ற உணர்ச்சி அவளுக்கு சற்று திருப்தியே.. இப்போது இருவரின் படங்கள் வேறு வந்திருந்தால், என்னவென்று தெரியாத போதிலும் ஏதோ ஒன்று இருவரையும் இணைத்து எல்லோருக்கும் தெரிந்து விட்டது.. இனி எதிர் கொண்டு தானே ஆகிவிடும்.... என்னவாகிடும் பார்த்துக் கொள்ளலாம் என்ற அலட்சியம் தானாக ஏறியிருந்தது.

"அவனைக் கொல்றது கொல்லாதது அடுத்த விஷயம். ஆனா உனக்கு ஏதாவது ஆகியிருந்தா என்னால எப்படித் தாங்க முடியும். என்னோட பயம் உனக்குப் புரியலையா பாப்பா.. ஏதாவது செஞ்சிருந்தான்... இங்க இருந்து நான் அவன் வீட்டுக்கு போற நிமிஷம் தான் அவன் உயிரோட இருப்பான்" என்று அவர் சொல்லச் சொல்ல அவரின் கண்களில் தெரிந்த நெருப்பு பிழம்பில்..

சுதாரித்தவள்.. "ஐயோ அப்பா! அப்படியெல்லாம் எதுவும் இல்லை.. என்னை அவங்க எதுவும் பண்ணலை.. அது என் அம்மா

பத்தி எதுவும் தெரியாது. நான் உங்க பொண்ணு மட்டும் தானே தெரியும்! அதனால கொஞ்சம் கீழ இறக்கிப் பார்ப்பாங்க.. அதுதான்!” என்றாள். அதுவும் கூட உண்மைதானே!

“வேற எதுவும் இல்லையே!”

“இல்லைப்பா! பாருங்க, என்னோட நல்லதனத்துக்கு அவங்க சர்டிஃபிகேட் கொடுக்கறாங்க... என் மேல எந்த தப்பும் இல்லைன்னு சொல்றாங்க... எல்லோரும் நம்பறீங்க” என்றாள் ஒரு புரியாத குரலில்.

என்ன சொல்ல வருகிறாள் என்று புரியவேயில்லை ராஜாராமிற்கு, தெளிந்த மனது மீண்டும் கொஞ்சம் குழம்ப.

“என்ன சொல்ல வர்றமா! எனக்குப் புரியலை..!”

“ஒன்னுமில்லை இதை விட்டுடுங்க.. இந்த மாதிரி பேப்பர்ல எதுவும் வராம பார்த்துக்கங்க.. ஈஸ்வர் ஒரு பிரச்சனையில்லை, நான் பார்த்துக்குவேன்!”

“நீ பார்க்குற மாதிரி என்ன இருக்கு! நீ எதுவும் பார்க்கக் கூடாது! அப்போ உனக்கு அவனோட சண்டையா?”

“ஐயோ அப்பா விடுங்க.. வேற பேசுவோம்” என்றவளைப் பார்த்து.

“ஆனா உன்னைக் கீழ பார்த்தானா? என்னால நம்பவே முடியலை! என்னைப் பார்த்த போதெல்லாம் உனக்காக தானேம்மா பேசினான்... நான் சொத்து பிரிக்கப் பேசினப்போ கூட என்கிட்டே உனக்காக எவ்வளவு பேசினான்” என்றார் நம்பாமல்.

“அப்பா, ப்ளீஸ்! அந்த ஈஸ்வர் பேச்சை விடுங்க..” என்றவளிடம்..

“சரி விட்டுடலாம்.. அவனை என்ன பண்ணலாம்?”

“எவனை?”

“ஈஸ்வரை!”

“ஐயோ! நான் தான் சொல்றேனோ.. ஒன்னும் பண்ண வேண்டாம், புரியுதா! எதுவும் பண்ணக் கூடாது!” என்றாள் மீண்டும் மீண்டும்..

மொத்தமாக குழம்பிப் போனார்... "சண்டைன்றாங்க, ஏதோ சரியில்லை, நல்லதா எதுவும் நடக்கலை, கீழ பார்க்கிறான், ஆனா எதுவும் பண்ண வேண்டாமா..?"

தன் தந்தையின் மனம் தெளியாததைக் கண்டு.. "அப்பா! ஒன்னுமில்லாததை ஊதிப் பெருசாக்கிடாதீங்க.. எனக்கு யாரும் என்னை பத்தி பேசறது எப்பவுமே பிடிக்காது!" என்றாள்.

ஆனாலும் அவர் அதோடு விட்டு விடுவார் என்று தோன்றாததால்.. ஏதாவது சமாளித்தே ஆக வேண்டிய கட்டாயத்தில், "அப்பா பர்சனல்னா நான் கொஞ்சம் ஆர்வமா பார்த்தேன், அவர் அலட்சியமா பார்த்தார்! அதுதான் பிரச்சனை.. நீங்க மேல ஏதாவது செஞ்சு என்னை கீழ இறக்கிடாதீங்க! புரிஞ்சதா!" என்றாள் தன் மேல் பழியைப் போட்டு.

இனி ஒரு விஷயம் இதன் பொருட்டோ எதன் பொருட்டோ தன்னைக் குறித்து உருவாவதை விரும்பவில்லை. முற்றுப் புள்ளி வைக்க அவள் நினைக்க, அதனைக் கொண்டு அவளின் அப்பா கோலம் போட போவதை அறியவில்லை.

என்ன ஆர்வமாகப் பார்த்தாளா? அதை என்னிடம் சொல்வாளா? அப்போது நான் என்ன செய்ய வேண்டும்? மண்டை காய்ந்து போனார் என்றே சொல்ல வேண்டும்..

சரி, இதை இப்போதைக்கு விடுவோம்! இன்னும் நிறைய விஷயங்கள் இருக்கிறதே... பேசவேண்டுமே என்று சமாதானம் செய்து கொண்டவர்...

"அப்பாக்கு உடம்பு சரியில்லை! தெரியும் தானே!"

மகள் அவளைப் பார்க்க... "ரொம்ப நாள் இருக்க மாட்டேன்டா!" என்றார்.

"என்ன?" என்றாள் அதிர்ந்து.... எல்லாம் பின் போய்விட... "அப்பா இருக்க மாட்டாரா! அப்போது நான்? நான் என்ன ஆவேன்?" அதுவரை இருந்த மனநிலை அப்படியே மாறியது.

"எஸ் டா!" என்றவர்.. "எனக்கு எந்த நேரமும் எதுவும் ஆகலாம்! நீ எதுக்கும் தயாரா இருக்கணும்" என,

"ட்ரீட்மென்ட் ரொம்ப அட்வான்ஸா இருக்கு! எல்லாம் சரியாகிடும்! ஒன்னும் ஆகாது!" என்றாள் கலக்கமாக.

“எல்லா பெஸ்ட் ட்ரீட்மென்ட் எடுத்துகிட்டுத் தான் இருக்கேன்... என்னோட கடைசி நிமிஷம் வரைக்கும் வாழ போராடுவேன்.. இன்னும் ஒரு ரெண்டு மூணு நாள்ல சொத்துக்களை எல்லாம் பிரிச்சிடுவேன்.. என்ன ஏதுன்னு முடிவு பண்ணிட்டேன்.. எல்லோரும் இருக்கும் போது சொல்றேன்” என்றவர்..

“அவங்க யாருமே உன்னை விட மாட்டாங்க... நீ அவங்களை எப்பவும் விடக் கூடாது! அம்மாவையும் அண்ணனுங்களையும்!”

“எனக்கு யாரையும் விடற எண்ணம் கிடையாது! ஆனா எதிர் காலத்துல என்ன நடக்கும்ன்னு யாராலையும் சொல்ல முடியாதுப்பா! சில சமயம் எனக்குத் தெரியாம தள்ளி நின்னுடரேன்! இன்னைக்கு மாதிரி!”

வந்ததில் இருந்து மிகவும் முதிர்ச்சியான பேச்சு தான் வர்ஷினியிடம்.. இப்போது இந்தப் பேச்சைக் கேட்கவும்..

“அப்போ உனக்குக் கல்யாணம் செஞ்சி வைக்கட்டுமா.. இப்படி என்னால எப்படி தனியா விட்டு போக முடியும்..”

“கல்யாணமா? எனக்கா?” என்று அவள் கேட்ட விதம்.. அவர் இன்னும் சிறிது நாள் தான் இருக்கப் போகிறேன் என்று சொன்னதை விடவும் அதிர்ந்து கேட்டாள்.

“உனக்கு ஈஸ்வர் மேல ஆர்வம் இருக்குன்னா பிடிச்சிருக்குன்னா” என்று ஆரம்பிக்கும் போதே “அப்பா” என்று ஏறக்குறைய அலறினாள்..

“என்ன பேசறீங்க?” இதை அவள் எதிர்ப் பார்க்கவே இல்லை..

“அப்போ இதுக்காகத் தான் மாத்தி மாத்தி கேள்வி கேட்டீங்களா”,

“இல்லை! இதுக்குன்னு இல்லை! என்னவோ உங்களுக்குள்ளன்னு எனக்கு யோசனை.. ஆனா எப்பவுமே உனக்காக ஈஸ்வர் என்கிட்டே பேசறான்.. இன்னைக்கு கூட விஷயம் உனக்கு தெரிய வேண்டியதில்லைன்னு சொன்னான்.. இப்போ நீயும் ஆர்வமா பார்த்தேன் சொன்ன, அதுதான் ஒரு திடீர்ன்னு இந்த யோசனை.. ஆனா காலையில இருந்தே தாத்தா சொல்லிட்டு தான் இருக்காங்க!”

“அவனை மாதிரி ஒரு வாழ்க்கை துணை உனக்கு அமைஞ்சா நல்லா இருக்கும்.. எனக்கு அவனை ரொம்ப வருஷமா தெரியும்”

“அப்பா!” என்றாள் பரிதாபமாக.. அவர் ஈஸ்வரை எதுவும் செய்யக் கூடாது என்பதற்காக தனக்கு ஆர்வம், அவன் பார்க்கவில்லை என்று சொல்ல, கூடவே முதலில் அவளுக்கும் அப்படித்தானே! ஆனால் அது இப்படி உருவெடுக்குமா.. இப்போது அவன் செய்ததை சொன்னால் கண்டிப்பாக அவனை ஏதாவது செய்து விடுவார்.. அதுவும் அவளால் முடியாது.

“எனக்கு இப்போல்லாம் கல்யாணம் வேண்டாம்!”

“சரி! வேண்டாம்! நிச்சயம் பண்ணிக்கலாம்!”

“அப்பா! நான் அவர் என்னைக் கீழ பார்க்கறார் சொன்னேன்... நீங்க கேட்டாலும், அவர் ஒத்துக்க மாட்டார்!”

“அப்போ ஈஸ்வர் ஒத்துக்கிட்டா உனக்கு ஓகே வா!”

“அப்போக் கூட எனக்கு ஓகே இல்லை!”

“இல்லை, என்னால தனியா விட்டுட்டுப் போக முடியாது... நான் இருக்கும் போதே ஏதாவது பிரச்சனையோன்னு கொஞ்ச நேரத்துக்கு முன்னால பயந்தது எனக்கு தான் தெரியும்!”

“இப்போ பேப்பர்ல வேற இப்படி.. பேசாம ஈஸ்வரையே உனக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறேன்”

“அப்பா! என்னைப் பேச வைக்காதீங்க, ஈஸ்வர் என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டாங்க! ரஞ்சனி அண்ணி நம்ம வீட்டுக்கு வந்திருக்கலாம்! ஆனா என்னை எல்லாம் அவங்க வீட்ல கல்யாணம் செஞ்சுக்க ஒத்துக்க மாட்டாங்க..!

“உண்மைன்னு ஒன்னு இருக்கு! நீங்க எந்த வித்தியாசமும் என்கிட்டே காட்டாம எல்லோர்கிட்டயும் உங்க பொண்ணுன்னு தைரியமா சொல்லலாம்! ஆனா மத்தவங்க அதை ஏத்துக்குவாங்க சொல்ல முடியாது! in other words. i am an illegitimate child... என்னோட கல்யாணம் யாரோடையும் அவ்வளவு ஈசி கிடையாது...” என்று உண்மையை சொல்ல...

அந்த உண்மை ராஜாராமை அதிகமாக! மிக அதிகமாக உசுப்பியது!

“தாஸ்! வீட்டுக்குப் போகலாம்!” என.. அதன் பிறகு அப்பா மகளிடத்தில் பேச்சுக்கள் இல்லை....

அவர்கள் வீடு வரும் வரை வீட்டில் அனைவரும் ஆளுக்கு ஒரு வேலை பார்த்து வாசலில் ஒரு கண் வைத்து என்று தான் இருந்தனர்.

வீடு வந்தவர்கள், ராஜாராமும் யாரிடமும் பேசவில்லை, வர்ஷினியும்.. இருவர் முகமும் மிகவும் சீரியசாக இருக்க... யாராலும் என்ன என்று கேட்க முடியவில்லை.

வர்ஷினியிடம் இருந்த தெளிவு பின் போய் இருந்தது... அப்பா கொஞ்ச நாள் தான் இருப்பேன் என்றது... இப்போது ஈஸ்வருடனான திருமணப் பேச்சு..

ஐயோ அவன் என்ன செய்திருக்கிறான் என்னிடம்... அவனுடன் திருமணமா.. என்று மனது ஒரு புறம் ஓலமிட... உனக்கு இந்தக் கவலை தேவையில்லை ஈஸ்வர் உன்னுடன் திருமணதிற்கு எல்லாம் சம்மதிக்கவே மாட்டான்.. என்று அடக்கியது.

இந்த யோசனைகள் ஓடும் போது தவித்துப் போனாள்.. மீண்டும் எங்கே என்று தெரியாமல் ஒரு வலி..

யோசிக்காமல்  பத்மநாபனின் ரூம் கதவை தட்டினாள்.. பத்து கதவை திறக்க.. “எனக்கு வலிக்குது மாத்திரை வேணும்” என்றாள்.

“மாத்திரையா” என்று அவன் கேட்க..

“அண்ணி கிட்ட கேளுங்க” என்று எரிந்து விழுந்தாள்...

“என்ன ஆச்சுடா?” என்று அவன் கனிவாகக் கேட்க..

எரிச்சலில் திரும்ப நடக்கத் துவங்க... “இரு! இரு!” என்றவன்... “உள்ள வா!” என்று கைப் பிடித்து ரூமின் உள் இழுத்து சென்றான்...

“ரஞ்சனி” என்று அவளை எழுப்பினான்... “இவளுக்கு மாத்திரை வேணுமாம்” என்று வர்ஷினியைக் காட்ட,

“என்ன வர்ஷி? எதுக்கு?” என்று அவள் எழ

“பெயின் கில்லர்!”

“எங்க வலி?”

“அதெல்லாம் தெரியாது! எனக்கு மாத்திரை வேணும் குடுப்பீங்களா? மாட்டீங்களா?” என்று அவளிடமும் எரிந்து விழ...

“எதுக்கு வர்ஷி இவ்வளவு கோபம்! ரொம்ப வலிக்குதா! ஹாஸ்பிடல் போயிடலாமா” என்று கவலையாக ரஞ்சனி கேட்க ..

“ஒன்னும் வேண்டாம்!” என்று மீண்டும் வெளியே போகப் போக,

“பிடிங்க அவளை!” என்று ரஞ்சனி சொல்ல...

“ஒன்னும் பிடிக்க வேண்டாம்!” என்று அடிக்குரலில் சீறினாள்...

“என்னடா? எதுக்குடா இவ்வளவு கோபம்...? அண்ணா கிட்ட சொல்லுடா!”

“சொல்ல மாட்டேன்! எதுக்குச் சொல்லணும்! அப்பாவை பத்தி நீங்க என்கிட்டே சொல்லலை.. என்னோட ஃபோட்டோ வந்ததை சொல்லலை! எதுவும் சொல்லலை!” என்று அவனிடம் ஏகத்திற்கும் கோபப்பட..

“யாரு? யாரு இதெல்லாம் உன்கிட்ட சொன்னது?” என்று கவலையாகப் பத்மநாபன் கேட்க,

“முதல்ல நீ இந்த மாத்திரை சாப்பிடு!” என்று ரஞ்சனி அவளிடம் ஏதோ நீட்ட என்ன வென்று கூடப் பார்க்காமல் விழுங்கினாள்.

விழுங்கியவள் பத்மநாபனைப் பார்த்து முறைத்து நிற்க, இது வேலைக்காகாது என்றுணர்ந்து, “உட்காரு! முதல்ல உட்காரு!” என்று வர்ஷினியையும் விட அதட்டி அவளை அமர வைத்தான்..

ரஞ்சனி இருப்பதை மறந்து “நான் தான் உன்னை ஈஸ்வர் கிட்ட டிஸ்டன்ஸ் கீப் அப் பண்ண சொன்னேனே! நீ கேட்டியா?.. உன்னை பார்த்த நாள்ல இருந்து ஈஸ்வர் உன்னைப் பார்த்துட்டே இருக்கான். அவன் கிட்ட தள்ளி நில்லுன்னு படிச்சு படிச்சு சொன்னேனே கேட்டியா.. இப்போ நீ இழுத்து விட்டுகிட்ட?” என்று அதட்ட....

“ஐயோ! விஷ்வாவைப் பற்றி என்ன பேசுகிறான் இவன்” என அதிர்ந்து நோக்கினாள் ரஞ்சனி...

ஈஸ்வரின் பேச்சு வந்ததும் அதைப் பற்றி பேச விரும்பாமல் வர்ஷினி அமைதியாக கைகளில் முகம் புதைத்து இருந்தாள்.

“என்ன? என்ன பேசறீங்க விஷ்வா பத்தி?” என்று ரஞ்சனி பதைத்துக் கேட்டாள்.

“அச்சோ! இவள் இருப்பது தெரியாமல் பேசிவிட்டோமா?” என்று ஒரு க்ஷணம் நினைத்தவன்.. “தெரியட்டுமே.. இனி நான் முக்கியமா? அவன் முக்கியமா?” என்ற ஒரு இறுமாப்பு தோன்றியது.

இந்தக் கேள்வியை ரஞ்சனியிடம் கேட்டால் திருமணமாகி விட்டது, திருமணத்தின் முக்கியத்துவம் தெரியும், அதனால் கணவன் முக்கியம் என்று வாய் வார்த்தையாக ரஞ்சனி சொன்னாலும், அந்தத் திருமணமே ஈஸ்வரின் பொருட்டு தான்.

“என்ன? என்ன பேசறீங்க?” என்றாள் திரும்பவும் பத்மநாபனை பார்த்து..

பத்மநாபன் பதில் சொல்லாமல் இருக்க...

“என்ன பேசறீங்க விஷ்வாவைப் பத்தி, சொல்லுங்க!” என்று ஆவேசமாக அவனிடம் கேட்க,

“முரளி கல்யாணத்துல வர்ஷியைப் பார்த்துக்கிட்டே இருந்தான்.. அதுதான் அவன் கிட்ட டிஸ்டன்ஸ் கீப் அப் பண்ணச் சொன்னேன்!”

“என்ன? என்ன சொல்ல வர்றீங்க, என் அண்ணன் ஒரு பொறுக்கின்னா..” என்றாள் ஆற்ற மாட்டாமல்.

“தெரியலை! எனக்கு சொல்லத் தெரியலை என்னன்னு? ஆனா ஏதோ சரியில்லைன்னு ஃபீல் செஞ்சேன்”

“அழகா இருக்கா! பார்த்திருப்பான்! நான் கூட தான் முரளிண்ணா கல்யாணத்துல வர்ஷியை பார்த்தேன்! டால் மாதிரி இருக்கே சொன்னேன்! ஏன் ஃபிரண்ட் கூட ஆனேன்..”

“விஷ்வா பத்தி இப்படி சொல்லாதீங்க.. அவன் பொண்ணுங்க விஷயத்துல எல்லாம் ரொம்ப நல்லவன், யாரையும் தப்பா பார்க்கக் கூட மாட்டான்!” என்றாள்..

அவள் பேச பேச தலை கவிழ்ந்திருந்த வர்ஷினியின் மனதில்.. “இதுதானே! இதற்கு பயந்து தானே! நான் யாரிடமும் சொல்லவில்லை... யாரும் நம்ப மாட்டர்! அப்படியே நம்பினாலும்

இந்த பெண் என்ன செய்ததோ என்று என் பெயர் தானே கெடும்..” மளமளவென்று கண்களில் நீர் இறங்கியது.

“சே! சே! யாரிடமும் சொல்லாமல் இந்த அப்பாவிடம் உணர்ச்சிவசப்பட்டு என்ன வென்று சரியாக சொல்லாத போதும் உளறி வைத்திருக்கிறேன்.. என்ன செய்வாரோ..?”

“ஒருவேளை ஈஸ்வரிடம் கேட்டால்.. ஐயோ என்ன சொல்வானோ..?”

வேகமாக தலைநிமிர்ந்து எழுந்தவள்... “அண்ணி உங்க அண்ணா நம்பர் குடுங்க” என்றாள்.

“எதுக்கு?” என்று ரஞ்சனி கேட்க..

“குடுப்பீங்களா? மாட்டீங்களா?”

“எதுக்கு வர்ஷி? எதுக்கு கேட்கற?” என்று பத்மநாபனும் கேட்க..

“எனக்கு பேசணும், நம்பர் குடுங்க!” என்றாள் அவனிடமும்.

“என்ன பேசப் போற?”

“ஏதோ பேசறேன்! குடுங்க!” என்றவள் அவனிடம் கேட்காமலேயே அவனின் போன் எடுத்து நம்பரை தேடினாள்.

அவளின் முகத்தில் இருந்த தீவிரத்தை பார்த்து “இதுலயே பேசு!” என்று பத்மநாபன் அழைத்து அவளிடம் கொடுக்க,

இவனின் நம்பர் பார்த்து எடுத்த ஈஸ்வர்.. “சொல்லு பத்து” என..

“நான் வர்ஷினி!” என்று பதிலளித்த வர்ஷினியின் முகத்தில் அவ்வளவு தீவிரம்..

“என்ன? என்ன வர்ஷினி?” என்றான் ஈஸ்வர் கலவரமாக.. பத்துவின் போனில் இருந்து இந்த நேரத்தில் கூப்பிடுகிறாள் என்று.

“ஒரு நிமிஷம்!” என்றவள், “நான் பேசிட்டு குடுக்கறேன் அண்ணா!” என்று வெளியேப் போக..

“என்ன நடக்கிறது?” என்று பத்து பார்க்க..

என்னவென்று தெரியாத போதிலும் மனது அலைபுற ரஞ்சனி அப்படியே கால்கள் தொய்ய அமர்ந்தாள். இவர்கள் என் அண்ணனைப் பற்றி என்ன பேசிக் கொள்கிறார்கள்! ஐயோ ஐஷ்? ஐயோ என் திருமணம் எதற்கு? ஐயோ இந்த அஸ்வின்? யாரோ அவளின் தலைமேல் உட்கார்ந்து டம் டம் என்று அடித்தனர்.

**தொம் தொம் தொம் த நம் தத் தொம்**
**தொம் தொம் த நம் த தொம் தொம்!!!**

## அத்தியாயம் இருபத்தி ஐந்து :

**வார்த்தைகளில் படிக்க முடியும்! வாழ்க்கையை படித்தவர்களுக்கு!!!**

இரவு யார் உறங்கினார்களோ இல்லையோ ராஜாராம் உறங்கவேயில்லை.... வர்ஷினி சொன்ன உண்மை அவருக்கும் தெரியும் என்றாலும்.. தெரிந்த உண்மைகள் சில சமயம் திடீரென்று நம்மை நிலைகுலைய வைக்கும்.

“நான் இல்லாத போது என் பெண் என்ன செய்வாள்?” என்பது பூதாகரமாகத் தாக்கியது.

இப்போது நான் ஒன்றும் செய்யாமல் போய் விட்டால், பின்பு நான் ஒன்றுமில்லாத நிலையில் இருந்து இவ்வளவு உயரம் வந்ததற்கு என்ன அர்த்தம். அதையும் விட வாழ்க்கையில் ஒவ்வொவொரு நொடியையும் என் இஷ்டம் போல அனுபவித்து வாழ்ந்து விட்டு அதற்கு காரணமாயிருந்த என் பெண்ணை அம்போ வென்று விட்டு செல்வதா?

மாற்றி மாற்றி என் பெண் பேசுகிறாள்.. சின்ன பிள்ளைகள் விளையாட்டா இது! என்னை யார் என்று நினைத்தாள்? என்னால் தெரிந்து கொள்ள முடியாதா..? வேண்டாம் என்று தான் நினைக்கிறேன். அவளே சொல்லப் பிரியப்படாத விஷயத்தை தெரிந்து என்ன செய்யப் போகிறேன்.

அவள் சொல்வது போல பார்த்தால் கூட... இந்த ஈஸ்வர் கீழே பார்த்தானா? என் மகள் என்ற பயம் வேண்டாமா?

என்னவாகினும் வர்ஷினி ஈஸ்வரை காட்டிக் கொடுக்க விரும்பவில்லை என்று புரிந்தது.. அவளிடம் எப்படி நடந்தான் ஈஸ்வர் என்று தெரியாத போதும் எப்போதும் வர்ஷினிக்காக ஈஸ்வர்

பார்க்கிறான் என்பது அவருக்கு நிச்சயம். அதில் எந்த சந்தேகமும் இல்லை அவருக்கு.

மளமளவென்று சில முடிவுகளை மனதிற்குள் எடுத்தார்... எடுத்தால் மட்டும் போதாதே, அவருக்கு உடனே செயல் படுத்த வேண்டும். ராஜாராமின் வெற்றியின் ரகசியமே எதையும் ஆறப் போடும் பழக்கமில்லை அவருக்கு.

எல்லாம் உடனுக்குடன் செய்ய வேண்டும்... ஐந்து மணிக்கு எழுந்து விட்டார். அப்பாவையும் எழுப்பியவர்... போலிஸ் கிரௌண்டிற்கு இருவரும் வாக்கிங் செல்வது போல சென்றார்கள்..

எட்டு மணிக்கு அஸ்வின் கைது செய்யப்பட்டான் அவனின் வீட்டில்.. அவ்வளவு தான் வீட்டினருக்கு தெரியும்.. யார் கைது செய்தார்கள் எங்கு கொண்டு சென்றார்கள் ஒன்றும் தெரியவில்லை.. பிரகாசமும் இரண்டு மணி நேரமாக அலைந்து ஒன்றும் கண்டுபிடிக்க முடியாமல்..

ஆவேசமாக ஈஸ்வரின் வீட்டிற்கு சென்றார்...

“என் பையனை இப்படி செஞ்சிட்டீங்க இல்லை, எங்க இருக்கான் அவன்? எப்படியாவது அவனை வெளியே கொண்டு வாங்க! இல்லை உங்களை எல்லாம் என்ன செய்வேன்னு தெரியாது!” என்றார்.

எல்லோரும் ஈஸ்வரைப் பார்க்க, அவன் நான் இல்லை என்று தலையசைத்தான்.

அங்கிருந்த யாருக்கும் எதுவும் தெரியவில்லை... “அவனைக் கைது பண்ணிட்டாங்க. நீங்க தான் ஏதோ செஞ்சிருக்கீங்க!”

“என்ன? என்ன செஞ்சோம்? நாங்க எதுவும் யாரும் செய்யலை!” என்று ரூபாவும் பதிலுக்கு பேச,

நமசிவாயம் பொறுமையாகவே “இல்லை! நாங்க எதுவும் செய்யலை, வேற என்னன்னு பாருங்க... எங்களுக்கு இருக்குற பிரச்சனைக்கு ஏதாவது செய்யணும்னா எப்போவே செஞ்சிருப்போம்.. நாங்க செய்யலை!” என்றார் அவரும் ஸ்திரமாக...

“எங்க உங்க பையன், என்னைக் கடத்தினான் தானே அவனை கேளுங்க” என்று சொல்ல,

அதுவரை எல்லாவற்றையும் வேடிக்கைப் பார்த்திருந்த ஈஸ்வர்.. “இல்லை, நாங்க எதுவும் செய்யலை.. உங்களைக் கடத்தினது நான் மறைச்சு ஒளிச்சு செய்யலை நேரா தான் செஞ்சேன்.. கண்டிப்பா இதை நாங்க செய்யலை...”

“இங்க நேரத்தை விரையம் செய்யாதீங்க, நாங்க செய்யலை! எல்லோரும் எங்களை மாதிரி சும்மா இருக்க மாட்டாங்க! யாருக்கு என்ன செஞ்சானோ?” என்றான் தெளிவாக..

அப்போதைய அவன் மனநிலை தெளிவாக இருந்தது. எல்லா பிரச்சனைகளையும் முடிக்க வேண்டும். எதையும் அவன் வளர்க்க விரும்பவில்லை.. இது ராஜாராமின் வேலை என்று உள்மனது சொல்லியது. ஆனால் யாரிடமும் சொல்லவில்லை.

பிரகாஷும் குழம்பிப் போனார் யார் செய்திருப்பார் என்று..

ஈஸ்வர் இது ராஜாராமின் வேலை என்று சரியாக கணித்திருந்தான். அதிலும் நேற்று இரவு வர்ஷினி அழைத்து “அப்பாக்கு என்ன விஷயம்னு தெரியாது.. உங்களுக்கு எனக்கும் பிரச்சனைன்னு தெரியும்.. என்னன்னு எப்படிக் கேட்டாலும் சொல்லிடக் கூடாது.. ஏற்கனவே நான் நிறைய உளறி வைச்சிருக்கேன்” என்றாள்.

“என்ன? என்ன சொன்ன?”

“என்ன சொன்னேன்னு எனக்கே இப்போ சரியா ஞாபகமில்லை. மாத்தி மாத்தி சொன்னேன். நடந்ததை சொல்லலை... அப்பா என்னன்னு கேட்டா சொல்லக் கூடாது.. ஏதோ ஏதோ பேச போய் அப்பா கண்டு பிடிச்சிடக் கூடாதுன்னு நீங்க என்னைக் கீழ பார்த்தீங்க, உங்களை நான் ஆர்வமா பார்த்தேன்னு உளறிட்டேன்.”

“என்ன? எதுக்கு இப்படிச் சொன்ன..”

“பின்ன, முன்ன நான் உங்களை அப்படித் தான் பார்த்தேன்! அதுதான் டக்குன்னு என்ன பொய் சொல்லன்னு தெரியாம அதையே சொல்லி வெச்சேன்!” என்றாள் எரிச்சல் மறையாத குரலில்.

“அப்பாவைப் பத்தி உங்களுக்கு தெரியாது? நீங்க இப்படி நடந்தது தெரிஞ்சா உங்களைக் கொல்லக் கூட தயங்கமாட்டார்.. அப்புறம் எல்லோருக்கும் தெரிஞ்சிடுச்சுன்னா?”

“அதுதான் மாத்தி சொன்னேன்..!”

ஆனால் இப்போது வர்ஷினி ஈஸ்வரிடம் பேசப் பேச தான் அப்பாவிடம் பேசியது முட்டாள் தனத்தின் உச்ச கட்டடமாக அவளுக்கு தோன்றியது.

“நான் எதுவும் சொல்ல மாட்டேன்!” என்றவனிடம், “அதில்லை இப்போ!” என்று எரிந்து விழுந்தாள்..

“அதனால... அதனால..” என்று எப்படி சொல்வது என்று தெரியாமல் இழு இழு என்று இழுக்க..

“என்னன்னு சொல்லு, சொன்னா தானே தெரியும்” என்றான் பொறுமையாக.. அவனுக்கு அவனே பொறுமையாக விஷயங்களை கையாள் என சொல்லிக் கொண்டே.

“என்னைக் கல்யாணம் பண்ணிக்க சொல்றார்” என்றாள்.

“அச்சோ! சிறு பெண் என்னால் இப்படி வேறா?” என்று அவன் யோசிக்கும் போதே...

“உங்களை!” என்று சொல்லிவிட..

“என்ன?” என்று அதிர்ந்து விட்டான்..

“நான் சொன்னேன் நீங்க பண்ணிக்க மாட்டீங்கன்னு.. நீங்க ஒகேன்னா எனக்கு ஒகே வான்னு கேட்கறார்..”

“நீங்க ஒகே இல்லை சொல்லிடுங்க..” என்று படபடவென்று சொல்லி அவள் வைத்து விட...

“ஐயோ! இப்போது இது என்ன?” என்று அமர்ந்து விட்டான்.. ஒன்றை செய்து விட்டு என்னையும் என்னால் பார்க்க முடியாமல், மற்றவர்களையும் என்னால் பார்க்க முடியாமல் என்ன நடக்கிறது... இதில் வர்ஷினியையும் இழுத்து விட்டு...

இதற்கு உண்மை சொல்லி, அவளின் அப்பா அடித்தால் அடி வாங்கி செத்து விடலாம் என்று கூடத் தோன்றியது.

ஐஷ்! அவளை எப்படி எதிர்கொள்வது.. அவள் தினமும் என்னை நினைத்து தானே இருப்பாள். அதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

என்னால் யாரையுமே திருமணம் செய்ய முடியாது.. இதில் தினம் தினம் வர்ஷினியைப் பார்த்து நான் என் செயலைக் குறித்து வெட்கிக் கொண்டே இருப்பதா?

இப்படி யோசனைகளோடே உறங்கியும் உறங்காமலும் காலை விழித்து எழ.. அஸ்வினின் கைது படலம்..

இது ராஜாராமினது என்று தெளிவாக உள் மனது சொல்லியது.. அதுவும் மாலை வரை இப்போது தன்னிடம் பேச முயற்சிக்காதது.. எதுவும் யாரிடமும் கேட்காமல் எல்லாம் தான் நினைப்பது போல நடத்த ஆரம்பித்து விட்டார் என்று புரிந்தது.

இனி அவன் கையினில் எதுவுமே இல்லை என்பது போல ஒரு தோற்றம்.. தன்னை என்ன செய்யப் போகிறாரோ என்று தான் நினைத்தான். நிச்சயம் வர்ஷினி சொல்லியதை நம்பியிருக்க மாட்டார் என்றே தோன்றியது. இந்த வர்ஷினி ஏன் இப்படி உளறி வைத்து விட்டாள்.. அவளின் அப்பாவைப் பற்றி தெரியவில்லை அவளுக்கு என்றே தோன்றியது.

முன்தினம் இரவில் இருந்து உறங்காத மற்றொரு ஜீவன் ரஞ்சனி.. தான் என்ன நினைத்தோம் என்ன நடக்கிறது ஒன்றுமே புரியவில்லை... நான் முட்டாளா.. பெரிய முட்டாளா.. சூழ்நிலையைக் கையாளத் தெரியாமல் கையாண்டு விட்டேனா.. விஷ்வாவைத் தப்பாய் பேசினான் என்று பத்மநாபனின் மீது மிகுந்த கோபமாய் இருந்தது.

ஏற்கனவே அங்கே ஒட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருந்தவளுக்கு எதுவுமே பிடிக்காமல் போனது. காலையில் குழப்பமான முக பாவனையில் இருந்த ரஞ்சனியை பத்மனாபன் கவனித்தான் தான்.

ஆனால் என்ன ஏது என்று கேட்க முடியாமல் காலையில் இருந்து அலுவலக வேலைகள் அவனுக்கும் முரளிக்கும் வரிசை கட்டி நின்றன. ராஜாராம் கொடுத்திருந்தார்.

வேலைகள் முன்னிட்டு அண்ணனும் தம்பியும் வெளியே சென்று விட.. மதியமாக ஐஸ்வர்யா சொல்லி தான் அஸ்வின் கைது செய்யப் பட்டது தெரிந்தது. ஆனாலும் அவன் எங்கே இருக்கிறான் யார் கைது செய்தார்கள் என்று அதுவரையிலும் தெரியவில்லை என்று சொல்ல .. தலையில் கைவைத்து அமர்ந்து விட்டாள்.

சிறிது நேரத்தில் ஈஸ்வரைப் பார்க்க கிளம்பினாள்.. அவன் அங்கே இல்லை, மாலை தான் வந்தான்.... வந்தவன் அவனின் ரூமிற்கு பிரெஷ் ஆக செல்ல.. அவனின் பின்னேயே சென்றவள்..

“விஷ்வா, என்ன நடக்குது?” என்றாள்..

அவளிடம் இதுவரை ஈஸ்வர் முகம் கொடுத்துப் பேசவில்லை.. ஆனால் இன்று அவளின் முகத்தை பார்த்தவனால் அப்படி ஒதுக்க முடியவில்லை.

“நிறைய நடக்குது! எதைக் கேட்கற..” என்றான் சலிப்பாக.

“இந்த பத்து, வர்ஷி கிட்ட நான் அப்போவே உன்னை ஈஸ்வர் கிட்ட இருந்து தள்ளி நிக்க சொன்னேனே? இப்போ என்ன நடந்தது? நீயா இழுத்து விட்டுகிட்டன்னு சொல்றார்!” என்ற ரஞ்சனி சொல்ல...

எதைச் சொல்கிறாள் என்று புரியாமல் ஈஸ்வருக்கு அவனின் இதயம் துடிக்கும் ஓசை அவனிற்கே கேட்டது.

“எதுக்கு அப்படிச் சொன்னான்?” என்று மெதுவாகக் கேட்க,

“அந்த ஃபோட்டோ வந்ததுக்கு” என்று சொல்லவும் தான், அதுவரை நின்றிருந்த அவனின் மூச்சு வெளியே வந்தது.

“கேட்டா! நீ முரளிண்ணா கல்யாணத்துல இருந்து வர்ஷியை அப்படித் தான் பார்த்தியாம்... நான் ஒன்னும் எங்க அண்ணா அப்படியில்லைன்னு சண்டை போட்டேன். ஆனா வர்ஷி என்ன உன்கிட்ட பேசினா?” என்று கேட்க...

என்ன வென்று சொல்லுவான், அப்படியே அமர்ந்திருந்தான்.

“எனக்கு எதுவுமே பிடிக்கலை! இந்தக் கல்யாணமே பிடிக்கலை! நான் என்ன பண்ணட்டும்?” என்று திடீரென்று அப்படியேத் தேம்பி தேம்பி அழ,

“என்ன இது?” என்று பதறிப் போனான்.

அப்படி ஒரு அழுகை ரஞ்சனியிடம்..

“நீயே தானே பண்ணிக்கிட்ட?, இப்போ மனசுல இப்படி ஒரு எண்ணம் வர்றதே தப்பு”

“எல்லாம், எல்லாம், இந்த அஸ்வினால! அவன் தான் நான் அவனைத் தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு என்கிட்டே சொன்னான்.. எப்படியாவது கல்யாணம் பண்ண வெச்சிடுவேன்னு என்னை மிரட்டினான்!” என்று அவள் சொல்லச் சொல்ல...

“என்ன இது? இது எப்போது?” என்று ஈஸ்வரின் நெஞ்சம் பதறியது.

“முழுசா சொல்லு ரஞ்சி! இப்படி பிச்சிப் பிச்சி சொல்லாத!”

நடந்ததை அவள் சொல்லச் சொல்ல தலையில் கைவைத்து அமர்ந்துவிட்டான்... “முதல்லயே எப்பவும் என் பின்னாடி சுத்துவான்.. நான் பெருசாக் கண்டுக்கிட்டது இல்லை.. ரூபா அண்ணி எனக்கு அண்ணி.. ஐஷ் வேற எனக்கு அண்ணி ஆகப் போறா, அதனால நான் யார்க் கிட்டயும் சொன்னது இல்லை..”

“ரொம்ப உரிமை எடுத்து நடந்துக்குவான். இர்றிடேட் பண்ணுவான், டு தி எக்ஸ்ட்ரீம். உன்கிட்ட சொன்னா நீ அவனை ஒரு வழி பண்ணிடுவன்னு சொன்னதில்லை .. ஒரு நாள் என்னை மீட் பண்ணினவன்.. கண்டிப்பா நான் அவனை உடனேக் கல்யாணம் பண்ணிக்கணும், இல்லைன்னா என்ன பண்ணுவேன்னு தெரியாதுன்னு மிரட்டினான்..”

“யாராவது மிரட்டினா பயந்துடுவியா? அவ்வளவு தானா உன் தைரியம்! பொண்ணுங்க தைரியமா இருக்க வேண்டாமா?” என்று ஈஸ்வர் சொல்லச் சொல்ல,

அவனுள் வர்ஷினியின் ஞாபகங்கள் தான். “எப்படி என் மண்டையை உடைத்தாள். இப்போது என்னை எந்த பயமும் இல்லாமல் எப்படி மிரட்டிப் பேசுகிறாள். நான் ஏதாவது அவளை மீண்டும் செய்து விடுவேனோ என்ற பயமே இல்லை. நான் தான் அவளைப் பார்த்து பயந்து, அவளைத் தவிர்த்து, ஒளிந்து கொண்டிருக்கிறேன்”.

“அந்த கண்களைப் பார்க்க ஏங்கிக் கொண்டு இருக்கிறேன்” என்று மனதில் பிராவகமாக ஒரு அலை பொங்கியதை தடுக்கவும் முடியவில்லை, தவிர்க்கவும் முடியவில்லை.

“ஐயோ! பட்டும் நான் திருந்தவில்லையா.. திரும்பவும் அவளை நினைக்கிறேனா. என் தங்கை என்னிடம் ஒருவன் மிரட்டியதை சொல்லிக் கொண்டிருக்க.. நான் என்ன நினைத்துக் கொண்டிருகிறேன்.. என் எண்ணங்கள், என் பாவங்கள் தான் என்

குடும்பத்தைத் துரத்துகிறதோ?" என்று நினைக்கும் போதே வர்ஷினியின் முகம், "நீயா இப்படி?" என்று அவனைப் பார்த்திருந்த கண்கள் கண்முன் தெரிய...

"சே!" என்று சொல்லி வேகமாக தலையைப் பிடித்து எழ....

"தலயில அடிப்பட்டது இன்னம் வலிக்குதா?" என்று ரஞ்சனி கவலையாகக் கேட்க...

**மீள நினைத்தாலும் மீள முடியாத வலை! மனதின் வலை!! பின்னிப் பிணைந்து விட்டதோ!!! வலையை அறுக்கத் தான் முடியும்!!!! பிரிக்க முடியாது!!!!!**

## அத்தியாயம் இருபத்தி ஆறு :

**காதல் என்பதா? காமம் என்பதா? இரண்டுக்கும் மத்தியில் இன்னொரு உணர்ச்சியா!!!**

முயன்று கடினப்பட்டு சமன்பட்டவன்.. "ஒன்னுமில்லை! நீ சொல்லு" என்றான். ரஞ்சனிக்கும் எல்லாம் சொல்லி முடித்து விடும் ஆவேசம்...

"சும்மா யாராவது மிரட்டினா நான் பயந்துடுவேணா சொல்லு.. ரொம்ப டு தி கோர் இருந்தது.. நம்ம ஃபைனான்ஸ் கம்பனியை இழுத்து மூட வெச்சிடுவேன்னு சொன்னான்.. ஜகன் அண்ணா அந்த கிரிகெட் கேம்ப்ளிங்ல இருந்த ஆதாரம் எல்லாம் குடுத்துடுவேன்னு சொன்னான்.. ஏதாவது செஞ்சு நானே அவன் கிட்ட என்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு கேட்கற மாதிரி வெச்சிடுவேன்னு சவால் விட்டான்".

"போடா! உன்னால முடிஞ்சதை பண்ணிக்கோடான்னு நானும் சொன்னேன்!

"அன்னைக்கு காலையில இருந்து நம்ம இடத்துல நடந்த பிரச்சனையை சேம்பிள் பாருன்னு நம்ம பில்டிங்கல கண்ணாடி உடைக்கறதை காட்டினான்.. கண்டிப்பா உங்களால பணம் குடுக்க முடியாதுன்னு சேலஞ் பண்ணினான்".

"அதுவரைக்கும் கூட நீங்க எப்படியோ சமாளிச்சிடுவீங்கன்னு நம்பிக்கை இருந்ததால கூலா தான் இருந்தேன்... பட் அன்னைக்கு

ரொம்ப பயந்துட்டேன்... அதுவும் டீ வீ ல ஸ்க்ரோல் வேற... நம்மளை இன்னும் என்ன பண்ணுவேன்னு தெரியாது நீயே என்கிட்டே வர்ற மாதிரி செய்வேன்னு திரும்பத் திரும்ப சொல்றான்”

“யோசிச்சுப் பாரு! எல்லோரும் எவ்வளவு டென்ஷன்ல இருக்கீங்க.. நான் போய் இவன் ட்ரபிள் பண்றான்னு சொன்னா நீ அன்னைக்கு இருந்த கோபத்துல கொன்னு போட்டிருப்ப.. அதுவுமில்லாம அப்புறம் ஐஷும் நீயும் எப்படி கல்யாணம் பண்ணிக்க முடியும்”

“நீயே என்கிட்டே வர்ற மாதிரி செய்வேன்னு அத்தனை தடவை சொல்றான் ஏதோ ஹிஸ்டீறிக் பேஷன்ட் மாதிரி.. அவன் முன்னாடி தைரியமா கட்டினாலும் உள்ள ரொம்ப பயந்துட்டேன்..”

“அன்னைக்கு யாரையும் பார்க்க முடியாம தூக்க மாத்திரை போட்டு தூங்கிட்டேன்.. காலையில வர்ஷினி எனக்கு ஃபோன் செஞ்சு அண்ணா சாரி கேட்க சொன்னாங்கனு நடந்த விஷயம் சொன்னா.. அவங்க நமக்கு ஹெல்ப் பண்றாங்கன்னு சொல்லி பொண்ணு கேட்டாங்களாம்..”

“நீ கோபத்துல பொண்ணு குடுக்க மாட்டோம்னு சொல்லி ஹெல்பும் வேணாம் சொல்லிடியாம்”

“எனக்கு அப்போ தோணினது எல்லாம் ஒன்னு தான்.. அவங்க நமக்கு ஹெல்ப் பண்றாங்க.. நம்ம இந்த பிரச்சனையில இருந்து கம்ப்ளீட்டா வெளில வந்துடுவோம்.. இன்னொன்னு அவன் சொன்ன மாதிரி நானே அவனை தேடி போற சூழல் அவன் கிரியேட் பண்ணிட்டா? எனக்கு மேரேஜ் ஆகிடுச்சுன்னா நானே போ மாட்டேன் தானே.. அதுதான் தான் என் மைண்ட்ல ஓடிட்டே இருந்தது. எஸ் என்ன ஆனாலும் நான் அவன் கிட்ட போகக் கூடாது. அது என் மனசுல ஓடினது”

“இதை நான் யார் கிட்ட சொல்ல முடியும்... இந்த கல்யாணம் எனக்காக எனக்காக மட்டும் தான்”

“அப்போ அந்த டைம்ல எனக்கு அது சரியா பட்டுச்சு.. உன்கிட்ட சொன்னா நீ அவனைக் கொல்லக் கூட தயங்கமாட்டா.. அப்படி ஒரு சிக்கல் என்னால உனக்கு வர்றதை நான் விரும்பலை..”

“அதோட என்னால எல்லா பிரச்னையும் தீர்க்க முடியும்னு எனக்கு ஒரு ஃபீல்.. பத்து இஸ் நாட் பேட் எனக்குத் தெரியும்.. அவரைக்

கல்யாணம் பண்ணினா எல்லா பிரச்சனையும் முடிஞ்சிடும்ன்னு நினைச்சேன்..”

எல்லாம் சொன்னவள் உடனே “எல்லாம் அப்படியே இருக்கு, இன்னும் அதிகமாகிட்டேப் போகுது” என்று தேம்பித் தேம்பி அழுதவள்,

“இப்போ அவனை அரஸ்ட் பண்ணிடாங்கலாம் திரும்ப வந்து நம்மை ஏதாவது பண்ணிட்டான்னா எனக்கு பயமா இருக்கு” என்று சொல்லிக் கொண்டே அழ...

இவளை என்ன செய்வது என்பது போல பார்த்திருந்தான்..

அஸ்வின் எப்படி தங்களுக்கு இவ்வளவு எதிரியானான் புரியவேயில்லை.. ரஞ்சனியும் அவனின் டார்கெட்டாக இருந்திருக்கிறாள் என்பது அவனுக்கும் அதிர்ச்சியே.. ஆனால் அதை அவளின் முன் காட்ட முடியாது. இனி யோசித்தாலும் என்ன பயன்?

ரஞ்சனியின் அன்றைய நிலை... அண்ணனாக யோசிக்கப் பிடிக்கவில்லை.. ஆனால் இனி பத்து பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கை இருந்தது. என்னை எவ்வளவு சரியாக எனக்கே தெரியாத போது கணித்திருக்கிறான்.

எதுவாகினும் இனி திருமணம் பிடிக்கவில்லை என்ற வார்த்தை முற்றிலும் தவறானது. ஆனால் தன்னைத் தவிர வேறு யாரிடமும் சொல்ல மாட்டாள் என்பது நிச்சயம்..

ஆதலினும் இந்த எண்ணமே தவறு..

“ரஞ்சனி அழாத.. முதல்ல நான் சொல்றதை கேளு” என்றான்.

அப்போதும் அவள் அழுதபடியே இருக்க.. “இங்கே பாரு! பாரு என்னை முதல்ல” என்று அதட்ட. கண்ணீரோடு பார்த்தவளிடம், “கண்ணைத் துடை முதல்ல கண்ணைத் துடை” என்றான்.

துடைத்தாலும் பெருகும் கண்ணீரோடு அவள் இருக்க.. “நடந்ததை யாராலும் மாத்த முடியாது ரஞ்சனி... கல்யாணம் பிடிக்கலைன்ற வார்த்தை தப்பு... நீ என்ன அவ்வளவு சுயநலவாதியா.. இல்லை.. டோன்ட் பீ எமோஷனல்.. பத்து ரொம்ப நல்ல பையன் புத்திசாலிக் கூட.. நல்லா படிச்சிருக்கான்.. நல்ல வசதி.. குட் லுக்கிங்.. ஒரு குறையும் கிடையாது...”

“ஆனா அவன் உன்னைத் தப்பா சொல்றான்... அதுவும் பொண்ணுங்க விஷயத்துல.. அதுவும் யாரை உன் ஃப்ரண்டோட தங்கை” சொல்லும் போதே குரலே சொன்னது அவளால் தாள முடியவில்லை என்று.

ஆம்! சிறு வயதில் இருந்து ரஞ்சனி அப்படிதான்.. ஈஸ்வர் அவளின் அண்ணன் என்ற கர்வமே உண்டு அவளுக்கு. யாரும் ஒரு வார்த்தை ஈஸ்வரை சொன்னால் உடனே சண்டைக்கு கிளம்புவாள். அப்படி ஒரு பிணைப்பு. அதனால் தான் சொல்லாமல் கொள்ளாமல் ரஞ்சனி திருமணம் செய்து வந்து நின்ற போது ஈஸ்வரால் தாள முடியவில்லை.

“முதலில் இவளை அண்ணன் என்ற மாயையில் இருந்து விடுவிக்க வேண்டும்.. நான் ஒன்றும் அவ்வளவு நல்லவன் இல்லையே.. எனக்காக எனக்காக என்று இவளின் வாழ்க்கையை கெடுத்துக் கொள்ள.. பத்துவின் புறம் இவள் மனது திரும்ப வேண்டும்..”

“நண்பனின் தங்கை.. மனது போனால் என்ன செய்ய முடியும்... நான் என்ன போ போ என்றா சொன்னேன்.. போகவேண்டாம் என்று என்ன சொன்னாலும் போகிறது.. நான் என்ன செய்வேன்?” என்று தான் ஈஸ்வருக்கு அப்போது தோன்றியது..

“சொல்லிட்டுப் போறான்! அது நிஜமாக் கூட இருக்கலாம் இல்லையா?”

“என்ன?” என்று அதிர்ந்து பார்க்க..

“எஸ்! வர்ஷினி அழகா இருக்கா.. சோ நான் அவளை சைட் அடிச்சு இருக்கலாம்.. மே பீ பாய்ஸ் சைட் பாய்ஸ்க்கு தானே தெரியும். அதனால பத்து அப்படிச் சொல்லியிருக்கலாம்.. உன்னை யாரவது தப்பா பார்த்தா நான் கண்ணை நோண்டிடுவேன் இல்லையா?”

“சும்மா பார்க்கறதுக்கும் தப்பா பார்க்கறதுக்கும் வித்தியாசம் இருக்கு விஷ்வா”

“எஸ்! நான் தப்பா தான் பார்த்தேன்! பார்க்க மட்டுமில்லை நடக்கவும் செஞ்சேன்!” என்று கத்த வேண்டும் போல ஒரு உந்துதல்.. இந்த நல்லவன் வேஷம் வேண்டாம் என்று தோன்றியது.. உள்ளுக்குள் தின்ன ஆரம்பித்தது..

அந்தக் க்ஷணத்தில் தங்கையாக மட்டும் இல்லாமல் இருந்தால் நிச்சயம் சொல்லியிருப்பான்.. தங்கை என்ற உறவை முன்னிட்டே மாற்றினான்.

“அதுதான் நானும் சொல்றேன்” என்று சொல்லிப் பேச்சையே மாற்றினான். “இது சும்மா இல்லை, அவன் உன்னோட கணவன்.. உனக்கு அவனைப் பிடிச்சு தான் ஆகணும்.. கல்யாணம்ன்றது வாழ்க்கையில ஒரு முறை தான் ரஞ்.. உனக்கு அப்படித்தான் இருக்கணும்!” என்றான் ஸ்திரமாக.

“எப்பவும் நீ உன்னை, என்னை, நம்ம வீட்டை, நம்ம பைனான்ஸ், இப்படியே நினைச்சிட்டு இருக்க.. இனி நீ அதிகமா நினைக்க வேண்டியது பத்துவை தான்”

“பணத்துக்காக என் தங்கையை இவங்க கல்யாணம் பண்ண கேட்பாங்களான்றது தான் என் கோபம்... அது உண்மைன்னு ஆக்கிடாத... கல்யாணம் அந்த சமையத்துல எதுக்காக வேணா நடந்திருக்கலாம். அதுல இனிமே நீயும் பத்துவும் மட்டும் தான்.. அவன் கிட்ட என்ன சொல்லி உடனே கல்யாணம் பண்ணின?”

“அது! அது! ஃபைனான்ஸ்ல ரொம்ப ப்ராப்ளம் இருக்கு. ஆனாலும் நீ பணம் வாங்க மாட்ட! இப்ப நம்ம கல்யாணம் நடந்தா அப்புறம் வேற வழியில்லாம வாங்கிப்பன்னு சொன்னேன். அப்புறம் இந்த அஸ்வின் தான் நம்ம ஃபைனான்ஸ்க்கு எல்லா பிரச்சனையும் கொடுக்கிறான். அவனையும் மிரட்டி வைக்கணும்ன்னு சொன்னேன்!”

மெல்லிய புன்னகையுடன் “பத்துக்கு உங்க கல்யாணம் நடந்தாலும் நான் பணம் வாங்க மாட்டேன்னு தெரியும்.. ஆனாலும் அதைக் காட்டிக்காம கல்யாணம் செஞ்சிருக்கான்னா உன்னை பிடிச்சதுனால, அந்த சேன்ஸ் மிஸ் பண்ண இஷ்டப் படாததுனால.. அவனுக்கு உன்னை பிடிச்சிருக்கு, இதை மட்டும் மனசுல வை... உனக்கும் அவனைப் பிடிக்கும்.. எனக்கு உன்னோட டேஸ்ட் தெரியும்டா.. கண்டிப்பா உனக்கு அவனை பிடிக்கும்”

“வேற எதையும் நினைக்காத ஒகே..” என்றான் சிறு பிள்ளைக்கு சொல்வது போல..

“இன்னம் சொல்றேன், நிறைய ப்ராப்ளம்ஸ் வரலாம்.. எது வந்தாலும் நீ பத்து கூட தான் நிக்கணும்...” சொன்னவனுக்கு நிச்சயம் எதுவும் முடியப் போவதில்லை என்று தோன்றியது.

அண்ணன் சொன்னதற்கு “இருப்பேன்” என்பது போல தலையசைத்தவள், “இந்த அஸ்வினை அரஸ்ட் செஞ்சிருக்காங்களாமே. எதுக்கு அவன் எங்கேன்னு தெரியலையாமே? ஐஷ் சொன்னா!”

“தெரியலை? உன் மாமனார் தான் செஞ்சிருக்கணும்.. வர்ஷினியை இழுத்தா சும்மா விட்டுடுவாரா என்ன?”

“என்ன?” என்று அவள் விழி விரிக்க..

“எஸ்! அவர் தான்! நம்ம கைல எதுவும் இல்லை.. இப்போதைக்கு அவனால எந்தப் பிரச்சனயும் வராது.. நீ அமைதியா உன் வேலை பார்..” என்றான்.

மனது ஈஸ்வருக்குத் தெளிவாக சொல்லியது, இப்போது இல்லை என்றாலும் பின்னால் கண்டிப்பாக வரும் என்று. ஆனால் அதைச் சொல்லி ரஞ்சனியை பயப்படுத்த விரும்பவில்லை. வரும் போது பார்த்து தான் ஆக வேண்டும் என்று அவனுக்கு அவனே சொல்லிக் கொண்டான்.

ஒரு வழியாக ரஞ்சனியை சமாதானம் செய்து கிளப்பி விட்டான். ஆனால் அதன் பிறகு ஒரு பொட்டு உறக்கமில்லை அவனுக்கு.. மனது அலைபாய துவங்கியது...

வர்ஷினியின் நினைவு பொங்கியதில் இருந்து வேண்டும், அவள் நிச்சயம் வேண்டும் என்று மனது பிடிவாதம் பிடிக்கத் தொடங்கியது. இவ்வளவு நாட்களாக குற்ற உணர்ச்சியில் தவித்த மனம்.. இப்போதும் தவிக்கும் மனம்... இருந்தாலும்.. ஒரு புறம் “நான் என்ன எல்லோரிடமுமா நடந்தேன், காதல் சொன்ன பெண்ணிடம் கூட இப்படி நடந்ததில்லை” என்று நியாயபடுத்தத் துவங்கியது.

கிட்ட தட்ட இரண்டு நாட்கள்.. அலைபுருதல் நிற்கவில்லை.. என்ன செய்த போதும்... எதிலும் கவனம் செல்ல வில்லை. கண்களில் அவளைப் பார்த்தாலாவது மனது சமன்படுமா அவளைப் பார்க்கலாமா என்று அவளின் வீடு இருந்த புறம் காரை செலுத்தி, ராஜாராம் ஏற்கனவே சந்தேகத்தில் இருக்கிறார் இன்னம் பிரச்சனை வளர்க்காதே என்று சொல்லி முயன்று திருப்பியிருந்தான்.

ஒரு முறை அல்ல பலமுறை... ஏதாவது சைக்கியாட்றிஸ்ட் சென்று பார்க்கலாமா நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்ற எண்ணம் தான்.

ஐஸ்வர்யாவின் ஞாபகம் எங்குமே வரவில்லை. இதற்கு பல முறை அவளின் தொலைபேசி அழைப்பு.. அது வரும் நேரம் மட்டுமே அவளின் ஞாபகம்.. அந்த ஃபோனை கட் செய்யும் போது அவளின் ஞாபகங்களும் கட் செய்தான்.

அஸ்வின் காணமல் போன தினத்தில் இருந்து ஐஸ்வர்யா பலமுறை ஈஸ்வருக்கு அழைத்து விட்டாள் என்ன என்று தெரிந்து கொள்ள.. அவன் எடுக்கவே இல்லை.

வர்ஷினி மனது முழுவதும் ஓடிக் கொண்டிருக்க.. ஐஸ்வர்யாவிடம் சாதரணமாக பேசுவது கூடத் தவறு போல உணர்ந்தான்.  ஒருவகையில் தான் அவளுக்கு இல்லை என்று தெரியப் படுத்த நினைத்தான். தன்னைக் கெட்டவனாக நினைத்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்டான்.

மனது ஒரு புறம் அவனிடம் தெளிவாக சொன்னது “நீ கெட்டவன் தான்.. அதில் என்ன சந்தேகம் உனக்கு!” என்று

“ஆம்! நான் கெட்டவன் தான் சுயநலவாதி தான்.. ஐஸ்வர்யா எனக்கு வேண்டாம். அவளுக்கு உண்மையாக இருக்க முடியாது என்று புரிந்து விட்டது.. இனி யாருக்கு நான் நல்லவனாய் இருக்க வேண்டும்.. தேவையில்லை.. நடப்பது நடக்கட்டும்!.. என் மனதை கட்டுப் படுத்த முடியவில்லை”

“முடியாத விஷயத்துடன் போராடாதே! விட்டுவிடு!” கட்டவிழ்த்து விட்டான்!!!

ஐஸ்வர்யா ரஞ்சனியிடம் பேச அவளுக்கும் தெரியவில்லை. சமீபகாலமாக ஈஸ்வர் ஐஸ்வர்யாவிடம் பேசவேயில்லை.. ரஞ்சனியும் பட்டும் படாமலும் தான் பேசுகிறாள்.. என்னவோ தனித்து நின்று விட்டது போல ஐஸ்வர்யாவிற்கு ஒரு தோற்றம்.

இந்தப் பிரச்சனைகள் எல்லாம் வந்த பிறகு அஸ்வினிடம் சரியாக பேசுவதில்லை. அவனும் பேசுவதில்லை இவளும் பேசுவதில்லை ஆனாலும் உடன் பிறந்தவன் அல்லவா.. முன்பானால் அவனே எங்கேயோ போய் விட்டான்.. இப்போது அவனைக் காணவில்லை.

இரண்டு நாட்களாக தவித்த தவிப்பு.. அந்த பேப்பர் செய்தியில் முடிவிற்கு வந்தது.

அஸ்வினை ஆயுதம் வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்திருந்தனர். ஒரு வருடத்திற்கு வெளியே வர முடியாத பிரிவில் புழல் சிறையின் மறுநாள் அடைக்கபட்டிருந்தான். இரண்டு நாட்கள் கழித்து பத்திரிக்கையில் ஒரு மூலையில் அஸ்வின் படத்தோடு வெளியே வந்திருந்தது. பெரும் பாலானோர் கண்களுக்கு தெரியவில்லை.. ஆனால் குடும்பத்தினருக்கு தெரியும் தானே...

ஒரு வருடத்திற்கு ஒன்றும் செய்ய முடியாது என்று விட்டனர்.

தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்ற பழமொழி இப்படி தான் திரிந்து வந்ததோ..

ஆனால் தவிப்புகள் தொடர ஆரம்பித்தது.. அந்த பேப்பர் செய்தியை காட்டியது அவளின் தந்தை..

“ஏன் இப்படி? யாரு செஞ்சா?” என்று சோர்வாக ஐஸ்வர்யாவின் அம்மா கேட்க..

“ரூபா வீட்ல செய்யலை !ஆனா அவங்க புது சம்மந்தி செஞ்சிருக்கான். தோ! இந்த பேப்பர் பாரு! இதுதான் காரணம்!” என்று ஈஸ்வரும் வர்ஷினியும் இருந்த பேப்பரை தூக்கிப் போட்டார்...

“இது வர்றதுக்கு காரணம் நம்ம அஸ்வின் போல, அதனால தான் இப்படி ஆகிடுச்சு..”

“இப்போ என்னைக் கூப்பிட்டு மிரட்டி அனுப்பியிருக்கான். உன் பையனை கொல்லாம விட்டனேன்னு சந்தோஷப்படு.. அவன் வெளிய வந்தா சொல்லி வைன்னு மிரட்டுறான்” என்றார் சோர்வாக அவரும்.

ராஜாராம் பேசிய பேச்சுக்களில் பயந்து விட்டார் என்பது தான் உண்மை.. ஈஸ்வரை அவனின் வீட்டினரை தெரியும் என்பதால் பயம் இருந்தாலும் அவ்வளவாக இல்லை. இப்போது மிகுந்து பயந்து இருந்தார்.

“அவனைக் கொல்றது எனக்கு பெரிய விஷயம் கிடையாது! செஞ்சிருக்க முடியும்.. ஒரு வாய்ப்பு கொடுக்க நினைச்சு தான் இதை மட்டும் செஞ்சேன்னு சொல்றான்..”

“அவன் வெளில வந்தும் ஏதாவது செஞ்சான்.. அடுத்த நிமிஷம் செத்துப் போவான்.. என் ஆளுங்க எப்பவும் இனிமே அவன் மேல ஒரு

கண்ணு வெச்சிருப்பாங்கன்னும் சொல்றான். பணபலமும் இருக்கு அரசியல் பலமும் இருக்கு..”

எதுவும் யாரும் செய்ய முடியாது என்று அவர் பார்த்த வக்கீல்கள் அனைவரும் கையை விரித்து தான் விட்டனர்.

கண்டிப்பாக இனி அஸ்வின் ஒரு வருடம் ஜெயில் தான் இருக்க வேண்டும் என்ற உண்மை அவரை நன்றாகத் தாக்கியது.

ஆனால் அப்பாவும் அம்மாவும் பேசிய எதுவும் ஐஸ்வர்யாவின் காதுகளில் விழவில்லை.. அந்த போட்டோக்களை பார்த்தபடி வெறித்து அமர்ந்திருந்தாள்...

எப்படி அந்தப் பெண்ணை ஈஸ்வர் பார்த்துக் கொண்டிருக்கிறான்.. அவனே நேரில் வந்து இல்லை என்றாலும் கண்டிப்பாக அது உண்மையில்லை என்று ஐஷ்வர்யாவிற்கு நன்றாக தெரிந்தது.

“என் பின்னால் எப்படி சுற்றினான். நினைக்க கண்களில் நீர் மறைத்தது, என்னை சுற்றி என்ன நடக்கிறது, எதுவும் தெரியாமல் நான் இருக்கிறேன். நான் என்ன முட்டாள் பெண்ணா?” நினைக்க நினைக்க ஆற்றாமை பொங்கியது.

ஆனால் அவளுக்குத் தெரியவில்லை ஈஸ்வர் நான் வர்ஷினியை பார்க்கவில்லை என்று சொல்லப் போவது இல்லை என்று.

அந்தப் படங்களை பார்த்த பிறகு ஈஸ்வரை பார்த்தே ஆக வேண்டும் போல ஒரு உந்துதல்.. “நான் இந்த காஃபி ஷாப்பில் வெயிட் செய்வேன்.. எவ்வளவு நேரமானாலும் நீ வராமல் போக மாட்டேன்” என்று தொடர்ந்து மெசேஜ் அனுப்ப..

“பார்த்து விடலாம்! முடித்து விடலாம்!” என்ற எண்ணம் தான் ஈஸ்வருக்கும்..

“வருகிறேன்!” என்று பதில் அனுப்பினான்.

நல்லவனாய் இருந்த நிலை மாறி தடம் புரண்ட பிறகு.. இப்போதைக்கு வர்ஷினி அவன் வாழ்வில் வேண்டும் என்று தான் தோன்றியது. ஏதாவது செய்யாவிட்டால் பைத்தியமாகி விடுவோம் என்றே தோன்றியது. நல்லவனாய் வேடமிடலாமா? கெட்டவனாகவே இருக்கலாமா? என்பது மட்டுமே அவனுள் இருக்கும் கேள்வி.. ராஜாராமை எப்படி அணுகுவது..?

## செய் அல்லது செத்து மடி!!!

### அத்தியாயம் இருபத்தி ஏழு :

**கொடிது கொடிது துரோகம் கொடிது!!!**
**துரோகிகளை ஒன்றும் செய்ய இயலாத இயலாமை**
**கொடிதினும் கொடியது!!!**

ஈஸ்வர் "பார்த்து விடலாம், முடித்து விடலாம்" என்று நினைக்க..

பார்த்தது மட்டுமே அவன் முடித்தது ஐஸ்வர்யா... எப்படி அவளிடம் சொல்வது என்று யோசித்தபடி ஈஸ்வர் இருக்க... அவளைப் பார்த்தவுடனே தெரிந்து விட்டது. எதுவும் சொல்ல அவசியமில்லை, எல்லாம் முடிந்த தோற்றம் தான் அவளிடம்.

வந்து அமர்ந்த உடனே காஃபி சொல்லி விட்டான்... பேசக் கூட முடியுமோ என்ற அளவுக்கு அவ்வளவு சோர்வு..

அமர்ந்தவள் தான், ஐஸ்வர்யா எதுவும் பேசவில்லை.. ஈஸ்வரும் பேச முயலவில்லை.. விரோதிகளை விட துரோகிகள் இன்னும் தண்டிக்கப் பட வேண்டியவர்கள்.. அவனுக்கே அது தெரியும், அவன் செய்த துரோகமும் தெரியும்.

காபி வந்துவிட.. "குடி ஐஷ்!" என்றான்.

"கால் மீ ஐஸ்வர்யா, அண்ட் நாட் ஐஷ்!" என்றாள் நிமிர்வாகவே..

ஈஸ்வர் பதில் எதுவும் சொல்லாமலிருக்க..

"எப்படி இப்படி முடிஞ்சது, விஷ்வான்றவரை இப்படி யோசிச்சதே இல்லை.. இப்படியும் நீங்க இல்லை! ஏன் இப்படி மாறிட்டீங்க..? அந்தப் பொண்ணு கிட்ட என்ன அட்ராக்ட் பண்ணினது.. ஏதாவது காரணம் எல்லாம் சொல்லாதீங்க! உங்க பிரச்சனைகள் பணம் அது இதுன்னு! கண்டிப்பா உங்க மனசு அந்தப் பொண்ணு மேல...." என்று சொல்ல ஆரம்பிக்கும் போதே...

"சங்கீத வர்ஷினி!" என்று அவளின் பெயரை எடுத்துக் கொடுத்தான்.

அவனை வெறித்து ஒரு பார்வை பார்க்க சளைக்காமல் பதில் பார்வை பார்த்தான். "ஐ கேன் சென்ஸ் சங்கீத வர்ஷினி. அவ மேல உங்க மனசு போயிடுச்சு இல்லையா!" என்றாள்.

பதில் பேசாமல் தான் இருந்தான்..

“அப்படி ஒன்னும் என்னை விட அழகு எல்லாமில்லை! ஜஸ்ட் அந்த ஏஜ் குரிய சார்மிங், அழகாவும் இருக்கா அவ்வளவு தான்.. காலையில இருந்து கண்ணாடியை அத்தனை முறை பார்த்துட்டேன்.. எது உங்களை அவ்வளவு அட்ராக்ட் பண்ணியிருக்கும்னு, எனக்கு தெரியலை! எது? என்று அவனிடமே கேட்டாள்.

“நிஜம்மா தெரியலை?” என்றான்.

அவளுக்கே நம்பிக்கை இல்லாத போதும் மனதின் ஒரு மூலையில் ஒரு ஆசை, ஒரு வேண்டுதல், அப்படியெல்லாம் அந்தப் பெண்ணுடன் எதுவுமில்லை, என்று ஈஸ்வர் சொல்லி விட மாட்டனா என்று.

அவனைப் பார்த்தவுடனேயே தோன்றிவிட்டது.. சொல்ல மாட்டான் என்று.. அதைக் கொண்டு தான் “நீ என்ன சொல்வது என்னை வேண்டாம் என்று, நீ எனக்கு வேண்டாம்!” என்று அவளாகப் பேச ஆரம்பித்தாள்.

ஆனாலும் போன முறை இங்கே சந்தித்த போது அஸ்வின் செய்த பிரச்சனைகளால் தங்களுக்குள் இனி சரிவராது என்று அவள் நினைத்த போதுக் கூட.. “எப்போ கல்யாணம் பண்ணிக்கலாம்” என்பது போல அவன் தானே நம்பிக்கை கொடுத்தான்.. நினைக்க நினைக்க ஆற்றாமை பொங்கியது.

“காஃபி குடி!” என்றான் திரும்பவும்.

“உங்களுக்குக் கொஞ்சம் கூட மனசு உதைக்கலையா?” என்றாள்.

“உதைக்கலை!” என்றவன், “ஏன்னா இதை விட பெரிய தப்பெல்லாம் பண்ணிட்டேன். அதுக்கு முன்னாடி இது ஒன்னுமில்லை..” என்றவன்,

“வேணும்னு பண்ணலை! தெரிஞ்சும் பண்ணலை..! பட் எல்லாமே என்னை மீறி தான். போராட முடியலை! விட்டுடேன்!”

“அதோடவும் போராட முடியலை.. உன்னை ஏமாத்துற ஃபீலிங் கூட இன்னும் என்னைக் கொல்லுது.. சோ! இதுக்கு ஒரு எண்டு கார்ட்

போட்டுடலாம் நினைச்சேன். முடிஞ்சா என்னைப் புரிஞ்சுக்கோ!" என்றான் ஒரு தீர்க்கமான பார்வையோடு.

"இனி புரிஞ்சு என்ன செய்ய.. என்னால எதுவும் யோசிக்க முடியலை! இன்னும் நம்பக் கூட முடியலை..!"

"கத்துவ! ரொம்ப ஆர்ப்பாட்டம் பண்ணுவ! திட்டுவ! ஏன் சாபம் கூட விடுவன்னு நினைச்சேன்! இப்படி உன்னை எதிர்பார்க்கலை!" என்றான்.

"நீங்க என்கிட்டே காதல் சொன்னிங்க தான்! ஆனா என்னை எப்பவும் புரிஞ்சிக்க முயற்சி பண்ணினதேயில்லை.. நீங்க என்கிட்டே காதல் சொன்னப்போ அதுல காதல் இருந்தது. ஆனா இப்போ உங்களை பார்த்தவுடனே எனக்கு தோன்றது அது இல்லை.."

"இல்லாத ஒன்னைப் பிடிச்சி வெச்சு என்ன பண்ண முடியும்.. என்னோட முட்டாள் தனத்துக்கு என்னை நானே தான் பனிஷ் பண்ணிக்கணும்! பண்ணிக்குவேன்!" என்றாள் தீர்மானமாக.

"என்ன பனிஷ்மென்ட்?" என்று ஈஸ்வர் கேட்கவில்லை, கொடுத்துக் கொள்ளாதே என்றும் சொல்லவில்லை.. அவனுக்குத் தெரியும் அது என்ன என்று..

ஆம்! யாரையும் திருமணம் செய்து கொள்ள மாட்டாள்.. ஆனால் இது உடனே முடிவு செய்யும் விஷயம் அல்ல... காலம் தான் பதில் சொல்ல வேண்டும்..

இப்போது தான் எது சொன்னாலும் ஐஸ்வர்யாவின் எண்ணம் வலுப்படும்.. எதுவும் சொல்லாமல் விட்டால் "ஈஸ்வர் இப்படி செய்யாதே என்று கூடச் சொல்லவில்லை அவனுக்காக நான் தண்டனை கொடுத்துக் கொள்வதா!" என்று உதைக்கத் துவங்கும் என்று அமைதியாகத் தான் இருந்தான்.

அவனால் முடிந்தது கடவுளிடம் வேண்டுவது. ஆம்! உளமார வேண்டினான்! "என்னுடைய தவறுகளுக்கு இவளுக்கு ஏன் தண்டனை? ஒரு நல்ல வாழ்க்கையை ஐஸ்வர்யாவிற்கு அமைத்துக் கொடு கடவுளே.."

அதுவரை திடமாக இருப்பதாக தான் காட்டிக் கொண்டு இருந்தாள்.. இந்த ஈஸ்வரின் பார்வையில் உடைந்தவள்.. "ஏன் இவ்வளவு பரிதாபமா என்னைப் பார்க்குறீங்க? நீங்க பார்க்காதீங்க!" என வெடித்தவள்.. "கடவுள் கிட்ட வேண்டிக்குவேன் என்னை மாதிரி

ஒரு வலியும் வேதனையும் உங்களுக்கு வேண்டாம்னு. ஆனா அந்த மாதிரி நீங்க அனுபவிச்சா ரொம்ப சந்தோஷப்படுவேன்" என்று கண்ணீர் வழிய அவள் சொல்லும் போது..

ஒரு பயம் தான் ஈஸ்வருக்கு தோன்றியது..

"இன்னும் இருந்தேன்னா இன்னும் ஏதாவது சொல்லிக்கிட்டே இருப்பேன்.. நல்லாயிருங்க!" என்று அவள் சொல்லிய விதமே நீ நன்றாக இருக்க மாட்டாய் என்று சொல்லியது.

கண்களை துடைத்துக் கொண்டே அவள் செல்லப் போக..

"முடிஞ்சா என்னை மன்னிச்சிடு!" என்றான்.

"பார்த்தீங்களா! எவ்வளவு சுயநலம் நீங்க? உங்களை மன்னிக்கறதா முக்கியம், உங்களை நான் மறக்கறது தான் முக்கியம்! ஏன் உங்களுக்கு அப்படி நினைக்க தோணலை.. ஈசியா நீங்க மாறிட்டீங்க இல்லை! அதுதான் உங்களுக்கு இது பெரிய விஷயமா தோணாது..!"

"எனக்கு அது மட்டும் தான் இப்போதைக்கு விஷயம்.. அந்தப் பொண்ணையும் இப்படி விட்டுடாதீங்க!" என்றாள்.

"விடறதா? நாங்க எப்போ சேர்ந்தோம், விடறதுக்கு! அது அவ்வளவு ஈசி இல்லை.. இது உனக்கு புரியாது!"

"எனக்கு இது எதுக்கு புரியணும்! தேவையே இல்லை. நான் இந்த உலகத்துல தனி மனுஷி! எல்லோருமே காட்டிட்டீங்க! அக்கா, அண்ணா, அப்பா, ரஞ்சனி, இப்போ நீங்க.." சொல்லும் போதே உடைந்து விட்டாள்.

"அவ கல்யாணம் கூட எனக்கு லேட்டா தான் தெரியும்.. அவ சொல்லவேயில்லை.. எவ்வளவு க்ளோஸ் தெரியுமா நாங்க? சொல்லலை!.. என்னவோ ஏதோ அவளோட பெர்சனல்ன்னு தான் பேசாம இருந்தேன்.. உங்க கிட்ட கூட நான் பேசலை.. நல்லா பேசிட்டிருந்த எல்லோரும் அப்படியே பேசறது கூட இல்லை.. நான் தனியா தான் ஆகிட்டேன்!" ஒரு பெரிய கேவல் வெடித்தது.

"நீ தனி கிடையாது ஐஷ்!" என்றவன் "ஐஸ்வர்யா" என்று மாற்றி.. அவளை சமாதானம் செய்ய முயலும் போதே, அதைக் கேட்பதற்கு அவள் இல்லை நடக்க ஆரம்பித்து விட்டாள்.

“நீ உன்னுடைய பாவங்களை அதிகப் படுத்திக் கொண்டிருக்கிறாய்” என்று ஈஸ்வரின் மனது அவனுக்கு சொன்னது.

ஆனால் வேறு வழியில்லை! முடித்து தான் ஆகவேண்டும்! கட்டுப் பாட்டை மீறி மனது வேறு பெண்ணிடம் பாயும் போது, இவளுக்கும் நம்பிக்கை கொடுப்பது.. இப்போது முடித்துக் கொள்ளலாம் என்று செய்யும் துரோகத்தை விட பல மடங்கு அதிகம். துரோகம் செய்வது என்பது முடிவான பிறகு, அதை குறைத்தாவது செய்யலாம் என்று நினைப்பது ஒன்றும் நல்லதனம் இல்லை தான், ஆனாலும்... மனது?

வெகு நேரம்... “சர், க்ளோஸ் பண்ணனும்!” என்று அந்தக் கடைக்காரர் சொல்லும் வரை அமர்ந்து தான் இருந்தான். இன்னும் வர்ஷினியுடன் எப்படி தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது.. அவனுடைய வளர்ப்பில் பெண்ணுடன் தொடர்ப்பு என்பது திருமணத்தின் மூலம் மட்டுமே சாத்தியம். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை!

ஏற்கனவே ஒரு பெரும் தவறை செய்திருக்கிறான்.. ஆனால் நிச்சயம் அதைச் சரி படுத்த அல்ல திருமணம்! அவள் வேண்டும் என்பதற்காகத் தான் திருமணம்.. ஆம்! சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்பது போல.. அப்பா உங்களை கல்யாணம் செய்யச் சொல்றார் என்று சொல்லித் திருமணம் எனும் வழியை அவனுள் புகுத்தியதும் வர்ஷினி தான்.

அவள் பேசிய பிறகு மனதின் ஒரு ஓரத்தில் செய்து கொண்டால் என்ன என்று ஒரு எண்ணம் ஓடிக் கொண்டே தான் இருந்தது.

வர்ஷினியின் பிறப்பை, வளர்ப்பை, நீ ஒரு ஆளா என்பது போல பார்த்த தன் பார்வையை, ஏன் ராஜாராமை எப்படி தைரியமாக மகள் என்று காட்டிக் கொள்கிறார் என்று நினைத்த நினைப்பெல்லாம் எங்கே போயிற்று என்று அவனுக்கே தெரியவில்லை.

யோசனைகள் ஓட ஆரம்பித்து... நிற்காமல் ராத்திரி பகல் என்று ஓடிக் கொண்டு இருந்தது.

ஈஸ்வர் நினைத்தது உண்மை என்று இரண்டு நாட்களில் ராஜாராம் நிருபித்தார்.

அஸ்வின் பிரச்சனையை ஒரு முடிவுக்கு வந்ததும்.. “ஈஸ்வர் ஃபைனான்ஸ்ல பணம் எவ்வளவு குடுக்கணும்னு கேளு முரளி”

என்று மகனிடம் சொன்னார். அவர் நேரடியாக ஈஸ்வரிடம் பேசவில்லை.. ஈஸ்வரையும் பேச அனுமதிக்கவில்லை. எல்லாம் முரளி மூலமாக..

ஒரு வாரம் இந்த வேலைகள் தான்! யாருக்கும் மூச்சு விட நேரமில்லை. பிரச்சனைகள் குறையக் குறைய.. வர்ஷினியை எப்படி அணுகுவது என்று அவனின் மண்டையை உடைக்க ஆரம்பித்தது.

வர்ஷினி அவனின் மனதில் விஸ்வரூபம் தான் எடுத்து நின்றாள்.

எல்லாம் முடித்து நிமிர்ந்த போது..

ஈஸ்வர் அவர்களின் பைனான்ஸ் பங்குகளை ஜகனிற்கும் ரஞ்சனிக்கும் பிரித்து எழுதப் பிரியப்பட்டான், அதை முரளியிடம் சொல்ல.. அவன் ராஜாராமிடம் சொல்ல... அப்போதுதான் அவர்கள் மொத்த குடும்பத்தையுமே தன் வீட்டிற்கு வரவைத்தார்.

எல்லோரையுமே  முறையாக முரளியையும் ஷாலினியையும் விட்டு அழைத்தார்..

எதற்கு என்று ஈஸ்வருக்கு பெரும் சந்தேகம்.. நிச்சயமாக மனது நல்ல விதமாக சொல்லவில்லை. ஏனென்றால் பணம் கொடுக்கும் போது கூட அவனிடம் பேசவில்லை. “அப்பாக் கிட்ட சில விஷயம் கேட்கணும்” என்று முரளியிடம் சொன்ன போது கூட... “என்கிட்டே சொல்லுடா! நான் கேட்டு சொல்றேன்!” என்று தான் முரளி சொன்னான்.

ராஜாராம் வேண்டுமென்றே தான் தள்ளி நிறுத்தினார்.. மகள் கெட்ட விதமாய் சொல்லாத போதும் நல்ல விதமாய் சொல்ல வில்லையே. எப்படி எதுவுமே இல்லாதது போல சகஜமாய் நடப்பது. சற்று தள்ளியே வைப்போம் என்று தான் முரளி மூலமாகவே எல்லாம் செய்தார்.

ஐஸ்வர்யாவை எப்படி எதிர்கொள்வது என்ற ஒரு உளைச்சல்! பணப் பிரச்சனை ஒரு உளைச்சல்! வர்ஷினியிடம் நடந்து கொண்ட ஒரு குற்றவுணர்ச்சி எல்லாம் சேர்ந்து ஈஸ்வரை செயலிழக்க வைத்திருந்தது!

முதல் இரண்டும் முடிந்து விட்டது..

வர்ஷினியுடனான தொடர்பை அவனே எப்படியாவது புதுப்பிக்கவோ, தக்க வைத்துக் கொள்ளவோ நினைக்கும்

வேளையில் இனி என்ன நிறுத்தக் கூடும் அவனை! ராஜாராமா..? நிச்சயம் இல்லை..!

வெகு தினங்களுக்குப் பிறகு தோற்றத்தில் அக்கறை எடுத்துத் தயாரானான். மனதிலும் ஒரு இறுமாப்பு, “நாளுக்கு ஒரு பொண்ணோட இருந்தார் அவர், நான் அவர் பொண்ணு பின்னாடி மட்டும் தானே போறேன்! தப்பா பார்த்தாலும் தப்பான உறவுக்கு நினைக்கலையே? என்ன செய்வார் பார்த்துடலாம்..?” என்ற எண்ணம்.

முகத்தில் எப்போதும் இருக்கும் கம்பீரம், திமிர், எல்லாமே மீண்டு இருந்தது.

“ஹேய் விஷ்வா! என்ன இன்னைக்கு பளபளன்னு இருக்க! என்னை விட அதிக நேரம் கண்ணாடி முன்னாடி நின்னயா?” என்று ரூபா கூட கிண்டல் செய்தாள்.

எல்லோரும் கிளம்ப, எப்போதும் போல பெரியம்மாவும் பாட்டியும் கிளம்பவில்லை.. “கிழவி... நீங்க வரலையா? ரஞ்சனி வீட்டை நீங்க பார்க்க வேண்டாமா..?”

“நான் எங்கயும் வர்றது இல்லையேடாப்பா?”

“இன்னைக்கு வாங்க!”

“ஏன்? இன்னைக்கு என்ன?”

“சும்மா தான் வாங்க! நமக்கு அவங்க எவ்வளவு பெரிய உதவி பண்ணியிருக்காங்க! வாங்க! கிளம்புங்க! பெரியம்மாவையும் கிளப்புங்க! பெரியப்பா வளர்த்தது சரியாம காப்பாத்தியிருக்காங்க!” என்று சொல்லி அனைவரையும் கிளப்பினான்.

முதல் முறையாக வீட்டினர் அனைவருமே வந்திருக்க.. ரஞ்சனிக்கு அவ்வளவு மகிழ்ச்சி முகத்தில்.. முகம் ஒரு புன்னகையை, மலர்ச்சியைத் தானாகப் பூசிக் கொண்டது. அது இன்னுமே அவளின் முகத்திற்கு அழகை கொடுக்க..

“பாருடா! அவங்க வீட்டு ஆளுங்களைப் பார்த்ததும் என் மனைவி இன்னும் அழகாயிட்டா.. முகத்துல ஒரு ஸ்பெஷல் லைட் எரியுது” என பத்துவின் எண்ணம் ஓடியது.

அவர்கள் வந்ததுமே மேலேயிருந்து வர்ஷினி பார்த்து விட்டாள்.. ஆனாலும் கீழே இறங்கக் கூடாது என்று நினைக்க.. பிரணவியும் சரணும் அதை தவிடு பொடி ஆக்கினர்.

பிரணவியை ரூபாவிடம் இருந்து ரஞ்சனி ஆசையாக வாங்க.. “அக்கா! எங்கே?” என்று சரண் ரஞ்சனியின் சுரிதாரின் துப்பட்டாவைப் பிடித்து இழுத்தான்.

நமசிவாயமும் ஜகனும் மாற்றி மாற்றி ராஜாராமிடமும் தாத்தாவிடமும் நன்றி சொல்ல.. கமலம்மா ஈஸ்வரின் அம்மாவிடம் பேச.. ரூபா ஷாலினியிடம் பேச..

ஈஸ்வர் இன்னும் வந்திருக்கவில்லை.. “நான் பாட்டியோடவும் பெரியம்மவோடவும் வர்றேன்! அவங்க இன்னும் கிளம்பலை! நீங்க போங்க!” என்று மற்றவர்களையும் அனுப்பி இருந்தான்.

ராஜாராம் தன்னைத் தவிர்த்திருக்க முதல் ஆளாகப் போய் நிற்க மனமில்லை.. பாட்டியுடனும் பெரியம்மாவுடனும் பேச வேண்டி இருந்தது. பின் தங்கி விட்டான்.

ஈஸ்வர் இன்னம் வந்திருக்காததால் வர்ஷினி விரைந்து கீழே இறங்க.. அவளைப் பார்த்ததும் பிரணவி அவளிடம் தாவினாள். “தோடா! இதைப் பாரு இந்தக் குட்டியை” என்று ரஞ்சனி சலுகையாக குறைபட..

“என்னோட ஃபிரண்ட்ஸ் அண்ணி இவங்க!” என்று சொல்லி வர்ஷினி அவளைக் கொஞ்ச..

அந்த இடமே கலகலப்பாகியது. ஈஸ்வர் வீட்டினரை அப்பா குடும்பத்தோடு வரச் சொல்லியிருக்கிறார் என்றதும் அவனைப் பார்க்க வேண்டுமே என்ற ஒரு டென்ஷன் இருந்தது.

அன்று பேசியது தான் ராஜாராம் ஈஸ்வரை பற்றி, அதன் பிறகு எதுவும் வர்ஷினியிடம் பேச வில்லை.. சரி மறந்து விட்டார் என்று நிம்மதியாக தான் இருந்தாள். அவளின் அப்பா மறக்கவே மாட்டார் என்று அவளுக்குப் புரியவில்லை.

ஈஸ்வர் நல்லவனா கெட்டவனா என்று அவரின் மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது தான் நிஜம். ராஜாரமிற்கு தெரிந்த வரை ஈஸ்வர் குறை சொல்ல முடியாதவன்.. ஆனால் அன்று பார்த்த போது அவனின் முகத்தில் ஒரு குற்ற உணர்ச்சி, மகளும் மாற்றி மாற்றி ஏதோ உளறினாள். முற்றிலும் மனதில் சஞ்சலம்.

நேற்று தான் திரும்ப “நம்ம அவங்களுக்கு இவ்வளவு பணம் கொடுத்திருக்கோம்” என்று சொல்ல.. என்ன சொல்வது என்று அவளுக்கு தெரியவில்லை. இப்போது அண்ணியின் குடும்பம் வேறு, “ஓஹ்!” என்றதுடன் நிறுத்திக் கொண்டாள்.

மேலே அந்தப் பேச்சை வளர்க்க இஷ்டப்படவில்லை. திரும்பவும் தான் எதுவும் உளறி விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தாள்.

இன்று அவர்கள் எல்லோரும் வருகிறார்கள் என்று தெரிந்ததும் ஒரு டென்ஷன் இருந்தது. ஈஸ்வரைப் பார்க்க வேண்டுமே என்று.. தப்பு செய்தது அவன், எனக்கு எதற்கு அவனைப் பார்க்க பயம்.. தெரிந்த கெட்ட வார்த்தைகள் எல்லாம் மனதில் தோன்றியது.

“குழந்தையைக் கைல வெச்சிருக்க, டோன்ட் டு திஸ்” என்று அவளுக்கு அவளே சொல்லிக் கொண்டு இருக்கும் போதே ஈஸ்வர் அவனின் பெரியம்மா மற்றும் பாட்டியுடன் வர..

“அய்யோடா! என்ன இது?” என்று தான் அவனைப் பார்த்த க்ஷணம் வர்ஷினிக்குத் தோன்றியது. முரளி அண்ணனின் திருமணத்தில் பார்த்த போது இருந்த தோற்றத்தை விட இன்னும் வசீகரமாய் தான் இருந்தான்.

ஏனென்றால் சமீபமாக பார்த்த போதெல்லாம் ஓய்ந்த கவலையான தோற்றம் தான். அவள் மண்டையை உடைத்த அன்று தான் கொஞ்சம் நீட்டாய் இருந்தான். அதையும் அவனின் செய்கையால் கெடுத்துக் கொண்டான்.. அதன் பிறகு பார்க்கவே இன்னும் பரிதாபமாக இருந்தான்.

இன்று “அம்மாடி! எதுக்கு இவ்வளவு சார்மிங்கா ட்ரெஸ் பண்ணியிருக்கான்.. கொஞ்சம் கூட தப்பு செஞ்சோம்ன்ற ஃபீலிங்கே காணோம்” என்ற படி வர்ஷினி “ங்கே” விழி விரித்து அவனைப் பார்த்தாள்..

“விஷ்வா!” என்று ரஞ்சனி வேகமாக அருகில் விரைந்தவள் “வாங்க பாட்டி, வாங்க பெரியம்மா” என்று அவர்களையும் அழைக்க..

ஈஸ்வரின் கண்கள் வேகமாக எல்லோரிடமும் சென்று மீண்டாலும் வர்ஷினியிடம் சில நொடிகள் மீள முடியாமல் சிக்குண்டு, முயன்று திரும்பி அப்பா அமர்ந்திருந்த இடம் நோக்கி சென்றான்.

இதில் மனதில் பெரிய ஆராய்ச்சி வேறு! வேறு என்ன? ஹ ஹ அவளது என்ன உடை என்பது போல... பின்னே முகம், கை விரல்கள், பாதங்கள் மட்டும் தானே தெரிந்தது. நீண்ட அங்கி போன்ற ஒரு உடை! இது என்ன உடை?

"வா ஈஸ்வர்!" என்று ராஜாராமும் தாத்தாவும் வரவேற்றனர். ராஜாராமின் பார்வையும் ஆச்சர்யமாகத் தான் அவனைப் பார்த்தது.. அன்று பார்த்த ஈஸ்வருக்கும் இன்று பார்த்த ஈஸ்வருக்கும் ஆயிரம் வித்தியாசம்.

நன்றாய் இருந்த காலத்திலும் யாரைப் பார்த்தாலும் அளவோடு சிரித்து, அளவோடு பேசும் இறுக்கங்கள் தளர்ந்து இருந்தது.. அவனின் முகம் கண்கள் எல்லாமே வசீகரமாய் இருந்தது. அன்று பார்த்த தயக்கம் குற்ற உணர்ச்சி ஒன்றுமில்லை.

வர்ஷினியை பார்க்க.. அவளும் ஆச்சர்யமாய் தான் ஈஸ்வரை பார்த்து இருந்தாள். பின்பு பார்வையை அவள் திருப்பிக் கொண்டதும் குழந்தைகளிடம் பேச ஆரம்பித்ததையும் பார்த்தார். ஆச்சர்யம் மட்டுமே அவளின் பார்வையில் கோபம் வெறுப்பு போல எல்லாம் ஒன்றுமில்லை.

ஒன்றுமே இல்லையா? நான் தான் ஏதோ இருக்கிறது என்று நினைத்தேனா? பெரிதாக பிரச்சனை ஒன்றும் இல்லை போலவே என்று அவருக்கு தோன்றியது.

அவரிடம் மரியாதை நிமித்தம் "எப்படி இருக்கீங்கப்பா?" என்று கேட்டவன்.. அதன் பிறகு முரளியிடம் பேச அமர்ந்து விட்டான்.. யாரையும் பார்க்கவில்லை.. மனதிற்குள் "அவளைப் பார்க்காதே! பார்க்காதே! அவங்கப்பன் உன்னை தான் பார்த்துகிட்டு இருப்பான்" என்று அவன் மனதில் ஜபித்துக் கொண்டிருந்தது அவனுக்கு மட்டும் தானே தெரியும்.

ரஞ்சனி பத்துவிடம் "நீங்க இன்னும் எங்க அண்ணாக் கிட்ட பேசலை!" என்று குறைபட..

"அதான் முரளி பேசறான் தானே"

"முரளிண்ணா பேசினா, நீங்க வாங்க கூட சொல்ல மாட்டீங்களா?"

"அவர் என்னைப் பார்க்கவேயில்லை" என்று சொல்லிக் கொண்டே ஈஸ்வரின் அருகில் சென்று "வாங்க" என்று சொல்ல..

பத்மநாபனை பார்த்து சிநேகமாய் புன்னகைத்து, இரண்டொரு வார்த்தைகள் பேசி மீண்டும் முரளியிடம் திரும்பி விட்டான்.

ஈஸ்வர் தன்னிடம் நன்றாய் பேசியது போல இருந்தாலும்.. ஏதோ குறைந்தது பத்துவிற்கு. எப்போதுமே திமிராய் தான் பார்ப்பான் ஈஸ்வர். ஆனால் இது அது அல்ல! இது வேறு! பத்துவிற்கு புரியவில்லை.

பத்துவிற்கு புரியாதது ஈஸ்வரின் பார்வை..

அது தெளிவாக சொன்னது ஒன்று தான்! “என்னைக் கண்டு பிடிச்சு என்னைக் குறை சொல்ற அளவுக்கு நீ பெரியாளாடா.. என்ன பண்றது நீ என் தங்கை புருஷனாகிட்ட. ஏன்? எனக்கு இவ்வளவு தொல்லை கொடுக்கற அஸ்வின் கூட என்னோட இந்தப் பக்கத்தை கண்டிருக்க மாட்டான்.  என்கிட்டே இருந்து தள்ளி நிக்க சொன்னியாமே, நீ எவ்வளவு தான் உன் தங்கையை என்கிட்டே இருந்து தள்ளி வெச்சாலும் அவ எனக்கு தான்!” என்றது.

சொல்லியவனின் பார்வை வர்ஷினியிடம் நிலைக்க... “இவள் மறுப்பாளே! இவளை எப்படி ஒத்துக் கொள்ள வைக்க?”

அந்த நீல நிறக் கண்கள் தன்னைப் பார்க்க மனம் ஏங்கியது!!!

“சரியா? சரியில்லையா? நடக்குமா? நடக்காதா? நடந்தாலும் நிலைக்குமா? நிலைக்காதா? தன்னுடைய அவளோடான இந்த உணர்வுக்கு பெயர் என்ன.. இது எப்போதும் தன்னிடம் இருக்குமா இல்லை தன்னுடைய இச்சைகள் தீர்ந்த பிறகு குறைந்து விடுமா?” என்று போராட ஆரம்பித்தான்.

குறையுமா? குறையாதா? நடக்கும் பட்சத்தில் தானே தெரியும்?

**உயிரை உயிரால் உள்ளே குடைந்து**
**உயிரின் உயிரை உணரும் முயற்சியா!!!**

## அத்தியாயம் இருபத்தெட்டு :

**துரோகம் போய் கயமை, கய மை போய் எதுவோ ?? சில சமயம் கயமைக்கு பெயர், ராஜ தந்திரம், சாணக்கிய தந்திரம்... இது**

**எதுவோ??? துரோகத்தினால்**
**இந்த செயல் கயமையாகிவிட, இல்லாவிட்டால்**
**இது என்ன???**

சூழல் இலகுவானது போல இருந்தாலும் ஒரு இறுக்கம் அனைவருமே உணர்ந்தனர். என்ன என்று புரியவில்லை.

ஆளுக்கு ஒரு புறம் பேசிக் கொள்வது போல இருந்தாலும் அப்படி தான்.. முரளிக்கும் பத்மநாபனுக்கும் தான் என்ன வென்று புரியாத ஒரு தோற்றம்.

மதிய விருந்தும் கூட ஏற்பாடு செய்யப் பட்டிருக்க.. அதை மேற்பார்வை பார்த்தவாறு கமலம்மா இங்கே வருவது அங்கே பார்ப்பது என்றிருந்தார்.

ஈஸ்வர் அங்கே வந்ததும் சிறிது நேரமே இருந்த வர்ஷினி. குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு ரூமிற்கு சென்று விட்டாள். அதன் பிறகு தான் அவளால் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது.

ஈஸ்வர் அங்கே இருந்தவர்களிடம் பேசிக் கொண்டு இருந்தாலும் கவனமாக தன்னைப் பார்ப்பதை தவிர்ப்பது புரிந்தது.. ஆனாலும் மனது சொல்லியது முழுவதும் தன்னைப் பற்றி தான் நினைத்துக் கொண்டு இருப்பான் என்று.

இது மனதில் ஓடும் போது தன்னுடைய பார்வை அடிக்கடி அவன் புறம் செல்வதை உணர்ந்தவள், எதற்கு வம்பு என்பது போலத் தோன்ற வேகமாக அந்த இடத்தை விட்டு அகன்று விட்டாள்.

கீழே என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள ஆர்வம் இருந்தாலும்... "தள்ளி நில்! திரும்பவும் எதையும் இழுத்து விட்டுக் கொள்ளாதே! எல்லோரையும் ஓரளவு சரியாக கணிக்கும் உன்னால் அவன் என்ன மாதிரி என்று இதுவரை கணிக்கவோ உணரவோ முடியவில்லை.. எத்தனை முறை நீயாக அவனுடன் சென்று பேசி இருக்கிறாய்.. ஒரு முறை கூட அவனின் எண்ணத்தை உன்னால் உணர முடியவில்லை. அது ஏன்?"

"வேறு எவனாவது உன்னிடம் இப்படி நடந்து இருந்தால், வீட்டினரிடம் சொல்லாமல் இருந்திருப்பாயா இல்லை மறுபடியும் அவனை பார்க்கும் போது எதுவும் நடவாதது போல இப்படி இருப்பாயா?"

“அடுத்தவர்கள் உன்னைத் தவறாக நினைக்கக் கூடும் என்று வெளியே தெரிவதை தவிர்த்தாலும் இந்த மாதிரி தான் நீ மற்றவர்களிடமும் நினைப்பாயா..?” இது இப்பொழுது தோன்றிய எண்ணம் அல்ல..

முதல் இரண்டு மூன்று நாட்கள் ஒரு அதிர்ச்சியிலும் ஒரு சுய பட்சாதாபத்திலும் இருந்தாள் தான்.. ஆனால் அன்று தந்தையிடம் உளறி வந்ததில் இருந்து.. உடலிலா மனதிலா என்று தெரியாத ஒரு வலியை உணர்ந்ததில் இருந்து... ஒரு சுய அலசல் தான். ஏன் நான் இப்படி என்பது மாதிரி?

“அவனின் செய்கை எவ்வளவு பெரிய தவறு? நான் அவனை அப்படியே விட வேண்டிய அவசியம் என்ன? அப்பாவிடம் நான் அவனை ஆர்வமாக பார்த்தேன் என்று பொய் சொல்லிக் காப்பாற்ற வேண்டிய அவசியம் என்ன?”

அதுவும் இன்று ஈஸ்வர் இப்படி ஒரு தோற்றப் பொலிவோடு வந்து நிற்க. என்ன இப்படி எதுவுமே நடவாதது போல எப்படி இவனால் இருக்க முடிகிறது என்ற ஆராய்ச்சி?

குழந்தைகளுக்கு சரி சமமாக விளையாடிக் கொண்டு இருந்தாலும் மொத்தத்தில் ஈஸ்வரை சுற்றி வட்டமிட்டன எண்ணங்கள்.

கீழே ஈஸ்வர் நேரடியாகவே ராஜாராமிடம் “பாதி பாதியா பிரிச்சு எழுதிடலாம், ஜகன்கும் ரஞ்சனிக்கும்” என்று சொல்ல...

“உங்க எல்லோரையும் நான் வரவழைச்சதும் அது வேண்டாம்னு சொல்லத் தான்.. நான் எதையும் எதிர்பார்த்து இதைச் செய்யலை.. பலவருஷமா நீ முரளி ஃபிரண்ட், அதுக்காகவே நான் உதவி செய்யறேன்னு சொன்னேன். நடுவுல ஏதேதோ குழப்பங்கள்.. இப்போ எல்லாம் நல்லபடியா முடிஞ்சிடுச்சு.. நீங்க என் மருமகளோட வீடு கூட.. இப்போ அதுக்காகவும் செய்யறோம்... நீங்க பணத்தைத் திரும்பக் குடுக்கணும்னு கூட இல்லை”

“ஆனா இப்படி வாங்கறது சரி படாதுன்னு நினைச்சா... உங்களால முடியும் போது பணத்தைத் திரும்பக் குடுங்க. இல்லை, கொஞ்ச கொஞ்சமா குடுங்க.. அதை விட்டு இப்படி எழுதிக் கொடுக்க வேண்டாம், பொண்ணையும் கல்யாணம் பண்ணிக்கிட்டு சொத்தையும் பிடிங்கிட்டோம்னு ஊர்ல இருக்குறவங்க சொல்லவா. எங்களுக்கு அந்த பேர் வேண்டாம்” என்றார் தீர்மானமாக..

“இது என்னடா புதிய பிரச்சனை?” என்பது போல ஒரு க்ஷணம் ஈஸ்வர் தயங்கிப் பார்த்திருந்தவன் உடனே திரும்ப பதிலளிக்க ஆரம்பித்தான்.

“நாங்க அப்படி ஒரு மைன்ட் செட்ல தான் வாங்கினோம். நீங்க இப்படி திடீர்ன்னு சொன்னா எப்படி? முன்னமே சொல்லியிருக்க வேண்டாமா?”

“முன்னமே சொல்லியிருந்தா?”

“கண்டிப்பா வாங்கியிருக்க  மாட்டேன்! வாங்கவும் விட்டிருக்க மாட்டேன்..” என்றான் அவரையும் விட தீர்மானமாக.

அவனை விட்டு நமஷிவாயதிடம் திரும்பியவர்.. “நீங்க சொல்லுங்க சம்மந்தி, சிறுபிள்ளை தனமா இருக்கு ஈஸ்வர் பேச்சு!” என்று சொல்ல...

மாற்றி மாற்றி ஆளாளுக்கு பேசினார்... யார் எப்படி பேசினாலும் ஈஸ்வரும் அவனின் நிலையில் இருந்து இறங்கி வரவில்லை ராஜாராமும் வரவில்லை.

சளைக்காமல் அவரவரின் காரணங்களை சொன்னர். உண்மையில் கேட்டவர்களுக்கு ஈஸ்வர் பேசும் பொழுது அவன் பேசுவது சரி என்பது போலத் தோன்றியது. ராஜாராம் பேசும் பொழுது அவர் பேசுவது சரி என்பது போலத் தோன்றியது.

இதில் ரூபா வேறு, “தவறு செய்தது என் கணவர்.. நீ ஏன் இப்படி செய்கிறாய்” என்று அவள் ஒரு பக்கம் பேச... “உனக்கு வேண்டாம் என்றால் எனக்கும் வேண்டாம்” என்று ஜகன் சொல்ல... ஜகன் சொல்வதை பார்த்து ரஞ்சனியும் சொல்ல..

பேச்சுக்கள்.... பேச்சுக்கள்... ஆக்ரோஷமான பேச்சுக்கள் அல்ல அமைதியான பேச்சுக்கள்... ஒரு கட்டத்தில் மேல் எதற்கு இப்படி இருவரும் வாதாடுகிறார்கள் என்று எல்லோரும் பார்த்து இருந்தனர்.

சற்று நேரமாகி விட்டது, ஆனாலும் குழந்தைகளைத் தேடிக் கூட யாரும் வராததை உணர்ந்த வர்ஷினி மெதுவாக கீழே எட்டிப் பார்க்க..

ஏதோ அப்பாவும் ஈஸ்வரும் பேசிக் கொண்டு இருப்பதையும் எல்லோரும் சுற்றி நின்றோ அமர்ந்தோ பார்த்துக் கொண்டு இருப்பதையும்.. கமலம்மா கையை பிசைந்து நிற்பதையும்..

தாத்தா நடுவில் நடுவில் ஏதோ பேசினாலும் இருவரும் கண்டு கொல்லாததையும்.. அதுவும் முரளியும் பத்துவும் அப்பாவை நிறுத்த முடியாமல் நிற்க, ஈஸ்வர் குடும்பத்தினர் அவனை நிறுத்த முடியாமல் பார்த்து இருந்தனர்.

என்ன நடக்கிறது என்று புரியாத போதும் அவர்கள் நிறுத்த மாட்டார்கள் என்று புரிந்து... பிரணவியை கையினில் வைத்த படி இறங்கி வந்தவள்..

அவள் இறங்கும் போதே ஈஸ்வர் பார்த்து விட்டான். அவன் பார்த்ததை வர்ஷினியும் பார்த்து விட்டாள்.

அப்பாவின் அருகில் வந்ததும், “என்னப்பா பண்றீங்க?” என்றாள் சற்று சத்தமாக... அவரைக் கேட்ட நொடியில், ஒரு மாத்திரை கூட அல்ல அரை மாத்திரை அளவு ஈஸ்வரையும் பார்வை தொட்டு மீண்டது.

ஈஸ்வர் அப்படியே பேச்சை நிறுத்திக் கொண்டான்.

ராஜாராம் நிறுத்தி வர்ஷினியைப் பார்க்க...

“இட்ஸ் டைம் பா லஞ்ச்க்கு போகலாம்.. அம்மா எவ்வளவு நேரமா பார்த்துப் பார்த்து செய்யறாங்க.. சாப்பிட்டு பேசுங்க.. எல்லோரையும் வெயிட் பண்ண வைக்காதீங்க. பாருங்க சின்ன குட்டிக்கு கூடப் பசிக்குது” என்று சூழலை சற்று இன்முகத்தோடே லகுவாக்கியவள்..

“வாங்க அக்கா!” என்றாள் ரூபாவை பார்த்து.. குழந்தையை அவளிடம் கொடுத்தவள்.. “வாங்க பாட்டி!” என்று சௌந்தரி அம்மாவையும் அழைத்தாள்.

முரளி நமஷிவாயத்தை அழைத்துச் செல்ல, ரஞ்சனி ஜகனையும் ரூபாவையும் அழைத்து செல்ல. ஷாலினியும் கமலம்மாவும் ஈஸ்வரின் பாட்டியை அம்மாவை பெரியம்மாவை தாத்தாவை என்று எல்லோரையும் கிளப்பினர்.

“அப்பாடி! இப்போதைக்கு நிறுத்தினார்களே!” என்று அவர்கள் நகர ஆரம்பித்ததும்...

“உங்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு லிட்டர் தண்ணி தான் குடிக்கணும்.. இவ்வளவு பேசினா அது போதுமா? பேசாதீங்க!” என்று சற்று கடுமையாகவே அப்பாவிடம் கூறினாள். ஆம்! அவருக்கு அந்த

அளவு தான் தண்ணீர் கொடுக்க வேண்டும்.. சிறுநீரகத்திற்கு வேலை குறைவாக கொடுக்க...

இப்போது அருகில் இருந்த ஈஸ்வரிடம் “என்ன நிறுத்தாம பேசிட்டே இருக்கீங்க! அவர் கிட்ட இப்படிப் பேசக் கூடாது! தெரியாதா? ஹி இஸ் சிக்!” என்றாள் அதற்கு சற்றும் குறையாமல்..

“அது எனக்கு மட்டும் தெரியாதா? ஆனா ஒத்துக்க மாட்டேங்கறார்!” என்றான் அவளை, அவளின் கண்களைப் பார்த்தவாறே...

அருகில் இருந்த பத்து வியந்து தான் பார்த்து இருந்தான்.. ஈஸ்வரிடம் யாரும் இப்படி அதட்டி பேசி அவனுக்கு தெரிந்து அவன் பார்த்தது இல்லை. அதுவும் இருவரும் பேசிய விதம் ஏதோ நெடு நாள் பேசியவர்கள் போல.. என்ன நடக்கிறது?.. இவளைத் தள்ளி நிற்கச் சொன்னால் ஏன் கேட்க மாட்டேன் என்கிறாள். இவனுடன் பேச வேண்டிய அவசியமென்ன என்று யோசனைகள் ஓடப் பார்த்து நின்றான்.

“என்ன கேட்க மாட்டேங்கறார்?” என்றவளிடம்.. மிகவும் சுருக்கமாக விஷயத்தை ஈஸ்வர் சொல்ல..

“ஓஹ்!” என்றவள், அவனை நேர் பார்வை பார்த்து பெரிய மனுஷியின் தோரணையோடு “சரி அப்புறம் பேசிக்கலாம்.. கொஞ்சம் அப்பாக்கு டைம் குடுங்க! யோசிக்கட்டும்!” என்றவள்..

திரும்ப அவனிடம் திரும்பாது “வாங்கப்பா!” என்று அவரை எழுப்பி அழைத்து போனாள். ராஜாராம் எதுவும் சொல்லவில்லை. வர்ஷினியின் சொல்லுக்கு பணிந்து அவளோடு சென்றார்.

ஆளுமையோடு வர்ஷினி பேசும் போது அதில் வர ராஜாராமிற்கு விருப்பமில்லை. அப்போதைய அவரின் எண்ணம் இதை ஏன் தன்னுடைய ஆண்மக்கள் இருவரும் செய்யவில்லை.

அவர்காளால் ஏன் தன்னையோ ஈஸ்வரையோ நிறுத்த முடியவில்லை. வந்து ஒரே நொடியில் எங்களை நிறுத்தினாளா? இல்லையா? ஏன் வர்ஷினி என்னைப் போல இருப்பதைப் போல, அவர்கள் இல்லை என்ற சிந்தனை தான். அதில் வர்ஷினியைப் பற்றியோ ஈஸ்வரைப் பற்றியோ மறந்து போனார்.

அந்த நிமிடத்தில் தான் இல்லாது போனால் என் மக்கள் என்ன செய்வர் என்ற சிந்தனை தான். அவர்களால் தன்னைப் போல

தொழில் செய்ய முடியுமா? வாழ்கையைச் சரியாக கொண்டு செல்வார்களா? ஏன் இவ்வளவு விரைவாக நான் என் முடிவை நோக்கி செல்ல வேண்டும். **கண்டதே காட்சி கொண்டதே கோலம்** என்று வாழ்ந்தது தவறோ.. நான் வாழ்ந்த வாழ்க்கை என் குழந்தைகளுக்குப் பாதிப்பு ஆகிவிடுமோ என்ற இனம் புரியாத பயம் மனதில்.

தன்னை அஞ்சாது நேர் பார்வை பார்த்த விழிகள் தயக்கமில்லாமல் தன்னை விட்டு விலகியது ஒரு கோபத்தை ஈஸ்வருக்கு கொடுத்தது. செல்லும் அவர்களை தீர்க்கமாகப் பார்த்து இருந்தான்.

பத்து எதற்கு ஈஸ்வர் இப்படிப் பார்க்கிறான் என்பது போலப் பார்த்து நின்றிருந்தான். ஈஸ்வர் அவர்களை விட்டு பார்வையைத் திருப்பியதும் “சாப்பிட வாங்க!” என்றழைக்க..

“முரளி வரட்டும்” என்று சொல்லி ஈஸ்வர் அப்படியே அமர்ந்து தான் இருந்தான்.

அங்கே வேறு யாரும் இல்லை. பத்துவிற்கு அவனைத் தனியே விட்டு போவதா? இல்லை நிற்பதா?.. நின்றாலும் என்ன பேசுவது?.. ஈஸ்வர் என்னவோ தன்னிடம் பேச விருப்பமில்லாமல் முகத்தைத் திருப்பிக் கொள்வது போல ஒரு உணர்வு.

யோசனைகள் ஓட அதற்குள் ரஞ்சனி அங்கே வந்தவள் “வா விஸ்வா! ஏன் உட்கார்ந்து இருக்க...?”

“முரளி வரட்டும்!” என்றான் அவளிடமும்..

“நீங்க போய் முரளிண்ணாவை வரச் சொல்லுங்க!” என்று பத்து விடம் சொல்ல,

“ஹப்பாடா” என்று மனதிற்குள் நினைத்தவாறு நகர்ந்தான்... உடனே முரளியும் வந்து விட..

“நானும் முரளியும் ஒரு பத்து நிமிஷத்துல வந்துடறோம்! நீங்க எல்லோரும் சாப்பிடுங்க! வெயிட் பண்ணாதீங்க! யார் கேட்டாலும் சொல்லிடு!” என்று சொல்லி வெளியே நடக்க...

“இவன் என்னடா வா என்று கூடச் சொல்லாமல் இப்படிச் செல்கிறான்” என்று நினைத்த முரளி.. ரஞ்சனியிடம் அம்மாகிட்டயும் ஷாலினிகிட்டயும் சொல்லிடு.... என்ற படி அவன் பின்னோடு செல்ல,

“வர வர என்ன தான் பண்றான் இந்த விஷ்வா? இவன புரிஞ்சிக்கவே முடியலை!” என்று நொந்த படி ரஞ்சனி சென்றாள்.

முரளி செல்வதற்குள் காரை ஸ்டார்ட் செய்திருந்தான்... முரளி வேகமாக அருகில் அமர்ந்தவன் “என்னடா? எதுக்கு இப்போ வெளில போறோம்” என்று கேட்க... பதில் சொல்லாமல் வெளியே காரை செலுத்தியவன்.. சிறிது தூரம் சென்றது ஒரு ஓரமாக நிறுத்தினான்..

“முரளி, நான் வர்ஷினியை பொண்ணு கேட்கலாம்னு இருக்கேன்! நீ என்ன சொல்ற?” என்று சொல்ல...

“என்ன?” தன் காதுகள் சரியாகத் தான் கேட்டதா என்று ஸ்தம்பித்தான் முரளி, கூடவே தன் கன்னத்தில் வேறு தட்டி பார்த்துக் கொண்டான்.

“சீரியசா தான் கேட்கறேன்!” என்று ஈஸ்வர் சொல்ல...

“யாருக்குப் பொண்ணு கேட்கற” என்றான் அப்போதும் நம்பாமல்.

“எனக்குத் தான்டா!” என்று அப்போதும் பொறுமையாக பதில் சொன்னான்.

“ஏன்? எதுக்கு திடீர்னு இப்படிக் கேட்கற? அதுவும் அவ இப்போ தான் ப்ளஸ் டூ முடிச்சிருக்கா.. நீ அவளைக் கல்யாணம் பண்ண கேட்கறியா? என்னால நம்பவே முடியலை? ஏன்? எங்கப்பா அவளை பொண்ணுன்னு எல்லோர் கிட்டயும் சொல்லும் போதே.. உனக்குப் பிடிக்காது! உங்கப்பாக்கு தைரியம்டான்னு க்ரிடிசைஸ் பண்ணுவ.. நீயா ஏன்?” அத்தனை ஏன்கள் போட்டான்...

“அதுவா உங்க பாதி சொத்து அவளது இல்லையா, அதனால!” என்று ஈஸ்வர் அலட்சியம் போல சொல்லவும்.

“பாதி என்ன? முழுசாவே அவ பேர்ல சொத்து இருந்தாலும் நீ பண்ணிக்க மாட்டே! எனக்குத் தெரியும்! வேற என்ன விஷயம்?” என்றான் மிகவும் சீரியசாக... காதல் போலவும் முரளியால் நினைக்க முடியவில்லை.

“சொன்னாப் புரிஞ்சிக்குவியா!” என்றான்.

“என்ன? என்ன விஷயம்?” என்று பயந்து தான் முரளி கேட்டான் ஈஸ்வர் சொன்ன விதத்தில்..

“நீ இதை ஒரு அண்ணனா கேட்கக் கூடாது! என்னோட ஃபிரண்டா கேளு!” எனவும்,

“எதுக்குடா இவ்வளவு பில்ட் அப். இப்போவே பாரு, என் ஹார்ட் பீட் எகிறுது! சொல்லு!”

“அது, எனக்கு அவளைப் பிடிச்சிருக்கான்னு தெரியலை... ஆனா இந்த முறை அவளை உன் கல்யாணத்துல பார்த்த நாள்ல இருந்து, அவ மட்டும் தான் என் மனசுல ஓடிக்கிட்டே இருக்கா... என்னால மனசை அலைபாய விடாம எந்த வேலையும் செய்ய முடியலை. இவ்வளவு பிரச்சனை கழுத்து அளவுக்கு வந்த போதும் அவ தான் அதிகமா ஞாபகத்துல! என்னென்னவோ செஞ்சு பார்த்துட்டேன்! ஆனா நினைக்காம இருக்க முடியலை!” என்றான்.

“இது வர்ஷிக்குத் தெரியுமா?”

“இல்லை!” என்பது போலத் தலையசைத்தான்.

“ஆனா அப்பா ஏன் உன்கிட்டப் பேசவேயில்லை.. எல்லாமே என்னை வெச்சு தான் பேசினாங்க.. நான் யோசிச்சிக்கிட்டே இருந்தேன்.. அந்த பேப்பர் விஷயதுனாலயோன்னு.. அதை விட்டு ஏதாவது இருக்கா?”

“எனக்கும் வர்ஷினிக்கும் ஒரு சின்னப் பிரச்சனை... அது அவர்கிட்ட சொல்லியிருப்பா போல, அதனால அப்பா என்னைப் பார்க்காம இருந்திருக்கலாம்னு நினைக்கிறேன்..”

“என்ன?” என்றான் இன்னும் அதிர்ந்து... “நான் இங்கே தானேடா இருந்தேன்! ஏன் எனக்கு எதுவுமே தெரியலை...? என்ன பிரச்சனை..?”

“சொல்ற மாதிரி இருந்தா, சொல்ல மாட்டேனா?”

“சொல்லக் கூட முடியாத அளவுக்கு அப்படி என்ன பிரச்சனை...” என்றான் முரளி மனம் பதை பதைக்க...

ஈஸ்வர் அமைதியாக இருக்கவும்...

“பிரச்சனையை யார் பண்ணினா? நீயா.. வர்ஷியா...?

“நான் தான்!” என ஒப்புக் கொடுக்கவும்.. அப்படியே அமர்ந்து விட்டான் முரளி. என்ன இது? எப்படி இது? அதுவும் இவனே இப்படி சொல்கிறான் என்றால்?

முரளியும் எதுவும் பேச முயலவில்லை.. ஈஸ்வரா? என் நண்பனா? அதுவும் வர்ஷினியிடமா? என் தங்கை அவள்! எப்படி முடிந்தது! என்பது போல அதிர்ந்து பார்க்க..

அவன் பார்வையைப் பார்த்த ஈஸ்வர் தான் அவனைத் தேற்றும் படி ஆகிற்று... “அட என்னடா இப்படிப் பார்க்குற! பெரிய தப்பெல்லாம் ஒன்னுமில்லை.. வர்ஷினி ஒரு நல்ல பையனைக் கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு முழு தகுதியும் இருக்கு. அந்த நல்ல பையனா நான் ஏன் இருக்கக் கூடாதுன்றது தான் என் எண்ணம்!” என..

“டேய்! புரியற மாதிரி பேசுடா! எனக்கு ஏதாவதுன்னாலே உன் கிட்ட தான் வருவேன்! இப்போ நீ இப்படிச் சொன்னா நான் யார் கிட்டப் போவேன்!” என்று கலவரமாகக் கேட்க..

“சாரி!” என்று முரளியின் கையை பிடித்துக் கொண்டவன்... “இப்பவும் சொல்றேன் பெரிய தப்பெல்லாம் இல்லை... சின்னது தான்!”

முரளி மௌனத்தையே பதிலாக கொடுக்க...

“பேசுடா!”

“வர்ஷினி இதை ஏன் யார் கிட்டயும் சொல்லலை! உனக்கு பயந்தா?

“என்கிட்டே அவளுக்குப் பயமா?” என்றவன், “அதுக்கு தான் என் மண்டையை உடைச்சா” என்று சொல்ல,

என்ன அடித்தாளா? இன்னம் அதிர்ந்து விட்டான் முரளி..

“இதை எப்பவும் நீ வர்ஷினிக்கிட்ட தெரிஞ்ச மாதிரி காட்டிக்காத.. யாருக்கும் தெரியறதை அவ விரும்ப மாட்டா.. உனக்கு தெரியும்னு தெரிஞ்சா உன்கிட்ட இருந்து தள்ளிப் போக வாய்ப்பிருக்கு!” என்று சொல்ல..

“என்ன பேசுகிறான் இவன்?” என்று ஈஸ்வரை பார்த்து இருந்தான்.

“எனக்கு யாரைப் பத்தியும் கவலை இல்லை. ஆனா உன் சம்மதம் வேணும்.. உங்கப்பா என்ன நினைப்பார், வர்ஷினி என்ன நினைப்பா எனக்கு கவலையில்லை! உங்கப்பா கிட்ட வர்ஷினி

என்ன சொன்னான்னு தெரியலை ஒரு வாரமா அவர் என்னை அவாயிட் பண்றார். ஆனா தப்பா சொல்லியிருக்க வாய்ப்பில்லை... சொல்லியிருந்தா இந்நேரம் என்னை விட்டு வெச்சிருக்க மாட்டார்.. அது எனக்கு தெரியும்"

"வர்ஷினி! அவளுக்கு என்னை பிடிக்குமா பிடிக்காதான்னு யோசிக்கிற ஸ்டேஜ், அதுக்கு வெயிட் பண்ற ஸ்டேஜ், எல்லாம் தாண்டிட்டேன்.. ஒரு மனநல மருத்துவரை பார்க்கற ஸ்டேஜ்ல இருக்கேன்.."

"உனக்கு என்னைப் பத்தி தெரியாதது இல்லை... இருந்தாலும் ஒரு ப்ராமிஸ் கொடுக்கறேன்.. கல்யாணம் நடந்தாலும் நடக்கலைன்னாலும் இந்த ஜென்மத்திற்கு வர்ஷினி மட்டும் தான் எனக்கு.. அண்ட் கமலம்மா நிலைமை என்னைக்கு அவளுக்கு வராது!" என்றான்.

"என்ன பேச்சு இது?" என்று இன்னம் அதிர்ந்து முரளி பார்க்க..

"உன்னோட சம்மதம் எனக்கு வேணும்! அதுக்கு அப்புறம் நான் பார்த்துக்குவேன்!"

"என்ன பார்த்துக்குவ?"

"கல்யாணத்தை!"

"எப்படிப் பார்ப்ப?"

"உங்கப்பாக் கிட்ட பொண்ணு கேட்பேன், அவளை லவ் பண்றேன்னு சொல்லி"

"என்ன?" என்றான் நம்பியும் நம்பாமலும் "அந்த மாதிரி ஏன் என்கிட்டே சொல்லை?"

"உன்கிட்ட என்னாலப் பொய் சொல்ல முடியாது!"

"என்னடா சொல்ற? எனக்குத் தலையே பிச்சிக்குது! எனக்கு ஒன்னும் புரியலை?" என்று இரு கைகளாலும் தலையைப் பிடித்தான் முரளி.

"உனக்கு எதுவும் புரிய வேண்டாம்... நீ ஓகே சொல்லு! உங்கப்பாக் கிட்ட நான் பேசறேன்.. அப்புறம் வர்ஷினி கிட்ட வேணா கொஞ்சம் ஈஸ்வர் நல்லவன்னு சொல்லு!"

“நீயே அவ கிட்ட லவ் பண்றேன்னு சொல்ல வேண்டியது தானே!”

“நான் சொன்னா அவ நம்ப மாட்டா!”

“ஏன் நம்ப மாட்டா?”

“அதெல்லாம் எனக்கு சொல்லத் தெரியலை... இப்போதைக்கு உங்க வீட்ல உன்னைத் தவிர என்னை யாரும் நம்ப மாட்டங்க!”

“ஏன்? ரஞ்சனி கிட்ட சொல்ல வேண்டியதுதானே!”

“அவளா அவ சுத்தம், பத்து அதுக்கு மேல..”

“இப்போ நான் ஒகே சொல்லலைன்னா என்ன பண்ணுவ?”

“இனிமே தான் யோசிக்கணும்.. அவளை தூக்கிட்டு எங்கயாவது போயிடுவேன்!” என,

“டேய்! இதென்ன நாடா? காடா? இவ்வளவு நேரமா நீ என்னை வெச்சு காமெடி பண்ணுனியா?” என்றான் ஈஸ்வரின் பதிலில்.

“அய்ய! நான் சீரியஸா சொல்றேன்!”

“நான் அவளோட அண்ணன் டா!”

“பேச ஆரம்பிக்கும் போதே என்னோட ஃபிரண்டா மட்டும் கேளுன்னு சொல்லிட்டேன்” என்றான் இன்னம் சீரியசாக..

“ஒரு ஃபிரண்டா எனக்கு ரொம்ப பயமா இருக்கு. ஒரு அண்ணனா ஈஸ்வர் மாதிரி ஒரு மாப்பிள்ளை வரும் போது கண்ணை மூடிகிட்டு என் தங்கையை கல்யாணம் செஞ்சு கொடுப்பேன். ஆனா இப்போ நீ பேசறதை கேட்டா பயமா இருக்கு, என்ன சொல்லன்னு தெரியலை....?”

“யோசி!” என்ற ஈஸ்வர்.. காரை விட்டு இறங்கி..

“நான் இப்படியே வீட்டுக்குப் போறேன்.. நீ கார் எடுத்துட்டுப் போ.. பாட்டியும் பெரியம்மாவும் என்னோட வந்தாங்க, அவங்களை இதுல அனுப்பி விட்டுடு!” என்று சொல்லி ரோடில் நடக்க ஆரம்பிக்க..

ஈஸ்வரின் இந்த பரிமாணத்தில் ஸ்தம்பித்து அமர்ந்து இருந்தான் முரளி.

ஈஸ்வரை பற்றி முரளிக்கு தெரியாதது என்ன இருக்கிறது. அவனின்  வகுப்பு தோழிகள் மட்டுமல்ல.. கல்லூரியில் பல பெண்களும் தங்களுக்கு யாராவது தொந்தரவு கொடுத்தால், ஈஸ்வர் என்றோ சர் என்றோ அவனிடம் தான் சென்று நிற்பர்.

இப்படி ஒரு முகம்!

பெண்களை அப்படி ஒன்றும் பார்க்க கூட செய்யாமல் கண்களை மூடிக் கொண்டு திரிபவர்கள் அல்ல இருவரும். ஈஸ்வரும் முரளியும் சேர்ந்தே எத்தனைப் பெண்களை கிண்டல் செய்திருப்பர்.. சூப்பர் பிகர் மச்சி என்று சொல்லியிருப்பர்..  பலப் பல.. ஏன் அங்கங்களை கூட வர்ணித்திருப்பர்.

இப்படியும் ஒரு முகம்!

எல்லாம் முரளி அறிந்ததே!

முரளி அறியாத ஒன்றே ஒன்று ஐஸ்வர்யா!!!

ஈஸ்வர் எனக்குப் பிடித்திருக்கிறதா தெரியவில்லை? காதலிக்கிறேன் என்று பொய் சொல்ல முடியவில்லை! இப்படி என்ன சொன்னாலும் முரளிக்கு இது ஈஸ்வரின் காதலின் பரிமாணமாகத் தான் தோன்றியது.

அவனே இன்னும் உணரவில்லை என்று தான் தோன்றியது. ஏதோ ஒரு நல்லதனம் இல்லாவிட்டால் எப்படி என்னிடம் இப்படி அவனால் பேசமுடியும்?

எந்த பெண்ணைப் பற்றி பேசும் போதும் இந்த தீவிரம் இருந்ததில்லை! இது நிச்சயம் ஒரு அதீத காதலாகத் தான் முரளிக்கு தோன்றியது.

**காதலில் தீவிரவாதம் உண்டு!  தீவிரவாதியும் உண்டு!**

## அத்தியாயம் இருபத்தி ஒன்பது :

**சிலரின் நட்பு விதிமுறைகளுக்கு உட்பட்டாலும் வரைமுறைகளுக்கு அப்பாற்ப்பட்டது!**

நடந்து செல்லும் ஈஸ்வரை விழி எடுக்காமல் பார்த்திருந்தான் முரளி.. இன்னம் ஈஸ்வர் பேசிச் சென்றதை அவனால் நம்ப முடியவில்லை.

“உன் தங்கையைப் பற்றி பேசிச் செல்கின்றான். உனக்கு கோபம் வரவில்லையா?” என்று மனது ஒரு புறம் கேட்டது. பேசியது ஈஸ்வராகிப் போக, நிஜமாய் அவனுக்குக் கோபம் வரவில்லை, சூழலை ஆராய முற்பட்டான்.

ஈஸ்வர் தவறு செய்ததாக ஒத்துக் கொள்ளாமல் ஒத்துக் கொண்ட போதும் மனம் நம்ப மறுத்தது. நம்ப முயன்றும் கோபம் வரவில்லை.

எல்லாம் ஒதுக்கி பார்த்தால் ஈஸ்வர் போல ஒருவன் வர்ஷினியின் கணவனாய் வருவதில் அவனுக்கு மிகுந்த சந்தோஷமே. மாலை வரை யோசிப்போம் என்று யோசித்த படி வீடு சென்றான்.

அங்கே எல்லோரும் ஈஸ்வர் எங்கே என்று கேட்க.. “ஏதோ அவசர வேலைன்னு போயிட்டான்” என்று அனைவரிடமும் ஒரே மாதிரி சொன்னான்.

“என்கிட்டே சொல்லவேயில்லை” என்ற ரஞ்சனியின் முகத்தில் வருத்தம் அப்பட்டமாய் தெரிந்தது.

“ஹப்பா! போய் விட்டானா!” என்று தான் வர்ஷினிக்கு தோன்றியது. ஈஸ்வர் இருக்கும் போது அவளின் வீட்டிலேயே அவளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை, மனது அலைபாய்ந்து கொண்டிருந்தது.

ரஞ்சனியின் முகத்தைப் பார்த்த எல்லோருக்குமே பாவமாய் இருந்தது.. அப்போதும் விடாமல் ஈஸ்வரின் செல் போனிற்கு அழைக்க.. அதன் ஒலி அங்கேயே கேட்டது.. ஆம்! போன் அவன் அமர்ந்த இடத்திலேயே விட்டு சென்றிருந்தான்.

“ஃபோன் கூட எடுக்காம எங்க அவசரமா போனான்!” என்று ரஞ்சனி அதற்கும் கவலைப் பட..

“அவசர வேலைன்னு போனான்.. சொல்லிட்டுத் தான் போனான் ஒன்னும் கவலையில்லை” என்று பலமுறை முரளி சொன்ன பிறகே மற்றவர்களை கவனித்தாள்.

எல்லோரும் சிறிது நேரத்தில் விடை பெற.. நமசிவாயதிடம் மீண்டும் ஒரு முறை ராஜாராம் “சொத்து மாத்தி எழுத வேண்டாம்!” என்று சொல்லி அனுப்பினார்.

எல்லோரும் சென்ற பிறகு ராஜாராம் உறங்க செல்ல, அவரவர் அவரவரின் வேலையைப பார்க்க... ஈஸ்வரின் செல் அங்கு இருந்ததை மறந்து விட்டனர்.

மறக்காமல் அதைப் பார்த்திருந்தது ஈஸ்வரை கொள்ளை கொண்ட நீல கண்கள் தாம். ரஞ்சனியிடமோ முரளியிடமோ சொல்வோமா என்று நினைத்தவள் திரும்ப மனதை மாற்றிக் கொண்டாள். அதில் என்ன இருக்கிறது என்று பார்ப்போமே என்ற ஒரு ஆர்வம்..

அதை எடுத்துக் கொண்டு படியேறி அவளின் ரூமில் நுழைந்தாள். அதை உயிர்பிக்க.. அது பேட்டர்ன் லாக் காட்டியது.. என்ன முயன்றும் அதை பிரேக் செய்ய முடியவில்லை.

“என்னாலேயே இதுல ஒன்னும் பார்க்க முடியலையே, இதை உடைச்சிடலாமா.. கொஞ்சம் எனக்கு திருப்தியா இருக்குமா?” என்று அவளின் மனதிடம் அவள் பேசிக் கொண்டிருந்த சமயம்.

அது ஒலிக்க.. அதில் ஆஃபிஸ் என்று வர...

எடுப்போமா, கட் செய்வோமா என்று நினைத்தவள், ஒரு வேலை ஈஸ்வர் அவனின் ஆபிஸ் சென்று போன் எங்கே என்றுப் பார்க்க செய்வானோ என்று தோன்ற எடுத்தாள்.

எடுத்து ஹல்லோ சொல்லாமல் எதிரில் இருப்பவர் பேச காத்திருக்க, அவள் நினைத்தது போல ஈஸ்வர், “ஹல்லோ, யார் பேசறீங்க?” என்ற ஈஸ்வரின் குரல் கேட்க..

“நீதாண்டா பேசற!” என்று சொல்ல மனதில் ஒரு ஆர்வம் உந்தினாலும் அமைதியாக இருந்தாள்.

“ஹல்லோ.. யார் கிட்ட இருக்கு போன்.. நான் ஈஸ்வர்! நீங்க பேசறது என்னோட போன்!” என,

“நான் எங்கடா பேசினேன்?” என்று அதற்கும் அமைதியாக தான் இருந்தாள்.

ஈஸ்வருக்கு நன்கு ஞாபகம் இருந்தது, அவன் முரளி வீட்டில் அமர்ந்திருந்த சோஃபாவில் தான் அருகில் தான் வைத்தான். அதனால் தான் யார் எடுத்தார்களோ தெரியவில்லை என பொறுமையாகப் பேசிக் கொண்டு இருந்தான்.

மனதில் ஒரு சந்தேகம் உதிக்க.. போனை கட் செய்தவன்.. வர்ஷினியின் ஃபோனிற்கு அழைத்தான்.

முரளியை சமீபமாக பார்த்த போது அவனின் ஃபோனில் இருந்து சுட்டது. பல முறை வர்ஷினியிடம் பேச அந்த எண்ணை அழுத்தியிருக்கிறான். ஆனால் ஒரு முறை கூட ரிங் போக விட்டதில்லை. அதனால் அவனின் போன் இல்லாமலேயே அந்த எண் மனனம்.

வர்ஷினி அவளின் செல் ஒலிக்க.. புதிய நம்பர்.. அதுவும் லேண்ட் லைன் நம்பர்.

யார் என்று தெரியாமல் எடுத்து ஹல்லோவும் சொல்லிவிட... அது வர்ஷினியின் குரல் என்று உணர்ந்து, “போன் உன் கிட்ட இருக்கா?” என்ற ஈஸ்வரின் ஆழ்ந்த குரல்...

வர்ஷினி அமைதியானவள்.. கண்டு பிடித்து விட்டானே எப்படி? என்று அமைதியாகவே இருந்தாள். எதற்கு அவனின் போன் என்று தெரிந்து எடுக்க வேண்டும். தெரிந்து தெரிந்து மாட்டிக் கொள்கிறேனே. என்னை.. என்று அவளுக்கு அவளே திட்டிக் கொண்டாள்.

“அதை உன்னால ஓபன் பண்ண முடியாது.. லாக் இருக்கு.. பேட்டர்ன் வேணுமா?” என,

அப்போதும் அமைதியாக இருக்க..

“நீ எவ்வளவு அழகா இருக்கன்னு நீ பார்க்க வேண்டாமா?” என்றான் ஆழ்ந்த குரலில். அந்தக் குரலில் அதுவரை இருந்த தைரியம் ஓடி என்ன வரப் போகிறதோ என்ற பயம் வந்தது.

“என்ன? என்ன சொல்றீங்க?” என்றாள் மனதில் ஒரு கலக்கம் தோன்ற..

“வந்ததில் இருந்து தள்ளி நில்! கண்ணில் படாதே! என்று அவ்வளவு சொல்லியும் இழுத்து விட்டுக் கொண்டாயா?” என்று மனம் சாட ஆரம்பித்தது.

“என் ஃபோன்ல நீ இருக்க! அதைச் சொன்னேன்!” என,

“லாக் பேட்டர்ன் சொல்லுங்க!” என்றாள்..

அவன் சொல்லச் சொல்ல செய்தாள்.. ஓபன் ஆனதும் அதில் தெரிந்தது வர்ஷினி.. பேக் கிரௌண்ட் இல்லை. அதனால் எங்கே எடுத்தான் என்று தெரியவில்லை.

அவள் ஒரு ஸ்கர்ட் டாப்ஸில் நின்றிருந்தாள். பின் அவளின் இடை வரை தெரிந்தாள். பின் அவளின் முகம் மட்டும். பின் அவளின் கண்கள்... என மாறி மாறி வந்து கொண்டே இருந்தது.

பார்க்க பார்க்க முதலில் ஒரு கலக்கம், பின்பு ஒரு பயம், பின்பு என்ன செய்து கொண்டிருக்கிறான் இவன் என்ற எரிச்சல், மெலிதாக ஒரு கோபம், அது வளர்ந்து அவனை அடித்து துவைக்கும் ஆவேசம், என மாற,

எதிரில் ஈஸ்வர் இருந்திருந்தால் ரசித்து பார்த்திருப்பான். வர்ஷினியின் முகம் அப்படி ஒரு உணர்வுகளை மாற்றி மாற்றி காட்டியது.

“என்ன இது?” என்று வர்ஷினி கேட்ட போது முற்றிலும் நிதானத்திற்கு வந்திருந்தாள்.

“நீ தான் வர்ஷினி!”

“டெய்லி நான் என்னை கண்ணாடில பார்ப்பேன். அது நான் தான்னு தெரியும் நீங்க கண்டு பிடிச்சு சொல்ல வேண்டிய அவசியமில்லை..” என்று பட பட வென பொறியவும்..

“அச்சோ! நான் டிஸ்டன்ஸ்ல இருக்கேனே. உன்னை பார்க்க முடியலையே. இப்போ உன் முகம் எப்படி இருக்குன்னு ரசிக்க முடியலையே!” என்றான்.

“ஹேய், நீ என்ன சைக்கோவா” என்று கேட்ட வர்ஷினியின் குரலில் அவ்வளவு உஷ்ணம்.

“நேர்ல பார்த்துக் கண்டுபிடி!”

“என்ன நேர்ல பார்த்து.. எதைக் கண்டு பிடிக்க?”

“அதான் நான் பைய்தியம்ன்றதை.. ஆனா அது உன் மேல மட்டும் தான்றதை”

“ஈஸ்வர், stay on your limits”

“No baby, I don’t want any limits with you. Just want to cross all” என்று ஈஸ்வர் சொல்லச் சொல்ல வர்ஷினியின் மனது வேகமாக துடிக்க ஆரம்பித்தது.

என்ன பேசுகிறான் இவன். அதுவும் அவன் சொன்ன துவனி, அந்த வார்த்தைகளின் அழுத்தம், உச்சரிப்பு தன்மை,

“நிஜமாவே பைய்தியமாயிட்டீங்க!” என்று சீறினாள்.

“எஸ்! ஆமாம்! அதைத் தானே நானும் சொல்றேன். நான் எப்போ இல்லைன்னு சொன்னேன்”

“சே, சே, என்ன மனுஷன் நீங்க?”

“அதை தான் என்னால இன்னும் கண்டுபிடிக்க முடியலை. நீ சொல்லேன். நானே ரொம்ப யோசிச்சிட்டு இருக்கேன்” என்று அவன் சொல்லவும்.

“எரிச்சலை கிளப்பாத ஃபோனை வைடா” என்றாள் மரியாதை எல்லாம் கைவிட்டு.

ஆனால் ஈஸ்வர் அதைக் கவனத்தில் கொள்ள வில்லை. வர்ஷினி ஃபோனை வைத்து விடக் கூடாதே என்ற யோசனையோடு, “இரு, இரு, வெச்சிடாதா!” என்றான் அவசரமாக.

“என்ன?” என்று கேட்டவளின் குரலில் ஒரு ஆளுமை தானாக ஒட்டி இருந்தது.

“எனக்கு உன்கிட்ட ஒன்னு கேட்கணும்” என்றான் ஈஸ்வர் மிகவும் சீரியசாக.

“என்ன?” என்றாள் எரிச்சல் மறையாத குரலில்.

“அதை நேர்ல தான் கேட்கணும்!”

“நேர்லயா? உன்னையா? முடியாது!”

“ஏன் பயமா இருக்கா?”

“எனக்கு என்ன பயம்.. ஏன் மண்டையை உடைச்சது மறந்து போச்சா!”

“அந்த தைரியம் இருந்தா நேர்ல பாரு! என்ன பயம்?” என்றான் அலட்சியமாக.

“அந்தக் குரலே அவளை உசுப்பியது. என்ன தைரியம்? தப்பும் செஞ்சிட்டு எவ்வளவு அலட்சியமா பேசற நீ! தப்பு செஞ்ச உனக்கே இவ்வளவு தைரியம் இருக்கும் போது எனக்கு என்ன பயம். எங்க பார்க்கலாம்?” என்றாள்.

“நீயே சொல்லு! எனக்கு உன்னை பார்க்கணும் அவ்வளவு தான். அது எங்கேன்னாலும் சரி!” என்றான்.

“நான் இவ்வளவு டென்ஷனாக இருக்க, எவ்வளவு கூலாகப் பேசுகிறான்” என்று தோன்ற, அவனை எரிச்சல் செய்யும் பொருட்டு,

“எதுக்கு? செஞ்ச தப்புக்கு கால்ல விழுந்து மன்னிப்பு கேட்க போறியா?”

“கால்ல தானே விழுந்துட்டாப் போச்சு!” என்றான் அதற்கும் ஈசியாக,

கோபத்தில் ஃபோனை வைத்தே விட்டாள்.

நன்றாகத் தானே இருந்தான், ஏன் இப்படி ஆகிவிட்டான்? மனதில் பெரும் குழப்பம், சஞ்சலம், எதற்கு நீ அவனைத் தனியாக பார்க்க வேண்டும் ஒரு வேலை மீண்டும் சேர்ந்து போட்டோ எடுத்து சுத்த விடுவானோ?

அவனை திரும்பவும் கைபேசியில் அழைத்தாள்..

“ஏய், எதுக்கு வரச் சொல்ற?” என்றாள் எடுத்தவுடனே,

அப்போது தான் அவள் கொடுக்கும் மரியாதை உரைக்க, “சூப்பர் மரியாதைடா உனக்கு. ஆனா நீ பண்ணின வேலைக்கு உன்கிட்ட பேசறதே அதிகம்” என்று நினைத்தவன்..

“வா சொல்றேன்!”

“திரும்ப ஃபோட்டோ எடுத்து சுத்த விடுவியோ?”

“சே! சே! பேப்பர்ல ஃபோட்டோ வந்ததுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமுமில்லை. எது நடந்தாலும் அது நமக்குள்ள மட்டும் தான்!”

“நமக்குள்ள என்ன இருக்கு?” என்று அவள் கேட்ட போது அதில் கலக்கம் எட்டிப் பார்த்தது..

பயப்படுத்துகிறேனோ அவளை என்று தோன்ற.. “ஹேய், நம்பு! அன்னைக்கு நமக்குள்ள நடந்தது எதுவும் பிளான் செஞ்சு செய்யலை.. I regret completely for that.. அது என்னை மீறி நடந்த ஒன்னு.. இனிமே அப்படி நடக்காம இருக்க முழு முயற்சி செய்வேன். நீ சொன்ன மாதிரி உன் கால்ல விழுந்து மன்னிப்பு கேட்கன்னு நினைச்சிக்கோ! வா!” என்றான் தணிவாக..

“இல்லையில்லை! எனக்கு உன்னை பார்த்து பயம் தான்.... அப்படியே இருக்கட்டும்! எனக்கு உன்னைப் பார்க்க வேண்டாம்...” என்று ஃபோனை வைத்து விட்டாள்.

வர்ஷினி அப்படி வைத்து விடவும் அவளைப் பார்க்க வேண்டும் என்ற உந்துதல் எரிமலையாக அவனுள் வெடித்து சிதறியது. அதன் துகள்கள் அவனை எரிக்கவும் ஆரம்பித்தது. என்னவோ பேச்சிலேயே வர்ஷினி பயந்து போயிருக்கிறாள் என்பது போல தோன்ற மேலும் பயப்படுத்த விரும்பவில்லை.

தன்னை இப்போதைக்கு மறக்க நினைத்தவன் நேராக ஹோட்டலின் பாருக்கு சென்றான்.வெகு நாட்களுக்குப் பிறகு.. வர்ஷினியைப் பார்த்த அந்த ஒன்றிரண்டு நாளில் குடித்தது தான். பிறகு பலமுறை நினைத்திருக்கிறான். ஆனால் குடிக்கவில்லை. ஏன் அன்று அவளோடு தவறாக நடந்த அன்று கூடக் குடிக்க சென்று குடிக்காமல் திரும்பினானே. குடித்திருந்தால் அந்த தவறு நடக்காமல் தவிர்த்து இருக்கலாமோ?.

வர்ஷினி அவனிடம் தொலைபேசியை கட் செய்தவள்... என்ன என்ன அவனின் போனில் இருக்கிறது என்று பார்க்க... சர்வம் சங்கீத வர்ஷினி மயம் தான். ஆம் எல்லாம் அவளின் போடோக்கள். முரளி அண்ணன் திருமணத்தில் அவள் அழகு பதுமையாய் இருந்தது பல.. அதோடு இப்போது பத்மனாபனின் வரவேற்பில் இருந்தது..

எதுவும் அவன் எடுத்தது மாதிரி தெரியவில்லை. எல்லாம் அவர்களின் திருமண கலக்ஷனில் இருந்து எடுத்து அவனின் மொபைலில் ஏற்றி இருக்கிறான் என்று புரிந்தது.

பலதும் அவளின் லாங் ஷாட்டில் ஆரம்பித்து, அப்படியே மெதுவாக குறைந்து வந்து முகம் கண்கள் என்று தான் நின்றது.

அந்த மொபைலில் இருந்த அவளுடைய கண்களே, இப்போது பார்க்கும் போது அவளைப் பார்ப்பது போல இருந்தது.. அதுவே சொன்னது வர்ஷினி தன்னைப் பார்ப்பது போல ஈஸ்வர் வைத்திருக்கிறான் என்று.

கலங்கி தான் விட்டாள், இதில் இருந்து எப்படி விடுபடுவது என்று தெரியவில்லை. ஈஸ்வர் சொன்ன வார்த்தைகள் வேறு காதினில் ரீங்காரமிட்டது. என்னை மீறி நடந்த ஒன்று அது என்று.

அங்கேயே இருந்தால் திரும்ப திரும்ப அதையே நினைப்போம் என்று தோன்ற.. வேறு என்ன அதில் இருக்கிறது என்று வேகமாக ஆராய்ந்தாள்.. பின்பு அந்த செல்லில் இருந்த தன்னுடைய புகைப் படங்களை எல்லாம் டெலிட் செய்து கீழே இறங்கி எடுத்த இடத்திலேயே வைத்து விட்டாள், யாரோ பார்த்து என்னவோ செய்து கொள்ளட்டும் என்று..

வைத்து திரும்பியவள்.. “ஐயோ, யாரவது எடுக்கும் பொழுது அவன் அழைத்து, நான் என்று நினைத்து ஈஸ்வர் ஏதாவது உளறி வைத்தால்” என்று தோன்ற.. திரும்பவும் எடுத்து தானே வைத்துக் கொண்டாள். அதனை ஆஃப் செய்து கொண்டு போய் தனது அலமாரியில் வைத்து பூட்டியவள்..

திரும்ப கீழே இறங்கி அப்பாவின் ரூமிற்கு வர.. அங்கே ராஜாராமும் உறக்கத்தில் கமலம்மாவும் உறக்கத்தில்.... அங்கே இருந்த சோஃபாவில் அமர்ந்து கொண்டாள்.

யாரும் இருந்தாலும் தனியாய் போய் அமர்ந்து கொள்பவள் இன்று அவர்கள் உறங்கும் பொழுதும் வந்து அவர்களுடன் அமர்ந்து கொண்டாள்.

முரளி ஒரு புறம் ஈஸ்வரின் பேச்சையே அசை போட்டுக் கொண்டிருந்தவன்.. “அப்பா எழுந்ததும் அப்பாவிடம் இப்படி ஈஸ்வர் திருமணம் செய்து கொள்ள விருப்பப்படுகிறான். என்னிடம் கேட்டான்! என்ன சொல்லலாம்?” என்பது மாதிரி பேசலாம் என்று நினைத்து அதையே ஷாலினியிடம் சொல்ல..

“என்ன ஈஸ்வர் அண்ணா வர்ஷினியையா?” என்று ஆச்சர்யமாக அவளும் கேட்டாள். அவ்வளவு மட்டுமே மனைவியிடம் கூட முரளி சொன்னான். என்றும் நண்பனை யாரிடத்திலும் அவனால் விட்டுக் கொடுக்க முடியாது. அது அவனில் பாதியானவளிடம் கூட..

“வர்ஷினி, சின்ன பொண்ணுன்னு யோசிக்கறேன்!” என்று கூடவே சொல்ல,

“எங்க ஊர் பக்கம் எல்லாம் இந்த வயசுல தான் கல்யாணம் பண்ணுவாங்க.. எனக்கே லேட்ன்னு திட்டுவாங்க... எங்க கிட்ட எல்லாம் சம்மதம் கூடக் கேட்க மாட்டாங்க.. எங்க அப்பாரு கூட என்ன செஞ்சாங்க? இதுதான்மா மாப்பிள்ளைன்னு காட்டினாங்க, அவ்வளவு தான்! கழுத்தை நீட்டிடேன்!” என்ற கூடவே சொல்ல..

“அதுல உனக்கு வருத்தமோ?”

“அப்படி சொன்னேனா.. நடந்ததை சொன்னேன்..!” என்று சட்டென்று ஷாலினி முறுக்கிக் கொள்ள..

“ஷாலு, இதுக்கு எதுக்கு கோபம்?” என்று அவளைக் கொஞ்ச ஆரம்பித்ததில் எல்லாம் பின்னுக்குச் செல்ல..

ஒருத்தி தலையை பிடித்து அமர்ந்து இருந்தாள். யோசனைகள்! யோசனைகள்! அவனைப் பார்த்த நாளிலிருந்து அசை போட ஆரம்பித்தாள். அவனின் கை பேசியில் இருந்த அவளின் புகைப் படங்கள், என்ன மீறி நடந்த ஒன்று என்ற வார்த்தைகள்...

எப்படி அவனைத் தவிர்ப்பது.. எப்படி அவனிடம் இருந்து விடு படுவது. ஸ்திரீலோலன் போலவும் தெரியவில்லை. யாரிடமும் சொல்லவும் இஷ்டமில்லை. அப்பாவிடம் காட்டிக் கொடுக்கும் எண்ணமும் வரவில்லை.

யோசிக்க யோசிக்க புலப்பட்டது ஒன்று தான். “அவனிடம் பணிந்து போய் விடு, பயந்து போய் விடு..இந்த விஷயத்தில் புத்திசாலித்தனமோ தைரியமோ தேவையில்லை. என்னை விட்டு விடு என்று அவனை மிரட்டியோ? என்ன செய்து விடுவாய் உன்னால் ஆனதை பார்த்துக் கொள் என்ற பேச்சோ, சரி வராது!!!”

“உனக்கு அவனிடம் இருந்து வெளியில் வரவேண்டும் அவ்வளவே! அது மட்டுமே!”

“என்னை விட்டு விடு, எனக்கு நீ பிடித்த மில்லை என்ற கெஞ்சல் தான் கை கொடுக்கும்.. அதையே செய்! உனக்கு பிடிக்காவிட்டாலும் செய்!” என்று மனதை தயார் படுத்திக் கொண்டிருந்தாள்.

அங்கே ஈஸ்வர் முன் வைத்த க்ளாசை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான், குடிக்கக் கூட மனதில்லாமல்.. வர்ஷினியைப்

பார்த்தே ஆக வேண்டும் என்ற வெறி மனதில் அடங்காமல் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தது.

**காதல்! விதிமுறைகளுக்கும் அப்பாற்பட்டது!! வரைமுறைகளுக்கும் அப்பாற்பட்டது!!!**

## அத்தியாயம் முப்பது :

**சில கணக்குகளுக்கு விடை வரவே வராது, அதன் சூத்திரம் அறியும் வரை!!! வாழ்க்கையும் சில சமயங்களில் அப்படித்தான்!!!**

வர்ஷினியும் அப்படித்தான் ஈஸ்வரை ஆதியும் அந்தமுமாக ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

கமலம்மா தான் முதலில் எழுந்தவர்.. வர்ஷினியைப் பார்த்தும் “என்னடாம்மா? என்ன இங்க இருக்க?” என்று பதட்டமாகக் கேட்க,

“ஒன்னுமில்லைம்மா! சும்மா இங்க இருக்கணும் தோணினது!”

“இரு வர்ஷினி, இரு, மத்தபடி ஒன்னும் பிரச்சனையில்லையே! முகமெல்லாம் சோர்ந்து இருக்கு!”

“அதெல்லாம் ஒன்னுமில்லைம்மா!” என்று அவர்கள் பேசிக் கொண்டு இருக்கும் போதே.. ராஜாராம் விழிக்க..

“என்ன பாப்பா, இங்க இருக்கீங்க?” என்றார் அவருமே,

ஏனென்றால் எப்பொழுதும் அவர்கள் இருவரும் இருக்கச் சொன்னால் கூட இருக்க மாட்டாள், “நான் போறேன் பா” என்று விடுவாள்..

“ஐயோ! என்னப்பா மாத்தி மாத்தி இதையேக் கேட்கறீங்க? தனியா இருக்க ஒரு மாதிரி இருந்தது, அதான் இங்க வந்தேன், போகட்டுமா!” என,

“வேண்டாம்! வேண்டாம்! நீ இரு,” என்றவர், “கமலா, பாப்பா முகமே வாடி இருக்கு, போ! போய் குடிக்க எதாவது கொண்டு வா” என அவர் செல்லவும்,

“என்ன பாப்பா, ஏதாவது பிரச்சனையா?” என்றார் தணிவாக,

“இல்லைப்பா?” என்றாள்.

“நிச்சயமா, இல்லை தானே!”

“இல்லை! இல்லை! இல்லவே இல்லை!” என ஸ்திரமாக சொல்ல.. அப்போது தான் சற்று சமன் பட்டார்.

“நானே உங்க எல்லார் கிட்டயும் பேசணும்னு இருந்தேன், சொத்துக்களை பத்தி”

“நான் வரும் போது நீங்களும் ஈஸ்வரும் என்ன பேசிட்டு இருந்தீங்க!”

“அதுவா நம்ம பணம் கொடுத்தோம் இல்லையா? அதுக்கு பதிலா ஈஸ்வர் ஃபைனான்ஸ் பங்கை ரஞ்சனிக்கு எழுதிக் கொடுக்கறோம்னு சொன்னான், நான் வேண்டாம் சொன்னேன்!”

“ஏன் வேண்டாம் சொன்னீங்க?”

“அவங்க திரும்பக் கொடுக்கணும்னே நான் எதிர் பார்க்கலை.. உதவி தான் செஞ்சோம், முரளி ஃபிரண்ட்ன்னு. இப்போ உங்க அண்ணியோட அப்பா வீடும், பணம் மெதுவா குடுக்கட்டும்!”

“அப்போ பணம் வேண்டாம் சொல்றீங்களா?”

“குடுத்துடுவாங்க எப்படியும்! எனக்குத் தெரியும்! அதெல்லாம் ஒரு வாய் வார்த்தைக்குச் சொல்றது.. எவ்வளவு பேரோட தொழில் பண்ணியிருக்கேன். எனக்குத் தெரியாதா, ஈஸ்வர்காக மட்டும் தான் கொடுத்தேன்! அவன் குடுத்துடுவான்!”

“சரி! ஆனா இப்போ பங்கு குடுத்தா, ஏன் வேண்டாம் சொல்றீங்க?”

“ஏற்கனவே இஷ்டமில்லாம இந்தக் கல்யாணம் நடந்து இருக்கு! இப்போ எல்லாம் சரியா இருக்குன்னாலும் இப்போ சொத்தையும் வாங்கினா அது நல்லா இல்லை இல்லையா? அதுவும் ஜகன்கும் ரஞ்சனிக்கும் சரிசமமா பங்கு.. இது முதல்லயே ஈஸ்வர் சொன்னது தான்!”

“நடுவுல தான் நீ மாத்தி மாத்தி பேசினியா? கொடுக்கவா? வேண்டாமா? யோசனை! அப்புறம் நீ ஒன்னும் இல்லை சொன்ன.. சரின்னு தான் கொடுத்தேன்”

“கொடுத்த முடிச்ச பிறகு எப்படியும் மறுபடியும் இதைப்பத்தி பேசுவாங்க தெரியும்.. யோசிச்சேன், ஈஸ்வர் மட்டும் ஏன் கடனுக்காக சொத்தை இழக்கணும்.. எனக்கும் அதே எண்ணம் தான்.. அதுவுமில்லாம முரளி ஒத்துக்கவே கூடாதுன்னு என்கிட்டே சொல்லியிருக்கான்” என்றார்.

“என்னமா ஈஸ்வர்க்கு பார்த்து பார்த்து பண்றாங்கடா” என்ற தோன்ற ஒரு கசந்த முறுவல் வர்ஷினியின் முகத்தில்.

அதைப் பார்த்ததும் “என்ன பாப்பா?” என்று மீண்டும் அப்பாக் கேட்க..

“பணம் குடுக்கறதே பெரிய விஷயம்! இதுல ஈஸ்வர்காக எவ்வளவு கன்சிடர் பண்றீங்க”

“அப்போ வேண்டாம் சொல்றியா?”

“இல்லைப்பா! நான் அப்படி சொல்லலை! எல்லோரும் அவருக்கு எவ்வளவு பார்க்கறீங்க சொன்னேன்.. ஆனா ஏன் வேண்டாம் சொல்றீங்க.. அது நீங்க சொல்லக் கூடாது” என்றாள் பளிச்சென்று.

“என்ன பேசுகிறாள்?” என்று ராஜாராம் பார்க்க,

“அப்பா! அவங்க, அவங்க பொண்ணுக்குக் குடுக்கறாங்க. உங்களுக்கு இல்லை! அதை நீங்க ஏன் வேண்டாம்னு சொல்லணும்! சொல்லக் கூடாது.. வேணும்னா அதை ரஞ்சனி அண்ணி சொல்லட்டும்! என்னவோ பண்ணட்டும்? நீங்க சொல்லாதீங்க. ரஞ்சனி அண்ணிக்கு வர்ற சொத்தை நீங்க ஏன் வேண்டாம் சொல்றீங்க!” என்றாள்.

இதில் இப்படி ஒரு கோணமா என்று யோசைனையாகப் பார்த்தவர்.. “ஆனா ரஞ்சனியும் அப்படி தானேம்மா சொன்னா!”

“சொல்லியிருக்கலாம் பா! அது அவங்களே சொல்லிக்கட்டும்! நீங்க சொல்லாதீங்க! நாளைக்கு என்ன நடக்கும் யாருக்கும் தெரியாது! உங்களுக்குக் கொடுத்தா நீங்க வேண்டாம் சொல்லலாம். அவங்களுக்குக் குடுக்கும் போது நீங்க சொல்லக் கூடாது!” என்றாள் கட்டளை போலவே..

“நாளைக்கு இவரால நமக்கு சொத்து வரலைன்னு அண்ணி நினைச்சிடக் கூடாது இல்லையா.. ப்ளீஸ், தப்பா எடுக்காதீங்க! நமக்கு நம்ம எல்லைகள் தெரியணும்பா.. எனக்குச் சொல்லுங்க,

முரளிண்ணாக்கு பத்துண்ணாக்கு சொல்லுங்க.. நாங்களே கேட்ப்போமா இல்லையா சொல்ல முடியாது!" என்ற போது கமலம்மா வந்து விட...

பேச்சை நிறுத்தி விட்டாள்.

அப்போது சரியாக முரளி அப்பாவைப் பார்க்க வந்தவன்..

அங்கே வர்ஷினி இருப்பதைப் பார்த்து.. "வர்ஷி இங்க என்ன பண்ற?" என்று கேட்க..

"ஷாலினி அண்ணி, பத்து அண்ணா, ரஞ்சனி அண்ணி, தாத்தா, எல்லோரையும் கூப்பிட்டு விடுங்க" என்று வர்ஷினி சீரியசாகச் சொல்ல,

"எதுக்கு?" என்றான் முரளி.

"பின்ன, எல்லோரும் இந்தக் கேள்வியையே கேட்கறீங்க! எல்லோருக்கும் ஒரே பதிலா சொல்லிடறேன்!" என்றால் சலிப்பாக.

"ஏன் வர்ஷி, அப்செட்டா பேசற?" என்று கேட்க,

"இதுவும் எல்லோரும் கேட்கறீங்க?" என்று சிணுங்கினாள்.

"அப்படி தெரிஞ்சா, அப்படித் தான் கேட்போம்!" என்று முரளி சொல்லும் போதே பத்து வந்தவன்..

"வர்ஷி இங்க என்ன பண்ற?" என்று கேட்க,

தலையில் கைவைத்தவள் வேகமாக எழ.. வெளியே போகப் போகிறாள் என்று உணர்ந்து முரளி கையை பிடித்து "உட்காரு!" என்று அமர்த்தினான்.

"உட்காரு பாப்பா!" என்று அப்பாவும் சொல்ல,

"எதுக்கு கோபம் வர்ஷ் குட்டிக்கு!" என்று பத்து அருகில் அமர்ந்தான்.

"அதுவா என் தங்கை பெரிய பொண்ணு ஆகிட்டா! அவளுக்கு கல்யாணம் பேசலாமா?" என்று முரளி சொல்ல,

எல்லோரும் அவனையேப் பார்த்தனர். அதுவும் வர்ஷினி முகத்தில் அவ்வளவு அதிர்ச்சி.. ராஜாராம் நான் நினைப்பது இவனுக்கு எப்படி தெரியும் என்று யோசனையோடு பார்க்க,

“டேய்! சின்னப் பொண்ணு டா அவ! என்ன பேசற?” என்றான் பத்து.

முரளி பேசவுமே அது ஈஸ்வர் என்று வர்ஷினிக்குத் தோன்றியது, இதைத் தன்னிடம் கேட்கத் தான் நேரில் பார்க்கக் கேட்டிருப்பான் என்று க்ஷணத்தில் யூகித்தாள்.

“ஒருத்தங்க பொண்ணுக் கேட்டாங்க!” என்று முரளி ஆரம்பிக்கும் பொழுதே,

“யார் கேட்டாலும் வேண்டாம் அண்ணா! எனக்குக் கல்யாணம் செஞ்சுக்கற அளவுக்கு பக்குவமும் இல்லை, விருப்பமும் இல்லை!”

“இரு வர்ஷி, யார் கேட்டாங்கன்னு..” என்று முரளி சொல்லும் பொழுதே,

“யார் கேட்டிருப்பாங்கன்னு எனக்குத் தெரியும்! அது வேண்டாம்!”

“உனக்குத் தெரியாது” என்று அவன் மீண்டும் பேச,

“எனக்குத் தெரியும்! வேண்டாம்!” என்று சொல்லி எழுந்து போய் விட்டாள்.

முரளி திரும்பத் திரும்ப பேசவுமே, “ஈஸ்வர்” என்று ராஜாராம் அனுமானித்தார்.. பத்துவும் கமலம்மாவும் புரியாமல் விழித்தனர்.

“யார்?” என்று பத்து ஆரம்பிக்கும் பொழுதே திரும்பவும் புயல் போல உள்ளே வந்தவள்.. “அப்பா, நீங்க சம்மதிக்கக் கூடாது! அப்படி சம்மதிச்சாலும் நான் செஞ்சுக்க மாட்டேன்!” என்று சொல்லிப் போய் விட்டாள்.

“யாருடா? என்ன நடக்குது? யார் கல்யாணத்துக்குக் கேட்டா?” என்று பத்து கேட்க,

முரளி பதில் சொல்லும் முன்னேயே “ஈஸ்வர்” என்று ராஜாராம் சொல்லவும்,

“என்ன ஈஸ்வரா?” என்று அதிர்ந்து எழுந்தே நின்று விட்டான் பத்து.

அப்பாவிற்கு தெரிகிறதா என்று குழம்பிய முரளி.. “அப்பா!” என்று ஆரம்பிக்க,

“பாப்பா தான் வேண்டாம் சொல்லறாளே! விட்டுடுவோம்! எனக்கு என்னவோ அவ பேசிட்டு போறதை பார்த்தா சம்மதிக்க வைக்க முடியும்னு தோணலை!” என்றார் ராஜாராம்.

ஈஸ்வர் கேட்டானா? என்ற ஆச்சர்யத்தில் இருந்த கமலம்மா, “ஏன் வேண்டாம்? ஈஸ்வர் மாதிரி மாப்பிள்ளை எங்க தேடினாலும் நம்ம பாப்பாக்குக் கிடைக்காது! அவ சின்னப் பொண்ணு புரியாம பேசறா!”

“அப்படிச் சொல்லுங்கம்மா! ஈஸ்வர்ரை என்னை விட நல்லா யாருக்குத் தெரியும்! அவனைக் கல்யாணம் பண்ணப் போற பொண்ணு குடுத்து வைச்சவ, ஏன் அது நம்ம வர்ஷினியா இருக்கக் கூடாது?” என்று முரளி சொல்ல..

“முரளி நீ நிஜமாத் தான் சொல்றியா! ஈஸ்வர் எல்லாம் ஆணவம் பிடிச்சவன்.. குலப் பெருமையை பிடிச்சிட்டு தொங்கறவன்! அவன் வர்ஷினியை எப்படிக் கேட்பான்.. என்னால நம்ப முடியலை!” என பத்து சொல்லவும்,

“பிடிச்சிருக்கு சொல்றான்!” என்று முரளி சொல்ல,

“பிடிச்சே இருந்தாலும் நம்ம வர்ஷினியைப் பிடிச்சிருக்குன்னு சொல்றதைக் கூட விரும்ப மாட்டான்! கர்வி அவன்!” என,

“டேய்! உனக்கு ஈஸ்வர் மச்சான்டா”

“யார் இல்லைன்னு சொன்னா! ஆனாலும் என்னால நம்ப முடியலை!”

“நீ இப்படி பேசுவன்னு தெரிஞ்சோ என்னவோ ரஞ்சனி கிட்டக் கூட சொல்லாம என்கிட்டே சொல்லியிருக்கான் போல.. உனக்கு சம்மதமா இல்லையா…?”

பத்துவிற்கு பெரும் குழப்பம்.. கண்டிப்பாக ஈஸ்வர் பெஸ்ட் சாய்ஸ் தான். ஆனால் என்னவோ அவனால் நம்ப முடியவில்லை.

“எப்படிடா உன் தம்பியாயிருந்தும் என் கிட்ட பழகறதுக்கே அவன் எவ்வளவு யோசிச்சான்.. சில சமயம் பேசுவான், சில சமயம் அப்படியே போய்டுவான்.. பேசறதுக்கே யோசிக்கறவன் எப்படி, அதுவும் வர்ஷினியைக் கல்யாணம் பண்ணக் கேட்பான்?”

முரளிக்கும் பத்துவிற்கும் வாக்குவாதம்!!!

ராஜாராம் தடுக்கவில்லை! ஒருவன் நிறைகளைச் சொல்ல, ஒருவன் குறைகளைச் சொல்ல, அவர் அலசி ஆராய்ந்து கொண்டிருந்தார்.

அவரின் வீடே ஒரு பதட்டத்தில் ஆழ்ந்தது.. தாத்தாவும் கமலாம்மாவும் கொடுக்கலாம் என்று சொல்ல.. வர்ஷினி அவளின் ரூமின் உள்ளே சென்றவள் தான் வரவேயில்லை.

எல்லோரையும் விட ரஞ்சனிக்கு விஷயம் தெரிந்ததும் “என்ன?” என்று அமர்ந்தவள் தான் அப்படியே அமர்ந்து விட்டாள். என்ன விஷ்வாவா? இருக்கவே இருக்காது! அவன் வர்ஷினியை நிச்சயமாகக் கேட்டிருக்க மாட்டான்!” என்று அவள் சொன்ன பாவனையில்,

“ஐயோ! வீட்டினர் பார்த்தால் என்ன ஆவது? இவளுக்கு ஈஸ்வர் வர்ஷினியைத் திருமணம் செய்வதில் விருப்பமில்லையா?” என்று பத்து அவளை அவசரமாக ரூமின் உள் கை பிடித்து இழுத்துச் செல்ல..

அது கூட ரஞ்சனிக்குத் தெரியவில்லை.. அவள் உச்ச பட்ச அதிர்ச்சியில் இருந்தாள். அவளின் முன் தெரிந்தது எல்லாம் ஐஸ்வர்யாவின் முகம் தான்.

ஈஸ்வர் இருந்தது அவன் எப்பொழுதும் குடிக்கும் ஸ்டார் ஹோட்டலின் பார் தான்.. மாலை ஆகும் முன் வந்தவன் இரவு வரை இருக்க.. எங்கே இவன் எழுந்து போவதாக காணோம் என்று அங்கே ரெகுலராக இருக்கும் பையன் யோசித்தாலும் ஈஸ்வரின் முகம் பார்த்து அவன் அருகில் செல்ல முயலவேயில்லை. அவ்வளவு சீரியசாக இருந்தது.

அவனுக்கு முரளியையும் தெரியும்.. ரெகுலர் என்பதால் பழக்கமே.. அவனின் மொபைலில் இருந்து ஃபோன் அடித்தான்.

“முரளி சார், உங்க ஃபிரண்டு சாயந்தரம் நாலு மணில இருந்து இங்க தான் இருக்கார்!” என்று அவன் சொன்ன போது மணி

ஒன்பதுக்கும் மேல..

"என்ன?" என்றவன் வேகமாக காரை எடுத்துக் கொண்டு சென்றான். அப்போது தான் உணவு உண்ண அமர்ந்தவன், அதையும் மறந்து ஷாலினியிடம் சொல்ல வேண்டும் என்பதையும் மறந்து சென்றான்.

அப்போதுதான் உணவு உண்ண கீழே இறங்கிக் கொண்டு இருந்தாள் வர்ஷினி.

ரஞ்சனி உணவு உண்ணவில்லை.. ஈஸ்வரின் போன் சுவிச் ஆஃப் என்று வந்தது. அவன் வீட்டிற்கும் இன்னும் செல்லவில்லை.. ஐஸ்வர்யா வின் நம்பர் நாட் இன் யூஸ் என்று வந்தது. அஸ்வின் பொருட்டு தான் நிறைய நாட்களாக ஐஸ்வர்யாவிடம் பேசாதது பலமாகத் தாக்க, அப்படியே படுத்துக் கொண்டாள்.

பத்து "என்ன?" என்று கேட்டதற்கு வாயேத் திறக்கவில்லை.

ஈஸ்வரிடம் பேசாமல் என்ன என்று சொல்ல முடியும். முரளி மாற்றிச் சொல்ல வாய்ப்பே இல்லை.

**கணக்குகளின் சூத்திரங்கள் தெரிந்தாலும், விடை சரியாக வந்தாலும் செயல் முறைகள் வரிசையாக இல்லாவிட்டால் அதன் மதிப்பீடு குறைந்து விடும்!!! வாழ்க்கையும் சில சமயங்களில் அப்படிதான்!!!**

## அத்தியாயம் முப்பத்தி ஒன்று :

**உனது விழியில் எனது பார்வை!!!**

முரளி பார் சென்ற போதும் ஈஸ்வர் அங்கே தான் இருந்தான். "என்னடா பண்ற இங்க ஈவ்னிங்ல இருந்து?"

"எவன் சொன்னான் நான் இங்க இருக்கேன்னு?"

"யாரோ சொன்னாங்க, வீட்டுக்குக் கிளம்பு!"

"ப்ச்! போகப் பிடிக்கலை!"

"சொன்னாக் கேளு, எழுந்துரு!" என்று அதட்டி அவனைக் கைப் பிடித்து எழுப்பினான்.

“டேய், நான் என்ன ஸ்டெடி இல்லைன்னு நினைச்சியா?” என்று அவனிடம் முறைத்து நிற்க...

“நீ எவ்ளோ குடிச்சாலும் ஸ்டெடி தான். எனக்குத் தெரியும், கிளம்பு முதல்ல, என்ன பண்ணிட்டு இருக்க நீ!” என்று முரளியும் முறைக்க..

அதன் பிறகே கிளம்பினான்.

பில் செட்டில் செய்ய வேண்டும் என்ற ஞாபகம் கூட இல்லை.. அந்தப் பையன் “பில்!” என்று தயங்கி நிற்க..

எவ்வளவு என்று கேட்டு.. அதைக் கொடுத்து, அந்தப் பையனுக்கும் தனியாக ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்து, முரளி ஈஸ்வருடன் வெளியே வந்தான்.

“உன்னை நான் வீட்ல விடறேன் நீ ஓட்டாதே!” என்று சொல்லி.. ஈஸ்வரை வீட்டில் விட்டு அவனின் கார் எடுத்தே வீடு வந்து சேர்ந்தான்.

அடுத்த நாள் காலையில் பால்கனியில் இருந்து ஈஸ்வரின் காரை பார்த்த இரு பெண்களின் மனதிலும் குழப்பம். ரஞ்சனி ஈஸ்வர் வந்திருக்கிறானோ என்று வேகமாக வர.. அவன் இங்கே வந்திருக்கிறானா என்று வர்ஷினிக்கும் யோசனை.

அவள் அவளின் ரூம் கதவை திறந்து மேலே இருந்து பார்க்க.. “முரளிண்ணா விஷ்வா வந்திருக்கிறானா?” என்று ரஞ்சனி கேட்பது தெரிய.. நின்று கவனித்தாள்.

“இல்லை ரஞ்சனி! நான் அவன் கார் எடுத்துட்டு வந்தேன்”

“எப்போ? எங்கேயிருந்து? நான் நேத்து இருந்து அவன் கிட்ட பேச முயற்சி பண்றேன்? அவன் நைட் பத்து மணி வரை வீட்டுக்கே போகலை” என்று அவள் கேட்க,

முரளி தயங்க..

“பார்ல பார்த்தீங்களா?” என்று ரஞ்சனி கேட்பது தெரிய..

யாரும் கவனிக்கும் முன் ரூமின் உள் சென்றாள். மனதினில் இந்த ஈஸ்வர் விஷயத்தை முடித்து விட வேண்டும் என்ற உத்வேகம்.

“நான் என்ன எப்போதும் அவனை நினைத்துக் கொண்டிருக்கிறேன்? ஒருவன் என்னை மனதளவிலும் இவ்வளவு தொந்தரவு செய்வதா?”

“என்ன தைரியம் முரளிண்ணாவிடம் பெண் கேட்டிருக்கான்! ஒரு வேலை இந்த சினிமாவில் காட்டுவது போல என்னிடம் மிஸ் பிஃஹேவ் செய்ததால் அதை சரி செய்ய திருமணம் செய்ய நினைக்கிறானோ?” என்ற யோசனைகள் தான்.

அதையே அவனிடம் நேரடியாக கேட்கவும் செய்தாள். ஆம்! ஈஸ்வரும் வர்ஷினியும் அன்று மதியமே சந்தித்து இருந்தனர்..

பார்க்க நினைத்த வர்ஷினி ஒன்றும் செய்யவில்லை.. ஈஸ்வரின் கைபேசிய உயிர்ப்பிக்க சிறிது நேரத்திலேயே அது அடித்தது. ஏதோ ஒரு எண் யோசனையாக எடுக்க..

“ஹல்லோ”, என்றது ஈஸ்வரின் குரலே.

“எங்கே பார்க்கலாம்?” என்ற வர்ஷினியின் இறுகிய குரலைக் கேட்டவன்..

“என்ன வரப்போகிறதோ?” என்ற சஞ்சலம் தோன்றினாலும் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அதிகம் இருக்க..

“நீ சொல்” என அவனும், “நீ சொல்” என அவளும்,

இறுதியில் ஒரு உணவகத்தின் பெயர் சொன்னவன், “மதியம் அங்கே பார்க்கலாமா?” என,

“ஒகே! எங்க இருக்குன்னு தாஸ் அண்ணாக் கிட்ட சொல்லிடுங்க!” என,

“என்ன தாஸ் கிட்டயா?”

“பின்ன என்னை யாரு கூட்டிட்டு வருவா.. அப்பா அனுப்ப மாட்டாங்க! வெளில பர்ச்சேஸ் போறேன் சொல்லி தான் வரணும்”

“என் போன் உன்கிட்ட இருக்கு. யார் நம்பரும் இல்லை.. உன் ஃபோன்கே மெசேஜ் பண்றேன். அவன் கிட்ட காட்டிடு!” என்ற அவர்களின் சம்பாஷணையை தொடர்ந்து இப்போது எதிர் எதிரே அமர்ந்திருந்தனர்.. தாஸ் வெளியில் நின்றிருந்தான். அப்பாவிடம் சொல்லக் கூடாது என்று மிரட்டி வைத்திருந்தாள்.

எதிரில் இருந்த வர்ஷினியின் முகத்தை பார்த்திருந்தான். அவளின் முகத்தில் ஒரு சிநேக பாவனையும் இல்லை சிரிப்பும் இல்லை.. ஏன் கோபமும் இல்லை முறைப்பும் இல்லை. அவ்வளவு இறுக்கமாக அமர்ந்திருந்தாள். முக்கியமாக கறுப்புக் கண்ணாடி, அவளின் கண்களை பார்க்க முடியவில்லை.

“எதுக்கு இப்போ இவ்வளவு இறுக்கமா இருக்க” என்று ஈஸ்வர் ஆரம்பிக்க,

“பேசறதுக்கு முன்னாடி ஒரு கண்டிஷன்! என்னோட கண்ணாடியைக் கழட்டக் கூடாது!” என்று தான் பேச ஆரம்பித்தாள்.

“அது ரொம்ப கஷ்டம்! எனக்கு உன் கண்ணைப் பார்த்தே ஆகணும்!” என்று ஒரு மென்னகையோடு சொல்ல.. அந்த புன்னகை அந்த பாவனை கடுப்பின் உச்சிக்கு இட்டு சென்றது.

“முதல்ல இப்படி என் முன்னாடி சிரிக்காதீங்க! இட் இரிடேட்ஸ் மீ எ லாட்.. அது எப்படி கொஞ்சம் கூடக் குற்ற உணர்ச்சி இல்லாம சுத்த முடியுது! மத்தவங்க கிட்ட எப்படியோ என் முன்னாடி இப்படி வராதீங்க! உங்களைப் பார்க்கும் போது எரிச்சலா வருது. உங்க கிட்ட  கெஞ்சியாவது என்னை விட்டுடுங்க சொல்லணும் இருந்தேன். ஆனா இப்போ பார்க்கும் போது நான் எதுக்கு கெஞ்சணும் தான் தோணுது!” என்றாள் ஆத்திரத்துடன்.

“என் மனசுல குற்ற உணர்ச்சி இல்லைன்னு தெரியுமா?” என்று விளையாட்டுத்தனத்தைக் கை விட்டு ஈஸ்வரும் தீவிரமாக திருப்பிக் கேட்க,

“அப்போ உங்க மனசுல இருக்குற குற்ற உணர்ச்சிக்காகத் தான் என்னைக் கல்யாணம் பண்ண அண்ணாக் கிட்ட கேட்டீங்களா?” தீர்க்கமாகக் கேட்டாள்.

“இல்லை! அப்படி இல்லை!” என்று ஈஸ்வர் சொல்ல,

“அப்போ செஞ்ச தப்பை சரி செய்யக் கல்யாணம் பண்ண நினைக்கிறீங்களா?”

“கண்டிப்பா இல்லை!”

“தென், எதுக்கு இந்தக் கல்யாணம்?”

“அது!” என்று ஈஸ்வர் பேச ஆரம்பிக்கும் முன்னரே, அவனுக்குப் பேச இடமே கொடுக்கவில்லை.

“நீங்க என்கிட்டே இல்லீகலா பண்ணினதை லீகலைஸ் பண்ணப் போறீங்க! அப்படிதானே!” என்று வார்த்தைகளை சாட்டையாய் சுழற்றினாள்.

என்ன பதில் சொல்வது என்றே ஈஸ்வருக்குத் தெரியவில்லை. ஸ்தம்பித்து அமர்ந்தான்.

“நீங்க முறை தவறி நடந்ததை முறையாக்க இந்தக் கல்யாணம் இல்லையா?” என்று வர்ஷினி திரும்பவும் நிதானமாகச் சொல்லி பேச ஆரம்பித்தாள்.

வார்த்தைகள் அற்று அவளைப் பார்த்தான்.

“என்னால உணர முடியுது! உங்க மொபைல் பார்த்த பிறகு, எதோ ஒரு வகையில் நான் உங்களை டிஸ்டர்ப் பண்றேன். அதுதான் என்கிட்டே இப்படி ஒரு பிஃஹேவியர். அதுக்காக இப்போக் கல்யாணம் பண்ண கேட்கறீங்க! ஆனா அது பாசிபிள் இல்லை..” என்றவளைப் பார்த்து,

“நீ என்னை டிஸ்டர்ப் பண்ற தான், ஆனா அதை விட உன் கண் இந்த ப்ளூ ஐய்ஸ்..” என்று பேசிக் கொண்டிருக்கும் போதே,

“அதனால தான் இந்தக் கண்ணாடி...” என்றாள்.

“நீ கண்ணாடி போட்டிருந்தாலும் அந்தக் கண் என் கண் முன்னாடி இருக்கும்.. எப்பவும் நான் வேண்டாம்னு நினைச்சாலும், உன் ஞாபகம் தான்.. என்னால ஒன்னும் பண்ண முடியலை.. அன்னைக்கு நடந்தது கண்டிப்பா வேணும்னு செய்யலை. என்னை மீறி நடந்தது. சாரி! ரொம்ப சாரி! நீ எப்படி மன்னிப்பு கேட்க சொன்னாலும் கேட்கறேன்” என்றான் பணிந்து.

“அன்னைக்கு நடந்ததை விட்டுடு .. ஜஸ்ட் உங்கப்பா கொண்டு வந்திருக்குற மாப்பிள்ளையாப் பாரு, பிடிக்க வாய்ப்பிருக்கு! மோசமானவன் தான். ஆனா மன்னிக்கக் கூடிய அளவுக்கு மோசமானவன்”

“எனக்கு புரியுது இந்த மாதிரி கட்டாயப்படுத்தறது தப்புன்னு. ஆனா எனக்கு வேற வழி இல்லை!” என்று சற்று உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பேசிக் கொண்டே போக..

“அப்போ நீங்க உயிரோட இருக்க! என்னை சாக சொல்றீங்களா?” என்றாள்.

“என்ன பேசற நீ?” என்று அதிர்ந்தான்.

“கொஞ்சம் நான் பேசறதை புரிஞ்சிக்க முயற்சி பண்ணுங்க! நான் எல்லார் மாதிரியும் கிடையாது.. எல்லாம் இருந்தும் என்கிட்ட எதுவும் கிடையாது.. என்னை சுத்தி இருக்குறவங்க என்னை ரொம்ப நல்லா பார்த்துக்கறாங்க. குறை சொல்லவே முடியாது. தப்பு அவங்க கிட்ட இல்லை. என்கிட்டே எனக்கு அவ்வளவா யாரோடையும் ஒட்டுதல் வரலை”

“இப்போதான் கொஞ்சம் சகஜமா பேசறேன்! முன்ன எப்பவும் தனியா இருக்கத் தான் இஷ்டப்படுவேன்! அதனால எனக்கு என்னை ரொம்பவும் லவ் பண்ற ஒருத்தங்க, எப்பவும் என் பின்னாடியே சுத்திட்டு இருக்குறவங்க.. என்னை மட்டுமே பார்த்துட்டு இருக்குறவங்க.. அவங்களுக்குன்னு ஒரு ஐடன்டிடி இருக்குறவங்க.. அதனால என்னோட கடந்த காலம் யாருக்கும் ஞாபகம் வர விடாம எனக்கு ஒரு ஐடன்டிடி கொடுக்கறவங்க.. இப்படித் தான் வேணும்”

“நீங்க முன்ன என்னை எப்படி பார்த்தீங்க! இப்போ என்னை எப்படி பார்க்கறீங்க! எனக்கு வித்தியாசம் தெரியுது.. இது திடீர்ன்னு வந்தது! திடீர்ன்னு போயிடுச்சுன்னா.. நான் எங்க போவேன்? என்னால திரும்பவும் தனியா ஒரு வாழ்க்கை யோசிக்க முடியாது. இப்போவே பல பேர் என்னை சுத்தி இருந்தாலும் சில சமயம் தனியா இருக்குற மாதிரி ஒரு உணர்வு!” என்று பேசும் போதே அவளின் கண்கள் கலங்க, தன்னை அறியாமல் கண்ணாடியைக் கழற்றி கண்களை துடைத்தாள்.

“நீங்க என்கிட்டே நடந்துகிட்டது ஒரு சின்ன சலனமா கூட இருக்கலாம். இதை பிடித்தம்னோ காதல்னோ எடுத்துக்கிட்டு வாழ்க்கை முழுசும் பணயம் வைக்க வேண்டாம். ஒரு தப்பு நடந்து போச்சு! விட்டுடுங்க! அதுக்காக அதையே பிடிச்சிட்டு இருக்காதீங்க..”

“இதையும் விட நீங்க பெரிய தப்பு என்கிட்டே பண்ணியிருந்தாலும் நான் கல்யாணத்துக்கு ஒத்துகிட்டு இருக்க மாட்டேன்!”

“நான் இன்னும் ஒரு கல்யாணத்துக்கு, ஒரு கமிட்மென்ட்க்கு ரெடி இல்லை.. உங்களோட அந்த நடத்தைக்காக வேண்டாம்னு சொல்றேன்னு நினைக்காதீங்க.. அதுக்காக இல்லை.. நான்

இப்போதைக்கு கல்யாணத்துக்குத் தயார் இல்லை!” என்று தீர்மானமாக முடித்தாள்.

“நான் இருக்கின்றேன் உனக்காக!” என்று வர்ஷினியை அணைக்க ஒரு பேராவல் அவள் பேசப் பேசவே. முயன்று கட்டுப் படுத்தி அமர்ந்து இருந்தான்.

“அப்போ நான் காத்திருக்கட்டுமா?”

“அது உங்க விருப்பம்! ஈஸ்வர்ன்ற உங்களை நிறைய முறை பார்த்துட்டே இருந்திருக்கேன்.. இன்னம் யார் கிட்டயும் நமக்குள்ள நடந்ததை எக்ஸ்போஸ் பண்ணவும் தோணலை! சொல்லப் போனா உங்ககிட்ட என்னை பற்றி நானே பேசின அளவு வேற யார் கிட்டயும் பேசினதே இல்லை! இப்படி இருந்தும் உங்களை எனக்கு கல்யாணம் பண்ணத் தோணலை”

“இப்போ தான் நான் எய்டீன்! எதிர்காலத்துல என்னோட மனநிலை எப்படி இருக்கும்னு தெரியாது! ஆனா மாறும்னு எனக்குத் தோணலை” என்று வர்ஷினி சொல்ல சொல்ல... அவளின் கண்களை பார்த்தவன்.

“நானும் மாறுவேன்னு எனக்குத் தோணலை.. எனக்கு உன்னைப் பார்த்துக்கிட்டே உன்னோட இருக்கணும்னு தான் இப்போ இருக்கு! எப்போவும் இருக்கும்னு நினைக்கிறேன்.. நானும் இதை பிடித்தம்னோ காதல்னோ கொண்டு வரலை! இது என்னன்னு எனக்குத் தெரியலை!” என்றான் அந்த நீல நிறக் கண்களை பார்த்துக் கொண்டே.

“அது உங்க இஷ்டம்! நான் சொல்றதை சொல்லிட்டேன்.. இது உங்க மொபைல்!” என்ற படி அவள் எழ..

“சங்கீத வர்ஷினி” என்ற அவளின் பெயரைச் சொன்னான். அவள் நிற்கவும்..

“உலகத்திலேயே மாபாதகமான செயல்னு நம்ம இதிகாசங்கள் சொல்றது பிறன்மனை நோக்குதல்.. அப்படி ஒரு சூழ்நிலை எனக்கு வரவிடமாட்டேன்னு நினைக்கிறேன்” என்றான் ஆழ்ந்த குரலில்.

வர்ஷினிக்குப் புரியவில்லை, “அப்படின்னா?”

“அப்படின்னா உனக்கு வேற ஒருத்தரோட மேரேஜ் ஆகிட்டாலும்.. நீ அவனோட குடும்பம் நடத்தினாலும், நான் உன்னைப் பத்தி நினைக்கிறது.. உன்னைத் தூக்கறது.. இப்படி? இதுக்கு மேல முறையற்ற வார்த்தைகள் எதுவும் உன்கிட்ட சொல்ல எனக்கு மனசில்லை”

அந்த நீலக் கண்கள் அவனை கலவரமாக பார்க்க...

“உனக்கும் வேண்டாம்! எனக்கும் வேண்டாம்! நான் ஒரு சான்ஸ் எடுக்கறேன்.. உன்னைப் பார்க்காம இருக்க முழுசா ட்ரை பண்றேன்.. அட்லீஸ்ட் சில மாசமாவது.. உன்னோட நினைவுகள் குறையுதான்னு பார்க்கலாம்!”

“நீ சொல்ற மாதிரி சலனம்னா கண்டிப்பா குறையவாவது செய்யும்! பிடித்தம், காதல், இது எல்லோரும் சொல்றது தான்! ஆனா இந்த உணர்வுகள் குறையாத, என்னால முடியாத பட்சத்துல வந்துடுவேன்.. அண்ட் ஐ ப்ராமிஸ் நீ நினைக்கிற மாதிரி ஒரு வாழ்க்கையை என்னால குடுக்க முடியும்..”

“இல்லைன்னாலும் ஒன்னும் பண்ண முடியாது.. நான் வாழ்றதுக்காக உன்னை சாகடிக்க போறேனோ என்னவோ?”

“இதுதான் நடக்கும்னு சொல்ல முடியாது, ஒரு வேலை நான் உன்னை மறந்துட்டா நீ தப்பிக்கலாம் இல்லை நான் இந்த உலகத்துல இல்லாம போயிட்டாலும் தப்பிக்கலாம்”

“ஆனா எனக்குத் தோணுது பேபி.. உன்னை ஹேண்டில் பண்ண என்னைத் தவிர யாராலையும் முடியாதுன்னு.. நீ நிஜமாவே ப்ரில்லியன்ட்.. என்னை நல்லா அனலைஸ் செஞ்சிருக்க!”

“இப்போ நீ பேசின பிறகு எனக்கு இன்னும் நீ வேணும் என்னோடன்ற உணர்வு ரொம்ப அதிகமாகிடுச்சு.. வேறா எவனாவது இருந்தா நீ பேசினதுக்கு சரின்னு தான் சொல்வான். ஆனா எனக்கு இன்னும் இன்னும் நீ தான் என் வாழ்க்கையில வரணும்னு தோணுது”

“நான் சொன்னேன் தானே நீ போ! நான் உன்னை டிஸ்டர்ப் பண்ண மாட்டேன் போ!” என்றான்.

“ஹப்பாடா” என்ற உணர்வு தோன்றிய போதும், நம்பாமல் பார்த்து நின்றாள் வர்ஷினி.

"இன்னம் கொஞ்சம் நேரம் நின்னா நடக்கறதுக்கு நான் பொறுப்பில்லை"

"ஏன்? என்ன செய்து விடுவாய்?" என்று கண்களால் ஒரு கேள்வியை தாங்கி நிற்க..

"உன்னை இழுத்துட்டு யாருமில்லாத இடத்துக்கு போகணும்னு தோணுது. மறுபடியும் ஒரு முறை என்னால உன்னோட ரிஸ்க் எடுக்க முடியாது. இப்படிப் பார்க்காத வர்ஷினி.. நான் போறேன்!" என்று சொல்லியபடி,

சங்கீத வர்ஷினி என்ன உணர்வு என்று வரையறுக்க முடியாமல் பார்த்தது பார்த்தபடி நிற்க,

ஈஸ்வர் என்கின்ற விஷ்வேஷ்வரன் செல்ல ஆரம்பித்தான்.

**என் கண்ணீர் என் தண்ணீர் எல்லாமே நீ அன்பே..**
**என் இன்பம் என் துன்பம்**
**எல்லாமே நீ அன்பே..**
**என் வாழ்வும் என் சாவும்**
**உன் கண்ணின் அசைவிலே!!!**

**யாருக்காவும் எதற்காகவும் நிற்பதில்லை காலமும் நேரமும் தனி மனித வாழ்க்கைப் பயணமும்!!!**

(முதல் பாகம் முற்றும்)

## அத்தியாயம் முப்பத்தி இரண்டு :

**உண்மை அறிந்தவர் உன்னை கணிப்பாரோ மாயையே –**
**மனத் திண்மையுள் ளாரைநீ செய்வது மொன் றுண்டோ மாயையே**
**( பாரதி )**

சங்கீத வர்ஷினி கல்லூரியில் சேர்ந்து முதல் வருடமே முடியப் போகும் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. செய்வதற்கு எந்த வேலையும் இல்லாமல் எந்த பரபரப்பும் இல்லாமல் வாழ்க்கை மெதுவாகச் செல்வது போலத் தான் அவளுக்கு எண்ணம்.

பீ எஸ் சி விஷுவல் கம்யுனிகேஷன்ஸ் சேர்ந்திருந்தாள். பள்ளியில் படிக்கும் சமயம் நிறையத் தோழர் தோழிகள்.. அவர்கள் எல்லோரும் தொழில் முறைப் படிப்பை தேர்ந்து எடுத்து இருக்க.. இவளும் ஒன்றிரண்டு பேரும் இதைச் சொல்லியிருக்க.. இறுதியில் இதில் சேர்ந்தது வர்ஷினி மட்டும் தான்.

ராஜாராம் மட்டுமல்ல வீட்டினர் எல்லோரும் ஏக மனதாக இதைத் தான் விரும்பினர். சிறு வயதில் இருந்தே கொடைக்கானல் ரெசிடென்ஷியல் பள்ளி.. அதுவும் பலர் பல வருடமாக அங்கே இருந்து படிப்பவர்கள். வர்ஷினியும் எல்லோரிடமும் விரைவில் சிநேகிதம் செய்து கொள்ளும் இயல்பினள்.. வீட்டினரிடம் மட்டும் தள்ளி நிற்பாள்.

அதனால் பள்ளி வாழ்க்கையை அனுபவித்து வாழ்ந்தாள்.. இந்த வருடமாக வீட்டினர் அவளை எவ்வளவு நன்றாய் கவனித்தாலும் அதிகம் அவர்களுடன் ஒட்டுதல் இல்லை.

லீவிற்கு மட்டுமே வந்து செல்வாள்.

ஆதலால் இப்போது வீட்டில் இருக்கட்டும் என்று ராஜாராம் பிரியப்பட, மீண்டும் ஹாஸ்டல் போகிறேன் என்று சொன்னவளை விடாமல் வற்புறுத்தி சென்னையில் இருபாலரும் படிக்கும் மிகப் பெரிய பாரம்பர்யம் வாய்ந்த கல்லூரியில் சேர்த்து விட்டனர்.

ஒரு வருடம் முடியப் போகிறது, ராஜாராமின் உடலை நோய்கள் ஆள ஆரம்பித்து, இப்போது அவர் படுக்கையில்... ஆறு மாதம் என்று சொன்ன அவரின் உயிரை வீட்டினர் தங்களின் சிறந்த கவனிப்பால்.. இதுவரையிலும் இழுத்துப் பிடித்து தான் இருந்தனர்.

வீட்டினர், அப்பா, அம்மா, இரண்டு அண்ணன்கள், அண்ணிகள் என்று எல்லோரும் வர்ஷினியிடம் நன்றாகப் பேசினாலும் பழகினாலும், இவளை இழுத்துப் பிடித்தாலும்.. இவளும் எல்லோரிடமும் நன்றாகப் பேசினாலும், நன்றாக இருக்க முற்பட்டாலும்.. இது என்னுடைய வீடு என்ற எண்ணம் வரவில்லை.. எல்லோரிடமும் மிகுந்த மரியாதை வைத்திருந்தாலும் பாசம் இருந்தாலும்.. ஒரு ஒட்டுதல் குறைவு தான்.. சிறு வயதில் இருந்தே அப்படியே வந்து விட்டது.

அத்தனை பேர் சுற்றி இருந்தாலும் தனிமை தான். இதில் என்ன ஒரு விஷயம் என்றால், அந்தத் தனிமை அவளுக்கும் புரிந்தது போக்கும் வழி தான் தெரியவில்லை.

அந்த தனிமையைப் போக்க புதுப் புது நண்பர்கள்.. தோழிகளும் இருந்தனர், தோழர்களும் இருந்தனர். அதுவும் வர்ஷினியிடம் இருக்கும் பணம் அவளின் வயதிற்கு மிக மிக அதிகம்... அவளிடம் கணக்கு கேட்பவர் கிடையாது.. நண்பர்களுக்கு உதவிகளும் செலவுகளும் அள்ளி வழங்க, அதற்காகவும் கூட அவளைச் சுற்றிப் பெரிய கூட்டம்.

தொழில் இரண்டு பங்காகப் போடப்பட்டு வர்ஷினிக்கு ஒரு பங்கும், முரளிக்கும் பத்மநாபனுக்கும் சரிசமமாக மற்றொரு பங்கும் பிரிக்கப்பட்டு இருக்க.. அதே மாதிரி தொழில் மூலம் வந்த சொத்துக்கள் பிரிக்கப்பட்டன.

மற்ற இதர சொத்துக்கள் எல்லாம் முரளிக்கும் பத்மநாபனுக்கும் தான்.. வர்ஷினி எனக்கு இது போதும் என்று விட்டாள். வேறு எதையும் வாங்கிக் கொள்ள ஒப்பவில்லை. இதில்லாமல் கமலாம்மாவிற்கும் சில சொத்துக்கள், தாத்தாவிற்கும் இருக்கும் சொத்துக்கள் எல்லாம் ஆண் மக்களுக்குத் தான்.

இது எல்லாம் சேர்த்தாலும் வர்ஷினிக்கும் இருக்கும் சொத்துகளை விட அவர்களது தனித்தனியாக பார்த்தால் குறைவு தான்.

ஆனாலும் முரளிக்கோ பத்மனாபனுக்கோ வருத்தமில்லை. எல்லாம் வர்ஷினி பிறந்த பிறகு அவளின் பேரில் ஆரம்பித்த தொழிலினால் தான்.. அதன் பிறகு கிடைத்த ஹைவேஸ் டோல் கேட் டெண்டரினால் தான்.. அதன் பிறகு உதித்த மற்ற தொழில்களினால் தான் என்று அவர்களின் மனதில் ஆழப் பதிய வைத்து இருந்தார் ராஜாராம்.

அவர்களின் ஆழ் மனதிலும் அவர்கள் பிறந்து வளர்ந்த வடசென்னையின் புழுதி நிறைந்த கசகசவென்ற ஜனத்திரள் கொண்ட அவர்களின் வீடு இருந்த பகுதி அழியாச் சித்திரமாய் இருந்தது. அங்கேயே இருந்திருந்தால் அது வேறு, இப்போது அந்த வாழ்க்கையை அவர்களால் நினைக்க முடியாது.

ஆதலால் வர்ஷினிக்கு அவ்வளவு சொத்துக்கள் போனதில் எந்த வருத்தமும் இல்லை.. முரளிக்கு மனதின் ஓரத்தில் இருந்த சிறு மனக்கசப்பும் மறைந்து இருந்தது.

ஆம்! கமலம்மா பேரில் இருந்ததை ராஜாராம் ஆண்மக்களுக்கு மாற்றி இருந்தார். ஈஸ்வர் அவரிடம் பேசிய பிறகு யோசித்து இருந்தார். ஆண் மக்கள் மேல் எந்த குறையுமில்லாத பொழுது

இந்தச் சொத்துக்களைக் கொண்டு அவர்களின் குணங்கள் மாறுவதை அவர் விரும்பவில்லை.

அதே சமயம் வர்ஷினியினது எதையும் குறைக்க வில்லை. எல்லாம் செம்மையாகச் செய்து விட்டார். ஆனாலும் இன்னும் உலக வாழ்க்கையில் இருந்த ஏதோ ஒரு பற்று அத்தனை தொந்தரவுகள் இருந்த போதும் டாக்டர்கள் இன்னும் ஒன்றும் செய்ய முடியாது என்று விட்ட போதும், உயிரை வைத்து இருந்தார்.

உணர்வுகள் பேச்சுக்களும் மட்டுமே இருந்தது. குழந்தையைப் போல அவரின் அப்பாவும் கமலம்மாவும் முரளியும் பத்மநாபனும் பார்த்துக் கொண்டனர்.

வர்ஷினியும் தினமும் அவருடன் நேரம் கழிப்பாள். ஆனால் பணிவிடைகள் செய்யும் அளவிற்கு எந்தத் தேவையும் இல்லை.. அதற்கான அவசியமும் இருந்ததில்லை.

இப்படியாக வீட்டில் குடும்பத்தினருடன் இருந்தாலும், ஒரு தனித் தீவாக இருந்தாள்.. அந்தத் தனிமையை போக்க நிறைய நண்பர்கள்.. நண்பர்களோடு நிறைய சுற்றுதல், பார்டீஸ் போகுதல், ஆட்டம், பாட்டம் என்று இருந்தாலும் வாழ்க்கை அவளுக்கு மிகவும் மெதுவாகத் தான் சென்றது.

“பாப்பா போகலாமா?” என்றபடி தாசண்ணா போனில் அழைத்திருக்க..

“இன்னும் பத்து நிமிஷம் தாசண்ணா” என்றாள். இந்தப் பத்து நிமிஷம் நான்கு முறை சொல்லியாகிவிட்டது. கல்லூரி முடிந்து இரண்டு மணி நேரம் ஆகியிருந்தது.

தோழர்களுடன் அரட்டை என்று ஈடுபட்டு இருந்தாள். தாசிற்கு பொறுமை பறந்து கொண்டிருந்தது.. அவனால் வர்ஷினியை சமாளிக்க முடியவில்லை. எந்த நேரம் யாரோடு பேசுகிறாள், பழகுகிறாள், தெரிவதேயில்லை. சமீபகாலமாக மனதினில் ஒரு பயம். யாரிடம் சொல்வது என்றும் தெரியவில்லை. ஐயா உடல்நிலை சரியில்லாத நிலையில் படுத்த படுக்கையாய் இருக்க.. வேறு யாரிடமும் சொல்ல முடியவில்லை.

அப்பாவிடம் குறை சொன்னாலே சண்டை பிடிப்பவள், வேறு யாரிடமாவது சொல்லி “நீ என்னோடு வேண்டாம்!” என்று சொல்லிவிட்டால் இன்னும் கஷ்டமாகிவிடும். அதன் பொருட்டே அமைதி காத்தான்.

தாஸின் கட்டுப்பாட்டு வளையத்திற்குள் வர்ஷினி இல்லவே இல்லை.. அவளிஷ்டம் தான் எல்லாமே.. "இது சரியில்லை பாப்பா" என்று அவளிடம் சொன்னால், அவள் பார்க்கும் ஒற்றைப் பார்வையில் தாசின் வாய்த் தானாக பூட்டுப் போட்டுக் கொள்கிறது. அவனும் தான் என்ன செய்வான்? அவன் வேலையாள், வர்ஷினியைப் பார்த்துக் கொள்ளும் வேலை மட்டுமே இப்பொழுது.

எனக்கு இந்த வேலை வேண்டாம், என்னால் இவர்களைப் பார்த்துக் கொள்ள முடியவில்லை என்று எங்காவது ஓடிவிட வேண்டும் போலத் தோன்றியது. எஜமான விசுவாசம் தடுத்தது.

தாசின் யோசனைகள் ஓடும் பொழுதே வர்ஷினி வந்து விட்டாள். கேட்டால் திட்டுவாள் என்று தெரியும் ஆனாலும் கேட்டான் "யார் பாப்பா அவங்க? புதுசா இருக்காங்க! நான் பார்த்தது இல்லையே! உங்க கிளாஸ் ஸா?" என்றான்.

"இல்லை, தாசண்ணா! எங்க காலேஜ்!"

"யார் என்னன்னு தெரியாம, இப்படிப் புது ஆளுங்க கூட இவ்வளவு நேரம் பேசாதீங்க பாப்பா!

"எனக்குத் தெரியாதா தாசண்ணா! நான் சின்னக் குழந்தை இல்லை! எனக்குத் தெரியும்.. நீங்க காரை எடுங்க.." என்று காரில் ஏறி அவள் காரின் கதவை சாத்திய விதமே.. ஹப்பா என்றானது தாஸிற்கு!

தாஸின் பயமே அதுதான்! தெரியாத பெண் என்றாலும் பரவாயில்லை! யார் எப்படி என்று தெரிந்தும் ஏன் பழகுகிறாள் என்பது தான்!

"உலகம் நிறை குறை நிறைஞ்ச மனுஷங்க வாழுற இடம் தாஸண்ணா, எல்லோரும் நமக்கு பிடிச்ச மாதிரி இருப்பாங்க இல்லை நல்லவங்களா மட்டும் இருப்பாங்கன்னு சொல்ல முடியாது! அவங்கவங்களை அவங்கவங்களா பார்க்கணும்! உங்களுக்கு பிடிச்சதை அவங்க கிட்டத் தேடக் கூடாது. உங்களுக்குப் பிடிச்ச மாதிரி அவங்க ஏன் இருக்கணும்" என்பாள்.

"பாப்பா! என்னை விட்டுடுங்க!" என்று தாஸ் தான் கதறும் படி ஆகிவிடும். கலர் கலர் தலை, காதில் ஒரு கடுக்கன்.. அவன்களும் அவனின் உடைகளும்.. தாஸ் அங்கே இருப்பது எல்லோருக்கும் தெரியும்.. யாரும் அவளை எதுவும் செய்து விட முடியாது.. ஆனாலும் இந்த சிநேகிதங்கள் தேவையற்றது என்பது தாஸின் எண்ணம்.

மேல் தட்டு நட்புக்கள் இருக்கின்றன.. நடுத்தர நட்புக்கள் இருக்கின்றன.. இந்த அடித்தட்டு நட்புக்கள் வேறு.. அடித்தட்டு நட்புக்களுக்கு காசு செலவு செய்யக் கணக்கே பார்க்க மாட்டாள். என்ன உதவி என்றாலும் செய்வாள்.

கார் சிறிது தூரம் செல்ல ஆரம்பித்ததுமே “தாஸண்ணா!” என்றாள்.

“சொல்லுங்க பாப்பா!”

“என்னோடவே இருக்கீங்க.. என் கிளாஸ் ரூம் உள்ள வர்றதில்லை அவ்வளவு தான்.. யார் என்னை என்ன செய்துட முடியும்.. இனிமே இப்படிப் பேசாதீங்க!” என்றாள் கறாராக.

“யார் என்னை என்ன செய்திட முடியும்?” என்ற கேள்வியை தாஸிடம் முன் வைத்த போது அவளையும் மீறி ஈஸ்வரின் ஞாபகங்கள்.. மொத்த குடும்பமும் அருகில் இருக்கும் போதே அவனிஷ்டபடி நடந்தான் என்று சிந்தனைகள் ஓட..

தாஸிற்கும் ஈஸ்வரைப் பற்றிய சிந்தனைகள் தாம்.. வருடமாயிற்று தாஸ் ஈஸ்வரைப் பார்த்து.. என்ன செய்கிறான் என்று யாருக்கும் தெரியாது. இங்கே சென்னையில் இல்லை. தாஸை ஒரு முறை தன்னிடத்திற்கு அழைத்தவன் சொன்ன வார்த்தைகள் இவை...

“தாஸ்! வர்ஷினியைப் பத்திரமா பார்த்துக்கோ. அவ என்ன செய்யறான்னு யாராலையும் கணிக்க முடியும்னு எனக்குத் தோணலை.. அவங்கப்பா ஒரு வேளை கணிக்கலாம். ஆனா அவர் இப்போ உடம்பு சரியில்லாதவர்.. முரளிக்கோ, பத்துக்கோ அவ்வளவு புத்திசாலித்தனம் பத்தாது” என்று முரளியை வைத்துக் கொண்டே சொன்னான்.

“நெருப்புன்னு தெரியாம கை சுட்டுக்கிற குழந்தைக் கிடையாது.. நெருப்புன்னு தெரிஞ்சே சுட்டுக்குவா? என்ன ஆகுதுன்னு பார்ப்போம்னு அலட்சியம்.. பத்திரமா பார்த்துக்கோ!”

அதுவரைக்கும் தாஸிற்கு எதுவும் தோன்றியதில்லை.. அன்றிலிருந்து ஒரு பயம் ஏன் ஈஸ்வர் அப்படிச் சொல்ல வேண்டும் என்று.. முரளிக்கோ பத்துவிற்கோ அவனின் அய்யாவின் புத்திசாலித்தனம் கிடையாது என்பது அவனின் எண்ணம் கூட.. ஈஸ்வர் மேல் எப்போதும் ஒரு பிரமிப்பு தாஸிற்கு உண்டு. அவன் அப்படிச் சொல்லிவிடவும் ,அன்றிலிருந்து இன்னும் அலர்ட் தான்.

“என்ன யோசிச்சிட்டு ஓட்டறீங்க தாசண்ணா?” என்ற வர்ஷினியின் குரல் நடப்பிற்கு கொண்டு வந்தது.

“என்னங்க பாப்பா?” என,

“சும்மா பிரேக் போடறீங்க, மூவ் பண்றீங்க, எரிச்சலா வருது! என்ன டிரைவிங் இது! ஓரமா நிறுத்துங்க, நான் ஓட்டறேன்!” என்றவளின் குரலை மீற முடியாமல் இறங்கினான். எப்போதும் டிரைவிங்கை ரசிக்கும் வர்ஷினியினால் இதை சகிக்க முடியவில்லை.

சில சமயம் இப்படி ஆவது தான். சொல்லப் போனால் வர்ஷினி கார் ஓட்டுவது தான் தாஸிற்கு நல்லது! ஏனென்றால் சாலையை மட்டும் பார்த்து ஓட்டுவாள். இல்லை என்றால் அக்கம் பக்கம் வேடிக்கை பார்த்து வரும் பொழுது ஏதாவது நடந்தால் “தாஸண்ணா நிறுத்துங்க! என்னன்னு பாருங்க!” என்று அவனை ஒரு வழியாக்கி விடுவாள்.

அதனால் வர்ஷினி ஓட்டட்டும் என்று விட்டுவிடுவான். இப்போதும் விட்டுவிட , வர்ஷினி லாவகமாக சாலையில் கவனத்தை வைத்து அனுபவித்து ஓட்டினாள், ஆனாலும் அதிலும் வேகம்..

“பாப்பா இவ்வளவு வேகமா ஓட்டாதீங்க!” என்று தாஸ் சொல்லச் சொல்ல வீடு வந்து விட்டது.

“என்ன பாப்பா நீங்க?” என்று சொல்லிக் கொண்டே வேகமாக இறங்க.. அப்போது பத்து, அவனின் காரை எடுத்துக் காத்திருந்தான் ரஞ்சனிக்காக.

ஆம்! என்ன வேலை இருந்தாலும் ரஞ்சனியின் பிக்கப் ட்ராப் பத்துவின் வேலை..

பத்துவை பார்த்ததும், “ஹாய் அண்ணா, இன்னும் அண்ணி வரலையா?” என்று கேட்டபடி அருகில் வந்தாள்.

ஆம்! இப்போது ரஞ்சனி எம் டி தோல் மருத்துவம் படிக்கின்றாள். மாலை வேளைகளில் ஒரு ஹாஸ்பிடல் போகின்றாள். மொத்தத்தில் அவளை மிகவும் பிசியாக வைத்துக் கொள்கின்றாள். வீட்டில் இருக்கும் நேரம் குறைவு.. இரவு நேரங்களில் மட்டும் தான் வீட்டில் இருப்பது போல பார்த்துக் கொள்வாள். விடுமுறை நாட்களில் அம்மா வீட்டிற்கு சென்று விடுவாள்.

ஈஸ்வர் இல்லாத இடத்தை நிரப்ப முயன்று கொண்டிருந்தாள். எல்லாம் எனது என்ற மகன் எதுவும் வேண்டாம் என்ற பிறகு அப்பா அம்மா மிகவும் மனம் விட்டு இருந்தனர்.

அதனால் பத்து தான் எப்போதும் அவளைக் கல்லூரியில் விடுவது, அழைத்து வருவது, பின்னர் மாலை விடுவது, அழைத்து வருவது. அந்த தருணங்களை மிகவும் விரும்புவான்.

“அண்ணியைக் கொண்டு போய் விடத் தான் வர்றீங்க, அப்புறம் எதுக்கு அவங்களுக்கு முன்னாடி வந்து கார்ல உட்கார்ந்துக்கறீங்க, போங்கண்ணா போங்க!” என்றபடி பத்து பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்பாராமல் சென்று விட்டாள்.

தாஸ் தான் பரிதாபமாக நின்று கொண்டிருந்தான்.

“ஏன் இவ்வளவு நேரம் தாஸ்?”

“அதுங்க சார், பிரண்ட்ஸ் கூட பேசிக்கிட்டு லேட் பண்றாங்க.. நீங்க கொஞ்சம் சொல்லுங்களேன்” என்றான்.

“சரி நான் பேசறேன்” என்று பத்துவும் சொன்னான்.

“நாள் முழுசும் பாப்பாவோட இருக்குறேன், ஐயாவோட இருந்தேன், எப்பவும் அந்த வேலை இந்த வேலைன்னு பரபரப்பா சுத்துவேன், இப்போ ஒன்னுமே செய்யாம சும்மா இருக்குற மாதிரி இருக்கு..பாப்பாவை பார்த்துக்கறேன் கூட எதாவது வேற வேலையும் குடுங்களேன்” என்றான்.

“உங்க அய்யாவோட விலை மதிப்பில்லாத பொருள் வர்ஷினி! அதுதான் உன்கிட்டே விட்டிருக்கார், எனக்கு புரியுது, இப்போ அவர் கிட்ட யாரும் பேச முடியாது இல்லையா.. உன்னாலயே சமாளிக்க முடியலை.. நீ கூட இருக்கேன்ற தைரியத்துல தான் நாங்க அவங்க அவங்க வேலையை பயமில்லாம பார்க்குறோம்”

“இருந்தாலும் ரொம்ப சிநேகிதம் சார்.. நான் சொன்னாலும் கேட்கறது இல்லை!”

“திரும்பவும் நான் பேசறேன்” என்று பத்து சொல்லும் போதே ரஞ்சனி வந்து விட்டாள்.

அழகான ரஞ்சனி இன்னும் இன்னும் பத்துவின் கண்களுக்கு அழகாகத் தெரிந்தாள். இதற்கு அங்கிருந்து அவள் செல்லும்

ஹாஸ்பிடல் ஒரு பத்து நிமிட பயணம் அதற்காக இவன் அதிகமான தூரத்தைக் கடந்து வருவான்.

“இன்னைக்கு எங்க காலேஜ்ல..” என்று ஆரம்பித்து ரஞ்சனி பேசிக் கொண்டே வர, பத்துவிற்கு சலிப்பாகத் தான் இருந்தது. ஆனால் ரஞ்சனியும் வேறு என்ன பேசுவாள், படிப்பு, ஹாஸ்பிடல் என்று தான் அவளின் உலகத்தைக் கொண்டு செல்கிறாள், இதில் அவன் தனக்காகத் தான் வருகிறான் என்று கூடப் புரியாதவளா என்ன? அதற்காக தான் உற்சாகமாக காட்டிக் கொள்கிறாள், பேசவும் செய்கின்றாள். ஆனால் இதைத் தவிர இப்போது அவளுக்கு வேறு வருவது இல்லையே, அவளும் தான் என்ன செய்வாள்.

பத்துவிற்கும் பேச்சை வளர்க்கத் தெரியாது. ஒரு வருட திருமண வாழ்க்கை இருவருக்கும் என்ன கொடுத்திருக்கிறது என்று சொன்னால் இருவருக்குமே சொல்லத் தெரியாது.

மிகுந்த மன அழுத்ததில் இருந்தாள்.. யாரிடமும் எதுவும் சொல்லிக் கொள்வதில்லை.. அதைக் கண்டு கொள்ளும் அளவிற்கு இன்னும் பத்துவிற்கு தெரியவில்லை.

ஏனென்றால் திருமணம் ஆனா நாள் முதலாக ரஞ்சனியை இப்படி தானே பார்க்கின்றான்.

பத்து மௌனமாகக் கார் ஓட்ட.. ரஞ்சனியும் விடாமல் வளவளத்தாள்.

**நீ ! நான் ! நாம் ?**

## அத்தியாயம் முப்பத்தி மூன்று :

**நான்! எனது! மனது!**

ரஞ்சனியும் பத்துவும் சென்று விட, முரளியும் அலுவலகத்தில் இருக்க, ஷாலினி சமையலை மேற் பார்வை பார்க்க, தாத்தா தோட்டத்தில் நடைப் பயிற்சியில் இருக்க, கமலம்மா ராஜாராமுடன் இருந்தார்.

முகம் கழுவி உடை மாற்றி என்ன இருக்கிறது சாப்பிட என்று பார்த்து, அப்படியே ஷாலினியுடன் ஒரு பத்து நிமிடம் பேசி, பின்பு அம்மா அப்பா இருக்கும் இடம் சென்று சாப்பிட்டுக் கொண்டே அங்கே ஒரு அரைமணிநேரம் இருந்து, பின்னர் ரூம் வந்து டி வீ பார்த்து திரும்பவும் உணவு உண்டு, மேலே உறங்க வந்த போது

ஒன்பது மணி தான். பிறகு சற்று நேரம் தொலைபேசியில் தோழிகளுடன் அரட்டை..

எல்லாம் செய்தாலும் ஏதோ ஒன்று அவளுக்குக் குறைந்தது.. எல்லோரும் தன்னுடைய வயதில் இப்படித் தான் இருப்பார்களா? இல்லை நான் மட்டுமா என்ற நினைப்பும் கூடவே.

எப்படியோ ஒன்பது மணிக்கு படுக்கையில் விழுந்தவள், அப்படிப் புரண்டு, இப்படிப் புரண்டு படுக்க, அதற்கு மேல் இரண்டு மணிநேரம் ஆகியது. தினமுமே இப்படித்தான் உறக்கம் மட்டும் வருவதில்லை. உடல் சோர்ந்து உறக்கம் வேண்டும் என்றாலும் உறக்கம் வருவதில்லை.

சொல்லப் போனால் அன்று விரைவில் உறங்கி விட்டால் என்று தான் சொல்ல வேண்டும். எப்பொழுதும் ஒரு மணி ஆகிவிடும். இதற்கு உறக்கம் வரவில்லை என்று டீ வீ முன்போ இல்லை முகநூல் இல்லை கம்ப்யுடர் இல்லை போன் என்று எதற்கும் போக மாட்டாள். அப்பொழுதும் உறக்கம் வராது தினமுமே இப்படித்தான்.

யாரிடம் சொல்வாள் எனக்கு உறக்கம் வருவதில்லை என்று, யாரிடமும் சொல்ல மாட்டாள். இதற்கு எல்லோரும் பார்த்து பார்த்து தன அவளைக் கவனிப்பர்.

காலையில் லேட்டாக விழித்தவள், அவசரமாகக் கிளம்பி.. உணவு உண்ணாமல் செல்ல முயல..

“சாப்பிடாம போகாத!” என்று ஷாலினி நின்றாள்.

“அண்ணி லேட் ஆகுது!”

“காலையில சாப்பாடு சாப்பிடாம இருக்கக் கூடாது, அப்புறம் வெயிட் தான் போடும்” என்றாள் ரஞ்சனி, அவளும் கிளம்ப அவசரமாக உண்டு கொண்டிருந்தாள்.

“நான் எப்போ அண்ணி ஒல்லியாகணும் சொன்னேன்!” என்ற வர்ஷினி கமுக் மொமுக் கென்று தான் இருந்தாள். குண்டு என்ற வரையறைக்குள் வரமாட்டாள், ஆனால் ஒல்லி கிடையாது.. பூசினார் போன்ற உடல் வாகு தான்.. உயரம் இருப்பதால் அதிகம் தெரிவிக்கவில்லை.

அது ஒரு வனப்பு, எல்லோரையும் திரும்பி பார்க்க வைக்கும் வனப்பு.. முகத்தில் அந்தக் குழந்தைத் தன்மை, அந்தச் சருமம், அந்தக் கண்கள்..

“வர்ஷினி யூ நீட் டு பீ பிஃட்”

“அதெல்லாம் என்னால முடியாது... வயிறு நிறையச் சாப்பிடணும்”

“அப்போ சரி, வாக்கிங்காவது போ!”

“அதெல்லாம் வயசானா போயிக்கலாம்!” என்று சாப்பிடாமல் மீண்டும் கிளம்ப எத்தனிக்க,

“தாஸ் அவ சாப்பிடலைன்னா கார் எடுக்காத..” என்று பத்து சொல்ல,

எல்லோரையும் பார்த்து முறைத்துக் கொண்டே உணவு உண்ண அமர்ந்தவள்,

“தாசண்ணா! இன்னைக்கு நீங்க ரஞ்சனி அண்ணியைக் கொண்டு போய் விடுங்க, என்னை பத்துண்ணா கொண்டு போய் விடுவாங்க!” என்று கத்த..

ரஞ்சனிக்கு சிரிப்பு, அதையும் விட ஷாலினிக்கு இன்னும் சிரிப்பு, வாய் விட்டு சிரிக்க, “ஈசி ஷாலினி! இப்படிச் சிரிக்காத எங்கயாவது பிடிச்சிக்க போகுது என்றாள் ரஞ்சனி.

ஷாலினியை விட ரஞ்சனி பெரியவள் என்பதால் பேர் சொல்லித்தான் அழைப்பாள், அதுவும் இப்போது அதட்டியது மருத்துவராக, ஆம்! ஷாலினி ஏழு மாத கர்ப்பம்.

உணவு உண்டு, “எடுங்க காரை!” என்று பத்துவை நோக்கி சொல்ல திரும்பினால் அவன் ஆளே இல்லை, ரஞ்சனி அவளைப் பார்த்துக் கொண்டே “அதெல்லாம் முன்னமே போயிட்டாங்க, இனி நீ கிளம்பின பிறகு தான் வருவாங்க” என்று சொல்லி அவளும் போக,

சிரித்துக் கொண்டே வர்ஷினி கிளம்பியவள், தாஸுடன் கல்லூரி செல்ல, வழியில் ஒரு இடத்தில் பரபரப்பு அற்ற ஒரு சாலையில் ஒரு பெண்ணிடம் மூன்று  இளைஞர்கள் எதோ தகராறு செய்வது போல தூரத்தில் இருந்து பார்க்கும் போதே தோன்ற,

அருகில் வந்ததும் “நிறுத்துங்க தாசண்ணா!” என்றாள். வாகனங்கள் சில கடந்து சென்றன தான். ஆனால் யாரும் நிறுத்தவில்லை. ரோடின் அந்தப் புறம் அது நடக்க, “என்னன்னு போய்ப் பாருங்க தாசண்ணா!” என்றாள்.

“நீங்க காரை விட்டு இறங்காதீங்க பாப்பா!” என்று சொல்லிக் கொண்டே தாஸ் இறங்கி சாலையைக் கடக்க முற்பட, அதற்குள் ஒருவன் அந்தப் பெண்ணின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான்.

தாஸ் நெருங்கி, “டேய்! என்ன அந்தப் பொண்ணு கை பிடிச்சு ஏன் இழுக்கறீங்க?” என்று ஒரு அதட்டல் போட.. அவனின் ஆஜானுபாகுவான தோற்றம் அங்கிருந்தவர்களுக்கு பயம் கொடுத்தாலும் பின் வாங்கவில்லை.

“தெரிஞ்சவங்க, ஃபிரண்ட்” என்ற ஒருவன், “வா போவோம்!” என்று மீண்டும் பெண்ணின் கைப் பிடித்து இழுக்க..

“அய்யோ, எனக்குத் தெரியாதுங்க அண்ணா, என்னை விட்டுட்டு போகாதீங்க!” என்று அந்தப் பெண் கத்த,

“டேய், என்னங்கடா பண்றீங்க?” என்று தாஸ் கேட்கும் போதே எதிர்பாராத விதமாக.. ஒருவன் கையினில் இருந்த இரும்புத் தடி போன்ற ஒன்றினால் தாஸின் தலையில் ஒரேப் போடாக போட..

அந்த இடத்தை கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்த வர்ஷினியே எதிர்பார்க்கவில்லை, இதில் தாஸ் எப்படி எதிர்பார்ப்பான், அப்படியே மடங்கி அமர.. அந்தப் பெண்ணை ஒருவன் இழுக்க.. அவள் திமிர..

இங்கிருந்து பார்த்திருந்த.. வர்ஷினி பதறி அருகில் ஓடிப் போக முயன்றால். அதற்குள் தாஸ் எழ முற்பட, மீண்டும் அருகில் இருந்தவன் அடிக்க வர அதை தடுக்க முற்பட்டான் தாஸ்,

அதற்குள் அங்கே பைக்கில் வந்த இளைஞன் ஒருவன், பைக்கை அப்படியே விட்டு வேகமாக வந்து ஒரு எத்து விட, ஒருவன் ஓட ஆரம்பித்தான்.. தாஸை அடித்தவனும் ஓட ஆரம்பிக்க.. அந்தப் பெண்ணை பிடித்தவன் வேகமாக இழுக்க. அவளின் உடை கிழிந்தது. அதற்குள் அந்த இளைஞ்சன் அவனையும் அடிக்க, அவனும் விட்டு ஓட ஆரம்பித்தான்.

உடை கிழிந்த பெண் அப்படியே மடங்கி அமர.. வர்ஷினி அதற்குள் அருகில் வந்திருந்தாள், அவளிருந்தது ஒரு ஜீன்ஸ் டி ஷர்ட் என்ன செய்வாள், தடுமாறி நிற்க, அந்த இளைஞன் யோசிக்காமல் திரும்பி அந்தப் பெண்ணை மறைத்தவாறு நின்று ஷர்ட் கழற்றி, “அவங்க கிட்ட குடுங்க!” என்றான்.

அந்தச் செய்கை, அந்தப் பெண்ணின் புறம் கண்களைச் சிறிதும் திருப்பாமல், அவளை மறைத்த செய்கை, வர்ஷினியை மிகவும் கவர்ந்தது.

“வாங்கிப் போடுங்க சீக்கிரம்!” என்று வர்ஷினி சொல்லும் போதே கூட்டம் கூட ஆரம்பிக்க... அவளை மறைத்தவாறு வர்ஷினி நின்று போட உதவவும்.. சில நொடிகளில் அந்தப் பெண்ணும் போட்டுக் கொள்ள,

அதன் பிறகு தான் தாஸின் புறம் திரும்பினாள் வர்ஷினி..

தாஸ் கையைத் தலையில் பிடித்தவாறு இருக்க, “ரொம்ப அடியா தாசண்ணா?” என்ற படி வர்ஷினி கேட்க, அந்த இளைஞன் அவர்களை விழியகற்றாமல் பார்த்து இருந்தான். சொல்லப் போனால் அப்போதுதான் சரியாகப் பார்த்தான்.

அந்த பெண் அழ.. “யாரு அவங்க?” - வர்ஷினி,

“இந்தப் பக்கம் போகும் போதும், வரும் போதும் பார்ப்பாங்க, ஒரு நாள் ஐ லவ் யு சொன்னான், நான் கண்டுக்கலை இப்போ கல்யாணம் பண்ணலாம் வான்னு கைபிடிச்சு இழுக்கறான்” என்று தேம்பிக் கொண்டேச் சொல்ல..

“உங்க வீடு எங்க? விட்டுட்டுப் போறோம்!” என்ற வர்ஷினி,

“தாங்க்யூ வெரி மச்!” என்று அந்த இளைஞனைப் பார்த்து சொன்னவள், அவன் வெற்றுடம்புடன் நிற்க.. “உங்களுக்கு ஷர்ட்?” என்று இழுத்தாள்,

அவன் பதில் பேசாமல் பார்த்து நிற்க.. அதற்குள் எவனோ செல்லில் படம் எடுக்க முற்பட..

“டேய், வீணாப் போனவனுங்களா உங்களுக்குப் புத்தின்றதே கிடையாதா.. எங்க எது நடக்கும் எடுப்போம்னு திரிவீங்களா? போங்கடா! உங்க வீட்டுப் பொண்ணை எடுங்கடா..!” என்று தாஸ் சத்தம் போட, இருந்த இரண்டு மூன்று பேர் அவசரமாக களைந்து சென்றனர்.

“தாசண்ணா, நீங்க கார் போங்க!” என்றவள், “வா யாரும் பார்க்கும் முன்ன போயிடுவோம்!” என்று அந்தப் பெண்ணையும் அழைத்துச் சென்றாள்.

ரோட் கிராஸ் செய்து திரும்பிப் பார்க்க, அந்த இளைஞன் நின்ற இடத்திலேயே நின்றிருந்தான். தாஸும் அவனைப் பார்த்தான்.. அவனின் முகம் தாடிக்குள் இருக்க.. தாஸிற்குத் தெரியவில்லை.

அந்தப் பெண்ணை காரில் அமர வைத்து, “இருங்க தாசண்ணா!” என்று அந்த இளைஞனிடம் விரைந்தவள், “உங்களுக்கும் ஏதாவது அடிப்பட்டதா? நான் கவனிக்கலை! யு நீட் எனி ஹெல்ப்!” என,

“தேவையில்லை” என்பது போலத் தலையசைத்தான்.

அந்த இளைஞனின் பார்வை ஏதோ செய்ய, அந்தப் பார்வையில் என்ன இருந்தது என்று ஆராய முற்பட்டாள். தெரியவில்லை!

“ஆர் யு ஃபைன்” என்றாள் திரும்பவும், எதற்கு அப்படிப் பார்க்கிறான் என்று புரியாமல்,

“எஸ்” என்பது போலத் தலையாட்டினான்,

“நான் சங்கீத வர்ஷினி ராஜாராம்!” என்று முழுப்பெயரையும் சொல்லி அறிமுகம் செய்ய,

“ஐ அம் அஸ்வின் பிரகாஷம்!” என்று அவள் போலவேச் சொல்லி, தீர்க்கமாக வர்ஷினியைப் பார்த்தான், அதுவும் அவளின் நீல நிறக் கண்களை.

உலகின் ஒரு மூலையில் ஒருவன் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்க.. “ஒரு விடுமுறைக்கு போயேன்.. அவளின் முகத்தை கற்பனையிலாவது வேலையின் ஞாபகம் இல்லாமல் ரசி!” என்று மனது சொல்ல.. விடுமுறைக்குக் கிளம்பினான்.

அவன் சென்ற இடத்தில், ஆர்பரிக்கும் அலைகளின் சத்தம் மட்டுமே கேட்க, ஆங்கங்கே ஒன்றிரண்டு பேர் இருக்க... எல்லாம் இயற்கையின் ரசிகர்கள். அவர்கள் எதிரில் பரந்து விரிந்த கடல் மாதா.. நீல கடலும் நீல வானமும் கண்ணுக்கெட்டாத தூரத்தில் சந்தித்தது... அந்தக் கடலில் ஒரு கப்பலும் இருந்தது.

கடலின் நீலம் பார்ப்பவர் கண்களை பறிக்க, எங்கிருந்து வானம் ஆரம்பிக்கிறது என்று பார்த்திருக்க, அப்படிக் கடலைவிண்ணையும் வெறித்துப் பார்த்து,

கப்பலின் விளிம்பில் நின்று, அந்த நீல நிறத்தை நோக்கி இருந்தவன், அதன் அழைப்பை உணர்ந்து, சற்றும் யோசியாமல் குதித்து, தண்ணீரைப் பிளந்து உள்ளே வேகமாக சென்றவன், அதன்

ஆழத்தில் எதைத் தேடுகின்றோம் என்று தெரியாமல் தேடலில் இருந்தான்.

அந்த ஒருவன் ஈஸ்வர் என்கின்ற விஸ்வேஸ்வரன்.

சில மணிநேரங்கள் அந்தத் தண்ணீரில் ஊறிக் கிடந்தவன், மெதுவாகத் திரும்ப கப்பலில் ஏறினான். அங்கிருந்த மாலுமி ஒருவன் உணவு தயார் என்று கூற, சென்று அந்தக் கடலில் கிடைத்த சிலவற்றை சமைத்து வைத்திருந்தை ஒரு கட்டு கட்டியவன்,

“இன்றைக்கு இரவு இருப்போம், நாளை காலை கரை திரும்பி விடலாம்” என்றான். அப்படிச் சொல்லும் போதே, திரும்ப இந்த ஏகாந்தத்திற்கு வர்ஷினியுடன் தான் வரவேண்டும் என்று தீர்மானம் எடுத்தது.

எப்போது வரும் அந்த நாள் என்று எதிர்பார்ப்பை வளர்த்தது. பார்க்க வேண்டும் என்ற ஆவல் மனதினில் ஆக்ரோஷமாய் கிளம்ப, உன்னை யார் சிறிது மாதம் பார்க்க மாட்டேன் என்று சொல்லச் சொன்னது என்று எப்போதும் போல மனது சண்டை பிடித்தது..

அவளைக் கடைசியாகப் பார்த்த பொழுது “யாருமில்லாத இடத்துக்கு உன்னை தூக்கிட்டு போகணும் போலத் தோணுது” என்று சொன்னதை நினைத்துப் பார்த்தான், அப்படி ஒரு இடம் தான் அது..

ஆள் அரவமற்ற தனிமை.. சில வரையறுக்க முடியாத சப்தங்கள்.. காற்றா? கடலா? கப்பலா? கடல் வாழ் ஜீவராசிகளா?, சொல்ல முடியவில்லை.

பக்கத்தில் வர்ஷினி வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது. “அவளிடம் தவறாக நடந்திருக்காமல், காதல் சொல்லியிருக்கலாம் தானே ஏன் சொல்லவில்லை?” என்ற சப்தம் அவனின் மனதினில்.

“ஐஸ்வர்யாவுடன் நீ தீர்மானித்தது உன்னுடைய வாழ்க்கையை, அதைக் காதல் என்று சொல்லி அவளின் மனதை கலைத்த பெரும் பாவத்தையும் சேர்த்து வைத்திருக்கிறாய்”

வர்ஷினியிடம் செய்தத் தவறை விட, ஐஸ்வர்யாவிடம் காதல் சொன்ன தவறு இன்னும் மனதை அழுத்தியது. அந்தத் தவறுக்கும் தண்டனையாய், நான், எனது, எல்லாமே என்று இருந்ததை கொடுத்து வந்திருக்கின்றான். நான் என்ற அகம்பாவத்தை விட்டு வந்திருக்கின்றான்.

“நான் ஐஸ்வர்யாவின் ஞாபகத்தில் சிறிதும் இல்லாத வாழ்க்கை அவளுக்கு அமைய வேண்டும்” என்று ஒரு பிரார்த்தனை மனதினில் ஓடியது.

இருள் கவிழ ஆரம்பிக்க, அந்தக் உப்புக் காற்றை ஆழமாக சுவாசித்தான். அந்த சுவாசத்தில் வர்ஷினி வேண்டும் என்ற உணர்வு அல்ல அந்தச் சுவாசமே அவளுக்காக என்பது போன்ற உணர்வு..

திரும்பப் போகலாமா இல்லை இன்னும் சிறிது அவளுக்கு அவகாசம் கொடுக்கலாமா என்ற தீவிர யோசனை மனதில் கவிழ்ந்தது.. இருளாய் அல்ல வெளிச்சமாய்...

**எத்தனை கோடி படை கொண்டு
வந்தாலும் மாயையே –
நீ சித்தத் தெளிவெனுந்
தீயின் முன் நிற்பாயோ –
மாயையே ( பாரதி )**

## அத்தியாயம் முப்பத்தி நான்கு :

**நிலையற்ற இவ்வுலகில் நிலையானது பற்று.. எதன் மீது என்பது நிலையற்றது.. ஆனால் பற்று நிலையானது!**

தாசிற்கு அஸ்வினைத் தெரியவில்லை.. அஸ்வினின் தோற்றம் பெருமளவு மாறி இருந்தது. நன்கு தெரிந்தவர்கள் என்றால் கண்டுபிடிக்க முடியும்.. ஓரிரு முறை பார்த்தவன் என்பதால் தாடியுடன் இருக்கும் முகம் சுத்தமாய்த் தெரியவில்லை.

அந்தப் பெண்ணை வீட்டில் விட்டு தாஸை ஹாஸ்பிடல் அழைத்துப் போனாள், “நீங்க வீட்டுக்குப் போங்க இன்னைக்கு காலேஜ் வேண்டாம், நான் பார்த்துக்கறேன்” என்ற போதும் விடவில்லை.

“பாப்பா! நீங்க வர்றது தெரிஞ்சா அப்பா திட்டுவாங்க”

“பரவாயில்லை திட்டு வாங்கிக்கங்க!” என்று சொல்லி தாஸை அழைத்து சென்று அவனுக்கு ஒரு சீ டி ஸ்கேன் ஒன்று எடுத்து ஒன்றுமில்லை என்று சொன்ன பிறகு தான் விட்டாள். அதுவே நேரம் ஆகிவிட, வீட்டில் இறங்கி, “உங்களுக்காக நான் ரெண்டு நாள் எங்கயும் போகலை, நீங்க தைரியமா வீட்ல ரெஸ்ட் எடுங்க தாசண்ணா!” என்றும் சொல்லி அனுப்பினாள்.

வீட்டில் அந்த நேரத்திற்கு வரவும், “என்ன?” என்று ஷாலினி கேட்க, வர்ஷினி சொல்ல, அப்போது கூட கமலம்மாவும் இருக்க, “எதுவும் பிரச்சனை இழுத்து விட்டுக்காத!” என்றார் கவலையாக.

“ஹய்யோ பெரியம்மா! எனக்கு இத்தனை பேர் பாதுக்காப்பா இருக்கீங்க யார் என்ன செய்ய முடியும், இப்படியிருக்குற நாம மத்தவங்களுக்கு உதவி செய்யலைன்னா எப்படி? நல்லதே நினைங்க பெரியம்மா, நல்லதே நடக்கும்!” என்று சொல்ல...

ஆனாலும் அவருக்கு மனது சமாதானம் ஆகவில்லை, தாஸை ஒருவன் தாக்கினான் என்றால், இவளையும் ஏதாவது செய்து விட்டால் என்ற பயம் ஓடியது.

அதை மக்களிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றவில்லை.. கணவர் படுக்கையில் இருந்தாலும் அவரிடம் தான் சொல்லத் தோன்றியது. சொல்லி விட்டார்.

அவரின் எல்லா கடமைகளும் முடிந்து விட்டன என்று சொல்ல முடியாதபடி வர்ஷினி தான் நின்றாள்.

நாள் முழுவதும் யோசனை. முரளி வந்ததும் “ஈஸ்வர், வர்ஷினியைக் கல்யாணம் பண்ணக் கேட்கறான் சொன்ன, பின்ன கொஞ்ச நாள் போகட்டும் அவ சின்ன பொண்ணு சொல்றான்னு சொன்ன, இன்னும் அந்த சம்மந்தம் இருக்கா? இல்லையா?” என்றவர்,

“இல்லைன்னா வேறப் பார்க்கலாமே!” என்றார்.

“என்னப்பா திடீர்ன்னு?”

“காலேஜ் முதல் வருஷம் முடிக்கப் போறா.. அவ கல்யாணம் முடிக்காம போனா எனக்கு என்னோட சாவு நிம்மதியைக் கொடுக்காது” என்றார்.

“என்னப்பா இப்படி எல்லாம் பேசறீங்க?” என்றான் அதிர்ந்து..

“ஏதோ ஒன்னு எனக்கு சொல்லுது, அவளைத் தனியா விட்டுப் போகாதன்னு!”

“அப்பா! நாங்கல்லாம் இருக்கோம்! அவளை நல்லாப் பார்த்துக்குவோம்!”

“இது அப்படியில்லை முரளி, நான் சொல்றது அவக் கல்யாணம்!” என்றார்.

“அப்பா!” என்று அருகில் அமர்ந்தவன், ஈஸ்வர் முடிவுல எந்த மாற்றமும் இல்லை” என்றவன், “நம்ம பதிலுக்காகத் தான் காத்திருக்கான்!” என்றான்.

“நம்ம பதிலுக்கா?”

“அது... வர்ஷினி பதிலுக்கு!” என்று சொல்ல,

“எப்போ பேசினான் அவக் கிட்ட, பேச வேண்டிய அவசியம் என்ன?” என்று கோபப்பட..

“அது, அவன் பேசலை! வர்ஷினி தான் பேசியிருக்கா!” என்று தயங்கி சொல்ல,

“எதுவும் என்கிட்டே சொல்லலை! ஏன் படுக்கையில இருந்தா அப்பா ஒன்னுத்துக்கும் உதவாதவன்னு நினைச்சியா?” என்று சொல்ல, படுக்கையில் இருந்தாலும் பேசும் கம்பீரம், கோபம் எதுவும் குறைவில்லை.

“அப்படியெல்லாம் இல்லை அப்பா” என்று பதறியவன், “அது அப்போ, நான் உங்கக் கிட்ட பேசினப்போவே. அதுக்கு அப்புறம் இதைப் பத்தி யாரும் பேசலை” என்றான்.

“வர்ஷினியைக் கூப்பிடு!” என்றார், அவர் சொன்ன விதமே கோபம் என்று காட்ட..

“எதுக்குப்பா?”

“சொன்னதைச் செய்!”

கூப்பிட்டு விட, “என்ன பாப்பா? பெரிய வேலையெல்லாம் அப்பாக் கிட்ட சொல்லாம செய்யறீங்க..” என கோபமாகச் சொல்ல,

பார்த்திருந்த முரளிக்கு பயமாக இருந்தது, ஆனால் வர்ஷினி சிறிதும் கவலைப்படவில்லை

“எதைப் பா சொல்றீங்க?” என்றாள் கூலாக,

“எதையெல்லாம் செய்யற?”

“நிறையச் செய்றேன் எதைன்னு சொல்ல?” என்றாள், அவருக்கு மிகுந்த கோபம் என்று புரிந்தது. எதைச் செய்தோம் புதிதாக என்று யோசனையும் ஓடியது. அதனாலேயே எப்போதையும் விட கூலாக இருப்பதாகக் காட்டிக் கொண்டாள்.

அதற்குள் கமலம்மாவும் வந்தார், மூன்று பேரும் இருப்பதை பார்த்து அப்போதுதான் வீட்டிற்குள் நுழைந்த பத்துவும் வந்தான். ஷாலினி வரவில்லை, ரஞ்சனி வீட்டில் இல்லை, தாத்தா உறக்கத்தில்.

வர்ஷினியின் பேச்சில், அந்த வயதுக்கு உரிய துடுக்குத்தனம்.

"நீ ஈஸ்வர் கிட்டப் பேசினியா?"

"இது எப்பொழுது?" என்ற யோசனைகள் ஓட, ஈஸ்வர் ஏதும் சொன்னானோ என்றும் தோன்ற, "ஐயோ, திரும்ப வந்து விட்டானா!" என்ற பதட்டம் ஏறியது. "இல்லையே!" என்று அவள் ஸ்திரமாக பேச,

வர்ஷினியின் முகத்தில் புரியாத தன்மை பார்த்து, "அப்பா, ரொம்ப முன்னாடி பேசினதை சொல்றார்!" என்று முரளி சொல்ல,

பத்து இப்போது எதற்கு இந்தப் பேச்சு என்பதுப் போல பார்த்தான்.

அதை வாய்விட்டு கேட்கச் செய்தாள் வர்ஷினி, "அதை எதுக்கு இப்போ கேட்கறீங்க" என்று,

"நீயே ஈஸ்வர் கிட்ட கல்யாணம் வேண்டாம் சொன்னயா? ஏன் சொல்லணும்? எதுன்னாலும் எங்ககிட்ட தானே சொல்லணும்! நீ நேரடியா சொல்வியா பாப்பா? நாங்க எதுக்கு இருக்கோம்!" என்று ராஜாராம் பேச,

"அப்பா! நீங்கல்லாம் சொன்னா கேட்க மாட்டாங்க! சோ, நான் சொன்னேன், அவ்வளவு தான்! உங்ககிட்ட சொல்லக் கூடாதுன்னு இல்லை" என்று வர்ஷினி சொல்ல.

"என்ன பேசுகிறாள்?" என்று ராஜாராம் தீர்க்கமாகப் பார்க்க, பத்து குழம்பிப் போனான். "அவ்வளவு இவளுக்கு ஈஸ்வரைப் பற்றித் தெரியுமா?" என்று முரளி பார்த்திருந்தான்.

திரும்ப அப்பாவிற்கும் மகளிர்க்கும் நிறையப் பேச்சுக்கள், எல்லாம் வேடிக்கை தான் பார்த்திருந்தனர். இடையில் புகும் தைரியமுமில்லை, நிறுத்துங்கள் என்றும் சொல்ல முடியல்லை.

"அப்பா! ரொம்ப நேரமா பேசறீங்க டயர்ட் ஆவீங்க, அப்புறம் பேசலாம்!" என்று வர்ஷினியாகப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைக்க, அதை மகன்களும் மனைவியும் தொடர, அப்போதைக்கு பேச்சை விட்டார், ஆனால் விஷயத்தை விடும் எண்ணம் இல்லை.

மகளின் திருமண விஷயத்தை அவர் நிறுத்த வெல்லாம் இல்லை. அவ்வப்போது எண்ணம் தோன்றும் போது அப்பா மூலமாக வரன் பார்ப்பார் தான். மகன்களுக்கு தெரிவிக்க மாட்டார். அவருக்கே யாரையும் பிடிக்கவில்லை. அவருக்கு பிடிக்கும் என்ற நிலை வரும்பொழுது எதிரில் இருப்பவர் வர்ஷினியின் அம்மாவைப் பற்றிய கேள்வியை எழுப்ப.. ஒதுங்கி விடுவார்.

ஆனாலும் இதுவரை ஈஸ்வரின் பக்கத்தில் கூட யாரும் நெருங்கியதில்லை.. அழகு, படிப்பு, பழக்க வழக்கம், கம்பீரம் இப்படி.. பணம் அதிகம் என்று சொல்ல முடியாது. ஈஸ்வர் பைனான்ஸ் வேண்டாம் என்று சொல்லிச் சென்று விட்டானே! ஆனாலும் ஒன்றுமில்லாதவன் என்ற சொல்லுக்குள் வரமாட்டான் என்று தெரியும்.

மிகுந்த யோசனை அவருக்கு.. அந்த யோசனைகளில் உடல் நலம் பின்னடைய.. மறுநாள் காலையில் மருத்துவமனைக்கு மாற்றினர்.

சற்று நிலைப்பட்டதுமே சொன்ன முதல் வார்த்தை “எனக்கு ஈஸ்வரைப் பார்க்கணும்.. அவன் கிட்ட சொல்லு!” என்றார்.

“அப்பா, அவன் சிங்கப்பூர்...” என்று மகன் ஆரம்பிக்க.. “சொன்னேன்னு சொல்லு முரளி!” என்றார்.

முரளி ஈஸ்வரிடம் சொல்ல... ஏன் எதற்கு என்ற கேள்வியெல்லாம் கேட்கவில்லை.. இவன் மதியம் சொல்ல.. நள்ளிரவு சென்னை வந்து விட்டான்.

வந்தது நேரே ஹாஸ்பிடல் தான்.. அங்கே ராஜாராம் படுத்திருக்க.. கூட கமலம்மா மட்டுமே! அவர் உறக்கத்தில்..

வெளியில் வீட்டு வேலையாள் ஒருவன் அமர்ந்திருந்தான். கதவு திறக்கும் சத்ததிற்கே அங்கே பார்த்தார் ராஜாராம்.. ஈஸ்வரை அந்த நேரத்தில் எதிர் பார்க்கவில்லை, அவ்வளவு விரைவிலும் எதிர் பார்க்கவில்லை.

“எப்படி இருக்கீங்கப்பா?” என்றான்..

“இருக்கேன்!” என்பது போலத் தலையை ஆட்டினார். அவருக்கு இருந்த வலி வாதனைகள் அவருக்கு உலக விடுதலையை தான் வேண்டின.

அந்தப் பேச்சிற்கும் கமலம்மா விழிக்கவில்லை.. ஈஸ்வரின் பார்வை அவரைத் தீண்ட.. “இப்போ தான் தூங்கினா!” என்றார்.

“எதுக்குப்பா பார்க்கணும் சொன்னீங்க.. இப்போ பேசலாமா? காலையில வரட்டுமா?” என்றான்.

எந்தக் காரியத்தையும் உடனுக்குடன் செய்ய வேண்டும்.. ராஜாராமிற்குத் தள்ளிப் போடும் பழக்கமில்லை..

“ஒரு தடவை வர்ஷினியைப் பொண்ணு கேட்ட இல்லையா? இன்னும் அது அப்படியே இருக்கா? இல்லை நான் வேறப் பார்க்கட்டுமா?” என்றார். என்னவோ பேச்சில் ஒரு இறுக்கத்தை உணர்ந்தான். கூடவே ஒரு ஒட்டாத தன்மையையும்.

“ஏன்பா இப்போ திடீர்ன்னு கல்யாணப் பேச்சு.. எதுவும் பிரச்சனையை இழுத்து விட்டுக்கிட்டாளா?” என்றான் உடனே.

“இல்லையில்லை!” என்றவர்.. “என்னவோ எனக்குப் பண்ணிட்டா பரவாயில்லைன்னு தோணுது.. சரி உன்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு வேற பார்க்கலாம்னு.. முறையா அப்பா அம்மாக்கிட்டத் தான் பேசணும்.. ஆனா உன்கிட்ட ஒரு வார்த்தை பேசிடலாம்னு, பின்ன வேற பார்த்துகலாம்னு!” என்றார்.

“வேற பார்க்கறதுக்கு என்னை எதுக்குப்பா கூப்பிடணும்!” என்றான் புன்னகையுடனே.. “உங்களுக்கு என் மேல என்ன கோபம்?” என்றான் நேரடியாக..

“சொல்லத் தெரியலை!” என்றவர்.. “நீ சொன்ன அடுத்த நிமிஷம் வந்துட்ட எப்படி.. ஏன்?”

“அப்பா! நீங்க முதல்ல எனக்கு முரளியோட அப்பா! அப்புறம் எங்க சாம்ராஜ்யத்தை நிலை குலையாம காப்பாத்திக் கொடுத்தவர், அப்புறம் ரஞ்சனியோட மாமனார்.. அதுக்கு அப்புறம் வர்ஷினியோட அப்பா! உங்க சந்தேகம் தீர்ந்ததா?”

“சோ! உங்களைப் பார்க்க வந்தது முரளிக்காக தான் முதல்ல.. ஆனா எனக்கு வர்ஷினி தான் முதல்ல!” என்றான் திரும்பவும் நேரடியாக, எந்த பயமோ தயக்கமோ இன்றி.

“வர்ஷி உங்கக்கிட்ட என்ன பேசினான்னு எனக்குத் தெரியாது.. முரளி கிட்டயும் இதைத்தான் சொன்னேன், உங்கக்கிட்டையும் இதைத்தான் சொல்றேன்”

“கமலம்மா நிலைமை என்னைக்கும் அவளுக்கு வராது.. என்னோட வாழ்க்கைக்கு வர்ஷினி மட்டும் தான். நீங்க எனக்கு கல்யாணம் பண்ணிக் குடுத்தாலும் சரி, குடுக்கலைன்னாலும் சரி”

என்ன தைரியமாகப் பேசுகிறான் என்று பார்த்திருந்தார்.

“ஆனா ஒன்னு சொல்றேன், அவளை சமாளிக்கறது ரொம்ப கஷ்டம் கூட.. எனக்குக் குடுத்துடுங்களேன்..” என்றான். அவனின் வாய்மொழியில் இருந்த உண்மை அவனே அறியாமல். “எங்க வாழ்க்கை சந்தோஷமா இருக்கும். உங்க பொண்ணு சந்தோஷமா இருப்பா!” என்றான்.. எல்லாம் சிறு புன்னகையுடனே.

“வர்ஷினி கிட்டப் பேசறேன். பேசும் முன்ன உன்கிட்ட கேட்கணும் தான் கூப்பிட்டேன்!”

“உடனே பேசாதீங்க! ஒரு வாரம் போகட்டும்! நான் இங்க தான் ஒரு பத்து நாள் இருப்பேன். நீங்க தூங்குங்க, காலையில வர்றேன். நீங்க பேசின பிறகு நான் எங்க வீட்ல பேசறேன்!” என்று சொல்லிச் சென்றான்.

ஈஸ்வரைப் பார்த்ததும் வீட்டினருக்கு அவ்வளவு மகிழ்ச்சி. “விஷ்வா!” என்று பாட்டி கட்டிக் கொண்டார். “ஏன்டா, போற காலத்துக்கு என்னை ஒரு வழி பண்றே? இங்கயே வந்துடேண்டா?” என்றார்.

“நீ என்கூட வந்துடு பாட்டி” என.. “அப்போ நானு?” என்று அம்மா சொல்ல, பெரியம்மா என்று எல்லோரும் சொல்ல,

அதற்குள் சரண் வந்தவன் “சித்தப்பா!” என்று ஏறிக்கொள்ள, பிரணவி அன்ன நடையிட்டு வந்தவள், சித்தப்பாவைப் பார்த்ததும் அப்படியே பாட்டியின் பின் மறைந்தாள். பின்னே அவனின் ஸ்டைலை மாற்றி இருந்தானே.. பெரிய கிருதா விட்டு, தொங்கு மீசை விட்டு..

ரூபா அவனைப் பார்த்ததும் “இதென்ன கொள்ளைக் கூட்டத் தலைவன் மாதிரி இருக்க?” என்று கண்களை விரித்தாள்.

“அடப்பாவி! என்னைப் பார்த்தா உனக்கு அப்படித் தெரியுதா ரூப்ஸ்? இது லேட்டஸ்ட் ஸ்டைல்” என,

“பரவாயில்லை, என்னோட பப்ளிக்கு பிடிக்குதான்னு பார்க்கலாம்!” என்று மனதிற்குள் நினைத்தான்.

“நிஜம்மா, எப்படி நீட்டா ஹேண்ட்சமா இருப்ப.. இப்போ ஏன் இப்படி ஒரு லுக்?”

“சும்மா!” என்றான்.. அவனின் தோற்றத்தை மாற்ற விரும்பினான்... அவன் தவறி நடந்த போது இருந்த தோற்றம் வர்ஷினியின் நினைவுகளில் ஒரு வேளை இருந்து விட்டால் என்ற நினைவு தான்.

அவன் வந்ததில் வீடே அல்லோலகல்லோப்பட்டது.

ரஞ்சனிக்கும் தகவல் பறக்க, “ஓஹ்! வந்திருக்கின்றானா?” என்று ஓடியது. ஆம்! இருவருக்குள்ளும் பேச்சு வார்த்தை என்பது இல்லை.. இந்த ஒரு வருடமாக..

அவளின் அம்மா வீட்டில் தெரியும்.. ஈஸ்வர் என்ன காரணம் என்று சொல்லியதில்லை.. ரஞ்சனி நான் சொல்லாம கொள்ளாம கல்யாணம் பண்ணினதுல கோபம்!” என்று சொல்லி வைத்திருந்தாள். ஆனால் பத்துவின் வீட்டில் இருவரும் இதை யாருக்கும் தெரியவிடவில்லை. ஏன் பத்துவிற்குக் கூடத் தெரியாது...

எப்படி ஐஸ்வர்யாவை அவனால் ஏமாற்ற முடிந்தது. ரஞ்சனியால் அதைத் தாள முடியவில்லை.

ஐஸ்வர்யாவிடம் பேசிய போது, “நான் முடிக்கலை! உங்க அண்ணா தான் முடிச்சிக்கிட்டாங்க.. முடிஞ்சு போனது முடிஞ்சு போனதாவே இருக்கட்டும்.. நீயுமே இப்போ தள்ளி தானே போன, அப்படியே இருந்துக்கோ.. முடிஞ்சவரை நான் இதுல இருந்து வெளில வரப் பார்க்கிறேன். என்னைத் தொந்தரவு பண்ணாத!” என்றவள் தான், அதன் பிறகு ரஞ்சனியிடம் பேசவில்லை.

“எதுக்கு இப்படிப் பண்ணின?’ என்று ஈஸ்வரிடம் சண்டையிட்ட போது ,

“நான் பதில் சொல்ல வேண்டிய ஒரே ஆள் ஐஸ்வர்யா மட்டும்தான். நீ என்கிட்டே எந்தக் கேள்வியும் கேட்கத் தேவையில்லை” என்று முகத்தில் அடித்தார் போலச் சொல்ல..

அந்த பதிலை விட, பதில் சொன்ன விதம் காயப்படுத்தியது.

அதே சமயம், “இதை யார்க்கிட்டயாவது சொல்லி ஐஸ்வர்யாவை அசிங்கப்படுத்திடாத. இது எங்க பெர்சனல்!” என்றும் சொல்ல..

“பெர்சனல்லா அப்போ நான் யாருமே இல்லையா உனக்கு”

“அப்படி நீ என்னை நினைச்சு இருந்தா, உனக்கு ஒரு பிரச்சனைன்னப்போ என்கிட்டே வந்திருப்ப.. அதை விட்டு

எவனையோ கல்யாணம் செஞ்சிருக்க மாட்ட!” என்றான்.

“விஷ்வா!” என்று கத்தியவள், “பத்துவை மரியாதை இல்லாம பேசற வேலை வேண்டாம் புரியுதா!”

“ஓகே! பேசலை, நீ உன் இஷ்டம் போல செஞ்ச. இப்போ எதுக்கு என்னைக் கேள்வி கேட்கற, கேட்காத! உனக்கு பதில் சொல்லணும்னு எனக்கு இல்லை!”

இன்னும் காயப்பட்டு போனாள்.. “என்ன மாறினாலும் உன்னோட ஆணவம் மட்டும் மாறலை விஷ்வா!” என்றவள், அதன் பிறகு ஈஸ்வரிடம் பேசவில்லை..

சில மாதங்கள் ஏதாவது சமாதானம் வைத்திருப்பானா? வந்து பேசுவானா? என்று எதிர்பார்த்திருக்க.. பத்துவிடம் கூடப் பேசினான், அவளிடம் பேசவில்லை.. இதெல்லாம் அவளின் மன அழுத்தத்திற்குக் காரணம்...

இப்போது இதெல்லாம் மனதினில் ஓட.. சோர்ந்து போனாள்.. அதுவும் அவள் ஹாஸ்பிடல் செல்ல அங்கு ஈஸ்வர் இருந்தான்.

இவளைப் பார்த்ததும் ஆர்வமாகப் பார்த்தான்.. எப்படி இருக்கிறாள் என்பதுப் போல கண்களில் ஆராய்ந்தான். ஆனால் அவனாகப் பேசவில்லை. அவளிடம் தான் பேசவில்லை. பத்துவிடம் ஈஸ்வர் தானாக சென்றுப் பேசினான்.

பிடிக்கிறதோ? பிடிக்கவில்லையோ? வீட்டு மாப்பிள்ளை என்ற மரியாதைக் குறைய எதுவும் செய்ய மாட்டான்.

ஈஸ்வர் தன்னிடம் பேசாதது ரஞ்சனிக்கு இன்னும் கோபத்தைக் கிளப்பியது.. அந்தக் கோபத்தையெல்லாம் பத்துவிடம் திருப்பினாள். வேறு அவளும் தான் என்ன செய்வாள்.

“உங்க அண்ணா வந்திருக்காங்க இருக்கியா? இல்லை ஏதோ ஹாஃல்ப் டே இம்பார்டன்ட் செமினார் சொன்னியே, போறியா?” என்று கேட்க..

“எனக்கு டிரைவர் வேலை பார்க்கறதை விட்டு உருப்படியா ஏதாவது வேலை இருந்தா பாருங்களேன்!” என்று வார்த்தையைக் கடித்து துப்ப..

பத்துவின் முகம் சுருங்கியது. அதுவும் ரஞ்சனிக்கு வருத்தத்தை கொடுக்க..

“சாரி, ரொம்ப சுயனலாவதி ஆகிட்டேன் இல்லை நான்?”

“ப்ச், கணவன்கிட்ட சுயநலமா தான் இருக்கணும், அப்படி இருக்க முடியலைன்னா அது என்ன வாழ்க்கை! பொது நலமா இருக்கணும்னு அவசியமில்லை” என்றவன், “என்ன பிரச்சனை இப்போ?” என்றான் நல்ல விதமாகே..

“தெரியலை! ஐ திங்க் ஐ அம் ட்ரபிலிங் யு!” என்று சொன்ன போதே கண்களில் நீர் திரண்டது.

“நீ வா, எங்கயும் போகாத! முதல்ல வீட்டுக்குப் போகலாம்!” என்று சொல்லி உடனே அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.. ரஞ்சனி சாதரணமாக அழுபவள் எல்லாம் இல்லை. அவளின் முகமும் சரியில்லை.

இதை எல்லாம் ஈஸ்வர் கவனிக்கவில்லை.. அவன் முரளியிடம் பேசிக் கொண்டிருந்தான். வாய் தான் பேசிக் கொண்டு இருந்ததே தவிர..

எதுவுமே அப்போதைக்கு ஈஸ்வரின் ஞாபகத்தில் இல்லை... அவனுக்கு வர்ஷினியைப் பார்க்க வேண்டும்.. அவன் எப்படி உணருகிறான் என்று சுய ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இப்போதைக்கு அவனின் எண்ணங்கள் எல்லாம் அதைச் சுற்றியே.

ஆம்! மிகுந்த பயிற்சிக்கள் மனதிற்கும் உடலிற்கும். முதல் மூன்று மாதங்களில் ஆன்மீகம், யோகா, தீர்த்த யாத்திரை.. ஹிமாலய பயணம், கைலாஷ் மானசரோவர் பயணம் என்று சுற்றினான். மனதைக் கட்டுக்குள் வைத்திருக்க முயன்றான். வர்ஷினியைப் பார்க்கும் போது முன்பிருந்த எந்தத் தடுமாற்றதையும் அவன் விரும்பவில்லை.

க்ஷண தடுமாற்றங்கள் அவன் வாழ்வை மட்டுமல்ல, வர்ஷினியின் வாழ்வையும் பொருளில்லாமல் செய்ய வல்லவை என்று புரிந்தவன். இங்கே பொருள் எனப்படுவது சுயத்தைக் குறிப்பது. இச்சகத்தின் பொருள் அல்ல.

பின்பு தான் சிங்கப்பூர் பயணம்..அங்கு வசிப்பிடத்தை மாற்றிக் கொண்டான்.. தொழில் ஈஸ்வர் பைனான்ஸ் அட்வைசர்.. அவன் நேரடியாக அங்கு இல்லை.. ஆனாலும் முக்கிய முடிவுகள் அவனின் சம்மதம் பெற்ற பிறகே! அதுமட்டுமல்லாமல் ஆன்லைன் ட்ரேடிங்.. பங்குச் சந்தை வர்த்தகம் என நிறைய..

கண்கள் ஆட்கள் உள் வரும் பாதை பார்த்து இருக்க.. அதன் வழியாக வெளியே சென்ற ரஞ்சனியோ பத்துவோ கவனத்தில் பதியவில்லை.

ஒரு கால் பேசுவது போல, முரளியிடம் இருந்து விடுபட்டு மெதுவாக வெளியில் வந்தான்.

அய்யாவிற்கு உடம்பு சரியில்லை என்றதுமே தாஸ் அன்று வந்திருந்தான். அவன் தான் வர்ஷினியை அழைத்து வந்தான். வர்ஷினி இறங்கவும் பத்துவும் ரஞ்சனியும் அவர்களின் காரை நெருங்கவும் சரியாக இருந்தது.

வர்ஷினி அவர்களைப் பார்த்ததும் அருகில் சென்று, “அப்பா, எப்படி இருக்கார்?” என்றுக் கேட்க.. ரஞ்சனி எதுவுமே பதில் சொல்லவில்லை. பத்து தான் “இப்போ நல்லா இருக்கார்” என்று சொல்ல.. ரஞ்சனியை ஆராய்ந்த வர்ஷினி பத்துவிடம் சைகையில், “அழுதார்களா”, என்பது போலக் கேட்க,

“ஆம்!” என்று தலையாட்டினான்..

“நீங்க என்ன பண்ணுனீங்க?” என்று மிரட்டும் வகையில் இடுப்பில் கைவைத்து சைகையில் கேட்க..

“நான் ஒன்னும் பண்ணலை!” என்று கையசைத்தவன், “நாங்க போறோம்!” என்று சைகையில் சொல்லிக் கார் ஏறினான். .

இது எதுவுமே ஈஸ்வரின் கவனத்தில் பதியவில்லை.. அவன் வர்ஷினியைப் பார்த்தது பார்த்தபடி நின்றான். அந்த நீல நிறக் கண்களை அருகில் பார்க்க வேண்டி.. பார்த்தாலும் முன் போல உணர்வுகள் தன்னுள் பிரவாகமாக எழுகிறதா, இல்லை ரசிக்க முற்படுகிறதா என்று.

ஈஸ்வர் வருவான் என்று கனவா கண்டாள் வர்ஷினி. ரஞ்சனி அழுதது மனதினில் ஓட, அவள் தன் வேக நடையுடன் ஈஸ்வரைக் கடந்து செல்ல முயன்றாள். அவள் அவனைக் கவனிக்கவேயில்லை.

அவள் கடக்கும் போது, “ஹாய் வர்ஷ்!” என குரல் கேட்க, “எவன்டா அவன், என் பேரை இப்படி உரிமையாச் சொல்றான்” என்று நினைத்தபடி வர்ஷினி திரும்பினாள். ஈஸ்வரின் எண்ணம் சற்றும் இல்லை, அங்கு ஈஸ்வரை எதிர்பார்க்கவேயில்லை.

“அச்சோ, வந்துவிட்டானா!” என்ற உணர்வு.. ஆம்! விட்டு விலகிவிடுவான் என்று நினைத்ததில்லை. மனதின் ஒரு மூலையில்

அவன் ஞாபகம் கூட. ஆனால் இப்படி திடீரென்று குதிப்பான் என்று நினைக்கவில்லை.

விழிவிரித்து அவனைப் பார்த்தாள்... அந்த நீல நிறக் கண்களை பார்க்க தவமிருந்தவன்.. இப்போது அதையேப் பார்த்தான்.

“ஹாய் சொன்னா, சொல்ல மாட்டியா நீ!” என்று சுவாதீனமாகக் கேட்டபடி அவளின் கண்களைத் தான் பார்த்தான். உணர்வுகளும் முன் எழவில்லை, ரசிக்கவும் முடியவில்லை.. மூழ்கவும் தோன்றவில்லை.

ஏதோ ஒரு வித்தியாசம்.. விடாமல் பார்த்தான்.

“என்ன ஆச்சு உன் கண்ணுக்கு?” என்று கேட்க,

“என்ன? என்ன ஆச்சு? ஒன்னும் ஆகலையே!” என்றாள் அவசரமாக.

“இல்லை, என்னவோ வித்தியாசம்” என்று ஈஸ்வர் விடாமல் சொல்ல,

வர்ஷினியின் மனதினில் ஒரு பதட்டம், ஈஸ்வரின் பார்வையை எதிர்கொள்ள முடியாமல்.. “ஒன்னுமில்லை!” என்றுச் சொல்லி வேகமாக உள் விரைந்தாள்.

ஈஸ்வரின் மனதினில் ஒரு கலவரம் மூண்டது.

**என்னைக் கெடுப்பதற் கெண்ணமுற்றாய் கெட்ட மாயையே! - நான்**
**உன்னைக் கெடுப்ப துறுதியென்றே யுணர் மாயையே!**

**( பாரதி )**

## அத்தியாயம் முப்பத்தி ஐந்து :

ஈஸ்வரின் இலகுவான மனநிலை அப்படியே மாறியது.. நிற்காமல் செல்லும் அவளைப் பார்த்தான்.

ஒரு திருப்பத்தில் பார்வையில் இருந்து மறைய.. அவளின் பின் சென்றான். அதற்குள் அப்பாவின் ரூம் சென்றிருந்தாள்.

ஈஸ்வர் உள்ளே செல்லவில்லை... அவள் வெளியே வருவதற்காக காத்திருந்தான். முரளி உள்ளே சென்றிருந்தான். கிட்ட தட்ட பதினைந்து நிமிடம் வெளியே பொறுமையாக நின்றிருந்தான். மனது ஏதோ சரியில்லை என்று அடித்துச் சொன்னது.

முரளியோடு தான் வர்ஷினி வெளியே வந்தாள்.. மீண்டும் கவனிக்காதது போல "முரளிண்ணா கார் வரை வாங்க" என்று சொல்லி முரளியை அழைக்க..

ஈஸ்வர் முரளியைப் பார்த்த பார்வை "நீ உள்ளே போ" என,

எப்படி வர்ஷினியின் வார்த்தையைத் தட்ட முடியும்.. அங்கே அந்த சமயம் முரளி அண்ணனாகிப் போனான் நண்பன் அல்ல. முரளி ஈஸ்வரை பார்த்தவாறு வர்ஷினியுடன் செல்ல..

அதுவரை இருந்த பொறுமை பறந்தது.. "இப்போ எதுக்கு என்னைப் பார்த்து ஓடற நீ" என்று காட்டமாக வர்ஷினியிடம் கேட்க,

"ஈஸ்வர் என்ன இது?" என்றான் முரளி.

முரளியின் புறம் திரும்பக் கூட இல்லை.. "என்ன பண்ணிட்டு இருக்க? என்னைப் பார்த்து பயந்து ஓடற" என்றான் தீவிரமாக..

மனதில் ஒரு பதட்டம் வர்ஷினிக்கு ஏற ஆரம்பித்தது. ஆனாலும் அதை வெளியில் காட்டாமல்.. "எனக்கு ஒரு பயமும் இல்லை.. நான் என்ன பண்ணினாலும் உங்க கிட்ட சொல்லணும்னு இல்லை புரியுதா?" என்றாள் கோபமாக..

முரளி, "வர்ஷினி என்ன இது?" என்று சொன்னவன்.. "ஈஸ்வர்!" என்று அவனையும் அடக்கினான்.

ஈஸ்வர் வர்ஷினியை சிறிது நேரம் பார்த்தவன்.. இது கோபமாகப் பேசும் நேரம் அல்ல என்று புரிந்து... முகத்தை அமைதியாக்கினான். பின்பு முரளியைப் பார்த்து "வர்ஷினியை அனுப்பிட்டு வா" என்றவன்.. ராஜாராமின் ரூம் நோக்கிப் போய்விட.. அவ்வளவு சீக்கிரம் வார்த்தையை முடித்துக் கொண்டானா என்ற யோசனை மனதில் ஓடியது.

திரும்ப முரளியைப் பார்த்து, "அண்ணா உன்னோட ஃபிரண்ட் அப்பாக் கிட்ட என்ன பேசினாலும் என்கிட்டே சொல்லணும்.. என்கிட்டே யாரும் சொல்லாம விட்டீங்க.. என்ன பண்ணுவேன்னு எனக்குத் தெரியாது.. நான் ஹாஸ்டல் போய்டுவேன்!" என்று முரளியை மிரட்டி செல்ல..

என்ன நடக்கிறது என்று புரியாமல் குழம்பிப் போய்விட்டான் முரளி. “வர்ஷினி இப்படியெல்லாம் பேசாத! உன்னை யாரும் எங்கேயும் அனுப்ப மாட்டோம் புரிஞ்சதா?” என்றான் முரளியும் கடுமையாகவே.. “பிடிச்சாலும் பிடிக்கலைன்னாலும் வீட்ல இருந்து தான் சண்டை போடணும், வெளிய போறேன்ற வார்த்தை வரக் கூடாது!” என்றும் கோபமாகச் சொல்ல..

முரளி அதிகம் கோபமாகப் பேச மாட்டான்.. அவன் கோபப்படவும் தணிந்தவள், பதில் பேசாமல் முறைத்துச் செல்ல..

முரளிக்கு என்னவாகுமோ என்று பயமே வந்தது.. “வர்ஷினிக்குப் பிடிக்கவில்லை, இந்த ஈஸ்வர் வற்புறுத்துகின்றானோ! சரியில்லையே!” என்ற எண்ணம் தோன்ற ஆரம்பித்தது.

உள்ளே ராஜாராமிடம், “அப்பா, நீங்க வர்ஷினிக் கிட்டப் பேசுங்க.. ஒரு வாரம் எல்லாம் வெயிட் பண்ண வேண்டாம்.. காலையில வீட்ல பாட்டி என் கல்யாணத்தைப் பத்தி பேசினாங்க.. கிரக நிலை மாறுது இன்னும் ரெண்டு மூணு மாசத்துல பண்ணிடணும்ன்னு.. சோ வர்ஷினி இல்லைனா வேற யாரையாவது பண்ணி வெச்சிடுவாங்க”

“நீங்க சொன்னா நான் பாட்டிக் கிட்டப் பேசணும்.. அவங்க ஒத்துக்கறது ரொம்ப சிரமம்” என்றான்.

ஆம்! தள்ள வேண்டாம், திருமணம் முடித்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் வேரூன்றியது. ஏனென்று தெரியவில்லை.. உள் மனது சொல்ல.. அதற்காக இல்லாத விஷயத்தை இட்டு கட்டினான், பாட்டி திருமணம் பேசினார்கள் என்று.

ஆனால் ஒரு உண்மை என்னவென்றால் அவர்களின் சம்மதம் கிடைப்பது மிகவும் கஷ்டம் என்று தெரியும்.

சம்மதித்தால் சரி! சம்மதிக்காவிட்டால், எதிர்த்தாவது திருமணம் செய்வது என்ற முடிவிற்கு சில நிமிடத்திற்கு முன் வந்து விட்டான்.

யாரும் எதுவுமே அவனுக்குத் தடையில்லை.. ஆனால் வர்ஷினி!!

ஒரு வேலை உடம்பு சரியில்லாமல் இருக்குமோ? அவளுக்குத் தெரியாமல் போய்விட்டதோ என்ற எண்ணம் தோன்றிய நிமிடம், “இதோ வந்திடறேன்ப்பா” என்று வெளியில் வேகமாகச் சென்றான்.. வேக நடைகளால் ஓடினான் என்றே சொல்ல வேண்டும்.. தாஸ் காரை ஹாஸ்பிடல் வெளியில் நகர்த்த ஆரம்பித்து.. அதன் கேட்டில்

எண்ணை பதிந்து கொண்டிருக்க.. வேகமாக சென்றவன்.. அவர்களைப் பிடித்து விட்டான்.

தாஸ் அவனைப் பார்த்ததும், “சார்! எப்போ வந்தீங்க” என்றான் முகம் மலர்ந்து.

“தாஸ்! நீ பின்னாடிப் போ!” என்றவன் டிரைவர் சீட்டினில் ஏற முயல.. வர்ஷினி கதவை திறந்து இறங்க முயன்றாள்...

அந்தச் செயல் அப்படி ஒரு கோபத்தை ஈஸ்வருள் கிளப்ப, “இறங்கின என்ன பண்ணுவேன்னே தெரியாது! உட்காரு!” என்று ஈஸ்வர் அவளிடம் விரல் நீட்டிப் பேசிய விதத்தில் பயந்து போனாள். இப்படி ஒரு ஆக்ரோஷத்தை அவனிடம் பார்த்ததில்லை. மனதை ஒரு பயம் தீவிரமாக அழுத்தியது. அந்த முகத்தில் அப்போது தெரிந்த அச்சத்தை ஈஸ்வர் கவனிக்கவில்லை.

சில நொடிகள் தயங்க.. அதில் தாஸ் இறங்கி ஈஸ்வர் ஏறியிருந்தான். தாஸ் ஒன்றும் சொல்லவில்லை, நாளுக்கு நாள் வர்ஷினிக்கு அதிகரித்து வரும் புதுப் புது நண்பர்கள், அவனுள் ஒரு அச்சத்தைக் கொடுத்தனர். யாராவது வர்ஷினியை கட்டுக்குள் வைத்தால் பரவாயில்லை என்ற எண்ணம் அதோடு, தாசை அவன் ஒன்று இறக்கிப் போகச் சொல்லவில்லை, பின் தானே அமரச் சொன்னான். சொன்னதை செய்தான்.

தாஸ் பின் அமர.. சிறிது தூரம் ட்ராபிக்கில் கலந்தவன்... வழியில் இருந்த ஒரு பைவ் ஸ்டார் ஹோட்டலின் உள் சென்று பார்க்கிங்கில் காரை நிறுத்தி.. “தாஸ்! நாங்க சாப்பிடப் போறோம் வர்றியா?” என,

தாஸ் என்ன சொல்லுவான்.. “நான் இங்க இருக்கேன் சார்!” என்றான்.. அதே சமயம் தனியாகச் சாப்பிட அனுப்பவும் பயம்.. அய்யாவிற்குத் தெரிந்தால் திட்டுவார் எனத் தோன்ற.. தடுமாறி நின்றான்.

“உன்னைக் கேட்பாங்கன்னு தெரியும்! எங்களோட சாப்பிடாத, ஒரு இடத்துல தூரமா உட்கார்ந்துக்கோ. அங்க உட்கார்ந்து சாப்பிடு” என்றவன்..

“எனக்குப் பேசியே ஆகணும் இறங்கு!” என்று ஈஸ்வரின் குரலில் இருந்த தீவிரம் மறு பேச்சு பேசாமல் வர்ஷினியை இறங்க வைத்தாலும்.. இப்போது பயம் எல்லாம் இல்லை “என்னை செய்துவிடுவாய் என்னை? பார்த்து விடுகிறேன்!” என்ற இறுமாப்பு தோன்ற இறங்கினாள்.

அப்போது தெரிந்த அவளின் கண்களின் பாவனையில் சற்று ஆசுவாசப்பட்டான் ஈஸ்வர்.. அப்போது அந்தக் கண்கள் தெளிவாக இருந்தது, காலையில் பார்த்தது போல ஒரு மயக்கம் இல்லை.

அதில் எரிச்சலுற்றவள், “என் கண்ணை வேணாப் பிடுங்கி உங்க கைல குடுத்துட்டா அப்போ என்னை விட்டுடுவீங்களா? எதுக்கு இப்படி ஒரு கிரேசி பிஹேவியர்.. பைத்தியம்மாயிடப் போறீங்க!” என்றாள் அலட்சியமாக ..

அவளைப் பார்த்தவன்.. “உன் கண்ணை ஏன் பிடிங்கணும்னு நினைக்கிற.. உன்னோட கண் உன்னைப் பார்க்கிறதுக்கான ஒரு கதவு எனக்கு அவ்வளவு தான்.. நீ என் கண்ணைப் பிடுங்கி அதைப் பார்க்க முடியாமப் பண்ணினாலும் நீ தான் எனக்கு வேணும்.. உன்னை ஹர்ட் பண்றதைப் பத்தி எப்பவும் நினைக்காத, என்னைப் பண்ணு” என்றான் மிகவும் தீவிரமாக.

எதற்கு இவனுக்கு இவ்வளவு தீவிரம் என்று மனதில் ஒரு பயம், ஒரு அழுத்தம், மீண்டும் வர்ஷினிக்கு. “ஏன் இப்படிப் பண்றீங்க? உங்களுக்கு பிடிச்சா எனக்கும் பிடிக்கணும்னு இல்லை! ஏன் உங்களுக்குப் புரிய மாட்டேங்குது” என்றாள் முகத்தில் ஒரு கலவரத்தை தேக்கி.

அதை ஈஸ்வர் கவனத்தில் கொள்ளவில்லை. அவளின் வார்த்தையின் சாராம்சத்தைக் கவனித்தவன்,

சட்டென்று விடுபட்டவனாக “தேங்க்ஸ்! எனக்கு உன்னை பிடிச்சிருக்குன்னு ஃபீல் பண்றதுக்கு, எனக்கே அது ரொம்ப நாள் புரியலை!”

“ஐயோ, கடவுளே! திரும்பவும் முதலில் இருந்தா” என்பதுப் போல ஒரு பார்வை பார்த்தாள்.

“வா!” என்று அவன் உள்ளேப் போக.....

“யாரையாவது உதவிக்கு அழைப்போமா என்ன இது?” என்று மனதில் ஒரு சப்தம் தோன்றியது. அந்த இடத்தில் தாஸை அவள் கருத்தில் கொள்ளவில்லை.

திரும்ப தைரியத்தை வரவழைத்து “ச்சே! இவனிற்கு பயப்படுவதா பார்த்து விடுவோம்!” என்று யோசித்தபடி மெதுவாகப் பின் தொடர்ந்தாள். ஆனாலும் ஒரு பயம் எழுவதைத் தடுக்க முடியவில்லை. பின் தொடர்ந்தாள்.

காலை நேர பரபரப்பு சிறிதும் இல்லாமல் இருந்த அந்த ரெஸ்டாரன்ட் உள் சென்று.. ஓர் இருக்கையில் அமர்ந்தான். அவளும் சென்று அமர்ந்தாள். தாஸ் அவர்களைப் பார்த்த படி வேறு இடத்தில் அமர்ந்தான்.

“உனக்கு ஏதாவது உடம்பு சரியில்லையா? நீ நான் முன்ன பார்த்த மாதிரி இல்லை. எனக்கு எதோ வித்தியாசமா தோணுது” என..

“என்ன வித்தியாசமா தோணுது?” என்றாள் அவனைக் கூர்மையாகப் பார்த்தபடி, முதல் முறை அவன் அப்படி சொன்ன போது இருந்த தடுமாற்றம் இல்லை.

“உன்னோட கண்ணு எப்பவும் ரொம்ப அட்ராக்டிவா, சார்மிங்கா இருக்கும். ஏதோ எனக்கு வித்தியாசம் தெரிஞ்சது, அப்போ உன்னைப் பார்த்த உடனே, இப்போ பரவாயில்லை”

“உனக்கு ஏதாவது உடம்பு சரியில்லையா. எதுக்கும் பார்த்துடலாமா? அப்பாக்கு நிறைய ப்ராப்ளம்ஸ் இருக்குத் தானே!” என்றான்.

“இல்லை, ஐ அம் பெர்ஃபெக்ட்லி ஆல்ரைட், அதுக்கு அவசியமில்லை, உங்களுக்கு என் மேல இருக்குற அட்ராக்ஷன் குறைஞ்சு இருக்கும். அதுதான் அப்படி தோணுது, என்னை விட்டுடுங்க!” என்றாள் தணிவாகவே.

சலித்த பாவனையை முகத்தில் கொண்டு வந்தவன் “என்ன பண்றேன் நான், உன்னை ஒன்னுமே பண்ணலையே” என்றான்.

“இல்லை! யு  ஆர் ட்ரபிலிங் மீ டு தி எக்ஸ்ட்ரீம்!”

“என்ன? நான் என்ன பண்ணினேன்! நைட் தான் இந்தியாவே வந்தேன், இந்த ஒரு வருஷமா நான் உன்னைப் பார்க்கலை, கான்டாக்ட் பண்ணலை! எதுவுமே பண்ணலையே!”

“யு நோ ஃபிசிகல் ஹராஸ்மென்ட் விட, மெண்டல் ஹராஸ்மென்ட் இன்னும் அதிகம். சொல்லப் போனா உங்க ஃபிசிகல் ஹராஸ்மென்ட்ல இருந்து கூட அப்போவே வெளில வந்துட்டேன். ஆனா இது முடியலை” என்று வர்ஷினி சொல்லும் பொழுது அவளின் குரலில் இருந்த கலக்கம் வெகுவாக ஈஸ்வரை அசைத்தது.

“என்ன பண்றேன் நான்?” என்றான்.

“என்ன பண்ணலை?” என்றாள் ஆவேசமாக.

“கொஞ்ச நாள் உன்னைப் பார்க்க மாட்டேன், ஆனா திரும்ப வருவேன், யாரையாவது கல்யாணம் பண்ணினாக் கூட உன்னைத் தான் நினைப்பேன் சொல்றீங்க.. இப்படி ஒருத்தங்க சொல்லும் போது எதுவுமே இல்லாத மாதிரி எப்படி என்னால நார்மலா இருக்க முடியும்”

“என்னைப் பார்த்து நல்லா இருக்கியான்னு கேட்கறீங்க? எப்படி நல்லா இருப்பேன்.. நான் நிம்மதியா தூங்கி எவ்வளவு நாள் ஆச்சு” என்று சொல்லும் பொழுது கண்கள் கலங்கியது.

முகத்தில் ஒரு ஆதரவற்ற தன்மை..

அணைத்து அறுதல் சொல்ல மனம் துடித்தது. என்ன செய்வது என்று புரியாமல் விழித்தான். இப்படி அவள் நினைத்துக் கொண்டு இருப்பாள் என்று நினைத்ததே இல்லை. வெளியில் காட்டிக் கொள்வது போல இல்லாமல் மனதளவில் தைரியம் குறைவோ என்று தோன்றியது.

“சாரி! ஐ அம் ரியல்லி சாரி! எப்பவும் உன்கிட்ட எது பண்ணினாலும் தப்பாப் போயிடுது” என்று ஈஸ்வர் சொன்ன போது, அவனின் முகம், குரல் உடல் மொழி, எல்லாம் மன்னிப்பை மட்டுமே வர்ஷினியிடம் வேண்டியது.

“அப்போ என்னை விட்டுடறீங்களா?’

“விடறதுன்னா புரியலை… நான் உன்னை ஒண்ணுமே பண்ணலையே!”

“அது எனக்கு சொல்லத் தெரியலை! சம்திங் டிஸ்டர்ப்ஸ் மீ, யார்கிட்டயும் சொல்ல முடியலை.. அப்பாக்கு தெரிஞ்சா உங்களை கொன்னே போட்டுடுவார்!”

“அப்போ உங்க அப்பாக்கிட்ட சொல்லிடேன். எனக்கு ஒன்னும் பயம் கிடையாது. ஈஸ்வர் அவ்வளவு ஈசி கிடையாது. ஒரு வேலை நீ நினைக்கிற மாதிரி உங்கப்பா என்னைக் கொன்னுட்டா, உனக்கு என்கிட்ட இருந்து விடுதலை தானே!”

“ப்ச்! காட்டிக் குடுக்கணும்னா நீங்க என்கிட்டே தப்பா நடந்தப்போவே காட்டிக் கொடுத்திருப்பேன்!”

“கொடு! உன்னை யாரு வேண்டாம் சொல்றா, எதுக்கு இப்படி உன் மனசை வருத்திகிட்டு இருந்து இருக்க!” என்றான் உண்மையாக.

“அது என்னால முடியாது!”

“உன்னால முடியாது தானே! அப்போ எனக்கு உன்னோட லைஃப்ல ஒரு சேன்ஸ் கொடு!”

“என்னது சேன்ஸ்ஸா???? எதுக்குக் குடுக்கணும்????” என்றாள் காட்டமாக.

“ஒன்னு என்னைக் காட்டிக் கொடு, இல்லை சேன்ஸ் கொடு! ஏதாவது ஒன்னு நீ பண்ணு!” என்றான் ஸ்திரமாக.

வர்ஷினியின் முகத்தினில் ஒரு ஆத்திரம் பொங்க, “உனக்குத் தெரியாது நீ என்ன பண்ணிட்டு இருக்கேன்னு! உனக்குத் தெரியாது! யு ஆர் கில்லிங் மீ ஃப்ரம் மை இன்சைட்!”

“இவ்வளவு சொல்றேன், திரும்பத் திரும்ப பேசினா என்ன அர்த்தம்.. யு ஆர் கோயிங் டு ஸ்பாயில் மீ டோட்டலி, யு நோ என்னோட பதினெட்டாவது பிறந்த நாள் அன்னைக்கு தான் நீ என்கிட்டே அப்படி நடந்த, நாளைன்னுக்கு என்னோட பத்தொன்பதாவது பிறந்த நாள்.. இந்த ஒரு வருஷமா நான் மனசளவுல அனுபவிக்கிற டார்ச்சர் எனக்குத் தான் தெரியும்” என்று வர்ஷினி சொல்லச் சொல்ல அதிர்ந்து போனான்.

“உனக்குப் புரியாது.. நீ ஒரு பாதுக்காப்பான குடும்ப சூழ்நிலையில பிறந்து வளர்ந்த! என்னோட ஃபீலிங்க்ஸ் உனக்குப் புரியாது, உன்னை எல்லோரும் ரொம்ப மரியாதையா தான் பார்ப்பாங்க, என்னைப் பத்தி தெரியாதவங்க என்னை மரியாதையா தான் பார்ப்பாங்க! ஆனா தெரிஞ்சிட்டா ஐ அம் லுக்குட் டவுன் இன் திஸ் சொசைட்டி, ஆனா எனக்கு அது ஒரு பெரிய விஷயம் கிடையாது, நீ கூட என்னை முதல் நாள் அப்படித்தான் பார்த்த!” என்றாள் மரியாதை எல்லாம் கைவிட்டு.

“ஆனா யு சி.....” என்று ஆரம்பித்தவள், “எல்லாம் உன்கிட்ட என்னால சொல்ல முடியாது!” என்று சொல்லி முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டாள்.

ஈஸ்வருக்கு ஒன்று நன்கு புரிந்தது, முதலிலும் அதைத்தான் சொன்னாள், இப்பொழுதும் அதைத்தான் சொல்கின்றாள்.. மிகவும் மரியாதையான ஒரு வாழ்க்கையை எதிர்பார்க்கின்றாள் என்று புரிந்தது.

“என்னால நீ எதிர்பார்க்கிற எல்லாம் கொடுக்க முடியம் வர்ஷி!”

முகத்தை நிமிர்த்தவே இல்லை.. சிறிது நிமிடங்கள் கழித்து நிமிர்ந்தாள், கண்களில் நீர் நிறைந்து இருந்தது.

“ஆனா எனக்கு வேண்டாம், நீ எனக்கு வேண்டாம், நீ என்னை ரொம்ப கீழ நினைச்சு என்கிட்டே மிஸ்பிஹேவ் பண்ணிட்ட. இப்போ அதைச் சரி பண்ணக் கல்யாணம் பண்ண நினைக்கிற. எனக்குத் தெரியும், நீ எனக்கு வேண்டாம்!” என்றாள் பிடிவாதமாக..

“ஹேய், அப்படியெல்லாம் இல்லவே இல்லை!” என்றான். ஆனாலும் ஐ லவ் யு என்ற வார்த்தையைச் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் ஏற்கனவே அதை ஒரு பெண்ணிடம் சொன்ன ஒரு தயக்கம்,

வர்ஷினியின் மனதைத் தேற்றுவது தான் இப்பொழுது முக்கியம் போலத் தோன்ற,

“ஒகே ஃபைன்! நீ என்ன சொன்னாலும் கேட்கறேன், நீ இவ்வளவு மனசு கஷ்டப்படாத, என்னோட தொல்லையில்லாம இருப்பேன்னு நினைச்சேன்! ஆனா நீ என்னைப் பத்தியே நினைச்சிட்டு இருந்திருப்பன்னு எனக்குத் தெரியாது!” என்றான்.

ஆம்! இந்த வருடமாக ஈஸ்வரின் நினைவுகளே!!!

அவனை நம்பாமல் பார்த்தாள்,

“நம்பு! உனக்காகத்தான் உன்னைப் பார்க்காம இருக்க ட்ரை பண்ணினேன்! உனக்காக உன்னை நினைக்காம இருக்கவும் ட்ரை பண்றேன்” என்றான்.

அது முடியாது என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும்! ஆனாலும் இப்போது வர்ஷினியின் மன அமைதி மிகவும் முக்கியமாகப பட்டது. நீ அவளை நினைத்ததை விட அவள் உன்னைப் பற்றி அதிகமாக நினைத்துக் கொண்டிருந்திருகின்றாள் என்று புரிந்தது.

“நீ என்ன பண்ணிட்டு இருக்கேன்னு உனக்குத் தெரியாது?” என்ற வார்த்தை ஒரு அச்சத்தைக் கொடுத்தது . தன்னிடம் இருந்து தப்பிப்பதற்காக அவள் எந்தச் சிக்கலிலும் மாட்டிக் கொள்ளக் கூடாது என்று மனம் பதறியது.

அந்தப் பதற்றத்தை முகத்தினில் காட்டவில்லை. “இனிமே இப்படி அழக் கூடாது, எல்லோரும் இருந்தாலும் யாரும் இல்லைன்னு நினைக்கக் கூடாது, ஏதாவது கஷ்டமா இருந்தா என்னை டார்ச்சர்

பண்ணு! என்ன வேணா பண்ணு! ஆனா நீ இப்படி ஃபீல் பண்ணக் கூடாது"

"நான் கெட்டவன் எல்லாம் இல்லை. உன்கிட்ட எதோ தடுமாறிட்டேன், ஆனா அது உன்கிட்ட மட்டும் தான்.. நீ கண்டிப்பா இதை நம்பணும். நீ ஏன் இதை மனசுல இவ்வளவு நாளா வெச்சிருந்த, என்னைக் கூப்பிட்டு பேசியிருக்கலாம் தானே!"

"நீங்க வந்துட்டா! அதனால கூப்பிடலை! சமயத்துல ஃபோன் செஞ்சு கண்டபடி திட்டணும் போல ஆத்திரம் வரும்.. ஆனா அதையே சாக்கா வெச்சு நீங்க வந்துட்டா.. அந்தப் பயத்துல கூப்பிடலை" என்றாள்.

"சரி! இப்போ தான் வந்துட்டேன் தானே! திட்டிக்கோ!" என்று கைகளைக் கட்டி அமர்ந்தான்.

மெலிதாக அவளின் முகத்தில் ஒரு முறுவல், கூடவே "கண்டிப்பா என்னை விட்டுடுவீங்க தானே!" என்றாள் காரியத்திலேயே கண்ணாய்.

"கண்டிப்பா!!" என்று அதே முறுவலோடு திரும்ப சொன்னவன், "ஆனா நீயா என்கிட்டே வரமாட்டியே!" என்றான்.

"ஓஹ்! வரவைக்க முடியும்ன்னு அவ்வளவு நம்பிக்கை இருக்கா?"

இவ்வளவு நேரமாக கண்களைத் தவிர்த்து முகத்தை பார்த்து பேசியவன், இப்போது கண்களைப் பார்த்தான், பார்த்தவன் சிறிது நேரம் அவளின் சோர்ந்த விழிகளை ரசித்தான், ஆனால் வாய்மொழியால் பதில் சொல்லவில்லை,

என்ன சொல்லப் போகிறான் என்று ஆர்வமாகப் பார்த்தாள், அந்த ஆர்வத்தில் அவளின் கண்கள் சிறிது பளிச்சிட,

"ஏதாவது சொல்லித் திரும்ப உன்னோட மூட் ஸ்பாயில் ஆகிடப் போகுது! கிளம்பு நீ!" என்றான்.

ஆம்! அவளின் பேச்சுக்கள் உயிர்வரை வலித்தது, இப்போது எது சொன்னாலும் வேண்டாம் என்ற பேச்சுத் தான் வரும் என்று புரிந்து அமைதியாக இருந்தான். அதே சமயம் இப்போது சற்று நன்றாக இருக்கின்றாள் என்று புரிய, அதே மனநிலையோடு அனுப்ப முற்பட்டான்.

ஆனாலும் ஈஸ்வருக்கு இருந்த ஒரே நம்பிக்கை, இப்படி யாரிடமும் அவள் பேச மாட்டாள் என்று தோன்றியது. கூடவே “உன்னையே பிடிக்கலை. இன்னும் யாரையும் அவளுக்குப் பிடிக்காது!” என்று உள்மனது சொல்லியது. இயல்பு குணமான திமிர் ஒரு புறம் தலை தூக்கிய போதும், மனது முழுவதும் ஒரு பயம்.. “விட்டுப் போய்விடுவாளோ?” என்று.

அந்த பயம் முகத்தில் தெரிந்து விடாமல் இருக்க மிகுந்த பிரயர்த்தனப்பட்டான்.

வர்ஷினியின் முகம் சற்று மலர்ந்து இருக்க,

“உனக்கு என்னைப் பிடிக்குதோ? பிடிக்கலையோ? நாம சேர்ந்து இருக்கப் போறோமோ, சேரலையோ, எப்பவும் உனக்காக நான் இருப்பேன்றதை மனசுல வெச்சிக்கோ.. எதுன்னாலும் என்கிட்டே வா! இல்லை என்னைக் கூப்பிடு. தனியா இருக்கோம்ன்னு எப்பவுமே ஃபீல் பண்ணாத... நான் ஏதாவது பண்ணிடுவனோன்னு பயப்படாத! நான் உன்னை பாதிக்கற மாதிரி எதுவும் பண்ண மாட்டேன். உன்னோட எய்டீன்த் பர்த்டேல இருந்து நைன்டீன்த பர்த்டே வரை மறந்துடு”

“அப்போ என்னை விட்டுட்டீங்களா” என்று கண்களில் ஆர்வம் மின்னப் பேச, அந்த நீல நிறக் கண்களின் விசை ஈர்ப்பு அதிகமாக ஆரம்பித்தது.

“ஹய்யோ! இவ என்னை நல்லவனா இருக்க விடமாட்டா போலவே!” என்று திணற ஆரம்பித்தான்.

“கண்டிப்பா விட்டுடேன்! நீயா வந்து என்னைக் கட்டிப் பிடிச்சாக் கூட நான் உன்னைக் கட்டிப் பிடிக்க மாட்டேன்” என்றான் சிரிக்காமல்.

“பேச்சை பாரேன்!” முகம் சுணங்கிய போதும், ஈஸ்வர் சொல்லிய பாவனையில் வர்ஷினிக்கு சிரிப்பு மலரத் துடித்தது. ஆனாலும் சிரிப்பை அடக்கி அந்தப் பேச்சை வளர்க்காமல் ஒரு தலையசைப்போடுக் கிளம்ப,

அவளின் மாற்றங்களைக் கண்டவன், “இரு, ஏன்னு கேட்டுட்டுப் போ!” என்றான்.

“ஏன்?” என்ற பாவனையில் நிற்க,

“வஞ்சனையில்லாம சாப்பிடற போல, குண்டாகிட்ட அதுதான்!” என்றான் மீண்டும் சிரிக்காமல்.

“நான் ஒன்னும் குண்டு இல்லை!” என்று ஆரம்பித்தவள், “என்ன பேச வந்தோம்? என்ன பேசிக் கொண்டு இருக்கின்றோம்!” என்றுத் தோன்ற, அவளுடைய தலையில் அவளே செல்லமாகத் தட்டிக் கொண்டு திரும்ப நடந்தாள்.

“இவன் நிஜமாகத் தான் சொல்கிறானா? என்னை விட்டுவிடுவானா?” என்ற யோசனையோடு வர்ஷினிப் போக, தாஸ் அவளின் பின் வேகமாகச் சென்றான்.

செல்லும் அவளையேப் பார்த்து இருந்தான் ஈஸ்வர்.. “விடுவதா? உன்னையா?. ஆனாலும் இவள் என்னுடைய எல்லா முடிவுகளையும் நொடியில் மாற்றி விடுகிறாள்” என்று தோன்றப் புன்னகை மலர்ந்தது.

## அத்தியாயம் முப்பத்தி ஆறு :

**இந்தக் காரிகை என்னை கட்டிப் போடுகிறாள், கட்டவிழ்த்து ஒடத் துடிக்கின்றேன்!!!**

ஈஸ்வருக்கு மனம் சோர்ந்து போனது, ஆரம்பித்த இடத்திற்கே திரும்ப வந்து நின்று விட்டோம் என்று புரிந்தது. நல்லவனாய் இருப்பது சுலபம், நல்லவனாய் நடிப்பது மிகவும் கடினமாக உணர்ந்தான்.

ஆம்! அவன் நல்லவன் தான்! இருவரைத் தவிர! ஐஸ்வர்யா, பிறகு வர்ஷினி.. “என்னை நினைக்காதே விடு!” என்றால் எப்படி விட முடியும்.. தூக்கி கொண்டு ஓடத் துடித்தது மனம். திரும்ப அவளிடம் உன்னை தொந்தரவு செய்ய மாட்டேன் என்று எப்படி சொல்ல முடியும். முடியாது என்று கத்தத் தான் தோன்றியது.

காதலையும் இனி காதல் மற்றும் விருப்பம் சொல்லாமல் நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகினான்.

என்ன செய்வது என்ற யோசனையோடே வீடு சென்றான். அங்கே திரும்ப அம்மா, பெரியம்மா, பாட்டி என்று சூழ்ந்து கொள்ள, எல்லோரிடமும் நேரத்தை செலவழித்தவன், சிறிது நேரம் உறங்கலாம் என்று ரூம் போக, அவனின் பின்னோடு வந்தாள் ரூபா.

“என்ன ரூப்ஸ்?” என,

“நான் ஒன்னு கேட்டா நீ தப்பா எடுத்துக்க மாட்டியே!” என்ற பீடிகையுடன் ஆரம்பித்தாள், முகமும் ஒரு தவிப்போடு இருந்தது.

“என்ன ரூப்ஸ் சொல்லு?”

“அது, அது, உனக்குப் பிடிக்காதுன்னு தெரியும்! இருந்தாலும்,” என்று ஆரம்பித்து நிறுத்தியவள், பிறகு முயன்று, “நீ ஐஸ்வர்யாவைக் கல்யாணம் பண்ணிக்கறியா? ஐஸ்வர்யாவை உனக்குப் பொண்ணு கேட்கலாமா? கேட்கலாமா இல்லை, நாம் இங்க அவளைக் கூப்பிட்டுக்குவோம். அவளும் என்னை மாதிரி அங்க வீட்டுக்குப் போகமாட்டா!” என்றாள்.

ஈஸ்வருக்கு பலமான அதிர்ச்சி.. “என்ன ரூப்ஸ் சொல்ற?”

“உனக்கு அப்பானால, அஸ்வின்னால எங்க வீட்டு சம்மந்தம் பிடிக்காதுன்னு தெரியும், பட் ஐஸ்வர்யா நல்ல பொண்ணு! அவளோட ஜாதகமும் அவ்வளவு அருமையா இருக்கும், அழகு இருக்கு, படிப்பு இருக்கு, என்ன பணம் இல்லை! அப்பா அண்ணன் சரியில்லை! ஆனா உனக்கு நல்ல மேட்ச் ஆவா!” என்றாள்.

மனம் பதைத்து விட்டான், ஒரு வேளை ஐஸ்வர்யா சொல்லி இருப்பாளோ என்பதுப் போல,

“என்ன திடீர்ன்னு இந்தப் பேச்சு?”

“இல்லை, எனக்கு ரொம்ப நாளா மனசுல எண்ணம் தான், அவ படிப்பு முடிக்கட்டும் பேசலாம்னு நினைச்சேன், அந்த சமயம் தான் நமக்கு நிறையப் பிரச்சனைகள், எதுவும் பேச முடியலை, அப்புறம் இந்த அஸ்வின் தேவையில்லாததை செஞ்சு ஜெயில் போனான், நீயும் சிங்கபூர் போயிட்ட”

“என் தங்கை அவ! அவளை எப்படி நான் அப்படியே விட முடியும்! என் வீட்டு ஆளுங்க செஞ்சு வெச்சிருக்குற வேலைக்கு, அவங்களா மாப்பிள்ளை பார்ப்பாங்க தோணலை, பார்த்தாலும் அமையும்னு தோணலை, ஆனா அதெல்லாம் காரணம் இல்லை!”

“ஐஸ்வர்யா கிட்ட குறைன்னு எதுவும் கிடையாது! அதுதான்!” என்று தவிப்போடு பேசினாள். எப்படியாவது ஈஸ்வர் ஒத்துக் கொள்ள வேண்டும் என்ற வேண்டுதல். ஒத்துக் கொண்டு விட்டால் பின்பு, அவளின் அப்பா அஸ்வின் ஒத்துக் கொள்ளாவிட்டாலும் நடத்தி விடலாம் என்ற நம்பிக்கை.

“ஐஸ்வர்யா எதாவது பேசினாளா?”

“சே! சே! அவளுக்கு இது பத்தியெல்லாம் தெரியாது. உன்கிட்ட பேசாம நான் அவ மனசுல ஆசை வளர்க்கக் கூடாது இல்லையா!” என்று ரூபா சொன்ன போது...

ஒரு பிரளயம் ஈஸ்வரின் மனதினில், “நான் அந்தத் தவற்றை செய்து விட்டேனே!”

“அவ என்கிட்டயே பேசறது இல்லை இப்போல்லாம். நானா கூப்பிட்டா ஒரு ரெண்டு வார்த்தை பேசறா! அவளா இந்த ஒரு வருஷமா கூப்பிடவே இல்லை.. டெல்லி போனவ இங்க வரவேயில்லை”

“தனியா இருக்கா! மனசுக்கு கஷ்டமா இருக்கு!” என்று சொல்லும் போது ரூபாவின் கண்கள் கலங்கியது.

“என் தங்கைன்றதால சொல்லலை! ப்ளீஸ், அப்படி நினைச்சிடாத, அவ நிஜமாவே பணம்ன்ற ஒன்னை விட்டுட்டா, உனக்கு மனைவியா வர தகுதியான பொண்ணு!” என்றாள்.

ஈஸ்வருக்கு மனது மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது. ஆனால் எனக்கு அந்தத் தகுதி இல்லை என்று கத்த வேண்டும் போலத் தோன்றியது. இந்த ஒரு வருடத்தில் எதுவுமே மாறவில்லை, எல்லாம் அப்படியே இருக்கின்றது என்று தோன்றியது.

ரூபா பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்க...

“எஸ், ரூப்ஸ் ஐஸ்வர்யா குறை சொல்ல முடியாத பொண்ணு. நம்ம வீட்டுப் பொண்ணும் கூடத் தான். ஆனா எனக்கு அவளைக் கல்யாணம் பண்ற தகுதி இல்லை!” என்றான் முடிவாக.

வாழ்க்கையின் சதுரங்கத்தில் காய்களை நகர்த்த ஆரம்பித்தான்.

“ஏன்? ஏன்?” என்றாள் பதட்டமாக.

“நான் எதுக்கு இப்போ வந்தேன்னு நினைக்கிற.. முரளி அப்பா தான் வரச் சொன்னாங்க!”

“ஏன்?” என்றான் புரியாமல்.

“வர்ஷினியைக் கல்யாணம் பண்ணக் கேட்கறாங்க!” என்று சொன்னது தான்,

“என்ன?” என்று ரூபா அப்படியே அதிர்ந்து நின்று விட்டாள்.

“ஐயோ! இவள் எதற்கடா, இவ்வளவு அதிர்ச்சியாகின்றாள்” என்று ஈஸ்வர் நொந்தே விட்டான்.

“எப்படி? எப்படி அவங்க கேட்கலாம்?” என்று கூடவே கோபமும் பட,

“ஏன்? ஏன் கேட்கக் கூடாது?”

“அந்தப் பொண்ணுக்கு அம்மா யாருன்னு தெரியாது, இவங்க வீட்லயே இல்லை, நாம எப்படி சம்மந்தம் பண்ண முடியும்!”

“ஏன்? அவளுக்கு என்ன குறை? நீ கூடத் தானே நல்லா பேசுவ!”

“ப்ச்! நல்லா பேசறது வேற, ஏன் எனக்குக் கூட அவளைப் பிடிக்கும். ஆனா அதுக்காக சம்மந்தம் செய்ய முடியுமா?”

“ஏன்? ரஞ்சனியை அங்கேத் தானே குடுத்திருக்கோம்!”

“பத்மனாபன், அவரோட நேரடியான பையன். ஆனா இவ அப்படிக் கிடையாதே!”

“நீ இப்படிப் பேசுவன்னு நான் எதிர்பார்க்கலை ரூப்ஸ்..!”

“ஏன்? நிஜத்தைத் தானே சொன்னேன், நீ எப்போ இருந்து இவ்வளவு நல்லவனா மாறிப் போன, அந்தப் பொண்ணை நீ எவ்வளவு அலட்சியமா பேசியிருக்க தெரியுமா, நான் அந்த மாதிரி எல்லாம் பேசலை! நான் ஜஸ்ட் ரியாலிடி சொன்னேன்!” என்றாள்.

“அது முன்னே,  இப்போ அப்படிப் பேசாதே!” என்றான் கட்ட்டளை போல..

அவனின் மாற்றம் அந்தக் குரலிலேயே புரிந்தது. “ஓஹ்!” என்று இடைவெளி விட்டவள், “அப்போ உனக்குப் பிடிச்சிருக்குன்னு தைரியமா சொல்ல வேண்டியது தானே! ஏன் அவங்கப்பா சொல்றார்ன்னு காரணம் சொல்ற!” என்று நேரடித் தாக்குதலில் இறங்க,

“புத்திசாலி ரூப்ஸ் நீ! ஆனா நான் அப்படிச் சொன்னா வீட்ல இருக்குறவங்க நடக்க விட மாட்டாங்க. அதுவுமில்லாம உன் தம்பி அவளை என்னையும் இணைச்சு பேப்பர்ல போட்டிருக்கான், அதுவும் ஒரு காரணம் மறுக்க முடியாது!” என்றான்.

“நான் ரொம்ப நம்பியிருந்தேன் உன்னை! இப்படியாகும்ன்னு நினைச்சது இல்லை, எனிவே என்னுடைய வாழ்த்துக்கள்!”

என்றவளிடம்..

“நானே இந்த விஷயத்தை பேசிக்கறேன், உனக்குத் தெரிஞ்ச மாதிரி காட்டிக்காத ரூப்ஸ்!” என,

“ம்!” என்று தலையாட்டி ரூபா வெளியே செல்கையில் மனதிற்கு கஷ்டமாக இருந்தது ஐஸ்வர்யாவை நினைத்து.. “இறைவா! இதைச் சரி செய்து விடு!” என்று வேண்டிக் கொண்டு.. தன்னுடைய காய்களை நகர்த்த ஆரம்பித்தான்.

மாலையில் பத்து கூப்பிடும் வரை, இதை எப்படி நல்லபடியாக நடத்திக் கொள்வது என்ற சிந்தனையே. ஆனால் பத்து சொன்னச் செய்தி முற்றிலும் அவனை நிலை குலையச் செய்தது.

“ரஞ்சனி, மதியம் இருந்து காணலை! எங்க போனான்னு தெரியலை! காலையில இருந்து மூட் அப்செட்டா இருந்தா! எங்க போயிருப்பான்னு உங்களுக்கு ஏதாவது தோணுதா?” என்று அவன் கேட்க,

“என்ன?” என்று பதைத்து எழுந்தான்.

வீட்டினரிடம் பேசினாளா என்று கேட்க, யாரும் இல்லை என்றனர். உடனே ராஜாராமின் வீடு நோக்கிச் செல்ல, மனம் முழுவதும் யோசனை..

“ஒரு வருடமாகிவிட்டது! இந்த அஸ்வின் வந்திருப்பானோ?” என்று பத்து வின் வீட்டில் முன் கார் நிறுத்தும் போது பளிச்சிட, மனது முழுவதும் ஒரு பயம் பரவியது ஈஸ்வருக்கு.

ஒரு வருடம் அவனின் ஞாபகம் இல்லாமல் இருந்து விட்டோம், இப்போது மீண்டும் வேலையை ஆரம்பித்து விட்டானா? அவனாக மட்டும் இருந்தால்... கொன்று புதைத்து விடும் ஆத்திரம் கிளம்பியது.

இவனைப் பார்த்ததும் பத்து விரைந்து வந்தவன், “இன்னைக்கு காலேஜ் போகலை, வீட்ல தான் இருந்தா. பதினோரு மணிக்கு வெளில போறேன்னு சொல்லிட்டுப் போயிருக்கா! இன்னும் இதுவரைக் காணோம்.. நான் மதியம் வந்த போதும் இல்லை. சரி இப்போ வந்திருப்பான்னு வந்தேன், காணலை! போன் சுவிச் ஆஃப் மதியத்துல இருந்தே!”

“காலேஜ் போகலை! கிளினிக் போகலை! அவ போகற இடம் எல்லாம் போகலை.. என்னவோ காலையில இருந்தே ரொம்ப அப்செட்டா இருந்தா?” என்றான் படபடவென்று,

“எங்கேயாவது தெரிஞ்ச இடம் போயிருப்பா, ஃபோன் சார்ஜ் இல்லாம ஆஃப் ஆகியிருக்கும். அதுக்கு எதுக்கு இவ்வளவு பயம்?” என்று பத்துவை சமாதானம் செய்தான்.

“தெரியலை, ரொம்ப அப்செட்டா இருந்தா!” என

“தான் பேசாதது எனப் புரிந்தது. ஆனால் அவளும் தானே பேசவில்லை. அவள் பேசி என்ன நான் பேசாமலா விட்டேன்! என்ன ஒரு எமோஷனல் ப்ளாக் மெயில் இது?” என்று கோபம் கிளர்ந்தது.

“பார்க்கலாம் கொஞ்ச நேரம் இன்னும், வந்துடுவா” என்றான்.

ஆனாலும் பத்து சமாதானம் ஆகவில்லை. ராஜாராம் வீட்டில் இல்லை ஹாஸ்பிடலில் இருகின்றார் என்பதால் பதட்டமாக இருந்தான். எல்லாத் திறமைகள் இருந்தும் அப்பாவின் நிழலில் இருந்து, இருந்து அதற்குப் பழகி விட்டவர்கள் மக்கள். என்ன ஏது என்று தடுமாறினார்கள்.

அவனின் தாத்தாவும், “ஒன்னும் இருக்காதுன்னு சொன்னா கேட்க மாட்டேங்கறான்!” என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போது தான் வர்ஷினி தாஸுடன் வந்தாள்.

அவளும் விவரம் அறிந்தவள், “அண்ணா அண்ணிக்கு எதுவும் இருக்காது! எப்பவும் நீ அவங்களைத் தனியா விடறதே இல்லை! நீயே கொண்டு போய் விடற, கூட்டிட்டு வர்ற, அதனால அவங்கத் தனியா போகவும் என்னவோ ஏதோன்னு பயப்படற” என்றாள்.

எதுவும் பத்துவை சமாதானம் செய்யவில்லை, அவனுக்காக நிலைமையை சற்று சீரியசாக கையில் எடுத்தனர்.

ஈஸ்வர் தாத்தாவிடம், “ஒரு வருஷம் முன்ன குண்டாஸ்ல அஸ்வினை அர்ரஸ்ட் பண்ண வெச்சோமே. அவன் ரிலீஸ் ஆகிட்டானா?” என்று கேட்க.

“யாரு?” என்றார் அவர் சட்டென்று ஞாபகம் வராமல்,

“அதுதான் வர்ஷி ஃபோட்டோ பேப்பர்ல போட்டான்னு அர்ரஸ்ட் பண்ண வெச்சீங்களே..” என்று ஈஸ்வர் விளக்கம் சொன்னான், அவனுக்கு அங்கே வர்ஷினி இருந்தது ஞாபகத்தில் இல்லை.

தன்னுடைய பெயர் அடிபடவும், “என்ன?” என்று கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தாள், அதற்குள் தாத்தா யாருக்கோ தொலைபேசியில் அழைக்க,

ஈஸ்வர் ரூபாவிற்கு அழைத்தான், "அஸ்வின் ரிலீஸ் ஆகிவிட்டனா?" என்று தெரிந்துக் கொள்ள, மூன்று நாட்களுக்கு முன் என்று ரூபா சொல்ல, அதையே பேசி முடித்து வந்த தாத்தாவும் சொல்ல,

அதற்குள் என்ன போட்டோ என்று தாஸிடம் விஷயத்தை வாங்கி இருந்தாள், வாங்கியதும் அவளுக்குத் தோன்றியது, என்ன தன்னால் ஒருவன் ஒரு வருடம் ஜெயில் அனுபவித்தானா என்பதுதான். அதெல்லாம் அவளின் கவனத்தில் வந்திருக்கவில்லை.

அரை மணி நேரம் அவர்கள் ரஞ்சனிக்குக் காத்திருக்க, அவள் வரவில்லை, ஆறு மணியை நெருங்க, அந்தக் காலநிலையில் இருளும் வேகமாகப் பரவ, பத்துவின் தவிப்பைப் பார்த்து, பத்துவின் கவலை எல்லோரையும் தொற்றியது.

ஈஸ்வர் அந்த அஸ்வினைப் பார்த்து விடலாம், அவனில்லை என்றால் வேறு ஆட்கள் யாரும் தீங்கிழைப்பவர் கிடையாது என்று நினைத்து, அஸ்வினைத் தேடிக் கிளம்ப...

"எங்கே?" என்ற பத்துவிடம் அஸ்வினைப் பார்க்கப் போவதாகச் சொல்ல, பத்து உடன் செல்ல,

"நானும் வர்ரேன்!" என்று தாஸ் யாரும் கேட்காமல் காரில் ஏற, "நானும் வர்ரேன்!" என்று வர்ஷினியும் ஏறினாள்.

"நீ இறங்கு!" என்றான் ஈஸ்வர்,

"எல்லோரும் டென்ஷனா இருக்கீங்க, எனக்கும் இருக்கு, நானும் வர்ரேன் பத்து அண்ணாவுக்காக!" என்றாள்.

பத்துவின் முகத்தைப் பார்த்தவன், "சரி, வா!" என்றான்,

நேராக அஸ்வின் வீட்டிற்குத் தான் சென்றான், அங்கே இல்லை என்றால் தேடிக் கொள்ளலாம் என்று,

அங்கே சென்றால் இல்லை, அவனின் அம்மா மட்டுமே இருந்தார், ஈஸ்வரை பார்த்ததும் அவரின் முகத்தில் அவ்வளவு பயம், "ஏதாவது பண்ணிட்டானா? எதுவுமே பண்ண மாட்டேன் சொன்னானே!" என்றார்.

ஈஸ்வர் அவரின் கேள்வி எதற்கும் பதில் சொல்லவில்லை, "எங்க இருக்கான் அவன்?" என்று கேட்க,

“அவனை ஒன்னும் பண்ணிடாதீங்க. இப்போ தான் ஜெயில்ல இருந்து வந்திருக்கான். எதுவும் பண்ண மாட்டான் கண்டிப்பா!” என்றார் கண்களில் நீர்த் திரையோடு.

“அவன் எதுவும் பண்ணலைன்னா நாங்களும் எதுவும் பண்ண மாட்டோம். அவன் எங்க இருக்கான்னு மட்டும் சொல்லுங்க!” என்றான் அதிகாரமாக.

“ஃபிரன்ட்க்கு ஏதோ பர்த்டே பார்ட்டின்னு போனான், ஹோட்டல் பேர் கூட ஏதோ சொன்னான்!” என்றவர்,

“அவன் முன்ன மாதிரி இல்லை, இந்த மூணு நாளா என்கிட்ட நல்லா பேசறான். அவனும் ஒஞ்சு போயிட்டான்! அவனை விட்டுடுங்க!” என்றார்.

“அத்தை, நாங்க எதுவும் பண்ண மாட்டோம்!” எனவும்,

“எதற்கு இவன் அத்தை!” என்று கூப்பிடுகின்றான் என்று வர்ஷினி பார்த்திருந்தாள், ஹோட்டலின் ஒரு பாதி பெயரைச் சொல்ல, அதை வைத்து அனுமானித்துக் கிளம்பினர்.

அங்கே ஒரு பார்ட்டி ஹாலில், பார்ட்டி கலை கட்டி இருக்க, ஆங்காங்கே சில பேர் நடனமாடிக் கொண்டிருக்க, அமைதியாக ஒரு இருக்கையில் அமர்ந்து அதைப் பார்த்துக் கொண்டிருந்தான் அஸ்வின்.

இப்படித்தானே அவனும் ஆட்டமும் பாட்டமுமாக இருந்தான், “எல்லாம் மாறி விட்டது! ஏன்? இதில் என்னுடைய தவறு என்ன?” என்று யோசிக்கும் போதே அவன் முன் வந்து நின்றான் ஈஸ்வர்.

ஈஸ்வரை எதிர்பார்க்கவில்லை, பார்த்ததும் அப்படியே எழ,

“இங்கே வேற ஒருத்தரோட பார்ட்டி, இங்க எதுவும் வேண்டாம். வெளிய வா!” என்றான் ஈஸ்வர். முகத்தில் அடக்கப்பட ரௌத்திரம்.

“அதெல்லாம் வரமுடியாது!” என்றான் அஸ்வினும் அலட்சியமாக,

“வெளிய வாடா! இல்லை முகத்தை இங்கயே பேத்து எடுத்துடுவேன்!” என்று அடிக் குரலில் கர்ஜித்தான்.

“முடியாது! என்ன வேணா பண்ணிக்கோ!” என்று அஸ்வினும் அலட்சியமாய் நின்றான்.

“ஒரே அடில, நீ செத்தே போயிடுவ. ஆனா ரஞ்சனியைப் பத்தி தெரியணும்ட்ரதுக்காகத் தான் பேசிட்டு இருக்கேன்” என்று சொன்னதும் அஸ்வினின் முகம் அப்படியே மாறியது.

“ஏன் ரஞ்சனிக்கு என்ன?” என்றான் சிறிது பதட்டமாக,

“வெளிய வாடா!” என்று ஈஸ்வர் திரும்ப கர்ஜிக்க,

இந்த முறை பதில் பேசாமல் வந்தான், அந்த சத்தங்களில் இருந்து கதவைத் திறந்து வெளியே வந்து கதவை மூடியதும், ஒரு ஆழ்ந்த அமைதி.

“ரஞ்சனியை என்ன பண்ணின?”

“நான் ஒன்னும் பண்ணலை! என்ன விஷயம்?” என்று அஸ்வின் கேட்கும் போதே அருகில் தாஸ், பத்து மற்றும் வர்ஷினி வந்தனர். அவர்களைப் பார்த்ததும் நிலைமையின் தீவிரம் புரிந்தது.

“அவளைக் காலையில இருந்து காணலை” என்று ஈஸ்வர் சொல்ல,

அந்த தாடிக்குள் புதைந்திருந்த முகத்தைப் பார்த்த வர்ஷினி, “என்ன? இவன் தன்னால் ஜெயில் போனானா, இவன் எதுவும் செய்திருப்பான் என்று தோன்றவில்லையே, நல்லவன் தானே இவன்!” என்ற யோசனைகளோடே பார்த்திருந்தாள்.

“நான் எதுவும் பண்ணலை முதல்ல ரஞ்சனியைத் தேடுங்க!” என்று அஸ்வின் சொல்ல,

“நான் உன்கிட்ட முதல்லயே பேசியிருக்கேன், அப்பவும் திரும்ப ஃபோட்டோ போட்டு ஜெயில் போயிருக்க, நீ திருந்தவே மாட்டியா?” என்று சொல்லிப், பேச்சு பேச்சாக இருக்கும் போதே, தாஸ் அவனை ஓங்கி ஒரு உதை விட்டான்.

தூரப் போய் விழுந்தான், அஸ்வின் இதை எதிர்பார்க்கவில்லை, அதுவும் வயிற்றினில் தாஸ் உதைத்து விட, சுருண்டு விழுந்தவன் வயிற்றைப் பிடித்துக் கொண்டான்.

வலியில் அவன் முகம் அவ்வளவு வேதனையைக் காட்டியது, அப்போதும் “நான் எதுவும் பண்ணலை, முதல்ல ரஞ்சனி எங்கேன்னு தேடுங்க!” என்று சொன்னான்.

வர்ஷினி அஸ்வினை நன்கு கவனித்தாள், அவன் திரும்பத் தாக்கவும் முயலவில்லை. தன்னைத் தற்காத்துக் கொள்ளவும்

முயலவில்லை. யாருடைய உதவியையும் நாடவில்லை.

"நீ சொன்னா கேட்க மாட்ட... ஒழுங்கா சொல்லு!" என்று தாஸ் திரும்ப அடிக்க வர,

"தாசண்ணா!!!" என்ற வர்ஷினியின் அதட்டல் தாஸைத் தேக்கியது.

"கை வெச்சீங்க தொலைச்சிருவேன்!" என்றாள் ஆவேசமாக.

"வர்ஷினி!!!" என்று ஏகக் குரலில் பத்துவும் ஈஸ்வரும் அதட்டினர்,

ஆனால் எதையும் வர்ஷினி கேட்கவில்லை, விரைந்து அஸ்வின் அருகில் சென்றவள், "எழுந்திருங்க!" என்று அவன் எழுவதற்காக கை நீட்ட.

பத்து "என்ன செய்கிறாள் இவள்?" என்று அதிர்ந்து பார்த்து நிற்க,

ஈஸ்வர் "கையை மடக்கு முதல்ல" என்று கர்ஜித்து அருகில் சென்றான். அவன் சென்ற ஆவேசத்தைப் பார்த்தால், அடித்து விடுவானோ என்று தான் பார்ப்பவருக்கு தோன்றும். ஆனால் சற்று அசராமல் ஈஸ்வரைப் பார்த்து நின்றாள் வர்ஷினி.

"நான் அப்படித் தான் கொடுப்பேன்!" என்றெல்லாம் வர்ஷினி வாக்குவாதம் செய்யவில்லை. "ஓகே!" என்று கையை உடனே மடக்கியவள், "நீங்கத் தூக்கி விடுங்க, இல்லை நான் தூக்குவேன்!" என்று நின்றாள்.

ஈஸ்வரை பார்த்து அச்சமின்றி பேசும் அந்தப் பெண்ணை பார்த்து இருந்தான் அஸ்வின்.

"ஏய், உனக்கென்னப் பைத்தியமா?" என்று ஈஸ்வர் அவ்வளவு ஆவேசத்தோடுப் பேச,

"அவர் ஒன்னும் பண்ணியிருக்க மாட்டார்!" என்று நின்றாள்.

அதற்குள் அவன் தடுமாறி எழ, இவர்களின் சண்டையைப் பார்த்து தாஸ் வந்து தூக்கி விட, எழுந்து நின்றவன்,

ஈஸ்வரைப் பார்த்து பேசாமல் வர்ஷினியைப் பார்த்து, "நான் எதுவும் செய்யலை, முதல்ல ரஞ்சனியைத் தேடுங்க!" என்றான்.

ஈஸ்வர் அவன் உண்மை சொல்கிறானா? பொய் சொல்கிறானா? என்றுப் பார்த்து நிற்க,

“எப்போ இருந்து காணலை?” என்றான் வர்ஷினியைப் பார்த்து அஸ்வின்.

“காலையில அவங்களே தான் வெளியே போறேன்னு சொல்லிப் போனாங்க. ஆனா இப்ப வரைக்கும் எங்க இருக்காங்கன்னு தெரியலை! கொஞ்சம் மூட் அப்செட்டா இருந்தாங்க!” என்று கடகடவென்று வர்ஷினி சொல்ல,

“மூட் அப்செட்டா!” என்று நிறுத்தியவன், “எப்பவும் அப்படி இருந்தா அவ அண்ணன் கிட்ட போவா, ஆனா அவ அண்ணனுக்கு தெரியலை, இல்லைனா சாந்தோம் சர்ச் போவா, அங்கப் பாருங்க!” என்றான்.

“நான் பார்த்துட்டு கூப்பிடறேன்!” என்று சொல்லி பத்து உடனே கிளம்பி, அங்கேப் போக, அங்கேப் போக எடுத்துக் கொண்ட நாற்பத்தி ஐந்து நிமிடங்கள் என்ன மாதிரி உணர்ந்தான் என்றேத் தெரியவில்லை.

அங்கே சென்று அங்கே இருந்த சேரில் அமர்ந்து மாதாவைப் பார்த்துக் கொண்டிருந்த ரஞ்சனியைப் பார்த்ததும் பத்து அவனுக்கு அவனே அன்னியமாகிப் போனான்.

“பத்து அண்ணா பார்த்துச் சொல்றவரை, எதுவும் பேசக் கூடாது. இவரை எதுவும் பண்ணக் கூடாது!” என்று ஈஸ்வரிடம் வர்ஷினி அதட்டி சொல்லியப் பிறகு, கைகள் கட்டி, அத்தனை கோபத்தையும் முகத்தினில் தேக்கி, அஸ்வினை துவம்சம் செய்யும் ஆத்திரத்தோடு ஈஸ்வர் பார்த்திருந்தாலும், அவன் எதுவும் செய்யவில்லை என்பதை அஸ்வின் ஆச்சர்யமாக உணர்ந்தான்.

**கைகளை அவன் கட்டியிருந்தாலும் கட்ட வைத்தது காரிகையின் வார்த்தைகளே!!! ஆனால் கண் பார்வையே போதும்!!!**

## அத்தியாயம் முப்பத்தி ஏழு :

**நெஞ்சில் எங்கும் உந்தன் பிம்பம்!!!**

பத்து மெதுவாகச் சென்று ரஞ்சனியின் அருகில் அமர்ந்தான். யாரோ அமரும் அரவம் உணர்ந்து திரும்பியவளின் முகம் பத்துவைப் பார்த்ததும் ஆச்சர்யமாக ஒரு சோர்வோடு மலர்ந்தது.

“இங்க எப்படி வந்தீங்க?” என்றவளின் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை ஆனால் அது கண்களை எட்டவில்லை. பத்து அவளுக்கு

பதில் சொல்லாமல் வர்ஷினிக்கு அழைத்தவன், “உங்க அண்ணி இங்க தான் சாந்தோம் சர்ச்ல இருக்கா!” என்றவன்,

வர்ஷினி வேறு கேட்கும் முன் அழைப்பை துண்டித்தான். பின்பு ரஞ்சனியிடம் திரும்பி “போகலாமா! இன்னும் நேரம் ஆகுமா?” என்று கேட்க,

பத்துவின் முகத்தில் தெரிந்த கடினத் தன்மையில் “போகலாம்” என்று பதில் சொல்லி அவளை எழவும் வைத்தது.

“இப்படி முகத்தை வைத்து அழைத்துப் போக இவன் ஏன் வரவேண்டும், நான் இங்கே இருப்பேன் என்று எப்படித் தெரிந்தது, நான் இப்போதுதானே இவனை அழைக்கலாமா என நினைத்துக் கொண்டிருந்தேன்” என்ற கேள்விகள் மனதில் ஓடினாலும்,

எதுவும் கேட்கவில்லை. காரில் அமர்ந்ததும் கார் வேகம் எடுத்தது. இருவருமே பேசவில்லை. அதுவரையிலும் எதோ தானே ஐஸ்வர்யாவை ஏமாற்றி விட்ட உணர்வில் அமர்ந்திருந்தாள். பத்துவைப் பார்த்ததும் தான் நினைவலைகள் அறுபட, எதற்கு இவ்வளவு கோபமாக இருக்கின்றான் என்று புரியாமல் அவனைப் பார்ப்பதும் ரோடை பார்ப்பதுமாக இருந்தாள்.

வர்ஷினி “அண்ணி, அங்க தான் இருக்காங்களாம்!” என்று ஈஸ்வரைப் பார்த்து சொன்னவள்,

“சாரி! இவங்க எல்லாம் ஓவர் ரியாக்ட் பண்ணிடாங்க! இவருக்காக நான் சாரி கேட்கிறேன்!” என்றாள் அஸ்வினைப் பார்த்து,

“இவனுக்காக இந்தப் பொண்ணு ஏன் சாரி கேட்கணும்?” என்று தான் அஸ்வினிற்குத் தோன்றியது.

உச்ச பட்ச கோபத்தில் ஈஸ்வர் இருந்த போதும், “இவருக்காக நான் சாரி கேட்கிறேன்!” என்ற வர்ஷினியின் வார்த்தை ஈஸ்வரை தேக்கி நிறுத்தியது.

ஈஸ்வரை பார்த்து “சாரி கேளுங்க” என்று சொல்லாமல், இவருக்காக நான் கேட்கிறேன் என்றாள். ஆம் ஈஸ்வர் கேட்க மாட்டான் என்று தெரியும். அதனால் அந்த யோசனையே இல்லை.

ஆனால் தாஸைப் பார்த்து “இவர் கிட்ட சாரி, கேளுங்க!” என்றாள் அஸ்வினைக் காட்டி.

தாஸ் ஈஸ்வரைப் பார்க்க, அதைப் பார்த்த வர்ஷினி “தாஸண்ணா நான் சொல்றதைச் செய்வீங்களா? மாட்டீங்களா?” என்று பெரிய அதட்டல் போட,

“சரிங்க, பாப்பா!” என்றவன், “மன்னிச்சிக்கோ” என்ற வார்த்தையை உதிர்க்க,

“நீங்க கார்ல இருங்க!” என்றாள், ஈஸ்வர் “போ” என்று கண்ணசைக்க தாஸ் வெளியேறினான்.

“நீயும் போ!” என்றான் வர்ஷினியைப் பார்த்து ஈஸ்வர், “நான் போக மாட்டேன்!” என்றெல்லாம் சொல்லவில்லை, “நீங்க வாங்க, நான் போறேன்!” என்று நின்றாள். என்னவோ ஈஸ்வரை தனியாக விட்டால் கைகளில் இல்லாவிட்டாலும் வார்த்தைகளிலாவது அஸ்வினை துவம்சம் செய்து விடுவான் என்ற ஸ்திரமாக தோன்றியது.

“என்ன பிடிவாதம் இது? போ முதல்ல!” என்று ஈஸ்வர் அதட்ட, அதற்கெல்லாம் அசருவேனா என்று கை கட்டி அசையாமல் வர்ஷினி நிற்க,

“வர்ஷி! நான் அஸ்வின் கிட்டப் பேசணும்!” என்றான் ஈஸ்வர் பற்களை கடித்து கோபத்தை அடக்கி,

“என் முன்னாடி பேசுங்க!” என்று அவள் நிற்க,

அஸ்வின் வர்ஷினியைத் தான் பார்த்து இருந்தான். அவர் ஒன்னும் பண்ணி இருக்க மாட்டார் என்று தைரியமாக ஈஸ்வரைப் பார்த்து சொன்னவளை அஸ்வினுக்கு மிகவும் பிடித்து விட்டது.

“அம்மா, அக்கா, தங்கை, ரஞ்சனி என்று அத்தனை பேரும் தன்னை நம்பாத போதும் யார் என்றே தெரியாத இவள் நம்புகின்றாள். ஆனால் ஈஸ்வரை அசிங்கப்படுத்த இந்தப் பெண்ணை நான் இழுத்து விட்டேன் என்ன சொல்ல?” என்று மனது வருத்தப்பட பார்த்திருந்தான்.

“என்னால் ஒரு வருடம் இவன் ஜெயில் போனானா?” என்று பார்த்திருந்தாள் வர்ஷினி.

இருவரும் பார்த்துக் கொள்வதை ஈஸ்வரும் உணர்ந்தான். ஆனால் பார்க்கின்றார்களே என்ற ஒரு பயமோ பதட்டமோ அவன் மனதில் உதிக்கவேயில்லை. இவளிடம் அதட்டல் செல்லுபடியாகாது

என்று புரிந்து, "ப்ளீஸ் வர்ஷி! எல்லா விஷயமும் உன் முன்னால பேச முடியாது!" என்றான் தழைந்து.

"அது நான் கேட்கக் கூடாத விஷயம்ன்னு ஃபீல் பண்ணினா அடுத்த நிமிஷம் போயிடுவேன்" என்றாள் பெரிய மனுஷியாக.

ஈஸ்வர் ஒரு பெண்ணிடம் இவ்வளவு பணிவாகப் பேசுகின்றானா என்று அஸ்வின் ஆர்வமாகப் பார்க்க ஆரம்பித்தான். அதுவே காட்டிக் கொடுத்தது வர்ஷினி ஈஸ்வருக்கு எவ்வளவு முக்கியம் என்று. அவனுக்கு தெரிந்த ஈஸ்வர் பெண்ணிடம் என்ன, யாரிடமும் இப்படிப் பேச மாட்டான். ஒரு அலட்சியம், ஒரு அகந்தை, ஒரு மமதை, எப்போதும் பேச்சில் செயலில் மட்டுமல்ல நடை உடை பாவனை என்று அத்தனையிலும் இருக்கும்.

அந்த உடல் மொழி வர்ஷினியுடன் இருக்கும் அந்தப் பொழுதில் இல்லை என்று அஸ்வின் நன்கு உணர்ந்தான். அவனுக்குத் தெரியாதா ஈஸ்வரை, ஒரு வருடம் சில மாதங்கள் முன்பு வரை ரூபாவிற்கு திருமணம் ஆனா நாள் முதலாக ஈஸ்வரின் வீட்டில் தானே அதிக நேரம் இருப்பான். அவர்களின் பணமும் படாடோபமும் அவ்வளவு அஸ்வினை ஈர்க்கும்.

அவர்கள் வீடு அவனுக்குப் பிரமிப்பாக இருக்கும். எல்லோரும் நன்றாக சகஜமாக பேசினாலும் ஈஸ்வர் மட்டும் மதித்துப் பேச மாட்டான். எப்போதும் ஒரு அலட்சியம் இருக்கும் அஸ்வினைப் பார்க்கும் பொழுது. ஜகனுடன் தானே எப்போதும் அஸ்வின் சுற்றுவான். அதனால் அஸ்வினைப் பற்றி ஈஸ்வருக்கு அதிகம் தெரியாத போதும் ஈஸ்வரைப் பற்றி அஸ்வினிற்கு நன்கு அத்துப்படி.

அஸ்வின் ஒரு வருடத்திற்கு முன் அவர்களுக்குத் தெரியாமல் ஃபோட்டோ எடுத்த பொழுதே ஈஸ்வரின் கண்களில் வர்ஷினிக்கான மயக்கம் தெரிந்தது தான். அதன் கொண்டே அந்தப் படங்களை எடுத்தான். ஆம்! அதை அஸ்வின் தானே சுயமாக எடுத்தான்.

ரஞ்சனியின் ரிஷப்ஷன் அன்று மனது கேளாமல் கண்களிலாவது அவளைப் ஒரு முறை பார்ப்போம், இனி அவன் அடுத்தவன் மனைவி. பிறன்மனை நோக்குதலை விட பெரிய பாவம் என்ன இருக்கின்றது என்று புரிந்தவனாக அவன் அந்த ஹோட்டலிற்கு செல்ல, ஈஸ்வர் பாரிலிருந்து வெளியே வந்த போது பார்த்தான். தங்கையின் திருமணம் இவன் குடிக்க சென்றானா? தள்ளாடி இருந்தால் அவனை அடிக்கவாவது செய்வோம் என்று பின் தொடர, வர்ஷினியைப் பார்த்ததும் ஈஸ்வரின் முக மாறுதல் கண்டு மறைந்து அவனைப் புகைப்படம் எடுக்க வைத்தது.

லிஃப்டில் அவர்கள் செல்ல, இவன் படியில் ஓடியது இன்னும் அவன் நினைவில் அவ்வளவு பசுமையாய் இருந்தது. மனதில் அப்போது இருந்த வெறியில் அப்படித்தான் ஓடினான். அவர்கள் வெளியே வரும் போதும் புகைப்படம் எடுத்தான்.

ஆனால் வர்ஷினி உள் போகவும் ஈஸ்வர் வெளியே நிற்கவும், இனி கண்ணில் பட்டால் ஈஸ்வர் தொலைத்து விடுவான் என்று ஹோட்டலை விட்டு வெளியேறி விட்டான். அதனால் அதன் பிறகு ஈஸ்வரின் தலையில் கட்டு வந்த மாயம் அவனுக்குத் தெரியவேயில்லை.

ஆனால் ஈஸ்வர் போன்ற ஒருவன் ஒரு பெண்ணின் பேச்சைக் கேட்டு எதிரியான தன்னை எதுவும் செய்யாமல் நிற்கின்றான். அதுவும் எதிரில் இருப்பவன் தன்னைப் பற்றி என்ன நினைப்பான் என்ற எந்தக் கவலையும் இன்றி. இதை நம்புவது கடினமாக இருந்தது. வேறு யாராவது சொன்னால் நம்பி இருக்க மாட்டான், தானே நேரில் கண்ணில் பார்ப்பதனால் நம்புகின்றான்.

வர்ஷினி எல்லோரையும் விட ஈஸ்வருக்கு மிகவும் ஸ்பெஷல் என்று புரிய வைத்தது!!

அதுவே அஸ்வினை இன்னும் ஊன்றி வர்ஷினியைக் கவனிக்க வைத்தது!!!

இவள் நகர மாட்டாள் என்று புரிந்தவனாக ஈஸ்வர் “போகலாம் வா!” என்றான் வர்ஷினியைப் பார்த்து,

“நீங்க பேசணும் சொன்னீங்க?”

“வா!!!” என்று ஒற்றை வார்த்தை உதிர்க்க,

பேசாமல் அவன் புறம் சென்றவள், சிறிது தூரம் நடந்தவுடனே “ஒரு நிமிஷம்” என்று ஈஸ்வரிடம் சொல்லி அஸ்வினிடம் ஓடி வந்தவள்,

“யாராவது ஏதாவது ட்ரபிள் பண்ணினா எனக்குச் சொல்லுங்க” என்று அவளின் தொலைபேசி எண்ணை சொன்னவள், “ஜஸ்ட் ஒரு ஹாய் மெசேஜ் போடுங்க!” என்று சொல்லிப் போக,

ஈஸ்வர் அதைப் பார்த்தாலும் வர்ஷினியிடம் எதுவும் கேட்கவில்லை! இதைச் செய்யாதே! என்றும் சொல்லவில்லை, அப்படி சொன்னால் இன்னும் தீவிரமாக அஸ்வினிடம் பேசுவாள்

என்று தெரியும், ஆனாலும் அஸ்வினைப் பார்ப்பாளோ? அஸ்வின் இவளை ஏதாவது செய்வானோ? என்ற பயம் துளிக் கூட வரவில்லை.

"என்னையேப் பார்க்கலை! இவனையெல்லாம் கண்டிப்பா பார்க்க மாட்டா!" என்று தான் தோன்றியது, கூடவே "என்னையே சமாளிச்சா! இன்னும் அவளை யார் என்ன செய்ய முடியும்!" என்ற எண்ணமும்.

திரும்பி அஸ்வினைப் பார்க்க அஸ்வினும் ஈஸ்வரைப் பார்த்தான். இருவர் பார்வையுமே ஒருவரை ஒருவர் மிகவும் தீவிரமாக அளந்தது.

அஸ்வினிற்கு அப்படி ஒரு ஆச்சர்யம் மனதினில், ஈஸ்வர் இருக்கும் பொழுது அஸ்வின் ரஞ்சனியின் புறம் பார்வையைச் சற்றும் திருப்பக் கூட மாட்டான், அவ்வளவு பயம், கண்டுகொண்டால் தொலைத்து விடுவான் என்று.

"ஆனால் அவனுக்கு மிகவும் பிடித்த பெண்ணைப் பார்க்கின்றேன், என்னை கெட்டவனாக தான் மனதினில் நினைத்துக் இருக்கின்றான். ஆனால் ஒரு கண்டனப் பார்வைக் கூட இல்லையே! எப்படி இது?" என்று யோசித்துப் பார்க்க,

அவனைப் பார்த்த ஈஸ்வர் திரும்பி நடையை வேகமாக போட்டு வெளியேற, வர்ஷினி ஈஸ்வரின் நடைக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஏறக் குறைய அவன் பின் மெதுவாக ஓடினாள் என்று தான் சொல்ல வேண்டும்.

அஸ்வினிற்கு புரிந்தது இதுதான்! ரஞ்சனியை நான் ஏதாவது செய்து விடுவேனோ என்று இருக்கும் பயம் வர்ஷினியிடம் இல்லை. அதாவது வர்ஷினியை என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்ற திண்ணமான எண்ணம். அதுதான் என்னை ஒன்றும் செய்யாமல் போகின்றான். அதற்கு காரணம் அவளைச் சுற்றி இருக்கும் ஆட்கள் இல்லை வர்ஷினியின் மேல் இருக்கும் நம்பிக்கை என்று புரிய,

முகத்தில் ஒரு கசப்பான முறுவல், இவனுக்கு மட்டும் எப்படி எல்லாம் சிறப்பாய் அமைகின்றது. சொத்தை முழுவதும் ஜகன் மாவிற்கும் ரஞ்சனிக்கும் கொடுத்து விட்டான் என்று கேள்வி. ஆனாலும் திமிர் குறையவில்லை. இந்தப் பெண்ணிற்கு இவனிற்கும் ஏதோ? அவளின் வார்த்தைக்குக் கட்டுப் பட்டு ஒன்றும் செய்யாமல் நிற்கின்றான்.

அதனால் ராஜாராமின் பணமும் பலமும் இவனோடு சேரும்!!!

“எனக்கு மட்டும் ஏன் எதுவும் சரியாக அமையவில்லை. மனது வெறுத்துப் போனது. ஆனாலும் ஈஸ்வரை அப்படியே விடுவதா? ஏதாவது செய்ய வேண்டுமே!” என்ற எண்ணமும் கூட.

ஒரு வருடம் குண்டர் சட்டத்தில் ஜெயில் போயிருக்கின்றேன் என்ற ஞாபகம் மனதில் ப்ரவாகமாகப் பொங்க, அதற்குக் காரணமான இவனை விடுவதா, இவனைப் சீண்டப் போய்த் தானே தேவையில்லாமல் அந்தப் பெண்ணை இழுத்து ஜெயில் போனேன். நினைவே கசந்தது. என்னை மேலும் மேலும் இந்த ஈஸ்வர் தவறு செய்ய வைத்து விட்டான். நான் இப்படி ஒன்றுமில்லாமல் போய் விட இவன் திரும்ப நிம்மதியாக இருப்பதா?

யோசிக்க ஆரம்பித்தான்.

தாஸ் காரை ஓட்ட, அமைதியாக ஒரு பேச்சும் பேசாமல் ஈஸ்வர் வந்தான். இந்த அஸ்வின் திரும்ப வந்து விட்டான் இன்னும் என்ன செய்யப் போகின்றான் என்ற கேள்வி தான்.

வர்ஷினியின் பொருட்டு இங்கே வந்தோம் என்பது பின்னுக்குப் போய், அஸ்வின் மீண்டும் எந்த வேலையும் செய்து விடக் கூடாது என்பதில் கவனம் வைக்க ஆரம்பித்தான்.

வீடு வந்தனர், அப்போதும் பத்துவும் ரஞ்சனியும் வந்திருக்கவில்லை. ஷாலினி தவிப்போடு இருந்தாள். தாத்தா இவர்களைப் பார்த்ததும் “அந்தப் பயலா?” என்று கேட்க,

“இல்லை தாத்தா! அஸ்வின் எல்லாம் இல்லை! அவனுக்கு எந்த சம்மந்தமும் இல்லை!” என்றான் ஈஸ்வர்.

இனி அவனின் எதிரி அவனின் எதிரி மட்டுமே! வேறு யாரும் நுழைவது அவனை கையாலாகாதவன் என்று காட்டி விடும். அதனால் ஈஸ்வர் தாத்தாவிடம் அஸ்வினிற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தான்.

முரளி ராஜாராம் ஹாஸ்பிடலில் இருக்க அங்கே சென்றிருந்தான். பத்து நேராக ஹாஸ்பிடல் சென்று அப்பாவைப் பார்க்க, ரஞ்சனி டாக்டரிடம் பேச, நாளை அல்லது மறுநாள் ராஜாராம் வீட்டிற்கு சென்று விடலாம் என்று டாக்டர் கூற, அதன் பிறகே மூவரும் கிளம்பினர்.

வீடு வரும் வரையிலும் கூட நிலைமையின் தீவிரம் ரஞ்சனிக்கு புரியவில்லை.

தாத்தா படுக்கப் போய்விட, அங்கே கால் மேல் கால் போட்டுத் தோரணையாக ஈஸ்வர் அமர்ந்து இவளைப் பார்த்த பார்வையே அவளை குற்றம் சாட்டியது. எதற்கு இப்படிப் பார்க்கின்றான் என்று நினைத்த போதும், ஈஸ்வரின் பார்வை பயத்தைக் கொடுத்தது.

சரி செய்ய முடியாத தப்பை எப்பொழுதாவது ரஞ்சனி செய்யும் போது தான் இந்தப் பார்வை வரும். அனிச்சையாய் பத்துவின் பின் நின்றாள்.

“உன் ஃபோன் எங்கே?” என்றான் ஈஸ்வர்.

“இங்க!” என்று அவளின் கையினில் காட்ட,

“சார்ஜ் இல்லையா?”

“இருக்கே!”

“அப்போ எதுக்கு அதை ஆஃப் பண்ணின!” என்று பற்களுக்கு இடையில் வார்த்தைகளை கடித்து துப்பி ஈஸ்வர் அமர்ந்திருந்த இடத்தில் இருந்து எழுந்த விதம், ரஞ்சனி பயந்து பத்துவின் கையை பிடித்துக் கொண்டாள்.

வர்ஷினியும் அங்கே தான் இருந்தாள், ஈஸ்வரின் கோபத்தை விழிவிரித்து  பார்த்திருந்தாள்.

முரளிக்கு ஈஸ்வரின் கோபம் அறிமுகமான ஒன்றே! ஆனால் பத்துவிற்கும் புதிது தானே. அவனும் ஈஸ்வர் எழுந்த விதத்தைப் பார்த்து ரஞ்சனியை அடித்து விடுவானோ என்று தோன்ற பார்த்து நின்றான்.

பத்து ரஞ்சனியைத் திருமணம் செய்த பிறகு தான் இன்னும் நன்றாக ஈஸ்வரை தெரிந்து கொள்ள முயன்றான். ஆனால் அப்போது ஈஸ்வர் பிரச்சனைகளின் இடையில் இருந்தான், அதோடு மட்டுமல்லாமல்  மனதில் மட்டுமல்லாது செயலிலும் சறுக்கி இருந்ததால் அவனின் இயல்பில் இல்லை.

ஆனால் இப்போது மீண்டு இருந்தான்.

ஈஸ்வரின் கோபத்தை சற்று சுவாரசியமாக பார்த்து இருந்தாள் வர்ஷினி!!!

அந்த நீல நிறக் கண்கள் தன்னை பார்ப்பதை ஈஸ்வர் அறியவில்லை. அவனின் கவனம் எல்லாம் ரஞ்சனியின் மேல் மட்டும் தான்!!!

**சுட்டும் விழிச் சுடர் தான் கண்ணம்மா!!!**

## அத்தியாயம் முப்பத்தி எட்டு :

**நினைவில் நின்றவள்! அது நீதானே! நீதானே! நீதானே!**

“கொஞ்ச நேரம் தனியா இருக்கணும் ஃபீல் பண்ணினேன், அதான் போனேன்” என்று ரஞ்சனி பேசும்போது சத்தமே வரவில்லை.

“அறிவிருக்கா உனக்கு! தனியா இருக்கணும்! நான் இங்க இருக்கேன்! ஈவ்னிங் வந்துடுவேன்னு பத்துக்கு மெசேஜ்ஜாவது போட்டிருக்கணும். அவன் உன்னை காணோம்னு எவ்வளவு பயந்துட்டான் தெரியுமா? யாராலையும் சமாதானம் செய்ய முடியலை” என்று ஈஸ்வர் சொன்ன போது ரஞ்சனியின் விழிகள் பத்துவிடம் மன்னிப்பை யாசித்தது.

“நீ எங்கேன்னு தெரியாம அஸ்வின் உன்னை ஏதாவது பண்ணியிருப்பானோன்னு அவனைப் போய் பார்த்தோம்!”

“என்னது அஸ்வின்னா? அவன் வந்துட்டனா? அவனை ஏன் பார்த்தீங்க?” என்றாள் சிறிது குரலுயர்த்தி,

“பண்றது எல்லாம் பண்ணிட்டு எங்களைக் கேள்வி கேட்கறியா, அஸ்வின் மட்டும் தான் உனக்கு ப்ராப்ளம் கொடுப்பான், அதுதான் அவனைத் தேடிப் போனோம். இப்பவும் நீ எங்கே இருப்பேன்னு அவன் தான் சொன்னான். எங்களுக்குத் தெரியவேயில்லை” என்று சொல்லும் போது ஈஸ்வரின் கண்கள் நேரடியாக ரஞ்சனியைக் குற்றம் சாட்ட,

“அவன் தான் ஃபுல் டைம் என் பின்னாடி சுத்தினான். அதனால அவனுக்குத் தெரிஞ்சிருக்கும்!” என்று கம்மிய குரலில் சொல்ல,

“ஃபுல் டைம் உன் பின்னாடி சுத்தினான்னு இப்போ சொல்லு! முன்ன சொல்லியிருக்கியா!”

“அவன் என்னை தொந்தரவு எல்லாம் குடுத்ததில்லை! பிடிச்சிருக்குன்னு காட்டுவான். எனக்கு எரிச்சலா இருக்கும். உன்கிட்ட சொன்னா நீ அவனை தொலைச்சி கட்டிடுவ, அதுதான் சொல்லலை!” என்றவளின் பிடி பத்துவின் புஜத்தை பயத்தில் இன்னும் இறுக்கிப் பிடிக்க,

ஆதரவாக அவளின் கையை பத்து தட்டிக் கொடுக்கத் தான் இறுக்கத்தை தளர்த்தினாள்.

“தொந்தரவு குடுக்கலைன்னா பத்துவை அவசரமா ஏன் கல்யாணம் பண்ணின?” என்றான் தீர்க்கமாக.

“அது கொஞ்சம் மிரட்டிப் பேசினான். உனக்குத் தெரிஞ்சா? அவனை ஏதாவது பண்ணிட்டா? அதுக்கான சேன்ஸ் கொடுக்கவே கூடாதுன்னு தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்! இது பத்துக்கு தெரியும்! உங்களுக்குத் தெரியும் தானே! சொன்னேன் தானே!” என்று பத்துவை சாட்சிக்கு இழுத்தாள்.

“சொன்னா!” என்று ஒப்புக் கொடுத்தவன், “தாஸ்கிட்ட சொன்னோம்! தாஸ் கூட போய் மிரட்டிட்டு வந்தான்!” என்று பத்து சொல்ல,

“ப்ச்!” என்று பத்துவை பார்த்து சலித்தவன், “அஸ்வின் எல்லாம் நீங்க டீல் பண்ற ஆளேக் கிடையாது, இதெல்லாம் என்கிட்டே யாருமே சொல்லலை. அதனால தான் வர்ஷினியோட ஃபோட்டோ ப்ராப்ளம் வந்தது. அவன் அதை மிஸ்யுஸ் பண்ணலை. ஓகே! தப்பிச்சிட்டோம்!”

“ஆனா செஞ்சிருந்தா! அவனைக் கொல்லுவோம், குத்துவோம், வெட்டுவோம்ன்னு நாம டைலாக் பேசலாம். ஆனா ஒரு விஷயம் நடந்த பிறகு அதுக்கு பதில் கொடுத்து என்ன பிரயோஜனம்? அது நடக்காம பார்த்துக்கணும் இல்லையா?” என்று பத்துவையும் குற்றம் சாட்டினான்.

“ஏன் சொல்றேன்னா, நான் அனுபவிச்சு இருக்கேன். எங்க சாம்ராஜ்யமே சிதைஞ்சு போச்சு, உங்ககிட்ட கையேந்தி நின்னோம். ஆனா அது உறவா மாறிப் போச்சுன்றது வேற விஷயம், ஆனா அதுல அவனை ரொம்பவும் எதுவும் பண்ண முடியலை. ஏன்னா ஜகன்! ஜகன் தான் அதுல முதல் முதற் காரணம். அது தெரியாம அஸ்வின் திரும்ப திரும்ப நிறைய ட்ரபிள் குடுத்தான். வர்ஷினியை இழுத்ததுனால உங்கப்பா ஜெயில் அனுப்பினார்!” என்று ஈஸ்வர் பேசிக் கொண்டேப் போக,

பத்துவின் முகம் சற்று கோபத்தைக் காட்டவும், அதைப் புரிந்தவனாக முரளி “டேய்! ஈஸ்வர்! விடுடா! நிக்க வெச்சு கேள்வி கேட்காத விடு!” என்றான் சமாதானமாக.

எல்லாம் பார்த்திருந்த வர்ஷினியின் மனதில் பதிந்தது இதுதான்! அவன் என் புகைப்படங்களைத் தவறாகக் கூட பயன்படுத்தி இருக்கலாம். ஆனால் செய்யவில்லை. பெரிய பகையாக இருந்த போதும் தன்னை இன்னும் கீழாக அஸ்வின் காட்டவில்லை என்ற

எண்ணம் இன்னும் அவளுக்கு அஸ்வினை நல்லவனாகத் தான் காட்டியது.

அமைதியாக பார்த்திருந்தாள். இப்போது ரஞ்சனியை விட்டு வர்ஷினியிடம் திரும்பிய ஈஸ்வர் “உனக்கு அவனை எப்படித் தெரியும். அவன் நல்லவன்னு அப்படி செர்டிபிகேட் கொடுக்கற. அடிக்கப் போனா நடுவுல வந்து தடுக்கற” என,

இது என்ன புதிதாய் என்று மொத்த வீடும் வர்ஷினியின் புறம் திரும்பியது. வர்ஷினி “சொல்வதா? வேண்டாமா?” என்று யோசிக்க,

கேட்டா பதில் சொல்லணும் என்ற ஈஸ்வரின் அழுத்தமான குரல் அவளை அஸ்வினை சந்தித்த சம்பவத்தைச் சொல்ல வைத்தது.

“அவனோட இருந்து தள்ளி நிக்கறது தான் சேஃப்” என,

“உன்னை விட யாரும் என்னை ஒன்னும் செய்ய முடியாது!” என்று வர்ஷினியின் கண்கள் அப்பட்டமாய் குற்றம் சாட்ட,

இதுவரை பாராமல் இருந்த நீல நிறக் கண்களைப் பார்த்தவன், அதனைப் பார்த்துக் கொண்டே அதில் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா காலையில் பார்த்தது போல என்று அளந்து கொண்டே அவளுக்கு பார்வையால் பதிலும் கொடுத்தான்.

வர்ஷினி என்ன சொல்ல வருகின்றான் என பார்த்து நிற்க, அருகில் வந்தவன் யாருக்கும் கேட்காமல் “என்ன பார்க்கிற?” என்று தாழ்ந்த குரலில் வினவ,

“மத்தவங்க கிட்ட எனக்கு பத்திரமா இருக்க தெரியும்? நீ தான் என்னை ஏதாவது பண்ணுவ!” என,

“ஆமாம்! அப்படித்தான்! நான் எப்பவுமே உன்கிட்ட அப்படித்தான்! என்ன இப்போ?” என்றான் தெனாவெட்டாக வர்ஷினியிடம். மனதில் இருந்த கோபம் அப்படி பதில் சொல்ல வைத்தது. “இந்த அஸ்வின் நல்லவனாம். என்கிட்ட சொல்றா! இருந்துட்டு போறான்! நான் கெட்டவன் தான்! என்ன பண்ணுவாளாம்?” என்ற திமிர் அப்படி பதில் சொல்ல வைத்தது.

யாருக்கும் எதுவும் புரியவில்லை. ஆனாலும் வர்ஷினியை ஏதோ மிரட்டுகிறான் என்று புரிய. “எதுக்குடா இவ்வளவு கோபம்! என்ன பேசற அவ கிட்ட?” என்று முரளி அருகில் வர.

“அவகிட்டயே கேளு, சொல்லுவா!” என்றான் ஈஸ்வர் கைகளைக் கட்டி.

ரஞ்சனி ஈஸ்வரை தான் பார்த்து இருந்தாள், “எப்படி மாறிவிட்டான் என் அண்ணன்?”

வர்ஷினி எதுவும் பேசாமல், ஈஸ்வரை முறைத்துப் பார்த்தவள், பின்பு திரும்பி அவளின் ரூம் நோக்கி மாடியேறத் துவங்க,

“வர்ஷினி நில்லு!” என்ற முரளியிடம், “போகட்டும் விடு!” என்று சைகை காட்டியவன், அவள் சென்றதும், “எதுவும் யாரும் அவ கிட்ட பேசாதீங்க! செய்யாதேன்னு சொல்ற விஷயத்தை வேணும்னே செய்வா! விட்டுடு! நான் பார்த்துக்கறேன்!” என்றவன்,

“அப்பாக்கு இங்க நடந்தது தெரியாதுன்னு நினைக்கிறேன். யாரும் சொல்லாதீங்க. திரும்ப அஸ்வினை ஏதாவது செய்யப் போறார். ஏற்கனவே ஜெயில் போயிட்டு வந்துட்டான். இப்போதைக்கு அவன் ஒன்னும் பண்ணலை! நாமளா சீண்டி விட வேண்டாம்!” என்றான்.

பத்துவிடம் வந்தவன் “என்னவோ ஒரு கோல்ட் வார் உனக்கும் எனக்கும் இடையில, எப்போ எங்க ஆரம்பிச்சதுன்னு தெரியலை, ரஞ்சிக்கும் உனக்கும் கல்யாணம் நடக்கும் முன்னயே அது உனக்குள்ள இருக்குன்னு நினைக்கிறேன். ரஞ்சி சொல்லாம கொள்ளாம உன்னை கல்யாணம் பண்ணினது எனக்கு எப்பவுமே ஒரு வருத்தம் தான். ஆனா அது அவ மேல! உன் மேலே இல்லை! பத்து ரைட் சாய்ஸ்ன்னு தான் எப்பவும் நினைச்சு இருக்கேன்”

“நீ ரஞ்சியோட கணவன்ட்றதுக்கு முன்னாலயே நீ எனக்கு முரளியோட தம்பி. அதனால் சும்மா ஏதாவது நான் பேசினா முறைச்சு பார்க்கறதை விடணும், நமக்குள்ள சண்டை வந்தா மறுபடியும் இவ தான் ஃபீல் பண்ணுவா” என்று ரஞ்சனியைக் காட்டியவன்,

“அவ மூட் அப்செட் தனியா போயிருக்கான்னா அது அவளோட ப்ராப்ளம்மா இருக்காதுன்னு எனக்குத் தோணுது! அவளோடதுன்னா உன்கிட்ட சொல்லியிருப்பா! வேற ப்ராப்ளமா இருக்கும், மத்தவங்களைப் பத்தி சொல்ல முடியாம தனியா போயிருப்பா!”

“சொல்லாம் கொள்ளாம போயிருக்கா, பார்த்தவுடனே ஒரு அறையாவது விட்டிருக்க வேண்டாம் நீ!” என்று திரும்பவும் பத்துவை முறைத்தான்.

ரஞ்சனி “நல்ல அண்ணன் டா நீ!” என்று பார்க்க,

“கணவன் மனைவிக்குள்ள எல்லாம் ரொம்ப நல்லவங்களா இருக்கணும்னு அவசியமில்லை. அவங்க அவங்க இயல்போட இருக்கணும் கோபமோ சந்தோஷமோ உடனே காட்டணும். ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ்ஸோட இருக்கிறது கணவன் மனைவி உறவு கிடையாது”

“எமோஷன்ஸ் ஃபீலிங்க்ஸ் எல்லாம் கண்ட்ரோல் பண்ணி காட்டிக்கிட்டீங்கன்னா அப்புறம் என்ன உறவு இது. ரொம்ப நல்லவனா இருந்து எல்லோரும் உன்னை மாதிரியே இருக்கணும்னு நினைக்காத கொஞ்சம் கெட்டவனா இருக்கலாம்! தப்பில்லை!” என்று சொல்லிக் கிளம்ப,

பத்துவிற்கு சத்தியமாகப் புரியவில்லை, என்ன சொல்கிறான் என்றே!

“டேய், அண்ணா!” என்ற ரஞ்சனி, “சும்மா என்ன ஓவராப் பேசற, அவர் என் வீட்டுக்காரரர் ஞாபகம் வெச்சிக்கோ!” என சமாதான முயற்சியில் இறங்க,

“ஞாபகம் இருக்கறதால தான் இதோட மட்டும் நிறுத்தறேன்!” என்றான் ஈஸ்வர் கடுப்பாக.

“இல்லைன்னா, என்ன பண்ணுவ?” என்று ரஞ்சனி விளையாட்டுப் போல கிளம்ப,

“வாயை மூடு!” என்று அவ்வளவு கோபமாகப் பேசினான் ஈஸ்வர், “என்ன சும்மா உன் வீட்டுக்காரர்ன்னு சப்போர்ட் பண்ற. எனக்குப் பொண்ணு குடுக்க வேண்டாம்னு சொன்னானாமே!” என்ற கேட்ட ஈஸ்வரின் பாவனையில் இருந்த தீவிரம் பத்துவிற்கு முற்றிலும் புதிது. ஒரு வருடத்திற்கு முன் அவன் பெண் கேட்ட சமயம் நடந்த விஷயம். ஆனாலும் ஈஸ்வர் அதை மறக்கவில்லை.

ஈஸ்வரைப் பற்றி நன்கு அறிந்த முரளி, “ஈஸ்வர் என்ன பேசிட்டு இருக்க, வா!” என்று கைப் பிடித்து வெளியே அழைத்துப் போக முயல,

“ஷ், விடுடா!” என்றவன், “சொல்லு! ஏன் குடுக்க வேண்டாம்னு சொன்ன!” என்று பத்துவின் முன் கை கட்டி நின்ற தோரணை யாரையும் பயம் கொள்ளச் செய்யும்.

முரளியும் ரஞ்சனியும் கவலையோடுப் பார்த்திருந்தனர்.

பத்து எதுவும் பேசினால் தப்பாகி விடும் என்று அமைதியாக நிற்க,

ரஞ்சனிக்கு, ஈஸ்வருக்கு மிகவும் கோபம் என்று புரிய “விஷ்வா! என்ன இது?” என்று அண்ணனுக்கும் பத்துவிற்கும் இடையில் நின்றாள்.

“உன் வீட்டுக்கரார்ன்னு சொன்ன தானே! சொல்லு அவர் கிட்ட! ஒரு வருஷமா இவர் அப்பா அவர் பொண்ணுக்கு மாப்பிள்ளை தேடறார். எதுவுமே அமையலை. இப்போ நான் திரும்ப வந்திருக்கேன் அப்படின்னா அவர் கூப்பிட்டதால தான் நான் வந்தேன்”

“இப்போக் கூட ஒன்னுமில்லை, என்னை விட பெஸ்ட்டா ஒரு மாப்பிள்ளையைக் கொண்டு வந்து உன் வீட்டுக்காரரை நிறுத்தச் சொல்லு! நான் விலகிக்கறேன்” என்றவனது குரலில் அவ்வளவு கோபம், ஒரு இளக்காரமும் கூட,

அந்த இளக்காரம் பத்துவை உசுப்ப, “ஓஹ்! நீங்க எந்த வகையில பெஸ்ட்?” என்றான் ஈஸ்வரின் அதே தொனியில்.

“பத்து!” என்று ஏகக் குரலில் ரஞ்சனியும் முரளியும் அதட்டினர்.

பதிலுக்கு ஈஸ்வர் பத்துவைப் பார்த்த பார்வையில் என்ன இருந்தது என்று பத்துவிற்கு புரியவில்லை.

“சாரி கேளுடா!” என்று முரளி பத்துவிடம் கோபப் பட,

“ஷ்!” என்று முரளியை அடக்கிய ஈஸ்வர்,

“என்ன வகையில பெஸ்ட்டா?” என்று நிறுத்தியவன்,

“என் பேர் கொண்டு இல்லை! என் குடும்பம் கொண்டு இல்லை! என் படிப்பு கொண்டு இல்லை! என் பதவி கொண்டு இல்லை! என் பணம் கொண்டு இல்லை! என் தோற்றம் கொண்டும் இல்லை! என்னோட புத்திசாலித்தனம் எதுவுமே இல்லை! அதைக் கொண்டு நான் பேசலை” என்று மீண்டும் நிறுத்தினான்.

“விஷ்வா! ப்ளீஸ்! கோபப்படாத! அவருக்காக நான் சாரி கேட்கறேன்!” என்று கெஞ்சலில் இறங்க,

“ப்ச்! இது சாரி சொல்ற விஷயம் இல்லை. அவனுக்கு எப்படி பெஸ்ட்ன்னு நான் புரிய வைக்கணும்!” என்ற ஈஸ்வரின் குரலில் இருந்தது ஆற்றாமை மட்டுமே! ஆம்! ஈஸ்வர் என்ற கர்வம் பிடித்த

மனிதனைப் பார்த்த இந்த கேள்வி அவனின் தன்மானத்திற்கு பெரிய அடி!

"எனக்கு அவனுக்குப் புரிய வைக்கணும்ன்னு எந்த அவசியமும் கிடையாது. ஆனா இதைப் புரிய வைக்கிறது, உனக்காக, முரளிக்காகக் கிடையாது. ராஜாராம்ன்ற ஒரு மனுஷருக்காக!"

"நான் உதவின்னு கேட்ட நிமிஷம் மறுக்காம செஞ்சார். எவ்வளவு பணம் தெரியுமா? நான் அந்த மாதிரி எல்லாம் யாருக்கும் செய்வனா தெரியாது. அந்த நன்றி எனக்கு நான் இந்த உலகத்துல இருக்குற வரை இருக்கும். அந்த மனுஷரோட பையன் அப்படின்றதால தான் சொல்றேன். கேட்டுக்க சொல்லு!" என்றவன்,

"எதுல பெஸ்ட்னா, வர்ஷினியை யாரும் என்னை விட புரிஞ்சிக்க முடியாது. என்னை விட நல்லா பார்த்துக்க முடியாதுன்றதுல பெஸ்ட்!" என்று நிறுத்தியவன்,

சுற்றிலும் யார் இருக்கிறார்கள் என்று பார்த்தான், அவர்களைத் தவிர ஷாலினி மட்டுமே! வர்ஷினி இருக்கின்றாளா, மேலே இருந்து பார்க்கின்றாளா என்று பார்த்தான். அவள் இல்லை என்று உறுதி படுத்திக் கொண்டு,

"உங்க வீட்ல, இங்க இருக்குற போது, அவளுக்கு எவ்வளவு பணம் இருந்தாலும், ஒரு மரியாதை இருக்கில்லையா இந்த சமூகத்துல, அதை விட என் மனைவின்ற ஒரு ஸ்தானத்துக்கு அவ வரும் போது, அவளுக்கு இந்த சமூகத்துல கிடைக்கப் போற மரியாதைல பெஸ்ட்!" என்று சொல்ல,

பத்து வாயடைத்து நின்றான்.

திரும்ப முரளியைப் பார்த்தவன், "நான் பேசின இந்த வார்த்தைகளை யாராவது வர்ஷினிக்கிட்ட சொல்லி அவளைக் கஷ்டப்படுத்துனீங்க, என்ன பண்ணுவேன்னு தெரியாது!" என்று சொல்லி சென்றான்.

மனதில் ஒரு பதைப்போடு செல்லும் ஈஸ்வரைத் தான் அத்தனை பேரும் பார்த்து நின்றனர்! அவன் சென்ற நிமிடம் எல்லோரும் பத்துவை முறைத்து பார்க்க,

ஷாலினி ஒரு படி மேலே சென்று, "என்ன தம்பி இப்படிப் பண்ணிட்டீங்க? யார் கிட்ட என்ன பேசணும்னு தெரியாதா? நீங்க பேசினது ரொம்ப தப்பு!" என்று சொல்ல, யாருக்கும் பதில் சொல்ல பத்துவால் முடியவில்லை.

“அதையும் விட ஈஸ்வரின் பேச்சுக்கள் அதற்கு என்ன பதில் சொல்ல முடியும்! சொல்லவே முடியாது! அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளும் உண்மை! அதையும் விட இதைச் சொல்லி அவளை கஷ்டப்படுத்த வேண்டாம் என்று மிரட்டிச் சொல்கின்றான்”

நிச்சயமாய் அவன் பெஸ்ட் தான்! ஒத்துக் கொள்ளத் தான் வேண்டும்!

**நான் காதல் மதுவைக் குடித்து விட்டேன்! கிண்ணம் உடையும் முன் நானே உடைத்து விட்டேன்! ஒரு நொடியில் ஞானம் அடைந்து விட்டேன்! அந்த ஞானத்தில் யுகங்களை கடந்து விட்டேன்!**

**நான் காதல் யோகி! நான் காதல் யோகி! யோகி!!**

## அத்தியாயம் முப்பத்தி ஒன்பது :

**உதிர்ந்த வார்த்தைகளை கோர்க்க முடியாது!**

“என்னடா உனக்கு பிரச்சனை? உன்னை யார் ஈஸ்வர் கிட்ட இப்படி பேசச் சொன்னது!” என்றான் முரளி பத்துவைப் பார்த்து அவ்வளவு கோபமாக.

“அவர் பேசினார், நான் பேசினேன்!” என்றான் பத்து,

“இப்போ பேசினது இல்லை! எப்போவும் நீ அவனுக்கு திமிர் தான் சொல்ற, அலட்சியமா நடந்துக்குவான், யாரையும் மதிக்க மாட்டான் சொல்ற, அவன் அப்படி இருக்குறதுல உனக்கு என்ன பிரச்சனை, அது அவனோட பிறவிக் குணம், உனக்கு பிடிக்காதுன்னு எல்லாம் மாத்த முடியாது புரிஞ்சதா, அவன் அப்படித்தான்!”

“அவன் அப்படியிருந்ததுனால தான் என் ஃபிரண்ட் ஆனான், நான் அவனுக்கு ஃபிரண்ட் ஆனேன், எட்டு வருஷ ஃபிரண்ட்ஷிப்டா, அவனோட அந்த குணம் எனக்குப் பிடிக்கும், எல்லோர் கிட்டயும் பணிவா இருக்கணும்னு என்ன?”

“இப்படி இன்னொரு தரம் மரியாதையில்லாம என் முன்னாடி நீ முதல்ல அவனைப் பேசாத. என் முன்னாடி மட்டுமில்ல எப்பவும் பேசாத! நீ சொன்ன புரிஞ்சிக்குவ, அவன் மாட்டான். ஒரு தடவை மனசுல வேண்டாம் முடிவு பண்ணிட்டான் அப்புறம் கஷ்டம்.

என்னோட ஃபிரன்ட் மட்டுமில்லை, உனக்கு மச்சான் கூட! உறவை சிதைச்சிக்காதே! ”

“பணம் இருக்கு நம்மகிட்ட, வேற என்ன இருக்கு, இப்போ அவன் கேட்ட கேள்விக்கு உன்னால பதில் சொல்ல முடியுமா” என முரளி பேச, முரளி இப்படிக் கோபப்பட்டு எல்லாம் பார்த்ததேயில்லை பத்து.

பத்து அப்படியே நிற்க, “வாங்க வீட்டுக்குப் போவோம்!” என்று ரஞ்சனி பத்துவை அழைத்து அம்மா வீடு கிளம்பினாள். எப்படியாவது ஈஸ்வரின் கோபம் குறைந்து விட வேண்டும். முரளி சொன்னது மிகவும் உண்மை! பத்துவிற்கு புரியவைக்கலாம், ஈஸ்வருக்கும் புரியவைக்கலாம், புரியாதனவல்ல, புரிந்தாலும் சரி செய்ய மாட்டான்! நான் அப்படிதான் என்பான்.

“இல்லை! ரஞ்சனி வேண்டாம்! இப்போ பேசாதே! அவனை கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ண விடு, ரொம்பக் கோபமா இருப்பான், யாராவது அந்தக் கேள்வி கேட்டா அவனுக்கு அவ்வளவு கோபம் வந்திருக்காது. சொல்லப் போனா நான் பெஸ்ட்ன்னு உனக்கு ப்ரூவ் பண்ண வேண்டிய அவசியமில்லை, போடான்னு தான் அவனோட பதில் இருக்கும். அது பத்துன்றதால தான் அவ்வளவு கோபம்!”

“இப்போ போக வேண்டாம் எல்லாம் அவங்க அவங்க வேலையைப் பாருங்க!” என்று முரளி சொல்ல, தன் அண்ணன் இப்படி அதட்டிப் பேசியே பத்து அப்போதுதான் பார்த்தான்.

ஆனாலும் முரளியிடம் “பொண்ணு கேட்டார் என் கருத்து சொன்னேன்! என்ன தப்பு? அவர் கேட்டா ஓகே சொல்லிடணுமா, சும்மா மிரட்டுறார்! அப்பா ரஞ்சனியை பெண் கேட்டப்போ அவர் எவ்வளவு பேசினார்” என்று பத்து சொல்ல,

ரஞ்சனியின் முகம் சுருங்கி விட்டது. “நான் நீ என்று போட்டி போடும் ஈஸ்வருக்கு என்ன ஒரு காம்ப்ளிமென்ட் இது” என்பது போல. “என் அண்ணனுக்கு குறையா? நான் வேண்டாம் என்று நினைப்பது ஐஸ்வர்யாவிற்காக. ஆனால் ஈஸ்வருக்கு என்ன குறை இப்படி அலசி ஆராய்வது போல!” என்று தோன்ற பத்துவை பார்த்து நின்றாள்.

முரளி பத்துவிற்கு பதில் சொல்லும்முன், ஷாலினி முரளியிடம் திரும்பியவள், “தம்பி பேசினது தப்பு! அதுவும் நம்ம வீட்ல அவங்க இருக்கும் போது பேசினது ரொம்ப தப்பு! ஆனா தம்பி சொன்னது ஈஸ்வர் அண்ணாக்கு எப்படி தெரியும்? உங்க நண்பர்ன்னு ஒரு ஆர்வக் கோளாறுல நீங்க தான் சொல்லி வெச்சீங்களா? உங்களை என்ன செய்ய?” என்று முரளியிடம் திருப்பினாள்.

“அது எனக்கு ஞாபகமில்லை” என்று முரளி தடுமாற,

பத்துவிடம் திரும்பியவள், “மரியாதை அவருக்கு ரொம்பவுமே முக்கியம். எல்லோர் கிட்டயும் பேசற மாதிரி பேச முடியாது. முதல்லே நம்மகிட்ட பண உதவி கேட்டப்போ, மாமா ரஞ்சனியை பெண் கேட்டு பணம் திரும்ப தர வேண்டாம் சொல்லி ரொம்பப் பிரச்சனை ஆச்சு!”

“அப்போவும் என்ன சொன்னார் பெண் கேட்டது தப்பில்லை! அதோட எதுக்கு பணத்தை லிங்க் பண்ணறீங்க. இஷ்டமிருந்தா குடுப்போம், இல்லைன்னா இல்லைன்னு நேரா சொன்னார். அதனால தான் நாம பண உதவி பண்ணினப்போ ஈஸ்வர் ஃபைனான்ஸ் அப்படியே ரஞ்சனிக்கு பாதி எழுதிக் கொடுத்தார், பணம் உறவுக்குள்ள வந்துடக் கூடாதுன்னு”

“யாருக்கும் பணத்தைக் குடுக்காம ஏமாத்தி இருக்கலாம், இல்லை ரஞ்சனிக்கும் குடுக்காம இருக்கலாம். ஆனா அப்படி செய்யலை. அந்த குணம் உங்களுக்கு ஏன் ஞாபகம் வரலை. கொஞ்சமும் யோசிக்காம யாரோ செஞ்சதுக்கு தான் பொறுப்பு எடுத்துகிட்ட இதெல்லாம் செய்ய வெச்சது அவரோட திமிர், அவரோட கர்வம், சொல்லுங்க யாரு இப்படி தூக்கிக் கொடுப்பா, அப்போ அந்த திமிர் இருப்பதில் என்ன தப்பு?” என்று ஷாலினி கேட்க,

அசந்து விட்டான் பத்து, ஷாலினி அவனை தப்பு சொன்ன போது “என்ன இது புரியாமல் பேசுகின்றார்கள், என்ன தப்பு நான் பேசியதில்!” என்று தோன்றியது, இப்போது அண்ணியின் அணுகுமுறையில் பேச்சற்று நின்றான்.

ஷாலினி அதிகம் பேசாவிட்டாலும் எப்படி எடை போடுகிறாள் என்று புரிய, மூவருமே அவளை வியந்து தான் பார்த்தனர். ரஞ்சனி அவளின் கையை பிடித்து “தேங்க்ஸ்!” என,

“உன்னோட அண்ணா எனக்கும் அண்ணா தான்! நம்மகிட்ட இருக்குற குறையை நாம பார்க்கணும். பொண்ணு நான், என்னை இந்த வீட்ல கல்யாணம் செஞ்சு குடுக்கும் முன்ன எங்கப்பா அவ்வளவு யோசிச்சார். சாமான்யத்துல ஒத்துக்கலை” ராஜாராம் குறித்து தான் ஷாலினி சொல்கிறாள் என்று புரிந்தது.

“வெளில சொல்லக் கூடாது, மூணு மாசம் எங்கப்பா இவரை டிடக்டிவ் வெச்சு ஃபாலோ பண்ணினார். அப்புறம் தான் ஒத்துகிட்டார். அப்புறம் என்னை கல்யாணம் பண்ணிக்கோ சொன்னார். இப்படி இருக்கும் போது நம்ம பொண்ணை ஈஸ்வர்

அண்ணா கேட்கும் போது யோசிக்காம குடுத்துடணும்! அதுதான் புத்திசாலித்தனம்!"

"எனக்கு தெரிஞ்சவரை அண்ணா இன்னும் வீட்ல பேசியிருக்கவே மாட்டார். அவர் தான் கேட்கிறார், நீ சொல்லியிருக்கியா?" என்று ரஞ்சனியிடம் கேட்க,

"இல்லை" என்று தலையாட்டினாள்.

"இதை ஈசியா அங்க பேசிடக் கூட முடியாது, சொத்தைக் கூட தூக்கி குடுப்பாங்க! ஆனா இதுக்கு அவங்க வீட்ல ஒத்துக்கவே மாட்டாங்க இது என்னோட அனுமானம். அதனால இன்னும் இதுக்கு தடையா நின்னு உளறாதீங்க!" என்றாள் பத்துவை பார்த்து.

ஈஸ்வர் கோபமாகப் பத்துவிடம் பேசிச் சென்றாலும், அவர்கள் வீட்டு வாசலைக் கடக்கும் போதே அதை விட்டு விட்டான். அவனின் எண்ணம் எல்லாம் வர்ஷினி தான். "தேவையில்லாமல் அவளைக் கோபப்படுத்தி விட்டோம். நீ எதுக்குடா இவ்வவளவு பேசற?" என்று அவனை அவனே திட்டிக் கொண்டு வீட்டை அடைந்தான்.

முரளியும் ஷாலினியும் சென்று விட, ரஞ்சனி பத்துவைப் பார்த்து திரும்பி நின்றாள். அவனின் முகம் ஒரு இயலாமையைக் காட்டியது. அவன் ஈஸ்வரிடம் பேசியது கோபம் தான். ஆனால் இப்போது அதைக் காட்டும் நேரமல்ல என்று புரிந்து அவன் சரியாகட்டும் பேசிக்கொள்ளலாம் என்று பார்த்து நின்றாள்.

"எதுக்கு இப்படி நிக்கிற?"

"இல்லை, விஷ்வா சொன்ன மாதிரி என்னை அடிப்பீங்களோன்னு பார்த்து நிக்கறேன்" என்று ஒரு மென்னகையுடன் சொன்னவளிடம்,

"நிஜமா எனக்கு அப்படித் தோணலை, நீ இருக்குற இடம் எனக்கு தெரியலை, வேற யாருக்கோ தெரியுதுன்னு ரொம்ப ஒரு மாதிரி ஆகிடுச்சு!"

"அதுதான் சொல்றேனே. அவன் என் பின்னாடி சுத்தினான், அதனால தெரிஞ்சிருக்கும்!" என்றாள் ஈசியாக.

"இவ்வளவு டென்ஷன் கொடுத்துட்டு இப்போ கூலா பேசறியா?"

"பின்ன, எங்கண்ணன் எவ்வளவு என்னை பிச்சு பிச்சு வெக்கறான், அது அவ ப்ராப்ளம் இல்லை, அடுத்தவங்க ப்ராபளம்னு,

உங்களுக்கு எதுவுமே தெரியலை!”

“ஆமாம்! எதுவுமே தெரியலை!” என்றான் பத்து சலிப்பாக.

“ம்கூம்! நீங்க தேற மாட்டீங்க எங்கண்ணன் இப்போ தானே சொன்னான், எப்பவும் நல்லவனா இருக்காத கொஞ்சம் கெட்டவனா இருன்னு!”

“அதுதான் எனக்கு புரியலை!”

“இவ்வளவு நல்லவரா நீங்க? அவன் சொன்னது கணவன் மனைவின்னா கேள்வி கேட்கணும், அடிச்சிக்கணும் பிடிசிக்கணும்னு. இப்போ நான் சொல்றது, சும்மா பார்த்துட்டே இருக்கக் கூடாது. கணவன்னா அவனுக்கான உரிமையை எடுத்துக்கணும்னு” என்று கிண்டலாக சொல்லிப் போக,

அவளின் கைபிடித்து நகர விடாமல் நிறுத்தினான். “அது தப்பில்லையா? கணவன்னாலும் மனைவிக்கு பிடிக்கலைன்னா நாம உரிமை எடுக்கக் கூடாது இல்லையா?” என்றான் தீவிரமாக. சில மாதங்களாக ரஞ்சனியை நெருங்கவும் முடியாமல் விலகவும் முடியாமல் பத்துவின் மனதில் நடக்கும் போராட்டம் தான்.

“இதுக்கு தான் எங்க அண்ணா சொன்னான், கொஞ்சம் கெட்டவனா இருன்னு! அப்புறம் நான் ஒன்னு சொல்லவா!” என்று நிறுத்தினாள்.

“என்ன?” என்று பார்த்த பத்துவிடம்,

“விஷ்வாக்கும் எனக்கும் பெரிய பிரச்சனை வந்ததுக்கு காரணமே அவன் கிட்ட சொல்லாம உங்க கிட்ட வந்துட்டேன்னு தான். யோசிச்சு பாருங்க அப்போ பிடிச்சிருந்ததா பிடிக்கலையான்னு எல்லாம் தெரியலை. ஆனா உங்களை நம்பினேன் தானே, உங்க கிட்ட வந்தா என் ப்ராப்ளம்ஸ் சால்வ் ஆகிடும்னு. காதல் எல்லாம் ஈசியா வரும்ங்க. ஆனா நம்பிக்கை உடனே எல்லாம் வராது”

“இதுக்கு மேல உங்க கிட்ட என்ன அஃபக்ஷன் நான் காட்ட முடியும். அதுவுமில்லாம உங்களை பிடிக்கலைன்னு நான் எப்போ சொன்னேன். கல்யாணம்னா கணவன் மனைவிக்குள்ள என்ன நடக்கும்னு தெரியாத சின்னக் குழந்தையா நான். இல்லை, நீங்க பக்கத்துல வந்து நான் விலகியிருக்கேனா, இல்லையே! நானா எப்படி வருவேன்?”

“நீங்க என்ன பண்ணறீங்க, நான் பார்க்காதப்போ எல்லாம் என்னை பார்த்துகிட்டே இருக்கீங்க, நீங்க என்னை பார்க்கணும்ங்கறதுக்காகவே நான் உங்களை பார்க்கிறது இல்லை” என்று சொல்லி,

அவளும் “பசிக்குது சாப்பிடலாம்!” என்று டைனிங் ஹால் போக, பத்து ரஞ்சனியைப் பார்த்தபடி நின்றிருந்தான்.

மனது இப்போது தான் சமன் பட்டது. ரஞ்சனியை பற்றி மற்றவர்களுக்கு தெரிகிறது, தனக்கு தெரியவில்லை என்பதில் மனதே விட்டுப் போயிருந்தது. இப்போது இந்த ஈஸ்வரிடம் வேறு தேவையில்லாமல் வார்த்தை விட்டு விட்டேன். என் நேரமே சரியில்லை போல என்று நொந்து கொண்டான்.

திரும்பி அவன் முகத்தைப் பார்த்த ரஞ்சனிக்கு சிரிப்பு வந்தது, “அட வாங்க, பசிக்குது. நான் மதியமும் சாப்பிடலை!” என்று அவன் கை பிடித்து இழுத்துச் செல்ல,

அங்கே வர்ஷினிக்கு ஒரு குறுஞ்செய்தி “என் மேல இருக்கிற கோபத்துல சாப்பிட்டியா இல்லையா? சாப்பிட்டு படு!” என்று ஈஸ்வரிடம் இருந்து.

அந்த மெசேஜை முறைத்துப் பார்த்திருந்தாள் வர்ஷினி.

அவளுக்கு மெசேஜ் அனுப்பிவிட்டு முரளிக்கு அழைத்தவன் “டேய் வீட்ல எல்லோரும் சாப்பிடீங்களா?” என்றான்.

“தாத்தா முதல்லயே சாப்பிட்டார், நாங்க சாப்பிடோம், பத்துவும் ரஞ்சனியும் இப்போ தான் டைனிங் ஹால் போனாங்க, சத்தம் கேட்குது!”

“அப்புறம்!” என்று ஈஸ்வர் கேட்க,

“அப்புறமா?” என்று யோசித்தவன், “வர்ஷினி, வர்ஷினியைக் கேட்கறியா?” என்று கேட்க, பதில் சொல்லாமல் ஈஸ்வர் வைத்து விட, முரளிக்கு வர்ஷினி சாப்பிட்டது போலத் தெரியவில்லை.

யாரும் சொல்ல வேண்டியதே இல்லை, வர்ஷினி தானாக எப்போதும் சாப்பிட்டு விடுவாள், ஆனாலும் எப்போதும் ஷாலினி வர்ஷினியின் மேல் ஒரு கண் வைத்து இருப்பாள். அதிலெல்லாம் ஷாலினியை சின்ன குறையும் சொல்ல முடியாது. இன்று நடந்த பிரச்சனைகளில் கர்ப்பிணியான அவள் அசந்து விட, களைப்பில் படுத்து விட்டாள். முரளி அப்படியெல்லாம் அக்கறை எடுத்ததில்லை.

ரஞ்சனி காலையில் கல்லூரி, மாலையில் கிளினிக், இரவு படிப்பு என மிகவுமே பிசி. அவளுக்கு சாப்பிடவே பத்து சாப்பிட்டாயா என்று பத்து முறை கேட்பான்.

இப்போது முரளி வர்ஷினியின் ரூமின் கதவை தட்ட, கதவை திறந்தவளிடம் “சாப்பிடலையா வர்ஷி?” என,

“பசிக்குதுதான்! போகலாமா, வேண்டாமா, யோசிச்சிட்டு இருந்தேன் முரளிண்ணா!” என்று வர்ஷினி ஒரு சோர்வோடு சொல்லிய விதத்தில், முரளிக்கு கஷ்டமாகப் போய்விட்டது.

“வா சாப்பிடலாம்!” என அழைத்து இறங்கினான்.

வர்ஷினி கூட வருவதால் ஈஸ்வருக்கு அழைக்க முடியவில்லை, “சாப்பிடப் போறா!” என்று ஒரு மெசேஜை தட்டி விட,

“ஒரு பொண்ணை சாப்பிட வைக்கக் கூட முடியலை, அப்புறம் எதுக்குடா அவன் பெரிய இவன் மாதிரி பேசறான்!” என்று பத்துவை திட்டி ஒரு மெசேஜ் போட,

“ஐயோ!” என்றானது முரளிக்கு.

வர்ஷினியை டைனிங் டேபிளில் பத்துவோடும் ரஞ்சனியோடும் அமர்த்தியவன், அவளை சாப்பிட வைக்க பத்துவிடம் ஜாடைக் காட்டி, தள்ளி வந்து ஈஸ்வருக்கு அழைத்து “டேய்! டேய்! விடுடா, பத்து உன் தங்கச்சி புருஷன் என் தம்பி. இவ்வளவு கோபம் வேண்டாம், நம்ம ஆளுக்கு ஆள் முறைச்சிக்கிட்டு நின்னா நல்லாவா இருக்கும், விடுடா!” என்று கெஞ்சலில் இறங்கினான்.

ஈஸ்வர் ஒன்றை மனதில் வைத்தால், மாற்றுவது முடியாத காரியம் என்று தெரியும். பத்துவிடம் வேற்றுமை பாராட்டினால், பின்பு எப்போதும் அது சங்கடங்களைக் கொடுக்கும் என்று பேச ஆரம்பித்தான்.

**தொடாமலேயே அரியப் படுவது சூரியன் சுடுமென்பது!**

## அத்தியாயம் நாற்பது :

**நின்னை சரணடைந்தேன் கண்ணம்மா! நின்னை சரணடைந்தேன்!**

“ஏன் உன் தம்பின்னா திட்டக் கூடாதா?” என,

“நான் எப்போ அப்படி சொன்னேன். திட்டிக்கோ! ஆனா மனசுல வைக்காத! ஒரு வருஷம் கழிச்சு இதை ஞாபகம் வெச்சிருக்குற, இதை விட்டுடுவோம் ப்ளீஸ்!”

“எப்படி மறக்க முடியும், எப்பவும் வர்ஷினி ஞாபகத்துல இருக்கும் போது இதை எப்படி மறக்க முடியும்” என்று முரளியிடம் சொல்லாமல், “பெரிய இவனாட்டாம் பேசறான். உனக்காக விடறேன். தங்கை புருஷன்னு நான் ஞாபகம் வைக்கணும், ஆனா தங்கையோட அண்ணன்னு அவன் நினைக்கலை தானே!”

“ஆனா அவனை சொல்லியும் பிரயோஜனமில்லை! எங்க வீட்ல ஒன்னு என்னை நம்பாம வந்து அவனைக் கல்யாணம் பண்ணினா தானே! அது குடுக்குற திமிர், பத்து பேசறான். கல்யாணம் பண்ணியும் இன்னும் முகத்தை முகத்தை பார்த்துட்டு நிக்கறாங்க, இவன் என்னைக் கேள்வி கேட்கறான். எனக்கு கல்யாணம் செஞ்சுக் குடுக்கக் கூடாது சொல்றான், அப்படி செஞ்சு பாருங்க! அப்புறம் உன் தம்பியாவது, தங்கச்சி புருஷனாவது என்ன பண்றேன்னு?” என்றான் கடுமையாக.

முரளி “ப்ளீஸ்” என,

“இரு, இரு, என்ன பண்ணுவேன்னு சொல்லிடறேன், எப்படியும் அவனை எதுவும் செய்ய என் மனசாட்சி இடம் குடுக்காது. ஆனா நான் இனிமே பொண்ணு கேட்க மாட்டேன், பார்க்கலாம் நீங்க என்ன பண்ணறீங்கன்னு, தூக்கிடலாம் தான், ஆனா வர்ஷினியை எந்த வகையிலையும் டிஸ்டர்ப் பண்ண மாட்டேன்னு ப்ராமிஸ் செஞ்சிருக்கேன்”

“ஆனா எத்தனை வருஷமானாலும், என்னை தவிர யாரோடையும் அவ கல்யாணம் நடக்க விடமாட்டேன். யாராயிருந்தாலும் ஆனதை பார்த்துக்கோங்கடா!”

விஷயம் மிகவும் பெரிதாக முரளிக்கு பட்டது, ஒரு வருடத்திற்கு முன் இருந்த தீவிரத்தை விட அவன் குரலிலேயே இன்னும் தீவிரம் தெரிந்தது. “ப்ளீஸ் ஈஸ்வர்! இப்படி எல்லாம் பேசாத. என்னோட ஈஸ்வர் இப்படி எல்லாம் கீழ இறங்கமாட்டான்” என்று முரளி மீண்டும் சொல்ல,

“உனக்கு தெரியாது! உன்கிட்ட சொல்லவும் முடியாது! ஈஸ்வர் ரொம்ப இறங்கிட்டான்! ஆனா நீ சொல்லு, ஈஸ்வர் கல்யாணம் பண்ணக் கேட்டா சந்தோஷமா நினைக்க வேண்டாமா? அவனுக்கு குடுக்க வேண்டாம்னு சொல்ற அளவுக்கு என்ன இருக்கு. சில டிரா பேக்ஸ் இருக்கு, அது கண்டிப்பா அடுத்தவங்களுக்கு தெரியாது!

நான் வேண்டாம்னு வர்ஷினி சொன்னா நியாயம்! நீங்கல்லாம் ஏன்டா சொல்றீங்க?” என்றான் காட்டமாக.

“எங்க வீட்ல ஒன்னு பணத்தை தொலைச்சு என்னை எல்லோர் கிட்டயும் கையேந்த வெச்சு, ஒண்ணுமில்லாம பண்ணிடுச்சு, அதனால இப்படி அடுத்தவன் எல்லாம் என்னை பெஸ்ட்டான்னு பேச தான் செய்வான். இப்படி ஒரு அண்ணன், இப்படி ஒரு தங்கை! அப்புறம் எவன் என்னை மதிப்பான்!” என்றான் இன்னும் கோபமாக.

குடித்து எங்கேயும் திரும்ப இருக்கிறானோ என்ற பயமும் முரளிக்கு எழ, “எங்கே இருக்குற நீ முதல்ல அதை சொல்லு?” என,

“எங்கயோ இருக்கேன், விடுடா!” என்று தொலைபேசியை வைத்தான்.

வர்ஷினி சாப்பிட்டுக் கொண்டிருக்க, ரஞ்சனியும் பத்துவும் சாப்பிட்டு முடித்து வர்ஷினிக்காக அமர்ந்து இருக்க, “உங்க வீட்டுக்கு ஃபோன் செஞ்சு ஈஸ்வர் அங்க இருக்கானான்னு கேளு ரஞ்சனி!” என்று முரளி சொல்ல,

“ஏன்? என்ன? என்ன இப்போ? என்றாள் ரஞ்சனி பதட்டமாக,

“கேட்கறியா? இல்லை நான் கேட்கட்டா?” என்ற முரளியின் வார்த்தைகள் அவனின் கோபத்தின் அளவைக் காட்டின,

ரஞ்சனி அம்மாவிற்கு அழைத்து, “விஸ்வா இருக்கானாம்மா” என்று கேட்க,

“இப்போ தான் கொஞ்சம் நேரம் முன்ன வந்தான், சாப்பிடக் கூட இல்லை, சாப்பிட சொன்னா, நிறைய சாப்பிட்டேன் ரஞ்சனி வீட்ல சொல்றான். என்ன சாப்பிட்டான்?” என்று அம்மா மலர் கேட்க,

ரஞ்சனியின் முகம் அப்படியே மாறியது, “இல்லைம்மா, இங்க ஸ்னாக்ஸ் மட்டும் தான் சாப்பிட்டான். நீ சாப்பிட வை!” என,

“அவனுக்கா தோணினா தான் எல்லாம்! நாம சொன்னா சாப்பிடுவானா. அவனை உனக்கு தெரியாதா?” என்று அம்மா சொல்ல.

“சரிம்மா” என்று வைத்தவள், தலையைப் பிடித்து அமர,

அவர்களையெல்லாம் பார்த்து “என்ன ஆச்சு?” என்றாள் வர்ஷினி,

“ஒரு சின்ன வாக்குவாதம்” என பத்து சொல்ல,

“என்ன வாக்குவாதம்?” என்றவளிடம்,

“நான் பெஸ்ட்ன்னு பேசினாங்க அதுக்கு”

“அவங்க பெஸ்ட்ன்னு பேசினா நீங்க ஏன் வாக்குவாதம் செய்யணும். அதுல உங்களுக்கு என்ன?” என்று வர்ஷினி பத்துவிடம் கேட்க,

“இப்போது என்ன சொல்வது?” என்று விழித்தனர், அண்ணனைப் பற்றி பேசுவது கஷ்டமாக இருக்க, ரஞ்சனி அந்த இடத்தை விட்டு எழுந்து செல்ல, முரளி “இப்போ பதில் சொல்லு!” என்று பார்த்து நின்றான்.

“அதுவும் ரஞ்சனி அண்ணியோட அண்ணா, அப்போ நீங்க சண்டை போடக் கூடாது இல்லையா? அதுவும் நீங்களே சொல்லியிருக்கீங்க அவருக்கு திமிர்ன்னு. அப்படியிருக்கும் போது நீங்க பெஸ்ட்டான்னு கேட்டா அது அவரை ரொம்ப ஹர்ட் பண்ணும்” என்ற போது உண்டு முடித்திருந்தாள்.

அவளுக்கு ஈஸ்வர் என்ன செய்தான் என்பது வேறு. மனதிற்கு நியாயம் என்று பட்டதை பேச செய்தாள்.

“உன்னுடைய திருமணப் பேச்சை முன்னிட்டு சண்டை” என்று பத்துவோ முரளியோ சொல்லவில்லை.

“கொஞ்சம் கெட்டவங்க தான். ஆனா நிறைய விஷயத்துல நேர்மையா இருக்காங்க. நம்ம எல்லோரும் டவுன் டு எர்த்தா இருக்கணும் நினைக்க கூடாது.  எதுக்கு இந்த பெஸ்ட் பேச்சு வந்தது?” என்றாள்.

அதை அவளிடம் அண்ணன்கள் இருவருமே சொல்ல முயலவில்லை. “எதுக்கு இப்போ திடீர்ன்னு வந்திருக்காங்க?” என்றாள் மீண்டும். முரளிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. பத்துவும் பேசவில்லை. சில நிமிடங்கள் பார்த்தவள், அதன் பிறகு எதுவும் பேசாமல் எழுந்து போய் விட்டாள்.

ஈஸ்வரும் மிகவும் டிஸ்டர்ப்டாக இருக்க, வர்ஷினியிடம் பேசவேண்டும் என்ற பேராவல். மனதில் ஒரு இடைவிடாத அலைபுருதல். எல்லாவற்றையும் தூக்கி தூர வைத்து, அவளை அழைத்தான்.

வர்ஷினி உறங்க ஆயத்தமான போது தான் ஈஸ்வரிடம் இருந்து தொலைபேசி அழைப்பு, “எடுப்பதா? வேண்டாமா?” என்று யோசிக்க,

அது நின்று, அடுத்த நிமிடம் மெசேஜ், “எடு வர்ஷினி, உங்கண்ணன் கிட்ட போய் உன் தங்கை கிட்ட போன் குடுன்னு சொல்ல வைக்காத!” என திரும்ப அடித்தான்.

எடுத்தவள் “எங்க அண்ணன் கிட்ட சொன்னா பயமா?” என்று அலட்சியமாய் சொல்ல,

அவளின் குரலைக் கேட்டதும் அவனின் அலைபுருதல் மாயமாய் மறைந்தது. “ஹ ஹ” என்று வாய்விட்டு சிரித்தான். “வர்ஷினிக்கு பயம்னு நான் எப்பவுமே சொல்ல மாட்டேன். இது வீணா முரளியை சங்கடப் படுத்த வேண்டாம்னு” என,

அதற்கு எந்த பதிலும் சொல்லாமல் இருந்தவளிடம் “சாரி” என்றான் சிரிப்பைக் கைவிட்டு ஒரு ஆழ்ந்த குரலில்.

“எதற்கு?” என்றெல்லாம் வர்ஷினி கேட்கவில்லை.

“அது நான் பேசணும்னு நினைக்கறது இல்லை. திமிர் என்னோட பிறவிக் குணமா போச்சு. ஆனா அதையெல்லாம் விட உன்கூட இருக்கும் போது தப்பு தப்பா நடந்துக்கறேன். தப்புன்னு தெரிஞ்சாலும் பேசறேன். சாரி!” என்றவன்,

“நேத்து இருந்து முறைச்சிக்கிட்டே இருக்கே! என்னோட தப்பை விடு! எப்படி இருக்கு உன்னோட காலேஜ்! ஃப்ரீ டைம் என்ன பண்ற?” என்றான் சகஜமாக.

“பேசுவதா? வேண்டாமா?” என்று வர்ஷினி யோசிக்க,

“எப்படி போகுது?” என்று அவளின் ஸ்டடீஸ் பற்றி தான் பேசினான். உண்மையில் வர்ஷினியிடம் வீட்டினர் யாரும் அப்படி பேசியதில்லை. அதாவது படிப்பை பற்றி!

காலேஜ் போகிறாளா? வருகிறாளா? என்ன செய்கின்றாள்? இப்படி தான் இருக்கும். பத்து “காலேஜ்ல எதுவும் ப்ராபளம் இல்லையே, ஒகே தானே!” இப்படி தான் கேட்பான். ஷாலினி சகஜமாக பேசினாலும் படிப்பை பற்றியெல்லாம் பேச மாட்டாள். அவளுக்கு படிப்பு பெரிய அலர்ஜி! ரஞ்சனி உண்மையில் அவளே மிகவும் பிசி. பேசினால் வர்ஷினியிடம், “அளவா சாப்பிடு! எக்ஸர்சைஸ் செய்!” என்று பொதுவான அட்வைஸ் தான்.

அது அவர்களுக்கு ஒரு விஷயம் அல்ல! ஈஸ்வர் கேட்கவும், தயங்கி தயங்கி “நல்லா போகுது!” என்று வர்ஷினியும் பேச

ஆரம்பித்தாள். என்ன என்னவோ பேசி வர்ஷினியை சகஜமாக பேச வைக்க முயன்று கொண்டிருந்தான்.

வர்ஷினி அவன் கேட்பதற்கு பதில் சொல்லிக் கொண்டு இருந்தாலும் அதில் தயக்கம் இருந்தது. அது ஈஸ்வருக்கும் புரிந்தது. விடாமல் பேசிக் கொண்டிருக்க, ஒரு கட்டத்தில் அவன் கேட்பதற்கு பதில் சொல்லாமல்,

“இப்போ எதுக்கு திடீர்ன்னு வந்திருக்கீங்க?” என,

“என்ன வர்ஷி இது? இது என்னோட ஊர் தானே!” என்றான்.

ஆனாலும் “நீங்க என்னை டிஸ்டர்ப் பண்ண மாட்டேன் சொன்னீங்களே?” என,

“இப்போ கூட பண்ணலையே வர்ஷி, எப்போவுமே பண்ண மாட்டேன்! ட்ரஸ்ட் மீ!” என்ற போதும் வர்ஷினி அமைதியாக இருக்க,

“என்ன மாதிரி டிஸ்டர்ப் பண்றேன்? சொல்லு!” என .

“தெரியலை! எனக்கு சொல்லத் தெரியலை, எப்பவும் என் மனசுல ஒரு சின்ன ஓரத்துல நீங்க வந்துடுவீங்களோன்னு ஓடிக்கிட்டே தான் இருக்கும்!” என்று சொல்லிவிட,

“அப்போ என்னை நினைக்கறியா?” என்றான் மனதில் ஒரு மகிழ்வு குமிழ்விட,

எச்சரிக்கையானவள் “நினைக்கிறேன்னா புரியலை? நீங்க என்ன மீன் பண்றீங்க!” என்றாள்.

அவளின் குரலில் இருந்த தயக்கம் எல்லாம் போய் ஒரு உறுதி வந்திருக்க, “மீனும் பண்ணலை, கருவாடும் பண்ணலை!” என்றான் சிரிப்புடன் அவளின் வார்த்தைகளின் எச்சரிக்கை புரிந்து.

“ஐயோ ஜோக்!” என்றவளிடம், “திட்டுறதுக்காவது என்னை நினைக்கிறியா” என ஒரு ஸ்னேக பாவத்தொடு கேட்டான்.

சட்டென்று அமைதியாகிவிட “என்ன வர்ஷி?” என,

“ஒன்னுமில்லை! எனக்கு தூங்கணும்! ஃபோன் வைக்கட்டுமா?” என்றாள்.

ஈஸ்வர் திட்ட என்றதும் அவனின் செய்கை ஞாபகம் வர, தானாக பேச்சு வந்தாலும் ஏன் பேசணும் என்று நிறுத்த முயன்றாள்.

“எப்போவும் பத்து மணிக்கு தூங்கிடுவியா?”

“ஒன்பது மணிக்கெல்லாம் தூங்க வந்துடுவேன்! ஆனா தூக்கமே வராது! எப்படியும் ட்வெல்வ் ஆகிடும்” என்றவள், என்னவோ தான் அதிகம் ஈஸ்வருடன் பேசுவது போலத் தோன்ற, “வை வர்ஷி!” என்று மூளை கட்டளையிட,

“உடம்பு சரியில்லையா? ஆர் யு ஓகே! உன் கண்ணு என்னவோ நான் உன்னை பார்த்தவுடனே வித்தியாசமா தெரிஞ்சது. ஆனா இப்போ ஓகே! உன்னோட ஹெல்த் பார்க்கற தானே, கொஞ்சம் குண்டாயிட்ட நீ, என்ன பண்ற? ஹெல்தியா சாப்பிடறையா இல்லை கேண்டீன் , ஜங்க் ஃபுட்ஸ் நிறைய சாப்பிடறையா?” என்றான் அக்கறையாக.

என்னவோ ஈஸ்வர் பேசப் பேச அழுகை வரும் போல இருந்தது. “இவன் என்கிட்டே மிஸ் பிகேவ் பண்றான். அப்புறம் அப்படிதான் நடந்துக்குவேன் சொல்றான். ஆனா எதுவுமே நடக்காத மாதிரி நல்லா பேசறான். நானும் பேசிட்டு இருக்கேன், ப்ச், வை போனை!” என்று சொல்லிக் கொண்டு “இல்லை, ஐ அம் ஓகே! வெச்சிடறேன்!” என்று வைத்து விட்டாள்.

ஏன் என்று தெரியாமல் ஒரு அழுகை கூட..

அவன் கேட்பது போல “என்ன சாப்பிடறேன்?” என யோசித்து, “குண்டாயிட்டேனா?” என்று அங்கிருந்த டிரெஸ்ஸிங் டேபிள் முன் நின்றாள்.

பிறகு தனியாக இருப்பது ஒரு மாதிரி இருக்க, கதவை திறந்து வெளியே பார்த்தால் யாரும் கண்ணுக்கு தெரியவில்லை, ரூமின் கதவுகளும் மூடியிருந்தது.  சோர்வாக இருக்க, “நீ இங்க இருந்து இருக்கக் கூடாது. ஹாஸ்டல் தான் உனக்கு ஓகே! உனக்கு வீட்டோட செட்டாகலை போல!” என்று நினைத்தவள், எப்போதும் போலப் போய் உறங்க முயன்றாள்.

“பன்னிரண்டு மணி வரை தூங்காம என்ன பண்றா? பெருசா பேசறாணுங்க? என்ன பண்றாங்க?” என தான் நினைக்கத் தோன்றியது. ரஞ்சனி அங்கே அம்மா வீட்டில் இருந்தவரை ஈஸ்வர் உறங்கப்  போகும் போது தங்கை என்ன செய்கிறாள் என்று ஈஸ்வர் பார்க்காமல் போகவே மாட்டான்.

அங்கே அம்மா, பெரியம்மா, பாட்டி என்று எப்போதும் யாராவது பிள்ளைகளின் மேல் கண் வைத்து இருப்பர். “கல்யாணம் ஆன உடனே ரெண்டு தடியன்களும் பொண்டாட்டி பின்னாடி

போயிடறாணுங்களா" இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கோபம் வந்தது. விரைவில் தன்னுடன் அவளை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அதிகமாக ஆரம்பித்தது.

வர்ஷினியின் போனிற்கு ஒரு பைல் அனுப்பியவன், "நீ எவ்வளவு சாமி கும்பிடுவன்னு எனக்கு தெரியாது, கந்த ஷஷ்டி கவசம் அனுப்பியிருக்கேன்! அதை கீழ தரையில உட்கார்ந்து படி! அப்புறம் தூங்கு! இல்லை படிக்க விருப்பம் இல்லையா? கவசம் கேளு! அப்புறம் தூங்கு!" என வந்திருக்க,

அப்படி எல்லாம் யாரும் சொன்னது இல்லை. ஈஸ்வர் சொன்னதை தட்டாமல் செய்தாள். அதைக் கேட்க ஆரம்பித்து, அந்த வரிகளை பார்த்துக் கொண்டே, அதை மனதிலும் ஓட்ட மனதில் ஒரு அமைதி.

அது முடிந்து ஒரு ஐந்து நிமிடத்தில் மீண்டும் ஒரு மெசேஜ்! நேரம் கணித்து சரியாக அனுப்பியிருந்தான். "இந்த லைன்ஸ் தான் நான் இப்போ அதிகம் ஜெபிக்கிறேன்!" என்று.

அவன் என்ன வரிகள் சொல்கிறான் என்று பார்க்க,

**எத்தனை குறைகள் எத்தனை**
**பிழைகள் எத்தனை அடியேன்**
**எத்தனை செய்யினும் பெற்றவன் நீ**
**குரு**
**பொருப்பதுன்கடன் பெற்றவள்**
**குற மகள்**
**பெற்றவளாமே பிள்ளையெ**
**ன்றன்பாய் பிரியமளித்து மைந்தனென்**
**மீதுன்**
**மனமகிழ்ந்தருளி தஞ்சமென்றடியார்**
**தழைத்திட அருள் செய்!**

## அத்தியாயம் நாற்பத்தி ஒன்று :

**அலையே.. சிற்றலையே.. கரை வந்து வந்து போகும் அலையே!**

கந்தசஷ்டி கவசம் மனதிற்கு ஒரு அமைதியை கொடுத்திருக்க, நன்கு உறங்கி எழுந்தாள். மனம் சற்று அமைதியடைந்து தெளிவாக இருந்தது.

காலையில் ஏழு மணிக்கே தயாராகி தாஸின் வரவிற்காக காத்திருந்தாள். அவன் வந்ததும், “அப்பாவை பார்த்துட்டு காலேஜ் போகலாம் தாஸண்ணா” என்றவள், ஷாலினியிடம் சொல்லிக் கொண்டு கிளம்பவும்,

“இன்னும் டிஃபன் ரெடி ஆகலை வர்ஷி, ஒரு டென் மினிட்ஸ்” என்றவளிடம்,

“அண்ணி நான் சாப்பிட்டுக்கறேன், அப்புறம் லேட் ஆகிடும். நீங்க ஸ்ட்ரெஸ் பண்ணிக்காதீங்க, நான் அப்பாவை பார்க்கப் போறேன்!” என்று கிளம்பிவிட்டாள்.

அங்கே சென்றால் அன்று ராஜாராம் நன்கு தெளிவாக இருந்தார், வர்ஷினி வந்ததும் “நீ இரு, நான் குளிச்சிட்டு வர்றேன். இங்க அப்பாவோட யாருமில்லை” என்று அங்கேயே கமலா குளிக்க சென்றவர்,

“எப்பவும் இந்த நேரத்துக்கு முரளி வந்துடுவான், இன்னும் காணோம்!” என்று வர்ஷினியை கேட்டார்.

“தெரியலைம்மா ஷாலினி அண்ணி மட்டும் தான் இருந்தாங்க. தாத்தா இருந்தாங்க. வேற யாரையும் நான் பார்க்கலை, முரளிண்ணா, பத்துண்ணா, ரஞ்சனி அண்ணி யாரையும் காணோம்!” என,

“என்னவோ தெரியலையே?” என்ற யோசனையோடு அவர் குளிக்க சென்றார்.

கமலா சென்றதும் ராஜாராம் பேச ஆரம்பித்தார். “பாப்பா, அப்பா உங்களுக்கு கல்யாணம் பேசட்டுமா?” என்ற உடனே,

“அப்பா ப்ளீஸ், எதுன்னாலும் அப்புறம் பேசலாம். இப்போ வேண்டாம்” என்றாள்.

வர்ஷினியின் குரலில் என்ன இருந்தது என்று அவருக்கு புரியவில்லை, “என்னங்க பாப்பா?” என,

“ஒன்னுமில்லைப்பா, என்னவோ டிஸ்டர்ப்டா இருக்கு! நீங்க முதல்ல சரியாகி வீட்டுக்கு வாங்க பேசலாம்” என்று பேச்சை முடித்தாள்.

என்னவோ மகளின் முகம் தெளிவில்லாதது போல தோன்ற, அதற்கு மேல் ராஜாராமும் பேசவில்லை.

கமலா குளித்து வந்தவுடன், “பாப்பா ரொம்ப களைப்பா தெரியறா.. போய் கேண்டீன்ல ஏதாவது வாங்கிக் கொடு!” என்று சொல்ல,

“யாராவது வரட்டும் போறோம்!” என்ற கமலம்மாவிடம்,

“தாஸ் இருப்பான் தானே! அவனை விட்டு போங்க!” என்றார்.

“வேண்டாம்!” என்ற வர்ஷினியை,

“எனக்கும் பசிக்குது வா!” என்று சொல்லி கமலம்மா அழைத்துப் போக..

உள்ளே வந்த தாஸிடம், “என்னடா நடக்குது? பாப்பா ஏன் ஒரு மாதிரி இருக்குது!” என்றார்.

தாஸ் கொஞ்சமும் யோசிக்கவில்லை, நேற்று ரஞ்சனி எங்கே என்று தேடியது சொல்லியவன், அஸ்வின் ஜெயிலில் இருந்து வந்து விட்டது.. எல்லாம் பிட்டு பிட்டு வைத்தான். “நீங்க வீட்டுக்கு வந்ததும் நானே சொல்லியிருப்பேன்!” என்றான்.

“நேத்தே ஈஸ்வர் சார், அந்த அஸ்வினை, ஒரு வழி பண்ணியிருப்பார். நானும் உதைச்சிட்டேன், ஆனா நம்ம பாப்பா விடலீங்க, அவன் தப்பு பண்ணியிருக்க மாட்டான்னு ஸ்திரமா சொல்லுதுங்க!” என்றான்.

“ஈஸ்வர், சும்மா விட்டுட்டானா?” என்றார் கேள்வியாக, ஏனென்றால் அஸ்வின் ஈஸ்வருக்கு தானே எதிரி.

“பாப்பா, ஈஸ்வர் சாரை நீங்க எதுவும் பண்ணக் கூடாதுன்னு ஆர்டர் போடுதுங்க, கேட்டுக்கிட்டு அப்படியே நின்னார். எதுவும் செய்யலை!” என்றான்.

“என்ன பண்ணலாங்க அய்யா அந்த அஸ்வினை, திரும்பவும் மிரட்டி, கொஞ்சம் தட்டி வைக்கலாங்களா” என,

“அதெல்லாம் வேண்டாம். ஏற்கனவே அவனை ஒரு வருஷம் ஜெயில் போட்டுட்டோம், ஆனா நீ அவன் மேல ஒரு கண்ணு வை, ஆளுங்க யாரையாவது அவன் பின்ன விடு, என்ன பண்றான்னு கொஞ்ச நாள் கண்காணிப்புல இருக்கட்டும்”

“என்ன நடக்குதுன்னு அப்போ அப்போ எனக்கு சொல்ற, அது உபயோகமில்லைன்னு உனக்கு தோணினாலும் சொல்ற புரியுதா?” என,

“ம்” என்று தலையாட்டினான். பின்பு அவர் யோசனையில் ஆழ்ந்து விட, கமலாமாவும் வர்ஷினியும் உண்டு வந்தனர்.

காலேஜ் லீவ் போடுவோமா என்று நினைத்த வர்ஷினி, பின்பு வீட்டில் இருந்தால் அதையும் இதையும் நினைப்போம் என்று காலேஜ் கிளம்பினாள்.

அங்கே தாஸ் காரை நிறுத்த, வர்ஷினி இறங்கவும், “ஹாய், எவ்வளவு நேரம் உனக்கு வெயிட் பண்றது. லேட்டா?” என்று நின்றது சாட்சாத் ஈஸ்வரே தான்.

“இவன் எங்கே இங்கே?” என்று வர்ஷினி விழிவிரிக்க,

“நீ சும்மா பார்த்தாலே நான் ஒரு வழியாகிடுவேன். இன்னும் இப்படி பார்த்தா?” என்று புன்னகையுடன் கேட்க,

இவன் என்ன பேசுகின்றான் என்று அப்படியே நின்றாள்.

தாஸ் இவனைப் பார்த்ததும் இறங்கினான், “வணக்கம் சார்!” என்று தாஸ் சொன்ன போதும், “இவன் எங்கே இங்கே?” என்று அவனும் பார்த்திருந்தான்.

“என்னோட வாயேன் உனக்காக ரெண்டு வி ஐ பி அந்த கார்ல வெயிட் பண்றாங்க!” என்று சற்று தள்ளியிருந்த அவனின் காரை காட்டினான்.

“யார்?” என்று யோசனையாக வர்ஷினி பார்க்க, “வா!” என்றான் உற்சாகமாக,

அந்த உற்சாகத்தில் ஒரு ஆர்வம் தோன்ற உடன் நடந்தாள்.

“இப்போ தான் அய்யா கிட்ட திட்டு வாங்கினேன்” என்று நினைத்தவனாக தாஸ் ராஜாராமின் தொலைபேசிக்கு அழைத்தான்,

“ஈஸ்வர் சார், இங்க நம்ம பாப்பாவை பார்க்க வந்திருக்காங்க ஐயா!” என்றான்.

“என்ன பேசிக்கறாங்க?” என்றார் யோசனையாக.

“தெரியலை, அவர் கார் கிட்ட கூட்டிட்டுப் போறார்!” என்று சொல்லி அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்தான் .

பார்த்தவன் “அய்யா, ஈஸ்வர் சார் வீட்ல ரெண்டு சின்ன குழந்தைங்க இருக்காங்க தானே... அவங்க வந்திருக்காங்க!”

“கூட யார் இருக்கா?”

“வேற யாரும் இருக்குற மாதிரி தெரியலை!”

“சரி விடு, பாப்பா பார்த்துக்கட்டும் உனக்கு மனசுக்கு ஏதாவது தப்பா பட்டா கூப்பிடு!”

“சரிங்க!” என்று வைத்து அவர்களைப் பார்த்தான்.

“பிரணவிக் குட்டி!” என்று வர்ஷினி முகம் மலர்ந்து சிரித்து, தூக்கி அணைத்து உச்சி முகர்ந்தாள். குழந்தையும் முதலில் தயங்கி, பின் அவளை உணர்ந்து கழுத்தைக் கட்டிக் கொண்டு, திரும்பி ஈஸ்வரை பார்த்தது.

“சரண், எப்படி இருக்க?” என்று அவனையும் இடையோடு அணைத்துக் கொண்டாள்.

“ஸ்கூல் இல்லையா?” என,

“இருக்கு, ஆனா சித்தப்பா லீவ் போட சொன்னாங்க!” என்றான்.

அப்போதும் வர்ஷினி மேல் இருந்த பிரணவி அன்னியமாய் ஈஸ்வரை பார்த்திருக்க,

“ஏன் சரண் இப்படி பார்க்கிறா?”

“அதுவா... சித்தப்பா கொள்ளை கூட்டத் தலைவன் மாதிரி இருக்கார். அதுதான்..” என்று சரண் ரகசியம் பேசிய விதத்தில் வர்ஷினிக்கு சிரிப்பு வர, வாய் விட்டு கலகல வென்று சிரித்தாள்.

அதை ஒரு முறுவலோடு பார்த்திருந்தான் ஈஸ்வர், அவன் அப்படி தான் இருக்கின்றானா என்று வர்ஷினி அவனின் தோற்றத்தை ஆராய்ந்து பார்த்தாள்.

நீள முடி, அதை பின்புறம் சிறிய பேண்ட் போட்டிருக்க கூடவே அவனின் பிரெஞ்சு பியர்ட், எல்லாம் நன்றாக பார்த்தாள்.

அப்படியா இருக்கிறேன் என்று ஈஸ்வரின் பார்வை வர்ஷினியை ஸ்பஷ்டமாய் கேள்வி கேட்க, உன் கேள்வி எனக்கு புரிகின்றது என்ற பாவனையை ஈஸ்வருக்கு காட்டி, அதற்கு பதில் சொல்லாமல் சரணிடம் திரும்பியவள்,

சிரிப்போடே “யார் சொன்னாங்க?” எனக் கேட்க,

“ப்ரணி, சித்தப்பா பக்கத்திலேயே போகலையா, அதனால அம்மா தான் சொன்னாங்க!”

மீண்டும் முகம் கொள்ளா சிரிப்போடே “இப்போ எப்படி வந்தா?” என்று கேட்ட வர்ஷினியிடம்,

“நான் தான் கூட்டிட்டு வந்தேன். சித்தப்பா பக்கம் கூட போகலை!” என்றான் பெரிய மனிதனாக,

“எதுக்கு லீவ் போட்டுட்டு கூட்டிட்டு வந்திருக்கீங்க” என்றாள் ஈஸ்வரைப் பார்த்து,

“உன்னோட பர்த்டே செலப்ரேட் பண்ண!” என்றான்.

“என் பர்த்டே வா, அது நாளைக்கு தானே!”

“எஸ்! ஆனா அட்வான்ஸ்டா செலப்ரேட் பண்றோம். போன பர்த்டேக்கு ரொம்ப ஒரு கசப்பான நினைவைக் கொடுத்தேன், அடுத்த பர்த்டேக்கு நினைக்கத் தோணும். அது ஞாபகம் வரும் போது, உனக்கு வேற நினைக்க நல்ல நினைவுகள் வேணும் இல்லையா? அதுக்கு தான் பர்த்டேக்கு முதல் நாளே செலப்ரேஷன்!” என்றான்.

இதற்கு அவளுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை, ஆனாலும் என்ன தைரியம் என்று தோன்றியது. “செய்வதையும் செய்து விட்டு இப்போது அதை மறக்க வைக்கின்றானா? முடிகின்றதா பார்ப்போம்!” என்று தோன்றியது.

கூடவே “ஹேய் வர்ஷி, அவன் புத்திசாலி, உனக்கு நினைக்க வேறு நல்ல நினைவுகள் என்று சொல்கின்றான், அவன் நல்லவன் என்று சொல்லவில்லை, மன்னிப்பு கேட்கவில்லை, அதை மறந்து விடு என்றும் சொல்லவில்லை”

அவனின் இந்த அணுகுமுறையில் புன்னகை வந்தது. முயன்று அடக்கினாள். மனமும் லேசானது.

முடிந்தவரை வர்ஷினியின் பார்வை தவிர்த்து பேசிக் கொண்டிருந்தான். அதனால் அவளை உணரவில்லை. “எப்படி செலப்ரேட் பண்ணன்னு ரொம்ப யோசிச்சேன், உங்கப்பா வேற ஹாஸ்பிடல்ல, சோ பார்ட்டி எதுவும் பண்ண முடியாது. கூடவே உனக்கு அது பிடிக்குமான்னும் தெரியாது”.

“நான் பார்த்த நாள்ல இருந்து, நீ இவங்க இருக்கும் போது இவங்களோட தான் இருக்கே. அவங்களோட ரொம்ப கம்ஃபர்டபிளா ஃபீல் பண்ற, இயல்பா இருக்க. அதுதான் கூட்டி வந்தேன்” என்று விளக்கம் கொடுத்தவன்,

“ஜஸ்ட் ஒரு ஹால்ப் டே ப்ரோக்ராம் தான். யார் கிட்ட பெர்மிஷன் வாங்கணும்!” என்று மொபலை எடுத்தான்.

எடுத்தவனை ஒரு பார்வை பார்த்து நின்றாள்.

பதில் இல்லாது போக நிமிர்ந்து வர்ஷினியை பார்த்தான். அவளின் அந்தப் பார்வையில், அந்த நீல நிறக் கண்களில் தொலைய இருந்த மனதை அடக்கி, “என்ன?” என்பது போல புருவம் உயர்த்திக் கேட்டான்.

“முதல்ல என் கிட்ட பெர்மிஷன் வாங்கணும்” என்று பாவனையாக சொல்ல,

முறுவளித்தவன், “ட்ரீட் குடுக்கப் போறது நீ. உன்கிட்ட எதுக்கு பெர்மிஷன் வாங்கணும், ஜஸ்ட் நாங்க இருப்போம் அவ்வளவு தான்!” என்றான்.

“நான் குடுக்கணும், அதை நீங்க எனக்கு சொல்வீங்களா? இது என்ன அராஜகம்!” என்றவளிடம்.

“நான் குடுத்தா நீ அக்சப்ட் பண்ணுவியோன்னு ஒரு சந்தேகம், அதுதான்! என்றவன்,

“என்ன குடுப்ப தானே! அப்படிதான் இவங்க ரெண்டு பேர் கிட்ட சொல்லி கூட்டிட்டு வந்திருக்கேன்!” என்றான்.

“என்னடா என்ன சொன்னேன்?” என்று சரணிடம் கேட்க,

“வர்ஷி அக்கா அவங்க பர்த்டேக்கு ட்ரீட் குடுக்கறாங்க!” என்றான் சரண் தெளிவாக.

குழந்தைகளை பார்த்ததும் தானாக ஒரு உற்சாகம் வர, வர்ஷினியின் கையினில் இருந்து கொண்டு, என்ன பேசுகிறார்கள் என்று புரியாமல் போவோர் வருவோரை வேடிக்கை பார்த்திருந்த ப்ரணவியிடம் “ஓஹ் எஸ்!” என்று அணைத்துக் கொண்டாள்.

“என்ன பண்ணலாம்? தாஸ் அனுப்பிடலாமா, இன்னைக்கு தாஸ் வேலையை நான் பார்க்கட்டுமா!” என்றான் ஈஸ்வரும் உற்சாகமாக, அதே சமயம் சொல்லிய பாவனையில் ஒரு அலட்சியம் கூட.

ஈஸ்வர் கேட்ட விதம் நிச்சயம் வர்ஷினியின் மனம் ரசித்தது!

ஈஸ்வரின் உற்சாகம் பார்த்து, சரணிடம் "என்ன சரண்? யார் கூட போகலாம். அவர் கூடவா, உங்க சித்தப்பா கூடவா!" என்று தாஸை காட்டிக் கேட்டாள். அவளுக்கு தெரியாதா என்ன சரண் என்ன சொல்வான் என்று.

அவளின் குறும்புச் சிரிப்பை ஈஸ்வர் பார்த்திருக்க "சித்தப்பா கூட தான் போகணும்!" என்று சரண் சொல்லவும்,

எதோ பெரிய மனது வந்தவள் போல "அனுப்பிடுங்க அவரை, நீங்களே வாங்க" என்றாள். "ஆனா நீங்க சொன்னா போவாறா?" என்றும் கூடவே கேட்டு,

என்ன செய்யப் போகின்றான் என்று பார்க்க,

அவளின் விழிகளைப் பார்த்தவன், மாறி மாறி வந்து போகும் பாவனைகளில் தன்னை தொலைத்து அதையே பார்த்து நின்றிருந்தான்.

அவன் முன் கை ஆட்டியவளின் முகத்தில் இருந்த பாவனையில் ஈஸ்வருக்கு சிரிப்பு வந்தது. தன்னை மீட்டும் கொண்டான்.

வர்ஷினியின் முகம் காட்டிய பாவனை இதுதான், "திரும்பவுமா? நீ திருந்தவே மாட்டாயா?" என்று.

அதற்க்கு திரும்ப பதில் கொடுக்க உடலும் மனமும் துடித்தது, ஆனால் அவளின் கண்களை பார்க்க வேண்டுமே. மீண்டும் ஒரு விஷப் பரீட்சைக்கு அவன் தயாரில்லை.

**இதயத்திலே தீப்பிடிக்க…!**

## அத்தியாயம் நாற்பத்தி இரண்டு:

**நில்லாமல் வீசிடும் பேரலை!**

அவளிடம் பதில் சொல்லாமல் போனை எடுத்து ராஜாராமிற்கு அழைத்தான், "அப்பா நான் ஈஸ்வர், இங்க வர்ஷி காலேஜ்ல தான் இருக்கோம்.. நான், சரண், ப்ரணவிக் குட்டி.. நாளைக்கு வர்ஷினி பர்த்டே! நாங்க இன்னைக்கு செலப்ரேட் பண்ண இஷ்டப்படறோம், இருங்க அவ கிட்ட குடுக்கறேன்!" என்று அவளிடம் கொடுத்தான்.

“என்னடா இது?” என்று மனதிற்குள் சற்று கலவரமானார். “திருமணமாகாத பெண்! எப்படி அனுப்ப? தெரியாமல் போனால் வேறு, என்னிடம் பெர்மிஷன் கேட்கிறானா? சொல்கிறானா?” என்று குழம்பிப் போனார்.

அதனை வாங்கியவள் “அப்பா! சரணும், ப்ரணவியும் வந்திருக்காங்க! நான் அவங்க கூட போகட்டுமா?” என்றாள். காலையில் மகளின் குரலில் இருந்த சோர்வு இல்லவே இல்லை,

“சரிங்க பாப்பா!” என்று விட்டார்.

வைத்தவர் “நாளைக்கு பாப்பா பர்த்டே, என்ன பண்றோம்?” என்றார் கமலாம்மாவைப் பார்த்து.

“எப்பவும் ட்ரெஸ் எடுப்பேன்! ஏதாவது நகை வாங்குவேன், ரெண்டு நாளா ஹாஸ்பிடல்ல இருக்குறதால இன்னும் எதுவும் பண்ணலை, ஷாலினிக்கு கூப்பிடறேன்!” என்று ஃபோனை எடுத்தார்.

“வேண்டாம்! அவங்களா ஏதாவது பண்ணினா பண்ணட்டும், நீ அவளுக்கு பர்த்டேன்னு ஞாபகப் படுத்தாத!” என்றார்.

“ஏன்? ஏதாவது பண்ணலைன்னா பாப்பா ஏமாந்து போயிடுவா!”

“விடு! அப்புறம் பார்த்துக்கலாம்! நீ யாருக்கும் ஞாபகப் படுத்தக் கூடாது!” என்று விட்டார்.

“என்ன? உங்கப்பா பெர்மிஷன் குடுத்துட்டாரா?” என்றான்.

“ம்ம்ம்!” என்று தலையாட்டியவள், தாஸை பார்த்து கையசைத்தாள். அவன் வரவும் “என் பேக் எடுத்துட்டு வாங்க, நான் இவங்களோட கிளம்பறேன். அப்பா கிட்ட சொல்லிட்டேன்!” என்றாள்.

“நான் வேண்டாங்களா பாப்பா! நீங்க பேசிட்டு வாங்க! நான் கார் ஓட்டறேன்!” என்று தாஸ் நிற்க,

“உங்க வேலையை இவர் பார்ப்பார் அண்ணா! நீங்க கிளம்புங்க! என் பேக் கொண்டு வாங்க!” என்றாள்.

“இப்போ என்ன சொல்றா? என்னை வேலைக்காரன் சொல்றாளா? இல்லை டிரைவர் சொல்றாளா?” என்று ஈஸ்வர் பார்த்து நின்றான். ஆனால் கோபமும் வரவில்லை, காயப் படவும் இல்லை.

நேற்று பெஸ்ட்டா என்று பத்து கேட்டதும் அப்படிக் கோபம் வந்தது, காயமும் ஆனான். ஆனால் இன்று ஒன்றுமே தோன்றவில்லை. ஒரு சிறு புன்னகையுடன் பார்த்திருந்தான். அவனைக் குறித்து அவனிற்கே ஆச்சரியமாக இருந்தது.

“அச்சோ! இந்த பாப்பா ஈஸ்வர் சாரை என்ன சொல்கின்றது!” என்று யோசித்த போதும். மறுத்துப் பேச முடியாமல் சொன்னதை செய்தான்.

“நாம முதல்ல கோயிலுக்கு போறோம்!” என்று காரில் அமர்ந்தான்.

“ம், சரி!” என்பது போல தலையாட்டி சரணிடம் பேச துவங்கிவிட, அவன் முதலில் நேராக சென்றது ஒரு பொடிக், அப்போதுதான் அதை திறந்து கொண்டிருந்தனர்.

“இங்க எதுக்கு?”

“இந்த ட்ரெஸ்ல கோயிலுக்கு வேண்டாம்!”

“ஏன், இதுக்கு என்ன?” என்றவள் அணிந்திருந்தது ஒரு ஜீன்ஸ் பேன்ட் அண்ட் காட்டன் ஷர்ட்.

“நீட் டிரஸ் தான், ஆனா இது நம்ம ட்ரெஸ் இல்லை, கோவிலுக்கு இதோட போனா அய்யர் என்னை முறைச்சு பார்ப்பார்!”

“ஏன் பார்ப்பார்?”

“நம்ம தான் அங்க ட்ரஸ்ட்டி, இப்படி வரலாமான்னு பார்ப்பார், நீ இவங்களோட இரு!” என்றவன்,

சென்று ஐந்தே நிமிடங்களில் ஒரு கவரோடு வந்தான், “இது போட்டுக்கலாம்!” என்று காரில் அமர்ந்தான்.

“வீட்டுக்கு போயிருந்தா வேற டிரஸ் மாத்தியிருப்பேன்!”

“எனக்கு அங்க யாரையும் பார்க்கப் பிடிக்கலை. அதுதான் காலேஜ் வந்தேன்!” என்றான் இறுக்கமாக. குரலின் மாற்றம், முக மாற்றம் எல்லாம் நன்கு வர்ஷினிக்கு புரிந்தது.

வர்ஷினி பேச வர, “அதை பத்தி பேச வேண்டாம்!” என்றான் எதிரில் இருப்பவர் எதிர்த்தோ மறுத்தோ பேச முடியாத குரலில்.

வர்ஷினியும் அதை விட்டு, “நான் எங்க மாத்துவேன்?” என்றவளிடம்,

“கூட்டிட்டு போறேன்!” என்றவனின் முக பாவம் அப்படியே மாறியது. முகமும் இறுக்கத்தை விட்டது. எல்லாம் பார்த்திருந்தாள். சிறிது தூர பயணம், ஒரு குடியிருப்பு, பெரிய கம்யுனிடியாக இருந்தது. ஒரு அப்பார்மென்டின் உள் சென்றான், லசுரி அபார்மென்ட், “பிரணவியை தூக்கிக்கோ!” என அவன் கீழே இறங்க, பின்னோடு அவன் சொன்னதை செய்தாள்.

மறுக்க வேண்டும் என்று தோன்றவேயில்லை!!!

அங்கே ஃபர்ஸ்ட் ப்ளோரில் இருந்த ஒரு வீட்டிற்கு சென்று கதவை திறந்தவன், “இங்க எந்த ரூம்ல வேணா மாத்திக்கோ!” என,

“யாரோடது இது?” என்றாள் பார்வையால் வீட்டை அளந்து, வீட்டில் எந்த பொருட்களும் இல்லை.

“நம்மது தான், மாத்து டைம் ஆகுது!” என்றான், முகத்தைப் பார்த்து பேசினாலும், கண்ணைப் பார்ப்பதை முற்றிலும் தவிர்த்தான்.

பிரணவி கீழே விட்டதும் குதிக்க, அந்த வெறுமையான வீட்டில் சத்தம், சரண், “குதிக்காத ப்ரணி!” என்று அவளிடம் சொல்லிக் கொண்டிருக்க, அதை வேடிக்கை பார்த்து நின்றிருந்த வர்ஷினியிடம்,

“டைம் ஆகுது. எனக்கு ஒண்ணுமில்லை, நாள் முழுதும் கூட உன்கூட சுத்துவேன்!” என,

வேகமாக ஒரு ரூமின் சென்றாள். அந்த கவரைப் பார்க்க, ஒரு சுரிதார், இளம் மஞ்சள் நிறத்தில் கண்ணை உறுத்தாத வகையில், துப்பட்டா பச்சை கலரில். சிம்பிள் போல தோன்றினாலும் அணிந்தவுடன் ஒரு ரிச் லுக் வந்தது. எப்போது ஃபிட்டாக அணிபவளுக்கு கொஞ்சம் லூசாக இருந்தது. அப்படி ஒன்றும் லூஸ் எல்லாம் இல்லை அவளுக்கு அப்படி ஒரு தோற்றம்.

வெளியே வந்தவளை ஆராய்ந்தவன், “இட்ஸ் குட் கிளம்பலாமா?” என,

அவனை பார்திருந்தவளிடம், “எப்பவும் ரஞ்சனிக்கு நான் தான் எடுப்பேன். நான் இல்லாம டிரஸ் எடுக்கவே மாட்டா. அந்தப்

பழக்கம்!” என்று விளக்கமும் கொடுத்தான். ஈஸ்வரின் குரலில் இருந்தது என்ன என்று ஆராய முற்பட்டாள்.

மீண்டும் ப்ரணவியை தூக்கி கொண்டு, சரனை அழைத்துக் கொண்டு கோவிலை அடைந்தனர். சென்னையில் புகழ் பெற்ற பெரிய கோவில்.

கோவில் உள் நுழைந்ததும் ப்ரணவியை கீழே விட, அவள் தளிர் நடை போட்டு நடக்க, அவளுடன் நடப்பதே அப்படி ஒரு சந்தோஷத்தை வர்ஷினிக்குக் கொடுத்து.

“இந்தப் பக்கம்..” என்று நேராக பிரகாரம் செல்ல ப்ரணவியின் கை பிடிக்க..

“இல்லை, அந்த பக்கம் இல்லை, இப்படி தான் போகணும்!” என்று முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமானின் புறம் நகர்ந்தனர்.

“தனக்கு தெரியவில்லையோ?” என்ற ஒரு பாவனையை வர்ஷினியின் கண்கள் காட்ட, அதில் தொலைய இருந்தவன்,

“அது ஒண்ணுமில்லை, நீ கிறிஸ்டியன் இன்ஸ்டிடுயுஷன்ல படிச்ச, உங்க அப்பா வீட்லயும் ரொம்ப நாள் இருந்தது இல்லை, லீவ்க்கு மட்டும் தான் வருவ. அதோட அவங்களுக்கும் அதிகம் கோவில் வந்து நான் பார்த்தது இல்லை. இதெல்லாம் தெரியுமா எனக்கு தெரியாது, அவங்க எப்பவாவது தான் கோவில் போவாங்க!”

“நாங்க போகாத நாளை விரல் விட்டு எண்ணிடலாம், வீட்ல யாரவது போவாங்க, அதனால சின்ன சின்ன விஷயம் கூட கவனிப்போம். சரண் கூட போ! சரண் என்ன செய்யறானோ அதை செய்!” என்று விளக்கம் கொடுத்தவன்..

“நீ போ!” என்று அவர்களை முன் அனுப்பி பின் தங்கினான்.

ஈஸ்வரின் சமாதானம் வர்ஷினிக்கு புரிந்தது. மனது இதமாகவும் உணர்ந்தது.

இடைவெளி விட்டு தொடர்ந்தான். சரண் செய்வதை வேடிக்கை பார்த்து பார்த்து வர்ஷினி செய்தவள், அவன் செல்லும் சன்னதிகளுக்கு சென்று அவன் செய்வது போல செய்ய.

சரணுக்கும் அவளிற்கும் ஈஸ்வருக்கு வித்தியாசமே தெரியவில்லை! கண்களால் படம் எடுத்துக் கொண்டே இருந்தான்.

இவர்களைப் போலவே ப்ரணவியும் செய்ய பார்க்கவே கவிதையாய் இருந்தது.

சரண் சாஷ்டாங்கமாய் ஒரு இடத்தில் விழுந்து எழ, ப்ரணவியும் அண்ணன் செய்ததை போல செய்தாள்.

“நானும் விழ வேண்டுமோ?” என்று யோசனை செய்து விழப் போனவளை,

“நீ அப்படி கும்பிடக் கூடாது , மண்டியிட்டு விழுந்து எழுந்தா போதும்!” என்று சொல்லி,

“டேய், பெரிய மனுஷா! உனக்கு தெரியும்னு நான் ஃபில்ட் அப் கொடுத்தா, நீ தப்பு தப்பா செய்யற, இங்க இப்படி விழுந்து கும்பிடக் கூடாது! எழுந்து வா!” என்று சரனை அதட்டினான்.

“விழுந்து கும்பிடுவோம் சித்தப்பா!” என்று சரண் பெரிய மனிதனாய் பேச,

“சரண், அது இங்க இல்லை. முன்னாடி தான் கும்பிடணும்!” என்று சொல்லி, ப்ரணவியை தூக்க முயல, அவள் வேகமாக சென்று வர்ஷினியை பிடித்தாள்.

“குட்டிம்மா! விழுந்துடப் போறீங்க!” என்று அவளை தூக்கியவள்,

“எதுக்கு இந்த அப்பியரன்ஸ், மாத்துங்க! குழந்தை பயப்படறா!” என்று ஈஸ்வரிடம் சொல்லி அவள் பாட்டிற்கு செல்ல, சரணும் அவளை தொடர்ந்து செல்ல..

ஒரு முறுவலோடு பார்த்து இருந்தவன், “கடவுளே! எல்லாம் சரியாக்கிவிடு! இவளை எனக்கு கொடுத்து விடு!” என்று வேண்டுதல் வைத்து அங்கேயே நின்றிருந்தான்.

“சித்தப்பா!” என்ற சரணின் குரலில் வேகமாக சென்று, அவர்களோடு சேர்ந்து சன்னிதானம் சென்றனர். அங்கே நிறையக் கூட்டம், ஆனால் அவர்களை தாண்டி இவர்கள் உள்ளே சென்றனர்.

“அய்யர், அவனிடம் ரொம்ப நாளாக் காணோம்! அம்மா சொன்னாங்க, சிங்கப்பூர்ல இருக்கிறதா!” என்று பேசிய போதும் யார் என்று பார்வை வர்ஷினியை ஆராய்ந்தது.

ரஞ்சனியோட நாத்தனார் என்று சொல்லியிருக்காலாம், ஆனால் “என் ஃபிரண்டோட தங்கை, இன்னைக்கு அவங்களுக்கு பர்த்டே!” என்று அய்யரிடம் விளக்கம் கொடுத்து, அவளின் பெயரை சங்கீத

வர்ஷினி என்று அர்ச்சனைக்கு சொல்லி, “உன் நட்சத்திரம் என்ன?” என்று கேட்க விழித்தாள்.

உடனே கண்டு கொண்டவன், அய்யரிடம், “சாமி பேருக்கே செஞ்சிடுங்க!” என்று சொல்ல, இவனை திரும்பி பார்த்தவளிடம், “அங்கே பாரு!” என்று கடவுளை காட்டினான்.

அந்த தீப ஜோதியில் மிளிர்ந்த அரங்கநாதனை பார்திருந்தவளிடம், “ஸ்வாமி பாதத்துல இருந்து மேல முகம் பார்க்கணும்!” என்றும் சொல்லிக் கொடுத்தான்.

பூஜை முடித்து, அவர் மாலை கொண்டு வந்து ஈஸ்வருக்கு போட முற்பட, சரனை காட்டியவன் “அவனுக்கு போடுங்க!” என்றான்.

எல்லாம் மௌனமாக பார்த்திருந்தாள், மனதில் ஒரு அமைதி, இதம் பரவியது. எத்தனை பேர் அவளின் வீட்டில் அவளை பார்த்து பார்த்து கவனித்தாலும் இப்படி உணர்ந்தது இல்லை.

பிறகு வெளியே வந்து பிரகாரத்தில் அமர்ந்தவன், “உட்காரு!” என அவளுக்கும் சைகை காட்ட,

அமர்ந்தவள், “நான் உங்களோட தனியா வரமாட்டேன்னு இவங்களை கூட்டிட்டு வந்தீங்களா?” என,

முறுவளித்தவன், “இல்லை!” என்பது போல தலையசைத்து, “நீ இவங்களோட இருக்கும் போது என்ஜாய் பண்ற இல்லையா! அதுக்கு தான்! அண்ட், உன்னோட தனியா வர்ற ஐடியா எனக்கு இல்லவே இல்லை” என்று சொல்லும் போதே,

பிரணவி “தண்ணீர் வேண்டும்!” என்று சொல்ல,

சரண் “பசிக்குது” என்று சொல்ல,

“அதுதானே, உனக்கு ஓடிட்டே இருந்தா ஒன்னும் தெரியாது! உட்கார்ந்தா பசிக்கும்!” என்று சரணிடம் பேசிக் கொண்டே,

அவர்களை அழைத்துக் கொண்டு கார் சென்று, “இந்த பேக்ல அவங்கம்மா எல்லாம் குடுத்திருக்கா பாரு!” என்று எடுத்துக் கொடுக்க,

அவர்களுக்கு சாப்பிடக் கொடுத்து, தண்ணீர் கொடுத்து, என வர்ஷினி அவர்களுடன் பிசியாகி விட்டாள்.

எல்லாம் முடித்து திரும்பியவள், “நீங்க கோவிலுக்கு கூட்டிட்டு வந்தீங்க, இதுல நான் எங்க ட்ரீட் கொடுத்தேன்!” என்று கேட்க,

“இனிமே தான் குடுக்கப் போற..” என்றவன், “போகலாமா!” என்று சரணை பார்த்துக் கேட்டான்.

“ஓகே சித்தப்பா!” என்று அவன் சொல்ல,

காரில் ஏறி அமர்ந்தனர், மூவருமே பின் தான் அமர்ந்தனர். ஈஸ்வர் மட்டுமே முன்புறம்.

வர்ஷினியை  திரும்பிப் பார்த்தவன்,

“இதை போட்டுக்கோ!” என்று கையினில் நீட்டியது கூலர்ஸ்.

வர்ஷினி “என்ன திரும்பவுமா?” என்று விழிவிரித்துப் பார்க்க,

“நான் பார்க்கக் கூடாது நினைச்சாலும், உன் கண்ணு என்னை பார்க்க சொல்லுது, டிஸ்டர்ப் பண்ணுது, போட்டுக்கோ! இந்த டே உன்னோட டே! உனக்கு ப்லசன்ட் மெமரீஸ் கொடுக்க, என்னோட மேரேஜ் ப்ரப்போசல்க்கும் இதுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை! அது வேற, இது வேற” என்றான்.

மறுபேச்சு பேசாமல் வாங்கி போட்டுக் கொண்டாள்.

“எனக்கு!” என்ற ப்ரணவியிடம், அவளுக்கு ஒன்றும், சரணுக்கு ஒன்றும் என்று கொடுக்க..

“எனக்கு எடுத்து வந்திருக்க வாய்ப்பு உண்டு, இவர்களுக்கும் எப்படி?” என்று வர்ஷினி பார்க்க,

“குழந்தைங்க, எப்பவும் கேட்பாங்க.. அவங்க அப்படிதான்” என்று சொன்னவன்,

“இது உன்னோட கூலர்ஸ் ஞாபகம் இருக்கா, ஒரு முறை ஒரு ஷாப்பிங் மால்ல, நாம பார்த்தப்போ உன் கண்ல இருந்து கழட்டினது!” என்றான்.

ஆம்! அந்த நாள் அவளுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது, அவள் பேசும் போதே கண்களில் இருந்து கழற்றியது. “என்னவோ அப்போதே எனக்கு புரியாத மாதிரி பேசினானே!” என்று நினைவு படுத்த முயன்றாள், நினைவில் வரவில்லை.

சொன்னவன் பதில் பேசாமல் கார் ஓட்ட ஆரம்பிக்க, சரண் தான் வளவளத்து வந்தான், பிரணவி தூங்கி விட்டாள். யோசனையாக இருந்தவள், கார் ஓட்டும் ஈஸ்வரையே பார்த்து வந்தாள்.

ஈஸ்வர் காரை நிறுத்திய போது சற்று தொலைவில் அவர்களின் முன் பறந்து விரிந்த கடல்.

அதை பார்த்ததும், என்ன தீவிரம் இது? என்னால் புரிந்து கொள்ள முடிகின்றதா? என்று வர்ஷினியும் அந்த கடலை, அதன் நீல நிறத்தை, வானும் கடலும் இணைத்திடும் இடம் தெரியாத அந்த இணைப்பை பார்த்திருந்தாள்.

**நீல வான ஓடையில் நீந்துகின்ற வெண்ணிலா நான் வரைந்த பாடல்கள் நீலம் பூத்த கண்ணிலா வராமல் வந்த என் தேவி!**

## அத்தியாயம் நாற்பத்தி மூன்று :

**நதியே நதியே காதல் நதியே நீயும் பெண்தானே அடி நீயும் பெண்தானே!**

பரந்த விரிந்த கடலின் வெகு முன் இருந்த சாலையில் காரை நிறுத்தியவன், “நேரா போனா கடலுக்குப் போகலாம், போட் இருக்கு, இந்த பக்கம் இன்னம் கொஞ்சம் தூரம் போனா ரிசார்ட் ஒன்னு இருக்கு, அங்கயும் போகலாம், இன்னும் கொஞ்சம் தூரம் போனா மகாபலிபுரம் வரும் போகலாம், அங்கே போகலாம்! இல்லை வேற எங்கயாவது போகலாமா?” என்றான்.

கடலுக்குள் செல்ல தான் வர்ஷினிக்கு ஆசை, இதுவரை சென்றதில்லை. “என்ன பண்ணலாம் சரண்?” என்று சரணிடம் கேட்டாள்.

அவனும் அங்கே போகலாம் என்று கடலைக் காட்டினான்.

“அங்கேயே போகலாம்!” என்று வர்ஷினியும் காட்ட,

“ஓகே!” என்றவனின் முகம் வெகுவாக மகிழ்ச்சியைக் காட்டியது. அவனுக்கும் அங்கே தானே போகவேண்டும்.

காரை சற்று தூரம் மணலில் விட்டு இறங்கினான். அங்கே சில பேர் இருக்க, இவனை பார்த்தும் ஓடி வந்தனர். லுங்கி, பேன்ட், த்ரீ

போர்த்ஸ் என இருந்த மீனவ இளைஞர்கள், "தலை எப்படி இருக்கீங்க?" என்ற அவர்களின் முகத்தில் அவ்வளவு மகிழ்ச்சி.

"நல்லா இருக்கேன்! போகலாமா!" என்று அவர்களை கேட்க,

"போகலாம்!" என்றவர்களுக்கு அவனுடன் நிறைய பேச வேண்டும் போல தோன்றினாலும், ஈஸ்வரின் முகம் இப்போது அதற்கு அனுமதியில்லை என்ற பாவனையைக் காட்டியது.

"இது ஜகன் அண்ணா பசங்க!" என்று சரணையும் பிரணவியையும் காட்டினான். கூடவே வர்ஷினியை "என் ஃபிரண்ட்" என்று அறிமுகப்படுத்தினான்.

"வணக்கம் மேடம்!" என்றார்கள் பணிவாக.. எல்லோரும் பார்க்க தடி தடியாக இருக்க, "இவர்களோடா போகவேண்டும்!" என்று வர்ஷினிக்கு தோன்றியது.

ஒரு விசைப் படகை ஐந்த நிமிடத்தில் அவர்கள் தயார் செய்தனர். பிரணவி இன்னும் வர்ஷினியின் தோளில் உறங்கிக் கொண்டிருக்க, வர்ஷினி அவளை தூக்கிக் கொண்டு நடந்தாள்.

"என்னிடம் கொடு!" என்ற ஈஸ்வருக்கு, "ஒருவேளை முழிச்சிட்டா பயந்துக்குவா!" என்ற வர்ஷினியின் பாவனையில்,

"டேய், முதல்ல உன் லுக் மாத்து" என்று தனக்கு தானே சொல்லிக் கொண்டான்.

அவள் தூக்கி நடக்க, ஈஸ்வர் சரணோடும், அவர்களின் பெரிய பேக் ஒன்று குழந்தைகளுக்கு தேவையான ஸ்நேக்ஸ், ஜூஸ் என்று தூக்கிக் கொண்டு நடந்தான்.

எதிரில் பார்பவர்களுக்கு அவர்கள் குடும்பமாய் தான் தெரிவர். பார்க்கவே பாந்தமாய் பொருந்தினர்.

விசைப் படகில் முதல் பயணம் வர்ஷினிக்கு. இரு இளைஞர்கள் ஓட்டினாலும் இவர்கள் இருக்கும் புறம் இல்லை வேறு புறம் நின்றனர். "பிரணவியை குடு! அவ கண் முழிச்சா குடுக்கறேன்!" என்று கட்டாயப் படுத்தி ப்ரணவியை வாங்கினான்.

வர்ஷினி அதன் பிறகு சரணோடு சேர்த்து அந்த பயணத்தை அனுபவிக்க துவங்கினாள். வெயில் அதிகம் உரைக்கவில்லை, அந்த உப்புக் காற்று, அந்த நீரின் வாசனை என்று அவளுக்கு ஒரு புது உணர்வைக் கொடுத்தது.

அந்த நீல நிற நீரை கிழித்துக் கொண்டு படகு செல்ல, அதை ஒரு ஆர்வத்தோடு பார்த்திருந்தாள். ஈஸ்வர் எதுவுமே பேசவில்லை பேச முயலவும் இல்லை. அமைதியாக அவளை பார்த்து நின்றிருந்தான்.

ஒரு ஒரு மணிநேரம் அதில் சுற்றி சுற்றி வந்தனர். வெகுவாக அந்த பயணத்தை ரசித்தாள்! அனுபவித்தாள்!

ஈஸ்வருக்கு அவளிடம் பேச வேண்டும், அந்த கடலுக்கும் அவளுக்கும் உள்ள அவனின் ஈர்ப்பை அவளிடம் சொல்ல வேண்டும் என்று ஒரு பேராவல் மனதில் பொங்கியது. ஆனாலும் அமைதி காத்தான். அதை சொல்லும் அளவிற்கு இன்னும் ஒரு ஈர்ப்போ அல்லது உறவோ வர்ஷினிக்கு தன்னிடம் இல்லை என புரிந்து பேசாமல் நின்றான்.

ஆனாலும் ஈஸ்வர் என்ன செய்கின்றான்? தன்னை பார்க்கின்றானா என்று பார்க்கும் ஒரு தைரியம் வர்ஷினியிடம் வந்திருந்தது. அவ்வப்போது தைரியமாய் அவனை அவனின் கண்களைப் பார்த்தாள். ஆனால் இவள் தான் கண்ணாடி அணிந்திருந்தாளே!

இடையில் ஏதேதோ ஸ்நாக்ஸ், அவளிற்கும் சரணிற்கும் ஈஸ்வர் கொடுத்ததை உண்டனர். நடுவில் பிரணவியும் விழித்துக் கொள்ள, அவளின் கொஞ்சல் மொழிகளோடு பயணம் இன்னும் அருமையாய் அமைந்தது.

நேரம் ஒன்றை நெருங்க, கரை திரும்பினர்.

இறங்கியதும், “எவ்வளவு பணம் வெச்சிருக்க?” என்றான் ஈஸ்வர்.

“கார்ட் தான் இருக்கு, ஒரு ஃபைவ் ஹண்ட்ரட் ருபீஸ் தான் கைல இருக்கு!” என்றாள்.

“உன்னோட ட்ரீட் இல்லையா? நான் இப்போ இவங்களுக்கு கொடுத்திடறேன். அப்புறம் நீ எனக்கு கொடுத்துடு!” என்றவன் அவர்களுக்கு பணம் கொடுத்தான்.

பின்பு அருகில் இருந்த ஒரு நட்சத்திர ஹோட்டலுக்கு அழைத்துச் செல்ல, அங்கே அவர்களுக்கு ஏற்கனவே டேபிள் புக் செய்யப் பட்டு இருந்தது. அவர்களிட கேட்டு என்ன வேண்டும் என்று சொல்லி சூப், ஸ்டார்ட்டர்ஸ் என்று ஆரம்பித்து அவர்கள் உணவை முடித்த போது அதன் பின் ஒன்றரை மணிநேரம் கடந்து இருந்தது.

வர்ஷினி அவளின் கண்ணாடியை கழற்றாததால் அவனால் இயல்பாய் இருக்க முடிந்தது. யாரிடம் எப்படியோ ப்ரணவிக்கும் சரணிற்கும் பார்த்து பார்த்து செய்து அவர்களை சாப்பிட வைத்த ஈஸ்வரின் பொறுமை வர்ஷினியை கவர்ந்தது என்றே சொல்ல வேண்டும்.

“கார்ட் இங்கே ஸ்கிராச் பண்ணிக்கலாம்!” என்று பில்லை அவளே கொடுக்க வைத்தான்.

பின்பு வீடு திரும்பும் போது சரண் உறங்கிவிட, வர்ஷினி ப்ரணவியிடம் கதை பேசி வந்தாள்.

வர்ஷினியை அவளின் வீட்டில் இறக்கி விட்டான். அதுவும் கேட்டின் உள் வந்து இறக்கி விட்டான். ஆனால் ஈஸ்வர் இறங்கவில்லை.

“அட்வான்ஸ் ஹேப்பி பர்த்டே” என்றவன், “ஐ ஹேவ் எ ஸ்பெசல் கிஃப்ட் பார் யு. அதை உனக்கு கொடுக்கட்டுமா?” என கேட்க,

ஈஸ்வர் கேட்ட பாவனையில் “என்ன?” என்றாள் தயங்கித் தயங்கி.

“அது சஸ்பென்ஸ்! நாளைக்கு மார்னிங் தான் கொடுப்பேன்!” என்றான் ஒரு புன்னகையோடு.

அவன் கொடுத்த பில்ட் அப்பில் பயந்து தயங்கியவள், இப்போது அவனின் புன்னகையில் தெளிந்தாள்.

“வில் வெயிட்” என்று பதிலுக்கு புன்னகைக்க,

ஒரு சிறு தலையசைப்போடு கிளம்பியவன், சற்று தூரம் வந்ததுமே ராஜாராமிற்கு அழைத்தான். அப்போது அங்கே அவர்கள் ஹாஸ்பிடலில் இருந்து வீட்டிற்கு கிளம்பினர்.

முரளி தான் ஃபோனை எடுக்கவும், “அப்பா இல்லையா?” என்ற ஈஸ்வரின் கேள்விக்கு,

“இருக்கார்!” என,

“அவர் கிட்ட கொடு!” என கொடுத்தவுடன், “அப்பா, வர்ஷினியை வீட்ல விட்டுட்டேன்” என்று சொல்லி வைத்து விட்டான்.

“என்னப்பா?” என்ற முரளியின்  கேள்விக்கு,

“வர்ஷினியை வெளிய கூட்டிட்டுப் போனான், இப்ப வீட்ல விட்டுட்டேன்னு சொன்னான்” என,

அருகில் இருந்த பத்துவிற்கும் ரஞ்சனிக்கும் முகம் சுருங்கி விட்டது. பின்னே காலையில் ரஞ்சனி அங்கே பத்துவை அழைத்துக் கொண்டு சென்ற போது ஈஸ்வர் வீட்டில் இருந்து கிளம்பியிருந்தான். பின்பும் போன் செய்தாள், மெசேஜ் செய்தாள், எதற்கும் பதிலில்லை. சிலமுறை அல்ல பலமுறை...

அதுவும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு சென்றிருந்தான் என்று தெரியும், மதியம் வந்து விட்டானா என்று கேட்க அப்போதும் இல்லை.

நேற்று நடந்ததற்கு சமாதானம் செய்வோம், சமாதானம் ஆகாவிட்டால் மன்னிப்பாவது கேட்போம் என்று காலையில் இருந்து ஈஸ்வரை பிடிக்க முற்பட... முடியவேயில்லை.

ஆனால் வர்ஷினியுடன் சென்றிருக்கின்றான், தங்களுக்கு தெரியவில்லை, தங்களின் அழைப்பையும் ஏற்கவில்லை என்பது பத்துவிற்கும் ரஞ்சனிக்கும் ஒரு மாதிரி ஆகிவிட்டது.

“எப்போ போனா? என்கிட்டே நீங்க சொல்லவேயில்லை அப்பா” என்று முரளி கேட்க, அப்போதுதான் அவனுக்கும் தெரியாது என்று பத்துவிற்கு தெரிந்தது.

“காலையில என்கிட்ட கேட்டான். நான் ஓகே சொன்னேன்” என்றார் ராஜாராம். அவர் சொன்ன பாவனையிலே இதற்கு மேலே கேட்காதே என்ற பொருள் இருக்க, முரளியும் பத்துவும் பேசவில்லை.

ரஞ்சனியால் பேச முடியவில்லை, “உன் அண்ணன் செய்வது உனக்கு தெரியாதா?” என்று கேட்டு விட்டால் என்ன சொல்லுவாள்! அமைதியாகிவிட்டாள்.

வீடு வந்தவுடனே “பாப்பா என்ன பண்ணறான்னு பாரு!” என்று ராஜாராம் சொல்ல, அங்கே இருந்த ஷாலினி “இப்போதான் மாமா பார்த்தேன், தூங்கறா!” எனவும்,

பின்பு அவர் ஓய்வு எடுக்க...

ஈஸ்வர் வர்ஷினியை கூட்டிக் கொண்டு வெளியே சென்றிருக்கின்றான், இன்னும் அம்மாவிடம் பெரியம்மாவிடம் சொல்லாமல் இருந்தால் சரியல்ல சொல்லி விடுவோம் என்று

நினைத்து, ரஞ்சனி அம்மா வீடு போக முடிவெடுத்து கமலாம்மாவிடம் சொல்லி கிளம்பியவள்...

“என்னை வீட்ல விட்டுடுங்க!” என்றாள் பத்துவிடம்.

அதுவே சொன்னது “நான் மட்டும் தான் போகின்றேன்! நீ வேண்டாம்!” என்று.

பத்து அவளை வீட்டில் விட, இவர்களின் கார் பார்த்து வந்த ரூபா “வாங்க!” என்று பத்துவையும் உள் அழைக்க,

“அவருக்கு வேலை இருக்காம் அண்ணி!” என்று ரஞ்சனி சொல்லி பத்துவை அனுப்பி உள்ளே வந்தாள்.

“ஏன் ரஞ்சி டென்ஷனா இருக்க?” என்ற ரூபாவிடம்,

“காலையில குழந்தைங்களை கூட்டிட்டு விஸ்வா எங்க போயிருந்தானாம் அண்ணி!”

“ஏதோ பர்த்டே செலப்ரஷன் க்ளோஸ் ஃபிரண்ட்க்குன்னு சொன்னான்”

“யாருன்னு நீங்க குழந்தைங்க கிட்ட கேட்கலையா?”

“சரண் வரும் போதே தூங்கிட்டு வந்தான், பிரணவி வந்ததும் தூங்குறா, விஸ்வா ஒன்னும் சொல்லலை, ரூம்ல இருக்கான். யாருக்கு செலப்ரேஷன்” என ரூபா கேட்க...

“வர்ஷினிக்கு!” என ரஞ்சனி சொல்ல,

“என்ன?” என்று நின்றாள் ரூபா,

ரஞ்சனி வந்த அரவம் உணர்ந்து வந்த அவளின் அம்மா பெரியம்மா இருவரும் இதைக் கேட்டனர்.

“என்ன குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு ஒரு பெண்ணோடு போகின்றானா? அதுவும் வர்ஷினியுடன்? அது ஏன் யாரிடமும் சொல்லாமல் சென்றான்”

என்ன நடக்கின்றது என்று புரியாமல் விழித்தனர்.

**சிறு நதிகளே! நதி தொடும் கரைகளே! கரை தொடும் நுரைகளே! நுரைகளில் இவள் முகமே!**

## அத்தியாயம் நாற்பத்தி நான்கு:

**நேரத்திலே நான் ஊர் செல்ல வேண்டும், வழி போக துணையாய் அன்பே வாராயோ!**

“அம்மா வர்ஷினியை கல்யாணம் பண்ண என்னோட மாமனார் கிட்ட விஸ்வா கேட்டிருப்பான் போல!” என்று பட்டென்று விஷயத்தை ரஞ்சனி சொல்லி விட..

“என்ன?” என்று அதிர்ந்து அமர்ந்து விட்டார் மலர்.

“அந்த பெண்ணையா? திருமணமா?” என்பது ஒரு புறம்.. “என்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை” என்பது ஒரு புறம்..

எப்படி இது சாத்தியம்! அதுவும் அவ்வளவு கௌரவம் பார்ப்பவன் எப்படி இப்படி.. அம்மா யார் என்று தெரியாத அல்லது சொல்லாத பெண்ணை எப்படி மணப்பான்.

ஒரு வார்த்தை கூட யாரிடமும் பேசும் நிலையிலோ, கேட்கும் நிலையிலோ மலர் இல்லை.

அதற்குள் பெரியம்மா, சௌந்தரி பாட்டியிடம் சொல்லியிருக்க அவருமே என்ன என்று அதிர்ந்து விட்டார். அப்பா என்று சொல்லிக் கொண்டாலும் அவளின் அம்மா யார் என்று ராஜாராம் சொல்லியதில்லை. இரண்டாவது மனைவியின் பெண் என்றும் வந்ததில்லை.

எப்படி இப்படி ஒரு பெண்ணை தங்கள் வீட்டில் திருமணம் செய்ய முடியும்.

“உங்க கிட்ட ஏதாவது சொல்லியிருக்கானா?” என்று மாமியாரிடமும் அக்காவிடமும் மலர் கேட்டார். ஏனென்றால் அம்மாவை விட பெரியம்மாவும் பாட்டியும் இன்னும் நெருக்கம் ஈஸ்வருக்கு.

“இல்லை!” என்று தலையாட்டினர்,

“ஒரு முறை ரஞ்சனி வீட்டுக்கு போகும் போது எங்களை அவன் தான் கூட்டிட்டு வந்தான். அப்போ ஃபைனான்ஸ் பிரிச்சு ஜகன்கும் ரஞ்சனிக்கும் கொடுத்துடுவேன்னு சொன்னான்,

“வேண்டாம்! உனக்கு அதுல பங்கு இருக்குன்னு நானும் அத்தையும் எவ்வளவோ சொன்னோம்! கேட்கலை!”

“நாங்க அவனுக்கு பிரியமான ஒன்னை எப்படி ஈசியா தூக்கிக் கொடுத்துட்டான்னு தான் இருந்தோம். வேற எப்பவும் எதுவும் அவன் பேசினதில்லை, திரும்ப சிங்கப்பூர் போயிட்டான்” என்றனர்.

“எனக்கு ஒரு வருஷம் முன்னமே தெரியும்மா கேட்டான்னு... ஆனா திரும்ப சிங்கபூர் போயிட்டான். அதனால விட்டுட்டான்னு நினைச்சேன். திரும்ப ஆரம்பிப்பான்னு எனக்கு தெரியாது, ரொம்ப தீவிரமா இருக்கான்!” என்றும் கூடவே சொல்ல..

அப்போது தான் ஜகனும் நமசிவாயமும் வந்தனர். அவர்களுக்கும் விஷயம் தெரிய, எல்லோரும் அதிர்ந்து அமர்ந்து இருந்தனர். விஸ்வாவா இப்படி என்று..

தங்களுக்கு சமம் இல்லை என்று அவன் நினைத்தால், சிரிப்போடு விலகிக் கொள்வான், பேசக் கூட மாட்டான்.

இப்படி ஒரு பெண்ணை வாழ்க்கை துணையாக எப்படி தேர்ந்தெடுத்தான். அதுவும் ஒரு வருடம் முன்பே.. பேசியிருக்கின்றான்! தங்களுக்கு தெரியவேயில்லை!

இப்படியா பிள்ளைகளை வளர்த்திருக்கின்றோம்.

வீடே அதிர்ந்து நின்றது.

சரண் எழுந்து வரவும், “யாரோட போனீங்க சரண்?” என்றாள் ரூபா.

“வர்ஷினிக்கா கூட” என்றான் சரண்.

“அப்படி எப்படி போவாங்க, அந்த பொண்ணு எப்படி போகும். இது தப்பில்லையா?” என்று மலர் கோபப்பட்டவர்.

“எங்க? எங்கடா போனீங்க?” என்று சரணை துருவ,

“சித்தப்பா யார் கேட்டாலும் யார் கூட போனோம்னு சொல்லு, ஆனா எங்க எங்க போனோம் சொல்லக் கூடாதுன்னு காலையிலயே சொன்னாங்க” என்றான் தெளிவாக.

“எமகாதகன்டா இந்த விஸ்வா!” என்று ரூபா பார்த்திருந்தாள். அவர்கள் பேசும் போதே ஈஸ்வர் இறங்கி வந்தான்.

வீடு மொத்தமும் இருக்க நடுவில் சரண் நிற்க, விஷயம் எல்லோருக்கும் தெரிந்தது, புரிந்தது.

எல்லோரையும் பார்த்து வந்தமர்ந்தான்...

“என்ன நடக்குது விஷ்வா?” என்றார் நமசிவாயம்.

பதில் பேசாமல் அமைதியாக இருந்தான்...

“அப்பா கேட்கறார் தானே சொல்லுடா?” என்றார் மலரும்.

“இங்க இருக்குற எல்லோரும் எனக்கு ரொம்ப நெருக்கமானவங்க தான். ஆனா அதுக்காக இத்தனை பேர் முன்னாடி என்னால எதுவும் பேச முடியாது!” என்றான் தீர்மானமாக.

“கல்யாணம் பேசியிருக்க, இன்னைக்கு அந்த பொண்ணோட வெளில போயிருக்க, நீயா இப்படி? எங்ககிட்ட எதுவும் சொல்லவேயில்லை, எப்படி அந்த பொண்ணு உன்னோட வந்தா.. எப்படி இப்படி ஒரு பொண்ணை கல்யாணம் பண்ண முடியும்?” என்று மலர் வர்ஷினியை பேச..

“ஏன் அந்த பொண்ணுக்கு என்ன? உங்ககிட்ட எப்படி பேச முடியும் அவளுக்கு சம்மதம் இல்லாத போது, ஒரு வருஷம் முன்ன முரளி மூலமா பேசினேன் அவ ஒத்துக்கலை. சரின்னு ஒரு வருஷம் இடைவெளி விட்டேன். திரும்ப இப்போ கேட்கிறேன். அவ சரின்னு சொன்னா தானே உங்க கிட்ட நான் பேச முடியும்!” என்றான்.

“ஓஹ்! உனக்கு சரின்னு கூட சொல்லலை. ஆனா வெளில உன்கூட வர்றாளா? நம்ம வீட்டுக்கு இதெல்லாம் ஒத்துவருமா!” என்றார் இளக்காரமாக.

அந்தத் த்வனி ஈஸ்வரை கோபப்படுத்தியது. “என் கூட வர்றதுக்கு அவங்கப்பா கிட்ட பெர்மிஷன் கேட்டு, அவர் சரின்னு சொன்னதுக்கு அப்புறம் தான் வந்தா.. அதுவும் சரண், பிரணவிக்காக தான் வந்தா, உங்க பசங்க ஒன்னும் சூப்பர் பசங்க கிடையாது, நம்ம குடும்பத்துக்கு ஒத்துவருமான்னு நீங்க கேட்கற அளவுக்கு”

“ஒருத்தன் பணத்தை சூதாடி விட்டான், இன்னொருத்தி சொல்லாம கொள்ளாம கல்யாணம் செஞ்சு வந்து நின்னா...”

“இவங்க செஞ்சதாவது வெளில சொல்ல முடியும். நான் செஞ்சது சொல்லக் கூட முடியாதும்மா” என நிறுத்தினான். அதனை யாரும் கவனத்தில் கொள்ளவில்லை.

ரஞ்சனியின் முகம் முற்றிலும் வேதனையைக் காட்டியது. இவன் எப்போது இதை விடுவான் என்று. கூடவே முதல் நாள் வர்ஷினியை

பார்த்தும் இவன் சொன்னது என்ன? இப்போது நான் அவளுக்கு கீழா? என்று தான் தோன்றியது.

ஒரு நிமிடம் வேதனை, மறு நிமிடம் முகம் இறுகி விட்டவள். "தோ பாரு விஷ்வா, உன்னை பத்தி பேசிக்கோ. என்னை பத்தி ஜகன் பத்தியெல்லாம் நீ பேச வேண்டியது இல்லை.. நான் அவரை கல்யாணம் தான் பண்ணி வந்தேன். இப்படி ஊர் சுத்தலை!" என்றாள் காட்டமாக.

"அப்போ உங்களை பத்தி நான் பேசக் கூடாது, உங்களுக்கும் எனக்கும் சமந்தம் இல்லைன்னு சொல்ற. நீங்க பிரச்சனை பண்ணும் போது காப்பாத்திவிட நான் வரணும் ஆனா அதை சொல்லக் கூடாது இல்லையா" என்றான் ரஞ்சனியை பார்த்து.

"நம்ம என்ன பேசிட்டு இருக்கோம். நீங்க ரெண்டு பேரும் சண்டை போடறீங்க!" என்றார் பாட்டி.

"சண்டை போடாம என்ன பண்ண பாட்டி? நான் தான் அவளை கூட்டிட்டு போனேன், அதுவும் குழந்தைங்களை காட்டி! அவங்கப்பா கிட்ட கேட்டுட்டு தான் வர்ஷினி வந்தா! தப்பா பேசக் கூடாது இல்லையா!"

"இவளோட நாத்தனார் அவ, வர்ஷினியை இப்போ ஒரு வருஷமா பார்க்கிறா! அப்போ உடனே இவ தானே அம்மா பேசினதுக்கு பேசணும். இதுல நம்ம செஞ்சதை தானே சொன்னேன்.. இவ தான் பேசறா!"

"அதுவும் இவ கல்யாணம் பண்ணினாளாம், நான் ஊர் சுத்தறனாம்!"

"இவ செஞ்சா சரி? நான் செஞ்சா தப்பா? இவளும் பத்துவும் பேசினாங்க கல்யாணம் நடந்துடுச்சு, அப்படியெல்லாம் வர்ஷினி ஒத்துக்க மாட்டா.. அப்போ ஊர் தானே சுத்த முடியும். அதுவும் எனக்காக வரலை, குழந்தைங்களுக்காக!"

"சின்ன பொண்ணு அவ! முதல்ல நீதான் அம்மா பேசின போது சப்போர்ட் போகணும், நம்ம சண்டை வேற.. நீ அவளுக்கு சப்போர்ட் பண்ணனும் தானே! உன் புருஷனோட தங்கை தானே!"

"எதுக்கு பண்ணனும்? எதுக்கு பண்ணனும்? அதுதான் நீ இவ்வளவு சப்போர்ட் பண்ணும் போது, நான் ஏன் பண்ணனும்?"

"நான் வேற? நீ வேற? அவ உங்க வீட்டுப் பொண்ணு இல்லையா?"

ஈஸ்வர் சொல்லுவது நூறு சதவிகிதம் நிஜம் என்றாலும், அதை அந்த சமயம் ஈஸ்வர் முன் ஒத்துக்கொள்ள மனதில்லை, அவனையே முறைத்துப் பார்த்து நின்றவள்,

“நீ அதையும் இதையும் பேசி பிரச்சனையை திசை திருப்பற!” என்றாள் ஆவேசமாக.

“ஆமாம்! அப்படிதான்! அதுக்கு என்ன இப்போ?” என்று ஈஸ்வர் அசால்டாய் சொல்ல,

யாருக்கும் என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

சில அமைதியான மணித்துளிகள், மலர் தான் திரும்ப, “நீ அந்த பொண்ணை கல்யாணம் பண்ண எங்களுக்கு இஷ்டமில்லை..” என்றார்.

“நான் யார்கிட்டயும் சம்மதம் கேட்கலை!” என்று பதில் சொல்பவன் தான் ஈஸ்வர். அதுதான் அவனின் பிறவிக் குணமே! அதுதான் அவனின் இயல்பு கூட.. ஆனாலும் பதில் பேசாமல் இருந்தான்.

அதற்கு ஒரே காரணம், இதில் எங்கேயும் வர்ஷினி இல்லை. ஆனாலும் இப்போது இவர்கள் அவளை பிடித்து இழுத்துக் கொண்டிருகிறார்கள். இன்னும் பேசினால் இழுப்பார்கள் என்பது தொட்டு பதில் பேசினான் இல்லை.

ஆனாலும் அவன் பதில் பேசாத போதும், அம்மா சொல்வதால் அவன் மாறிவிடுவான் என்று நம்புபவர்கள் யாருமில்லை.

யாருக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லை, யாருக்கும் விருப்பமில்லை...

ஈஸ்வர் எனக்கு சொத்துக்கள் வேண்டாம். ஜகனிற்கும் ரஞ்சனிக்கும் கொடுத்து விடுகிறேன் என்ற போது கூட நமசிவாயமும், மலரும் கலங்க வில்லை. தங்கள் மகன் ஒன்றுமில்லாமல் போய்விடுவானே என்று நினைக்கவில்லை.. ஆனால் இன்று பயமாக இருந்தது. ஏனென்றால் கௌரவம் அது இது என்று இவர்களை விட ஈஸ்வர் தான் அதிகம் பிடித்து தொங்குவான். அதனால் சொத்துக்களை சம்பாதித்துக் கொள்வான். கௌரவம் குலைய விடமாட்டான் என்ற நம்பிக்கை இருந்தது.

இப்போது எப்படி அம்மா யார் என்று தெரியாத பெண்ணை கொண்டு வருவது என்ற பயம்...

அதையும் விட தாங்கள் அறிந்த ஈஸ்வர் இதை ஒத்துக் கொள்ள மாட்டான், திருமணம் முடிந்த பின் அவனுக்கு ஒரு கட்டத்தில் அந்த பெண்ணை இதனைக் கொண்டு பிடிக்காமல் போய் விட்டால்!

கலங்கி நின்றனர்!!!

கூடவே ஈஸ்வருக்கும் ரஞ்சனிக்கும் முட்டிக் கொள்வது இப்போது எல்லோருக்குமே வெளிச்சம் ஆகிவிட்டது.

எப்படியிருந்த தங்கள் மக்கள் இப்படி ஆகிவிட்டனர். யார் கண் பட்டதோ? சொத்தும் போய்.. உறவும் தடுமாறி, ஈஸ்வர் நிற்பது பெற்றோருக்கு அப்படி ஒரு வேதனையைக் கொடுத்தது.

அங்கே ராஜாராம் மகளிடம் தனிமையில், “பாப்பா! அப்பா உங்களுக்கு கல்யாணம் பண்ணனும் அவ்வளவு தான்! நீங்க ஈஸ்வர் தான் பண்ணனும் இல்லை.. அவருக்கு உங்களை பிடிச்சிருக்கும் போது நல்லா பார்த்துக்குவாங்கன்னு ஒரு எண்ணம்” என்று மரியாதையாக ஈஸ்வரைப் பற்றி பேசியவர்..

“உங்களுக்கு அவரை பிடிக்கலைன்னா வேற காட்டுறேன் பாருங்க! ஒரு ரெண்டு மூணு நாள்ல சொல்லுங்க!” என்று சொல்லி,

இன்னும் மூன்று பேரின் விவரங்கள், படங்கள், என்று ஒரு கவரில் போட்டுக் கொடுத்தார்.

“எனக்கு மூணு நாள்ல பதில் வேண்டும்!” என்றார் ஸ்திரமாக..

“சரி!” என்று தலையாட்டுவதை தவிர வர்ஷினிக்கு வேறு வாய்ப்பே அவர் கொடுக்கவில்லை..

**உன் வழியில் என் பயணம் வந்தடைய... நடந்து நடந்து..**

## அத்தியாயம் நாற்பத்தி ஐந்து :

**வழி அதுவானாலும் போக மனதில்லை!!!**

அன்று இரவு முழுவதுமே ஒரே யோசனை வர்ஷினிக்கு, காலையில் எழுந்ததும் அண்ணன்கள் இருவரிடமும் “அப்பா குடுத்தாங்க! என்ன சொல்லட்டும்?” என்று ஒரு ஆலோசனைக் கேட்டாள்.

மூன்று போட்டோ மற்றும் விவரங்கள் இருந்ததை பார்த்தனர் பத்துவும், முரளியும். அங்கே ஷாலினியும் வர.. அவளிடமும்

காட்டினர். ரஞ்சனி கல்லூரி கிளம்ப வந்தவளிடம் “இங்கே வா!” என்று சொல்லி பத்துவும் காட்டினான்.

வீடு மொத்தமும் அங்கே குழுமியது. எல்லோர் மனதிலும் “இது என்ன? ஈஸ்வர் என்ன ஆனான்?” என்று தான் தோன்றியது. அதில் அன்று வர்ஷினிக்கு பிறந்த நாள், வாழ்த்த வேண்டும் என்று தோன்றவில்லை.

காலையில் கண் விழிக்கும் போதே ஈஸ்வரின் மெசேஜ் உடன் தான் விழித்தாள். அதன் பிறகு கல்லூரி தோழர் தோழிகளின் வாழ்த்துக்கள், கமலம்மா இன்னும் ரூம் விட்டு வெளியே வரவில்லை, கணவருக்கான பணிவிடைகளில் இருந்தார்.

தாத்தா வராந்தாவில் பேப்பரோடு அமர்ந்திருந்தார்.

யாருமே சொல்லவில்லை என்பது மனதினில் பதிய ஒரு ஏமாற்றம் உணர்ந்தாள்.

மூன்று ஃபோட்டோகளையும் பார்த்தனர், விவரங்கள் ஓரளவிற்கு திருப்தியாக இருந்தாலும், பண வசதி இருந்தாலும், குறையாகவே தெரிந்தனர். காரணம் ஈஸ்வர்.. அவனோடு ஒப்பிடுகையில் அங்கே இருந்த மூவரும் குறைவே.

“உனக்கு இதுல யாரையாவது பிடிச்சிருக்கா?” என்றான் பத்து.

உண்மையில் யாரையும் பிடிக்கவில்லை. தானாக மனமும் எல்லோரையும் ஈஸ்வரோடு ஒப்பிட்டது. ஒருவேளை நான் தேவையில்லாமல் அப்படி நினைக்கிறேனோ என்ற எண்ணத்தில் தான், அண்ணன்களிடம் காட்டினாள், கேட்டாள், அவர்கள் யாரையாவது அதில் நன்றாக இருக்கிறான் என சொன்னாலும் வர்ஷினி ஒத்துக்கொள்ள மாட்டாள் என்பது வேறு.

“அப்படி ஒன்னும் என்னை யாரும் அட்ராக்ட் பண்ணலை.. அதுதான் உங்க கிட்ட காட்டினேன், ஒருவேளை எனக்கு தெரியாதது ஏதாவது உங்களுக்கு தெரியுதான்னு..?”

“எப்படி ஈஸ்வரோடு வெளியே சென்றிருக்கின்றாள், இங்கே ஒன்றும் நடவாதது போல யாரையோ காமித்து எப்படி இருக்கிறார்கள் என்று கேட்கிறாள். அவனுக்கு இது தேவை தான்” என்று மனம் ஈஸ்வரிடம் கோபப்பட்ட போதும், வர்ஷினியிடமும் கோபப்பட்டது, “என்னுடைய அண்ணன் இவளுக்கு அவ்வளவு ஈசியா? என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றாள் இவள்?” என்று.

“இந்த ஃபோட்டோ எல்லாம் காட்டி ஒப்பினியன் கேட்கற, அப்புறம் எதுக்கு விஸ்வாவோட வெளில போன? வர மாட்டேன்னு சொல்ல வேண்டியது தானே!” என்றாள் ரஞ்சனி, வேறு வார்த்தைகளில், அதாவது “அவன் உன்னை ப்ரபோஸ் செய்தது என்ன ஆனது?” என்று நேரடியாக கேட்காமல்.

“யார் போனா உங்க அண்ணனோட வெளில..?” என்றாள் ரஞ்சனியை பார்த்து வர்ஷினி. அவளின் குற்றம் சாட்டும் பாவனை வர்ஷினிக்கு பிடிக்கவில்லை.

“நீ போகலையா அவனோட?”

“நான் குழந்தைங்களோட போனேன்! அவர் தாசண்ணா வோட வேலையை பார்த்தார்!” என்றாள் அலட்சியமாக.

“என்ன?” என்று ரஞ்சனி அதிர்ந்து எழுந்து நின்று விட்டாள்.

ரஞ்சனியின் முகத்தில் ஒரு ஆக்ரோஷத்தை பார்த்த பத்து, அவளின் கை பிடித்தான். அதன் அழுத்தத்தில் வார்த்தையை விடாமல் ரஞ்சனி தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாலும்.. பத்துவை திரும்பி பார்த்து முறைத்து நின்றாள்.

முரளி வர்ஷினியை அதட்டினான், “என்ன பேச்சு இது வர்ஷி? நம்மகிட்ட வேலை பார்க்கறவங்களோட ஈஸ்வரை சொல்வியா?” என,

“ப்ச்! முரளிண்ணா...” என்று அவனுக்கு சற்றும் குறையாத அதட்டலை குரலில் காட்டிய வர்ஷினி,

“அதை நான் சொல்லலை, அவர் தான் சொன்னார், நான் அவரோட வெளிய வரமாட்டேன்னு அவருக்கு தெரியும். அதனால தான் குழந்தைங்களை கூட்டிட்டு வந்தார். குழந்தைங்கன்றதால என்னால மறுக்க முடியலை, ஒரு நாள் நான் தாஸோட வேலையைப் பார்க்கிறேன்னு அவர் தான் சொன்னார்!”

“அஃப்கோர்ஸ், அது என்கிட்டே அவர் பெர்சனலா சொன்ன ஒரு வார்த்தை. அதை எப்பவும் யார்கிட்டயும் ஓபன் பண்ணியிருக்க மாட்டேன்! என்னை சொல்ல வெச்சது, ரஞ்சனி அண்ணி தான்!” என்று ரஞ்சனியை திரும்ப பார்த்து முறைத்தாள்.

“என்ன வர்ஷி இது?’ என்று பத்து சமாதானத்தில் இறங்க..

“என்னவா? அவங்க என்னை ப்ளேம் பண்ணினாங்க பத்துண்ணா, நேத்து எங்க அண்ணனோட சுத்திட்டு, இன்னைக்கு வேற மாப்பிள்ளையோட ஃபோட்டோ காட்றியான்னு மறைமுகமா கேட்கறாங்க?” என்றாள் நேரடியாக.

எல்லோருமே வாயடைத்து நின்றனர்!

“இந்த மாதிரி இன்னொரு தடவை பேசினாங்க, நான் அதை கேட்டுட்டு இருக்க மாட்டேன்.. அவ்வளோ சீப்பாவா என்னை நினைக்கிறாங்க?” என கேட்ட வர்ஷினியின் முகத்தில் இருந்த கோபம்..

யாராலும் பதில் பேச முடியவில்லை!

ஷாலினி தான் “வர்ஷி, ரஞ்சனி அந்த அர்த்ததுல சொல்லியிருக்க மாட்டா, ஈஸ்வர் அண்ணா கல்யாணத்துக்கு கேட்டார் இல்லையா? அது என்ன ஆச்சுன்னு கேட்டிருப்பா!” என,

“ப்ச்! சும்மா சப்பை கட்டு கட்டாதீங்க அண்ணி, எனக்கு தெரியும்! அண்ட் ரஞ்சனி அண்ணிக்கு அவங்க அண்ணன் என்னை கல்யாணம் பண்றதுல விருப்பம் இருக்காது, ஏன்னா என்னோட ஐடென்டிடி சரியா இல்லை இல்லையா?” என்று சொல்லி அவள் போக...

ரஞ்சனிக்கு பேச்சே வரவில்லை, “இல்லை! அப்படி எல்லாம் இல்லை! ஐஸ்வர்யாவை கொண்டு மட்டுமே ஈஸ்வரோடு வர்ஷினியின் திருமணம் அவளுக்கு பிடித்தமில்லை, வேறு என்ன அவளுக்கு வர்ஷினியோடு இருக்கிறது, எப்படி சொல்வாள் இதை”

வேகமாக வர்ஷினியின் முன் நின்றவள், “நீ சொல்ற மீனிங்ல என்னைக்கும் நான் உன்னை பார்த்தது இல்லை வர்ஷி, தேவையில்லாம இப்போ நீ தான் என்னை ப்ளேம் பண்ற, பத்துவோட என்னோட கல்யாணம் நடக்கறதுக்கு முன்னமே நான் அப்படி பார்த்தது இல்லை, இப்போ நீ பத்துவோட தங்கை. நான் அப்படி பார்க்கவே மாட்டேன்!” என்று ரஞ்சனி ஸ்திரமாக சொல்ல,

“அப்படி நினைக்கலைன்னா, என் அண்ணனோட ஊர் சுத்திட்டு வேற கல்யாணம் பண்ணறியான்னு நீங்க என்னை பார்த்திருக்க மாட்டீங்க!” என்றாள் வர்ஷினியும் விடாமல்.

“ரஞ்சனி, நீ பேசாதே!” என்று அதட்டிய பத்து.. “வர்ஷி எப்பவும் உங்க அண்ணி அப்படி பார்க்க மாட்டா, நீ தப்பு தப்பா புரிஞ்சிக்கிற!” என்றான்

“ஓகே, அப்படியே இருக்கட்டும்!” என்று சொல்லி வர்ஷினி போக,

யாராலும் அவளை சமாதானம் செய்ய முடியவில்லை.

“நான் அந்த அர்த்ததுல சொல்லலை!” என்று ரஞ்சனி சொல்ல..

முரளியும் ஷாலினியும் கவலையாகப் பார்த்திருந்தனர், இது ராஜாராமின் காதிற்கு போனால் என்ன ஆகுமோ என்று..

ஆனாலும் ஒரு வித்தியாசம் ரஞ்சனிக்கு வர்ஷினிக்கும் வந்தே விட்டது. “இவங்க அண்ணன் பெரிய ஆள்னா இவங்க வரைக்கும், எனக்கு என்ன வந்தது?” என்று கோபமாக தான் வர்ஷினி நினைத்தாள். கோபமெல்லாம் ஈஸ்வரின் மேல் தான் திரும்பியது, அது அர்த்தமற்றது என்று நன்றாக வர்ஷினிக்கு தெரிந்த போதும்.

ரஞ்சனியோ “ஐஸ்வர்யா பின்னாடி அப்படி சுத்தினான். உன்னோட வேகத்துக்கும் அவளோட நிதானத்துக்கும் சரிவராதுன்னு அவ்வளவு சொன்னேன்! கேட்டானா இவன்? கேட்கலை! இவனும் லவ் சொல்லி, அவளும் சொல்லி, இப்போ சரி வராதுன்னு அவளை கழட்டி விட்டுட்டான்”

“அவனுக்கு வேணும் நல்லா வேணும்!” என்று தான் கோபமாக நினைத்தாள். அதே சமயம் “ஐஸ்வர்யா போல இவளிடம் இருந்தும் அவனின் மனம் மாறிவிட்டால்?” நினைக்கவே பயமாக இருந்தது.

திரும்பினால் அவளையே பார்த்தபடி பத்து.. “இல்லை, நான் அப்படி சொல்லலை” என்றால் அவனிடமும்..

“நீ எந்த அர்த்ததுல சொன்னாலும் நீ அவளை குற்றம் சாட்டினது நிஜம், நானும் இங்கே தானே இருந்தேன்!”

“ஆமாம்! விஸ்வா என்ன அர்த்தத்துல அவளோட பழகறான்னு அவளுக்கு தெரியாதா.. அப்புறம் எதுக்கு அவனோட வெளில போனா .. அப்போ என்ன நினைப்பான், இவளுக்கும் அவனை பிடிக்கும்னு நினைக்க வாய்ப்பிருக்கு இல்லையா.. இப்போ வேற ஃபோட்டோ காட்டி கேட்கறா? இது தப்பு தானே!” என்றாள் பத்துவிடமும்.

“அதான் தெளிவா சொல்றாள்ள, குழந்தைங்களுக்காகப் போனேன்னு!”

“அவங்க ஜகன் அண்ணா குழந்தைங்க, ஜகன் அண்ணா வந்தா போயிடுவளா? மாட்டா!” என்று ரஞ்சனியும் அவளின் வாதத்திலேயே நிற்க..

“என்ன பேசற நீ?” என்ற பத்துவிற்கு கோபம் வர ஆரம்பித்தது.

“கோபப்படறதுல பிரயோஜனமில்லை, நெருப்புன்னு தெரிஞ்சும் தொட்டுட்டு, அப்புறம் சுடுதுன்னா, யாரும் எதுவும் பண்ண முடியாது.. வேண்டாம்னா எல்லா வகையிலும் வேண்டாம்னு காட்டணும்!” என்றாள் தெளிவாக.

அதை தானே பத்துவும் வர்ஷினியிடம் முன்பே சொல்லியிருக்கின்றான், “விடு! ஒரு நாள் வெளில போகறதுனால எல்லாம் கல்யாணம் பண்ண முடியாது!” என,

“என்ன பேசறீங்க நீங்க? சீரியஸ்னஸ் புரியலையா, அதுவுமில்லாம அப்படி எப்படி யாரோடவோ போகலாம், எங்க வீட்ல எல்லாம் அப்படி விட மாட்டாங்க, ஒரு வேளை உங்க வீட்டுப் பழக்கமோ? அதுதான் வருதோ?” என்ற வார்த்தையை ரஞ்சனி விட்டாள்.

அவள் சொல்ல வந்த அர்த்தமே, “இப்படி அவள் செய்யக் கூடாது என்று அண்ணன் நீ சொல்ல வேண்டும்!” என்ற அர்த்தம் மட்டுமே, “உங்கள் வீட்டின் பழக்கமாக அது உனக்கு தப்பாக தெரியவில்லையா? நீ வர்ஷினியிடம் சொல்ல வேண்டும் தானே!” என்ற அர்த்தம் மட்டுமே, அங்கு பத்துவைக் குறித்த பேச்சு மட்டுமே, வர்ஷினியை அவள் பேசவில்லை..

ஆனால் வார்த்தை பிரயோகங்கள் முற்றிலும் பத்துவிற்கு வேறு அர்த்தத்தைக் கொடுக்க,

அவள் முடித்த நேரம் பத்து ரஞ்சனியை கன்னத்தில் அறைந்து இருந்தான்.

“வர்ஷினியை பத்தி தப்பா பேசறியா நீ?” என்று கர்ஜிக்க,

“நான் எங்கே அவளை பேசினேன்!” என்று முழித்து நின்றாள் ரஞ்சனி, விழுந்த அடியில் கண்களில் தானாக நீர் நிறைந்தது.

அவன் அறைந்த நேரம் கமலம்மா வேறு சரியாக அங்கே வர, “டேய் பத்து, என்னடா பண்ற?” என்று பதறி அருகில் வந்தார்.

பத்து வாயே திறக்கவில்லை.. ரஞ்சனி அதிர்ந்து கண்ணீர் வழிய சில நொடிகள் நின்றவள், வேகமாக தன்னுடைய பையை எடுத்துக் கொண்டு வெளியே நடக்க,

கமலம்மா தான் “ரஞ்சனி இரும்மா, என்ன விஷயம்?” என்று கேட்க கேட்க.. “ஒன்றுமில்லை” என்பது போல தலையை மட்டுமே ரஞ்சனியால் அசைக்க முடிந்தது, வேறு பேச முடியவில்லை. ஒரு அழுத்தம் தொண்டையில், பேச்சே வரவில்லை.

“அண்ணனும் நம்பவில்லை! கணவனும் நம்பவில்லை! யாருக்குமே தான் நல்லவள் இல்லையா, நான் வர்ஷினியை அப்படி சொல்வேனா என்ற துக்கம் மட்டுமே, ஈஸ்வரும் அதையே தான் சொல்கிறான் உன்னுடைய நாத்தனார், ஆனாலும் நீ அவளுக்காக பேசவில்லை என, பத்துவும் இப்போது என்னை தப்பாக தான் நினைக்கின்றான்”.

“ஐஸ்வர்யாவும் என்னை துரோகியாகத் தான் ஒதுக்கி விட்டாள். இதிலெல்லாம் என்னுடைய தவறு என்ன இருக்கிறது. ஒரு வேளை நான் தான் தவறோ? நான் தான் சுயனலவாதியோ?” கண்ணீர் வழிய வழிய பாதையே தெரியாத போதும் பழகிய வீடு என்பதால் நடந்தாள்.

வெளியே வேகமாக நடந்து விட்டாள், ஒரு ஆட்டோ பிடித்தவள், நேராக காலேஜ் சென்று விட்டாள். அங்கே அம்மா வீட்டிற்கும் இப்போது செல்ல முடியாது. அம்மா இப்படி தன்னை பார்த்தால் தாங்கவே மாட்டார் என்று தெரியும்.

“அவ்வளவு கெட்டவளா நான்? என்னை அடித்து விட்டான்!” யாரும் அவளை அடித்ததாக ஞாபகமே இல்லை.

பிரச்சனைகளின் பிடியில் இருந்து தப்பிக்க அவனை மணந்து கொண்டாலும், அவனுக்கு என்னை பிடித்திருக்கின்றது என்று நம்பி தானே மணந்து கொண்டேன்.. என்னை அடித்து விட்டான்.. நினைக்க நினைக்க கண்களில் நீர் பெருகியது. லைப்ரரிக்கு போய் ஒரு ஓரமாக தலைவலி என்று தோழியிடம் சொல்லி விட்டு கவிழ்ந்து படுத்துக் கொண்டாள்.

பிரச்சனை என்று அங்கே அவள் நினைத்தது அஸ்வினை மட்டுமே. இதற்கு பேசாமல் விஷ்வாவிடமே அஸ்வினை சொல்லியிருக்கலாம், அவனே பார்த்துக் கொண்டிருப்பான். நானாக தேடிப் போய் பத்துவை திருமணம் செய்து கொண்டது தவறோ?

எங்கே ஆட்கள் இல்லாமல் இருப்பார்கள், எங்கே தனிமையை தேடி ஓடுவது என்று புரியவேயில்லை.

அங்கே பத்துவின் மனதிலும் மிகுந்த போராட்டம். முதலில் இருந்தே ரஞ்சனி, ஈஸ்வரோடு வர்ஷினியின் திருமணத்தை

ஆதரிக்கவில்லை, நான் வேண்டாம் என்று சொன்னால் அது வர்ஷினிக்காக, இவள் ஏன் வேண்டாம் என்று சொல்கிறாள்? அப்போது வர்ஷினி அதற்கு தகுதியில்லை என்று தானே அர்த்தம்.

அவர்களுடைய பணப் பிரச்சனையில் இருந்து வெளியே வர மட்டுமே என்னை திருமணம் செய்து கொண்டாளோ என்ற எண்ணம் ஓங்க ஆரம்பித்தது.

பத்துவிற்கு ஐஸ்வர்யாவைப் பற்றி தெரியவே தெரியாது. ஐஸ்வர்யா ரஞ்சனிக்கு மிகவும் நெருங்கிய தோழியும் கூட. திருமணதிற்கு பின் அதை பார்க்கும் சந்தர்ப்பங்கள் இல்லை..

ஐந்தரை வருடங்கள் நகமும் சதையுமாக இருந்த தோழிகள்..

அதன் தாக்கங்கள் அதிகம்! அஸ்வினை கொண்டு தான் திருமண சமயத்தில் ஐஸ்வர்யாவிடம் இருந்து ரஞ்சனி சற்று தள்ளி நிற்க, அந்த சமயம் ஈஸ்வரும் ஐஸ்வர்யாவை விட்டு விலகி விட, ரஞ்சனிக்கும் ஐஸ்வர்யாவிற்கும் நிரந்தர பிரிவாகிவிட்டது.

எல்லாம் யோசனையாக மனதினில் ஓட, ரஞ்சனி மனதின் பாரம் தாளாமல் நிமிர்ந்து அமர்ந்தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் “உங்களை பார்க்க வந்திருக்காங்க!” என்று அவளின் டிபார்ட்மெண்ட் அட்டன்டர் வந்து சொல்ல,

பத்துவாக இருக்கும் என்று எண்ணி தான் வந்தாள். வந்தாலும் அவனுடன் போகக் கூடாது என்று நினைத்து வர... அங்கே இருந்தது ஈஸ்வர்.

ஈஸ்வரை அவள் எதிர்பார்க்கவே இல்லை. அவனைப் பார்த்ததும் மட்டுப்பட்டு இருந்த அழுகை பொங்கியது. அவளையே பார்த்தபடி நின்றிருந்தான்.

“எதுக்கு வந்த?” என்று அவனருகில் வந்து கேட்க முயன்ற போது பேச்சே வரவில்லை.

அவளின் முகம் பார்த்த உடனே “வீட்டுக்கு போகலாம்!” என்றான்.

“ம்” என்று தலையாட்டி, ஹெச் ஓ டி யிடம் சொல்லி பேக் எடுத்து வர சென்றாள்.

செல்லும் அவளையே பார்த்திருந்தான் ஈஸ்வர்.

முரளி சற்று முன் தான் அழைத்திருந்தான், விஷயத்தையும் சொல்லியிருந்தான், "என்னன்னு தெரியலை, பத்துக்கும் ரஞ்சனிக்கும் சண்டை போல, அடிச்சிட்டான் போல" என்றான் தயங்கி தயங்கி.

"என்ன?" என்று அதிர்ந்து விட்டான் ஈஸ்வர்.

"அங்க வீட்டுக்கு வந்திருக்காளா இல்லை காலேஜ் போயிருக்கிறாளா தெரியலை. அம்மா எங்க இருக்கான்னு பார்க்க சொன்னாங்க?" என,

"நான் பார்த்துக்கறேன்!" என்று சொல்லி போனை வைத்து விட்டான். திரும்ப முரளி அழைத்த போதும் எடுக்க வில்லை. இப்போது அவளை தேடி காலேஜ் வந்திருந்தான்.

ரஞ்சனி வந்தவுடன், ஈஸ்வர் என்ன என்றெல்லாம் கேட்கவில்லை, மௌனமாக நடக்க, அவனுடன் நடந்தாள்.

கார் ஏறும் வரை கட்டு படுத்தி இருந்தவளுக்கு, ஏறியதும் அப்படி ஒரு அழுகை...

ஆதரவாக அவளின் தோள் பற்றி "நான் இருக்கேன் தானே! நான் பார்த்துக்கறேன் எதுன்னாலும்.. எதுக்கும் அழக் கூடாது!" என ஈஸ்வர் சொல்ல,

ஆனாலும் அழுகை நிற்கவில்லை.

முகத்தை கைகளில் மூடி அப்படி ஒரு அழுகை, காரில் அமர்ந்த படியே தன் மேல் சாய்த்துக் கொண்டவன், "அழக் கூடாது! அண்ணா நான் பார்த்துக்கறேன் சொல்றேன் தானே! பார்த்துக்குவேன்!"

"உனக்கு என் மேல கோபம், நீ என்னை பார்க்கவேயில்லை!" என சொல்லி கண்ணீரோடு பார்க்க.

"ஆமாம்! இப்படி நீ அழுதா நான் எப்படி பார்ப்பேன்? உன் முகம் சகிக்கலை?" என,

அழுகையிலும் அவனின் தோளில் ஒரு அடி வைக்க,

"எதுன்னாலும் நான் பார்த்துக்கறேன்! இப்படி அம்மா முன்ன அழுதுடாத.. அவன் அடிச்சதும் சொல்லிடாத! தாங்க மாட்டாங்க!" என,

உனக்கு தெரியுமா என்ற பார்வை பார்த்த போதும், "நான் உன்கிட்ட கூட சொல்லலை!" என்றாள் தேம்பியபடி.

"தட்ஸ் குட் கேர்ள், ஈஸியா கிடைச்சா அதோட அருமை பெருமை தெரியறது இல்லை.. அண்ணா எல்லாம் பார்த்துக்குவேன், நீ இப்படி அழாத.. எனக்கு பார்க்க முடியலை!" என்றான்.

"ம்ம்" என்று தலையாட்டி ரஞ்சனி கண்களை துடைத்துக்கொள்ள, காரை கிளப்பினான் ஈஸ்வர்.

மிகுந்த வருத்தமே ஈஸ்வருக்கு! "பின்னே எவ்வளவு செல்லமாக வளர்ந்தவள்.. இந்த ஒரு வருடமாக பத்துவின் வீட்டினில் இருக்கின்றாள், இன்னும் வாழ்க்கையை ஆரம்பித்தது போலத் தெரியவில்லை.. அப்படியிருக்கையில் அடித்திருக்கின்றானா அவன்?" என்று கோபம் கனன்றது.

பெண்களை அடிப்பதே தவறு.. அதிலும் ரஞ்சனி ஒரு டாக்டரும் கூட, எப்படி இருந்தாலும் பெண்கள் பெண்கள் ஆகிவிடுகிறார்கள், பணியின் மதிப்பு கூட இல்லையா? தப்பே இவள் செய்திருக்கட்டும்? அடித்து விடுவானா இவன். என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றான்!

"என் தங்கைக்கு என்ன மாப்பிள்ளையா கிடைத்திருக்க மாட்டான், இவனை தேடிப் போய் திருமணம் செய்துகொண்டால், அவள் மதிப்பு குறைந்து விடுமா?"

"எங்கே தவறிவிட்டோம், நான் வர்ஷினியிடம் தவறியது இதுவரையிலும் அவளுக்கும் எனக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம்!"

"வேறு எங்கு தவறு? என்ன நான் சரி செய்ய வேண்டும்?" என்று யோசிக்க ஆரம்பித்தான்.

ஆனாலும் ஈஸ்வரின் தங்கையை ஒருவன் அடிப்பதா, அவன் கணவனாகினும்..

எனக்கும் ரஞ்சனிக்கும் சண்டை என்பது வேறு.. கணவன் என்றால் அடித்து விடும் உரிமை வந்து விடுகிறதா? கண்டிப்பாக வரும், எப்போது? நான் திருப்பி அடிப்பேன் என்று சொல்லும் மனைவியிடம், திரும்ப அடிக்கும் மனைவியிடம், அங்கே அது உரிமை ஆகிவிடுகிறது, கூடவே சகஜமும் ஆகிவிடுகின்றது.

ஆனால் ரஞ்சனி அப்படி எல்லாம் செய்யவே மாட்டாள்.. அவளின் அருமை அந்த மடையனுக்கு தெரிய வேண்டாமா? என்று கோபம்

பொங்கியது.

**விலக நினைத்தாலும் விலக முடியாதது பந்தமும் பாசமும்!**

## அத்தியாயம் நாற்பத்தி ஆறு :

**நெஞ்சமே பாட்டெழுது- அதில் நாயகன் பேரெழுது!**

வீடு வந்தவுடன் அம்மாவிடம் “உடம்பு சரியில்லை மா, அதான் விஷ்வா வர சொல்லி வந்துட்டேன்” என்று ரஞ்சனி சொல்லி, “தூங்கறேன்!” என்றும் சொல்லி ரூமில் அடைந்து கொண்டாள்.

சௌந்தரி பாட்டி அவளின் பின்னோடு சென்று, “ஏதாவது விசேஷமா ரஞ்சனி!” என்று ஆர்வமாகக் கேட்க, பாட்டியின் பேச்சைக் கேட்டவளின் மனம் இன்னும் கசந்தது.

“அப்படி எல்லாம் எதுவுமில்லை பாட்டி, படிப்பு முடியும் வரை வேண்டாம் முடிவு பண்ணியிருக்கோம்!” என்றாள். வேறு என்ன சொல்வாள்? அவளா வேண்டாம் என்கின்றாள்!

அழுத சோர்வில் படுத்துக் கொண்டாள், உறங்கியும் விட்டாள்.

அவளை வீட்டில் விட்டவுடன் கமலம்மாவிற்கு அழைத்த ஈஸ்வர், “இங்கே என்னோட தான் இருக்காம்மா, இங்கே வீட்டுக்கு கூட்டிட்டு வந்துட்டேன். அப்புறம் பேசறேன்!” என்று வேறு எதுவும் பேசாமல் வைத்து விட்டான்.

சிறிது நேரத்தில் சமன்ப்பட்டு இருந்த பத்து, ரஞ்சனியை அழைக்க, அது அங்கேயே வீட்டில் அடித்தது, ஆம் சென்ற அவசரத்தில் ஃபோனை வைத்து சென்று இருந்தாள்.

உடனே அவளின் காலேஜ் சென்றான், அங்கே அவனை தெரிந்த அட்டெண்டர் “மேடம், இப்போ தான் போனாங்க. அவங்களை யாரோ பார்க்க வந்தாங்க!” என்றான்.

“யார்?” என்ற யோசனையில் குழம்பினான்.

அடித்து வேறு விட்டான், இப்போது யாரிடம் போய் கேட்பான், அவனது மனதுமே சோர்வாக உணர்ந்தது. ஆஃபிஸ் போகாமல் திரும்ப வீட்டிற்கு வந்தான்.

அவனைப் பார்த்த கமலம்மா, “ஈஸ்வர் இப்போ தான் ஃபோன் பண்ணினான். ரஞ்சனி அவனோட இருக்காலாம். அவங்க வீட்டுக்கு

கூட்டிட்டு போயிட்டான் போல”.

“ஓஹ், என்ன சொன்னார்?” என,

“வேற ஒன்னும் சொல்லலை!” என்று கமலாம்மா சென்று விட்டார். பத்துவிடம் இருந்து இப்படி ஒரு செய்கையை அவர் எதிர்பார்க்கவில்லை. அந்தக் கோபம் இருந்தது. கூடவே பத்துவும் என்ன என்று வாய் திறக்கவேயில்லை.

அவராக மனைவியை தேடித் போயிருகின்றான் என்று அனுமானித்து இதை மட்டும் சொல்லிச் சென்றார். இன்னும் ராஜாரமிற்கு விஷயம் தெரியாது. கமலம்மாவிற்கு, முரளிக்கு, ஷாலினிக்கு மட்டும் தான் தெரியும். அவர்கள் வேறு யாரிடமும் சொல்லவில்லை. வர்ஷினிக்கு தெரியாது.

ஈஸ்வருக்கு தெரியுமா? சண்டையிடுவானோ? என்று பத்துவிற்கு தோன்ற, இனி அவனை வேறு எதிர் கொள்ள வேண்டுமோ என்றும் தோன்றியது. எதிர்கொள்ளவும் மனம் தயாரானது.

ஆனால் ரஞ்சனியின் பேச்சு இன்னும் தவறாகவே பட்டது. திரும்ப ஆஃபிஸ் கிளம்பி சென்று விட்டான்.

இப்படி ஆளுக்கு ஒரு புறம் இருக்க, வர்ஷினியையோ அவளின் பிறந்த நாளையோ கவனிப்பார் யாருமில்லை.

ராஜாரமிற்கும் மகளின் திருமணம் மனதில் நின்றது. வர்ஷினியின் பிறந்த நாள் மறப்பாரா என்ன? ஞாபகம் இருந்தாலும் காட்டிக் கொள்ளவில்லை. பத்துவினது செய்கையில் கமலம்மா அதை சுத்தமாக மறந்திருந்தார்.

ரஞ்சனியிடம் வாக்குவாதம் செய்த பிறகு சிறிது நேரம் வீட்டினில் இருந்த வர்ஷினி தாஸோடு கல்லூரி கிளம்பிவிட்டாள்.

அங்கே சென்றதும் தோழர்கள் அவளின் பிறந்த நாளை முன்னிட்ட ஆரவாரமான வரவேற்பில் அவளின் வீட்டு நினைவுகள் பின் செல்ல,

மனதை குதூகலமாக வைத்துக் கொண்டாள். ஆம்! அது தானாக வருமா தெரியவில்லை. எப்போதும் சிறு வயதில் இருந்தே வரும் பழக்கமாக நண்பர்களுடன் எதையும் காட்டிக் கொள்ளாமல் பேச ஆரம்பிக்க, பின்பு வகுப்புகள் என்று நேரம் ஓட, மதியம் கேண்டீனில் யார் என்ன சாப்பிட்டாலும் தன்னுடைய ட்ரீட் என்று விட,

யார் எவர் என்றே தெரியாத மக்கள் கூட ஹேப்பி பர்த்டே என்று வாழ்த்திச் சென்றனர். அது மனதிற்கு உற்சாகம் கொடுத்தது.

மாலையில் “தாசண்ணா, இது உங்க பாப்பாக்கு, உங்க வைஃப்க்கு, உங்க அம்மாக்கு, உங்களுக்கு” என தனித் தனியாக பணம் கொடுத்தவள், “என்னோட பர்த்டேக்கு எதாவது வாங்கிக் கொடுங்க, நான் தான் வாங்கிக் கொடுத்திருக்கணும். ஆனா எதுவும் நான் பிளான் பண்ணலை, தப்பா எடுத்துக்காதீங்க” என்று சொல்ல,

“அச்சோ, பாப்பா! என்ன இது? நீங்க குடுக்கறதே எனக்கு ரொம்ப சந்தோஷம்!” என்றான்.

கல்லூரி வளாகத்தில் தான் கொடுத்துக் கொண்டு இருந்தாள். பின் “போகலாமா” என்று காரைத் திறக்க,

“ஹாய், பர்த்டே பேபி!” என குரல் கேட்க,

அது ஈஸ்வரின் குரல் என்று நன்கு தெரிந்த போதும், அதுவரை மறந்திருந்த காலை நினைவுகள் வர, முகமும் சுருங்கி விட, திரும்பவா வேண்டாமா என்ற யோசனையோடு நின்றாள்.

“நீ தள்ளி நில்!” என்று தாஸை பார்த்து ஈஸ்வர் சொல்ல,

தாஸிற்கு போகவா, வேண்டாமா என்ற யோசனை,

“போ!” என்று திரும்பவும் சைகை காட்டினான். எப்படியும் கண் பார்வையில் தானே இருக்கப் போகிறார்கள் என்று தாஸும் சற்று தள்ளி நின்றான்.

“காலையிலயே வந்தேன், ஆனா நீ லேட் போல, அதுக்குள்ள ஒரு ஃபோன் கால் போக வேண்டி வந்துடுச்சு!” என்று சொல்லிக் கொண்டே அவளின் முன் வந்தவன் “ஹேப்பி பர்த்டே” என்றான் ஒரு சிறு புன்னகையுடன்.

“தேங்க்யு!” என்றவள், “ஓகே, நான் கிளம்பறேன்!” என்று காரில் ஏறப் போக,

“ஒரே நிமிஷம், என்னோட கிஃப்ட் வாங்கிக்கோ! அதுக்கு அப்புறம் போயிடு!” என,

“இல்லை, எனக்கு எந்த கிஃப்டும் வேண்டாம்!” என்றாள் குரலில் சற்று கடுமையை புகுத்தி,

“ஏன், இப்போ என்ன கோபம்?” என்றான் மென்மையாகவே.

“நீங்க இப்படி என் பின்னால வராதீங்க. ப்ளீஸ் லீவ் மீ அலோன். எனக்கு உங்களால எல்லார் கூடவும் சண்டை வருது!” என அவள் சொல்ல சொல்ல, அவளின் முகம் வருத்தத்தையும் காண்பிக்க,

அந்த வருத்தம் காண சகிக்காமல், என்ன ஏது என்ற காரணமும் கேட்காமல், “அவ்வளவு தானே வரமாட்டேன். நீ இதுக்கு அப்செட் ஆகாதே, திஸ் இஸ் யுவர் டே, நான் போறேன்” என்றவன்,

“சம்டைம் நீ சந்தோஷமா இருக்கும் போது கொடுக்கறேன், இப்போ இது மட்டும் கொடுக்கட்டுமா?” என அவனின் பின் புறம் இருந்த கையை எடுத்து அவளின் முன் ஒரு ஒற்றை ரோஜாவை நீட்டினான்.

அவனின் முகத்தை பார்த்தாள், அவள் பார்க்கவும் ஈஸ்வரும் முகத்தைப் பார்க்க, அவனையும் மீறி அந்தக் கண்களின் புறம் பார்வை செல்ல, “நேத்து நாம பார்த்த அந்தக் கடலை விட, உன் கண்ணு இன்னும் ஆழமா இருக்கு!”

அந்தக் குரல், அந்த வார்த்தைகளை உச்சரித்த விதம், அதுதான் ஆழமாக தோன்றியது வர்ஷினிக்கு.

எதுவும் சொல்லாமல் அந்த ரோஜாவை வாங்கி, உடனே காரில் ஏறிக் கொள்ள, தாஸை பார்த்து ஈஸ்வர் கையை அசைக்க, வேகமாக வந்த தாஸ் காரில் அமர்ந்து அதைக் கிளப்பினான்.

கையை கட்டி அந்த கார் செல்வதேயே ஈஸ்வர் பார்த்து நிற்க, சிறிது தூரம் சென்றதும் வர்ஷினியும் காரில் இருந்து பின் கண்ணாடி வழியாக திரும்பிப் பார்த்தாள், ஈஸ்வர் கை கட்டி நின்றிருந்தது தெரிந்தது.

மனது கலவரமாக உணர்ந்தது. “வேண்டாம், போ! என்றதும் உடனே சரி என்று விட்டான், என்னை மீறி உன்னால் எதுவும் செய்ய முடியாது என்ற இறுமாப்பா!” என்று யோசித்து பார்க்க, அதற்குள் கார் திரும்ப ஈஸ்வர் கண்ணில் இருந்து மறைந்தான்.

அவன் கைகளை கட்டியபடி நின்றிருந்த தோற்றம், வெகு நேரம் கண் முன் நின்றது.

வீடு சென்ற உடனே அப்பாவைப் பார்க்க சென்றாள், “காலையில உங்களை பார்க்க முடியலைப்பா, அம்மாவையும்!” என்று சொல்ல,

“பாப்பா என்ன செலப்ரேட் பண்ணுனீங்க, இது புது டிரஸ் தானே!” என்று ராஜாராம் கேட்கவும் தான் கமலமாவிற்கு அவளின் பிறந்த நாள் ஞாபகம் வந்தது.

“இல்லைப்பா, இது புதுசு இல்லை!” என்றாள்.

“ஏன்மா?” என்றார் கமலம்மா பதறி,

“தினமும் புதுசு நிறைய போடறேன், ஆனா இன்னைக்கு வீட்ல யாரும் என்னை விஷ் பண்ணலை, அதனால் போட மனசு வரலை!” என்று சொல்லும் போதே குரலில் கலக்கம் எட்டிப் பார்த்தது.

ராஜாராம் எந்த சமாதானமும் சொல்லவில்லை, “அப்பா, இல்லைன்னா உனக்கு இதுதாண்டா நிலைமை. அதுக்கு தான் சொல்றேன், நீ கல்யாணம் பண்ணிக்கோ. எனக்கு உன்னை தனியா விட்டுட்டுப் போக முடியாது!” என்றார் கமலம்மாவை குற்றம் சாட்டும் பார்வை பார்த்து.

“அது இல்லைங்க, வீட்ல ஒரு பிரச்சனை, யாருக்கும் அதனால காலையில ஞாபகமில்லை!” என்று அவசரமாக கமலம்மா விளக்கம் சொல்ல..

“என்ன? என்ன அப்படி உங்களுக்கு பிரச்சனை?” என்று ராஜாராம் கோபப்பட,

கணவரின் கோபத்தில் “பத்து, ரஞ்சனியை அடிச்சிட்டான்!” என்று கமலம்மா உளறி விட,

“என்ன?” என்று ராஜாராமும் வர்ஷினியும் அதிர்ந்தனர்.

“அவ கோபிச்சிகிட்டு போனா, அப்புறம் கொஞ்சம் நேரம் கழிச்சு ஈஸ்வர் என்னோட இருக்கா, நான் வீட்டுக்கு கூட்டிட்டு போறேன்னு சொல்லி வெச்சிட்டான். அதுதான் எல்லோருக்கும் பதட்டமா போச்சு, அப்புறம் முரளியும் ஷாலினியும் இன்னைக்கு ஸ்கேன் பண்ணனும்னு போய் இப்போ தான் வந்தாங்க!” என்றார்.

“ஏன்? ஏன் அடிச்சிட்டான்?” என்றார்.

“தெரியலை, என்னன்னு கேட்டா வாயே திறக்க மாட்டேங்கறான்!” என கமலம்மா சொல்ல,

“அதுப்பா, காலையில அண்ணிக்கும் எனக்கும் வாக்குவாதம், அதுக்கு நானே அண்ணியை திட்டிட்டேன். அப்புறம் எதுக்கு அண்ணா அடிச்சாங்க தெரியலை?”

“என்ன? என்ன வாக்குவாதம்?”

“நேத்து, நீங்க மாப்பிள்ளை ஃபோட்டோ குடுத்தீங்க இல்லையா, அண்ணாங்க கிட்ட காமிச்சேன்!”

“அதுக்கு அண்ணி, நேத்து என் அண்ணாவோட வெளில போன, இப்போ இவங்க போட்டோ காட்டுறன்ற மாதிரி பேசினாங்க, எனக்கு கோபம் வந்துடுச்சு!” எனச் சொல்ல,

“ரஞ்சனி சொன்னதுல தப்பில்லையேம்மா, ஈஸ்வர் வேண்டாம்னா எல்லா வகையிலையும் வேண்டாம்னு காட்டணும்!” என்றார் அப்பாவும்.

“இருக்கலாம்பா, ஆனா அவங்க சொன்ன விதம் எனக்கு கோபம் வந்துச்சு அதுதான். ஆனா அண்ணா எதுக்கு அடிச்சாங்க தெரியலை!” என்றாள்.

“ஈஸ்வர் திரும்ப எதுவும் பேசினானா?” என்றார் கமலம்மாவிடம்.

“இல்லை!” என்பது போலத் தலையாட்ட,

“இப்போ கூட என்னை காலேஜ்ல பார்த்தாங்க, எனக்கு பர்த்டே விஷ் பண்ணினாங்க. அப்புறம் எதோ கிஃப்ட் குடுக்க வந்தாங்க. நான் வேண்டாம் சொல்லி வந்துட்டேன்!” என்றாள் வர்ஷினி எதையும் மறையாமல்.

“எல்லோரும் ஒரு பிரச்சனைன்னா உன்னை மறந்துட்டாங்க, ஆனா அவன் மறக்கலை தானே. அடிச்சது பத்துவா இருந்தாலும் ரஞ்சனி அடி வாங்கியிருக்கான்றது ஈஸ்வர்க்கு சாதாரண விஷயம் கிடையாது. கணவன் மனைவி விஷயம்னு தள்ளி இருப்பான். ஆனாலும் உன் பிறந்த நாள் மறக்கலை. ஞாபகம் இருக்கு தானே. நீ ஏன் பாப்பா ஈஸ்வரோட உன் கல்யாணத்தை நினைக்கக் கூடாது!” என்றார்.

வர்ஷினி எதுவும் பேசாமல் அமைதியாக இருக்கவும், “அப்பாவும் ரஞ்சனி சொன்னதே தான் சொல்றேன், வேண்டாம்னா அது கிளீன் கட்டா இருக்கணும்!”

“நான் குடுத்த ஃபோட்டோல ஏதாவது பிடிச்சதா?”

“இல்லைப்பா!” என்றாள்.

“யோசிம்மா, உனக்கு வேற யாரையாவது பிடிக்குதா?”

“இல்லைப்பா!” என்றவள், “கண்டிப்பா இப்போவே கல்யாணம் பண்ணிக்கணுமா!”

“பண்ணிக்கிட்டா, நான் போற காலத்துக்கு கொஞ்சமா நிம்மதியா போவேன்!” என்றார்.

வர்ஷினி எதுவும் பதில் பேசாமல் எழுந்து சென்று விட்டாள்.

“பத்துவை வரச் சொல்லு!” என்றார் கமலம்மாவிடம்,

சிறிது நேரம் கழித்து அவன் வர, “ரஞ்சனியை அடிச்சியா!” என்றார்.

“ஆம்!” என்று தலையாட்டினான்.

“என்னவா இருந்தாலும் அடிக்கறது தப்பு, அதுக்கு அப்புறம் பார்த்தியா, சாரி கேட்டியா?”

“இல்லை!” என்று தலையசைத்தான்.

“முதல்ல அவளை வீட்டுக்கு கூட்டிட்டு வா, இல்லை நீயும் வராத! என்றார் கடுமையாக. “அடிசிக்கங்க, பிடிசிக்கங்க, ஆனா அது நம்ம வீட்டுக்குள்ள மட்டும் தான் இருக்கணும்!” என்றார் இன்னும் கடுமையாக.

“சரி” என்று தலையசைத்துக் கொண்டிருக்கும் போதே, பத்து வந்ததை அறிந்து அங்கே வந்த வர்ஷினி, “அண்ணா, என்னால உங்களுக்குள்ள சண்டையா? நான் வேணா அண்ணி கிட்ட சாரி கேட்கவா?” என நிற்க,

“இல்லையில்லை, வேண்டாம்!” என்று அவசரமாக மறுத்த பத்து, “நான் போய் கூட்டிட்டு வர்றேன்!” என்று கிளம்பினான்.

அவளை பார்த்த ராஜாராம் “நீ என்ன பாப்பா? இன்னும் புது ட்ரெஸ் போடலையா, போ, போ என் முன்னாடி இப்படி வராத!” என்று அவளையும் அதட்ட,

எதற்கு புது உடை என்று யோசித்த பத்து விற்கு அவளின் பிறந்த நாள் நினைவிற்கு வர,

“ஹச்சோ, மறந்தே போயிட்டேன்! ஹேப்பி பர்த்டே!” என்றான்.

“தேங்க்ஸ் அண்ணா!” என்றாள் சிறு புன்னகையுடன்..

“நீ போய் மாத்திட்டு வா பாப்பா!” என்று அவளை அனுப்பியவர், “நான் இருக்கும் போதே இந்த லட்சணத்துல பார்த்துக்கறீங்க இன்னும் நான் இல்லைன்னா, இதை நான் உங்க கிட்ட இருந்து எதிர்பார்க்கவே இல்லை. நீ மட்டுமில்லை உங்க அண்ணனும் கூட!” என்று கடிந்தார்.

எதுவும் பேச முடியாதவனாக பத்து வெளியில் வந்தவன், முரளியை அழைத்து “வர்ஷினி பர்த்டேடா இன்னைக்கு நான் தான் மறந்தேன்னா நீயுமா மறந்த, அப்பா கோபமா இருக்கார். ஷாலினி அண்ணிக்கு ஞாபகப் படுத்து, அவங்க பார்த்துக்குவாங்க, நான் ரஞ்சனி வீட்டுக்குப் போறேன்!” என்று சொல்லி விரைந்தான்.

அங்கே சென்றால் வீட்டினர் முன் ரஞ்சனி எதுவுமே காட்டிக் கொள்ளவில்லை, “வாங்க!” என்று சொல்லி, அவனை உபசரித்து காபி எடுக்கும் சாக்கில் உள் செல்ல,

எல்லோரும் மாற்றி மாற்றி வந்து உபசரிக்க, அதுவே சொன்னது யாருக்கும் விஷயம் தெரியாது என்று.

இவன் வந்ததை அறிந்து ஈஸ்வர் வந்தவன், “வா பத்து!” என்று அவனும் உபசரிக்க, ஏதாவது கோபமாகப் பேசுவான் என்று பத்து எதிர்பார்க்க,

ஈஸ்வர் ஒன்றுமே பேசவில்லை.. அருகில் அமர்ந்து இருந்தான் அவ்வளவே.. எதுவுமே பேச்சுக் கொடுக்கவில்லை.

வீட்டில் நமஷிவாயமோ ஜகனோ இல்லை. காஃபி குடித்தவன், “வீட்டுக்குப் போகலாமா?” என்று ரஞ்சனியை பார்த்துக் கேட்டான்.

சௌந்தரி பாட்டி “உடம்பு சரியில்லைன்னு சொன்னா, ஒரு ரெண்டு நாள் இருந்துட்டு வரட்டுமே!” என,

பத்துவிற்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை, விழித்தான்.

அதற்குள் ஈஸ்வரின் கைபேசியிக்கு முரளியிடம் இருந்து அழைப்பு வர, எடுத்தால், பேசியது ஷாலினி,

“அண்ணா ரஞ்சனி இருக்காங்களா?”

“ரஞ்சனியும் இருக்கா! பத்துவும் இங்க தான் இருக்கான்!” என,

“நீங்க ரஞ்சனி கிட்ட குடுங்க!” என,

ரஞ்சனியிடம் கொடுத்ததும், “இன்னைக்கு வர்ஷினிக்கு பர்த்டே, நைட் நானும் இவரும் வர்ஷினியை டின்னர் கூட்டிட்டுப் போறோம் வெளில, நீயும் பத்துவும் ஜாயின் பண்றீங்களா?” என,

“இரு ஷாலினி, அவர் கிட்ட கொடுக்கறேன்!”

பத்துவிடம் சொல்லப்பட, அவன் ரஞ்சனியை பார்த்தான். பிரச்சனையின் மூலமே வர்ஷினி தானே,

ரஞ்சனி நீயே சொல் என்று பார்த்து நிற்க,

“நீங்க எங்கேன்னு எனக்கு சொல்லுங்க அண்ணி, ஜாயின் பண்ற மாதிரி இருந்தா நான் கூப்பிடறேன்!” என்று வைத்து விட்டவன், “இன்னைக்கு வரட்டும் பாட்டி, நாளைக்கு நான் கொண்டு வந்து விடறேன்!” என்றான் சௌந்தரி பாட்டியிடம்.

ரஞ்சனி ஈஸ்வரை பார்க்க “போ” என்பது மாதிரி அவன் கண்ணசைக்க, அதை பத்துவும் பார்த்து இருந்தான். திடீரென்று தோன்றிய ஒரு ஈகோ, “என்னை விட அவளின் அண்ணன் அவளுக்கு முக்கியமோ” என்று நினைக்க வைத்தது.

அவர்கள் கிளம்பினர், ரஞ்சனி வெளியே வந்ததும் “நீ கார்க்கு போ, நான் பத்துகிட்ட பேசணும்” என ஈஸ்வர் சொல்லவும்,

“என்ன பேசணும்? ஒன்னும் பேசவேண்டாம்! என்று ரஞ்சனி நிற்க,

“உன் புருஷனை பத்திரமா உன்கிட்ட திரும்ப அனுப்பறேன் போ!” என்று அதட்டினான்.

“ஒண்ணும் வேண்டாம்!” என்றும் அப்போதும் ரஞ்சனி நிற்க,

“நீ போ! அவர் பேசட்டும்!” என்று பத்துவும் சொல்ல, அதன் பிறகே காரில் ஏறினாள்.

“என்ன? அன்னைக்கு ஒரு அறையாவது விட வேண்டாமான்னு நான் கேட்டதுக்கு, இன்னைக்கு அடிச்சியா?” என்றான் ஈஸ்வர்.

பத்து மௌனமாக நிற்கவும், “அன்னைக்கு சொன்னது, நீ ரஞ்சிக்காக தவிச்ச தவிப்புக்காக, அந்தக் காதலுக்காக.. ஆனா நீ இன்னைக்கு பண்ணினது ரொம்ப தப்பு..”

“என்ன பிரச்சனைன்னு எனக்கு தெரியாது! என்ன பிரச்சனைன்னு அவ சொல்லவும் இல்லை, நான் கேட்கவும் இல்லை. கணவன் மனைவின்னா ஆயிரம் இருக்கும். ஆனா அடிக்கறது

சரியே கிடையாது, நீ திரும்ப இந்த மாதிரி பண்ணின, அவளை இங்க கூட்டிட்டு வந்துடுவேன்னு எல்லாம் சொல்ல மாட்டேன்! ஏன்னா வர மாட்டா! நாங்க அப்படிதான் வளர்த்திருக்கோம்!"

"ஆனா, நீ திரும்ப பண்ணக் கூடாது!" என்றான் அதிகாரமாக.

என்னவோ ஈஸ்வரின் பாவனை அப்படி ஒரு கோபத்தைக் கிளப்ப, கூடவே வா என்ற போது போகட்டுமா என்று ரஞ்சனி ஈஸ்வரை கண்ணில் கேட்டது இன்னும் கோபம் கொடுத்தது.

அடித்தது அவன் தப்பு என்று அப்போது பத்துவின் ஞாபகத்தில் இல்லவே இல்லை.

"என்ன பண்ணுவீங்க? அடிப்பீங்களோ?" என,

"நான் சொல்லலை! அதை நீ தான் சொல்ற!" என்றான் ஈஸ்வர்.

இருவர் பார்வையும் இப்போது நேரடியாக முட்டிக் கொண்டது..

இப்படி நேரடியாக ஈஸ்வருடன் மோதி பல பல அனர்த்தங்களை இழுத்து விடப் போகிறான் என்று பத்துவிற்கு சற்றும் அனுமானம் இல்லை.

ஆம் எல்லாம் அனர்த்தங்களே.. பத்து ஈஸ்வரோடு மோதும் முட்டாள்தனத்தின் உச்சங்கள் அவை! எல்லோரையும் வருத்தம் கொள்ள செய்யப் போகின்றான் என பத்துவே நினைத்து பார்த்திருக்க மாட்டான்.

**அர்த்தம் அனர்த்தம், ஒரு எழுத்தே அதிகம்.. ஆனால் அதன் அர்த்தம் அனர்த்தம் ஆகிவிடுகின்றது!!!**

## அத்தியாயம் நாற்பத்தி ஏழு :

**மௌனம் எல்லா நேரமும் சிறந்தது அல்ல!!!**

காரில் போகும் போது ஒரு ஆழ்ந்த மௌனம், வெகு சில நிமிடங்கள் கழித்து "நீ பேசினது தப்பு! அட் தி சேம் டைம், நான் அடிச்சதும் தப்பு" என்று சொல்ல,

ரஞ்சனிக்கு என்ன சொல்வதும் என்றும் தெரியவில்லை, சொல்வதில் விருப்பமும் இல்லை.

"இனிமே இந்த மாதிரி நடக்காம பார்த்துக்கோ!" என,

“ம்ம்!” என்பது போல ஒரு தலையசைப்பு. ஆனாலும் பத்துவைப் பார்த்ததும் மட்டுப் பட்டு இருந்த அழுகை பொங்கியது.

“என்னை நம்பவில்லையே, நான் வர்ஷினியை பேசுவேனா என்று இவன் நினைக்கவில்லையே” என்பது அப்படி ஒரு வருத்தத்தைக் கொடுத்தது. அதுவரையிலும் வருத்தம் மட்டுமே இருந்தது. இப்போது பத்து பேசுவது கோபத்தைக் கொடுக்க ஆரம்பித்தது.

“இப்படி நடக்காம பார்த்துக்கோ” என்றவனைப் பார்த்து “எப்படி நடக்காம” என்று கத்த வேண்டும் போல ஆத்திரம். ஆனால் அது வரவில்லை. அவளின் இயல்பும் அது இல்லை.

திரும்பி ரஞ்சனியைப் பார்க்க அழுகையை அடக்கியபடி அவள் அமர்ந்திருப்பது தெரிந்தது. ஆனாலும் எப்படி சமாதானம் செய்வது என்று பத்துவிற்கு தெரியவில்லை.

“ட்ரீட் போகலாமா? அண்ணி வர சொன்னாங்க!”

இப்போதைய மன நிலைக்கு ரஞ்சனிக்கு எங்கும் போக விருப்பமில்லை. ஆனாலும் காலையில் வர்ஷினியை முன்னிட்டு தான் பிரச்சனை என்பதால் இப்போது தவிர்த்தல் இன்னும் அதிகமாக தெரியும் என்று மனது சொல்ல, “போகலாம், ஆனா வீட்டுக்கு போயிட்டு போகலாம். நான் பார்க்க நல்லாவே இல்லை, கொஞ்சம் ஃபிரெஷ் ஆகிட்டு போகலாம்!” என

“நீ பார்க்க நல்லா இல்லைன்னு யார் சொன்னா? ரொம்ப நல்லா இருக்க, வீட்டுக்கு போகணும்னா போகலாம், அதுக்காக இந்தக் காரணம் சொல்லாத” என்று சூழலை லகுவாக்க பத்து சொல்ல, ரஞ்சனி அதற்கு எதுவும் பதில் பேசவேயில்லை.

மனம் சலித்தது. “எங்கே போகலாம்” என்று திரும்ப கேட்டவனிடம், “ஹோட்டல் போகலாம்!” என்றாள். அங்கே செல்ல, அவர்கள் இன்னும் வந்திருக்கவில்லை, இங்கே வந்துவிட்டோம் என தெரிவித்து அமைதியாக அமர்ந்திருந்தனர்.

பத்துவின் புறம் திரும்பக் கூட இல்லை ரஞ்சனி. எங்கோ வெறித்தபடி அமர்ந்திருந்தாள். திரும்ப அழுகை வரும் போல இருந்தது. பத்து அவளையே பார்த்தபடி அமர்ந்திருப்பது தெரிந்தாலும் திரும்பக் கூட இல்லை.

விடாமல் பத்துவும் பார்த்திருக்க, அரைமணிநேரம் அப்படியே கடந்தது. பத்து பேச ஆரம்பித்த போதே, “ப்ளீஸ், நான் எதுவும் பேசற

மூட்ல இல்லை. என்னால எந்த எக்ஸ்ப்லநேஷனும் குடுக்க முடியாது. இப்ப எதுவுமே பேச வேண்டாம்" என்றாள் வேண்டும் குரலில்.

பத்துவிற்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. அமைதியாக அவனும் அமர்ந்திருந்தான்.

வர்ஷினி, முரளி , ஷாலினி மூவரும் வர, அவர்களை பார்த்தவுடன் "ஹேப்பி பர்த்டே வர்ஷி" என ரஞ்சனி சொல்லவும்,

"தேங்க் யு அண்ணி!" என்றவள், ரஞ்சனியின் அலுங்கிய நலுங்கிய தோற்றத்தையும் முகத்தையும் பார்த்து, "சாரி அண்ணி, என்னால உங்களுக்குள்ள சண்டையா?" என,

"சண்டைக்கான காரணம் நீதான், ஆனா சண்டை உன்னால கிடையாது" என்று புன்னகைத்தவள், "எப்பவும் நான் உன்னை பத்தி தப்பா பேச மாட்டேன். அந்த நம்பிக்கை வை" என்றாள்.

திரும்பவுமா என்று நினைத்த பத்து, ரஞ்சனியிடம் "திரும்ப எதுக்கு இந்தப் பேச்சு விடு!" என,

"நான் உங்க கிட்ட பேசலை" என்றாள் சற்று குரலுயர்த்தி ஒரு கடினத் தன்மையுடன்..

"அச்சோ! திரும்பவும் சண்டையா!" என பதறிய முரளி, "ரஞ்சனி என்ன இது?" என,

"அண்ணா ப்ளீஸ்! என்னை பேச விடுங்க!" என்று வர்ஷினியின் புறம் திரும்பியவள் ,

"நான் காலையில பேசின எதுவும் தப்பு கிடையாது வர்ஷி புரிஞ்சிக்கோ, நான் பேசின வார்த்தைக்கு தான் நான் பொறுப்பு ஆனா நீங்க புரிஞ்சிக்கிட்ட அர்த்தத்துக்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்!" என்றாள் திடமாக.

"கண்டிப்பா இப்பவும் நீ ஈஸ்வரோட போனது தப்பு தான், உனக்கு அவனை பத்தி தெரியலை, என்னால சொல்லவும் முடியலை, அவனோட போயிட்டு திரும்ப வேண்டாம்னு மறுத்தா அவன் ஒத்துக்குவானா என்ன, அந்த பயம் தான் எனக்கு!"

"ஏன்? என்ன பண்ணிடுவாங்க உங்க அண்ணன்?" என்று பத்து கேட்க,

அவன் புறம் திரும்பியவள், "உங்களுக்கும் சொல்றேன், சும்மா அவனை உசுப்பேத்தி விடாதீங்க. என்ன பண்ணுவான் எப்போ

பண்ணுவான் யாருக்கும் தெரியாது. அவ்வளவு தான் என்னால சொல்ல முடியும், நடந்த பிறகு திரும்ப வருத்தப் படறதுல என்ன பிரயோஜனம்?” என்றவள்.

“ஒகே, நாம இதை பத்தி பேச வேண்டாம்” என்றாள் வர்ஷினியை பார்த்து, “அண்ட் சாரி, உன் பர்த்டே அன்னைக்கு காலையில உன்னை டென்ஷன் பண்ணிட்டேன், ரியல்லி சாரி!” என,

“அச்சோ அண்ணி! என்ன நீங்க..” வர்ஷினி சமாதானம் பேச, ஒரு சகஜமான உரையாடல் ஆரம்பிக்க, “எனக்குப் பசிக்குது” என்று ஷாலினி சொல்ல, ஆர்டர் செய்ய ஆரம்பித்தார்கள்.

அப்போதும் முரளி பத்துவிடம், “ரஞ்சனி சொல்றது நிஜம், சும்மா அவன் கிட்ட சண்டை போடறதோ அலட்சியப் படுத்தறதோ வேண்டாம்!” என்றான்.

பத்துவிற்கு அவர்கள் சொல்வது புரியவில்லை. பட்டால் தானே புரியும்!!!

அண்ணன் அண்ணிகளுடன் ஹோட்டல் சென்று வந்தது மனதிற்கு ஒரு மகிழ்வை வர்ஷினிக்கு கொடுக்க, ஒரு நிம்மதியான உறக்கம், அவளைத் தழுவியது. காலையிலும் அந்த உற்சாகம் தொடர மகிழ்வோடே கல்லூரியும் சென்றாள்.

இறங்கும் போதே இரண்டு நாட்களாக ஈஸ்வர் தொடர்ந்து வந்ததால் தானாக மனதிற்குள் ஒரு தேடல், சுற்றிலும் பார்வையை ஓட்டினாள் அவளையுமறியாமல். ஆனால் அவன் இருப்பது போலத் தெரியவில்லை.

பார்வையை அவள் ஓட்டிய போது, அங்கே கிளிப்பச்சை கலரும் கருப்பும் கலந்த ஒரு கார் நிற்க, அவளின் பார்வையை வெகுவாய் அது ஈர்க்க.. அருகில் போய் பார்க்க ஆவல் தூண்டியது.

அந்தோ பரிதாபம், அவளுக்கு முன்னே பல மாணவர்கள் அதன் அருகில் செல்ல, அதனோடு சென்று அவளுக்கும் பார்க்க மனமில்லை.

அதனால் அதை ஃபோட்டோ எடுத்து கூகிள் செர்ச்சில் இமேஜ் கொடுத்து செர்ச் செய்யப் போக, அவளின் மிக அருகினில் ஒரு குரல், “எதுக்கு இவ்வளவு கஷ்டம், அது என்ன கார்ன்னு என் கிட்ட கேட்டா சொல்றேன்!” என்று கேட்க, விதிர்த்து திரும்பியவளின் முன் ஒரு மயக்கும் புன்னகையுடன் ஈஸ்வர் நின்றிருந்தான்.

“எப்போது இவன் வந்தான்?” என்றபடி வர்ஷினி பார்க்க, பார்வை புரிந்தாலும், அதைப் பார்க்கும் தைரியம் அற்றவனாக அதைத் தவிர்த்தவன், Lamborghini huracan அந்தக் கார் பேர் என்றான்.

லம்பார்கினி!!! ஸ்போர்ட்ஸ் கார், அவனை விடுத்து திரும்ப காரின் புறம் பார்வையை ஓட்டினாள்.

“அதுதான், நான் உனக்கு வாங்கின பர்த்டே கிப்ட்!” என,

“என்ன? எனக்கா?” என்பது போல விழிவிரித்து நோக்கினாள். எல்லாம் பார்வை மூலமே, எதுவும் பேச முயலவில்லை.

“நீதான் வேண்டாம் சொல்லிட்ட, ஓகே அப்புறம் கூட வாங்கிக்கோ, இப்போ ஒரு ரைட் போகலாமா? நீ ஓட்டுறயா!” என,

இரண்டு கைகளையும் கொண்டு தானாக வாய் மூடினாள் “அச்சோ” என்பது போல,

அந்த நீல நிற விழிகளின் பாவனையை உள் வாங்கிக் கொண்டு, “எதுக்கு இப்படி ஒரு ரியாக்ஷன்?” என்று சின்ன சிரிப்போடு அவன் கேட்க,

“அம்மாடி! இவனோடு ஒரு நாள் போனதற்கு மூன்று நாட்களாக திட்டு வாங்கிக் கொண்டிருக்கின்றேன்! திரும்பவுமா?” என்று எண்ணிய போதும் கார் அவளை மிகவும் ஈர்த்தது.

“வேண்டாம்!” என்று கைகளால் ஒரு சைகை செய்து, “வருகிறேன்” என்பது போல தலையாட்டி கிளம்ப,

“மௌன விரதமா?” என்றான்,

“இல்லையே” என்பது போல அதற்கும் தலையை மட்டுமே ஆட்ட,

“அப்புறம் ஏன் என்கிட்டே பேச மாட்டேங்கற?” என்றவனுக்கு, என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. பேசக் கூடாது என்றெல்லாம் இல்லை, ஆனால் அப்போது பேச வரவில்லை.

அவனையே பார்த்து நிற்க, “ஒரு ரைட் போகலாமே!” என்று சொல்லி அவளை ஆழ்ந்து பார்க்க, தானாக தலை “சரி” என்பது போல ஆடியது.

ஈஸ்வரின் முகம் பளிச்சென்று மலர, சட்டென்று சுதாரித்தவள், “இல்லை” என்பது போல தலையசைத்து, விடு விடு வென்று

நிற்காமல் அவனை திரும்பப் பார்க்காமல் நடந்து விட, ஈஸ்வருக்குள் ஏமாற்றம் தோன்றினாலும், முகத்தில் ஒரு புன்னகை தோன்றியது.

“இப்படி ஒரு பொண்ணு பின்னாடி நீ சுத்தணும்னு வேண்டுதல் போல” என நினைத்தவன், “எஸ், வேண்டுதல் தான்!” என நினைத்து,

அவனருகில் இருந்த மரத்தின் கீழ் இருந்த திண்டின் மேல் அமர்ந்து கொண்டான். எழ வேயில்லை..

கிளாசில் அமர்ந்தவள், சென்றிருப்பான் என நினைத்து, அந்தக் காரின் மாடலை கூகிளுள் போட்டுப் பார்க்க, லம்பார்கினி ஹுரகன் என்ற அந்த மாடலின் ஆரம்ப விலை மூன்று கோடி என்று இருக்க,

“அம்மாடி!” என நினைத்தவளின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. மூணு கோடி ரூபாய்க்கு கிஃப்ட் வெச்சிகிட்டு நிக்கறான்.. ஹ ஹ என்று வாய் விட்டு சிரிக்கத் தோன்றியது. தன்னுடைய மொபைலில் அவசரமாக ஒரு செல்ஃபி எடுத்து தன்னை பார்த்தாள்.

“அவ்வளவு அழகா நீ என்பது போல!!!”

“முதல் நாள் என்னைப் பார்த்த பார்வையில், எவ்வளவு அலட்சியம்! இப்போது எப்படி மாறிவிட்டான், ஏன் எப்படி?” என்ற யோசனைகள் ஓட ஆரம்பித்தன.

யோசித்து, யோசித்து, தலை வலிப்பது போல இருக்க, பேசாமல் வீடு சென்று விடுவோமா எனத் தோன்ற, நேரமும் பதினொன்று தான் ஆக, பிரேக் டைமில் கிளாஸ் இன்சார்ஜ் பார்த்து, லீவ் எழுதிக் கொடுத்து, வெளியே வந்த போது தான் ஞாபகம் வந்தது, தாஸ் அவளை காலையில் கல்லூரி வாசலில் இறக்கி விட்டு அப்படியே போய் விட்டான் என.

அவனின் அம்மாவிற்கு உடல் நிலை சரியில்லாமல் ஹாஸ்பிடலில் அனுமதிக்கப் பட்டு இருந்தார். சரி, எதற்கு அவனுக்கு அழைக்க, தானே ஒரு ஆட்டோ பிடித்து வீடு சென்று விடலாம், பின்பு தாஸிற்கு சொல்லிக் கொள்ளலாம் என நினைத்தாள்.

கண்கள் அவளையறியாமல் அந்தக் கார் இருந்த புறம் திரும்ப, அது அங்கேயே தான் இருந்தது. என்ன இங்கே நிற்கின்றது என்று தோன்ற, வேகமாகப் பார்வையை சுழல விட்டாள்.

காலையில் அவர்கள் எங்கே பேசினார்களோ, அந்த மரத்தின் அடியில் இருந்த திண்டில் அமர்ந்து இவளையே பார்த்திருந்தான்

ஈஸ்வர்.

ஆனால் எழுந்தெல்லாம் வரவில்லை. தீவிரமாக அவளை பார்த்து அமர்ந்திருந்தான். தானாக கால்கள் அவனின் புறம் சென்றது. "ஏன்? ஏன் இப்படி பண்றீங்க?" எனக் கேட்கவும் செய்தாள்.

"எப்படி பண்றேன்?" என்றான்.

"இப்படி எதுக்கு உட்கார்ந்து இருக்கீங்க?"

"எதுக்குன்னு உனக்குத் தெரியாதா, பேசாம சிங்கப்பூர்ல உட்கார்ந்திருதேன், அப்பா பார்க்கணும் சொன்னாங்க வான்னு சொல்லித்தான் உங்கண்ணன் என்னை வர சொன்னான்"

"திரும்ப என்னை இங்க உட்கார வெச்சிருக்கீங்க, இன்னும் என்னை எந்த எக்ஸ்ட்ரீம்க்கு கொண்டு போகப் போறீங்க தெரியலை" என்றவனின் குரலில் அதீத தீவிரம்.

"ஏன் எந்த எக்ஸ்ட்ரீம்க்கும் போறீங்க? யு ஆர் ஹேண்ட்சம், இன்டெலிஜென்ட், ரிச், அண்ட் ஐ திங்க் ஸ்டில் யு ஆர் எ பேச்சிளர். ஏன் என் பின்னாடி சுத்தறீங்க? உங்க பின்ன பொண்ணுங்க க்யு நிற்பாங்க!"

"ஏய் என்ன பார்த்தா என்ன லூசு மாதிரி தெரியுதா?" என்று கேட்டு ஈஸ்வர் நெருங்கிய வேகத்திற்கு பயந்து பின் வாங்கினாள்.

அவளின் கண்களில் மிரட்சியை பார்த்தவன் சற்று தணிந்து, "எனக்கு நீ தான் வேணும், நீ மட்டும் தான் வேணும்! அண்ட் கல்யாணம் பண்ண தானே கேட்கறேன், அதுல என்ன தப்பு?" என,

"ப்ச்!" என ஒரு இயலாமையில் சலித்தாள்.

"உங்கப்பா உன் கல்யாணத்தை பார்க்காம போக முடியாது. உனக்கு யாரையும் பிடிக்கலை. அப்போ என்னை கல்யாணம் செய்துகிட்டா என்ன? எஸ், நான் உன்கிட்ட தப்பா நடந்திருக்கேன். நான் ஒத்துக்கறேன். ஆனா அது என்னையும் மீறி நடந்த ஒன்னு, எப்பவும் எனக்கு உன் ஞாபகம் தான், எல்லா பொண்ணுங்க கிட்டயும் அப்படி இல்லை" என விளக்கம் கொடுத்தான்.

"ஒருத்தர் கிட்ட அப்படி நடந்தாலும், தப்பு! தப்பு தான்!" என,

"ப்ச்" என அவளைப் போல சலித்தவன், "இதுக்கு மேல எல்லாம் எக்ஸ்ப்லையின் பண்ண முடியாது, நீ கிளம்பு முதல்ல!" என்றான் கோபமாக.

வர்ஷினி தோளை அலட்சியமாக குலுக்கி கிளம்ப, அவளின் கண்கள் காட்டிய பாவனையில் அவளை கடித்து தின்றுவிடும் ஒரு ஆவல் புயலாய் அவனுள் அடிக்க, அவளுக்கு முன் கிளம்பி விட்டான்.

ஈஸ்வர் நடந்து சென்ற வேகம், காரில் அமர்ந்த விதம், அதை கிளப்பி சென்ற ஸ்டைல், எல்லாம் “செம” என்று பார்பவர்களை சொல்ல வைக்கும்.

வர்ஷினிக்கு “என்னடா இது? இவன் ரொம்ப பண்றான்!” எனத் தான் தோன்றியது. “இவனுக்கு பிடிச்சா நான் இவனை கல்யாணம் பண்ணிக்கணுமா?” என மனதினில் மட்டும் நினைக்கவில்லை, அவளின் அப்பாவிடமும் கேட்டாள்.

ஆம்! இவள் மதியம் வந்தவுடனே, தந்தையை பார்க்கச் செல்ல, அவர் திருமணப் பேச்சு எடுக்க, “எனக்கு யாரையும் பிடிக்கவில்லை” என,

“அப்போ ஈஸ்வர் கல்யாணம் பண்ணிக்கோ!” என்றார் ஸ்திரமாக. அதற்கு தான் அந்தக் கேள்வியை கேட்டாள்.

“பண்ணிக்கோ பாப்பா! அவனுக்கு உன்னை இவ்வளவு பிடிக்கும் போது நல்லா பார்த்துக்குவான். எத்தனையோ பிரச்சனைகளை கடந்து வந்துட்டோம். இப்போதைக்கு வேற பிரச்சனை கிடையாது. ஆனாலும் உன்னை ஈஸ்வர் மாதிரி ஒருத்தன் கையில ஒப்படைச்சா, நான் நிம்மதியா போவேன்!” என்றார்.

தந்தையின் குரலில் அவ்வளவு வேண்டுதல். வர்ஷினி அமைதியாக இருக்கவும். “புரிஞ்சிக்கோ பாப்பா, உன்னை அவனுக்கு பிடிச்சிருக்கு, அதுல எல்லாம் அடிபட்டு போகும். முக்கியமா உன்னோட பின்னனி. நானும் முட்டாள் தனமா இவ்வளவு நாள் அதை பத்தி யோசிக்காம இருந்துட்டேன். அதையும் விட நம்ம கிட்ட பணம் இருக்கின்ற திமிர் கூட”

“நம்மோட பணம் கண்டிப்பா ஒரு நல்ல வரனை கொண்டு வருது தான். ஆனா அவங்க உன்னோட அம்மா யார்ன்னு கேட்கறாங்க. என்னால அதுக்கு பதில் சொல்ல முடியலை! அதனால தான் இந்த ஒரு வருஷமா நான் உனக்கு மாப்பிள்ளை பார்த்தும் அமையலை. யாருக்காவது எப்படி பாப்பா உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க முடியும். யோசி.. ” என அவர் சொல்ல..

“சரிப்பா நான் பேசிட்டு சொல்றேன்!”

“யார் கிட்ட?”

“ஈஸ்வர் கிட்ட”

“அவன் கிட்ட நீ என்ன பேசப் போற?”

“எதுவோ? எல்லாம் சொல்ல முடியாது!” என்று அவரிடம் கோபமாக சொல்லி சென்றாள். என்னவோ எல்லோரும் மாற்றி மாற்றி வற்புறுத்துவது போல ஒரு தோற்றம்.

அப்பாவின் கூற்றில் இருந்த உண்மையும் சுட்டது!!!

“பாப்பா, பாப்பா!” என்று அவர் அழைக்க அழைக்க சென்று விட்டாள்.

“என்ன பேசப் போறாளோ?” என்று தோன்றிய போதும், பேசப் போவது ஈஸ்வரிடம் என்பதால் அவருக்கு மிகவும் பயமாக இருந்தது.

முன்பிருந்தே ராஜாராமிடம் அவன் பேசும் போதே அவனின் பேச்சுக்கள் வர்ஷினியின் நலனைக் கொண்டு இருப்பதால் அவளின் ரகசியங்கள் காக்கப்படும் என்பதில் அவருக்கு எந்த சந்தேகமுமில்லை. ஆனாலும் இது தேவையில்லாத பேச்சுக்கள் தானே எனத் தோன்றியது.

அவளின் ரகசியங்கள் காக்கப் படும், ஆனால் விருப்பம் குறைந்து திருமணதிற்கு மறுத்து விட்டால்? அதையும் விட அவளையும் அவளின் அம்மா போல நினைத்து விட்டால்?

**காதல் எல்லாவற்றையும் மறக்க வைக்கும் என்பதை விட எதையும் கருத்தில் கொள்ளாது, எதையும்!!!**

## அத்தியாயம் நாற்பத்தி எட்டு :

**ஒப்புக் கொள்ளுதல் வேறு! ஒப்புக் கொடுத்தல் வேறு!**

அறையை விட்டு வந்த நிமிடம் ஈஸ்வருக்கு அழைத்து இருந்தாள், நடுவில் அப்பா ஒரு வேளை பேச விடாமல் தடுத்து விட்டால் என்ற எண்ணத்தில்.

ஈஸ்வர் எடுத்தவுடனேயே “எனக்கு உங்களை பார்க்கணுமே” என,

அதிகாரமாக அந்தக் குரல் ஒலித்தது என்று சொல்ல முடியாவிட்டாலும், ஒரு ஆளுமையோடு தான் அந்தக் குரல் ஒலித்தது.

“எதுக்கு? எதுக்கு பார்க்கணும்?” என்றான் அவசரமாக, நீ வேண்டாம் என்று சொல்லக் கூப்பிடுகின்றாளோ என பயந்து.

“ஏன்? காரணம் சொன்னா தான் என்னைப் பார்க்க வருவீங்களா? ஒகே, ஃபைன்! வேண்டாம்!” என வைக்கப் போக,

“வர்ஷி, இரு, இரு, எங்க வரணும்?”

“தாசண்ணா இல்லை, எங்க வீட்டுக்கு வந்து என்னை அழைச்சிக்கிட்டீங்கன்னா பரவாயில்லை” என,

“ஒகே” என்றவன், அடுத்த அரை மணிநேரத்தில் அவளின் வீட்டு வாசலில் இருந்தான். “உள்ள வரட்டுமா வாசல்ல நிற்கறேன்” என,

“இல்லை, நான் வர்றேன்” என்று அவள் அடுத்த நிமிடம் கேட்டின் முன் புறம் வந்து விட்டாள்.

வர்ஷினி ஏறி அமர்ந்ததும் திரும்ப ஒரு அரை மணிநேர பயணம், இருவருமே பேசிக் கொள்ளவில்லை. அவளோடான பயணத்தை விரும்பி சற்று தொலைவாக பயணித்தான். பேசவில்லை என்றாலும் கவனமாக முகத்தை ஆராய்ந்தான்.

ஒரு தீவிர யோசனை, அதனோடு சோர்வாகவும் தெரிந்தாள். பசியாகவும் உணர்ந்தாள். அது மதிய நேரமும் கூட அவளை உணர்ந்தவனாக ஒரு உணவகத்தின் உள் சென்று தான் நிறுத்தினான்.

“எப்படி? எனக்கு பசிக்கும் என்று இவனுக்குத் தெரியுமா இல்லை தானாக நிறுத்தினானா!” என்ற யோசனை ஓட.. அவனின் முகத்தை பார்த்தாள்.

“ஊப்ஸ்” ஈஸ்வர் மாறிவிட்டதை அப்போதுதான் கவனித்தாள். அவனின் தலைமுடி வெட்டப்பட்டு, கிருதா மறைந்து, பிரெஞ்சு தாடி மறைந்து, இன்னும் அதிகமாக ஒரு வசீகர தோற்றம் வந்திருந்தது.

வர்ஷினியின் பார்வை உணர்ந்து, “மாத்திட்டேன், எப்படி இருக்கு? அது நல்லா இருந்ததா, இது நல்லா இருக்குதா?” என்றான்.

“உங்க முகமே நல்லா இல்லை சொன்னா என்ன பண்ணுவீங்க?” என பதில் கேள்வி கேட்க.

“என்ன பண்ணுவேன்?” என அவளை தீர்க்கமாக பார்த்தபடி, “பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணிக்கட்டுமா?” என்றான் சீரியசாக.

என்ன பதில் சொல்வது என்றே தெரியாமல் மலைத்து நின்றவள், திரும்ப வாயை கப்பென்று மூடிக் கொண்டாள். இந்த தீவிரம் பயத்தைக் கொடுத்தது.

“இல்லை, நான் ஜோக் பண்ணலை, என்னைப் பார்க்கும் போது உனக்கு என்னோட நடத்தை ஞாபகம் வரக் கூடாதுன்னு தான் என்னோட கெட் அப் மாத்தினேன். இன்னும் உன்னை அது ரொம்ப டிஸ்டர்ப் செஞ்சா முகத்தை மாத்திக்கட்டுமா?” என்றான் இன்னும் தீவிரமாக.

இந்த பதில் ஏதோ ஒரு வகையில் அவளை மிகவும் அசைக்க, “வேண்டாம்” என்பது போல தலையசைத்தாள்.

அதற்குள் இடம் வந்திருக்க நிறுத்தியிருந்தான். “வா! முதல்ல சாப்பிடுவோம், பசிக்குது போல உனக்கு!” என்று காரை விட்டு இறங்க,

“இதெல்லாம் என்னிடம் கண்டுபிடிக்கும் அளவிற்கு இவனிற்கு என்னைத் தெரியுமா?” என்ற எண்ணம் ஓடியது. வர்ஷினி அப்படியே அமர்ந்திருக்கவும், அவளின் புறம் உள்ள கதவை திறந்து “வா” என,

பிறகு தான் இறங்கினாள். ஈஸ்வர் நடக்க ஆரம்பிக்க, அவனோடு நடக்க ஆரம்பித்தவளுக்கு, அவனின் நடைக்கு ஈடு கொடுப்பது சற்று சிரமமாக இருந்தது. படிகளில் ஏறியவன் ரெஸ்ட்டரன்ட் கதவை திறக்கும் போது திரும்பிப் பார்க்க, அவள் படிகளின் கீழ் இருப்பது தெரிய,

வர்ஷினிக்காக நின்றான். “எதுக்கு இப்படி ஓடி வர்றிங்க?” என்பது போல ஒரு பார்வை பார்க்க,

“நான் ஓடி வரலை! நீ மெதுவா வர்ற! உடல் உழைப்பே இல்லை போல, என்ன பண்ணுவ? காலேஜ் போவ, சாப்பிடுவ, தூங்குவ, அவ்வளவு தானா!” என்றான் சீரியசாக.

நிச்சயம் அதில் கிண்டல் இல்லை அக்கறை மட்டுமே!

“கல்யாணம் முடிஞ்ச உடனே முதல்ல உன்னை ஓட தான் விடணும் போல” என்று சொல்லிக் கொண்டே கதவை திறக்க,

“நான் இன்னும் ஓகே சொல்லலை!” என்றாள் வாய் திறந்து.

“எப்போ சொல்லுவ? ஐ அம் வெயிடிங்!” என்று ஈஸ்வர் புன்னகைக்க.

வர்ஷினியின் முகத்தில் சிறிதும் புன்னகை இல்லை.. அவளின் சீரியஸ்நெஸ் புரிந்து அமைதியானவன், ஒரு டேபிள் பார்த்து அமர்ந்து, அவளைப் பார்க்க, வர்ஷினியின் முகம் தீவிர யோசனையில். அதையும் விட அந்த நீல நிறக் கண்களில் எப்போதும் பார்த்திராத ஒரு தீவிர பாவம்.

அவளைக் கேட்காமலேயே உணவு வகைகளை சொன்னான். வந்ததும் அவள் புறம் நகர்த்தினான். எந்த பாவனையும் வர்ஷினி செய்யாமல் உடனே உண்ண ஆரம்பிக்க, இருவரும் உண்டு முடித்தனர்.

“இப்போ சொல்லு” என

“அப்பா கல்யாணத்துக்கு ரொம்ப வற்புறுத்தறாங்க!” என நிறுத்தினாள்.

ஈஸ்வர் இடையில் பேச முயலவில்லை. சொல்லட்டும் என அமைதியாக அமர்ந்திருந்தான்.

“என்னோட இந்தக் கண் தான் உங்களுக்கு என்கிட்ட ரொம்ப பிடிக்கும். இந்தக் கண் எங்கம்மா கொடுத்தது. ஐ மீன் அவங்க கிட்ட இருந்து வந்தது. எங்கம்மா ஃபோட்டோ பார்க்கறீங்களா?” என சொல்லி, அவளின் அம்மாவின் ஃபோட்டோவைக் காட்ட, பார்த்தவன் அதிர்ந்து வாயடைத்து போனான்.

அவனின் முக பாவனைகளை தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருந்தாள் வர்ஷினி.

பின்பு முதலில் கேட்ட கேள்வி “யாருக்கெல்லாம் தெரியும்?”

“எனக்கும் அப்பாக்கும்”

“கண்டிப்பா முரளிக்கு தெரிஞ்சிருக்காது, அவனுக்கு தெரிஞ்சா என்கிட்ட சொல்லியிருப்பான், அப்போ பத்துக்கும் தெரியாது. கமலம்மாக்கு?” என ஈஸ்வர் கேட்க,

“இல்லை, தெரியாது!” என்றாள்.

பிறகு அவனே “ஆனா கண்டிப்பா உங்க தாத்தாக்கு தெரிஞ்சிருக்கும். உங்கப்பாவோட பெரிய பலமே அவர் தான்! அவர்க்கு தெரியாம இருக்க வாய்ப்பில்லை!” என்றான்.

“தெரியலை, ஆனா என்கிட்டே பேசினது இல்லை”

“ஓகே, இப்போ நீயும் என்கிட்டே பேசலை!” என்றான்.

வர்ஷினி புரியாமல் பார்க்க, “எஸ், இது பத்தி நாம பேசிக்கலை. நீ என்கிட்டே சொல்லலை. அவ்வளவு தான், மறந்துடு! எனக்கு உன்கிட்ட இருக்குற ஒரே ஒரு வேண்டுதல் எப்பவும் யார் கிட்டயும் நீ இதை சொல்லக் கூடாது” என,

அவனை நிராசையோடு பார்த்தாள், கீழாக நினைக்கின்றானோ என, “அம்மா யார்?” என எல்லோரும் கேட்ட போதும், அதை சொல்லாமல் இருந்ததனால் கீழாக பார்த்த போதும்... சொன்னால் இன்னும் கீழாகப் பார்ப்பர் என்பதினால் தான் வாயே திறந்ததில்லை. அதையும் விட அவளுக்கே ஒரு நான்கைந்து வருடமாகத் தான் தெரியும். அதற்கு முன் அவளின் அப்பா சொன்னதேயில்லை.

“எஸ்! சில உண்மைகள் எப்பவும் யாருக்கும் தெரியாம இருக்குறது தான் நல்லது”

“இப்பவும் உங்களுக்கு என்னை பிடிக்குதா?” என்று வர்ஷினி கேட்ட பாவனையில் சிரித்தே விட்டான்.

“என்ன இவன்?” என்பது போல பார்க்க,

சிறிது நேரத்தில் கட்டுக்குள் வந்து “உன்னை பிடிச்சது என்னை மீறி நடந்த ஒன்னு! அதனால எந்த விஷயத்துக்கும் அதை நிறுத்துற சக்தி கிடையாது” என்றான்.

வர்ஷினியின் பார்வை ஒரு நம்பாத தன்மையைக் காட்ட, “அட்லீஸ்ட் இப்போதைக்கு” என்றான் திரும்பவும்.

என்ன மாதிரி உணர்ந்தாள் என்று வரையறுக்க முடியாத ஒரு நிலை. அமைதியாக இருக்கவும்,

“வெல், அப்போ நீ கல்யாணத்துக்கு தயார் இல்லையா?” என்றான் சிறு முறுவலுடன்.

“நான் ஒன்னும் இன்னும் ஓகே சொல்லலை!” என்று சற்று முறுக்க..

“உனக்கு ஓகே இல்லைன்னா, நீ எப்பவும் என்கிட்ட இந்த விஷயம் பேசியிருக்க மாட்ட!”

அதை உணர்ந்தவளும் அமைதியாக இருக்க,

“ஆமாம், எதுக்கு இப்போ என்கிட்டே சொன்ன?”

“என்னை பத்தின எந்த விஷயமும் என்னோட கணவரா வர்றவருக்கு தெரியாம இருக்கக் கூடாதுன்னு நினைச்சேன்” என சொல்ல,

“ஆனா நீ சொல்லியிருக்க வேண்டாம்” என்றான் சீரியசாக.

“ஏன்?” என்பது போல பார்த்தவளிடம்..

“மனசுக்குள்ள உனக்கு ஒரு உறுத்தல் இருக்க வாய்ப்பிருக்கு. எப்போவாவது அதை நான் சொல்லிக் காட்டுவேனொன்னு. அது தேவையில்லை இல்லையா?”

அழுகை வந்தது, கண்களில் நீர் நிறைந்தது.

“ஷ், வர்ஷினி!” என்றவன், “எனக்கு புரியுது, இந்த விஷயம் சொல்றது சுலபம் கிடையாது” என,

முகத்தை ஒற்றை கையினில் புதைத்து அழுகையை கட்டுப் படுத்த முயன்றாள். அணைத்து ஆறுதல் சொல்லத் துடித்த கைகளை கட்டிக் கொண்டான். அப்படி எதுவும் தன்னை மீறி இப்படி ஒரு பொது இடத்தில் செய்து விட்டால் என்ன செய்வது என,

ஆம்! கௌரவம் அவனுக்கு மிகவும் முக்கியமான ஒன்று!

சிறிது நேரத்தில் தேறிக் கொண்டவள், கைகளை எடுத்து, “நீங்க என்னை முதல் முதலா பார்த்த போது ரொம்ப கேவலமா நீ எல்லாம் ஒரு ஆளான்ற மாதிரி பார்த்தீங்க” என,

“எஸ், உண்மை தான்!” என ஒத்துக் கொண்டவன்,

“நீ இவ்வளவு உண்மையா இருக்கும் போது, நானும் உண்மையை ஒரு தடவை சொல்லிடறேன். நீ என்னை ஏதோ ஒரு வகையில ரொம்ப டிஸ்டர்ப் பண்ணின. அங்க இருந்த வரைக்கும் உன் மேல தான் என்னோட பார்வை. என்னால திருப்பவே முடியலை”

“அவரோட பொண்ணுன்னு சொன்னாலும், அம்மா யார்ன்னு சொன்னதில்லை, ரெண்டாவது மனைவிக்கு பிறந்த மாதிரியும் சொன்னதில்லை. அதனால நீ எப்படி என்னை டிஸ்டர்ப் பண்ணலாம்ன்ற ஆணவம். அப்போவும் ஒரு முன்ஜாக்கிரதைக்கு என்னை அண்ணான்னு கூப்பிடு சொன்னேன் நீ கூப்பிடலை.

கூப்பிட்டிருந்தா டிஸ்டன்ஸ் மெயின்டெயின் பண்ணியிருப்பனோ என்னவோ?"

"நான் பொதுவா ரொம்ப ப்ரெஸ்டீஜ் பார்ப்பேன். நான் எனக்கு இவங்க ஈக்குவல் இல்லைன்னு நினைச்சா பேசக்கூட மாட்டேன். சிரிக்கக் கூட மாட்டேன். அதெல்லாம் இன்னும் என்கிட்டே இருக்கு. இப்பவும் இருக்கு. இல்லைன்னு எல்லாம் சொல்ல மாட்டேன்"

"தப்பு தான், இருந்தாலும் ஒரு தடவை சொல்லிக்கறேன்.." என நிறுத்தியவன்,

"உங்கம்மா மாதிரி ஆளுங்க எல்லாம் நான் பார்க்கக் கூட விரும்ப மாட்டேன். என்னோட மரியாதை வட்டத்துக்குள்ள அவங்க வரவே மாட்டாங்க. ஆனா உன்கிட்ட எனக்கு அந்த மாதிரி எதுவுமே தோணலை. நீ இப்போ சொல்லும் போது கூட வெளில அது தெரிஞ்சு உன்னை யாரும் தப்பா பேசிடக் கூடாதுன்ற பயம் மட்டும் தான் இருக்கு"

"உன்னோட இந்த உண்மை எனக்கு உன்னை இன்னும் இன்னும் பிடிக்க வைக்குது" என்றான்.

வர்ஷினி ஒரு உணர்ச்சிக் குவியலாய் எல்லாவற்றையும் கிரகித்து கொண்டிருந்தாள். உள்ளதை உள்ளபடி பேசுகின்றான் எனப் புரிந்தது. ஆனாலும் மனது முழுவதும் ஒரு பயம். தன்னுடைய வாழ்க்கை இவனோடு சரியாக வருமா என..

"உனக்கு எப்போ தெரியும் இது?"

"நான் நைன்த் படிக்கும் போது" என்று சொல்லும் போதே திரும்ப உதடுகள் அழுகையில் பிதுங்கியது. "ஆனா அப்போ கூட எனக்கு அதிகம் தெரியாது. அவங்க இறந்த பிறகு எல்லா நியூஸ்லயும் அவங்க லைஃப் ஹிஸ்டரி வந்த போது தான் தெரியும்"

அந்த வயதில் அவள் அறியக் கூடாத கசப்பான நிதர்சனங்கள்.

"அவங்க நடிகையான பிறகான வாழ்க்கை தான் எல்லோருக்கும் தெரியும்ன்றதால என்னை பத்தி யாருக்கு தெரியலை" என்றாள்.

"இனிமேலும் தெரியவே தெரியாது! யாருக்கும் எப்போவும் தெரியவிடக் கூடாது! தெரிய விடவும் மாட்டேன்!" என்றவன்,

"நீ இனி இந்த உலகத்துல இருக்குற வரை ஈஸ்வரோட மனைவி மட்டும் தான் புரியுதா. என்கிட்டே பேசினது உங்கப்பா கிட்ட கூட

சொல்ல வேண்டாம். எனக்கு தெரியும்னு அவருக்கு தெரியணும்னு எந்த அவசியமும் இல்லை புரியுதா?" என்றான் அதிகாரமான குரலில்.

"சரி" என்று அவள் தலையசைக்க, "வீட்டுக்கு போகலாம்!" என்று உடனே எழுந்து விட்டான்.

வீட்டிற்கு வந்து தனிமையை தேடி ரூமின் உள் அடைந்து கொண்டவள், தன் அம்மாவைப் பற்றி அசை போட.. இவள் பிறந்த பிறகு இவளின் தந்தையோடு தொடர்பு அற்றுப் போன போது திரைத்துறையில் துணை நடிகையாக ஆனவள்.

மிக அழகோடு இருந்ததால், திரைத்துறை கதாநாயகி வாய்ப்பு கொடுக்காவிட்டாலும் கவர்ச்சி நடிகை வாய்ப்பு கொடுக்க, ஒன்றிரண்டு படங்களில் அப்படி தலைக்காட்டியவள் பின்பு இந்தி சினிமா நோக்கி போக, அங்கே ஒன்றிரண்டு படங்களில் நடனம் மட்டும் ஆட, அங்கிருந்த மாஃபியா கும்பலின் துணை தலைவன் ஒருவன் பார்வையில் பட்டு, பின்பு அவனின் ஆசை நாயகியாக சிறை எடுக்கப்பட்டாள்.

பின்பு முழுவதுமாக அவனின் கஸ்டடியில், அது எல்லோருக்குமே தெரிந்த விஷயமாகிப் போனது.

வர்ஷினியை பெற்றெடுத்த பின் பதினான்கு வருடங்கள் இந்த வாழ்க்கையாகிப் போக, பின்பு ஒரு நாள் அந்த துணைத் தலைவன் போலிஸ் என்கௌன்டரில் போடப்பட, இவளும் அர்ரஸ்ட் ஆகும் சூழல் வர, போலிஸ் அரஸ்ட் செய்யும் முன்னே தற்கொலை செய்து கொண்டாள்.

வர்ஷினியின் பதினான்காவது வயதில், அதாவது அவள் ஒன்பதாவது படிக்கும் பொழுது, இறந்த பிறகு தான் வர்ஷினிக்கு தெரியும்.

அது வர்ஷினியின் அம்மாவின் இறுதி வேண்டுகோள் ஆகிப் போக ராஜாராமல் மறுக்க முடியவில்லை. மகளிடம் அவள் அன்னை கொடுத்ததாக ஒரு கடிதத்தை கொடுத்து சொல்லி விட்டார்.

இந்த யோசனைகளில் வர்ஷினி இருக்க, ஷாலினி அவளின் ரூமிற்கு வந்தவள், "ரெடியாகு வர்ஷி, உன்னை ஈஸ்வர் அண்ணா வீட்ல இருந்து பொண்ணு பார்க்க வர்றாங்களாம்!" என,

"என்ன" என, "ஆ..." என்று வாய் பிளந்து நின்றாள். அதன் பின் எல்லாம் எல்லாம் துரித வேகம். யாருக்கும் பிடித்தாலும்,

பிடிக்காவிட்டாலும், சம்மதம் இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஈஸ்வர் எல்லாம் சிறப்பாக நடத்திக் கொண்டான் என்பது தான் உண்மை.

வர்ஷினிக்கு திரும்ப எதையும் சிந்திக்கும் அவகாசம் கொடுக்க வேயில்லை! அவளுக்கு மட்டுமல்ல யாருக்குமே!

**திருமணம் முடிந்தது என்பது வேறு! மணவாழ்க்கை ஆரம்பம் என்பது வேறு!**

## அத்தியாயம் நாற்பத்தி ஒன்பது:

**காலம் எல்லா காயங்களையும் ஆற்றும். ஆனால் வடு இருக்கத் தானே செய்யும்!!!**

பயம் பயம் மனது முழுவதுமே ஒரு பயம் வர்ஷினிக்கு ஈஸ்வரின் வேகத்தை பார்த்து, அப்பா கட்டாயப்படுத்துகின்றாரே என்று திருமணதிற்காக ஈஸ்வரிடம் பேச, அவள் முழுதாக அதற்கு மனதில் தயாராகும் முன்பே அவன் திருமணத்தையே முடித்து விட்டான்.

நம்பக்கூட முடியவில்லை.

அவளிடம் யாரும் கேட்கும் அவசியத்தை ராஜாராமோ ஈஸ்வரோ கொடுக்கவில்லை. இங்கே வீட்டில் ராஜாராம் நான் தான் முடிவெடுத்தேன் என்று விட, அங்கே வீட்டினில் ஈஸ்வரின் முடிவாகிப் போனது.

பெண் பார்க்க வந்து அன்று யார் முகத்திலும் அவ்வளவு செழிப்பு இல்லை. ரஞ்சனியின் மனம் முழுவதிலும் ஐஸ்வர்யா மட்டுமே. முக மலர்ச்சியோடு இருந்தது ஈஸ்வரின் வீட்டினில் ஈஸ்வர் மட்டுமே.

வர்ஷினியின் வீட்டினில் ராஜாராம், கமலம்மா, முரளி, ஷாலினி மலர்ச்சியைக் காட்ட, வர்ஷினி சோர்ந்து தான் தெரிந்தாள். “அதை போடு, இதை கட்டு” என்று ஷாலினி ஒரு வழியாக்கி ஈஸ்வர் வீட்டினர் முன் நிறுத்த, பத்துவோ பார்த்தது பார்த்தபடி இருந்தான்.

இன்னுமே நம்ப முடியவில்லை ஈஸ்வருக்கு எப்படி வர்ஷினியைப் பிடித்தது என்று. இது சரிவருமா என்ற எண்ணம் மட்டுமே! ஆனாலும் நினைத்ததை நடத்தி விட்டானே ஈஸ்வர் என்றும் தோன்றியது. இப்படித்தான் நடக்கும் என்று தெரிந்திருந்தால் ஈஸ்வரோடு தேவையில்லாமல் பிரச்சனைகளை இழுத்து விட்டிருக்க வேண்டாம் என்றும் தோன்றியது. ஒரு மாதிரி குழப்பத்தில் இருந்தான்.

வர்ஷினியை அழைத்து வந்த போது அப்படி என்ன இந்த பெண்ணிடம் இவனுக்கு பிடித்தது என்று வீட்டினரின் பார்வை ஈஸ்வர் மீது மட்டுமே. அழகி தான் இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் அதீத அழகி எல்லாம் கிடையாது.

இன்னுமே குழந்தைத்தனமான முகம், குண்டு கன்னங்கள், சற்று பூசின உடல் வாகு. வந்து நின்றபோது அவளின் முகத்தினில் அவ்வளவு பதட்டம் கூட.

ப்ரணவியும் சரணும் அருகில் சென்ற போது, எப்போதும் ப்ரணவியை தூக்கிக் கொள்ளும் அவள், அன்று தூக்க முயலக் கூட இல்லை.

வர்ஷினியின் முகத்தில் பதட்டத்தினை பார்த்து “பயம் வேண்டாம், நான் இருக்கின்றேன்” என்று ஈஸ்வர் சொல்ல முயல, அவள் அவன் புறம் பார்த்தால் தானே.

யாரையுமே பார்க்கவில்லை.

ஈஸ்வர் பாட்டியிடம் சொல்லி தான் அழைத்து வந்திருந்தான். “எனக்கு அவளை பிடிச்சிருக்கு பாட்டி, சொல்லப் போனா அவளுக்கு இன்னும் என்னை பிடிக்கக் கூட இல்லை. எல்லாம் நல்ல படியா நடத்திக் கொடுக்க வேண்டியது உங்க பொறுப்பு. எதுலயும் எந்தக் குறையும் இருக்கக் கூடாது”

“அவ பிறப்பு நம்ம பழக்க வழக்கம் எல்லாம்” என்று பாட்டி இழுக்க,

“சொல்லிக் குடுங்க பாட்டி கத்துக்குவா, இதுவரைக்கும் ஹாஸ்டல்ல தான் இருந்திருக்கா, இப்போ ஒரு வருஷமா தான் வீட்ல, அதனால எதுவுமே தெரியாது. சொல்லிக் குடுங்க கத்துக்குவா, அதுக்கு நான் பொறுப்பு!” என்றான்.

“ஆனாலும் நம்ம கௌரவம் என்ன, அவங்கப்பாவோட பொண்ணு மட்டும் தானே டா தெரியும். சொத்து ஏதாவது கொடுப்பாங்களா இல்லை கல்யாணம் முடிச்சி அனுப்பிடுவாங்களா”

“ஹய்யோ பாட்டி!” என்றவன், “சொத்தெல்லாம் ஏற்கனவே அவ பேருக்கு அவங்கப்பா எழுதிட்டார். அவங்க கம்பனியோட முதலாளியே இவளும் கமலம்மாவும் தான். இவளுக்கு நிறைய சொத்து, பத்துவை விட முரளியை விட ஏன் நம்மளை விட” என,

“அப்படியா சொல்ற!” என்று யோசிக்க ஆரம்பித்தார். அவரின் யோசனைகளின் முடிவில் எல்லாம் அடிபட்டு போக, அதிகம் யோசிக்கவும் ஈஸ்வர் விடவில்லை. பாதி மனதோடு கிளம்பி வந்தார்.

இப்போது வர்ஷினி ஒரு கலக்கத்தோடு யாரையும் பார்க்காமல் கூட நிற்கவும், பேச்சுக்கள் ஆங்காங்கே ஓடும் போது கூட அமைதியாக நிற்கவும்,

“பொண்ணுக்கு சம்மதமா?” என்று பாட்டி கேட்க, திரும்பி அப்பாவை பார்த்தாள் வர்ஷினி.

“சம்மதம் சொல்லும்மா!” என்று அவர் சொல்லிய விதமே அவளை சொல் என்ற வற்புறுத்தலோடு இருக்க,

“நம்மளும் தான் பார்த்து பார்த்து வளர்த்தோம், எல்லாம் அவங்க அவங்க இஷ்டத்துக்கு பண்ணிக்கிட்டாங்க, இப்போ ஈஸ்வர் கூட அவனா வந்து நிக்கறான்”

“ஆனா இந்தப் பொண்ணு அப்பா முகத்தை பார்க்குது. அப்போ நம்ம பசங்களுக்கு இவ எவ்வளவோ மேல்” என நினைத்தார்.

“சம்மதம்” என வர்ஷினி சொல்லி விட,

“வா! இங்க வா!” என்று பாட்டி பக்கத்தில் உட்கார சொல்ல,

ஈஸ்வர் அதற்குள் வர்ஷினியை பார்த்து ஏதோ சைகை செய்ய அவள் பார்த்தாள் தானே.

“என்னடா விஷ்வா, அவ உன்னை பார்க்கவேயில்லை. இவ்வளவு நேரமா பார்த்து என்ன சொல்ல வர்ற?” என்று பாட்டி போட்டுடைக்க..

அசடு வழிந்தவன், “நமஸ்காரம் செஞ்சு, உங்க கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்க சொன்னேன் பாட்டி!” என,

எல்லோர் முகத்திலும் புன்னகை, பாட்டியிடம் அசடு வழிந்தவன் ரஞ்சனியை பார்த்து முறைத்தான், “அவர்களுக்கு தெரியாது நீ இதெல்லாம் சொல்ல வேண்டாமா” என்பது போல,

ஈஸ்வரின் பார்வையை உணர்ந்து “வா வர்ஷி” என அழைத்து நமஸ்கரிக்க சொன்னவள், பின்னர் பொதுவாக சபையில் விழுந்து ஆசீர்வாதம் வாங்க சொல்ல, ரஞ்சனி சொன்னபடி செய்தாள்.

ராஜாராமின் முகத்திலும், அவரின் அப்பாவின் முகத்திலும் அவ்வளவு திருப்தி. முரளிக்குமே மகிழ்ச்சி தான், ஆனால் ஈஸ்வரை

பற்றி அறிந்தவன் என்பதால் சிறு கலக்கம்.

ஆனாலும் ஈஸ்வரின் மலர்ந்த முகம் அதை மறக்கடித்தது. அன்று இரவு வர்ஷினியை அழைத்து ஈஸ்வர் சொன்ன விஷயம் இதுதான், "நான் எங்கே இருந்தாலும், என் முகத்தை பார்த்துட்டே இருக்கலைன்னாலும், அப்போ, அப்போ பார்க்கணும். அப்போ தான் ஏதாவது உன்கிட்ட சொல்ல முடியும்"

"பார், உன்னை நமஸ்கரிக்க சொன்னேன். நீ என்னை பார்க்கவேயில்லை. அப்புறம் ரஞ்சனி கிட்ட சொல்லி செய்ய வெச்சேன். நமக்குள்ள யாரும் எப்பவும் வர்றதை நான் விரும்பலை. என்னை பார்க்கணும் சரியா" என்றான். அதட்டி இருந்தால் "போடா" என்றிருப்பான். அவனோ குழந்தைக்கு சொல்வது போல சொல்கின்றான். மறுத்து பேச முடியவில்லை.

"சரி" என்று சொல்வதை தவிர வேறு என்ன செய்ய முடியும்.

அன்று ஆரம்பித்தது தான் திருமணம் வரை தொடர்ந்தது. ஆம்! அவனின் முகம் பார்த்து நடக்கக் கற்றுக் கொடுத்தான் என்பது உண்மை. திருமணம் மிகவும் விமரிசையாக நடந்தது. இரண்டு நாட்கள் எந்த சடங்கும் சம்பிரதாயமும் விடாமல்.

ஊரையே அழைத்து தான் திருமணமும் நடந்தது, யாரையும் விடாமல். வந்தவர்களை கவனிக்க யாருக்குமே நேரம் போதவில்லை எனும் போது யாருக்கு முகம் சுணக்க நேரம் இருக்கும். எதற்குமே இல்லை.

ஒவ்வொரு நிமிடமும் தான் ஒரு புது வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கப் போவதை பரிபூரணமாக உணர்ந்தாள் வர்ஷினி. அதுவரை இருந்த மன சஞ்சலம் எல்லாம் திருமணம் நடந்த விதத்தில் மறைந்தே போனது வர்ஷினிக்கு.

கிட்ட தட்ட ஒரு வருட அவகாசம் எடுத்துக் கொண்டாலும், பார்த்த போதேல்லாம் தன்னுடைய தீவிரத்தை ஈஸ்வர் உணர வைத்திருந்தாலும், அவசரப்பட்டு சரி என்று சொல்லி விட்டோமோ என்ற எண்ணம் மனதில் ஒரு பக்கம் இருந்து கொண்டே இருந்தது.

என்னவென்று சொல்ல முடியாத ஒரு பயம் கூட..

ஆனால் திருமணம் நடந்த விதத்தில் எல்லாம் அடிபட்டு போனது!!!

நிச்சயம் முடிந்த அன்று, “ஒரு ஐந்து நிமிடம்” என பேச வந்தவன், “எதுக்கு உன்னோட முகத்துல இவ்வளவு பயம் இவ்வளவு கலக்கம்” என நிறுத்தினான் .

“தெரியலை” என்று சொல்ல,

“ஓகே! உனக்கு தெரியலைன்னாலும் பரவாயில்லை, அடுத்தவங்களுக்கு தெரியக் கூடாது!” என,

“என்ன சொல்ல வருகின்றான்” என்று புரியாமல் பார்த்தவளிடம்,

“முகத்தை சந்தோஷமா வெச்சிக்கோ. இப்படி ஒரு கலக்கம் இருந்தா உன்னை ஆராய்ச்சி செய்வாங்க, எல்லோரையும் முகத்தை பார்த்து பேசணும், சிரிக்கணும், உன்னோட முகத்துல இருக்குற உன்னோட கான்ஃபிடன்ஸ் லெவல், உன்னை பத்தி யாரையும் யோசிக்க விடக் கூடாது! புரியுதா?”

“ம்ம்!” என்பது போல தலையாட்டினாள்.

சொல்லி முடித்து திரும்பி நடக்கத் துவங்கியவன், திரும்ப அருகில் வரவும். “ஒரு ஹக், ஒரு கிஸ், இந்த மாதிரி ஏதாவது..” என்று சின்ன முறுவலோடு இழுக்க..

“ஆங்!” என்று வர்ஷினி விழி விரித்துப் பார்க்க, “அட்லீஸ்ட் இந்த கண் மேல!” என சொல்லி நெருங்க, இன்னும் விழி விரித்தாள்.

மிக அருகில் அவனின் முகத்தை பார்க்கவும், ஒரு பயப் பந்து நெஞ்சில் உருண்டது, அதையும் விட சொல்ல முடியாத ஒரு உணர்வும். கொஞ்சம் புரிந்தாலும் ஈஸ்வர் விடுவதாயில்லை.

“கண் மூடிக்கோ!” என கிசுகிசுப்பாக அவன் குரல் ஒலிக்கவும், தப்பாமல் சொன்னதை செய்ய, அவளை வேறு எங்குமே தொடாமல் அந்த கண்களின் மீது மட்டும் தனித் தனியாக, மென்மையாய் இதழோற்றி எடுக்க, மனம் தடதடத்து.

வர்ஷினியையும் விட ஈஸ்வருக்கு!

“விலகி சென்று விடடா!” என்று மனம் அபாயம் மணி ஒலிக்க விட, உடனே விலகி விட்டான். அவன் விலகியதே தெரியவில்லை, நன்றாக விலகி சிறிது தூரம் சென்றவன், ரோஜா வண்ண பட்டுப் புடவையில் இருந்த அவளை ஆசை தீர ரசித்து “வர்ஷ்! கண் திற!” என,

திறந்து பார்த்தவளிடம்.. “வருகிறேன்” என்பது போல தலையசைத்து, “உன்னோட கலர்க்கும் புடவைக்கும் வித்தியாசமே தெரியலை” என்று சொல்லிச் செல்ல,

“பாராட்டினானா, இல்லை, நன்றாக இல்லை என்று சொன்னானா” என்று புரியவில்லை. ரூமில் இருந்த கண்ணாடியில் பார்க்க, கன்னங்கள் இன்னும் ரோஸ் நிறத்தைக் காட்டின.

அவன் சென்றதும் உள்ளே வந்த ஷாலினி, “ஹப்பா! கல்யாணப் பொண்ணு முகம் இன்னைக்கு தான் பளிச்னு இருக்கு!” என்று சொல்ல,

அதையும் கண்ணாடியில் ஆராய்ந்தாள். பின்னே பெண் பார்க்க வந்த நாளில் இருந்து அவளின் முகத்தில் ஒரு கலகலப்பு இல்லை, அதையும் விட எல்லோரிடமும் பேசும் பேச்சு மிகவும் குறைந்து விட்டது.

அதற்கெல்லாம் இன்று தான் செழிப்பாய் தெரிந்தாள். வர்ஷினியின் ரூமில் இருந்த வந்த ஈஸ்வரை தான் ரஞ்சனி பார்த்துக் கொண்டிருந்தாள். மனதில் ஒரு சிறு உறுத்தலும் இல்லாமல் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கின்றான் என..

ஆம்! ஐஸ்வர்யாவை நினைத்துக் கலக்கம். அதையும் விட பத்துவோடான அவளின் வாழ்க்கை , அன்று அவன் அடித்த பிறகு ரஞ்சனி பேசவேயில்லை. என்னவோ பேசப் பிடிக்கவில்லை. அவசரப்பட்டு விட்டோமோ என்ற எண்ணம் தான்.

உடனே வர்ஷினியின் திருமணமும் வந்து விட்டதால் அப்படி ஒன்றும் பத்துவும் அவளின் பின் சுத்தி சமாதானம் செய்யவில்லை. என்னவோ வாழ்க்கையில் என்ன இனி இருக்கின்றது போல ஒரு வெறுப்பு.

திருமண நிகழ்வுகள் ஆரம்பம் ஆகவும், வர்ஷினிக்கு வேறு எந்த சிந்தனைகளும் இல்லை, முற்றிலும் அதில் ஒன்ற வைத்தான். இரண்டு நாட்களில் மிசஸ் சங்கீத வர்ஷினி விஷ்வேஷ்வரன் ஆகிப் போனாள்.

சடங்குகள் அவனோட சேர்ந்து செய்த போது, அவனோடு வரவேற்பில் நின்ற போது, ஈஸ்வர் வந்தவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்த போது, அவர்களின் பார்வையை நேராக எதிர் கொண்டு, சிறு புன்னகையுடன் அவள் வணக்கம் சொன்ன போது, அவர்களின் பார்வையில் எப்போதும் தெரிவதை விட தெரியும் ஒரு

மரியாதை, உணர்வளவிலும் அவளை திருமதி விஷ்வேஸ்வரனாக உணர வைத்தது என்றால் மிகை கிடையாது.

முகத்திலும் ஓர் ஆழ்ந்த அமைதி ஆர்ப்பாட்டமில்லாத ஒரு அழகு என்று தானாக ஒட்டிக் கொண்டது.

முதல் நாள் ஈஸ்வரை பார்த்த போது எல்லோரும் இவனுக்கு எப்படி இப்படி மரியாதை கொடுக்கின்றார்கள் என்று அவள் வியந்து பார்த்ததை இன்று அவளுக்கும் சேர்த்து கொடுக்க வைத்தான்.

“என்ன இருக்கின்றது இந்தப் பெண்ணிடம் என்று இவ்வளவு பிடிவாதம் பிடிக்கின்றான்” என்று நமஷிவாயமும் மலரும் தங்கள் மகனை பற்றி நினைத்தனர்.

பிடித்தமில்லாத போதும் ஏதோ ஒரு நம்பிக்கை, தவறான ஒன்றையோ, தகுதியில்லாத ஒன்றையோ, ஈஸ்வரின் மனம் விரும்பாது என, அதன் பொருட்டே சம்மதம் தெரிவித்தனர். ஆனாலும் யார் என்ன பேசுவார்களோ என்ற பயம் இருந்து கொண்டே இருக்க, அந்த மாதிரி சலசலப்புகள் ஏதும் இல்லை.

பணம் என்ற ஒன்று எல்லாவற்றையும் மறைத்து விட்டாலும், அதையும் மீறி எல்லாம் சிறப்பாகவே நடந்தது. எந்த சிறு சுணக்கமும் யாரிடமும் இல்லை.

திருமணம் முடிந்தவுடன் கிடைத்த தனிமையில் ஈஸ்வரின் கைகளை பிடித்துக் கொண்டு கண்கள் கலங்கினார் ராஜாராம். “எனக்கு ரொம்ப சந்தோஷம் ஈஸ்வர். என் மகளோட திருமணம் உன்னோட இவ்வளவு சிறப்பா நடந்ததுக்கு!” என,

“எனக்கு தான் ரொம்ப சந்தோசம் ப்பா! நீங்க இவளை எனக்கு கல்யாணம் பண்ணிக் குடுத்ததுக்கு. அதனால தான் என்னால சிறப்பா நடத்திக்க முடிஞ்சது.. இல்லை, வீணா யாரோட சம்மதமும் இல்லாம எல்லோரையும் எதிர்த்து, இவளோட சம்மதமும் இல்லாம, இவளை தூக்கி கல்யாணம் செஞ்சிருந்தா நல்லாவே இருந்திருக்காது!” என சொல்லி வர்ஷினியை பார்த்து “எப்படி” என்பது போல புருவம் உயர்த்த..

முதல் முறையாக உரிமையோடு அவனை முறைத்தாள், “தூக்கியிருப்பீங்களோ என்னை?” என, மனதிலும் “என்ன ஆணவம் இவனுக்கு?” என்று தான் ஓடியது. அது ஒரு ஆச்சர்ய பாவனையோடு தான் ஓடியது. அந்த நிமிடம் எந்த வேண்டாத உணர்வும் இல்லை.

“ஹப்பா! சண்டை போடவாவது என்னோட அட்லாஸ்ட் பேசிட்டியா?” என சீரியசாக சொல்லி, கண்களால் சிரித்தான்.

தானாக ஒரு புன்னகை வர்ஷினியின் முகத்தில் மலர்ந்தது. கூடவே கண்களும் “எப்படியோ என்னுடன் திருமணத்தை நடத்திக் கொண்டு விட்டாய்” என்ற பாவனையைக் காட்ட...

அது ஈஸ்வரை இன்னும் கொள்ளை கொண்டது. இப்படி ஒரு மலர்ந்த புன்னகை அவனை நோக்கி வர்ஷினியிடம் இருந்தது வந்ததே இல்லை.

“இப்படி நீ என்னை பார்த்து சிரிக்கணும்னு தான் உன்னை தூக்கவேயில்லை” என அவளிடம் ரகசியம் பேசி, ராஜாராமிடம் “தேங்க்ஸ் பா” என்றவன்,

திரும்ப தன்னுடைய அப்பாவையும் அம்மாவையும் பார்த்து புன்னகைத்தான்.

அந்த நிமிடத்தில் இரு பெற்றவர்களின் மனமுமே நிறைந்து தான் இருந்தது. யார் மனதிலும் எந்த சுணக்கமும் இல்லை.

ஆனாலும் ஈஸ்வரை கொண்டு வர்ஷினியின் மனதில் ஒரு பயம் இருக்கத் தான் செய்தது. இந்த தீவிரம் எப்போதும் இருக்குமா? அப்படியே இருந்தாலும் இது அதீத தீவிரம் தானே எனத் தோன்றியது.  ஒரு வேளை குறைந்து விட்டால்!

குறைந்து விட்டால் என யோசிக்க வேண்டிய அவசியமென்ன, அதிகமாகிவிட்டால் என யோசி என்று மனம் தெளிவாய் வர்ஷினிக்கு எடுத்துரைத்தது. வாழ்க்கையை நீ அப்படி தான் எதிர்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியது.

ஆனால் அவளுக்கு இன்னும் தெரியவில்லையே முன்பே ஒருத்தியிடம் காதல் சொன்னான் என,

**இதுவும் கடந்து போகும் என நினைத்து எல்லாவற்றையும் கடந்து போக முடியாது!!!**

## அத்தியாயம் ஐம்பது :

**காதலிற்கு கண்ணில்லை என்பது பொய்! காதலிற்கு எதுவுமே இல்லை என்பது தான் உண்மை!  வெட்கமும் அறியாது! மானமும் பாராது!**

வானத்தை வசப்படுத்திவிட்ட ஒரு உணர்வோடு ஈஸ்வர் இருக்க, மாப்பிள்ளையும் பெண்ணும் மாப்பிள்ளை வீட்டிற்கு வந்தனர். தனியாக விடப்பட்ட ஒரு உணர்வில் இன்னுமே தவித்து போனாள் சங்கீத வர்ஷினி.

உண்மையில் ஹாஸ்டல் விட்டால் ராஜாராமின் வீடு, அவ்வளவு தான்! அது தவிர யார் வீட்டிற்குமே சென்றது இல்லை. சென்றாலும் மிஞ்சிப் போனால் அரை நாள் இருந்திருந்தாலே அதிகம். இப்போது இங்கே எனும் போது மறைந்திருந்த கலக்கம் மீண்டு இருந்தது.

அவர்களின் வீடு முழுவதும் உறவினர்கள் கூட, ஈஸ்வர் எல்லோருடனும் வளைத்து வளைத்து பேசிக் கொண்டிருந்தான். பொம்மை போல வர்ஷினி அருகில் அமர்ந்திருந்தாள். யாருடனும் பேசும் மனநிலையில் இல்லை என்பதால் அவள் அமைதியாக அமர்ந்திருக்க அதன் பொருட்டே ஈஸ்வர் எல்லோருடனும் பேசும் கட்டாயத்திற்கு ஆளானான். அமைதியாக தன்னுடைய இந்த சந்தோஷத்தை அனுபவிக்க ஆசைப்பட்டான். ஆனாலும் விடாமல் பேசிக் கொண்டு இருந்தான்.

வர்ஷினி மொட்டு மொட்டு என்று அமர்ந்திருப்பதை பார்த்தான், அவளுடன் பேசவும் முடியவில்லை, “உள்ளே போ!” என்றும் ஈஸ்வரால் சொல்ல முடியவில்லை, பிறகு அது உறவினர்கள் மத்தியில் தப்பாகி விடும். யாராவது வந்து வர்ஷினியை அழைத்து போவார்களா என்று பார்க்க, யாரும் வருவதாயில்லை.

சற்று மனதினில் கோபம் வர ஆரம்பிக்க, முயன்று புன்னகையாய் முகத்தை வைத்து கொண்டிருந்த போது, ரூபா வந்தவள் “விஷ்வா, ஐஸ்வர்யா உன்கூட பேசணுமாம். கல்யாணத்துக்கு விஷ் பண்ண..” என்று சொன்ன போது அவளின் முகத்தில் அவ்வளவு மகிழ்ச்சி.

பின்னே ஒரு வருடமாக பேசாத தங்கை தொலைபேசியில் அழைத்து விட்ட மகிழ்ச்சி.

“என்ன ஐஸ்வர்யாவா?” என்று மனதினுள் அதிர்ந்தான். இப்போது எதற்கு அழைக்கிறாள் என்ற குழப்பம் கூட, “கொடு” என்று வாங்கியவன் சற்று தள்ளிப் போக,

“ஹலோ” என்ற ஈஸ்வரின் குரலைக் கேட்டதும், “கல்யாணமாகிடுச்சு! அதுவும் ரொம்ப நல்லா விமரிசையா நடந்தது! வாழ்த்துக்கள்!” என்றவளின் குரல் எங்கோ இருந்து ஒலிப்பது போல இருந்தது.

ஃபோனை சரியாக வைக்கவில்லை போல என நினைத்து, “ஐஸ்வர்யா ஃபோன் காதுல நல்லா வை!” என,

விசும்பல் ஒலி தான் கேட்டது.

எல்லோரும் அவனை பார்த்திருக்க முகத்தில் உணர்வுகளையும் காட்ட முடியவில்லை, என்ன என்றும் கேட்க முடியவில்லை. எதுவும் முடியவில்லை!

“அண்ணி!” என்று ரூபாவை அழைத்தவன், சரியா கேட்க மாட்டேங்குது, என் ஃபோன்ல இருந்து பேசிக்கறேன்” என்று ஐஸ்வர்யாவிற்கு கேட்குமாறு சொல்லி ஃபோனை வைத்து, ஃபோனை எடுத்துக் கொண்டு தன்னுடைய ரூம் போகப் போனவன்,

அப்போதும் ரூபாவிடம் “வர்ஷியை தனியா விடாதே, என்னோட ரூம்க்கு கூட்டிட்டு போ. நான் வந்ததும் கூப்பிட்டுக்கறேன்” என்று சொல்லி வெளியே செடிகள் இருக்கும் இடத்திற்கு சென்றவன்,

ஐஸ்வர்யாவிற்கு அழைத்தான்.. எடுத்தவுடன் “ஐஸ்வர்யா என்ன பண்ற?” என்று சற்று கடினமாகக் கேட்க,

“என்ன பண்றேன்? வெயிட் பண்ணிட்டே இருந்தேன். நீ வந்திடுவன்னு மனசுல எதோ ஒரு நம்பிக்கை. நீ என்னை விட மாட்டேன்னு... ஆனா நீ வரலை!” என்று மீண்டும் அவள் தேம்ப,

“ஐஸ்வர்யா” என அதட்டியவன், “என்ன பேசற நீ?” என,

“நீ என்னை ஏமாத்திட்ட!” என்று மீண்டும் தேம்ப,

ஐஸ்வர்யாவின் அழுகை மனதை அசைக்க, என்ன பேசுவது என்று தெரியவில்லை, வார்த்தைகள் தொண்டைகுழியில் சிக்கிக் கொண்டன ஈஸ்வருக்கு.

அங்கிருந்த ஒரு சேரில் தலையை பிடித்து அமர்ந்து கொண்டான். அவளின் அழுகை ஒலி தொலைபேசியில் கேட்டுக் கொண்டே இருக்க,

“ஐஸ்வர்யா, இது முடிஞ்சு போன ஒன்னு, முடிஞ்சிடுச்சுன்னு உனக்கும் தெரியும், இப்போ திரும்ப பேசாதே. என்னை விட நல்ல மாப்பிள்ளை உனக்கு கிடைப்பாங்க, உன்னை ரொம்ப லவ் பண்ணுவாங்க, எதிர்காலத்துல நான் உன் கிட்ட லவ் சொன்னதை நீ நினைக்கவே மாட்ட, உனக்கே சிரிப்பா வரும்” என்றான் பொறுமையாக.

“எனக்கு அவங்க எல்லாம் வேண்டாம், நீ தான் வேணும்!”

“ஏய், உளறாதே! எப்பவும் அதுக்கு வாய்பே இல்லை” என கர்ஜித்தான்.

மீண்டும் தேம்பல் ஒலி தான் பதிலாக கிடைத்தது.

“ஐஷ், நீ எந்த வகையிலும் குறைவு கிடையாது, நான் எந்த வகையிலும் பெஸ்ட் கிடையாது. நீயே சொல்ற இல்லையா, நான் உன்னை ஏமாத்திட்டேன்னு. சோ, ஜஸ்ட் லீவ்! ஓகே!”

“நான் அழுதுட்டு இருக்கேன், உன் கல்யாணம் எவ்வளவு கிராண்டா நடந்தது, அதையும் விட உன் முகத்துல எவ்வளவு சந்தோஷம்” என,

“எங்கே பார்த்த நீ” என்றவனிடம்,

“நீதான் அதை லைவ் டெலிகாஸ்ட் பண்ணினயே” என மீண்டும் தேம்ப,

“ஊப்ஸ்!” என்று அவன் செய்த தவறு புரிந்தது. ஆம் இணையதளம் மூலமாக திருமணம் நேரடி ஒளிபரப்பு ஆகி இருந்தது.

“ஐஸ்வர்யா, இதையும் விட உன் கல்யாணம் இன்னும் நல்லா நடக்கும், நான் உன் லைஃப்ல இப்போ எங்கேயும் வரலை. ஏன்னா உனக்கு என் ஞாபகம் வரக் கூடாதுன்னு, ஆனா நீ நல்லா இல்லாம, நான் மட்டும் நல்லா இருக்க முடியாது! புரிஞ்சதா?” என தன்மையாக சொன்னவன்,

“நான் உன்கிட்ட சொன்னது காதல் இல்லை ஐஸ்வர்யா, அது ஜஸ்ட் ஒரு அட்ராக்ஷன்” என நிறுத்தியவன், ஒரு தடவை உண்மை பேசிடறேன், உனக்கு கஷ்டமா இருந்தாலும் கேட்டுடு..” என்றவன்,

“நீ ரொம்ப அழகா இருக்க, நீ டாக்டர், நீ ரொம்ப அமைதியான பொண்ணு, நீ என்னோட மனைவின்னு வெளில காமிக்க நல்லா இருக்கும். இப்படி எல்லாம் எனக்கு தோணினதுனால உன்கிட்ட காதல் சொன்னேன். உன் பின்னாடி சுத்தினேன். சம்மதிக்கவும் வச்சேன். நீ என்னை லவ் பண்ணலை. என்னோட காதலை நீ ஏத்துகிட்ட! அவ்வளவு தான், புரிஞ்சிக்கோ!”

“ஆனா வர்ஷினி கிட்ட, நான் பார்த்தவுடனே தெரிஞ்சது அவளோட குறைகள் மட்டுமே. அவளை உண்மையா நான்

மரியாதையா கூடப் பார்க்கலை.. அதையும் மீறி இப்போ கல்யாணம் முடிச்சிருக்கேன்னா, இது என்னையும் மீறி நடந்த ஒன்னு.. இதுதான் காதலோ என்னவோ?"

"அவ கிட்ட எத்தனை குறைகள் இருந்தாலும் அது என் கண்ணுக்கே தெரியலை! சொல்லப் போனா அழகு அப்படின்னு பார்க்கப் போனா, அவளை விட நீதான் ரொம்ப அழகு! கண் இருக்குற யாருமே இதை தான் சொல்வாங்க! யோசிச்சுப் பார், உன் மேல இருந்தது தான் காதல்ன்னு தப்பா நினைச்சு, நான் கல்யாணம் செஞ்சு, அதுக்கு அப்புறம் எனக்கு இந்த மாதிரி தோணியிருந்தா என்ன ஆகும். வாழ்க்கையில எல்லாமே ரெண்டு பேருக்குமே முடிஞ்சு போயிருக்கும். அதுக்கு இது ஒன்னுமே இல்லை!"

"இனி இந்த மாதிரி பேசாதே! பேசி, நமக்கு மட்டும் தெரிஞ்ச விஷயத்தை எல்லோருக்கும் காமிச்சிக் கொடுத்துடாத. அது உனக்கு நிறைய பாதிப்பு, புரிஞ்சிக்கோ!" என பலதும் பேசி அவளை சமாளித்து, இவன் திரும்பிய போது கிட்ட தட்ட அரைமணிநேரம் கடந்து இருந்தது.

பேச்சின் இடையில், "நீ ரூபாவோட பேசறது இல்லை, ரஞ்சனி கூடவும் பேசறது இல்லை, இந்த வெப் சைட் அட்ரஸ் எல்லாம் எப்படி கிடைச்சது?" என,

"அஸ்வின்! அஸ்வின் கொடுத்தான்!" என,

மனதின் ஓரத்தில் சுருக்கென தைத்தது. "அஸ்வின்! அவனை எப்படி நான் மறந்தேன், இனியும் தொல்லை செய்வானோ? கவனமாக இருக்க வேண்டும்!" என்று மூளையில் செதுக்கினான்.

மனதில் பாரம் ஏறிக் கொள்ள, இருந்த உல்லாசம் எல்லாம் மாயமாய் மறைந்தது. திரும்ப அவன் உள்ளே வந்த போதும் வர்ஷினி அங்கே தான் அமர்ந்திருந்தாள், பிரணவியை மடியில் வைத்தபடி, இவன் உள்ளே வரவும் இவனையே பார்த்தாள்.

"இன்னும் இங்கேயா உட்கார்ந்து இருக்க? அண்ணி ரூம் அழைச்சிட்டுப் போகலை!" என,

"கேட்டாங்க, நான் வேண்டாம் சொல்லிட்டேன்!"

"வா!" என்று அவனாக அழைத்துச் சென்றான்.

ஆனாலும் ஈஸ்வரின் முகம் சீரியசாக இருக்க, அவனையே பார்த்திருந்தவளிடம், "என்ன?" என்பது போல புருவம் மட்டும்

உயர்த்திக் கேட்க,

“ஏன் சீரியஸ் ஆகிட்டீங்க?” என்று கேட்கவும்,

“என்னோட மூட் சேஞ்சஸ் உனக்கு தெரியுதா?” என,

“ஏன் தெரியாம? முதல் நாள் பார்த்ததுல இருந்து தெரியுது!” என அவனை ஆழ்ந்து பார்க்க,

ஈஸ்வரின் மனநிலை நிமிடத்தில் மாறியது. ஐஸ்வர்யாவின் நினைவுகள் பின்னுக்கு போக, அந்த கண்களை எந்த தடைகளும் இல்லாமல் ரசிக்க ஆரம்பித்தான்.

அவனின் மாற்றத்தை ஆச்சர்யமாய் பார்த்தவள், படியேறும் இடமாய் இருக்க, வர்ஷினி வேகமாக மேலே ஏற ஆரம்பித்தாள்.

அவளின் பின்னே ஏறியவன், “அது நம்ம ரூம்” என்று அழைத்துப் போக,

ரூபா கீழிருந்து “எங்கே போறீங்க!” என்றாள். பின்னே அவர்களை பார்த்துக் கொள்ளும் பொறுப்பை வீட்டின் பெரியவர்கள் அவளிடம் தானே விட்டார்கள்.

“ரூப்ஸ், அவளை பாத்ரூம் கூட போக விட மாட்டீங்களா” என மெலிதாய் வாய் அசைத்தான்.

அசடு வழிந்து, “இப்போ தனியா கூட்டிட்டு போகாதே!” என ரூபாவும் அதை போல மெதுவாக சொல்லவும்,

“என்ன?” என்று ஈஸ்வர் புரியாமல் கத்தவும், கடுப்பான ரூபா,

“இப்போ தனியா கூட்டிட்டு போகாதே, இன்னும் இங்க கொஞ்சம் சாங்கியம் பாக்கி இருக்கு” என கத்த, ஆங்காங்கே இருந்தவர்கள் திரும்பிப் பார்த்தனர். இருவருமே அசடு வழிய,

வர்ஷினி லேசாக வெட்கம் எட்டிப் பார்க்க, ரூமின் உள் ஓடியே போனாள்!

ரூபாவை பார்த்து செல்லமாய் தலையில் அடித்து கொண்டு ஈஸ்வர் செல்ல, பார்த்தவர்களிடம் “ரெஸ்ட் ரூம் போறா!” என்றபடி ரூபா நகர்ந்தாள்.

உள்ளே வந்த வர்ஷினியின் முகம் புன்னகையை பூசி இருக்க, கூட உள்ளே வந்த ஈஸ்வர் அதை பார்த்து சிரிக்கவும், “நிஜமாவே

பாத்ரூம் போகணும்” என்று சிரித்தவளை திரும்பவும் பார்க்க ஆரம்பித்தான்.

“அப்பப்ப ஃப்ரீஸ் ஆகிடறீங்க” என்றவளிடம்,

“எஸ்! உன்னை பார்த்தா அப்படி தான்!” என்றவன், “பார்த்த நாள்ல இருந்து உனக்கு என்னோட மூட் சேஞ்சஸ் தெரியுதா?” என்று குறும்பாக வினவியவனிடம்,

“ஏன் தெரியாம? முதல் நாள் உங்களை பார்த்துட்டே இருந்தேன். அதனால தான் நீங்க என்னை அலட்சியமா வேலை செய்யறவங்களை பார்க்கற மாதிரி பார்த்தது தெரிஞ்சது. அடுத்தநாள் நீங்க எங்க வீட்டுக்கு வந்தப்போ, நீங்க சரியா இல்லைன்னு புரிஞ்சது. இளநீர் சாப்பிட சொன்னா என்னவோ கிண்டலா நினைச்சீங்க, அப்புறம் இடிச்சிக்கிட்டீங்க, அவசரமா பீன் பேக் எடுத்துட்டு வந்து உட்கார சொன்னேன். அப்புறம் நான் கார் ட்ரைவ் பண்ணறேன்னு சொல்லி வந்தேன்” என்று எல்லாம் படமாய் விளக்க...

வர்ஷினி சொல்ல சொல்ல, “அழகான காதல் கூட மலர்ந்திருக்கலாம், தான் ஏற்கனவே காதல் சொன்னதால் வர்ஷினியை சரியாக நினைக்காததால் எல்லாம் தவறி விட்டது” என தோன்ற, திரும்பவும் ஃபிரீஸ் ஆகி நின்றான்.

கண்டிப்பாக என்னை மிகவும் கவனித்து இருக்கின்றாள் என்று புரிய ஒரு புன்னகை மலர்ந்தது.

“திரும்பவுமா, அய்யோடா!” என்று நினைத்தவள், அவள் பாட்டிற்கு எங்கே என்று பார்த்து பாத்ரூம் சென்றாள்.

அதற்குள் ஈஸ்வரின் அலைபேசிக்கு ஒரு செய்தி, “சாரி! உன்கிட்ட பேசினது என்னோட இன்னொரு முட்டாள்தனம், என்னவோ உன்னோட கல்யாணம் பார்த்து எமோஷனல் ஆகிட்டேன். ஜஸ்ட் இதை மறந்துடு, என்னை மறந்த மாதிரி!” என்று ஐஸ்வர்யாவிடம் இருந்து வந்தது.

ஈஸ்வருக்கு மனதில் தன் செயலை குறித்து மிகுந்த வெட்கமும் வருத்தமும் இருந்தாலும் அதை காட்ட மனதின்றி, “நானும் நடந்ததுக்கு சாரி!” என்று அனுப்பியவன், அடுத்ததாக “எஸ்! என்னை விட்டு பிரிஞ்ச மாதிரி, இது உன்னோட இன்னொரு புத்திசாலித்தனமான முடிவு!” என்று அனுப்பினான்.

“உன்னோட திமிர் குறையவேயில்லை, ஆனாலும் அதை என்கிட்ட காட்டி, என் வாயை பிடுங்காத! கடவுள் கிட்ட இந்த நொடி கூட நீ நிம்மதியா இருக்கக் கூடாதுன்னு தான் வேண்டறேன், அதை நல்லா இருக்கக் கூடாதுன்னு மாத்திடாத!” என செய்தி அனுப்ப,

“நான் தான் ஏமாத்திட்டேனே, என்னை நினைக்கிறதை விட்டு, முதல்ல எவனையாவது கல்யாணம் பண்ணி செட்டில் ஆகற வழியை பாரு” என்று ஒரு மெசேஜ் கூட அடித்து விட்டவன்,

“ப்ச்! ரொம்ப திமிர் பண்ணாதடா” என நினைத்து, ஃபோனை அணைத்து தூக்கி தூரப் போட்டான். பின் தலையை பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான். “கடவுளே! அவளுக்கு என் நினைவே வராத அளவிற்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து விடு” என்ற வேண்டுதலோடு.

ரெஸ்ட் ரூம் சென்ற வர்ஷினிக்கு கூடவே சில நினைவுகள், “இப்படி ஒரு நாள் தன்னுடன் துணையாக வந்தவன் தானே, உள்ளே வந்த போது அப்படி நடந்து கொண்டான்” என்று மனதினில் ஓட,

“எவ்வளவு பெரிய தவறு? ஆனால் இந்த திருமணம் அதை தவறு என இனி எண்ண வைக்க விடாமல் செய்து விட்டது” என்ற யோசனைகள் ஓட, கூடவே ஒரு வேளை நம்மிடம் சொல்லவில்லை என்றாலும் தன்னிடம் தவறாக நடந்து கொண்டதால் தான் இந்தத் திருமணமா?” என்று மீண்டும் குழம்ப ஆரம்பித்தாள்.

“பின்னே இவன் என்னை விரும்புவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? கொஞ்சம் நல்லவன் போல, அதனால் தவறாக நடந்து விட்டதை சரியாக்கி கொண்டான்” என தான் நினைக்க ஆரம்பித்தாள்.

காதல் என்று எண்ணவே முடியவில்லை!!!

“சரி, ஏதோ ஒன்று அலசி ஆராயாதே, வேண்டாம் என்று நினைத்த போதும், வேண்டும் என்று முடிந்து விட்ட ஒன்று, மனதை குழப்பிக் கொள்ளாதே! ஒரு வேளை நிஜமாகவே காதல் தானோ? அப்படி நினைத்துப்பாறேன்” என மனதை சமாதானம் செய்தாள்.

இன்றல்ல இந்த எண்ணம்! திருமணம் முடிவு செய்த நாளில் இருந்து அப்படி தான். எதையாவது சொல்லி மனதை சமாதானம் செய்து கொண்டிருந்தாள். “அப்படியே நினை! நீ முதல் நாள் பார்த்து வியந்தவனை நினை! நடுவில் நடந்த அனைத்தையும் ஞாபகம் வைக்காதே!” என சொல்லிக் கொண்டு ஒரு புன்னகையோடு கதவை

திறந்து வெளியில் வந்த போது மீண்டும் தலையை பிடித்து அமர்ந்திருந்தான் ஈஸ்வர்.

"இப்போ என்ன ஆச்சு?" என்ற படி வர்ஷினி அருகில் வரவும்..

சட்டென்று என்ன சொல்வது என்று தெரியாமல் ஈஸ்வர் விழிக்கவும், "தலை பிடிச்சிட்டு இருக்கீங்க? தலை வலிக்குதா?" என,

"ரொம்ப இல்லை, லேசா!" என்றான். உண்மையில் லேசாக வலித்தது.

"நான் என்ன பண்ணட்டும்?" என்று அக்கறையாகக் கேட்க,

அந்த கண்களின் பாவனையில் தன்னை தொலைத்தவன், "இங்க ஒரு கிஸ் பண்ணினா போய்டும்!" என்று நெற்றியைக் காட்டி குறும்பாக பேச,

"அதெப்படி போகும் சொல்றீங்க! ஒரு வேலை அதிகமாகிடுச்சுன்னா" என்று பதிலுக்கு அவளும் குறும்பாக பேச,

"டெஸ்ட் பண்ணி பார்த்துடுவோமே!" என ஈஸ்வர் சொன்ன பாவனையில் பெரிதாக மலர்ந்து சிரித்தாள். இப்படி வர்ஷினி சிரித்து ஈஸ்வர் பார்த்ததேயில்லை. குழந்தைகளிடம் கூட இப்படி சிரித்து பார்த்ததில்லை.

சிரிப்போடே "கீழ போகலாம்! டைம் ஆச்சு!" என்று அவள் நகர,

"அது முடியாது... டெஸ்ட் பண்ணாம விடமாட்டேன்!" என்று ஈஸ்வர் அவளின் முன் வர,

"பண்ணுங்களேன்!" என்று வார்த்தையாக சொல்லாமல் கண்களில் அழைப்பு விட்டாள்.

அதை புரிந்தாலும் "நீதான் டெஸ்ட் பண்ணனும்!" என்றான் வாய் வார்த்தையாக. ஆம்! பயமாக இருந்தது. அருகில் நெருங்கினால் அவளை காயப்படுத்தி விடுவோமோ என. நொடியும் நகராது நினைவினில் நின்றவள், அந்த நினைவினில் அவன் செய்யாதது எதுவும் கிடையாது எனும் போது தானாக செல்ல பயமாகத் தான் இருந்தது.

முகத்தை சுருக்கி முடியாது என்ற பாவனையில் நகர்ந்தாள். "நீ நெத்தில டெஸ்ட் பண்ணலைன்னா, நான் வேற இடத்துல பண்ணுவேன்!" என வழி மறித்து ஈஸ்வர் நிற்க..

வர்ஷினியும் சலைக்காது “முடியாது” என்பது போல நிற்க..

“அப்போ உனக்கு வேற இடத்துல வேண்டும் போல” என்று ஈஸ்வர் சொல்ல..

அப்போதும் அசையாமல் நிற்க.. அதையும் விட கண்களில் தெரிந்த பாவனை... அந்த சவால் விடும் பாவனை.. வெறுமனே பார்த்தாலே தன்னை மறப்பவன், இப்படி ஒரு பார்வை எப்படி தாங்குவான். எதிர்கொள்ளவே முடியவில்லை.

“பார்த்த நாள்ல இருந்து கொல்றடி என்னை!” என்று ஈஸ்வரை பிதற்ற வைத்தது. மிக அருகிலும் வரவைத்தது. ஆனாலும் மேலே உரச வில்லை.

ஈஸ்வரின் கண்களின் யாசிப்பு, வர்ஷினியை தானாக சற்று எம்பி நெற்றியில் இதழொற்ற வைத்தது. கண்களை மூடிக் கொண்டான். ஈஸ்வரின் உள் ஓடிய ஒரு உணர்வு, அனுபவிக்க முடியாமல், கண்களை திறந்து வர்ஷினியை பார்த்தான்.

“இன்னும் வேண்டும்! வேண்டும்!” என்ற ஒரு புயல் அடிக்க, “எஸ்! நீ சொன்ன மாதிரி போகலை. இன்னும் வலி ரொம்ப அதிகமாகிடுச்சு. டெஸ்ட் பண்ணியிருக்க வேண்டாம். நீ சரியா தான் சொல்லியிருக்க!” என்று சொன்னவனை விழி விரித்து பார்த்தாள். பின்னே ஈஸ்வர் சொன்ன பாவனையும் அவன் கண்களில் தெரிந்த ஒரு தீவிரமும் என்னவோ ஏதோ வென்று நினைக்க வைத்தது.

அவளின் விழிகளை பார்த்தவன், “இந்தக் கண்ணுக்குள்ள அப்படியே தொலைஞ்சு போகணும்னு இருக்கு, பார்த்த நாள்ல இருந்து! இட்ஸ் கில்லிங் மீ! எப்படி போக?” என்று சொல்லி,

“ப்ளீஸ் டூ சம்திங்!” என வாய் மொழியாக கெஞ்சியவனை கலவரமாக பார்த்தாள்.

ஈஸ்வரின் பார்வையின் தீவிரம் புரிந்து, “எனக்கு என்ன பண்ணனும் தெரியலை?” என,

அவளின் முழு உடலும் உரச நெருங்கி நின்றவன், “நான் சொல்லி தர்றேன்!” என்ற வார்த்தை மொழிய,

என்ன வரப் போகிறதோ என்று நெஞ்சம் படபடக்க நின்றவளை.. கலைத்து களைப்படைய செய்யும் ஆத்திரம் கிளற, முகரத் துடித்த முகத்தினை அவளின் மேல் பதிக்க விடாமல் இருக்க மிகவும் சிரமப் பட்டுப் போனான்.

ஈஸ்வர் தன்னை ஒட்டி நின்றதே, வர்ஷினியின் உள் ஏதேதோ மாற்றங்களை செய்தது.

“என்னை டைட்டா ஹக் பண்ணு!” என்றான்.

அதை இவன் செய்தால் என்ன என்பது போல தான் வர்ஷினி பார்த்தாள். அவளின் பார்வை புரிந்தாலும் அதற்கு பதில் சொல்லாமல், “அப்படியே வலிக்கிற மாதிரி என்னை கிஸ் பண்ணு” எனவும் சொல்ல..

“என்ன சொல்கிறான் இவன்?” என்று இன்னும் கண்களில் கலவரம் ஏற பார்ததவளிடம்,

“முடியாதா? உன்னால முடியாதா?” என கேட்டவன், “அப்போ என்னை கொன்னுடு!” என..

“அம்மா” என வாய் விட்டு சொன்னவள், அவனை அதிர்ந்து பார்த்தாள்.

“பைத்தியம் மாதிரி தோணுதா? ஆனா உண்மை, ரொம்ப கஷ்டப்படறேன். ஏன்னு தெரியலை? ட்ரீட்மென்ட் கூட போனேன். எதுவும் என்னை நிறுத்த முடியலை. இந்த ஒரு வருஷமா எந்த வேலையும் செய்யாம, ஏதோ வேலை செய்யறோம்னு பேர் செஞ்சு, சுத்திட்டு இருக்கேன் வெட்டியா. அதுல வர்ற வருமானம் எல்லாம் எனக்கு ஒன்னுமே இல்லை”

“என்னோட கனவு.. குறிக்கோள் வேற.. ஈஸ்வர்ன்ற பேர் எல்லா இடத்திலும் இருக்கணும்... நான் ஈஸ்வர்ன்ற என்னோட திமிர்.. எல்லாம் எங்க போச்சுன்னே தெரியலை. வாழ்க்கையில எந்த பிரயோஜனமும் இல்லாம இருக்கேன், யாரையும் பார்க்க பிடிக்கலை.. பேச பிடிக்கலை..”

“எல்லாம் உன்னால! நான் மாறிட்டேன்! அது எனக்கு தெரியுது! ஆனா என்ன மாறிட்டேன் தெரியலை! எனக்கு இதுல இருந்து ஒரு விடுதலை உன்னால மட்டும் தான் குடுக்க முடியும்!”

“உன்னோட இந்த கல்யாணம் நடக்கறதுக்காக எல்லோர் கிட்டையும் போராடி.. உன்கிட்ட போராடி.. ப்ச்!” என்று சலித்தான், ஆனால் இம்மியும் அவளை விட்டு நகரவில்லை.

கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டான், எதிலிருந்து தப்பிப்பது, தன்னிடம் இருந்தா? இல்லை எதிரில் நிற்பவளிடம்

இருந்தா? என நினைத்து.. “எனக்கு விடுதலை கொடுப்பாயா?” என்று கண் திறந்து மீண்டும் யாசித்தான்.

அதற்குள் கதவு தட்டும் ஒலி கேட்க, ஈஸ்வரின் முகம் காட்டிய பாவனையில், “விடுதலை நான் கொடுத்தாலும், இவன் ஆக மாட்டான்!” என தான் தோன்றியது.

“அவன் காதலிக்கின்றானா இல்லையா? எதற்கு இந்த திருமணம்?” என்ற எல்லா யோசனையும் பின்னுக்கு போக, முரளியின் திருமணம் முடிந்த மறுநாள் ஈஸ்வர் வந்து நின்ற போது, அதற்கு முதல் நாள் அவள் ஈஸ்வரிடம் சண்டையிட்டு இருந்த போதும்,

“என்ன பிரச்சனை? என்கிட்ட சொல்லுங்க! நான் ஹெல்ப் பண்றேன்!” என்று சொன்ன மனநிலை தான் அப்போது வர்ஷினிக்கு..

அவனை இறுக அணைத்தாள், அதற்குள் “விஷ்வா” என்ற ரூபாவின் குரல் கேட்கவும், “இதுக்கு மேல என்னால ஹக் பண்ண முடியலை!” என சொல்லி, வேகமாக ஒரு இதழ் முத்தம் பதிக்க,

வர்ஷினியிடம் சொல்லிவிட்டாலும், செய்வாள் என்ற நம்பிக்கை சிறிதும் இல்லாமல் இருந்தவன், அவளின் செய்கைகளை வியப்போடு கிரகிக்க முற்பட்டவன், அவள் இதழ் பதித்ததும், அவளை விடாது தன்னுடன் அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

சில நொடிகள் என்றாலும் வர்ஷினிக்கு பட்டாம் பூச்சிகள் பறந்தன, அடி வயிற்றில், கண்களில், மனதில், உடலின் ஒவ்வொரு பாகத்திலும்..

ஒரு புது வித உணர்வு, விடு பட முயன்று முடியாமல், ஒரு நொடி இளகி, அவனையும் இளக வைத்து, அந்த சமயம் அருகில் இருந்த படுக்கையில் அவனை தள்ளினாள்.

அவளை இழுத்து மேலே போட்டுக் கொள்ளும் தீவிரத்தில் பார்த்தவனிடம், “நாம என்ன தனி தீவிலா இருக்கோம், வெளில அக்கா கூப்பிடறாங்க!” என்று சொல்லி,

“நீங்க அப்புறம் வாங்க!” என்று சொல்லி விரைந்து விட்டாள். அந்த நிமிடம் திருமணமானாலும், சிறிய பெண்ணான அவள் இன்னும் பதின் வயதின் இறுதியில் தான் இருந்தாள். ஆனாலும் பெரியவளாகிப் போனாள்.

அவள் சொன்ன தனி தீவு என்ற சொல் மட்டுமே காதில் விழுந்தது, பாக்கி எதுவுமே விழவில்லை, மயக்கம், ஒரு மீள விரும்பா மயக்கம்.

ஒரு பத்து நிமிடம் கழித்து ஈஸ்வர் கீழே இறங்கி வந்த போது, இவனா என்னிடம் பிதற்றியது என்பது போல இருந்தது அவனின் முகம். அந்த கம்பீரம் சிறிதும் குறையவில்லை. இவனா என்னை கொன்று விடு என்றான் என யோசித்தபடி பார்த்திருந்தாள்.

இதற்கு பெயர் என்ன என்று ஆராய முற்பட்ட போதும்.. சற்று கர்வமாக உணர ஆரம்பித்தாள்.

**பித்தனோ! ஸ்திரி லோலனோ! பித்தானதும் உன்னிடமே! ஸ்திரியும் நீயே!!!**

## அத்தியாயம் ஐம்பத்தி ஒன்று :

**நாடகம் முடிந்த பின்னாலும்,**
**நடிப்பின்னும் தொடர்வது என்ன,**
**ஓரங்க வேடம் இனி போதும் பெண்ணே,**
**உயிர் போகும் மட்டும் உன் நினைவே கண்ணே,**

இறங்கி வந்தவனின் முகத்தை சிறிது நேரம் விடாது பார்த்தவளுக்கு தன்னிடம் பேசியது வேறு எவனோ என்ற தோற்றம் தான் தோன்றியது. அவனின் முகம் இறுகி ஒரு கம்பீரம் மீண்டு இருந்தது.

மீண்டும் சடங்குகள், சம்ப்ரதாயங்கள், பேச்சுக்கள் என்று நேரம் ஓடியது. வர்ஷினியின் மனது முழுவதும் ஈஸ்வரை பற்றிய சிந்தனைகளே, “என்னிடம் கெஞ்சி நிற்கின்றானா இவன், முன்பும் பணிந்து பேசியிருகின்றான் தான், ஆனால் அது வேறு இது வேறு அல்லவா?” என ஓடியது.

திருமணம் முடிந்து விட்டது.. அது மனதில் பதிந்து விட்டது.. இனி ஈஸ்வர் தன் வாழ்வில் முக்கியமானவன் எனத் தெரியும். ஆனால் கணவன் உணர்வு அது பதிந்து விட்டதா தெரியவில்லை. அதன் முக்கியத்துவம் தெரியுமா தெரியவில்லை. நிறைய உறவுகளுக்கு மத்தியில் வளரவில்லை. நிறைய உறவுகளை பார்க்கவும் இல்லை. அதன் முக்கியத்துவங்கள் அதனால் அதிகம் தெரிவது கடினமே.

அப்பா என்ற உறவை மட்டுமே அதிகம் அறிந்தவள், பின்பு அம்மா, அண்ணா, தாத்தாவாகிப் போனர்.

உறவுகளை தெரியாவிட்டாலும் மனிதர்களை தெரியும். அதற்குரிய மரியாதை கொடுக்கத் தெரியும். அதன் உணர்வுகளை மதிக்கத் தெரியும். அதன் பொருட்டே ஈஸ்வரிடம் அந்த பிரதிபலிப்பு. அவனின் உணர்வுகளுக்கு கொடுத்த மதிப்பு.

நிறைய உறவுகள் இப்போது அவளை சுற்றி அமர்ந்திருக்க, யாரிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் அமைதியாக அமர்ந்திருந்தாள். ஈஸ்வர் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் யாரிடம் பேசிக் கொண்டு இருந்தாலும் பார்வை அவ்வப்போது வர்ஷினியைத் தழுவி மீண்டது.

அதனால் வர்ஷினி அவனை யோசனையாகப் பார்ப்பதும் தெரிந்தது. “ரொம்ப உளறிட்டேனோ?” என்று மனம் நினைக்க ஆரம்பித்தது.

அதற்குள் பெண்ணின் வீட்டில் இருந்து அவர்களை அழைத்துப் போவதற்காக ரஞ்சனியும் பத்துவும் வந்தனர். திருமணம் முடிந்து மாப்பிள்ளை வீடு தான் போக வேண்டும் அது தான் எங்களின் பழக்கம் என்று அவர்கள் சொல்ல, இங்கே பெண்ணின் வீட்டில் எங்கள் வீட்டிற்கு தான் வரவேண்டும் அது எங்கள் பழக்கம் என்று சொல்ல..

ஒரு வழியாக முதலில் மாப்பிள்ளை வீடு போய் பின் பெண்ணின் வீட்டிற்கு செல்வது. அங்கே ஒரு நாள் இருந்து விட்டு பின் மறுநாள் ஈஸ்வர் வீட்டிற்கு வந்து விடுவது என்று முடிவாக, அதன் பொருட்டே இப்போது ரஞ்சனியும் பத்துவும் வந்திருந்தனர்.

“போகலாமா?” என்று வந்ததும் பத்து கேட்க...

“இது என் வீடு, கொஞ்சம் நேரம் இருந்துட்டு தான் வருவேன்” என்று ரஞ்சனி முறைக்க, வெகு நாட்களுக்கு பிறகு சண்டையிடவாவது உரிமையாகப் பேசுகின்றாள் என தோன்ற, பத்து அமைதியாகிவிட்டான்.

அருகில் வந்த ரூபா, “ரஞ்சி, என்ன இது? எங்க மாப்பிள்ளை சாரை நீ மிரட்டிட்டு இருக்க” என்று பத்துவிற்கு பரிந்து வர,

“பின்ன வந்த உடனே போகலாமா கேட்கறாங்க?”

“விடு, விடு, அவங்க அப்படிக் கேட்கறதால நாம் போயிடுவோமா என்ன? அதுக்காக எல்லாம் நீ மாப்பிள்ளை சாரை மிரட்டக் கூடாது” என்று சொல்லி சூழலை சற்று கலகலப்பாக்கி,

“உனக்கு தெரியுமா. இன்னைக்கு ஐஷ் ஃபோன் பண்ணினா ஈஸ்வர் கல்யாணத்துக்கு விஷ் பண்ண” என,

“என்ன? ஐஷ், ஈஸ்வர்கிட்ட பேசினாளா?” என்று அதிர்ந்த விதத்தில், ரஞ்சனியை பத்து எதற்கு இப்படி அதிருகின்றாள் என சந்தேகமாகப் பார்த்தான்.

அவன் பார்க்க, ரூபா அதைவிடவும் “பேசினா என்ன? எதுக்கு இவ்வளவு ஷாக் ஆகிற?” என கேட்கவே செய்தாள்.

சட்டென்று சமாளித்தாள், “பின்னே, என்னோட எவ்வளவு க்ளோஸ் அவ. ஆனா என்கிட்டே பேசவே இல்லை” என்றாள். சமாளிக்க சொன்னாலும், மனதில் இருந்து தான் அந்த வார்த்தைகள் வந்தன.

“சரியாகிடும்!” என ரூபா அவளைத் தேற்ற, பத்துவை அமர்த்திவிட்டு மற்ற உறவுகளுடன் பேசச் சென்றாள் ரஞ்சனி. ஆனாலும் ஐஸ்வர்யா எதற்கு ஈஸ்வருக்கு அழைத்திருப்பாள் என்ற எண்ணம் தான் ஓடிக் கொண்டிருந்தது.

ஈஸ்வரை பார்த்தவுடனே மெதுவாக அவனுக்கு மட்டும் கேட்குமாறு “எதுக்கு விஷ்வா ஐஸ்வர்யா கூப்பிட்டு இருந்தா?” எனக் கேட்க,

அதற்குள் இவளுக்கு எப்படி தெரிந்தது என நினைத்து “உனக்கு யாரு சொன்னா?” என..

“ரூபா அண்ணி” என்றவளிடம்,

“விஷ் பண்ணக் கூப்பிட்டா!” என்றான், என்ன சொல்வது என்று தெரியாமல்..

அவனின் பாவனையைப் பார்த்து “நீ பொய் சொல்ற?” என,

“தெரியுதுல்ல, அப்புறம் எதுக்கு கேட்கற? எல்லாம் எல்லார் கிட்டயும் சொல்ல முடியாது! புரிஞ்சதா?” என்று வார்த்தைகளை கடித்துத் துப்ப,

தூரமாக இருந்து பத்து பார்த்துக் கொண்டு இருந்தவனுக்கு ஏதோ ரஞ்சனி கேட்பதும், அதற்கு ஈஸ்வர் திட்டுவது போலவும் தான்

தோன்றியது.

ரஞ்சனிக்கு ஈஸ்வர் பேசிய விதத்தில் கண்களில் இருந்து வேகமாக நீர் இறங்க, யாரும் அறியா வண்ணம் கண்களை துடைத்த படி இடத்தை விட்டுப் போக.. அதை பார்த்த பத்துவிற்கு கோபம் கனன்ற ஆரம்பித்தது. “எவ்வளவு தான் பார்த்துக்கிட்டாலும், அவ அண்ணன் கிட்ட தான் போறா! அவன் சொல்றதை தான் செய்யறா! இப்படி திட்டு வாங்கி அழறா!”

ரஞ்சனி அழுவதை பார்த்ததும் ஈஸ்வர் இன்னும் திட்டினான், “பலதடவை சொல்லிட்டேன், இதை பத்தி பேசாதேன்னு! நீயா வந்து பேசற. அப்புறம் நீயா அழற. உனக்கும் இதுக்கும் என்ன? என்ன பண்ணியிருந்தாலும் அது நான்தானே, நீ எதுக்கு இப்படி ஃபீல் பண்றன்னு புரியவேயில்லை” என அடிக்குரலில் சீற,

ரஞ்சனிக்கு இன்னும் அழுகை வர, வேகமாக மேலே தன்னுடைய அறைக்கு சென்றுவிட்டாள்.

ஈஸ்வர் சமாதானம் செய்ய பின்னே செல்ல நினைத்தாலும் அதற்குள் யாரோ அவனை பேசப் பிடித்துக் கொள்ள, அவனால் நகர முடியவில்லை.

சில நிமிடங்களிலேயே சமன்பட்டு ரஞ்சனி கீழே வந்து விட்டவள், “பாட்டி, அழைச்சிட்டு போகலாமா?” என்று சௌந்தரி பாட்டியிடம் கேட்க,

“என்னடிம்மா கதையா இருக்கு, வந்து பத்து நிமிஷம் தான் ஆச்சு.. நீ இன்னும் எதுவும் சாப்பிடக் கூட இல்லை.. உன் வீட்டுக்காரர் காஃபி குடுத்தா கூட குடிக்க மாட்டேங்கறார் ரஞ்சனி வரட்டும் சொல்றார், இரு சின்னதா டிஃபன் செய்ய சொல்லியிருக்கேன். அதை சாப்பிட்டு தான் கூட்டிட்டு போகணும். வா, முதல்ல உன் வீட்டுக்காரரை பார்!” என்று பத்துவிடம் அழைத்துப் போக,

“பாட்டி! என்னால சாப்பிட முடியாது!” என்று ரஞ்சனி சலிப்பாக சொல்ல,

“பாருங்க! உங்க வீட்டுக்காரம்மா சாப்பிட மாட்டேங்கறா, இப்போவே கல்யாணம் ஆகி ஒரு வருஷம் ஆகிடுச்சு, குழந்தை தாங்கற அளவுக்கு சத்து வேண்டாமா! நான் குடுக்கறதை சாப்பிடாம நீங்க ரெண்டு பேரும் இடத்தை விட்டு அசையக் கூடாது! அப்புறம் மாப்பிள்ளை பொண்ணை அனுப்ப மாட்டோம்” என்று கடிந்தவர்..

“ரூபா!” என்று அவளுக்கு குரல் கொடுக்க..

“என்னை குடுக்க சொன்னாங்க பாட்டி!” என்று வர்ஷினி அதை தூக்கிக் கொண்டு வந்தாள்.

ஆம்! பத்துவும் ரஞ்சனியும் வந்தவுடனே மலர் வர்ஷினியை உள்ளே அழைத்துக் கொண்டு சென்று, “அவர்களுக்கு நீ கொண்டு போய் கொடு!” என்று சொல்ல,

வர்ஷினிக்கு தலையும் புரியவில்லை வாலும் புரியவில்லை, “என்ன கொண்டு போய் கொடுக்கணும்?” என,

“என்ன கொண்டு போய் கொடுக்கணும் கேட்கக் கூடாது! என்ன கொண்டு போய் கொடுக்கணும் அத்தைனு கேட்கணும்!” என்றவர், யாரை எப்படி அழைக்க வேண்டும் என்று ஒரு மினி கிளாஸ் எடுத்து, அவளிடம் டிஃபன் வகைகளை கொடுத்து விட்டார்.

எது எப்படியோ திருமணம் நடந்து விட்டது, இனி வர்ஷினி தங்கள் வீட்டுப் பெண், அவளுக்கு தங்கள் பழக்க வழக்கங்களை சொல்லிக் கொடுத்து யாரும் எந்த குறையும் சொல்ல முடியாதபடி அவளை மாற்றி விட வேண்டும் என்ற முடிவுடன் இருந்தார்.

அதன் பொருட்டு அவளிடம் கொடுத்து விட, தழைய தழைய கட்டிய புடவையில் நடப்பதற்கு சற்று சிரமமாய் இருக்க.. மெல்ல அடிமேல் அடி எடுத்து வைத்து, கையில் இருப்பதை கெட்டியாக அவள் பிடித்துக் கொண்டு ஸ்ரத்தையோடு நடந்து வந்த விதம் பார்த்த ஈஸ்வருக்கு புன்னகையை வரவழைத்தது.

அந்த நிமிடம் பிரணவியின் கையினில் ஒரு பொருளை கொடுத்தால், அவள் எப்படி எடுத்து வருவாளோ அந்த தோற்றம் தான். அந்த நொடி ஈஸ்வரிடம் எந்த மாயையும் இல்லை.. சில நிமிடத்துளிகளுக்கு முன் வர்ஷினியிடம் பேசிய பேச்சுக்களுக்கும் நடந்து கொண்ட முறைக்கும் நேர் மாறான மனநிலை.

பாட்டியின் அருகில் அவள் நிற்க.. பத்து அப்போது தான் வர்ஷினியை பார்த்தவனாக “கொடு” என்று எழுந்து அவளின் கையினில் இருந்ததை வாங்கி கீழே இருந்த மேசை மேல் வைத்தான்.

பத்து வாங்கினாலும் அவனின் முகத்தில் ஒரு உற்சாகமின்மை தெரிய, கேள்வியாக அவனை நோக்கினாள் வர்ஷினி. பத்து எப்போதும் அமைதி தான், ஆனால் அதையும் மீறி ஒன்று குறைந்தது.

தன்னையும் மீறி “அண்ணா ஏன் டல்லா இருக்கீங்க?” என கேட்டு விட,

அங்கிருந்த எல்லோருக்குமே கேட்டது. ஈஸ்வர் அப்போது தான் அவர்களை நெருங்கியிருந்தான் அவனுக்கும் கேட்டது.

என்ன சொல்வது என்று தெரியாமல் அவனும் “லேசா தலைவலி” என,

“என்ன அண்ணா? இன்னைக்கு தலைவலிடே வா, இப்போ இவங்க கூட சொன்னாங்க!” என சகஜமாக ஈஸ்வரை காட்டவும்,

“அடுத்தவங்களுக்கு தலைவலி கொடுக்கறது தானே இவனோட வேலை! இவனுக்கு எப்படி தலைவலி வரும்!” என்பது போல ஈஸ்வரை பத்து பார்க்க,

ஈஸ்வர் ரஞ்சனியை பார்த்து நேரடியாக முறைத்தான், “இவரை பார்க்கறதை விட்டு தேவையில்லாத எல்லாம் பார்ப்ப நீ!” என வாய் விட்டு அவளுக்கு மட்டும் கேட்குமாறு பேசியவன், “பேசிட்டு இருந்தா காஃபியே ஆறிடும் வர்ஷி. அவருக்கு சூடா எடுத்துக் கொடு” என,

வர்ஷினி எடுத்துக் கொடுக்கும் முன் ரஞ்சனி எடுத்துக் கொடுக்கவும் கையினில் வாங்கிக் கொண்டான் பத்து, பின்பு சிறிது நேரம் இருந்து அளவளாவி.. மணமக்களை அழைத்துக் கொண்டு கிளம்ப..

பத்து ரஞ்சனியின் முகங்களை பார்த்து ஈஸ்வரின் உற்சாகம் குறைந்து விட்டது என்பது தான் நிஜம். அவர்களை தான் பார்த்து இருந்தான். கூடவே “முட்டாள் பசங்க” என்று தோன்ற எரிச்சலாகவும் வந்தது.

ராஜாராமின் வீடு வரவுமே வாசலிலேயே தாஸ் நின்றிருந்தான்.. பார்த்த ஈஸ்வருக்கு புன்னகை. வீட்டினரை விட அவனின் முகத்தில் தொணித்த கவலை தான் அதிகம்.

“இன்னும் விளையாட்டுப் பொண்ணுங்க, எதுவும் தெரியலைன்னாலும் சொல்லிக் குடுங்க.. கூடவே எதுவுமே தெரியாது” என்று மலரிடமே போய் சொல்லி நின்றான்.

இப்போதும் வாசலில் நிற்க... “உன் தாசண்ணா பாரு, அவன் பண்றது தாங்க முடியலை” என்று வர்ஷினியிடம் சொல்ல,

வர்ஷினி இறங்கியவள் சிறிது நேரம் அவனோடு பேசி தான் வந்தாள். அதுவரை ஈஸ்வர் வாயிலில் நிற்க, “நீங்க உள்ள போங்க!” என்று சைகை செய்ய..

“நீ வா” என்று சைகை காட்டியபடி நின்றான். அதை பார்த்து “நீங்க போங்கன்னு சொன்னேனே” என

“ரெண்டு பேரும் சேர்ந்து தான் போகணும்” என்று அவளுக்கு சொல்லிக் கொடுக்க, அதற்குள் ஷாலினி ஆராத்தியோடு வாயிலுக்கு வர.. பின்பே உள்ளே சென்றனர்.

இதையெல்லாம் ஹாலில் அமர்ந்தபடி ராஜாராம் பார்த்திருந்தார். அவருக்கு மனதிற்கு மிகவும் திருப்தியாக இருந்தது. ஒரு வகையில் வற்புறுத்தி தான் இந்த திருமணம் என்பதால் சிறு சஞ்சலம் இருந்தது, வர்ஷினி எப்படி நடந்து கொள்வாளோ என..

தன் பெண் எப்போதுமே வயதிற்கு மீறிய பக்குவத்துடன் இருக்கின்றாள் என்று தெரியும். இப்போது அதையும் விட அதிகம் என்று தோன்றியது. எந்த கவலையையும் முகத்தினில் காட்டவில்லை. எல்லோரிடமும் நன்றாகவே நடந்தாள், அதையும் விட ஈஸ்வரிடம் நன்றாக நடந்தாள் என்று பார்த்த போதே தெரிந்தது.

ஈஸ்வர் சொல்வதை கேட்டாள், செய்தாள், மறுத்து எதுவுமே பேசவில்லை. ஒரு சுமுக பாவம் ஏற்படுத்திக் கொண்டாள் என புரிந்தது. திருமணத்திற்கு சரி என்று விட்ட போதும் மனது முழுவதும் ஒரு சஞ்சலதுடனே இருந்தாள். பேசிப் பேசிப் கரைத்திருந்தார் ராஜாராம்.

இப்போது மகளைப் பார்க்கவும் அவளின் முகம் தெளிவாக இருந்தது புரிந்தது.

அமர்ந்திருந்த அவரைப் பார்த்து வர்ஷினி புன்னகைத்த விதத்திலேயே வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள தயாராகி விட்டாள் என புரிந்தது.

அவரும் பதிலுக்கு புன்னகைக்க, “என்னபா செய்யுது?” என்றாள் உடனே.

“என்ன பண்ணினாலும் இனிமே எனக்கு கவலை இல்லைம்மா.. இனி நிம்மதியா போவேன்!” என,

“ப்பா, என்ன பேசறீங்க?” என்று கடிந்தவள், “கமலம்மா ஏன் அப்பா டல்லா இருக்கார்?” என கேட்டு,

“இன்னைக்கு எல்லோர் கிட்டயும் இந்த கேள்வி தான் நான் மாத்தி மாத்தி கேட்கறேன். “இவர் கிட்ட, பத்துண்ணா கிட்ட, இப்போ அப்பா கிட்ட கேட்கறேன். ஒரு வேலை என் கண்ணுல தான் பிரச்சனையோ” என,

“இவ கண்ணில் பிரச்சனையா? எதுக்கு இப்போ கண்ணை இழுக்குறா?” என்று ஈஸ்வரின் மனம் சுணங்கியது.

“இல்லை வர்ஷினி, அப்பாக்கு கல்யாண அலைச்சல், டல்லா தான் இருக்கார்” என்ற கமலம்மா மகனிடம் பார்வையை செலுத்த,

“நான் நல்லா தான்மா இருக்கேன். லேசா தலைவலிச்சது, அவங்க வீட்ல வர்ஷினி காஃபி கொண்டு வந்து கொடுத்தாளா, போயிடுச்சு!” என்று புன்னகைக்க..

“நான் கொண்டு தான் வந்தேன், எடுத்து கொடுத்தது அண்ணி” என்று வர்ஷினி ரஞ்சனியை பார்த்து முறுவலிக்க..

அதுதானே வர்ஷினிக்கு இருக்குற அறிவு கூட அவ அண்ணனுக்கு இல்லையே என்று தான் ஈஸ்வர் பத்துவின் மீது பார்வையை ஓட்டினான். பின்பு ரஞ்சனியிடம் அதே பார்வையை செலுத்த..

ரஞ்சனி ஈஸ்வரின் எண்ணப் போக்கை புரிந்தவளாக.. “எல்லோரும் உன்னை மாதிரியே தலை குப்புற விழ மாட்டாங்க” என்று பதில் பார்வை பார்த்து,

“ஹச்சோ! ஒரே நாள்ல நீ பெரிய பொண்ணு ஆகிட்டியே, எல்லாம் கண்டு பிடிக்கிற” என்று வர்ஷினியை பார்த்து புன்னகையுடன் கூற..

“என்னை கிண்டல் பண்றீங்க!” என்று முகத்தை சுருக்கி வர்ஷினி அழகு காட்டிய விதத்தில், ஈஸ்வர் முகத்தில் எந்த உணர்வுகளையும் காட்டாமல் இருக்க பெரும் முயற்சி எடுத்தான்.

ஆம்! இனிமேல் அவளின் அருகில் தான் இருக்கப் போகின்றான், ஆதலால், முகத்தினில் எதையும் காட்டாமல் இருக்க பழக வேண்டும் என்று தோன்ற ஆரம்பித்தது. பின்னே அவன் வழிவது அவனுக்கு மட்டும் தெரிந்தால் போதும் என்ற எண்ணம் தான்.

ஆனால் ஈஸ்வருக்கு தெரியவில்லை அவன் வர்ஷினியை கவனிப்பது போல அவளும் இவனை கவனிப்பாள் என..

இவனா என்னிடம் அப்படி நடந்து கொண்டான்.. இப்போது பார்வையில் அதைப் போல எதுவும் தெரியவில்லையே என்ற குழப்பம் தான் அவளின் மனதினில்.

பின்பு அங்கிருந்த அவர்களின் நெருங்கிய உறவினர்களை ஈஸ்வருக்கு மீண்டும் முரளி அறிமுகப்படுத்த.. “தெரியும்டா! நாம எத்தனை வருஷமா ஃபிரண்ட்ஸ்” என,

“உனக்கு தெரியும்! ஆனா அவங்களுக்கு தெரியலைன்னா!” என சொல்லி, அவனை எல்லோருடனும் சிறிது நேரம் பேச வைத்த பிறகே விட்டான்.

உணவு நேரம் ஆகிவிட.. மாப்பிள்ளை பெண்ணை உணவு உண்ணச் செய்து, நலங்கு வைத்து தனிமையில் விட..

அவர்களின் வீடு என்றாலாவது பரவாயில்லை, வர்ஷினியின் வீடு, ஈஸ்வருக்கு மிகவும் சங்கோஜமாக இருந்தது. ரூம் வந்ததும் “ஷப்பா” என்று மூச்சு விட்டு அமர்ந்தவன் .. “நிஜமாவே பொண்ணுங்களுக்கு புது இடத்துல அடாப்ட் ஆகறது ரொம்ப கஷ்டம்” என்று வர்ஷினியை பார்த்து புன்னகைத்தான்.

“எஸ்” என்று வர்ஷினி கையை கட்டி பதில் சொன்ன விதத்தில்... அவளை ரசித்து பார்த்தான். அவளின் கண்களை எந்த தடையும் இல்லாமல் பார்த்திருக்க..

அவன் பார்த்த விதத்தில் “என்ன பார்க்கறீங்க?” என,

“உன் கண்ணை”

“என்ன தான் இருக்கு என் கண்ல”

“அதை தான் கண்டு பிடிக்கணும்” என புன்னகைக்க,

“எப்படி கண்டுபிடிப்பீங்க”

“எப்படி கண்டு பிடிக்கணும்னு அதையும் கண்டு பிடிக்கணும்” என,

“ஷ்.. பா முடியலை” என்றவளை பார்த்து.. “நாளைக்கு நம்ம சிங்கப்பூர் போகலாமா.. ஒரு டென் டேஸ் இருந்துட்டு வரலாமா?” என்றான்.

“ஆங்” என்றவள், “எதுக்கு?” என,

“இதுக்கு பேரு எங்க ஊர்ல ஹனி மூன் சொல்லுவாங்க”

“ஓஹ், அப்படியா! அப்போ எங்க ஊர்ல என்ன சொல்லுவாங்க” என பதில் கேள்வி கேட்க..

அவளின் இந்த இயல்பான பதிலில் பெரிதாக முறுவல் மலர... “தெரியலை அதையும் கண்டுபிடிக்கலாம்” என்றவன்,

அவளின் கண்களை விட்டு அவளின் உடையை ஆராய்ந்தான். அவன் வெண்பட்டு வேஷ்டி சட்டையில் தான் அவனின் வீட்டினில் வந்ததில் இருந்து இருந்தான்.

“விஷ்வா குளிச்சி டிரஸ் சேஞ் பண்ண சொன்னாங்க?” என்று ரஞ்சனி சொன்ன போது,

“நான் வீட்ல இருந்து வரும் போது குளிச்சு டிரஸ் மாத்தினேன்” என்று ஒரு காரணம் சொல்லி விட்டிருந்தான். உண்மையில் குளிக்கவெல்லாம் இல்லை..

“நான் டல்லாக இருக்கிறேனோ அவள் முன்னால்.. என தோன்றி, வெண்பட்டு புடவையில் இருந்தவளை பார்த்திருக்க..

அவனின் பார்வையை பார்த்து, ஏதாவது வேணுமா என்றவளிடம் “குளிக்கணும்” என்றா சொல்ல முடியும்.. ஒன்றுமில்லை என்பது போல தலையாட்டினான். ஒரு பெரும் தயக்கம் அவனுள் வந்து அமர்ந்திருந்தது.  நான் ஈஸ்வர் என்ற கர்வம் எங்கே தொலைந்தது அவனிடம் என்று தெரியவில்லை

**இருவிழி உனது இமைகளும் உனது கனவுகள் மட்டும் எனதே எனது!!!**

## அத்தியாயம் ஐம்பத்தி இரண்டு :

**தயக்கத்தின் காரணம் மயக்கம்!**

“ஆம்! ஒரு மயக்கம், அதற்காக ஒரு திருமணம்.. இதுவா நீ?” என்ற கேள்வி அவனின் முன் பூதாகரமாய் நின்றது. ஆம்! அதுவரை திருமணம் மட்டுமே மனதில். இப்போது “நீ! உன் பிறப்பு! உன் வளர்ப்பு! இதனைக் கொண்டா?” என போராட ஆரம்பித்தது.

ஆம்! கையினில் கிட்ட வேண்டும் என நினைத்து, கிட்டச் செய்து, கிட்டிய பின் ஒரு சுய அலசல்.. அதுவரை இல்லாத அலசல்.. அதற்கு முன்னும் அலசியிருக்கின்றான் தான். ஆனால் இப்போது இது வேறு!

வேண்டும், வேண்டும்! ஆம், வேண்டும் என நினைத்து.. தன்னை மீறி பறிக்க முற்பட்டு.. முடியாமல்.. இப்போது திருமணத்தால் உனக்கு தான் என கொடுக்கப்பட்டு.. அதற்கு ஒரு தனிமையும் கொடுத்து.. அது இருவருக்கும் தெரிந்து.. இருந்த போதும்.. ஒரு தயக்கம்!

இதனைக் கொண்டே அவனுக்குள் இத்தனை போராட்டங்கள் இந்த ஒரு வருடத்திற்கும் மேலாக.. ஆனால் தடைகள் இல்லை எனும் போது.. சில மணிநேரங்களுக்கு முன் அவள் முன் பித்தனாகி பிதற்றிய போதும்.. வேண்டி நின்ற போதும்.. இப்போதும் கசக்கி முகரும் ஆத்திரங்கள் அவனுள் ஆக்ரோஷமாய் கிளர்ந்து எழுந்த போதும்..

எங்கோ இருந்த அவனின் ஆழ்மனம் அவனிடம் கேள்வி கேட்டது!

இதற்காக ஒரு திருமணத்தையே நடத்திக் கொண்டிருக்கின்றாயே சரியா என. அப்போது உன்னை கவரும் அம்சங்கள் அவளிடம் இல்லாத போது விட்டு விடுவாயா? நீச்சனாகிப் போனாயா நீ என..

அவனின் ஆழ் மனதின் சக்தி அவனை அவனுள் சுழற்றி அடிக்க.. கேள்விகள் மனம் முழுவதும் தாக்க.. அவளையே பார்த்து இருந்தவன்.. தன்னையும் மீறி தலையை உலுக்கி வேகமாக எழுந்த விதத்தில்..

ஈஸ்வரையே பார்த்திருந்த வர்ஷினி பயந்து போனாள், “என்ன ஆச்சு?” என்றும் உடனே கேட்க..

“ஒன்னுமில்லை!” என்றவன், அப்படியே திரும்ப அமர்ந்தான்.

“இல்லை! எனக்கு மயக்கமெல்லாம் இல்லை! மயக்கதிற்காக எல்லாம் திருமணம் செய்பவன் நான் இல்லை.. இது அது அல்ல.. ஒரு வேளை இதுதான் காதலோ? முன்பே காதல் சொன்னதால் இதை என்னால் பகுத்தறிய முடியவில்லையோ?” என யோசனைகள் ஓடும் போதே,

அவன் ஒன்றுமில்லை என்ற போதும் அருகினில் வந்தவள்.. “என்ன ஆச்சு?” என்றாள் கவலையாக..

அவளின் பாவனையைப் பார்த்து புன்னகைத்தவன், மீண்டும் ஒன்றுமில்லை என சொல்லி, “எனக்கு குளிக்கணும்! அதுக்கு தான் அப்படி எழுந்தேன்!” என்றான்.

நம்பாத பார்வை பார்த்தவள், “போங்க, குளிங்க!” என்று சொல்லி.. அறையில் இருந்த டீ வீ யை உயிர்ப்பித்து அமர்ந்தாள்.

“நீ நல்லவனா கெட்டவனான்னு முதல்ல முடிவு பண்ணுடா ஈஸ்வரா” என்று அவனுக்கு அவனே சொல்லிக் கொண்டு குளிக்க சென்றவன்,

“எனக்கு டவல்” என, “தோ, அங்க இருக்கு!” என அவளின் கபோர்டை காட்ட,

“காட்ட கூடாது! நீ வந்து எடுத்துக் கொடுக்கணும், இதெல்லாம் ஒரு மனைவி கணவனுக்கு செய்வாங்க!” என சொல்லி வேறு கொடுக்க..

எழுந்து வந்தவள் “வேற என்ன என்ன செய்யணும் லிஸ்ட் கொடுத்துடுங்க ஞாபகம் வெச்சிக்கறேன்!” என,

இவள் விளையாடுகின்றாளா என பார்த்தான்.. இல்லை! இல்லவே இல்லை! அவளின் முகம் சீரியசாக இருந்தது. உண்மையாக உணர்ந்து கேட்கிறாள் என புரிந்தவன்..

“நான் சும்மா உன்னை கலாட்டா பண்ண சொன்னேன்.. இது என்ன வேலையா லிஸ்ட் கொடுக்க.. அப்படி எல்லாம் இல்லை.. நீயா என் பக்கத்துல வரணும்னு சொன்னேன்!” என,

“அதுதான் வந்தேனே, நீங்க சொன்னதும் செஞ்சேனே”

“என்ன செஞ்சே?” என்றான் சட்டென்று ஞாபகம் வர பெறாமல்..

“அது” என்று சில நொடி தயங்கியவள்... “அது தான் ஹக் பண்ணினேன், கிஸ் பண்ணினேன்!” என தயங்கி சொல்ல..

“ஷ்!” என அவனின் தலையை அவனே தட்டிக் கொண்டான். “ஐயோ! இதற்கா திருமணம் என நான் யோசித்தது போல, இதற்கு தான் திருமணம்!” என அவளை நினைக்க வைத்து விட்டேனா என மனதில் நொந்து கொண்டவன்.

“கல்யாணமானதுனால நான் இதை உன்கிட்ட உரிமையா கேட்கறேன்னாலும், இதுக்காக மட்டும் கல்யாணம் கிடையாது!” என்றான்.

“நீ கேட்டே இல்லையா உனக்காக உன் பின்னாடியே சுத்தற ஒருத்தன் தான் வேணும்னு, அந்த மாதிரி உனக்கு என்னை பார்த்தா இன்னும் கூடவா தோணலை.. அந்த கட்டிப் பிடிச்சது முத்தம்

கொடுத்தது எனக்காக புரியுது, ஆனா எனக்காக அது வேண்டாம்.. உனக்கு தோணனும் இல்லையா? அது ஒரு ஃபீலிங்.. என் மாதிரி ஒரு எக்ஸ்ட்ரீம் வேண்டாம்.. விட்டுடு..”

“ஆனா என்னோட கணவன்னு தோணலையா?..” என இடைவெளி விட்டவன், “தோணனும்” என கூடவே சொல்ல..

பரிதாபமாக பார்த்து நின்றாள். புத்திசாலி தான்! அவன் சொல்வது சரிதான்! ஆனால் உணர்வுகள் என்பது தானாக வருவது.. அதை எப்படி வரவைக்கவா முடியும்! அவள் யோசித்த படி நிற்க..

“எனக்கு புரியுது, அதெல்லாம் தானா வரணும், வரவழைக்க முடியாது!” என்று வார்த்தையாக சொன்னவன்.. “ஒரே நாள்ல உன்னை நிறைய யோசிக்க வைக்கறேன் போல, சாரி!” என்று டவலை எடுக்கப் போக..

வேகமாக வந்து அவளே எடுத்துக் கொடுக்கவும், குளிக்க சென்றவன்.. குளித்து வந்த போது அமர்ந்து டீ வீ பார்த்துக் கொண்டு இருந்தாள்.

“உனக்கு தூக்கம் வந்தா தூங்கு வர்ஷி. எனக்கு இன்னும் கொஞ்சம் நேரம் ஆகும்!” என,

“என்ன பேசுகின்றான் இவன்?” என விழிவிரித்து பார்த்தாள். “பின்னே, கட்டிபிடி! முத்தம் கொடு! என்று கிடைத்த சிறு தனிமையில் பிதற்றி விட்டு, இப்போது தூக்கம் வந்தால் தூங்கு என்கின்றான்” எனப் பார்க்க..

அவளின் பார்வையை பார்த்து சிரிப்பு வந்தது. “கண் திறந்துட்டே தூங்கறியா? உன் கண்ணை பார்த்துகிட்டே இருப்பேன்!” என,

முகத்தில் எதையும் காட்டாமல், வேகமாக சென்று படுத்து உடனே கண்களையும் மூடிக் கொண்டாள்.

“முதல் நாளே உன்னை பைத்தியம்னு நினைக்கப் போறா அவ!” என மனதினில் நினைத்துக் கொண்டவன்... அங்கிருந்த சோஃபாவில் அமர்ந்து தன்னுடைய மொபைலை எடுத்துப் பார்க்க ஆரம்பித்தான்.

படுத்து கண்களை மூடி இருந்தாலும் மெதுவாக இமை திறந்து ஈஸ்வரை பார்க்க, ஃபோனை பார்த்து ஏதோ செய்து கொண்டிருந்தான். ஆம்! ஸ்டாக் எக்ஸ்சேஞ் செக் செய்து

கொண்டிருந்தான். அதில் ஆழ்ந்தவன்.. உடனே சிஸ்டம் தேட.. அங்கே அவளின் லேப் இருக்க.. அதை எடுத்தான்.

என்ன செய்கின்றான் இவன் என்பது போல அரை விழிகளில் பார்த்தவள், லேப் எடுத்ததால் சற்று பதட்டமானாள். உடனே தணிந்தவள், என்ன செய்ய முடியும் அது பாஸ்வோர்ட் ப்ரொடக்ட் என பார்த்திருக்க..

ஆன் செய்தவன் பாஸ்வோர்ட் கேட்க.. வர்ஷினியை விழித்திருக்கின்றாளா எனப் பார்க்க, அவள் வேகமாக கண்மூடி இருந்தாள், எப்படி தன்னை கூப்பிடுகின்றான் என பார்க்க..

ஈஸ்வர் அழைக்கவேயில்லை.. வெகு நேரம் கழித்து அரை விழியில் பார்க்க, அதில் வேலை செய்து கொண்டிருந்தான். எப்படி முடிந்தது என யோசித்தவள், உடனே எழுந்து அமர்ந்து “என்ன பண்றீங்க?” என

“உன் லேப் கொஞ்சம் யூஸ் பண்ணிகிட்டேன்!”

“அது பாஸ்வோர்ட் இருக்கு”

“அதை பிரேக் பண்ணிட்டேன்!” என்று ஈசியாக சொல்லி திரும்ப வேகமாக எதோ செய்ய,

“ஹய்யோ!” எனப் பார்த்திருந்தவள், “எதுக்கு என் லேப் என்னை கேட்காம யூஸ் பண்றீங்க!” என,

“ஏன்? என்ன வெச்சிருக்க உன் லேப்ல நான் பார்க்கக் கூடாத மாதிரி” என்று ஈஸ்வர் உடனே கேட்க..

“ஒன்னுமில்லையே” என்றாள் அவசரமாக.. அவள் அவசரமாக சொன்ன விதமே ஏதோ இருகின்றது என்று காட்டியது.

ஆனால் அந்த நீல நிறக் கண்களில் தென்பட்ட கலவரம் என்னவென்று கேட்க விடாமல் தடை செய்ய..

“நான் இருக்கும் போது உன் கண்ல இந்த மாதிரி ஒரு பயம் எதுக்கும் வரக் கூடாது” என..

அவனுக்கு புரியவில்லை.. ஆனால் புரியும் போது? அவனை அவனால் மன்னிக்கவே இயலாது!

யாரிடம் எதுவும் சொல்லாமல் தானே விஷயங்களை பார்த்துக் கொள்ளும் அவளின் மனப் பக்குவம், பல எதிர்மறை

விளைவுகளுக்கு பந்தக் கால் நட்டு விட்டது எனப் புரியவில்லை. ஆனால் அது அவனால் மட்டும் என்று சொல்ல முடியாது.. ஆனாலும் அவனும் உண்டு அதில்!

“என்ன பார்க்கறீங்க?” என நிகழ்வுக்கு வர..

“சொன்னா சிரிக்க மாட்டியே.. ஜஸ்ட் ஒரு பிட்..(bid). பல நாள் பார்த்திருக்கேன், ஆனாலும் வாங்கணும் தோணினது இல்லை.. இப்போ இந்த நிமிஷம் சொல்லுது அதை வாங்குன்னு... அதுதான் பார்த்துட்டு இருக்கேன்”

“அதுவும் நான் எவ்வளவு ஆர்வமா எதிர்பார்த்த கல்யாணம்.. இந்த நைட்ல நான் பண்ணிட்டு இருக்குற வேலை எனக்கே சிரிப்பா வருது.. ஆனா ஏதோ ஒன்னு சொல்லுது இப்போ இதை நீ செய்ன்னு” என சன்ன சிரிப்புடன் சொல்ல,

“அது என்ன பிட்?”

“இப்போ அது பேசற விஷயம் இல்லை.. அப்புறம் சொல்லி தரேன். ஜஸ்ட் பத்து நிமிஷம் இதை முடிச்சிடறேன்!” என அவன் அமர..

அவளின் மொபைலை எடுத்து அது என்ன பிட் என ஆராய்ந்தாள். அவன் வேலையை முடித்த நிமிடம் அதை அக்குவேறு ஆணி வேறாக அலச முற்பட்டு இருந்தாள். ஆனால் புரியவில்லை என்பது வேறு.

வேலையை முடித்த போது மனதிற்கு அவ்வளவு திருப்தியாக இருந்தது ஈஸ்வருக்கு.. ஈஸ்வர் பைனான்ஸ் என்ற ஒன்று மட்டுமே பல வருடங்களாக அவனின் குறிக்கோளாக இருக்க.. வேறு எதுவுமே அவன் யோசித்தது இல்லை..

அவனுக்கு தெரியாமல் அது பிரச்சனையில் மாட்டி விட அதை விடுவிப்பது அவனின் பெரும் வேலையாகிப் போக.. அதை விடுவிக்கும் பொருட்டு, அவன் அதில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டான்.

பின்பு வர்ஷினியை கொண்டு அவனுள் இடைவிடாத போராட்டம், தன்னை தனிமைப் படுத்திக்கொண்டு வேலைகளில் ஈடுபட்டாலும், லாபம் பார்த்தாலும், அது பெரிய லாபமாக ஈஸ்வருக்கு தோன்றியதில்லை, அவனுக்கு எதிலும் திருப்தியுமில்லை.

ஆனால் இந்த நிமிடம்... நேரம் போக அதை பார்த்திருந்தவன்.. சில முடிவுகளை எடுக்க, அதில் அவனுக்கு மிகுந்த திருப்தி. அந்த சந்தோஷத்தோடே வர்ஷினியைப் பார்த்தான்.

ஃபோனில் பார்த்துக் கொண்டு இருந்ததால் முகத்தில் அவ்வளவு தீவிரம் கூட.. அருகே சென்று என்ன பார்க்கின்றாள் என்று பார்க்க, பிட் என்றால் என்னவென்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

“நான் தான் சொல்றேன்னு சொன்னேனே”

“எப்போ சொல்வீங்கன்னு எதுக்கு வெயிட் பண்ணனும், நானே பார்த்துகிட்டேன்.. எனக்கு யாரும் எதுவும் சொல்லிக் கொடுத்தது கிடையாது. எல்லாம் எப்பவும் நானே தான் தெரிஞ்சிக்குவேன்” என்று மிகவும் இயல்பாக அவள் கூற..

வர்ஷினி என்னவோ இயல்பாகத் தான் கூறினாள்.. ஆனால் அந்த பாவனையே ஈஸ்வரை வருத்தப் படுத்தியது.. “அது உன்னோட கல்யாணத்துக்கு முன்னே. இப்போ நீ சங்கீதவர்ஷினி விஸ்வேஸ்வரன். அண்ட் உன்னோட சர்ச் என்ஜின் நானா இருக்க தான் இஷ்டப்படறேன்.. எதுன்னாலும் என்கிட்டே கேள்.. நீ எதையும் தேட வேண்டிய அவசியமில்லை! அப்படி எனக்கும் தெரியலைன்னா தேடிக்கலாம்” என்றவன், வேகமாக லேப் அணைத்து,

“இந்த பால் எல்லாம் கொடுத்து விடுவாங்களே, அதெல்லாம் ஒன்னும் இல்லையா? பசிக்குது!” என,

“இல்லையே!” என்றவள், “நான் கூட மூவீஸ்ல எல்லாம் பார்த்திருக்கேன். அப்படி எல்லாம் எதுவும் கொடுத்து விடலை!” என்றாள் சீரியசாக.

சிரிப்பு வந்து விட வாய் விட்டு சிரித்தவன், “யார் உன்னை இங்க அனுப்பினா?” என.

ஈஸ்வர் சிரித்ததற்கு முகத்தை சுருக்கியவாறே “ரஞ்சனி அண்ணி” என,

இந்த ரஞ்சனி தான் ஏதோ சொதப்பி விட்டாள் என புரிந்தவனாக, சிரித்ததற்கு, “சாரி” என கையை தூக்கி கேட்டவன், “உங்கம்மா, ஷாலினி இல்லையா?” என,

“அம்மா அப்பாக்கு சாப்பாடு குடுக்க போனாங்க! ஷாலினி அன்னிக்கு கால் ரொம்ப வீங்கி இருந்தது, நான் தான் போய் படுங்கன்னு துரத்தி விட்டேன், ஒரு பாட்டி டைம் ஆச்சு ஆச்சு எங்க

கமலம்மா கேட்டாங்களா.. ரஞ்சனி அண்ணி கூப்பிட போனாங்க.. நான் தான் யாரையும் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு நானே போறேன், அம்மாவை கூப்பிடாதீங்கன்னு வந்துட்டேன்" என்று நீண்ட விளக்கம் சொல்ல,

"சரி விடு, கால்ல எல்லாம் விழ சொல்லலையா?" என்றான் இலகுவாக.

"அதுவும் சொல்லலையே!"

"ஓஹ் அப்படியா" என்ற ஈஸ்வரின் பாவனையில் "விழணுமா?" என்று வர்ஷினி பொசிஷன் எடுக்க..

தான் சொல்வதற்கு எல்லாம் தலையாட்டி தன்னுடன் சுமுகமாக நடக்க நினைக்கும் அவளின் எண்ணம் புரிய, "வேண்டாம், வேண்டாம், நான் மொத்தமா உன் கிட்ட விழுந்துடேனே!" என,

"என்ன விழுந்தீங்க?" என்றவளிடம் பதில் சொல்லாமல் அவளை நெருங்கி நின்றான்.

அதுவரை இருந்த சகஜ மனப்பான்மை போய், ஈஸ்வரின் பார்வையில் "என்ன? என்ன?" என்று வர்ஷினி திக்க ஆரம்பித்தாள். ஆம்! ஒரு தீவிரம்.. ஒரு வேட்கை.. ஈஸ்வரிடம் எல்லாம் யோசனைகளும் பின் போய் விட்டன.. இப்போது வர்ஷினி  மட்டுமே அவனின்  முன்.

"முதல்ல உன்னோட இந்த கண்!" என்று மிக மிக அருகில் வர, கண்களை இறுக்கமாக அவளையும் அறியாமல் மூடிக் கொண்டாள்.

இத்தனை நேரம் அவன் யோசித்தது எல்லாம் எங்கோ போனது... இப்போது அவன் நினைவில், நனவில், எல்லாம் வர்ஷினி மட்டுமே..

கண்களை மூடியதும் தான் காற்றில் எழும்பியது புரிய.. ஆம், அவளை கைகளில் தூக்கி இருந்தான்.. அவனின் கைகளில் இருப்பது புரிய... அப்போதும் கண்களை திறக்கவில்லை.. அவளை படுக்கையில் விடுவது புரிய.. வர்ஷினிக்கு இன்னும் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. அதைக் கட்டுப் படுத்த கண்களை இன்னும் இறுக்க..

"வர்ஷ், எதுக்கு கண்ணை இவ்வளவு கஷ்டப்படுத்துற" என்று மெதுவாக அதை பிரித்து விட முயன்றான். முடியவில்லை!

எழுந்து விளக்கை அணைத்து அவளின் அருகில் படுத்தவன்.. “ஸ்டே கூல் வர்ஷ்..” என்றவன் மெதுவாக அவளின் நெற்றியை நீவி விட அந்த கதகதப்பில் கண் திறந்தாள்.. ஆனாலும் கண்களில் ஒரு கலவரம்.

அந்த கலவரத்தை பார்த்ததும் சற்று நிதானபட்டவன், “இவ்வளவு நேரம் எவ்வளவு தைரியமா இருந்த, நான் கேட்டது கூட செஞ்ச, இப்போ என்ன பயம்?” என,

“தெரியலை” என்றாள்..

“தூக்கம் வருதா?” என்றவனிடம், “இல்லை” என்பது போல தலையாட்டினாள்.

அடுத்த கேள்வியாக “களைப்பா இருக்கா?” என, “ஆம்” என்பது போல தலையாட்ட.. “தூங்கு, சரியா போயிடும்!” என்றவன்.. “நாம சிங்கப்பூர் போகலாமா ஒரு பத்து நாள்!” என,

“ம்ம்ம்!” என்பது போல தலையாட்டினாள்.

உடனே தன் மொபைல் எடுத்து அவன் டிக்கெட்டிற்காக பார்க்க.. “நான் அந்தப் பக்கம் திரும்பிக்கட்டுமா?” என சம்மதம் கேட்டாள்.

அவள் கேட்ட பாவனையில் புன்னைகை வந்தது.. “சரி” என..

உடனே அவசரமாக திரும்பப் போனவளிடம்.. மொபைலை கீழே வைத்து, “ஒரே ஒரு கிஸ் மட்டும் பண்ணிக்கட்டுமா?” என ஈஸ்வர் கேட்க...

“சரி” என்பது போல ஒரு தலையாட்டல் மட்டும்.. “நீ லிப்ஸ் ஸ்டிக் போட்டிருக்க, அதை துடைச்சிடு” என..

கைகளால் துடைக்க போனவளை.. தடுத்து கைகளை பிடித்துக் கொண்டவன்.. “இங்கே துடைச்சிடு!” என்று அவனின் கன்னத்தை காட்ட..

“ஆங்” என அந்த நீல நிறக் கண்களை இன்னும் விரிக்க...

அந்த கண்களில் மீண்டும் தன்னை தொலைக்க ஆரம்பித்தவன்.. வர்ஷினியின் முகத்தை தானாக அருகில் இழுத்து தன் கன்னத்தை திருப்பி வாகாக காட்டி தான் சொன்னதை செய்ய வைத்தான்.

ஈஸ்வரால் அதன் பின் தன்னை கட்டுப் படுத்தவே முடியவில்லை.. தயக்கம், மயக்கம், காதல், என்ற ஆராய்ச்சி எல்லாம் எங்கோ பறந்தது.

இத்தனை நாள் மனதின் அலைபுருதல்கள் எல்லாம் வர்ஷினியிடம் காட்ட ஆரம்பித்தான். `

தான் ஈஸ்வரின் கன்னத்தில் உதடுகளை வைத்தது தான் வர்ஷினிக்கு தெரியும்.. அதன் பின் எதுவுமே தெரியவில்லை. எங்கோ அலைகளில் அடித்து செல்லப் பட்டாள்..

விரகம் போலே உயிரை வாட்டும் நரகம்
வேறேது சரசக் கலையைப் பழகிப் பார்த்தால்

விரசம் கிடையாது!

**அத்தியாயம் ஐம்பத்து மூன்று :**

**காற்று நுழைவதை போல் உயிர் கலந்து களித்திருந்தேன்!**

அயர்வுடன் கண்மூடி சாய்ந்திருந்த வர்ஷினியை பார்த்திருந்தான். ஃப்ளைட்டில் அவனின் அருகில் அமர்ந்து இருந்தாள். ஆனால் உறங்கவில்லை என புரிந்தது.

“தூங்கு வர்ஷி” என..

கண்களை திறக்காமலேயே “தூக்கம் வரலை” என்றாள். அவள் உறங்கவேயில்லை என்று புரிந்து தான் இருந்தான். ஈஸ்வரின் மனதில் அலைபுருதல்கள் எல்லாம் நீங்கி ஒரு அமைதி வந்திருந்தது.

பின்னிரவு முடிந்த நேரம் ஈஸ்வர் வர்ஷினியை விட்டு முயன்று விலகி, “உனக்கு எதுவும் தொந்தரவா இல்லையே! நான் உன்னை கஷ்டப்படுத்தலையே” என கேட்க..

ஈஸ்வரின் முகத்தில் தெரிந்த தவிப்பில் “இல்லை! இல்லவே இல்லை!” என்று வர்ஷினி ஸ்திரமாக பதில் சொன்னாள். அதன் பிறகே நிம்மதியானான். பின்னே இப்பொழுது வேண்டாம் என மனதை அவ்வளவு குழப்பி, பின்பு அவனையும் மீறி செய்கைகள் இருக்க.. அதுவே அவனின் தவிப்பிற்கு காரணம்.

பல தேடல்கள் வர்ஷினியிடம் இருந்த போதும், திருமணமாகி விட்ட போதும், ஏதாவது தப்பு செய்கிறோமோ, இன்னும்

பொறுத்திருக்க வேண்டுமோ என்ற எண்ணம் ஒரு மூலையில் ஓடிக் கொண்டு தான் இருந்தது.

முழுமையாக அவனால் அனுபவிக்க முடியவில்லை... ஆனாலும் மனதில் ஒரு அமைதி மீண்டிருந்தது. பின் அவன் உறங்கிவிட..

வர்ஷினிக்கு உறக்கம் என்பதே இல்லை, அது வரவேயில்லை.. உறங்கும் ஈஸ்வரை பார்த்தே விழித்துக் கிடந்தாள். "அப்பா சொன்னதற்காக திருமணம் செய்தாலும், அதனை கொண்டு அவனோடு நீ இணக்கமாக நடக்க முற்பட்டாலும்.. இது அல்ல உன் வாழ்க்கை. அவனை காதலிக்க கற்றுக் கொள்!" என நினைத்து விடியும் வரை அவனையே பார்த்திருந்தாள்.

"வருமா எனக்கு இவன் மீது காதல் வருமா?" என யோசித்த படியே.. "உண்மையில் ஒரு ஈர்ப்பு இல்லாவிட்டால் இவனின் அத்தனை பெரிய தவறை யாரிடமும் சொல்லாமல் மறைத்திருப்பாயா? அல்லது திருமணம் செய்ய ஒப்புக் கொண்டிருப்பாயா? அல்லது இப்போது நீ அவனுடன் இழைந்திருப்பாயா?"

ஆம்! இழைந்து தான் இருந்தாள், அவனில் கரைந்து தான் இருந்தாள். அதுவே அவளின் உறக்கமின்மைக்கு காரணம்.

ஈஸ்வர் தான் முழுமையாக அனுபவிக்கவில்லை. ஆனால் வர்ஷினி அனுபவித்தாள். அவனின் ஒவ்வொரு செய்கையும், வாய்மொழியின் பிதற்றல்களையும். அவளை அடித்துச் சென்ற அலை அவளுக்கு மிகவும் இஷ்டமாகத் தான் போய்விட்டது.

மனதிலும் ஒரு பரவசம்! உடலிலும் ஒரு பரவசம்! எப்படி எனக்குள் இப்படி என்ற யோசனைகளும் கூட. அதனாலேயே உறக்கம் கிஞ்சித்தும் அணுகவில்லை.

அதிகாலையிலேயே எழுந்து குளித்து வெளியே வந்தாள். தாத்தா எழுந்து ஹாலில் அமர்ந்திருக்க.. வேலை செய்பவர் அவருக்கு காஃபி கொடுத்துக் கொண்டிருந்தார்.

நேரம் காலை ஆறு கூட ஆகவில்லை.. அதற்குள் குளித்து ஒரு சுரிதாரில் கீழே வந்தவளை வியப்போடு பார்த்தவர்..

"போ! போய் கையோட சாமி ரூம்ல விளக்கேத்திட்டு வந்து உட்காரு!" என்றார்.

“என்னிடமா பேசினார்?” என வியப்பாக பார்த்தவள், ஆனாலும் நிற்காமல் அவர் சொன்னதை செய்தாள். கடவுளிடம் வணங்கி வந்தவள், தாத்தாவின் எதிர்புறத்தில் அமர..

“இங்கே வந்து உட்காரு!” என்று அருகில் அழைக்க.. அமர்ந்தவளிடம்.. “நாம அதிகம் பேசினதில்லை.. ஆனாலும் சில உண்மைகளை உள்ள படி பேச விரும்பறேன், பேசட்டுமா?” என,

“பேசுங்க!” என்பதாக ஒரு தலையசைப்பு அவளிடம்... அதில் இருந்த ஆளுமை அவருக்கு நன்கு தெரிந்தது. இதனால் தான் ஈஸ்வர் இவளை பிடிவாதமாக மணந்தானோ என தோன்றியது.

சற்று யோசித்த போதும் வெகு நாட்களாக அவளிடம் பேச வேண்டும் என நினைத்தது தான். ஆனால் திருமணம் முடியாமல் பேச வேண்டாம் என இருந்தார். இப்போது பேசினார், “உன் பிறப்பு எப்படியோ.. உன் வளர்ப்பு சிறப்பா இருந்தது.. அதையும் விட உன் கல்யாணம் இன்னும் சிறப்பா அமைஞ்சிருக்கு.. நம்ம கிட்ட நிறைய பணம் இருக்கலாம், ஆனா அவங்க குடும்ப பாரம்பர்யம் வேற.. ரொம்ப பெரிய ஆளுங்க.. அப்படி ஒரு குடும்பத்துல உன்னை கடவுள் நுழைச்சிருக்கார்.. அதை சிறப்பா அமைச்சிக்கோ.. உன்னோட அப்பாவோட அம்மாவோட நிழல் எதுலயும் வேண்டாம்” என்றார்.

அவளின் முகம் மாறுவதைக் கண்டு, “தப்பான அர்த்தத்தில எடுக்காதே.. எவ்வளவோ சொன்னேன் உன்னோட அப்பா கேட்கலை.. நான் இன்னும் நல்லா இருக்கேன், ஆனா அவன் இப்போ இப்படி இந்த வயசுலயே போறான்.. சொத்துக்களும் எல்லாம் பிரிச்சிட்டான்.. உனக்கு நிறைய குடுத்திருக்கான்.. எல்லாம் எடுத்துக்கோ! ஆனா என் பேரனுங்க எங்கயும் எதுலயும் யாருக்கும் கீழ போயிடக் கூடாது”

“அவனோட நிழல்லயே இருந்து பழகிட்டாங்க! தனிச்சு நிற்கணும், வளரணும்! அதுக்கு எந்த பாதிப்பும் வந்துடக் கூடாது!” என நிறுத்த..

“இதை நீங்க ஏன் என்கிட்டே சொல்றீங்க! அப்பா கிட்ட சொல்லலாமே!”

“சொல்லலாம் தான்! ஆனா அதுக்குள்ள அவனுக்கு உடம்பு சரியில்லாம போயிடுச்சு. அவனோட உடல் கஷ்டங்களே அதிகம் அதுல மனசு கஷ்டமும் நான் கொடுக்க விரும்பலை.. எல்லாம் உன்னோட ராசின்னு அவனோட நினைப்பு.. நேரம் ஒருத்தருக்கு நல்லா இருந்தா எப்படியும் எல்லாம் வந்து சேரும்!” என்றார்.

அவர் சொல்ல வருவது வர்ஷினிக்கு நன்றாக புரிந்தது, “நீ இப்போது நல்ல இடத்தில வாழ்க்கை பட்டு விட்டாய். எவ்வளவு சொத்து வேண்டுமானாலும் எடுத்துக் கொள், ஆனால் என் வீட்டின் அடையாளம் என் பேரன்களாக தான் இருக்க வேண்டும்” என்று உரைக்கிறார் என புரிந்தது. அதில் தவறாக ஒன்றும் அவளுக்கு தெரியவில்லை.

திரும்பவும் “இப்ப இதை என்கிட்டே ஏன் பேசறீங்க?” என,

“நீ உன் வீட்டுக்குப் போயிடுவ.. திரும்ப நீ தனியா கிடைப்பியோ? என்னவோ? அதுதான் சொல்லணும் தோணிச்சு சொல்லிட்டேன்!” என்றார். கூடவே ஒரு கவலையும் கூட, “நான் பேசியதை வைத்து ஏதும் பிரச்சனையோ கலாட்டாவோ செய்து விடுவாளோ” என..

ஆனால் மிக தெளிவாக வர்ஷினி, “எனக்கு அப்பா நிறைய சொத்து கொடுத்திருந்தாலும், இதுவரைக்கும் இது அப்பாவோட சொத்து தான், இங்க அடையாளமும் அப்பா தான். அதனால் உங்களுக்கு பயம் வேண்டாம்! அப்பாக்கு அப்புறம் அண்ணாங்க தான் இருப்பாங்க!”

“அதுக்காக எனக்கு குடுத்தது திருப்பி எல்லாம் குடுக்க மாட்டேன், என்னோட பேர் வெளில தெரியணும்னு அவசியமில்லை. அண்ணாங்க தான் முன்ன நிற்பாங்க! சரியா?” என சொல்லி அவரை பார்த்தாள்.

பேசிய விதத்திலும், பார்வையின் தீட்சன்யதிலும் அசந்தவர், “என் மகனோட புத்திசாலித்தனம் எல்லாம் இவளுக்கு தான் வந்திருக்கு போல” என நினைத்தவர்..

“திரும்பவும் சொல்றேன், உனக்கு இனி ஈஸ்வரோட அடையாளம் இருக்கு, இங்க முரளியும் பத்துவும் தான் இருக்கணும்!” என..

“அதுல உங்களுக்கு எந்த பயமும் வேண்டாம் தாத்தா! கம்பனி அடையாளத்தில அவங்க தான் முன்ன நிற்பாங்க. ஆனா அதுக்காக சொத்து எல்லாம் கண்டிப்பா நான் திரும்ப குடுக்க மாட்டேன்!” என சொல்ல,

“எனக்கு அது போதும்” என்று விட்டார்.

அப்போதுதான் கமலம்மா எழுந்து வந்தவர்.... “வர்ஷினி எழுந்திட்டியா” என்றவர், “அப்பா இப்போ தான் சொன்னார் வர்ஷினி எழுந்ததும் என்னை பார்க்கச் சொல்லுன்னு, பார்க்கறியா?” எனக் கேட்க..

“ம்ம்ம் மா!” என்று சொல்லி ராஜாராமிடம் பேசச் செல்ல.. அங்கே கிட்ட தட்ட ஒரு மணி நேரத்திற்கும் மேல் ராஜாராம் பேசிக் கொண்டிருந்தார்.

அதற்குள் வீடு விழித்து விட.. வெளியே வந்த வர்ஷினியிடம்.. “எங்கே ஈஸ்வர்?” என முரளி கேட்க...

உறங்குகின்றான் என சொல்ல மனமின்றி.. “குளிக்க போனாங்க அண்ணா, நான் பார்த்துட்டு வர்றேன்!” என மேலே சென்றவள்,

அவனை எழுப்பி “எட்டு மணி ஆச்சு எல்லோரும் கேட்கறாங்க! நீங்க குளிக்கறீங்க சொல்லியிருக்கேன், சீக்கிரம் குளிச்சிட்டு வாங்க!” என சொல்ல, அவளின் முகத்தை தீவிரமாக ஆராய்ந்தான். முகத்தில் இருந்து ஒன்றும் தெரியவில்லை. குறிப்பாக அந்தக் கண்களில் ஒரு வித்தியாசமும் இல்லை.

ஈஸ்வருக்கு ஒரு மாதிரி தான் ஆனது.. ஒரு வெட்கமும் இல்லை, கோபமும் இல்லை, எந்த உணர்வுகளும் இல்லை..

ஈஸ்வருக்கு தெரியாதே, இரவு முழுவதும் அவனைப் பார்த்தபடி விழித்திருந்தாள் என.. காலையில் தன் தாத்தாவுடன் பேசியிருகின்றாள், அப்பாவுடன் பேசியிருகின்றாள், அவனை நினைக்க முடியாதபடி வர்ஷியின் உள் வேறு சில எண்ணங்கள் ஓடிக் கொண்டு இருக்கின்றது என எப்படி தெரியும்.

அட இதுவரை தான் அவளை பாதிக்கவில்லை, நேற்று இரவின் தாக்கம் கூட இல்லையா என யோசித்தபடி எழுந்தான்.

அவன் எழுந்த போதே இன்று அவளாகவே சென்று.. டவல் எடுத்து தர.. முகத்தில் சிறு புன்னகை மலர்ந்தது. “எப்போ எழுந்த?” எனக் கேட்க,

“தூங்கவேயில்லை! காலையில சீக்கிரம் எழுந்து குளிச்சிட்டேன்!”

“ஏன்? ஏன் தூங்கலை?” என்றான் பதட்டமாக.

“தெரியலை” என்றவளிடம்,

“உன்னை எதுக்கும் கட்டாயப்படுத்திட்டேனா?” என,

“எதுக்கு?” என்றாள் புரியாமல்,

என்னவென்று சொல்வான்.. “அது.. நைட்..” என இழுக்க,

“இல்லையில்லை” என்றவளின் முகத்தில் சிறு வெட்கத்தின் சாயல் கூட..

அவளை அணைத்தவன், “தேங்க் யு, தேங்க் யு வெரி மச்” என்று நெற்றியில் முத்தமிட,

“எதுக்கு?” என்றவளிடம்..

“அட்லாஸ்ட் என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்கு ரொம்ப நாளைக்கு பிறகு என்னோட காலை நேரம் சந்தோஷமா விடிஞ்சிருக்கு” என்று குளிக்க போக..

அவனை ஒரு புன்னகையோடே பார்த்திருந்தாள். அவனின் இந்த பேச்சில் தாத்தாவிடமும் அப்பாவிடமும் பேசிய மன இறுக்கம் குறைந்து இருந்தது.

அமைதியாக ஈஸ்வர் வரும் வரை அமர்ந்திருந்தாள்.. தனக்கு சந்தோஷமா எனத் தெரியவில்லை. ஆனால் ஈஸ்வரின் மகிழ்ச்சி தானாக வர்ஷினியை இலகுவாக்கியது.

ஈஸ்வர் வரவும்.. தயாராகும் அவனையே பார்த்திருக்க.. வர்ஷினியின் பார்வையை பார்த்தவன்.. “இப்படி எல்லாம் என்னையே பார்த்த.. அவ்வளவு தான் நான்! என்னால ஒரு வேலையும் செய்ய முடியாது.. திரும்ப எப்படி கீழ போவோம்” என..

“ஒகே பார்க்கலை!” என்று முறுவலோடு அவள் வேறு புறம் திரும்ப, வேகமாக தயாரானவன் “போகலாமா!” என,

கீழே இருவரும் இறங்கும் போது அவர்களை தான் பார்த்திருந்தாள் ரஞ்சனி.. ஈஸ்வரின் முகத்தில் இருந்த ஒரு பொலிவு.. எப்படி எந்த உறுத்தலுமின்றி இவனால் இவ்வளவு மகிழ்வாக இருக்க முடிகின்றது என்று தான் தோன்றியது.

வர்ஷினியை கவனித்தால், அந்த முகத்தில் ஒரு ஆழ்ந்த அமைதி.. அதீத உற்சாகம் மகிழ்ச்சி இது போல எதுவும் தெரியாவிட்டாலும் முகத்தில் புது மணப்பெண்ணிற்கான களை நன்கு தெரிந்தது.

“நடந்ததை விடு! இனி இவனாவது மகிழ்ச்சியாக இருக்கட்டும்!” என மனதை தேற்றி.. ஈஸ்வரிடம் சகஜமாக பேசத் துவங்க...

பின்பு காலை விருந்து அங்கே, மதியம் ஈஸ்வரின் வீட்டில்.. இதோ இப்போது ஃப்ளைட்டில் இருவரும் அமர்ந்து இருந்தனர்.

என்னவோ ஒரே நாளில் தான் மிகவும் பெரிய பெண்ணாகிவிட்டது போல ஒரு உணர்வு வர்ஷினிக்கு.. தாத்தாவும் அப்பாவும் பேசியதை அசை போட்டபடி கண்மூடி இருந்தாள்.

“ஏன் தூக்கம் வரலை! கண்டிப்பா தூக்கம் தேவை! தூங்கு!”

“வந்தா தூங்க மாட்டேனா? வரலை!” என்று கண் திறந்து அவனைப் பார்த்து பேச..

“அப்படி என்ன டிஸ்டர்ப் பண்ணுது?”

“காலையில குளிச்சிட்டு கீழ வந்தேனா.. தாத்தா பேச பிடிச்சிட்டாங்க, அப்புறம் அப்பா கிட்ட அதை சொன்னேனா அப்பா பிடிச்சிக்கிட்டாங்க, அதெல்லாம் என்னவோ டிஸ்டர்ப்டா இருக்கு!” என்றாள் மனதை மறையாமல்.

“என்ன பேசினார் உன் தாத்தா?”

“எனக்கு உங்க அடையாளம் இருக்காம், இனிமே அதனால அவங்க வீட்டு அடையாளம் அவங்க பேரனுங்களுக்கு தானாம். நான் அதுல தலையிடக் கூடாதாம்!”

“அவங்க வீட்டு அடையாளம் அவங்க பசங்களுக்கு தான், இதுல என்ன?” என்று புரியாமல் ஈஸ்வர் கேட்க..

“அது அப்படி இல்லை, நான் பாதி ஷேர் ஹோல்டர். பாக்கி பாதி முரளிண்ணாவும் பத்துண்ணாவும். சோ! நான் அவங்களை டாமினேட் செஞ்சு, நான் தான் அதோட ஒனர்ன்னு காட்டக் கூடாது நினைக்கறாங்க!” என,

மனிதர்களை புரிந்து கொள்ளும் அவளின் தன்மை வியக்க வைத்தது, “நீ என்ன சொன்ன?” என,

“கண்டிப்பா நான் எதுலயும் முன்னே வரமாட்டேன். ஆனா அதுக்காக அப்பா கொடுத்தது எல்லாம் திருப்பிக் கொடுக்க மாட்டேன். அது என்னோடது தான்னு சொல்லிட்டேன்!”

“அவங்களுக்கு சொத்து முக்கியம்னா, குடுத்துடு! நாம இதை விட சம்பாதிப்போம்! எனக்கு நம்பிக்கை இருக்கு!”

“அது எங்கப்பா எனக்கு குடுத்தது! நான் ஏன் குடுக்கணும்? நாம சம்பாதிக்கலாம் நீங்க சொல்றீங்க தானே, அந்த மாதிரி அவங்க சம்பாதிக்கட்டும்.. நீங்க உணர்ச்சிவசப்பட்டு எல்லாம் தூக்கி குடுப்பீங்க, ஆனா அப்படி என்னால செய்ய முடியாது”

“பாசம் வேற! மரியாதை வேற! இங்க வீட்ல எல்லோருக்கும் என் மீது பாசம் இருந்தாலும், என்னோட மரியாதை நானும் அங்க அந்த பிசினெஸ்ல இருக்கேன்னு தான். அதை என்னால இழக்க முடியாது. அண்ட் அது என் பேர்ல ஆரம்பிச்சது தானே, நான் ஏன் கொடுக்கணும்?” என்றவள் அவனின் முகத்தை ஆராய்ந்தாள்.

ஈஸ்வர் எதுவும் பேசாமல் அவளை பார்த்திருந்தான்.. பிரச்சனைகளை எப்படி அணுகுகின்றாள் என.. “ஆம்! முதல் நாள் என்னை கண்களில் ஆர்வத்தோடு பார்த்தாலும், நான் பேசிய பேச்சில் போடா என்பதாக தானே அவளின் நடவடிக்கை இருந்தது!” என யோசித்தபடி பார்த்திருந்தான்.

“நான் பணம் பின்னாடி போறேன்னு நீங்க நினைக்கறீங்களா?” என கேட்க,

“ச்சே சே!” என அவன் சொல்ல..

“இது என்னோட உரிமை! உங்களுக்கு புரியுதா?” என கண்களில் கலவரத்தோடு கேட்க..

“அச்சோ! நான் இருக்கும் போது உன் கண்ல இந்த பாவனை வரக் கூடாதுன்னு எத்தனை தடவை சொல்றது.. உனக்கு தான் புரியலை!” என ஈஸ்வர் கோபப்பட்டவன்..

“ஹனி மூன்னு நான் கூட்டிட்டு வந்தா, எத்தனை பிரச்சனையை பேசி அனுப்பியிருக்காங்க உங்க வீட்ல!” என அவளை முறைக்க..

“ஹனி மூன் நமக்கு தான்! அவங்க, அவங்க விஷயம் பேசறாங்க, தாத்தாக்கு பயம்!” என,

“இந்த விஷயம் எல்லாம் யாரும் எதுவும் பண்ண முடியாது.. அவங்க அவங்க வாழ்க்கைக்கு, அவங்க அவங்க தான் பொறுப்பு!” என்றான்.

“அப்போ எனக்கு நான் பொறுப்பு சொல்றீங்களா? நான் சங்கீத வர்ஷினி விஷ்வேஷ்வரன் சொன்னீங்க?” என சற்று கிண்டலாக கேட்டாள்.

“கண்டிப்பா நீ சங்கீத வர்ஷினி விஷ்வேஷ்வரன் தான்.. உன் பேரோட இருக்குற விஷ்வேஷ்வரன்க்கு நான் எவ்வளவு பொறுப்போ, அது மாதிரி என் பேரோட இருக்குற சங்கீத வர்ஷினிக்கு நீ பொறுப்பு. உன்னோட நன்மை தீமை என்னோட அதே மாதிரி என்னோட

நன்மை தீமை உன்னோட இனிமே..” என மிகவும் சீரியசாக சொல்லி நிறுத்தியவன்,

“இது இப்படி இருந்தாலும், ஒரு வார்த்தை ரொம்ப உண்மை! உனக்கு நீயே எஜமானன்! உன்னோடது எப்போவும் உன் கூட தான் இருக்கும், யாராலையும் மாற்ற முடியாது! அவங்கவங்களுக்குன்னு இருக்குறது தான் அவங்களுக்கு!”

“அதனால தான் ஈஸ்வர் ஃபைனான்ஸ் என்னோடது! என்னோட அடையாளம்னுன்னு கர்வத்தோட சுத்திட்டு இருந்த என்னால அதை ஈசியா தூக்கி குடுக்க முடிஞ்சது. நான் என்னோட அடையாளத்தை உருவாக்கிக்கறேன்னு என் மனசை கொண்டு வர முடிஞ்சது.. அதை செய்யவும் செய்வேன்!” என்ற அவனது பேச்சில் மீண்டும் அதீத கர்வம்.

“ஐயோ! இவனும் இவனின் கர்வமும் ஒட்டிப் பிறந்த இரட்டைகளோ?” என தான் வர்ஷினிக்கு தோன்றியது.

“ம்ம்ம் அப்புறம்...” என்று அவள் இழுக்க..

கிண்டல் செய்கிறாள் என்று புரிந்த போதும், சற்றும் கோபம் வரவில்லை.. “ம்ம்ம் அப்புறம், இந்த என்னோட மாற்றங்கள் உன்னை பார்த்த பிறகு தான் வந்தது” என்று இன்னும் சீரியசாக சொல்ல..

கைகளை இரண்டு கன்னத்திலும் கொடுத்தவள்.. கவலையாக, “அச்சச்சோ நீயே உனக்கு எஜமானனா, சாமியார் மார்கள் தத்துவம் பேசற மாதிரி இருக்கு, இதுக்கா நாம போறோம்! நாம ஹனிமூன் போறோம்னு இப்போ தான் சொன்னீங்க!” என கொஞ்சல் மொழி பேச,

“ஹ, ஹ” என வாய்விட்டு சிரித்தவன்.. “நாம அப்போ சிங்கப்பூர் போகலையா?” என பாவனையாக கேட்க..

“தோடா! சிங்கப்பூரா போறோம்! ஒகே ஃபைன், சிங்கப்பூர் மட்டும் தான் போறோம்! ஹனி மூன் போகலை!” என்று இன்னும் பாவனையாக சொல்ல..

“அய்யயோ என்ன இது?” என்று பரிதாபமாக ஈஸ்வர் விழிக்க..

“ஹ, ஹ” என்று கலகலவென்று சிரித்தாள் வர்ஷினி.

அவளை தோளோடு அணைத்துப் பிடித்தவன்.. “வாழ்க்கை இன்னும் எங்கயோ இருக்கு, இப்போ அதை அனுபவிக்க மட்டும் செய். எந்த கவலையும் வேண்டாம். எல்லாம் நான் பார்த்துக்கறேன்..”

“கொஞ்சம் வருஷம் போன பிறகு, நம்ம பசங்க ஸ்கூல் போக ஆரம்பிச்ச பிறகு, ராஜாராம் அடையாளமும் வேண்டாம், ஈஸ்வர் அடையாளமும் வேண்டாம், நீ உன்னோட அடையாளத்தை உருவாக்கிக்கோ.. நான் எப்பவும் உன் கூட இருப்பேன்!” என ஆத்மார்த்தமாக சொல்ல,

ஈஸ்வரின் இந்த பேச்சினில், “நீ உன்னுடைய வாழ்க்கையை இவனுடன் இணைத்துக் கொண்டதில் எந்த தவறும் இல்லை. ஏதோ இருக்கின்றது இவனிடம். நான் தான் எல்லாம் என்ற கர்வம் இருந்த போதும், அடுத்தவர்கள் எனக்கு மேல் செல்லக் கூடாது என்ற எண்ணம் எல்லாம் இல்லை!” என்று வர்ஷினியின் மனம் சொல்ல, திரும்பி அவனை விழிஎடுக்காமல் பார்த்தாள்.

ஆனாலும் மனதில் ஓடுவதை காட்டிக் கொள்ளாமல் “அது என்ன குழந்தை பிறந்த பிறகு?” என..

“அதுவரைக்கும் எனக்கு டைம் வேணும்.. என்னோட அடையாளத்தை உருவாக்க.. அண்ட் அதுவரை நீ எனக்கு ரொம்ப வேணும், எல்லா நிமிஷமும், எல்லா நொடியும்.. அப்போ தான் என்னால அந்த அடையாளத்தை உருவாக்க முடியும்!” என தோளோடு இறுக்கி பிடிக்க..

திரும்பவும் ஈஸ்வரை பார்த்தாள்.. அந்தப் பார்வையில் “என்ன? என்னை பைத்தியம்னு நினைக்கறியா?” என..

“ஷ் பா, யு ஆர் ப்ரில்லியன்ட், எப்படி கண்டுபிடிச்சீங்க?” என சிரித்தாள்.

“அதுதான் நேத்து நைட் முழுசும், நான் எவ்வளவு பைத்தியம் உன் மேலன்னு காட்டிக் கொடுத்தேனே, அப்புறம் எப்படி உனக்கு தெரியாம இருக்கும்!” என ஈஸ்வர் சிரிக்காமல் ரசனையோடு கேட்ட பாவனையில், வர்ஷினியின் முகத்தில் பெரிதாக ஒரு புன்னகை மலர்ந்தது.

“ஆமாம்ன்னு சொன்னா, இப்போதைக்கு தப்பிப்ப! இல்லைன்னு சொன்னா இப்போவே காமிப்பேன்!” என மிரட்ட,

“இல்லைன்னு சொல்ல ஆசையா தான் இருக்கு! ஆனா இது ஃபிளைட் அதனால இப்போதைக்கு ஆமாம் மட்டும் சொல்றேன்!”

என்று ஈஸ்வரின் முகம் பார்த்து ரசித்து சொல்ல..

வர்ஷினியின் பேச்சினை ஈஸ்வரின் ஒவ்வொரு அணுவும் ரசித்தது! அனுபவித்தது! இறுக்கிய அணைப்பை லேசாக்கியவன்.. நன்றாக பின்னால் சாய்ந்து, அவளின் தளிர் கை விரல்களை எடுத்து, தன் உதடுகளின் மேல் வைத்து கண் மூடிக் கொண்டு முத்தமிட..

ஈஸ்வரின் எந்த செய்கையையும் விட அது ஒரு ஆத்மார்த்தமான சிலிர்ப்பை கொடுக்க, அது வர்ஷினியின் உயிர் வரை தீண்டியது. அவளும் கண்மூடி சுகமாக உறங்க ஆரம்பித்தாள்.

**பழகும் போது குமரியாகி**

**என்னை வெல்வாய் பெண்ணே!**

**படுக்கையறையில் குழந்தையாகி**

**என்னை கொள்வாய் கண்ணே!**

## அத்தியாயம் ஐம்பத்தி நான்கு :

**ஈருடல் ஒருயிர் அல்ல ஒருடல் ஈருயிர்!**

ஒரு வாரம் நாட்கள் எப்படி போனதென்று வர்ஷினியைக் கேட்டால் நிச்சயம் அவளுக்கு தெரியாது. எல்லாம் மறந்த நிலை தான் அவளுக்கு.. மறக்க வைத்திருந்தான் ஈஸ்வர்!

ஆம்! வந்த நாளே அவன் எப்போதும் போகும் விசைப் படகில் கடலில் சிறிது தூரம் அழைத்து போய், “நீ இல்லாத போது இந்த கடல் தான் எனக்கு அமைதி கொடுத்தது.. உன் கண்ணை இதற்குள் தான் தேடினேன்” என்று முகம் பார்த்து, அவளின் கண் பார்த்துச் சொல்ல, அந்த ஏகாந்தத்தில் மயங்கி தான் போனாள்.

அதன் பின் அந்த மயக்கத்தை ஈஸ்வர் தெளிய விடவே இல்லை.. ஊனாகி உயிராகி என்ற நிலை.. அதையும் விட, உண்ட நேரத்தை விட, அவனை உணர வைத்த நேரம் அதிகம்.. அவளை உணர்ந்த நேரம் அதிகம்..

எல்லாம் மறந்த நிலை மட்டுமல்ல! எல்லாம் துறந்த நிலையும் கூட!

வெட்கமும் தயக்கமும் வர்ஷினியிடம் இருந்து விடை பெற்று சென்றிருந்தது.

ஒரு பதின் வயது முடியும் நிலையில் இருக்கும் பெண்ணை வசியப் படுத்தும் கலை நன்கு வந்தது. அவன் வசியப் படுத்தினானா இல்லை தானாகாவே அவனின் செய்கைகள் அவளை வசியம் செய்ததா.. காலம் தான் சொல்லும்.

உண்மையில் ஈஸ்வர் மயக்கவெல்லாம் இல்லை.. தன்னுடைய உணர்வுகளுக்கு வடிகால் தேட.. அதுவும் அவளால் மட்டுமே முடியும் என அறிந்து தேட.. தானாகவே பெண் மனம் அவன் மேல் பித்தானது. அவன் சொன்னதை மட்டுமல்ல சொல்லாததையும் செய்தாள். ஈஸ்வர் வர்ஷினியிடம் தேடியதை விட.. வர்ஷினியை தன்னிடம் தேட வைத்தது அதிகம்.

அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு தானே.. வர்ஷினியாகத் தேடினால் வேறு, ஆனால் இவன் தேட வைத்தான் என்பது வேறு. ஈஸ்வருக்கு தான் செய்யும் செயலின் வீரியங்கள் புரியவில்லை.

அவளின் வயதிற்கு அதிகமான பக்குவங்கள் வர்ஷினிக்கு இருந்தாலும், அந்தப் பக்குவங்கள் எல்லாம் யோசிக்க கூட இயலாத சூழ்நிலையில் இருந்தாள். தானாகவே இத்தனை வருடங்கள் இருந்த தனிமையை அவனுள் மறக்க முயன்று கொண்டிருந்தாள்.

அன்று தான் வந்த நாளாக “வர்ஷ் ஷாப்பிங் போகலாமா?” என்று ஈஸ்வர் கேட்க..

“ஷாப்பிங்கா, என்ன வாங்க?” என்று கேட்ட வர்ஷினியிடம் “ஏதாவது வாங்கலாம் வா.. கொஞ்சம் தூரம் அப்படியே நடந்து போகலாம், சிங்கப்பூர் பார்க்கலாம்” என,

“நடந்தா? என்னால முடியாது! எனக்கு ரொம்ப டையர்டா இருக்கு!” என,

“இன்னும் மூணு நாள்ல ஊருக்கு போகணும்.. இப்போவாவது சிங்கப்பூர் பார்ப்போம் வா.. என்ன பார்த்தீங்கன்னு யாரவது கேட்டா சொல்ல ஏதாவது உனக்கு தெரியணும் தானே!” என்று கண்ணடித்தான்.

“நீங்க என்னை பார்த்தீங்க, நான் உங்களை பார்த்தேன்னு சொல்லிடறேன்” என்று வர்ஷினி பதிலுக்கு வாயடிக்க..

அவளின் பாவனையில் அசடு வழிந்தவன் “அது உண்மையா இருந்தாலும் யார் கிட்டயும் சொல்லக் கூடாது.. வா ரெண்டு ஃபோட்டோவாவது ஒரு ஞாபகத்துக்கு எடுத்துக்கலாம்” என்று வற்புறுத்தி அவளை வெளியே அழைத்துக் கொண்டு போனான்.

“எனக்கு நடக்க முடியாது!” என்ற போதும் விடவில்லை..

“தினமும் காலையில உன்னை முதல்ல வாக்கிங் போக வைக்கணும்”

“நான் ரொம்ப குண்டா இருக்கேனா?” என்று கவலையாக கேட்க..

“குண்டான்னு இல்லை, ஆனா உடல் உழைப்பு இல்லை” என சொல்லி.. கூடவே “இந்த வாட்டர் பெட் நல்லா தான் இருக்கு” என்று குறும்பு பேச,

“என்ன வாட்டர் பெட்?” என்று புரியாதவளிடம்.. அவளின் உடல் என கண்களால் காட்ட, முறைக்க முயன்று தோற்றாள்.

“வா” என்று அவன் நடக்க “மெதுவா போங்க” என்று அவனுக்கு ஈடு கொடுக்க முயன்றவள்.. “என்ன பண்ணுனீங்க அதை” என்று கேட்க,

புரியாதவன் “எதை?”

“அதுதான் அந்த லம்போகினி”

“அது உனக்காக வெயிட் பண்ணிட்டே இருக்கு. உனக்கு காலேஜ்ல காட்டின அன்னைக்கு நிறுத்தினவன், பின்னே எடுக்கவேயில்லை”

புன்னகைத்தவள் வேறு ஒன்றும் சொல்லவில்லை.. அந்த புன்னகையில் ஏதோ இருப்பதாக தோன்ற “என்ன?” என்றான்.

“ஒன்னுமில்லையே”

“இல்லை! ஏதோ இருக்கு சொல்லு!” என்று வற்புறுத்த..

“அன்னைக்கு நீங்க மட்டும் தான் என் பர்த்டே ஞாபகம் வெச்சிருந்தீங்க. எல்லோரும் மறந்துட்டாங்க!” என,

“இட் ஹேப்பன்ஸ்... இது ரொம்ப மெக்கானிக் வேர்ல்ட், எல்லோரும் ஏதாவது டென்ஷன்ல இருந்திருப்பாங்க, மறந்திருப்பாங்க.. அன்னைக்கு உங்க வீட்ல ஒருத்தன் இருக்கானே, அவன் எல்லோரையும் மறக்க வெச்சான்!” என்று பத்துவை சொல்ல..

“அப்படி சொல்ல முடியாது, ரஞ்சனி அண்ணி என்னை பேச ஆரம்பிச்சாங்க...” என்றவள், பின்பு அதை விடுத்து, “உங்களுக்கு ஏன் பத்துண்ணாவை பிடிக்கலை” என்றாள்.

“எனக்கு எங்க பிடிக்கலை? அதுவும் இப்போ ரஞ்சியோட வீட்டுக்காரன்... அதுக்குரிய மரியாதை நான் எப்பவும் கொடுப்பேன்.. என்னவோ அவன் தான் என்கிட்டே முட்டிக்கிட்டே இருக்கான். ஏன்னு தெரியலை? சரியான முட்டாள் அவன்!”

“என்ன முட்டாள்?” என வர்ஷினி கேட்க..

“பின்னே, கல்யாணமாகி வருஷத்துக்கும் மேல ஆச்சு.. அதுவும் ரஞ்சனி அவளா கல்யாணம் செய்துகிட்டா.. இவன் என்ன பண்றான், அவளுக்கு டிரைவர் வேலை பார்க்கிறதை தவிர.. அதுவும் இப்போ குறைஞ்சிடுச்சு.. பல சமயம் மனசுக்கு அதுதான் கஷ்டமா இருக்கு... அவனை மட்டும் சொல்ல முடியாது, இந்த ரஞ்சனி என்ன பண்றா தெரியலை? அவளே ஏற்படுத்திகிட்ட வாழ்க்கை நல்லா வாழணும்!”

“உனக்கு என்னை பிடிக்குதோ இல்லையோ? ஆனா கல்யாணம் ஆகிடுச்சு. அதை சரி பண்ணிக்கணும், நல்லா வாழணும்ன்னு நீ நினைக்கிற இல்லையா? அந்தப் பக்குவம் ஏன் ரஞ்சனிக்கிட்ட இல்லை!” என

“தன்னை ஓரளவிற்கு சரியாய் தான் அனுமானித்து இருக்கின்றான்” என ஈஸ்வரை வர்ஷினி பார்த்திருக்க, அதை கவனியாமல் அவன் தொடர்ந்தான்.

“குடும்ப பிரச்சனையில அவ தன்னை பணயம் வெச்சிட்டாளோன்னு.. ஒரு வார்த்தை கூட என்கிட்ட பேசலை.. அதுக்கு முன்ன நானும் அவளும் அவ்வளவு க்ளோஸ்.. எதுன்னாலும் நான் அவ கிட்ட தான் சொல்வேன், அவ என்கிட்டே தான் சொல்வா.. இப்போ பல முறை நானும் சரி செய்ய நினைச்சேன், அவளும் நினைச்சா.. ஆனாலும் எதுவும் சரியாகலை. அந்த க்ளோஸ்நெஸ் வரலை!” என்றான் வருத்தமாக..

“பத்துவும் அவளும் க்ளோசா இருந்தா கூட போதும். அப்படியும் தெரியலை” என்ற போது ஈஸ்வரின் குரலில் அவ்வளவு கணமாக ஒலித்தது.. கூடவே “எல்லாம் இந்த அஸ்வின்னால” என்று சட்டென்று கோபத்தை காட்ட..

“அஸ்வின் என்ன பண்ணினாங்க.. அவங்க பயப்படுத்தினா அண்ணி ஏன் பயப்படணும். ரஞ்சனி அண்ணி பண்ணினதுக்கு அவங்க எப்படி பொறுப்பாக முடியும். நான் பார்த்திருக்கேன், பொண்ணுங்க கிட்ட மரியாதையா தான் நடந்தாங்க.. நாம பண்றதுக்கு எப்பவும் அடுத்தவங்களை பொறுப்பாக்கக் கூடாது.. எனக்கு நானே எஜமானன் சொல்றீங்க இல்லையா? அது மாதிரி

நம்ம செயல்களுக்கு நாம தான் பொறுப்பு!” என நீளமாக பேசி முடித்தாள்.

“அம்மாடி என்னை விடவும் நீ பேசற” என்றவன்.. “ஸ்டில் அஸ்வின் ரொம்ப ஆபத்தானவன்” என,

“நான் நம்ம கல்யாணத்துக்கு இன்வைட் பண்ணினேன்!” என்றாள் வர்ஷினி.

“எப்போ? எங்கே?” என்றான் அவளை திரும்பிப் பார்த்து கூர்மையாக..

அந்த ஊடுருவும் பார்வை வர்ஷினிக்கு கோபத்தை கொடுக்க.. “ஏன் நான் கூப்பிடக் கூடாதா?” என விறைப்பாக வினவினாள்.

உடனே இறங்கியவன் “நான் எப்போ அப்படி சொன்னேன்!” என்றான் தன்மையாகவே.

“நீங்க கேட்ட விதம் அப்படி தான் இருந்தது!”

“அது உன்னை கொண்டு இல்லை, அவனை கொண்டு” என,

அப்போதும் அவளின் முகம் சமாதானம் ஆகவில்லை.. “ப்ச், வர்ஷ்! என்ன இது?” என்று சலித்தவன்.. “உனக்கு ஆளுங்களை அடையாளம் கண்டுபிடிக்க தெரியாது” என,

“எனக்கு தெரியும் ஆளுங்களை” என முறுக்கினாள்.

“உனக்கு தெரியாது” என்றான் மீண்டும் ஸ்திரமாக.

“ஆமாம்! எனக்கு தெரியாது! நிஜம் தான்! உங்களை எனக்கு தெரியலை தானே! எனச் சொல்ல...

“என்ன தெரியலை?” என்றவனின் குரலில் பொறுமை போய் கோபம் ஏற ஆரம்பித்தது.

“நீங்க என்கிட்டே தப்பா நடந்துக்குவீங்கன்னு தெரியலை!” என,

அஸ்வின் பற்றி பேசும் போது வர்ஷினி தன்னை பற்றி பேசியது ஈஸ்வருக்கு அவ்வளவு கோபத்தை கொடுத்தது.

“அவனைப் பத்தி பேசும்போது, நீ என்னை அதுல சேர்ப்பியா. நான் அவ்வளவு தானா உனக்கு” என்றவனின் குரலில் இருந்த தீவிரம் வர்ஷினியை அச்சுறுத்தியது.

“அது.. நான்.. என்னை சொன்னேன்!” என்றாள் சுருதி இறங்கிய தடுமாறிய குரலில்...

“தப்பிக்கூட இந்த தப்பை பண்ணாதே... நீ என்னை என்ன வேணா பண்ணு, திட்டு, அடி, கோபப்படு.. ஆனா அடுத்தவங்களோட கம்பேர் பண்ணாதே.. அடுத்தவங்களை பத்தி பேசும் போது என்னை அதுல கொண்டு வராதே. நான்.. நான் தான்! அது தப்போ! சரியோ!” என அடிக்குரலில் சீற..

“ம்ம்!” என்று தலையாட்டி, “சாரி” என்றாள்.

“சாரி கேட்டா மட்டும் எல்லாம் சரியாகிடாது வர்ஷ்.. பேசும் போது யோசிச்சு பேசு... இப்போ நமக்கு கல்யாணமாகிடுச்சு, ஆனாலும் நான் உன்கிட்ட அப்போ நடந்தது சரியாகிடாது புரிஞ்சதா.. நடந்த தப்பு, தப்பு தான்! அதை சரி பண்ண எல்லாம் முடியாது! ஆனா அதுக்கான தண்டனை வாழ்க்கை முழுசும் குடுக்கணும்னு என்ன? மறந்துடுவோம் அதை! ஏன்னா அந்த தண்டனை எனக்கு நீ குடுக்கும் போது, உனக்கும் சேர்த்து தான் அது!” என்றான் சற்று சோர்வாகவே.

மௌனமாக அதை கிரகித்து நடந்தாள், பதில் பேசவில்லை.. அவனும் பதிலை எதிர்பார்க்கவெல்லாம் இல்லை.. அவனும் நடக்க..

அதற்குள் அவனின் கைபேசி சிணுங்க, எடுத்து யாரென்று பார்த்தால் முரளி..

“சொல்லுடா” என..

“அப்பாக்கு ரொம்ப சீரியஸ்டா.. ஒரு நாள் கூட தாண்டறது கஷ்டம் சொல்றாங்க! நீங்க வந்துடறீங்களா?” என்று நேரடியாக விஷயத்திற்கு வர,

“ஓஹ்” என்று ஒற்றை வார்த்தையில் முடித்துக் கொண்டவன்.. “நான் டிக்கெட் பார்த்துட்டு கூப்பிடறேன்” என வைத்து உடனே ஏஜென்டிற்கு அழைத்தான்....

வர்ஷினி அவன் சொன்னதன் தீவிரத்தை புரிந்து கொள்ள முயன்று கொண்டிருந்தாள். அதனால் அவன் யாரிடம் ஃபோன் பேசினான்? என்ன பேசினான்? எதையும் கவனிக்கவில்லை.

அவன் ஏஜென்டிடம் பேசி டிக்கெட் கேட்டு கன்ஃபர்ம் செய்தது கூட தெரியவில்லை.

பேசி முடித்தவன்.. "வீட்டுக்கு போகலாம் வர்ஷ்!" என அவளிடம் சொன்ன போது தான் சுற்றம் உணர்ந்தவள், "ஏன் கோபமா?" என,

"கோபமா?" என திரும்பக் கேட்டவன்.. "நான் ஃபோன் பேசினது கவனிக்கலையா?" என,

"இல்லையே!" என்பது போல தலையாட்டியவளிடம்.. "அப்பாக்கு கொஞ்சம் சீரியஸ் போல, வந்தா பரவாயில்லைன்னு முரளி சொன்னான்" என,

"ஓஹ்" என்றாள் ஈஸ்வரை போலவே...

"இன்னும் நமக்கு ரெண்டரை மணி நேரத்துல ஃபிளைட்.. கிளம்பணும்" என..

வீட்டிற்கு வந்து அவசரமாக பேக் செய்து பார்த்தால்.. வர்ஷினி தடுமாறிக் கொண்டிருந்தாள்.. கவனம்.. செய்யும் செயல்களில் இல்லை எனப் புரிந்தவன்..

"விடு! நான் பண்றேன்!" என வேகமாக செய்து.. அவர்கள் விமான நிலையம் வந்த போது.. இன்னும் நேரம் இருக்க.. "நாம இது எதிர்பார்த்தது தானே வர்ஷி" என,

"ம்ம்!" என்பது போல தலையாட்டல் மட்டுமே, பேசவில்லை. திரும்பவும் ஈஸ்வர் சமாதானம் சொல்ல வர.. "அப்புறம் பேசலாமா?" என்று கண்களை மூடிக் கொண்டாள்.

வர்ஷினியின் கைகளை பிடித்துக் கொண்டவன், "ரொம்ப ஸ்ட்ரெஸ் குடுக்காதே! நிறைய யோசிக்காதே!" என்று மட்டும் சொன்னான்.

ஆனால் ஃபிளைட்டின் கால் கேட்கும் வரை, பிடித்த கைகளை மட்டும் விடவில்லை.

இந்தியா வரும் வரையிலுமே வர்ஷினியின் அமைதி நீடித்தது.. இந்த நாட்களாக பார்த்த வர்ஷினியாகத் தெரியவில்லை ஈஸ்வருக்கு.. எதையும் பகிராமல் அவனிடம் இருந்து தள்ளி நிற்பது போன்ற உணர்வு...

உண்மையில் தன்னை பகிர்ந்தவளால் தன்னுடைய உணர்வுகளை பகிர முடியவில்லை.. ஏனென்றால் அது அவளுக்கு பழக்கமில்லை.. ஈஸ்வரிடம் மட்டுமல்ல யாரிடமுமே.. அதனால் ஈஸ்வரிடம் எதுவும் பேசாமல் அமைதியாகவே வந்தாள்.

அவர்கள் வந்த போது மாலை ஏழு மணி.. நேரே ஹாஸ்பிடல் தான் சென்றனர்.. செயற்கை சுவாசத்தின் உதவியுடன் இருந்தார். நினைவு தப்பவில்லை, விழிப்பதும் கண்களை மூடுவதுமாய் இருந்தார்..

ரூமின் உள் அவர் மட்டுமே.. கூட கமலம்மாவும்! ஆனால் வெளியில் எல்லோரும் இருந்தனர்.. தாத்தா, முரளி, பத்து, ரஞ்சனி என, ஷாலினி மட்டுமில்லை.. நிறை மாத கர்ப்பிணி என்பதால் அவளை ஹாஸ்பிடல் அழைத்து வரவில்லை...

ரஞ்சனி இவர்களை பார்த்தும் வர்ஷினியை அழைத்து உள்ளே செல்ல, ஈஸ்வர் வெளியே தேங்கி நின்றான். முரளி அவனின் அருகில் வந்தவன்..

“வர்ஷினியை பார்க்க தான் உயிரை பிடிச்சிட்டு இருக்கார் போல... ரொம்ப கஷ்டப் படறார்” என்று சொல்லும் போது குரல் கமறியது. ஈஸ்வர் எதுவும் பேசாமல் அவனின் புஜங்களை ஆதரவாய் பிடித்தான்.

பத்துவும் அவனருகில் வரவில்லை. ஈஸ்வரும் அவனின் அருகில் செல்லவில்லை. பின்பு முரளியிடம் இருந்து தள்ளி தாத்தாவிடம் போய்  அமர்ந்து கொண்டான்.

பெற்ற மக்களை தாங்கள் இருக்கும் போதே தூக்கிக் கொடுப்பது என்பது பெரிய சாபம்.. அமைதியாய் அவர் அமர்ந்திருக்க.. ஈஸ்வரும் அவரின் சென்று அமர்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் கதவை திறந்த வந்த ரஞ்சனி.. “நீ போ விஸ்வா, அவர் கண் திறக்கலை. பல்ஸ் ஹார்ட் பீட் எல்லாம் அதிகமா இருக்கு” எனச் சொல்ல.. உள்ளே சென்ற போது வர்ஷினி ராஜாராம் கண் பார்வையில் படும் படி நின்றிருந்தாள். அவரின் கண்கள் மூடி இருக்க..

வர்ஷினியின் கைகளை எடுத்து, அவரின் ட்ரிப்ஸ் ஏறிக் கொண்டிருந்த கை மேல் ஈஸ்வர் வைக்க .. மெதுவாக கண் திறந்தார்..

“அப்பா!” என்ற வர்ஷினியின் குரல் அவளுக்கே கேட்கவில்லை.. ஒரே வாரத்தில் இன்னும் உருக்குலைந்து போயிருந்தார்.

கண்கள் வர்ஷினியை பார்த்ததும் அவளின் மீது தேங்கி நிற்க.. ஈஸ்வர் அவளின் பின்னால் வந்து நின்றான். வர்ஷினியும் அவளுக்கு பின்னால் நின்ற ஈஸ்வரும் ராஜாராமின் அலைபாயும் மனதிற்கு அமைதி கொடுத்தனர். ஈஸ்வரின் கண்களும் அவரிடம் அதை தான்

உரைத்தது.. “நானிருக்கிறேன் வர்ஷினிக்கு” என்பது போல.. தானாக கண்களை திரும்ப மூடிக் கொண்டார்.

அதன் பிறகு கண்களை அடுத்த நாள் அவரின் எல்லா இயக்கமும் நிற்கும் வரை திறக்கவேயில்லை. எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அமைதியாகவே அவரை காடு கொண்டு சென்றனர் முரளியும் பத்துவும்.

வர்ஷினியும் தன் தோள் சாய்வாள், தன்னை தேடுவாள் என்று ஈஸ்வர் நினைக்க.. அவனை தேடவே இல்லை.. தனிமையை தான் தேடினாள். அவனாக தேடி சென்றாலும் தனிமையை மட்டுமே விரும்பினாள்.

நன்றாகத் தான் பேசினாள்.. ஆனால் அவளின் துக்கத்தை பகிரவே இல்லை!

ஈஸ்வர் மனதளவில் மிகவும் சோர்ந்து போனான்.. அப்போது திருமணம் ஆனா நாள் முதலாக நான் அவளுக்கு உணர்த்தியது என்ன? ஏன் என்னை தேடவில்லை? ஏன் என்னுடன் எதையும் பகிரவில்லை?

துக்கத்தை அடக்கியபடி கலங்கிய முகத்தோடு தான் அமர்ந்திருந்தாள். எந்த நேரமும் அழுதுவிடும் பாவனை தான் ஆனால் அழவில்லை.

ஈஸ்வருக்கு நன்கு புரிந்தது, அவள் தனிமையில் நிறைய அழுதிருக்கின்றாள், ஆயினும் யார் முன்னிலையிலும் அழவில்லை என. யார் முன்னிலையில் அழுதால் என்ன அழாவிட்டால் என்ன .. தன் முன் கூட அழவில்லை?

அப்போது உடளவில் மட்டும் தான் நெருக்கமா? மனதளவில் இல்லையா? இந்த திருமணம் என் மூலம் அதை மட்டும் தான் அவளுக்கு கொடுத்திருக்கின்றதா?

ஆனால் நான் திருமணம் முடிந்த பின்னும்.. இன்னும் அவளை தான் பார்க்கிறேன்! அவளை மட்டும் தான் தேடுகின்றேன்! கண்டிப்பாக உடல் ஈர்ப்பு மட்டும் கிடையாது எனத் தெளிவாக புரிய, “எனக்கு அவளை பிடித்திருக்கின்றது, மிகவும் பிடித்திருக்கின்றது.. எஸ், ஐ லவ் ஹெர் எ லாட்” என தனக்குள் சொல்லிக் கொண்டான்.

“அவளுக்கு அப்படி இருக்கின்றதா இல்லையா?” என்று யோசனைகள் மேலிட அவளை பார்த்திருந்தான்.

**சிதைத்தாயா நீ? சிதைந்தாயா நீ? சிதைய வைப்பதும் நீயே! சிதைந்ததும் நீயே! சிதைத்ததும் நீயே!**

## அத்தியாயம் ஐம்பத்தி ஐந்து :

**எனை மாற்றும் காதலே!**

ஏர்போர்டில் இருந்து நேரே ஹாஸ்பிடல் சென்று இருவரும் ஈஸ்வரின் வீடு வந்த போதும், அடுத்த நாள் உடனே ஹாஸ்பிடல் சென்று விட.. பின்பு அப்பாவும் தவறி விட.. வர்ஷினி அவளின் வீட்டிலேயே தான் இருந்தாள். இங்கு வரவில்லை அதனால் ஈஸ்வரின் குடும்பத்தினருடன் அதிகம் பழகும் வாய்ப்பு இல்லை.

ஈஸ்வரை “இரு” என்று சொல்லவில்லை.. அதனால் அவன் அவனின் வீட்டில் இருந்து வந்து வந்து தான் போய் கொண்டிருந்தான். வர்ஷினியாகவும் அவனை தேடவில்லை.. அவனாலும் அருகில் செல்ல முடியவில்லை.

சரி வீட்டிற்கு வரட்டும் பார்த்துக் கொள்ளலாம் என விட்டு விட்டான். மூன்று நாள் காரியங்களும் முடிந்து விட.. அழைப்பதா வேண்டாமா என்ற தயக்கம் ஈஸ்வருக்கு. மதியம் எப்பொழுதும் போல அவனின் வேலைகளைப் பார்க்க கிளம்பிவிட்டான். ஆனால் மாலைக்கு மேல் அவளை தனியாக விட மனதேயில்லை. அவளின் வீட்டுனருடன் தான் இருந்தாள், ஆனாலும் அவளை தனியாக விட்டு விட்டது போன்ற உணர்வு தான் ஈஸ்வருக்கு. இரவு வந்தவன், “இன்னைக்கு வீட்டுக்கு வந்துடறியா வர்ஷி” என,

“சரி” என்பது போல தலையாட்டியவள், உடனே கமலாம்மாவிடம் சொல்லிக் கொண்டு அவனுடன் வந்தும் விட்டாள். வந்த பிறகு கிடைத்த இரவின் தனிமையில் தான் அவனால் வர்ஷினியிடம் பேசவே முடிந்தது.

ஆனாலும் ஈஸ்வருக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை.. என்ன கேட்க முடியும்.. நீயேன் என்னிடம் எதையும் சொல்லவில்லை என்றா.. சொல்வதற்கு என்ன இருக்கின்றது உண்மையில் ஒன்றுமில்லை தான்.

“காலேஜ் எப்போ இருந்து போற?”

“இன்னும் ஒரு ரெண்டு மூணு நாள் கழிச்சு” என்றவளிடம், வேறு என்ன பேசுவது என்றே தெரியவில்லை ஈஸ்வருக்கு.

“சரி, நீ தூங்கு!” என்று லேப் டேப்பை எடுத்து அமர்ந்து கொள்ள.. ஒன்றும் பேசாமல் வர்ஷினியும் படுத்துக் கொண்டாள். தன் வேலையில் ஈஸ்வர் மூழ்கி விட.. கிட்ட தட்ட அரை மணிநேரம் கழித்து அவன் தன் கவனத்தை வர்ஷினியிடம் திருப்பிய போது.. படுத்த படி இருந்தாலும் விழித்து இருந்தாள்.. கண் மூட வில்லை.

“ஏன், தூக்கம் வரலையா வர்ஷி?”

“வரவில்லை” என்பது போல ஒரு தலையசைப்பு மட்டுமே... லேப்பை வேகமாக மூடி வைத்து எழுந்து அவளின் அருகில் அமர்ந்தான். ஈஸ்வர் அமர்ந்ததும் வர்ஷினியும் எழுந்து சுவர் சாய்ந்து அமர்ந்து கொள்ள,

“உங்கப்பாவோட இழப்புக்காக உனக்கு வருத்தம் இருந்தா ஓகே... ஆனா யாருமில்லைன்னு நீ நினைக்கக் கூடாது.. நமக்கு கல்யாணமாகிடுச்சு, நான் உன் கணவன், அப்படின்றது கூட ரெண்டாம் பட்சம்.. ஆனா இந்தக் கல்யாணம் நடந்து இருக்கலைன்னா கூட எப்பவும் நான் உனக்கு இருந்திருப்பேன்” என்றான் உணர்வுப் பூர்வமாக.

அவனே அப்படி பேச வேண்டும் என்று நினைக்கவில்லை ஆனால் இப்போது பேச பேச.. தான் அப்படி தான் இருந்திருப்போம் என்று அவனுக்கே தோன்றியது.

ஈஸ்வர் பேச ஆரம்பித்த பொழுது சாதரணமாக அவனை பார்த்திருந்தவள்.. பேச பேச அவனையே விழிஎடுக்காமல் பார்த்தாள்.

அந்த நீல நிறக் கண்களை பார்க்கும் போது மனதில் எழும் அலைபுருதல் இப்போது இல்லை.. அந்த கண்களை பார்க்கும் பொழுது உண்மையில் அவன் மனம் அமைதியாக உணர்ந்தது. “நான் சொன்னது உண்மை” என்ற நம்பிக்கையை அதனுக்கு கொடுக்க விழைந்தான். ஈஸ்வரின் பார்வையில் உடல் மொழியில் இருந்த உறுதி வர்ஷினியை அதனுள் இழுத்தது.

புன்னகைக்க முயன்றாள்.. ஆனாலும் முடியவில்லை..

“ஏன்? என்ன விஷயம்?” என..

“ஒன்னுமில்லையே” என்றாள்..

“அப்பா இறந்து இருக்காங்க.. அந்த துக்கம் உனக்கு அதிகமா இருக்கும். யார் கிட்டயாவது பேசினா தானே குறையும். நீ ஏன்

என்கிட்ட எதுவுமே பேசலை" என்று நேரடியாக கேட்டு விட்டான்.

"என்ன பேசணும்?" என்றாள் புரியாமல்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் இப்போது ஈஸ்வர் தான் விழித்துப் பார்த்தான்.

பிறகு "கஷ்டமா இருக்குன்னு தானே அழுத, அந்த கஷ்டத்தை ஏன் சொல்லலை? என்னோட பகிர்ந்துக்கலை?" என்று வாய் விட்டே கேட்டான்.. அவனிற்கு வர்ஷினியோடு எந்த இடைவெளியும் இருக்கக் கூடாது என்பதில் தெளிவாய் இருந்தான். அதனால் என்ன நினைத்தானோ அதை வாய் விட்டுக் கேட்டான்.

"நான் எப்பவும் தனி தானே, அதனால எப்பவும் யாரோடையும் ஷேர் பண்ண மாட்டேன்.. இப்போ புதுசா அதனால வரலையோ என்னவோ"

"என்ன நீ தனி.. எப்பவும் உங்கப்பா பார்த்துக்கிட்டார் தானே"

"நான் ப்ளஸ் டூ முடிச்ச பிறகு தான் வீட்ல தங்க ஆரம்பிச்சேன்.. அதுக்கு முன்ன லீவ்க்கு மட்டும் தான் வருவேன்.. எல்லோரும் நல்லா பேசினாலும் பழகினாலும் லீவ்க்கு மட்டும் வந்து போகும் போது நான் இருந்த ஹாஸ்டல் தான் எனக்கு வீடு.. இது இல்லைதானே!"

அவள் சொல்லிய விதம் மிகவும் சாதரணமாய் இருந்தது.. அப்படி ஒன்று ஏங்கி வருத்தப்பட்டு சொன்ன மாதிரி எல்லாம் இல்லை.

"முன்னே ரொம்ப ஃபீல் பண்ணுனியோ?" என்ற அவனின் கேள்விக்கு..

"தெரியலை எனக்கு இப்போ அந்த ஞாபகங்கள் எல்லாம் இல்லை.. கொஞ்சம் எனக்கு புரிய ஆரம்பிச்ச உடனே இதுதான்னு என்னால அக்சப்ட் பண்ண முடிஞ்சது. அதனால் பெருசா ஒன்னும் ஃபீல் பண்ணலை. அதனால் தான் திரும்ப எனக்கு அந்த மாதிரி ஒரு பற்றில்லாத வாழ்க்கை இருக்கக் கூடாது.. எனக்கு என்னோட வீடு வேணும்... என்னை மட்டுமே லவ் பண்றவங்க வேணும்னு நினைச்சேன்"

"உனக்கு நான் இன்னும் அந்த ஃபீல் குடுக்கலையா?" என நேரடியாகக் கேட்டான் அவளின் கண்களைப் பார்த்து..

இப்படி ஒரு கேள்வியை வர்ஷினி எதிர்பார்க்கவும் இல்லை அவளுக்கு தெரியவும் இல்லை. அந்த கண்கள் சற்று கலவரமாக

ஈஸ்வரை பார்க்க.. “நான் இருக்கும் போது எதுக்கும் இப்படி பார்க்கக் கூடாதுனு சொன்னேன் இல்லையா?”

“இல்லை, நான் இப்படி எல்லாம் யோசிச்சது இல்லை”

“இது யோசிக்கற விஷயம் இல்லை, தானா வர்ற விஷயம்.. ஒகே தூங்கு!” என்றவன் லைட் ஆஃப் செய்து வெளியே போகப் போக,

“எங்கே போறீங்க?”

“தண்ணி இல்லை, எடுத்துட்டு வர்றேன்” என.. “எனக்கு பசிக்குது பால் குடிக்கட்டுமா?” எனக் கேட்டாள்.

“ஹேய், என்ன நீ? என்னை கேட்கற? இது உன் வீடு, வா கீழ போகலாம்” என அவளை அழைத்து கீழே வந்த போது.. வீடு உறங்கியிருக்க.. மலர் மட்டும் ரூமை விட்டு எதற்கோ வந்தவர், இவர்களை பார்த்து, “என்ன?” என்க..

“பால் குடிக்கலாம்னு வந்தோம் மா!” என ஈஸ்வர் சொல்ல..

“முதல்லயே குடிச்சிருக்க வேண்டாமா? இப்போ கேட்கற, நேரம் பாரு பதினொன்னு!”

“நான் தான் பசிக்குது சொன்னேன் அத்தை” என்றாள் உடனே வர்ஷினி..

“நீ தான் சொன்னாயா, அப்போ ஒகே! இந்த பையன் எதையுமே நேரத்துக்கு செய்ய மாட்டான்” என்று சொன்னவர், “கொஞ்சமா பசிக்குதா? ரொம்ப பசிக்குதா?” என்று ஒரு கேள்வியைக் கேட்க..

“எதற்கு?” என்பது போல வர்ஷினி பார்க்க..

“கொஞ்சமா பசிச்சா பால் போதும், ரொம்ப பசிச்சா தோசை சுட்டு தர்றேன்” என அவரின் பாவனையில், “ரொம்பப் பசிக்குது” என்று அவள் சொல்லி விட,

“சரி வா!” என்று அழைத்துப் போனவர்.. வேகமாக தோசைக் கல்லை வைத்து..

கொஞ்சம் சட்னியும் அரைக்க.. இதையெல்லாம் ஆச்சர்யமாகப் பார்த்திருந்தாள் வர்ஷினி.. உண்மையில் அவளுக்கு எதுவும் தெரியாது.. ஏன் தோசை ஊற்றக் கூட தெரியாது.

எதிலும் தலையிடாமல் ஈஸ்வர் பார்த்திருந்தான்.

“என்ன சாப்பிட்ட நீ ராத்திரி?” என,

“ம்ம்ம்” என யோசித்தவள், “ஞாபகமில்லை” என சொல்ல,

“என்ன ஞாபகமில்லையா?” என்றார் ஆச்சர்யமாக மலர்.. “ம்ம், ஞாபகம் வரலை” என்று அவள் தலையைப் பிடிக்க.. என்னவோ அவளின்  செய்கைகள் குழந்தைத்தனமாகத் தான் இருந்தது. திருமணம் நிச்சயம் ஆன நாள் முதலாக அவளைப் பார்க்கும் போது எல்லாம் அவளைத் தான் கவனித்தார். பல சமயம் வளர்ந்த பெண் என்றாலும் சில சமயம் தடுமாறும் குழந்தையாக தான் தோன்றினாள்.

உண்மையில் அவள் உண்ணவே இல்லை. அதுவும் அவளுக்கு நினைவில் இல்லை. அப்படி மனதில் ஒரு அலைபுருதல் தடுமாற்றம் அப்பா இறந்த நாளாக. வெளியில் எதையும் காட்டிக் கொள்ளும் வழக்கமில்லாததால் யாருக்கும் தெரியவில்லை.

“சரி வா, முதல்ல சாப்பிடு!” என.. நான்கு தோசைகள் சாப்பிட்ட பிறகே நிமிர்ந்தாள்.. “நல்லா இருந்தது அத்தை” என..

“மா! எனக்கு இப்படி எப்போவாவது நெய் ரோஸ்ட், ஆனியன் ரோஸ்ட், தக்காளி ரோஸ்ட்ன்னு, வெஜிடபள் ரோஸ்ட்ன்னு இப்படி வரிசையா சுட்டு போட்டு இருக்கியா? அதுவும் ராத்திரி பதினோரு மணிக்கு என்னை பால் குடிக்க திட்டுட்டு” என ஈஸ்வர் வாய் பேசினான். உண்மையில் அப்படி தான் மலர் வர்ஷினிக்கு மளமளவென்று சுட்டுக் கொடுத்தார்.

“ஏன்டா பேச மாட்டீங்க? சமைக்க ஆள் இருந்தாலும், நானே பார்த்து பார்த்து பசங்களுக்கு சமைச்சு போட்டேன் தானே! நீ இதுவும் பேசுவ? இன்னமும் பேசுவ?” என முறுக்கியவர், “இவ சாப்பிட்ட மாதிரியே எனக்கு தெரியலை, முதல் முதல்லா நான் சமைச்சு தர்றேன் வர்ஷினிக்கு, எப்படி சாதா தோசை சுட முடியும்?”

அம்மாவின் செய்கை ஈஸ்வருக்கு அப்படி ஒரு மன நிறைவை கொடுத்த போதும், அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் “மா, இந்த டைலாக் எல்லாம் அப்புறம் பேசு, முதல்ல எனக்கு ரெண்டு தோசை சுடு” என அதட்ட,

வர்ஷினி உண்டு முடித்திருந்ததனால், தன் கணவனுக்கு சுட விரும்புவாளோ என நினைத்து, “நீ தோசை ஊத்துறையா வர்ஷினி” எனக் கேட்டார்..

“எனக்கு சுடத் தெரியாது அத்தை” என்றாள் தயங்கி தயங்கி..

“என்ன தோசை சுடத் தெரியாதா?” என்றார் ஆச்சர்யமாக.

“ம்கூம் தெரியாது?” என,

“அப்போ சிங்கப்பூர்ல என்ன பண்ணுனீங்க?” என, “வெளில சாப்பிட்டோம் அம்மா” என அவசரமாக ஈஸ்வர் சொல்ல வரும் முன்னே,

“இவர் தான் சமைச்சார்!” என்று வர்ஷினி உண்மையை போட்டு உடைத்து விட,

“என்ன?” என ஈஸ்வரை முறைத்தவர், “விஸ்வா! இதுக்கு பேர் தான் சமையல் கட்டுன்னு, உனக்கு தெரியும்னு கூட எனக்கு தெரியாதேடா” என மலர் சொல்ல,

“அதும்மா அங்க சிங்கப்பூர்ல தனியா இருந்த போது, நான் தானே சமைச்சிக்கிட்டேன். அதனால கொஞ்சம் பழக்கம், நம்ம மாதிரி எல்லாம் இல்லைம்மா, இருக்குற இலை தலை எல்லாம் போட்டு அப்படியே டிஷ் பண்ணிடலாம்” என்று அசடு வழிந்தவன், “இனிமே தானேம்மா உன் கூட இருக்கப் போறா, எல்லாம் நீ சொல்லிக் குடுத்துடு!” என்று ஈஸ்வர் சமாளிக்க..

வர்ஷினியும் அவசரமாக “நான் கத்துக்கறேன்!” என்று சொல்ல,

“கத்துக்கணும், கண்டிப்பா!” என்று வர்ஷினியிடம் சொன்னவர்.. “குழந்தைங்க பிறக்கும் போது நீதான் பார்த்துக்கணும், அவங்களுக்கு வேண்டியதை சமைச்சி குடுக்கத் தெரியணும்!” என,

“நீங்க பார்க்க மாட்டீங்களா ம்மா!” என்று ஈஸ்வர் இடை புக,

அவனை விட்டு வர்ஷினியிடம் திரும்பியவர்.. “எத்தனை பேர் இருந்தாலும் அம்மா பார்த்துகிட்ட மாதிரி வராது.. நாம எவ்வளவு தான் விழுந்து விழுந்து பார்த்தாலும்.. நாளைக்கு அவங்க நம்மளை எந்த அளவுக்கு கன்சிடர் பண்ணுவாங்கன்னு தெரியாது..இருந்தாலும் குழந்தைங்கன்றது கடவுள் நமக்கு குடுக்குற வரம் மட்டுமில்லை, பொறுப்பும் கூட.. அவங்க அவங்களை பார்க்கற வரை நம்ம அவங்களைப் பார்த்துக்கணும்.. அப்புறம் கடவுள் விட்ட வழி!” என,

“மா! என்ன இப்படி பேசறீங்க?” என,

“ப்ச்! தோணினது சொன்னேன்!” என்று ஈஸ்வரிடம் சொன்னவர்.. உடனே வர்ஷினியிடம் திரும்பி,

“அப்பப்போ நான் இவன் கிட்ட ரஞ்சனி கிட்ட எல்லாம் இப்படி தான் பேசுவேன், அதையெல்லாம் நீ கண்டுக்கக் கூடாது, தப்பாவும் எடுக்கக் கூடாது. இது அவங்களுக்கு மட்டும் தான் சரியா?” என்று குழந்தைக்கு சொல்வது போல சொல்ல..

“ம்ம்!” என்று வர்ஷினி தலையை தலையை ஆட்டினாள்.

இருவரையும் முறைத்துப் பார்த்தான். “உன்கிட்ட பேசி பேசியே எனக்கு பசிக்குது, போடா! தோசை சுடு! உன் பொண்டாடிக்கு மட்டும் தான் சுடுவியா! எனக்கு மாட்டியா?” என,

பதிலே பேசாமல் ஈஸ்வர் எழுந்து சமையல் அறை சென்றான். “ஏன் அத்தை அப்படி பேசறீங்க? அவர் என்னைக் கல்யாணம் பண்ணினது உங்களுக்கு பிடிக்கலையா?” என,

“ஆங்! இவள் என்ன கேட்கிறாள்?” என்று பார்த்தார் மலர்.. எல்லாம் மனதிற்குள் வைத்து ஒன்றுக்கு இரண்டாய் கற்பனை செய்து, திரித்து சண்டையிடும் மாமியார் மருமகள் மத்தியில் வர்ஷினியின் இந்த நேரடியான கள்ளமில்லா கேள்வி, அவரை சற்று ஆச்சர்யப்படுத்தியது.

“உண்மையை சொல்லட்டுமா? பொய் சொல்லட்டுமா?” என்றார்.

அவர் கேட்ட பாவனையில் “உண்மையே சொல்லுங்க அத்தை!” என்றாள் ஒரு மென்னகையுடன்,

“எனக்கு பதினேழு வயசுல கல்யாணமானது.. இங்க வீட்ல எனக்கு பெருசா வேலையே கிடையாது! எல்லாம் அத்தையும் அக்காவும் பார்த்துக்குவாங்க, அதனால ஈஸ்வரும் ரஞ்சனியும் பிறந்த பிறகு என்னோட முழு நேரமும் அவங்களோட மட்டும் தான். என் பிள்ளைகள்ன்னு பார்த்து பார்த்து வளர்த்தேன்.. என் பசங்க எல்லாத்துலயும் சிறந்தவங்கன்னு கர்வம் கூட”

“ஆனா வாழ்க்கையோட ரொம்ப முக்கியமான முடிவுகளை எடுக்கும் போது ஈஸ்வராவது என்கிட்டே தகவல் சொன்னான், ஆனா அவனும் கேட்கலை.. இந்த ரஞ்சி என்கிட்டே அந்த தகவலைக் கூட சொல்லலை”

“நான் இந்த மாதிரி பிள்ளைகள்ன்னு அவங்க பின்னாடியே சுத்தி முடிச்சிட்டேன்.. ஆனா அவங்க..?” என்று அவர் பேசும்போது குரல் கலங்கிற்று.

“அது அந்த வருத்தம் தான் அப்பப்போ பேச வைக்கும்.. எங்கே தப்பிப் போயிட்டனோன்னு” என,

“அது அப்படி இல்லை அத்தை.. நீங்க அவங்களுக்கு சின்ன வயசுல இருந்தே முடிவெடுக்குற சுதந்திரத்தை கொடுத்து அவங்களை வளர்த்து இருக்கீங்க. உங்க முடிவுகளை அவங்க மேல திணிச்சு இருக்க மாட்டீங்க. அதன் வெளிப்பாடு தான் இது.. இதுல நீங்க எங்க தப்பிப் போனிங்க?”

“பாருங்க! நான் அப்பாவோடவே இல்லை! ஆனா எல்லா விஷயத்தை அவர்க்கிட்ட கேட்காமையோ, சொல்லாமையோ செஞ்சது இல்லை.. அதுக்காக அவர் என்னை சிறப்பா வளர்த்தாரா என்ன? லீவ்ல தான் வீட்டுக்கு வருவேன்.. எப்போவாவது தான் என்னை வந்து பார்ப்பாங்க.. நான் மட்டுமில்லை பத்துண்ணாவும் முரளிண்ணாவும் கூட அப்படித் தான்!”

“பிறப்பு வளர்ப்புன்னு ஒன்னு இருக்கு! ஆனா அதையும் விட அவங்க அவங்க தனித்தன்மைன்னு ஒன்னு இருக்கு.. நடக்கற எதுக்கும் யாரும் பொறுப்பாக முடியாது!” என,

சற்று முன் தன்னிடம் தடுமாறி நின்ற பெண்ணா இவள்? என தான் மலருக்கு தோன்றியது. “உன்கிட்ட ஏதோ இருக்கு, இல்லை என் பையன் எப்பவும் நான் தான் பெஸ்ட், எனக்கு பெஸ்ட் தான் வேணும்னு சொல்றவன், உன்னை செலக்ட் பண்ணியிருக்க மாட்டான்” என்று அவர் சொல்லும் போது ஈஸ்வர் தோசையுடன் வந்தான்..

“நான் எங்கே செலக்ட் பண்ணினேன்.. நானே என்னையும் மீறி போனேன் நான் செலக்ட் பண்ணின ஐஸ்வர்யாவை விட்டு” என மனதினில் நினைத்துக் கொண்டே வந்தான்.

ஆனாலும் எதுவும் பேசாமல் தோசையை வைத்துப் போக, மலர் சாப்பிட ஆரம்பித்தார்.

ஈஸ்வர் சுட்டு முடித்து மூவருக்கும் பால் எடுத்து வரும் வரை மலர் வர்ஷினியிடம் பேச.. அவளும் பேசிக் கொண்டிருந்தாள். இயல்பிலேயே மலர் அதிகம் பேசுபவர் என்று வர்ஷினிக்கு நன்கு புரிந்தது.

அதிகம் பேசும் வழமை வர்ஷினிக்கு இல்லாவிட்டாலும் அவருக்காக பேசிக் கொண்டிருந்தாள்.

பால் எடுத்து வந்த ஈஸ்வர் “சீக்கிரம் தோசை சுட கத்துக்கோ வர்ஷி” என,

“ஏண்டா? ரெண்டு தோசை அம்மாக்கு சுட்டு குடுக்கறதுக்குள்ள உனக்கு முடியலையா?”

“மா! நான் அப்படி சொல்லலை, அவளையும் கத்துக்க சொல்றேன்”

“ஏன் வர்ஷி உனக்கு எந்த வேலையும் கத்துக் கொடுக்கலை, கமலம்மா உன்னை கவனிக்க மாட்டாங்களா?” என மலர் கேட்க,

“வீட்ல ரெண்டு சமையல்காரங்க இருக்காங்க.. சோ, நாங்க யாருமே கிச்சன் பக்கமே போகமாட்டோம்.. அதுவுமில்லாம நான் இங்கே வந்த பிறகு அப்பாக்கு ரொம்ப முடியாம போச்சு, அதனால எப்பவும் அம்மா அப்பா கூடத் தான்”

“ஆனாலும் அப்பா சொன்னா செஞ்சிருப்பாங்க. அப்பா சொல்லாம எதையுமே செய்ய மாட்டாங்க!” என விளக்கம் கொடுக்க..

இவள் இதை முன்னமே யோசித்து இருக்கின்றாள் என்பது போல ஈஸ்வருக்கு தோன்றியது. நிறைய அவளுக்காக அவளே யோசித்து இருக்கின்றாள் என புரிந்தது.

“அதெல்லாம் விடு, இங்க அம்மா அற்புதமா சமைப்பாங்க. நீ அவங்க கிட்ட கத்துக்கணும்னு இருக்கு! சரி தானே ம்மா!” என,

அவன் சரிதானேம்மா என்று சொன்ன விதத்திலேயே, சரி என்று சொல்லுங்க என்பது போன்ற த்வனி இருக்க..

“நீ என்னடா என்னை மிரட்டுற?”

“நீங்க என்னமா என் பொண்டாட்டி இருக்கான்னு தைரியமா என்கிட்டே சண்டை போடறீங்க”

“எப்பவும் இவருக்கு எல்லோரையும் மிரட்டியே பழகமாகிடுச்சு அத்தை, நீங்க சண்டை போடுங்க, இவர் என்ன பண்றார்ன்னு பார்ப்போம்” என இடுப்பில் கை வைத்து அலட்சியமாய் சொல்ல,

“என்ன பண்ணுவேன்? உனக்கு தெரியாம எங்கம்மா கால்ல விழுவேன்! எங்கம்மாக்கு தெரியாம உன் கால்ல விழுவேன்! இதை யாருக்கும் தெரியாம பார்த்துக்குவேன்! ரொம்ப சிம்பிள்!” என,

“டேய் பொண்டாட்டி கால்ல விழுவேன்னு தைரியமா அம்மா கிட்ட சொல்ற?” என்று குறும்பாக அதட்ட,

“அத்தை! இவர் சொல்றதை செய்ய மாட்டார்! செய்யறதை சொல்ல மாட்டார்!” என்று வர்ஷினி இப்போது கிண்டல் பேச..

“பாரும்மா! பத்து நாள்ல என்னை கண்டுபிடிச்சிட்டா! நீயும் இருக்கியே!” என்று அம்மாவை வார..

“நிஜம்மா ஈஸ்வர் என்கிட்டே இப்படி பேசியே சில வருஷம் ஆச்சு!” என்றார் ஈஸ்வரையே பார்த்தபடி,

அம்மா சொல்வதும் உண்மை என ஈஸ்வருக்கும் தெரியும்.. அம்மா அவனின் பின்னாலேயே சுற்றிக் கொண்டு இருந்தாலும், அவன் பாட்டியிடம் பெரியம்மாவிடம் தான் இன்னும் அதிகம் பேசுவான். மலருக்கு அதிகம் எதுவும் தெரியாது என்ற எண்ணம் தான் அவனிற்கு. அதில் அவனை அதிகம் தப்பும் சொல்ல முடியாது. கூட்டு குடும்பமாய் போய் விட எல்லாம் பாட்டியும் பெரியம்மாவும் செய்ய பார்க்கும் போது மலருக்கு அதிகம் தெரியாது என்ற எண்ணம் தான் மக்களுக்கு.

ஈஸ்வரின் கல்லூரி படிப்பு ஆரம்பித்த உடனேயே அவனிடம் ஒரு பெரிய மனிதத் தோரணை வந்துவிட.. அம்மாவிடம் சகஜமாக பேசினாலும், அதில் மகன் என்பதை விட ஒரு ஆளுமை, எனக்கு எல்லாம் தெரியும் என்பது போன்ற பாவனைகள் தான் அதிகம்.. அதிலும் தொழிலை கையினில் எடுத்த பிறகு நேரங்கள் அவனுக்கு குறைந்து விட்டது. பின்பு இந்த பிரச்சனைகள் வந்த பிறகு முற்றிலுமாக தன்னை தொலைத்து விட்டான்..

இதையெல்லாம் யோசித்து பார்த்திருந்தான்.. மூன்று நாட்களாக தன்னிடம் சகஜமாக பேசினாலும் வர்ஷினி சகஜ நிலைக்கு வரவில்லை என்று உணர்ந்து தான் இருந்தான். ஆனால் மலர் அதை மிகவும் எளிதாக கொண்டு வந்து விட்டார் என்பதை ஆச்சர்யமாக உணர்ந்தான்.

“என்னவோ போங்க, ரெண்டு பேரும் சேர்ந்து இப்போ என்னை மிரட்டுறீங்க” என சிரிக்க..

“அச்சோ, நீ பயந்துட்டாலும்” என நொடித்தார்.

பின்பு “போங்கடா, போய் சீக்கிரம் தூங்குங்க!” என,

எழுந்தவர்கள் .. நடக்கத் துவங்கும் முன்.. "நான் தான் குழந்தைங்களை வளர்க்கணும் சொல்றீங்க, அம்மா தான் பார்க்கணும் சொல்றீங்க.. ஆனா எனக்கு அம்மா இல்லை தானே அத்தை, அதுவுமில்லாம யாரும் என்னை வளர்க்கவும் இல்லை, எல் கே ஜி ல இருந்தே ஹாஸ்டல் தான், அதனால எனக்கு எதுவும் தெரியாது... நீங்க எனக்கு சொல்லிக் குடுங்க, நான் செய்துக்குவேன்!" என வர்ஷினி சொல்ல..

அம்மாவும் மகனும் அப்படியே சமைந்து தான் நின்றனர். "இல்லையில்லை, நான் வருத்தமா சொல்லலை! உண்மையை தான் சொன்னேன்!" என,

ஆசுவாசப்பட்ட மலர், "அது யாரும் கத்துக் கொடுக்க வேண்டியதில்லை, தானா வரும்.. அதுல ஏதாவது நீ மிஸ் பண்ணினா நான் சொல்றேன்!" என,

"தேங்க்ஸ் அத்தை!" என்றாள்.

"விஷ்வா, உனக்கு டெய்லி எத்தனை தேங்க்ஸ்டா சொல்றா!"

"இல்லையில்லை, தேங்க்ஸ் வாபஸ்!" என்றாள் அவசரமாக,

அது என்று அவர் சொல்லிப் போக.. இருவரும் ரூம் வந்தனர்.

"தேங்க்ஸ்!" என்றான் ஈஸ்வர் வர்ஷினியைப் பார்த்து, எதற்கு என்பது போல வர்ஷினி பார்க்க.. "அம்மா ரொம்ப நாளைக்கு அப்புறம் இயல்பா இருக்காங்க"

"இல்லாதவங்களுக்கு தான் அதோட அருமை தெரியும்! இருக்குறவங்களுக்கு தெரியாது!" என்று வர்ஷினி சொல்ல,

"நான் பேசவே மாட்டேன்!" என்பது போல ஈஸ்வர் சைகை செய்ய,

"அது!" என்று வர்ஷினி மலரை போலச் சொல்ல, ஈஸ்வரின் முகத்தில் புன்னகை விரிந்தது. "எப்படி இந்த வீட்டில் இவள் இருப்பாளோ? எல்லோருடனும் நன்றாக பழகிக் கொள்வாளா?" என்ற யோசனைகள் எப்போதும் ஈஸ்வரின் உள் உண்டு. இப்போது அந்த சஞ்சலம் விலகியது.

"அம்மா இவளை பார்த்துக் கொள்வார், இவளும் அம்மாவுடன் நன்றாக பேசிக் கொள்கிறாள். அது போதும்!" என ஆசுவாசித்தவன்..

அந்தப் புன்னகை வாடாமல் படுக்கைக்கு சென்றான். வர்ஷினிக்கும் மலருடன் பேசிக் கொண்டிருந்தது மனதை

லேசாகியிருந்தது. ஏதாவது தனக்கு தெரியவில்லை என்றாலும் அவர் சொல்லிக் கொடுப்பார் என்ற நம்பிக்கை வந்திருந்தது.

படுக்கையில் படுத்து விட்டாலும் பின்பும் அவளுக்கு உறக்கமில்லை. ஈஸ்வருக்கு களைப்பாய் இருக்க .. படுத்துக் கொண்டவன் "குட் நைட் வர்ஷ்" என்று சொல்லி, எப்பொழுதும் போல அவளை நெருங்கி அந்த கண்களின் அருகினில் உதடுகளை கொண்டு செல்ல..

வர்ஷினியின் இமைகள் தானாக மூடியது. மென்மையாக அந்த இதழ்களின் மேல் உதடுகளை ஒற்றி எடுக்க, எப்போதையும் விட அந்த முத்தமே அவளை புரட்டிப் போட்டது. வாகாக தன் கன்னத்தை ஈஸ்வரின் உதடுகளை நோக்கி திருப்பினாள்.

எப்பொழுதும் அவனாக தான் செல்வான், அதன் பிறகு அவளை தேட வைப்பான், அவளை தன்னிடம் வர வைப்பதற்கும், அவள் தன்னை அழைப்பதற்கும் வித்தியாசம் உண்டலவ்வா?

அப்பாவை இப்பொழுது தான் இழந்திருக்கின்றாள், இப்போது அணுகுவது தவறு என்று ஈஸ்வர் முயன்று தள்ளி இருக்க.. வர்ஷினி கன்னத்தை திருப்பியதும் தானாய் அதில் புதைந்தது ஈஸ்வரின் உதடுகள்.

"வர்ஷ் பேபி" என முனகியவன்.. "ப்ரொசீட் பண்ணட்டுமா? அப்புறம் என்னால விடவே முடியாது!" என,

வர்ஷினியிடம் இருந்து பதிலே இல்லை.. கன்னத்தில் புதைந்த உதடுகள் முற்றிலும் விலகாமல் அசைந்த விதத்தில் முற்றிலுமாக கிறங்கி இருந்தாள்.

"வர்ஷ்" என திரும்ப அழைக்க.. "ம்ம்" என்றவளிடம்.. "நீ என்னை மிஸ் பண்ணுனியா?" என,

"தெரியலை" என்றவளின் கைகள் அவனை சுற்றி படர்ந்து இருக்கமாக அணைத்திருக்க.. அதுவே சொல்லாமல் சொன்னது மிஸ் செய்திருக்கின்றாள் என, அது அவனுக்கும் புரிந்தது. மனதில் ஒரு திருப்தி படர..

"நான் ரொம்ப மிஸ் பண்ணினேன் உன்னை, நீயில்லாம தூக்கமே வரலை!"

"அப்படியா" என்று நிமிராமல் தன் கன்னத்தை அவன் உதடுகளில் அழுத்திக் கொண்டு, "இப்போ குட் நைட் சொன்னீங்க!"

“அது உனக்கு! எனக்கு இல்லை!” என்று ரகசியம் பேசினான்..

“எனக்கு குட் நைட் வேண்டாம்!” என்று அவளின் குரல் முனக.. அவளை நிமிர்ந்து பார்க்க.. அந்த கண்களில் முதன் முறையாக தெரிந்த அழைப்பில், “பார்த்த நாளா கொல்றடி என்னை!” என,

மெல்லிய வெளிச்சத்தில் பளிச்சிட்ட அந்த நீல நிறக் கண்கள் “அப்படியா” என்ற பாவனையைக் காட்டியது. அதில் தெரிந்த அலட்சியம், அந்த அலட்சியத்தில் ஒளிந்திருந்த ஒரு மயக்கம், ஒரு புதிய பரிமாணமே வர்ஷினியிடம். ஆம்! அவளுக்கே அவளுக்காய் அவள் பின் சுற்றுபவனாக தான் ஈஸ்வர் அப்போது தெரிந்தான்.

தனக்காய் இவன் என நெஞ்சம் கர்வம் கொள்ள, பார்வையில் சற்று காதலும் கலக்க.. ஈஸ்வருக்கு இதையும் விட என்ன வேண்டும்!

அப்படித்தான் என்று சொல்லாமல் ஈஸ்வர் அதை செயலில் காட்ட.. அந்த மணித்துளிகளில் கொல்பவளும் அவளே ஆகிப் போனாள், வெல்பவளும் ஆகிப் போனாள்.

**முத்தமிட்டு நெத்தியில மார்புக்கு மத்தியில செத்துவிடத் தோணுதடி…**

## அத்தியாயம் ஐம்பத்தி ஆறு :

**நான் கொண்ட சொந்தம் நீதானே!**

அடுத்த நாளே வர்ஷினியை காலேஜ் கிளப்பி விட்டான் ஈஸ்வர்.. “இன்னும் ஒரு வாரம் கழிச்சு போறேன்” என்றவளை விடவில்லை…

“நான் ரொம்ப டையர்ட், எனக்கு தூக்கமா வரும்” என்று எத்தனை கரணங்கள் சொன்ன போதும் விடவில்லை.

“நீ எப்பவும் ரொம்ப யோசிக்கற.. நீ முதல்ல உன்னோட அன்றாட வாழ்க்கையை ஆரம்பி.. இன்னும் ஒரு வாரம் கழிச்சு தான் உங்கப்பாக்கு காரியம் செய்வாங்க. அப்போ லீவ் போட்டுக்கலாம். ஏற்கனவே கல்யாணத்துக்கு லீவ் எடுத்துட்ட, இப்போ ட்வென்டி டேஸ் லீவ் ஆகிடுச்சு”

“அதெல்லாம் முடியாது! என்னால முடியலை! நீங்க என்னை தூங்கவே விடலை!” என சிணுங்க..

“பொய் சொல்லாத, நீ தூங்கிட்ட”

“எங்க தூங்கினேன்?” விரல் விட்டு எண்ணியவள், “மூணு மணி நேரம் தான் தூங்கினேன்” என,

“ஷ்! என்ன இது?” என்று ஈஸ்வர் மிரட்ட..

“நான் உண்மையை தானே சொன்னேன்!” என்றாள்.. எல்லாம் படுத்துக் கொண்டே.. அசையவேயில்லை என்பதை விட, கண்களைத் திறக்கவே முடியவில்லை.

அருகில் அமர்ந்தவன், “இதெல்லாம் இனிமே நம்ம ரொட்டீன், புரிஞ்சதா, இதெல்லாம் சாக்கு கிடையாது!” என,

“என்ன?” என்று விழி விரித்தவளின் கண்களை நெருங்க, “போங்க, போங்க” என்று இறுக்கமாக கண்களை மூட.. அதுதான் சாக்கென்று அவளின் கண்களில் அழுத்தமான முத்தங்களை பதித்தான்.

அவன் விட்டவுடன், மெதுவாக கண்களை திறந்தவள்,

“ம்ம்! எனக்கு நிஜமா ரொம்ப தூக்கம் வருது!” என்றாள் பாவமாக. சிறு பெண் தானே..

“இங்க இப்படி வீட்ல தூங்க முடியாது வர்ஷ், புரிஞ்சிக்கோ.. மணி இப்போவே ஏழு.. என் பாட்டி பூஜை ரூம்ல புகுந்திருப்பாங்க.. முதல்ல குளிச்சு முடி” என்றவன்.. அவளை அப்படியே தூக்கி குளியலறை முன் விட்டான்.

“போ! சொன்னா கேட்கணும்! உன்னை யாரவது ஏதாவது சொன்னா அப்புறம் எனக்கு கோபம் வரும், திரும்ப சண்டை வரும், அந்த மாதிரி சூழ்நிலை வர விடக் கூடாது. எனக்கு என்னோட வர்ஷ் எல்லாத்துலையும் ஃபெர்பெக்ட்டா இருக்கணும்.. நீ தூங்க ஏதாவது பண்றேன் போ!” என கெஞ்சி, கொஞ்சி..

வர்ஷினியை கிளப்பி காலேஜ் கொண்டு வந்து ஈஸ்வரே விட்டான். முகத்தை தூக்கி வைத்திருந்தவளிடம், “மதியம் வரை அட்டென்ட் பண்ணு, மதியம் கூட்டிட்டு போறேன்!” என்று சொல்லிச் சென்றான்.

சொன்னது போல மதியம் வந்து அவளை அழைத்துப் போனவன்.. அவன் முன்பு ஒரு முறை அழைத்துச் சென்ற அவனின் அபார்ட்மென்ட் வீட்டிற்கு அழைத்து சென்று, “தூங்கு” என,

“இப்போ எனக்கு தூக்கம் வரலை” என்று வர்ஷினி சிரிக்க..

“எனக்கு தூக்கம் வருது!” என்று சீரியசாக சொன்னவன்.. “ப்ளீஸ், தூங்கலாம் வா” என சொல்லி அலாரம் வைத்து படுக்கையில் படுத்தது தான்.. “அம்மா! இவர் தூங்கிட்டார் போலவே” என்று தான் வர்ஷினிக்கு தோன்றியது.

ஆம்! காலையில் ஆறு மணிக்கே எழுந்து குளித்து  கீழே வந்து விட்டான். பின்னே, வர்ஷினியால் எழ முடியும் என்று அவனுக்கே தோன்றவில்லை. பின்பு ஏழுமணிக்கு சென்று தான் அவளை அந்த பாடாய் படுத்தி எழுப்பியவன்..

“இனிமே இப்படி செய்யக் கூடாது, சீக்கிரம் தூங்கிடணும்!” என்ற உறுதி மொழி வேறு எடுத்துக் கொண்டான்.

“ஹ, ஹ, மணமாகி ஒரு பத்து நாளில் எடுக்கும் முடிவா இது?” இதை மாலை திரும்ப அவளை வீட்டிற்கு அழைத்து சென்று கிடைத்த தனிமையில் சொன்ன போது வர்ஷினிக்கு அப்படி ஒரு சிரிப்பு தான்.

“எனக்கு ஒன்னுமில்லை” என குறும்பு பேச..

“எனக்கும் ஒன்னுமில்லை” என்ற ஈஸ்வரின் வார்த்தைகள், அவனுக்கே கேட்கவில்லை. வார்த்தைகளே கேட்கவில்லை, எனும் போது உறுதி எங்கே நிற்கும்.. ஆனால் அவனையும் மீறி நிற்கத் தான் போகின்றது.

கீழே இறங்கிப் போய் எல்லோரிடமும் பேசிக் கொண்டு சிறு சிறு வேலைகளை வர்ஷினி செய்ய ஆரம்பிக்க... ஈஸ்வர் திரும்ப வெளியே சென்றவன்.. இரவு வந்த போது..

“அத்தை தோசை சுட சொல்லிக் கொடுத்தாங்க, நான் உங்களுக்கு சுடட்டுமா” என,

“ம்ம்ம்!” என்ற ஈஸ்வரை சோதனை எலியாக்கி ஒரே தோசை அவள் சுட்டுக் கொடுத்ததில், தோசை என்ற ஒன்றை அவன் அறவே வெறுத்து விடும் நிலைக்கு வர.. வீடே அவனை பார்த்து நக்கல் சிரிப்பு சிரித்தது.

ஆனால் விளையாட்டுக்கு கூட அதை வர்ஷினிக்கு தெரிய விடவில்லை. அந்த சிரிப்பு வர்ஷினியை கொண்டு அல்ல ஈஸ்வரைக் கொண்டு, பின்னே ஈஸ்வர் செய்யும் ஆர்பாட்டங்கள் அளவில்லாதது. இப்படி ஒரு தோசை சாப்பிடுபவர் பக்கத்தில் கூட அவன் அமர மாட்டான்.

தோசை அவன் முன் இருக்க.. என்ன செய்யப் போகிறான் அவன் என்று வீடே பார்த்திருக்க..

“நான் சுட்ட தோசை, எப்படியிருக்கு?” என ஆர்வமாய் வர்ஷினி கேட்கவும்..

“சாப்பிட்டா தானே தெரியும்! சாம்பார் எங்கே?” என அவன் கேட்க,

“அய்யே! இதை சாப்பிடப் போறீங்களா, நான் சுட்டேன்னு காட்ட தான் வந்தேன்.. இது சாப்பிட முடியாது, பார்க்கவே நல்லா இல்லை, இன்னும் சுட்டு பழகறேன், முதல்ல நான் சாப்பிடறேன், நல்லா இருந்தா உங்களுக்கு கொடுக்கறேன்!” என,

இப்போது ஈஸ்வர் எல்லோரையும் கெத்தாக ஒரு பார்வை பார்க்க.. “இவன் அடங்க மாட்டானா இல்லை இவனை அடக்க ஆள் கிடையாதா?” என்று ரூபா பார்க்க..

அவன் அடங்குகின்றான், அவனை அடக்கும் ஆளிடம், அவனை அடக்கும் முன்னே என்று புரியவில்லை. யாருக்கும் அதை எப்போதும் புரிய விடுவானா தெரியவில்லை. சந்தர்ப்பங்கள் அமையாதா? அமைய இருந்தாலும் அமைய விட மாட்டானா? இல்லை வாய்ப்பு அடக்குபவரிடமா?

மலருக்கு வர்ஷினியின் இந்த பேச்சு மிகவும் திருப்தி.. “கொடு, நான் சாப்பிட்டு பார்த்துட்டு சொல்றேன்” என்று அவர் சொல்ல,

“அச்சோ அத்தை! நீங்க வேற, இவர் வேறயா?” என சொல்ல,

ஈஸ்வர் இன்னும் கெத்தாக ஒரு பார்வை பார்க்க, “எனக்கு” என்று தளிர் நடையிட்டு ப்ரணவி அருகில் வர , “அச்சோ பேபி, உன் சித்தப்பாவுக்கே கொடுக்கலை, உனக்கு கொடுப்பேனா?” என ப்ரணவியை கையினில் தூக்க,

“நல்லா தான் சித்தி இருக்கு!” என்று சரண் சர்டிஃபிகேட் கொடுக்க,

நிறைய நாட்களுக்கு பிறகு இயல்பாய் இருந்த சூழலை ஜகன் ரசித்து கொண்டிருந்தான். பின்னர் ஈஸ்வர் விலகிய பிறகு என்னால் தானே என்று மனம் அறுத்தது அவனுக்கு தானே தெரியும். கணவனின் முகத்தில் தெரிந்த நிம்மதியில் ரூபாவின் மனம் கூட லேசானது.

வர்ஷினி அவளை அறியாமல், அந்த வீட்டின் இயல்பை திருப்பிக் கொடுத்து கொண்டிருந்தாள்.

சிறிது பேச்சுக்களுக்கு பிறகு மேலே வந்த போது, அவளை அப்படியே தூக்கிக் கொண்டான். தூக்கி ஒரு சுழற்று சுழற்ற, உற்சாகமாக "என்ன" என்றவளிடம்..

"நீ ஒரு இடத்திலையும் என்னை கீழ இறங்க விடலை, பெருசா செஞ்ச போதும் இல்லை, இப்போ இந்த ஒன்னுமில்லாத விஷயத்துக்கும் இல்லை.. ரியல்லி நான் லக்கி தான்" என,

அப்போதும் புரியாமல் பார்த்தவளிடம், "தோசை வேகாம இருந்தாலும் கத்துவேன், தீஞ்சி போனாலும் கத்துவேன், மொத்தமா இருந்தாலும் கத்துவேன், மெலிசா இருந்தாலும் கத்துவேன். அம்மாவை தவிர எனக்கு யாரும் சுட முடியாது. அவசரத்துக்கு இந்த ரூபா, ரஞ்சி, பெரியம்மா, பாட்டி, யார் சுட்டாலும் கத்தி தீர்த்துடுவேன், ஒரு தோசை கூட சுட தெரியாதான்னு"

"நீ தோசை என் முன்ன வெச்சவுடனே, எல்லோரும் என்னை பார்த்து சிரிச்சாங்க, பாரு எங்களை திட்டினியே, உன் பொண்டாட்டிக்கு தெரியலைன்னு. அப்போவும் தோசை சாப்பிடப் போனேனா, ஆனாலும் நீ எடுத்திட்டியா? சோ, ப்ராப்ளம் சால்வ்ட்! இல்லை, என்னை ரொம்ப கிண்டல் செஞ்சிருப்பாங்க"

"ஏன், யாருக்கும் தெரியாதா?"

"ஹ, ஹ, தெரியும், நல்லா தான் சுடுவாங்க. ஆனா அம்மா மாதிரி வராது"

"ஆனாலும் இது ரொம்ப ஓவர், அவங்க விட்ட சாபமோ? தோசை சுட தெரியாத நான் உங்க வாழ்கையில வந்துட்டேன்"

"சாபம்" என்ற வார்த்தை ஈஸ்வரை அசைத்தது. உடனே ஐஸ்வர்யாவின்... அவள் உச்சரித்த வார்த்தைகளின்.. ஞாபகம் வர, இருந்த உற்சாகம் எல்லாம் வடிய.. கூடவே அவள் எப்படி இருக்கின்றாளோ, நான் இங்கே இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் போது, அவள் வருத்தத்தில் இருப்பாளோ?" என தோன்ற,

அமைதியாக வர்ஷினியை கீழே இறக்கி விட்டான்.

அவனின் முகத்தை பார்த்து, "என்ன ஆச்சு?" என்றவளிடம், "ப்ச், சாபம்ன்ற வார்த்தை எல்லாம் யூஸ் பண்ணாத"

“அது சும்மா விளையாட்டுக்கு!” என்றவளிடம், “விளையாட்டுக்கு கூட வேண்டாம், புரிஞ்சதா” என,

“ம்ம்” என்று தலையாட்டிவளிடம், “இன்னைக்கு சீக்கிரம் தூங்கலாம்” என சொல்லி படுத்துக் கொண்டவனின் உள்.. ஐஸ்வர்யாவின் யோசனைகள்.. “ஏதாவது மாப்பிள்ளை அவளுக்கு பார்க்கின்றார்களா, ஆனால் யார் பார்ப்பார், இந்த ரூபா என்ன செய்கின்றாள், காலையில் அவளிடம் பேச வேண்டும்” என்று நினைத்துக் கொண்டிருந்தவனை உறக்கம் அணுகவே இல்லை.

“இந்த அஸ்வின் தான் என் திருமணத்தை அவளிடம் சொல்லி இருக்கின்றான், அப்போது என்னை கவனித்துக் கொண்டிருக்கின்றானா இல்லை வர்ஷினி திருமணத்திற்கு அழைத்ததால் தெரியவந்ததா?”

“தூங்கணும் சொன்னீங்க? இன்னும் தூங்கவேயில்லை!” என வர்ஷினியின் குரல் கேட்க..

அப்போது தான் வர்ஷினியை கவனித்தான், “வர்ஷ், சீக்கிரம் தூங்கிடு! அப்புறம் ஆறு மணிக்கு முழிச்சிக்கோ! இன்னைக்கே பாட்டி நம்ம வீட்டு பழக்கம் சொல்லிக் கொடுக்கலையா? ஏழு மணி ஆச்சு, எழலை, சொன்னாங்க!” என,

எதுவும் மறுத்தோ திரும்பவோ பேசாமல், “ஓகே, நாளைக்கு கமலம்மாவை போய் பார்க்கணும், இன்னைக்கு போன்ல கூட நான் பேசலை, ரஞ்சி அண்ணி அத்தை கிட்ட சொன்னாங்களாம். மா! இவ உங்க வீட்டுக்கு வந்ததுல இருந்து எங்க யார் கூடவும் பேசக் கூட இல்லைன்னு, நாளைக்கு போகணும்” என்று சொல்லியபடி கண்களை மூடிக் கொள்ள..

அவளை நெருங்கி படுத்துக் கொண்டு, அவளை கையணைப்பில் கொண்டு வந்தவன், நேத்து தானே இவ வந்தா என நினைத்த படி “வர்ஷ், நீ அஸ்வின எங்கே பார்த்தே? எப்படி இன்வைட் பண்ணின?” என,

கணவனின் கை அணைப்பில் சுகமாக அடங்கியிருந்தவளுக்கு, முதலில் அவனின் கேள்வியே புரியவில்லை. “யாரு அஸ்வின்?” என ஆரம்பித்தவள், ஞாபகம் வரப் பெற்றவளாக.. “ஏன் கேட்கறீங்க?” என,

கோபப்படாமல், “சொல்வியா, மாட்டியா? ஏற்கனவே எங்களுக்கு அவனுக்கும் பிரச்சனை, நீ திரும்ப தேவையில்லாம சிக்கல்ல மாட்டிக்கக் கூடாது” என நல்லவிதமாகவே சொல்ல,

“நானா தான் இன்வைட் பண்ணினேன், எதேச்சையா பார்த்தப்போ.. என் மேரேஜ்க்கு என் ஃபிரண்ட்ஸ் பார்ட்டி கொடுத்தாங்க, ஒரு ஹோட்டல்ல அங்க பார்த்தேன்” என,

“எந்த ஹோட்டல்?”

வர்ஷினி சொல்லியது ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டல், “அங்க இருந்த பப்ல அவன் இன்சார்ஜ் போல, அங்க தான் பார்த்தேன்!”

“வாட் நீ பப் போனியா?” என ஈஸ்வர் கேட்டு தன் அணைப்பில் இருந்த வர்ஷினியை விலக்கி எழுந்து அமர்ந்த விதத்தில், “எஸ், போனேன்!” என்றவள், அவளும் எழுந்து எதற்கு இவ்வளவு அதிர்ச்சி என்பது போலப் பார்க்க,

“நீ பப் போவியா?” என்றான் அதிர்ச்சி மாறாமல்.

“எஸ், எப்போவாவது போவேன்.. ஸ்கூல் டேஸ்லயே போயிருக்கோம்” என,

“அங்கெல்லாம் இனி போகாத வர்ஷ், எனக்கு அது பிடிக்காது.. இப்போ அதெல்லாம் சகஜம் சொல்றாங்க, ஆனா அது நமக்கு அவ்வளவா செட் ஆகாது, முக்கியமா எனக்கு, பொண்ணுங்க அப்படி போறது, ஊர் சுத்தறது, குதிக்கறது, யாரோட வேணா டான்ஸ் பண்றது, இதெல்லாம் எனக்கு பிடிக்கவே பிடிக்காது, புரியுதா?” என,

“எப்பவும் எல்லாம் போக மாட்டேன், எப்போவாவது போவேன், நீங்க சொன்ன ஊர் சுத்தறது, குதிக்கறது, டான்ஸ் பண்றது எல்லாம் பண்ணியிருக்கேன், ஆனா டான்ஸ் தனியா தான் பண்ணியிருக்கேன்” என,

எனக்கு எதுவுமே தெரியவில்லை என்ற யோசனைகள் மனதில் ஓடிய போதும், “எப்போவாவது கூட நீ போகக் கூடாது, புரிஞ்சதா!” என்றான் திரும்பவும் கட்டளை போலவே...

ஈஸ்வரின் கோபத்தை பார்த்தவள் “ஈசி, போகமாட்டேன்!” என்றாள் ஸ்திரமாக.. அவனுக்காக..

“எந்த பிரண்ட்ஸ் கூட காலேஜ் பிரண்ட்ஸ் கூடவா? யார், யார், உனக்கு பிரண்ட்ஸ்?” என்று கேள்விகளை அடுக்கினான்.

“இல்லை! இது ஸ்கூல் மேட்ஸ், நம்ம கல்யாணத்துக்கு வந்திருந்தாங்க” என விளக்கம் சொல்லி, யார் என்பது போல சொல்ல, எல்லாம் அடையாளம் சொல்லும் படி இருக்கும் பெரிய

பெரிய ஆட்களின் மக்கள் தான். ஆனாலும் ஈஸ்வருக்கு திருப்தியில்லை.

ஆம்! வர்ஷினி நிறைய பேரை தன் நண்பர்கள் என்று அறிமுகப் படுத்தினால் தான், ஈஸ்வர் தான் அவ்வளவாக முக்கியத்துவம் கொடுத்திருக்கவில்லை. இப்போது அவளிடம், “உன்னோட பிரண்ட்ஸ் ஏன் எனக்கு தெரியலை, நான் உன்னோட அவங்களை பார்த்ததே இல்லையே!” என,

“உங்களுக்கு என்னை பத்தி என்ன தெரியும்?” என்றாள் புருவம் உயர்த்தி பாவனையாக..

ஈஸ்வர் மௌனமாய் அவளை பார்க்க.. “முரளிண்ணா கல்யாணத்துல இருந்து தானே உங்களுக்கு என்னை தெரியும்”

“ஆனா முரளிக்கு தெரியும் தானே! உன்னை பத்தி சொல்லியிருக்கான்!” என்று பதில் சொன்னவனிடம்,

“இல்லை! தெரியாது! இங்க என்னை பார்க்கறதோட சரி! யாரும் என்கிட்டே முன்ன ரொம்ப க்ளோஸ் கிடையாது, அவங்களை சொல்ல முடியாது, நான் எல்லோரையும் தள்ளி வைப்பேன், ரொம்ப அளவா பேசுவேன், இப்போ பேசறதுல கால்வாசி கூட பேச மாட்டேன், பத்துண்ணாவாவது பேசுவாங்க, முரளி அண்ணா என்கிட்டே பேசறதே ரொம்ப ரேர், இப்போ ஷாலினி அண்ணி வந்த பிறகு தான் பரவாயில்லை!”

“என்னோட வாழ்க்கையில நான் இங்க வர்ற வரை நண்பர்கள் தான் அதிகம், அவங்க நிறைய ஊர் சுத்துவாங்க, எனக்கு அப்பா ரொம்ப கட்டுப்பாடு விதிப்பார், அதனால அதிகம் போகலைன்னாலும் எப்போவாவது பப் எல்லாம் போறது தான்!”

“பட்! நீங்க ஸ்கூல் ஸ்டுடன்ட்ஸ்!”

“ஹ, ஹ, நைன்த் படிக்கும் போது இருந்தே போவாங்க, அது ஒரு டிஃப்பரன்ட் வேர்ல்ட்! எனக்காவது அம்மா இல்லை, அவங்களுக்கு இருந்தாலும் பேரன்ட்ஸ் ரொம்ப பிசி அதனால தான் ஹாஸ்டல், சோ நாங்க என்ன பண்ணுவோம், ஊர் சுத்துவோம், அது ரொம்ப சகஜம்” என,

“ஹாஸ்டல்ல எப்படி பாசிபிள்? என்னவோ நான் ஸ்கூல் போகாத மாதிரி பேசற நீ!” என்றான் கடுப்பாக.

சிரித்தவள், “உங்களுக்கு தெரியுமா ரூல்ஸ்ன்னு ஒன்னு போடறதே அதை பிரேக் பண்ண தான், எங்களுக்கு கேப்சரிங் வொர்ட்ஸ்சே **பிரேக் தி ரூல்ஸ்** தான். அப்புறம் **வொய் பாய்ஸ் ஷுட் ஹேவ் ஆல் தி ஃபன்** இப்படி நிறைய” என்று உற்சாகத்தோடு பேசியவள், “நீங்க போனது இல்லையா?”

“நிஜம்மா இல்லை, எனக்கு அது பிடிக்காது!” என,

“அதனால நீங்க போகலை அவ்வளவு தான்.. இப்போ இதெல்லாம் ரொம்ப சகஜம், பட் காலேஜ் பிரண்ட்ஸ் கூட போனதில்லை. அவங்க யாரு என்னன்னு எனக்கு அதிகம் தெரியாதில்லையா?”

“ஆனா ஸ்கூல் ஃபிரண்ட்ஸ், நாங்க பல வருஷமா ஹாஸ்டல் மேட்ஸ் அண்ட் ஸ்கூல் மேட்ஸ், பல சமயம் பேசுவேன், சில சமயம் அவங்களோட பேச கூட மாட்டேன். எல்லோருக்கும் என்னை நல்லா தெரியும். சோ, என்னோட மூட் தகுந்த மாதிரி அட்ஜஸ்ட் பண்ணிக்குவாங்க!”

“நிஜமாகவே இவளை பற்றி எனக்கு என்ன தெரியும்?” என்று தான் ஈஸ்வருக்கு தோன்றியது.

யோசனைகளில் ஆழ்ந்தவன், “அஸ்வின்” என எடுத்துக் கொடுக்க, “அந்த ஹோட்டல்ல வேலைக்கு இருக்கார் போல, பார்த்தேன், இன்வைட் பண்ணினேன், எங்கே? எப்போ? எல்லாம் கேட்டார், ஆனா வரலை போல!”

“வரலைன்னா என்ன? வேலையை கரக்டா செஞ்சிருக்கான்!” என்று மனதிற்குள் நினைத்தான், “ஒரு மாப்பிள்ளை அவளுக்குப் பார்க்கணும்னு அந்த மடையனுக்கு ஏன் தோணலை” என கூடவே நினைத்தான். அப்போதும் தன்னை பற்றியும் ஐஸ்வர்யாவைப் பற்றியும் அவனுக்கு தெரிந்திருக்குமோ என நினைக்கவில்லை! அந்த சந்தேகமே வரவில்லை!

அந்த யோசனைகளோடே ஈஸ்வர் இருக்க, வர்ஷினிக்கு தூக்கம் கண்களை சுழற்றியது. பார்வையை அவளிடம் திருப்பியவனுக்கு, தான் படுத்தால் தான் படுப்பாள் என்று புரிய, படுத்தான். அவன் மேலேயே படுத்து உறங்க ஆரம்பித்தவள்,

“உங்களுக்கு ஒன்னு தெரியுமா?” என படுத்தபடியே பேசினாள். “என்ன வர்ஷி?” என்றவனிடம்,

“நீங்க தான் என் பக்கத்துல என் நினைவு தெரிஞ்ச நாளா படுத்து இருக்கீங்க!” என்று அவனை இறுக்கமாக அணைத்துக்

கொண்டவள், “அம்மா, அப்பான்னு யார் கூடவும் படுத்தது இல்லை, எப்பவும் தனி தான்! தனி பெட் தான்! தனி ரூம் தான்!” என்றவளின் குரல் ஆழ்ந்து ஒலித்தது.

அவளின் குரலில் என்ன இருந்தது என்று கண்டுபிடிக்கவே முடியவில்லை. ஆனாலும் அது வெகுவாக ஈஸ்வரை அசைத்தது.

அந்த குரலில், அந்த அணைப்பில், ஈஸ்வரின் மயக்கங்கள் எல்லாம் தூர ஓடிப்போயின.. அந்த நொடியில், சரண் சிறு குழந்தையாக இருக்கும் போது அவன் மேலேயே உறங்கிவிடுவான். அப்படி ஒரு குழந்தை போல தான் அவனுக்கு தோன்றினாள். “நான் இருக்கின்றேன் உனக்கு!” என்று வாய் வார்த்தையாக சொல்லாமல், தன் அணைப்பில் காட்டினான்.

“நான் இருக்கிறேன் உனக்கு” என்று காட்ட வேண்டிய சூழல்கள் இனி நிறைய வரும் என்று புரியவில்லை. “கடந்து வந்த நாட்கள் எல்லாம் என்ன? இனி இருக்கின்றது உனக்கு!” என காலம் அவனை பார்த்து சிரித்தது.

**என் வாழ்வும் என் சாவும் உன் கண்ணின் அசைவிலே!**

## அத்தியாயம் ஐம்பத்தி ஏழு :

அடக் காதல் என்பது மாயவலை,
கண்ணீரும் கூட சொந்தமில்லை...

அடக் காதல் என்பது மாயவலை,
சிக்காமல் போனவன் யாருமில்லை...

காலையில் அப்படியே கல்லூரி சென்று மாலையில் இங்கே கமலம்மாவை பார்க்க வந்தாள்.

ரஞ்சனி அப்போதுதான் கல்லூரியில் இருந்து வந்து, மாலையில் செல்லும் ஹாஸ்பிடலுக்கு கிளம்பிக் கொண்டிருந்தாள். ஷாலினியை அவளின் அப்பா வீட்டினர் பிரசவத்திற்காக அன்று காலை தான் அவர்கள் வீட்டிற்கு அழைத்து சென்றிருந்தனர்.. முரளி அவர்களுடன் ஷாலினியை விட சென்றிருந்தான்.

வர்ஷினியைப் பார்த்ததும் கமலம்மா, “ஏன் வர்ஷி நேத்து ஃபோன் பண்ணவே இல்லை, நான் கூப்பிட்டப்போவும் போகவேயில்லை” என,

அவள் தான் ஃபிளைட் மோடில், வைத்திருந்தாளே.. “ஏன்ம்மா?” என,

“உனக்கு அங்க பிடிச்சிருச்சான்னு கேட்க தான் வர்ஷி.. நீ எங்கேயும் இருந்தது இல்லை தானே!”

“அதெல்லாம் அட்ஜஸ்ட் ஆகிட்டேன்ம்மா, எல்லோரும் நல்லா பேசறாங்க, பார்த்துக்கறாங்க!” என வர்ஷினி சொல்லிக் கொண்டு இருக்கும் போதே,

“அதுதானே! விஸ்வா எல்லாம் பார்த்துக்குவான் அத்தை!” என்றபடி ரஞ்சனி வர, வர்ஷினியின் மலர்ந்த முகம் அப்படித் தான் என்று சொல்லாமல் சொன்னது.

“அழகா இருக்க!” என்று ரஞ்சனி வர்ஷினியை திருஷ்டி எடுக்க... “உங்களை விடவா அண்ணி!” என்றாள் வர்ஷினி.

“தோடா, எனக்கேவா?” என்றவள், “நான் ஹாஸ்பிடல் கிளம்பறேன், டைம் ஆகிடுச்சு!” என,

“சாப்பிடலை, காபி குடிக்கலை, போ ரஞ்சனி, சாப்பிட்டு தான் போகணும்!” என கமலம்மா சொல்ல, ரஞ்சனி உள்ளே சென்றாள்.

“எங்கேம்மா பத்துண்ணா?”

“இன்னும் வரலை”

“அப்போ அண்ணி எப்படி போவாங்க?”

“இப்போல்லாம் டிரைவர் தான் கூட்டிட்டு போறான்”

“ஏன்? அண்ணாக்கு அப்படி என்ன வேலை, காலையில காலேஜ் போறாங்க, ஈவ்னிங் கிளினிக் போறாங்க, அண்ணி பிசியா தான் இருக்காங்க.. அண்ணாக்கு நம்ம வேலை தானே, அட்ஜஸ்ட் பண்ண மாட்டாரா?” என வர்ஷினி கேட்க,

“யார் கேட்பா? எல்லோரும் வளர்ந்த பசங்க, இனி ஷாலினி வேற இல்லையா வீடே வெறிச்ன்னு இருக்கு! எல்லோரும் போயிடறாங்க!”

“இன்னும் சில நாட்கள்  தானே, அப்புறம் குட்டிப் பாப்பா இங்க வந்திடும்!” என வர்ஷினி உற்சாகமாக பேச, கமலம்மா அதை மகிழ்வோடு பார்த்திருந்தார். இப்படி உற்சாகம் அவளிடம் வருவது அரிது.

அப்போது பார்த்து பத்து வந்தவன் வர்ஷினியை பார்த்து, “வர்ஷி எப்போ வந்தே?” என,

“இப்போ தான் அண்ணா!” என்றவளின் குரலில் இருந்த உற்சாகம், முகத்தில் இருந்த பொலிவு, பத்துவிற்கும் நன்கு புலப்பட்டது.

“நானே உன்கிட்ட பேசணும்னு இருந்தேன் வர்ஷி, கொஞ்சம் பேப்பர்ஸ் சைன் பண்ணனும்”

“என்ன பேப்பர்ஸ் அண்ணா? எதுக்கு?” என வர்ஷனி கேட்கும் போதே ரஞ்சனி, “அத்தை, நான் சாப்பிட்டுட்டேன், டைம் ஆச்சு கிளம்பறேன்” என்றபடி வர,

பத்துவின் பார்வை ரஞ்சனியின் மீது திரும்ப.. வர்ஷினியின் பேச்சை கவனித்தாலும், பதில் சொல்லாமல் மனைவியின் மீது பார்வையை திருப்பினான். திரும்ப வர்ஷினியின் கேள்வியே பின்னுக்கு போய்விட்டது.

ஆம்! வர்ஷினி சொல்லியது போல அழகாக இருந்தாள் ரஞ்சனி.. அவளையே பார்த்திருந்தான். பத்து அங்கிருப்பதை அப்போது தான் பார்த்தாள் ரஞ்சனியும். “பார்த்தே காலத்தை ஓட்ராண்டா இவன்!” என்று தான் மனதிற்குள் தோன்றியது.

ஆம்! அந்த பிரச்சனைக்கு பிறகு சகஜ மனப்பான்மை இருவருக்குள்ளும் இல்லவே இல்லை. இந்த முறை ரஞ்சனி என்ன ஆனாலும் முதல் அடி எடுத்து வைப்பதாக இல்லை, பத்து தான் வரவேண்டும் என்பதில் தெளிவாய் இருந்தாள். எப்போதையும் விட தன்னை கவனமாய் தான் அலங்கரித்துக் கொண்டாள், மிகவும் எளிமையாய் அதே சமயம் கண்களுக்கு குளிர்ச்சியாய்..

ஆனால் பத்து, அவனுக்கு எங்கே இருந்து தான் ஒரு தயக்கம் வந்து ஒட்டிக்கொண்டதோ.. அதுவும் வருடமாய் இருந்ததை விட இப்போது இன்னும் அதிகம்.

தன்னை விடாது பார்க்கும் அவனின் பார்வை ஏதோ செய்ய, நீண்ட நாட்களுக்கு பிறகு அவளாகவே “என்னை கொண்டு போய் விடறீங்களா?” எனக் கேட்டாள்.

“என்னிடமா கேட்டாள்” என்பது போல பத்து பார்த்து நிற்க,

“அண்ணா! அண்ணி உங்க கிட்ட தான் கேட்டாங்க!” என வர்ஷினி அவனை உலுக்க, “ஒஹ் எஸ், போகலாமே!” என்று அவன்

உடனே கிளம்ப,

“ஹச்சோ, இந்த அண்ணி பாவம்!” என்று தான் வர்ஷினிக்கே தோன்றியது. அதை தன் கண்களிலும் காட்ட,

“அச்சச்சோ! வர்ஷ் பேபி ரொம்ப பெரிய பொண்ணு ஆகிட்டா போலவே!” என்று ரஞ்சனி கிண்டல் செய்ய,

“போங்க அண்ணி!” என்று வர்ஷினி சிணுங்க,

“எதற்கு” என்று புரியாமல் பத்து பார்த்திருக்க.. அவனின் முக பாவனையை பார்த்து ரஞ்சனிக்கும் புன்னகை, வர்ஷினிக்கும் புன்னகை..

“என்ன சிரிக்கறீங்க ரெண்டு பேரும்” என்று வர்ஷினியிடம் கேட்டே விட்டான்.

வாய் விட்டு சிரித்தவள்.. “அண்ணி, அழகா ஆகிட்டாங்க தானே! அது தான்!” என,

“நீ ரொம்ப வாலு ஆகிட்ட!” என ரஞ்சனியும் சொல்ல.. வெகு நாட்களுக்கு பிறகு அவர்களுக்குள்ளும் இயல்பான பேச்சு,

“போங்க! போங்க! டைம் ஆச்சு!” என்று வர்ஷினி விரட்ட, “ஆமாம்!” என்று நேரம் பார்த்தவள், “தோ போறேன், உன்னை கூப்பிட விஷ்வா வருவானா?” என,

“ம்ம்! வருவாங்க அண்ணி!” என,

“ஓகே” என்றபடி ரஞ்சனி விரைய பத்துவும் விரைந்தான். அதனால் எதற்கு கையொப்பம் கேட்டான் என சொல்ல மறந்திருந்தான்.

“தாத்தா எங்கேம்மா?” என்ற வர்ஷினியிடம், “கட்சி மீட்டிங்ன்னு போயிருக்கார்” என,

“ரொம்ப நாளா போகலை தானே!” என, “ஆம்!” என்பது போல தலையசைத்தவர், “திரும்ப தீவிர அரசியல்ல குதிக்கறார் போல” என்றவரிடம்,

“போகட்டும்! போகட்டும்! சும்மா இருந்து என்ன பண்ணுவார்! என்னை நோன்டிட்டே இருப்பார்!” என நொடித்தாள்.

“என்ன?” என்று கேட்க வந்த கமலம்மா, அப்போது தான் ஈஸ்வர் வீட்டுக்குள் நுழைவதை பார்த்தவர், “வாங்க மாப்பிள்ளை!” என,

“அச்சோ மா! நீங்க என்ன? என்னை எப்பவும் போல ஈஸ்வர்னே கூப்பிடுங்க! இல்லை உங்க கிட்ட பேசமாட்டேன்!” என்றான்.

சங்கடமாக “சரி” என்பது போல தலையசைத்தவர், “அப்போ! அப்போ! இவளை கூட்டிட்டு வா ஈஸ்வர்!” என,

“கண்டிப்பா!” என ஈஸ்வர் சொல்ல, திரும்ப சாப்பிட வைத்தே விட்டார்.

“முரளி எப்போ வரான்மா?” என, “நான் ஒரு நாலைஞ்சு நாள் இருந்துட்டு காரியத்துக்கு வந்தா போதும் சொல்லியிருக்கேன். அங்க அவங்க மாமனார் வீட்ல கொஞ்சம் வேலைன்னு ஷாலினி சொன்னா, அதான் உதவியா இருக்கட்டும்னு இருக்க சொன்னேன்” என விளக்கம் கொடுத்து, பின்பு தாத்தவை பற்றி ரஞ்சனி, பத்து, பற்றியும் சொல்ல..

“அப்போ இப்போ நீங்க தனியா இருக்கீங்களா?”

“ம்ம்! இனிமே தனி தானே!” என விரக்தியாக அவரின் குரல் ஒழிக்க, அவரும் யோசனைகளுக்கு போய்விட, அவரை பார்த்த ஈஸ்வருக்கு பாவமாக இருந்தது.

“அப்போ ஒரு ரெண்டு நாள் இங்கே இருக்கியா வர்ஷினி, ரொம்ப தனியா ஃபீல் பண்றாங்க போல!” என்று ஈஸ்வர் ஒரு சம்பிரதாயத்திற்கு வர்ஷினியிடம் கேட்டான், அதுவும் மிகவும் மெதுவான குரலில், அவளுக்கு மட்டும் கேட்குமாறு..

உடனே திரும்பி அவனை முறைத்தாள் வர்ஷினி.. “போங்களேன்! விட்டுட்டுப் போங்களேன்!” என்றும் முகத்தை சுருக்க..

“கேட்டேன், ஒரு வேலை நீ கேட்கலைன்னு நினைச்சா!” என ஈஸ்வர் விளக்கம் கொடுத்த போதும் வர்ஷினி இயல்புக்கு திரும்பவில்லை.

வீடு வந்து சேர்ந்த பிறகு, மற்றவர்களிடம் எதையும் காட்டாமல் சகஜமாக பேசினாலும், ஈஸ்வரிடம் முகம் திருப்பி தான் நின்றாள், உறங்க போன பிறகும் அது தொடர்ந்தது.. ஒரு சிறு விஷயம் அதற்கு ஏன் இந்த ஆர்ப்பாட்டம் என்று தான் ஈஸ்வருக்கு தோன்றியது.

தாளமாட்டாமல் “அது ஒரு பேச்சுக்கு கேட்டது, அதுக்கு ஏன் இவ்வளவு ரியாக்ட் பண்ணற” என,

“அது எப்படி ஒரு பேச்சுக்கு கூட கேட்கலாம்!” என வெடித்தாள்.ஈஸ்வர் அவளின் இந்த வெடித்தலை ஏன் இப்படி என்று அதிர்ச்சியாக பார்த்திருந்தான்.

“அப்போ நேத்து நைட் நான் என்ன உங்க கிட்ட பேசினேன். திரும்ப என்னை தனியா தூங்கு சொல்றீங்களா? அப்போ நான் ஏன் உங்க கிட்ட அதை சொல்லியிருக்கணும்? இவ்வளவு தான் என்னோட உணர்வுகளுக்கு மரியாதையா?” என்று வர்ஷினி பொறிய, அவளையே பார்த்திருந்தான். அவன் இப்படி ஒரு கோணத்தில் நினைக்கவேயில்லையே.. இப்படி வருகின்றதோ என்று மனம் கனத்துப் போனது.

முகத்தில் அவ்வளவு கோபம் மட்டுமல்ல, ஒரு மாதிரி தன்னை அடக்கி இருப்பது போன்ற தோற்றம்.

“சாரி! நான் இப்படி யோசிக்கலை!” என ஈஸ்வர் சொல்ல,

“எல்லாம் சாரின்ற ஒரு வார்த்தைக்குள்ள அடங்காது!” என்றவளின் கண்களில் கண்ணீர் நிற்காமல் வழிய,

“சாரி பேபி! ரியல்லி சாரி! கமலம்மா ரொம்ப வருத்தமா பேசினாங்களா, அந்த ஒரு இதுல சொல்லிட்டேன்!”

அப்போதும் அவள் தேம்பி தேம்பி அழ, என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான். அவள் இப்படி அழுவாள் என எதிர்பார்க்கவில்லை. அவளின் அப்பா இறந்த போது கூட அவன் முன் அழுது பார்க்கவில்லை தானே.

எதற்கென்றே தெரியாமல் அப்படி ஒரு அழுகை வந்தது வர்ஷினிக்கு, அப்படியே படுக்கையில் அமர்ந்து முகத்தை மூடிக் கொண்டு தேம்ப..

கீழே அவளின் காலடியில் அமர்ந்தவன்.. “நான் இப்படி ஒரு மீனிங் வரும்னு நினைக்கவேயில்லை.. அப்பா இறந்திருக்காங்க! ஒரு மகளா நீ அவங்களுக்கு சப்போர்ட் பண்ணனும்னு தான் நினைச்சேன்!” என்றான் ஆழ்ந்த குரலில்..

முகத்தில் இருந்த கையை எடுத்து “நான் ஏன் பண்ணனும். எனக்கு யாரு பண்ணினா?” என,

“நமக்கு பண்ணினா தான் நாம அடுத்தவங்களுக்கு பண்ணனும்னு நினைச்சா அது வாழ்க்கை கிடையாது.. யோசிச்சுப் பாரு, அவங்க உன் அம்மா கிடையாது, ஆனாலும் உன் அப்பா சொன்னதுக்காவாவது முகம் சுளிக்காம எல்லாம் செய்யறாங்க தானே. அது அன்பா இல்லை கடமையான்னு யோசிக்காதே!”

“கமல்லம்மா இடத்துல இருந்து யோசி, எத்தனை பொண்ணுங்களோட உங்கப்பாக்கு பழக்கம், வெளில காட்டினதில்லைன்னாலும் அவங்க எப்படி அதை கடந்து வந்திருப்பாங்க.. உனக்கு செய்யணும்னு அவங்களுக்கு என்ன?”

“உன்னை மாதிரியே அந்த சொத்துக்கள் அவங்களுக்கும் சரி பாதி தான். அவங்க பேரையும் சேர்த்து தான் உங்கப்பா ஆரம்பிச்சார். நிஜம்ன்னு ஒன்னு இருக்கு வர்ஷி, அது எவ்வளவு கசப்பா இருந்தாலும், நாம அதை நினைக்கலைன்னாலும் அது இல்லைன்னு ஆகிடாது!”

ஈஸ்வரின் வார்த்தைகளைக் கேட்டதும் இன்னும் அழுகை அதிகரிக்க.. “என்னோட வர்ஷ் பேபிக்கு யாரும் தேவையில்லை! இதுவரை அவளை அவ பார்த்துக்கிட்டா, இனி நான் பார்த்துக்குவேன். உன்னை விட்டுட்டு என்னால இருக்க முடியுமா.. நீ சொல்லு..” என கேட்டவன் அவளின் கண்களில் ஆழ்ந்து பார்க்க..

அந்த கண்களில் நீர் நிற்காமல் வழிந்த போதும், அவனின் கண்களை எதிர்கொண்டாள். “இந்த கல்யாணம் நடக்க நிறைய தப்பு பண்ணியிருக்கேன், நிறைய போராடி இருக்கேன், இந்த ஒரு வருஷமா நான் நானா இல்லை! இது தான் உண்மை!” என்றவனிடம்.

“நானும் தான் நிறைய போராடினேன், நீங்க எப்படி என்கிட்டே அப்படி நடந்துக்கிட்டீங்கன்னு. அப்புறம் வேற யாரையாவது கல்யாணம் பண்ணினாலும் உன்னை விட மாட்டேன் சொன்னீங்க. அதுல இருந்து நான் வெளில வர எவ்வவளவு கஷ்டப்பட்டேன்னு எனக்கு தான் தெரியும்” என்றவளின் நீல நிறக் கண்கள் கண்ணீரில் மிதந்த போதும் அவனை ஆழ்ந்து பார்த்தது.

அந்த நீல நிறக் கண்களில் மூழ்கியவன், “நான் அவ்வளவு சகிக்க முடியாமையா இருக்கேன்!” என, வர்ஷினி பதிலே பேசவில்லை. ஆனாலும் ஈஸ்வரை, அவனின் தோற்றத்தை, தன் காலடியில் சற்றும் கூச்சமோ தயக்கமோ இல்லாமல் இருக்கும் அவனின் பாவத்தை பார்த்திருந்தாள்.

வர்ஷினியின் கண்களில் இளக்கத்தை கண்ட போதும் சொல்ல மாட்டாள் என புரிந்தவன், “வர்ஷ், ஜஸ்ட் அம்மாகூட இருக்கியான்னு

கேட்டதுக்கு இவ்வளவு அழுவியா?" என,

"சில சமயம் இப்படி தான் ஆகிடும், என்னையும் மீறி, ஏன்னு எனக்கே தெரியாது"

"இது சின்ன விஷயம்"

"இருக்கலாம்! ஆனா யார் பண்ணினாலும் எனக்கு ஒண்ணுமில்லை, ஏன்னா நான் யாரையும் மைன்ட் பண்றது இல்லை.. ராத்திரி முழுக்க நான் அழுதாலும் யாருக்கும் தெரிய போறது இல்லை. ஆனா நீங்க... அப்படி இல்லை.. இல்லையா? இல்லைதானே!" என பேச,

"என்ன கேள்வி இது?" என்று ஈஸ்வர் கோபப்பட்டான்.

"அப்போ அப்படி தான் ஃபீல் பண்ணுவேன். எல்லோரும் நீங்களுக்கு எனக்கு ஒன்னா. நீங்க எப்படி அப்படி சொல்லலாம்!" எனத் தேம்பினாள்..

ஈஸ்வர் எழுந்து நின்று வர்ஷினியை அணைக்க.. அவனை வயிற்றினில் கட்டிக் கொண்டவளுக்கு அப்படி ஒரு அழுகை. அவளுக்கும் புரிந்தது இது ஒரு விஷயம் அல்ல என்று, ஆனாலும் அவள் மனதை அவளே சமாதனம் செய்ய முடியவில்லை. பின்னே நேற்று தான் "என் அருகில் எனக்கு நினைவு தெரிந்த நாளாக நீதான் உறங்கியிருகின்றாய்" எனச் சொல்ல..

இவன் இன்றே "நீ அம்மாவுடன் இருக்கின்றாயா?" என எப்படிக் கேட்கலாம் என ஒரு ஆற்றாமை மனதினில் பொங்கியது. அவனை அணைத்து ஒரு பாட்டம் அழுதவள், பின்பு நிமிர்ந்து "ரொம்ப சைல்ட்டிஷா பிஹேவ் பண்றேனா?" என,

இது அவளின் உணர்வுகளின் வெளிப்பாடு அதுவும் தன்னிடம் மட்டும் என புரிந்தவன் இல்லை என்பது போல தலையாட்டினான். ஆனாலும் மனம் கனத்து போனது.

பின்பு திரும்ப அவனை அணைத்துக் கொண்டவள், "இப்படி தான், ஒரு நாள் நீங்க என்கிட்டே நைட் பேசினீங்க, ஞாபம் இருக்கா?" என,

"இல்லை" என்பது போல தலையாட்ட,

"அன்னைக்கு அப்படிதான் நீங்க என்கிட்டே போன் பேசினீங்க. எங்க வீட்ல யாரும் கேட்காத என் படிப்பு பத்தி எல்லாம் கேட்டீங்க,

என் கண்ல வித்தியாசம் சொன்னீங்க, நான் குண்டாகிட்டேன் சொன்னீங்க, அப்புறம் எனக்கு ரொம்ப பேசற மாதிரி ஒரு ஃபீல் போன் வெச்சிட்டேன்"

"ரொம்ப அழுகை வந்துச்சு, ரொம்ப லோன்லியா ஃபீல் பண்ணினேன், வெளிய வந்து பார்த்தா யாருமே காணோம்.. திரும்ப நீங்க தான் எனக்கு சஷ்டி கவசம் அனுப்பி வெச்சீங்க, அப்புறம் படிச்சிகிட்டே தூங்கிட்டேன்!" என்றவள்,

"நான் எப்பவும் யாரையும் அதிகம் தேடினதில்லை, தேடின சில சமயமும் உங்களால தான்.. நீங்க என்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணிட்டீங்க.. எந்த லெவல்ன்னு என்னால சொல்ல முடியாது.. ஆனாலும் இப்போ உங்களோட தான் இருக்கேன்.. மறுபடியும் என்னை யாரையும் தேட வெச்சிடாதீங்க!" என தேம்ப,

"யாரை சொல்கிறாள்?" என்று புரியவேயில்லை. "யாரை சொல்ற?" என்று கேட்டவனிடம்..

"யாரையாவது.. அப்பா, அம்மா, அண்ணா, அண்ணி, யாரையாவது... அதுக்கு முன்ன யாரையும் தேடினது இல்லை ஆனா உங்களால நான் யாரையாவது டிபண்ட் பண்றேன்!" என்று தேம்பி தேம்பி அழ..

"உன் ஆளுங்க தானே! இதுக்கு எதுக்கு இப்படி அழற?" என்றவனிடம்... "உனக்கு புரியாது போ!" எனச் சொல்லி, திரும்பவும் அவனை இடையோடு இறுக்கமாக கட்டிக் கொண்டாள்.

நிஜமாகவே ஈஸ்வருக்கு புரியவில்லை.. வெகு நேரம் அவளை சமாதானம் செய்தான்.. ஆனாலும் தெளிந்த மாதிரி தெரியவில்லை.. அவனுக்கு வேறு வழியே இருக்கவில்லை.. தான் எவ்வளவு முக்கியம் வர்ஷினிக்கு புரிய வைக்க..

ஒரு ஆழ்ந்த வன்மையான முத்தமொன்றை யுத்தமாக இதழில் ஆரம்பிக்க.. முதலில் முடியாது போ என்பது போல திமிறியவளை விடாமல் ஆக்ரமித்தான்... விடாமல் அவளும் எதிர்த்தாள். ம்கூம் அசையக் கூட முடியவில்லை. அவனைக் காயப்படுத்தவும் மனதில்லை.

ஒரு கட்டத்தில் தன்னால் எதிர்க்க முடியாது, விடமாட்டான் என புரிந்தவள், அந்த முத்த யுத்தத்தை தனதாக்கினாள். ஈஸ்வருக்கு சற்றும் குறையாத முற்றுகை போராட்டம். நீயா நானா பார்த்துவிடலாம் என்பது போல செய்கை இருக்க.. இருவருமே தன்னிலை மறந்து போயினர்.

சித்தத்தினால் கொண்ட
பித்தத்தினால் எனது ரத்தத்தினால்
காதல் யுத்தத்தினால்...

**அத்தியாயம் ஐம்பத்தி எட்டு :**

**நடப்பவை நன்மைக்கே என எப்போதும் சொல்லிவிடலாகாது!**

அன்று தான் ராஜாராமின் காரியங்கள் செய்யப் பட இருக்க, எல்லோரும் வீட்டினில் குழுமியிருந்தாலும் முரளி வருவதற்காக காத்திருந்தனர். வீட்டு ஆட்கள் மட்டுமே வேறு யாரும் இல்லை. ஆம்! அன்று தான் முரளி வருவதாக இருந்தது.. நேற்று இரவு தான் ஷாலினிக்கு பிரசவ வலி எடுத்து ஹாஸ்பிடலில் அட்மிட் செய்தார்கள், இரண்டு நாட்களுக்கு முன் வந்தவன், ஷாலினி திரும்ப தொலைபேசியில் அழைத்திருந்ததால் உடனே சென்றிருந்தான்.. இப்போது வந்து திரும்ப செல்வதாக இருக்க..

எல்லா வேலைகளும் பத்துவும் ரஞ்சனியும் செய்து கொண்டிருக்க, வர்ஷினி பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

“நீயும் போய் ஹெல்ப் பண்ணு வர்ஷி” என ஈஸ்வர் சொல்ல, “இல்லை! வேண்டாம்! நான் போகலாமோ இல்லையோ தெரியலை. பூஜை இல்லையா.. நான் போகக் கூடாது”

“ஓஹ்” என்றவன்.. எழுந்து சென்று “ஏதாவது ஹெல்ப் வேணுமா ரஞ்சி” என,

“வேண்டாம் விஷ்வா, முடிஞ்சது, முரளிண்ணாக்கு தான் வெயிடிங்” என சொல்லும் போதே முரளி வந்திருந்தான்.

மிகுந்த களைப்பாய் இருந்தவனை பார்த்து “சீக்கிரம் குளிச்சிட்டு வா முரளி” என்று தாத்தா சொல்ல, வேகமாய் அவன் குளித்து வர சடங்குகள் முடியவும்.. “ஷாலினி ரொம்ப பயப்படறாம்மா. நான் கிளம்பறேன்!” என்று அம்மாவிடம் சொல்லி அனைவரிடமும் சொல்லி கிளம்ப,

“என்ன செல்ப் டிரைவிங்கா? வேண்டாம்!” என்ற ஈஸ்வர்.. தாஸ் இருந்தவனை அழைத்து “அவனோட போ” என.. அவனும் உடனே கிளம்ப..

“ரொம்ப டென்ஷனா இருக்கியோ? நானும் வரட்டுமா?” என ஈஸ்வர் கேட்க, “நானும் வரட்டுமா அண்ணா?” என்று ரஞ்சனியும்

கேட்க,

“இப்போ வேண்டாம்! இங்கே பாருங்க.. முடிஞ்சா ஈவ்னிங் வாங்க!” என்று சென்றான்.

அவன் சென்ற பிறகு ஆரம்பித்தது தான் பிரச்சனைகள்.. பத்து வந்து வர்ஷினியிடம், “இதுல ஒரு கையெழுத்து போடு வர்ஷினி!” என,

“என்ன அண்ணா இது?” என்றாள் சாதரணமாகவே..

“இது நம்ம கம்பனில உன்னோட வொர்க்ஸ் நாங்க பார்க்கிறதுக்கான பவர், அதாவது பவர் ஆஃப் அட்டர்னி” என விளக்கம் சொல்ல,

உடனே தன்னுடைய மொபைலை எடுத்தவள் “பவர் ஆஃப் அட்டர்னி” என்றால் என்ன என்று பார்த்தாள்.

ஏதோ மெசேஜ் பார்க்கிறாள் போல என்று பத்து நினைக்க..

சற்று தூரமாக இருந்தாலும் அவள் என்ன செய்கிறாள் என்று ஈஸ்வருக்கு புரிய.. “பவர் ஆஃப் அட்டர்னின்னா என்னன்னு பத்து கிட்டயே கேளு, அதுக்கு எதுக்கு மொபைல் பார்க்கிற!” என்றான்.

ஆம்! பிட் என்ற ஒன்றை தான் வர்ஷினி முதன் முதலில் போனில் தேடும் போது கவனித்தான். ஆனால் அதன் பிறகு பல முறை கவனித்து விட்டான், ஒரு சிறு விஷயம் விளக்கம் தெரியவில்லை என்றால் யாரிடமும் கேட்பது இல்லை. அவளாக ஃபோன் எடுத்து பார்க்க ஆரம்பித்து விடுகிறாள் என கவனித்தவனுக்கு அந்த விஷயம் திருப்தியாக இல்லாத காரணத்தால், அதை உடைக்கும் விதமாக “எதுன்னாலும் என்னை கேளு! தெரியலைன்னா பிறகு நான் பார்த்து சொல்றேன்!” என சொல்லியும் விட்டான். அதனைக் கொண்டே பத்துவிடம் கேள் என சொல்ல...

அதையா இவள் பார்த்தாள் என்ற பத்துவின் கண்களில் அதிருப்தியின் சாயல்.. எப்போதும் எதுவும் வர்ஷினியிடம் எதுவும் விளக்கம் கொடுத்ததில்லை. எப்போதும் பத்து நீட்டிய இடத்தில கையெழுத்து போடுவாள். எதற்கு என்றெல்லாம் கேட்டதில்லை. அவன் லாயர் என்பதால் எப்போதும் எல்லாவற்றிலும் அவன் தான் கையொப்பம் வாங்குவான்.

அந்த ஒரு முறையில் பத்து இப்போதும் அப்படியே செய்ய, அவனுக்கு மறந்திருந்தது ராஜாராம் இப்போது உயிரோடு இல்லை

என,

அதிலும் அவன் பேசிக் கொண்டு இருந்த போது ஈஸ்வர் பேசியது, என்னவோ அவனை கேள்வி கேளு என்பதாக ஒரு அர்த்தம் கொடுக்க,

“ஏன் பவர் குடுக்க முடியாதுன்னு சொல்றீங்களா? இல்லை குடுக்கக் கூடாதுன்னு சொல்றீங்களா?” என ஈஸ்வரை நோக்கி சொல்ல,

பத்து கேட்பது தலையும் புரியவில்லை வாலும் புரியவில்லை ஈஸ்வருக்கு. அதையும் விட பத்து பேசிய த்வனி ஈஸ்வருக்கு சுத்தமாக பிடிக்கவில்லை. நான் இதிலே எங்கே வந்தேன் என நினைத்தாலும், ஈஸ்வர் எதுவும் பேசவல்லை. ஆனால் முகத்தில் ஒரு இறுக்கமும் முறைப்பும் வந்து ஒட்டிக் கொண்டது.

வர்ஷினி இதனை கவனிக்கவில்லை. ஆனாலும் அங்கிருந்த தாத்தா, கமலம்மா மற்றும் ரஞ்சனி இவர்களைப் பார்த்து தானே இருந்தனர்.

ரஞ்சனிக்கு மிகுந்த பதட்டமாகி விட்டது, ஈஸ்வர் செய்வதை யாரும் கேள்வி கேட்பதே அவனுக்குப் பிடிக்காது. அப்படியிருக்கையில் இந்த விஷயத்தில் ஈஸ்வர் எதுவும் சொல்லியிருப்பான் எனத் தோன்றவில்லை. ஏனென்றால் இப்போது தானே வர்ஷினியிடமே பத்து பேசுகின்றான் போலத் தோன்றியது.

ஈஸ்வர் பல முறை எதற்கெடுத்தாலும் ஃபோன் பார்க்காதே என்று சொல்லியிருந்ததால், ஈஸ்வர் சொன்னாலும் கூட அதை கவனத்தில் கொள்ளாமல் அதை படித்துக் கொண்டு இருந்தவள், பத்துவின் கேள்வியோ அது ஒலித்த விதமோ வர்ஷினியின் கவனத்தில் பதியவில்லை.

தலை தூக்கியவள், “அண்ணா இது என்ன? என் வேலை செய்யறதுக்கான பவர் சொன்னீங்க. ஆனா என் ஷேர்ரை நீங்க என்ன வேணா பண்ணலாம், அதுவும் என் சம்மதம் கூட தேவையில்லை எனப் போட்டிருக்கு” என்று அவள் கேட்க..

“உன் சம்மதம் இல்லாம என்ன பண்ணுவோம் வர்ஷினி” என்றான் பத்மநாபன்.

“சம்மதம் இல்லாம எதுவும் செய்ய மாட்டீங்கந்றது வேற. ஆனா இதுல அப்படி தானே போட்டிருக்கு, இதுல நான் எதுக்கு கையெழுத்து போடணும். எதுன்னாலும் நீங்க என்கிட்டே

கேட்கலாமே” என, அவள் பத்துவை கேள்வி கேட்ட விதம் தாத்தாவிற்கு சுத்தமாக பிடிக்கவில்லை அவரின் முகம் சுருங்கியது.

“இப்படி தான் வர்ஷி முன்னமே இருந்தது. அப்பா பேர்ல உன்னோட பவர் இருந்தது” என்று இறுக்கமாகவே பத்து பதில் குடுக்க,

“அது அப்பா பேர்ல இருந்தது, ஆனா இப்போ நான் உங்களுக்கு எதுக்கு குடுக்கணும்” என வர்ஷினி அத்தனை பேர் முன்னும் கேட்டுவிட, பத்துவிற்கு அவமானமாகப் போய்விட்டது.

“என்ன பேசற நீ வர்ஷி? நான் நீ இப்படி பேசுவேன்னு எதிர்பார்க்கலை” என்றான்.

“என்ன நான் தப்பா பேசிட்டேன்? நீங்க முன்னமே என்கிட்டே கேட்டிருக்கணும்!”

கேட்டுருக்க வேண்டும் என்ற அவனின் தவறு பத்துவிற்கு பிடிபட்ட போதும் அதை அத்தனை பேர் முன்பும் ஒப்புக்கொள்ள மனமின்றி “என்ன கேட்கணும்? என்ன கேட்கணும்? இப்போ கூட கையெழுத்து வாங்கும் போது சொல்லிட்டு தானே வாங்கறேன், உனக்கு புரியற மாதிரி, உன்னோட வேலைகளை பார்க்கன்னு!”

ரஞ்சனியும் கமலம்மாவும் இருவரின் வாதத்தையும் வாயடைத்துப் போய் பார்த்திருந்தனர். பத்து தன்னை குற்றம் சாட்டி பேசியதால் ஈஸ்வருக்கு அதில் தலையிட மனதில்லை.

“ஆனா பவர் ஆஃப் அட்டர்னிக்கு அர்த்தம் அது கிடையாதே!”

“அர்த்தம் எதுவா இருந்தாலும், நாங்க வாங்கறது அந்த பர்பஸ்க்கு தானே! அப்போ அதுதானே சொல்ல முடியும்!” என்றான் பத்துவும்.

“ஆனாலும்..” என்று வர்ஷினி இழுக்க..

“அப்போ நீ எங்களை நம்பலையா.. அப்பா உனக்கு அத்தனையும் தூக்கி குடுத்தப்போ நானோ முரளியோ ஒரு வார்த்தை பேசியிருப்போமா! பேசினதில்லை.. ஏன் குடுக்கக் கூடாதுன்னும் சொன்னதில்லை.. அப்போவே ஒன்னும் சொல்லலை! இப்போ என்ன செஞ்சிடுவோம்?” என கோபமாகப் பேசினான்.

தாத்தா இதில் தலையிடாமல் நிற்க, “பத்து பொறுமையாப் பேசு எதுக்கு கோபப்படற.. நீ முன்னமே சொல்லியிருக்கணும்” என்று

கமலம்மா சொல்ல..

வர்ஷினி எப்போதும் அவனிடம் எதற்கும் மறுத்து ஒரு வார்த்தை பேசியதில்லை... இப்போது பேசுகின்றாள் எனவும் பத்துவால் தாளமுடியவில்லை..

“அம்மா அவ பேசுவாம்மா! அவ சேர்ந்த இடம் அப்படி!” என இதற்கு ஈஸ்வர் தான் காரணம் என்று நினைத்து வார்த்தையை விட..

அந்த வார்த்தைகளின் வீரியம் அவனுக்கு புரியவில்லை..

அடுத்த நொடி அமர்ந்திருந்த ஈஸ்வர் எழுந்து விட்டான்.. அவனின் முகத்தில் இருந்த கோபமும் ஆவேசமும் வர்ஷினிக்கு அப்படி ஒரு பயத்தைக் கொடுத்தது.

ரஞ்சனிக்கு எங்கே விட்டால் ஈஸ்வர் பத்துவை அடித்து விடுவானோ என்றே தோன்றியது. இந்த பத்து ஏன் இப்படி முட்டாள் தனமாகப் பேசுகின்றான் என பதறி..

“ஏன் இப்படி பேசறீங்க? இது சரியில்லை!” என்று தாழ்ந்த குரலில் தான் பத்துவிடம் சொன்னாள்.

“என்ன சரியில்லை? வர்ஷினி இப்படி பேச மாட்டா! யாரோ அவளைப் பேச வைக்கிறாங்க” என்று பத்து ஈஸ்வரை பார்த்தபடி பேச..

அதற்கு மேல் எல்லாம் அமைதியாக ஈஸ்வரால் இருக்க முடியவில்லை. அதுவரை அவனுக்கே ஒரு எண்ணம் கூட வர்ஷினி இன்னும் பக்குவமாக இதை கையாண்டு இருக்கலாமோ என்று. பத்து கண்டிப்பாக அவளுக்கு தீங்கு இழைக்க என்ன, நினைக்க கூட மாட்டான் என்று தெரியும்.

இப்போது ஈஸ்வரை குற்றம் சாட்டுகின்றான். நான் இல்லை என்பது போல பேசினால், அது வர்ஷினியின் தவறாகும்! இரண்டையுமே அவனால் அனுமதிக்க முடியாது, அதிலும் பின்னதை கண்டிப்பாக அனுமதிக்க முடியாது!

“ஆமாம்! நான் தான் சொல்லிக் கொடுக்கறேன்! என்ன இப்போ?” என்று கைகளை கட்டியபடி தீர்க்கமாக பத்துவை பார்த்தபடி ஈஸ்வர் வினவ,

முரளி இருந்தால் வேறு.. ஆனால் அவன் இல்லையே.. நிலமை கைமீறி தான் விட்டது. ஒரு முட்டாளுக்கு கூட புரிந்து விடும் ஈஸ்வர்

வேண்டுமென்றே சொல்கிறான் என, ஆனால் பத்துவிற்கு புரியவில்லை.

தாத்தா ஈஸ்வரின் பாவனை புரிந்தவராக, “பத்து வார்த்தையை விடாதே!” என்றபடி வர..

“இவ்வளவு நேரம் வேடிக்கை தானே பார்த்தீங்க தாத்தா! இப்போ மட்டும் என்ன?” என்றான் ஈஸ்வர். ஆம்! பத்து வார்த்தைகளை விட்டாலும் பெரியவராய் அவர் கண்டித்து இருக்க வேண்டாமா? செய்யவில்லை! பிறகு நீ யாராய் இருந்தால் எனக்கென்ன? இனி தலையிடாதே! என்ற பாவனை தான் ஈஸ்வரிடம்.

“அவர் உங்ககிட்ட பேசலை! என்கிட்டே பேசறார்” என தாத்தாவை பேசியது பிடிக்காமல் பத்து சொல்ல..

“உங்கிட்ட பேசினா நான் பேசக் கூடாதா? எங்கே அவர் சொல்லட்டும் நான் பேசக் கூடாதுன்னு” என..

ஈஸ்வரின் தோரணையே தாத்தாவிற்கும் பதட்டத்தை கொடுத்தது. பார்த்திருந்த வர்ஷினி “நானும் பத்துண்ணாவும் பேசி தீர்த்துக்கறோம். நீங்க தலையிடாதீங்க!” என ஈஸ்வரிடம் சொல்ல..

அவளை ஒரு பார்வை பார்த்தவன், “அண்ணாவும் தங்கையும் என்னவோ பேசிக்கங்க? நான் தலையிட்டேனா! தள்ளி தானே நின்னேன்! சரி, அதையும் விடு! என்னை பேசிட்டு கூட போகட்டும். ஆனா சேர்ந்த இடம் அப்படின்னு எதை சொல்றான்? எங்க வீட்டை இழுக்கறானா? தப்பு! அது ரொம்ப தப்பு! நான் உன்னை கல்யாணம் பண்ணினது என்னோட முடிவு! பத்துவை கல்யாணம் பண்ணினது ரஞ்சனியோட முடிவு! ஒரு வார்த்தை கூட மறுக்காம எங்க வீட்ல ஒத்துகிட்டாங்க! அப்போ இந்த மரியாதையை தான் நாங்க அவங்களுக்கு தேடித் தருவோமா?” என அங்கிருந்த அனைவருமே வாயடைத்து விட்டனர்.

“பொண்ணு கொடுத்திருக்கோம்! பொண்ணு எடுத்திருக்கோம்! இதுதான் இவன் குடுக்கற மரியாதையா?” என்று அடிக்குரலில் சீற..

“பொண்ணு நீங்க ஒன்னும் குடுக்கலை, நீங்க தான் குடுக்க மாட்டேன்னு சொல்லிட்டீங்களே, அவளே தான் வந்தா!”

“நீ என்ன வேலை செய்திருக்கிறாய் பார்!” என்பது போல ஈஸ்வர் ரஞ்சனியை பார்த்தான்.

“என்ன பேசறீங்க நீங்க?” என ரஞ்சனி பத்துவை அடக்க முயல..

பத்துவிற்கு அன்று வாயில் சனி தான் பிடித்துவிட்டதோ! ஈஸ்வரிடம் பணிந்து போக மனமில்லை, “என்ன பேசறேன்? நிஜத்தை தானே பேசினேன்! இவங்க ஒன்னும் எனக்கு பொண்ணு குடுக்கலையே, நீதானே கல்யாணம் பண்ணலாம்னு வந்தே!”

“நீங்க பொண்ணு கேட்டீங்க! எங்க வீட்ல பொண்ணு குடுக்கலை! அப்போ தான் வந்தேன்.. உங்க விருப்பம் இருந்ததால தான் வந்தேன்!” என்று விளக்கம் கொடுத்தாள், ஆனாலும் இப்படி ஒரு விளக்கம் கொடுக்க உள்ளுக்குள்ளே நொறுங்கி போனாள்.

“என் விருப்பத்துக்காக மட்டும் தான் வந்தாயா.. இல்லையே! உனக்கு தேவை இருந்தது வந்தே!” என்றும் சொல்லிவிட..

கோபமாக இருந்தாலும், நிதானமாக தான் இருந்தான் ஈஸ்வர். வார்த்தைகள் ரஞ்சனிக்குள்ளும் பத்துக்குள்ளும் தடிப்பதை உணர்ந்து, இந்த வார்த்தைகளை ரஞ்சனி தாங்கமாட்டாள் என புரிந்து.. நிதானம் பிரள ஆரம்பித்தான்.

“எனக்கு என்ன தேவை?” என்று ரஞ்சனி பேசும் போதே கண்கள் கலங்கிவிட, குரலும் அடைத்துக் கொண்டது.

“அண்ணா! என்ன பேசறீங்க? நீங்க தானே அண்ணிக்கிட்ட சாரி கேட்க சொன்னீங்க! நான் தானே பேசினேன்! அப்படி தானே உங்க கிட்ட பேசவே வந்தாங்க!” என்ற போதும்..

“நீ பேசாதே வர்ஷி!” என்றவள், “என்ன தேவை? எனக்கு இப்போ தெரியணும்!” என,

கமலம்மாவும் தாத்தாவும் அவசரமாக “அவன் ஏதோ முட்டாள் தனமா உளறுறான், அவனுக்கு பேசவே தெரியலை” என ரஞ்சனியை அமைதிப்படுத்த அவள் அமைதியாகவே இல்லை.

ஈஸ்வர் ரஞ்சனியையே பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு தாளவே முடியவில்லை.. “எப்படி அருமை பெருமையாய் வளர்த்தோம், இந்த பேச்சினை கேட்பதற்கா!” எனத் தோன்ற,

“விடு ரஞ்சி, வர்ஷி சேர்ந்த இடம் அப்படி பேசறான்னா, இவன் பிறந்த இடம் அப்படி பேச வைக்குது!” என்று சொல்ல..

“என்ன பிறந்த இடம்? ஆமாம்! நாங்க வசதியில்லாம தான் பிறந்தோம்! பணத் தேவைக்காக எதுவும் பண்ணலை! உங்க பணப் பிரச்சனைக்கு தானே இவ என்னை கல்யாணம் செய்துகிட்டா!” என்று சொல்லிவிட..

ரஞ்சனி அப்படியே தலையை பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள். கண்களில் இருந்து நீரும் வர,

“பத்து! என்ன இப்படி பேசிட்ட? தப்பு! மன்னிப்பு கேள்! மன்னிப்பு கேள்!” என்று தாத்தா அதட்ட..

கமலம்மாவும் வர்ஷினியும் ஈஸ்வரின் முகத்தை பயத்தோடு பார்க்க..

ரஞ்சனியிடம் விரைந்தவன், “எழுந்துரு” என்றான். ரஞ்சனி தலையை நிமிர்த்தி பார்த்த போதும் எழவில்லை.. கண்களில் இருந்த நீர் எதிரில் நின்ற ஈஸ்வரை கூட மறைத்தது.

பத்துவும் உடனே தான் சொன்னது தவறென்று புரிய.. “சாரி!” என்றான் ரஞ்சனியைப் பார்த்து..

கைபிடித்து அவளை இழுத்து எழுப்பினான் ஈஸ்வர், எழுந்து அவள் மலங்க மலங்க விழிக்க..

“நான் குடுத்த ஈஸ்வர் ஃபைனான்ஸ் பேப்பர்ஸ் யார் கிட்ட இருக்கு!” என்றான்.

“ஆங்!” என்று விழிக்க.. “ரஞ்சி” என்று அவன் போட்ட அதட்டலில் “என்கிட்டே தான் பீரோல!” என,

“போ! போய் எடுத்துட்டு வா!” என்றான் கர்ஜனையாக.

பதில் பேசாமல் ரஞ்சனி செல்ல.. “அதான் சாரி சொல்லிட்டேன் தானே! இன்னும் என்ன பண்ணனும்? இதை விட்டுடுவோம்!” என்று பத்து சற்று தணிவாகவே பேச..

ஈஸ்வர் அவன் புறம் திரும்பக் கூட இல்லை.

வர்ஷினி வேகமாக வந்து, “அதான் அண்ணா சாரி கேட்கறாங்க தானே! எங்களால தானே ப்ராப்ளம். நான் எங்க வேணா சைன் பண்றேன். கொடு அண்ணா!” என பத்துவின் அருகில் போக முயன்றவளை நகரவிடாமல் கை பிடித்து நிறுத்தினான்.

தாத்தா வேகமாக வந்து “பத்து தெரியாம பேசிட்டான்! அதான் மன்னிப்பும் கேட்கறானே!” என்று அவரும் பேச..

“சில விஷயத்துக்கு மன்னிப்பு கிடையாது, தீர்ப்பு தான்!” என்றவன், அதற்குள் ரஞ்சனி அந்த பத்திரங்களை எடுத்து வந்திருக்க..

அதை கையினில் வாங்கியவன் “எதுவும் உடனே ஈஸியா கிடைச்சிட்டா, அதோட மதிப்பு தெரியறதில்லை. நான் பணம் வாங்கினேன். அதுக்கு இந்த ஃபினான்ஸ் எழுதிக் கொடுத்துட்டேன்.. வேற எங்க, எந்த பணம் வந்தது!” என்றவன்,

சற்றும் யோசியாமல் கையினில் இருந்த பத்திரத்தை கிழித்து போட்டான்.

“என்ன செய்கிறான்?” என்று எல்லோரும் ஸ்தம்பித்து பார்க்க, “உன்கிட்ட வாங்கின பணம் அப்படியே இருக்கு. இனி ஈஸ்வர் ஃபைனான்ஸ் ரஞ்சனிக்கு இல்லை.. நான் எப்போ வாங்கின பணத்தை திரும்ப குடுக்கிறேனோ, அதுக்கு அப்புறம் இவளை இந்த வீட்டுக்கு அனுப்பறதை பத்தி யோசிக்கிறேன். இனி இவ இங்க இருக்கமாட்டா, இருக்கவும் நான் விடமாட்டேன்!” என்றவன்,

ரஞ்சனியின் கைபிடித்து “வா” என்பது போல இழுத்துப் போக.

வர்ஷினி அப்படியே பார்த்து நிற்க.. “உனக்கு தனியா சொல்லணுமா, முன்னாடி போ.. இனிமே என்னோட பெர்மிஷன் இல்லாம நீ எந்தக் கையெழுத்தும் போடக் கூடாது.. இவன் சொன்ன மாதிரி இனி உன்னோட முடிவுகள் எல்லாம் என்னோடது தான்!” என்று சொல்லி, தாத்தா கமலம்மா என யார் பேச்சிற்கும் செவி சாய்க்காமல்,

ரஞ்சனி வருகிறாளா இல்லையா என்று கூட கேட்காமல், கால்கள் நகர மறுத்த அவளை தர தரவென்று இழுத்து தான் காரில் சென்று ஏற்றினான்.

பத்து உணர்வு பெற்று வேகமாக, “தெரியாம பேசிட்டேன் மன்னிச்சிக்கங்க! இனி இப்படி நடக்காது! அவளை கூட்டிட்டு போகாதீங்க!” என சொல்லி நிற்க.. அவனின் உடல் மொழியில் வார்த்தைகளில் பணிவு, கண்களில் கெஞ்சல் இருந்த போதும் ஈஸ்வர் அசையவில்லை.

“பணத்தை கொண்டு வராதீங்கன்னு உங்கப்பாகிட்ட, உன்கிட்ட அவ்வளவு தடவை சொன்னேன்.. உங்கப்பா பொண்ணு கேட்டது எப்படிக் கேட்டார், கல்யாணம் செஞ்சுக் குடுங்க பணத்தை திரும்பக் கொடுக்க வேண்டாம்னு. அப்போவே அதுக்காக அவ்வளவு பேசினேன். முடியாது சொன்னேன். அப்போவும் எதோ ஒரு வகையில உன்னை நம்பி இவ கல்யாணம் செய்துகிட்டா, அதுக்காகத் தான், இந்த வார்த்தை நீங்க பேசிடக் கூடாதுன்னு தான் ஃபைனான்ஸ் அப்படியே தூக்கி கொடுத்தேன்”

“ஆனாலும் எங்க பணப் ப்ரச்சனைக்காக கல்யாணம் பண்ணினானு சொல்லிட்ட இல்லை, இனி நான் பணம் திரும்பக் கொடுக்காம அவ இங்க வரமாட்டா! என்ன ஆனாலும் சரி?” என்று சொல்லி வர்ஷினியைப் பார்க்க, வர்ஷினி அவன் பார்வையில் அவளே வந்து ஏறிவிட, கார் அவனின் வீட்டை நோக்கி வேகமெடுத்தது.

பத்து அப்படியே தலையை பிடித்துக் கொண்டு அமர்ந்து விட, கமலம்மா கணவர் இறந்த போது கூட அழாத அழுகையை அப்போது அழுதார்.

**காலம் கடந்து போய்விடும் ஆனால் அதன் சுவடுகள் நின்று விடும்!**

## அத்தியாயம் ஐம்பத்தி ஒன்பது :

**முடிவுகள் எடுக்கப் படுவது வேறு! திணிக்கப் படுவது வேறு!**

வீடு வந்து சேரும் வரை யாரும் யாருடனும் பேசிக் கொள்ளவில்லை. ஆனால் ரஞ்சனியின் கண்ணீர் மட்டும் குறைந்தபாடில்லை. வரும் கண்ணீரை துடைத்து விடுவதே வேலையாகிப் போனது.

பத்து பேசியதில் ஒரு மாதிரி விரக்தியின் விளிம்பில் இருந்தாள். இந்த ஒரு வருடத்தில் ஒரு நிமிஷம் கூட என்னை புரிந்து கொள்ளவில்லையா.

வீடு வந்ததும் ரஞ்சனியின் அழுத முகத்தை பார்த்து வீடே பதறியது. “என்ன? என்ன ஆச்சு?” என்று சௌந்தரி பாட்டி பதற, அவர் பதறிய விதத்தில் “ஏதாவது இழுத்து விட்டுக்காதீங்க பாட்டி அமைதியா இருங்க!” என்று ஈஸ்வர் அதட்டினான்.

ரஞ்சனி ஈஸ்வரை விடுத்து மலர் வர்ஷினியிடம் “என்ன ஆச்சு வர்ஷினி?” என,

வர்ஷினி உடனே சொல்லி விட்டாள் “பத்துண்ணாக்கும் எனக்கும் ஒரு சின்ன வாக்குவாதம், அதுல அண்ணா இவர் மேலே தப்பு சொன்னாங்களா, அது அப்படியே பெருசாகி பத்துண்ணா தேவையில்லாம தப்பா பேசி, இவருக்கு கோபம் வந்து அண்ணியை கூட்டிட்டு வந்துட்டாங்க” என கதை சொல்ல,

“என்ன?” என்று அதிர்ந்தார் மலர். ஆம்! வர்ஷினிக்கு அது கதை சொல்வது போல தான்.. அந்த சூழ்நிலைகளின் தாக்கம் புரிந்தாலும்

அது அவளிடம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

முழு விவரமும் தெரியாத போதும் “என்னவாயிருந்தாலும் பேசி தானே தீர்த்திருக்கணும்? உன்னை யாருடா கூட்டிட்டு வர சொன்னா? உன்னை யார் முடிவெடுக்க சொன்னா? அடங்கவே மாட்டியா நீ! என்ன ஏதுன்னு எங்ககிட்ட ஒரு வார்த்தை கூட கேட்கமாட்டியா?”

“என்ன கேக்கறது? என்ன கேக்கறது? நம்ம பணப் பிரச்சனைக்காக தான் இவ அவனை கல்யாணம் பண்ணிக்கிட்டான்னு சொல்றான், அதை கேட்டுகிட்டு என்னை வரச் சொல்றீங்களா முடியாது! அதான் ஃபைனான்ஸ் பேப்பர்ஸ் இவளுக்கு எழுதிக் கொடுத்ததை கிழிச்சி போட்டுடேன், நாம பணத்தை திரும்பக் கொடுக்கிற வரை இவளை அனுப்ப மாட்டேன்னு சொல்லிட்டேன்” என சொல்ல,

வீடே வாயடைத்து போனது, “என்ன பத்திரத்தை கிழிச்சு போட்டுட்டியா, பணத்தை திரும்பக் கொடுத்த பிறகு அனுப்புவியா?” என்ற மலர் இடிந்து போய் அமர்ந்து விட்டார். அதற்குள் ரூபா விஷயத்தை சொல்லியிருக்க, ஜகனும் நமஷிவாயமும் வீடு வந்து கொண்டிருந்தனர்.

வீட்டில் அப்படி ஒரு அமைதி.. மதிய உணவு உண்ணும் நேரம் கூட ஆகவில்லை, “ஐயோ, திரும்ப பணப் பிரச்சனையா, இன்னும் ஜகனால் ஆரம்பித்த பிரச்சனைகள் முடியவில்லையா” எல்லோரையும் விட ரூபா இன்னும் பயந்து போனாள்.

“இந்த ஒரு வாரமாக தான் ஜகன் சற்று சிரித்துப் பேசுவதே, மீண்டும் தனக்குள் சுருங்கிக் கொள்வானே.. ஏன்? ஏன் தங்களை இப்படி பிரச்சனைகள் தொடர்கின்றது? எப்போது இது தீரும்!” என்று அவளுக்கும் அப்படி ஒரு அழுகை பொங்க, தன்னுடைய மாமியாரிடம் “பிரணவியை அழைசிக்கங்க அத்தை!” என்று சொல்லி ரூமின் உள் முடங்கிக் கொண்டாள்.

நமஷிவாயம் வர, அவரிடமும் விஷயம் சொல்லப் பட, அவருமே ஈஸ்வரிடம் “அவங்க தான் பணத்தை ஒரு விஷயமாக்கினாங்கன்னா நீ என்ன செய்து வெச்சிருக்க.. நீ பணத்தை குடுத்த பிறகு தான் திரும்ப அனுப்புவேன்னு சொல்லியிருக்க, நீயும் அதே தப்பை தான் செஞ்சிருக்க” என்று ஈஸ்வரை கண்டித்தவர்,

“பத்திரம் நான் எழுதிக் கொடுத்தேன், அதை நீ எப்படி கிழிச்சுப் போடலாம். அவளை அனுப்ப மாட்டேன்னு நீ எப்படி சொல்லலாம்”

என்று அவரும் தன் பங்கிற்கு கோபப்பட..

“ஓஹ்! உங்களுக்கு ஒரு பிரச்சனைன்னா நான் ஓடி வரணும்! ஆனா நான் பிரச்சனை பண்ணினா நீ யார் செய்யறதுக்குன்னு என்னை கேள்வி கேட்பீங்க!” என்று ஈஸ்வர் எகிற..

இவனிடம் இப்படி பேசினால் வேலைக்கு ஆகாது எனப் புரிந்து, “டேய், புரியாம பேசாதே! இது ரஞ்சனி யோட வாழ்க்கை.. அதுல நீ முடிவெடுக்கக் கூடாது!” என்று அவர் பொறுமையாகவே பேசினார்.

அப்போதும் ஈஸ்வர் முறைத்து நிற்க, “விடு! இதை நீ விட்டுடு! நான் பார்த்துக்கறேன்! நான் மன்னிப்பு கேட்டுக்கறேன்! நான் கொண்டு போய் விடறேன்! நீ இதுல வராத, பணம் என்ன பண்ணலாம்னு பிறகு யோசிக்கலாம்!”

வர்ஷினி இருப்பதையும் பொருட்படுத்தாது “என்ன? கொண்டு போய்விடுவீங்களா! முடியாது! கண்டிப்பா  நான் விட மாட்டேன், என்ன நினைச்சிருக்கான் அவன், அவங்கப்பா பொண்ணு கேட்டப்போவும் அப்படி தான் கேட்டார். அப்போவே பெரிய ப்ராபளம் ஆச்சு, திரும்பவும் அதையே இழுக்கறாங்க! எப்படி நான் அதை விட.. எத்தனை தடவை சொல்றது.. என்ன அவங்க பெரிய ஆளுங்க, நாம குறைஞ்சு போயிட்டோம், அவங்க நம்ம குடும்பத்துக்கு ஒன்னும் சமதை இல்லை.  இன்னைக்கு வந்த பணம் தானே! அதான் பணத்தை கொண்டே எல்லாம் பார்க்கறாங்க!” என கத்தினான்.

“அந்தப் பணத்தை நம்மளால புரட்ட முடியாதா? ஆறு மாசம்.. நான் சரி பண்றேன் எல்லாம்.. அப்போ ஒரு மாசத்துல பணம் குடுக்கணும்னு பிரஷர் இருந்ததால, என்னால அதிகம் யோசிக்க முடியலை! என்கிட்டே விடுங்க! இந்த பண விஷயத்தை நான் சரி பண்றேன்!” என,

“பணத்தை என்னவோ பண்ணு விஷ்வா! அதுக்காக இவளை கூட்டிட்டு வந்தது சரியில்லை!” என்று பெரியம்மாவும் சொல்ல,

“அதெல்லாம் முடியாது! அப்போ என்னை யாரும் நம்பலையா? ஆறு மாசம் தானே அனுப்பிடலாம். உடனே அனுப்பினா, திரும்ப நாம குடுக்க முடியாதுன்ற பயத்துல அனுப்பறோம்ன்னு சொல்வான்” என ஈஸ்வர் அவன் பிடியிலேயே நிற்க..

யார் பேச்சும் காதில் ஏற்றும் நிலையிலே இல்லை அவன்.. அவன் முகத்தில் தெரிந்த ஆவேசத்திலும் ஆக்ரோஷதிலும் வேடிக்கை தான் பார்க்க முடிந்தது.

“எப்படி அதை சரி செய்யலாம்” என நமஷிவாயம் யோசிக்க..

வர்ஷினி எல்லோரையும் வேடிக்கை பார்த்திருந்தாள். இந்த மாதிரி சூழல்கள் எல்லாம் அவளுக்கு மிகவும் புதிது அதையும் விட, தன்னால் தான் இது ஆரம்பித்ததோ என்றும் இருக்க, மிகுந்த குற்ற உணர்ச்சியாகப் போயிற்று. முன்பும் அவளால் தான் பத்து ரஞ்சனியை அடிக்கும் நிலை வந்தது.  இப்போது அவள் பேசப் போய் தான் ஏதேதோ ஆகிவிட்டது.

ரஞ்சனி “தானே திருமணம் செய்து கொண்டதால், இப்படியாகிற்றோ” என நினைக்க... “என்ன வளர்த்து வைத்திருக்கின்றேன் நான் மக்களை” என்று மலர் குற்ற உணர்ச்சிக்குப் போக.. “தன் மகனால் தானே” என்று பெரியம்மா நினைக்க, “தன்னால் தானே!” என்று ஜகன் நினைக்க..

மொத்தத்தில் வீடே குற்ற உணர்ச்சியில் இருக்க...

அதன் சாயல் எதுவும் இன்றி அடுத்து என்ன செய்வது என்ற யோசனைக்கு அப்போதே போய் விட்டான் ஈஸ்வர்...

“எப்படி நான் இவ்வளவு சொல்லியும் இவர்கள் பணத்தை இழுத்து விட்டார்களே!” என்ற ஆதங்கம் தான் அவன் மனதில், சிந்தனைகளும் அதனை ஒட்டியே.

மதிய உணவு உண்ணும் எண்ணம் யாருக்கும் இருப்பதாய் கூடத் தெரியவில்லை.

இப்படி ஓடிக் கொண்டிருக்க, பத்துவும், தாத்தாவும், கமலம்மாவும் அங்கே வந்தனர். அவர்கள் வருவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. வீடு உடனே பரபரப்பாக..

“வாங்க!” என்று நமஷிவாயம் எதையும் முகத்தில் காட்டாது இன்முகமாகவே வரவேற்க, அதையே வீட்டினர் அனைவரும் பின்பற்றினர், ஈஸ்வர் மட்டுமே இறுக்கமாய் முகத்தை வைத்து “வாங்க” என்றான்.

வர்ஷினி இதை விழியகற்றாமல் பார்த்திருந்தாள் “என்னடா நடக்குது” என்பதை போல.. ஒன்று மனதில் இருப்பதை பேச மாட்டாள், அல்லது இருப்பதை உள்ளது உள்ளபடி பேசிவிடுவாள்.. இந்த உறவுகள், அதன் சம்ப்ரதாயங்கள், பூச்சு வார்த்தைகள் எல்லாம் அவளுக்கு புதிதே.

“ரஞ்சனி அண்ணியை பேசியிருக்காங்க, அவங்க கிட்ட கோபப்படாம இப்போ வான்னு சொல்றாங்க!” என்று பார்த்திருக்க..

“வர்ஷினி என்ன பார்த்திருக்க? போ! போய்  தண்ணி கொண்டு வா!” என மலர் அதட்ட, “சரி அத்தை” என்று உடனே உள்ளே சென்றாள். அந்த நேரத்திலும் எதற்கு இப்படி வர்ஷினியை அதட்டுகிறார்கள் என்று தான் பத்துவிற்கு தோன்றியது. அது உரிமையான அதட்டல் என்று அந்த முட்டாளுக்கு புரியவில்லை.

தாத்தா நேரடியாக “என்னவோ ஒரு பதட்டம், கோபம், பத்து தப்பா வார்த்தைகளை விட்டுட்டான் மத்தபடி மனசால கூட அவன் அப்படி நினைக்க மாட்டான். அந்த கோபத்துல ஈஸ்வர் ரஞ்சனியை அழைச்சிட்டு வந்துட்டான்.. நீங்க பொண்ணை திரும்ப அனுப்பி வைக்கணும்.. என் பையன் இறந்து பத்து நாள்ல இப்படி ஆகறது நாங்களே எதிர்பாராதது, வேணும்னா பத்துவை நான் மன்னிப்பு கேட்க சொல்லட்டுமா?” என்றார் தன்மையாக..

தேர்ந்த அரசியல்வாதி வேறெப்படி பேசுவார் என்று தான் ஈஸ்வருக்கு தோன்றியது.

“அதெல்லாம் ஒன்னும் வேண்டாங்க!” என்று அவசரமாக மறுத்த நமஷிவாயம் “இது சின்ன பசங்க சண்டையா நினைச்சு விட்டுடுவோம்.. நீங்க எப்போ வேணா ரஞ்சனியைக் கூட்டிட்டு போங்க!” என்று அவர் பட்டென்று சொல்ல,

ஈஸ்வரின் முகம் கோபத்தில் மாறுவது அங்கிருந்த அத்தனை பேருக்குமே தெரிந்தது. ஆனாலும் அப்பாவை மறுத்து எதுவும் அவன் பேசவில்லை.

நமஷிவாயதிற்குமே இது தன் பெண்ணிற்கு கிடைத்த சரியான மரியாதை அல்ல என்று தெரியும்.. ஈஸ்வர் ஒரு வகையில் “போங்கடா” என்று ரஞ்சனியை அழைத்து வந்தது ஒரு தகப்பனாக அவருக்கு பெருமை தான்..

ஆனால் அனுபவம் வாய்ந்தவராகவும் இருக்க.. இப்போது தளைந்து போய் விடுவது தான் சரி என்று தோன்றியது. ராஜாராம் இறந்து பத்து நாட்கள் தான் ஆகின்றது. அங்கிருந்து பெண் வேறு எடுத்திருக்க சண்டை போடுவது முறையாகாது என புரிந்து, அதுவும் அவர்களாக மன்னிப்பு வேறு கேட்கும் போது விட்டுவிடுதல் சரி என்று தோன்ற, அழைத்துச் செல்லுங்கள் என பேசினார்.

ஆனால் ஈஸ்வர்.. அவனை மறந்து போனார்.. முகம் இறுக நின்றிருந்தான்...

தண்ணீர் கொண்டு வந்தவளிடம், “அவங்க வேற என்ன இந்த நேரத்துல குடிப்பாங்க, பார்த்து கொண்டு வா!” என்று மலர் சொல்ல..

“எனக்கு தெரியாதே அத்தை!” என்றாள் வர்ஷினி அவரிடம் மெதுவாக..

“என்ன தெரியாதா?” என,

“நிஜம்மா தெரியாது!” என்றாள். ஆம்! அவளை தானே எல்லோரும் கவனிப்பார், அவள் யாரை கவனித்து இருக்கின்றாள்.

பின்பு ரஞ்சனியிடம் “போ ரஞ்சனி, குடிக்க என்னன்னு பார்த்து வர்ஷினி கிட்ட குடுத்தனுப்பு” என்று மலர் சொல்ல, இருவரும் உள்ளே சென்றனர்..

வர்ஷினி ரஞ்சனியின் முகத்தை பார்த்து பார்த்து திரும்ப...

“எதுக்கு இப்படி பார்க்கிற?” என்று ரஞ்சனி கேட்கவும்,

“சாரி அண்ணி! அண்ணா பேசினது தப்பு தானே! என்னால தான் திரும்ப சண்டை” என,

“உங்கண்ணா பண்ற முட்டாள் தனத்துக்கு நீ என்ன பண்ணுவ? விடு!” என்றவள், தேவையானதை வேலைக்காரர்களிடம் சொல்லி வாங்கி வர்ஷினியிடம் குடுத்து அனுப்பிய போதும் வெளியே வராமல் அங்கேயே நின்று கொண்டாள். மனம் ஆய்ந்து ஓய்ந்து போனது.

பத்துவின் கண்கள் ரஞ்சனியை தான் தேடியது... செய்தது மிகப் பெரிய தவறு என்று புரிந்திருந்தான்.. “என்ன ஆகிற்று எனக்கு? இந்த ஈஸ்வரை இழுத்து என்னை நானே கீழே இறக்கிக் கொண்டேனே! அதையும் விட ரஞ்சனியை இறக்கி விட்டேனே! அதையும் விட பேசிய வார்த்தைகள்.. எப்படி தீர்ப்பேன் அதை. சே! இவர்கள் அனுப்புகிறேன் என்று சொன்னாலும், அவள் வருவாளா? அப்படி வந்தாலும் ஈஸ்வர் விடுவானா?” என்றே பார்த்திருந்தான்.

பின்பு மாறி மாறி தாத்தாவும், கமலம்மாவும், பத்துவின் சார்பாக பேச, “இவ்வளவு ஏன் விளக்கம் குடுக்கறீங்க விட்டுடுவோம்! ஈஸ்வர் செஞ்சதுக்கு நான் மன்னிப்பு கேட்கறேன்” என்று நமஷிவாயம் சொல்ல..

அதற்கு மேல் ஈஸ்வரால் அங்கு நிற்க முடியவில்லை.. தன்னுடைய எதிர்ப்பை வார்த்தையால் தெரிவிக்காமல் மாடி ஏறி

தன்னுடைய ரூமின் உள் புகுந்து கொண்டான்.

“என்ன நான் தவறு செய்தேன்? இந்த அப்பா இப்படி பேசுகிறார்” என்று கோபம் கனன்றது மட்டுமல்லாது, கொழுந்து விட்டு எரியத் துவங்கியது.

மலர் உள்ளே வந்து ரஞ்சனியிடம் “கிளம்பறியா ரஞ்சனி” என, நிமிர்ந்து முகத்தை பார்த்த மகளிடம், “நீயா அமைச்சிக்கிட்ட வாழ்க்கை, இதுல தோத்துப் போயிடாத, விஸ்வா இந்த விஷயத்துல தோத்துப் போனா போயிட்டு போறான்! அவன் வார்த்தையை கடைபிடிக்கணும்னு ஒன்னும் இல்லை”

“கண்டிப்பா உன் வீட்டுக்காரர் பேசினது தப்பு தான்! ஆனா அதை அவர் உணரணும், நாம உணர்த்தி பிரயோஜனமில்லை, பணம் விஸ்வா சொன்ன மாதிரி திரும்பக் குடுத்துக்கட்டும். ஆனா நீ இங்க இருக்காத, கிளம்பிரு, பிரச்சனைகளை மேல மேல வளர்க்க வேண்டாம்!”

“நீ போய் எல்லாம் மறந்துட்டு சந்தோஷமா குடும்பம் நடத்துன்னு நான் சொல்லலை, சரியோ தப்போ அங்க இருந்து சண்டை போடு என்ன..?” என நிறுத்தியவர்,

“இந்த ஒரு தடவையாவது அம்மா சொல்றதை கேளு!” என வற்புறுத்தியே பேசினார்.

“விஸ்வா...” என ரஞ்சனி இழுக்க,

“அவனை நான் பார்த்துக்கறேன்! முடியலையா.. என்ன நடக்குதோ நடக்கட்டும்!” என்றார் மகனை புரிந்தவராக.. நிச்சயம் கோபப்படுவான், ஆடித் தீர்த்து விடுவான், தங்களோடு பேசாமல் கூட இருப்பான்” என்று எல்லாம் அறிந்தே சொன்னார். ஆனால் மகன் செய்யப் போவதை அவர் அறியவில்லை.

“தப்போ? சரியோ? நீ உன் வீட்டுக்காரரோட தான் நிற்கணும்! இனிமே விஸ்வா உனக்கு இரண்டாம் பட்சம் தான்! புரிஞ்சதா? உன் முடிவு உனக்கு போக விருப்பமில்லைன்னா வேற, ஆனா அவன் சொன்னான்னு நீ போகாம இருக்காதே!” என மீண்டும் சற்று அழுத்தியே கூறி, “கிளம்பு” என்று மகளை அழைத்து வந்தார்.

சிறிது நேரம் பேசியிருந்தவர்கள் ரஞ்சனியை அழைத்துக் கொண்டு கிளம்ப, “நான் போய் விஸ்வா கிட்ட சொல்லிட்டு வர்றேன் மா!” என்ற போதும் வீட்டினர் விடவில்லை,

“நீ கிளம்பு! நாங்க சொல்லிக்கறோம்!” என்று அவளை அனுப்பி விட்டனர்.

இந்த பத்துவாவது போய் பேசியிருக்க வேண்டும் அவனும் செய்யவில்லை. ரஞ்சனி வந்தால் போதும் எதுவாகினும் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என நினைத்து சென்று விட.. ஈஸ்வர் ரஞ்சனியின் அண்ணன் என்பது ஒரு புறம் இப்போது வர்ஷினியின் கணவன் அல்லவா அவனுடைய கோப தாபங்கள் வர்ஷினியையும் சேர்ந்து தானே பாதிக்கும். அதை மறந்து போனான்.

விளைவு வர்ஷினிக்கு பிறந்த வீடு விடுமுறைக்கென்று இருந்தது, இப்போது முற்றிலும் இல்லையென்றாக, புகுந்த வீடும் இல்லை என்று சொல்லி விட்டான் ஈஸ்வர். அன்று மாலையே யார் சொல்லியும் கேட்காமல், நிற்காமல், நான் தனியாகப் போகிறேன்.. என்று கிளம்பிவிட்டான்.

“டேய் விஸ்வா” என்று மொத்த வீடும் அலறிய போதும், “இவ்வளவு தான் இந்த வீட்ல எனக்கு மரியாதை இல்லையா? எதுக்கு போய் மன்னிப்பு கேட்டார். நான் என்ன தப்பு பண்ணினேன்?”

“அவ கல்யாணம் பண்ணி வந்த போதே அதை ஏத்துக்க வேண்டாம் சொன்னேன். அப்படியிருந்திருந்தாலாவது கொஞ்சம் அவனுக்கு பயம் இருக்கும். ரஞ்சனிக்காக அவளை விட்டுக் கொடுக்க முடியாம நாம ஏத்துகிட்டோம். அவன் பணத்துக்குன்னு முடிவு பண்ணிட்டான். என் பேச்சை அப்போவும் கேட்கலை இப்போவும் கேட்கலை”

“டேய் நம்ம பொண்ணு வாழ்க்கைடா” என்று பாட்டி பேச,

“ஓஹ், நீங்க மட்டும் தான் அங்க பொண்ணு குடுத்திருக்கீங்களா, அவங்க எனக்கு கல்யாணம் பண்ணிக் கொடுக்கலையா?அப்பா இல்லாத பொண்ணுன்னு அவங்க வீட்ல காட்டிட்டு போயிட்டாங்க” என்று கேள்வி எழுப்பி, உடனே வீட்டை விட்டு அப்போதே வர்ஷினியை அழைத்துக் கொண்டு சென்றான்.

மலரும் நமஷிவாயமும் இடிந்து போய் அமர்ந்தனர். ரூபாவும் ஜகனும் என்ன பேசியும் ஈஸ்வர் கிளம்பி விட்டான்.

என்ன ஏதென்று காரில் செல்லும் போது ஈஸ்வரின் முகத்தையே வர்ஷினி பார்த்திருந்தாள். திரும்ப ஆரம்பித்த இடத்திற்கே வந்து விட்டது போன்ற உணர்வு. ஆம்! இனி அவளுக்கு வீடு?

அவளை உணர்ந்தவனாக திரும்பிப் பார்த்தவன், "நான் இருக்குற இடம் தான் உனக்கு வீடு! நாம நம்ம வீட்டுக்கு போவோம்!" என,

அப்போதும் பார்திருந்தவளிடம், "என்ன சொல்லு?" என,

"கொஞ்சம் பொறுமையா இருந்திருக்கலாமோ? ரொம்ப ஓவர் ரியாக்ட் பண்ணிட்டீங்களோ" என மனதில் பட்டதைப் பேச,

"இது தான் நான் வர்ஷி.. இப்படிதான்.. நான்"

"நான் எதுக்காவது பணிஞ்சு நிற்கணும்னா அது உன்கிட்ட மட்டும் தான். அது என்னோட முந்தைய செய்கைனால. மத்தபடி என் வீட்டு ஆளுங்க யார் கிட்டயும் கிடையாது.. அந்த பணப் பிரச்சனையினால பாதிக்கப்பட்டது யார். யாரும் கிடையாது! நான் மட்டும் தான்!"

"அவங்களோட வாழ்க்கை முறையில என்ன மாற்றம் வந்திருக்கு, எல்லோரும் அப்படியே சொகுசா தான் இருக்காங்க, ஒரு கஷ்டமும் கிடையாது. ஆனா அந்த ப்ரச்சனை வெடிச்சிருந்தா, ஏமாத்துக் குடும்பம் ஆகியிருப்போம். யார் கிட்டயும் தலைநிமிர்ந்து பேசி என்ன.. பார்க்கக் கூட முடியாது.. அவ்வளவு கேவலமா போயிருப்போம்!"

"அந்த நிமஷம்.. அந்த நேரங்கள்... எவ்வளவு பிரஷர்ல இருந்தேன் தெரியுமா நான். உன்னோட பிரச்சனையும் கூட அப்போ சேர்ந்துட்டதால அதுல இருந்து கொஞ்சம் மாறினேன்.  இப்போவும் நான் தான் ஒன்னுமில்லாம நிக்கறேன். ரஞ்சனியை ஒரு வார்த்தை சொல்லிடக் கூடாதுன்னு தூக்கி கொடுத்தேன். சரணும் பிரணவியும் இதுல பாதிக்கக்கூடாதுன்னு ஜகனோடது எதுவுமே குறைக்கலை. இதுல எனக்கு எந்த வருத்தமும் இல்லை"

"அது என்னோட சொத்துன்னு எவ்வளவு ஆணவத்தோட திரிஞ்சி இருந்தேன் தெரியுமா! இப்போ அது என்னோடது இல்லை! நான் பேசி பழகற அத்தனை பேர் முன்னாடியும் எவ்வளவு கீழ போயிட்டேன் தெரியுமா? ஆனாலும் ஒன்னுமில்லாம கெத்தா காட்டிக்கறேன்"

"ஆனா உணமையில் ஒன்னுமில்லாம தான் போயிட்டேன்! எவ்வளவு அகம்பாவத்தோட இருந்தேன் தெரியுமா? யாரோ செஞ்ச தப்புக்கு நான் ஒன்னுமில்லாம போயிட்டேன். எதுக்காக செஞ்சேன், என்னோட குடும்பத்துக்காக தானே! ஆனா எங்கப்பா மன்னிப்பு

கேட்கறார்.. ரஞ்சி என்கிட்டே சொல்லாம போயிட்டா" என உணர்ச்சி பிழம்பாய் பேசியவனையே,

வர்ஷினி பார்த்திருந்தாள், இது எல்லாம் அதிகம் புரியவேயில்லை அவளுக்கு.. இது எல்லாம் அவளுக்கு காட்சி பொருள், அதற்கு எப்படி ஒரு பிரதிபலிப்பை கொடுப்பது என்றோ, சமாதானம் சொல்வது என்றோ அவளுக்கு தெரியவேயில்லை.

"நீ சொல்லு! பத்துக்கும் எனக்கும் என்ன பிரச்சனை? ஆனா சமீபமா அவன் என்னை இழுக்காம இருக்கலை. அப்போ என்கிட்டே பணம் இல்லைன்னு தானே அவன் அப்படி நடந்துக்கறான். இவ்வளவு நாளாவும் நான் இப்படி தான், ஆனா அவன் முன்னாடி நின்னதே கிடையாது. இப்போ நிக்கறான், என்னை குற்றம் சொல்றான். அப்போ என்கிட்டே பணம் இல்லைன்னு தானே!"

ஆனால் ஈஸ்வரின் வருத்தத்தை அவளால் சகிக்க முடியவில்லை. அவனின் கை பிடித்துக்கொண்டாள். உணர்வு வந்து வர்ஷினியை பார்த்தவனின் கண்களில் பட்டது அந்த நீல நிறக் கண்களின் கலவரம் மட்டுமே!

"ஹேய்! நீ எதுக்கு இவ்வளவு வொர்ரி பண்றே பேபி!" என,

"நான் ஒரு கையெழுத்து போட்டிருந்தா எதுவும் ப்ராப்ளம் இல்லை தானே!"

"நீ கையெழுத்து போடாதது ப்ராப்ளம் இல்லை, பத்து என்னை இழுத்தது ப்ராப்ளம்... அதுக்கு ரீசன் அவங்களுக்கு உன்னை தெரியலை, நீ கேட்பன்னு அவங்க யோசிக்கவே இல்லை. விடு! எதுன்னாலும் பார்த்துக்கலாம்!"

அப்போதும் அவளின் முகம் தெளியாததைக் கண்டு..

"கடவுள் எனக்கு குடுத்த குடும்பத்துக்காக நான் இவ்வளவு விட்ட போது... நானா எடுத்துக்கிட்ட உனக்காக எவ்வளவு செய்வேன். விடு பார்த்துக்கலாம்!" என்றவனின் குரலில் இருந்த உறுதி.. ஆணவக்காரன் தான் நான் என்று சொல்லாமல் சொல்லிய போதும்,

அந்த வார்த்தைகள் வர்ஷினிக்கு மிகுந்த தைரியத்தை கொடுத்தது. மெல்ல மெல்ல அவளின் தைரியமாக மாறிக் கொண்டிருந்தான் ஈஸ்வர்.

**நானென்பது... நீயல்லவோ!**

**அத்தியாயம் அறுபது :**

இருள் போலே இருந்தேனே... விளக்காக உணர்ந்தேனே.. உன்னை நானே!

ஈஸ்வரின் உணர்ச்சிக் கொந்தளிப்பை பார்த்து அவனை எப்படி சமாதானம் செய்வது என்று தெரியாமல் அமர்ந்திருந்தாலும், அவனை சமாதானம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதினில் ஓங்கி தான் இருந்தது.

அவனின் அப்பார்ட்மென்ட் வீட்டிற்கு அழைத்து சென்றவன் "இனிமே இதுதான் நம்ம வீடு .." என,

"நான் இருந்துக்குவேன், இது என்னோட ஹாஸ்டல் ரூம் விட ரொம்ப பெருசு.. நீங்க இருந்துக்குவீங்களா?" என வர்ஷினி கேட்க, அதில் நிச்சயம் ஒரு ஆராயும் தன்மை, "உன்னால் முடியுமா" என, கூடவே ஒரு இலகுத்தன்மையும்.

"ஏன் என்னால முடியாதா?" என,

"எனக்குத் தெரியலை, உங்க வீட்டோட கம்பேர் பண்ணும் போது இது கால் வாசி கூட இல்லை" என்றாள் உண்மையாக.

"நீ கேட்கறது நியாயமான கேள்வி.. கூடவே அநியாயமான கேள்வியும்"

புரியாமல் விழித்தவளிடம், "எஸ், ஈஸ்வர் கொஞ்சம் இல்லை ரொம்ப சொஃபிஸ்டிகேடட், ஆனா நீ கூட இருக்கும் போது எனக்கு எதுவுமே தேவை இல்லை" என்று சொன்னவனின் கண்களில் எப்போதும் தென்படும் மயக்கத்தையும் மீறிய ஒரு காதல்.

"ஷ், பா" என்றவள், "ஆனாலும் ஈஸ்வர் சோ சேட், இன் எ வே என்னை நம்பி தனியா வந்துருக்கீங்க. எனக்கு சமைக்கத் தெரியாதுங்கறதவிட என்ன சமைக்க, சாமான்னு பேர் கூட தெரியாது. அண்ட் யு நோ எனக்கு ரொம்ப பசிக்குது இப்போ" என,

"இது கொஞ்சம் யோசிக்க வேண்டிய விஷயம்" என்பது போல பாவனை செய்தவன், "இப்போதைக்கு எதாவது ஆர்டர் பண்ணிக்குவோம்" என சொல்லும் போதே.. ஃபோன் வர எடுத்துப் பார்த்தால் ரஞ்சனி.

அதையே வெறித்திருந்தான், ஆனால் எடுக்க வில்லை, தங்கை என்பதனையும் விட முரளி எப்படியோ அப்படி தானே அவனுக்கு,

தங்கை என்ற ஒன்றையும் மீறி ஒரு நட்புணர்வு.

"யாரு" என்று எட்டிப் பார்த்தவள் "அண்ணியா?" என,

"ஆம்" என்பது போல தலையாட்டினாலும் தொலைபேசி எடுக்கவில்லை. விடாமல் அடிக்க, ஃபோனை தூக்கி தூரப் போட்டான்.

கவலையாக அவனை பார்த்தாள்.. "பேச மாட்டீங்களா?" என,

"இல்லை, இப்போ வேண்டாம், ரொம்ப கோபமா இருக்கேன். நிச்சயம் அவளை காயப் படுத்திடுவேன். ஏற்கனவே அவ நொந்து போயிருக்கா, இன்னும் நான் வேற ஏன்?" என்றவன்,

மீண்டும் அதைப் பற்றி பேச விருப்பமில்லாதவனாக "நீ சமைக்கணும், அந்த வேலை செய்யணும், அப்படி இப்படின்னு எந்த ரூல்ஸ்ம் நமக்குள்ள கிடையாது.. பட், நீ உள்ள வந்தவுடனே சொன்ன இல்லையா என்னோட ஹாஸ்டல் ரூம் விட பெருசுன்னு, அந்த ஃபீல் இருக்கவே கூடாது. இது நம்ம வீடு, உன்னோட வீடு, புரிஞ்சதா? இதை நீ தான் பார்த்துக்கணும்" என,

"என்ன பார்க்கணும்?" என்றாள் சீரியசாக.

"கொல்லாதடி! இது என்ன வேலையா? போ! போ! முதல்ல பிரெஷ் ஆகு! நான் சாப்பிட ஏதாவது சொல்றேன்!" என,

ஈஸ்வரின் மூட் சரியில்லாததை புரிந்து அவளும் அமைதியாக நகர்ந்து விட்டாள்.

அங்கே ரஞ்சனி இன்னும் ஓய்ந்து தோய்ந்து அமர்ந்து விட்டாள், "யார் சொன்னாலும் நீ விஸ்வாவிடம் சொல்லித் தானே வந்திருக்க வேண்டும்" என்று மனசாட்சி கேட்க,

சொல்லும் போது "நீ போகாதே" என்று சொல்லி விட்டால் மீற முடியாது, மீறினால் திரும்ப சண்டை வரும்.. அதைக் கொண்டே அம்மா சொன்ன போது வந்துவிட்டாள். அதையும் விட வர்ஷினி அவளுக்காகவும் தான் வந்தாள்.. "நான் அங்கே அமர்ந்து கொண்டால் பின்னே என் அம்மா வீட்டினர் சரியாக பேசாது போனால்" என்ற நினைப்பு தான்.

இப்போது ஃபோனிலாவது பேசிவிடுவோம் என அடித்துக் கொள்ள.. அழைத்தாள்.

காலையில் உண்டது வேறு, திரும்ப உண்ணவும் இல்லை.. ரூமில் அமர்ந்து இருந்தவளை கமலம்மா “வந்து சாப்பிடு ரஞ்சனி வா” என,

அழைத்தவுடன் மறுப்பபு சொல்லாமல் எழுந்து சென்று உணவு உண்ண.. “தப்பு தான் ரஞ்சனி அவன் பேசினது!” என கமலம்மா வேண்ட..

“தப்பு தான், பெரிய தப்பு தான்! ஆனா இனி என்ன செய்ய முடியும். எனக்கு அண்ணான்னு ஒருத்தன் இல்லாம பண்ணிடாங்க” என,

“சே, சே, அப்படி எல்லாம் நடக்காது சரியாகிடும்” என கமலம்மா அவளைத் தேற்ற..

“இல்லை அத்தை, உங்களுக்கு தெரியாது, கண்டிப்பா இனி விஷ்வா என்கிட்டே பேச மாட்டான்.. என் அண்ணன் அதை விடுங்க, வர்ஷினி வீட்டுக்காரர்ன்னு கூட நினைக்கலை பார்த்தீங்களா” என்றவளின் குரலில் அழுகை எட்டிப் பார்த்தது.

“எனக்கு தெரிஞ்சவரை என்கிட்டயும் பேச மாட்டான், இனி வர்ஷினியை இந்த வீட்டுக்கு அனுப்பவும் மாட்டான்” என,

“என்ன?” என்று அதிர்ந்தார் கமலம்மா.

“உங்களுக்கு அவனை தெரியாது?” என்றவளுக்கு கூட இன்னும் விஷ்வாவை சரியாக தெரியவில்லை.. பின்னே வீட்டை விட்டு தனியாக சென்றிருப்பான் என்று அவளும் கூட அனுமானிக்கவில்லை.

“விடுங்க, இனி ஒன்னும் செய்ய முடியாது” என்றவள் தேறிக் கொண்டு, “முரளிண்ணா கூப்பிட்டாங்களா, ஷாலினிக்கு இப்போ எப்படி இருக்கு?”

“இல்லை, கூப்பிடலை” என,

ரஞ்சனி உடனே அழைத்து “எப்படி அண்ணா இருக்கா?” என,

“வலி விட்டு விட்டு தான் வருது, ராத்திரி வரை பார்க்கலாம் சொன்னாங்க, இல்லை ஆபரேஷன் பண்ணலாம் சொன்னாங்க.. நீங்க எங்க இருக்கீங்க வந்துட்டு இருக்கீங்களா?” என,

“அப்போது தான் உணர்வு வரப் பெற்றவள்.. இல்லை அண்ணா, இப்போ தான் கிளம்பறோம், நானும் அத்தையும்” என,

“வாங்க, நாம போவோம்!” என்று கமலம்மாவை மேலும் பேச விடாது அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டாள்.. பத்துவிடம் சொல்லவில்லை..

கமலம்மாவிற்கு உடனே எல்லாம் முரளியிடம் சொல்ல வேண்டும் போல ஒரு உந்துதல்.. வர்ஷினியை அனுப்ப மாட்டான் என்றதில் அப்படி பயந்து போயிருந்தார். “ஐயோ, கணவர் இருந்திருந்தால் இப்படி ஆகியிருக்குமா?” என,

அங்கே வீட்டில் ரூபாவுக்கு தாள முடியவில்லை.. ஈஸ்வர் வீட்டை விட்டுப் போய்விட்டான்.. திரும்ப எல்லாம் மாறி விட்டது.. அப்படி ஒரு கோபம், ஆத்திரம் எனக் கிளம்ப, அஸ்வினிற்கு அழைத்து..

“நீ எங்களை நல்லாவே இருக்க விடமாட்டியா?” என,

அஸ்வின் சற்று பக்குவப் பட்டு இருந்ததால் “இப்போ என்ன?” என்றான் அமைதியாகவே.

“இப்போ என்னவா? நீ விட்டுட்டுப் போனது எல்லாம் அப்படியே இருக்கு. எதுவுமே சரியாகலை” எனத் தேம்பியவள் தொலைபேசியையும் வைத்து விட..

“நான் என்னத்தை விட்டுட்டு வந்தேன், இவ மாக்கான் புருஷன் எதாவது பண்ணினா மொத்த குடும்பமும் என்னை சொல்லுது. என்ன பண்ணினேன் அதுல கமிஷன் அடிச்சேன்.. அந்த ஏஜன்ட் பணத்தை தூக்கிட்டு ஓடிடுவான்னு கனவா கண்டேன்.. திரும்ப வேண்டாம்னு சொல்ல சொல்ல இவ புருஷன் பணத்தை கட்டி ஹோகயா ஆச்சுன்னா நானா பொறுப்பு?” என நினைத்தான்.

ஓடின ஏஜன்ட் இவன் மூலம் தான் ஜகனிக்கு அறிமுகம் என்பதை மறந்து போனான்.. கூடவே அடுத்த முறையும் ஜகன் பணம் கட்டுகிறான், போனால் அவர்கள் தொலைந்து விடுவார்கள் என தெரியும்.. ஜகனிடம் கட்டாதே என்று சொல்லியதை வீட்டினர் யாரிடமாவது சொல்லியிருந்தால் எந்த அனர்த்தங்களும் நடந்திருக்காது..

ரூபாவிடம் சொல்லியிருந்தால்  தடுத்து நிறுத்தியிருப்பாள்.. ரூபாவிற்கு தெரியாமல் தான் ஜகன் செய்வான், ரூபா வேண்டாம் என்று சொல்லும் விஷயத்தை செய்ய மாட்டான். அப்போது அஸ்வினும் பொறுப்பற்றவன் தானே!

எனக்கென்ன என்ற எண்ணம் தான் அதிகம்! அவர்கள் வீட்டிற்கு ரூபா திருமணம் ஆனா நாளாகப் போகிறோம், ஜகன் மாமா

என்னை இவ்வளவு நம்புகிறார். வீட்டில் நம்மையும் ஒருவனாக நினைக்கிறார்கள் என்ற எண்ணம் எல்லாம் இல்லை.

இருந்திருந்தால் ரஞ்சனி பார்த்திருப்பாளோ என்னவோ?

அக்காவைப் பற்றி அப்போது நினைக்காததை மனம் இப்போது நினைத்தது, "விஷயத்தையாவது சொல்லி தொலைச்சாளா, உயிரை எடுக்கறாங்க! இவங்க விட்டுட்டுப் போனது என்கிட்டே அப்படியே இருக்கு. நான் யார் கிட்டப் போய் சொல்வேன். பணக்கார வீட்ல பொண்ணு குடுத்துட்டாங்க, பொண்ணு எடுத்துட்டாங்க.. இவங்க பணப் பிரச்சனை தீர்ந்தது.. நான்..?" என்றவனின் மனதில் ஆறாத ரணங்கள்,

பின்னே ஜெயிலில் ஒரு வருடம்.. "ப்ச்" என சலித்தான். பப்பில் வேலை பார்க்கிறான்? வெளியே சொல்லக் கூட முடியாது. அங்கே தான் நிறைய சம்பளம் கொடுக்கிறார்கள்.. வீட்டின் பணத் தேவை.. என்ன சொல்ல?

ஆனாலும் ரூபாவின் தேம்பல் சற்று மனதை அசைக்க.. "அங்க தான் ஒருத்தன் நான் தான் பாஸ்ன்னு சுத்திட்டு இருப்பானே! கல்யாணத்துக்கு பிறகு என் அக்கான்றதை விட அவன் தோழின்றது தானே அதிகம்! என்ன பண்றான்?" என யோசித்தான்.

தன்னுடைய தங்கைக்கு அழைத்தவன் "ஐஸ்வர்யா" என,

"சொல்லு அஸ்வின்".. முன்பெல்லாம் பேசவே பேசாதவர்கள் இப்போதெல்லாம் சில முறை பேச ஆரம்பித்து இருந்தனர்.

"நீ ரூபாக்காவோட பேசிட்டு இருக்கியா?" என,

"இல்லையே! ஏன் கேட்கற?"

"பேசறதே இல்லையா?"

"இல்லை, வருஷத்துக்கும் மேல ஆச்சு. இப்போ அவ கொழுந்தனார் கல்யாணத்தப்போ ஒரு தடவை பேசினேன். அவ்வளவு தான்!" என்றாள்.

"விஷ்வா" என்றது மறைந்து "கொழுந்தனார்" என்ற அடைமொழி தோன்றியிருந்தது சற்று நிம்மதி கொடுத்தது அஸ்வினிற்கு..

"இப்போ பேசேன், ஃபோன் பண்ணி என்னை திட்டுறா! எதுக்குன்னு தெரியலை. நான் செஞ்சு வெச்சதா, இப்போ ஏதாவது பிரச்சனையை முளைச்சிருக்கா தெரியலை.. ஜெயில்ல இருந்த வந்த

பிறகு நான் ஒன்னுமே பண்ணலை, பலமுறை செய்யணும்னு நினைச்சேன், ஆனாலும் செய்யலை!" என்றான்.

"எதுவும் செஞ்சிடாத அஸ்வின், நமக்கு எந்த பிரச்சனையும் வேண்டாம். இந்த அப்பாவையும் எதுவும் செய்யாம பார்த்துக்கோ" என்று மீண்டும் வலியுறுத்தியவள், "சரி, பேசிப் பார்க்கிறேன்!" என வைத்து விட்டாள்.

இப்போது என்ன என்று யோசித்தவள் ரூபாவிற்கு அழைக்க அவள் எடுக்கவேயில்லை. எப்படியும் அழைப்பாள் எனத் தோன்ற, அதன் போலவே இரவு ரூபா அழைத்தவள், "சொல்லு ஐஷ்!" என்றவளின் குரலே சரியில்லை.

"என்ன ஆச்சு? ஏன் இப்படி பேசற?"

மீண்டும் அப்படி ஒரு அழுகை, ரூபாவின் அழுகை ஐஸ்வர்யாவையும் அசைத்தது.. "என்ன ஆச்சு அக்கா?" என்றாள் பரிவான குரலில்.

தேம்பிக் கொண்டே நடந்தது அத்தனையும் சொல்ல.. "சரி, அவ வந்தா, அவ அண்ணன் வீட்டை விட்டு போயிட்டான், நீ எதுக்கு இப்படி அழற, நீ இதுல என்ன பண்ணின"

"திரும்ப பணம் தானே பிரச்சனை.. பணத்தை இவர் தானே தொலைச்சார்.. எல்லாம் இவர்னால தானே, இவர் வேற ஒரு மாதிரி இருக்கார்.. என்னால தானேன்னு.. திரும்ப ஏதாவது செஞ்சிக்கிட்டா? எனக்கு பயமா இருக்கு!" என்று தேம்பிக் கொண்டே பேச..

என்ன சொல்வது என்றே தெரியவல்லை.. "அப்படி எல்லாம் மாமா எதுவும் பண்ண மாட்டாங்க, அழாதே! சரணும் பிரணவியும் பயந்துக்கப் போறாங்க! எவ்வளவு தைரியமானவ நீ!" என்று சமாதானம் சொல்லியவள்.. "ஐயோ, இவ்வளவு சிக்கல்களா?" என்று தோன்றியது.

ஆனாலும் மனது ஒரு புறம்.. "விஸ்வா மாதிரி ஒருவன் துணை இருந்தால் எந்த சிக்கல்களையும் சந்திக்கலாம்" எனத் தோன்ற, மனதில் வர்ஷினியை நினைத்து பொறாமையும் கூட. பின்னே தங்கையையும் விட்டுக் கொடுக்கவில்லை, மனைவியையும் விட்டுக் கொடுக்கவில்லை. "ரஞ்சனி புருஷன் பேசினாலும் அவளைக் கூட்டிட்டு வர்றான், ரஞ்சனி வீட்டுக்காரன் பேசிட்டான்னு அவனோட தங்கை வர்ஷினியையும் தள்ளி வைக்கலை" ஆம்! மனது அவளறிய அப்பட்டமாகப் பொறாமையாக உணரந்தது.

“இந்த விஸ்வா வேற வர்ஷினியைக் கூட்டிகிட்டு தனியா போயிட்டான். மலர் அத்தை வேற அழுது அழுது மயக்கமே போட்டுட்டாங்க. அந்தப் பொண்ணுக்கு ஒன்னும் தெரியாது, அவளை கூட்டிட்டு போய் இவன் என்ன பண்ணுவான், அவ என்ன பண்ணுவான்னு ஒரே அழுகை!”

“இனி ரஞ்சனியோடையும் பேச மாட்டான். அவ வீட்டுக்காரருக்கும் இவனுக்கும் ஏற்கனவே முட்டிக்கும்” எனப் புலம்பித் தள்ள, ஒரு புறம் சற்று சந்தோஷமாக இருந்த போதும், விஸ்வாவை நினைத்து ஒரு புறம் வருத்தமாகவும் இருந்தது.

“அழாத, நடக்கறது தான் நடக்கும். என்ன ஆனாலும் பார்த்துக்கலாம்னு உன் வீட்டுக்காரர்க்கு நீ தைரியம் சொல்லணும், நீ அழாதே!” என்றவள், கூடவே..

“அஸ்வினை இழுக்காதே அக்கா, இப்போ தான் கொஞ்சம் நல்லா இருக்கான். ஜெயில் கூடப் போய்ட்டு வந்துட்டான். அவனை தயவு செஞ்சு எதுலையும் திரும்ப இழுத்து விடாதே! அம்மா இப்போ தான் கொஞ்சம் நிம்மதியா இருக்காங்க! இவன் இப்போ தான் ஒரு வேலைக்கு போறான்! இவனால தான் அப்பா அடங்கி இருக்கார். அவனை இழுத்து மறுபடியும் நம்ம குடும்பத்துல பிரச்சனையை பண்ணிடாதே!” என சொல்லி தொலைபேசி வைத்த போது, ஈஸ்வர் மற்றும் ரஞ்சனியின் நினைவுகளே..

திரும்ப அஸ்வினை அழைத்து விவரம் சொல்ல.. “என்ன, ரஞ்சனியைக் கூட்டிக்கொண்டு வந்தானா? பெரிய இவன் போல நடந்து எப்போதும் சிக்கல்களை அதிகப் படுத்திக் கொள்வது தானே இவன் வேலை!”

“இதில் வர்ஷினியைத் தனியாக அழைத்துச் சென்று விட்டானா? ப்ச், சிக்கலை அதிகப் படுத்திகிறானோ” என்று தான் தோன்றியது.. நிஜமாகவே அஸ்வின் சந்தோஷம் பட வேண்டிய விஷயம் தான் ஆனால் முடியவில்லை.. வர்ஷினியை அவனால் அப்படி நினைக்க முடியவில்லை..

அவனை நம்பி நட்புக் கரம் நீட்டியிருக்கும் பெண் அவள். எப்படியோ போகட்டும் என்று நினைக்க முடியவில்லை. யோசனையில் ஆழ்ந்தான். சொல்லப் போனால் அவளின் அப்பாவினால் தான் ஜெயில் போனான். ஆனாலும் அவளை மனம் நிந்திக்கவில்லை.

“ஏதாவது ஹெல்ப் வேணும்னா கேளுங்க” என்று பலமுறை சொல்லி நம்பர் கொடுத்திருந்தாள்.. அவளின் திருமணம்

ஈஸ்வரோடு மட்டும் இல்லாதிருந்தால் உளமார வாழ்த்தியிருப்பான். அவனோடு என்பதால் மட்டுமே வாழ்த்து கூடச் சொல்லவில்லை.

இப்போது “ஹாய், ஹவ் ஆர் யு” என ஒரு மெசேஜை கைகள் தானாக் தட்ட..

ஈஸ்வர் ஒரு மாதிரி மிகுந்த மன உளைச்சலில் இருப்பதை புரிந்த வர்ஷினி அவனை தொந்தரவு செய்யாமல் ரூமின் உள் வெறுமனே படுத்து இருந்தவள்.. மெசேஜின் ஒலி கேட்க எடுத்துப் பார்த்தால் புதிய நம்பர்.

“யார் நீங்க?” என்று அனுப்ப.. “ஓஹ், என் நம்பர் இல்லையோ?” என நினைத்தவன், “நான் அஸ்வின்” என சொல்ல..

ஒரு நொடி யோசித்தவள் “எஸ், எஸ், ஞாபகம் வந்துடுச்சு.. ஐ அம் ஓகே, நீங்க எப்படி இருக்கீங்க?” என,

“நல்லாவே இல்லை, உங்க வீட்ல என்ன பிரச்சனை? எங்க அக்கா ஃபோன் செஞ்சு என்னை திட்டுறா?” என சகஜமாகப் பேச ஆரம்பிக்க..

“எனக்கு பெருசா டைப் பண்றது கஷ்டம்.. ஃபோன் பண்ணட்டுமா?” என வர்ஷினி டைப் செய்ய..

“பண்ணுங்களேன்!” என்று அஸ்வின் மெசேஜ் செய்ய..

அங்கே ஆரம்பித்தது, அவர்களின் சகஜமான உரையாடல்.

அடுத்த நாள் காலையில் வர்ஷினி எழுந்த போது, ஈஸ்வர் ஆழ்ந்த உறக்கத்தில், எப்போது அருகில் வந்து படுத்தான் என கூட அவளுக்குத் தெரியாது.

ஈஸ்வரின் மொபைல் அடிக்க எடுத்துப் பார்த்தால் முரளி, அதை அட்டன்ட் செய்தவள் “சொல்லுங்கண்ணா” என,

“ஷாலினிக்கு குழந்தை பிறந்திருக்குடா, பையன்!” என,

“கங்க்ராட்ஸ் அண்ணா” என்ற வர்ஷினியின் உற்சாகக் குரல் ஈஸ்வரின் உறக்கத்தை கலைத்தது.

“அண்ணாக்கு குழந்தை பிறந்திருக்காம்!”

அவளிடம் இருந்து போனை வாங்கியவன் “எப்படியிருக்காங்க ரெண்டு பேரும்” என,

“நல்லா இருக்காங்க, நார்மல் டெலிவரி தான்” என்றவனிடம் அதன் பிறகே “வாழ்த்துக்கள்” என்றான்.

“எப்போ பிறந்தது” என,

“இப்போ தாண்டா ஒரு கால் மணிநேரம் இருக்கும், குழந்தையை கொண்டு வந்து இப்போ தான் காட்டினாங்க, உனக்கு கூப்பிட்டுட்டேன். இன்னும் நான் ஷாலினியைக் கூட பார்க்கலை!” என,

“நீ அங்க பாருடா, நான் நேர்ல வர்றேன்” என வைத்தவன், நேரத்தை பார்க்க ஆறு மணி என்றது.

“சீக்கிரம் குளிச்சு ரெடியாகு வர்ஷி.. குழந்தையை பார்க்கப் போகலாம்” என,

அந்த உற்சாகம் தோன்ற விரைந்து கிளம்பினாள்.  அவளுக்கு அம்மா வீட்டோடு சண்டை, புகுந்த வீட்டினரிடம் இருந்து விலகல் என்பது போல எந்த மனவருத்தமும் இல்லை.

அஸ்வினுடன் வெகு நேரம் பேசியிருந்ததன் தாக்கம் இருந்தது. உறங்கும் போது சமயம் கிடைத்தால், அதனைப் பற்றி ஈஸ்வரோடு பேச வேண்டும் என்று நினைத்திருந்தாள். ஆனால் காலையில் எழுந்தவுடன் இந்த விஷயம் வர அது போய்விட்டது.

கிளம்பி காரில் போகும் போது தான் கவனித்தாள், ஈஸ்வரின் முகத்தில் இருந்த தீவிரத்தை.. அவள் பார்த்த நாளாக அவன் அப்படி இருந்தது இல்லை. பிறந்த வீட்டோடு சண்டை புகுந்த வீட்டின் விலகல் அவளை பாதிக்காமல் இருக்கலாம் ஏனென்றால் அவள் குடும்ப அமைப்பில் வரவில்லை.

ஆனால் ஈஸ்வருக்கு அப்படி அல்லவே! கூட்டுக் குடும்பத்தில் இருந்தவன்.. இப்படி எல்லோரோடும் பிரச்சனை என்பது அவனை ஒரு தீவிரத்திற்கு கொண்டு சென்றிருந்தது.

ஆம்! சங்கீதவர்ஷினி மட்டுமே இதுவரை இலக்காய் இருக்க.. இப்போது அதை அடைந்து விட்டான்.. நேற்றிலிருந்து அவன் மாறிவிட்டான்.. பணம் அதன் பின் அவனின் ஓட்டம் திரும்பவும் ஆரம்பிகின்றது..

ஆம்! முரளியின் திருமணதிற்கு முதல் நாள் இரவு போன போது தான் சங்கீத வர்ஷினியைப் பார்த்தான்.. ஆனால் அவளை பார்க்கும் முன் இருந்த பிரச்சனையின் தீவிரம் திரும்பவும் அவனுள்.

ஆம்! ஆரம்பித்த இடத்திற்கே வந்து நின்று விட்டான்.

சங்கீத வர்ஷினி தன் கணவனையே பார்த்திருக்க.. விஷ்வேஸ்வரன் தான் எடுக்க வேண்டிய விஸ்வ ரூபம் என்ன என்று அறியாமல் இலக்கின்றி வெறித்து சாலையை பார்த்திருந்தான்.

ஈஸ்வரின் கவனத்தில் இப்போது எங்கும் வர்ஷினி இல்லை.. அவனுள் பாதி என்ற நிலைக்கு அவன் வந்திருந்தான்.. ஆனால் வர்ஷினிக்கு புரிந்தும் புரியாத நிலை தானே!

பார்த்த நாளாக அவனை சிதறடித்த உயிர், இப்போது அவன் மட்டுமே என்ற நிலையில் இருக்க.. அவனுக்கு புரியவில்லை அவளை மீண்டும் தனிமைப் படுத்துகின்றான் என!

காரை ஓட்டிக் கொண்டிருந்த ஈஸ்வர் என்கின்ற விஷ்வேஸ்வரனின் மனதில் தோன்றிக் கொண்டிருந்த வரிகள் இவை தாம்.

**யாருக்காகவும் எவருக்காகவும் நிற்பதில்லை காலமும்.... நேரமும்...... தனி மனித வாழ்க்கைப் பயணமும்!**

## அத்தியாயம் அறுபத்தி ஒன்று :

நீலவிழி உரைக்கும் செய்தி கண்திறந்தால் தானே தெரியும்!

காரை வேகமாக செலுத்திக் கொண்டிருந்த சங்கீத வர்ஷினிக்கு வீட்டிற்கு போகவே பிடிக்கவில்லை.. யார் இருப்பர் வீட்டில், யாரும் இருக்க மாட்டார்.. ஹாஸ்டலிலாவது பார்ப்பதற்கு ஆட்கள் இருப்பர்.. பிடித்தால் பேசுவாள் பிடிக்காவிட்டால் அமைதியாக தனிமையை நாடி விடுவாள்.

ஆனால் இங்கே பிடித்தாலும் பேச ஆளில்லை, பிடிக்காவிட்டாலும் பேச ஆளில்லை..

வீட்டை விட்டு தனியாக வந்த விஷ்வேஷ்வரன் என்ற மனிதன் பணத்தின் பின் மட்டுமல்ல, வெற்றியின் பின்னும் ஓட ஆரம்பித்து இருந்தான்.. ஈஸ்வர் ஃபைனான்சில் மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டவன்.. என்ன செய்வது ஏது செய்வது என்ற யோசனைகள் மட்டுமல்ல செயலாற்றவும் ஆரம்பிக்க..

அவன் வீட்டில் இருக்கும் நேரங்கள் குறைந்து போக சங்கீத வர்ஷினி மீண்டும் தன்னுள் சிறிது சிறிதாய் தொலைய ஆரம்பித்தாள்.. யாரு மற்ற தனிமை..

அதையும் விட.. சில புதிய உணர்வுகளை இனம் காண வைத்தவன்.. பின்பு அதனைப் பற்றிய நினைவே இல்லாதவனாக தொழில் உழைப்பு என்று கவனத்தை திருப்பி விட..

மிகுந்த பசியோடு இருந்தவளுக்கு அறுசுவை உணவின் முன் அமர்த்தி வைக்கப் பட்டு, இரு வாய் உண்ட பின் அவளின் முன் இருந்த உணவு அகற்றப்பட்ட கொடுமை தான்..

வர்ஷினியால் எதுவும் ஈஸ்வரிடம் சொல்லவும் முடியவில்லை.. இரவு பகலாகிப் போனது அவனின் உழைப்பு.. வாழ்க்கையை மிகவும் கடினமாக்கிக் கொண்டான் ஈஸ்வர்.

தன்னுடைய தனிமையும் கொல்ல, ஈஸ்வரின் உழைப்பும் அவன் படும் துன்பமும் கொல்ல..

வாழ்க்கையில் என்ன இருக்கின்றது என்ற உணர்வு சிறிதாக அவளை ஆட்கொள்ள ஆரம்பித்தது.. ஈஸ்வருக்கு ஏன் இந்த ஓட்டம் என்று புரியவில்லை.

தனிமையும் கொன்றது உணர்வுகளும் கொன்றது..

வீட்டை திறந்து உள்ளே சென்றவள், சுருண்டு படுத்துக் கொண்டாள்.. பீரியட்ஸ் அதனால் வயிறு வலி வேறு.. மனதினில் அதனையும் விட வலி..

வலிக்கிறது என்று சொல்லக் கூட ஆள் இல்லையே..

நேரம் பார்த்தால் மாலை ஐந்தரை மணி தான்.. ஏழு மணிக்கு தான் உணவு வரும்.. மலர் காலை உணவோடு சேர்த்து இவளுக்கு மட்டும் மதியத்திற்கும் உணவு அனுப்பி விடுவார்.. இரவு ஏழு மணிக்கு வரும்..

எப்போதையும் விட மனது மிகவும் சோர்வாக உணர்ந்தது.. அந்த நாட்களில் வரும் ஹார்மோனல் மாற்றங்களோ என்னவோ..

இன்னும் முதல் முதலாக அவள் பெரிய மனுஷி ஆன தினம் நினைவில் இருந்தது.. ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த பன்னிரண்டு வயது சிறுமி.. காலை எழுந்து குளிக்க செல்லும் போது தான் கண்டாள்..

என்ன வென்று தெரியவில்லை.. தனக்கு எதோ நோய் வந்து விட்டது தான் இறக்கப் போகிறோம் போல என்று பயந்தது இன்று நடந்தது போல ஞாபகத்தில் இருந்தது..

ஆனால் யாரிடமும் இதை சொல்லவும் முடியாமல் போய் படுத்துக் கொண்டாள்.. வார்டன் வந்த போது.. லூஸ் மோஷன் என்று சொல்லி அப்படியே படுத்துக் கொள்ள.. மதிய உணவிற்கும் செல்லவில்லை..

மாலை வரை யாருக்கும் தெரியவேயில்லை.. அவள் வகுப்பிலோ இல்லை ஹாஸ்டல் அறையில் இருப்பவர்களோ அவளின் வயதை ஒத்தோ இல்லை இன்னும் சிறிய வயதோ தான் இருந்தனர்.. அதுவரை வர்ஷினியின் வட்டத்தில் யாரும் ஆகவில்லை, அதனால் அது என்னவென்று தெரியவில்லை..

மாலை தேநீர் அருந்தும் நேரத்திற்கு தோழி ஒருத்தி..

“கம் வர்ஷினி, ஏன் இப்படிப் படுத்திருக்க?” என்று வற்புறுத்தி அழைக்க.. பசிக்கவும் செய்ய, எழுந்தாள். அவளின் பின் புறம் படுக்கை எல்லாம்.. அவளுக்கு தான் என்னவென்று தெரியவில்லை.. சொல்லிக் கொடுத்திருக்க அம்மாவும் இல்லை.. பெண் குழந்தைகள் இல்லாத, கூட வைத்து வளர்த்திராத கமலம்மாவிற்கும் இதை எல்லாம் வர்ஷினிக்கு சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும் என்று தெரிந்ததில்லை..

அந்த தோழிக்கு தெரிய.. “மேம்” என்று உடனே ஓடி வார்டனை அழைத்து வர.. “வொய் டிட்ன்ட் யு சே” என்று வார்டனிடம் முதலில் திட்டு தான் கிடைத்து..

அன்று அழுத அழுகை இன்னும் ஞாபகத்தில் இருக்க.. இப்போதும் கண்களில் கண்ணீர் பெருகியது..

ஏதேதோ ஞாபகங்கள்.. ஒன்றும் முடியவில்லை.. வீட்டை உள்ளிருந்து பூட்டி படுத்துக் கொண்டாள்.. ஈஸ்வரிடம் ஒரு சாவி இருக்க.. திறந்து வரட்டும் என..

ஈஸ்வருக்கு “ஃபீலிங் ஸ்லீப்பி, ஸ்லீபிங், நீங்க கதவு திறந்துக்கங்க” என மெசேஜ் செய்து.. ஃபோனையும் சுவிச் ஆஃப் செய்து படுத்துக் கொண்டாள்.. இரவு உணவுடன் வந்த வேலையாள் பெல் அழுத்தி அழுத்திப் பார்த்து கதவு திறக்காததை கண்டு மலருக்கு அழைக்க .. அவர் வர்ஷினிக்கு அழைக்க, போன் சுவிச் ஆஃப் என்று வர.. உடனே ஈஸ்வருக்கு அழைத்தார்..

அவனிடம் சொல்ல.. அவன் அப்போது தான் தன் ஃபோனை பார்த்தவன், “தூக்கம் வருது, தூங்கறேன்னு மெசேஜ் பண்ணியிருக்கா மா.. செக்யுரிட்டி கிட்ட கொடுத்துடுங்க.. நான் போய் வாங்கிக்கறேன்!” என்று சொல்லி திரும்ப வேலையை பார்க்க ஆரம்பித்து விட்டான்.

தூங்குகிறாள் என்ற நினைவில் எப்போதையும் விட இன்னும் அதிக நேரம் ஆஃபிசில் இருந்து கிளம்பினான். அவன் கிளம்பும் போது இரவு நேர செக்யுரிட்டி தவிர யாருமில்லை.. பின்னே நேரம் பதினொன்றையும் கடந்து இருந்தது..

உறக்கம் அவனை விட்டுப் போய் வெகு நாட்கள் ஆகிவிட்டது.. மீண்டு வரவேண்டும் என்பது மட்டுமல்ல, மீண்டும் வரவேண்டும் என்பது கூட நோக்கமாகிப் போக.. புதிய புதிய திட்டங்கள் ஃபைனான்சில் வகுக்க.. அது எப்படி செயல் படுகின்றது என்பதை நேரடிப் பார்வையாக பார்க்க வேண்டிய அவசியம் மிக மிக அதிகம்..

ஃபைனான்ஸ் மட்டுமே நம்பியிருக்கக் கூடாது என்பதும் மனதின் ஒரு ஓரத்தில் ஓடிக் கொண்டே இருக்க.. வேறு தொழில் இதனுடன் என்ன செய்யலாம் என்பதும் எண்ணமாகி.. இப்படி எல்லாம் ஓடும் போது வர்ஷினியிடம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பது பின்னுக்கு போனது.. பின்னுக்கு தான் போனதே தவிர மறைந்து விடவில்லை.

ஈஸ்வரை பொறுத்தவரை அவள் மிகுந்த புத்திசாலி எல்லாம் பார்த்துக் கொள்வாள் என்பது போல தான்.. திருமணதிற்கு முன் சில முறை இனம் கண்டு கொண்டிருந்த தனிமையை இப்போது மறந்து போனான்.

வர்ஷினியும் தன்னைக் காட்டிக் கொண்டதே இல்லை.

“எப்போ வருவீங்க, சீக்கிரம் வாங்க, ஐ மிஸ் யு” என்பது போல எல்லாம் எதுவும் இல்லை.. அவளுக்கு ஈஸ்வரின் ஓட்டம் நன்கு புரியும் போது அதில் தடையாக எப்படி இருப்பாள்.

வீட்டிற்கு வரும் போது இரவு பன்னிரண்டு.. கதவைத் திறக்க.. அவனுக்கே சோர்வு.. டைனிங் டேபிளில் உணவை வைத்தவன்.. வர்ஷினியை சென்று எழுப்ப..

மெதுவாக கண்ணை திறந்தவள் “எனக்கு தூக்கம் வருது” என..

“சாப்பிட்டிட்டு தூங்கு” என்ற அவனின் வார்த்தைகள் அவளின் செவியை எட்டியது போலக் கூட தெரியவில்லை.. மீண்டும்

உறக்கத்திற்கு சென்றிருந்தாள்.

எழுப்பி எழுப்பி பார்த்தவன், முடியாமல் அவன் மட்டும் வந்து பெயருக்கு உணவை கொறித்து விட்டு.. உடை கூட மாற்றாமல் அவனும் சென்று உறங்க..

வீடா? தங்கும் இடமா?... பகுத்தறிய முடியவில்லை..

வர்ஷினி மட்டும் தனிமையை உணரவில்லை.. உணர்ந்த மற்றொரு ஜீவன் பத்மநாபன்..

ஆம்! ரஞ்சனி வீட்டிற்கு வந்து விட்டாள் தான், ஆனால் பத்துவுடன் பேசுவதில்லை.. என்ன ஏதென்ற அவசியமான வார்த்தைகள் கூட மிகுந்த யோசனையோடு வந்தது..

ஆம்! ஈஸ்வர் வீட்டை விட்டு சென்றது மனதளவில் ரஞ்சனியை மிகவும் பாதித்து இருந்தது.. தான் இப்படி திருமணம் செய்யாமல் இருந்திருந்தால், பிரச்னையை ஈஸ்வரே சமாளித்து இருப்பானோ..

தொழிலை விட்டவன், வீட்டையும் விட்டு விட்டானா?, மனதொடிந்து விட்டாள்..

பத்து “சாரி” என்ற வார்த்தையை ரஞ்சனியிடம் கேட்டான் தான்.. ஆனால் அதற்கு மேல் எப்படி சரி செய்து கொள்வது என்று தெரியவில்லை.. அவனின் கிரக நிலைகளோ என்னவோ முட்டாளாகிப் போனான்.

நடந்த பிரச்சனைகள் தெரிந்த பிறகு முரளி இன்னுமே பொங்கி விட்டான்.. “என் ஃபிரண்ட் அவன், அதை விடு, வர்ஷினியோட கணவன், அதைக் கூட மறந்து எப்படிடா இப்படிப் பேசின”

“எது செய்யறதுன்னாலும் சொல்லி நேரடியா செய்வான்டா வர்ஷினிக்கு சொல்லிக் கொடுத்து செய்யணும்னு எந்த அவசியமும் அவனுக்கு இல்லை. அதுவுமில்லாம வர்ஷினி யார் சொன்னாலும் அப்படி உடனே கேட்கற பொண்ணும் கிடையாது. என்ன நீ லாயரோ? என்னத்த ப்ராக்டிஸ் பண்றயோ?”

“அப்பா கிட்ட பேசி வர்ஷினி மேலயும் அம்மா மேலயும் மட்டும் இருந்ததை நம்ம மேல மாத்த வெச்சதே அவன் தாண்டா” என, இதெல்லாம் புதிய செய்தி பத்மனாபனுக்கு..

“அவன் என்ன அனுப்ப மாட்டேன்னா சொன்னான்.. பொறுமையா பேசியிருக்கலாம், இல்லை என் கிட்ட

சொல்லியிருக்கலாம். மூணு பேரும் கிளம்பிப் போய் என்ன ஆச்சு.. வீட்டை விட்டு போயிட்டானாமேடா.. வர்ஷிக்கு ஒரு வீட்டை பார்த்துக்கற அளவுக்கு என்னடா தெரியும்? ஒன்னுமே தெரியாதுடா!" என..

பத்துவிற்கு மிகுந்த குற்ற உணர்ச்சியாகப் போய்விட்டது, "நீ பேசேன் முரளி" என நிற்க..

"அவன் பேச ரெடியாவே இல்லை.. இதைப் பத்தி பேசறதா இருந்தா நீ என்கிட்டே பேசாதேன்னு முடிச்சிடறான், நானும் இப்போ அவன் கூட சண்டை போடவா முடியும், போடா!" என்றவன் தான் அவனும் சரியாகப் பேசுவதில்லை..

ரஞ்சனி மருத்துவம் படித்தாலும் இதுவரை இல்லாத ஒரு உணர்வோடு தன்னை அதில் ஈடுபடுத்திக் கொள்ள ஆரம்பிக்க.. படிப்பு, மருத்துவமனை என்று மிகவும் பிசியாக தன்னை மாற்றி கொண்டாள், எந்த யோசனைகளும் இல்லாத வகையில்.. ஆம்! ஈஸ்வரின் நினைப்பு குறைந்து விட, பத்துவை திரும்பிக் கூட பார்ப்பது இல்லை, அம்மா வீட்டிற்கும் செல்வது இல்லை.. எல்லாம் தன்னால் தானோ என்ற குற்றணர்ச்சி அவளுக்கும் அதிகமாய்..

வர்ஷினி வீட்டினர் யாருடனும் சரியாகப் பேசுவதில்லை.. கமலம்மா போனில் அழைத்தாலும் ஒரு முறை எடுப்பாள், பல முறை எடுக்கக் கூட மாட்டாள்..

முரளியின் குழந்தையைப் பார்க்க வந்ததுடன் சரி.. அன்று வீட்டினருடன் பேசியவள் தான்.. பிறகு தனியாக இருக்கும் வேதனை அதிகமாகத் தெரிய.. எல்லாம் இவர்களால் தான் என்று இரு வீட்டினர் மீதும் கோபம்.

யாருடனும் அதிகமோ அல்லது இயல்பாயோ பேசுவதே இல்லை.. அதுவும் ஈஸ்வரின் சிரமத்தை பார்த்த பிறகு பத்துவுடன் பேசுவதை அறவே தவிர்த்து விட்டாள்.

எல்லோரும் எந்த மாற்றமும் இல்லாமல் இருக்கிறார்கள், நாங்கள் மட்டும் ஏன் இப்படி என்ற கேள்வி தான் பூதாகரமாய் தெரிந்தது..

"எதுக்கு இவ்வளவு டென்ஷன், முழு நேரமும் வேலை, என்னோட பணம் எல்லாம் அப்படியே தானே இருக்கு, யூஸ் பண்ணிக்கங்க" என்று சொன்னாலும் ஈஸ்வர் கேட்கவில்லை..

மொத்தத்தில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளான இரு ஜீவன்கள் விஷ்வேஸ்வரனும் சங்கீத வர்ஷினியும் மட்டுமே.. ஆயிற்று மூன்று மாதங்கள் முடிந்துவிட்டது.

யாராலும் ஈஸ்வரை சரி செய்ய முடியவில்லை, அதன் தாக்கம் எல்லாம் வர்ஷினியிடம்.. யாராயிருந்தாலும் இங்கே வந்து பார்த்துப் போவதோடு சரி..

ஈஸ்வர் யார் வீட்டிற்கும் செல்வதில்லை.. அவனின் வீட்டிற்கும் சரி, வர்ஷினியின் வீட்டிற்கும் சரி..

இந்த மூன்று மாதத்தில் வர்ஷினி கற்றுக் கொண்டிருந்த சமையல் வேலை, பாலைக் காய்ச்சி காஃபி போடுவது மட்டுமே.. வேறு அவசியங்கள் இருக்கவில்லை, மூன்று வேளையும் மகனிற்கும் மருமகளிற்கும் கொடுத்து அனுப்பி விடுவார் மலர். வர்ஷினிக்கும் அவருக்கும் இடையில் நன்கு ஆரம்பித்த ஒரு பந்தம் அப்படியே நின்றது.

ஆம்! என்ன முயன்றும் வர்ஷினி தொடரவில்லை.. "அவரை கன்வின்ஸ் பண்ணி அண்ணியை அனுப்பி இருக்கலாம் தானே, அவருக்கு பிடிக்காதுன்னு  தெரிஞ்சும் ஏன் அனுப்பினீங்க" என்று மலரிடம் கேட்க வேறு செய்தாள்.

அவளின் நீல நிறக் கண்களில் தொலையும் ஈஸ்வர் தொலைந்து போயிருந்தான்.. அதுவும் கூட ஒரு வகையில் வர்ஷினியை பாதித்தது.

காலையில் வர்ஷினி எழுந்து குளித்து பாலைக் காய்ச்சி காஃபி போட்டுக் கொண்டு அமர்ந்த போது ஈஸ்வர் ஆழ்ந்த உறக்கத்தில்.. உணவு வகைகளை பார்த்தால் அதிகம் உண்ணப் படாமல் இருக்க.. ஈஸ்வரும் சரியாக உண்ணவில்லை என்று புரிந்தது.

ஈஸ்வரை சென்று எழுப்ப.. கண்ணை திறந்தவன்.. எழுந்து அமர.. அந்த நேரம் காலை உணவு வர.. வர்ஷினி அதை வாங்கி வைக்கப் போக..

இவன் தன்னை சீர் படுத்த குளியலறை போக.. சீர் படுத்தி வந்த போது வர்ஷினி காலை உணவை உண்டு கொண்டிருந்தாள்.. ஆம்! நேரம் எட்டரை மணியை தொடப் போக.. நேற்று உண்ணாததால் பசி வேறு, கல்லூரிக்கும் நேரமாக, உண்டு கொண்டிருந்தாள்.

ஈஸ்வருக்கு காலையிலேயே தலை வலி.. ஆனாலும் வர்ஷினியோடு இருக்கும் சிறிது நேரத்தை இழக்க

விரும்பாதவனாக.. எழுந்து அமர்ந்திருந்தான்.

இவனைப் பார்த்ததும், “லேட் ஆகிடுச்சு, சாப்பிட ஆரம்பிச்சிட்டேன்” என,

“நேத்து நைட் சாப்பிடாம தூங்கிட்டியா வர்ஷ்” என்றவனிடம்,

“எஸ், தூக்கம் வந்திடுச்சு” என்று பொய் சொல்லிவிட்டாள்.. தனிமை உணர்ந்ததை சொல்ல வில்லை, ஏன் வயிறு வலி என்று கூட சொல்லவில்லை.. சொல்லக் கூடாது என்றில்லை அவளுக்கு அது வரவில்லை.

“நேத்து ஈவ்னிங் என்ன தான் பண்ணின?”

“வந்த உடனே தூங்கிட்டேன்” என முடித்துக் கொள்ள..

அப்போதும் “ரொம்ப டயர்டா தெரியற, ஆர் யு ஒகே” என,

“எஸ்” என்றவள்.. “உங்களுக்கு காஃபி” என,

“நீ சாப்டுட்டு கிளம்பு, நான் பார்த்துக்கறேன்” என்று முடித்து விட்டான். கூடவே “தாஸ் எப்போ வர்றான்?” என,

“இன்னும் ரெண்டு நாள் ஆகும் சொன்னாங்க” என்றாள். தாஸ் ஏதோ பங்காளி வீட்டுத் திருமணம் என்று முன்தினம் தான் விடுப்பு எடுத்து ஊர் சென்றான். இன்னும் வர்ஷினியை கல்லூரியில் விடுவது, திரும்ப அழைத்து வந்து வீடு விடுவது அவனின் பொறுப்பே!

“நான் வந்து ட்ராப் பண்ணட்டுமா?”

“வேண்டாம், நீங்களும் டயர்டா தான் தெரியறீங்க. நான் போயிக்கறேன்” என திரும்ப முடித்து விட..

“காலேஜ் எப்படி போகுது” என்று பேச ஆரம்பிக்கும் போதே,

“அது போகலை, அங்கேயே தான் நிக்குது” என்றபடி எழுந்து கொள்ள.. ஈஸ்வருக்கு சிரிப்பு வந்தது.

“வர்ஷ், வீட்ல ஈவ்னிங் போர் அடிச்சா ஆபிஸ் வந்துடேன்” என,

“எதுக்கு? நீங்க அங்க எல்லோர்கிட்டயும் கத்துறதை பார்க்கவா? நான் இங்கேயே இருக்கேன்”

ஈஸ்வருக்கு அவளை தனியாக விட மனதில்லாததால் "அங்கே வந்துடேன்" என்று சொல்லியிருக்க, இரண்டு மூன்று நாட்கள் சென்றாள் தான்.. ஆனால் ஈஸ்வர் முழு நேரமும் அங்கே வேலையில் இருக்க.. தனியாக அமர்ந்திருப்பது பிடிக்கவில்லை.

"இதை பாரேன்" என்று ஈஸ்வர் அவளை எங்கேஜ் கூட செய்ய.. அந்த அக்கௌண்ட்ஸ்.. ஸ்பெஷல் ஸ்கீம்ஸ் எதுவும் அவளுக்கு பிடித்தமில்லை.. அதனால் அது மண்டையில் ஏறவில்லை..

"இல்லை, நான் பார்க்கலை" என்று விட.. அதன் பிறகு அங்கேயும் செல்வதில்லை..

ஈஸ்வருக்கு என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் மனதில் ஒரு மூலையில் வர்ஷினி இருப்பாள் தான்... ஆனால் அதையும் மீறி வேலைகள் அவனை ஆக்கிரமித்தன.. நிறைய நிறைய இழுத்துப் போட்டுக் கொண்டான், புலி வாலை பிடித்தது போல, இனி விட முடியாது..

அப்போதும் "தினமும் வரலைன்னா போகுது, இன்னைக்கு வா!" என,

"பார்க்கலாம்" என்று பேகை எடுக்க..

"வாயேன் வர்ஷ்.. நான் வரும் போது இப்போல்லாம் நீ தூங்கிடற"

"நீங்க வரும் போது நான் தூங்கலை, நான் தூங்கும் போது நீங்க வர்றிங்க" என,

"என்ன பதில் இது?" என்று ஈஸ்வர் ஆராய முயலும் போதே "ஃபோன் பண்ணுங்க, சொல்றேன்" என்று கிளம்பிவிட்டாள்.

ஆஃபிஸ் சென்றதும் ஈஸ்வரை வேலைகள் இழுத்துக் கொள்ள.. மறந்து விட்டான்..

ஆறு மணிக்கு மேல் தான் ஞாபகம் வர.. அவசரமாக அழைத்து "வர்ஷ் இங்கே வர்றேன்னு சொன்ன?"

"எப்போ சொன்னேன், நான் வீட்டுக்கு வந்துட்டேன்" என்று முடித்து கொண்டாள்.

"சாரி, ஃபோன் பண்ண மறந்துட்டேன் வர்ஷ்.. இப்போ வாயேன்" என,

“ஃபோன் பண்ணவே ஞாபகம் இல்லை, அப்போ நிறைய வேலைன்னு அர்த்தம், நான் அங்கே வந்து என்ன செய்ய, இனிமேல முடியாது” என்று விட..

இவன் செல்லலாம் என்றால், அன்று மதுரையில் இருக்கும் கிளையின் கணக்கு வழக்குகளை சரி பார்த்துக் கொண்டிருந்தான் காலையில் இருந்து.. இடையில் விட்டால் எங்கே நிறுத்தினான் என்று அவனுக்கே தெரியாது..

வர்ஷினியின் பதில்கள் திருப்தி தராததால், “சரி, அங்கே அம்மா வீட்டுக்குப் போறியா?” என,

“நீங்க போகமாட்டீங்க, நான் எப்படிப் போக?” என்று முடித்து விட,

“நான் சீக்கிரம் வரப் பார்க்கிறேன்!” என்று சொல்லிவிட..

அவனால் உண்மையில் அசையக் கூட முடியவில்லை, தினமும் அவன் தாமதமாக செல்கிறான் என்று அன்று ஜகனும் இருந்தான், “என்னன்னு சொல்லு, நான் செய்யறேன், நீ போ!” என்பது போல..

அவனிடமும் கொடுக்கவில்லை.. “இல்லை பாதில இருந்து உனக்குத் தெரியாது” என்று விட.. ஆனாலும் ஜகன் பிடிவாதமாக அமர்ந்து இருந்தான். என்ன செய்கிறான் ஈஸ்வர் வீட்டில் வர்ஷினியை தனியாக விட்டு என்ற கவலை ஜகனிற்கும்..

மனது தாளாமல்.. “விஷ்வா, எல்லாம் வித்துக் கூட பணம் கொடுத்துக்கலாம்.. புதுசா சம்பாதிக்கலாம்.. இவ்வளவு கஷ்டப் படாதே, வீட்டுக்குப் போ!” என,

“விக்கறதா அதுக்கா இவ்வளவு சிரமப் படறேன், நீ வாயை மூடு!” என்று அவனிடம் கத்த.. ஜகன் எதிர்த்து பேசவும் இல்லை, சண்டை போடவும் இல்லை, வீடு செல்லாமல் அமைதியாக அமர்ந்து விட்டான்.. எல்லாம் என்னால் தான் என்ற எண்ணம் அவனுக்குள் திரும்பவும் ஓங்கியது. ஈஸ்வர் கிளம்பவும் தான் ஜகன் கிளம்பினான்.

ஈஸ்வர் அன்றைக்கும் வீட்டிற்கு போகும் போது நடு நிசியைத் தொட்டுவிட,

அன்று போய் வர்ஷினியை எழுப்பி உண்ண வைக்கக் கூட முயலவில்லை.. அவனுமே உண்ணாமல் படுத்து விட்டான்..

நயன பாஷை காட்டவும் கண் வேண்டும்! காணவும் கண் வேண்டும்!

**அத்தியாயம் அறுபத்திரண்டு :**

**நீயாகிவிட்டேன் நான் என நிழல் சொன்னால்.. சூரியன் என்னால் தான் நீ என்றது! வெளிச்சம் என்னால் தான் நீ என்றது! நிஜம் நானில்லாவிட்டால் நீயில்லை என்றது! இருள் நானே நீ என்றது!**

காலை எழுந்தது முதலே ஒரு சோர்வு வர்ஷினிக்கு, "என்ன வாழ்க்கை இது" என்பது போல... உறங்கும் ஈஸ்வரை பார்த்து இருந்தாள். எப்போது வந்தான், உறங்கினான் என்றே தெரியவில்லை.. அவனை பார்க்கப் பார்க்க ஒரு கோபம் பொங்கியது.

தன்னை ஏதோ ஒரு வகையில் அவன் ஏமாற்றி விட்டானோ எனத் தோன்றியது.

எழுந்து வெளியே வந்து பார்த்தாள், உணவு தொடப் படாமலேயே இருந்தது, இட்லி சாம்பார் என இருக்க.. அது நன்றாகவும் இருக்க.. செக்யுரிட்டிய அழைத்து "எடுத்துக்கங்க" என்று சொல்லிய போது திரும்பவும் காலை உணவு வந்திருக்க.. அதை வாங்கி வைத்து குளித்து வந்து உண்ணும் வரையிலும் ஈஸ்வர் எழவில்லை.. வர்ஷினியாக அவனை எழுப்பவும் இல்லை..

"நான் காலேஜ் கிளம்பறேன்" என்று அவனுக்கு ஒரு மெசேஜ் செய்து வீட்டை பூட்டிக் கொண்டு கிளம்பிவிட்டாள். கல்லூரி சென்ற பிறகு தான் நினைவு வந்தது, அன்று ஒரு முஸ்லிம் பண்டிகையை முன்னிட்டு அரசு விடுமுறை என

"ஊப்ஸ், என்ன செய்கிறேன் நான்" என்று அப்படியே அமர்ந்து கொண்டாள். தன்னிலை மறக்கச் செய்யும் தனது நிலையை அவளே வெறுத்தாள். இப்போதா அப்போதா என வெடிக்கும் நிலையில் இருந்த கோபம் வெடித்து அவளிடம் கிளம்பியது.

அப்போது சரியாக தொலைபேசி அடிக்க "வர்ஷ், காலேஜா? இன்னைக்கு லீவ் தானே!" என,

சிறிது நேரம் வர்ஷினி ஒன்றுமே பேசவில்லை...

"வர்ஷ், இருக்கியா?" என அவன் பல முறை கத்திய பிறகு, "இருக்கேன்" என்று அவளின் குரல் சோர்வாய் ஒலித்தது.

“என்ன? என்னாச்சு? ஏன் இப்படி பேசற?” என்று ஈஸ்வரின் குரல் பதட்டத்துடன் ஒலிக்க..

“இல்லையே, நல்லா தான் இருக்கேன், ஃபோன் சரியா கேட்கலை, இன்னைக்கு எனக்கு ஸ்பெஷல் கிளாஸ்” என்று சொல்லி விட.

“ஓஹ், அப்படியா? எப்போ முடியும்? ஏன் என்னை எழுப்பலை?” என்று ஈஸ்வர் கேள்வியாக அடுக்க...

“எனக்கு உன்னை பார்க்கப் பிடிக்கலை!” என்று கத்த வேண்டும் போல மனதில் ஒரு ஆங்காரம் தானாய் எழ..

அதில் வர்ஷினியே பயந்து போனாள்.. “மதியம் வரை தான் இருக்கும்னு நினைக்கிறேன்.. கால் பண்றேன், இப்போ வெக்கறேன்” என்று சொல்லி வைத்து விட்டவளுக்கு எங்கே போவது என்று தெரியவில்லை..

எப்படியும் இன்னும் சிறிது நேரத்தில் அவன் ஆஃபிஸ் கிளம்பிவிடுவான், பின்பு வீட்டிற்கு சென்று விடலாம் என்று நினைத்து பக்கத்தில் உள்ள ஒரு ஷாப்பிங் மால் சென்றாள்.

அங்கே அதுவரை எந்தக் கடையும் திறக்கப் படவில்லை.. புஃட் கோர்ட் ஒன்று திறந்திருக்க.. அங்கே சென்று காஃபி ஒன்றை வாங்கி அமர்ந்து கொண்டாள்.. எதுவுமே பிடிக்கவில்லை, எரிச்சலாக வந்தது அழுகையும் வந்தது..

வர்ஷினிக்கு “பிடித்ததா? பிடிக்கவில்லையா?” என்ற யோசனையில் நடந்த திருமணம், அதை பிடித்ததாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே ஈஸ்வருக்கு பிரதானமாக இருந்திருக்க வேண்டும்.. முட்டாள் தனமாகக் குடும்பப் பிரச்சனைகளை இழுத்து விட்டு கொண்டான்..

சொன்னதெல்லாம் கேட்டதால், வர்ஷி எப்போதும் எதுவும் பிடித்தமின்மையைக் காட்டாததால் வர்ஷினி விஷயத்தில் ஈஸ்வர் சறுக்கி விட்டான் என்பது தான் உண்மை.

சறுக்கியது மட்டுமல்ல சுயநலவாதியாகவும் மாறிவிட்டான்..

ஆம்! பிரச்சனை வந்தவுடன் ஈடுபட்ட சுய அலசலில் அவனுக்கு தெரிந்தது ஒன்று தான். வர்ஷினியின் நீல நிறக் கண்களில் தொலைந்து தன்னை தொலைத்து விட்டான் என்பது தான்..

ஆம்! எத்தனை வேலைகள் இருந்தாலும் வர்ஷினியை எப்படி மறக்க முடியும்.. நித்தமும் மனதோடு போராட்டம் தான், ஆனாலும் ஜெயிக்கும் வெறி.. வர்ஷினியின் நினைவுகளையும் ஜெயிக்க மிகுந்த உந்துதல்.. அதன் பொருட்டே இந்த விலகல்..

ஆனால் பேச்சில் செயலில் எதிலும் அக்கறை குறையவில்லை. அந்த நீல நிறக் கண்களை தான் வெற்றி கொண்டால் தான் வாழ்க்கையில் வெற்றி கொள்ள முடியும் என்று தோன்றியது.

ஈஸ்வருக்கு புரியாதது, வாழ்க்கை வர்ஷினியாகிப் போன போது அவளை வெற்றி கொண்டு என்ன பயன்.. அந்த வெற்றி அவளை தோற்க வைக்கும் அவளிடம் என்று அந்த முட்டாளுக்குப் புரியவில்லை.. அவள் தோற்றுப் போனால் அவனும் தானே தோற்றுப் போவான்..

காதல் மாயை, காதல் போதை இரண்டும் மறைந்து விட்டது ஆனால் காதல் மறையவில்லை. அதை இந்த மூன்று மாதங்களில் ஈஸ்வர் தெரிவிக்கவும் மறந்து விட, ஆயினும் அவளுக்கு தெரியாமல் போகவில்லை, தெரிந்தாலும் அது அவளுக்கு பிடித்தமில்லை..

ஆம்! ஈஸ்வருக்கு தன்னை பிடித்திருக்கின்றது என்பதில் எல்லாம் அவளுக்கு எந்த ஐயமுமில்லை.. அதன் பொருட்டே தன்னை சமாதானம் செய்து கொண்டிருந்தாள். ஆனால் என்னவோ தன்னுடைய பிடித்தத்திற்கு எந்த மதிப்பும் இல்லாதது போல ஒரு தோற்றம்.

திருமணதிற்கு முன் தன் மீது காட்டிய அக்கறை கூட திருமணதிற்கு பின் குறைந்து விட்டதாக தான் உணர்ந்தாள். “எங்கே இருக்கிறாய்? உண்டாயா? உறங்கினாயா? என்ன வேண்டும்? இதுவா வாழ்க்கை! இதற்கு திருமணம் அவசியமில்லையே!”

அதுவும் பத்து பதினைந்து நாட்கள்.. இப்போது அதை நினைக்கவும் அவளுக்குப் பிடிக்கவில்லை, நினைக்க நினைக்க ஆத்திரம் பொங்கியது.. அந்த வகையில் இன்னும் ஏமாற்றப் பட்டதாக உணர்ந்தாள்.

தன்னுடைய வேலைகள் முடிந்து, அந்த உணர்வே இல்லாதது போல நடந்து கொண்டது இன்னும் ஆத்திரத்தைக் கிளப்பியது. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் என்னை என்று நினைக்கும் போது ஆங்காரமாய் ஓங்காரமாய் ஆத்திரம் கிளம்பியது.

ப்ரச்சனையில் இருக்கிறான் இன்று சரியாகிவிடுவான், நாளை சரியாகி விடுவான் என்று நினைத்தால், உழைப்பதற்கே பிறந்தவன்

போல அதையே செய்து கொண்டிருந்தால், அப்போது நான் எதற்கு இவன் வாழ்க்கையில். எல்லாம் முடித்து திருமணதிற்கு யோசித்து இருக்கலாம் தானே!

தன்னை கைப்பாவையாய் ஆட்டி வைக்கிறான் என்பது போல தான் தோற்றம்!

எதிரில் இருந்த காஃபி ஆறிவிட.. வாழ்க்கையும் ஆறிப் போன உணர்வு தான்.. அமைதியாக அமர்ந்திருந்தாள். பார்க்கத் தான் அமைதியாய் தெரிந்தாள், உள்ளுக்குள் எரிமலை கனன்று கொண்டிருந்தது. கனன்ற எரிமலை ஈஸ்வர் எனும் புள்ளியை நோக்கித் தான் திரும்பியது.. எழுந்தவள் வாயிலை நோக்கி நடக்க.. அப்போது திரும்ப தொலைபேசி அடித்தது.

எடுத்துப் பார்த்தால் முரளி, எடுத்து “என்ன அண்ணா?” என்றாள் இறுகிய குரலில்.

“குழந்தையை இன்னைக்கு கூட்டிட்டு வர்றோம், வர்றியா வர்ஷி வீட்டுக்கு!” என்றான்.

“நானா? நான் எதுக்கு அங்கே?” என,

“என்ன வர்ஷி? என்ன ஆச்சு? நீ குழந்தைக்கு அத்தைடா! மத்த நாள் தான் வர்றது இல்லை, எத்தனை நாள் இப்படியே இருக்க முடியும். நான் ஈஸ்வரை சமாதானம் பண்றேன்!”

“அத்தையா? நானா? அதெல்லாம் அப்பா இருந்தவரைக்கும் தான் அண்ணா!” என்றாள் ஒட்டாத குரலில்.

“வர்ஷி, என்ன பேசற?” என்றான் அதிர்ந்து. “உறவுகள்னா சில சமயம் சண்டை சச்சரவுகள் வர்றது தான். ஆனா அதுக்காக சொந்தம் இல்லைன்னு ஆகிடாது!” என,

“ப்ச், இல்லைன்னு ஆகிட்ட மாதிரி தான் அண்ணா எனக்கு தோணுது” என்றவள் பட்டென்று வைத்து விட.. முரளி திரும்ப திரும்ப முயற்சித்தும் அவள் எடுக்கவில்லை.

மனது பதைக்க முரளி ஈஸ்வருக்கு அழைத்தான், “என்ன ஈஸ்வர் ஏதாவது சண்டையா?” என,

“என்ன சண்டை? யார் கூட சண்டை?” என்று ஈஸ்வர் கேட்க,

“வர்ஷினி கிட்ட இப்போ தான் பேசினேன், குழந்தை வீட்டுக்கு வர்றா வான்னு இன்வைட் பண்ணினேன், அத்தையா நானா

அதெல்லாம் இல்லை, அப்பாவோட போச்சுன்னு சொல்லி வெச்சிட்டா!"

"உங்க கிட்ட கோபமா இருக்கும்" என ஈஸ்வர் சொல்ல,

"இல்லை ஈஸ்வர், எங்க கிட்டன்றது மட்டும் இல்லை, குரலே சரியில்லை, மொத்தமா கோபமா இருக்கா" என,

"சரி, நான் என்னன்னு பார்க்கிறேன்!" என்று ஈஸ்வர் வைத்து விட்டவன், காலையில் தன்னிடம் பேசிய போது அப்படித்தானே இருந்தாள்.. உடனே அவளுக்கு அழைக்க,

வெகு நேரம் எடுக்கவில்லை.. ஈஸ்வரும் விடாமல் அடித்த படி இருக்க,

எடுத்து "இப்போ எதுக்கு இப்படி ஃபோன் பண்றீங்க" என்றாள் எரிச்சலாக,

"எங்கே இருக்க?" என,

"எங்கே இருந்தா உங்களுக்கு என்ன?" என்றாள் எரிச்சல் மறையாத குரலில்,

"வர்ஷ், ஏன் இப்படிப் பேசற, என்ன ஆச்சு?" என,

"ஏன்? இன்னும் வேற ஏதாவது ஆகணுமா, இது எனக்கு போதாதா?" என,

"எது? எது? என்ன ஆச்சு?" என்றான் பதட்டமாக.

"என்ன ஆச்சா? உங்களோட எனக்குக் கல்யாணம் ஆச்சு!" என்றவள் ஃபோனை அணைத்து தூக்கிப் பைக்குள் போட்டாள்.

ஈஸ்வர் அந்த பதிலில், அந்த குரலில், அப்படியே நின்று விட்டான். அலுவலகம் அப்போது தான் வந்தவன், உடனேயே எழுந்து அவளின் கல்லூரி நோக்கி கிளம்ப, அங்கே யாருமில்லை. எந்த ஸ்பெஷல் கிளாசும் இல்லை..

"ஏன்? ஏன் பொய் சொன்னாள்? எங்கே சென்றிருப்பாள்?" என்று மனம் பதைக்க, மீண்டும் அவளை அழைக்க ஃபோன் சுவிச் ஆப் என வந்தது. பயந்தவன் திரும்ப வீட்டிற்கே செல்ல, செல்லும் வரையிலும் அவனின் இதயம் துடிக்கும் ஓசை அவனிற்கே கேட்டது. அங்கே அவளின் லம்பாகினி நிற்பதை பார்த்ததும் தான் சற்று மனது ஆசுவாசப் பட்டது.

ஆம்! இங்கே தனியாக வந்தது முதலே லம்பாகினி தான் உபயோகிக்கின்றாள்.

வாயிலில் நின்று காலிங் பெல் அடிக்க.. கதவு திறக்கவேயில்லை, பதட்டத்தில் அவனிடம் சாவி இருப்பதே ஞாபகமில்லை, சில நொடிகளுக்கு பிறகே ஞாபகம் வர திறந்து உள்ளே போனான்.

உள்ளே சென்றால் வர்ஷினி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.. அவ்வளவு கோபமாக பேசினால், அதற்குள் உறங்குகிறாளா என்ற யோசனையோடு அமர்ந்தான்.

எழுப்பினான், ஆனால் வர்ஷினி அசையவேயில்லை.. பயந்தவன், அவளைத் தட்டி தட்டி எழுப்ப.. “தூக்கம் வருது” என்ற முனகல் மட்டுமே வர.. அதுவும் வித்தியாசமாய் தோன்ற,

“ஹேய் வர்ஷி, என்ன பண்ற? ஏன் இப்படித் தூங்கற?” என்று கன்னத்தில் வலிக்கும் படி அடித்து எழுப்பினான்.

“மாத்திரை சாப்பிடேன்” என்று சொல்லி கண்களை மூடிக் கொள்ள.. அதிர்ந்து அமர்ந்து விட்டான். அவன் நினைத்தது தூக்க மாத்திரை, அதற்கே அதிர்ந்து விட்டான்.

இரவு வரையிலும் வர்ஷினி எழவில்லை.. ஈஸ்வர் எதுவுமே செய்யாமல் அவளை பார்த்தது பார்த்தபடி அமர்ந்திருந்தான், மதிய உணவும் உண்ணவில்லை.. ஏதோ மனதிற்கு சரியாகப் படவில்லை.. இதயத்தில் ஒரு அழுத்தம்.. மனதில் ஒரு இனம் புரியாத பயம்..

முரளி அழைத்தான், மலர் அழைத்தார், எல்லோருக்கும் “கொஞ்சம் பிசியா இருக்கேன், அப்புறம் பேசறேன்” என வைத்து விட்டான்.

காலையில் பதினொரு மணிக்கு உறங்கியவள்.. விழித்த போது இரவு மணி ஒன்பது..

மெதுவாக கண் திறந்தவளின் முன் அமர்ந்திருந்த ஈஸ்வர் பட.. கண்ணை தேய்த்து விட்டு பார்த்தால், அவன் தானா என்பது போல.. அவனே தான் எனத் தெரிந்ததும்..

நேரத்தை பார்த்தால் அது ஒன்பது என.. “அதுக்குள்ள வந்துட்டீங்க?” என,

“நான் காலையில பதினோரு மணில இருந்து இங்க தான் இருக்கேன்” என்றான்.

எதுவும் பேசாமல் எழுந்து குளியலறை செல்ல, வருவதற்காகக் காத்திருந்தான்.. முகம் கழுவி வந்தவளிடம்.. எழுந்து நெருங்கி நின்றவன் “என்ன ஆச்சு வர்ஷ்?” என்றான் அமைதியாகவே.

“என்ன ஆச்சு?” என்றாள் திரும்ப என்றால் ஒரு தூக்க கலக்கத்தோடே,

அந்த நீல நிறக் கண்களில் ஒரு வித்தியாசம், உறக்கம் இன்னும் கண்ணை விட்டு அகலவில்லையோ என யோசித்த படி..

“ஃபோன்ல எதுக்கு அப்படி பேசின?” என்றான்.

“என்ன பேசினேன்? ஞாபகமில்லை சொல்லுங்க!” என்றாள் அவனைப் போலவே.

உண்மையாகவே அவளுக்கு ஞாபகமில்லை, அவள் எடுத்திருந்த மாத்திரையின் வீரியம் மூளையை மழுங்கடித்து இருந்தது.

“என்ன ஆச்சு வர்ஷ்? தூக்க மாத்திரை போட்டுத் தூங்கற அளவுக்கு”

“தூக்க மாத்திரையா? உங்களுக்கு எப்படி தெரியும்?” என்றாள் கண்களில் சிறிது கலவரம் எட்டிப் பார்க்க

“நீதானே நான் எழுப்பினப்போ மாத்திரை சாப்பிட்டேன் சொன்ன”

“ஓஹ், நான் தான் சொன்னேனா? வேற என்ன சொன்னேன்?” என்றாள் சற்று ஆசுவாசப் பட்டு. ஆனாலும் அந்த கண்களில் இருந்த ஏதோ ஒன்று ஈஸ்வருக்கு அப்படி ஒரு பயத்தைக் கொடுக்க..

“என்ன வர்ஷ்? என்ன பிரச்சனை?” என்றான் பயத்தோடு.

“சொன்னா, சொன்னா சரியாகிடுமா? ஆகாது! ஆகாது!” என்று அப்படியே படுக்கையில் அமர..

“என்ன? என்ன பிரச்சனை?” என்றவனுக்கு குரலே வரவில்லை.

“நீதான்! நீதான் பிரச்சனை! அப்போ எப்படி இது சரியாகும்.. சரியாகாது!” என்றபடி எழுந்தவள் “பசிக்குது” என்றாள். குரலில் ஒரு ஆத்திரம் கோபம் எதுவும் இல்லை, எதோ செய்தி சொல்வது போலவே இருந்தது.

“என்னன்னு சொல்லு” என்றான் மனம் பதைக்க.. அவனுக்குள்ளேயே ஒரு குற்ற உணர்ச்சி, தனிமையை உணர்ந்ததால்..

“என்ன சொல்ல? நீ ஒரு சுயநலவாதி, உன்கிட்ட நான் என்ன சொல்ல?” என்றவளின் குரலில் சற்று அழுத்தம் எட்டிப் பார்த்தது.

“சொல்லு வர்ஷ் சொன்னாதானே தீரும்?” என்றான் இறங்கிய குரலில்.

“சொன்னாலும் தீராது, எப்படித் தீரும், எனக்கு உன்னை பிடிக்கலை!” என்று சங்கீத வர்ஷினி நிறுத்த..

இதை ஈஸ்வர் எதிர்பார்க்கவேயில்லை, இதயம் நின்று தான் துடித்தது! அப்படியே பார்த்தது பார்த்தபடி நின்றான். குறை சொல்வாள், குற்றம் சொல்வாள், திட்டுவாள் என்று எதிர்பார்க்க இப்படி ஒரு பதிலை எதிர்பார்க்கவில்லை.

“எப்படி இனி தீரும்? அது தீராது! தீராது! கண்டிப்பா தீராது! இதோட தானே நான் வாழணும்!” என்றவளின் குரலில் அடக்கப்பட்ட ஆத்திரம்.

“ஒன்னுமே பண்ண முடியாது!” என்றவளின் கண்களில் வேகமாக கண்ணீர் இறங்கியது.

“நீ என்கிட்டே தப்பா நடந்தப்போவே நான் அப்பா கிட்ட சொல்லியிருக்கணும். ஆனா சொல்லலை, ஏன் சொல்லலைன்னு நம்ம கல்யாணம் வரை கூட நினைக்கலை.. ஆனா இந்த வீட்டுக்கு வந்த பிறகு பலமுறை நினைச்சிட்டேன்”

“சொல்லியிருந்தா நம்ம கல்யாணம் நடந்திருக்காது!”

அவள் சொல்லிய விதத்திலும், அவள் சொல்லிய விஷயத்திலும் ஈஸ்வரின் கண்களில் கண்ணீர் வருவேனா என்றது.

“ஏற்கனவே அப்பாவோட இல்லீகல் சைல்ட் நான்.. நான் இல்லீகல் இல்லை, இதுதான் என்னோட அம்மான்னு அதையும் சொல்ல முடியாது!”

“அப்போ எனக்கு பிடிக்கலைன்னு உன்னை விட்டு எப்படிப் போக முடியும்.. இந்த சொசைட்டி ல திரும்ப நான் ஒன்னுமே இல்லாம போயிடுவேன். அதை என்னால் செய்ய முடியாது இல்லையா?

அப்போ எனக்கு பிடிக்கலைன்னாலும் உன்னோட தானே நான் இருக்கணும்!" என்றாள் தெளிவாக.

"என்ன உளர்ற நீ?" என்று பயத்தோடும் ஆத்திரத்தோடும் ஈஸ்வர் பேச..

"கேட்டீங்க சொன்னேன், அப்புறம் உளறல்ன்னு சொன்னா நான் என்ன சொல்வேன், இதுக்கு தான் நான் எதுவுமே சொல்லலை! சாப்பிடலாமா?" என்றபடி நடக்க..

வேகமாக அவள் முன் சென்று நின்றவன்.. "ஐ லவ் யு வர்ஷ், கண்டதையும் நினைச்சு குழப்பாதே!" என,

"நீங்க என்னை லவ் பண்ணலைன்னு நான் எப்போ சொன்னேன்.. எனக்கு அதுல எந்த சந்தேகமும் இல்லை!"

"அப்புறம் ஏன் இப்படிப் பேசற?"

"ஏன்னா நீங்க உங்க வாழ்க்கையை அமைச்சிக்கிட்டீங்க, ஆனா எனக்கு அமைச்சிக் கொடுக்கலை.. என்னால எல்லாம் சொல்ல முடியாது, விடுங்க!" என்றபடி நடக்க,

"வர்ஷ்" என நின்றான்.

ஆம்! வர்ஷினியால் எல்லாம் சொல்ல முடியாது! அவள் எடுத்துக் கொண்டது தூக்க மாத்திரை அல்ல, நார்காடிக்ஸ் எனப் படும் வகையை சேர்ந்தது.. மிகுந்த வலியில் இருப்பவர்களுக்கு கொடுக்கப் படுவது..

வலியை போக்குவதோடு, மனநிலை மாற்றம், உடல் நிலை மாற்றம், செயல் நிலை மாற்றம், ஒரு மயக்கம் எல்லாம் கொடுக்கும், சட்டத்திற்கு புறம்பானது.. இன்னொரு வகையில் சொல்ல வேண்டும் என்றால் போதை வஸ்து..

சிறிது சிறிதாக சாப்பிடுபவரை அடிமையாக்கும்!

வர்ஷினியிடம் ஈஸ்வர் தவறாக நடந்த போது அவளுக்கிருந்த மனஉளைச்சலில் தான் முதன் முறை அதை எடுத்தாள். ஹாஸ்டலில் இருந்த போது தோழி ஒன்றிரண்டு பேர் எடுத்துப் பார்த்திருக்கிறாள் அப்படித் தான் தெரியும். அவர்களிடம் இது தவறு என்று அடித்துப் பேசியவள், அதனை இப்போது தானாகவே எடுத்தாள்.

அது தவறென்று தெரியும், எவ்வளவு சாப்பிட வேண்டும் என்றும் தெரியும். அதனை பற்றிய ஒரு ஆராய்ச்சியே இணையதளம்

மூலமாக செய்து விட்டாள். அவளின் லேப் முழுக்க இதனைப் பற்றிய செய்திகளே!

அது தான் ஈஸ்வர் எடுத்ததும் கண்டு கொண்டானோ என்று பயந்து விட்டாள். ஈஸ்வர் அவனுடைய வேலையை மட்டுமே செய்தான் என்ன இருக்கிறது என்றெல்லாம் பார்க்கவில்லை.

மீண்டும் மீண்டும் அவன் திருமணதிற்கு வற்புறுத்திய போது சில முறை எடுத்திருந்தாள். அதிகமாக எடுத்தது, ஈஸ்வர் வர்ஷினியை பார்த்து மிரட்டிச் சென்ற நாள், "நான் திரும்பவும் வருவேன், நீ யாரையாவது திருமணம் செய்திருந்தாலும் வருவேன்" என்று சொல்லிச் சென்ற நாள்.

பிறகு இந்த நினைவுகளின் தாக்கம் வரும் போது எப்போதாவது, ஈஸ்வர் திரும்ப சிங்கப்பூரில் இருந்து வந்த நாளின் முந்தைய இரவு கூட எடுத்திருந்தாள்.. அதனால் தான் அந்தக் கண்களில் வித்தியாசம் தெரிந்தது ஈஸ்வருக்கு..

யாரோடும் எதையும் பகிராமல் இருந்த ஒரு சிறு பெண்ணிற்கு கொடுத்த மன அழுத்தம் ஈஸ்வருக்கு புரியவேயில்லை! அது செய்திருக்கும் நாசமும் அவனுக்குத் தெரியவில்லை!

திருமணதிற்கு பின் அதனை நாடியதில்லை, இப்போது இரண்டு நாட்களாக..

நடந்திருந்தவள் ஆவேசமாக திரும்பி "என்னவோ பெரிய இவன் மாதிரி டைலாக் விட்ட, என்ன ஹேண்டில் பண்ண உன்னைத் தவிர யாராலையும் முடியாதுன்னு அவ்வளவு கர்வமா சொன்ன?"

"என்ன பண்ணியிருக்க தெரியுமா நீ? ஒழுங்கா இருந்த பொண்ணை கல்யாணம்ன்ற பேர்ல ஸ்பாயில் பண்ணியிருக்க, யாரோ ராஜகுமாரன் நமக்காக வருவான்னு காத்திருந்த பொண்ணை சிதைச்சு இருக்க!" என்றாள் ஆவேசமாக.

"என்னவோ யாரும் இல்லாத இடத்துக்கு என்னை கூட்டிட்டு போயிடுவ சொன்ன.. ஆனா இந்த மூணு மாசமா என்னை பார்க்கக் கூட இல்லை.. எனக்கு புரியுது நீ உன்னை கண்ட்ரோல் பண்ற என்னை முன்ன வெச்சுன்னு"

"ஆனா அதுக்கு நீ என்னை கல்யாணம் பண்ணியிருக்க வேண்டாம், நான் என்ன நீ ஆராய்ச்சி பண்ற பொருளா? என்று ஆங்காரமாய் கத்தியவள், அந்த ரூமை விட்டு அகன்று விட..

வாழ்க்கையில் மிக மிக மோசமாக ஈஸ்வர் எனும் கர்வி காயப்பட்டான்.. அப்படியே சில நிமிடங்கள் நின்று விட்டான். வர்ஷினி பேசியது மட்டும் தான் தெரியும்.. இன்னும் அவளின் செயல் தெரியவில்லை. தெரிந்தால் தன்னை மன்னிக்க என்றும் அவனால் முடியாது என்பது தான் உண்மை.

ஈஸ்வர் வராததைப் பார்த்து உள்ளே வந்தவள்.. ஈஸ்வர் அப்படியே நின்றிருப்பதைப் பார்த்து, “மை இன்ட்டென்ஷன் வாஸ் நாட் டு ஹர்ட் யு.. பட் ஸ்டில்.. எனக்கு புரியுது வாழ்க்கையோட உண்மைகள், நம்ம கனவு வாழ்க்கையோட மேட்ச் ஆகாதுன்னு.. எந்த தப்புமே பண்ணாம யாருக்காகவோ நீங்க பணத்துக்கு பின்னால ஓடறீங்கன்னு புரியுது, ஆனாலும் அதுக்கு நான் விக்டிம் ஆக முடியாது இல்லையா?” என்று நிறுத்தி அவள் பார்த்திருக்க..

புதைந்து போக விரும்பும் அந்த நீல நிறக் கண்கள் அவனை எரித்தது தான் உண்மை!

“மே பீ நான் யோசிக்கிற விதம் தப்பாக் கூட இருக்கலாம், நான் கேட்டா நீங்க எனக்காக எல்லாம் செய்வீங்க தான். ஆனா எனக்கு இதெல்லாம் தான் வேணும் வேணும்ன்னு கேட்டு வாங்கறது வாழ்க்கை இல்லையே”

“பிரிஞ்சிரிவோம்னு சொல்ற அளவுக்கு எனக்கு தைரியம் கிடையாது.. கூடவே எனக்கு வீடும் கிடையாது.. முடிஞ்சவரை என்னை கன்வின்ஸ் பண்ண பார்க்கிறேன்” என்று முயன்று புன்னகை செய்தவள்..

“எஸ், நீங்க என்னை தான் லவ் பண்ணுனீங்க பண்ணறீங்க பண்ணுவீங்கன்னு சொல்லி தான் கன்வின்ஸ் பண்ணிக்கறேன்” எனச் சொல்லி, “பசிக்குது வாங்க” என்று திரும்ப நடக்க..

அவள் பேசியதைக் கேட்க கேட்க.. ஒரு பயத்தை உணர்ந்தான் ஈஸ்வர்.. பயம் பயம் பயம் மட்டுமே! பூமியுள் புதையுண்டு விட தான் விரும்பினான்!

வாழ்க்கையில் எல்லாவகையிலும் தோற்று விட்ட ஒரு உணர்வு! ஐஸ்வர்யாவைப் பற்றி வர்ஷினிக்கு தெரியும் போது! அப்போதும் அவனின் தவறுகளை நோக்கி தான் அவனின் பார்வை திரும்பியது.. இன்னும் முழுதாக அவன் வர்ஷினியை அறியவில்லை..

ஆம்! இன்னும் அவள் கோபத்தைக் காட்டவேயில்லையே, தன்னை சிதைக்கும் தன்னுடைய செய்கையையும் அறிய விடவில்லை. அதனை அறியாத போதே பயம்..

இந்த பயம் வாழ்க்கையில் தவறிய மனிதர்களுக்கு தோன்றும் பயம்!

எவராகினும் பெண்ணிடம் தவறிழைத்த மனிதனை வாழ்க்கை விடுவதில்லை.. இவன் பெண்களிடம் அல்லவா தவறிழைத்து இருக்கிறான்.. ஒரு பெண்ணின் உடலை தீண்டி! இன்னொரு பெண்ணின் மனதை தீண்டி! பெண்களிடம் தவறிழைக்கும் மனிதனை வாழ்க்கை அவ்வளவு சுலபத்தில் விடுவதில்லை.

அது தவறு என்று உணர்ந்து விட்டாலும் செய்த செயலின் பயனை அனுபவித்து தானே ஆகவேண்டும்!

மனிதனுக்கும் மிருகத்திற்கும் அது தானே வித்தியாசம்! தன்னை கட்டுக்குள் வைக்காத மனிதன் மனிதன் அல்ல! நாளும் பொழுதும் அந்த நீல நிறக் கண்களில் தொலைந்து, தன்னை தொலைத்து, ஒரு பெண்ணை நீ வேண்டாம் என்று சொல்லி, இன்னொரு பெண்ணை திருமணதிற்கு கட்டாயப் படுத்தி, என்ன செயல் இது?

திருமணதிற்கு பின் தானே காதல் என கண்டறிந்தான் தன் மயக்கங்கள் தெளிந்த பிறகு… வேறாகிப் போயிருந்தால்?

எவ்வளவு நேர்மையாக இருந்தாலும், எவ்வளவு புத்திசாலியாக இருந்தாலும், எவ்வளவு ஓடினாலும், வெற்றி சுலபத்தில் அணுகிவிடாது, வாழ்க்கையில் நிம்மதியும் கிட்டாது!

இதில் மிகவும் வருந்தத்தக்க விஷயம் விஸ்வேஷ்வரனின் தோல்வி அவனின் நிம்மதியின்மை சங்கீத வர்ஷினியையும் பாதிக்கும் என்பது தானே!

இது விதிப் பயன் அல்ல செய்த செயலின் பயன்!

மீண்டு வருவானா? மீட்டு வருவானா?

**நின்புகழ் நின்னை மறைத்த நின் செயல் நின்னைக் கொல்லும்!**

(இரண்டாம் பாகம் முற்றும்)

## அத்தியாயம் அறுபத்து மூன்று :

உள்ள தௌலாமோர் உயிரென்று தேர்ந்தபின்
உள்ளங் குலைவ துண்டோ? -- மனமே!

வெள்ள மெனப்பொழி தண்ணரு ளாழ்ந்தபின்
வேதனை யுண்டோடா?

அலுவலகத்தில் அமர்ந்து கணினி திரையைத் தான் வெறித்திருந்தான் ஈஸ்வர், அவனின் வாழ்க்கையில் வர்ஷினி என்ற பெண் புதிதாக வந்த உணர்வு தான்..

ஆகிற்று வர்ஷினி அவனிடம் “உன்னைப் பிடிக்கவில்லை ஆனாலும் விட்டுப் போக முடியாது இல்லையா?” எனச் சொல்லி மூன்று மாதங்கள் ஆகிவிட்டது.

வர்ஷினி எப்போதும் போலத் தான் பேசினாள், ஆனால் ஈஸ்வரால் சகஜமாகப் பேச முடியவில்லை.. அதுவும் “நீங்க என்னை தான் லவ் பண்ணுனீங்க, பண்ணுவீங்க” என்று சொன்ன பிறகு மனதிற்குள் எழுந்த குற்ற உணர்ச்சியைத் தடுக்கவே முடியவில்லை.

ஆம்! காதலித்தானா தெரியாது? ஆனால் காதல் சொன்னவன் ஆகிற்றே ஐஸ்வர்யாவிடம்!

இப்போதெல்லாம் வீட்டிற்கு விரைவாக ஆறு மணிக்கு சென்று விடுகின்றான். எந்த வேலை என்றாலும் அங்கே இருந்தே பார்த்துக் கொள்கிறான். மனதில் சொல்லொணா துயரங்கள் இருந்த போதும் இருவருமே அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

வர்ஷினி பேசிய அன்றே “நிறைய தப்பு பண்றேன் போல வர்ஷ்” என்றவன், “முடிஞ்சவரை சரி பண்ணிக்கறேன்” என்று சொல்லி விட்டான் தான். ஆனால் எப்படி சரி செய்து கொள்வது என்று தெரியவில்லை.

மேலே பேசவும் அப்போது முடியவில்லை. உணவு உண்டு சென்று திரும்பவும் வர்ஷினி உறங்கிவிட, அடுத்த நாள் கல்லூரி கூட செல்லாமல் உறங்கிவிட.. அவனால் பேசவே முடியவில்லை.

அவன் தூக்க மாத்திரையின் விளைவு என நினைத்திருக்க, அவள் உட்கொண்ட மாத்திரையின் விளைவு என்று  தெரியவேயில்லை. பிறகு மனதிற்குள் பேச உரு போட்டுக் கொண்டே இருந்தான், இதுவரை பேசும் தைரியம் வரவில்லை என்பது உண்மை.

பேச மட்டுமில்லை அருகில் செல்லவும் தைரியம் வரவில்லை.. ஆம்! ஒரு முறை அருகில் படுத்திருக்கும் போது, கை மேலே போட்டு விட்டான். நாசுக்காக அதை விலக்கி ஏதோ வேலை இருப்பது போல வர்ஷினி எழுந்து சென்று விட்டவள்.. சிறிது நேரம் கழித்து வந்த போது, “ப்ளீஸ் கை மேல போடாதீங்க.. ஐ அம் நாட் கம்ஃபர்டபில்” என்றாள் தெளிவாக..

ஈஸ்வர் பதிலே பேசவில்லை ஒரு தலையசைப்பு மட்டுமே கொடுத்தான். ஆனால் எங்கே இருந்து அதன் பிறகு வரும் அவனுக்கு உறக்கம். வர்ஷினியின் வார்த்தைகளை கேட்ட போது மனதில் தீச்சுட்ட உணர்வு.. பெரிதாக சறுக்கி விட்டான் என்று அவனுக்கே புரிந்தது.

அவனாக விலகி இருந்த போது ஒன்றும் தெரியவில்லை அவளாக விலக்கும் போது.. வர்ஷினி வேண்டும் என்று ஒவ்வொரு அணுவும் துடிக்க ஆரம்பித்தது. உறங்குவதர்க்குள் பெரும் பாடு பட்டுப் போனான்.

முடிந்தவரை தன்னை வர்ஷினியிடம் கலகலப்பாக மாற்றிக் கொண்டான், நிறைய பேச்சுக் கொடுத்தான். அவன் பேசுவதற்கு முகமெல்லாம் திருப்பவில்லை, கேட்பதற்கு பதில் சொன்னாள், ஆனால் அவளாகப் பேசவில்லை.

ஆனால் ஈஸ்வர் பின் வாங்கவில்லை.. பின் வாங்கினால் அவன் ஈஸ்வர் அல்லவே.. ஆதலினும் கடக்க வேண்டிய தூரம் அறியவில்லை. சமாதானம் செய்து கொள்ளலாம் என்ற அசட்டு துணிச்சலில் இருந்தான்.

வர்ஷினி அங்கே அவளின் அப்பா வீட்டிற்கு செல்லவேயில்லை, முரளியும் ஷாலினியும் வந்து தான் குழந்தையை காட்டிச் செல்லும் படி ஆகிற்று.

“ஏன் வர்ஷினி வரலை?” என்றவர்களிடம்,

“அன்னைக்கு இவர் கோபப்பட்டு ரஞ்சனி அண்ணியை கூட்டிட்டு வந்தப்போ, திரும்ப வந்து அண்ணியை கூட்டிட்டு போக மட்டும் தான் செஞ்சாங்க. இவரையும் சமாதானம் செய்யலை, என்னை கன்சிடர் பண்ணவேயில்லை. அப்புறம் எப்படி அண்ணா நான் வரமுடியும்”

“இவர் அந்தக் கோபத்தை என்கிட்டே காட்டலை, காட்டியிருந்தா நான் எங்க போவேன்.. நீங்கல்லாம் என்னை ஒரு ஆளுன்னு நினைக்கவேயில்லை, அப்புறம் உங்க வீட்டுக்கா வந்திருப்பேன்.. அதனால நான் வரலை, வரவும் மாட்டேன்”

“பத்துண்ணா இப்படி பண்ணுவாங்கன்னு நான் நினைக்கவேயில்லை, நீங்க மட்டும் இப்போ பாப்பா வந்த பிறகு தானே வர்றீங்க” என்று விட,

முரளியால் பேசவே முடியவில்லை..

“சாரி டு சே திஸ் அண்ணா, உங்க சொந்த தங்கையா இருந்தா இப்படி தான் இருந்திருப்பீங்களான்னு தான் நினைக்கத் தோணுது” என,

“ஐயோ, இவள் இத்தனை விஷயங்களை மனதிற்குள் போட்டு மருகிக்கொண்டிருந்தாளா எனக்கு எதுவுமே தெரியவில்லை” என வெட்கமாகப் போய் விட்டது ஈஸ்வருக்கு..

அவளின் கண்களில் கடலின் ஆழத்தை கண்டவன், மனதும் அப்படித்தான் என புரிந்து கொள்ளவில்லை.

முரளி மனம் பதைத்து அவசரமாக பேச வர..

“உங்களுக்குத் தெரியுமா அண்ணா, தாத்தா எப்பவும் எதாவது பேசிட்டே இருப்பார் என்னை.. அதனால இந்த சொத்து உனக்கு அப்படி எதுக்கு? தூக்கிக் கொடுத்துடுன்னு இவர் எவ்வளவு கன்வின்ஸ் பண்ணினார். ஆனா நான் தான் முடியாது சொல்லிட்டேன். அது என்னோடதுன்னு”

“பத்துண்ணா என்ன பண்ணினாலும் இவர் பேசிடுவாரா.. பேச மாட்டார்! ரஞ்சனி அண்ணியோட ஹஸ்பன்ட்னு பேசாம தானே இருப்பார்”

“ஆனா பத்துண்ணா அப்படி நினைக்கலை தானே! விட்டுடுங்க!” என்று முடித்து விட்டாள்.

வர்ஷினி பேச பேச ஷாலினியின் கண்கள் கலங்கி விட்டது..

ஷாலினி எவ்வளவு சமாதானம் செய்தும் கேட்கவில்லை..

“ப்ச், விடுங்கண்ணி, இது சரியாகாது!” என்று சொல்லிவிட, மூவருமே திகைத்து நின்றனர்.

அன்றே வீட்டில் சொல்லி, கமலம்மாவும், பத்துவும், முரளியோடு திரும்பவும் வர.. “வாங்க” என்று ஒற்றை சொல் சொல்லி ஈஸ்வர் அந்த இடம் விட்டு நகரப் போக,

முரளி பத்துவை பார்த்த பார்வையில் “சாரி, நான் தப்பா பேசினதுக்கு” என்று சொல்லியபடி பத்து அவசரமாக ஈஸ்வர் முன் சென்று நிற்க.

அந்த பாவனையில் ஈஸ்வர் சிரித்து விட்டான்.. முரளியை பார்த்து “என்னடா பண்ற நீ?” என,

“என்ன பண்ண சொல்ற? உன்னை மாதிரி ஒரு டபிள் பாயில்ட்டும், இவனை மாதிரி ஒரு ஹாஃப் பாயில்ட்டும் வெச்சிருந்தா இப்படி தாண்டா செய்யணும்”

“எல்லாம் எனக்கு தான் தெரியும்னு பேசற தானே? அப்புறம் ஏன்டா இன்னும் காம்ப்ளிகேட் பண்ணின” என்று ஈஸ்வரை கேட்டாலும் பார்வை வர்ஷினியிடம் தான் இருந்தது.

வர்ஷினி யாரோ பேசிக் கொள்வது போல, தனக்கும் அதற்கும் சம்மந்தமில்லை என்பது போல அசையாமல் நின்றிருந்தாள்.

“சாரி வர்ஷி!” என்று பத்து அவளிடமும் கேட்க..

“சாரி கேட்கற அளவுக்கு என்ன தப்பு பத்துண்ணா நீங்க பண்ணுனீங்க?” என்றாள் கூர்மையாக..

பத்துவிற்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை..

முரளி தான் “விடு வர்ஷினி இன்னும் அதையே பேசுவியா?” என,

இவர்கள் எல்லாம் பேசுவதை பார்த்திருந்த கமலம்மாவிற்கு பேசவே வரவில்லை. கனமான

மனதோடு பார்த்திருந்தார்.

"நீங்க என்னை விட்டுட்டீங்க முரளிண்ணா, அதனால இப்படி தான் பேசுவேன்" என்று சொல்லும் போதே கண்களில் நீர் நிற்க துவங்க இலகுவான சூழ்நிலை மீண்டும் கனமானது..

"இவங்க ரெண்டு பேரும் வீட்டுக்கு வந்தாங்க, அண்ணியை மட்டும் கூட்டிட்டு வந்துட்டாங்க, அப்போ நான்? என்கிட்டே எதுவும் பேசலை! சொல்லலை!"

"இவர் என்னை இங்கே கூட்டிட்டு வந்துட்டார்!"

கமலம்மா ஏதோ பேச வர.. "நீங்க பேசாதீங்க! அப்பா இருந்தா இப்படி தான் விட்டிருப்பீங்களா? அப்போ அப்பாக்காக மட்டும் தான் என்னை எல்லோரும் பார்த்துக்கிட்டீங்க.. அப்போ நான் தள்ளி தானே இனிமே நிக்கணும்!"

"ஹாஸ்டல்ல இருக்கும் போது கூட நாலு பேர் முகத்தை பார்க்க முடியும். இங்க தனியா தான் உட்கார்ந்து இருக்கேன்.. இவர் உங்களுக்கு பணம் குடுக்கணும்னு வீட்டுக்கே வர்றதில்லை, ஆஃபிஸ்லயே தான் இருக்கார்" என்று சொல்லும் போதே திரும்பவும் அழுகை வர, யார் முன்னும் அழப் பிடிக்காமல் ரூமின் உள் புகுந்து கொள்ள, வந்தவர்களை ஈஸ்வர் தான் கவனித்து அனுப்பும்படி ஆகிற்று.

"சரியாகிடுவா?" என்று ஈஸ்வர் சொன்ன போதும், கமலம்மாவின் அழுகையை நிறுத்தவே முடியவில்லை.

"டேய், சீக்கிரம் சரி பண்ணுடா! அப்பா என்ன சொல்றாங்களோ அதையே கேட்டு பழகிட்டாங்க. சுயமா யோசிக்கத் தெரியலை அம்மாவுக்கு!"

என்றவன் அவரை அழைத்துக் கொண்டு கிளம்பவும்…

“இங்க நானே பயந்து இருக்கேன். இதுல இவங்களோடதை நான் சரி பண்ணவா? கிழிப்பேன்!” என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல்,

பத்துவிடம் “ரஞ்சனி எப்படி இருக்கா?” என்றான் ஈஸ்வர்.

“தெரியவில்லை” என்றா சொல்ல முடியும், ரஞ்சனி தான் பத்துவிடம் பேசுவதே இல்லையே “நல்லா இருக்கா” என,

பேசுவதில்லை ஈஸ்வருக்கே தெரியுமே! கண்டிப்பாக அவனை மீறி வீட்டிற்கு சென்றிருந்தாலும், பத்துவோடு பேசியிருக்க மாட்டாள் என, வேண்டுமென்றே “டிரைவர் போஸ்ட்டாவது இருக்கா, இல்லை அதுவும் காலியா?” என ஈஸ்வர் கேட்க..

“அதெல்லாம் காலி தான்!” என முரளி சொல்ல.. பத்துவின் முகத்திலும் ஒரு அமைதி..

பிறகு அதனைப் பற்றிய பேச்சுக்கள் எதுவுமில்லை..

ஆனால் ஈஸ்வர் இனி பத்துவிடம் விரோதம் பாராட்டுவதாக இல்லை. அவன் எப்படியோ போகிறான், என்னவோ பேசிக் கொள்கிறான் என்ற முடிவிற்கு வந்து விட்டான். ஈஸ்வருக்கு மிகவும் நிச்சயம், பத்துவிடம் தான் விரோதம் பாராட்டினால், வர்ஷினியும் பத்துவோடு சரியாகப் பேச மாட்டாள்.

இவளாவது பேச தான் மாட்டாள், ஆனால் ரஞ்சனி வாழவே மாட்டாள் எனத் தெரியும்.

ரஞ்சனிக்காகவாவது பணத்தை விரைவாக கொடுத்து விட வேண்டும் என்ற முடிவோடு இருந்தான்.

பிறந்த வீட்டில் யாருமில்லை என்ற உணர்வோடு வர்ஷினி இருப்பதா.. இல்லை அப்படி விட முடியாது. எல்லோரோடும் அவள் நன்றாகப் பேச வேண்டும்.. அதற்காகவாவது எல்லாம் விரைவில் சரி செய்து விட வேண்டும் என்ற முடிவோடு இருந்தான்.

இப்போது அதையெல்லாம் நினைத்து அமர்ந்திருந்தான். அவளின் வீட்டினரோடு பேச வைக்க முயல, என்ன முயன்றும் வர்ஷினி சமாதானம் ஆகவில்லை. பிடிவாதம் கண்டு பயந்து விட்டான்.. சமயம் பார்த்துக் கொண்டே இருந்தான் தான் முன்பு ஒரு பெண்ணிடம் காதல் சொன்ன விஷயத்தை சொல்லி விடுவது என..

பின்னே இந்த நரக வேதனை தனக்கு ஆகாது என்றே தோன்றியது.. இப்போது பிரச்சனையோடு பிரச்சனையாக சொல்லிவிடு என்று மனம் ஒரு புறம் சொல்லியது..

ஆம்! சொல்லிவிடவேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக ஆரம்பித்தது. வர்ஷினியை அவனால் இயல்பாக அணுக முடியவில்லை சமாதானம் செய்ய முடியவில்லை, தவறிழைத்த மனது அவனை குத்திக் கொண்டே இருந்தது.

எதுவாகினும் சொல்லி அதனை எதிர்கொண்டு விடலாம் என்ற எண்ணத்திற்கு வந்து விட்டான்.

வர்ஷினியின் நடத்தை அவனை கொன்றது.. எதோ பக்கத்துக்கு வீட்டுக்காரரிடம் பேசும் சிநேக பாவம் மட்டுமே! மனதில் ஐஸ்வர்யாவின் உறுத்தல்

இருப்பதால் அவனால் அதிகமாக முன்னேற முடியவில்லை.

அவளாக வாய் திறந்து சொன்ன பிறகு ஒரு பொய் நம்பிக்கையை கொடுக்க மனதில்லை.. நிச்சயம் பெரிய எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் எனத் தெரியும், ஆனாலும் இந்த உடலில் உயிர் உள்ள வரை வர்ஷினியை பிரிய விடமாட்டேன் என்ற உறுதி வெகுவாக இருந்தது.

ஆனால் அவனுக்குத் தெரியவில்லை, "நாம் பிரிந்து விடலாம்" என அவனே சொல்வான் என்று..

மாலை ஐந்து மணி ஆகிவிட.. அப்பாவையும் ஜகனையும் போய் பார்த்தவன்.. "ஓரளவுக்கு பணம் ரெடி பண்ணிட்டோம் நாம.. நாளைக்கு லீகலா குடுத்துடலாமா" என,

"குடுத்துடலாம்" என்று ஜகன் சொல்ல..

"குடுத்துடலாம், ஆனா நமக்கு ரொட்டேஷன்க்கு மணி குறைஞ்சிரும்.. பெரிய முடிவுகள் எதுவும் எடுக்க முடியாது" என நமஷிவாயம் சொல்ல,

"பார்த்துக்கலாம் பா, எதுன்னாலும் பார்த்துக்கலாம். நாம பணத்தை திரும்பக் கொடுக்கிற வரை பத்துகிட்ட ரஞ்சனி பேசக் கூட மாட்டாப்பா. என்னை மீறி அவ போயிருக்கலாம், அந்த வீட்லயும் அவ இருக்கலாம், ஆனா நான் சொன்னதுல தான் நிற்பா.. பணத்தை திரும்பக் கொடுக்குற வரை அங்க சகஜமா இருக்க மாட்டாப்பா" என,

அதன் பிறகு நமஷிவாயம் ஏன் பேசப் போகிறார்..

பேசியவுடன் வீட்டிற்கு கிளம்பினான்.. வர்ஷினி வந்திருக்க.. "ஒரு காஃபி கிடைக்குமா வர்ஷ்"

என்றபடி சோபாவில் அமர்ந்து காலை நீட்டிக் கொள்ள,

எதிரில் வந்து நின்றவள் “பால் இருக்கு, ஆனா காஃபி தூள் இல்லை வாங்கணும்” என..

“போய் வாங்கலாமா?” என்று உடனே எழுந்தான்..

“வாங்கலாம்ன்னா”

“நீயும் நானும் போகலாம்னு அர்த்தம்” என்றவன்.. உடனே மலருக்கு அழைத்து, “அம்மா டிஃபன் கொடுத்து விடாதீங்க.. நாங்க வெளில போறோம்” என,

“சரி” என்றவர், “லேட் பண்ணாம வீட்டுக்கு திரும்பிடணும்” என,

“எஸ் அம்மா! டன்!” என்றான் கைபேசியில் உற்சாகமாக.

“என்ன இன்னைக்கு என்னவோ கொஞ்சம் நல்லாப் பேசறீங்க?” என,

“எஸ், ஸ்பெஷல் தான்.. நம்ம பணத்தை நாளைக்கு திருப்பி கொடுக்கப் போறோம்” என,

“எப்படி? எப்படி முடியும்? அவ்வளவு பணம்” என்றாள் ஆச்சர்யமாக.

“புதுசா டெபாசிட் ஸ்கீம்ஸ் அறிவிச்சோம், இந்த தேதிக்குள்ள டெபாசிட் பண்ணினா கொஞ்சம் வட்டி அதிகமா சொல்லி.. ஏற்கனவே நாம இந்த மாதிரி சொல்லி அதை கரக்டா குடுத்தும் இருக்குறதால நல்ல ரெஸ்பான்ஸ், பாதி பணம் அதுல வந்துடுச்சு”

“திடீர்னு அவங்க பணத்தை திரும்பக் கேட்டா?”

“வட்டின்னு எதுவும் கிடையாது, அதே சமயம் அசல்ல பத்து பெர்சன்ட் எடுத்துட்டு தான் கொடுப்போம்.. இதை டெர்ம்ஸ் அண்ட் கண்டிஷன்ஸ்ன்னு சின்னதா ஸ்டார் போட்டு எங்கயோ ஒரு மூலையில நாம சொல்லலை. தெளிவா பெருசா எல்லோருக்கும் புரியற மாதிரி தெரியற மாதிரி சொல்லியிருக்கோம்”

“இது தப்பில்லையா?”

“இல்லை, தப்பில்லை. அத்தனை பேருக்கு அதிகமா வட்டி கொடுக்கும் போது நாம ரிஸ்க் எடுக்கறோம்.. இன்சூரன்ஸ் ஸ்கீம்ஸ்ன்ற பேர்ல நம்ம நாட்டுல நடக்குறது மிகப் பெரிய கொள்ளையை விட இது கம்மி தான்”

“கவர்மென்ட்து இல்லை, ப்ரைவேட் ஆளுங்களது. அவங்க சொல்ற ஸ்கீம்ஸ் எல்லாம் அவ்வளவு கேட்சியா இருக்கும். ஆனா எல்லாம் இருபது வருஷம் முப்பது வருஷம்பாங்க.. ஆறு வருஷம் தொடர்ந்து நீ பணத்தை கட்டியிருந்தா கூட, ஒரு பாயின்ட்ல உன்னால கட்ட முடியாம போனதுன்னா கட்டினதுல மூணுல ஒரு பாகம் கூட திரும்ப வராது.. இதுல மூணு வருஷம் முன்ன நிறுத்தினா அத்தனை பணமும் போச்சு”

“அதெல்லாம் பெரிய பெரிய கொள்ளை. யாரும் எதுவும் செய்ய முடியாது. நம்ம அந்த மாதிரி எதுவும் பண்ணலை... வெறும் பத்து பெர்சன்ட் தான் எடுக்கறோம்.. அதுவுமில்லாம பாதி வருஷம் வந்தவுடனே போனஸ்ன்னு ஒரு அமௌன்ட் கொடுக்கறோம்!”

“நான் இதுல இருக்குற வரை, நம்ம ஃபைனான்ஸ்ல இன்வெஸ்ட் பண்ணினவங்க யாரும் ஏமாத்திட்டாங்கன்னு சொல்லவே

மாட்டாங்க! எவ்ரி திங் இஸ் பக்கா!" என்றான் உறுதியாக.

"அதுவுமில்லாம புதுசா தங்கம் அடமானம் வெக்கறது கூட கொண்டு வந்திருகோம்.. ஆனா எல்லாம் ரொம்ப கேர் ஃபுல்லா பண்ணனும் ரிஸ்க் அதிகம்" என,

"ரிஸ்க்னா ஏன் செய்யணும், வேற ட்ரை பண்ணலாமே" என்றாள் உண்மையான அக்கறையோடு..

"ரிஸ்க் இல்லாதது இந்த ஃபைனான்ஸ்ல எதுவுமே இல்லை. என்ன நகைன்றப்போ இன்னும் கவனமா இருக்கணும்!"

"உனக்கு தெரியுமா? சில நாடுகள்ல அதன் மக்கள் கிட்ட இருக்குற தங்கத்தை விட பல மடங்கு தங்கம், நம்ம இந்தியால ஒரு ஃபைனான்ஸ் கம்பனி கிட்ட இருக்கு.. இது ரொம்ப பெருசு.. இந்த கோல்ட் லோன்"

ஈஸ்வர் பேசப் பேச அவனின் முகத்தையே ஆராய்ந்திருந்தாள் வர்ஷினி.. வர்ஷினியிடம் அவன் கவனம் சிறிதும் இல்லை.. அவ்வளவு ஆர்வமாக விஷயத்தை விளக்கிக் கொண்டிருந்தான்.

"பாதி பேர் தான் திருப்புவாங்க, மீதி பேர் அப்படியே விட்டுடுவாங்க.. நாம பேங்க்ல குடுக்கறதை விட அதிக பணம் குடுக்கறோம்!"

"அண்ட் ஸ்ட்ரிக்டா பேப்பர்ஸ் எதுவும் கேட்கறது இல்லை, சோ! திருட்டு நகையை வந்த லாபம்ன்னு வைக்கறவங்க அதிகமா இருப்பாங்க!"

"அது தப்பில்லையா?"

“தப்பு தான்! ஆனா வர்றவன் தப்பானவனா கண்டுபிடிக்க முடியாது!”

“இதில்லாம முன்ன வெஹிகிள் லோன் ஸ்கீம்ஸ் அட் ஜீரோ பெர்சன்ட் இண்டரெஸ்ட் குடுத்தோம், இப்போ வீட்டு உபயோகப் பொருட்களுக்கும், ஈவன் ஃபர்நிச்சர்ஸ் கூட”

“இந்த ஆறு மாசமா நிறைய கொஞ்ச கொஞ்சமா லாஞ்ச் பண்ணியிருக்கேன், பார்ப்போம்! பட், ரொம்ப கவனமா இருக்கணும், இல்லை நம்மளை முழுங்கிரும்” என,

பேசப் பேச அவன் பேசிய விதம், அவன் ஆர்வம் பார்த்து வியந்து நின்றாள்.

அவளையும் மீறி “என்னைவிட உங்களுக்கு இது மேல தான் இன்ட்ரஸ்ட் போல” என்று விட,

வெகு சில மாதங்களுக்குப் பிறகு சட்டென்று அவளை இடையோடு இறுக்கமாக அணைத்துப் பிடித்தவன், அந்த நீல நிறக் கண்களைப் பார்த்து..

“உன் மேல இருக்குற இன்ட்ரஸ்ட் விட எதுவுமே எனக்கு முக்கியம் கிடையாது வர்ஷ், இதை நீ நம்பணும். அது என்னைக்கும் குறையவே குறையாது” என,

ஈஸ்வர் இப்படிப் பிடிப்பான் என்று வர்ஷினியும் எதிர்பார்க்கவில்லை. மிகவும் இறுக்கமான அணைப்பு. கண்களின் ஆழத்தில் புதைந்து கொண்டு இருந்தவன், உதடுகளுக்கு வேலை கொடுக்கவில்லை. அதில் கவனமில்லை.

நொடியில் ஈஸ்வர் தன்னை ஆளுகைக்குள் எடுத்துக் கொள்வான் எனத் தெரியும். ஈஸ்வரைப் பற்றி எது தெரியுமோ தெரியாதோ. இதை நன்றாக அறிந்தவள் ஆகிற்றே.

மீண்டும் எதற்குள்ளும் இப்போதைக்கு சிக்கிக் கொள்ளும் எண்ணமில்லை. ஈஸ்வர் தன் உறுதியை சோதிக்க தள்ளி இருக்க.. வர்ஷினி சிறிது காலம் ஏங்கித் தவித்தவள்.. தன் உடலின் ஏக்கத்தை மனதின் உறுதியில் வென்றிருந்தாள்.

ஆம்! அன்றைக்கு பிறகு அவள் மாத்திரையும் எடுத்திருக்கவில்லை.

அவனின் கைகளை நாசுக்காக விலக்கி விட்டவள், “நம்பிட்டேன்” என்றபடி கிளம்ப..

திரும்ப இழுத்துப் பிடிக்க முனையவில்லை. பணத்தை கொடுத்ததும் ஐஸ்வர்யாவின் விஷயத்தை பேசி விடுவது என்று முடிவெடுத்துக் கொண்டான். ஆனால் ஐஸ்வர்யா என்ற பெயரை உபயோகப்படுத்த அவன் தயாராய் இல்லை.. தன்னுடைய காரணங்களுக்காக அவளை இழுத்து விடுவது எந்த வகையிலும் நியாயமில்லாதது போலவே தோன்றியது.

அவரவர் யோசனைகளோடே அவர்கள் ஒரு பல் பொருள் அங்காடி சென்று பொருட்களை எடுத்து வெளியில் வர.. அவர்கள் வந்த நேரம் ஐஸ்வர்யாவும் அவளின் அம்மாவும் படிகளில் ஏற.. அவர்களுக்குப் பின் அஸ்வின் ஏறிக்கொண்டிருந்தான். ஈஸ்வர் அவர்கள் ஏறும் போதே பார்த்து விட்டான், ஐஸ்வர்யா அவனை பார்க்கவில்லை.

வர்ஷினி அஸ்வினை கவனிக்கவில்லை, ஆனால் ஐஸ்வர்யாவைப் பார்த்தவள், “அவங்க ரொம்ப அழகா இருக்காங்க இல்லை” என்று சகஜமாக ஈஸ்வரிடம் காட்டியவள், “நான் அவங்களை எங்கயோ பார்த்திருக்கேன்” என்றாள் கூடவே.

வர்ஷினி சொன்னதும் ஐஸ்வர்யாவை கூர்ந்து கவனித்தான். ஆம்! இன்னும் மிக அழகாகி விட்டாள் என தான் தோன்றியது.

ஆனாலும் வர்ஷினியிடம் உடனே “உன்னை விட எனக்கு யாரும் அழகு கிடையாது” என..

“தோடா” என்று வர்ஷினியின் பேச்சு கிண்டலாக வந்த போதும், ஒரு க்ஷணமேனும் அந்தக் கண்கள் மயக்கத்தை காட்டியது.

யார்க்கும் குடியல்லேன் யானென்ப தோர்ந்தனன் மாயையே!-உன்தன்
போர்க்கஞ்சு வேனோ பொடியாக்குவேன்உன்னை-மாயையே!

**அத்தியாயம் அறுபத்தி நான்கு :**

## ஞாபக வேதனை தீருமோ!

வர்ஷினியிடம் உன்னை விட எனக்கு யாரும் அழகில்லை என்று பேசிக் கொண்டே இறங்க.. வர்ஷினியின் முகம் க்ஷண மயக்கத்தைக் காட்டி பின்பு மறைத்தாலும் வெகு நாட்களுக்கு பிறகு முகம் ஒரு இளக்கத்தை காட்டியது.

புகழ்ச்சிக்கு மயங்காத பெண்கள் உண்டோ! என்ன தான் புத்திசாலிகளாய் இருந்தாலும் சில சமயம் தடுமாற்றங்கள் சகஜம்!

இருவர் முகத்தையும் அப்போது பார்க்க அன்யோன்ய தம்பதிகளாய் தோன்ற.. அப்போது தான் அவர்களை பார்த்த ஐஸ்வர்யாவின் மனம் எரியத் துவங்கியது.

ஐஸ்வர்யா பார்க்கவுமே ஈஸ்வரும் அவளைப் பார்த்து விட்டான். ஈஸ்வர் தன் கண்களில், பாவனைகளில், ஒரு குற்ற உணர்ச்சியைக் காட்டியிருந்தாளோ இல்லை மன்னிப்பை யாசித்து

இருந்தாளோ ஐஸ்வர்யாவிற்கு பெரிதாக எதுவும் தெரிந்திருக்காது. ஒரு தயக்கம் கூட தெரியவில்லை. அவன் தெரிந்தவர் போல ஸ்வாதீனமாய் ஒரு பார்வை பார்க்கவும், ஐஸ்வர்யாவின் மனம் கொந்தளிக்கத் துவங்கியது.

ஈஸ்வர் தான் க்ஷண நேரம் என்றாலும் வர்ஷினியின் கண்கள் காட்டிய ஜாலத்தில் இருந்தானே!

அதன் தாக்கத்தில் ஈஸ்வர் ஒரு சிறு புன்னகையோடு ஐஸ்வர்யாவைப் பார்க்க.. அவளால் தாளவே முடியவில்லை!

ஒரு முறைப்போடே ஈஸ்வரை பார்க்க.. அதன் பிறகு புன்னகையை விட்டவன், வர்ஷினி கேட்டதற்கு பதிலாக.. "அது ரூபா அண்ணியோட தங்கை, ரஞ்சனிக்கு ஃபிரண்ட், அதுதான் பின்னாடி வர்றானே ஒருத்தன், அவன் தங்கை" என அஸ்வினைக் காட்டினான்.

"ஓஹ் அஸ்வின்" என்று அப்போது தான் அவனைக் கவனித்தவள், அவர்கள் அருகில் வரும் போது "ஹாய் அஸ்வின்" என்றாள் தயக்கமின்றி..

அதனைக் கொண்டு அங்கே எல்லோரும் தேங்க.. வீட்டின் ஆளாக "எப்படி இருக்க விஸ்வா?" என்றார் ரூபாவின் அம்மா.

"நல்லா இருக்கோம் அத்தை" என்றவன்.. "இது வர்ஷினி, என் மனைவி" என,

அவரும் புன்னகைக்க.. ஐஸ்வர்யா கடினமான முகத்தோடு இருக்க.. வர்ஷினி "நீங்க சிரிச்சா இன்னும் அழகா இருப்பீங்க, ரஞ்சனி அண்ணி

மாதிரி நீங்களும் ரொம்ப அழகு" என்றாள் தன் இயல்பாய்.

வர்ஷினியைப் பொறுத்தவரை ஐஸ்வர்யா அஸ்வினின் தங்கை, ரூபாவின் தங்கை..

"இவ வேற நிலைமை புரியாம" என்று வர்ஷினியைப் பற்றி ஈஸ்வர் நினைத்தாலும்.. முகத்தில் எதையும் காட்டாமல் அமைதியாய் நின்றான்.

"உன்னோட டிப்ஸ்க்கு ரொம்ப தேங்க்ஸ்" என்று வர்ஷினியிடம் கத்த வேண்டும் போல ஐஸ்வர்யாவிற்கு தோன்றினாலும், அப்படி வர்ஷினியின் முகத்தைப் பார்த்து அலட்சியமாய் அவளால் சொல்ல முடியவில்லை என்பது தான் உண்மை..

அதற்குள் "ரூபா, குழந்தைங்க எல்லோரும் எப்படி இருக்காங்க?" என்று அவர்களின் அம்மா கேட்க,

"நல்லா இருக்காங்க" என்றும் பதில் சொன்னது வர்ஷினி தான்.. "இதோ சரண் பெயிண்டிங்ல ஃபர்ஸ்ட் வந்திருக்கான்.. அது.." என்று தன் மொபைலை திறந்து வாட்ஸ் அப்பில் இருந்த புகைப் படத்தைக் காட்டினாள்.

"இந்த திமிர் பிடிச்சவனுக்கு, இந்த ஏமாத்துக்காரனுக்கு, இப்படி ஒரு மனைவி" என அஸ்வின் பார்த்திருக்க.. ஐஸ்வர்யாவிற்கு அங்கே நிற்கவே முடியவில்லை..

ஈஸ்வரைப் பார்க்க பார்க்க, கோபம், வெறுப்பு, கூடவே இவனை இழந்து விட்டோம் என்ற ஆற்றாமையும் கூட. ஆம்! என்ன முயன்றும் அந்த எண்ணத்தை அவளால் ஒதுக்கவே முடியவில்லை"

முதலில் பார்த்த புன்னகையுடன் சரி, அதன் பிறகு ஈஸ்வர் ஐஸ்வர்யாவின் புறம் பார்வையைத் திருப்பவேயில்லை.. மிகவும் கவனமாக இருந்தான்.

ஆனால் பார்த்த அந்த நேரத்திலேயே இன்னும் ஐஸ்வர்யா இயல்புக்கு திரும்பவில்லை என புரிய.. அதுவும் அவன் மனதில் பாரமாய் அமர்ந்து கொண்டது.

“போகலாம் வர்ஷி” என்று விட்டான் தான், ஆனாலும் தன் பேரப் பிள்ளைகளை ஆர்வமாய் பார்க்கும் ரூபாவின் அம்மாவை பார்த்தவன், “ரூபாவை அனுப்பி விட சொல்றேன் அத்தை” என்றவன், “வா வர்ஷி” என அவளை கிளப்பினான்.

ஐஸ்வர்யாவை விட அஸ்வின் தன்னை முறைப்பதை பார்த்தவன்.. அவர்கள் மேலேறவும் இவர்கள் கீழிறங்கவும்..

அவர்கள் சில படிகள் ஏறிய பிறகு “அஸ்வின்” என அழைத்தான்.

அவன் நிற்கவும் “வா” என்பது போல ஒற்றை விரலை அசைக்க.. எவ்வளவு அலட்சியமாய் என்னை பார்த்து விரல் அசைக்கிறான் என்று தோன்றிய போதும், அதில் என்னவோ ஒரு ஆளுமை தானாக அஸ்வின் இறங்க.. அவன் இறங்குவதைப் பார்த்து இவன் ஓரிரு படிகள் மேலே ஏறியவன்..

“இப்படி என்னை முறைச்சு பார்க்கறதை விட்டு, உருப்படியா பல வேலைகள் செய்யலாம் நீ” என,

அஸ்வின் பதில் பேசாமல் “என்ன வேலை?” என்பது போல பார்க்க, “ஒழுங்கா உன் குடும்பத்தைப் பார்க்கலாம்.. இனியும் எவன் பணத்துக்கும் நீ ப்ளான் பண்ணாம ஒரு வேலை

தேடலாம்.. உன் தங்கைக்கு மாப்பிள்ளை கூடப் பார்க்கலாம்” என,

“என் குடும்பம், என் வேலை, என் தங்கை, எனக்குப் பார்த்துக்க தெரியும்! நீ உன் வேலையைப் பார்!” என சொல்ல விழைந்தாலும், சொல்ல முடியவில்லை. ஈஸ்வரின் தீட்சண்யமான பார்வை அவனை சொல்ல விடாமல் தான் தடுத்தது.. ஒரு பயம் இருக்கத் தான் செய்யும் எப்போதுமே!

அது ஏன் ஏன் என்று அஸ்வினுக்குள் இருக்கும் கேள்வியே இன்னும் ஈஸ்வருக்கு எதிராக சிந்தனைகளைத் தூண்டும்.

அதற்குள் வர்ஷினி அருகில் வருவதைப் பார்த்ததும் ஈஸ்வர் கீழிறங்க.. அஸ்வின் இன்னும் ஒரு முறைப்போடு பார்க்க,

“என்ன பேசினீங்க?” என்றாள் வர்ஷினி.. “ம்ம், என்னை முறைச்சு பார்க்கறதை விட்டு உருப்படியா எதாவது வேலை பார்க்கச் சொன்னேன்” என்றான்.

“வர்ஷினி என்ன இது?” என்று புருவத்தைச் சுளிக்க.. “பண்ணினதெல்லாம் இவன், ஆனா என்னை முறைக்கறான்” என்றான் ஈஸ்வர் அஸ்வினை காட்டி.

அன்று ஒரு நாள் அஸ்வின் சொல்லியதை கடகடவென்று திரும்ப வர்ஷினி சொல்ல,

“அவன் செஞ்சானா இல்லையா வேற வர்ஷி, ஜகன் அண்ணா செஞ்சதை சொல்லலை, இவனும் கூட இருந்தான். அது ரொம்ப தப்பு” என்று ஈஸ்வரும் அவன் சொன்னதையே சொல்ல..

இங்கே ஐஸ்வர்யா அஸ்வினிடம், “என்ன சொன்னான் அவன்” என,

“ம்ம், உனக்கு கல்யாணம் பண்ணி வெக்கறதாம்” என,

ஐஸ்வர்யாவின் வெண்மையான முகம் அப்படியே கோபத்தில் சிவந்து விட்டது..

“விடு ஐஷ், அவன் தப்பை மறைக்க நம்மளை சொல்லிப் போறான்” என,

ஆனாலும் ஐஸ்வர்யா உடனே ஈஸ்வருக்கு கைபேசியில் அழைத்தாள்.. “என்ன பண்ற? விடு ஐஸ்வர்யா!” என அஸ்வின் தடுத்த போதும்.. “நீ பேசாம இரு” என்றவள், அஸ்வினை விட்டு தள்ளி வந்து,

ஈஸ்வர் எடுத்ததும் “எனக்கு கல்யாணம் பண்ணிவெக்க சொல்ல நீங்க யாரு? முதல்ல நீங்க உங்க வேலையை மட்டும் பாருங்க! இன்னும் பெரிய ஆள் மாதிரி அடுத்தவங்களுக்கு அட்வைஸ் பண்ணிட்டு திரியாதீங்க.. இந்தப் பொண்ணையாவது விட்டுடாம ஒழுங்கா குடும்பம் நடத்துங்க” என..

ஏற்கனவே பல பல உளைச்சல்கள்... வர்ஷினியை நெருங்காமல் விட்ட குற்ற உணர்ச்சி.. என்று பலதிலும் இருந்தவன்.. ஐஸ்வர்யாவிடம் பதிலுக்குப் பாய்ந்தான்.

வர்ஷினியிடம் இருந்து சற்று தள்ளி வந்தவன்.. “ஏய் என்ன? நான் என்ன உன்கூட குடும்பமா நடத்தினேன், இந்த பொண்ணையாவது விட்டுடாம நீ குடும்பம் நடத்துன்னு சொல்றதுக்கு” என பதிலுக்கு பொரிந்தான்..

“என்ன பண்ணினே நான் உன்னை? என்ன பண்ணினேன்? தொட்டுக் கூட பேசினதில்லை”

“அப்போ காதல் சொல்லி விட்டுடலாமா?” என ஐஸ்வர்யா பதில் கேள்வி கேட்க,

“விட்டுடேன், என்ன பண்ணலாம் அதுக்கு இப்போ? எத்தனை முறை விளக்கம் குடுத்துட்டேன். நான் செஞ்சது தப்பு தான்! ஒத்துக்கறேன்! இன்னும் என்ன செய்ய?”

“நான் உன்கிட்ட சொன்னது காதலே இல்லை! போதுமா!” என ஆவேசமாகப் பேச,

ஐஸ்வர்யா அப்படியே வாயடைத்து போனாள், தெரிந்தும் பேசியது தன் தவறு என புரிந்து.. “செஞ்சதுக்கு ஒரு வருத்தமும் இல்லாம என்னைத் திட்டுறியா? நீயெல்லாம் நல்லாவே இருக்க மாட்ட” என,

“இன்னும் எத்தனை தடவை நான் நல்லா இருக்க மாட்டேன்னு சொல்வ, நான் நல்லா இருக்கேன் இருக்காம போறேன், அதை நான் பார்த்துக்கறேன்.. முதல்ல நீ உன் வாழ்க்கையை பார் எப்போ இருந்து இப்படி பிசாசு மாதிரி பேசக் கத்து கிட்ட.. பரவாயில்லை நான் தப்பிச்சிட்டேன்” என்றான்.

“நான் பிசாசு மாதிரி பேசறேனா? அந்தப் பொண்ணு கிட்ட நீ என்ன பாடு பட போறப் பார்” என்று ஐஸ்வர்யாவின் மனது சாபம் தான் இட்டது.

“உன்னைப் பொறுத்தவரை நான் செத்துப் போயிட்டேன்னு நினைச்சிக்கோ!” என்று சொல்லி வைத்து விட,

ஐஸ்வர்யாவிற்கு அழுகை தான் முட்டியது.. கூடவே இப்படி பேசுகிறான் என்று மனதும்

பதறியது. வைத்த ஈஸ்வர் சிறிது குறைவாக பேசி இருக்கலாமோ என தோன்ற அப்படியே நின்றிருந்தான். பின்னே இந்தப் பெண் நிதர்சனத்தைப் புரிந்து கொள்ள மறுக்கிறாளே என்று கோபம் வந்தது.

ஐஸ்வர்யாவிற்கு கண்ணீர் பெருக, “நான் ஒரு ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குப் போறேன், நீ அம்மாவோட வா!” என்றபடி நிற்காமல் சென்றுவிட்டாள்.

ஆம்! இன்னுமே ஈஸ்வரின் இழப்பை ஜீரணிக்க முடியவில்லை.. அந்த இழப்பு தான் இப்படி ஐஸ்வர்யாவை தப்பு தப்பாக பேச வைத்தது.. சாபமிட்டது.

அஸ்வினிற்கு தெரியும், ஆனால் தெரியாது நிலை தான்! அவள் டெல்லியில் இருக்கும் போது ஐஸ்வர்யாவின் அறையில் ஈஸ்வரின் புகைப் படத்தை பார்த்து “என்ன இது?” என்று கேட்க..

“கொஞ்சம் நாள் என் பின்னாடி சுத்தினான், நான் சரின்னு சொல்றதுக்குள்ள வேற பொண்ணு பின்னாடி போயிட்டான்” என்று தான் சொல்லியிருந்தாள்.. பின்னே என்ன சொல்வாள்.. “என்னை காதலித்து வேண்டாம் என்று விட்டான் என்றா?” அதனை விட என்ன அவமானம் இருக்கின்றது.

அப்படி தான் அஸ்வினும் நினைத்து இருந்தான்.. காதலித்து விட்டு விட்டான் என்றால், இன்னுமே அவன் கோபம் அதிகமாகி இருக்கும்.

அது தெரியாத போதே ஈஸ்வரை முறைக்க.. அவனுக்கு எதுவும் தெரியும் என்று ஈஸ்வர்

அனுமானிக்காததால் தான் தைரியமாக திருமணத்தை பற்றி பேசினான்.

சில முறை ரூபாவிடமும் பேசியிருந்தான் தான்.. “முதலில் இந்தப் பணத்தை கொடுத்து தீர்த்து பின் இவளுக்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டும். அவளின் மனதை திசை திருப்ப வேண்டும். இல்லையென்றால் தேவையில்லாதது எல்லாம் நினைத்துக் கொள்வாள்”

எப்பொழுதும் போல மனது அவசரமாக கடவுளிடம் பிரார்த்தனை வைத்தது.. “என்னை மறக்கச் செய்யும் அளவிற்கு இவளுக்கு மணாளன் அமைய வேண்டும், நல்ல காதல் வாழ்க்கை அமைய வேண்டும்” என,

யோசித்துக் கொண்டே வீடு வந்து விட..

காரில் ஏறியதில் இருந்து ஈஸ்வர் எதுவும் பேசாமல் இருக்க, வர்ஷினியும் பேசவில்லை... இறங்க முற்பட்டவனிடம்.. “எனக்குப் பசிக்குது” என்றாள். அப்போதுதான் ஹோட்டல் போகலாம் என்று சொன்னதே ஞாபகம் வர...

“சாரி, மறந்துட்டேன்!” என்றவன்.. திரும்ப ஹோட்டலை நோக்கி விட்டுக் கொண்டே.. “முதல்லயே சொல்லி இருக்கலாம் தானே” என,

“நீங்க சீரியஸா யோசிச்சிட்டு இருக்கீங்க, நான் என்ன சொல்ல?” என்றவள், “அஸ்வின் கிட்ட என்ன பேசினீங்க?” என்றாள் திரும்ப,

“நிஜம்மா, உருப்படியா ஏதாவது வேலை பார்க்கச் சொன்னேன்” என்றான் கவனமாக ஐஸ்வர்யாவை தவிர்த்து.. அவளின் பெயரை எடுக்கவே பயமாக இருந்தது.

“நாம ஏதாவது ஹெல்ப் பண்ணலாமா? பிசினெஸ் செய்ய!” என,

“நாமளா? நாம் ஏன் செய்யணும்?” என்று கூர்மையாகக் கேட்க.

“அப்பானால தானே ஜெயில் போனாங்க அதனால.. லைஃப்ல அதை யோசிக்க யோசிக்க வீணா பழிப்பாங்க, இல்லை சபிப்பாங்க. அதை சரி பண்ண!”

“செஞ்சா மட்டும் பழிக்க மாட்டான்னு என்ன நிச்சயம்?”

“நம்ம சைட்ல இருந்து செஞ்ச தப்பை சரி பண்ணறோம். அதுக்கு அப்புறமும் பண்ணினா பண்ணிட்டு போறான்!” என,

“ஏற்கனவே நிறைய பணம் லாஸ் அவனால, பணம் மட்டுமில்லை நிறைய பிரச்சனை பண்ணினான் வர்ஷ்.. பணம் நமக்குள்ள மட்டும் பிரச்சனையா இருந்த போது, மீடியால நம்ம பணம் ஏமாத்தறோம் சொன்னான். பணம் திரும்பக் குடுக்க மாட்டாங்க சொன்னான்”

“அப்புறம் நம்ம ஃபோட்டோஸ் போட்டான். இப்படி நிறைய வர்ஷ்! பணம் தொலைச்ச நாளா என் தூக்கம் போச்சு! என் நிம்மதி போச்சு! என் வாழ்க்கையே மாறிடுச்சு! எல்லோர் முன்னாடியும் கீழப் போயிட்டேன். என் ஃபைனான்ஸ் எனக்கு இல்லைன்னு ஆகிடுச்சு. யாரோ தொலைச்ச பணத்துக்கு நான் உழைக்கறேன். இதுல எனக்கு எந்த லாபமும் இல்லை. இது எல்லாமே பிரயோஜனமில்லாத உழைப்பு! இப்படி நிறைய!”

“என்னால அவனுக்கு எந்த ஹெல்பும் பண்ண முடியாது! எப்பவுமே!” என்று பொறுமையாகவே

விளக்கம் கொடுத்தான்..

“நீங்க ஏன் அவர் அப்பாவைக் கடத்துனீங்க. அதுல இருந்து தான் நிறைய பண்ணினேன் சொல்றார்! அது தப்பு தானே!” என,

“கடத்தினதால தான் இவன் வந்தான். அதுவரைக்கும் ஆள் கண்ணுலயே படலை. அடுத்தவங்க பணத்துல வேர்ல்ட் டூர் போறான். அவங்கப்பன் எப்படி பேசினான்? எனக்கு அந்த சமயத்துல வேற ஆப்ஷன் இல்லை!” என,

“இருந்தாலும் சம்திங் டெல்ஸ் மீ, அவரை கன்சிடர் பண்ணலாம், ஹெல்ப் பண்ணலாம்னு.. நாம அவரோட எதிர்காலத்தை ஸ்பாயில் பண்ணிட்டோம். அது எனக்கு கில்டியா இருக்கு” என,

“பார்க்கலாம் வர்ஷ், முதல்ல நாம நம்ம பிரச்சனைகள்ள இருந்து வெளில வருவோம், பின்ன யோசிக்கலாம்” என்றான்.

பல நாட்களுக்குப் பிறகு இயல்பாய் வர்ஷினி பேச, அதற்காக மேலே மேலே மறுத்துப் பேசாமல் சமாதானமாகப் பேசினான்.

மன்னிக்கும் மனப்பான்மை அறவே இல்லாத போதும், வர்ஷினிக்காக எதிரியை கூட மன்னிக்கத் தயாராய் இருந்தான். ஆம்! அவனை அறியாமல் சுயநலமாய், தான், தன்னை, என அவன் பிரச்சனைகளில் இருந்தாலும், இன்னுமே காதல் பித்தன் தான்! அதீதமாய்!

ஹோட்டலிற்கு சென்று வர்ஷினி உணவை சாப்பிட, ஈஸ்வர் அவளை சாப்பிட்டான்.. பார்வையால் மட்டுமே!

அவனை உணர்ந்தவளாய் “என்ன முன்னால இருக்குறது எல்லாம் அப்படியே இருக்கு” என்று கிண்டல் பேச,

“நீ கூட தான் என் முன்னால இருக்கே” என,

“சாப்பிட்டா சாப்பிடுங்க, இல்லை விடுங்க, எனக்கென்ன?” என்று சொல்லி வர்ஷினி உண்பதில் கவனமாய் இருக்க,

“நீ எதை சொல்ற?” என்று விஷமமாய் ஈஸ்வர் கேட்க,

“என்னை சொல்லலை! சாப்பாடை மட்டும் தான் சொன்னேன்!” என்று பளிச்சென்று வர்ஷினி சொல்ல..

வர்ஷினி சொன்ன விதத்தில் ஈஸ்வருக்கு சிரிப்பு பொங்க, பல நாட்களுக்குப் பிறகு ஈஸ்வர் வாய் விட்டு சிரித்தான்.

அவனை பிடிக்கவில்லை என்று சொன்ன போதும், அந்த சிரிப்பை ரசித்து தான் பார்த்து இருந்தாள், வர்ஷினி!

**எனக்கு மட்டும் சொந்தம் உனது இதழ் கொடுக்கும் முத்தம்!**

**அத்தியாயம் அறுபத்தி ஐந்து :**

**நீ பௌர்ணமி என்றும் என் நெஞ்சிலே!**

அப்போதைக்கு தன்னுடைய மிகப் பெரிய கடமையாய் நினைத்த பணம் திருப்பிக் கொடுத்தல் மறுநாள் நிறைவேறப் போவதால் சற்று உற்சாகத்துடன் இருந்த ஈஸ்வர்... இரவு உணவை முடித்து வந்த பிறகும் வர்ஷினியின் பின்னே சுற்றிக் கொண்டு இருந்தான்.

அவன் எப்பொழுதும் போல இருந்திருந்தாலாவது வர்ஷினிக்கு ஒன்றும்

தெரிவித்து இருக்காது. இப்போது இழையவும் அது ஒரு கோபத்தை எரிச்சலை கொடுத்தது. “உங்க லேப் அங்க இருக்கு மறந்துட்டீங்களா” என வர்ஷினி கேட்க..

“இல்லையே, மறக்கலையே” என்று புன்னகை முகத்தோடே தான் ஈஸ்வர் பதில் கொடுத்தான்.

“அப்போ வேலை இருந்தா என்னை மறந்துடுவீங்க, அது முடிஞ்சா தான் என் ஞாபகம் வருமா?” என்று முறுக்கிக் கொண்டு செல்ல.. முதலில் அவளின் பேச்சை விளையாட்டாய் எடுத்தவன், பின் முகத்தில் இருந்த தீவிர தன்மையை பார்த்து விளக்கம் சொல்ல ஆரம்பித்தான்.

“ஹேய் வர்ஷ், நம்ம என்ன மாதிரி ஒரு சிச்சுவேஷன்ல இருந்தோம், பணத்தை திரும்பக் கொடுக்கணும் இல்லையா அந்த டென்ஷன்.. அதை விட்டுடு” என மிகவும் தன்மையாகக் கேட்க..

“அதெல்லாம் விட முடியாது” என்று சொல்லிச் செல்ல.. “அதெல்லாம் விட்டுத் தான் ஆகணும்” என்று ஈஸ்வர் சொல்ல,

“முடியாது” என்று நகர இருந்தவளை.. நகர விடாமல் கை பற்றியவன்.. பின்பு இடையையும் பற்றி நிறுத்த..

“விடுங்க” என, “விடமுடியாது” என.. இப்படியாக சில நேரம் பேசும் போதே ஈஸ்வரின் கைகள் அத்து மீற, ஈஸ்வர் இன்னும் வர்ஷினியின் தீவிர தன்மையை புரிந்து கொள்ளவில்லை.

“உங்களுக்கு தேவைன்னா வருவீங்க, இல்லைன்னா திரும்பிக் கூட பார்க்க மாட்டீங்க” என வெறுப்பான குரலில் பேச, அதுவரை

விளையாட்டு போல இருந்த சூழல் இறுக்கமாக மாறியது.

“என்ன திரும்பிப் பார்க்கலை? நம்ம ஒரே வீட்ல தான் இருக்கோம் வர்ஷ்” என,

“எனக்கு அப்படி தான் தோணுது, இப்போ என்னை விடறீங்களா” என்றவளின் குரலில் இறுக்கம்..

“வர்ஷ் பேபி, என்ன இது?” என சமாதானம் பேச ஈஸ்வர் முயற்சிக்க,

“எனக்கு உங்களை தள்ளிட்டு போற அளவுக்கு ஸ்ட்ரெந்த் கிடையாது, நீங்களே என்னை விடுங்க” என ஸ்திரமாகப் பேச,

“வர்ஷ், கணவன் மனைவினா கொஞ்சிக்கிட்டே இருக்க மாட்டாங்க, சண்டை வரும், அதுக்காக சமாதானம் ஆகாம இருப்பாங்களா?” என,

“நம்ம எப்போ சண்டை போட்டோம்? சண்டை போடலையே?” என்றாள்.

“அப்போ ஏன் என்னைப் பக்கத்துல விட மாட்டேங்கற” என்றான் நேரடியாக.

“பிடிக்கலை” என்றாள் ஒற்றை வார்த்தையில்.

“அதுதான் ஏன்? ஏன் பிடிக்காமப் போச்சு?” என்று ஈஸ்வரும் விடாது கேட்டான்.

“நான்.. எனக்கு.. ஐ ஃபீல் லைக்..” என்று தீவிரமாக ஏதோ பேச ஆரம்பித்தவள், “விடுங்க” என்று திடீரென்று கத்த..

அவள் கத்தியதிலேயே விட்டவன், “என்ன?” என்றான் பதட்டமாக..

கத்தியதற்கு நேர் மாறாக சுதாரித்து இருந்தவள், “எனக்கு தூக்கம் வருது, தூங்கணும்”

என்றாள் அவன் முகம் பார்த்து, அவன் கண்கள் பார்த்து.. அவளின் பார்வையின் தீவிரம் அச்சுறுத்த, "என்ன பேபி, என்ன? சொன்னாதானேடா தெரியும்!" என்றான் கனிவாக.

எதுவும் பேசாமல் ஒரு பார்வை பார்த்தவாரே சென்று படுத்துக் கொண்டாள்.. ஈஸ்வரை குற்றம் சாட்டும் பார்வை. இன்னதென்று சொல்ல முடியாத ஒரு பயம் ஈஸ்வரின் மனதில், ஏன் என்று தெரியவில்லை..

அருகில் சென்று படுத்துக் கொண்டவன், அவளை அணைத்துப் படுத்தான். கைகளை விலக்க வர்ஷினி முயன்றாலும் முடியவில்லை "எடுங்க" என,

"அதெல்லாம் எடுக்க முடியாது, அப்படியே படு" என்றான் அதட்டலாக, அது சற்று வேலை செய்ய.. அப்படியே உறங்கி விட்டாள். ஆனால் ஈஸ்வரால் முடியவில்லை.. அவளை இறுக்க அணைத்துக்கொண்டே இருந்தான்.. உறங்கவேயில்லை..

வர்ஷினியின் பார்வை என்ன சொன்னது என்று புரியவில்லை, ஆனால் அதில் அப்பட்டமான ஒரு குற்றச் சாட்டு. என்னவோ அவனுக்கே தப்பு செய்து விட்டதாக எண்ணம் எப்போதையும் விட அதிகமாக தாக்கியது. ஆம்! மூன்று மாதங்கள் விலகி இருந்தது, பிறகு இந்த மூன்று மாதமாக முயன்றும் சேர முடியவில்லை, அருகில் விடவேயில்லை..

"உன்னைப் பிடிக்கவில்லை" என்ற அவளின் வார்த்தைக்கு பிறகு.. அவள் மட்டுமே முக்கிய கவனமாகிப் போன போதும் மனதாலும் நெருங்க

முடியவில்லை, உடலாலும் நெருங்க முடியவில்லை.

அது எல்லாம் கூட இப்போது பெரிய விஷயமில்லை... தன்னை தானே அவள் தனிமைப் படுத்திக் கொள்வதாக ஒரு எண்ணம் ஈஸ்வருக்குள் தோன்றியது.

எப்படி சரி செய்வது என்று தெரியவேயில்லை.

காலையில் வர்ஷினி எழுந்ததும் “இன்னைக்கு உங்க அப்பா வீட்டுக்குப் போறோம், நீயும் வா வர்ஷி” என,

“இல்லை, நான் வரலை” என்றாள் எடுத்த எடுப்பிலேயே..

“உறவுகள்னா சரி சரின்னு தான் போகணும் வர்ஷ்.. இப்படி கோபத்தை இழுத்துப் பிடிக்கக்கூடாது. கமலம்மாவை கன்சிடர் பண்ணு.. உங்கப்பா மாதிரி ஒருத்தர் கூட இருந்திருக்காங்க.. அவருக்காக தான்னாலும் உன்னை நல்லா பார்த்தாங்க, அதை நீ மறக்கக் கூடாது” என,

அப்போதும் அசையாமல் நிற்க..

“யோசிச்சுப் பார், நான் யார் பின்னாலையும் போனா நீ விட்டுடுவியா?” என உதாரணம் சொல்ல,

அவ்வளவு தான் அசையாமல் நின்றிருந்தவள் சட்டென்று முன்னேறி விரல் நீட்டி, “கொன்னுடுவேன்” என அவ்வளவு கோபமாகச் சொல்ல,

அவளின் கண்களை நேர் பார்வை பார்த்தவன் “கொல்ற அவசியம் உனக்கு எப்பவுமே வராது” என,

“வருது, வரலைன்றது வேற. இந்த பேச்சுக் கூட இருக்கக் கூடாது.. உயிரில்லாதது இந்த சொத்து.

அதுவே என்னோட உரிமை, யாருக்கும் கொடுக்க மாட்டேன்னு சொல்றேன்.. நீங்க உயிரோட இருக்குற ஒரு பொருள், அதை கொடுத்துடுவேனா.. எனக்கு பிடிச்சிருக்கு பிடிக்கலை அது வேற.. ஆனா விட்டுக் கொடுக்க முடியாது.. அதனால லூசு மாதிரி இந்த வார்த்தை பேசக் கூடாது" என,

பேசப் பேசப் வாயடைத்து போனான்.. இப்படி ஒரு பரிமாணம் வர்ஷினியிடம் எதிர்பாராக்கவில்லை.

"அண்ட் என்ன பெருமை உனக்கு? என்னை கொல்ற அவசியம் வராதுன்னு. யார் பின்னாடியும் போக மாட்டேன்னு சொல்லி என்ன ப்ரூவ் பண்ண பார்க்கறீங்க? இது என்ன பெருமையா?" என்றாள் ஆவேசமாக.

"நான் யார் பின்னாடியும் போறேனான்னு உங்க கிட்ட சொன்னா எப்படி இருக்கும்? ஒரு வேளை நான் போகமாட்டேன்னு சொல்லணும்னு நினைக்கறீங்களோ? என்னையும் எங்க அம்மா மாதிரி நினைக்கறீங்களோ?" என,

மண்டியிட்டு அமர்ந்து விட்டான்.. "ஏன் இப்படி தப்பு தப்பாக யோசிக்கிறாள்" என்று மனது வலித்தது. அவளின் அம்மாவை அவள் இழுப்பது எந்த வகையிலும் பிடித்தமில்லை.. இந்த மாதிரியான பேச்சுக்கள் வருவது கூட அவனுக்கு விருப்பமில்லை..

"சாரி, இதை விட்டுடு, இதைப் பத்தி நம்ம பேச வேண்டாம். அண்ட் நான் இப்படி மீன் பண்ணலை" என்று ஏறக் குறைய சரண்டர் தான் ஆகினான்.

"போடி" என்றெல்லாம் சொல்ல மனதில்லை, கோபப்படவும் முடியவில்லை.. ஐயோ என்றானது

மனது! ஒன்று மட்டும் மீண்டும் மீண்டும் நிச்சயமானது இவள் நிறைய நிறைய யோசிக்கின்றாள் என

அவன் மண்டியிட்டதும் அவளும் நொடியும் தாமதிக்காது அவன் போலவே எதிரில் அமர்ந்து அவன் முகம் பார்க்க.. அதிலிருந்த தீவிரம் பார்த்து, வாழ்க்கையைப் பற்றின பயம் முதல் முறையாக ஈஸ்வருக்கு எழுந்தது.

ஆனாலும் ஒன்றும் நடவாதது போல, “வர்றியா? போகலாமா?” என ஈஸ்வர் தணிந்தே கேட்க,

வர்ஷினியின் முகம் சற்று சரியானாலும் “வரமாட்டேன், வரலை!” தன் பிடியிலேயே தான் நின்றாள்.

மிகவும் முக்கியமான நாள் என்பதால் அவளோடு இன்னும் வாதம் செய்யாமல், “யோசி வர்ஷ்” என்று அவன் கிளம்பினான். அப்போதும் “சரி, அங்க அம்மா வீட்ல இரு” என,

“என்ன அதிசயமா அங்க போறீங்க?”

“அது நம்ம வீடு வர்ஷ்” என,

“அப்போ எதுக்கு வெளில வந்தீங்க?”

“ஒரு கோபம் வந்தேன்” என்றான் பொறுமையாகவே.

“பத்து பதினைஞ்சு நாள்ல கூட்டிட்டு வந்துட்டீங்க, இப்போ அங்க போய் இரு சொன்னா.. எனக்கு அன்ஈசியா இருக்காதா? நீங்க இருந்தா இருக்கேன், நீங்க இல்லாதப்ப என்னை விட்டுட்டு போகக் கூடாது” என்றாள் கறாராக.

“அம்மாடி, இனி இவளை யோசிக்காமல் எந்த முடிவும் எடுக்கக் கூடாது” என அந்தக் க்ஷணம் ஒரு புதிய பிரமாணமே எடுத்துக் கொண்டான் ஈஸ்வர்

என்றால் அது மிகையில்லை. ஆனால் அது காலம் கடந்த பிரமாணம் என்றறியும் நாள் வெகு தொலைவில் இல்லை.

கூடவே முன்பு காதல் சொன்னதைப் பற்றி சொல்லவும் எடுத்த முடிவு பின் போனது.. “வேண்டாம்! வேண்டவே வேண்டாம்! அவள் சரியாகட்டும்” என தான் தோன்றியது.

ஆம்! என்னவோ அவள் இயல்பிலேயே இல்லை என்பது போலத் தோன்ற, அவளை சரி செய்ய நினைத்தான். அதுதான் அவளின் இயல்பு என்பது புரியவேயில்லை.

“இன்னைக்கு லீவ் தானே, சரண் பிரணவி எல்லோரும் அங்கே இருப்பாங்க. உனக்கு டைம் போகும். இங்க தனியா உட்கார்ந்து என்ன பண்ணுவ?”

“ஓஹ், அது இத்தனை நாளா தெரியலையா?” என அலட்சியமாகக் கேட்க..

என்ன பேசுவது என்றே தெரியவில்லை.. ஸ்தம்பித்தவன்..

வேகமாக வர்ஷினியின் கையை பிடித்துக் கொண்டு.. “உனக்கு கோபமா இருந்தா என்னை அடிச்சிக்கோ, இல்லை எதையாவது போட்டு கூட உடை.. ஆனா இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் மனசுல போட்டு குழப்பிக்காதே, என்னவோ எனக்கு ரொம்ப டிஸ்டர்ப்டா இருக்கு.. இன்னும் என்ன குழப்பிக்கிட்டு இருக்கே!”

“நான் சரியா செஞ்சேன், அதை நீ தப்பா எடுத்துக்கிட்டேன்னு எல்லாம் நான் சொல்லலை. நான் தப்பாக் கூட இருக்கலாம். உடனே சொல்லு.. நீ தப்பு பண்றேன்னு சொல்லு.. என்ன

வேணும்னாலும் கேளு.. தனியா ஃபீல் பண்ணினா அடுத்த நிமிஷம் வாடான்னு எனக்கு கால் பண்ணு" என உணர்வு பூர்வமாக சரியாக நடந்து கொள்ளாமல் விட்டு விட்டோமோ அவளை பாராமல் விட்டு விட்டோமோ என தவித்துப் பேசினான்.

அதன் பிரதிபலிப்பு எதுவும் இல்லாமல் "சரி" என்று இயந்தரத்தனமாய் அடுத்த நிமிஷம் கையை விலக்கிக் கொண்டாள்.

"வர்ஷ்" என்று அவளையே பார்த்தபடி ஈஸ்வர் நிற்க.. திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.

"வர்ஷ், என்ன பிஹேவியர் இது?"

"இது தான் என் பிஹேவியர். இனி எல்லாம் என் இஷ்டம் தான். நீங்க சொல்றதைக் கேட்கணும்னு, எனக்கு எந்த அவசியமுமில்லை. நான் உங்களுக்கு ஒரு சேன்ஸ் கொடுத்தேன் என் லைஃப்ல. பட் ஐ அம் நாட் ஹேப்பி வித் இட்!"

"அப்படி எனக்கு சந்தோஷமில்லாம நீங்க சொல்றதை நான் ஏன் கேட்கணும், செய்யணும். இனிமே எல்லாம் என் இஷ்டம் தான். நீங்க ஏன் என்னை கஷ்டப்படுத்தணும். அந்த வேலையை நானே செஞ்சிக்கறேன்" என்று சொல்லிப் போக..

அந்த குரலில் இருந்த ஒரு அலட்சியம் ஈஸ்வருக்குள் ஒரு அமைதியின்மையைக் கொடுத்தது. இவளை சரி செய்ய முடியுமா என்ற சந்தேகத்தையே கொடுத்தது!

மனது முழுவதும் சஞ்சலம்! ஆனால் அப்போது வர்ஷினியிடம் விளக்கம் கூற முடியவில்லை. ஏனென்றால் அவனுக்கே என்ன செய்வது என்று விளங்கவேயில்லையே.

அந்த சூழலில் தனியே விட மனதில்லாமல் அப்பாவையும் ஜகனையும் அங்கே வரச் சொன்னவன், கூட மலரையும் குழந்தைகளையும் வரச் சொல்லி, அவர்களை அங்கே விட்டு ஆண்கள் மூவரும் ரஞ்சனியின் வீட்டிற்கு கிளம்பினர்.

அவ்வளவு சிரமப்பட்டு பணத்தை திரும்பக் கொடுக்கப் போகிறோம் என்ற உற்சாகம் சற்றுமில்லை.. அங்கே பத்துவின் வீடு சென்றான்.. முன்பே முரளியிடம் சொல்லியிருந்தான். அதனால் தாத்தா முதற் கொண்டு எல்லோரும் இருந்தனர்.

ரஞ்சனி ஹாஸ்பிடல் கிளம்பி கீழே இறங்கும் போது தான் முரளி, "ஈஸ்வர் வர்றேன்னு சொல்லியிருக்கான், நீ ஹாஸ்பிடல் போகணுமா?" என..

"எதுக்கு முரளிண்ணா விஸ்வா வர்றான்" என ஆர்வமாய் கேட்டாள்.

"பணம் திரும்பக் குடுப்பான்னு நினைக்கிறேன்"

"எப்படி முரளிண்ணா அவ்வளவு பணம் முடியும்" என்றாள் கவலையாக.

"தெரியலை ரஞ்சனி.. பணம் விஷயம் இப்போல்லாம் அவன் என்கிட்டே பேசறது இல்லை" என,

எல்லாம் மௌனப் பார்வையாளராக பத்து பார்த்து தான் இருந்தான்.. இப்போதெல்லாம் எதுவுமே யாரிடமும் பேசுவது இல்லை அவன்.

கமலம்மா "வர்ஷினியும் வர்றாளா?" என ஆவலாகக் கேட்க,

"தெரியலை ம்மா.. கூட்டிட்டு வாடான்னு தான் சொன்னேன்.. இது அஃபீஷியல் விசிட்ன்னு

சொல்றான்”

தன் ஆறு மாதக் குழந்தைக்கு இட்லியை நன்கு மசித்து ஊட்டிக் கொண்டிருந்த ஷாலினி, “அவ வரமாட்டேன்னு சொல்லியிருப்பா, அதனால அண்ணா அப்படி சொல்லியிருப்பாங்க” என சரியாகச் சொல்ல..

மொத்த வீடுமே அப்படியோ என கவலையில் ஆழ்ந்தது.. தாத்தாவிற்கு கூட சிறிது கவலையாக இருந்தது.. அவருக்கு அவரின் பேரன்களுக்கு தான் எல்லா உரிமையும் இருக்க வேண்டும் அவ்வளவே, மற்றபடி வர்ஷினி நன்றாக இருக்கக் கூடாது என்று என்றுமே நினைத்தது இல்லையே..

அவர் சற்று கடுமையாகப் பேசியது கூட ஈஸ்வரின் மனைவியாகிவிட்டாள், இனி என்ன கவலை அவளுக்கு என தான். இப்படி கோபத்தை இழுத்துப் பிடித்து வீட்டிற்கு கூட வரமாட்டாள் என்று நினைக்கவில்லை..

நமஷிவாயமும் ஜகனும் வர, “வாங்க, வாங்க” என்றழைத்த தாத்தா “எங்கே எங்க வீட்டுப் பொண்ணு” என,

பின்னே வந்த ஈஸ்வர்.. அதை கவனித்தாலும் எதுவும் பதில் சொல்லவில்லை.. நமஷிவாயம் தான் “தொழில் விஷயமா போறோம்னு யாரையும் கூட்டிட்டு வரலை. மலர் கூட ரஞ்சனியைப் பார்க்கணும் கேட்டா, எங்கம்மா கூட.. நான் தான் யாரும் வேண்டாம்னு சொல்லிட்டேன்” என்றார்.

அவர் நிஜத்தை தான் சொன்னார்..

ஈஸ்வர் தாத்தாவிடம் மரியாதை நிமித்தம் ஒரு தலையசைப்பு, ஒரு சிரிப்பு, வேறு எதுவும் ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை.. அவனின்

மனைவிக்கு வருத்தம் கொடுக்கும் ஒருவர் என்றுமே அவனுக்கு தேவையில்லை.

எல்லோரும் ரஞ்சனியைத் தான் பார்த்தனர்... அவளின் முகத்தில் அமைதியான புன்னகையைப் பார்க்கவும் தான் மேலே பேசவே ஆரம்பித்தனர்.

பத்து தான் எல்லா கணக்கு வழக்குகளையும் பார்ப்பது.. அதனைக் கொண்டு பத்துவிடம் ஈஸ்வர் பேச ஆரம்பிக்க.. "நீங்க முரளி கிட்ட பேசிடுங்க" என்றான்.

"முரளி கிட்ட பேசணும்னா நான் இங்க வரணும்னு இல்லை.. அவனை அங்கே வரச் சொல்லியிருப்பேன். உன்கிட்ட பேசணும், அதான் வந்தேன். எனக்குத் தெரியும், கணக்கு வழக்கு எல்லாம் நீதான் பார்க்கற" என,

"ஏன்? நீங்க கூப்பிட்டா நான் வரமாட்டேனா?" என பத்து பேச,

"முரளின்னா என்னோட நண்பன், கூப்பிடலாம். ஆனா நீ எங்க வீட்டு மாப்பிள்ளை, அப்படி கூப்பிட எங்க வீட்ல இருக்குறவங்க விரும்ப மாட்டாங்க.. எனக்கு மரியாதை குறைஞ்சாலும் உனக்கு மரியாதை குறைய விட மாட்டாங்க" என்றான்.

"விஸ்வா" என நமஷிவாயம் ஒரு அதட்டல் போட,

"உண்மையை தானே சொன்னேன்" என்றான் அவரையும் பார்த்து. பத்துவின் முகம் சுருங்கி விட, அதை பார்த்திருந்த ரஞ்சனிக்கு மனம் சுருங்கியது.

பின்னே ஈஸ்வரின் வீடு சென்று மன்னிப்பு கேட்டது தெரியும், முரளி சொல்லியிருந்தான்.. இங்கேயும் அவன் சுமுகமாக பேச முற்பட ஈஸ்வர் இப்படிப் பேசியதும் ரஞ்சனிக்கு பிடிக்கவில்லை.

பத்து செய்தது தவறு தான் அதற்காக அவனை விட்டுக் கொடுக்க முடியாதே!

ஒரு கணமான சூழல், யாரும் என்ன பேசுவது என்று தெரியாமல் இருக்க, “நீ முதல்ல எங்க வீட்டு குட்டியை பார்” என்று ஷாலினி கையினில் இருந்த குழந்தையை ரஞ்சனி வாங்கி வந்து ஈஸ்வரிடம் கொடுத்தாள்.

“ரஞ்சி, பேம்பர்ஸ் போடலை, அண்ணாவை ஈரமாக்கிடப் போறான்” என ஷாலினி சொல்ல..

“அப்போவாவது எங்கண்ணன் கூல் ஆகறானா பார்ப்போம்” என ரஞ்சனி பேச..

“அப்போ சரி பேம்பர்ஸ் வேண்டவே வேண்டாம்!” என ஷாலினி பேச சூழல் சிறிது லகுவாகியது..

அதிலும் ரஞ்சனி ஈஸ்வரிடம் மெதுவாக “நான் மட்டும் தான் லைசன்ஸ் வெச்சிருக்கேன், உனக்கெல்லாம் கொடுக்க முடியாது” என,

ரஞ்சனி பேசுவது புரிந்தாலும், அவள் பேசுவதால் பதிலுக்கு பேச வேண்டி “எதுக்கு” என்றான் புரியாதவன் போல..

“அதுதான் என் வீட்டுக்காரரை டார்ச்சர் பண்றதுக்கு. சும்மா மிரட்டிட்டே இருப்பியா? ஊருக்குள்ள நீ மட்டும் தான் ரௌடியா? நாங்க எல்லாம் ஆகக் கூடாதா?” எனப் பேச, கிண்டலாக பேசினாலும் கண்களில் ஒரு கண்டிப்பை காட்டினாள்.

“சரி, நீங்களே ரௌடியா இருந்துக்கோங்க! நான் என் போஸ்டை விட்டுக் கொடுத்துடறேன்!” என்றான் இலகுவாக.

“அது!” என ரஞ்சனி பேச, அண்ணன் தங்கை இருவர் முகத்திலுமே புன்னகை..

அவர்கள் புன்னகைத்தாலும் வர்ஷினி ஆத்மார்த்தமான புன்னகையைத் தொலைத்து பல நாட்கள் ஆகியிருந்தது.

அங்கே குழந்தைகளோடு சரிக்கு சமமாக வர்ஷினி விளையாடிக் கொண்டிருக்க... அவளுக்கு என்ன வேண்டும் என்று கேட்டு மலர் சமைத்துக் கொண்டிருந்தார்.

ஆனால் வர்ஷினி இயல்பில் இல்லை.. கூடாது என்று இல்லை, முடியவில்லை.. ஈஸ்வருக்கு சண்டை போடுவதும் பின்பு உறவுகளை கருத்தில் கொண்டு சமாதானமாகப் போவதுமாக இருக்க.. உறவுகளோடு வளர்ந்திராத வர்ஷினியால் அது முடியவில்லை..

உறவினர்களை விட்டுவிட்டாலும், கணவனுடன் கூட முடியவில்லை.. மனதில் வேண்டுமென்றால் வருகிறான், வேண்டாவிட்டால் விட்டு விடுகின்றான். தேவையென்றால் பேசுகின்றான், தேவையில்லை என்றால் பேசுவது இல்லை. வேலை இருந்தால் என்னை கவனிக்க முடியாதா? அப்போது வேலை தான் முக்கியமா, நான் இல்லையா?” என்ற எண்ணம் தான் அப்போது ஸ்திரமாக இருந்தது.

அதையும் விட “என்னை, எனக்காக மட்டும் நேசிக்கும் மாப்பிள்ளை வேண்டும் என்று தானே இவனிடம் தெளிவாக சொல்லியிருந்தேன்” என ஒரு கோபம் கனன்று கொண்டே தான் இருந்தது. ஈஸ்வரிடம் அவ்வளவு பேசினாலும் மனது ஆறவில்லை.

உண்மையில் விஸ்வேஸ்வரன் என்ற மனிதன், பிறந்ததிலிருந்து அந்தஸ்து மட்டுமல்ல, பாரம்பரியம், மரியாதை, பழக்க வழக்கம் என்று அத்தனையும் பார்க்கும் கர்வமான மனிதன்.

இது எதுவும் இல்லாத வர்ஷினியை, அவளை, அவளுக்காக மட்டுமே நேசிக்கின்றான்.. காமமா? காதலா? என்று தெரியாத நிலையிலிருந்தவன்.. இப்போது காமத்திலிருந்து விலகி, காதலுக்குள் நுழைந்து.. நெஞ்சம் முழுவதும் நேசம் மட்டுமே கொண்டிருக்கின்றான்.

ஆனால் சமயத்தில் அதை புரிய வைக்க தவறி விட்டான்.. வர்ஷினிக்கும் ஈஸ்வரைப் போல ஒரு அதீத காதல் இருந்திருந்தால், அவனைப் புரிந்து கொள்ளவும் அவனின் செய்கையை மன்னிக்கவும் முடிந்திருக்கும். ஈஸ்வரை புரியாமல் இல்லை, ஆனால் அது காதல் கொண்ட மனதாக புரிந்து கொள்ளவில்லை.

திருமணம் செய்து கொண்டு அவளின் வாழ்க்கையை ஈஸ்வரிடம்.. தனக்கு என்ன தேவை என்று தெளிவாகச் சொல்லி ஒப்படைத்து இருக்கும் பெண். அதனால் ஈஸ்வரின் செய்கைகளை ஒப்புக் கொள்ள முடியவில்லை..

புரிந்தாலும் இது எனக்குத் தேவையில்லை என்ற மனநிலைக்கு தானாகவே வர்ஷினியை தள்ளியும் விட்டு விட்டான். அவளின் வீட்டு உறவுகளிடமும் விலகி தான் விட்டாள்.

உண்மையில் ஈஸ்வர் என்ற மனிதனை வர்ஷினி காப்பாற்றி விட்டாள், ஆனால் வர்ஷினி ?

மலர் அவளிடம் “வா வர்ஷி, வந்து சாப்பிடு” என,

“இல்லை அத்தை, நீங்க வெச்சிடுங்க. நான் அப்புறம் சாப்பிட்டுக்கறேன், சரண்க்கும் ப்ரணவிக்கும் பசிக்குது போல.. நீங்க அவங்களைப் பாருங்க, நீங்க சாப்பிடுங்க” என்று சொல்லியவள், அவரிடம் வேறு பேசவே இல்லை.

குழந்தைகளோடு அமர்ந்து கார்டூன் தான் பார்த்துக் கொண்டிருந்தாள். அவரிடம் தானாக ஒரு வார்த்தை கூட பேசவில்லை.. அவர் சமைக்கும் போதும் அருகில் வரவில்லை..

அவராக ஏதாவது பேசினாலும் “ம்ம், சரி, இல்லை, தெரியாது” என்ற பதில் தான். மலர் நொந்து போய் விட்டார்.. எப்படி தன்னிடம் பேசியிருந்த பெண் இப்போது மாறி நடப்பது மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

அவருடைய மருமகள் ஆனால் யாரோ போல தான் நடக்கின்றாள்.. இங்கே வந்த புதிதில் கூட இப்படி இல்லை. கைபேசியில் எதுவென்றாலும் அழைத்து பேசும் பெண்.. இப்போதெல்லாம் அதிகம் பேசுவதில்லை. அழைத்தாலும் எப்போதாவது தான் எடுக்கின்றாள்.

“எப்படி இவர்கள் குடும்பம் நடத்தப் போகிறார்கள்” என்ற பயம் வந்தது. திருமண வாழ்க்கையின் அடிப்படை அங்கே அவருக்கு தெரியவில்லை. நாளை இவளுக்கு ஒரு குழந்தை வந்து அதை எப்படி வளர்ப்பாள்.. அவர் வர்ஷினியை கவனித்த வரை எதிலும் பற்று இருப்பது போலவே அவருக்கு தோன்றவில்லை.

ஒரு உயிர்ப்பு, ஒரு துடிப்பு இல்லை.. அவரின் பார்வைக்கு வர்ஷினி மந்தமாக தோன்றினாள்.. பெண்கள் என்றால் சுறுசுறுப்பாக அங்கே இங்கே திரிய வேண்டாமா.. அமர்ந்தது அமர்ந்த படி

இருந்தாள், யோசனைக்குப் போய் விடுகின்றாள், சுற்றுப் புறம் கவனிப்பது இல்லை. அங்கே எதிலுமே ஒரு ஒழுங்கற்ற தன்மை தான் அவருக்கு தெரிந்தது.

தன் மகளாக இருந்தால் செய்ய மாட்டோமா என எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தார். இந்த விஸ்வா என்ன செய்கிறான் என்று அவன் மீதும் கோபமாக வந்தது. விஸ்வா அவரின் பெண்ணை நினைத்து இந்தப் பெண்ணை விட்டு விட்டான் என்பது தான் நிஜம். ரஞ்சனியின் வாழ்க்கைக்காக பணத்தின் பின் ஓடி இவளை தனிமைப் படுத்தி தானே இந்த முற்றிய நிலை.

என்ன தான் யோசனைகள் ஓடினாலும், குழந்தைகளுக்கு மலர் உணவு கொடுத்து.. அவர்கள் உண்டவுடன் அவர்களை தூங்க வைக்க..

“நான் தூங்க வைக்கிறேன்” என்று அழைத்துப் போனவள், அவர்களை உறங்க வைக்க..

“உனக்கு பிடிச்சதா சமைச்சு இருக்கேன் வர்ஷினி, நீ சாப்பிட்டிடு, அவங்க எப்போ வர்றாங்களோ?” என,

“தினமும் எனக்கு பிடிச்சதா குடுக்கறீங்க, அப்புறம் இப்போ மட்டும் என்ன?” என்றவள் சாப்பிடாமல் அப்படியே உறங்க..

“என்ன பேச்சு இது” என்று அப்படியே அமர்ந்து விட்டார்.

அப்போதும் “நீ வேணும்னு கேட்டா நான் கொடுத்து இருப்பேனே” என,

“அது என்ன ஹோட்டலா, நான் வேணும்ங்கறதை கேட்டு சாப்பிட” என்றாள்.

வர்ஷினி வாழ்க்கையின் மேல் இருந்த கோபத்தை அவரிடம் காட்டினாள். அவளின் மனதில் உள்ள ஒரு ஆற்றாமை, ஒரு வெறுப்பு எல்லாம் முன்னுக்கு பின் அவளை பேச வைத்தது.

"வர்ஷினி, என்ன பேசற? அது உன் வீடு!" என,

"வீடா? அது வீடுன்னா அப்போ ஏன் இங்க கூட்டிட்டு வந்தாங்க? எல்லோரும் அவங்க அவங்க இஷ்டம் தான் செய்றீங்க. என்னை யார் கேட்கறீங்க? இதுவும் எனக்கு இன்னொரு ஹாஸ்டல் தான்! வேளாவேளைக்கு சாப்பாடு வருது, சாப்பிடறேன்! தூங்கறேன்!" என தன்னை மீறி ஆதங்கத்தில் கூறியவள்.. என்னவோ அவரிடம் ஒட்டவும் முடியாமல், தன்னுடைய செய்கை தனக்கே பிடிக்காமல்...

சட்டென்று பேச்சை நிறுத்தி "நானும் இவங்களோட தூங்கறேன்" என்று படுத்துக் கொண்டாள்.

வீட்டினர் வரும் வரை அப்படியே அமர்ந்திருந்தார்.. ஜகன் வீட்டிற்கு சென்று விட.. நமஷிவாயமும் ஈஸ்வரும் அங்கே வந்தனர்..

அங்கே மகளின் வீட்டில் என்ன நடந்தது எனக் கேட்காமல், எதுவும் பேசாமல், இருவருக்கும் உணவை எடுத்து வைத்தவர் அவரும் அமர்ந்து உண்டார்..

நமஷிவாயம் அப்படியே சோஃபாவிலேயே அமர்ந்த வாக்கிலேயே உறங்க.. அவர் உறங்கிய பிறகு "இன்னும் வர்ஷினி சாப்பிடலை" என்றார்.

"ஏன் மா?" என்றவனிடம், அவளின் பேச்சு நடத்தை எல்லாம் சொல்ல..

தன் மேல் இருக்கும் கோபத்தை, அம்மாவிடம் எல்லாம் வர்ஷினி காட்டுவாள் என்று ஈஸ்வர் எதிர்பார்க்கவில்லை.

“சாரி மா, உனக்கு எதுவும் கோபம் இல்லையே” என்று அவசரமாகக் கேட்க,

“எனக்கு அவ மேல எல்லாம் கோபமில்லை, உன் மேல தான். பிள்ளைகளை நான் சரியா வளர்க்கலையோன்னு ஒன்னொன்னுலையும் காமிச்சு கொடுக்கறீங்க..நீயும் உன் தங்கையும் நீங்களா தேர்ந்தெடுத்த வாழ்க்கை. ஆனா அதைக் கூட உங்களால சரியா வாழ முடியலை..” என்றார் கோபமாகவே.

ஈஸ்வர் எதிர்த்து பேசாமல் அமைதியாகத் தான் கேட்டுக் கொண்டான். அவனுக்கே என்ன செய்வது என்று புரியவில்லையே.

“அவளோடு உன்னோட வாழ்க்கை நல்லா இருக்கணும்னு நினைச்சா ஒழுங்கா வீடு வந்து சேர்.. தனியா இருக்காத” என,

அதற்கும் ஈஸ்வர் எதுவும் மறுத்துப் பேசவில்லை.. அவர்கள் சென்றதுமே வர்ஷினியிடம் அதைப் பற்றி பேச, “முடியவே முடியாது. நான் வரவே மாட்டேன்!” என்றாள்.

ஈஸ்வர் மீண்டும் மீண்டும் வற்புறுத்தவும், பலதும் பேசி அங்கே செல்வது தான் சரி என்று நியாயப்படுத்தவும்..

“உங்களுக்கு வேணும்னா நீங்க போங்க.. எனக்கு ஒன்னும் அப்ஜக்ஷன் இல்லை.. நான் வேணும்னா ஹாஸ்டல் பார்த்து போயிடறேன்” என,

ஈஸ்வர் அப்படியே அதிர்ந்து தான் நின்று விட்டான்.. “யாருக்கும் உன்னை விட்டுக் கொடுக்க

முடியாது என காலையில் பேசியவள், இப்போது நீ அங்கே போ, நான் இங்கே போகிறேன் என்கிறாளா?”

காலையிலிருந்து இழுத்துப் பிடித்த பொறுமை பறக்க “என்ன நீ ஒரு பக்கம்? நான் ஒரு பக்கமா? கொன்னுடுவேன். ஹாஸ்டல், ஹாஸ்டல்ன்னு அதையே ஏன் பிடிச்சு தொங்கற” என ஈஸ்வர் ஆத்திரத்தில் கத்த..

“எனக்கு அதை விட்டா வேற தெரியாது.. எனக்கு விவரம் தெரிஞ்ச நாள்ல இருந்து அங்கே தான் இருக்கேன். அப்போ அங்கே தானே போவேன். எனக்கு வேற தெரியாது. எனக்கு இருந்த அப்பாவும் இப்போ கிடையாது” என்று பதிலுக்கு அவளும் கத்தினாள்.

மூன்று மாதமாக எவ்வளவு புரிய வைக்கிறேன், புரியாமல் திரும்பத் திரும்ப பேசுகிறாளே என்று ஈஸ்வரும் விடாது கோபத்தில் பேச..
அத்தனைக்கும் சளைக்காமல் பதிலுக்கு பதில் கத்தினாள்.

அங்கே அந்த கணவன் மனைவிக்குள் ஒரு சண்டை! ஆனால் செல்லச் சண்டை அல்ல, ஈஸ்வர் கோபத்தில் சண்டை போட! வர்ஷினி வெறுப்பில் சண்டை போட்டாள்!

“உன்னை நான் பார்க்காமலேயே இருந்திருக்கலாம்” என்று ஈஸ்வர் கோபத்தின் உச்சமாய் கத்த,

“அதை தானே நான் சொல்லிகிட்டே இருக்கேன், நீ என்னை பார்க்காம இருந்திருந்தா நான் நல்லா இருந்திருப்பேன்” என,

“யார் உனக்கு மாப்பிள்ளை வரிசையா நின்னிருந்தா, நான் உனக்கு குறைஞ்சு போயிட்டேன், போடி! உன் கிட்ட எல்லாம் பேசவே முடியாது!”

“பேசாதே போ! நீ பேசலைன்னு நான் ஒன்னும் இங்க அழலை! நான் வாழ்க்கை முழுசும் தனியா இருந்திருந்தாலும், நீ எனக்கு மாப்பிள்ளையா வந்திருக்க வேண்டாம், போடா!” என்றாள் சளைக்காமல்.

ஈஸ்வருக்கும் கோபம் போய் வெறுப்பு வந்தது, “இது என்ன வாழ்க்கை?” என்பது போல..

அதைவிடவும் அதிகமான வெறுப்பு வாழ்க்கையின் மீதும் ஈஸ்வரின் மீதும் வர்ஷினிக்கு இருந்தது.

**இது போர்க்களம்! எதிரி எதிரில் இல்லை! உனக்கு நீயே எதிரி!**

**அத்தியாயம் அறுபத்தி ஆறு :**

மிகுந்த கோபத்தில் ஆத்திரத்தில் இயலாமையில் ஈஸ்வர் சண்டையிட்டாலும், வார்த்தைகள் எல்லைகளைக் கடந்தாலும்.. வர்ஷினி கத்த கத்த, அவளின் கண்களில் நீர் நிறைய, அதைப் பார்த்து தான் சற்று தணிந்தான்.

ஆனாலும் வர்ஷினியை முறைத்தபடி நின்றிருந்தான்.

திடீரென்று அவன் அமைதியாகிவிட என்ன பேசுவது என்று தெரியாமல் வர்ஷினியும் நிறுத்தி விட்டாள்.

இருவருமே மிகவும் அதிகமாக பேசிவிட்டதை உணர்ந்து அமைதி காத்தனர்.

எப்படி தன் பின்னால் சுற்றி திருமணதிற்கு கட்டாயப்படுத்தி என்னை சம்மதிக்க வைத்து, இப்போது பார்த்திருக்கவே வேண்டாம் என்று ஈஸ்வர் சொன்னது, இன்னும் இன்னும் வர்ஷினியைக் காயப்படுத்தியது. ஒரு உணர்ச்சி கொந்தளிப்பில் இருந்தால் அவள்.

“என்னை நீங்க பார்த்திருக்கவே வேண்டாம் தானே, நீங்களே இப்போ அப்படி தானே ஃபீல் பண்றீங்க. அதுக்கு தான் முன்னமே அவ்வளவு தரம் சொன்னேன்” என்றாள் அமைதியாக கண்களில் நீரோடு.. குரல் அமைதியாக இருந்தாலும் மனதில் புயல் தான் அடித்துக் கொண்டிருந்தது.

சண்டையிட்ட வர்ஷினியை எதிர்கொண்டவனால் இந்த வர்ஷினியை எதிர்கொள்ள முடியவில்லை.. அவளின் முகத்தையே பார்த்திருந்தவன் அதில் என்ன இருக்கிறது என்று படிக்க முயன்று கொண்டிருந்தான்.. அவன் பார்க்க பார்க்க, “நீங்க சொல்ற எல்லாம் நான் கேட்பேன்னு எதிர்பார்க்காதீங்க. எனக்கு அந்த பழக்கம் கிடையாது” என்றவள்,

“இதுக்காக தான் என்னையே நினைச்சு, எனக்காக எல்லாம் செய்யற. என்னை ரொம்ப லவ் பண்ற, என்னை சுத்தி சுத்தி வர்ற லைஃப் பார்ட்னர் வேண்டும்னு சொன்னேன், அவங்க தானே என்னோட மிஸ்டேக்ஸ் அக்சப்ட் பண்ணிவாங்க, அதுதான் நான் அந்த மாதிரி எனக்கொருத்தர் வேணும்னு நினைச்சதுக்கு முக்கிய காரணம். ஆனா அதை அப்போ சொல்லியிருக்க முடியாது”

“ஒரு சிக்ஸ் மந்த்ஸ் உங்களால என்கூட இருக்க முடியலை, உன்னை நான் பார்திருக்கவே

வேண்டாம்னு சொல்றீங்க. நான் கட்டாயத்துல தானே எஸ் சொன்னேன். ஆனா நீங்க அப்படி இல்லையே. அதுக்கு தானே சொன்னேன், நமக்கு சரிவராதுன்னு"

"நான் முன்னமே ரஞ்சனி அண்ணிக்காக உங்க கிட்ட ஒரு முறை பேசின போது நீ ஃபாமிலி செட் அப்ல வளரலை. உனக்கு இதெல்லாம் தெரியாது, உன் வேலையைப் பார்த்துட்டு போனு சொன்னீங்க. அதுவும் சாதாரணமா இல்லை, கோபமா கூட சொல்லலை, ரொம்ப அலட்சியமா சொன்னீங்க"

"எஸ், நான் குடும்ப அமைப்புல வளரலை. அதனால் நீங்க என்கிட்டே அதை புரிய வைக்க நினைக்கறது வேஸ்ட்.. எனக்கு புரிஞ்சிக்கணும்னு இல்லவே இல்லை" கண்களில் நீரோடு சொன்னவள் பாத்ரூமின் உள் புகுந்து கொண்டாள்.

புகுந்தவளுக்கு அழுகை நிறுத்தவே முடியவில்லை, அங்கேயே அமர்ந்து அழ ஆரம்பித்தாள்.

ஈஸ்வருக்கு அவள் பேசிய வார்த்தைகளின் வீரியம் அவனுள் இறங்கவே சிறிது நேரம் பிடித்தது...

அப்படியே அமர்ந்து விட்டான். நூற்றுக்கு நூறு உண்மை தானே! மணந்து கொள்ள வருடத்திற்கும் மேல் போராடி, ஆறு மாதத்திற்குள் உன்னை நான் பார்க்காமலேயே இருந்து இருக்கலாம் என்று சொல்வது.. அவனின் பேச்சை அவனாலேயே சகிக்க முடியவில்லை..

"ஆம்! சொன்னதை எல்லாம் செய்தாளே, கேட்டாளே! திருமணதிற்கு பின் எதற்கும் மறுத்துப்

பேசவேயில்லை! என்னுடைய சுயநலம், என் சுய ஆராய்ச்சி, என்னுடைய பிரச்சனைகள், எல்லாம் கொண்டு அவளிடம் இருந்து விலகி நானாக அவளை விலக வைத்து விட்டேன்" இனி என்ன செய்வது என்று சிறிதும் தெரியவில்லை..

மூளை வேலை நிறுத்தம் செய்திருந்தது.. அதையும் விட "எப்படி அவளின் பின்னால் சுற்றினாய், சம்மதம் சொல்லி விட மாட்டாளா என தவித்தாய், அவளைப் பார்த்தவுடனே தறிகெட்டு ஓடின சிந்தனைகள்.. எல்லாம் எப்படி மறந்தாய்.. அதையும் விட அவளிடம் நீ ரஞ்சனியின் வரவேற்பு அன்று எப்படி நடந்தாய்" அவனுள் இருந்த ஒரு நியாயமான மனது மாறி மாறி கேள்வியால் துளைக்க..

ஈஸ்வர் சோஃபாவில் உலக நினைப்புகள் மறந்து அவனை நினைத்து அவனே கோபம் கொண்டு அமர்ந்திருக்க..

அங்கே ஒரு பெண் குளியலறையின் ஈரத்தில் அமர்ந்து கால்களுக்குள் முகத்தை பதித்து அவளை அவளே பார்க்க விருப்பமற்று ஓயாது அழுது கொண்டிருந்தாள்..

வெகு நேரம் கழித்து சுய நினைவு வரப் பெற்ற ஈஸ்வர் எங்கே வர்ஷினி என்று தேட.. இன்னும் குளியலறைக் கதவு திறக்காமல் இருக்க, "வர்ஷி என்ன பண்றே?" என்று வேகமாகக் கதவை தட்டினான்.

மனதில் ஏதேதோ எண்ணங்கள், இப்படி தானே அன்றும் கதவை தட்டினான். ஆம்! அவன் தவறிழைத்த அன்று மண்டை உடைந்து ரத்தம் கொட்டிய அன்றும் இப்படி தான் குளியலறையின் உள் வர்ஷினி புகுந்து கொண்டது ஞாபகம் வந்தது..

“வர்ஷி” என பலமாகத் தட்ட.. திறக்கும் வழியாய்க் காணோம்.. மனம் பயந்து போனது ... ஆனாலும் எதுவும் முட்டாள் தனமாய் எல்லாம் செய்ய மாட்டாள் என்ற நம்பிக்கையும் கூட.. கதவை கால்களால் பலம் கொண்ட மட்டும் எட்டி உதைக்க ஆரம்பித்தான்.

மரக் கதவு தான், ஆனால் தாழ்ப்பாள் அவ்வளவு வலிமை இல்லை, கட்டிய பிறகு வாங்கின அபார்ட்மென்ட் தானே.. அவள் கீழ் தாழ்ப்பாள் மட்டும் போட்டிருக்க, தட்டிய தட்டலில் தாழ் உடைந்து கதவு திறக்க..

உள்ளே போய் தடுமாறி நின்றான்.

அந்தக் குளியலறையின் ஒரு மூலையில் அவள் அழுதபடி அமர்ந்திருந்த விதம்.. நெஞ்சை உறையத் தான் வைத்தது..

“எழுந்து வா வர்ஷி” என்று அவன் அருகில் செல்ல..

“இல்லையில்லை, வரமாட்டேன், நீங்க போங்க போங்க.. எனக்கு எதுவுமே தெரியலை போல.. நான் தான் தப்பு போல, என்னால யாரோடையும் இருக்க முடியாது போல.. நீங்க சொன்ன மாதிரி கணவன் மனைவின்னா இப்படி தான் இருக்குமோ, வீடுன்னா சண்டை சச்சரவு இருக்குமோ.. எனக்கு தெரியலை”

“கல்யாணமாகி ஒரு பதினைஞ்சு நாள் தான் உடலளவுல கூட சேர்ந்து இருந்தோம். அப்புறம் அதுவும் எதுவும் இல்லை. இப்படி கணவன்னா அவங்க இஷ்டமான போது தான் வருவாங்களோ.. தேவையானதை எல்லாம் செய்ய

வைப்பாங்களோ” பேச பேச உறைந்தான். அவள் சொல்லும் அர்த்தம்?

“அதெல்லாம் நான் யோசிக்கறேன், நான் தான் தப்போ.. இப்போ வந்து நீ என்னை பக்கத்துல விட மாட்டேங்கறன்னு சொல்றீங்க. ஆனா இவ்வளவு நாளா நீங்க வரவேயில்லை. அப்போ நீங்க எப்போ வந்தாலும் நான் எஸ் சொல்லணுமா.. இப்படித் தான் இருக்குமா?”

“நீங்களே வீட்டை விட்டு கூட்டிட்டு வந்துட்டீங்க. இப்போ அந்த வீட்டோடையும் ஃபிரண்ட் ஆகிட்டீங்க, இந்த வீட்டோடையும் ஆகிட்டீங்க. எல்லார் கூடவும் சண்டை போட்டீங்க. இப்போ நல்லா பேசறீங்க. என்கிட்டயும் அப்படி தான் யோசிச்சு யோசிச்சு பேசினீங்க. இப்போ நல்லா பேசறீங்க”

“நான் யாரோடையும் சண்டை போடலை, ஆனா நான்.. என்னால... அப்படி முடியாது.. சொன்னா நான் தப்பு சொல்றீங்க! நிஜமாவே நான் தான் தப்பா எனக்குத் தெரியலை! தெரியலை!” என்று வார்த்தைகள் வேகமாக வந்து விழ கூடவே தேம்பி தேம்பி அழ..

ஈஸ்வருக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.. “இல்லை, நீ தப்பு இல்லை, நான் தான்” என்றவன், “வர்ஷ் முதல்ல எழுந்துரு” என்று அருகில் போக, “வராத, வராத, எனக்கு நீ வேண்டாம். எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியலை. எனக்கு யாரையும் பார்க்கப் பிடிக்கலை. எனக்கு வாழவே பிடிக்கலை.. எவ்வளவு தனியா இருந்த போதும் செத்துப் போகணும்னு நினைச்சது இல்லை. இப்போ அப்படி தான் தோணுது” என வர்ஷினி சொல்ல துடித்து தான் போய்விட்டான்.

“எல்லாம் உன்னால்” என அவள் சொல்வது என்ன? அவனுக்கே புரிந்தது எல்லாம் தன் தவறு என

“வர்ஷி, நீ எப்படி சொல்றயோ அப்படி செய்யலாம். நான் எதுக்கும் உன்னை கம்பல் பண்ண மாட்டேன். நாம அங்க வீட்டுக்குப் போக வேண்டாம், இங்கேயே இருப்போம். நீ எழுந்து வெளில வா முதல்ல” என கெஞ்சினான்.

ஆனாலும் வர்ஷினி அசையவேயில்லை, பேசிக் கொண்டே போனாள், “எனக்கு தான் என்ன பண்றதுன்னே தெரியலையே. அப்புறம் நான் என்ன சொல்வேன். எனக்கு நிஜமாவே தெரியலை, இப்படி தான் மேரேஜ் லைஃப் இருக்குமா.. என் ஹாஸ்டல்ல கூட சந்தோஷமா இருந்தேன், என்னைக்கு உங்களை முரளிண்ணா கல்யாணத்துல பார்த்தேனோ அன்னைக்கு இருந்து என்னோட சந்தோஷம் போச்சு.. நிம்மதி போச்சு.. என்னோட மனசு அமைதியாவே இல்லை.. உங்களோட நடத்தையால எனக்குள்ள ஒரு தாழ்வு மனப்பான்மை வந்துடுச்சு. அது வளர்ந்துட்டேப் போகுது. என்னால அதுல இருந்து வெளில வரவே முடியலை!”

“ஏதேதோ நினைக்கத் தோணுது! லவ் லைஃப் இப்படித் தான் இருக்குமா.. எனக்குத் தெரியலை. நான் ரொம்ப யோசிச்சேன், எனக்குத் தோணுது,_ _ _ _ _ _ _ _ !!!!!” என்று அவள் சொன்ன வார்த்தை..

அதோடு நிறுத்தாமல் அவள் பேசிக் கொண்டே போக.. அவளின் உணர்வுகளின் வெளிப்பாடு “அம்மா!” அவனால் தாங்கவே முடியவில்லை.

“வர்ஷ்” என்றவனால் மேலே பேச முடியவில்லை, தலை சுற்ற ஆரம்பித்தது. விழாமல்

இருக்க சுவரை பிடித்துக் கொண்டான்..

“எங்க கத்துக்கிட்ட இந்த வார்த்தை எல்லாம் நீ” என நெஞ்சு பதைக்க கேட்டவனிடம்..

“நீதானே எல்லாம் எனக்குக் கத்துக் கொடுத்த.. நீதானே அப்படி தோண வெச்சே, உன்னால தானே!” என தேம்பியபடி அவள் சொல்ல..

இல்லை, இல்லை, அவனால் முடியவில்லை. ஒரு கோபம், ஒரு ஆவேசம், ஒரு ஆக்ரோஷம்.. தன்னையே எரித்துக் கொள்ள வேண்டும் போல ஒரு உணர்வு.. அங்கிருந்த சுவரில் அவனின் தலையை அவனே பலமாய் மோதிக் கொண்டான்..

அதைப் பார்த்து அதிர்ந்து பயந்தவள்.. அதிர்ச்சியில் மயங்க ஆரம்பித்தாள்.

பலமாய்.. மிகவும் பலமாய்.. வலியில் அவனே சரிந்து அமர்ந்தான். அந்த இடத்தைத் தொட்டு பார்க்க, ரத்தம் எதுவும் வரவில்லை, ஏன் வரவில்லை? என்று மீண்டும் இடித்துக் கொள்ளப் போனவன்.. வர்ஷினியை பார்க்க..

மயங்கி இருந்தாள்.. விரைந்து அருகில் செல்ல..

அவனுக்குமே மிகவும் வலி.. சென்று அவளிடம் அமர்ந்தவனால் அவளைத் தூக்க முடியவில்லை.. முற்றிலுமாய் பலம் இழந்திருந்தான்.. மனதிலும் சரி, உடலிலும் சரி.. கண்களில் நீர் நிறைந்தது.

“வர்ஷி” என தட்டித் தட்டி எழுப்ப, எழுவதாய்க் காணோம்.. அப்படியே அமர்ந்துவிட்டான்.

புலன்கள் அனைத்தும் செயலிழந்து விட்டன.. அவள் சொன்ன வார்த்தை நிஜமாய் அவனின் புலன்கள் அனைத்தையும் மழுங்கச் செய்திருந்தது.

“உன்னுடைய உணர்வுகளுக்கு வடிகால் கொடுத்த பெண்ணிற்கு, இல்லையில்லை பெண் இல்லை, உன் மனைவிக்கு நீ கொடுத்த உணர்வு இதுதானா? இந்த திருமணத்தில் நீ அவளுக்கு கொடுத்தது இதுதானா.. நீ செய்ததை யாரவது ஒருவரிடம் அவள் சொல்லியிருந்தால் கூட இந்த திருமணம் நடந்திருக்காது! அதையும் விட எல்லோரும் உன்னை எப்படிப் பார்த்திருப்பர், அதையும் விட அவளின் அப்பா உன்னை விட்டிருப்பாரா?”

“எவ்வளவு கர்வம் உன்னிடம்? என்னவோ அவளுக்கு சிறந்த வாழ்க்கை கொடுத்த மாதிரி. கமலம்மா நிலை வராது என்று எவ்வளவு இறுமாப்பாய் எப்படி எல்லோரிடமும் சொன்னாய்? ஆனால் நீ கொடுத்தது என்ன.. அவள் உன்னை காதலிக்கிறாள், இல்லை என்பது வேறு, ஆனால் உன்னுடைய காதல், ஈர்ப்பு எதுவும் நீ அவளிடம் சரியாக பிரதிபலிக்கவில்லை.. அதையும் விட அவளும் உன்னைக் காதலிக்கவேண்டும் என்று ஏன் நினைக்கவில்லை?” ஆண்கள் அழ மாட்டார்கள் என்று யார் சொன்னது.. கண்களில் இருந்து நீர் இறங்க அவளைப் பார்த்து இருந்தான்.

“சாதாரண ஒரு பெண் இந்த வார்த்தையை சொன்னால் கூட முகம் சுளிப்பவன் நீ.. இன்று உன் மனைவி, உன்னிடம் அதை சொல்கிறாள்.. இப்படி நீ உயிரோடு இருக்க வேண்டியதே இல்லை” என்று மனம் அவனை அடிக்க..

“இல்லை, என்னால் முடியாது, என்னால் இறக்க முடியாது, நான் இருக்க வேண்டும்! நான் வாழ வேண்டும்! இவளுக்காக, இவளுக்காக..? இவளைத் தனியே விட்டு என்னால் போக முடியாது” என

மனம் போராட ஆரம்பிக்க.. கூட அவள் பேசியது மனதினில் ஒட..

அவள் சொன்ன வார்த்தை.. “எனக்குத் தோணுது நீங்க என்னை செக்ஸ் வொர்கர் மாதிரி ட்ரீட் பண்ணறிங்களோ.. என்னை ஹக் பண்ணு சொன்னீங்க.. கிஸ் பண்ணு சொன்னீங்க.. நீங்க சொன்ன எல்லாம் தானே செஞ்சேன்.. ஆனாலும் திரும்ப நீங்க ஏன் வரலை.. எனக்கு சொல்லத் தெரியலை. எனக்கு நீங்க வேணும்னு நிறைய முறை ஃபீல் பண்ணினேன், ஆனா நீங்க என் பக்கத்துல வரவேயில்லை”

“நல்ல பொண்ணுங்க எல்லாம் இப்படி நினைக்க மாட்டாங்களா? அப்போ நான் கெட்டப் பொண்ணா? எனக்கேத் தெரியலை! நான் தப்பா? ரொம்ப அசிங்கமா ஃபீல் பண்றேன்” என அவள் பேசிய வார்த்தைகள் உச்சந்தலையில் மீண்டும் மீண்டும் சுத்தியலாய் அடிக்க..

ஆம்! ஒரு பெண்ணிடம் அவனின் தடுமாற்றம் எப்படி அவனை அவளுக்கு உணர்த்தியிருக்கிறது.. அந்த வார்த்தைகளின் வீரியம், அவன் செய்த தவறு.. அவனுமே மயங்கினான்!

குளியறையில் இருவரும் அருகருகில்.. கை கொட்டி சிரித்தது வாழ்க்கை ஈஸ்வர் எனும் மனிதனை நோக்கி..

**அத்தியாயம் அறுபத்தி ஏழு :**

**ஏதேதோ ராகம் எந்நாளும் பாடும்**
**அழையாதார் வாசல் தலைவைத்து ஓடும்**
**வாசமில்லா மலரிது வசந்தத்தை தேடுது!**

முதலில் விழிப்பு வந்தது வர்ஷினிக்குத் தான்.. ஈஸ்வரை பார்த்ததும் பயந்து போனவள்.. வேகமாக நகர்ந்து அவனின் கன்னத்தில் தட்டி தண்ணீரை தெளிக்க.. அசைவு தெரிந்தது அவனிடம்.. அப்போதுதான் சரியாக மூச்சே அவளால் விட முடிந்தது.

கண்விழித்தவனுக்கு தலை விண்ணென்று வலியில் தெறித்தது. முகமும் வலியில் சுருங்கியது.. அவனையே விழி எடுக்காமல் பார்த்திருந்த வர்ஷினியை பார்த்தான், முகத்தில் ஒரு பயம், அதனுடன் அந்த நீல நிறக் கண்களில் அதையும் விட..

“ஒன்னுமில்லை ஐ அம் ஆல் ரைட்” என்றவன் எழ.. அவளும் எழுந்தாள்.

வெளியே வந்தவன் படுக்கையில் அமரப் போக.. “அங்கே” என்று அவசரமாக நாற்காலியை காட்டினாள், கூடவே “பாத்ரூம்ல கீழ உட்கார்ந்து இருந்தோம்” என,

அந்த வலியிலும் அவனின் முகம் மென்மையைக் காட்டி “அங்கே தான் படுக்கை மாதிரி இவ்வளவு நேரமா உருண்டு புரண்டோம்”

“இல்லை, உட்கார்ந்து தான் இருந்தோம்” என்றாள் பதிலுக்கு,

அவளின் பதிலில் தானாக தலையில் அடித்துக் கொண்டவன் வலியில் முகம் சுருக்கினான்.

“ரொம்ப டார்ச்சர் பண்றேனா.. எதுவும் சொல்லக் கூடாதுன்னு தான் இருந்தேன்” என்று வர்ஷினி சொல்லவும்..

“நீ என்னை பண்ணலை, நான் தான் உன்னை பண்ணியிருக்கேன். ஆனா நீ சொல்லலை,

காமிச்சும் கொடுக்கலை. எனக்குத் தான் தெரியலை, ரியல்லி வெரி சாரி” என ஈஸ்வர் வேதனையோடு சொல்ல..

“நான் சொல்றது சரியா.. இல்லை நான் ரொம்ப எதிர் பார்க்கிறேனா, எனக்கு மன நோயா.. மன அழுத்தமா” என வகை வகையாகக் கேட்க..

“இல்லை, அப்படி எல்லாம் எதுவும் இல்லை.. ரொம்ப கோபம் வந்தா என்னை செத்துப் போகக்கூட சொல்லு, ஆனா இந்த வார்த்தை எல்லாம் பேசாதே. என்னால நிஜமாவே முடியலை” என்றவனின் குரல் மட்டுமல்ல கண்கள் கூட கலங்கியது..

தலையை பிடித்துக் கொண்டே அப்படியே அமர்ந்து விட்டான்..

அவனின் தவிப்பைப் பார்த்து “பேசலை” என்று உடனே வர்ஷினி சொல்ல..

முதல் முறையாக “நாம் நினைக்கும் அளவிற்கு இவள் பக்குவப் படவில்லையோ, நாம் சரியாக கணிக்கவில்லையோ?” என்று ஈஸ்வருக்கு தோன்றியது.

என்ன தான் மனிதர்கள் பக்குவமாக இருந்தாலும் எல்லா விஷயங்களையும் வாழ்க்கையில் அப்படியே அதன் போக்கில் எடுத்துக் கொள்வர் என்று சொல்ல முடியாது அல்லவா..

இன்னும் அவனே வாழ்க்கையின் தாத்பர்யங்களை அறிந்து கொள்ளவில்லை, பின் வர்ஷினியைப் பற்றி என்ன தெரிந்து கொள்ள முடியும்.

அவன் தலையைப் பிடித்து அமர.. வேறு அறைக்கு சென்று உடை மாற்றி வந்தாள்.

“நான் உன்கிட்ட பலமுறை சொல்லியிருக்கேன், ரொம்ப யோசிக்காதேன்னு” என்றவனுக்கு.. இன்னும் வர்ஷினியின் வார்த்தை கொடுத்த தாக்கம் மிக அதிகமாக இருக்க.. அப்படியே அந்த இருக்கையில் கண் மூடி சாய்ந்து கொண்டான்.

வர்ஷினி அவனையே பார்த்து அமர்ந்திருக்க.. அவன் விழிகளின் ஓரம் ஈரம் கசிவது தெரிந்தது... சென்று துடைக்க வேண்டும் போல தோன்ற, அதே நேரம் போகாதே என்று மனது சாட, அவளும் சோர்ந்து அமர்ந்து கொண்டாள்.

திரும்பவும் அவளுள் யோசனைகள் “நான் செய்வது சரியா? தவறா?” என யோசிக்க யோசிக்க மனதில் பாரம் ஏற, தாள முடியாதவளாக.. எழுந்து சென்று மாத்திரை எடுத்து.. தண்ணீர் தேடிச் சென்று, அதை வாயினில் போட்டு நிமிர்ந்தால், அவளைப் பார்த்தபடி ஈஸ்வர் நின்றிருந்தான்.

“என்ன சாப்பிடற?”

“அது, அது” என்று அவள் தயங்க..

“தூக்க மாத்திரையா? எனக்கும் ஒன்னு கொடு!” என்று ஈஸ்வர் கை நீட்ட...

“இல்லை, உங்களுக்கு வேண்டாம்!” என்றாள் வர்ஷினி.

“கொடுன்னு சொல்றேன்ல, கொடு!” என்று அவளின் கையினில் இருந்த பாட்டிலை பிடிங்கிக் கொள்ள, வர்ஷினி எதிர் பார்க்கவில்லை.

“என்ன பண்ணறீங்க, குடுங்க!” என வர்ஷினி பதட்டமாக கேட்க,

“வர்ஷி, எனக்கு பயங்கரமா வலிக்குது, தலையும் வலிக்குது, மனசும் வலிக்குது, எனக்குத் தூங்கணும்!” என்றவன்,

ஒரு மாத்திரையை எடுத்து வாயில் போட்டுக் கொள்ள, ஒன்றும் செய்ய இயலாதவளாக பார்த்துக் கொண்டு இருந்தாள்.

எடுத்துக் கொண்ட சிறிது நேரத்திலேயே உடல் அவனின் கட்டுப் பாட்டில் இல்லாதது போன்ற ஒரு உணர்வு.. கூடவே உடலில் ஒரு பரவசம்.. சிரிக்க வேண்டும் போன்ற ஒரு உணர்வு.. அழ வேண்டும் போலவும் ஒரு உணர்வு.. உடல் தள்ளாட போய் படுத்துக் கொண்டான்.

“என்ன மாத்திரை இது? ரொம்ப ஹெவி டோஸ் தூக்க மாத்திரையா? ஏன் இதையெல்லாம் எடுக்கற?” என்று சொல்லும் போது கூட வேறு சந்தேகம் அவனுக்கு இல்லை.. தள்ளுவது போலத் தோன்ற.. படுக்கையில் போய் விழுந்தான்..

சிறிது நேரத்தில் உறங்கியும் போனான்.. ஈஸ்வருக்கு அது புதிது என்பதால் ஒரு மாதிரி மப்பில் படுத்ததும் உறங்கிவிட...

வர்ஷினிக்கு அவ்வளவு எளிதில் உறக்கம் அணுகவில்லை.. உடல் அதற்கும் மயங்கவில்லை.. உள்ளமும் கொதித்து கொண்டு தான் இருந்தது.. “எதற்கு நீ அவனிடம் உன்னைப் பற்றி பேசினாய்” என்று அவளுக்கு அவளே கேள்வி கேட்டுக் கொண்டவள்.. “இவனுக்கு வேறு தெரிந்து விட்டால்?” என்று மாத்திரையைப் பற்றியும் நினைத்தவள்..

ஈஸ்வரின் முகத்தை சிறிது நேரம் பார்த்து இருந்தாள்.. “பேசியிருக்க வேண்டாமோ?

உன்னைப் பற்றி என்ன நினைத்து இருப்பான்? எதையெல்லாம் பேசியிருக்கிறாய் நீ" என்று மனதில் ஒரு கழிவிறக்கம் கூட.

"என்ன நினைத்தால் எனக்கு என்ன? எவனாய் இருந்தால் என்ன?" என்ற ஒரு இறுமாப்பு அந்த நொடியில் தோன்ற.. மனதில் ஒரு அமைதி.. கண்களை மூடினாள்.

முதல் நாள் மாலை ஏழு மணி போல உறங்கி, அடுத்த நாள் காலை பத்து மணிக்கு தான் ஈஸ்வருக்கு விழிப்பு வந்தது.. எழுந்தவனால் அமரவே முடியவில்லை ஒரு மாதிரி தள்ள.. மீண்டும் படுத்துக் கொண்டான்.

"என்ன மாத்திரை இது? எக்ஸ்பையரி ஆகியிருக்குமோ.. இல்லை தப்பாக மாத்திரை கொடுத்து விட்டார்களா?" என்று யோசித்தவன் வர்ஷினியைத் தேட..

அவள் இன்னுமே உறக்கத்தில்.. கையை நீட்டி மொபைல் எடுத்தால் பார்த்தால், அத்தனை ஃபோன் கால்கள்... மலரிடம் இருந்து மிகவும் அதிகம்.. நேற்று இரவில் இருந்து அழைப்புக்கள்..

உடனே அம்மாவிற்கு அழைத்தான்..

எடுத்தவுடனே "என்ன விஸ்வா? என்ன ஆச்சு? ஏன் நேத்துல இருந்து ஃபோன் எடுக்கலை.. இப்போ உங்க வீட்டுக்குத் தான் கிளம்பிட்டே இருக்கேன்" என,

"சீக்கிரம் தூங்கிட்டோம் மா போன் சைலன்ட்ல போட்டு.. இப்போ தான் எழுந்தேன்" என,

"இவ்வளவு நேரமாவா தூங்கின?"

"என்னவோ தூங்கிட்டேன் மா நீங்க வராதீங்க.. இப்போ நாங்க வெளில போறோம், வந்ததும்

கூப்பிடறேன்"

"எங்கேடா?" என்றவரிடம், "அம்மா வைங்க, நான் அப்புறம் பேசறேன்" என்று வைத்தவன். வேறு யாருக்கும் எல்லாம் திரும்ப அழைக்கவில்லை.

சாய்ந்து அமர்ந்தவாறு வர்ஷினியைப் பார்த்திருந்தான்.. பிறகு "மாத்திரை இவளுக்கும் இப்படித் தான் இருக்கிறதோ? ஒத்துக்கொள்ளவில்லையோ?" எனத் தோன்ற, வேகமாக "வர்ஷினி" என்று பதட்டத்துடன் அவளை தொட்டுப் பார்க்க.. மூச்செல்லாம் சீராய்த் தான் இருந்தது.

ஆனாலும் உலுக்கி எழுப்ப ஆரம்பித்தான் பயத்துடன்..

வேகமான உலுக்களுக்குள் பின் மெதுவாக கண்களை திறந்தாள்..

"வர்ஷ், உனக்கு என்ன பண்ணுது" என்றான் பதட்டமாக.

"என்ன பண்ணுது, ஒன்னுமில்லையே" என்றாள் படுத்தவாரே,

"எழுந்துருச்சு பாரு, என்னால ஒன்னுமே முடியலை, நிற்கவே முடியலை. டேப்லட் சரியில்லை போல" என பேசினான்.. வேகமாக பேச நினைத்தாலும், வார்த்தைகள் சற்று மெதுவாக தான் வந்தது.

"ஹாஸ்பிடல் போயிடலாம், எழுந்துரு" என,

"ப்ச்" என சலித்தவள், "அதெல்லாம் ஒன்னுமில்லை, ஒரு ஒரு நாள் இப்படி இருக்கும். அப்புறம் சரியாகிடும்" என்றாள்.

"இப்படி தான் இருக்குமா?" என்று அதிர்ச்சியாகக் கேட்டான்.

“ஆமாம்!” என்பது போலத் தலையாட்டவும்,

“யாரோ தப்பா குடுத்திருக்காங்க, தூக்க மாத்திரை இப்படி இருக்காது. ஒரு வேளை டேட் எக்ஸ்பையரி ஆகிடுச்சோ” என்றான் சந்தேகமாக.

அது சொன்ன போதும் வர்ஷினியின் மேல் கடுகளவும் சந்தேகமில்லை..

வர்ஷினி ஒரு பிரதிபளிப்பும் இல்லாமல் பார்த்திருக்க.. அந்த நீல நிறக் கண்கள் அவனை வெறித்திருக்க..

அந்தக் கண்களில் என்ன கண்டானோ? “என்ன மாத்திரை இது?” என்றான்.

வர்ஷினி பார்வையை அப்போதும் மாற்றவில்லை, பதிலும் சொல்லவில்லை, அவளுடைய மௌனம் ஒரு பயத்தைக் கொடுக்க..

“என்ன மாத்திரை வர்ஷ்?” என்றான் அதட்டலாக..

அப்போதும் படுத்திருந்தவள் அசையவில்லை.. முகத்திலும் அவன் கேட்கிறான் பதில் சொல்ல வேண்டும் என்ற எந்த உணர்வும் இல்லை.. அப்படியே அவனை நேர் பார்வை பார்த்திருந்தாள்.

“உண்மையை சொல்லு!” என்று கோபம் ஏறக் கேட்டான்.

“சொல்லலைன்னா என்ன பண்ணுவீங்க?” என்றபடி எழுந்து அமர..

ஆம்! என்ன செய்வான்? அவனுக்கே தெரியாதே!

“நேத்தே எக்ஸ்ட்ரீம்மா என்னை பார்த்து ஒரு வார்த்தை சொல்லிட்ட? இன்னைக்கு என்ன வெச்சிருக்க? சம்திங் டெல்ஸ் மீ, ஏதோ சரியில்லை!” என,

“ஆமாம்! சரியில்லை! இப்போ அதுக்கென்ன?” என்று திரும்பவும் அலட்சியமாக பேசினாள். செய்த தவறு வெளிப்படும் போது, ஆம்! நான் அப்படித்தான் என்று வெளிப்படும் ஒரு செயல் இது.

“என்ன பதில் இது? ஒழுங்கா என்னன்னு சொல்லு? இல்லை...” என்று ஈஸ்வர் அவ்வளவு கோபமாய் கேட்க,

அதற்கான பிரதிபளிப்பு சிறிதும் அவளிடம் இல்லை... “சொல்ல மாட்டியா? ஓகே ஃபைன், நான் ப்ளட் டெஸ்ட் குடுக்கறேன்” என்றவன், தொலைபேசி எடுத்து, ஹோம் சர்விஸ் வைத்துள்ள ஒரு லேபிற்கு அழைத்து பேச ஆரம்பிக்க..

அப்போது தான் முகத்தில் ஒரு சலிப்பை காட்டியவள், “வை” என்பது போல ஒரு சைகை செய்தாள்.

“நீ சொல்லு, அப்போ தான் வைப்பேன்” என,

“என்னவோ பண்ணுங்க?” என்றபடி, சொல்ல முடியாது என்பது போல அவள் எழ.. இந்த மிரட்டல் அவளிடம் வேலைக்கு ஆகாது எனப் புரிந்து, அவசரமாக ஃபோனை வைத்து, “வெச்சிட்டேன் சொல்லு!” என்றான்.

“அதோட பேர்” என்று அதனுடைய பெயர் சொன்னவள், எழுந்து குளியலைறை போக..

என்ன வென்று புரியாமல், எப்போதும் வர்ஷினி செய்யும் வேலையை ஈஸ்வர் செய்தான்.. ஆம்! இணையத்தில் தேடத் தேட.. முகம் வெளுத்து.. இதயம் உச்ச பட்சமாய் துடிக்க..

வெளியே வந்தவள் அவனைப் பார்த்ததும், தெரிந்து கொண்டான் எனப் புரிந்து.. மீண்டும் சென்று படுத்துக் கொண்டாள்.. நிற்கவே

முடியவில்லை அவளாலும்.. ஒரு போதை! அதன் தாக்கம் அது!

அவள் எடுப்பது சற்று ஹெவி டோஸ்! எப்படியும் ஒரு நாள் முழுக்கவாவது அதன் தாக்கம் இருக்கும்!

ஈஸ்வர் தன்னைப் பார்ப்பது தெரிந்தாலும், அவனைப் பாராமல் கண்களை மூடி கொண்டாள்..

அதிர்ச்சி, அதனுடன் இப்போதைய வர்ஷினியின் செய்கை, பார்க்கப் பார்க்க, கோபம், ஆத்திரம், பிரவாகமாக அவனுள் பொங்க.. படுத்திருந்த அவளை கையைப் பிடித்து எழுப்ப முயன்றான்.

"ஏய், என்ன பண்ணியிருக்க தெரியுமா? எப்படி உன்னால இது முடிஞ்சது! எழுந்திரு முதல்ல!" என்று இழுக்க.. அது அப்படி ஒரு வலியைக் கொடுக்க..

"விடு, விடு, என்னை, வலிக்குது!" என்றவள், அவன் விடாது இருக்கவும், "கத்துவேன், எதையாவது போட்டு உடைப்பேன், விடு என்னை!" என,

"நீ என்ன பண்ணிட்டு இருக்க தெரியுமா? நீ ட்ரக் அடிக்டா?" என ஆத்திர மிகுதியில் ஈஸ்வர் கத்த,

"ஆமாம்! ட்ரக் எடுத்துக்கறேன் தான். ஆனா அடிக்ட் எல்லாம் கிடையாது! என்னோடவே தானே இருக்க.. உனக்குத் தெரிஞ்சதா நானா சொல்ற வரைக்கும்! ஆமாம், எடுத்துக்கறேன், எடுத்துக்குவேன்! எனக்கு எப்போ எப்போ தேவையோ அப்போ எல்லாம்!" என பதிலுக்கு வர்ஷினியும் கத்தினாள்.

"எடுத்துப் பாரு, கொன்னுடறேன் உன்னை" என்றான் ஆத்திர மிகுதியில்.

“கொன்னுக்கோ? என்ன வேணா பண்ணிக்கோ? நான் எடுத்துக்குவேன்!” என்றவள், “அன்ட் எப்போ இருந்து தெரியுமா நான் இதை எடுக்க ஆரம்பிச்சேன். என்னோட எய்டீன்த் பர்த்டேக்கு அப்புறம்” என ஆவேசமாகப் பேச..

“சும்மா நீ பண்ற தப்புக்கெல்லாம் என்னைச் சொல்லாதே.. என்ன பண்ணினேன் உன்னை நான்.. நீ ட்ரக் எடுக்குற அளவுக்கு, அதெல்லாம் ஒன்னுமேயில்லை! சும்மா கதை விடாத.. நான் உன்கிட்ட தப்பா நடந்ததை உங்கப்பா கிட்ட சொல்ல வேண்டியது தானே! அதை விட்டு நீ ட்ரக்ஸ் எடுப்பியா? இனிமே எடுத்துப் பாரு? உன்னை நிஜமாவே கொன்னுடறேன்” என்று ஈஸ்வர் பேசியது யாருக்கும் பயத்தைக் கொடுக்கும்.

ஆனாலும் அசட்டு பிடிவாதமாக, “அப்படித் தான் எடுப்பேன்” என விடாமல் பேச..

இன்னும் அவள் போதை மாத்திரை எடுத்தாள் என்பதையே ஜீரணிக்க முடியவில்லை. இதில் மேலும் மேலும் “எடுப்பேன்,உன்னால் என்ன செய்ய முடியும்” என்பது போலப் பேச..

கோபம் கட்டுப் படுத்த முடியாமல் அவளை ஓங்கி அறைந்தான்.

அடித்த அவனிற்கே கை வலித்தது. அடி வாங்கியும் அசையாமல் அவனை எதிர் கொண்டவள்.. “அடிச்சா, நிறுத்திடுவேனா.. முதல்ல எப்போவாவது தான் எடுப்பேன். ஆனா இப்போ சொல்றேன், டெய்லி எடுப்பேன், உன்னால என்ன செய்ய முடியும் செஞ்சிக்கோ, என்னால திரும்ப அடிக்க முடியாதுன்னு தானே நீ என்னை அடிக்கற,

நான் என்ன செய்யறேன் பாரு!" கண்களில் நீர்வழியப் பேச..

ஒன்றும் செய்ய இயலாதவனாக, அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக, சுவரில் சாய்ந்து அமர்ந்து விட்டான்.. கண்களும் தானாக மூடிக் கொள்ள.. அவன் விழி திறந்த போது வர்ஷினி திரும்பவும் உறக்கத்தில்.. கன்னத்தில் அவன் அடித்த கைத்தடங்கள் அச்சாக அப்படியே பதிந்து இருந்தது, ஐந்து விரல்களுமே.. அதுவே சொன்னது அவனின் அடியின் தாக்கத்தை..

கண்கள் கலங்க அவளையே பார்த்திருந்தான். நிஜமாக அவனால் அவளை சமாளிக்க முடியும் என்று தோன்றவேயில்லை!

நேற்று சொன்ன வார்த்தையை விடவும் இன்று அவளின் நிலை இன்னும் வலித்தது!

**திருமுகம் வந்து பழகுமோ**
**அறிமுகம் செய்து விலகுமோ**
**விழிகளில் துளிகள் வழியுமோ**
**அது சுடுவதை தாங்க முடியுமோ**
**கனவினில் எந்தன் உயிரில் உறவாகி**
**விடிகையில் இன்று அழுது பிரிவாகி**
**தனிமையில் எந்தன் இதயம் சருகாகி**
**உதிருமோ..**

**திரைகள் இட்டாலும் மறைந்து கொள்ளாது**
**அணைகள் இட்டாலும் வழியில் நில்லாது...**

## அத்தியாயம் அறுபத்து எட்டு :

**வலியென்றால் காதலின் வலிதான்**
**வலிகளில் பெரிது**
**அது வாழ்வினும் கொடிது!**

அடுத்த நாள் காலை வரை வர்ஷினியின் உறக்கம் தொடர.. ஈஸ்வர் முதல் நாள் இரவே சற்று

தேறிக் கொண்டு தெளிவாகி விட்டான். உணவே அதன் பிறகு தான் அவனுக்கு இறங்கியது. அவளையும் சிரமப்பட்டு எழுப்பி சிறிது உணவை உள்ளே தள்ள வைத்து தான் தூங்க விட்டான். அப்போதும் உன்னை விடேன் என்பது போல கைவளைவிலேயே அவளை வைத்திருந்தான் இரவு முழுவதுமே.. உறங்கியும் உறங்காமலும் அந்த இரவு நீண்டது.

ஒரு மாதிரி மயக்கத்தில் இருந்தாலும் அது வர்ஷினிக்கு புரிந்தது. விலக நினைத்தாலும் முடியவில்லை.. காலையில் எழுந்த போது இருவருமே தெளிவாக இருக்க.. வர்ஷினியின் கன்னம் இன்னும் சற்று வீக்கத்தை காட்டியது, அவனின் கை தடங்களும் முன் தினம் போல அச்சாக தெரியவில்லா விட்டாலும், தெரிவிக்க தான் செய்தது.

“சாரி” என்றான்.. வர்ஷினி பதில் எதுவும் பேசவில்லை.. அப்போது மட்டுமல்ல அதன் பிறகு வந்த நாட்களிலும்... ஒரு ஆழ்ந்த மௌனம்.. ஈஸ்வருக்கு அவளிடம் பேசவே பயமாக இருந்தது.. தான் பேசப் போய் அந்த கோபத்தில் தினமும் என சொன்னது போல அந்த மாத்திரையை அவள் எடுக்க ஆரம்பித்து விட்டால்!

இந்த நினைவாலேயே ஈஸ்வருக்கு எந்த வேலையும் ஓடவில்லை, எதுவும் செய்ய முடியவில்லை.. இரவு பகல் வர்ஷினியின் எண்ணம் மட்டுமே மனதினில்..

ஃபைனான்ஸ் வேலைகள் எல்லாம் அப்படியே நின்றன.. பத்து லட்சம் என்று எழுத வேண்டிய செக்கை ஒரு கோடி என எழுதி கொடுத்து விட..

பேங்க் மேனேஜர் அழைத்து “என்ன மிஸ்டர் விஸ்வேஸ்வரன், இதை நான் பாஸ் பண்ணவா, அமௌன்ட் ரொம்ப அதிகமா இருக்கு” என்றதும் தான் ஓடியவன், “சாரி, தப்பா எழுதிட்டேன்” என மன்னிப்பு கேட்டு, அவரிடம் இருந்து அதை திரும்ப வாங்கி பின்பு சரியாக எழுதிக் கொடுத்தான்.

பின் அனைத்து வேலைகளையும் ஒத்தி வைத்து விட்டான்.

ஒரு மூன்று நாட்கள் பொறுத்தவன், “வர்ஷ், இன்னும் எத்தனை நாள் இப்படியே இருக்கிறதா உத்தேசம்?” என,

“எப்படி” என்பது போல ஒரு பார்வை பார்த்தாளே தவிர வாய் வார்த்தையாகப் பேசவில்லை.

அவளின் நீல நிறக் கண்களையே பார்த்தபடி “இப்படி பேசாம” என,

கேள்வியாக பார்த்த அவளின் பார்வையில் ஒரு தீவிரம் தோன்றியது.. “எனக்கு இங்க இருக்கப் பிடிக்கலை, என்ன பண்ணலாம்?” என்றாள் குரலிலும் தீவிரத்தை தாங்கி.

“வர்ஷ், கணவன் மனைவின்னா சண்டை வர்றது சகஜம்!” என்றான் பொறுமையாக.

“எத்தனை முறை இதை சொல்வீங்க, ரொம்ப இர்ரிடேட் ஆகறேன். எனக்கு இந்த கான்செப்ட் ஒத்து வராது, என்ன பண்ணலாம்?” என்றாள்.. குரலில் ஒரு மூன்றாம் மனிதரிடம் பேசும் பாவனையே.

ஈஸ்வருக்கு பேசவும் பயமாக இருந்தது, திரும்பவும் மாத்திரை அது இது என்று கிளம்பிவிட்டால், “வர்ஷ்” என்றான்

இயலாமையில்.. ஆம், சொல்லிவிட்டாலும், அன்றைக்கு பிறகு அவள் அதை தொட்ட மாதிரி தெரியவில்லை. திரும்பவும் தன்னால் ஆரம்பித்து விடக் கூடாது என்ற நினைவு அவனை எதையும் பேச விடாமல் தடுத்தது.

"நானே பேசணும்னு தான் இருந்தேன்.. நான் கொஞ்சம் நாள் ஹாஸ்டல் போகலாம்ன்னு இருக்கேன்" என,

"என்ன?" என்று அவளின் பதிலில் அதிர்ந்தவன்.. "என்ன உளர்ற?" என்றான் கோபமாக.

"எஸ், எனக்கு இங்க எதுவும் செட் ஆகலை.. நான் போறேன்" என,

"அதெல்லாம் விட முடியாது" என்றான் கறாராக.

"நான் உங்க கிட்ட பெர்மிஷன் கேட்கலை, இன்ஃபர்மேஷன் தான் சொல்றேன்"

ஈஸ்வரின் பொறுமை பறக்க ஆரம்பிதது. "வர்ஷ், என்ன பேச்சு இது?" என அதட்டினான்.

சட்டென்று ஒரு ஆவேசம் மூள, "எனக்கு உன்னைப் பார்க்க பிடிக்கலை. ஐ ஹேட் யூ. கொஞ்சம் நாள்ல எனக்கு பைத்தியம் பிடிக்கும்னு நினைக்கிறேன். நாம சேர்ந்து இருக்கிறது இப்போ முக்கியமில்லை. ஃலைப்ஃப இனியும் எனக்கு காம்ப்ளிகேட் பண்ணிக்க விருப்பமில்லை. என்னை விட்டுடுங்க. நிறைய முயற்சி பண்ணிட்டேன் என்னோட இயல்பையும் மீறி, என்னால இனி முடியும்ன்னு தோணலை" என்றாள்.

ஆவேசமாக பேசினாலும் தெளிவாகப் பேசினாள். இதைப் பற்றிய சிந்தனைகள் நிறைய செய்திருப்பாள் என்று பேச்சிலேயே புரிந்தது.

“உனக்கு என் மேல கோபம். ஓகே ஃபைன், நானும் சில பல தப்புகள் பண்ணிட்டேன். என்னை பார்க்கப் பிடிக்கலைன்னா உங்க அம்மா வீட்டுக்குப் போ.. ஒரு டூ த்ரீ டேஸ் இரு, மைன்ட் ரெஃப்ரஷ் பண்ணிக்கோ.. திரும்ப நான் வந்து கூட்டிட்டு வரேன்” என்றான் சமாதானமாக.

“எனக்கு எங்கேயும் போக வேண்டாம். யாரையும் பார்க்கப் பிடிக்கலை, ஹாஸ்டல் தான் போகணும்” என்றாள் பிடிவாதமாக.

“பிடிவாதம் பிடிக்காதே வர்ஷ்.. அம்மா வீட்டுக்கு போனாக் கூட ஓகே, ஆனா ஹாஸ்டல் எல்லாம் போனா தப்பா பேசுவாங்க”

“இப்படி யாரும் எப்பவும் என்னைப் பத்தி பேசக் கூடாதுன்னு நினைச்சு தான் இங்கே வந்து நின்னிருக்கேன். இனி எனக்கு யாரை பத்தியும் கவலை இல்லை, எனக்கு என் நிம்மதி தான் முக்கியம். எனக்கு இப்போ இங்கே இருந்து விடுதலை வேணும்!” என்றாள் கறார் குரலில்.

“முடியாது! குடுக்க முடியாது! நீ ஹாஸ்டல் போக விடமாட்டேன்” என்று ஈஸ்வரும் தீர்க்கமாகச் சொல்ல..

ஒரு ஆக்ரோஷ பார்வை அவனைப் பார்த்தவள் வேறு பேசவில்லை, திரும்ப நடக்கப் போக.. “வர்ஷ்” என்று அவளின் கை பிடிக்க முயன்றான்.

“தொடாதே” என்று சீறியவள்.. அவனை முறைத்து நின்றாள். “வர்ஷி பேபி, கோபப்படாதே புரிஞ்சிக்கோ!” என,

“நீ முதல்ல என்னை புரிஞ்சிக்கோ, நான் இனி யாரையும் புரிஞ்சிக்கறதா இல்லை” என ஆவேசமாகக் கத்தியவள், ரூமில் சென்று புகுந்து

கதவை அடைத்துக் கொண்டாள், உணவு உண்ணவும் வரவில்லை..

அழைத்து அழைத்துப் பார்க்க.. “வேண்டாம், போ, போ” என அவள் கத்த, வெளியில் கேட்டால் என்ன செய்வது என்று தடுமாறி அப்போதைக்கு அதை விட்டவன்.. அவனும் உண்ணப் பிடிக்காமல் ஹாலில் அமர்ந்து கொண்டான்..

அமர்ந்து இருந்தவன் தன்னை அறியாமல் கண் அசந்து விட.. சிறிது நேரம் கழித்து விழித்த போது.. வீட்டின் முன் கதவு திறந்திருக்க.. “நான் தானே கதவை தாளிட்டேன், எப்படித் திறந்தது” என்று பதட்டமாக ஈஸ்வர் எழ.. வர்ஷினியையும் காணவில்லை, லம்பாகினியையும் காணவில்லை..

தெரிந்த நொடி கை கால் எல்லாம் ஓய்ந்து விட்டது.. நிற்கவே முடியவில்லை.. மனது பட பட வென்று அடித்துக் கொள்ள.. எங்கே என்று தேடுவான்.. யாரிடம் சொல்வான்.. கண்களில் நீர் வந்தது.. சர்வமும் ஒடுங்கி நின்றான்..

---------------------------------------------------------------------------

மேலே போகும் மேகம் எல்லாம்
கட்டுப்பட்டு ஆடாதோ..!
உன்னைப் பாத்து அலைகள் எல்லாம்
மெட்டுக்கட்டிப் பாடாதோ..!

இப்படி நான் ஆனதில்லை
புத்திமாறிப் போனதில்லை..!
முன்னே பின்னே நேர்ந்ததில்லை
மூக்கு நுனி வேர்த்ததில்லை..!

கன்னிப்பொண்ணு கண்ணுக்குள்ள
கத்திச்சண்டை கண்டாயோ..!
படபடக்கும் நெஞ்சுக்குள்ள

பட்டாம்பூச்சி பார்த்தாயோ..
இசை கேட்டாயோ...!

தாகப்பட்ட நெஞ்சுக்குள்ள
ஏகப்பட்ட சந்தோசம்..!
உண்மை சொல்லு பெண்ணே -என்னை
என்ன செய்ய உத்தேசம்..!

வார்த்தை ஒன்று வாய் வரைக்கும்
வந்து வந்து போவதென்ன..!
கட்டுமரம் பூப்பூக்க
ஆசைப்பட்டு ஆவதென்ன..!

கட்டுத்தறி காளை நானே
கன்னுக்குட்டி ஆனேனே..!
தொட்டுத் தொட்டு தென்றல் பேச
தூக்கம் கெட்டுப் போனேனே..!
சொல் பொன்மானே...!

அந்த ஏகாந்தத்தில் பாடல் ஒலித்துக் கொண்டிருக்க.. நீல வானை வெறித்துப் படுத்திருந்தான் விஸ்வேஸ்வரன்.. இந்த மாதிரி பாடல்கள் எல்லாம் ஒரு மூன்று நான்கு வருடங்களுக்கு முன் ஈஸ்வர் கேட்டிருப்பானா என்றால் இல்லை.. இல்லவே இல்லை!

ஆனால் இப்போது பாடல்கள் அவனின் வாழ்க்கையில் ஒரு அங்கமாகிப் போயின.. இளையராஜாவின் இசை அவனின் மனதிற்கு அருமருந்து ஆனது உண்மை..

வாழ்க்கையில் எவ்வளவு மாற்றங்கள்.. ஒரு பெண்ணின் மேல் கொண்டது காதலா காமமா எனத் தெரியாமல், காமத்தை கடந்து காதல் என உணர்ந்த நேரம், அதை புரிய வைக்க

முடியவில்லை.. புரிகிறது என சொல்லி ,ஆனாலும் நீ தேவையில்லை என சொல்லி ஒருத்தி பிடிவாதம் பிடிக்க..

அந்த பிடிவாதத்தின் அளவு அவளையே அழிப்பதாய் இருக்க.. “சொல் என்ன வேண்டும்?” என்றவனிடம், “உன்னிடம் இருந்து விடுதலை” என, “கொடுத்தேன் போ” என வந்தே விட்டான். ஆயிற்று மூன்றரை வருடங்கள் ஆகிற்று..

இன்னம் அதன் தாக்கம் இருந்தது. அவள் வீட்டை விட்டு சென்ற தினமும், அதன் பிறகு நடந்த நிகழ்வுகளும் அவனை முற்றிலுமாய் ஒடுக்கி இருக்க.. அவளின் நலன் மட்டுமே முக்கியமாய் தெரிய.. “நீ நல்லா இருக்கணும், அதுக்கு நான் உன்னை பிரியணும்னா பிரிஞ்சிடலாம்” என்று அவனே சொல்லிவிட்டான்.

ஒவ்வொரு நொடியும் அவளைக் காண கண்கள் ஏங்கியது.. அவள் சொல்லாமல் கொள்ளாமல் சென்ற தினத்தில் ஆரம்பித்த இந்த தவிப்பு கொஞ்சமும் குறையவில்லை.. எப்போதும் பதட்டத்திலேயே இருந்தான்.. ஒரு அலைபேசி எடுத்து பேசக் கூட முடியவில்லை.. என்ன செய்தியோ என்ற பயம்.. அந்த பயத்தையும் விட பெரிய விஷயம் அந்த பயத்தை யாருக்கும் தெரிய விடாமல் பார்த்துக் கொள்வது....

நீல வானும், நீல கடலும், சிறிது மனதிற்கு அமைதியைக் கொடுப்பதால் எப்பொழுது எல்லாம் முடிகிறதோ அப்பொழுது எல்லாம் இங்கு வருவதை வாடிக்கையாய் வைத்திருந்தான்..

ஆம்! கடலின் நடுவில் ஒரு விசைப் படகில் அந்த படகின் விசையை அணைத்து, தண்ணீரில் அது மிதக்க.. அதில் அவனும் மிதந்து கொண்டிருந்தான்..

அந்த இரவில் சரியாக புலப்படாத வானின் நீலத்தை தேடிக் கொண்டிருந்தன அவனின் விழிகள்.. வானின் நீலத்தையா இல்லை அவளின் விழிகளின் நீலத்தையா அவன் மனம் மட்டுமே அறியும்..

அவள் நன்றாக இருந்தால் போதும் என்று விட்டு விட்டவனால், நன்றாக இருக்கிறாளா இல்லையா என்ற தவிப்பை கடந்து வர முடியவில்லை..

இங்கே இரவாய் இருக்க.. அங்கே பகலாகிப் போன ஒரு ஊரில் கம்ப்யுடர் முன் அமர்ந்து தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தாள் வர்ஷினி..

அவள் இருந்த இடம் ஹாலிவுட்.. எனப் படும் மாய உலகம்.. அங்கே இருந்த ஒரு ஸ்டுடியோவில் ஒரு அனிமேஷன் திரைப் படத்திற்கு ஸ்பெஷல் எஃபக்ட்ஸ் சேர்த்துக் கொண்டிருந்தாள்.

ஆம்! ஈஸ்வருடன் இருந்த போது அவளுடைய படிப்பு மாஸ் மீடியாவில் ஒன்றரை வருடமாய் இருக்க.. அதனை அதன் பின் கல்லூரி ஹாஸ்டலில் தங்கி முடித்தாள்.. பின்பு அதன் மேலும் படிக்க அமெரிக்கா வந்து இரண்டு வருட படிப்பை முடித்து.. அதில் மிக சிறப்பாக செய்ததினால்..

ஹாலிவுட்டில் இருக்கும் சிறந்த அனிமேட்டர் ஒருவர் ஒரு சிறு வேலையைக் கொடுத்திருக்க அதை தான் அப்போது செய்து கொண்டிருந்தாள். அதனை தவிர வேறு எதிலும் கவனம் இல்லை சிந்தனையும் இல்லை.. இப்போது மட்டுமல்ல.. ஈஸ்வரை பிரிந்து ஹாஸ்டல் வந்த சில நாட்களிலிலேயே எல்லாவற்றிலும் இருந்து மனம் தேறிக் கொண்டாள்..

சொல்லப் போனால் வீடு வந்த உணர்வு.. ஹாஸ்டலிலேயே வளர்ந்து விட்டவளுக்கு திரும்பவும் ஹாஸ்டல் சூழல் பழகிப் போனது..

யாரையும் அவளிடம் பேச அனுமதிக்கவில்லை.. பார்வையே அன்னியமாய் போக யாராலும் அவளை நெருங்க முடியவில்லை.. அவளின் வீட்டினரும் சரி, ஈஸ்வரின் வீட்டினரும் சரி.. ஏதாவது அடாவடித்தனம் செய்து வீட்டிற்கு அழைத்து வரலாம் இல்லை கட்டாயப் படுத்தலாம், என்றால் அதற்கு ஈஸ்வர் அனுமதிக்க வில்லை..

ஆம்! அவளை யாரும் எதற்கும் கட்டாயப்படுத்த தொந்தரவு கொடுக்க ஈஸ்வர் அனுமதிக்க வில்லை.. விஷ்வேஷ்வரனுக்கு சங்கீத வர்ஷினியின் நலன் மட்டுமே முக்கியமாகிப் போக.. யாரும் அவளை நெருங்க அவனே அனுமதிக்கவில்லை.

அதுவும் அவளுடன் இருந்தவனைப் பார்த்து அனைவரும் பதற.. ஈஸ்வருக்கு எதற்கும் பதட்டமில்லை.. அதனால் தான் வர்ஷினியால் திரும்பவும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முடிந்தது, அவளின் வேலைகளைப் பார்க்க முடிந்தது.. படிக்க முடிந்தது.. சிறப்பாக செயல் பட முடிந்தது..

அவளும் ஈஸ்வருக்கு கொடுத்த வாக்கின் படி திரும்ப அந்த போதை வஸ்துவின் உதவியை எதற்கும் நாடவில்லை..

அவள் ஈஸ்வருக்கு கொடுத்த வாக்கு... அதுதான்... அந்த வாக்கு தான்... ஈஸ்வரை அவளை இன்னும் நெருங்க விடாமல் செய்கிறது.

“நீ இந்தப் பழக்கத்தை விட்டுடு, நீ எது சொன்னாலும் செய்யறேன்” என,

“அப்போ நீ என்னை விட்டுடு, நான் அதை விட்டுடறேன்” என்றது தான் வர்ஷினியின் பதிலாகிப் போக..

நொடியில் “ஓகே, விட்டுடறேன்” என்றவன், “ஆனா திரும்ப நீ அது பக்கம் போன.. நீ என்ன ஆனாலும் பரவாயில்லைன்னு உன் கிட்ட வந்துடுவேன்.. அப்போவும் முடியலைன்னு தோணினா கொன்னுடுவேன். இந்தப் பழக்கத்தினால யார் முன்னயும் நீ கேவலப்படறதையோ இல்லை உன்னை யாரும் கீழ பார்க்குறதையோ என்னால எப்பவும் அனுமதிக்க முடியாது” என சொன்னவனின் குரலில் இருந்த தீவிரம் சொன்னதை செய்வேன் என முடிவுடன் இருந்தது.

அந்த வார்த்தைகளின் தீவிரம் இருவருக்குள்ளும் இன்று வரை இருந்தது..

வர்ஷினி ஈஸ்வர் இல்லாத தன் வாழ்க்கையை யாரும் எந்த குறையும் சொல்ல முடியாதபடி செப்பனிட்டுக் கொண்டாள். அத்தனை பேரும் சுற்றி இருந்த போது மனம் உணர்ந்த தனிமையை, அதன் பிறகு அவள் உணரவில்லை என்பது தான் உண்மை..

அலைபேசி வைப்ரேஷனில் விடாமல் அடிக்க.. அதை பார்த்தவள், எடுக்கவா வேண்டாமா என யோசித்து, இந்தியாவில் எப்படியும் அப்போது நள்ளிரவு ஒரு மணி இருக்கும் என்பதை உணர்ந்து.. அதற்காக வேண்டி எடுத்தாள்.

“ஹல்லோ” என்றவள் “பேய் உலா வர்ற டைம்ல எதுக்கு எனக்கு கூப்பிடணும், அதோட பேச வேண்டியது தானே” என கேலிக் குரலில் கேட்க..

“அதுக்கு தானே உங்களை கூப்பிட்டேன்” என்றவனிடம்..

“ஹ, ஹ” என கலகலவென்று சிரித்தவள், “நான் ரத்தக் காட்டேரின்னு ஒருத்தர் எனக்கு காம்ப்ளிமென்ட் குடுத்தாங்க!” என்றாள் ஈஸ்வரின் நினைவில்.

“நான் வழி மொழியட்டுமா” என்றவனிடம்..

மீண்டும் சிரித்தவள் “வேண்டாம், அது அவர் சொன்ன காம்ப்ளிமென்ட்டா மட்டும் இருக்கட்டும்” என்றவள்..

“எதுக்கு இந்த நேரத்துல கூப்பிட்டீங்க” என,

“இப்போ தானே உங்களுக்கு அங்கே பகல் அதுதான், எங்க பாஸ்சை நான் தூங்கும் போது டிஸ்டர்ப் பண்ண முடியாது இல்லையா” என,

“நம்பிட்டேன்” என்றவள், “சொல்லுங்க அஸ்வின், என்ன விஷயம்” என்று கேட்டவளின் குரலில் விளையாட்டுத்தனம் மறைந்து ஒரு கம்பீரம் வந்திருந்தது.

அதுவரை இருந்த இலகுத்தன்மை மறைய, ஒரு தயக்கம் வந்து அஸ்வினிடம் ஒட்டிக் கொள்ள.. “இல்லை, ஒரு முறை ரிகன்சிடர் பண்ண முடியாதா?” என்றான்.

“எதை?” என்று அவள் கேட்கவில்லை, அவளுக்கேத் தெரியும், “வேண்டாம், வேண்டாம்” என்று ஜபம் போல சமயம் கிடைக்கும் போதெல்லாம் வர்ஷினியிடம் அஸ்வின் சொல்லிக் கொண்டு இருக்கிறானே!

“முடியாதுன்னு பல தடவை சொல்லிட்டேன், இதுதான் லாஸ்ட்டா நான் சொல்றது புரியுதா! சொன்னதை மட்டும் செய்ங்க.. ஒபே மை ஆர்டர்ஸ்!” என்றாள் ஸ்ட்ரிக்டாக.

“மேம் ப்ளீஸ், கொஞ்சம் நாள் தள்ளி போடுங்க, உங்க மைன்ட் செட் மாறலாம்” என,

“மாறலாம்ன்ற ஆப்ஷன் எனக்கு வேண்டாம். என் எண்ணத்துல மாற்றம் வர்றதை நான் விரும்பலை.. திரும்ப நீங்க இது விஷயமா என்கிட்டே பேசக் கூடாது அஸ்வின், புரிஞ்சதா?” என்றாள் கடுமையாக. அதற்கு மேல் சொல்ல முடியாது, அவளை எந்த வகையிலும் யாரும் தொந்தரவு செய்வதை ஈஸ்வர் விரும்ப மாட்டான் என்று தெரியும்.

“ஓகே மேம்” என்றவன், வேறு சில விஷயங்களைப் பேசி வைக்க..

வைத்தவுடன் அந்த பேச்சின் சாயல் சிறிதும் இன்றி வர்ஷினி வேலையில் முடங்கிவிட.. அஸ்வினுக்கு தான் தூக்கம் போனது.. ஆம்! ஈஸ்வரை தன் வாழ்க்கையில் சந்திப்பதற்க்கு முன்பு இருந்த வர்ஷினி திரும்பியிருந்தாள்.

சில மாதங்களாக இதை தள்ளிப் போட்டான், அதை கண்டு கொண்டவள் இப்போது செய் என கறாராக கூறிவிட என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான் அஸ்வின்.

ஆம்! அஸ்வின் தான் இப்போது இந்தியாவில் வர்ஷினியின் தொழில் சார்ந்த வேலைகள் எல்லாம் பார்த்துக் கொள்வது.. தன்னுடைய பிரதிநிதியாக வர்ஷினி அவனை தான்

அடையாளம் காட்டி இருந்தாள். இதன் பொருட்டு பத்து வர்ஷினியிடம் பேசுவதே இல்லை. பத்துவின் பொருட்டு முரளியும் பேசுவது இல்லை.. இருவருக்கும் இடையில் நிற்பது ஈஸ்வர் ரே!

ஆம்! வாழ்க்கை தனக்கு கொடுத்த இரண்டாவது வாய்ப்பு வர்ஷினி என அஸ்வினிற்குத் தெரியும்.. முதல் வாய்ப்பான ஜகனை தொலைத்து.. எவ்வளவு பார்த்து விட்டான்.. வர்ஷினியிடம் இப்போது அப்படி ஒரு எஜமான பக்தி தான்.. அவள் காலால் இடும் வேலையை தலையால் செய்வான்.

இதனை எதைக் கொண்டும் அவன் நழுவ விடுவதாய் இல்லை. பணம் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான விஷயம்.. இவ்வளவு சம்பளம், இவ்வளவு மரியாதை, அவனுக்கென தனி தொழில் எல்லாம் வர்ஷினியின் மூலம்.. இதனை இழக்க அவன் தயாரில்லை.

“பேர் சொல்லி கூப்பிடுங்க” என்று வர்ஷினி சொன்ன போதும்.. “நான் உங்க கிட்ட வேலை பார்க்கிறேன், மேம் தான் சரி” என்று விட்டான்..

பின்னே பேரெல்லாம் சொல்லிக் கூப்பிட்டால் ஈஸ்வர் வேலையைத் தொடர விடுவானா என்ன? முன்பு ஈஸ்வரை ஏதாவது செய்ய வேண்டும் ஆசை இருந்தாலும், தைரியம் வரவில்லை. இப்போது நிச்சயம் முடியாது!

அஸ்வின் வர்ஷினி சொல்லும் வேலையை செய்கிறான் என்று தெரிந்த போது எல்லோரும் அதனைக் கொண்டு ஏகத்துக்கும் பொங்க.. பொங்காதா ஒரே ஜீவன் ஈஸ்வர் மட்டுமே..

என்னவாயினும் அந்த கர்வம் மட்டும் அவனிடம் அழிந்து விடவில்லை.. மனதின் ஒரு ஓரத்தில் அது சொல்லிக் கொண்டே இருந்தது.. "உன்னையே அவளுக்குப் பிடிக்கவில்லை, இனி யாரையும் அவளுக்குப் பிடிக்காது" என,

அந்த கர்வம் மட்டுமே.. அவனை நடமாட வைத்துக் கொண்டிருந்தது என்றால் அது மிகையல்ல..

ஆனாலும் ஏனென்று புரியாமல் மனதில் ஒரு பயம் எழுவதை தடுக்க முடியவில்லை... சில நாட்களாக அது அதிகமாக இருந்தது.

அலுவலகம் நுழைந்தவனை சிறிது நேரத்தில் ஒரு ரெஜிஸ்தர் தபால் எதிர்கொள்ள.. தோன்றிய பயம் சரிதான் என்பது போல.. அவனை எதிர்கொண்டது வர்ஷினி அனுப்பியிருந்த விவாகரத்து வேண்டிய பத்திரம்.

**இதயத்திலே தீப்பிடிக்க கனவெல்லாம் கருகியதே**
**உயிரே நீ உருகும் முன்னே கண்ணில் காண்பேனோ!**

**அத்தியாயம் அறுபத்தி ஒன்பது :**

**சொல்லாமல் தொட்டுச் செல்லும் தென்றல்.. என்காதல் தேவதையின் கண்கள்.. நெஞ்சத்தில் கொட்டி செல்லும் மின்னல்.. கண்ணோரம் மின்னும் அவள் காதல்..**

சிறிது நேரம் அதை வெறித்து இருந்தவன்.. பின்பு சற்றும் தயங்காமல் வர்ஷினிக்கு அழைத்தான்.. அவனுக்கு சற்றும் ஞாபகமில்லை அங்கே இரவு என்பது..

வெகு நேரத்திற்கு பின் எடுத்தவள், “ம்ம் சொல்லுங்க” என்றாள் தூக்க கலக்கத்தில்,

“எதுக்கு இப்போ அவசரமா இந்த நோட்டிஸ்” என,

“அவசரமா? யாரு சொன்னா?” என்று தெளிந்தவள்.. “நான் இங்கே யு எஸ் வந்ததுல இருந்து சொல்லிட்டு இருக்கேன்”

“அப்படியே சொல்லிட்டே இருக்க வேண்டியது தானே, எதுக்கு அனுப்பின?”

“நீங்க எனக்கு டைவர்ஸ் குடுக்கறேன்னு ப்ராமிஸ் பண்ணியிருக்கீங்க”

“எஸ், ப்ராமிஸ் பண்ணியிருக்கேன்! அதுக்கு முன்ன உங்க அப்பாவுக்கு ப்ராமிஸ் பண்ணியிருக்கேன் உன்னை நான் பார்த்துக்கறேன், விடமாட்டேன்னு!”

“இப்ப மட்டும் பார்த்துக்காமயா இருக்கீங்க, எல்லாம் நீங்க தான் பார்க்கறீங்க”

ஆம் எல்லாம் பார்ப்பது ஈஸ்வர் மட்டுமே.. அவளை ஹாஸ்டலில் சேர்த்து விட்டதும் அவனே.. பின்னே யு எஸ் படிக்க எல்லா ஏற்பாடுகளும் செய்ததும் அவனே.. யு எஸ் ஸில் தங்கும் இடத்தில இருந்து பார்த்தது எல்லாம் அவனே.. முக்கியமாய் அஸ்வினை அவளின் வேலைகளை பார்க்க அனுமதித்ததும் அவனே!

அஸ்வின் அவளுடன் வந்த பிறகு அவளின் அண்ணன்கள் கோபத்தில் விலகிக் கொள்ள.. அஸ்வினை விலக்கு என சொல்ல.. வர்ஷினி விலக்கவில்லை.

ஆனால் இந்த மூன்றரை வருடங்களாய் நேரில் பார்க்கவில்லை.. அவசியமான போது ஃபோனில்

உரையாடுவான்..

வர்ஷினி சகஜமாகப் பேசும் போது அவனால் தாளவே முடியாது உடைந்து போவான், அதனைக் கொண்டே தவிர்த்து விடுவான்.. அவளைப் பார்க்கும் ஆவல் ஜ்வாலையாய் அவனுள் தகிக்கும்.

சகஜமாக பேசுபவள் பார்க்க மட்டும் அனுமதிப்பது இல்லை..

“உனக்கு யாரையாவது பிடிச்சிருக்கா? கல்யாணம் பண்ணப் போறாயா? சொல்லு! டைவர்ஸ் கொடுக்கறேன்” என,

அதுவரை தூக்க கலக்கத்தில் இலகுவாக பேசிக் கொண்டு இருந்தவள், பொங்கி விட்டாள்.. “என்ன? என்ன பேசறீங்க? கேம் ப்ளே பண்ணறீங்களா?” என,

“என்ன? என்ன கேம் ப்ளே பண்றேன்?” என,

“பின்ன உங்க மனைவியா இருக்கும் போது அடுத்தவங்களை கல்யாணம் பண்ண யோசிக்க முடியுமா? இல்லை அடுத்தவன் மனைவியை கல்யாணம் பண்ண நினைக்கறவனை நான் சூஸ் பண்ண முடியுமா?” என்றாள்.

ஈஸ்வர் அமைதியாகிவிட..

“உங்களை மாதிரி அடுத்தவன் மனைவியா நீ ஆனாலும் உன்னை நான் விட மாட்டேன் சொன்னிங்க இல்லையா, அந்த மாதிரி யாரும் எனக்கு வேண்டாம் புரிஞ்சதா!” என்றாள் அடிக்குரலில்.

ஈஸ்வர் இன்னுமே அமைதியாகிவிட்டான்.

“நான் வைக்கிறேன்” என வர்ஷினி சொல்ல..

“இப்போ நான் என்ன பண்ணனும்?” என்றான்.

“எனக்கு டைவர்ஸ் வேணும், அவ்வளவு தான்! அதுக்கு என்ன பண்ணனும்னு நீங்க முடிவு பண்ணிக்கங்க” என்று விட்டாள்.

“சரி வெச்சிடு!” என்றவன் வைத்து விட..

வைத்து விட்ட வர்ஷினியால் பின்பு உறங்க முடியவில்லை.. இதுவரை படிப்பு முன் நின்றது.. இன்னும் ஒரு மாதம் மட்டுமே விசா.. இந்தியா கிளம்ப வேண்டும்.. இனி என்ன செய்வது என எதிர்காலம் அச்சுறுத்தியது.

யோசிக்கும் போதே அஸ்வினிடம் இருந்து அலைபேசி... எடுத்தவளிடம்.. “விஸ்வா அந்த பேப்பர்ஸ் சைன் பண்ணிட்டேன் சொன்னார்.. வந்து வாங்கிட்டு போக சொன்னார்” என,

“இது நைட் டைம் இப்போ எதுக்கு என்னை கூப்பிடறீங்க.. திஸ் இஸ் நாட் குட்” என கோபமாகப் பேச,

“இப்போவே உங்க கிட்ட இதை சொல்லச் சொல்லி விஸ்வா தான் சொன்னார், நான் கூட நைட்ன்னு சொன்னேன்.. முழிச்சிட்டு தான் இருப்பா கூப்பிடுன்னு அவர் தான் சொன்னார்” என்றான் சுருதி இறங்கிய குரலில்.

“ஓகே, சொல்லிட்டேனு சொல்லிடுங்க! ஆனா இப்போ சொல்லாதீங்க... இந்த மாதிரி நைட் அவங்க தூங்கும் போது கூப்பிட்டு சொல்லுங்க” என,

“ப்ச், மேம்” என சலித்தவன்.. “அவர் தூங்குவார்னு நினைக்கறீங்களா? நீங்க இதை ரிகன்சிடர் பண்ணுங்க.. விஸ்வா மேல அவ்வளவு கோபத்துல வெறுப்புல இருந்தவன் நான். அதனால அவ்வளவு தப்பும் செஞ்சிருக்கேன்.. நானே

சொல்றேன் டைவர்ஸ் வேண்டாம். இது அவருக்காக இல்லை.. உங்களுக்காக” என,

“ஆமாம்! நீங்க எப்போ இருந்து ஈஸ்வர் ஃபேன் க்ளப் ஆரம்பிச்சீங்க” என்றாள் அலட்சியமாக.

“அவர் உங்க ஹஸ்பன்ட் ஆனதுல இருந்து” என்றான் சின்சியராக.

அது ஒருவகையில் அவளுக்கு எரிச்சலை கொடுக்க “தூங்கறவளை எழுப்பி என்ன கதை பேசறீங்க? வைங்க ஃபோனை அன்ட் ஒரு விஷயம் தெரிஞ்சிக்கங்க, உங்களை என்கிட்டே வேலை செய்ய விட்டுருக்கிறது உங்களுக்காகவோ எனக்காகவோ இல்லை, அவரை மீறி நீங்க எந்த விஷயமும் எப்பவும் வெளில சொல்லக் கூடாதுன்னு. அதனால இந்த நீங்க ஒருத்தர் மட்டுமே இருக்குற அந்த ஃபேன் க்ளப் கலைச்சிடுங்க!” என்று வைத்து விட்டாள்.

கேட்ட அஸ்வினிற்கு சிரிப்பு வந்தது, எப்படிப்பட்ட சூழல், எப்படி பேசுகிறாள். சென்ற வாரம் நெருங்கிய உறவில் நடந்த ஒரு திருமணதிற்கு அஸ்வினும் சென்றிருந்தான்.. அங்கே மாபிள்ளையை விட ஈஸ்வர் மேல் எல்லோருக்கும் இருந்த கவனமே அதிகம்.. ஆம்! நின்று விட்டான் தொழில் உலகில்! அது ஒரு தனி வி வி ஐ பி அந்தஸ்தை அவனுக்கு பெற்று தந்திருந்ததை கண்கூடாகப் பார்த்தான்.

எப்போதும் போல யார் யார் அவனை கவனிக்கிறார்கள் என்று அஸ்வின் பார்க்க அதில் இளம் பெண்கள் அதிகம்!

ஈஸ்வரை அஸ்வினிற்கு எப்போதுமே பிடிக்காது தான்.. ஈஸ்வர் எப்போதுமே மதிக்க மாட்டான்

என்பது பிடிக்காமல் போக, பின்பு பண விஷயம் வந்து, பின்பு அப்பாவின் கடத்தல் அஸ்வினை இன்னும் ஏறுக்கு மாறாக செய்ய வைக்க.. பின்பு ரஞ்சனியை மிரட்ட.. எல்லாம் சிக்கலாக்கி கொண்டான்.

அதையும் விட ரஞ்சனி கைவிட்டு போய்விட்டாள். ஐந்து வருடமாக மனதிற்குள் வளர்த்த காதல்.. தன் நிலை மறந்து அதிகப் பிரசங்கித்தனமாக நடந்ததால் எல்லாம் போனது.

ஆனால் இனி ரஞ்சனியை பற்றி நினைப்பது என்ன? யோசிப்பது கூடத் தவறு.. அடுத்தவன் மனைவி அல்லவா..

ஆனால் இந்த வர்ஷினி ஏன் ஈஸ்வரை வேண்டாம் என்று சொல்கிறாள்.. அதுவும் இப்போதைய ஈஸ்வரின் செயல்கள் பிரமிப்பு தான்.. ஐஸ்வர்யாவை அவன் திருமணம் செய்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று தான் தோன்றியது. ஆனால் பின்னால் சுற்றி விட்டு விட்டு விட்டானே.. இந்த ஐஸ்வர்யா மட்டும் தன்னிடம் சொல்லியிருந்தால் எதாவது செய்து திருமணத்தை நடத்தியிருக்கலாம் என்று தான் தோன்றியது..

ஆம்! இந்த மூன்று வருடங்களில் ஈஸ்வரின் உயரம் மிக அதிகமாகிவிட்டது தான் உண்மை.. அதுவுமன்றி இந்த ஐஸ்வர்யா வேறு எதையாவது சொல்லி திருமணத்தை தட்டிக் கொண்டே இருக்கிறாள்.. வருகிற மாப்பிள்ளைகளை எல்லாம் ஈஸ்வரோடு ஒப்பிட்டால் என்ன செய்வது.. இப்படித் தான் அஸ்வினின் எண்ணமாக இருந்தது.

இருவருமே காதல் சொல்லிக் கொண்டார்கள் என்று தெரியாதே!

ஈஸ்வரை முன்பே தெரியும், இப்போது வர்ஷினியையும் தெரியும்.. இருவருமே புத்திசாலிகள்.. பிடிவாதக்காரர்கள்.. அவர்களுக்கு யாருமே எதுவுமே சொல்ல முடியாது.

ஈஸ்வர் கையெழுத்து இட்டுவிட்டேன் வர்ஷினியிடம் சொல்லிவிடு என்று சொன்னதுமே.. “அச்சோ” என்றானது மனது வர்ஷினிக்காக..

“ஏன்? ஏன் இப்படி செய்கிறாள்? அவளுக்காக மட்டுமே இப்போது ஈஸ்வர் தான் முன் செய்த அத்தனையையும் ஒதுக்கி தன்னை மதிக்கின்றான். உறவினனாய் இருந்த போது மருந்துக்கும் மதிக்காதவன்..

தன்  அக்கா தங்கைக்காக கூட இவ்வளவு அஸ்வின் யோசித்தது கிடையாது..

ஈஸ்வரும் அஸ்வினும் சொல்லப் போனால் எதிரிகள்! ஆனால் ஈஸ்வர் வர்ஷினிக்காக அதை ஒதுக்கி விட்டான்.. அவர்களின் சாம்ராஜ்யத்தை ஆட்டம் காண வைத்த அஸ்வினின் தவறை ஒதுக்கி விட்டான்.. இன்னும் கூட சில சமயம் அஸ்வினால் நம்ப முடியவில்லை.. அதுமட்டுமே வர்ஷினி மேல் ஈஸ்வருக்கு உள்ள காதலை பறைசாற்றியது.

அவர்கள் இருவருமே யாரிடமும் இந்த விவாகரத்தைப் பற்றி சொல்லியிருப்பார்களா என யோசிக்க.. மாட்டார்கள் என தோன்ற..

ரூபாவை அழைத்து விஷயத்தை சொல்லிவிட்டான்!  அது நொடிகளில் தீயாக பரவ ஆரம்பித்தது.

திரும்ப ஈஸ்வரை பார்க்கச் சென்றவன்.. அலுவலகம் உள்ளே செல்லாமல் வெளியில் நின்று

“நான் வெளியே நிற்கிறேன் கொடுத்து விடுங்கள்” என,

இரண்டு நிமிடத்தில் ஒரு ஆள் வந்து “சார், உங்களை உள்ளே வர சொல்றார்” என,

“உள்ளேயா? என்னையா? நல்லாத் தெரியுமா?” என்று குழம்பினான்.

ஆம்! இதுவரை உள்ளே அழைத்ததில்லை..

“உங்களைத் தான் நல்லாத் தெரியும்”

உள்ளே சென்றவனுக்குள் ஒரு சிறு பதட்டம், இந்த அலுவலகத்தின் மேல் ஆட்களை வைத்து கலாட்டா செய்தானே, கல் எல்லாம் வைத்து கண்ணாடியை உடைத்தானே.. இப்போது தான் விவாகரத்து பத்திரத்தில் கையெழுத்து இட்டு விட்டானே! அதனால் இனி வர்ஷினியிடம் வேலை செய்வதையும் விடுத்து என்னை அடிக்க கூப்பிடுகிறானோ என்று ஒரு பதட்டம்..

“எத்தனையோ பார்த்துட்ட, இதையும் பார்த்துடு!” என்று சமாதானம் செய்து உள்ளே செல்ல..

அங்கே அவனைப் பார்த்த ஈஸ்வரின் முகத்தில் அவ்வளவு கோபம்.. “போச்சு, என்னவோ இவன் என்னை செய்யப் போகிறான்” என நினைத்து நிற்க..

“உள்ள வாடா” என்றான்.

உள்ளுக்குள் பயம் இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் செல்ல.. “கதவை லாக் பண்ணிட்டு வா” என அஸ்வினிற்கு வேர்க்கவே ஆரம்பித்தது.

“எதுக்கு” என,

“சொன்னதை செய்” என கர்ஜிக்க..

சொன்னபடி செய்து உள்ளே சென்றான் பயத்தை சிறிதும் காட்டிக் கொள்ளாமல்..

"அவ டைவர்ஸ் நோட்டிஸ் இப்போ தான் வருது, நான் சைன் பண்றேன். அதுக்குள்ள எப்படி மொத்த குடும்பத்துக்கும் தெரிஞ்சது, நீ தான் சொல்லியிருப்ப!" என எழுந்து கொண்டே கேட்க..

"இதுதானா!" என்று ஆசுவாசப் பட்டவன் "நான் தான் சொன்னேன்" என்று ஒத்துக் கொண்டு, "ஆனா ரூபா கிட்ட மட்டும் தான் சொன்னேன்" என,

"அவ கிட்ட சொன்னா போதாதா.. இப்படி தான் நீ வேலை செய்யறவங்களோட பெர்சனல் எல்லாம் வெளில சொல்லுவியா?" என் கேட்டபடி நெருங்க..

"பெர்சனல் எல்லாம் பேசலை" என்று அவசரமாகச் சொன்னவன்.. "இப்போ கூட நீங்க சைன் பண்ணியிருக்கலைன்னா இதை கூட சொல்லியிருக்க மாட்டேன்! அவ சின்ன பொண்ணு, அவ கேட்டா குடுக்க மாட்டேன் சொல்ல வேண்டியது தானே! உங்களை யாரு சைன் பண்ண சொன்னா?" என்று சண்டையிடுபவன் போல பேச..

"லூசாடா நீ?" என்பது போல ஒரு பார்வை ஈஸ்வர் பார்க்க..

"இவன் ஏன்டா நம்மை இப்படிப் பார்க்கிறான்?" என யோசித்த போதும் அஸ்வின் அமைதியாக நிற்க..

"இப்போதைக்கு அவ கொஞ்சம் நல்லா பேசற ஆள் நீதான். இந்த விஷயத்துல தலையிட்டு அதை நீ ஸ்பாயில் பண்ணிக்காதே.. அதோட நல்லதோ கெட்டதோ வர்ஷினி விஷயம் எதுவுமே உன் வழியா வெளில வரக் கூடாது.. அவளுக்கு நல்லது

செய்யறேன்னு சொல்லி அதிகப் பிரசிங்கிதனம் பண்ணாதே” என்றான் கூரிய பார்வையோடு.

ஈஸ்வரின் பார்வையும் பேச்சும் உள்ளுக்குள் குளிரெடுக்க வைத்தாலும், அசராமல் அவனை எதிர்கொண்ட அஸ்வின்.. “மேம் என்கிட்டே இதை யார்கிட்டயும் சொல்ல வேண்டாம்னு சொல்லலை, சொல்லியிருந்தா சொல்லியிருக்க மாட்டேன்” என.

“அவ வேற, நான் வேற கிடையாது. நாங்க சேர்ந்து இருக்கோம் இருக்கலை.. டைவர்ஸ் பண்ணிக்கறோம் பண்ணிக்கலை.. எது நடந்தாலும் அவ வேற நான் வேற கிடையாது.. அதனால இப்போ நான் சொல்றேன், எதுவும் சொல்லக் கூடாதுன்னா சொல்லக் கூடாது!” என,

“ம்ம்” என்று தலையாட்டுவதை தவிர அஸ்வினிற்கு வேறு வாய்ப்பு அல்ல..

“நான் கிளம்பவா” என.. “இதை வாங்கிட்டு போ” என அந்த டைவர்ஸ் பேப்பர்ஸ் நீட்ட.. அவன் கையினில் வாங்க வரும் போது.. “இந்த டைவர்ஸ் நான் கொடுக்கணும்னா ஒரு கண்டிஷன் இருக்கு, அதுக்கு ஒப்புகிட்டா தான் கொடுப்பேன்! உங்க மேடம் கிட்ட சொல்லிடு!” என,

“என்ன கண்டிஷன்?” என உடனே அஸ்வின் கேட்கவும்..

ஈஸ்வர் ஒரு பார்வை பார்க்க.. “சொல்லமாட்டேன்னு சொல்ல வேண்டியது தானே, எதுக்கு லுக்கு?” என முணுமுணுத்தவாறே அஸ்வின் வாங்கிக் கொண்டு வெளியேற.. அவன் வெளியே வரவும், பத்து வேகமாக உள்ளே வரவும் சரியாக இருக்க..

“இவன் எங்கே இங்கே?” என்று அஸ்வினை முறைத்துப் பார்க்க.. அஸ்வின் கவனித்தும் கவனியாதவன் போல வெளியேறி விட்டான்.

ஈஸ்வரின் அறைக்குள் வேகமாக பத்மநாபன் நுழைய.. “அதுக்குள்ள எப்படிடா உடனே வந்தான், என்ன இன்னைக்கேவா டைவர்ஸ் கிடைக்கப் போகுது” என தோன்ற,

“எதுக்கு இவ்வளவு வேகமா வந்தீங்க பத்து.. இட்ஸ் நாட் ஃசேப்”

“அவனை இங்க ஆஃபிஸ் வரைக்கும் விட ஆரம்பிச்சிட்டீங்க” என்றவன், அதனைப் பற்றி மேலே பேசாமல் “வர்ஷி, டைவர்ஸ் நோட்டிஸ் அனுப்பியிருக்காலாமே, நிஜமா?” என,

“ஆம்” என்பது போலத் தலையசைக்க..

“நீங்க சைன் பண்ணிட்டீங்கலாமே” என,

அதற்கும் “ஆம்” என்பது போலத் தலையாட்டவும்.. பத்து இயலாமையில் முறைத்து நின்றான்.

அங்கே வர்ஷினி.. எதிரில் இருந்த கண்ணாடியில் தெரிந்த அவளின் பிம்பத்திடம் அவளே பேசிக் கொண்டிருந்தாள்..

“விடமாட்டேன் அது இதுன்னு பேசினான்.. இன்னைக்கு தான் அனுப்பினேன்... இன்னைக்கே கையெழுத்து போட்டுடான்..” ஒரு கசந்த முறுவல் முகத்தில் தோன்ற.. கண்களும் தானாக கலங்கியது..

“ம்ம், இனிமே நீ ஈஸ்வரோட எக்ஸ் ஃவைவ்.. அவன் சொல்றான் நீ யாரையாவது கல்யாணம் பண்ண போறயா டைவர்ஸ் தர்றேன்னு”

“யார் என்னை கல்யாணம் பண்ணுவா.. ஏற்கனவே அம்மாவைப் பத்தி சொல்ல முடியாது.. அப்பா பெரிய ஹிஸ்டரி வெச்சிருக்கார்”

“அப்போ நீ வேற கல்யாணம் பண்ணுவியா” என அவளின் பிம்பம் அவளிடம் கேள்வி கேட்க..

“நான் இன்னும் அதை பத்தி யோசிக்கவே இல்லை அவன் தான் சொல்றான்..” என

“இனிமே நான் ஒரு டைவர்சி” என தோன்றத் தோன்ற கண்களில் நீர் பொழிய ஆரம்பித்தது..

எதிரில் இருந்த அவளின் பிம்பம்.. “வர்ஷி எதுக்கு அழற.. நீதானே டைவர்ஸ் கேட்ட, இப்போ வேண்டாம் சொன்னாக் கூட அவன் ஒன்னும் சொல்ல மாட்டான்” என,

“ஆனா எனக்கு வேண்டாம் அவன், முதல்லயே வேற லவ் பண்ணினான்..” என்று நினைக்கும் போது தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்.

“அழாதே அழாதே வர்ஷ்.. உன்னோட ஒரு எஸ், எல்லாம் சால்வ் பண்ணிடும் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிடு, அவன் தப்பை மறந்துடு.. அவனுக்காக வேண்டாம் உனக்காக” என

“ஏன்? ஏன் மறக்கணும்? என்னோட எல்லாம் நான் சொன்னேன், அவன் என்னை எப்படி பார்ப்பான்னு கூடத் தெரியாது, தைரியமா என்னோட அம்மாவோட ரகசியத்தைக் கூட சொன்னேன், ஆனா அவன் சொல்லவேயில்லை.. எத்தனை தடவை லூசு மாதிரி உனக்கு என்னை மட்டும் தான் பிடிக்கும்னு சண்டை போட்டப்போ கூட கர்வமா சொல்லியிருக்கேன், ஆனா அவன்.. ஹீ சீடட் மீ...”

கிட்டட தட்ட மூன்றரை வருடங்களுக்கு முன் தெரிந்த விஷயம், ஆனால் முதல் முறை தெரிந்த போது எவ்வளவு வலித்ததோ அதே வலியை கொஞ்சமும் குறையாமல் உணர்ந்தாள்..

அதை ஞாபகத்தில் வராமல் வைத்திருக்க அவளால் முடிந்த அளவிற்கு மன்னிக்க முடியவில்லை..

விஷயத்தையும்.. ஈஸ்வரையும்...

எப்போது அது நினைவில் வந்தாலும், இயல்பு தொலைந்து, வாழ்க்கையில் ஒரு பிடிப்பற்ற நிலை உருவாகி, அவளும் தொலைந்து போக வேண்டும் என்ற உணர்வு அதிகமாக தாக்கியது..

ஞாபகம் வரும் போதெல்லாம் விட்டுவிடு விட்டுவிடு, இது ஒரு விஷயம் அல்ல என்று எத்தனையோ முறை சொல்லி ஆகிற்று.. ஆனால் முடிவதே இல்லை.. கடலின் நிறத்தைக் கொண்டு கண்கள் இருந்ததினால் கண்ணீர் பொழிவது நிற்க வில்லையோ..

அந்த உணர்வில் இருந்து வெளியே வர அப்படியே தரையில் அமர்ந்து கந்த சஷ்டி கவசத்தை சொல்ல ஆரம்பித்தாள்.. ஆம் எப்போதோ ஈஸ்வர் கேட்க சொன்னது.. கேட்டு கேட்டு.. இப்போது வாய் மொழியாக சொல்ல ஆரம்பித்தாள்.

**காக்க காக்க கனகவேல் காக்க.. நோக்க நோக்க நொடியில் நோக்க... தாக்க தாக்க தடையறத் தாக்க... பார்க்க பார்க்க பாவம் பொடிபட...**

**அத்தியாயம் எழுபது :**

**கண் திறந்து காணும் கனவு நீ! உறங்காமலேயே விழித்திருக்கிறேன் உனக்காய்!**

அதிகாலை நான்கு மணிக்கு வரும் விமானத்திற்காக இரண்டு மணிக்கே வந்து உட்கார்ந்து விட்டான் ஈஸ்வர்.. அவனின் நேரம் ஒரு மணிநேரம் விமானம் தாமதம்..

சில வருடங்களுக்கு பிறகு பார்க்கப் போகிறான்.. எப்போது கடைசியாகப் பார்த்தான் ஞாபகமே இல்லை.. பார்க்க அனுமதியாத போது ஒளிந்து மறைந்து ஓரிருமுறை தூரமாய் பார்த்திருக்கிறான்.. முன் செல்லும் தைரியம் இல்லை, எதையாவது ஏறுக்கு மாறாய் செய்து விட்டால்.. அதுவே அவனை தடுத்தது.

இப்போது அதையே ஞாபகப் படுத்திக் கொண்டிருந்தான்.. அந்த நீல நிறக் கண்களை பார்க்கும் வேட்கை அவனை பாடாய் படுத்திக் கொண்டிருந்தது தான் உண்மை!

எப்படியிருப்பாள்.. இங்கிருந்து போகும் போதே இன்னுமே உடல் எடை அதிகரித்து இருந்தாள். இருபத்தி ஒரு வயதில் அந்த உடல் எடை அதிகம்.. ஆம்! முன்பே பூசின உடல் வாகு தான், ஹாஸ்டல் சென்ற பிறகு வெகுவாக அதிகரித்து குண்டான உடல் அமைப்பிற்குள் நுழைந்திருந்தாள். விசா இண்டர்வியுவிற்காக அவளை தாஸுடன் அமெரிக்கன் எம்பசி அனுப்பிய போது தூரமாய் நின்று பார்த்திருந்தான். “அம்மாடி! என்ன இது?” என்று பார்த்ததுமே கவலை கொள்ள வைத்தாள்.

பிறகு சில முறை பேசும் போது, பலமுறை அதை சொல்ல நினைத்து சொல்லாமல் இருந்திருக்கின்றான்... இந்த மூன்றரை

வருடங்களில் எந்த வகையிலும் எந்த தொந்தரவும் கொடுத்ததே இல்லை.. என்ன ஏது அவ்வளவே!

உண்மையில் முரளிக்கும் பத்துவிற்கும் அவன் நன்றி தான் சொல்ல வேண்டும்.. அஸ்வினைக் கொண்டு அவர்கள் தள்ளி நின்று விட.. ஈஸ்வரே திரும்ப எல்லாம் கையினில் எடுத்துக் கொண்டான்.. முயன்றிருந்தால் சமாதானம் செய்திருக்கலாம், ஆனால் வர்ஷினி தன்னிடம் இருந்து தள்ளி நின்று விட்டால் என்ன செய்வது என்று ஈஸ்வர் முயன்றது இல்லை..

இந்த நினைப்பு மனதினில் தோன்றும் போதே.. மனம் ஒரு புறம் சிரித்தது.. "நீ எங்கே எடுத்துக் கொண்டாய்.. உண்மையில் உன்னை பார்க்கப் பிடிக்கவில்லை என்று சென்றவள், வேறு எதையும் நீ செய்யக் கூடாது என்று சொல்லியதில்லை, நானே பார்த்துக் கொள்கிறேன் என்றும் சொல்லியதில்லை.. அவளே தான் விட்டு வைத்திருக்கிறாள்.."

இப்படி யோசனைகள் ஓடும் போதே.. பிளைட்டின் அறிவிப்பு வந்து விட.. மனம் பரபரப்பானது..

ஈஸ்வரையும் விட வர்ஷினியின் மனம் இன்னும் பரபரப்பாக இருந்தது உண்மை... ஆம்! ஈஸ்வரை சந்திக்க மனம் எகிறி தான் குதித்தது.. ஏனென்று தெரியவில்லை..

ஆம் இருவருமே முன்னுக்குப் பின் முரணாகிப் போயினர்.

விசா முடிய இன்னும் ஒரு மாதமே இருந்த நிலையில் எங்கே போவது, சென்னை சென்றால் எங்கே தங்குவது என்ற கேள்வி முன் நிற்க.. அதற்கு

அவசியமேயில்லாமல் ஒருவன் டைவர்ஸ்சின் கண்டிஷனாக வைத்தான்.

ஆம்! டைவர்ஸ் ஆகும் வரை அவனுடன் தான் தங்க வேண்டும் அவனின் வீட்டில் தான் இருக்க வேண்டும்.. தனியாக விட முடியாது.. இல்லை முடியவே முடியாது என்றால் அவளின் அம்மா வீட்டினில் தான் இருக்க வேண்டும்.. தனியாகவோ ஹாஸ்டல் சூழலிலோ விட முடியாது என்பது திட்ட வட்ட அறிவிப்பாக இருக்க.. இதற்கு சம்மதிக்காவிட்டால் டைவர்ஸ் கிடையாது என்றும் சொல்லிவிட..

இது தனக்கு மட்டுமேயானது என புரிந்த போதும்.. இது அவனுக்கும் சேர்த்து தானே என மனம் முரண்டியது..

இது வரையிலும் சரி என்ற பதிலும் சொல்லவில்லை, முடியாது என்றும் சொல்லவில்லை..

ஃபிளைட் ஏறுவதற்கு சில மணிநேரத்திற்கு முன்பு தான்.. நான் சென்னை வர்றேன் என்று மெசேஜ் தட்டி விட்டு, அது அவன் பார்த்த சிக்னலை காட்டியவுடன், ஃபோனை அணைத்து விட்டாள்.

எப்படியும் வந்திருப்பான் என்று தெரியும்..

ஆனாலும் அவனுடன் இருக்கும் இந்த சில பல மாதங்கள் மிகவும் கடினமாக இருக்கும் என புரிந்தது.. ஈஸ்வர் அவ்வளவு எளிதாக தன்னை விட்டு விட மாட்டான் என்று தெரியும்.. முன்பு சொன்னதெல்லாம் கேட்டு அவளை ஹாஸ்டலில் இருக்க விட்டது, அப்போதைய நிகழ்வுகளால், அவளின் பழக்க வழக்கத்தால்.. இப்போது பின் வாங்கிட மாட்டான் என்றே தோன்றியது..

எதுவானாலும் பார்த்து விடலாம் என்று தான் கிளம்பியிருந்தாள்.

என்ன விரும்புகிறது மனம் என்றே தெரியவில்லை.. அவனைப் பிடிக்கவில்லை, ஆனால் அவனைத் தவிர வேறு யாருடனும் பேசவும் முடியவில்லை.. எல்லோருமே அந்நியமாகிப் போயினர்..

தாத்தா, கமலம்மா, முரளி, பத்து எல்லோரும்.. முன்பே ஒரு ஒட்டாத தன்மை தான்.. பள்ளி படிப்பு முடித்து வீடு வந்த பிறகு சிறிது சகஜ நிலைமை வந்திருக்க.. மீண்டும் அது தொலைந்து இருந்தது.. ஷாலினி விடாமல் மெசேஜ் செய்த போதும் வர்ஷினி பதில் கொடுத்ததில்லை..

முரளிக்கு அது மனதில் சற்று கோபம் தான், ஆனாலும் காட்டிக் கொண்டதில்லை.. காட்டினால், வர்ஷினிக்காக ஈஸ்வர் அதற்கும் காரணம் சொல்வான்.. “நீயாகிற்று உன் பெண்டாட்டியாகிற்று” என்று தான் முரளி ஒதுங்கிக் கொண்டான்.. ஆம்! அவனுக்கு புரிந்தது சண்டையோ சச்சரவோ.. வர்ஷினி ஈஸ்வரிடம் காட்டும் நெருக்கம் தங்கள் வீட்டினரிடம் காட்டுவதில்லை என.. அதனால் ஒதுங்கிக் கொண்டான் என்பது தான் உண்மை!

அன்று “எப்படி நீங்க டைவர்ஸ் பேப்பரில் கையொப்பம் இடலாம்” என்று பத்து சண்டையிட்ட போதும்..

பத்து கோபமாக ஈஸ்வரை பார்க்க சென்றிருக்கிறான் என்று அறிந்து அங்கே உடனே வந்திருந்த முரளி.. “அவனாச்சு அவன் மனைவியாச்சு, நீயேன் அவனை கேள்வி கேட்கற.. முடிஞ்சா வர்ஷினியைக் கேள், உனக்கு அவளை

கேள்வி கேட்க தான் உரிமை.. இவனை இல்லை!" என்று பத்துவை அழைத்து வந்ததும் முரளியே!

வர்ஷினி, "ஈஸ்வருடன் வேறு யாரும் வந்திருப்பாரா, அவர்களை எப்படி எதிர் கொள்வது" என்று சற்று தடுமாற்றமாக இருந்தது.. அவள் வருவதை யாரிடமும் சொல்லவில்லை, அஸ்வினிடம் கூட.. சொல்லத் தோன்றவில்லை.. ஒரு மாதிரி பதட்டத்தில் இருந்தாள், சில நாட்களாகவே!

ஜனத்திரளோடு கலந்து அவள் வெளியே வர.. கண்கள் வேகமாக ஓட.. ஈஸ்வர் அங்கே ஒவ்வொருவரையும் பார்த்து இருப்பது தெரிந்தது.. அவனைத் தான் பார்த்து இருந்தாள்.. ஆனால் ஈஸ்வருக்குத் தெரியவில்லை..

ஈஸ்வரை சிறிது நேரம் விடாது பார்த்திருந்தாள், தன்னை காட்டிக் கொள்ள முயலவில்லை.. ஒரு காக்கி பேன்ட், ஒரு வெள்ளை டீஷர்ட்.. உடல் இன்னுமே கட்டுமஸ்தாய் மாறியிருக்க.. முகத்தில் இருந்த பிரன்ச் பியர்ட் இன்னும் வனப்பை கூட்ட.. பல மடங்கு வசீகரமாய் மாறி இருந்தான்..

இவனிடம் இருந்து எந்த சேதாரமும் இல்லாமல் நீ வெளியே வரவேண்டும் பெண்ணே! முடியுமா உன்னால்?.. அவனையே பார்த்திருந்தாள்.

"இவனுடன் என் உறவு  நன்றாய் இருந்திருக்கக் கூடாதா?" என தோன்ற ஒரு பெரு மூச்சு வெளியேறியது.

"இப்போது மட்டும் என்ன? சரிப்படித்துக் கொள்!" என மனம் சொல்ல.. "வேண்டாம்! அவன் எவ்வளவு நல்லவனாய் இருந்தாலும், வல்லவனாய் இருந்தாலும், எவனாய் இருந்தாலும் எனக்கு

தேவையில்லை!” என்ற பிடிவாதம் உடலின் ஒவ்வொரு அணுவிலும் தோன்றியது.. “என்னுடைய உணர்வுகளுடன் விளையாடியவன் இவன், இவன் எனக்கு தேவையில்லை!” என எப்பொழுதும் போல மனதில் பதிய வைத்துக் கொண்டாள்.

“நோ டென்ஷன்!” என தனக்குத் தானே சொல்லிக் கொண்டவள்.. “திரும்பவும் இவனால் நீ எதையும் இழுத்து விட்டுக் கொள்ளாதே! அமைதி!” என ஆசுவாசப்பட்டு மனதில் ஒரு உற்சாகத்தை தானாக வரவழைத்துக் கொண்டாள்..

ஈஸ்வரின் பார்வை வர்ஷினியை தேட.. கண்கள் வர்ஷினி மேலும் ஒட்டி.. பின்பு சிறிது தூரம் நகர்ந்து.. பின்னே பார்வையை அவள் மேல் நிலைக்க விட்டான்..

பாதி முகம் மறைக்கும் கறுப்புக் கண்ணாடி... ஒல்லியாக ஒரு பெண் வர்ஷினியாக இருப்பாள் என நினைத்தானா என்ன? பார்வை நிலை குத்தி நிற்க..

மெதுவாக அவனைப் பார்த்து கை அசைக்க.. வேகமாக அவளின் அருகில் சென்றான்.. ஆம்! அவளே தான்.. முதலில் தோன்றியது, என்ன இது இவ்வளவு உடல் எடை குறைந்து இருக்கிறாள்!

“வர்ஷ்” என்றவன், “என்ன இவ்வளவு வெயிட் லாஸ்..?” அவ்வளவு நேரம் கண்களைப் பார்க்க கனன்று கொண்டிருந்த வேட்கை மறைந்து.. இப்போது கவலை தான் வந்தது..

“இல்லை, என் ஹைட்க்கு கரக்ட் தான்..” என்றாள் அவனின் கேள்விக்கு பதிலாக.

முகம் சிறிதும் மாறவில்லை.. அப்படியே தான் இருந்தது.. அதை பார்த்த பிறகு தான் ஈஸ்வரின்

முகம் தெளிய..

சில வருடங்களுக்குப் பிறகு பார்ப்பதால் தானாக முகம் மலர்ந்து ஒரு புன்னகையை வர்ஷினியின் முகம் ஈஸ்வரை நோக்கி காட்ட..

ஈஸ்வரும் மலர்ந்து சிரித்தவன்.. கைகளை அவளின் முன் நீட்ட..

எதற்கு என்று தெரிந்த போதும்.. தயங்கி நிற்க.. “ப்ளீஸ்” என்றவனின் கைகள் அப்படியே தான் இருக்க..

தன் கண்களில் இருந்த கண்ணாடியை வர்ஷினி கழற்றி கொடுத்தாள். ஆர்வமாய் விழிகளை பார்க்க முற்பட்டவனின் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாய் தெரிய..

அவனின் அதிர்ச்சி பார்த்து சமாதானமாக “லென்ஸ் யூஸ் பண்றேன்” என..

மடக்கிய கைகளை திரும்பவும் அவளின் முன் நீட்ட.. அந்த கண்ணாடியை எடுத்து திரும்பவும் அணிந்து கொண்டாள். நொடியில் சூழல் இறுக்கமாக மாறிவிட.. ஈஸ்வரின் முகமும் மாறி விட்டது.. முகத்தில் ஏமாற்றம் அப்பட்டமாய் தெரிய அதை மறைக்க வெல்லாம் முயலவில்லை..

சாதாரணமாய் இருந்திருந்தாலாவது ஈஸ்வர் கட்டுக்குள் இருந்திருப்பானோ என்னவோ? வர்ஷினியின் இந்த செயல் வெகுவாக காயப் படுத்தியது.. கோபப் படுத்தியது.. இயல்பை தொலைக்க வைத்தது.

ஆம்! நீல நிறக் கண்களை லென்ஸ் கொண்டு கரிய விழிகளாய் மாற்றி இருந்தாள். அதுவும் செக்கின் முடித்து வெளியே வரும் சமயம் ஈஸ்வரின் கண்ணில் படும் முன் மாற்றி இருந்தாள்.

அவனின் ஏமாற்றத்தைப் பார்க்கவும், தானாக ஒரு மனம் “எடுத்து விடுவோமா” என நினைக்க.. “நீயும் உன் நினைப்பும், அடங்கு, என்ன பட்டாலும் திருந்த மாட்டாயா நீ. உன் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்தானா? என்ன கரிசனம் உனக்கு” என அடுத்த மனம் கோபிக்க, அவனை பார்த்து நின்றாள்.. “போகலாமா” என ஈஸ்வர் முன் நடக்க அமைதியாய் அவனைப் பின் தொடர்ந்தாள்...

பின்பு ஒரு ஆழ்ந்த மௌனம் இருவரிடமும்.. ஈஸ்வரும் எதுவும் பேசவில்லை.. வர்ஷினியும் பேசவில்லை.. அவளின் லகேஜ் எல்லாம் எடுத்து வெளியில் வந்த போது விடியல் நன்றாக வந்திருந்தது.

காரை நோக்கி சென்ற போது அங்கே அவனின் கருப்பு நிற போர்ச் நிற்க.. அருகில் சென்றதும் தானாக கைகள் அந்தக் காரை தடவியது.. ஏதோ போர் குதிரையை தடவுவது போல தடவியவள் “எப்போ கார் மாத்துனீங்க” என்றாள் இயல்பாக, என்னவோ அவன் வைத்திருக்கும் கார்கள் எல்லாம் தெரிந்தவள் போல,

“டூ மந்த்ஸ் இருக்கும்” என..

ஆசையாக “நான் ஒட்டவா” என்றாள் உடனே.. ஈஸ்வர் யோசிக்க.. பிடிவாதமாய் சாவிக்காக கை நீட்டினாள்.. “இப்போதான் வந்திருக்க, அப்புறமா ஒட்டலாம்” என்றான் பொறுமையாக..

மனமேயில்லாமல் தோளைக் குலுக்கி “ஒகே” என்பதாக ஒரு சைகை செய்தாள். லகேஜ் எல்லாம் காரின் பின் ஏற்ற.. வேடிக்கை பார்த்திருந்தாள், வேடிக்கை பார்க்கும் வர்ஷினியை ஏற்றிக் கொண்டே ஈஸ்வர் வேடிக்கை பார்த்தான்.

ஆம்! ஸ்லிம் பிட்டாக இருந்தாள், ஒரு நீள ஸ்கர்ட், அதன் மேல் ஒரு டாப்ஸ், கழுத்தை சுற்றி ஒரு ஸ்கார்ப்.. இன்னும் அழகாகி இருந்தாள், ஆனால் முகத்தினில் இருந்த குழந்தைத்தனம் மட்டும் மாறவில்லை..

என்ன இருந்தாலும் அந்த பூசின உடல் வாகோடு இருந்த வர்ஷினியை போல இல்லை என்று மனம் சுணங்கியது.. பார்க்க பார்க்க.. வாட்டர் பெட் டிற்காக மனம் ஏங்கியது.

அந்தக் கண்ணாடியை பிடுங்கி எரிய வேண்டும் போல ஒரு உந்துதல், “அச்சோ! அம்மா! இன்றைக்கு தான் வந்திருக்கிறாள்.. ஏதாவது செய்து இன்றே பிரச்னையை ஆரம்பித்துக் கொள்ள வேண்டாம்” என்று நினைத்தவன், வேகமாக பார்வையை திருப்பி “ஏறு” என்பது போல ஒரு சைகை செய்து, அவனும் ஏற..

அவன் ஏறவும் அலைபேசி அலறவும் சரியாக இருக்க, பார்த்தால் முரளியின் அழைப்பு.. எடுத்து “சொல்லுடா” என,

“வர்ஷினி வந்துட்டாளா?” என்றவனிடம் “வந்துட்டா” என,

“ம்ம், சரி, ஃப்ரீ ஆகிட்டு கூப்பிடு, முடிஞ்சா அவளோட பேச வை, அம்மா வரணும் சொல்லுவாங்க, என்ன செய்ய சொல்ல?” என,

“அப்புறம் கூப்பிடறேன்” என்று ஈஸ்வர் வைத்து விட..

அடுத்தது மலர் அழைத்து “வந்துட்டாளா” என,

“வந்துட்டாம்மா” என பதில் சொல்லி வைத்தான்.

அடுத்தது அஸ்வின், அவனின் அழைப்பை பார்த்தவன், வர்ஷினியிடம் நீட்ட.. யார் என்று புரியாமல் வாங்கிப் பார்த்து, அஸ்வின் என புரிந்து எடுக்கவும், “ஹலோ, மேம் வந்துட்டாங்களா” என தயங்கி அவன் குரல் ஒலிக்க...

“ம்ம்ம்ம்.. நான் வந்துட்டேன்!” என்ற வர்ஷினியின் ராகமான குரல் கேட்டு அதுவரை ஈஸ்வருக்கு இருந்த இறுக்கம் தளர..

“ஹலோ” என்று சண்டையிடத் தயாரானான் அஸ்வின்.

“இந்தியா வர்றிங்கன்னா சொல்ல மாட்டீங்களா? ரெண்டு நாளா எந்த ரெஸ்பான்சும் இல்லைன்னு பயந்து போயிட்டேன்” என கோபமாகப் பேச..

“உங்ககிட்ட தான் பேசணுமாம்” என ஃபோனை ஈஸ்வரிடம் கொடுக்க..

அவனும் என்னவோ வென்று ஃபோனை வாங்கி “சொல்லு” என,

“என்ன விஸ்வா மாதிரி குரல் மாத்தி பேசினா, எனக்கு தெரியாதுன்னு நினைச்சீங்களா..?” என மிரட்டும் தொனியில் பேச..

“குரலெல்லாம் மாத்தலை, நான் விஸ்வா தான் பேசறேன்” என ஈஸ்வர் சொல்ல..

“இல்லை.. அது..” என்று அஸ்வின் உளற.. ஈஸ்வர் “என்ன?” என்பது போல வர்ஷினியைப் பார்த்தான்..

சிரிப்போடு கையினில் வாங்கியவள் “இதுக்கு தான் பாஸை மிரட்டக் கூடாதுன்னு சொல்றது.. அப்புறம் நாங்க பெரிய பாஸ் கிட்ட குடுத்துடுவோம்ல..” என,

“போங்க நீங்க..” எனக் கடுப்பாக அவன் வைத்து விட.. பொங்கிய ஒரு சிரிப்பு வர்ஷினிக்கு, அதனைப் பார்த்ததும் தானாக ஈஸ்வரின் மனம் லகுவாகியது..

“சும்மா என்னை கேள்வி கேட்கறான்..” என சிரிப்போடு சொல்ல,

“ஒரு அக்கறையில கேட்பானாயிருக்கும், நமக்கு உதவி பண்ணினவங்களை என்னைக்கும் நாம மறக்கக் கூடாது” என ஈஸ்வர் சொல்ல..

“ம்கூம்! அது வேற இது வேற, என்னைக்கும் நான் அதை மறக்க மாட்டேன். அதுக்காக இதை நான் அனுமதிக்க முடியாது. அப்பப்போ கொஞ்சம் ரொம்ப அக்கறை எடுத்துக்கறாங்க, அப்கோர்ஸ் தப்பா எல்லாம் கண்டிப்பா கிடையாது. ஆனாலும் என்கிட்டே யாரும் உரிமை எடுத்துகிட்டா எனக்குப் பிடிக்காது”

“அண்ட் நீங்க சொன்ன மாதிரி, எனக்கு ஒன்னும் யாரோட அக்கறையும் வேணாம். அவங்க அவங்க அவங்க லிமிட்ஸ்ல நிற்கணும். எனக்கு என்னைப் பார்த்துக்க தெரியும்” என்று பிகுவாக சொல்ல..

“கிழிச்ச நீ” என மனதினில் கவுன்டர் கொடுத்தவன், அதனை வெளியில் சொல்லாமல், “இது அவனுக்கா? எனக்கா?” என்றான்.

அது ஒரு கோபத்தை சட்டென்று கிளப்ப “ஹலோ, எனக்கு என்ன உங்களைப் பார்த்து பயமா? எதுன்னாலுமே நேரே சொல்வேன். எவனும் நடுவுல தேவையில்லை” என டென்ஷனாகப் பேச..

அவளின் முக சிவப்பை பார்த்து கோபத்தை கணித்தவன், “ஓகே பேபி, ஈஸி, ஈஸி” என்றான்.

“ப்ச்” என சலித்தவள், “எனக்குப் பசிக்குது” என,

“இன்னும் ஒரு மணிநேரம் வீட்டுக்குப் போயிடலாம்” என்றான்.

“என்ன? ஒரு மணிநேரமா.......” என்றவள், அப்படியே வயிற்றை பிடித்து “என்னால முடியாது” என குனிய..

“இவ சும்மா நின்னாலே, நான் தலை சுத்திப் போவேன். என்னை ஒரு வழியாக்காம இவ விடமாட்டா போல” என நினைத்து வர்ஷினியையேப் பார்த்திருந்தான்.

படுத்த வாக்கிலேயே அவனைத் திரும்ப பார்த்து “ரோட பாருங்க!” என அதட்ட..

பிறகே சாலையில் கவனம் வைத்தவன்.. அங்கிருந்த ஒரு ரெஸ்டாரன்ட் பார்த்து.. நிறுத்தி இவளை அழைத்துப் போனான்.

அங்கே காலையிலேயே ஆட்கள் இருக்க.. “எனக்கு தான் ஊர்ல இருந்து வந்தது பசிக்குது, இவங்க எல்லாம் எதுக்கு வர்றாங்க” என்று அவளுக்கு அவளே பேசி நடக்க..

ஒரு வார்த்தை கூட பேசாமல் பின் தொடர்ந்தான்.. அதை அவளும் கண்டுகொள்ளவில்லை..

வேகமாக உள் நடந்தவள், எங்கு அமர்வது தெரியாமல் நின்று கொள்ள.. “வந்த.. உட்கார வேண்டியது தானே...” என்பது போல ஈஸ்வர் ஒரு பார்வை பார்க்க..

“என்ன லுக்கு” என்பது போல வர்ஷினியும் சளைக்காமல் பார்க்க.. சித்தம் கலங்கத் தான் ஆரம்பித்தது, நீல நிறக் கண்கள் இல்லாமலேயே! ஏன் கண்கள் காணாமலேயே.. கண்ணாடி மறைத்திருக்கும் போதே!

வழியில் நிற்பதை உணர்ந்து, ஈஸ்வர் அவளைத் தாண்டி சென்று ஒரு இடத்தில நின்று, “நீ உள்ளே போ” என்பது போல சைகை காட்ட டேபிளின் உள்ளே சென்றாள்..

இது போல ஒரு ஜன சந்தடி மிகுந்த ரெஸ்டாரன்ட் வந்தே பல வருடங்கள் ஆகிவிட்டன… அவள் உள்ளே சென்றதும் அருகில் அமர்ந்தான்.

“இட்லி” என்றாள் உடனே..

“பேரர் கிட்ட வர்றதுக்குள்ள அந்த கண்ணாடியைக் குடுத்துடு, இல்லை அவன் பயந்துடுவான்” என ஈஸ்வர் சிரிக்காமல் சொல்ல, சொல்லிய விதத்தில் புன்னகை பூத்த வர்ஷினி..

அதை கழட்டவும்.. கர்ம சிரத்தையாய் அதனை வாங்கி அவனின் டி ஷர்டில் சொருகிக் கொண்டான்.

“போதுமா, இட்லி மட்டும்” என..

“இது ஸ்டார்டர்” என சொல்லி சிரிப்பது போல வாயை இழுத்துப் பிடிக்கவும்.. ம்கூம் அவனால் முடியவில்லை.. அந்த இதழ்களை சிறை செய்ய ஒரு ஆவேசம் கிளம்ப.. அவனை அதற்கு மேல் சோதிக்காமல் “முதல்ல அதை சொல்லுங்க அப்புறம் வேற சொல்றேன்” என்றாள்.

ஈஸ்வரின் இறுக்கமான முகம் அவனின் எண்ண ஓட்டம் எதையும் பிரதிபலிக்கவில்லை.

ஒரு பெருமூச்சை வர்ஷினி அறியாதவாறு வெளியேற்றி “இட்லி” என சொல்லவும்.. அது வரவும்… அவசரமாக உண்ண ஆரம்பித்தவள்.. “உங்களுக்கு சொல்லலை” என்றாள் உண்டு கொண்டே.

அதன் பிறகே அவனுக்கும் அதையே சொல்ல, அதுவும் உடனே வந்துவிட.. வர்ஷினி உண்டு கொண்டிருந்த ப்ளேட்டை ஈஸ்வர் தன் புறம் நகர்த்தி.. புதிதாக வந்ததை அவள் முன் வைத்தான்.

“என்ன செய்கிறான் இவன்?” என்று விழிவிரித்துப் பார்க்க,

“ரொம்ப பார்க்காதே, அப்புறம் உன் கண்ல இருக்குற லென்ஸ் கீழ விழுந்துடும்” என வர்ஷினியையேப் பார்த்து சொல்ல..

இமை சிமிட்டியவள், “நீங்க பண்றது சரியில்லை” என..

“ஆமாம் சரியில்லை” என்று இன்னும் தீவிரமாகச் சொன்னவன்..

அவள் உணவினை கையினில் எடுத்த பிறகு தான் ப்ளேட்டை தன் புறம் தள்ளி இருந்தான். அந்த அதிர்வில் அதனை வாயில் வைக்காமல் கையில் வைத்தபடி வர்ஷினி பார்த்துக் கொண்டிருக்க..

“சரியில்லை” என்று சொன்ன நொடி, அவளின் கை பற்றி, அந்தக் கவளத்தை ஈஸ்வர் தன் வாயினில் வைத்துக் கொள்ள..

வர்ஷினி ஸ்தம்பித்து விட்டாள்.. அடிவயிற்றில் சொல்ல முடியாத ஒரு உணர்வு!

பிறகு மெதுவாக கையை விட்டவன் “இப்போ சரியா.. இப்போ நீ சாப்பிடு!” என,

அவனை முறைத்து “இது ரொம்ப தப்பு” என்றாள் பார்வையில் உக்கிரத்தை தேக்கி..

“உன்கிட்ட எதுவுமே எனக்கு தப்பில்லை பேபி” என..

ஈஸ்வர் பார்க்க பார்க்க அவன் வாயினில் வைத்த தன் கையினை அங்கே தண்ணீர் வைத்திருந்த டம்ளரில் விட்டு சுத்தம் செய்ய..

அதனை எந்த பாவனையுமின்றி பார்த்தவன், "என்ன தப்பு? நான் சாப்பிட்டதையா உன்னை சாப்பிட சொன்னேன், நீ சாப்பிட்டதை தானே நான் சாப்பிட்டேன்" என அணி இலக்கணம் பேச..

அப்போதும் வர்ஷினி எதை தூக்கி அவன் மேல் வீசலாம் என்பது போலப் பார்த்திருந்தாள்.

"ரொம்ப பசியா இருக்கு சொன்ன.. சாப்பிடு, இனிமே இங்க இப்படி பண்ண மாட்டேன்.. எப்படியும் பிரிய தான் போறோம், எனக்கு கொஞ்சம் மெமரீஸ் வேண்டாமா?" என்றவன்..

"ஆமாம், எதுக்கு இப்போ லென்ஸ் போட்ட" என்றான் திரும்பவும் தீவிரமாக.

அதற்கு பதில் சொல்லாமல் வர்ஷினி உணவை உள்ளே தள்ளத் துவங்க.. அவள் உண்டு முடித்ததும் வேகமாக அவளுக்கு தேவையானதை அவளைக் கேட்காமலேயே சொன்னான்..

அதுவரை இருந்த இலகுத்தன்மை போய் இருந்தாலும் வர்ஷினி அதை உண்பதில் எல்லாம் காட்டவில்லை.. தேவையானதை வயிறு நிறையவே உண்டாள்.. ஆனால் திரும்பவும் இருவருக்குள்ளும் ஆழ்ந்த அமைதி..

கார் வரும்வரை நீடிக்க.. அமர்ந்ததும்.. "இப்போ சொல்லு, எதுக்கு கண்ல லென்ஸ் போட்ட" என்றான் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்ற பிடிவாதமான குரலில்.

'சோ சிம்பிள், அதை என் வாயல கேட்கணும்னா சொல்றேன், கேட்டுகங்க, நீங்க என் கண்ணைப்

பார்க்க கூடாதுன்னு தான்" என்றாள் அலட்சியமாக.

"அதுதான் ஏன்? ஏன் நான் பார்க்கக் கூடாது?" என ஆவேசமாகக் கேட்கவும்..

"பார்க்கக் கூடாதுன்னா.. கூடாது தான்!" என்றாள் தெளிவாக.

"இப்படியே இந்தக் காரை ஸ்டார்ட் செஞ்சு, எது மேலயாவது மோதிடுவேன்" என்றான் ஆக்ரோஷமாக..

"அப்போவும் என் கண் தெரியாதுல்ல" என்றாள் சற்றும் அலட்டிக் கொள்ளாமல்.. பின்பு கதவைத் திறந்து, இறங்கி, அவன் புறம் வந்து.. "இறங்கி அந்த பக்கம் போங்க" என சாவியை கேட்க.. அதை அங்கேயே விட்டு எதுவும் பேசாமல் மறு புறம் அமர்ந்தான் ... முகமும் அவ்வளவு இறுக்கமாக இருக்க..

ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்தவள் "இப்போதான் வந்திருக்கேன், அதுக்குள்ள இப்படி செஞ்சா எப்படி?" என,

"என்னால நல்லவன் மாதிரி நடிக்க முடியாது. நான் இப்படி தான் உன்கிட்ட" என்றான்.

"இவ்வளவு திமிர் வேண்டாம், அது உங்களை அழிச்சிரும்.."

"உன்கிட்ட நான் அழிஞ்சாலும் தப்பில்லை, உன்னால அழிஞ்சாலும் தப்பில்லை" என,

தலையில் தானாக தட்டிக் கொண்டவள் "சைக்கோ மாதிரி பேசாதீங்க, நான் வந்திருக்கவே வேண்டாம்" என்று மீண்டும் தலையில் தட்டிக் கொள்ள..

கைபிடித்துத் தடுத்தான்..

“அதுக்கு ஏன் இந்த கண்டிஷன் போட்டு என்னை பக்கம் வர வைக்கணும்.. என்னவோ பண்றேன்னு விட வேண்டியது தானே!” என கத்த..

“அதுவும் என்னால முடியாது! அப்படி உன்னை விட முடியாது! நீ எப்படி ஒன்னுமே நமக்குள்ள இல்லாத மாதிரி சகஜமா பேசற.. என்னால முடியலை?” என,

“வேற என்ன பண்ண நான்? அச்சச்சோ என்னை விட்டுடுங்க, டைவர்ஸ் குடுத்துடுங்கன்னு கெஞ்சணுமா இல்லை சேர்ந்து வாழுவோம்னு சொல்லணுமா?” என..

“ஏன் கெஞ்சணும்? இப்படி ஒரு ஆர்டர் போடேன்” என கையை சொடகிட்டு காட்ட..

“நீங்க ரொம்ப நாளைக்கு பிறகு என்னைப் பார்த்ததுனால எமோஷனலா இருக்கீங்க. நாம இதை பத்தி அப்புறம் பேசலாம்”

“எப்போ வேணா பேசு, ஆனா என்னோட ஸ்டான்ட் இதுதான்.. யாரோ மாதிரி.. எதுவுமே நமக்குள்ள இல்லாத மாதிரி என்னால இருக்க முடியாது.. உன்னை பார்க்கற வரை உன்னை எந்த வகையிலையும் தொந்தரவு பண்ணக் கூடாது தான் நினைச்சேன். ஆனா என்னால முடியலை.. சொல்லு என்ன பண்ணலாம்?” என்றான் தீவிரமாக..

ஈஸ்வர் அவனின் கட்டுக்குள் இல்லை என்பது அவனின் முக பாவத்திலேயே தெரிய..

“இதுக்கு தான் இந்த மூணரை வருஷமா நான் உங்களை பார்க்க விடலை” என்றவள்,

“இப்போதைக்கு ஒன்னும் பண்ண வேண்டாம் வேடிக்கை பாருங்க” என்று வார்த்தைகளை நிறுத்தி.. அவளைப் பார்த்திருந்தவனிடம் “என்னை

இல்லை, வெளில" என்று அவன் பக்க காரின் கண்ணாடியை காட்டியவாறு காரை எடுத்தாள்..

இருவரின் முகமுமே தீவிரத்திற்கு மாறி இருந்தது..

இப்படி ஆகுமென்று ஈஸ்வர் நினைக்கவேயில்லை.. இன்னுமா இந்த தீவிரம் தன்னுள்! அவனுக்கே பயமாய் இருந்தது.. அவனின் டீ ஷர்டில் இருந்த வர்ஷினி அணிந்திருந்த கண்ணாடியை எடுத்து அணிந்து எதிலிறிந்தோ தப்பிப்பவன் போலக் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

கூடவே "சாரி" என்ற வார்த்தையும் உதிர.. சொன்னது இவன் தானா என யோசித்த போதும்.. இறுக மூடியிருந்த அவன் விரல்கள் கண்ணில் பட.. அதன் மேல் தன் விரல் கொண்டு லேசாக தட்டிக் கொடுத்து அதன் இறுக்கம் தளர்ந்த பிறகே வர்ஷினியின் விரல்கள் ஸ்டியரிங் பிடித்தது..

**ஒரு கல்! ஒரு கண்ணாடி!**

**அத்தியாயம் எழுபத்தி ஒன்று:**

**மேல் வானத்தில் ஒரு நட்சத்திரம் கீழ் வானத்தில் ஒரு பெண் சித்திரம்**

ஒரு பத்து நிமிடத்தில் தேறிக் கொண்டவன்.. எந்த வழி செல்கிறாள் என்று பார்க்க.. ஏதோ ஒரு சாலையைப் பிடித்து சென்று கொண்டிருந்தாள்..

"எங்கே போற?" என்று ஈஸ்வர் கேட்கவும்..

"யாருக்குத் தெரியும்? எங்கே போறதுன்னு தெரியாம தானே உங்களோட வர்றேன்" என்றவளின் குரலில் ஒரு விரக்தி இருக்க,

“ஏன் இப்படி எல்லாம் பேசற? நீ சொன்ன மாதிரி ரொம்ப நாள் கழிச்சு உன்னை பார்த்ததினால எமோஷனல் ஆகிட்டேன்.. இனிமே ஆக மாட்டேன்” என்றவன்..

“இப்படியெல்லாம் பேசாதே! நீ உன்னோட வாழ்க்கையோட ஒவ்வொரு நிமிஷத்தையும் அனுபவிச்சு வாழணும்.. என்னோட இருந்தாலும் சரி இல்லைன்னாலும் சரி.. பலதும் தான் யோசிக்கறேன்.. ஆனா உன்னை பார்த்தா தடுமாறிடறேன்” என உண்மையைப் பேசவும்..

“நீயா தடுமாறுகிறாய்.. இல்லாமல் போனது தானே வேதனை, தடுமாற்றம் என்னுள் தானே! பதினைந்து நாட்கள் எனக்கு ஒரு உலகத்தைக் காட்டி பின் அதன் சுவடுகள் சிறிதும் இன்றி தவிக்க விட்டவன் தானே நீ! நீ உன்னை நிலை படுத்திக் கொள்ள என்னை நிலையற்றவள் ஆக்கி விட்டாய்! அதுதானே என்னை இன்னும் தடம் மாற செய்தது! மாத்திரைகளின் துணையை என்னை அதிகமாக தேடவைத்தது! உன்னை பார்த்த நாளிலிருந்து நான் சிதிலமடைந்து போனேன்! என்னை நானே வெறுக்கும் சில கணங்களை, தேடல்களை என்னுள் கொடுத்து விட்டாய்! மீள்வதற்குள் மூச்சடைத்துப் போய் விட்டேன்! உன்னை தள்ளி நின்று காணாமல் நான் மீண்டு விட்டேன்! கண்டும் நான் மீள வேண்டும்! மீண்டே ஆக வேண்டும்” என்று நினைத்துப் பார்த்தவளுக்கு மனதினில் ஒரு உறுதி பிறக்க.. ஒரு நிமிடம் கண்களை இறுக்க மூடி திறந்து ஈஸ்வரைப் பார்த்தாள்..

அந்தப் பார்வை அவனுக்கு புரியவில்லை “என்ன வர்ஷ்?” என,

“ஒன்றுமில்லை” என்பது போல தலையாட்டி தெரியப் படுத்தவும்..

மேலும் துருவாமல்.. “நீ வர்றதுக்காக வெயிட் பண்ணிட்டு இருந்தேன்.. நமக்கு நிறைய வேலை இருக்கு..” என.

“என்ன வேலை?” என்றாள் புரியாமல்..

“முதல்ல என்னோட நியூ ப்ராஜக்ட் லான்ச் ஒன்னு.. அப்புறம் ஐ ஹேவ் எ வெரி பிக் ப்ரபோசல்.. அது பத்தி உன்கிட்ட பேசணும்.. ஏன்னா நீயில்லாம அதை என்னால பண்ண முடியாது.. அப்புறம் நம்மோட வீடு ஒன்னு, அதுக்கு கிரஹபிரவேஷம் பண்ணனும்.. அதுக்கு நம்மோட கன்வினியன்ட் டே பார்க்கணும்” என ஈஸ்வர் அடுக்கவும்..

“நாம டைவர்ஸ் பண்ணிக் போறோம்” என்றாள்..

“நீ பண்ணிக்கப் போற, நான் இல்லை” என..

“திரும்பவுமா?” என வர்ஷினி எரிச்சலை முகத்தில் மறையாது காட்டி அவனைப் பார்க்க,

“பொண்ணுங்களுக்கு தானே தாலி மெட்டி எல்லாம், எனக்கொன்னும் இல்லை தானே. சோ! என்னோட லைஃப்ல எந்த சேஞ்சும் இல்லை. அதை சொன்னேன்” என வாய்க்கு வந்ததை உளறினான்..

“வாயை மூடுடா, அவளை டென்ஷன் பண்ணாதே.. திரும்ப நீ டென்ஷன் ஆகாதே” என மனதிற்குள்ளும் சொல்லிக் கொண்டான்.

“தாலி” என்ற வார்த்தைக் கேட்டதும் தான்.. “அச்சோ” என்று கழுத்தை தடவினாள்.. கழுதைச் சுற்றி ஸ்கார்ப் இருந்ததினால் ஈஸ்வருக்குத் தெரியவில்லை..

“அச்சோ” என்று மெலிதாக கூறினாலும் அவனின் காதில் விழ,

“என்ன?” என்றவனிடம்.. “ஒன்றுமில்லை” என்பது போல மீண்டும் ஒரு தலையசைப்பு.. பின்னே ஷப்பா, ஊருக்கு வருவதற்காக திரும்ப எடுத்து அணிந்திருந்தாள்..

ஆம்! வர்ஷினி அங்கே இருந்தவரை அணியவில்லை.. அங்கே அதை பெரிதாய் எடுப்பவர் யாரும் அவளின் அருகில் இல்லை.. அதனின் மகத்துவங்கள் உணர்ந்து அவளும் வளரவில்லை.. பின்னும் உணரவில்லை.

“என்ன வர்ஷி?” என்றான் தணிவாக, என்னவோ என நினைத்து.

“நிஜம்மா ஒன்னுமில்லை” என்றவள்.. “அது என்ன பெரிய ப்ரபோசல்” என,

“சொல்றேன், சொல்றேன், நீ ஏதாவது பண்ணனும்னு ப்ளான் வெச்சிருக்கியா?” என,

“இல்லை, இதுவரை ப்ளான் ஒண்ணுமில்லை. ஒரே ஒரு ஜாப் வொர்க் மட்டும் தான் பண்ணினேன். அது மூலமா கொஞ்சம் யோசனை இருக்கு”

“என்ன ஜாப் வொர்க்?”

“ஒரு அனிமேஷன் ஃபிலிம் வொர்க் பண்ணினேன்”

“ஃபில்மா? வொர்க் பண்ணினியா? என்ன பிலிம்? அங்கே தமிழ் எப்படி?”

“அறிவே!” என்றபடி ஒரு பார்வை பார்த்தவள், “அது ஒரு ஹாலிவுட் மூவி, அவதார் மாதிரி! ஸ்டுடியோ கூட ஹாலிவுட் ல தான் இருந்தது” என,

“பெரிய ப்ராஜக்டா?”

“ம்ம்” என சொல்லி, டைரக்டர் பேர் சொல்லி, படம் பேர் சொல்ல,

“ஆ” எனப் பார்த்தவன், “நிஜம்மாவா சொல்ற?” என,

“ஆம்” என்பது போல தலையசைத்தவள், “ஏன் இப்படி கேட்கறீங்க?” என்றாள்.

“ஹே திஸ் இஸ் எ வெரி பிக் ப்ராஜக்ட், அதுல நீ என்ன பண்ணின?”

“எப்படியும் படம் வர இன்னும் சிக்ஸ் மன்த்ஸ் ஆகும். வந்த பிறகு அதுல காட்டுறேன்!”

“இது பெரிய விஷயம் வர்ஷி.. நீ இவ்வளவு ஈசியா சொல்ற.. திஸ் இஸ் எ வெரி பிக் சக்சஸ்.. உன்னோட ஏஜ்க்கும் எக்ஸ்பிரியன்ஸ்க்கும்.. ஏன் இதை  சொல்லலை?” என,

“நானே சொல்வேனா, நான் அதை பண்றேன் இதை பண்றேன்னு, எனக்கு அது தெரியும் இது தெரியும்ன்னு, என்னை பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? உங்களுக்கு கூட எதுவும் தெரியாது.. ஆனா கொஞ்சமாவது உங்களுக்கு தான் தெரியும். அட்லீஸ்ட் என்னோட ஸ்டடீஸ் பத்தி நீங்க தான் கேட்டீங்க”

“என்ன சொல்வது?” என்று தெரியவில்லை, விழித்தான் ஈஸ்வர்.

சிறு சிறு வெற்றிகளைக் கூட பெரிய விதமாய் கொண்டாடிக் கொள்ளும் இந்த உலகில், மிகப் பெரிய வெற்றி. அதனை யாரிடமும் பகிரக் கூட இல்லை. “இன்று உன் மனைவி அவள், நீ அவளை வைத்து விட்ட நிலை என்ன” என்று தன் மீதே வருத்தமாய் கோபமாய் இயலாமையாய் உணர்ந்தவன்,

“உனக்கு என்ன என்ன தெரியும்?” என,

“இனிமே அதை தெரிஞ்சு நீங்க என்ன பண்ணப் போறீங்க” என்று முடித்து விட்டாள்.

மேலும் அவளை டென்ஷன் படுத்த விரும்பாமல், “எனிவே கங்க்ராட்ஸ். இது ரொம்ப பெரிய விஷயம். லெட்ஸ் செலிப்ரேட் சம் அதர் டைம்” என்றான் ஆழ்ந்த குரலில்.

சாலையில் பதித்திருந்த பார்வையை விலக்கி ஒரு இனம் விளங்கா பார்வை ஈஸ்வரை பார்த்தவள், வேறு எதையும் பேசாமல் மீண்டும் சாலையை நோக்கி பார்வை பதித்தாள்.

“ஓரமா நிறுத்து வர்ஷி.. நான் டிரைவ் பண்றேன்!”

இறங்கி மாறி அமர்ந்தவன்.. “இந்த அஞ்சு வருஷம் நம்ம வாழ்க்கையில இல்லாம போயிருந்தா, நாம சந்தோஷமா இருந்திருப்போம். ஐ மீன் நான் முரளி கல்யாணத்துல உன்னை நல்லபடியா பார்த்து, என் மேல உனக்கிருந்த இன்ட்ரஸ்ட் அப்படியே இருந்திருந்தா”

“ஆனா கிடைக்குமான்னு ஒரு வருஷம் ஏங்கி, நீ கிடைச்ச பிறகு மறுபடியும் தொலைச்சிட்டேன்.. கண்டிப்பா நான் மட்டும் தான் காரணம்.. அப்போ இருந்த என்னோட மைன்ட் செட்ல எதையுமே என்னால கவனிக்க முடியலை. பணம் பணம்ன்னு அது பின்னால ஓடிட்டேன். அதனால் உன்னோட விருப்பு வெறுப்பு எதுவும் தெரியலை. சாரின்ற வார்த்தை எல்லாம் இதை சரி செய்யாது தெரியும். ஆனாலும் ஸ்டில் சாரி!” என்றான் உணர்ந்து.

“நான் இப்படியே உங்களோட வர்றதா, இல்லை எங்கயாவது தொலைஞ்சு போறதான்றது நீங்க பழைய விஷயத்தை பேசாம இருக்கிறதுல தான்

இருக்கு. இப்போ என்ன பண்ணட்டும்?” என்றாள். அவனைப் பார்க்கக் கூட இல்லை, மீண்டும் சாலையை வெறித்து இருந்தாள்.

வாயை கப்பென்று மூடிக் கொண்டான்.. பின்னே வர்ஷினியைப் பார்க்கும் போது, அவளிடம் எப்படி பேச வேண்டும், நடக்க வேண்டும் என்று பிரிந்த நாளாக பல யோசனைகளை தன்னுள் ஒட்டிக் கொண்டு இருந்தவன், திரும்பவும் தடுமாற்றமும் முட்டாள் தனமுமாக இருப்பதாக அவனுக்கேத் தோன்றியது.

அவனுக்கே புரிந்தது, எல்லோரும் பார்க்கும் ஈஸ்வர் வேறு இவளிடம் இருப்பவன் வேறு என.. “அதுதான் அவளுக்கு உன்னைப் பிடிக்கவில்லை” என அவனுக்கு அவனே மனதினில் பேசிக் கொண்டான்.

பிறகு ஒரு ஆழ்ந்த அமைதி.. அந்த அமைதி ஈஸ்வரை பாதிக்க எப்பொழுதும் போல இளையராஜாவின் இசையை நாடி ஸ்டிரியோ ப்ளேயரை உயிர்ப்பித்தான். மிகவும் மெலிதாக அது,

**தாலாட்டுதே வானம்.. தள்ளாடுதே மேகம்.. தாளாமல் மடிமீது தார்மீகக் கல்யாணம்.. இது கார்கால சங்கீதம்..**

என ஒலிக்க..

வர்ஷினி அதை இன்னும் சத்தமாக வைத்து கண்மூடிக் கொள்ளவும்.. கார் வேகமெடுத்தது...

ஒரு மணி நேரத்திற்கும் மேலான பயணம், மனதிற்கு இதம் தரும் பாடல்களாய் ஒலிக்க, கண்மூடி அதனை கேட்டு இருந்தாள். வர்ஷினியோடான அந்த பயணத்தை ஈஸ்வரும்

ரசிக்க ஆரம்பித்தான். இருவர் மனமுமே சமன்பட்டது.

ஒரு அகலமான வீதியினுள் நுழைய.. காரின் வேகம் வெகுவாக குறையவும் கண்திறந்தாள். “எங்கே போறோம்?” என்றவளிடம் “வீட்டுக்கு” என்றவன்.. “நான் வீடு மாறிட்டேன்” என..

“எப்போ?”

“அப்போவே, நீ போன கொஞ்சம் நாள்ளயே.. நீ காலேஜ் முடிச்சதும் வீட்டுக்கு வருவேன்னு.. ஆனா நீ திரும்ப படிக்கப் போயிட்ட”

“அப்போ நீங்க உங்க வீட்டு ஆளுங்களோட இல்லையா?”

“இல்லை” எனத் தலையசைத்தான்.

“இன்னுமா அவங்க மேல கோபமா இருக்கீங்க?”

“இல்லை” என்பது போல மீண்டும் தலையசைக்கவும்,

“அப்புறம் ஏன் போகலை?” என்றாள் விடாமல்.

“உன்னை தனியா விட்டுட்டு, நான் அவங்களோட போய் இருக்க முடியுமா என்ன?” என்றவன், “நானும் தனியா தான் இருக்கேன்” என்றான்.

“தோடா.. இந்த சீன் நல்லாவே இல்லை.. எனக்கு பீலிங்க்சும் வரலை, ஒரு மண்ணும் வரலை” என்று மனதிற்குள் கடுப்பானவள்..

“இவனே போக வைப்பானாம், அப்புறம் இவனே டைலாக் அடிப்பானாம், என்னவோ போ வர்ஷி, உன் ராசியோ? அவன் ராசியோ?” என்று மனதிற்குள் கௌண்டர் கொடுத்தவள்,

“கடவுளே என்னை காப்பாத்திடு, இவன் என்கிட்டே தப்பா நடக்கறதை கூட பொறுத்துக்க முடியும். ஆனா இவன் நல்லவனா மாறி பேசறதை என்னால தாங்க முடியாது! அய்யகோ!!!!!!!!!!!!” என மனதினில் வசனம் பேசியவள்,

வெளியில் “அத்தை எப்படி விட்டாங்க?” என்றாள் சின்சியர் சிகாமணியாக.

அதற்கு ஈஸ்வர் கர்மசிரத்தையாக “பேசிட்டே தான் இருப்பாங்க.. ஆனாலும் நான் போகலை” எனும்போதே வீடு வந்திருக்க..

இவனின் காரைப் பார்த்ததும் வாட்ச் மேன் திறக்க.. வாட்ச் மேன் அருகிலேயே தாஸ் இருந்தான்.. அவனைப் பார்த்ததும் முகம் மலர்ந்தவள்,

“தாஸண்ணா..” என்று கார் உள்ளே செல்ல செல்ல வர்ஷினி கூப்பிட.. தாஸின் அருகில் ஈஸ்வர் காரை நிறுத்தவும் அவசரமாக இறங்கினாள்..

“எப்படி இருக்கீங்க தாஸண்ணா, என்னால உங்கட்ட போன்ல பேசவே முடியலை” என..

“ஊருக்குப் போயிட்டேன் பாப்பா, நான் இங்க இல்லவே இல்லை”

திரும்பி ஈஸ்வரை பார்க்கவும் “நான் தான் அனுப்பி வெச்சேன்.. நீ திரும்ப வரும் போது கூப்பிட்டுக்கறேன்னு” என்றான்.

“நேத்து தான் சொன்னாங்க, உடனே கிளம்பி வந்துட்டேன்” என்றான் தாஸ்.

“சாப்பிட்டீங்களா” என அவனுடன் பேசிக் கொண்டே நடக்க..

“நீங்க எப்படி இருக்கீங்க பாப்பா” என்று அவன் பதில் சொல்லிக் கொண்டே நடப்பது புரிய... காரை

பார்க் செய்து ஈஸ்வர் வர்ஷினியின் உடமைகளை எடுக்கவும், அதைக் கவனிக்காமல் தாஸ் பேசிக் கொண்டே இருக்க..

"தாஸண்ணா" என வர்ஷினி கண் காட்டவும் விரைந்தவன், அதை தூக்கிக் கொண்டே ஈஸ்வரிடம், "பாப்பா ஏன் இளைச்சு போச்சு? பாப்பா கண்ணு ஏன் வேற மாதிரி இருக்கு?" என,

"ரொம்ப நல்லவன்டா இவன். அவகிட்ட கேட்காம என் கிட்ட கேட்கறான். இவனை என்ன பண்ண?" என நினைத்தாலும்,

"கண்ணுக்கு லென்ஸ் போட்டிருக்கா தாஸ்" என்றான்.

"நல்லா இல்லை, நீங்க சொல்ல மாட்டீங்களா?" என தாஸ் ஈஸ்வரிடம் அலுக்கவும்..

"வர்ஷினி" என உரக்க அழைத்தான் உடனே.. "என்ன?" என்பது போல வர்ஷினி திரும்பிப் பார்க்க, "உன் கண்ணுக்கு லென்ஸ் நல்லா இல்லையாம். தாஸ் என்னை சொல்லச் சொல்லி சொல்றான்" என்றவனின் குரலில் குறும்பு அப்பட்டமாய் தெரிய,

தாஸ் என்ன நடக்கிறது என்று தெரியாமல் விழிக்க,

வர்ஷினி "என்னடா இவன்" என்பது போலப் பார்த்தவள், "இவனுக்காக தானே லென்ஸ், நான் அதை எடுக்கணுமா?" என யோசிக்கும் போதே..

"எடுத்துடு அதை" என மீண்டும் உரக்கச் சொல்லி, "சொல்லிட்டேன்" என தாஸிடம் சொல்லி... மீண்டும் வர்ஷினியை பார்த்தவன் முகத்தில் ஒரு மலர்ந்த புன்னகை, "உலகம் என்னை ரொம்ப நம்புது" என்பது போல.. அவனை அவனே கிண்டல் செய்து கொள்ளும் ஒரு தன்மை.

புரிந்த வர்ஷினியின் முகத்தில் தானாக ஒரு புன்னகை மலர்ந்தது.. எந்த பதிலும் சொல்லாமல் பார்த்திருந்தாள்.

“என்ன கலாட்டா இது?” எனப் புரியாமல் தாஸ் பார்த்திருக்க.. ஈஸ்வர் நடக்கவும் அவனின் கையினில் இருந்த லக்கேஜ் வாங்கி.. “நீங்க போங்க, நான் எடுத்துட்டு வர்றேன்” என அனுப்பினான்..

வர்ஷினி அருகில் வந்தவன் “என்ன லென்ஸ் எடுத்துடலாமா?” எனக் கேட்டு புன்னகைக்க.

“எடுக்கணும்னு தோண வைங்க, எடுத்துடறேன்” என சொல்லி வர்ஷினியும் பதில் புன்னகை புரிந்தாள்.. ஈஸ்வரின் மலர்ந்த முகத்தை பார்த்தோ என்னவோ அந்த பதில் தானாக வந்தது.

“சோ, எனக்கு ஒரு சான்ஸ் இருக்கா?” என்றான் உடனே ஒரு பரவசத்துடன் கூடிய எதிர்பார்ப்பை முகத்தினில் தேக்கி,

“அச்சோ” என உதடு கடிக்கவும்.. தாஸ் பார்க்கிறானா எனப் பார்த்து, “அதை ஏன் டிஸ்டர்ப் பண்ற” என்று நொடியில் கை விரலால் உதடை விடுவித்து.. அதனை மெலிதாக பிடிக்க,

பட்டென்று கையினில் அடித்தாள் அனிச்சையாக.. “வாட்ச் மேன் பார்க்கறாங்க” என்றபடி.

“அட தாஸை பார்த்தேன், இவரை கவனிக்கலை” என நினைத்து திரும்பி அவரைப் பார்த்தான்..

ஆம்! இவர்களை தான் பார்த்துக் கொண்டிருந்தார்.. ஈஸ்வரை பார்த்து முகத்தை

சுருக்கினாள்.. "தாஸ் மட்டும் தான் பார்த்தேன்!" என்று ஈஸ்வர் விளக்கம் வேறு கொடுத்தான்..

இதற்கு அங்கே ஒன்றும் நடக்கவில்லை, அவர்களைப் பொறுத்தவரை காதல் கணவன் மனைவியும் அல்ல.. செல்ல சீண்டல் சீண்டிக் கொள்பவர்களும் அல்ல.

"ஆனாலும் செமையா அடிக்கற நீ" என்று அவள் அடித்த இடத்தை தடவி விட்டுக் கொண்டே சொல்ல..

மிகவும் இயல்பான பேச்சுக்கள், எப்போதாவது அவர்கள் இப்படி பேசியிருப்பார்களா அவர்களே அறியார். அவளுடைய கவனம் யாரும் பார்த்தாரா என்பதில் தான் இருக்க, அவன் தன் இதழ்களை தொட்டதை மறந்து போனாள்..

பிறகு தான் ஈஸ்வர் செய்த செயல் புரிந்து, அவனை ஒரு பார்வை பார்க்க.. வர்ஷினி அவனை பார்த்த பார்வை சத்தியமாய் அவனுக்கு புரியவில்லை..

அவள் நினைத்தது "இவன் வேற ஒருத்தன்! வந்துட்டேன்னு சொல்லு! திரும்ப வந்துட்டேன்னு சொல்லு! எப்படிப் போனேனோ அப்படியே திரும்ப வந்துட்டேன்னு சொல்லு! ன்ற மாதிரியே பண்றான்! இவன் கெட்டவன் தான் எனக்குத் தெரியும்! ஆனா இவ்வளவு கெட்டவன்னு தெரியாமப் போச்சே!" என்று தான் பார்த்திருந்தாள். இத்தனையும் மனதிற்குள் மட்டுமே!

அதற்குள் யாரோ நடுத்தர வயது பெண்மணி ஆலம் எடுத்து வர..

"யார்?" என்பது போல அவள் பார்க்கவும், "வீட்ல சமைக்க அம்மா ஏற்பாடு பண்ணியிருக்காங்க..

அவங்க தான் எடுக்க சொன்னாங்க" எனவும்..

பதில் பேசாமல் நின்றாள்.. ஈஸ்வர் தள்ளி நிற்க.. "நீங்களும் நில்லுங்க சார்" என,

ஈஸ்வர் பதில் பேசுமுன்னே.. "நில்லுங்க சார்" என்றான் தாஸும்..

பின் ஈஸ்வரும் நிற்க.. சுற்றிய அந்த பெண்மணி பின்பு அதனை வெளியே ஊற்றப் போக..

"அத்தை எல்லாம் சொல்ல மட்டும் ஏன் செஞ்சாங்க? ஏன் அவங்க வரலை?" எனக் கேட்டாள்.

"நான் தான் வேண்டாம்னு சொல்லிட்டேன்.. உன் மூட் எப்படி இருக்கோ? அதையும் விட அவங்க மூட் எப்படி இருக்கோ? டைவர்ஸ் பத்தி கேட்டதுல இருந்து இடிஞ்சு போயிருக்காங்க!"

சிறு அதிர்வு அவளுள் "எப்படி அதுக்குள்ள தெரியும்"

"உனக்கும் எனக்கும் நடுவுல ஒருத்தனை நாம சில நேரம் உள்ள நுழைக்கிறோமே! அவன்!" என..

வர்ஷினியின் முகம் கோபத்தைத் தத்தெடுத்தது.. அலைபேசியை உடனே அவள் எடுக்க..

"விடு வர்ஷ், நான் ஏற்கனவே அவனை நல்லா திட்டிட்டேன்"

"அஸ்வின் என்கிட்டே எல்லார்கிட்டயும் சொன்னதையும் சொல்லலை, நீங்க திட்டினதையும் சொல்லலை. இப்போ நான் எல்லோரையும் எப்படிப் பார்ப்பேன். ஆளாளுக்கு அட்வைஸ் செஞ்சு உயிரை எடுப்பாங்க"

"என்னைக்கின்னாலும் தெரிய வேண்டியது தானே?"

“எஸ், தெரிய வேண்டியது தான். ஆனாலும் அதை நான் தானே சொல்லணும். இவனை யாரு என்னைப் பத்தி சொல்ல சொன்னா?” என்று கோபம் குறையாமல் கேட்க..

“விடு, உன் மேல உள்ள அக்கறையில் தான் சொன்னான்” என, அப்போதும் விடாமல் அவனை அழைக்க முற்பட,

“வர்ஷ்” என அதட்டலிட்டவன், “கேட்காதேன்னு சொன்னா, கேட்கக்கூடாது.  அவன் வேற எந்த விஷயமும் வாயைத் திறந்து ஒரு வார்த்தைக் கூட யார் கிட்டயும் சொல்லலை.. அதை மனசுல வை” என ஸ்ட்ரிக்டாக பேச..

அதன் பிறகு தான் மொபைலை இறக்கினாள்.. ஆனாலும் முகத்தில் டென்ஷன் இருக்க..

“எனக்கு டென்ஷன் குடுக்கறது நீயா தான் இருக்கணும். உனக்கு டென்ஷன் குடுக்கறதும் நானா தான் இருக்கணும்.. எல்லாம் நான் பார்த்துக்குவேன். வேற எதுக்கும் டென்ஷன் ஆகாதே!” என்றான்.

அதற்குள் அந்த அம்மாள் வந்துவிட்டவர், “உள்ள போங்க சார்” என,

உள்ளே நுழைந்தவளின் முகம் தெளியவே இல்லை.. “முதல்ல உட்காரு” என்றவன்..

“மா, காஃபி கொண்டு வாங்க!” என்றவன்.. அங்கிருந்த சோஃபாவில் அவளை அமர்த்தி, “எத்தனை நாள் எல்லோரையும் அவாய்ட் பண்ணுவ.. என்னைக்கு இருந்தாலும் பார்த்து தான் ஆகணும்.. டைவர்ஸ் விஷயம் சொல்லித் தான் ஆகணும்.. எதுக்கு இப்படி எல்லோரையும் எதிர்கொள்ள தயங்கற நீ!” என்றான்.

அது அவளை உசுப்பி விட “எனக்கு என்ன தயக்கம்?” என்றாள்.

“அப்போ விடு, எதுன்னாலும் பார்த்துக்கலாம்!” என்றான்..

பிறகு சில நிமிட அமைதி.. அதற்குள் அந்த அம்மாள் காஃபியுடன் வர.. அதனை எடுத்துக் கொள்ளவும் “என்ன சமைக்க?” என்றார்..

“என்ன சமைக்கச் சொல்ல?” என்பது போல ஈஸ்வர் வர்ஷினியைப் பார்க்க.. எதுவும் சொல்லும் மனநிலையில் அவள் இல்லாததால் “நீயே சொல்” என்பது போல கையைக் காட்டவும்.

“ஏதோ ஒன்னு நீங்களே செய்ங்க” என்று சொல்லி விட.. அவர் போகவும்..

ஈஸ்வரை பார்த்துக் கடுமையாக முறைத்து இருந்தாள் வர்ஷினி. “என்ன இப்போ? நீதான் என்ன சமைக்கன்னு ஒன்னும் சொல்லலியே!” என்றான்,

“நான் ஒன்னும் சொல்லலைன்னா, நீங்க சொல்லணும். அதை விட்டு ஏதோ ஒன்னு செய்ங்க சொன்னா. அவங்களுக்குப் பிடிச்சதையோ, இல்லை ஈஸியா இருக்கறதையோ சமைப்பாங்க.. அவங்களுக்கு பிடிச்சதை நான் சாப்பிடணுமா?” எனப் பேசி முறைக்க..

இப்படி ஒரு கோணம் இந்த விஷயத்தில் இருப்பதை எப்பொழுதும் யோசித்திராதவன் ஈஸ்வர்..

அவள் பேசின விஷயத்தில், பேசின பாவனையில், சிரிப்பு வந்து விட.. சத்தமாக சிரித்து விட்டான்..

அவன் சிரிப்பதை தாஸும் பார்க்க, அந்த சமைக்கும் அம்மாவும் பார்த்தார். ஈஸ்வர் இப்படி

சிரித்து பார்ப்பது நன்றாய் இருந்த காலத்திலே அரிது.. அதுவும் சமீப வருடங்களாக இல்லவே இல்லை.

மனம் விட்டு சிரித்து “சான்சே இல்லை.. இப்படி நான் யோசிச்சதே இல்லை” என்றான்.

“அப்போ இவ்வளவு நாளா அவங்களுக்குப் பிடிச்சதை தான் நீங்க சாப்பிட்டீங்களா” எனக் கேட்டு முகத்தை கோணலாக்க,

“ஹ, ஹ” என இன்னும் வாய் விட்டு சிரித்தவன்.. “நேத்து தான் சமைக்கறவங்க இந்த வீட்டுக்கே வந்தாங்க.. இன்னைக்கு தான் சமைக்கவே இருக்காங்க.. இனிமே உனக்கு என்ன பிடிக்குமோ சொல்லு, அதை நான் சாப்பிடறேன்” என்றான்.

“நீங்களும் சான்சே இல்லை, செம டைலாக், அப்படியே என்னை இம்ப்ரெஸ் பண்ற மாதிரி வரிசையா சொல்லிட்டே இருக்கீங்க” என்று கிண்டலாக சொல்ல,

இன்னும் சிரித்தவன்.. “நீ இம்ப்ரெஸ் ஆகிடுவியா என்ன?” என்றான் கேள்வியாக.

“தெரிஞ்சும் விடாம முயற்சி பண்றீங்க” என்றாள் உதட்டு முறுவலுடன்.. அது கண்களில் பிரதிபலிக்கின்றதா.. என லென்ஸ் இட்ட கண்களிலும் ஈஸ்வர் தேடினான் சிரிப்போடே..

“என்ன நடக்கிறதோ?” என்று மனது கேட்காமல் அப்போதுதான் மலர், நமஷிவாயத்துடன் வீட்டிற்கு வர.. அவர்களுக்கு ஈஸ்வர் சிரித்துக் கொண்டிருந்த காட்சி தான் தென்பட்டது..

நமஷிவாயதிற்கு மனதில் இருந்த இறுக்கம் குறைய.. மலருக்கு மகனின் சிரிப்பில் கண்கள் கலங்கியது.. அப்போதும் ஈஸ்வரிடம் அதிகம்

பார்வையை செலுத்தாமல், தன் மகனை சிரிக்க வைக்கும் வர்ஷினியைத் தான் நிறைவோடு பார்த்திருந்தார்.

கண்ணுக்குள் நூறு நிலவா.. இது ஒரு கனவா!

**அத்தியாயம் எழுபத்திரண்டு :**

## பேசும் விழிகள்... பேசா மொழிகள்!

வர்ஷினி வாயிலில் நிற்கும் ஈஸ்வரின் பெற்றோரைப் பார்க்கவும், உடனே எழுந்தாள். அப்போது தான் ஈஸ்வர் அவர்களைப் பார்த்தான்.. “மா” என்று அழைக்கவும் இருவரும் உள்ளே வரவும்..

வர்ஷினியின் இயல்பு அப்படியே மட்டுப் பட்டது. என்ன என்று சொல்ல முடியாத ஒரு தயக்கம், பயம், மனதினில்.. கண்களிலும் அழுகை வருவேனா என்று நின்றது.. தொண்டையும் அடைத்துக் கொண்டது.. அப்படியே மாறிப் போனாள்..

வர்ஷினி என்று மலர் அவளின் அருகில் தானே செல்ல.. சிரிக்க முயன்றாலும் சிரிப்பு வருவேனா என்றது.. கண்களிலும் நீர் நிறையப் பார்திருந்தவளை,

“என்ன? என்னாச்சு?” என்று பதறினார் மலர், பின்னே சிரித்துக் கொண்டிருந்தவள் தன்னைப் பார்த்ததும் இப்படி செய்தால் என்ன வென்று நினைப்பார்..

ஒன்றுமில்லை என்பது போல தலையாட்டி நிற்கவும்.. ஈஸ்வரும் “என்ன வர்ஷி?” என.. அவனைப் பார்த்தும் ஒன்றமில்லை என்று தலையாட்டியவள்,

“வந்துடறேன் அத்தை!” என்றவள்.. “என் ரூம் எது?” என்றாள் ஈஸ்வரை பார்த்து, அவன் காட்டவும்.. உள்ளே சென்றாள்.

அவள் சென்றதும் பெற்றோர் இருவரும் என்ன என்பது போலப் பார்க்க.. “தெரியலைம்மா நல்லா தான் பேசிட்டு இருந்தா.. திடீர்ன்னு என்ன ஆச்சுன்னு தெரியலை”

“ஒரு வேளை நாங்க வந்தது பிடிக்கலையோ” என்று நமஷிவாயம் சொல்ல..

“பிடிக்கலைன்னா அழுவாங்களா.. என்னப்பா நீங்க?” என்றவன், “எல்லோரையும் பார்க்கத் தயங்குறாம்மா, ரொம்ப வருஷம் ஆச்சு இல்லையா விட்டுப் போய்.. யார் என்ன சொல்வாங்களோ இல்லை அவ டைவர்ஸ் அனுப்பினதை பத்திக் கேட்பாங்களோன்னு நினைக்கறா போல!”

முகம் கலங்கி நின்ற மலரை பார்த்து “சரியாகிடுவாம்மா, நான் பார்த்துட்டு வர்றேன்” என்று ரூமின் உள் நுழைய..

அங்கே படுக்கையில் தலையணையில் முகம் புதைத்து படுத்திருந்தாள் வர்ஷினி.. உடலின் அதிர்வுகள் அவள் அழுது கொண்டிருக்கிறாள் என காட்ட ..

“என்ன வர்ஷி?” எனப் பரிவாக கேட்டபடி அருகில் அமர்ந்தான்.. ஆனாலும் முகத்தை எடுக்கவில்லை, அழுது கொண்டே இருக்கிறாள் எனப் புரிய..

“எதுக்கு இப்படி அழறா” என்று ஈஸ்வரும் கலங்கித் தான் போனான். “வர்ஷி அழாதே” எனத் திரும்ப திரும்ப சொல்லி அவன் அமர்ந்த

வாக்கிலேயே படுத்திருந்த அவளின் இடையை அணைவாய் பிடிக்க,

அடுத்த நொடி முகத்தைத் துடைத்தபடி எழுந்தாள். ஈஸ்வர் பார்க்கவும், ஒரு கண்ணில் இருந்த லென்ஸ் இல்லை..

ஒரு கண் லென்சுடனும் ஒரு கண் லென்ஸ் இல்லாமலும் அந்த தோற்றம் ஈஸ்வருக்கு ஒரு மாதிரி இருக்க... "ஒரு கண்ல லென்ஸ் இல்லை வர்ஷ்" என்றான்..

அழுததில் இன்னொரு கண்ணில் இருந்ததும் வெகுவாக உறுத்த அதையும்  எடுத்து விட்டாள்.. இப்போது அந்த நீல நிறக் கண்கள் அவனைப் பார்த்து இருக்க, ஈஸ்வரும் அதனையே விடாமல் பார்த்திருந்தான்.

அதுவரை அவளைப் பார்த்ததில் இருந்து இருந்த அசட்டுத்தனங்கள் எல்லாம் அந்தக் கண்களை பார்த்த நொடியில் விடைபெற்றுப் போக..

ஆழ்ந்து அவளைப் பார்த்தவன் "என்ன வர்ஷ்?" என்றான் திரும்பவும்..

"ப்ச்" என சலித்தவள், "தெரியலை அழுகை வந்துச்சு, என்னவோ.. ரொம்ப காம்ப்ளெக்ஸ் டெவலப் பண்றேனா இல்லை தனியாவே இருந்துட்டு எல்லோரையும் பார்த்ததும் நான் மட்டும் தனியா இருந்திருக்கேன்னு தோணுதா தெரியலை"    என்றவள் அப்படியே பிறகு நிறுத்திக் கொண்டாள்.

ஈஸ்வரும் அதனை மேலும் துருவாமல் "அவங்க வந்ததுனால தான் நீ அழறியோன்னு நினைச்சு அவங்க அழுதுடுவாங்க போல" எனவும்... வேகமாக

குளியலறை சென்று  முகம் கழுவி வரவும், “டிரஸ் மாத்திக்கோ.. இது வேண்டாம்” என்றும் அவன் சொல்ல.. அதையும் தட்டாமல் அவன் வெளியில் சென்றதும் ஒரு சுரிதார் மாற்றி வந்தாள்.

சற்று தெளிவான முகத்துடன் வரவும் தான் மலருக்கு சற்று கலக்கம் குறைந்தது.. “அத்தை” என்று அருகில் அமர.. “எதுக்கு அழுத?” என்றார்.

“தெரியலை” எனவும், அவர் நம்பாமல் பார்க்கவும்.. “நிஜமா தெரியலை.. ஒரு வேளை யார் கிட்டயும் சொல்லாம கொள்ளாம, பார்க்கவும் செய்யாம போயிட்டேன் இல்லையா, அதனால கூட இருக்கும்!” என்றாள்.

“கொஞ்சம் நேரம் நல்லா பேசிட்டு இவனுக்கு தெரியாம உன்கிட்ட சண்டை போடணும்ன்னு தான் வந்தேன். என் ப்ளான் எல்லாம் ஃபினிஷ்” என அவர் சொல்ல..

“எதுக்கு சண்டை?” என...

“பின்னே என்னை பார்க்கவும் விடலை, பேசவும் விடலை. யாராவது என்கிட்டே உன் மருமக எப்படி இருக்கான்னு கேட்டா கூட எனக்கு சொல்லத் தெரியலை.. யாரையும் உன்கிட்ட பேச விடாம பொத்தி பொத்தி வைக்கறான்” என்றார் ஈஸ்வரை பார்த்துக் கோபமாக.

எதற்கும் பதில் பேசாமல் ஈஸ்வர் அமர்ந்திருந்தான்.. மனதிற்குள் ஒரு முறுவல் கூட.. “ஆனாலும் இந்த அம்மா கொஞ்சம் தேறிட்டாங்க” என நினைத்து.

வர்ஷினி ஏதோ பதில் பேச வரவும்.. கண்களால் “பேசாதே” என்று வர்ஷினியிடம் சொன்னான்.

அவள் தானே யாரையும் பேச அனுமதிக்கவில்லை, ஏன் ஈஸ்வர் கூட பேசியது கிடையாதே.. இன்று அவர்களுக்குள் நடந்த பேச்சுக்கள் கூட அவர்களே எதிர்பாராதது தானே..

ஆம்! தனிமையை மிகவும் வெறுத்தாள். இதில் யாராவது நன்றாக பேசினால், பார்த்தால் கூட தாங்க இயலாது எனப் புரிந்து தான் யாரையும் அனுமதிக்கவில்லை. தன்னை எல்லோரும் இப்படி ஆக்கி விட்டதாக நினைத்து யாரையும் பார்க்கப் பிடிக்காமல் போனது. இது ஒரு வகையில் பெரிய உண்மை.

வர்ஷினி தன்னிடம் இவ்வளவு சகஜமாக பேசுவாள் என்று ஈஸ்வர் நினைத்தது கிடையாது, ஏன் வர்ஷினியும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை. உண்மையில் கோபம் இருந்தாலும் அதை பிடித்து வைக்கவோ காட்டவோ முடியவில்லை..

“வீட்ல எல்லோரும் எப்படி இருக்காங்க அத்தை.. பிரணவி, சரண், எல்லோரும்..” என,

“எங்களோட வர்றேன்னு ஒரே ரகளை, நாங்க தான் போயிட்டு கூப்பிட்டுக்கறோம்ன்னு சமாதானம் சொல்லி வந்தேன்.”

“அவங்களுக்கு என்னை ஞாபகம் இருக்கா” என,

“அவங்க சித்தப்பாவை அடிக்கடி பார்க்கும் போது உன்னை எப்படி மறப்பாங்க.. அவன் எங்க யார் கிட்டயும் உன்னைப் பத்தி பேசமாட்டான்.. அவங்க கிட்ட மட்டும் தான் பேசுவான்” என்றார்..

“வர சொல்லுங்களேன்” என..

திரும்பி அவர் ஈஸ்வரை தான் பார்த்தார்.. “வர சொல்லேன்மா”  என ஈஸ்வர் சொல்லவும்.. “நான் அவங்களை சொல்றேன் நீ ரஞ்சனியை வரச் சொல்லு” என்றார் மலர்..

“மா” என்றான் ஈஸ்வர் அலுப்பாக.. “சொல்லு!” என்று அதட்டினார் மலர்.. “இங்கே அவ உன் வீட்டுக்கு வந்ததே இல்லை!”

“மா, நான் ரஞ்சனி கூப்பிட்டா, அங்கே தானே முரளி எல்லாம் இருக்கான், அவனை எப்படி விட முடியும்” என,

“விஸ்வா, நான் என் பொண்ணை வரச் சொல்றேன்.. வர்ஷினியோட அப்பா வீட்டை இல்லை.. அவங்க வந்தா வரட்டும்.. அதுக்காக நீ ரஞ்சனியை கூப்பிடாம இருக்காதே. வர்ஷினி அவ குழந்தையை பார்க்கணும் தானே” என..

வர்ஷினியைத் தான் பார்த்தான்.. பின்னே என்றைக்கு இருந்தாலும் உறவுகள் எல்லோரையும் அவள் பார்த்து தானே ஆகவேண்டும், அதனை தள்ளி தள்ளி போட்டாலும்.. கடக்கும் நாட்களில் அதன் தாக்கங்கள் அதிகம் தானே..

ரஞ்சனிக்கு அழைத்தான்.. வெகு நாட்களுக்குப் பிறகான அழைப்பு.. எடுத்தவள்.. அவனின் அழைப்பிற்காக காத்திருக்க.. “ரஞ்சி” என்ற ஈஸ்வரின் குரலை கேட்டவள்.. “ஓஹ், உனக்கு என் பேர் எல்லாம் கூட ஞாபகம் இருக்கா” என..

“வீட்டுக்கு வா!” என்றான்.

“எதுக்கு நான் உயிரோட இருக்கேனா இல்லை செத்துட்டேன்னான்னு நீ பார்க்கவா?”

“வாயை மூடு” என்று கோபமாக அதட்டல் இட்டவன், “தாஸ் அனுப்பறேன்” என,

“வரலைன்னு சொல்றாங்களா?” என வர்ஷினி கேட்க..

“ஆம்” என்பது போலத் தலையசைத்தவன்.... கைப்பேசியில் “நீ இப்போ வர்ற.. இல்லை உன் வீட்டுக்காரனை கடத்திட்டு வந்துடுவேன்.. அப்புறம் எப்படியும் நீ வந்துடுவ!” என்று நக்கலாகச் சொல்ல..

“உனக்கு அவரை இழுக்கலைன்னா தூக்கமே வராதா” என சண்டையிட்டாள்.

“அவனை நான் எதுக்கு இழுக்கறேன், நீயே வெச்சிக்கோ!” எனவும்..

“பின்ன உன்கிட்டயா விடுவேன், நானே வெச்சுக்கறேன், நீ மட்டும் என்ன இவ்வளவு நாள் என்னை வீட்டுக்கு கூப்பிட்டியா, உன் பொண்டாட்டி வரவும் தானே கூப்பிடற” என பதில் பேச,

“ரொம்ப வாயாகிட்டது உனக்கு, குழந்தை தூங்கறான்னு வீட்ல விட்டுட்டு வந்த வாசலோட அனுப்பிடுவேன்” என்றான்.

“அய்ய என் பையன் மேல உனக்கு ரொம்ப பாசம் பாரு, தாய் மாமான்னு ஓடி வந்துட்ட” என ஆரம்பிக்க..

“ஏய் வாடி முதல்ல, ஓவரா பேசாதே!” என்றபடி ஃபோனை வைத்தான்.

மலரும் வர்ஷினியும் அவனை தான் பார்த்திருந்தனர்.. “வரமாட்டேன்றா நான் என்ன செய்ய?” என்று சலித்தவன்..

“தாஸ்” என அழைக்க.. அதே சமயம் மலருக்கு ரஞ்சனியிடம் இருந்து அழைப்பு “அம்மா உன் மகன் வீடு எங்கே இருக்கு? என்ன வழி?” என,

தாஸிடம் “வேண்டாம்” என்று சொன்னவர், “வழி கேட்கறா” என்று  ஈஸ்வரிடம் கொடுக்க...

“வழி” என ஈஸ்வர் ஆரம்பிக்க.. “ஓஹ், என்னை விட்டுட்டு அப்போ உங்க அம்மாவும் உன் கூட தான் இருக்காங்களா?” என பொரிந்தவள் ஃபோனை வைத்தாள்.

நிறைய வருத்தங்கள் அவள் மனதினில்.. ஆம், அஸ்வின் விஷயம் வந்ததில் இருந்து.. அஸ்வினை ஏன் சேர்த்துக் கொள்கிறாய் என ஈஸ்வருடன் சண்டை, அவனை தள்ளி வைக்காததால் ஈஸ்வருடன் பேசுவதில்லை, வர்ஷினியிடமும் பேசவும் இல்லை..

“நான் வேண்டாம்” என்று சொல்லும் அஸ்வின் இவர்களுக்கு முக்கியமா என ஒரு கோபம் வருத்தம்.. தானாக ஒதுங்கிக் கொண்டாள். இப்போது ஈஸ்வர் பேசவும் முள்ளாய் கீறியது.

பத்துவிற்கு அழைத்தவன்.. அவனிடம் வீட்டிற்கு வருமாறு அழைப்பு விடுத்து வழி சொல்லவும், அவன் திரும்பத் திரும்ப கேட்க.. “முரளிக்கு தெரியும் கேட்டுக்கோ” என்று வைத்து விட்டான்..

எல்லோரையும் எதிர்கொள்ள வேண்டுமா சலிப்பாக வந்தது வர்ஷினிக்கு..

யாரையும் பார்க்கப் பிடிக்கவில்லை.. யாரும் கேள்வி கேட்டால் என்ன சொல்வது என்ற பயம், அப்படி கேட்காவிட்டால் அது என்ன உறவாக இருக்க முடியும் என்ற கோபம்.. தன்னைத் தானே வெறுத்தாள்.

“உனக்கு உறவுகளும் தெரியவில்லை, யாரோடும் பழகவும் தெரியவில்லை, யாரையும் தெரியவில்லை... இதோ இவனிடம்

விவாகரத்து கேட்டு இவனிடமே வெட்கம் கெட்டுப் போய் வந்திருக்கிறாய். ஏன் வரவேண்டும்? எதற்கு வரவேண்டும்? உன் வழியை நீ பார்த்துக் கொண்டு போக வேண்டியது தானே!" என மனது சண்டையிட..

"தனியாக எனக்கு இருக்கப் பிடிக்கவில்லை, நீ என்னிடம் கேள்வி கேட்காதே" என மனதிற்குள் அவளுக்கு அவளே கத்திக் கொண்டாள்..

"பிறகு ஏன் விவாகரத்து கேட்டாய் விட்டு விட்டுப் போக வேண்டியது தானே"

"காரணம் உனக்கு தெரியாதா? அந்தக் காரணத்தை நான் நினைக்கக் கூட விரும்பவில்லை, நான் நினைக்க மாட்டேன்!" என்று திரும்பும் கத்திக் கொண்டாள். ஆம்! எதை நினைத்தாலும் தனக்கு முன் அவன் வேறொரு பெண்ணிடம் காதல் சொன்னான் என்ற நினைப்பு கூடப் பிடிக்கவில்லை.. வாழ்க்கையில் மிகவும் கேவலமாக தோற்றுப் போய்விட்டதாக ஒரு எண்ணம்..

ஆம்! தன்னை மிகவும் விரும்புகின்றான் என நினைத்து திருமணதிற்கு சம்மதம் சொல்லி பின்னும் அவன் சொன்னதையெல்லாம் செய்து.. அவன் சரிவர கவனியாத  போதும், ஏன் ஏன் என்று அவனுக்காக காரணங்கள் கண்டு,  எதுவும் பிடிக்காத போதும் தன்னால் ஆன வெகு முயற்சி செய்தாள் அவளைப் பொறுத்தவரை!

அதெல்லாம் இப்போது நினைக்கவும் பிடிக்கவில்லை எப்பொழுதும் போல.. மிகவும் கவனமாக அதை நினைவில் கொண்டு வரவில்லை. குரங்கை நினைக்காதே என்று மனம் நினைத்தால் குரங்கையே நினைத்துக்

கொண்டிருப்போமே அப்படி ஒரு நிலை தனக்கு வர அவள் விட்டதில்லை இதுவரை..

இன்று தானாக எல்லாம் மீண்டும் தடம் மாறிக் கொண்டிருக்க.. மீண்டும் திரும்ப தனியாக போய்விடுவோமா என்று தோன்ற ஆரம்பித்தது.

வர்ஷினியைத் தான் கவனமாக பார்த்திருந்தான் ஈஸ்வர்.. மலரும் பார்த்து தான் இருந்தார்.. முகத்தில் எதுவும் தெரியாவிட்டாலும் கண்களில் இருந்த கலக்கம் ஈஸ்வர் கண்களுக்கு தப்பவில்லை..

"அத்தை, நான் போய் குளிச்சிட்டு வரட்டுமா?" என சம்மதம் வேண்டி நின்றாள்..

"போ, போய் குளிச்சிட்டு வா!" என..

ரூம் போகவும் அவளின் பின்னே போன ஈஸ்வர்.. "என்ன.. எங்கு இருக்கிறது" என்று காட்டி வர்ஷினி குளிக்க சென்ற பிறகு வெளியே வந்தான்.

"டைவர்ஸ்க்கு இன்னும் அப்படியே தான் இருக்காளா? மாறலையா? ஆனா ஏன் விஷ்வா?" எனக் கவலையாகக் கேட்க..

"அம்மா இப்போ தான் வந்து இறங்கியிருக்கா"

"உன்கிட்ட நல்லா தானே பேசறா, அப்புறம் ஏன் டைவர்ஸ் கேட்கறா? என்ன காரணம்?" என்றார் அப்போதும்..

"மா, நடக்கறது தான் நடக்கும் விடுங்க.. தயவு செஞ்சு அவ கிட்ட மட்டும் இது பத்தி கேட்டுடாதீங்க"

வர்ஷினி குளித்து முடித்து ரெடியாகி வர கிட்ட தட்ட ஒரு மணிநேரத்திற்கும் மேலாகியது..

முரளியும் பத்துவும் ரஞ்சனியும் வந்திருந்தனர்.. கையினில் ரஞ்சனியின் ஒன்பது மாதக் குழந்தை..

கொழுக் மொழுக் என்று இருக்க.. வர்ஷினியின் பார்வையில் யாரும் படவில்லை அந்தக் குழந்தை தான் பட்டது.. ஆசையாய் பார்த்திருந்தாள்..

வர்ஷினியின் பார்வையைப் பார்த்த பத்து ரஞ்சனியிடம் இருந்த குழந்தையை கையினில் வாங்கி.. வர்ஷினியிடம் கொடுக்க.. அவள் வாங்கியதும் புது ஆள் என்பதால் வீரிட்டு அழ ஆரம்பித்தான்.

“அச்சோ அண்ணா, பிடிங்க, அழறான்!” என்று வேகமாக வர்ஷினி திரும்ப பத்து கையினில் கொடுக்க..

“கொஞ்சம் விளையாட்டு காட்டு வர்ஷி, பழகிடுவான்” என பத்து சொன்ன போதும்..

“கொஞ்சம் அழுகை நிறுத்தட்டும்” என்று திரும்பக் கொடுத்து விட்டாள்.. பத்துவிடம் இருந்து மலர் வாங்கியதும்.. குழந்தை அவரில் முகத்தை புதைத்துக் கொள்ள.. “அழக்கூடாது கண்ணா! அத்தை பாரு” என்று மலர் முதுகை தட்டிக் கொடுத்து சமாதானம் சொல்லவும், அடுத்த நொடி முகம் நிமிர்த்தி பாட்டியிடம் பொக்கை வாய் காட்டி சிரிக்க..

என்னவோ ஒரு இனம் விளங்கா ஏக்கம் நெஞ்சினில் ஒரு பிரவாகமாக வர்ஷினி பொங்கியது. நினைவு தெரிந்த நாளாக யாரையும் அவள் போல தேடியதில்லை என்றா.. அது போலத் தன்னை யாரும் தட்டிக் கொடுத்து வளர்க்கவில்லை என்றா.. இல்லை தனக்கு அந்தக் குழந்தை போல யாரிடமும் முகம் சாய்க்க முடியவில்லை என்றா.. ஏன் தனக்கு மட்டும் யாரையும் பிடித்தம் கொள்ள முடியவில்லை என்றா.. தெரியவில்லை.. ஒருவன் தன் பின்

பித்தனாய் சுற்றிய போதும் எதையும் அவனிடம் பகிர முடியவில்லை, ஆனால் ஒரு வகையில் ஏதாவது பகிர்ந்திருக்கின்றாள் என்றால் அதுவும் அவனிடம் மட்டும் தான்.

“நீயேன் இப்படி இளைச்சிட்ட வர்ஷி” என்று ரஞ்சனி கேட்க..

“டயட் இருந்தேன் அண்ணி, அண்ட் வொர்க் அவுட் கூட பண்ணினேன்” என்றவள்.. “எப்படி இருக்கீங்க?” என்றவள்.. முரளியைப் பார்த்து “ஷாலினி அண்ணி வரலையா?” என..

எத்தனை முறை ஷாலினி அழைத்தும் எடுக்காதவள் இப்போது எதுவும் நடவாத மாதிரி கேட்கவும்.. “நீ அவ மெசேஜ்கும் ரெஸ்பான்ட் பண்ணலை, ஃபோனும் எடுக்கலை.. எத்தனை தடவை கூப்பிட்டு இருப்பா?” என்ற ஆதங்கம் வெளிவர.

அந்தக் குரல் அப்பட்டமாய் வர்ஷினியைக குற்றம் சாட்டியது..

அது வர்ஷினியை மிக பலமாய் தாக்க, “ஓஹ்...” என்றவள்... “இப்ப நான் எடுக்கலைன்னு ஷாலினி அண்ணி லைஃப்ல என்ன சேஞ் ஆச்சு அண்ணா.. அவங்க தனியா இருந்தாங்களா? அவங்க அப்பா அம்மா கூடப் பேசலையா? அவங்க கூடப் பொறந்தவங்க பேசலையா? அவங்க பையனை கொஞ்சலையா? அவங்க புருஷன் அவங்களை கவனிக்கலையா? பேசக் கூட ஆள் இல்லாம நிறைய நேரம் தனியா இருந்தாங்களா? ஒரு காய்ச்சல் தலைவலி வயிறு வலின்னு கூட சொல்ல ஆள் இல்லாம இருந்தாங்களா? என்று நிறுத்தியவள்..

“இன்னும் நிறைய இருக்கு அண்ணா, இவ்வளவு வேண்டாம் இந்த மாதிரி ஒன்னு சொல்லுங்க, நான் ஃபோன் எடுக்காததுனால எந்த வகையில் அவங்க கஷ்டப்பட்டாங்க.. அதை ஒரு பெரிய விஷயமா இப்படி ப்ளேம் பண்றீங்க” என கேட்கக் கேட்க எல்லோரும் ஸ்தம்பித்து நின்றார்கள்..

ஈஸ்வர் தலையை பிடித்துக் கொண்டு அப்படியே அமர்ந்து விட்டான்.. ஆனாலும் வர்ஷினியை நிறுத்தவும் இல்லை.. மனதில் இருப்பதை கொட்டி விடட்டும் வைத்து மருக வேண்டாம் என நினைத்தான்..

ஆனாலும் அவள் பேச பேச.. உன் மனைவி அவள்.. உன்னால் உன் காதலை அவளுக்கு காட்டிட முடியவில்லை.. புரிய வைக்க முடிந்த அளவிற்கு உணர வைக்க முடியவில்லை..

நிறைய தவித்து இருக்கிறாள்.. உன் குழந்தையை நீ தவிக்க விட்டு விடுவாயா.. அவளும் உன் குழந்தை தானேடா.. யோசிக்கும் போதே கண்கள் கலங்காமல் இருக்க வெகு பிரயர்த்தனப்பட்டான்.

முரளி உடனே பதறி “வர்ஷினி நான் இந்த அர்த்ததுல எல்லாம் சொல்லலை.. ரொம்ப நாளா நீ எடுக்கவே இல்லை.. எப்பவும் அவ புலம்பிட்டே இருப்பா அதுதான் கேட்டவுடனே வந்துடுச்சு.. இப்போ கூட ஈஸ்வர் ஃபோன் வந்தப்போ தான் குளிக்கப் போனா.. இப்போ செவன் மன்த்ஸ்.. திரும்பவும் கன்சீவா இருக்கா.. நிஷாந்த்க்கு காய்ச்சல் வேற.. அவன் தூங்கறான்..”

“நானும் வருவேன்னு நிக்கறா... அவசரமா கிளம்பாதே.. நீ கொஞ்சம் நேரம் கழிச்சு வான்னு சொல்லிட்டு வர்றதுக்குள்ள போதும் போதும்ன்னு

ஆகிடிச்சு.. அப்போவும் அம்மாவை விடலை.. நாம போகலாம் இருங்கன்னு நிறுத்திக்கிட்டா.. அதுதான் தானா கேட்டுட்டேன்.. சாரி!” என்று நீண்ட விளக்கம் கொடுத்தவன்..

“ஆனா இதெல்லாம் நீயா தான் தேடிக்கிட்ட உன்னை யாரும் விடலை” என..

“என்னை யாரும் பிடிச்சு வைக்கணும்னு அவசியமெல்லாம் இல்லை அண்ணா அண்ட் கண்டிப்பா இதெல்லாம் நானா தான் தேடிக்கிட்டேன். இதுல எனக்கு எந்த வருத்தமும் இல்லை.. அன்ட் இன்னமும் தேடிக்குவேன் அண்ணா” என்றாள் ஸ்திரமாக..

ஈஸ்வரை டைவர்ஸ் செய்வேன் என்று சொல்லாமல் சொன்ன செய்தி அதில் இருந்ததோ?

இப்படி ஒரு பிடிவாதம் யாரிடமும் கண்டதில்லை அங்கிருந்தவர்கள்.. ஏனிந்த பிடிவாதம்? எதற்கிந்த பிடிவாதம்? அவளின் வாழ்க்கையை அவளே சீர்குலைந்துக் கொள்ளும் பிடிவாதமாக தான் அங்கிருந்த அனைவருக்கும் தோன்றியது..

என்ன குறை இவனிடம்? ஏன் இப்படி தனியாக போகவேண்டும்? தவிக்க வேண்டும்? என்ன? ஏன்? எதுவாக இருந்தாலும் அப்படி சரி செய்ய முடியாதது என்ன? விவாகரத்து வரை போக வேண்டியதே இல்லை! முட்டாள் பெண்ணாகத் தான் எல்லோர் கண்களுக்கும் தெரிந்தாள்.. அவர்களின் பார்வையில் கண்ணிலாதவள் அறிவில்லாதவள் கூட ஈஸ்வரை வாழ்க்கையை விட்டு விலக்க மாட்டார்கள்.

என்னவோ ஈஸ்வரை எல்லோரும் பரிதாபமாகப் தான் பார்த்தனர். இவ்வளவு பேசுகிறாள், எப்படி இவளை சமாளிப்பான் என.. எப்படி இவளை போடி எனச் சொல்லாமல் பொறுமையாக இருக்கிறான்.. இவள் பின்னேயே சுற்றுகிறான்.. என

ஆம்! வர்ஷினியின் பிடிவாதம் அதிகரிக்க அதிகரிக்க, ஈஸ்வர் மற்றவர் பார்வையில் உயர்ந்து கொண்டே போனான்.. ஐஸ்வர்யாவை ஏமாற்றிய அண்ணன் கூட இப்போது ரஞ்சனியின் பார்வையில் மேலேறினான், எதோ தியாகம் செய்பவன் போல..

வர்ஷினி புரிந்து கொள்ள முடியாதவளாகிப் போய்.. கூடவே பார்ப்பவருக்கு என்ன பெண் இவள் என்று எரிச்சல் கொடுப்பவளும் ஆகிப் போனாள்!

இது தான் உலகம்! இல்லாததை இருப்பதாய் காட்டும்.. இருப்பதை இல்லாததாய்க் காட்டும் மாய உலகம்..

பெண் என்பவள் ஆண் இறங்கி வரும்போது.. மன்னிப்பு கேட்கும் போது.. மன்னிப்பவளாய் இருக்க வேண்டும்.. மறப்பவளாய் இருக்க வேண்டும்.. அப்போது தான் அவள் நல்லவள் எனப் படுவாள்.

என்ன? அப்படி முடியாது! நான் இப்படித் தான்! மன்னிக்கவும் மாட்டேன்! மறக்கவும் மாட்டேன்! என்று சொல்லிக் கொள்ளலாம்..

ஆனாலும் வாழ்க்கை தொலைகிறதே.. எங்கே தேடுவாள்? யாரிடம் தேடுவாள்? இழப்பு அவளுக்கும் தானே! காயம் அவளுக்கும் தானே! வலி அவளுக்கும் தானே!

பேதை பெண் தானோ!

தோல்விகளையும் வெளியில் காட்டிக் கொள்ளாத மனிதர்களே வெற்றி பெற்றவர்கள் ஆகிறார்கள்.. அந்த வகையில் ஈஸ்வர் வெற்றி பெற.. வர்ஷினி தோற்றுக் கொண்டிருந்தாள்!

ஆணோ பெண்ணோ.. சில விஷயங்களை மௌனமாய் கடந்து போய் விடவேண்டும்! வெற்றிக்காக அல்ல.. அமைதிக்காக அல்ல.. நிம்மதிக்காகவும் அல்ல... சந்தோஷத்திற்காக!

காரண காரியங்களை ஆராய்வது எல்லா இடத்திற்கும் தக்கவைகள் அல்ல! காதலும் அப்படித்தான்! பிடித்தமும் அப்படித்தான்! கணவன் மனைவியும் அப்படித்தான்!

நிற்கும் நொடிகள் கடந்து கொண்டே இருப்பவை! அதோடு நாமும் கடந்து போன பிறகு திரும்பிப் பார்த்தால்.. எல்லாம் முடிந்து போய் விடுமல்லவா?

**சங்கீத ஜாதி முல்லை காணவில்லை!**

**அத்தியாயம் எழுபத்து மூன்று :**

**இதுவரை நடித்தது அது என்ன வேடம்.. இது என்ன பாடம்..**

“இன்னமும் தேடிக்குவேன் அண்ணா” என்று வர்ஷினி ஸ்திரமாக சொல்லவும், யாரும் பேச முடியாமல் வாயடைத்துக் கொள்ள..

வர்ஷினியும் நிறுத்திக் கொண்டாள்.. மிக சில நொடிகள் என்றாலும் மனதில் அனைவருமே கணத்தை உணர..

அதற்குள் ப்ரணவியும் சரணும் வீட்டினுள் ஓடி வந்தனர். வர்ஷினியின் கவனம் முழுவதும் அவர்களிடம் திரும்பியது..

“ஹேய்ய்ய்யய்ய், நான் தான் ஃபர்ஸ்ட்” என்றபடி சரண் ஓடி வந்து வர்ஷினியைத் தொட..

“போ அண்ணா” என்று முகம் சுருக்கி சற்று தூரத்திலேயே நின்று கொண்டாள் பிரணவி..

இருவரையும் ஆஆ என்று வாய் பிளந்து தான் வர்ஷினி பார்த்திருந்தாள்.. பின்னே ப்ரணவி ஏழு வயதில் இருக்க.. சரண் பத்து வயதில் இருக்க இருவருமே வளர்ந்திருந்தார்கள்..

முகம் சுருங்கி நின்ற ப்ரணவியின் அருகில் வந்த ஈஸ்வர் அவளை தூக்கிக் கொண்டு.. “அண்ணா, உன்னை விட பெரியவன்டா.. அதுதான் முதல்ல வந்துட்டான்” என,

“பெரியவன் தானே, அப்போ ஏன் என்னோட ரேஸ் போடறான்” என மீண்டும் முகத்தை சுருக்க.. அதைப் பார்க்கவே அவ்வளவு அழகாய் இருந்தது.

“அவன் உன்னோட அண்ணாடா!” என்ற பதில் ப்ரணவியிடம் சொன்னாலும் பார்வை வர்ஷினியிடம் அழுத்தமாய் பதிய..

பார்வை புரிந்தவள், “நான் எப்போ இல்லைன்னு சொன்னேன்” என்று சத்தமாகவே சொல்லி, முரளியிடமும் பத்துவிடமும் “நான் எப்போ உங்க கிட்ட இல்லைன்னு சொன்னேன்” என்று சீரியசாக கேட்க..

இருவரும் புரியாமல் என்ன என்று விழித்துப் பார்த்தனர்.

“அச்சோ” என்று சொல்லி.. “உனக்கு இவளே பரவாயில்லை” என்று ப்ரணவியைக் காட்டியவன்.. “நீ கொஞ்சம் நேரத்துக்கு வாயே திறக்க கூடாது” என்றான் சற்று கடுப்பாக..

“காஃபி மட்டும் குடிக்கட்டுமா? பசிக்குது!” என,

“திரும்பவுமா, இப்போ தானே குடிச்ச?”

ரஞ்சனி உடனே “இவ்வளவு காஃபி குடிக்கக் கூடாது வர்ஷ்” என..

“இவ்வளவு நாளா சொல்லாம.. இப்போ மட்டும் ஏன் சொல்றீங்க?” என்றாள் உடனே ரஞ்சனி அவளிடம் பேசாததை மனதினில் வைத்து.

ப்ரணவியைத் தூக்கிய படி அருகில் வந்த ஈஸ்வர்.. “சித்தி வாய் மேல ஒரு அடி வை என் சார்பா!” என்றான்.

“என்னவோ இவன் என்னை அடிக்காத மாதிரி” என்று மனதினில் நினைத்தாள். ப்ரணவியை அருகில் பார்த்ததும் மனநிலை மாற “வைப்ப நீ” என பாவனையாகக் கேட்க.. அந்த நீல நிறக் கண்களின் பாவனையை ரசித்து பார்த்தவன்..

ப்ரணவி தன்னைப் பார்க்கவும் ஈஸ்வர் தன் கன்னத்தை தொட்டுக் காட்ட அதை குழந்தை புரிந்தவளாக “எஸ், வைப்பேன் சித்தி” என்றபடி வர்ஷினியின் கன்னத்தில் முத்தமிட.. மீண்டும் சூழ்நிலை லகுவானது..

எல்லோரும் ஈஸ்வரைத் தான் பார்த்தனர்.. மிகவும் கவனமாகத் தான் ஈஸ்வர் வர்ஷினியைக் கையாளுவதாக தோன்றியது..

மலரின் முகத்தில் ஒரு கிண்டல் புன்னகை கூட.. அதனை புரிந்த ஈஸ்வர் அம்மா என செல்லமாக முறைத்து நின்றான். அவர்கள் யாருக்கும் வர்ஷினியை இத்தனை நாட்கள் எப்படி இருந்தாள் எனத் தெரியவில்லை.. இன்று பார்க்கும் போது அவள் சகஜமாக பேசுவது தானே தெரிந்தது.

ஆனால் இத்தனை நாட்களில் ஈஸ்வர் சிரித்து யாரும் பார்த்திருக்க மாட்டர்.. குழந்தைகளிடம்

பேசும் போது கூட ஒரு கனிவு தான் இருக்குமே தவிர சிரிப்பு இருக்காது. இப்போது அவன் சிரிப்பது அங்கிருந்த அனைவர் மனதிற்குமே இதமாய் இருந்தது.

ஆனால் வர்ஷினி அவளைப் பார்க்காததினால் தெரியவேயில்லை. “நான் புது கேம் வெச்சிருக்கேன், விளையாடலாமா.. நானே பண்ணினேன்.. உங்க கிட்ட தான் ஃபர்ஸ்ட், வா, வா” என்று பேசியபடி அவர்களை ரூமின் உள் அழைத்துப் போகப் போக..

“இரு, இரு, சரண் உன் சித்தி வேற என்னமோ கூடப் பண்ணியிருக்கா, நான் கேட்டா சொல்ல மாட்டேங்கறா.. இந்தப் படத்துல” என்று தன் மொபைலில் அந்தப் படத்தின் மேகிங் காட்ட..

முரளியும் பத்துவும் இவன் என்ன காட்டுகின்றான் என எட்டிப் பார்க்க..

சரண் பார்க்க போகவும், “அதுல வேண்டாம் என் லேப்ல பார்ப்போம், இதுல இருக்காது” என்று திரும்பவும் உள் போக,

அவள் செல்லவும் குழந்தைகள் செல்லவும் எதோ அலை அடித்து ஓய்ந்தது போல இருந்தது.

“ஷப்பா” என்று எல்லோரும் சற்று சாய்ந்து சோஃபாவில் அமர்ந்தனர்.

“எதோ கோபத்துல பேசுறா, மனசுல வெச்சிக்காத” என முரளியை பார்த்து சொல்ல..

“டேய், அவ என் தங்கச்சிடா” என..

“அப்படியா, நீ சொல்லி தான் எனக்கு தெரியும்” என்றான் சற்று கோபமாகவே.. “அவ யாரோடையும் பேசலை, ஒகே ஒத்துக்கறேன். ஆனா ஷாலினி

மட்டும் தான் கூப்பிட்டா போல, நீங்க கூப்பிடலையா" என்றான்.

வர்ஷினி யாருடன் பேசுகிறாள் இல்லை என்பதெல்லாம் ஈஸ்வருக்கும் தெரியாது தானே.

"ஷாலினி கிட்டப் பேசியிருந்தா, நான் பேசியிருப்பேன்!" என முரளி சொல்லவும்.

"உன்னை திட்டுறான்னு கவலை எல்லாம் படக் கூடாது போல.. இன்னம் கொஞ்சம் நல்லா திட்டுன்னு எடுத்துக் கொடுக்கணும்" என முரளியிடம் சொல்லியவன்..

"நீங்களும் ஒரு தடவை கூடப் பேசலையா" என்றான் பத்துவையும் ரஞ்சனியையும் பார்த்து..

மலர் எதிலும் தலையிடாமல் பார்த்துக் கொண்டிருக்க.. நமஷிவாயம் முன்பே வெளியே வராந்தாவில் இருந்த சேரில் அமர்ந்தவர் தான் எழுந்து உள்ளே வரவில்லை.

"அவ அஸ்வின் கூட பேசறா, எனக்குப் பிடிக்கலை. அதனால நான் பேசலை" என நேரடியாக ரஞ்சனி சொல்ல..

"நானும் தான் பேசறேன். என்னை என்ன பண்ணின நீ?" என்றான்.

"உன்கிட்ட கூட நான் அதிகம் பேசலையே" என..

"அதிகம் பேசலை, ஆனா பேசற தானே.. அவ கிட்ட அப்படிக் கூட நீங்க பேசலை.. நீ பேசலை, அதனால உன் புருஷன் பேசலை.. அதனால உன் புருஷனோட வீட்டுக்காரன் பேசலை.. உங்களுக்கு ஷாலினி எவ்வளவோ பரவாயில்லை.. நம்ம வீட்டு வளர்ப்பு தான் சரியில்லை போல மா! நீ சொல்ற மாதிரி உன் பையனும் சரியில்லை, பொண்ணும் சரியில்லை" என்றான் மலரைப் பார்த்து..

உடனே பத்து “இவ்வளவு ரஞ்சனிக்குப் பிடிக்கலைன்றப்போ அஸ்வினை ஏன் உள்ள விடணும்”

“ரஞ்சனி எனக்கு எவ்வளவு முக்கியம்னு உனக்குத் தெரியாதா.. அவளுக்காக திரும்பத் திரும்ப வாழ்க்கையை சிக்கல் ஆக்கிக்கிட்டேன்.. ஒரு வகையில் ரஞ்சிக்காகப் பணத்துக்கு பின்னால் திரும்ப ஓட ஆரம்பிச்சு.. அதனால வர்ஷினியை சரியா பார்க்காம.. இப்போ என்னை விட்டு போயே ஆகணும்னு நிக்கறா”

“அஃப்கோர்ஸ் இது மட்டும் காரணம் இல்லை, இன்னும் இருக்கு, தப்பு என் மேலயும் இருக்கு. ஜஸ்ட் ஒரு காரணம் சொல்றேன், உங்களை குற்றம் சொல்றனேன்னு நினைச்சிடாதீங்க.. நான் சொல்ல வர்றது இவ்வளவு ரிஸ்க் எடுத்துட்ட நான் இப்போ அஸ்வினைக் கூட வெச்சிருக்கேன்னா, ஏதாவது காரணம் இருக்கும்னு ஏன் தோணலை?”

“என்ன காரணம்?” என்றாள் ரஞ்சனி உடனே.

“அதெல்லாம் சொல்ல முடியாது புரிஞ்சதா. இதை ஒரு காரணமா நினைச்சு பேசாம இருந்தீங்கன்னா ரொம்ப தள்ளி போயிடுவா உங்களை விட்டு.. அவ்வளவு தான் சொல்வேன்!” என்று முடித்துக் கொண்டான்.

“இப்ப இவ்வளவு பேசறவன் முன்னையே பேசச் சொல்றதுக்கென்ன” என்று முரளி கோபமாகப் பேச

“என்னையே அவ பேச விடலை.. நான் யாரை பேசச் சொல்வேன்.. அதுவுமில்லாம நீங்க யாரும் பேசறீங்களா இல்லையா எனக்கு எப்படித் தெரியும்.. ஷாலினி ஃபோன் பண்ணினா எடுக்கலை நீ சொல்லித் தான் தெரியும்.. பத்துவும்

நீயும் அஸ்வின் கிட்ட பேச மாட்டீங்க எனக்குத் தெரியும். ஆனா வர்ஷினி கிட்ட பத்து பேசாம இருப்பான்னு நான் நினைச்சதில்லை.. ஏதோ ஒன்னு, இன்னும் அஸ்வின் விஷயம் வரக் கூடாது, அது ஒரு காரணமா இருக்கக் கூடாது" என்றான் ஸ்திரமாக.

அதற்குள் மலரின் கையினில் இருந்த குழந்தை இறங்கி தரையில் தவழ.. தூக்கிய பத்து "நான் உள்ள போகட்டுமா" என்று ஈஸ்வரிடம் கேட்க..

"போ பத்து" என, பின் வர்ஷினி இருந்த அறை நோக்கி செல்ல..

ஞாபகம் வந்தவனாக ஈஸ்வர் வேகமாக அவனிற்கு முன் சென்று அறைக்குள் பார்க்க அவன் நினைத்து சரி என்பது போல.. அவள் குளிக்கும் போது மாற்றி இருந்த உடைகள் படுக்கையின் மேலும் கீழேயும் இருக்க..

வேகமாக அதை எடுத்து ஒரு கபோர்டினுள் துருத்தவம்.. பத்து உள்ளே வரவும் சரியாக இருந்தது... ஆம்! எப்போதும் அவள் அப்படித் தான் செய்வாள்..

வர்ஷினி ஈஸ்வரை கவனிக்கக் கூட இல்லை பிறகு அவன் என்ன செய்கிறான் என எப்படி கவனிப்பாள்?

பத்து உள்ளே வரவும்.. வர்ஷினியிடம் ஈஸ்வர் வேகமாக சென்று,, அவளுக்கு மட்டும் கேட்குமாறு.. "உங்க அண்ணா கிட்ட சண்டை போடக் கூடாது" என ஸ்ட்ரிக்டாகச் சொல்ல,

"தோடா" என்பது போல ஒரு பார்வை பார்த்தாலும் மறுத்துப் பேசவில்லை. பிறகு ஈஸ்வர் வெளியேறிவிட..

அங்கு குழந்தைகளிடம் லேப்பில் ஏதோ காட்டிக் கொண்டு இருந்தாள்.. பத்துவைப் பார்த்ததும்.. அவனின் கையில் இருந்த குழந்தையைக் காட்டி.. “அண்ணா எனக்கு பிரண்ட் ஆக்கு” என ஆவலாகக் கேட்க..

பத்துவிற்கு மிகவும் குற்றவுணர்வாகப் போய் விட்டது.. வர்ஷினியின் திருமணதிற்கு முன் சகஜமாகப் பேசியது தான் பின்னே பேசியதாக ஞாபகமில்லை. இப்போது ஈஸ்வர் சொல்லவுமே மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. இப்போது அதனையும் விட மிக அதிகம்.

“லேப்பை தட்ட விடு, ஃபிரண்ட் ஆகிடுவான்” என

“பேர் என்ன அண்ணா?” எனக் கேட்டவளிடம்.. “ரிஷி” என,

“வா, வா ரிஷி” என்று பெரிய மனிதனிடம் பேசுவது போல.. அவனுக்கு அருகில் இடம் காட்ட.. குழந்தையை இறக்கி விடவும்..

அதுவும் சமத்தாக அமர்ந்து கொண்டது.. பின்னே லேப்பில் கவனம் செலுத்த.. ரிஷி வேகமாக கையை லேபில் படர விட.. அதில் இருந்த பிச்சர் காணாமல் போனது.

ரிஷி அதனைப் பார்த்ததும் சிரிக்க.. “ஹேய், குட்டிப் பையா என்ன பண்ற நீ” என்று ப்ரணவி அதட்ட.. “ரிஷி” என்று சரண் கத்த.. அதையும் விட..

“வர்ஷினி” என்று சத்தமாக அழைத்துக் கொண்டே ஷாலினி உள்ளே வந்தாள்..

அவளைப் பார்த்ததும் “அண்ணி” என வர்ஷினி உற்சாகமாக இறங்கி வர, ஷாலினி வந்து கட்டிக்

கொள்ளவும்.. திரும்பவும் கர்ப்பமாக இருப்பதால் வயிறு பெரிதாக இருக்க, அது இடிக்க,

வர்ஷினி ஷாலினியிடம் "என்ன அண்ணி இது.. எங்க அண்ணா எப்படி உங்களை கட்டிப் பிடிப்பாங்க?" எனக் கிண்டல் பேச..

ஷாலினி சற்றும் சளைக்காமல், "உங்க அண்ணா கட்டிப் பிடிச்சதால தான் இப்படி ஆகிடுச்சு" என,

வர்ஷினி சத்தமாக சிரிக்கத் துவங்க.. அப்போது தான் பத்து அங்கிருப்பதை பார்த்து அசடு வழிந்தாள் ஷாலினி..

பத்துவுக்குமே இருவரையும் பார்த்து சிரிப்பு வர, அதனையும் விட அவர்கள் பேசியது அவனுக்கு லஜ்ஜையை கொடுக்க, சிரித்தால் நன்றாக இருக்காது என உணர்ந்து.. அவன் ரிஷியைத் தூக்கி வெளியேறினான்.

"அண்ணி எங்கே உங்க பெரியவன்" என,

"வெளில இருக்கான் வா" என்று குழந்தைகளை வெளியே கிளப்ப ஆரம்பித்தார்கள்.

வெளியே வந்த பத்துவின் முகத்தில் அப்படி ஒரு அடக்கப்பட்ட சிரிப்பு தெரிய.. "என்ன?" என்பது போல பார்வையால் வினவிய ரஞ்சனியின் அருகில் வந்ததும் புன்னகை முகத்தோடே ரெண்டு பேரும் ரொமான்டிக்கா பேசறாங்க, எனக்கு சிரிப்பு வருது" என மெல்லிய குரலில் சொல்ல..

"என்ன ரொமான்டிக்காவா?" என்று ரஞ்சனி சத்தமாக கேட்க.. ஈஸ்வரும் முரளியும் அவர்களை தான் பார்த்திருந்தனர்.

"ஷ், கத்தாதே!" என பத்து கடிய.. அதற்குள் வெளியே அவர்கள் வந்திருந்தனர்.

“இந்தப் பெண் வீட்டினருடன் கணவனுடன் எல்லாம் இவ்வளவு நாட்கள் பேசாமல் இருந்தாள்” என அடித்து சத்தியம் செய்தாலும் யாரும் நம்ப இயலாத ஒரு சூழல்..

கமலம்மா அமர்ந்திருக்கவும், “பெரியம்மா எப்படி இருக்கீங்க?” எனக் கேட்டபடி வேகமாக வர..

அவர் வர்ஷினியைத் தான் பார்த்து இருந்தார்.. கண்கள் கலங்க பார்த்து இருந்தார்.. பின்னே அவள் யாரோடும் பேசாமல் தனியாக இருக்கிறாள் என்பது சாதாரண விஷயம் கிடையாது.. ராஜாராம் என்று ஒரு மனிதர் இருந்தால் அவர் விட்டிருப்பாரா என்ன.. அவருடைய ஆன்மா கூட இந்த விஷயம் தெரிந்தால் தள்ளி தான் நிற்கும் என்று தெரிந்தவர் ஆகிற்றே..

ஆனால் அவர் செய்வதற்கு ஒன்றுமில்லை.. வர்ஷினி அவரை அருகில் விடவில்லை அவர் என்ன செய்ய முடியும்.. எல்லாம் கணவன் சொல்லிச் சொல்லி செய்த பெண்மணிக்கு.. தானாகச் செயல்பட முடியவில்லை.. அவளை புரிந்து கொள்ளும் புத்திச்சாலித்தனமும் இல்லை.. அவளை எப்படி கையாளுவது என்று தெரியவில்லை.. விளைவு அப்பா தவறிய நாளாக அந்த வீட்டிடம் இருந்தும், வீட்டினரிடம் இருந்தும் தள்ளி நின்று விட்டாள்.

“அச்சச்சோ, ஏன் கண்கலங்கறீங்க?” எனக் கேட்கவும்..

அவருக்கு பேசவே வரவில்லை.. முரளி வந்து அருகில் அமர்ந்து கொண்டவன் “என்னமா?” என..

“ஒன்றுமில்லை” என்பதாக தலை அசைக்கத் தான் செய்தார், அவருக்குப் பேச வரவில்லை...

எதிலோ தவறிவிட்டதாகத் தான் தோன்றியது..

“அதுதான் வந்துட்டேன் தானே” என வர்ஷினி சொல்ல...

அதற்குள் எங்கிருந்தோ வந்த நிஷாந்த “பாட்டி” என அவர் மேல் ஏற..

“அட யாருடா இது?” என வர்ஷினி பாவனைக் காட்ட..

“நான் நிஷாந்த்.. நீங்க?” என்றான் ஷாலினியின் மைந்தன்.

“நான் வர்ஷினி” என,

“வர்ஷினின்னா ஆரு..” என மழலையில் மிளிற்ற..

“ஃபோன் எடுக்கலைன்னு சொல்லத் தெரியுதில்ல.. நான் யாருன்னு நிஷாந்த்க்கு சொல்லிக் கொடுக்கலையா?” என்றாள் முரளியைப் பார்த்து கோபமாக.

அதுவரை எல்லாவற்றையும் வேடிக்கை மட்டுமே பார்த்திருந்த ஈஸ்வர்.. “ஹே, ஹே, திரும்ப ஆரம்பிக்காதே” என்றவன்,

நிஷாந்தின் அருகில் வந்து “இது உன்னோட அத்தை” என்றான்.

“அத்தையா?” என நம்பாமல் பார்த்தது குழந்தை..

“அவ்வளவு குண்டா போயிட்டு.. இவ்வளவு ஒல்லியா திரும்பி வந்தா.. என் பையனுக்கு எப்படித் தெரியும்.. சும்மா உங்க அண்ணனை கேட்பியா” என ஷாலினி இடை புக..

“ஓஹ், அப்படியா..” என வர்ஷினி ராகம் இழுக்க...

“நீ ஏன் என் போன் எடுக்கலை?” என ஷாலினி இப்போது முறைக்க..

“ஃபோன் எடுக்கலைன்னா எடுக்கலைன்னு ஒரு கம்ப்ளயின்ட் தான் அண்ணி.. எடுத்திருந்தா இன்னும் நிறைய சொல்லியிருப்பீங்க.. அதைப் பத்தி பேச வேண்டாம் விட்டுடுவோம்” என சொல்லியவள்..

பின்பு நிஷாந்தை பார்த்து “நான் அத்தை.. நீ வாடா குட்டி” என,

அப்போதும் நிஷாந்த் விழிக்க.. ஈஸ்வர் தன்னுடைய மொபைலில் ஸ்க்ரீன் சேவரில் இருந்த வர்ஷினியின் புகைப்படத்தை காண்பித்து.. “அந்த ப்ளூ ஐஸ் பாரு” எனக் காட்டி, வர்ஷினியின் கண் காட்டினான்.

“அச்சோடா, என்ன அடையாளம்” என நினைத்தவள், ஆனாலும் இரு கன்னத்திலும் கைவைத்து கண்களை விரித்துக் காட்டி “பார்த்துக்கோ” என நிஷாந்திடம் காட்ட.. பார்த்த எல்லோர் முகத்திலும் புன்னகை..

அதையும் விட இவ்வளவு சகஜமாய் இருக்கும் பெண் ஏன் எல்லோரிடமும் இருந்து தள்ளி நின்றாள்.. அதையும் விட ஈஸ்வரின் வீடு தான் வந்திருக்கின்றாள், முகத்தையும் தூக்கி வைக்கவில்லை, ஆனாலும் ஏன் இந்த விவாகரத்து.. வர்ஷினி எனும் பெண்ணை புரிந்து கொள்ள முடியாது குழம்பிப் போயினர்.

யாரையும் கவனிக்கும் மனநிலையில் ஈஸ்வர் இல்லை.. “இதைத்தானேடி நீ என்கிட்டே காட்ட மாட்டேன்னு சொன்ன” என்று நினைத்தபடி அந்தக் கண்களை ரசித்துப் பார்க்க, அதில் முத்தமிடவும்

ஒரு உந்துதல்.. பார்த்தது பார்த்தபடி இருந்தான் ஈஸ்வர்.

நிஷாந்த் புகைப் படத்தையும், வர்ஷினியையும் மாறி மாறிப் பார்த்து பின்பு லேசாய் புன்னகை புரிய.. “வா” என்று கை நீட்டிய வர்ஷினியிடம் மெதுவாய் நகர..

அண்ணனைப் பார்த்து ரிஷியும் அப்பாவின் கையில் இருந்து இறங்கி நகர.. இதனை சாக்காய் வைத்து ரிஷியைக் கையினில் தூக்கி கொண்டாள்.

தூக்கியவள் குழந்தையை மென்மையாய் அணைத்துக் கொள்ள.. ரிஷி அவளின் மேல் தன் முகம் உரச.. இந்த மாதிரி ஒரு குழந்தை தனக்கும் வேண்டும் என்று ஏங்கியது..

அவளின் எண்ணவோட்டத்தை படிக்க முயன்றவனாக ஈஸ்வர் அவளைத் தான் பார்த்திருந்தான்..

மனது ஒரு புறம் அவளை யாசித்தது..

**விண் சொர்க்கமே பொய் பொய்.. என் சொர்க்கம் நீ பெண்ணே!**

**அத்தியாயம் எழுபத்தி நான்கு :**

**என்னுயிரிலே ஒருத்தி... கண்டபடி எனை துரத்தி..**

மாலை வரை எல்லோரும் இருந்து தான் கிளம்பினர்.. வர்ஷினி குழந்தைகளின் பின்னே சுற்றிக் கொண்டிருந்தாளா இல்லை குழந்தைகள் அவளின் பின்னே சுற்றிக் கொண்டு இருந்தார்களா தெரியவில்லை..

பேச்சோடு பேச்சாக அவளின் ஹாலிவுட் திரைப்பட வேலை ஈஸ்வர் சொல்ல வர.. வேண்டாம் என்று பார்வையால் தடுத்து விட்டாள்.

“ஏன்?” என நேரம் கிடைக்கும் போது கேட்டவனிடம்..

“படம் வர்ற வரை எதுவுமே நிச்சயம் கிடையாது.. இன்னும் ரெண்டு மூணு பேர் கூடப் பண்ணியிருக்காங்க.. என்னோடது கண்டிப்பா வரும்னு சொல்ல முடியாது” என மறுத்து விட்டாள்..

உண்மையில் வரை இதுநாள் யாரிடமும் பேசவில்லை.. இப்போது பார்த்த பிறகும் சண்டை.. இதில் தன்னை பெருமை சொல்ல பிடிக்கவில்லை..

காரணம் சொல்கிறாள் என்று தான் ஈஸ்வருக்கும் தோன்றியது.. ஆனாலும் வற்புறுத்தவில்லை. இப்போதைக்கு அவளின் மன அமைதி முக்கியம்..

எல்லோரும் இன்றே வந்திருக்க வேண்டாம் எனத் தோன்றினாலும்.. விட்டுவிட்டால் இன்னமும் ஒதுங்கி நிற்பாள் எனத் தோன்ற.. அதன் பொருட்டே அம்மா சொன்ன போது அமைதியாக இருந்தான்.

இத்தனை நாட்கள் ஒதுங்கி இருக்க.. ஒரே நாளில் நிறைய பார்க்கிறாள் எனவும் புரிந்தது..

அதையும் விட முகம் கொடுத்தே பேச மாட்டாள் என எண்ணியிருந்தான்.. இதில் இவ்வளவு பேசவும் தானும் பேசி கெடுத்துக் கொள்ள மனமில்லை.. ஒரு வாய்ப்பு அவளுக்கும் சரி, செய்த செயல்களை சரிபடுத்திக் கொள்ள தானும் சரி எடுத்தே ஆகவேண்டும் எனத் தோன்றியது.

வீட்டினர் அனைவரும் இன்முகமாகவே கிளம்பும் படி பார்த்துக் கொண்டான்.. தாத்தாவை பார்க்க வரும்படி வர்ஷினியின்  அம்மா வீட்டினர் அழைக்க.. பாட்டி, பெரியம்மா மற்றும் ஜகன் ரூபாவை பார்க்க வரும்படி மலர் அழைக்க..

யாரையும் பார்க்கப் போகும் எண்ணத்தில் வர்ஷினி இல்லையென்றாலும்.. அவளும் இன்முகமாகவே சரி எனச் சொல்லி அனுப்பினாள்.. எல்லோரையும் அனுப்பி உள் வரவுமே.. களைப்பான அவளின் முகம் பார்த்தவன்.. "தூங்கு" என..

பதில் பேசாமல் போய் தூங்கினாள்..

மாலை ஏழு மணி போல உறங்கியவள்.. இரவு உணவிற்கும் எழவில்லை.. காலை தான் திரும்ப எழ..

அவள் எழும் வரையிலுமே ஈஸ்வர் உறக்கத்தை தொலைத்திருந்தான்.. பின்னே எழுப்பியும் அவள் எழவில்லை என்பது ஏதேதோ நினைவுகளுக்கு வித்திட்டது.. திரும்பவும் ஏதாவது பழக்கமா என மிகவும் கவலை கொண்டது.

அவளின் உடமைகள் எல்லாம் அவளின் சம்மதம் இல்லாமலேயே, அவளுக்குத் தெரியாமலேயே ஆராய்ந்தான்.. அதுவே அவனுக்கு மிகுந்த குற்ற உணர்வை கொடுத்தது. உண்ணவும் முடியவில்லை.. உறக்கமும் இல்லை..

காலையில் வர்ஷினி எழுந்த நேரம் அவளைப் பார்த்து தான் அமர்திருந்தான்..

அவன் அமர்ந்திருந்த தோற்றமே ஒரு மாதிரி இருக்க.. "என்ன ஆச்சு?" என்றபடி தான் எழுந்தாள் வர்ஷினி.

"ஒன்னுமில்லை" என்றவன் "ஏன் இவ்வளவு நேரம் தூங்கின?" என..

"தூக்கம் வந்தது.. தூங்கினேன்.. அதுல என்ன?" என கேள்வியாக நோக்கவும்..

“இல்லை.. பயந்துட்டேன்” என்று உண்மையை உரைத்தான்.

“என்ன பயம்?” என ஆரம்பித்தவள்.. பின்னே அவன் சொல்ல வருவது புரிந்து.. “ப்ச்” என சலிக்க..

“அந்த பயத்துல எதுவும் இருக்குமோன்னு உன்னோட பெர்மிஷன் இல்லாம உன்னோட திங்க்ஸ் எல்லாம் பார்த்தேன்” என சொல்லி தப்பு செய்தவனாய் வர்ஷினி முன் நின்றான்.

“ஓஹ்” என முடித்துக் கொண்டாள்.. “எப்படி நீ பார்க்கலாம்?” என்பது போல சண்டையெல்லாம் இடவில்லை..

எழுந்து போய் விட.. அவள் சண்டையிடாதது என்னவோ ஈஸ்வருக்கு அவ்வளவு வருத்தத்தை கொடுத்தது..

“ஏன்? நீ என்கிட்டே சண்டை போடலை” என அவள் முன் சென்று நின்றான்.

“போடணும்னு தோணலை” என முடித்து டைனிங் டேபிளில் அமர.. அவனும் அமர.. “எனக்கு காஃபி வேணும்... பசிக்குது.. நானே தான் அங்க எல்லாம் செஞ்சுகிட்டேன்.. எனக்கு இங்க போட்டுக் குடுக்கறீங்களா?” என்றவளின் குரலில் ஒரு சலிப்பு தெரிய..

உடனே அவன் எழுந்து போகவும்.. அவன் திரும்ப வரும் வரை அங்கேயே தான் அமர்ந்து இருந்தாள்..

அவன் கொடுக்கவும்.. குடிக்க ஆரம்பித்து “உங்களுக்கு?” என.. அப்போது தான் அவனுக்கு ஞாபகம் வந்தது... அவனுக்கு போட்டுக் கொள்ளவேயில்லை.. “மறந்துட்டேன்” என்றான்.

அடுத்த க்ஷணம் அவளின் கையில் கொடுத்ததை பாதியாக்கி அவனுக்கும் கொடுக்கவும்..

“பசிக்குது சொன்ன.. உனக்கு பத்தாது” என்றவனிடம், “திரும்ப போட்டுக் கொடுங்க” என்று சொல்லி அவள் கொடுக்க.. மறுக்காமல் வாங்கிக் கொண்டான்.. மனது ஏனோ அலைபாய்ந்தது.. தப்பு செய்து விட்டவனாக..

“அது ஒருவேளை அந்தப் பழக்கம் வந்துடுச்சோன்னு தான் எல்லாம் தேடிப் பார்த்தேன்” என்றான் மீண்டும்..

“பழக்கம் வந்திருந்தா என்ன பண்ணியிருப்பீங்க” என அவள் பதில் கேள்வி கேட்க...

அப்படியே அவளை அதிர்ந்து பார்த்தான்.

அவளும் அவனையே பார்த்தவள் “ஊர்ல இருந்து வந்தது டையர்ட்ன்னு உங்களுக்கு ஏன் தோணலை” என..

“உன் விஷயம்னு வரும்போது நான் எல்லாமே சொதப்ப தான் செய்யறேன்.. எப்பவும் ஒரு பயம் கூட..” என ஒப்புக் கொடுத்தவன்..

“வர்ஷி நடந்தது எல்லாம் மறந்துடுவோம்.. நான் தப்பு தான் பண்ணினேன், ஆனா அதுக்காக டைவர்ஸ் எல்லாம் வேண்டாம்.. இன்னும் கூட டைம் எடுத்துக்கோ.. உனக்கு எப்போ ஒகேன்னு தோணுதோ அப்போ நாம சேர்ந்து வாழலாம்” என்றான்..

“ஏன் சேர்ந்து வாழணும்? நீ என்னை ஏமாத்திட்ட தானே!” என,

“ப்ச் வர்ஷ்.. அது காதல் சொன்னது.. ஆனா காதலே இல்லை, திரும்ப ஏமாத்திட்டேன்னு சொல்லாத.. உன் மனசு ஆறட்டும்னு தான் இவ்வளவு விலகி இருந்தேன்.. இவ்வளவு டைம் கொடுத்தேன்..திரும்ப அதே சொல்லாத” என

“அப்படித் தான் சொல்வேன், கேட்டா நீ.. நான் உன்னை ஏமாத்தலை அவளைத் தானே ஏமாத்தினேன்னு பேசுவ.. என்னைக் கல்யாணம் பண்ணினதால.. அவங்களைக் கல்யாணம் பண்ணாததினால நீ பேசறது சரி ஆகிடாது.. ரொம்ப திமிர் உனக்கு.. பண்றதெல்லாம் பண்ணிட்டு நான் தப்பு பண்ணினேன் சொன்னா நீ நல்லவனா ” என்றவள்,

“சே, சே, இதைப் பத்தி நான் நினைக்கவேயில்லை... இப்போ நீ நினைக்க வைக்கற.. வேண்டாம், வேண்டாம், நீ வேண்டாம்” எனச் சொல்லி எழுந்து போய் விட.. எப்படி சரி செய்வது என்ன செய்வது என்று புரியவேயில்லை..

அப்படியே சோஃபாவில் அமர்ந்து காலைத் தூக்கி எதிரில் இருந்த டீபாயில் போட்டு சாய்ந்து அமர்ந்து விட்டான்..

ஒரு ஆத்திரம் கிளம்பியது.. எத்தனை முறை விளக்கம் கொடுப்பது.. அவனையும் மீறி “உனக்கு பைத்தியம் தாண்டி பிடிச்சிருக்கு” என்று கத்தினான்..

ஈஸ்வரின் கத்தலைக் கேட்டவள், எதையோ தூக்கி வீச.. அவனின் அருகில் வந்து விழுந்தது..

“அதையேன் பக்கத்துல போடற என் தலையில போடு” என..

“கொஞ்சம் நாள்ல அதுதான் பண்ணப் போறேன்” என்று பதிலுக்கு கத்தியவள் “அண்ட் நான் பைத்தியம் தான்.. போடான்னு போகாம திரும்ப உன்கிட்டயே வந்திருக்கேனே அதுல இருந்தே தெரியலை” என..

“ஏய்.. பேசாதே போடி போடி..” என கத்தினான்..

அதற்குள் யாரோ வரும் அரவம் கேட்க இருவருமே வாயை கப்பென்று மூடிக் கொண்டனர்.. வந்தது சமையல் செய்யும் அம்மா..

ஒரு நொடி கூட என்னால் என் காதலை உணர வைக்க முடியவில்லையா.. என மனம் சோர்ந்து போனது.. ஆரம்பித்த இடத்திற்கே திரும்ப திரும்ப வந்து நிற்பது போல தோன்ற.. என்னுடைய காதலையே உணர வைக்க முடியவில்லை.. இதில் அவள் என்னை காதலித்து நான் எப்போது அதை உணர்வது.. மனது ஏக்கம் கொள்ள.. சில நொடிகளில் அதனை ஒதுக்கியவன்.. இப்போது செய்ய வேண்டிய வேலைகள் வரிசையில் நிற்க..

“வர்ஷிஈஈ” என சத்தமாக அழைத்தான்..

ஈஸ்வர் அழைத்த வேகத்திற்கு அவள் என்னவோ என்று வரவும், “உட்காரு” என்றான் கூலாக..

ஹூசாப்பா நீ என்பது போல ஒரு பார்வை பார்த்தவள் “ப்ச், இப்போ என்ன?” என..

“உட்காரு நம்மளை தூக்கி தூரப் போடுவோம்.. நான் இப்போதைக்கு பேச மாட்டேன்..  நான் இப்போ பிசினெஸ் பேசணும்” என..

“என்ன பிசினெஸ்?” என்றாள் அமர்ந்தவாறே..

“நீ என்னோட பார்ட்னர் ஆகணும் இதுல.. என்னால இது தனியா முடியாது... அவ்வளவு பணம்

கிடையாது.. ஆனா நீயும் நிறைய பணம் போடணும்” என..

“என்ன பிசினஸ் அப்படி?” என்றவளிடம்.. அவன் சொன்ன விஷயம் கேட்டு “என்ன?” என்றாள் அதிர்ந்து…

“எஸ்” என..

“ஆனா எப்படி? அண்ட் இது பிசினெஸ்ஸா…”

“எஸ் ஒரு வகையில.. எனக்கு இது வேணும்.. இங்கே தான் தொலைச்சேன்.. அதனால இங்கே தான் எடுக்கணும்” என்றான் தீவிரமான குரலில்.

“ரெண்டு முறை இங்கே தொலைச்சிருக்கேன்.. இதுக்கும் எனக்கும் சம்மந்தமில்லைன்னு போக முடியாது.. தொலைச்சது ஜகனாய் இருந்தாலும் இது எங்களோட பணம்.. இதுல இருந்து திருப்பியே ஆகணும்.. அப்போவே நான் டிசைட் பண்ணினது தான்.. ஆனா அப்போ பணமில்லை கூடவே இதையெல்லாம் விட நீ முக்கியமா போயிட்ட.. இப்போ இந்த ரெண்டு வருஷமா அதுக்கு வொர்க் பண்ணினேன்..”

“நாம ஐ பீ எல் டீம் வாங்கறோம் .. அஃப்கோர்ஸ் இது தமிழ் நாடுது இல்லை… வேற ஸ்டேட்து.. நமக்கு பக்கத்துக்கு ஸ்டேட் தான்.. சோ போக, வர, பார்த்துக்க ஒன்னும் ப்ராப்ளம் இல்லை.. பட், அங்கே நாம வாங்கறதால அங்கே சில பிசினெஸ் பண்ணனும்.. காண்டாக்ட்ஸ் டெவலப் பண்ணனும்.. நாம எந்த வகையிலாவது அங்கே இருக்கணும்..” என்று பேசிக் கொண்டே போக ..

“என்ன சொல்வது” என்று தெரியாமல் விழித்தாள்..

“ஆனா இது சரிவருமா..” என்று இழுக்க.. “யோசி, உன்கிட்ட தான் முதல் முதல்ல சொல்றேன்.. இன்னும் யார் கிட்டயும் ஓபன் பண்ணலை..” என்றபடி எழுந்து குளிக்க போனவன்.. வந்து உணவு கூட உண்ணாமல்.. உறங்க ஆரம்பித்தான்.

ஆம்! முன்தினம் வர்ஷினி வருகிறாள்.. சில வருடங்களுக்குப் பிறகு அவளைப் பார்க்கப் போகிறோம் எதிர் கொள்ளப் போகிறோம் என்று உறங்கவில்லை.. இப்போது வந்த பிறகு அவளைப் பார்த்துக்கொண்டே உறங்கவில்லை..

கட்டாயமாக உறக்கத்தின் பின் சென்றான்.. நன்றாக உறங்கி எழுந்தவன் நேரம் பார்க்க அது மதியம் மூன்று என்றது.. பின் வர்ஷினி என்ன செய்கிறாள் எனத் தேட...

லேப்பில் எதனையோ செய்து கொண்டிருந்தாள்.. இப்போது புதிதாக கண்களில் கண்ணாடி..

“என்ன இது?” என்றபடி ஈஸ்வர் வந்து அமர... “வேலை பார்க்கிறேன்” என..

“என்ன வேலை?” என்றவனிடம்.. “கார்டூன் ஒன்னு வொர்க் பண்றேன்” என்றாள்.

“நேத்து தான் வந்தே கொஞ்சம் ரெஸ்ட் எடு.. இங்கே இருக்குற வொர்க் எல்லாம் பாரு”

“இங்க என்ன வொர்க்?”

“உன்னோட அக்கௌன்ட்ஸ்”

“அதெல்லாம் நீங்களே பார்த்துக்கங்க” என மீண்டும் வேலையில் மூழ்கினாள்..

“வர்ஷ் நீ பார்க்கணும்” என..

“ப்ச்” என சலித்தவள், “ஒரு இம்பார்டன்ட் சீன் பண்ணிட்டு இருக்கேன்” என..

"என்ன சீன்?" என எட்டிப் பார்க்க.. பட்டென்று லேப் மூடினாள்..

ஈஸ்வர் முகம் சுருக்கவும்.. "யாராவது பார்த்தா எல்லாம் பண்ண முடியாது.. என் கற்பனை ஓட வேண்டாமா" என்றாள்..

அவள் விளக்கம் கொடுக்கவும்.. "கார்டூன் எல்லாம் பார்க்கற வயசு நான் தாண்டிட்டேன்.. நீ எதோ சீன்னு சொன்னதால பார்த்தேன்" என குறும்பு பேச..

"ஹி, ஹி, எனக்கு ஒன்னும் ஃபீல் ஆகலை" என்று கடுப்பாக சொல்லவும்.. வாய் விட்டு சிரித்தவன்..

"அதுதான் எனக்குத் தெரியுமே.. மூணரை வருஷம் தனியா இருந்திருக்க.. நீ என்னை தேடவேயில்லையா?" என்றான் ஆழ்ந்த குரலில், கூடவே நெருங்கி வந்து கண்களில் இருந்த கண்ணாடியும் கழட்ட..

வர்ஷினியின் இதயம் ஏகத்திற்கும் தான் துடித்தது..

"ஒரே ஒரு தடவை பேபி ப்ளீஸ்" என்றவன்.. அவளின் முகத்திற்கு மிக நெருங்க.. அவன் செயல் புரிந்தவளாக.. தானாகக் கண்களை மூடிக் கொண்டாள்.. அந்தக் கண்களின் மேல் அழுத்தமாக ஒரு முத்தம் பதிக்க.. உடலில் ஒரு சிலிர்ப்பு.. எல்லாம் தூக்கி தூரப் போட்டு அவனை அணைத்துக் கொள்ள வர்ஷினியின் மனம் வெகுவாகத் தான் ஏங்கியது.

அந்த ஏக்கத்தையும் மீறி மனம் அவளிடம் "நீ ரொம்ப ஸ்ட்ராங் வர்ஷி.. திரும்ப இந்த மாய வலைல சிக்கிடாதே.. இவன் தேவைன்றப்போ

வருவான்.. பின்னே திரும்பிக் கூட பார்க்க மாட்டான்” என மனதை நிலைப்படுத்த..

இந்த வர்ஷினியின் எண்ணப் போக்கை பற்றி ஒரு சிறு நூலிலை கூட ஈஸ்வருக்குத் தெரியாது.. ஓரளவுக்கு செய்த தவறுகள் எல்லாம் பிடிபட்டு விட்டவனுக்கு அவனின் இந்தத் தவறு பிரதானம் என்பது புரியவேயில்லை..

கணவனிடம் என்றாலும் பெண்கள் பெண்கள் தானே.. எத்தனை பேர் தங்களின் இந்த ஏக்கங்களை கூற முடியும்.. கணவன் எப்போது வேண்டுமானாலும் மனைவியை அணுகும் இந்த விஷயத்தில்.. மனைவியால் என்றுமே முடியாது.. எங்கோ விதிவிலக்கு இருக்கக் கூடும்.. மனைவியை புரிந்து கொள்ளும் கணவனாய் இருந்து விட்டால்..

அது ஒரு வரம்.. பலருக்குக் கிடைப்பதில்லை..

தன் அம்மாவின் கருப்பு பக்கங்களைக் கூட லஜ்ஜையின்றி பேசிய வர்ஷினியால் இதனைப் பேச முடிந்ததில்லை..  திருமணதிற்கு உடலின் ஈர்ப்பே ஈஸ்வருக்குப் பெரும் காரணமாகிப் போக..

வர்ஷினி பிரிவதற்கும் அதுவே பெரும் காரணமாகிப் போனது.. அதை அவன் இதுவரையிலுமே அறியவில்லை என்பது பெரும் வேதனையே..

இரு கண்களிலும் அழுந்த முத்தம் பதித்தவன்.. வர்ஷினியிடம் எந்த எதிர்ப்பும் இல்லாது போக.. அவளின் அருகாமையில் மனமும் தறிகெட.. இதமாக இடையோடு அணைத்தவன்.. இதழ்களுக்கு இறங்க.. அவனை அறிந்தவளாக இரு

இதழ்களுக்கும் நடுவில் தன் கையை வைத்துக் கொண்டாள்..

ஏமாற்றம் தான் ஆனாலும் அதையும் இழப்பானா என்ன அவன்.. வெகு நேரம் தன் இதழ்களை அவளின் கையினில் புதைத்துக் கிடந்தான்.. இருவருக்குமே கண்களில் நீர் நிறைந்தது.. இருவருமே உள்ளிழுத்துக் கொண்டனர் மற்றவர் அறியாமல்.. இருவரின் உடலின் தேவைகளை விட மனதின் தேவை தான் அந்த இடத்தில் பிரதானமாக இருந்தது.. சிறிது நேரத்தில் சுதாரித்தவளாக.. விலக முற்பட.. உடனே விட்டவன்..

வர்ஷினியின் முகம் பார்க்க.. அதில் ஒரு தீவிரம் தான் இருந்தது. “எனக்கு எந்த அக்கௌன்ட்சும் பார்க்க வேண்டாம்” என்று பேச்சை திசைத் திருப்ப.. ஈஸ்வருமே அதனைக் கொண்டு பேச ஆரம்பித்தான். அவன் பேசப் பேச அவனை தான் பார்த்திருந்தாள்..

**கண்ணிமைகளை வருத்தி.. கனவுகளை துரத்தி...**

**அத்தியாயம் எழுபத்தைந்து:**

**அன்பே எந்தன் காதலை சொல்ல நொடி ஒன்று போதுமே**
**அதை நானும் மெய்ப்பிக்க தானே ஒரு ஆயுள் வேண்டுமே**

அதற்கு பதில் சொல்லாமல்.. “எனக்கு அந்த அக்கௌன்ட்ஸ் பார்க்கவேண்டாம்.. நீங்களே பார்த்துடுங்க.. எனக்கு என்னன்னு சொன்னா மட்டும் போதும், அண்ட் அமௌன்ட் ரொம்ப அதிகமாத் தான் என்கிட்டே இருக்கும்..

இல்லைன்னா நீங்க அந்த ப்ரபோசல்க்கு என்னை சூஸ் பண்ணியிருக்க மாட்டீங்க” என..

பேச்சிலிருந்து விஷயம் அவள் கிரகிப்பது அவளின் புத்திசாலிதனத்தைக் காட்டியது.. “இந்த ஐ பீ எல் ப்ரபோசல் நான் உன் முன்னே வைக்கறதுக்கு பணம் மட்டும் தான் ரீசன்னு நீ நினைக்கறியா வர்ஷி” என..

அதற்கும் பதில் சொல்லவில்லை அமைதியாக இருந்தாள்..

சிறிது இடைவெளியும் விட்டான் ஏதாவது சொல்வாளோ என எதிர்பார்த்து.. அவள் சொல்லும் வழியாகக் காணோம் என்றதும் அவளிடம் யோசனை கேட்டான் “நான் செய்யறது சரியா?” என.

“சரியா? தப்பா? அதுல என்ன ப்ராஃபிட் எல்லாம் எனக்குத் தெரியாது.. பட் நுழைஞ்சிட்டம்னா நாம சரி பண்ணிக்கணும் அண்ட் இந்தியால அது கண்டிப்பா முடியும்.. ஏன்னா ரொம்ப பேரை இங்க கிரிக்கட் பைத்தியம்மாக்குற விஷயம்.. இன்னொரு ஃபாண்டசி வோர்ல்ட், சோ ரிஸ்க் எடுக்கலாம்”

“ஆனா அதுல என்ன பண்ணனும் எல்லாம் உங்களுக்குத் தெரியுமா?” என..

“எனக்கும் அதிகம் தெரியாது.. பட், ஜகன் இருக்கான், அஸ்வின் இருக்கான்.. பார்த்துடலாம்!”

“ஆனா அவங்க எல்லாம் இதுல விட்டாங்க தானே!”

“அவனுங்க விட்டது கேம்ப்ளிங்ல.. நாம என்ன அதுவா பண்ணப் போறோம்... நாம பண்றது கேம்..

அதுல வர்ற ஸ்பான்ஸர்ஸ்... ஆட்ஸ்.. ப்ளேயர்ஸ்.. இன்னும் நிறைய..”

“நான் சொல்றது சுத்தமா எனக்குத் தெரியாதுன்னு கிடையாது.. என்னையும் விட அவங்களுக்கு இதுல இன்னும் கொஞ்சம் தெரியும்.. என்னன்னு கேட்டுக்கலாம், அதுக்காக அவங்க சொல்றதை எல்லாம் செய்ய மாட்டேன்”

“இன்னும் பெஸ்ட் பீப்பில்ஸ் எல்லாம் இருக்காங்க.. நாம அவங்களை ஹையர் பண்ணலாம்.. எல்லாமே இப்போ கார்பரேட் தான்.. நாம அதை யூஸ் பண்ணனும்.. ஆனா அது நம்மை யூஸ் பண்ண விடக் கூடாது. பார்ப்போம்.. முடியும்னு ஒரு நம்பிக்கை இருக்கு”

“ஆனா நிறைய பணம்..” என இழுத்தவளிடம்..

“எஸ், கண்டிப்பா.. கிட்ட தட்ட நைன் ஹண்ட்ரட் க்ரோர்ஸ்” என,

விழி விரித்தவள்.. “நம்ம கிட்ட அவ்வளவு பணம் இருக்கா” என..

திரும்பவும் நம்ம என்ற வார்த்தையை வர்ஷினியின் வாய் மொழியாகக் கேட்கவும்..

ஈஸ்வரின் மனதில் ஒரு புது உற்சாகமே..

“லிக்விட் கேஷ் கிடையாது, ஆனா மொபளைஸ் பண்ண முடியும்.. என் கிட்ட ஈஸ்வர் ஃபைனான்ஸ் இருக்கு”

“இந்த நாலு வருஷத்துல.. முன்ன இருந்ததை விட பத்து மடங்கு அது அதிகமாகி இருக்கு.. இது சாதாரண விஷயம் கிடையாது.. நான் மட்டுமில்லை.. ஜகன் கூட இருக்கான்.. வாழ்க்கையில வாங்கின அடி.. அதுக்கு நான் சஃபர் ஆனது.. அவனை ரொம்ப டிஸ்டர்ப்

பண்ணியிருக்கு.. ரொம்ப கடுமையா உழைக்கிறான்"

"நான் என்ன பண்ணனும் நினைக்கறனோ அதை சொன்னா கரக்டா செஞ்சு முடிக்கறான்.. சோ, நான் ப்ளான் பண்றேன்.. அது எப்படி பண்ணனும் சொல்றேன்.. அவன் செஞ்சு முடிக்கறான்.. அது கரக்டா நடக்குதான்னு ரூபா பார்க்கறா.."

"ரூபா அக்காவா..." என..

"எஸ், ரொம்ப இன்டெலிஜன்ட் அவ.. என்னோட ஸ்கூல் மேட்..உன்கிட்ட சொல்லியிருக்கேனா" என..

"ஆம்" என்பது போல தலையசைத்தவளிடம்.. "ஜகன் அவளை ரொம்ப இஷ்டப்பட்டான்.. நான் தான் அவ கிட்டப் பேசினேன்.. நான் சொன்னா சரியா இருக்கும்னு உடனே சரின்னு சொல்லிட்டா... எங்க வீட்ல ஒத்துக்கவேயில்லை, ரொம்ப கன்வின்ஸ் பண்ணினேன்.. ஜகன் இந்தப் பணம் தொலைச்சப்போ சூசைட் அட்டம்ப்ட் பண்ணினான்.. உனக்கு தெரியும் தானே, உங்கப்பா கூட அப்போ ஹாஸ்பிடல்ல இருந்தார்".

"அந்த பீரியட்ல ரொம்பவும் ஸ்ட்ரெஸ்ல இருந்தேன்.. அவ ரொம்ப டிப்ரஷன்ல இருந்தா.. பணம் தொலைச்சதுக்கு காரணம் அவ தம்பி.. கணவன் ஹாஸ்பிட்டல்ல.. என்னோட ரெஸ்பான்சிபிலிட்டீஸ் அதிகம் ஆகிடுச்சு. அஸ்வின் ஒரு பக்கம் ரஞ்சனியை கல்யாணம் பண்ண மிரட்டி இருக்கான், அதை என்கிட்டே சொல்ல பயந்து.. சொன்னா அஸ்வினை ஏதாவது பண்ணிடுவேன்னு.. கூடவே பணப் பிரச்னையும் சரி பண்றேன்னு இந்த ரஞ்சி பத்துவைக்

கல்யாணம் பண்ணி.. ஆனா உங்க வீடும் பிடிக்காம.. அப்போ ரொம்ப ரொம்ப ஸ்ட்ரெஸ்.. எப்படியோ வெளில வந்துட்டோம்"

"இப்போ பத்து அண்ணாவும் ரஞ்சனி அண்ணியும் ஒகே வா" என வர்ஷினி பதில் கேள்வி கேட்க..

"அதான் குழந்தை இருக்கே சரியாகிட்டாங்க" என..

"குழந்தை இருந்தா சரியாகிட்டாங்களா?" என வர்ஷினி பதில் கேள்வி கேட்க..

ஈஸ்வரின் முகத்தில் வேகமாக ஒரு கவலைப் படர.. "ஆரம்பிச்சிட்டான்டா இவன்" என மனதினில் நினைத்தாலும்.. "ஜஸ்ட் ஒரு பேச்சுக்கு சொன்னேன்.. நீங்க பார்க்கறீங்க தானே, ஏதாவது வித்தியாசம் தெரியுதா?" என..

"இல்லையில்லை" என ஈஸ்வர் சொல்ல.. "அப்போ சரியாகியிருக்கும்" என வர்ஷினி சொல்லவும் தான் திரும்ப ரூபாவிற்கு வந்தான். "அவனை ஏன் நீ சமாதானம் செய்ய வேண்டும்.. என்ன பட்டாலும் நீ திருந்த மாட்டாய்" என தன்னையும் திட்டிக் கொண்டாள்.

"இந்த ரெண்டு வருஷமா ரூபா எங்களோட இருக்குறா.. அதனால தான் ஜகன் எங்கேயும் ஏமாந்துடுவானோன்னு பயம் இல்லாம என்னால இன்னும் அதிகமா செயல் பட முடியுது"

"இப்போ பாரு ரெண்டு நாளா அங்கே என்ன நடக்குது கூட எனக்கு தெரியாது, அவங்க பார்த்துக்குவாங்க" என்றவன்.. "என்ன பண்ணலாம்?.. பண்ணிடலாமா ஐ பீ எல்" என,

"ம்ம்ம்ம்ம்ம்ம்" எனத் தலையாட்டினாள்..

“இன்னும் யார் கிட்டயும் சொல்லலை.. அதோட பிரசன்ட் ஓனர் இதை என்கிட்டே பேசி ஒரு மாசம் ஆச்சு.. மணி மொபளைஸ் பண்ண தான் ப்ளான் பண்ணிட்டு இருந்தேன்.. ஓரளவுக்கு ஷேப் ஆகிடுச்சு.. நீ வந்ததும் உன்கிட்ட பேசிட்டு ஃபைனல் டெசிஷன் எடுத்துடலாம்ன்னு வெயிட் பண்றேன் பண்ணிடலாமா?”

“ஒரு டூ ஹண்ட்ரட் க்ரோர்ஸ் ஷார்டேஜ் ஆகுது.. ரெண்டு வருஷம் முன்ன உன்னோட பணத்துல பிஃப்டி க்ரோர்ஸ் நான் சில இடத்துல இன்வெஸ்ட் பண்ணினேன்.. அது இப்போ நாலு மடங்கா போகுது.. வித்துட்டா முடியும்.. ஒரு அரசியல்வாதி மாட்டியிருக்கான்.. முடிச்சிடலாம்” என,

“ஆங்” என வாய் பிளந்தாள்.. கோடிஸ்வரர்கள் என்று தெரியும்.. ஆனாலும் இவன் பேசும் பணம்.. “நாம அவ்வளவு பணம் வெச்சிருக்குறவங்களா?” என ஆச்சர்யம் காட்ட..

அவளின் பாவனையில் வாய் விட்டு சிரித்தவன்.. “உன்னோட சொத்து மதிப்பு தெரியாதா?” என,

“தெரியாது” என்றவள், “அப்பா இருந்தவரை எல்லாம் அப்பா பார்த்துக்கிட்டாங்க.. ஏதாவது கேட்டா கையெழுத்து தான் போடுவேன்.. அப்பாக்கு அப்புறம் பத்துண்ணா கையெழுத்து வாங்க வந்து.. அப்போ பிரச்சனையாகி.. நாம வீட்டை விட்டுப் போய்.. இப்படி பலதும் நடக்க.. நான் வேற பல விஷயத்துல சிக்கிட்டேன்.. அப்புறம் நாம பிரிஞ்சிட்டோம்.. அப்புறம் நான் வெளிநாடு போயிட்டேன்..” என வர்ஷினி பேசப் பேச இமைசிமிட்டாமல் பார்த்தான்..

இப்படித் தான் அவளின் அப்பா வீட்டில் இருக்கும் போது நடந்தவைகளை கதையாகச் சொல்வாள்.. இப்போது என் மனைவி ஆன பிறகும் கூட.. இது வாழ்க்கையில் என்றுமே தான் ஈடு செய்ய முடியாத அவளின் நாட்கள் என புரிந்தது.

வர்ஷினி அவனின் எண்ணவோட்டம் புரியாதவளாக பேசிக் கொண்டே போனாள் "இதுல எந்த நேரத்திலையும் அது எனக்கு தெரிஞ்சிக்கணும்னு தோணலை"

"எனக்கு என்னோட உரிமை தான் முக்கியம், பணம் முக்கியமில்லை.. அது அப்போ தாத்தா பேசின பிறகு... அதுவும் நீங்க குடுத்துடலாம் சொன்ன பிறகு.. எனக்கு இதுல இருந்த இன்ட்ரஸ்ட் போயிடுச்சு"

"எல்லாம் தூக்கிப் போட்டு என்னை எனக்குப் பார்த்துக்க தெரியும்னு சொல்லணும்னு தோணினது, ஆனா உரிமைன்ற ஒரே விஷயத்துக்காக தான் அமைதியா இருந்தேன்.. கூடவே இது என்னோடதும் கூட"

"அப்புறம் நீங்க அஸ்வினை இதைப் பார்க்க விட்டீங்க.. அப்படியும் நீங்க தான் பார்த்துக்குவீங்க தெரியும்.. சோ, என்னை மட்டும் நான் பார்த்துக்கிட்டேன்" என்றாள்.. குரலில் ஒரு வருத்தம் வலி..

"நீ அக்கௌன்ட்ஸ் பார்த்துக்கணும் பேபி, உனக்கு எல்லாம் தெரியணும்.. நான் உன்னை ஏமாத்திட்டா?" என்றான்.

"நீங்களா?" என நிறுத்தியவள்.. "எஸ், நீங்க என்னை ஏமாத்திட்டீங்க தான், அதுல செகண்ட் தாட் கிடையாது.. ஆனா பண விஷயத்துல நீங்க

பக்கா, எனக்குத் தெரியும்.. உங்க ஃபைனான்ஸ் விஷயத்துல பார்த்தேன் இல்லையா?”

“எதுலையும் ஒரு நேர்மை வேணும், ஏன் தப்பு செஞ்சாக் கூட ஒரு நேர்மை இருக்கணும்.. அந்த வகையில ஏதோ ஒரு நேர்மை உங்கக்கிட்ட இருக்கு.. அதனால தான் இவ்வளவு ஷார்ட் பீரியட்ல இந்த சக்சஸ் நினைக்கிறேன்.. நீங்க இன்னும் இன்னும் வளர என் வாழ்த்துக்கள்” என வர்ஷினி கையை நீட்ட..

“வர்ஷ்.. நான் தேர்ட் பெர்சன் கிடையாது.. இது நம்மோட சக்சஸ்! நீ வேற, நான் வேற கிடையாது” எனச் சொல்லியவன்.. அவளின் நீட்டிய கைகளைப் பற்றாமல் பார்த்திருந்தான்..

கூடவே “தப்பு செய்யறதுலையும் ஒரு நேர்மைன்னா.. புரியலை!” என,

“என்கிட்டே தப்பா நடந்தீங்க.. அது சரி பண்ண என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க.. இல்லை கல்யாணம் பண்ணாம நான் உங்களுக்கு கிடைக்க மாட்டேன்னு கூட பண்ணியிருக்கலாம். இப்ப வரைக்கும் நான் உங்களை எவ்வளவு டார்ச்சர் பண்ணினாலும் என்னை பொறுத்துக்கறீங்க.. ஒரு ட்ரக் அடிக்ட்.. ஆனாலும் நீங்க என்னை விடலை”

“அப்போ விட்ட இடத்துல பிடிக்கணும்னு நினைக்கற உங்க கான்சப்ட் என்கிட்டயும் யூஸ் பண்றீங்க.. என்கிட்டே டீமாரலைஸ் ஆன நீங்க, என்கிட்டயே மாரல் தேடறீங்க போல” என..

வர்ஷினியின் பேச்சைக் கேட்டதும் உள்ளம் கொதித்தது, “ரப்பிஷ்.. வாயை மூடு! எவ்வளவு தரம்

உனக்கு என்னை புரிய வைக்க..” என ஆத்திரமாகப் பேச

கூலாக அவனின் ஆத்திரம் சிறிதும் தன்னை அசைக்காதவளாக நின்றவள்... “என்ன பண்ண? எனக்கு புரியலை!” என்றாள்.

“நீ கொஞ்சம் வீக் வர்ஷ், ஆனா நான் ரொம்ப ஸ்ட்ராங். உனக்குப் புரியற வரை புரிய வெச்சிட்டே இருப்பேன்” என,

“அப்படியா, புரிஞ்சாலும் நான் ஒத்துக்குவேன்னு நீங்க இன்னும் நம்பறீங்களா?” என்று கேட்டவளின் பார்வையில்.. வார்த்தையில்.. இருந்த அலட்சியம்.. ஈஸ்வருக்கு விசில் அடிக்கத் தான் தோன்றியது..

பின்னே இவ்வளவு பைத்தியமாய் இந்த ஐந்து வருடமாய் சுத்துகிறான்.. இந்த அவளின் பாவனைகள் தான் அவனை பித்தனாக்குகின்றதோ..

அதுவரையிலும் நீட்டிய கை நீட்டியபடி தான் வைத்திருக்க.. அதைப் பற்றியவன் அவள் எதிர்பாராமல் இழுக்க.. அவன் மேல் வந்து மோதி தான் நின்றாள்.. மோதலும் சற்று பலம் தான்..

“அம்மா” என்று வாய் தானாக சொல்லி, நெஞ்சுப் பகுதியில் ஒரு கை போக.. இடையோடு அணைத்துப் பிடித்தவன்... “சாரி” என்று வர்ஷினியின் கையை விலக்கி அந்த வேலையை தனதாக்க..

“அம்மா” என்று திரும்பவும் சொன்னவள்.. அவனின் கையை அசைய விடாமல் பிடித்துக் கொண்டாள். அதில் வலுவே இல்லை.. ஆனாலும் கையை ஈஸ்வர் அசைக்கவில்லை. அதே சமயம் எடுக்கவுமில்லை.. முன்னேறவும் மனதில்லை..

பெண்ணவளின் தடுமாற்றம் அவனை தேக்கியது..

அந்த நீல நிறக் கண்களில் ஒரு கலவரம்.. தெரிவித்துக் கொள்ள விரும்பாத ஒரு கலவரம்.. உடலில் சில ரசாயன மாற்றம்.. தாள முடியவில்லை...

“எனக்கு நம்பிக்கையிருக்கு வர்ஷ், கண்டிப்பா நீ சொல்வே” என்றான்..

“இல்லை, எனக்கு சொல்றதுல இஷ்டமில்லை” என்று சொன்னவளின் விழிகளும் கலங்க.. குரலும் கலங்கியது..

“உன்னோட சந்தோஷசம் என்னோட மட்டும் தான் வர்ஷ்.. உனக்குத் தெரியுமோ இல்லையோ எனக்குத் தெரியும்.. ரொம்ப கஷ்டப் படுத்திக்காத உன்னை.. நான் உன்னை தனியா விட்டாலும் நீ சந்தோஷமா இல்லை. நான் உன்னை தனியா விட்ட பிறகு நேர்ல பார்க்கலைன்னாலும் எனக்குத் தெரியும்” என..

ஈஸ்வரின் இரு கைகளிலும் அழுத்தம் கூட.. சில நொடி கண்மூடியவள்.. உடலின் வலு எல்லாம் சேர்த்து அவனை ஒரே தள்ளாக தள்ளவும்.. அதை எதிர்நோக்கி இருந்தவனாக .. விழ இருந்தவன் சுதாரித்து நின்றான்..

“ஷ், பா! எவ்வளவு பிடிவாதம்!” எனத் தோன்ற, முகத்தில் ஒரு கசந்த முறுவல் தானாக மலர..

“உன்னால என்னை விட்டு யாரோடையும் இருக்க முடியாது” என்றான் ஆணித்தரமாக.

“முடியும், ஏன் முடியாது? என் அம்மாவோட இல்லை என் அப்பாவோட குணம் எனக்கும் இருக்கும்” என்று திமிராகப் பேச..

“கண்டிப்பா கிடையாது.. உங்கம்மாவோட, உங்கப்பாவோட திறமை உன்கிட்ட வந்திருக்கலாம், ஆனா குணம் வரலை.. ஒரு உண்மை சொல்லட்டுமா! இந்த நிமிஷம் நான் செத்துப் போனாக் கூட நீ இந்த உலகத்துல இருக்குற வரை தனியா தான் இருப்ப.”

“நான் இறந்த பிறகு உனக்கு ஒரு வாழ்க்கை அமையக் கூடாதுன்னு நான் நினைக்க மாட்டேன்.. அது தப்பும் கிடையாது.. ஆனா அப்படி ஒரு சூழல் வந்தாலும் நீ தனியா தான் நிற்பே..!”

“ஐ சேலஞ்...!” என்றான் சவாலாக.

“வாயை மூடிட்டு போடா.. நீ பேசவே பேசாதே.. எரிச்சலா வருது.. பேசிட்டே இருக்காதே.. வாயை மூடு! அப்புறம் நான் தான் செத்துப் போவேன்!” எனக் கத்தினாள்.

வர்ஷினி திரும்ப கோபமாகச் சொல்ல வர.. தன் வாயின் மேல் கைவைத்து பேச மாட்டேன் என சைகை செய்தவன்.. நீயும் பேசாதே என சிக்னல் காட்ட..

“போடாங்..” என்று ஆரம்பித்தவள் கெட்ட தமிழ் ஆங்கில வார்த்தைகளில் பாரபட்சமின்றி திட்ட.. வாயில் இருந்த கையை எடுத்து இரண்டு காதினையும் மூடிக் கொண்டான்..

முகத்திலும் “அச்சோ இவ்வளவா..” எனத் தோன்ற கண்களையும் மூடிக் கொண்டான்.. உண்மையில் ஈஸ்வருக்கு அவ்வளவு கெட்ட வார்த்தைகள் வராது..

சிறிது நேரத்தில் சத்தம் எதுவும் கேட்காததால் கண் திறக்க.. “உன் காதுல இருக்குற கை எடு.. நான்

உன்னை திட்டணும்.. அதை நீ கேட்கணும்” என அவள் மிக அருகில் நிற்க..

அந்த நீல நிறக் கண்களை பார்த்துக் கொண்டே ஆழ்ந்த மூச்செடுத்தவன் “ரொம்ப வாசனையா இருக்க வர்ஷ் நீ” என..

“உன்னை” என திரும்பவும் ஆரம்பிக்க.. அவசரமாக அவளின் வாய் மூடியவன்.. “இன்னைக்கு இது போதும்.. ப்ளீஸ் பேசிடாதே.. அப்பப்போ திட்டிக்கோ” என சீரியசாகச் சொல்ல..

வர்ஷினியின் முகத்தில் தானாகப் புன்னகை மலர்ந்தது, ஆனால் ஈஸ்வர் வர்ஷினியின் வாய் மூடி இருந்ததால் அவனுக்கு தெரியவில்லை.

“சாப்பிட்டியா” என..

“இல்லை” என்பது போலத் தலையாட்டவும்.. வர்ஷினியின் வாய் மேல் இருந்த கையை எடுத்தவன்.. அவளையும் அமர வைத்து அவனும் உண்டு.. அவளை அழைத்துக் கொண்டு வெளியே வர.. தாஸ் காருடன் தயாராக இருந்தான்.

பின்பு ஈஸ்வர் கட்டிக் கொண்டிருந்த வீட்டிற்கு அழைத்து சென்றான்... பிரமாண்டம்.. இன்னும் முடிக்கப் படவில்லை.. ஆங்காங்கே ஆட்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர்.. வர்ஷினி பார்த்தது பார்த்தபடி நிற்க..

“உன்னோட வீடு.. இதுல உன்கூட என்னை இருக்க விட்டாலும் சரி.. இல்லை வெளில நிக்க வெச்சாலும் சரி.. ஆனாலும் என்னையும் சேர்த்துக்கோ” என பாவனையாகச் சொல்ல ..

“ஏய், என்ன கிண்டலா? சும்மா என்னை டென்ஷன் பண்ணாதே” என அவனை முறைத்துப்

பார்க்க.. யாரும் கேட்டுவிட்டார்களா என ஈஸ்வர் அவசரமாகச் சுற்றும் முற்றும் பார்த்தான்..

“இப்போதானே சொன்னேன் வாய் திறக்காதேன்னு!” என்று கை நீட்டி மிரட்ட.. மிரட்டும் கையை பிடித்து தன் மேல் மீண்டும் இழுத்து விடத் தோன்ற.. அவனின் பார்வை புரிந்து வேகமாகக் கை இறக்கினாள்.

அப்போது அங்கே ஒருவன் வரவும்.. ஈஸ்வரின் முகம் அப்படியே மாறியது..

“ஹாய் சாம்.. திஸ் இஸ் மை வைஃப் சங்கீத வர்ஷினி”

“ஹலோ மேம்” என்று பவ்யமாக அவள் முன் அந்த சாம் என்பவன் நிற்க..

“எனக்குத் தெரிஞ்ச மாதிரி மாடல் பண்ணியிருக்கேன் வர்ஷ்.. இன்னும் உனக்கு என்ன என்ன ப்ரொவிஷன் வேணும்.. இல்லை ஆல்ட்ரேஷன் வேணும்.. இல்லை இன்டீரியர்ஸ் என்ன வேணும்.. ஸ்டுடியோ பண்ணனுமா அதுக்கு என்ன வேணும்.. பாரு.. பார்த்துட்டு சொல்லு.. ஐடியாஸ் வேணும்னா இவர் கிட்ட சொல்லு காட்டுவார்” என்றவன்...

திரும்ப என்ன வேண்டும் என சாமிடம் பேச நின்று விட.. வர்ஷினி வீட்டை எல்லாம் பார்க்கவில்லை.. ஈஸ்வரை தான் பார்த்திருந்தாள்..

ஈஸ்வர் சாமிடம் மும்முரமாக பேசிக் கொண்டிருக்க.. “ஹாய் மேம்” என்று ஒரு குரல்.. திரும்பினால் அஸ்வின்..

“ஹாய் அஸ்வின்” என..

“இருங்க, இருங்க, இது நீங்க தானான்னு ஈஸ்வர்கிட்ட கன்ஃபர்ம் பண்ணிக்கறேன்” என்று

வர்ஷினி ஒல்லியானதை அஸ்வின் கிண்டல் செய்ய..

“ஓஹ், அவர் கிட்டயா கேளுங்களேன்!” என எப்படியும் அஸ்வின் கேட்க மாட்டான் என வர்ஷினி பதில் கிண்டல் செய்ய ..

“செமையா சைட் அடிச்சிட்டு இருந்தீங்க.. நான் டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?” என சத்தமாக அஸ்வின் கேட்க..

ஈஸ்வர் அஸ்வின் என்ன பேசுகிறான் எனப் பார்த்தான்..

திரும்ப வர்ஷினி அஸ்வினை பார்த்த பார்வையில்.. “வீட்டை விடாம பார்த்துட்டே இருந்தாங்க, சொன்னேன்!” என அஸ்வின் சமாளித்தான்.

“பிடிச்சிருக்கா வர்ஷ்” என  ஈஸ்வர் ஆர்வமாகக் கேட்க...

“பிடிக்காமையா பார்ப்பாங்க” என அஸ்வின் ஈஸ்வரை மனதில் கொண்டு சொல்ல..

திரும்ப வர்ஷினி பார்த்த பார்வையில் வாய் மேல் பேசமாட்டேன் என்பது போல அஸ்வின் கை வைத்துக் கொண்டான்.

கோபமாக ஈஸ்வரிடம் திரும்பியவள், “இவரை யாரு வரச் சொன்னா” என கடுப்பாகக் கேட்க..

“உன்னை பார்க்கணும் சொன்னான், நான் தான் வரச் சொன்னேன்” என ஈஸ்வர் சொல்லவும்..

அஸ்வின் அருகில் வந்தவள் “கிண்டல் பண்றேன்னு லூசுத் தனம் பண்ணக் கூடாது.. புரிஞ்சதா!” என்றாள் மிரட்டலாக.

“புரிஞ்சது” என மண்டையை மண்டையை ஆட்டிய அஸ்வின்.. “லைஃபை என்ஜாய் பண்ற

வயசு.. கோபத்தை இழுத்து பிடிச்சு ஸ்பாயில் பண்ணிக்காதீங்க, பிடிச்சிருக்குன்னா ஒதுக்கங்க" என்றான் சின்சியராய்.

"நீங்க என்னை விடப் பெரியவங்க தான்.. ஆனா அட்வைஸ் பண்ணனுமா என்ன?" என,

"எப்படியும் கேட்க மாட்டீங்க தெரியும், ஆனாலும் சொல்லணும் தோணிச்சு சொன்னேன்!" என அஸ்வின் சொல்ல..

"தோணினது எல்லாம் செய்யக் கூடாது!" என வர்ஷினி வழக்காட..

என்னவோ வர்ஷினி அஸ்வினை அதட்டுவது போலத் தோன்ற.. "என்ன வர்ஷ் அவனோட ஆர்கியுமென்ட்?" என்று ஈஸ்வர் அதட்டினான்.

அஸ்வினை முறைத்தவாரே ஈஸ்வரின் அருகில் சென்று நிற்க.. தானாக ஒரு புன்னகை அஸ்வின் முகத்தில் மலர்ந்தது.

அஸ்வின் சொல்லச் சொல்ல கிண்டல் செய்கிறான், ஈஸ்வருக்கு தெரிந்து விடப் போகிறது என பயந்து, ஒரு ஆத்திரம் கிளம்ப, "என்ன கிடைக்கிறது அவன் மேல் எரிய.." எனப் பார்த்தவள்.. அகப்பட்ட ஒன்றை கையில் எடுக்க..

"ஹேே, என்ன பண்றே" என்ற ஈஸ்வர் அவள் எரியும் போது அப்படியே வர்ஷினியின் இடையில் கை கொடுத்து தூக்கி திசை மாற்ற.. அஸ்வின் அடிபடாமல் தப்பினான்..

எல்லோரும் பார்த்து இருந்தனர்.. ஏதோ விளையாட்டு எனத் தான் தோன்றியது.. எல்லோர் முகத்திலும் முறுவல் கூட..

"என்ன வர்ஷ் இது சின்னப் பொண்ணு மாதிரி?" என்று ஈஸ்வர் அவளுக்கு மட்டும் கேட்குமாறு

கடிய..

தப்பித்தாலும் வர்ஷினியின் செய்கைப் பார்த்து சிரிப்பு வர.. அஸ்வின் சிரித்தான்.

“இவன் என்னை கிண்டல் பண்றான், கிண்டல் பண்ணவேண்டாம் சொல்லுங்க, அப்புறம் அடிச்சிடுவேன்!” என வர்ஷினி ஈஸ்வரிடம் முறையிட..

“என்ன கிண்டல் பண்றானா? என்ன விஷயம்?” என்று ஈஸ்வரின் முகம் நொடியில் சீரியசாக மாற..

ஈஸ்வரின் முக மாற்றத்தை பார்த்தவன்.. “அச்சோ, ஈஸ்வர் இவங்க உன்னை சைட் அடிச்சாங்க.. அது தான் சொன்னேன்..” என்று அஸ்வின் உளறி போட்டுக் கொடுக்க..

“போடாங்..” என்று வர்ஷினி ஆரம்பிக்கவும் அவசரமாக ஈஸ்வர் அவளின் வாய் மூடினான்..

“விடுங்க, விடுங்க” என்று வர்ஷினி திமிர..

“பேச மாட்டேன்னா தான் விடுவேன்” என்று ஈஸ்வர் டீல் பேச.. எல்லோர் பார்வையிலும் இருவரும் காதல் மிகுந்த தம்பதிகளாகத் தோன்றினர்..

ஈஸ்வரின் இறுக்கமான முகம் ஒரு மென்மையோடு வர்ஷினியைப் பார்ப்பது அங்கிருந்த அனைவருக்குமே தெரிந்தது. ஈஸ்வரை அப்படித்தானே பார்த்திருந்தனர். அதனால் யாருக்கும் வர்ஷினியின் செய்கை தப்பாகத் தோன்றவில்லை.

“சரி, சரி” என்பதாக அவள் தலையாட்டவும் தான் விட்டான்.

பின்னே பேச விட்டால் மானம் கப்பல் ஏறி விடாதா.. விட்டவுடன் அஸ்வினை முறைத்துப்

பார்க்க.. “நீங்க ஈஸ்வரை பார்க்கறதை இனிமே நான் சொல்லவே மாட்டேன்” என்று அஸ்வின் மேடை ரகசியம் பேச..

“இவன் நிஜம் சொல்கிறானா? பொய் சொல்கிறானா?” என்று ஈஸ்வர் மனதிற்குள் யோசித்த போதும் வாய் விட்டு சிரித்தான்.

அஸ்வின் செய்த அசட்டுத்தனத்தில் வர்ஷினியும் அசடு வழிந்து முகத்தையும் கண்களையும் சுருக்கி தன் தலையைத் தானே தட்டிக் கொண்டாள்.

பார்பதற்க்கே அது ஒரு கவிதையாய் இருக்க.. அழகு.. வர்ஷினியை சுற்றி வேலை செய்த எல்லோரும் பார்த்திருந்தனர்.

“இல்லை, நான் ஒன்னும் சொல்லலை” என்று அஸ்வின் ஆரம்பிக்கும் போதே.. “பேசிடாதே” என்பது போல அஸ்வினை பார்த்து தலைக்கு மேல் ஒரு கும்பிடு போட..

அங்கே தோட்டம் அமைக்க பாத்தி கட்டிக் கொண்டிருந்த இடத்தில் இருந்த ஒரு வயதான பெண்மணி நின்ற இடத்தில் இருந்தே வர்ஷினியை திருஷ்டி எடுத்தார்.

நடப்பவை அத்தனையும் “பே” என்று திறந்த வாய் மூடாமல் பார்த்திருந்த தாஸிடம்.. சைகை செய்து அருகில் வரச் செய்து திருஷிடி சுற்றிய பெண்மணிக்கு சில நூறு ரூபாய் தாள்களை ஈஸ்வர் கொடுத்து விட்டான்.

அந்த சூழலில் வர்ஷினிக்கு எல்லாம் மறந்து போனது. ஒரு இறுக்கம் குறைந்த இலகுத்தன்மை அவளின் மனதில் வியாபித்தது. அது கண்களிலும் பிரதிபலிக்க, வெகு நாட்களுக்குப் பிறகு

வர்ஷினியின் கண்களில் ஒரு துடிப்பு.. அதை ஈஸ்வர் ஆசையோடு பார்த்திருந்தான்.

**இவ்வுலகம் இருண்ட பின்னும்**
**இருளாத பாகம் எது**
**கதிர் வந்து பாயும் உந்தன் கண்களடி!**

## அத்தியாயம் எழுபத்தி ஆறு :

**நான் ஓவியன் என்று தெரிந்தும் நீ, ஏன் கண்ணிரண்டைக் கேட்கிறாய்... சிலுவைகள் சிறகுகள் ரெண்டில் என்ன தரப் போகிறாய்!**

“வீடு பத்தி ஒன்னுமே சொல்லலை வர்ஷ்” எனக் கேட்க,

“என்ன சொல்லணும்? ரொம்ப நல்லா இருக்கு இப்போவே, இன்னும் ஃபினிஷ் பண்ணினா இன்னும் நல்லா இருக்கும்” என இருவரும் பேசிக் கொண்டது சமையல் அறையில்..

ஆம்! சமையல் அறையில் தான்! காலை முதல் மாலை ஆறு மணி வரை இருந்தால் போதும் என்று சமையல் செய்யும் அம்மாவிடம் சொல்லியிருக்க, அவர் சாம்பார், சட்னி என்று செய்து வைத்து கிளம்பியிருந்தார்.

வீட்டைப் பார்த்து வந்திருந்தவர்கள், “பசிக்குது” என வர்ஷி சொல்லவும், “வா” என சமையல் அறை வந்திருந்தான். வரும் வழியிலேயே “ஹோட்டல் போகலாமா” என்று கேட்டவனிடம் “வேண்டாம்” என்று சொல்லியிருந்தாள். அப்படியும் வீட்டின் உள் நுழைந்ததுமே “பசிக்குது” என,

“இப்போது தானே கேட்டேன்” என்று சொல்ல வந்தவன், அவளின் முகம் பார்க்கவும் எதுவும் சொல்லாமல் “வா” என்று அழைத்து வந்திருந்தான்.

அவன் தோசை சுட, அங்கிருந்த சமையல் மேடையில் அமர்ந்து சுட, சுட, சூடாக உள்ளே தள்ளிக் கொண்டிருந்தாள்..

அப்போது தான் வீடு பற்றிய பேச்சு, அந்த வீட்டினில் வர்ஷினி பார்க்காத ஒரு பகுதியும் இருந்தது. அது அவளிடம் அப்போது காட்ட மனதில்லை.

கூடவே "உனக்கு என்ன என்ன அதுல மாற்றம் வேணும்" என கேட்டுக் கொண்டு இருந்தான். "தெரியலை, தேவைன்னா சொல்றேன்" என முடித்துக் கொண்டாள். அவள் கவனம் முழுவதும் உணவு உண்ணுவதில் மட்டுமே!

அவள் தள்ளிய தோசைகளை எண்ணிக்கை வைத்திருந்தவன் "போதுமா வர்ஷி?" என,

"இல்லை பசிக்குது?" என்றாள்.

"போதும்! கொஞ்சம் நேரம் கழிச்சு சாப்பிடுவியாம்!" என அடுப்பை அணைக்க,

"உங்களுக்கு" என்று அப்போது தான் கேட்டாள். "நீ சாப்பிட்டு முடி, நான் டிரஸ் மாத்திட்டு வந்துடறேன்!" என போக, "ம்ம், சரி!" என்று சாப்பிடுவதில் கவனமாக.. அவளையே யோசனையோடு பார்த்து சென்றான்.

ஆம்! அதிகமாக உண்டாள். அங்கே ஊரில் அவளாக ஏதாவது செய்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள், இல்லை பேயிங் கெஸ்டாக இருந்த வீட்டில் அவ்வப் போது. அதுவுமில்லாமல் உடல் குறைப்பு, தனிமை, அவளை உணவிடம் இருந்து தள்ளி நிறுத்தியிருக்க, இப்போது கட்டவிழ்ந்து உணவை தள்ளிக் கொண்டிருந்தாள் என்பது உண்மை!

“இப்படி சாப்பிட்டு, எப்படி இவ்வளவு ஒல்லியா மாறினா?” என்று யோசித்தபடி உடை மாற்றி வந்தவன், அப்போதும் அவள் சமையல் அறை மேடையில் அமர்ந்திருப்பதைப் பார்த்து,

“இப்படி சாப்பிட்டு கை கழுவாம இருக்கக் கூடாது” என..

தோசை இல்லாததததால் சாம்பாரையும், சட்னியையும் ஊற்றி உண்டு கொண்டிருந்தாள். அது ஈஸ்வருக்கு தெரியவில்லை. அது கைகளில் சற்று வழிந்திருக்க,

“ரெண்டு கைலயும் பண்ணிட்டேன், வயிறு வேற ஃபுல்லா இருக்கு, கை ஊணி குதிச்சு இறங்க பயமா இருக்கு, ஒரு பவல்ல தண்ணி குடுங்க, கை கழுவி இறங்கறேன்” என,

அவளை ஒரு பார்வை பார்த்தவன், “பவல்ல தண்ணி எல்லாம் தர மாட்டேன், வேணா தூக்கி இறக்கி விடறேன்” என்றான்.

“அதெல்லாம் ஒன்னும் வேண்டாம், பவல்ல தான் தண்ணி வேணும்” என்றாள் பிடிவாதக் குரலில்.

“அதெல்லாம் ஒன்னும் வேண்டாம்” என்று அவளைப் போல பிடிவாதக் குரலில் சொல்லியவன், அருகில் வந்து எப்படி அவளைத் தூக்குவது எனப் பார்த்து நின்றான்.

பின்னே சமணமிட்டு அமர்ந்திருந்தாள், “சும்மா, சும்மா என்னை தொடக் கூடாது” என கை நீட்டிப் பேச,

“சும்மா எங்கே தொடறேன், உன்னை இறக்கி விடத் தான் தொடறேன்” என உட்கார்ந்து இருந்தவளை அப்படியே இரு முழங்கால்

முட்டியிலும் கை கொடுத்து அவள் சமணமிட்டு அமர்ந்த வாக்கிலேயே தூக்க,

“அம்மா” என கத்தி, “கீழ விழுந்துடப் போறேன்” என ஆட,

“விழ மாட்ட” என்று அவன் சொல்லச் சொல்ல, அவள் உணவுண்ட கையினில் அவனின் இரு தோள்களையும் பிடித்துக் கொண்டு அவன் மேலேயே சரிந்து நிமிர்ந்தாள்.

“ஒழுங்கா இறக்கி விட்டிருப்பேன், இப்போ நீ...” எனச் சொல்லி அவளை இறுக்கி பிடித்து, “என்னை கொல்றடி” என்றான். பின்னே அவன் நிற்க, கால்களை இரு புறமும் அவன் இடுப்பினில் போட்டு, அவன் மேல் குழந்தையாய் அமர்ந்திருந்தாள்.

அவனுக்கு அவள் அப்போது குழந்தையும் இல்லை, குமரியும் இல்லை, கொல்லும் ராட்சசியாய் தான் தெரிந்தாள்.

“இறக்கி விடுடா இடியட்” என அவன் எதோ தவறு செய்தவன் போல முகத்தை வைத்துச் சொல்லவும்,

அது ஈஸ்வருக்கு கடுப்பை கிளப்ப, “நீ இறங்கிக்கோ, என்னை ஏன் திட்டுற.. ஓவரா பேசற நீ. என் மேல் நீ உட்கார்ந்துட்டு என்னை சொல்ற?” என,

“இரு, உன் மேலேயே கை துடைக்கிறேன்” என அவனின் தோளில் தடவ, அங்கே பனியன் இருக்கக் கண்டவள், அவனின் வெற்று புஜங்களில் துடைக்க..

“ரொம்பப் பண்ணாத, இப்படியே பாத்ரூம் தூக்கிட்டுப் போயிடுவேன், நீ தான் என்னை

குளிக்க வைக்கணும்”

இப்படியாக அவளும் இறங்கவில்லை, அவனும் இறக்கிவிடவில்லை, நிமிடமாக சண்டையிட்டனர் ..

அந்த நிமிடங்களை முழுமையாக அனுபவித்தான். பின் அவளின் முகத்தை, கண்களைப் பார்த்தவன் “பேபி, நாம இப்படியே இருந்துடலாமா?” என,

“எப்படி? இப்படி கட்டிப் பிடிச்சிக்கிட்டா?” என்றவளின் குரலில் என்ன இருந்தது எனப் புரியாத போதும், ஒரு முறுவல் முகத்தினில் மலர,

“இன்னுமே என்னால உன்னைப் புரிஞ்சிக்க முடியலை, இந்த ஜென்மம் போதாதுன்னு நினைக்கிறேன், ஆனா அதுக்காக நம்ம பிரிய வேண்டாம்” என்றான் ஆழ்ந்த குரலில்.

எதுவும் சொல்லாமல் ஈஸ்வரைப் பார்க்க, அவளை பிடித்த வாக்கிலேயே சமையல் அறையிலிருந்து ஹாலிற்கு வந்தவன், அப்படியே சோபாவில் அமர அவன் மேல் வர்ஷினி..

மிகவும் அபாயகரமான உணர்வுகளை தூண்டக் கூடிய ஒரு நிலை.. ஆனால் அப்படி இல்லை அவர்கள் இருவருக்குமே. அதையும் மீறிய எதிர்பார்ப்புகள் இருவருக்கு இடையிலும்..

“எனக்கு உன்னைப் பத்தி எதுவுமே தெரியலை போல, உன்னை புரிஞ்சிக்க முயற்சி பண்ணினாலும் புரியலை. எல்லாம் திரும்பத் திரும்ப தப்பாகுது. எனக்கு உன்னை விட்டு இனிமே இருக்கவும் முடியாது, இதுல உன்னை எப்படி என்னால இழக்க முடியும், ப்ளீஸ் இந்த டைவர்ஸ் எல்லாம் வேண்டாம்” என,

எப்போதும் வர்ஷினியின் கண்களைப் பார்க்கும் ஈஸ்வரின் கண்களை ஊன்றிப் பார்த்தாள் வர்ஷினி. அந்த கண்களில் உண்மை மட்டுமே!

“ஆனா நீ என்னை ஏமாத்திட்ட, என்னால அதை மன்னிக்க முடிஞ்சாலும், மறக்க முடியலை” என சொல்லும் போதே கண்களில் கண்ணீர், குரலில் கலக்கம்..

“நீ இன்னொரு பொண்ணை லவ் பண்ணியிருக்க, என்னால அதை அக்சப்ட் பண்ணவே முடியலை. அதையும் விட நீ அந்தப் பொண்ணையும் ஏமாத்தி இருக்க. என்னால அதை இன்னும் தாங்க முடியலை. என்னை உனக்கு பிடிக்காம இருந்தாக் கூட, கூட வாழ்வேன். ஆனா இப்படி ஒரு பொண்ணை ஏமாத்தினவனை என்னால ஏத்துக்கவே முடியாது. இது இல்லாம எவ்வளவோ பிரச்சனை இருக்கு, என்னை நீ என்ன என்னவோ பண்ணியிருக்க, ஆனா எல்லாத்தையும் விட இது அதிகம்!”

“கண்டிப்பா நீ சொல்றது உண்மை தான். ஆனா ஒன்னு தப்பு, கண்டிப்பா நான் அவளை லவ் பண்ணலை, ஆனா கண்டிப்பா ஏமாத்தி இருக்கேன்” என ஈஸ்வர் சொல்ல,

அந்த வார்த்தைகளை கேட்டதும், ஒரு கோபம், ஒரு ஆவேசம், ஒரு மூர்கத்தனம் கிளம்ப, “நீ... நீ... உண்மை ஒத்துக்கிட்டா நீ செஞ்சது இல்லைன்னு ஆகிடுமா” என்றவள் ஆத்திரமாக அவனின் தலை முடியைப் பற்றி இழுக்க..

அப்படி ஒரு வலி, ஆனாலும் அசையாமல் அதைத் தாங்கி அமர்ந்திருக்க, அதனை பார்த்ததும், ஒரு வெறியே வர்ஷினியினுள் வர..

அப்படியே அவனின் தோளில் கடிக்க ஆரம்பித்தாள். ஒரு கட்டுப் பாடற்ற தன்மை, விலக்கியிருந்தால், விலகியிருப்பாளோ என்னவோ.

ஈஸ்வர் அசையவேயில்லை, அத்தனை வலிகளையும் தாங்கி அமர்ந்திருக்க, அவளின் பல் பதிந்து, ரத்தம்.. அதனை வர்ஷினி உணரவே சிறிது நேரம் பிடித்தது. செய்யும் செயல் புரிந்து விலகி அவனின் முகம் பார்க்க,

ஈஸ்வரின் கண்களில் கண்ணீர், தலையிலும் தோளிலும் அப்படி ஒரு வலி!

அதனை பார்த்தவளுக்கு என்ன செய்ய என்றே புரியவில்லை, தன செயலில் தானே அதிர்ந்து அருவருத்துப் போனாள். தன் பற்களில் இருந்த ரத்தத்தை விரல்களில் தொட்டுப் பார்த்தவள், "பார்த்தியா நீ என்னை பைத்தியமாக்கிட்ட" என கலங்கிச் சொல்லி எழ முற்பட,

அவளை எழ விடாமல் ஈஸ்வர் அப்படியே அணைத்துக் கொண்டான்.

அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு.. சத்தம் வராமல் வாய் பொத்தி அவனின் மேலயே கதற.. அவளை இறுக்கி பிடித்துக் கொண்டான்.

சிறிது நேரத்தில கை எடுத்து விட்டு அவனை இறுக்க அணைத்துக் சத்தம் போட்டு அழவும்..

"ப்ளீஸ் வர்ஷி, அழாத!"

"இல்லை, இல்லை, நான் ரொம்ப ரொம்ப பேட் ஆகிட்டேன், எனக்கு என்னைப் பிடிக்கலை! நீ ஏன் இப்படி எல்லாம் பண்ணிட்ட, இதையெல்லாம் எனக்கு மறக்க முடியலை, நீ ஏன் இப்படி

பண்ணிட்ட" என சொல்லிச் சொல்லி அழவும், அவள் முகம் நிமிர்த்த முற்பட நிமிர்த்தவே இல்லை..

"எனக்கு உன்கிட்ட வரவும் பிடிக்கலை, தனியா இருக்கவும் முடியலை, வாழவும் பிடிக்கலை, சாகவும் பிடிக்கலை, பைத்தியமாகிடுவனோன்னு பயமா இருக்கு! திரும்ப அந்த மாத்திரை போடவும் சில சமயம் தோணுது! ரொம்ப டிஸ்டர்ப் டா இருக்கேன் அதை யாருக்கும் தெரியவிடக் கூடாதுன்னு எப்பவும் டென்ஷன். எனக்கு என்னோட வாழ்க்கை எப்படி இருக்குமோன்னு பயமா இருக்கு! யாரையுமே எனக்குப் பிடிக்கலை! உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கலை, ஆனா உன்கூட மட்டும் தான் இருக்கத் தோணுது! அப்பா இன்னும் கொஞ்சம் நாள் இருந்திருக்கலாம். நான் அவரை ரொம்ப மிஸ் பண்றேன்" அவள் அழுகையோடு பேசப் பேச..

அவனால் சமாதானம் சொல்ல முடியவில்லை, சொல்லவும் தெரியவில்லை. அணைப்பை மட்டும் இன்னும் இன்னும் உன்னை விட மாட்டேன், நான் இருக்கிறேன் என்பதாக இறுக்கிக் கொண்டான்.

வெகு நேரம் அழுது, அது தேம்பலாக மாறி, ஓய்ந்து, அவனின் மேல் உறங்க ஆரம்பிக்க .. அதை உணர்ந்தவன் மேலும் அரை மணிநேரம் அப்படியே அமர்ந்து அவளின் உறக்கம் கலையாமல் அப்படியே எழுந்து தூக்கிப் போய் படுக்கையில் விட..

உறக்கம் கலையவில்லை. அவளின் கைகளில் அவனின் தலையில் இருந்து பிய்ந்த முடிகள், அதை மெதுவாக எடுக்க ஆரம்பித்தான். தலையில் வலி இருக்க, அதையும் விட, தோளில் எரிந்தது..

தலையை திருப்பி அதனை பார்த்தான் பனியன் இருக்க ஒன்றும் தெரியவில்லை, அதனை கழட்ட கை தூக்க, அப்படி ஒரு வலி! கழற்றிப் பார்க்க அங்கே பல் பதிந்து சிறு குழியாகி அதில் இருந்து ரத்தம் வந்திருந்தது..

வலி மாத்திரை என்று எதுவும் வீட்டினில் இல்லை, அதுவும் களிம்பு கூட இல்லை. நேரம் மிக அதிகமாகியிருக்க, ஒரு சோர்வு! அப்படியே அவளின் அருகினில் படுத்து விட்டான். அப்படி ஒரு பசி, இருந்தாலும் உணவு உண்ணப் பிடிக்கவில்லை. உறக்கமும் அணுகவில்லை வலியில்! ஆம்! மனதிலும் வலி, உடலிலும் வலி!

எப்படி அவளை சமாளிக்க என்று புரியவில்லை, வர்ஷினி போல அவனால் வாய் மூடியும் அழ முடியவில்லை, வாய் விட்டும் அழ முடியவில்லை, வர்ஷினியை பார்க்கப் பார்க்க பயமாக இருந்தது!

எப்படி அவளுக்கு ஒரு நிம்மதியையும், சந்தோஷத்தையும் கொடுப்பது என்று தெரியவில்லை.

மனதில் பாரமாக அழுத்த.. மீண்டும் கடவுளிடம் ஒரு பிரார்த்தனை, “இவள் இருக்கும் வரை நான் இந்த உலகில் இருக்க வேண்டும். இவளை தனியே விட முடியாது” என,

படுத்திருக்கும் அவளை இறுக்கி அணைத்துக் கொள்ள ஒரு உந்துதல்.. ஆனாலும் பார்த்தபடியே படுத்திருந்தான்.. அந்த முகம் அதில் தெரிந்த சோர்வு.. முதல் நாள் அவளை பார்த்த ஞாபகம் வந்தது முரளியின் திருமணத்தில், ஆறு வித்தியாசங்கள் இல்லை, முகமே மாறிவிட்டது போல தான்!

மெதுவாக அவளின் புருவங்களை நீவி, அந்தக் கண்களை துடைத்தான். ஆம்! கண்ணீர் கரைகள் இருந்தது.. பின்பு எவ்வளவு நேரம் பார்த்து இருந்தானோ அவனை அறியாமல் உறங்கிவிட.. சிறிது நேரத்திலயே மீண்டும் உறக்கம் கலைந்தது.. அவனை இறுக்கி அவன் தோள் மேல் தலை வைத்து வர்ஷினி உறங்கிக் கொண்டிருக்க, அது தூக்கத்தினில் செய்த செயல் எனப் புரிந்தது. ஆனாலும் அவனை எழுப்பியது வலி, அவள் கடித்த தோளின் புஜங்களில் தான் தலை இருந்தது.

வர்ஷினியை விலக்க வலி சொன்னாலும், மனமும் செய்யவில்லை, அறிவும் செய்யவில்லை.. அப்படியே வலி தாங்கி இருக்க, சிறிது நேரத்தில் இன்னும் வாகாக தலை நகர்த்தி அவன் நெஞ்சில் வைத்து படுத்துக் கொள்ள, வலி குறைந்தது. பின்பு மீண்டும் உறங்க ஆரம்பித்தான்.

காலையில் திரும்ப விழிப்பு வந்ததும் வலியினால் தான். ஆம்! பிஞ்சு விரல்கள் அந்தக் காயத்தை தடவிக் கொடுக்க அது வலி கொடுக்க, கண்களைத் திறந்தான்.. அவன் விழித்தது தெரியாமல் அந்தக் காயத்தை தடவி கொண்டிருந்தவளின் முகத்தினில் அவ்வளவு கலக்கம், கண்களிலும் நீர் நிறைய ஆரம்பித்தது!

“ஒண்ணுமில்லை, சரியாகிடும்!” என்றவனின் வாய் மொழி அவனின் முகம் பார்க்க வைக்க, ஈஸ்வரின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். ஆம், தோள் தடவிய போது சூட்டினை உணர்ந்தவள், இப்போது நெற்றிப் பார்க்க.. சூடாக இருந்தது.

“ஃபீவரா இருக்கு” என,

“சரியாகிடும்” என்றவனிடம், “சாரி, நான் வேணும்னு எல்லாம் செய்யலை, தானா வந்துடுச்சு,

ரியல்லி வெரி சாரி! நான் ரொம்ப பண்றேன், எனக்குப் புரியுது, நான்.. நான்.. திரும்ப ஊருக்குப் போயிடட்டுமா?” என கலக்கமாகக் கேட்க..

சற்றும் யோசிக்காமல் “போயிடு, போயிடு” என்றான் கடினமாக..

நேற்றை செயலின் தாக்கம் போல என நினைத்து, அவளின் நீல நிற விழிகளில் தோன்றிய நீயா சொல்கிறாய் என்ற பாவத்தை பார்த்துக் கொண்டவன், “என்னைக் கொன்னுட்டு போய்டு!” என,

அந்தக் கண்களில் ஒரு ஆசுவாசம், கூடவே, “ரொம்ப முடியலைன்னா கொன்னுட்டு போயிடறேன்” என முறுக்கிச் சொல்ல,

“அப்புறம் நீ தனியா என்ன பண்ணுவ?” என்றான் ஒரு மயக்கும் முறுவலோடு..

“எஸ்” என்றவளின் முகத்தில் சோர்வையும் மீறி ஒரு புன்னகை கீற்று, “அதுதான், அது யோசிச்சு தான், அது பிடிக்காம தான் வந்துட்டேன். நீ என்ன நினைச்ச, நீ என்னை கார்னர் பண்ணினதால வந்துட்டேன்னா” என்று சொல்லும் போதே காலின் பெல் சத்தம் விடாமல் கேட்க,

இருவர் முகத்தினிலுமே புன்னகை..

ஈஸ்வர் மெதுவாக எழ முற்பட, “நான் பார்க்கிறேன்” என்று அவள் செல்ல முற்பட,

“நான் எப்பவும் உன்னை மட்டும் தான் நினைக்கிறேன் பேபி, நீ என்ன நினைக்கறேன்னு நினைச்சதில்லை” என சொல்லி சோர்வில் கண்களை மூடிக் கொண்டான்.

வந்தது சமையல் அம்மா.. “காபி போடுங்க, போட்டுட்டு என்னைக் கூப்பிடுங்க” என்று

திரும்பவும் ரூமின் உள் வந்தவள், திரும்பவும் அவனின் கழுத்தை தொட்டுப் பார்த்தாள். மிகவும் சூடாக இருக்க..

“ரஞ்சனி அண்ணிக்கு ஃபோன் பண்ணட்டுமா?” என்றாள்.

“வேண்டாம், வேண்டாம்” என்றான் அவசரமாக.

“ஏன்? ஜுரம் அடிக்குது கூப்பிடலாம்!” என,

“டேப்ளட் போடலாம், அப்புறம் சரியாகலைன்னா பார்த்துக்கலாம்!”

சற்று தயங்கியவள் “நான் உங்களை கடிச்சிட்டேன், சாரி” என,

முகத்தில் ஒரு முறுவல் மலர, “எப்படி இருந்தது என்னோட ப்ளட் டேஸ்ட்” என்றான்.

“சரியாத் தெரியலை, இன்னொரு தரம் கடிச்சிப் பார்த்து சொல்றேன்” என, முறுவல் பெரிதான போதும், ஒரு சோர்வு அவனுள் தெரிய..

வர்ஷினி ஈஸ்வரை காலில் தட்டி கீழே விழ வைத்து, மண்டையில் அடிபட்டு ரத்தம் வந்த நாளில் பார்த்த சோர்வு அவனின் முகத்தினில்.

“நீங்க ஏன் என்னை தள்ளி விடலை” என,

“தெரியலை, உன்கிட்ட நான் நடந்துக்குற எந்த விதத்துக்கும், என்கிட்டே பதில் கிடையாது!” என்றான் ஆழ்ந்த குரலில் அவளின் கண்களைப் பார்த்து. அந்த நீல நிறக் கண்களில் மூழ்கும் அவா கிளர்ந்து எழுந்தது.

அப்போது கதவை தட்டும் சத்தம் கேட்க, காஃபியுடன் அந்த அம்மா நின்றிருந்தார்.. வாங்கிக் கொண்டவள்.. “இட்லி, சாம்பார் மட்டும் செஞ்சிடுங்க” எனச் சொல்லி உள்ளே வந்து அந்த ட்ரேயை வைத்தவள்.

பாத்ரூம் சென்று மக் கொண்டு வந்து தண்ணீர் கொடுத்து வாய் கொப்பளிக்க சொல்ல, நேற்று அவளின் செயலிற்கும் இன்று செய்வதற்கும் துளி கூடச் சம்மந்தமில்லை.

அவளையேப் பார்த்திருக்க, ஈஸ்வரின் எண்ணம் புரிந்தவளாக, “நேத்து நான் அந்நியன், இன்னைக்கு அம்பியா மாறிட்டேன்” என்று நடிகர் விக்ரமின் சினிமா கதாபாத்திரம் சொல்ல,

“எனக்கு ரெமோ தான் வேணும் பேபி” என ஈஸ்வர் பதில் சொல்ல..

வர்ஷினிக்கு சிரிப்பு வந்துவிட.. வாய் விட்டு சிரித்தாள். சிரிக்கும் அவளை காதலாகப் பார்த்திருந்தான்.

“உனக்கு கோபம் வந்தா, இந்த மாதிரி என்னைக் கடி, அடி, ஏதாவது செய்! ஆனா போகணும் நினைக்காதே!”

“ரொம்ப எக்ஸ்ட்ரீமா நடந்துக்கறேன், எனக்கேத் தெரியுது. நேத்து நான் செஞ்சது எதோ சைக்கோ மாதிரி ஃபீல் பண்றேன், இப்படியே கண்டினியூ ஆனா உங்களுக்கு என்னைப் பிடிக்காம கூடப் போயிடலாம், என்னவோ ஒரு அப்சஷன் நீங்க இப்படிப் பேசறீங்க! எப்போ வேணா இது மாறலாம்”

“மாறாது மாறவே மாறாது! இன்னுமா வர்ஷ் என்னோடது உனக்கு அப்சஷன் மாதிரி தோணுது! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!” என ஸ்திரமாகப் பேச,

“வேண்டாம்! வேண்டாம்! நாம இதைப் பேசவே வேண்டாம்!” என்று வர்ஷினி அவசரமாக சொல்லவும்,

“சரி, பேச வேண்டாம்!” என்று கண்களை மூடிக் கொண்டான்.

“காஃபி குடிங்க” என்று சொல்ல,

அவள் சொல்வது போல செய்து, வாய் கொப்பளித்து காஃபி அருந்தி அப்படியே படுத்துக் கொள்ள, அவனின் அருகிலேயே அமர்ந்து இருந்தாள் சிறிது நேரம்.. திரும்ப குளித்து வெளியில் வர, ஈஸ்வரிடம் இருந்து மெல்லிய முனகல் சத்தம்.. ஆம்! ஜுரம் மிகவும் அதிகமாக இருந்தது.

கடித்து விட்ட செயலை யோசித்து இருந்தவளுக்கு, கடித்தால் உண்டாகும் பிரச்சனை யோசனைக்கு வரவில்லை!

அவனின் அருகில் வந்து தொட்டுப் பார்க்க, கொதித்து..

யாருக்கு அழைப்பது என்று தெரியவில்லை, மலருக்கு அழைக்க அலைபேசி எடுக்க.. அவளின் தொடுதலில் விழித்தவன் அவள் அலைபேசியை வைத்திருப்பதை பார்த்து,

“யாருக்கு” எனக் கேட்டான்.

“மலர் அத்தைக்கு” எனச் சொல்லவும்,

“வேண்டாம்” என்பது போலத் தலையசைத்தான்.. வீட்டுக்குக்கு தெரிய வேண்டாம்.. ஒரு பத்து மணி போல ஹாஸ்பிடல் போகலாம், யாருக்கும் சொல்லாதே!” என சொல்லி கண்களை மூடிக் கொண்டான். வர்ஷினி கடித்த விஷயம் யாருக்கும் தெரிய வருவதில் அவனுக்கு விருப்பமில்லை!

நேரம் ஆக ஆக ஒரு பதட்டம், ஒரு பயம் தோன்ற அஸ்வினை அழைத்தாள்.. எடுத்தவனிடம் “உடனே

வீட்டுக்கு வாங்க” என,

அவளின் குரலில் இருந்த பதட்டத்தில் உடனே கிளம்பி வந்தான், ஆனாலும் அரை மணிநேரம் ஆக..

“அவருக்கு ரொம்ப பீவர், ஹாஸ்பிடல் போகணும்! எனக்கு இங்கே ரொம்ப நாள் ஆகிடுச்சு, இருங்க கூட்டிட்டு வரேன்!” என,

“ஏன், ரஞ்சனி வரச் சொல்லலாம் தானே!”

“ப்ச், யாருக்கும் சொல்ல வேண்டாம்னு சொல்லிட்டார்!” என்று அவனை அழைக்க உள்ளே சென்றாள்.

“ஏன் சொல்லக் கூடாது” என சில நொடிகள் குழம்பி நின்றவனுக்கு தோன்றியது “என்ன செய்து வைத்திருக்கிறாளோ வர்ஷினி” என.

உள்ளிருந்தே “தாஸ் அண்ணாவை கார் எடுக்க சொல்லுங்க” எனச் சத்தமாக சொல்ல,

அந்த சத்தத்தில் விழித்தவன் “யார் கிட்டப் பேசற வர்ஷ்” என,

“அஸ்வின்” என்றவளிடம், “அவன் எதுக்கு வந்தான்” என,

எதிரில் நின்று அவன் எழ கை கொடுக்க, எழுந்து கொண்டவனிடம் “உங்களுக்கு ரொம்ப ஃபீவரா இருக்கு, எனக்கு பயமா இருக்கு, வீட்ல யாரையும் கூப்பிட வேண்டாம் சொல்லிட்டீங்க, அதுதான் அஸ்வின் கூப்பிட்டேன்” என,

“அவன் எதுக்கு நாம ஹாஸ்பிடல் போக”

“என்னவோ பயமா இருக்கு, எனக்கு இங்க இப்போ தெரியாது இல்லையா”

“எனக்குத் தெரியும், அவன் வேண்டாம், நாம போவோம்!” என்றபடி முகம் அலம்பி வந்தவன்.. ஒரு டி ஷர்ட் எடுத்து மாட்டிக் கொண்டு வர.. அவன் பின்னே வந்தாள்.

“நாங்க போயிட்டு வர்றோம், நீ வேண்டாம் அஸ்வின்!” என்று விட,

“ரொம்ப பயப்படறாங்க, நான் வர்றேனே” என்றவனிடம், “வேண்டாம்” என்று மறுத்து கிளம்பினார்கள்.

தெரிந்த ஹாஸ்பிடல் எதுவும் போக முடியாத நிலை, ஈஸ்வருக்கு கடித்த இடத்தினில் வலி தெரிந்தது. அதனால் தெரியாத இடத்திற்கு போனால் அதனைக் காட்டி சொல்ல முடியும் என்று நினைத்தவனாக, பக்கத்தில் புதிதாக கட்டப்பட்டு இருந்த பெரிய மருத்துவமனை ஒன்று இருக்க அங்கே சென்றான்.

அவனுக்கு தெரியாது அங்கு புதிதாக ஐஸ்வர்யா சேர்ந்திருக்கிறாள் என்று.

ஒரு டெலிவரி என்று அதிகாலையிலேயே வந்திருந்தவள், வீடு சென்று குளித்து வரலாம் என வெளியே வர இருக்கும் சமயம், ஈஸ்வர் வர்ஷினியுடன் வர, பார்த்தது பார்ததபடி நின்றாள். இந்தப் பெண் அமெரிக்காவில் இருப்பதாக அஸ்வின் சொன்னானே!

பார்த்தவுடனே ஈஸ்வருக்கு தான் உடல் நிலை சரியில்லை என்று தோன்றியது. அவன் ஒரு ஷார்ட்ஸ், டி ஷர்டில் இருந்தான். அவனின் வேக நடை மிஸ்ஸிங்..

அங்கே இருக்கும் எம் டீ டாக்டர் யார் இருக்கிறார் எப்போது வருவார் என்று ரிசப்ஷனில்

கேட்டுக் கொண்டிருந்தான்.

அருகில் செல்லலாமா வேண்டாமா என்று பட்டி மன்றம் நடத்தி ஐஸ்வர்யா தயங்கி நின்று கொண்டிருந்தாள். கண்கள் இருவரையும் ஆராயும் பார்வை பார்த்தது. “இந்தப் பொண்ணு அவ்வளவு குண்டா இருக்கும், ஒல்லியா ஆகிடிச்சு, ஆனாலும் இவனுக்கு மேட்சிங் கம்மி தான்” என நினைத்துப் பார்த்திருந்தாள்.

எத்தனை முறை அந்தப் பேதைப் பெண் அதனை நினைப்பாள்? உண்மையில் ஈஸ்வரை கடந்து வந்து விட்டாள். பெரிதாக அவனின் நினைவுகள், தாக்கங்கள், எதிர்பார்ப்புகள் என்று எதுவும் இல்லை!

ஆனாலும் “நீ நல்லா இருடா” என்று வாழ்த்தும் அளவிற்கு மனப் பக்குவம் வரவில்லை. வரன் வரும் போது அவனோடு ஒப்பிட்டு பார்த்து அவனையும் விட சிறந்ததாக ஒன்றை தேடியது! பார்த்துக் கொண்டே இருந்தாள்.

“இன்னும் அரைமணி நேரம் ஆகுமாம் வர்ஷ்” என்று அவளிடம் ஈஸ்வர் சொல்ல, “இன்னும் அரைமணி நேரமா” என்று அவனின் கையை காய்ச்சலுக்கு தொட்டுப் பார்க்க,

வர்ஷினியின் முகத்தினில் தெரிந்த கவலை, பரிதவிப்பு, “ஈஸ்வரை இந்தப் பெண் மிகவும் விரும்புகிறாள் போல” என்று தான் ஐஸ்வர்யாவிற்கு தோன்றியது. “ஆனா ஏன் ஹாஸ்டல் போனா? விட்டுட்டுப் போனா? இப்போ டைவர்ஸ் நோட்டிஸ் அனுப்பியிருக்கான்னு ரூபாக்கா சொன்னா? ஏன் இவளையும் இவன் ஏமாத்திட்டானா?” என ஈஸ்வரை பார்த்திருந்தாள்.

**அஸ்தமனமெல்லாம் நிரந்தரமல்ல.. மேற்கில் விதைத்தால் கிழக்கினில் முளைக்கும்!**

**அத்தியாயம் எழுபத்தி ஏழு :**

பூவுக்குள் பூகம்பம்... எங்கு வரும் ஆனந்தம்.. நிழலாக நீ வந்தால்... இது போதும் பேரின்பம்..

“டாக்டர் பார்க்கணும்” என்றவனிடம்,

“உட்காருங்க” என்று முன்னே இருந்த சிஸ்டர் பேர் குறித்துக் கொண்டவர்,
“அப்பாயின்ட்மென்ட்ஸ் இருக்கு அது பார்த்து தான் அனுப்ப முடியும்” என,

“ரொம்ப நேரம் ஆகுமா?” என்றாள் வர்ஷினி கவலையாக,

“கொஞ்சம் நேரம் ஆகும்” என்று அந்த சிஸ்டர் சொல்லிப் போக, இருவரும் அமர்ந்தார்கள்.

அவர்களை பார்த்திருந்த ஐஸ்வர்யா, அந்த சிஸ்டரை வரச் சொல்லி “என்னவாம் அவங்களுக்கு?” என,

“தெரியலை மேடம், அப்பாயின்ட்மென்ட் கேட்டாங்க, டைம் ஆகும் சொன்னேன்!”

“யார்ன்னு ஏதாவது சொன்னாங்களா, கார்ட் ஏதாவது குடுத்தாங்களா?” என,

“அதெல்லாம் இல்லை மேடம்!”

“சரி, டாக்டர் வந்ததும் முதல்ல அவங்களை அனுப்புங்க. நான் சொன்னேன்னு சொல்லுங்க. என்னோட ரிலேடிவ் அவங்க, ஆனா நான் சொன்னேன்னு பேஷன்ட்க்கு தெரியக் கூடாது. அதையும் டாக்டர் கிட்ட சொல்லுங்க” என நீளமாகப் பேச,

“மேடம்” என்று இழுத்த அந்த சிஸ்டர், “நீங்களே ஒரு வார்த்தை சொல்லிடுங்களேன், டாக்டர் எந்த நேரம் எப்படிப் பேசுவார் தெரியாது” என இழுக்க,

“இது வேறையா” என நொந்து கொண்டே, “சரி, நான் பேசிக்கறேன்” என்றவள், “சர், என்னோட ரிலேடிவ்ஸ் அவங்க, ஆனா நான் இங்கே இருக்குறது அவங்களுக்கு தெரிய வேண்டாம்” என பவ்யமாகக் கேட்க,

மிகவும் கோபமாக வந்த போதும் “சரி” என்ற ஒப்புதலுடன் விதார்த் அலைபேசியை வைத்து விட்டான். ஆம்! ஐஸ்வர்யா அவனிடம் இப்போதெல்லாம் பேசுவதே இல்லை. “இப்போ மட்டும் எதுக்குக் கூப்பிடறா? யாரு அந்த அவ்வளவு முக்கியமான ரிலேடிவ்ஸ்?” என்று கடுப்பாக வந்தது.

அவன் ரௌண்ட்ஸ் முடித்து கன்சல்டிங் ரூம் சென்றதும்  அவர்கள் அழைக்கப் பட, “கூப்பிட லேட் ஆகும்னு சொன்னீங்க, அப்புறம் எப்படி உடனே கூப்பிட்டாங்க” என்று அந்த சிஸ்டரிடம் ஈஸ்வர் கேட்க, “தெரியலை” என்றார் அவர் தயங்கி.

அவனுக்கு யோசனை.. “தெரிந்தவர் யாராவது இருப்பார்களா” என, யாரும் தெரிந்தவர் இருந்து விடக் கூடாது என்று தான் இந்த புது ஹாஸ்பிடல் வந்தான். ஐஸ்வர்யா இருப்பாள் எனக் கனவிலும் அவன் நினைக்கவில்லை. ஐஸ்வர்யா என்ற பெண் அவனின் எண்ணத்தில் எங்கும் இல்லை.

யோசனையோடே தான் உள்ளே சென்றான், “உட்காருங்க” என்ற விதார்த், “சொல்லுங்க” என்றதும் விதார்த்தை பார்வையால் அளந்து கொண்டே பேச ஆரம்பித்தான் ஈஸ்வர். தன்னுடைய வயதை ஒத்த தோற்றம் தான்

அவனுக்கு எனப் புரிந்தது, சராசரி உயரத்தில் மரியாதையான தோற்றத்தில், இறுகிய முகத்துடன் இருந்த்தான்.

"காலையில இருந்து ஃபீவர், ரொம்ப அதிகமா இருக்கு" என,

"ரொம்ப, ரொம்ப அதிகமா இருக்கு, கண் மூடிட்டு முனகுறாங்க" என்று வர்ஷினியும் சொல்ல,

"காய்ச்சல்" என்பது சாதாரண விஷயம் தானே, அவளையும் ஒரு பார்வை பார்த்து, "மார்னிங் இருந்து தானே இருக்கு" என விதார்த் உறுதி படுத்த, "ஆம்" என ஈஸ்வர் தலையாட்ட,

"வேற இருமல், சளி, உடம்பு வலி, இப்படி ஏதாவது இருக்கா" எனக் கேட்டான்.

"இல்லை" என்று சொன்ன ஈஸ்வரிடம் ஒரு தயக்கம், பின்பு "இங்க ஒரு காயம்" என்று தோளைக் காட்டியவன், "அதுல வலி இருக்கு" என,

வர்ஷினி ஈஸ்வரையே பார்த்திருந்தாள், மனதிலும் ஒரு குற்ற உணர்ச்சி!

"என்ன காயம் காட்டுங்க?"

தன்னுடைய டீ ஷர்ட் கழற்றி, ஈஸ்வர் காட்டவும், "என்ன காயம், எதோ கடிச்ச மாதிரி இருக்கு? என்ன இது? என சற்று அதிர்ந்து விதார்த் கேட்க,

ஈஸ்வர் என்ன சொல்லி சமாளிப்பது என்று யோசிக்கும் போதே, "நான், நான் தான் கடிச்சிட்டேன்" என்று வர்ஷினி சொல்லி விட,

"என்னது?" என்று விரும்பத் தகாத ஒரு பாவனையுடன் விதார்த்தும், "வர்ஷ்" என்ற ஈஸ்வரின் அதட்டலும், ஒருங்கே தான் கேட்டது.

அதுவரையிலும் சற்று அலட்சியமாகத் தான் ஈஸ்வரின் காயத்தை பார்த்துக் கொண்டிருந்தவன், இப்போது கவனமாக அதை ஆராய்ந்தான்.

"எப்போ நடந்தது", "நேத்து நைட்" என ஈஸ்வர் சொல்ல,

"மே பீ காய்ச்சல் இதனால கூட இருக்கலாம். ஆனா இவ்வளவு சீக்கிரம் வரவும் வாய்ப்புகள் குறைவு" என்றவன், "ரொம்ப ஆழமா தான் பல் பதிஞ்சிருக்கும் போல, இவங்க உங்களுக்கு யாரு" என,

"என் மனைவி" என்றவனிடம்,

"அடி தடி சண்டை நடக்கும்னு கேள்விப் படறது தான், ஆனா இது கொஞ்சம் பயங்கரமா இருக்கே,, மனுஷக் கடி ரொம்ப ரொம்ப ஆபத்தானது" என்று சற்று நக்கல் கலந்து சொல்லிக் கொண்டே வர்ஷினியை பார்வையால் ஆராய்ந்தான். ஈஸ்வருக்கு அது சற்று கோபத்தை கொடுத்தது.

சிறு பெண்ணாக அந்த நீல நிற கண்களில் கலக்கத்தோடு அவள் பார்த்த விதம், இவள் இப்படி செய்திருப்பாளா என்று தான் தோன்றியது. கூடவே இவன் என்ன செய்தானோ என்று ஈஸ்வரையும் ஆராய்ந்தான். ஈஸ்வரிடமும் அவனுக்கு எந்த குறையும் தெரியவில்லை. அந்த லூசு மாதிரியே அவளோட சொந்தக்காரங்களும் லூஸ் போல என ஐஸ்வர்யாவை பற்றி நினைத்தான்.

பின்பு காயத்தை சுத்தம் செய்து, அதற்கு ஊசி மருந்து செலுத்த வாங்கி வரச் சொல்லவும், "நான் போறேன்" என்று வர்ஷினி எழ, "நாங்க வாங்கிட்டு வர்றோம் டாக்டர்" என்று கூடவே எழுந்தான் ஈஸ்வரும்,

அவர்கள் சென்றதுமே ஐஸ்வர்யாவை அழைத்தான் “எப்படி உனக்கு இவங்க ரிலேடிவ்ஸ்” என,

“ஏன் டாக்டர் கேட்கறீங்க?” என்றவளிடம்,

“சும்மா தான் சொல்லுங்க” என,

“என் அக்காவோட, வீட்டுக்காரரோட தம்பி”

“அப்போ ஏன் நீங்க வராம சொல்ல மட்டும் செஞ்சீங்க”

“எங்களுக்கும் அவங்களுக்கும் சண்டை டாக்டர்” என்றாள் எரிச்சலை அடக்கி, பின்னே ஏன் இப்படி துருவுகிறான் என நினைத்து, அதை கேட்கவும் செய்தால் “ஏன் டாக்டர் இப்படி கேட்கறீங்க”,

“சும்மா கேட்டேன்” என்று வைத்து விட்டான்.

பின்னே வேறு பேஷன்ட்களை பார்த்துக் கொண்டிருக்க,

அவர்கள் மருந்து வாங்கி வரவும்.. அதை செலுத்தியவன்.. பின்னே கையினில் , வென்ப்லான் போட்டு, அதன் மூலமாக ஆன்ட்டி பயாடிக் போட வேண்டும் என சொல்லி, “டியூட்டி டாக்டர் இருப்பாங்க, கேஷுவாளிட்டி போங்க” என,

“ரூம் போட்டுக்கலாம் டாக்டர்” என்றான் ஈஸ்வர்.

“ஒரு ரெண்டு மணி நேரம் தான், தேவையில்லை” என,

“இல்லை, இருக்கட்டும் மணி ப்ராப்ளம் இல்லை. எனக்கு ப்ரைவசி வேணும், ரொம்ப நேரம் உட்கார முடியலை”

“ஒகே உங்க இஷ்டம்”

அவர்கள் சென்று சிறிது நேரம் கழித்து வர்ஷினி மீண்டும் விதார்த்தை பார்க்க கேட்டு வந்தவள்.. “டாக்டர் நீங்க அங்க வர முடியுமான்னு கேட்டுட்டு வரச் சொன்னார்” என,

“என்னது என்னை ஒருவன் வரச் சொல்வதா? ரொம்ப திமிர் போல இவனுங்களுக்கு, எத்தனை பேர் வெயிட் பண்றாங்க, எப்படி விட்டுட்டுப் போக முடியும், உடனே விட்டவுடனே ரொம்ப பண்றாங்க” என நினைத்துக் கொண்டே, “ஏன்? என்ன ஆச்சு?” என்றான்.

“அங்க அவங்க குத்தி குத்தி எடுக்கறாங்க, அது போடவே முடியலை, ரொம்ப வலிக்குது போல” என கவலையாகச் சொல்ல,

“இந்தப் பெண் ரத்த நாளம் கிடைக்காததை சொல்கிறாள்” எனப் புரிந்தவன், அவள் சொல்லிய விதம், இதுவரை அங்கு வந்ததில் இருந்து பார்த்த விதம், எல்லாம் அப்படி ஒன்றும் பெரிய அப்பிராயத்தை வர்ஷினி மீது கொடுக்கவில்லை.

“நீங்க கடிச்ச போது வலிக்காததா இப்போ வலிக்கப் போகுது” என்று கேட்டு விட அருகில் அந்த சிஸ்டரும் இருக்க, அவரும் என்ன இது என்பது போலப் பார்க்க…

ஒரு அதிர்ச்சி வர்ஷினியின் முகத்தினில், பின்பு அப்படியே முகத்தினை மாற்றிக் கொண்டவள்.. “நான் கடிச்சதால நீங்க இப்படி பண்ணலாம்னு ஏதாவது இருக்கா டாக்டர்” என்று சொன்ன போது முகத்தினில் ஒரு கம்பீரம் மீண்டிருக்க..

“ஒரு பேஷன்ட் ஒரு விஷயத்தை சொன்னா, நீங்க இப்படி ஒரு க்ரிடிசிசம் கொடுப்பீங்களா. ஊருக்குள்ள ஆயிரம் ஹாஸ்பிடல் டாக்டர்.

அப்படியிருக்குறப்ப உங்களைத் தேடி வர்றவங்களுக்கு நீங்க கொடுக்கிற மரியாதை இதுதானா" என்றவள் நிற்காமல் சென்று விட..

தான் பேசியது பெரிய தவறு என்று விதார்திற்கு புரிந்தது.. ஆனாலும் ஒரு கர்வம் ஒத்துக்கொள்ள மனதில்லை.. "ஒழுங்கா பேஷன்ட் பார்த்திருப்பேன், இந்த அண்ணனோட பிசாசு என்னோட ரிலேடிவ்ன்னு சொல்லி என்னை டிஸ்டர்ப் பண்ணிடுச்சு" என்று கோபம் முழுவதும் ஐஸ்வர்யாவின் மேல் திரும்பியது ...

அதற்குள் "அவங்க ட்ரீட்மென்ட் வேண்டாம், கிளம்பறோம் சொல்றாங்க டாக்டர், பில் கொடுக்கச் சொல்றாங்க" என,

"என்ன?" என்று நினைத்தவன்.. "ப்ச், அம்மாக்கு தெரிஞ்சது நீ தொலைஞ்சடா" என்று அவனுக்கு அவனே சொல்லிக் கொண்டு வெளியே வந்தான்...

"மா" என்று அவர் முன் வந்து நின்றவன் நடந்ததை சொல்ல,

"இப்படி ஒரு இர்ரெஸ்பான்சிபில் இடியட்டா நீ" என்று சகட்டு மேனிக்குத் திட்ட..

பதில் பேசமால் கடமையாய் வாங்கிக் கொண்டவன்.. "அந்த பொண்ணு கிட்ட எல்லாம் என்னால பேச முடியாது, நீங்களே பார்த்துக்கங்க" என,

"டாக்டர் ஐஸ்வர்யா எங்கே?" என,

"கேட்டேன், வீட்டுக்குப் போயிட்டாங்க போல, இனிமே தான் திரும்ப வருவாங்க"

"போ! நீயே ஹேண்டில் பண்ணு, தப்பு நீ பண்ணினா நீ தான் கேட்கணும்" என,

“அது சைக் மாதிரி புருஷனை கடிச்சு வெச்சிருக்கு, நான் ஏன் கேட்கணும்? முடியாது! என்னால முடியாது! கண்டிப்பா முடியாது!” என்றான், “எனக்கு பதிலா ஒருத்தன் இந்த பிரச்சனையை தீர்ப்பான், அவனை அனுப்பறேன்” என்று போக,

என்ன செய்ய முடியும்! செல்லும் மகனை முறைத்து நிற்பதை தவிர லக்ஷ்மிக்கு.. ஆம்! அந்த மருத்துவமனையின் உரிமையாளர் லக்ஷ்மி. மிகவும் புகழ் பெற்ற மகப்பேரு மருத்துவர்..

இப்போது சமீபமாய் இந்த பெரிய மருத்துவமனையைக் கட்டி அங்கே வந்திருக்கின்றார். அவருக்கு இரு மகன்கள் இளையவன் விதார்த்.. மூத்தவன் சஞ்சய்.. அவனும் மருத்துவனே.. அவன் எழும்பு முறிவு மருத்துவன்.

இன்னும் அவன் மருத்துவமனை வந்திருக்கவில்லை. அப்போதுதான் வந்து கொண்டிருந்தான். “போனா போகட்டும்” என்று விதார்த் போய் அமர்ந்து கொண்டு, அவனின் மற்ற நோயாளிகளைப் பார்க்க ஆரம்பித்தான்.

அங்கிருந்த ஹாஸ்பிடல் ஊழியர் ஒருவர், ஈஸ்வரிடம் “சாரி சர், ஏன் டிஸ்சார்ஜ் ஆகறீங்க, என்ன பிரச்சனை?” என..

அதற்குள் லக்ஷ்மி அங்கே வந்திருந்தார்.. “நான் பார்க்கிறேன் உள்ள வாங்க” எனச் சொல்ல.. அவரின் மரியாதையான தோற்றம் ஈஸ்வரைத் தேக்க.. நடந்ததை ஈஸ்வரிடம் சொல்லியிருக்க வேண்டாம் என்று வர்ஷினி வேறு தவித்துக் கொண்டிருந்தாள். ஏதோ ஒரு ஆவேசத்தில் சொல்லிவிட்டாள், ஈஸ்வர் ட்ரீட்மென்ட் வேண்டாம்

என்று கோபமாய் கிளம்பவும் செய்வதறியாது திகைத்து இருந்தாள்.

“அதுதான் மேம் சொல்றாங்க தானே, நாம ட்ரீட்மென்ட் எடுக்கலாம், உங்களுக்கு இன்னும் ஃபீவரா இருக்கு” என்று ஈஸ்வரிடம் பேச..

அவளைத் திரும்பி பார்வையால் முறைத்தவன்.. “பேசாத வர்ஷ்.. உன்னால தான் எல்லாம்.. நீ டாக்டர்ன்னு நம்பி நடந்ததை சொன்ன, அவங்க அதை கேலி ஆக்கிடாங்க! அப்படி ஒரு ட்ரீட்மென்ட் தேவையில்லை!” என்று அடிக்குரலில் அவளிடம் சீறினான்.. லக்ஷ்மி அதை பார்த்துக் கொண்டு தானிருந்தார்..

இதற்கு மேல் என்ன செய்வது என்று அவருக்கும் தெரியவில்லை.. ஒரு சின்ன பிரச்சனையாக தான் அவருக்கும் தோன்றியது.

வர்ஷினி அவனிடம் சொன்ன விதத்தில் ஈஸ்வருக்கு சின்ன பிரச்சனையாக தெரியவில்லை.. ஆம்! மிகவும் டிஸ்டர்ப்டாக அவள் சொன்ன விதம் ஐயோ என்று ஈஸ்வரை பதற வைத்தது.

அதற்குள் சஞ்சய் வந்திருந்தான்.. அங்கே அம்மா நிற்பதை பார்த்தவன் அவரின் அருகினில் இயல்பாய் வந்தான்..

“அம்மா, என்ன இங்க நிக்கறீங்க?” என்று அவரின் முகம் பார்த்து கேட்க.. “அது” என்று அவர் தயங்க.. அப்போது தான் ஈஸ்வரின் புறம் பார்வையை திருப்பினான்..

பார்த்தவன் இனிமையாய் அதிர்ந்து ஒரு முறுவலோடு, “ஹலோ சர்” என்று கை குலுக்க கை நீட்ட, “இது யாருடா இவன் இப்போ! இவனுக்கு

என்னைத் தெரியுமா?" என்ற யோசனையோடே கை நீட்டாமல் கை குவித்து வணக்கம் சொன்ன ஈஸ்வர்.. "சாரி, ரொம்ப ஃபீவர் அதுதான்" என்று விளக்கமும் கொடுக்க..

"சர், நீங்க இங்கே வந்ததே எனக்கு ரொம்ப சந்தோஷம், என்ன நாங்க பண்ண முடியும்" என்று பணிவாகக் கேட்டான்.

"நீங்க?" என்று ஈஸ்வர் இழுக்க..

"நீங்க என்னை ஒரு தடவை பார்த்திருக்கீங்க, ஞாபகம் இல்லையா? இந்த ஹாஸ்பிடல் கட்டுறதுக்கு நீங்க தான் பைனான்ஸ் பண்ணியிருக்கீங்க" என,

"நிறைய பார்க்கிறேன், ஞாபகமில்லை" என்றவன் அப்போது தான் ஹாஸ்பிடல் பேர் ஞாபகத்தில் வர, அவனின் ஞாபகத்திற்கும் வந்தது. ஆம்! பெரும் பணம் பைனான்ஸ் செய்திருந்தனர்.

"ப்ளீஸ், உள்ள வாங்க" என்று அவனின் கேபினிற்கு அழைத்துப் போக.. ஈஸ்வருக்கு போக மனதில்லை.

"இவன் எப்படியாவது ட்ரீட்மென்ட் எடுத்தால் போதும்" என நினைத்து "வாங்க" என கைப் பிடித்து ஈஸ்வரை இழுத்துப் போனாள்..

விதார்த் பேசிய போதே அந்த சிஸ்டர் ஐஸ்வர்யாவிற்கு அழைத்து எதோ பிரச்சனை என்பது போல சொல்லியிருக்க, பாதி வழியிலேயே அவள் திரும்ப வந்து கொண்டிருந்தாள்.

சஞ்சய் உள்ளே சென்றதும் "என்னம்மா? என்ன?" என்று அம்மாவிடம் கேட்க..

"ஃபீவர் வந்திருப்பாங்க போல, விதார்த் தேவையில்லாம பேசிட்டான்" என்று மகனுக்கு

சன்னக் குரலில் விளக்கம் கொடுக்க..

“மா” என்று அவரிடம் கடிந்தவன், “என்ன நடந்ததுன்னு எனக்கு தெரியலை, எதுவா இருந்தாலும் நான் அவங்க சார்பா சாரி கேட்டுக்கறேன்” என்றவன், விதார்திற்கு அழைத்து “இங்கே வா” என,

“நோ வேண்டாம், ஐ டோன்ட் வான்ட் டு ஸ்டே ஹியர் எனிமோர். என்ன பெஸ்ட் ட்ரீட்மென்ட் இங்க இருந்தாலும் எனக்கு வேண்டாம்” என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

விதார்த் வந்தவன், ஐஸ்வர்யா அப்போது தான் உள்ளே நுழைந்தவளையும் கூட அழைத்து வந்திருந்தான்.

“என்ன விஷயம்?” என்றே தெரியாமல் “எதற்கு?” என்றும் தெரியாமல், விதார்த் அழைத்த உடன் அவள் கூட வர..

சஞ்சயின் கேபின் பார்த்ததுமே தயங்கி நின்றவளை,“வாங்க டாக்டர்” என்று அதட்டி அழைத்துப் போனான்.

“இவனை” என்று பல்லைக் கடித்தபடி உள்ளே நுழைந்தவள் அங்கே ஈஸ்வரையும் வர்ஷினியையும் பார்த்து அதிர்ந்து நிற்க,

அவர்களுமே இவளை பார்த்து அதிர்ந்தனர்.

அதற்குள் ஒரு சிஸ்டர் வந்தவர்.. “மேம், ஒரு பேஷன்ட்க்கு ரொம்ப வலி” என.. உடனே லக்ஷ்மி கிளம்பிவிட்டார்.

ஈஸ்வர் வர்ஷினியை ஒரு பார்வை பார்க்க, அதுவரை அங்கே இருக்கலாம் என்றவள் ஐஸ்வர்யாவைப் பார்த்ததும், “நாம வேற ஹாஸ்பிடல் போகலாம்” என்ற பார்வை பார்க்க..

சஞ்சய் விதார்திடம் பேச வர.. “லுக் ஜென்டில்மேன், எனக்கு இங்க ஒரு நிமிஷம் கூட நிக்க முடியாது. என் மனைவியை சரியா ட்ரீட் பண்ணாத இடத்துல என்னால இருக்க முடியாது” என்று கடுமையான குரலில் கூறி ஈஸ்வர் கிளம்பியவன்... ஐஸ்வர்யாவை மௌனமாகக் கடக்க முடியவில்லை.

ஐஸ்வர்யா அருகில் வந்ததும் “எப்படி இருக்க ஐஸ்வர்யா, இங்கேயா இருக்க?” என,

“என்னவோ தெரியவில்லை மனைவியை சரியாக நடத்தவில்லை என்று சொல்கிறான்” என்று பதைத்தவள் “என்ன பிரச்சனை?” என்று வர்ஷினியின் புறம் பார்வையை ஓட்ட..

“எனக்கு தான் ஃபீவர், காட்ட வந்தோம்”

“ஏன் ரஞ்சனி, என்ன பண்றா?” என,

“நான் அப்போவே சொன்னேன், இவர் தான் கேட்கலை, ரொம்ப ஃபீவரா இருக்கு” என வர்ஷினி சொல்ல,

“சண்டைன்னு சொன்னாங்க, இப்போ என்ன பண்றாங்க?” என்று விதார்த் ஐஸ்வர்யாவையும் ஈஸ்வரையும் பார்த்திருந்தான்.

“ப்ச், ஒன்னுமில்லை விடு” என்று வர்ஷினியை அதட்டியவன்.. “நீ போ, கார்ல இரு, நான் வர்றேன்!” என்றான். நான்கு வார்த்தையாவது கேட்காமல் போனால் அவன் மனது ஆறாது, கோபத்தின் உச்சியில் இருந்தான். உடல் முடியாத போதே இப்படி நன்றாக இருந்திருந்தால் இருந்த கோபத்திற்கு விதார்தை துவசம் செய்திருப்பான்.

ஒன்றுமே இல்லாத விஷயம் தான், இங்கு மனதில் கொள்ள வேண்டியது வர்ஷினியின்

மனநிலை ஆகிப் போயிற்று. பின்னே ஐஸ்வர்யா தான் ஈஸ்வர் காதல் சொன்ன பெண் என்று தெரியும், அவளிடமே ஈஸ்வரை பற்றி பேசுகிறாள்.. ஒரு தப்பு செய்து விட்ட குழப்பமான மனநிலை.. வர்ஷினிக்கு தெரியும் என்று ஐஸ்வர்யாவிற்கு தெரியாது.. தெரிந்திருந்தால், இப்படி அவர்களை எதிர்கொண்டிருக்க முடியாது!

அதுவும் காய்ச்சல் கடித்ததால் கூட இருக்கலாம் என்று சொல்லப் பட்டு இருந்ததால், இப்படி செய்து விட்டோமே என்ற உணர்ச்சி! இனி எல்லோருக்கும் தெரிந்தால் தன்னை என்ன நினைப்பர் என்று உணர்வு.. மனதளவில் நிலை பிறழ்ந்து கொண்டிருந்தாள்.. நான் இங்கே இவனிடம் வந்திருக்க வேண்டாம் என்ற உணர்வு ஓங்க ஆரம்பித்து இருந்தது.

“இல்லை, போக மாட்டேன்!” என்பது போல வர்ஷினி நிற்க.. “போன்னு சொன்னேன்” என்று ஈஸ்வர் கடிந்து கொண்டிருந்தான்.

“சாரி கேளு விதார்த்” என சஞ்சய் அதட்ட,

“நான் ஏன் கேட்கணும்? என்ன தப்பு பண்ணினேன்? இவங்க கடிச்சாங்க, அதை தானே சொன்னேன், செய்யாததை சொல்லலையே” என சற்று திமிராகப் பேசினான். “அதுக்கு ஏன் இப்படி ஓவர் ரியாக்ட் பண்றாங்க, ஐ திங்க் திஸ் கேர்ள் நீட்ஸ் எ சைகலாஜிகல் ட்ரீட்மென்ட்” என்று உண்மையை சொல்கிறேன் என்று பேச..

“வாயை மூடு” என்று கத்தினான் ஈஸ்வர்.. ஐஸ்வர்யா பயந்தே விட்டாள் விதார்த் அடி வாங்கப் போகிறான் என.. அதுவும் விதார்த் சொல்லும் விஷயம்.. ஹச்சோ இவன் என்ன பேசுகிறான்.. கண்டிப்பாய் இதனை சாதாரணமாகவோ இல்லை

ஒரு டாக்டர் சொல்லுவது போலவோ ஈஸ்வர் எடுத்துக் கொள்ள மாட்டான் என்று தெரியும்.. அதுவும் வர்ஷினியை பார்க்க ஐஸ்வர்யாவிற்கு மனதிற்குள் பிசைந்தது. அந்த நீல நிறக் கண்களின் கலக்கம் அவளையே அசைக்க ஈஸ்வரை விடுமா என்ன?

"பேசாதே விதார்த்" என்று அவனை அதட்ட கூட செய்தாள்.

வர்ஷினி உடனே ஈஸ்வரின் கை பிடித்தவள், "நீங்க இங்க எதுவும் கலாட்டா பண்ணக் கூடாது" என,

"பண்ண மாட்டேன், நீ போ, இப்ப நான் வர்றேன்" என

"என்னடா இவனுங்க?" என்பது போலத் தான் அப்போதும் விதார்த் பார்த்திருந்தான், இன்னும் அவனுக்கு அவர்கள் தான் பைனான்ஸ் செய்திருகிறார்கள் என்று தெரிவில்லை..

சஞ்சய் விதார்திடம் அதனை சொல்ல வர.. "நீங்க பேசாதீங்க" என்று அவனையும் அதட்டினான், ஈஸ்வரின் கோபத்தை பார்த்து சஞ்சய் அசந்து நிற்க,

கண்களில் நீருடன் வர்ஷினி நிற்க.. கை பிடித்து பக்கத்தில் நிறுத்திக் கொண்டவன்.. "வா போகலாம்" என்று ஒன்றுமே சொல்லாமல் கிளம்ப,

"ப்ளீஸ் சர்" என சஞ்சய் அவசரமாக வர..

நிற்காமல் ஈஸ்வர் வர்ஷினியுடன் சென்று விட..

"நீ பண்ணினது கொஞ்சமும் சரியில்லை விதார்த்" என சஞ்சய் சத்தமிட..

"என்ன நீ? அவன் கிட்டப் போய் கெஞ்சிட்டு நிக்கற, யாரு அவன்? ஒரு லூசு பொண்டாட்டியை

வெச்சிருக்கான்? அது கடிச்சு வெச்சிருக்கு? அதனால இன்பக்ஷன்!" என்று கேஸ் ஹிஸ்டரியை எடுத்து விட

ஐஸ்வர்யா "என்ன இது?" என்று விழிவிரித்து நிற்கும் போதே, அவன் லூசு பொண்டாட்டி என்ற வார்த்தைகளை பேசிக்கொண்டு இருக்கும் போதே ஈஸ்வர் புயலென உள்ளே வந்தவன்.. அவன் மேலே பேசியதை கேட்டதும் அப்படியே ஒற்றைக் கையினில் அவன் சட்டை பிடித்து தூக்கி சுவரோடு நிறுத்த..

சஞ்சய் "என்ன பண்றீங்க?" என்று அருகினில் ஓட.. "விஸ்வா என்ன பண்ற நீ? விடு அவனை!" என்று ஐஸ்வர்யா ஈஸ்வரின் கைபிடித்து இழுக்க..

அவனை இறக்கி விட்டவன் ஐஸ்வர்யாவிடம் திரும்பி.. "மூணரை வருஷத்துக்கு அப்புறம் இப்போ தான் என்கிட்டே வந்திருக்கா, நான் அவளுக்கு டென்ஷன் குடுத்துட்டேன், அப்படிப் பண்ணிட்டா, அதுல பெரிய ஒரு கில்டி கான்ஷியஸ் அவளுக்கு. திரும்ப போகட்டுமான்னு பேசிட்டு இருக்கா.. ஒண்ணுமில்லை, இது ஒரு விஷயமில்லைன்னு பல வகையில சமாளிச்சிட்டு இருக்கேன்!"

"இவன் லூசு மாதிரி திரும்பத் திரும்ப அதையே அவ முன்னாடியே சொல்லிட்டு இருக்கான், இவன் என் பொண்டாட்டியை லூசுன்னு சொல்றான். திரும்ப மட்டும் அவ போகட்டும் கொன்னு தூக்கி கட்டிடுவேன் இவனை!" என்று விதார்தை பார்த்து கர்ஜிக்க.. அதிர்ந்து நின்றனர்.

"இன்னொரு தடவை அவளை லூசுன்னு சொன்னான் பேச வாய் இருக்காது" என்று

விதார்தை பார்த்த பார்வையில் அவனுக்கு குளிர் பிறக்க..

“இந்த விஷயம் மட்டும் வெளில வந்தது, இந்த ஹாஸ்பிடல் முடிஞ்சதுன்னு நினைச்சிக்கோ” என்றும் சொல்ல.

“இவன் என்ன அவ்வளவு பெரிய ஆளா.. இவனை எல்லோரும் கவனிக்க?” என்று தான் அப்போதும் விதார்திற்கு தோன்றியது.

ஐஸ்வர்யா அந்த கோபத்தில் தெரிந்த அவனின் காதலில், ஆளுமையில், பிரமித்து தான் நின்றாள். ஒருவேளை இவன் என்னை திருமணம் செய்திருந்தாலும் விட்டு தான் சென்றிருப்பான் எனத் தோன்றியது.. ஆனால் ஐந்து வருடத்திற்கு பிறகு இந்த நினைப்பு அவளுக்கே பிடிக்காமல் போக.. மனதை கடிவாளமிட்டாள்.

சஞ்சய்யை பார்த்து “முதல்ல இவனை கூட்டிட்டு போங்க சைகலாஜிகல் ட்ரீட்மென்ட்க்கு” எனத் திட்டியவன், “வேற நல்ல ஹாஸ்பிடலா பாரு, இவனுங்களும் இவனுங்க ஹாஸ்பிடலும்” என்று ஐஸ்வர்யாவையும் அதட்டிப் போனான்.

சஞ்சய் அப்படியே அமர்ந்து விட்டான்.. “அய்யயோ லோன் கேன்சல் செய்தால் என்ன ஆகும்?” என்பது தவிர வேறு எதுவுமே அவனின் எண்ணத்தில் இல்லை..

இந்த ஹாஸ்பிடல் அவனின் ட்ரீம் ப்ராஜக்ட் பணத்தை இறைத்திருந்தான்... அம்மா மட்டுமே அவர்களின் ஆதாரம்.. இன்னும் அவனிற்கோ விதார்திற்கோ அப்படி ஒன்றும் கேஸ்கள் இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை..

அதுவுமில்லாமல் இப்படி ஒரு செய்கை பெரிய முட்டாள்தனம்!

சிறிய விஷயம், ஆனால் அவர்களுக்கு பெரிய விஷயமாய் தோன்றும் போது இவன் சீண்டியிருக்க வேண்டிய அவசியமில்லை.

இன்னுமே விதார்திற்கு ஒன்றும் புரியவில்லை.. ஆனால் ஈஸ்வரின் செய்கையில் மனதில் ஒரு பயம் வியாபிக்க.. அப்படியே நின்றான்.

“அவங்க தான் நம்ம ஹாஸ்பிடல்க்கு ஃபைனான்ஸ் பண்ணியிருக்காங்க” என விதார்திடம் சொல்ல.

“என்ன?” என்று அதிர்ந்து, “இவங்க ஈஸ்வர் பைனான்ஸ் ஆளுங்களா?” எனக் கேட்டவன் .. “எனக்குத் தெரியாது, இவங்க ஃபோன் செஞ்சு என்னோட ரிலேட்டிவ் சொன்னாங்க, இதுக்கு முன்ன என்கிட்டே பேசவேயில்லை நான் பல முறை ட்ரை பண்ணியும், திடீர்ன்னு இன்னைக்கு சொல்லவும் எனக்கு அவங்க ரிலேடிவ்ன்னு ஒரு எரிச்சல்”

“கூடவே அந்த பொண்ணு வந்து என்னை வரச் சொல்றாங்க சொல்லவும் ஒரு எரிச்சல் பேசிட்டேன்” என,

“சும்மா சப்பை கட்டு கட்டாதே! நீ ஒரு ஹால்ஃப் பேக்ட் பெர்சன், ஒரு பேஷன்ட் கிட்ட எப்படி நடந்துக்கணும் உனக்குத் தெரியலை, நீ எதுக்கு அவங்களைச் சொல்ற.. உனக்கெல்லாம் அறிவே கிடையாது.. எப்படி உன் கிட்ட பேச முடியும்.. சும்மா பார்க்கும் போதெல்லாம் எங்க அண்ணாவைக் கல்யாணம் பண்ணிக்கோ

சொன்னா? எப்படி பேச முடியும்?” என்று ஐஸ்வர்யா பொங்கிவிட..

“இது எப்போ?” என்று சஞ்சய் விதார்தை முறைக்க..

“அது உனக்குப் பிடிச்சிருக்குன்னு” என,

“எனக்குப் பிடிச்சா நான் சொல்றேன், நீயேண்டா சொல்ற, இடியட்! எனக்கு ஏதாவது ஹெல்ப் பண்ணலைன்னா கூடப் பரவாயில்லை, உபத்ரவம் பண்ணாத”

“இப்போ அவங்க அந்த லோன் கேன்சல் செஞ்சு திரும்பப் பணம் கட்ட சொன்னாங்கன்னா ஒன்னுமே பண்ண முடியாது! நடுத்தெருவுக்கு தான் நாம வரணும்.. இது நம்ம சம்பாதிச்சது இல்லைடா தொலைச்சு நிற்க, நம்ம அம்மா சம்பாரிச்சது” என பொரிந்தவன்,

“சாரி ஐஸ்வர்யா, இவன் இப்படி உங்களை டார்ச்சர் பண்ணினது எனக்குத் தெரியாது.. நீங்க இவனோட கிளாஸ் மேட்ன்னு கொஞ்சம் ஆர்வமா இவன் கிட்டப் பேசிட்டேன். ஐ அம் ரியல்லி சாரி” என குற்ற உணர்வோடு கேட்க,

“இட்ஸ் ஒகே டாக்டர், நான் ரிசைன் பண்ணிடலாம்னு யோசிச்சிட்டு தான் இருந்தேன்” என ஐஸ்வர்யா சொல்ல,

“என்ன?” என்று அதிர்ந்தான் சஞ்சய்..

ஐஸ்வர்யா சென்று விட.. “சாரிடா அண்ணா, எனக்கு இப்படி எல்லாம் ஆகும்னு தெரியாது” என கலக்கமாக விதார்த் பேச,

சஞ்சய் தலையில் கை வைத்து அமர்ந்து விட்டான்.

ஈஸ்வரின் பயம் நிஜம் என்பது போல வர்ஷினியின் முகம் மிகவும் சீரியசாக மாறியிருந்தது.. அவனின் காய்ச்சல் அவனின் முடியாத தன்மை எல்லாம் பின்னுக்குப் போய்விட, அவளை தூக்கிக் கொண்டு ஆளில்லாத இடத்திற்கு போய் விட மனம் துடித்தது.. எப்படி இவளை சரியாக்கப் போகிறேன்?

நீ போகும் பாதை எங்கே பொன்மானே....

**அத்தியாயம் எழுபத்தி எட்டு :**

**உன்னை காணாதுருகும் நொடி நேரம்**
**பல மாதம் வருடம் என மாறும்**
**நீங்காத ரீங்காரம் நான்தானே**
**நெஞ்சோடு நெஞ்சாக நின்றேனே...**

சீரியசாக இருந்த அவளிடம் பேசவே ஒரு தயக்கம் வந்தது ஈஸ்வருக்கு. அமைதியாக அமர்ந்து வந்தான். ஆனால் அவளின் முகம் பார்த்து பார்த்து வர, வர்ஷினி உணர்ந்தாலும் எதுவும் பேசவில்லை.

மனதில் அவளை நினைத்து அவளிற்கே எரிமலை தான் குமுறிக் கொண்டிருந்தது.. "ஒவ்வொரு முறையும் இப்படி ஏதாவது செய்து வைத்து விடுகிறாய் நீ.. பிறப்பு தான் சொல்லும்படி இல்லையென்றாலும், வளர்ப்பிலும் தவறா? அதனை நீ காட்டிக் கொண்டே இருப்பாயா?" என யோசிக்க யோசிக்க.. கண்களை இறுக மூடி மனதை சமன்படுத்தி அந்த தாக்கத்தில் இருந்து வெளியே வந்தாள்.

ஈஸ்வருக்கு மிகவும் சோர்வு கண்களைத் தானாக மூடிக் கொள்ள.. அதுவரை அவன் புறம் திரும்பிக் கூட பார்க்காமல் இருந்தவள்.. இப்போது அவனின் கைகளை பிடித்துக் கொள்ள.. எங்கே கண்

திறந்தால், கை எடுத்து விடுவாலோ என ஈஸ்வர் கண் திறக்கவேயில்லை.. வர்ஷினியும் கை எடுக்கவேயில்லை..

கைகளில் அப்படி ஒரு சூடு இருக்க, அவனின் காய்ச்சல் குறையவில்லை என்று உணர்ந்தாள்.. அதற்குள் வீடு வந்திருக்க.. இறங்கினார்கள்.. பின்பு தாஸிடம் வர்ஷினி, "ரஞ்சனி அண்ணி வருவாங்க .. நீங்க போய் அவங்களை கூட்டிட்டு வந்துடுங்க" என்று ரஞ்சனி இருக்குமிடம் சொல்ல..

ஈஸ்வர் "வேண்டாம்" என..

"சும்மா என்னை காமெடி பீஸ் ஆக்கக் கூடாது. எனக்கு தெரியும் என்ன பண்ணனும்னு, நீங்க போங்க.. அவனவன் எனக்கு கௌன்சிலிங்க்கு அட்வைஸ் பண்றான்.. அவன் சொன்னது தப்பில்லை, ஆனா சொன்ன விதம் தப்பு"

"நீ உன் வேலையை சரியா செய்டான்னா என் மேல திருப்பி விடறான்" என கோபத்தில் பொரிந்தவளை பார்த்து ஏனோ ஈஸ்வருக்கு புன்னகை வந்தது.. அவள் மீண்டிருந்தாள் எனவும் புரிந்தது. ஆனால் இது நிரந்தரம் என்று சொல்லவும் முடியாது எனவும் தோன்றியது.

இருக்கும் க்ஷணத்தை இழக்க விரும்பாமல், "அவனை உன்கிட்ட கௌன்சிலிங் வரச் சொல்றேன், ஓகே வா" என

"ஏன் செய்ய மாட்டேனா?" என அவள் கேட்ட விதத்தில், கேட்ட பாவனையில் மனம் மயங்கத்தான் செய்தது. என்ன நடந்திருந்தாலும், அந்த நொடி, அந்த லகுத்தனமையைய் ஈஸ்வருக்கு இழக்க முடியவில்லை.. அவளின் கவனம் சிதறாமல் காப்பது முக்கியம் என்று தோன்றியது..

ஆனால் நொடி விட்டால் கூட எதையாவது தேவையில்லாமல் யோசிப்பாள் எனப் புரிந்து பேச்சை வளர்த்தான்.

“நானும் அதுதானே சொல்றேன், நீ ரொம்ம்ம்ம்பபபப் புத்திசாலியா போயிட்ட, அதனால தான் எதுவும் காம்ப்ரமைஸ் பண்ண முடியாம உன்னை நீயே கஷ்டப் படுத்திக்கற, கூட கொஞ்சமா என்னையும்” என கிண்டல் பேச..

“லெட் அஸ் நாட் டால்க் அபௌட் திஸ், ஓகே” என சீரியசாக சொல்ல..

“ஓகே” என்று சொல்ல முயலாமல் செய்கையால் கைக் கட்டி, வாய் பொத்தி நிற்க..

“அய்யே சகிக்கலை” என வர்ஷினி பாவனையாகச் சொல்ல, சிரித்து விட்டான்..

“ரொம்பப் பண்ணக் கூடாது, மறுபடியும் கடிச்சு வெச்சிருவேன்” என சீரியசாக சொல்ல..

“ரத்தக் காட்டேறி தாண்டி நீ” என ஒரு மென்னகையுடன் சொல்லிக் கொண்டே வீட்டின் உள் ஏறினான்...

“இப்போ நான் போகட்டுமா? வேண்டாமா?” என தாஸ் மெதுவாகக் கேட்டான். அவன் இருப்பதையே இருவரும் மறந்து இருந்தனர்.. இன்னும் ஒருவனும் அங்கே இருந்தான்! அவன் அஸ்வின்! வந்ததில் இருந்து இருவரும் பேசிக் கொண்டிருக்க தள்ளி நின்று பார்த்து கொண்டிருந்தான். அவன் யார் முன்பும் வரவில்லை, அவனையும் யாரும் கவனிக்கவில்லை..

“அச்சோ, இவர் முன்பா பேசிக் கொண்டு இருந்தோம்” என நொந்தவள்.. “இன்னும் நீங்க

போகலையா?" என வர்ஷினி கோபத்துடன் தாஸைப் பார்த்து திரும்பும் போதே...

ஒரு ஆட்டோ வந்து நிற்க.. அதில் இருந்து ரஞ்சனி இறங்கினாள்.. ரஞ்சனியைப் பார்த்ததும் தானாகவே மறைவாக நின்று கொண்டான் அஸ்வின்.

"நான் இப்போ தான் அண்ணி போகச் சொல்லிட்டு இருந்தேன், அதுக்குள்ள நீங்களே வந்துட்டீங்களா?" என்றபடி வர்ஷினி அவளிடம் சென்றவள், "என்ன அண்ணி ஆட்டோல வர்றீங்க, எங்கே உங்க டிரைவர்?" என,

அவள் பத்துவை சொல்கிறாள் எனப் புரிந்து "உதை வாங்கப் போற நீ" என,

"உண்மையைச் சொன்னா உதைப்பீங்களா?" என வர்ஷினி சிரிக்க..

"அதெல்லாம் ஓபன் சீக்ரெட் சொல்லக் கூடாது" என்று ரஞ்சனியும் சிரிக்க.. விழிஎடுக்காமல் அதனை பார்த்து இருந்தான் அஸ்வின்.

"பத்து கிட்ட எதுவும் சொல்லிக்கலை, நானே வந்துட்டேன்" என்றபடி உள்ளே வந்தாள்..

இருவரும் உள்ளே படியேற, ரஞ்சனி முன் செல்ல, அப்போது தான் பக்கவாட்டில் தள்ளி சற்று மறைவாக நிற்கும் அஸ்வினை உணர்ந்தவளாக வர்ஷினி தேங்க.. அஸ்வின் அவளைப் பார்த்ததும் "உள்ளே செல்லுங்கள், நான் போகிறேன்" என்பது போல சைகை செய்தான்.

வர்ஷினி அவனின் அருகில் செல்ல முற்பட,

"வேண்டாம்" என்ற பாவனையைக் காட்டியவன், மீண்டும் உள்ளே செல்லக் காட்ட, வர்ஷினி பின்

உள்ளே செல்ல, அவன் சத்தமில்லாமல் வெளியே சென்றான்.

“என்ன காய்ச்சல்?” என்றபடி வந்து ஈஸ்வரின் கைபிடிக்க அது இன்னுமே கொதித்தது.. “என்ன விஸ்வா இது? இவ்வளவு காய்ச்சல் எப்படி?” என்றபடி ரஞ்சனி கேட்க,

“அதுவா நான் கடிச்சிட்டேன்” என்றாள் சுவாதீனமாக வர்ஷினி. ஈஸ்வரின் முகம் முற்றிலும் ஒரு அதிருப்தியைக் காட்டியது.

“சும்மா விளையாடக் கூடாது வர்ஷ், என்ன ஆச்சு?” என்று ரஞ்சனி அதட்ட,

“நிஜம்மா அண்ணி” என்றாள்.

“உண்மையா?” என்பதுப் போல ஈஸ்வரைப் பார்க்க,

“ஆம்” என்று கண்களால் அவன் பேச,

“அவ கடிக்கற அளவுக்கு நீ என்ன பண்ணின விஸ்வா?” என்றாள் ரஞ்சனி.

வர்ஷினி ரஞ்சனியையே சில நொடிகள் பார்த்து இருந்தாள். அதனைப் பார்த்த ஈஸ்வரின் முகத்தில் ஒரு விரிந்த முறுவல். “தெரியலை.. எப்பவோ பண்ணினதுக்கு எப்போல்லாம் தோணுதோ, அப்போல்லாம் கூப்பிட்டு வச்சு செய்யறா போல என்னை” என்ற போது ஈஸ்வரின் முகத்தினில் புன்னகையைத் தவிர வேறில்லை..

சோர்வோடு அவன் புன்னகைத்த விதம் சில நொடிகள் வர்ஷினியை அவன் மீதும் பார்வையை நிலைக்கச் செய்தது..

“என்ன?” என்பது போல புருவம் உயர்த்தி ஈஸ்வர் கேட்க,

ரஞ்சனியும் அவனைத் தான் பார்த்து இருந்தாள்.. “நீ இங்க டாக்டரா வந்திருந்தாலும் சரி, என் தங்கையா

வந்திருந்தாலும் சரி, இதை நீ வெளில சொல்லக் கூடாது!”

“நீ என்ன நினைக்கிற? நான் சொல்வேன்னா! அப்படி உன்னோடது எதை நான் சொல்லியிருக்கேன் , முதல்ல இவ சொல்லாம இருக்காளா பாரு!” என்று வர்ஷினியிடம் திருப்ப,

“அதுக்கு நான் கியாரண்டி கொடுக்க முடியாது” என்று வர்ஷினி அசால்டாக சொல்ல,

“ப்ச் வர்ஷ், இது விளையாடுற விஷயமில்லை.. ஏன் இப்படி செஞ்சன்னு நான் கேட்க மாட்டேன். ஆனா நீ செஞ்சது தப்பு!” என்று சொல்லிக் கொண்டே காயத்தை ஆராய,

“நான் எப்போ உங்ககிட்ட தப்பில்லை சொன்னேன், தப்பு தான்! செஞ்சிட்டேன்! இப்போ என்ன செய்ய முடியும்? வேணும்னா திரும்ப என்னை கடிச்சிக்கச் சொல்லுங்க!”

சீரியசாக பேசிக் கொண்டிருந்த ரஞ்சனி சிரிக்க ஆரம்பித்து விட.. ஈஸ்வரின் முகமும் புன்னகையை பூசிவிட,

“பாரு! விஸ்வாவை வெக்கப் பட வைக்கற நீ”

“ஏன்? வெக்கப்படற அளவுக்கு என்ன சொன்னேன்?” என்றவள்.. பின்பு புரிந்து “ப்ச், போங்கண்ணி” என சலித்தவளிடம், அதற்கான பிரதிபலிப்பு எதுவும் இல்லை.

“நாம இருக்குற இந்த நிமிஷங்கள் தான் நிஜம் வர்ஷினி. சும்மா எதையாவது நினைச்சு மனசை குழப்பாதே! நீயும் சந்தோஷமா இரு! உன்னை சுத்தி இருக்குறவங்களையும் சந்தோஷமா வெச்சிக்கோ!” என ரஞ்சனி பேச,

“அச்சோ, அண்ணி!” என கத்தியவள், “என்னவோ வாய் அசைக்கறீங்கன்னு தெரியுது, ஆனா எனக்குக் காதே கேட்கலை” எனச் சொல்லி, “எனக்குப் பசிக்குது” என்று இடத்தை விட்டு நகர,

அவள் சென்றதும் “எதையாவது பேசாத ரஞ்சனி, திரும்ப போயிடப் போறா, ரொம்ப கஷ்டப் பட்டு வரவெச்சிருக்கேன். திரும்ப எதுக்காகவும் அவளை என்னால மிஸ் பண்ண முடியாது” என்றவனை ஆச்சர்யமாகத் தான் பார்த்தாள் ரஞ்சனி.

இப்படி எதையும் ஒப்புக் கொடுப்பவன் ஈஸ்வர் கிடையாதே!

எதோ பேச வந்தவள் பிறகு “என்ன ஆச்சு?” என்று கேட்க,  அவன் ஹாஸ்பிடல் சென்றது, அங்கு நடந்தது எல்லாம் சொல்ல..

“உன்னை யாரு என்னைக் கூப்பிடாம போகச் சொன்னா? ஊர் பூராவும் நீயே டமாரம் அடிச்சிருக்க” என்றவள், “ஐஷ்வர்யாவை பார்த்தியா? அங்கேயா இருக்கா? எப்படி இருக்கா?” என வரிசையாகக் கேள்விகளை அடுக்க..

“வேற பேசுவோம்” என்று ஈஸ்வர் முடித்துக் கொண்டான்.

கூடவே “வர்ஷினி முன்ன ஐஸ்வர்யா பத்திப் பேசாதே” எனவும் சொல்ல,

“ஏன்?” என்றவளிடம், “அவளுக்கு ஐஸ் பத்தி தெரியும்! அதனால தான் என்னை விட்டுட்டுப் போனா!” என,

இத்தனை நாட்களாக வர்ஷினி ஏன் சென்றாள் என்று மண்டையைக் குடைந்த விஷயம் வெளியே வர, “எப்படி எப்படித் தெரியும்?” என அதிர்ச்சியாகக் கேட்க,

“நானே சொல்லிட்டேன்” என்றான் ஒரு பெருமூச்சோடு.

“ஆங்” என்று வாய் பிளந்தவள், “என்ன நீ சொன்னியா? ஏன் சொன்ன? அறிவில்ல உனக்கு? ஐஸ்வர்யா பத்தி சொல்ல நீ யார்?” என்று ஆக்ரோஷமாக சண்டைக்கு கிளம்ப,

“ப்ச், நான் என்னைப் பத்தி தான் சொன்னேன். என்னை பத்தி வர்ஷினிக்கு எதுவும் தெரியாம இருக்க வேண்டாம்னு நினைச்சு சொன்னேன். மறைச்சு, மறைச்சு, எனக்கு ரொம்ப குற்ற உணர்ச்சியா போச்சு, இதுக்கு உண்மையை சொல்லிடலாம்னு சொல்லிட்டேன்!”

“ஆனா ஐஸ்வர்யாக்கு இதனால எந்தப் பிரச்சனையும் கிடையாது. வர்ஷ் இதைப் பத்தி எங்கேயும் வாயை திறக்க மாட்டா? ஏன் என்கிட்டயே பேசினது இல்லை.. இனி நாமளும் இதைப் பத்தி பேச வேண்டாம்!” என்று கடினமாகச் சொல்ல,

ரஞ்சனியும் ஒரு பெருமூச்சோடு வேறு பேச ஆரம்பித்தாள். “அவங்க என்ன மேனேஜ் பண்ணினாங்கன்னு தெரியணும்” என்றவள்.. ரூபாவிடம் பேசி ஐஸ்வர்யாவின் நம்பர் வாங்கி அவளுக்கு அழைத்தாள்.. வெகு சில வருடங்களுக்கு பிறகான அழைப்பு.. ஆம்! ஐஸ்வர்யா நம்பர் மாற்றி இருந்தாள்..

அழைப்பை எடுத்ததும் “ஐஸ், நான் ரஞ்சனி!” என,

“ம்ம் சொல்லு?” என்றாள் என்னவோ எதிர்பார்த்தவளைப் போல..

“எப்படி இருக்க ஐஸ்?”

“நல்லா இருக்கேன்னு பொய் சொல்லனும்னு நீ எக்ஸ்பெக்ட் பண்றியா?” என,

ரஞ்சனி ஒரு நிமிடம் ஸ்தம்பித்தவள்,
“வாழ்க்கையில தினம் பார்க்கறவங்க கிட்ட எல்லாம் ஹவ் ஆர் யு ன்னு கேட்கறோம். எல்லோரும் ஐ அம் ஃபைன் தான் சொல்றாங்க. அதுக்காக அவங்க எல்லோரும் ஃபைன்னா என்ன? பொய் பல நேரங்களில் யதார்த்தமானது. நம்ம வாழ்க்கையை அடுத்தவங்களுக்குக் காட்டாம மறைக்க செய்யறது!” என

“இந்த பேச்சுக்கு நான் நல்லா இருக்கேன்னு சொல்லிட்டுப் போயிருக்கலாம்” எனவும்

“என்கிட்ட கேளு, நான்  நல்லா இருக்கேன்னு தான் சொல்வேன்?” என,

“ஏன்? ஏன் இப்படிப் பேசறா?” என்று உள்ளம் பதறிய போதும், “சொல்லு எதுக்குக் கூப்பிட்ட?” என்றாள் ஐஸ்வர்யா.

“என்ன மேனேஜ் பண்ணாங்க விஸ்வாக்கு, இனி நான் என்ன பண்ணனும்னு ப்ளான் பண்ணனும்” என,

“தெரியலை, அந்த கிறுக்கன் விதார்த் தான் பண்ணினான். எது எப்படியோ அவன் ட்ரீட்மென்ட் பக்காவா தானே இருக்கும்”

“எந்த விதார்த்?”

“அதுதான் நம்ம கிளாஸ் மேட் ஒருத்தன், அவங்க அம்மா கூட ஃபேமஸ் கைனகாலஜிஸ்ட். அவங்க கிட்ட இப்போ தான் நான் வந்தேன்.. ரெண்டு மாசம் தான் ஆச்சு” என்று தானாக விவரங்களை சொல்லி விட்டாள்.

“சரி! அவன் நம்பர் கொடு, நான் பேசறேன்” என, கொடுத்து விட்டவள் ஃபோன் வைக்கப் போக,

“ஒரு நாள் நம்ம மீட் பண்ணலாமா ஐஸ், எனக்கு உன்னை பார்க்கணும் போல இருக்கு!” என்று ரஞ்சனி சொல்லிவிட,

“நீங்கல்லாம் தான் என்னை மறந்து போனீங்க! நான் இல்லை!” என்ற ஐஸ்வர்யா ஃபோனை வைத்து விட,

ரஞ்சனிக்கு மனதிற்கு மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது.

ஈஸ்வர் எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாலும் என்ன என்று கேட்கவில்லை.. எதிலும் அவனுக்கு தலையிட விருப்பமில்லை. சிறு அக்கறையும் பலப் பல விளைவுகளை ஏற்படுத்தும் என அறிந்தவன்..

ஐஷ்வர்யாவை பார்த்தும் சலனமற்று வர்ஷினி இருப்பது இன்னும் அவனுக்கு புரியவேயில்லை. எப்போது வெடிக்குமோ என்ற பயம் மனதினில் இருந்தது..

“உனக்குப் பார்த்தது விதார்த், எங்களோட யு ஜி கிளாஸ் மேட்” என்றவள்.. “அவங்கம்மாக்கு ரொம்ப நல்ல பேர், அவங்க ஹாஸ்பிடல் புதுசா போனது எல்லாம் பார்த்தேன் பேப்பர்ல. ஆனா ஐஸ்வர்யா அங்க போனது எனக்குத் தெரியாது! ரூபா அண்ணி கூட சொல்லலை” என்றவள்..

“அந்த விதார்தோட அண்ணன் ஒருத்தன் இருப்பான், எனக்குப் பேர் தெரியலை. இந்த ஐஸ் பின்னாடி கொஞ்சம் நாள் சுத்துனான்.. ஒரு நாள் ரொம்ப திட்டிட்டேன்.. பயங்கர சண்டை எனக்கும் அவனுக்கும்.. பின்னாடி சுத்தக் கூடாதுன்னு சிவியரா வார்ன் பண்ணினேன். ஐஸ் சைட்ல

இருந்து ஒரு ரிஃப்லக்ஷனும் இல்லை ஐஸ்க்கு அவனோட இன்ட்ரஸ்ட் கூட தெரியலை.. நானும் சொல்லிகலை வீணா கவலைப் படுவான்னு.. அப்புறம் போயிட்டான்"

"ஆனா இப்போ அவங்க ஹாஸ்பிடல் எப்படி அவ போனா?"

"நீ சொல்லலை! அவளுக்குத் தெரியாது! சோ, நல்ல ஆஃபர் பண்ணியிருப்பாங்க, போயிருப்பா எய்ம்ஸ்ல படிச்சிருக்கா, அதோட கேலிபர் இருக்கும் இல்லையா?"

"எஸ், அதுக்கு அப்புறம் டெஸ்ட் டியுப் பேபி அதுல ஏதோ ஸ்பெஷலைசேஷன் செஞ்சிருக்கா. ஆனா அங்க ஏன் போனா? அவன் திரும்ப ஏதாவது ட்ரபிள் பண்ணினா?" என்றாள் கவலையாக.

"பின்னாடி சுத்துறவங்க எல்லாம் ட்ரபிள் பண்ணுவாங்களா என்ன? நான் இன்னைக்கு அவனைப் பார்த்தேன் டீசன்ட் ஃபெல்லோ வா தான் தெரிஞ்சான். அவன் தம்பி மாதிரி இல்லை. ஐஸ்வர்யாவும் அவ்வளவு தெரியாம ஒன்னுமிலை, ஏதாவதுன்னா வெளில வந்துடுவா.. அண்ட் அந்த ஹாஸ்பிடல்க்கு நாம தான் ஃபைனான்ஸ் பண்ணியிருக்கோம்.. எதுன்னாலும் பார்த்துக்கலாம்.. நம்மை மீறி அவங்களால ஒன்னும் பண்ண முடியாது.. அப்புறம் அவங்க ஹாஸ்பிடல் அவங்களுக்குக் கிடையாது"

பேசும் போதே வர்ஷினி வந்துவிட்டவள், "சாரி அண்ணி, செம பசி, நான் சாப்பிட்டுட்டேன்.. இல்லைன்னா நானும் உங்களுக்கு பேஷன்ட் ஆகியிருப்பேன்" என்றவள்,

“நீங்க என்ன சாப்பிடறீங்க, இவருக்கு என்ன குடுக்கட்டும்?”

“எனக்கு ஏதாவது ப்ரூட் ஜூஸ் ... இவனுக்கும் இட்லி இருந்தா கொடு, பட் காரம் ரொம்ப வேண்டாம் கொஞ்சமா சாம்பார்” என,

வர்ஷினி அதை எடுக்க உள்ளே சென்று விட.. அவளையே பார்த்துக் கொண்டிருந்த ஈஸ்வரைப் பார்த்த ரஞ்சனி “ஹேய், என்ன நீ இப்படி பப்ளிக்கா உன் பொண்டாட்டியை சைட் அடிக்கற?” என,

முகத்தில் ஒரு முறுவல் பூக்க, “தனியா இருக்கும் போதே சைட் அடிக்க முடியலை, இதுல பப்ளிக்கா வா?” என்றவன், மனதிற்குள் நினைத்தது.. “பார்த்து இரண்டே நாட்கள் ஆகின்றது, அதற்குள் இன்னும் ஒரு யுகம் வாழ்ந்த ஒரு உணர்வைக் கொடுத்து விட்டாள். வாழவும் ஆசை கொடுக்கின்றாள், சாகவும் ஆசை கொடுக்கின்றாள், வாழ்ந்தே ஆகவேண்டிய கட்டாயத்தையும் கொடுக்கின்றாள்.. இப்போதும் மனதினில் என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றாள் ஐஸ்வர்யாவைப் பார்த்த பிறகு.. எந்த எரிமலையை அடக்கிக் கொண்டிருக்கிறாள் என்றும் தெரியவில்லை” என யோசித்துப் பார்த்திருக்க,

“என்ன விஷ்வா?” என்றாள் கவலையாக ரஞ்சனி, பல வருடங்களுக்குப் பிறகு ஈஸ்வர் அவளிடம் சகஜமாகப் பேசுகின்றான்.

“ஐ லவ் ஹெர் அ லாட். ஆனா அதை நான் தெரிஞ்சிக்க ரொம்ப டைம் எடுத்துட்டேன். அதுதான் தப்பா போச்சு!” என்றான் ஆழ்ந்த குரலில்.

அதற்குள் ஜூசுடனும் இட்லியுடனும் வர்ஷினி வர, ஜூசை கையினில் வாங்கிய ரஞ்சனி.. "நான் விதார்த் கிட்ட என்ன மேனேஜ் பண்ணினான்னு கேட்டுட்டு வர்றேன்" என்று ஃபோனுடன் எழ,

"கை வாஷ் பண்ண தண்ணி கொண்டு வரட்டுமா" என்று வர்ஷினி ஈஸ்வரிடம் கேட்க..

"என்னது வாஷ் பண்ண தண்ணியா? ஒழுங்கா அவனுக்கு ஊட்டி விடு, பாரு அவன் கையெல்லாம் எப்படி நடுங்குது. அதுவுமில்லமா அவனை சாப்பிட சொன்னா காரமா சாப்பிடுவான், கொஞ்சமா தொட்டு வை!" என,

"நானா?" என,

"பின்ன நீதான், இப்போவே பிராக்டிஸ் எடுத்துக்கோ, நாளைக்கு உனக்கு குழந்தை பிறந்தா யார் செய்வா?" என்று அதட்டி ரஞ்சனி செல்ல..

"ரொம்ப தான் மிரட்டுறாங்க, இந்த பத்து அண்ணா எப்படி இவங்களை மேனேஜ் பண்றாங்க" என்று பேசினாலும், ரஞ்சனி சொன்னதை தட்டாமல் செய்தாள். இட்லியைப் பிய்த்து சாம்பாரில் தோய்த்து ஈஸ்வருக்கு வாயில் வைக்கப் போக அதனை வாங்காமல்..

"நாம குழந்தை பெத்துக்கலாமா வர்ஷி?" என்றான் ஈஸ்வர் ஆழ்ந்த குரலில், அவளின் பார்வையோடு முழுதாகத் தன்னை கலக்க விட்டு..

**ஒரு காதல் கடிதம் விழி போடும்**
**உன்னை காணும் சபலம் வரக்கூடும்**
**நீ பார்க்கும் பார்வைகள் பூவாகும்**
**நெஞ்சுக்குள் தைக்கின்ற முள்ளாகும்**
**கண்ணே என் கண் பட்ட காயம்**

**கை வைக்க தானாக ஆறும்**
**முன்னாலும் பின்னாலும் தள்ளாடும்**
**என் மேனி என் மேனி உன் தோளில் ஆடும்**
**நாள்..**

## அத்தியாயம் எழுபத்தி ஒன்பது :

## கண்ணில் வலியிருந்தால்.. கனவுகள் வருவதில்லை!

ஷாம்பெயின் பாட்டிலில் இருந்த திரவம் பீச்சியடிக்க... அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலின் பார்ட்டி ஹால் களை கட்டியது. The Conquerors' என்று கூடவே அந்த மாநிலத்தில் பெயரோடு சேர்த்து புதிய பெயர் இடப்பட்டு ஈஸ்வர் உரிமையாளர் ஆகியிருந்த கிரிக்கெட் அணியினை பற்றிய அறிவிப்பு... அதன் பின் நடக்கும் பார்ட்டி.

பழைய உரிமையாளரும், அணியினரும் இருக்க.. கூட மற்ற முக்கியஸ்தர்கள்.. பிரபலங்கள்... மீடியா ஆட்கள் என அந்த இடமே ஆட்களோடு ஜகஜோதியாய் ஜொலித்தது...

இது மற்றொரு மாய உலகம், அதற்குள் அடியெடுத்து வைத்திருந்தான் ஈஸ்வர்.

கூட முரளியும் ஜகனும். வேறு வீட்டினர் யாரும் இல்லை. பத்துவையும் அழைத்து இருந்தான், ஆனால் அவன் வரவில்லை.. இன்னுமே ஒரு தயக்கம் பத்துவிடம் ஈஸ்வரைக் குறித்து.. நன்றாக இப்போது பேசினாலும் ஒரு சகஜ மனப் பான்மை இன்னும் வரவில்லை.. நமஷிவாயத்தை அவனே வேண்டாம் என்று சொல்லியே வந்திருந்தான்.. இன்னும் அவருக்கு இந்த பழக்க வழக்கங்களை ஏற்றுக் கொள்ள முடியாது.. அதுவுமன்றி இது வேறு மாநிலம் கூட..

பெண் பிள்ளைகளை இந்த மாதிரி பார்ட்டிக்கு அழைக்கும் வழக்கம் இன்னும் அவர்களின் வீட்டினுள் நுழையவில்லை என்பதால் அவர்களுக்கு அது ஒரு செய்தியே..

நம் மாநிலத்தின் செய்தித் தாள்களில் முதல் பக்கத்திலேயே அவனின் புகைப்படம் இந்த ஐ பீ எல் டீம் வாங்கியதற்கு.. மற்றுமொரு பரிமாணத்திற்கு அவனின் வியாபாரத்தை கொண்டு சென்றிருந்தான்..

ஆளாளுக்கு வாழ்த்துச் சொல்ல.. அது எதுவும் ஈஸ்வரை எட்டவில்லை. வெகு நாட்களுக்குப் பிறகு கையினில் மதுபானக் கோப்பையும்.. தொண்டையில் மிடறு மிடறாக சரித்தபடி எல்லோரையும் பார்வையிட்டுக் கொண்டு பேசிக் கொண்டு இருந்தான்..

ஆண்கள் மட்டுமல்ல பெண்கள் சிலரும் பார்ட்டியில் இருந்தனர்.. அங்கிருந்தவர்களின் குடும்ப ஆட்கள், திரைத்துறை பிரபலங்கள், மாடல்கள் என..

அதில் முரளியுடன் ஒரு மாடல் அழகி சிரித்து சிரித்து பேசிக் கொண்டு இருக்க.. “இவன் என்னடா இந்த ஜொள்ளு விடறான் அவகிட்ட” என்று ஈஸ்வர் முரளியின் மேல் பார்வையை பதித்து இருந்தான்..

ஆனால் அதிகம் பார்வையிட முடியாமல் யாராவது பேசிக் கொண்டு இருந்தனர்.. கிரிகெட் வீரர்கள் சிலருடனும் அழகிகள் சிலர் வந்திருக்க.. அவர்களின் உடைகள் அணிமணிகள்.. ம்கூம் ஈஸ்வரால் சகிக்கவும் முடியவில்லை.. ரசிக்கவும் முடியவில்லை.. தான் தன் எண்ணப் போக்கை சற்று விரிவுபடுத்திக் கொள்ளவேண்டும் என்ற

மனப்பான்மையுடன் பார்வையிட்டுக் கொண்டிருந்தான்.

பலரும் அவனுடன் பேச ஆர்வம் காட்ட.. ஒதுங்கித் தான் நின்றான்.. அப்போது பழைய உரிமையாளர் அவனிடம் வந்தவர், “ஷி இஸ் வர்ஷா.. உங்களுக்குத் தெரியுமே, பெரிய மாடல், இப்போ சில படங்கள் நடிச்சிட்டு இருக்காங்க, உங்க ஊரு தான்” என..

“ஓஹ்” என்று செய்தியாய் கேட்டுக் கொண்டான்.. அவனுக்கு அப்படியொன்றும் அவளைத் தெரியவில்லை.. மரியாதை நிமித்தம் வணக்கதிற்காய் கை குவிக்க..

பொதுவாய் யாரும் வர்ஷாவைப் பார்க்கும் போது இப்படி ஒரு அழகா என வியந்து பார்ப்பார்... அப்படி ஒரு பாவனை ஈஸ்வரின் கண்களில் இல்லவே இல்லை.. வெகு சாதாரணமான பார்வை.. ஆனாலும் அதில் ஒரு மரியாதையும் தெரிய.. அதுவே வர்ஷாவை அவனின் புறம் ஈர்த்தது.

வர்ஷா கை குலுக்குவதற்காய் கை நீட்டினாள், ஈஸ்வர் வணக்கம் சொல்லிய பிறகும்.. ஈஸ்வர் பார்த்து நிற்க... “இவ்வளவு ஹேண்ட்சம் மேன் கிட்ட கை குலுக்கலைன்னா இன்னைக்கு நைட் எனக்கு தூக்கமே வராது” என சொல்லி பளிச்சென்று ஒரு புன்னகை புரிய அதில் சிநேகபாவத்தைத் தவிர வேறொன்றுமில்லை.

“கை குலுக்கறது மட்டும் போதுமா?” என்று அந்த உரிமையாளர் பேச.. அந்தப் பேச்சை அவள் ரசிக்கவில்லை என்ற பாவனையில் தைரியமாய் அவரை பார்த்தாள்.. ஆனாலும் மறுத்து எதுவும் பேசவில்லை.

திரும்ப ஈஸ்வரை பார்த்து புன்னகைக்க.. “கிரேட் ஈஸ்வர்!” என்று அவனின் தோள் தட்டியவர்.. “பேச பழக அத்தனை பேர் வெயிட் பண்றாங்க, பட்சி உன்னைச் சுத்தி வட்டமிடுது, என்சாய்” என சொல்லிப் போகப் போக.. அதற்கான பிரதிபலிப்பு எதுவும் இல்லை ஈஸ்வரிடம்.. ஆனாலும் சற்று ஆராய்ந்து தான் பார்த்திருந்தான்..

அந்த அவளின் வர்ஷா என்ற பெயர் அவனை பார்க்க வைத்தது.. பேச்சு தான் சற்று அதிகப் படியாய் தெரிந்தது.. மற்றபடி உடைகளில் நளினம் இருந்த அளவு கண்ணியமும் இருந்தது.. ஆளை அசரவைக்கும் அழகி தான்.. பாவனைகளிலேயே ஒரு திமிர் இருக்க..

கை இறக்காமல் நீட்டியபடியே வைத்திருக்க.. வேறு வழியில்லாமல் கை பற்றி குலுக்கினான்.. “என்னை பத்தி சொல்லாம போறீங்களே” என வர்ஷா சொல்ல..

“உன்னை பத்தி யாராவது தனியா சொல்லணுமா, யு ஆர் எ ஸ்டார்” என்று அந்த மனிதர் ஏகத்திற்கும் வழிய..

அவரின் வழிசலை எல்லாம் ஒரு அலட்சியத்தோடு ஒதுக்கி ஈஸ்வரை தான் ஆர்வமாய் பார்த்து இருந்தாள்..

“ஷி இஸ் தி பிராண்ட் அம்பாசிடர் ஆஃப் அவர் டீம்” என்றவர்.. “இனிமேலும் கண்டினியு ஆவாங்க தானே” என,

“எஸ், எஸ், அப்படியே ஆகட்டும்” என்று விட்டான்.. பின்பு அவர்களிடம் பேசியபடி ஜகனையும் முரளியையும் பார்க்க.. ஜகன் இருக்கும் அத்தனை

கிரிகெட் வீரர்களிடமும் மாற்றி மாற்றிப் பேசிக் கொண்டு இருக்க..

முரளி அடுத்த அழகியிடம் பேசிக் கொண்டு இருந்தான்.. “அடடா, என்னடா பண்ணிட்டு இருக்கான் இவன்” என நினைத்து, “எக்ஸ்கியுஸ் மீ” என அவர்களிடம் கேட்டு முரளியின் அருகில் சென்றவன், அவனைத் தனியாக தள்ளிக் கொண்டு வந்து “என்னடா பண்ணிட்டு இருக்க நீ?” என,

“என்ன பண்ணிட்டு இருக்கேன், ஒன்னுமே பண்ணலைடா!”

“மாத்தி மாத்தி இப்படி ஜொள்ளு விட்டுட்டு இருக்க” என..

“ஜொள்ளு மட்டும் தானே டா விட முடியும், மேல ப்ரொசீட் பண்ண முடியாதே!” என கவலையாக முரளி சொல்ல..

“ரொம்பக் கவலை போல” என ஈஸ்வர் கிண்டல் செய்தவன், “இரு, ஷாலினி கிட்ட சொல்றேன்” என,

“நீ சொல்லிட்டாலும்.. அவ நம்பிட்டாலும்” என சிரித்தவன்.. “நான் இன்னொரு பொண்ணை கிஸ் பண்ணிட்டு நிக்கறதை அவ பார்த்தாலும் என்னை நம்புவா.. அவளை பொறுத்தவரை அவ புருஷன் ஒரு அப்பாவி” என,

“அடப் பாவி” என வாய் பிளந்தான் ஈஸ்வர்.. இந்த ஈஸ்வரின் பாவனைகள் அத்தனையும் வர்ஷா ரசித்து பார்த்திருக்க.. ஒரு இரண்டு மூன்று பேர் வர்ஷாவின் பார்வை ஈஸ்வரை தொடர்வதை கவனிக்க ஆரம்பித்தனர்.

“வேணா டெஸ்ட் பண்ணிக் காட்டட்டுமா.. ஒரு போட்டோ எடுத்து ஷாலினி கிட்ட காட்டறியா?” என,

“கொஞ்சமா உள்ள போனதுக்கே இவ்வளவு எஃபக்ட்டா டா.. இன்னும் நிறையப் போனா?” என ஆச்சர்யப் படுவது போல நடிக்க..

“யாரு சொன்னா நான் குடிச்சேன்னு, அது சும்மா என்னை ஒன்னும் தெரியாத பையன்னு யாரும் நினைச்சிடக் கூடாதுன்னு கைல வெச்சிருக்கேன்!”

“ஏன்டா குடிக்க வேண்டியது தானே?”

“அப்புறம் உன்னை யாரு ரூம் கொண்டு போய் பத்திரமா சேர்ப்பா?”

“உனக்கே இது ஓவரா தெரியலை, இங்க இருந்து மேல இருக்குற ரூம்க்கு என்னை கூட்டிட்டுப் போக நீ குடிக்காம இருக்குறியா?” என,

“நீ இப்போ எத்தனாவது பெக் அடிச்சிட்டு இருக்க தெரியுமா?” என சற்று கோபமாகக் கேட்கவும்..

“எண்ணிட்டா இருக்க?” என்று ஈஸ்வர் அசடு வழிந்தான்.

“பின்ன, இதோட முடிக்கற! இனி கிளாஸ் கைல எடுக்கக் கூடாது!” என முரளி அதட்ட..

“நீ கண்டினியு பண்ணுடா?” என ஈஸ்வர் இடத்தை விட்டு அகலப் போக..

“ஈஸ்வர்” என்று அதட்டிய முரளி.. “சீரியஸா சொல்றேன், இதோட நிறுத்திக்கோ!” என,

“குடிச்சே பல வருஷம் ஆச்சு”

“அதுக்காக மொத்தமா சேர்த்து இன்னைக்கே குடிப்பியா” என..

“எவ்வளவு குடிச்சாலும் ஏறலை” என்றான் பரிதாபமாக.. அவனின் போதை ஒருவளின் கண்களில் இருக்க, அதனை இங்கே பரிதாபமாக தேடிக் கொண்டிருந்தான்.. மிகப் பெரிய நாள் இது,

ஆனாலும் முழுதாக அனுபவிக்க முடியவில்லை.. "நான் கிஸ் பண்றதைப் பார்த்தாலும் கூட என்னை நம்புவா ஷாலினி" என முரளி சொல்லியிருக்க, அப்படி ஒரு நம்பிக்கை என்னால் என்றுமே வர்ஷினிக்கு கொடுக்க முடியாது எனத் தோன்ற.. சோர்வாக இருந்தது..

"போதும் நிறுத்திக்கோ" என முரளி மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தான்.. சொல்லச் சொல்ல பக்கத்தில் இருந்த பேரரை அழைத்து மீண்டும் ஒன்று எடுத்து ஒரே மூச்சில் தொண்டையில் சரித்தான்..

"ஆம்!" என்றைக்கு வர்ஷினி போதை மாத்திரைகள் எடுக்கின்றாள் என்று தெரிந்ததோ அன்றிலிருந்து ஈஸ்வர் குடியைத் தொட்டது கூட இல்லை..

அதற்குள் "ஹலோ சர்" என்று யாரோ வர ஈஸ்வர் அவர்களிடம் பேச நிற்க.. முரளி கவலையாகத் தான் பார்த்து இருந்தான் ஈஸ்வரை..

உண்மையில் அவன் ஈஸ்வர் குடிப்பதை முதலில் கவனிக்கவில்லை, ஜகன் தான் சற்று முன் அவனிடம் வந்து.. "ஒரு பாட்டில் ஃபுல்லா இதுவரை உள்ள போயிடுச்சு.. என்னால சொல்ல முடியாது, நீ சொல்லு!" எனச் சொல்லியிருந்தான்..

அதன் பின்னே தான் கவனிக்க ஆரம்பித்தவன்.. உரிமையாளருடன் அவன் பேசிக் கொண்டிருப்பதை பார்த்து நிற்க .. ஈஸ்வரே அவனைத் தேடி வந்துவிட்டான்.

அப்போதுதான் அந்த பார்ட்டி ஹாலிற்குள் அஸ்வின் நுழைந்தான்.. ஈஸ்வரை பார்த்ததும் அவன் காட்டிய பவ்யம்.. ஆம் சற்று அதிகம் தான்.. பின்னே தன்னை மீண்டும் இந்த ஐ பீ எல் லில்

சேர்த்திருப்பது.. என்ன காரணம் ஈஸ்வரின் மனதில் ஓடுகின்றது என்று தெரியாத போதும்.. இது எதோ ஒரு வகையில் அவனை கௌரவப் படுத்தியதாக தான் எண்ணம். அதன் பிறகு சில அறிவிப்புகள்..

“லேடீஸ் அண்ட் ஜென்டில் மேன்.. இந்த டீம் ஓனர் நான்னு இப்போ உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்.. என்னோட பார்ட்னர் என்னோட அண்ணா ஜகன்னாத் இவர்” என்று காட்டி.. “தென் இந்த டீம் மேனேஜர் மிஸ்டர் அஸ்வின் பிரகாஷ்ம்.. இவங்க ரெண்டு பேரும் தான் இதை மேனேஜ் பண்ணப் போறாங்க” என..

அவர்கள் இருவருக்குமே இது புதிய செய்தி..

அடுத்த நாள் செய்தி தாள்களில் ஈஸ்வர் ஜகனை தோளோடு அணைத்து இருக்க.. அவர்களின் பின்னால் அஸ்வின் நிற்பது போன்ற புகைப் படம் வருமாறு ஏற்பாடு செய்திருந்தான்.

பார்ட்டி நடந்து கொண்டிருக்கும் போதே ஈஸ்வரை முரளி தள்ளிக் கொண்டு வந்துவிட்டான் யாரின் கவனத்தையும் கவராமல்.. அதன் பின் பார்ட்டியை ஜகனும் அஸ்வினும் பார்த்துக் கொண்டனர்.

மேலே ரூமிற்கு எல்லாம் செல்லவில்லை.. ஜகனிடம் “என்னோட ஈஸ்வரோட திங்க்ஸ் எல்லாம் எடுத்துகிட்டு ரூம் வேகெட் பண்ணி நீங்க வந்துடுங்க.. இப்போ பன்னிரண்டு மணிக்கு ஒரு பிளைட் இருக்கு.... நான் ஈஸ்வரை சென்னை கூட்டிட்டுப் போறேன்” என அலைபேசியில் சொல்லிவிட்டவன்.. அஸ்வினிற்கு அதனை ஒரு மெசேஜாகத் தட்டி விட்டுக் கிளம்பியிருந்தான்.

பின்னே நிறைய நிறைய குடித்துக் கொண்டே இருந்தான் ஈஸ்வர்.. என்னவோ அவனை வீடு கொண்டு சேர்த்துவிடு என்று உள்மனது சொல்ல.. காலை நான்கு மணிக்கு ஈஸ்வரின் வீட்டின் முன் நின்று வர்ஷினிக்கு அழைக்க.. அவள் வந்து கதவை திறந்து விட்டாள்..

ஈஸ்வர் ஒரு வார்த்தை கூட முரளியிடம் பேசவில்லை ஆனால் அவன் சொன்னதை தட்டாமல் செய்தான். தனக்கு ஏறவில்லை ஏறவில்லை என்று அவன் சொல்லிக் கொண்டிருந்த மப்பும் சற்று அதிகமாக இருக்க.. சிறு தள்ளாட்டம் கூட.... ஆனால் நினைவு தப்பும் அளவிற்கோ இல்லை, அசட்டுத் தனங்கள் செய்யும் அளவிற்கோ இல்லை. அவனின் நிலை அவனின் கட்டுப் பாட்டிற்குள் தான். வர்ஷினியைப் பார்வையால் தழுவிக் கொண்டு நிற்காமல், அவனின் ரூம் சென்று விட்டான்.

எதுவும் பேசாமல் செல்லும் ஈஸ்வரை பார்த்தவள் "என்ன ஆச்சு முரளிண்ணா, ஏதாவது ப்ராப்ளமா?" என,

"இல்லையில்லை, எல்லாம் நல்லாப் போச்சு! நாங்க சீக்கிரம் கிளம்பிட்டோம்.. பார்த்துக்கோ!"

"என்ன பார்த்துக்க?" எனப் புரியாமல் வர்ஷினி கேட்க,

"நிறையக் குடிச்சிருக்கான்" என,

"ப்ச்" என்றவளின் முகத்தினில் ஒரு சலிப்பு தோன்றியது.. பிறகு பெருமூச்சொன்றை வெளியிட்டவள் "நீங்களும் இங்கேயே தூங்குங்க காலையில போங்க" என,

“தூங்குனா உடனே எந்திரிக்க முடியாது, வீட்டுக்கே போயிடறேன்” எனக் கிளம்பினான்..

“சரி அண்ணா” என அவள் வர..

“வாட்ச்மேன் இருக்கான் தானே, நான் போயிக்கறேன்! நீ கதவை சாத்திக்கோ” என அவள் சாத்திய பிறகு தான் படியே இறங்கினான்..

ரூமின் உள் செல்ல, இருந்த உடையில் அப்படியே படுத்திருந்தான், ஆனால் உறங்கியது போலத் தெரியவில்லை.. கோட், டை, என ஃபார்மலான பார்ட்டி உடை.. கண்மூடியிருந்தவனின் முகத்தை சில நொடிகள் பார்த்தவள்.. அவனின் அருகில் சென்று டை தளர்த்தினாள்.. உணர்ந்ததும் “தள்ளி போ வர்ஷ்” என,

“முதல்ல கண்ணைத் திறங்க” என்று அதட்ட..

“மாட்டேன், நீ என்னைத் தொடாதே, தூரப் போ!” என,

“ப்ச்” என்று சலித்தவள், தளர்த்திய டையை உருவ முற்பட..

“சொன்னாக் கேளு, நிறையக் குடிச்சிருக்கேன், என்னோட ஒரு ஒரு அணுவும் நீ வேணும்னு சத்தம் போட்டுட்டு இருக்கு, கண்ணைத் தொறந்தேன், என்ன பண்ணுவேன்னு தெரியாது.. தூரப் போ” எனக் கத்த,

டையை உருவ முற்பட்ட கைகளில் ஒரு தயக்கம், அந்தத் தயக்கம் இன்னும் கோபத்தைக் கொடுக்க.. கண்களைத் திறந்தவன் ஒரே இழுப்பில் அவளை இழுத்து மேலே போட்டுக் கொண்டு அவளைத் தீவிரமாய் பார்த்தான்..

“குழந்தை பெற்றுக் கொள்ளலாமா?” என்ற அவனின் கேள்விக்கு அவள் சொன்ன பதில்

ஞாபகத்தில் வந்தது..

“ரொம்ப ஆசையா இருக்கு, ஆனா கொஞ்சம் கூட இஷ்டமில்லை” என்றாள் அவனை நேருக்கு நேர் பார்த்து.

“என்ன பதில் இது?” என்பது போல் அவன் பார்க்க,

“ஸ்டில் ஐ அம் நாட் ஃபிட் டு பீ எ மதர்.. வாழ்க்கையில எனக்கு எந்த வேல்யுசும் தெரியலை.. எதுவுமே தெரியலை.. என்ன எதிர்பார்க்கிறேன்னு தெரியவேயில்லை.. உங்க கூடவே இருக்கணும் போல இருக்கு, ஆனா உங்களைப் பார்க்கும் போது ரொம்ப எரிச்சலா கோபமா வருது”

“என்னோட எதிர்பார்ப்பு என்னன்னு தெளிவா சொல்லியும் நீங்க ஏமாத்திட்டீங்க.. ரொம்ப முன்னாடி நடந்தது, ஆனாலும் மனசு அதையே திரும்பத் திரும்ப நினைக்குது.. எனக்கு மன்னிக்கற குணமும் இல்லை மறக்கற குணமும் இல்லை”

“என்னால என் குழந்தை கஷ்டப் படக் கூடாது” என

அவனுக்கு புரியவேயில்லை.. அவளை புரிந்து கொள்ள முயன்றான்.. உன்னை பிடிக்கவில்லை, உன் குழந்தை வேண்டாம் என்றால் அது வேறு.. இது என்ன பதில்..

அப்போதைக்கு அந்தப் பேச்சை விட்டவன், அதன் பிறகு சில சந்தர்ப்பங்களில் மெது மெதுவாக..

“ஏன் வர்ஷ் நீயும் கஷ்டப்பட்டு என்னையும் கஷ்டப்படுத்தற.. நல்லா வளர்க்கலாம் நம்ம குழந்தையை!”

“எனக்குத் தெரியும், நீங்க நல்லா தான் வளர்ப்பீங்க. ஆனா நான்.. ? எனக்கு யாரையுமே பிடிக்கலை, நீங்க தான் என்னை ஏமாத்தினீங்க, ஆனா வேற

யாரையும் கூடப் பிடிக்கலை, கமலம்மாவை, முரளிண்ணாவை, பத்துண்ணாவை... கொஞ்சம் நாள்ல பைத்தியம் பிடிச்சு சுத்தப் போறேன் போல, அந்த டாக்டர் சொன்ன மாதிரி! நான் நிஜமான லூசு!” என்றவளின் கண்களில் கண்ணீரை பார்த்தவனுக்கு விதார்தை அடித்து துவைக்கும் வெறி கிளம்பியது.

ரஞ்சனியைத் தவிர வேறு யாருக்கும் வீட்டினில் அவள் கடித்தது தெரியாது.. யாருக்கும் யாரும் தெரியவிடவில்லை.

“வர்ஷ் இந்த உலகத்துல நான் இருக்குற வரை உனக்கு எதுவும் ஆகாது! இப்படி எல்லாம் நினைக்காதே!” என,

“ப்ச், வேண்டாம்! நாம வேற பேசலாம்!” என்று முடித்து விட்டாள்..

“எதைப் பேசினாலும் வேற பேசலாம்னா, நான் என்ன பண்ண?” என்ற ஈஸ்வரின் கேள்விக்கு பதிலே இல்லை!

ஆனால் அவன் காய்ச்சலில் விழுந்த அந்த மூன்று நான்கு நாட்கள் அவனை நன்றாக கவனித்துக் கொண்டாள்.. மூன்று வருடம் கோபம் கொண்டு பிரிந்தவள் போலத் தெரியவேயில்லை...

வெகு பக்கத்தில் அந்த நீல நிறக் கண்களை பார்க்கும் தன்னை தானே அவன் கட்டுப் படுத்திக் கொள்ள மிகவும் சிரமப்பட்டு விட்டான்..

அதன் பிறகு வந்த இந்த ஒரு மாதத்தில் ஐ பீ எல் வாங்குவது வெற்றிகரமாக நடந்து விட்ட போதும் அதனை சிறிதும் அனுபவிக்க முடியவில்லை.. எல்லோரும் அவனின் வெற்றியை அவனை ஆச்சர்யமாய் பார்க்க, அவன் வர்ஷினி தன்னை

பார்ப்பாளா என தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

இயல்பாய் இருந்தாளா? இயல்பாய் இருப்பது போல காட்டிக் கொள்கிறாளா? எதுவும் தெரியவில்லை. இதற்கு ஒரே படுக்கை தான், ஆனால் ஒட்டிக் கொண்டு படுக்கவில்லை.. தனித்தனியாய்.. இயல்பான தொடுகை கூட இல்லை.. அதற்கான சந்தர்ப்பங்கள் வரவில்லை.. ஈஸ்வருக்கு அவனாய் அருகில் செல்ல முடியவில்லை. பார்வையிலேயே தூர நிறுத்தினாள்.

ஒரு முறை சென்று அவளை கடிக்கும் நிலைக்கு தள்ளியதால் அது வேறு பயம் கொடுத்தது. என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறினான்.

என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் மண்டைக்குள் வர்ஷினி மட்டுமே ஓடிக் கொண்டு இருந்தாள் ஈஸ்வருக்கு.

இன்னும் யார் வீட்டிற்கும் செல்லவில்லை.. யாராய் இருந்தாலும் இங்கே வந்து தான் பார்த்து சென்றனர்.. என்ன எல்லோரிடமும் சகஜமாய் பேசினாள்.. அதுவரையில் நிம்மதி.

திரும்ப வேலை வேறு செய்து கொண்டிருந்தாள், கார்டூன் போல.. ஐ பீ எல் அணி வாங்கும் விஷயம் தலைக்கு மேல் இருந்ததால் ஈஸ்வர் அதற்கு மேல் எதுவும் கவனிக்க முடியவில்லை. இது முடிந்ததும் பார்த்துக் கொள்ளலாம் என விட்டு விட்டான்.

என்ன ஒரே ஆறுதலாக டைவர்ஸ் பற்றியோ, வீட்டில் இருந்து போவது பற்றியோ பேசவில்லை. ஐ பீ எல் முடிந்ததும் புது வீட்டு வேலைகள் வேறு தலைக்கு மேல் இருந்தது..

இப்படியாக ஈஸ்வரின் நினைவலைகள் செல்ல.. இதோ இப்போது அவளிடம் "தூரப் போ" என்றவன், முடியாமல் இழுத்து மேலே போட்டுக் கொண்டான்..

அந்த நீல நிறக் கண்களை தீவிரமாய் பார்க்கவும்.. தயங்காமல் அந்த பார்வையை எதிர்கொண்டவள்.. அவனுக்கு சற்றும் சளைக்காமல் பதில் பார்வை பார்க்க, இன்னும் இன்னும் அவனுக்கு கோபம் வந்தது.. கூடவே காதலும் வந்தது.. பித்தும் பிடித்தது... கட்டுப்பாடு இழக்க ஆரம்பித்தவனை இன்னும் இழக்க வைத்தது வர்ஷினியின் பேச்சு..

"ரொம்ப அழகா இருக்காங்க இல்லை" என்றாள்.. அவள் சொல்லியவுடனயே யாரைச் சொல்கிறாள் எனப் புரிந்தது.. ஒரு மாதம் வரையிலும் பேசாமல் இருந்ததினால் அவள் ஐஸ்வர்யாவைப் பார்த்ததை பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளவில்லை என்று நினைத்திருக்க.. இல்லை நான் மறக்கவில்லை என அவளின் பேச்சு காட்டிக் கொடுத்தது.

கூடவே "அவங்களைக் கல்யாணம் பண்ணியிருந்தா நிம்மதியா இருந்திருப்போம்னு தோணுதா!" என,

ஈஸ்வருக்கு கண் மண் தெரியாத கோபம் வந்தது.. பேசும் அவளின் இதழ்களை.. "சே" என்று கூறி தலையை உதறிக் கொண்டான்.. "பேசாத என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது.. இவ்ளோ சொல்றேன்.. ஆனாலும்.." என்று நிறுத்தி அவன் தாடையை கடித்த விதம்.. கூடவே அவளை இறுக்கிப் பிடித்த விதம்.. வேறு யாராயிருந்தாலும் பயந்திருப்பர்.. வர்ஷினி ம்கூம்.. வலிக்குமே என்று அவனாகத் தான் பிடியை தளர்த்தினான்..

“இன்னும் கொஞ்சம் நாள்ல தான் நீ பைத்தியமாகப் போற, ஆனா ஏற்கனவே நான் ஆகிட்டேன் உன் மேல” என்றவன்..

“அவ கிட்ட காதல் சொன்ன பிறகு கிட்ட தட்ட ஆறு மாசம் கழிச்சு உன்னைப் பார்த்தேன்.. அதுவரை அவ என்னைத் தொடணும்னு தோணினது இல்லை, நான் அவளைத் தொடணும்னு தோணினது இல்லை.. தொட்டதும் இல்லை!”

“ஆனா உன்னை நேர்ல பார்க்கும் போது மட்டுமில்லை, நினைச்சாக் கூட..” என்றவன்.. வார்த்தைகளை நிறுத்தி.. “கல்யாணம் ஆனா பிறகு என்னோட அந்த நடத்தைக்கெல்லாம் காரணம் அதுதான்.. தப்பு தான்! பட் ஐ பேட்லி நீடட் யூ.. அதுதான் உன்னை என்கிட்டே வரவெச்சேன். நான் வந்திருந்தேன் உன்னை எந்தளவு ஹர்ட் பண்ணியிருப்பேன் எனக்கே தெரியாது .. அதுக்கு கிடைச்ச பரிசு தான் நீ என்னைப் பார்த்து சொன்ன அந்த வார்த்தை.. என் மனைவி என்னை பார்த்து அந்த வார்த்தை சொல்றதுன்றது, என்னை உயிரோட பொதச்சதுக்கு சமானம்.. ஆனா நீ இப்படி யோசிப்பேன் நான் நினைச்சதே இல்லை!”

“நம்ம கல்யாணம் நடந்த பிறகு ரொம்ப ரொம்ப பலகீனமானவனா மாறிட்டு வந்தேன்.. ஒரு நாள் கூட நீ இல்லாம என்னால தூங்க முடியாது... ஆனா அந்த நாட்கள் என் வாழ்க்கையில வந்ததுனால தான் நான் நார்மல் ஆனேன். இல்லை முடிஞ்சு போயிருப்பேன்”

“திகட்ட திகட்ட அனுபவிச்சேன்.. அப்புறம் தோணினது இது லைஃப் கிடையாது இல்லையா.. இதுல இருந்து வெளில வரணும்னு நினைச்சு

உன்னை விட்டு தள்ளி நின்னேன்.. இதுல பணப் பிரச்சனை, ரஞ்சனி நடுவில"

"இப்படி எல்லாம் ரொம்ப சுயநலமா யோசிச்சு உன்னை தொலைச்சிட்டேன்.. என்னையே சுத்தி வர்ற ஹஸ்பன்ட் வேணும்னு நீ கேட்டது போல என்னால இருக்க முடியலை. ஆனா எப்பவும் உன்னை மறந்தது இல்லை! உன்னை மட்டும் தான் நினைச்சு இருப்பேன்!"

"உனக்கு சொன்னாப் புரியாது" என்றவன் அவளை ஒரே தள்ளாக கீழே தள்ளியவன்.. எழுந்து அறை தாளிடப் பட்டு இருக்கிறதா எனப் பார்க்க.. இல்லை வெறுமனே தான் சாத்தி வந்திருந்தாள்.. சென்று அதனை சாற்றி வர..

அவன் எப்படி தள்ளினானோ அப்படியே அசையாமல் பார்த்த படி தான் இருந்தாள் தீவிரமாக... தள்ளியதில் அவளின் நைட்டியும் முழங்கால்களுக்கு மேல் ஏறி இருக்க.. அதை சரி செய்யும் எண்ணம் சற்றும் இல்லாதவளாக அப்படியே தான் கிடந்தாள்..

அவள் தளர்த்திய டையை கழற்றி வீசியவன்.. கோட்டையும், ஷர்ட்டும் கூட கழற்றி வீச..

இன்னுமே தீவிரமாகத் தான் அவனைப் பார்த்தாள்..

அருகில் நெருங்கிய போதும் அப்படியே தான் படுத்திருக்க.. நின்று பார்வையை அவள் மீது முழுதாய் ஓட்டினாலும் கண்களில் வந்து நிலைக்க... அதில் தெரிந்த தீவிரத் தன்மை..

"என்ன நான் பண்ணினேன்?' என்று கேட்க வைக்க..

"என்னவோ திகட்ட திகட்ட அனுபவிச்சேன்! என்னை பலகீனமாகினதை நான் தவிர்த்தேன்னு எவ்வளவு ஈஸியா சொல்றீங்க.. ஃபீலிங்க்ஸ் ஆர்

சேம் னா.. எத்தனை நாள் நான் அதுக்கு தவிச்சிருப்பேன்னு உங்களுக்கு புரியலையா..” என எழுந்து அமர்ந்தவள்.. அப்படியே சுவரில் சாய்ந்து கொண்டாள்.

அதிர்ந்து அவளைப் பார்த்தான்.. “அப்போ கூட யு ஆர் ஃபிட் ஃபார் நத்திங்னா சொன்னேன், நான் தானே ட்ரக்ஸ் தேடித் போனேன்.. இன்னும் இன்னும் பிரச்னையை தேடிக்கிட்டேன்.. இவ்வளவு நாளா தனியா சுத்திட்டு இருக்கேன்” என்றவளின் பார்வையில் தீவிரத்தோடு கண்ணீரும் சேர்ந்து கொண்டது..

“எஸ், எப்பவும் தனியா இருந்த ஒரு பொண்ணு! திடீர்ன்னு ஒரு புது உலகத்துக்குள்ள கூட்டிட்டு போறீங்க, அப்புறம் திடீர்ன்னு விட்டுட்டு போயிட்டீங்க.. அந்த ஏஜ்ல எனக்கு அதை ஹேண்டில் பண்ணத் தெரியலை.. உங்க கிட்ட சொல்லவும் முடியலை.. அப்படி எப்படி சொல்ல முடியும்!”

“முதல்ல என்கிட்டே மிஸ் பிஹேவ் பண்ணுனீங்க, அதுல இருந்து நான் வெளில வர்றதுக்குள்ள.. நான் வேற யாரையாவது கல்யாணம் பண்ணினாலும் என்னை தூக்கிடுவேன்னு சொன்னீங்க.. ஒரு பதினெட்டு வயசு பொண்ணுக்கு அது எவ்வளவு ஸ்ட்ரெஸ் குடுக்கும் நீங்க யோசிக்கலை.. அப்புறம் எங்கப்பா சாகப் போறது.. திரும்ப கல்யாணம் செஞ்சு இப்படி ஒரு நடத்தை.. எல்லாம் சேர்ந்து தான் என்னை ட்ரக்ஸ் எடுக்க வெச்சது”

“ஆனா நீங்க சாரி கேட்டா நான் அக்சப்ட் பண்ணிக்கணும், எல்லாம் மறந்து ஒரு ஹேப்பி ஃலைப் உங்களோட வாழணும்.. நீங்க அப்போ எனக்கு வேணும்னு சொல்லியிருந்தாலும் நான்

கெட்டப் பொண்ணு.. நீங்க இப்போ எனக்கு வேண்டாம்னு சொன்னாலும் நான் கெட்டப் பொண்ணு! ஹவ் ஃபிஷி தி லைப் இஸ்” என்று சோர்வாக சொன்னவள்.. அடுத்த நொடி ஒரு நிமிர்வோடு..

“ஆனா நான் இப்படி தான்.. இந்த மாதிரி நான் இருக்கக் கூடாதுன்னு நீங்க நினைச்சா, நீங்க வேற யாரையாவது தான் கல்யாணம் பண்ணியிருக்கணும்.. என்னை ஏன் பண்ணுனீங்க” என்று ஆவேசமாக கத்தியவள்..

“நீங்க என் மேல பைத்தியமாயிருந்தாலும், என்னை சுத்த வைக்க தான் ட்ரை பண்ணினீங்க.. நீங்க அப்படின்னு காட்டினதேயில்லை.. ஈவன் இன் அவர் இன்டிமேட் ஃலைப்.. இதை நான் எப்படி மன்னிக்க முடியும்!” என ஆக்ரோஷமாக பேச..

ஈஸ்வர் அப்படியே நின்று விட்டான்.. ஆழ் மனதின் சத்தங்கள் அவனுக்கு கேட்கவேயில்லை.. கண்மூடி சில நிமிடங்கள் நின்றான்.. அவனின் முகத்தில் தெரிந்த வேதனை வர்ஷினியை மேலே பேச வைக்கவில்லை.

அந்த இடத்தில இருந்த ஒரு அமைதி இருவரையுமே உயிரோடு புதைந்து விடச் சொல்லியது!

சில நிமிடங்களில் கண் திறந்தவன்.. “ஆமாம்! எல்லாம் பண்ணிட்டேன்! நீ சொன்ன மாதிரி ஒத்துக்கிட்டா நடந்தது இல்லைன்னு ஆகிடாது! ஆனா இப்போ ஒன்னும் பண்ண முடியாது! உன்னை விடவும் முடியாது! நான் சாகவும் முடியாது! உனக்கு நான் எனக்கு நீ தான்!” என்றவன்..

“பாஸ்ட் இஸ் பாஸ்ட்! ஒரு சேன்ஸ் கொடேன் வர்ஷ்” என்றான் தளர்ந்த குரலில்..

“சேன்ஸ் எல்லா விஷயத்துலையும் கேட்டு நீங்க குட்ன்னு யாருக்கு ப்ரூவ் பண்ண போறீங்க! எனக்கா?” என அலட்சியமாய் அவள் கேட்ட விதத்தில்...

ஈஸ்வர் மீண்டும் தீவிரமாய் அவளைப் பார்க்க.. “ஐ ஹேவ் சீன் ஆல் வொர்ஸ்ட் பார்ட் ஆஃப் யூ.. நீங்களும் என்னோட வொர்ஸ்ட் பார்ட் எல்லாம் பார்த்துட்டீங்க.. அப்போ யாருக்கு யார் ப்ரூவ் பண்ணனும்.. நாம நாமளா இருந்தா போதும்!”

“எப்படி நானா இருக்க? நீ எப்போ போயிடுவியோன்னு பயமா இருக்கு!”

“சொல்ல வைங்க! உங்களை விட்டு போகமாட்டேன்னு சொல்ல வைங்க! எனக்கு பிடிச்சிருந்தாலும் ஒத்துக்க பிடிக்கலை இல்லையா? முடிஞ்சா ஒத்துக்க வைங்க!” என்று திமிராகப் பேச..

“உன்னை தான் பிடிச்சிருக்கு, உன்னை விட்டு போகமாட்டேன்னு சொல்ல வெச்சிட்டேன்னா, எனக்கு குழந்தை பெத்துக் கொடுக்கறியா” என்று அவனும் திமிர் பேச..

“பார்க்கலாம்” என்பது போன்ற பாவனையைக் கண்களில் காட்டினாள்.

“எவ்வளவு வேணா என்னை பார்த்துக்கோ வர்ஷ், அதுக்கு தானே வெயிட் பண்றேன்” என்று பேசியபடி அருகில் வந்தவன்.. தள்ளியதால் விலகியிருந்த அவளின் ஆடையை சரி செய்தபடி.. அவளின் இடையில் கையினைக் கொடுத்து தூக்கியவன்..

“சொல்ல வைப்பேன்! அதுக்கு அப்புறம் இந்த மாதிரி ப்ளூ அய்ஸ்சோடா நமக்கு குழந்தை பிறக்கற வரை, நீ பெத்துக் கொடுத்துட்டே இருக்கணும்” என்று ஈஸ்வர் சொன்ன விதத்தில் வர்ஷினியின் நீல நிறக் கண்கள் பெரிதாக விரிய..

அதில் தொலைந்து போக விரும்பி ஈஸ்வரின் முகம் நெருங்க.. தானாக அந்த கண்கள் மூடியது.. அந்த கண்களின் மேல் மென்மையாய் முத்தமிட்டான். இருவர் மனதிலுமே அடித்துக் கொண்டிருந்த புயல் அப்படியே ஓய்ந்தது..

ஆதூரமாக அவளை அணைத்து சில நிமிடங்கள் நிற்க.. வர்ஷினியின் கண்ணீர் அவனின் வெற்றுக் கழுத்தில் படவும்.. “சாரி பேபி! சாரி!” என்றான்.

மெதுவாக அவனிடம் இருந்து விலகி.. “நான் ரொம்ப கெட்டப் பொண்ணு தானே!” என,

“ஆமாம்!” என்று வாய்விட்டு சொன்னவன்.. “ஆனா நீயா ஆகலை, நான் தான் அப்படி உன்னை பண்ணிட்டேன்! முரளி கல்யாணத்துல பார்த்த அந்த பொண்ணை நான் தான் என்னென்னவோ பண்ணிட்டேன்! ஆனா பார்த்த நாள்ல இருந்து இதுவரை என்னை அவளும் என்னென்னவோ செஞ்சிட்டு இருக்கா!”

“எல்லாம் சரியாகிடும்!” என அவளுக்கு சொல்வது போல அவனுக்கும் சொல்லிக் கொள்ள.. வர்ஷினி சென்று அமைதியாய் படுத்துக் கொண்டாள்.. “தூங்கு” என்று சொல்லி அவளுக்கு போர்த்தி விடவும்..

“டிட் ஐ ஹர்ட் யூ” என்றாள் கண்களில் சற்று கலவரத்தோடு!

“நோ பேபி, நோ! நாட் அட் ஆல்.. ப்ளீஸ் இப்படி பேசாதே! என்னோட மிஸ்டேக்ஸ்...” என ஆரம்பித்தவனின் தொண்டையில் எதோ அடைத்துக் கொள்ள பேசவே முடியவில்லை.. ஒரு கசந்த முறுவலோடு நகர்ந்தான்.

## மோகம் நான்! மோக முள் நீ!

**அத்தியாயம் எண்பது:**

## நிஜம் சில சமயம் ஜீரணிப்பது கடினம்.. அந்த நிஜங்கள் சில சமயம் மனிதரின் இயல்புகளை மாற்றிவிடுகிறது! ஏன் எதற்கு என்ற காரணம் வகுக்க யாராலும் முடியாது!

ரஞ்சனி காலையில் குழந்தையை பால் குடிக்க வைத்துக் கொண்டிருக்க.. “எங்கயோ போயிட்டார் உங்க அண்ணன்” என்றபடி நாளிதழை ரஞ்சனியிடம் காட்ட... அங்கே ஜகனும் ஈஸ்வரும் அவளின் கண்களுக்கு தெரியவில்லை பின் நின்ற அஸ்வின் தான் தெரிந்தான்..

“என்னை மிரட்டி என் வாழ்க்கையை ஒரு நாளில் மாற்றியவன். பெற்றோருக்குத் தெரியாமல் திருமணம் செய்து கொண்ட பழி சொல்லுக்கு ஆளாக்கியவன்... ஆனால் இன்று என் அண்ணன்களுக்கு இன்றியமையாதவன்”

ஒரு ஆவேசம் மனதினில் பொங்க.. அந்த பேப்பரைத் தூக்கி விசிறி அடித்தாள், “ரஞ்சி என்ன இது?” என,

“அவன் நிக்கறான், அப்புறம் அந்த பேப்பரை எதுக்கு என்கிட்டே காட்டறீங்க” என்று கத்த...

“ஏன் முன்ன நிக்கற உன் அண்ணனுங்க கண்ணுக்கு தெரியலையா? எவ்வளவு பெரிய அச்சீவ்மென்ட் இது!”

“என்கிட்டே அவன் இருக்குறது எதுவும் காட்டக் கூடாது அவ்வளவு தான்!”

“ஷ், எதுக்கு இவ்வளவு கோபம்” என.. இந்த சத்தங்களில் பால் குடித்துக் கொண்டிருந்த குழந்தை அழ, குழந்தையை தூக்கிக் கொண்டவன், கையினில் வைத்துக் கொண்டு சிப்பர் கொடுக்க.. குழந்தையின் கண்களில் கண்ணீர் பார்க்கவும் அதனை எழுந்து துடைத்து விட்டாள்.

பத்து அவளைப் பார்க்கவும், “ம்ம்ம்ம், சொல்லுங்க நல்லவரே.. என்ன சொல்ல வர்றீங்க” என கிண்டல் பேச,

“ஆரம்பித்து விட்டாயா?” என்பது போல பத்து ஒரு லுக் விட..

“நீங்க ரொம்ப நல்லவங்க, நீங்க இப்படித் தான் பேசுவீங்க, ஆனா நான் அப்படி இல்லை” என்று பேச..

“ஆரம்பிக்காதே ப்ளீஸ்” என பத்து பாவமாய் பார்த்த போதும்.. ரஞ்சனி விடவில்லை.. விளாசித் தள்ள.. “நீ சரி பட்டு வர மாட்ட” என்றவன்.. அவளை இழுத்து அணைத்துப் பிடிக்க.. “விடுங்க, விடுங்க” என்று திமிறியவளிடம் “இதெல்லாம் பேசும் முன்ன யோசிச்சிருக்கணும்” என.

“நான் என்ன தப்பா சொன்னேன் நிஜம் தானே!” என்றாள் அப்போதும்..

பத்துவின் முகத்தினில் புன்னகை பூத்தது.. “கண்டிப்பா உண்மை தான்.. அதான் என் கையில இருக்கானே” என

“வெவ்வவே” என பழிப்பு காட்டி சென்றாள் ரஞ்சனி..

ஒரு புன்னகையோடு செல்லும் அவளையே பார்த்திருந்தான்.. ஒட்டியும் ஒட்டாத அவர்களின் வாழ்க்கையை சீர்படுத்தியது முழுக்க முழுக்கக ரஞ்சனியே..

என்ன முயன்றும் அவனால் ரஞ்சனியை நெருங்க முடியவில்லை என்பது தான் உண்மை.. அவனின் தந்தையை பார்த்து பார்த்து வளர்ந்ததாலோ என்னவோ.. ஒரு பெண்ணை மனைவியாகினும் அவளின் அனுமதியின்றி அவனால் நெருங்கவே முடியவில்லை.. வருடங்கள் கடந்த போதும்..

இதில் கோபத்தில் அடித்து.. பின் தேவையற்ற வார்த்தைகள் பேசி.. ஈஸ்வரோடு சண்டையிட்டு.. என இன்னும் இன்னும் சிக்கலாக்கிக் கொண்டான்..

ஒரு கட்டத்தில் அந்த திருமணம் நிலைக்குமா என்ற சந்தேகமே அவனுக்கு வந்து விட்டது.. பல மாதங்கள் ரஞ்சனி அவனிடம் முகம் கொடுத்து பேசவேயில்லை..

இன்னுமே எப்படி சரியாகிற்று என அவனுக்குத் தெரியாது.. ரஞ்சனியாகத் தான் சரியாக்கிக் கொண்டாள். யோசனைகளோடே அமர்ந்திருந்தான்.

அதன் பிறகு ஈஸ்வரோ வர்ஷினியோ முடிந்ததைப் பற்றி பேசவேயில்லை.. ஆனால் பேசி முடித்த அடுத்த நாள் காலையில் அவள் விழித்த போது வெளியே செல்ல தயாராகி நின்றிருந்தான் ஈஸ்வர்..

தோற்றத்தில் சற்று கவனமெடுத்துத் தயாராகி இருக்க.. அவனை தான் பார்த்து இருந்தாள்.. அவள் விழித்தது தெரிந்து அவளைப் பார்த்தவன்..

“ஹாப்பி டே” என்றவன்.. வர்ஷினி தன்னை கவனித்து பார்ப்பது புரிந்து, “இன்னைக்கு தான்

முதல் முதலா என்னை பார்க்கற ஃபீல் கொண்டு வா வர்ஷ் மனசுல" என,

அதற்கு பதில் எதுவும் பேசாத போதும் முகத்தில் புன்னகை படர அவனைப் பார்த்தாள்.. காலையில் விழித்தும் இருக்கும் ஒரு சோம்பலான புன்னகை.. அணைத்து முத்தமிட தோன்ற.. அருகில் நெருங்கியவன்.. செல்லமாக கன்னம் தட்டி.. "டைம் ஆச்சு" என்று சொல்லி அவன் கிளம்ப..

முதன் முதலில் பார்ப்பது போல அவளால் முடியவில்லை.. முதல் நாள் முரளி திருமணத்தில் அவனை பார்த்ததை தான் நினைத்துப் பார்த்தாள். முகத்தில் ஒரு முறுவல் தானாகவே வந்தது..

ஈஸ்வரிடம் எல்லாம் சொல்லிவிட்டதால் மனது லேசாகியிருக்க.. அதன் மாற்றங்களை உடலில் உணர்ந்தாள் என்றால் மிகையல்ல.. பாரமான உடலே லேசானது போல இருந்தது..

இதோ இப்போது காரில் போகும் போதும் அதனை உணர்ந்தாள்.. அவள் காரோட்ட.. மறுபக்கத்தில் தாஸ்.. பின்புறம் அஸ்வின்..

"மெதுவா போங்க பாப்பா" என்று தாஸ் சொல்லிக் கொண்டே இருக்க.. சொல்லச் சொல்ல வேகமெடுக்கத் தோன்ற.. வேகமெடுத்தாள்.. ஈ சி ஆர் ரோட்டில்.. அவளின் உடன் படித்தவர்கள் ஒரு ஸ்டுடியோ வைத்திருக்க அதனை பார்வையிடச் சென்று கொண்டிருந்தாள்.

"நீங்க கொஞ்சம் பேசாம இருங்க!" என்று தாஸை அதட்டினான் அஸ்வின்.. "நீங்க சொல்லாம இருந்தாக் கூட மெதுவாப் போவாங்க.. சொல்லச் சொல்ல இன்னும் வேகமா போறாங்க!" என்று அதட்டிக் கொண்டிருந்தான்..

நிஜமாக பயமாக இருந்தது.. நூற்றி அறுபதை தொட்டுக் கொண்டிருந்தது. அது ஈஸ்வரின் போர்ச், ஆம்! ஈஸ்வர் வைத்திருந்ததை எனக்கு வேண்டும் என்று சொல்லியிருந்தாள்..

“அஸ்வின்” என்று வர்ஷினி ஒரு அதட்டல் குரல் கொடுக்க.. “ஆ ஊன்னா என்னை வாயை மூட வெச்சிடுங்க.. இந்த விஸ்வா வெளில தான் டெர்ரர் பீஸ்.. உங்களை ஒன்னுமே சொல்றதில்லை” என்று ஈஸ்வரையும் பேசினான்.

ஈஸ்வரின் பேர் சொல்லவுமே.. கோபமாக “நான் கூப்பிட்டேன், அவர் வரலை!” என்று புகார் படிக்க,

“எங்கேயாவது போகணும்னா முன்னமே சொல்லணும், அப்போ தான் ஃப்ரீ பண்ணுவாங்க, திடீர்ன்னு சொன்னா வேலையிருக்காதா அவருக்கு.. முன்னமே சொல்லிடுங்க, உங்களுக்கு ஃப்ரீ பண்ணாம அவர் யாருக்கு பண்ணுவார். நாங்க உங்க கூட வந்து இப்படி உயிரை கைல பிடிச்சிட்டு இருக்க வேண்டாம்” என்று ஈஸ்வருக்கு பரிந்து பேசுவது மாதிரி வர்ஷினியையும் நக்கல் செய்ய..

“ப்ச், எனக்கொன்னும் இல்லை!” என்று அவசரமாகப் சொல்லி, “நாம போறோம் இல்லையா என் ஃபிரண்ட் அவன் தான் அவரை கூட்டிட்டு வாங்க வாங்கன்னு அத்தனை தடவை சொன்னான்.. இப்போ அவன் கிட்ட என்ன சொல்வேன்!” என்று குறை பட்டுக் கொண்டே இடம் வந்ததும் நிறுத்தினாள்..

“என்னது கூட்டிட்டு வாங்கன்னு சொன்னானா? எவன் அவன்? அவ்வளவு பெரிய ஆளா? அவன் தான் வந்து பார்க்கணும் அவரை! இன்னும் நீங்க

வளரணும்! அவரோட உயரம் என்ன? எப்போ கத்துக்குவீங்க இதை!" என சொல்லியும் கொடுக்க..

"அவரோட உயரம் என்ன? இருங்க பக்கத்துல நின்னு காட்டுறேன்!" என வர்ஷினி சொல்ல..

தாஸ் சிரித்து விட்டான்.. "ஹச்சோ பாப்பா, அவர் அப்படி சொல்லலைங்க!" என,

"எப்படி சொன்னாலும் எனக்கும் தெரியும்.. அவன் என் ஃபிரண்ட் உரிமையா கேட்கறான்.. ஃபிரண்ட் ஷிப் குள்ள ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் கிடையாது" என,

அஸ்வின் அவளை முறைத்துப் பார்த்தான், பார்வை சொன்னது "உங்க ஃபிரண்ட்ஸ் தானே எனக்குத் தெரியாததா" என்பது போல.. ஆனால் அதை வர்ஷினி கவனிக்கவில்லை.

அவள் இறங்கிக் கொள்ள.. தாஸ் காரை பார்க் செய்யப் போக.. பெரிதாக இருந்த அந்த ஸ்டுடியோவை வெளியில் இருந்த கவனித்தாள்.. அந்த இடம் பெரிதாக இருக்க.. ஆட்கள் பரபரப்பாக உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருக்க.. எதோ ஷூட் நடக்கிறது என்று புரிந்தது.

உள்ளே செல்ல அவளை தொடர்ந்தான் அஸ்வின்..

அங்கே ஷூட் தான் சென்று கொண்டிருக்க.... இவளை பார்த்ததும் "ஹேய்ய்ய்யய்ய், வெல்கம், வெல்கம்!" என்று வேகமாக ஒருவன் வந்தான்..

"எப்படியிருக்க? சர் எங்கே?" என..

"அவருக்கு வேலை, வரமுடியலை, ஐ அம் ஃபைன் நீ எப்படி இருக்க?" என்று அவள் பேச ஆரம்பிக்க..

"ரொம்ப வெயிட் குறைஞ்சிட்ட சங்கீதா, லுக்கிங் மோர் ப்ரெட்டி லைக் எ மாடல்" என ..

ஒரு புன்னகை மட்டுமே பதிலாகத் தந்தவள்.. “திஸ் இஸ் மை ஃபிரண்ட் அஸ்வின்.. திஸ் இஸ் ப்ரித்வி!” என்று இருவரையும் அறிமுகம் செய்து “எப்போ ஸ்டுடியோ லாஞ்ச் பண்ணுனீங்க” என,

“ஜஸ்ட் த்ரீ மந்த்ஸ் தான் ஆச்சு” என அவன் சொல்லும் போதே “சர், ஷாட் ரெடி” என யாரோ கூப்பிட..

ப்ரித்வி தயங்க.. “போ ப்ரித்வி, நான் வெயிட் பண்றேன், ஒன்னும் அவசரமில்லை! ஸ்டுடியோ பார்க்கத் தானே வந்திருக்கேன்!” என..

அவர்களுக்கு சேர் போட சொல்லி.. ப்ரித்வி சென்று விட,

“அதென்ன சங்கீதா சொல்றாங்க” என்று அஸ்வின் கேட்க,

“என் முழு பேர் ஞாபகம் இல்லையா சங்கீத வர்ஷினி.. வீட்ல எல்லோருக்கும், ஆனா வெளில மோஸ்ட்லி சங்கீதா தான்!” என,

அதற்குள் அவளின் இன்னொரு தோழி நிஷா வந்திருந்தாள்.. “சங்கீதா எப்படி இருக்க?” என வேகமாக அருகில் வர..

“நீ எங்கே இங்கே?” என்றவளிடம்.. “அந்த பக்கி என்னை பத்தி சொல்லலையா, நானும் இதுல ஒரு பார்ட்னர்.. இன்னும் ரெண்டு பேர்..” என ஆரம்பிக்க..

“அதெல்லாம் ஒன்னும் சொல்லலை நிஷா அவன்” என.. நிஷா ஈஸ்வரை பிரிந்து வர்ஷினி ஹாஸ்டல் வந்த போது அவளின் ரூம் மேட்.

“நீ எங்க யாரோடவும் டச்ல இல்லை” என்று நிஷா குறைபட,

“இல்லை நிஷா, யு எஸ் போனதுக்கு அப்புறம் யாரோடவும் இல்லை. அன்னைக்கு ஷாப்பிங்

போனப்போ தான் இவனைப் பார்த்தேன்.. ரொம்ப இன்வைட் பண்ணினான் வான்னு... வந்தேன்!" என,

"என்ன இன்வைட் பண்ணினானா? இது உன்னோட இடம்.. நீ மறந்திருக்கலாம்.. நாங்க எப்பவும் உன்னை மறந்தது இல்லை" என்று வளவளவென்று பேச ஆரம்பிக்க..

வர்ஷினி அவ்வளவு பேசுவாள் என்பதே அஸ்வினிற்கு அப்போது தான் தெரியும்..

இன்னும் இருவரும் வர... "இது ராஜ், இது மோஹித்" என்று அவர்களையும் அஸ்வினிடம் அறிமுகம் செய்ய...

"நீங்க தானே ஐ பீ எல் டீம் மேனேஜர்" என,

"எஸ், எஸ், இவர் தான் அந்த டேமேஜர்!" என்று வர்ஷினி கிண்டல் அடிக்க..

அந்த இடமே கலகலப்பானது.. அவர்கள் அஸ்வினிடம் பேச ஆர்வம் காட்ட.. இது அஸ்வினிற்கு மிகவும் புதிது, நிறைவாய் உணர்ந்தான். எப்படி இருந்த அவனின் வாழ்க்கை எப்படி மாறிவிட்டது.

அப்போது தான் ஷூட் முடித்து.. ப்ரித்வி வந்தவன்... அவனும் சேர்ந்து கொள்ள, அஸ்வின் ஃபோனில் கேம் ஆடிக் கொண்டு அவர்களின் மீது ஒரு கண் வைத்துக் கொண்டு இருக்க..

"அவர் கூட மாடல் மாறி இருக்கார்.. நடிப்பாரா?" என ப்ரித்வி அஸ்வினை காட்டிக் கேட்க, அப்போது அங்கே வர்ஷா வந்தாள்.. அவள் தான் அந்த விளம்பரத்தில் நடித்த மாடல்!

முதலில் அவள் அஸ்வினை கவனிக்கவில்லை... ப்ரித்வி இடம் "நான் கிளம்பறேன்" என,

“ஓகே, வர்ஷா பேமென்ட் நாளைக்கு குடுத்து விடறோம்!” என

அப்போது தான் அஸ்வினை கவனித்தவள் “ஹாய், அஸ்வின்!” என,

அதுவரையிலும் வர்ஷினி அவளை பார்த்தாலும், கவனிக்கவெல்லாம் இல்லை.. யார் என்பது போல பார்க்க..

“ஓஹ் ஹாய்” என்றபடி எழுந்து நின்று கை குலுக்க..

“எங்கே இங்கே? எப்படி இருக்காங்க விஷ்வேஷ்வரன்?” என,

இப்போது நன்றாக அவளை கவனித்தாள், ஆனாலும் ஒரு மிஸ்டர் போடாமல், ஒரு சர் போடாமல், அவள் ஈஸ்வரின் பெயரைச் சொன்னது சற்று கடுப்பைக் கிளப்ப..

அஸ்வினை ஒரு பார்வை பார்த்தாள்.. அஸ்வினும் உடனே வர்ஷினியை தான் பார்த்தான். அதுவரையிலும் சலசலவென்று பேசிக் கொண்டிருந்தவர்கள், எல்லாம் அஸ்வினையும் வர்ஷாவையும் தான் கவனித்தனர்.

அந்த அமைதி, அஸ்வினின் முகத்தினில் தெரிந்த ஒரு பாவம்..

“என்ன?” என்று வர்ஷாவை கேட்க வைக்க.. “ஹி இஸ் மை பாஸ்! எங்க பாஸை இப்படிக் கூப்பிடறதை நாங்க விரும்ப மாட்டோம்!” என

“உங்களுக்கு தானே பாஸ்! எனக்கு இல்லையே!” என வர்ஷா சிரித்தவாரே சொல்ல..

“ஓஹ், நீங்க எங்க டீமல் கண்டினியு பண்ணலையா, ஃபைன்!” என உடனே அஸ்வின் சற்று கடுமையாகவே சொல்ல..

“நான் எப்போ அப்படிச் சொன்னேன்” என வர்ஷா சொல்ல,

“எங்க டீம்ல நீங்க இருந்தா இப்படி சில விதிமுறைகளை பின் பற்றி தான் ஆகணும்!” என்று அஸ்வின் இன்னும் சீரியசாகப் பேச.. அந்த இடம் சற்று டென்ஷன் ஆனது.

இந்த மாடல் உலகம் வந்த பிறகு.. அவள் நடித்த விளம்பரங்கள் நன்றாகப் பேசப் பட.. இப்போது பிரபல நடிகர் இருவரின் படத்திலும் நடிக்க.. தெலுங்கிலும் பெரிய வாய்ப்புகள் வர.. வர்ஷாவை திரை உலகமும் விளம்பர உலகமும் சற்று தலையில் தூக்கி வைத்து ஆட.. அந்த கர்வம்.

கூடவே பழைய ஐ பீ எல் டீமிலும் அவளுக்கு அப்படி ஒரு மரியாதை! கூட அந்த ஓனரும் இவளிடம் வழிந்து கொண்டே திரிய, எப்போதும் பெரிய ஆள் போல அவள் நடந்து கொள்ள.. அந்த பாவனைகள் இங்கே செல்லுபடியாகாது என அவள் மறந்து விட்டாள். அஸ்வின் இப்படிப் பேசியதுமே அவனை அலட்சியமாய் பார்த்தாள்.

இதையெல்லாம் கூலாகத் தான் பார்த்திருந்தாள் வர்ஷினி.

“நீங்க டீம்க்கு மேனேஜர் தான், ஓனர் கிடையாது, பார்த்துப் பேசுங்க!” என,

“உங்களை பார்க்காம வேற எங்க பார்க்கிறேன்! உங்களை பார்த்து தான் பேசறேன்!” என்றான் அவளைப் போலவே அலட்சியமாக அஸ்வின்.

அது வர்ஷாவிற்கு கோபத்தைக் கொடுக்க..

“என்ன திமிரா?” என..

“ஹேய்! என்ன ஓவரா பேசற நீ?” என்று அஸ்வினும் பேச,

அதுவரை யாரும் தலையிடவில்லை.. அப்போது தான் ப்ரித்வி “கூல் வர்ஷா” என்றவன், “சங்கீதா என்ன பார்த்துட்டே இருக்க! உன் ஃபிரண்ட் கிட்ட சொல்லு!” என..

“அஸ்வின்” என்று அப்போது தான் வாயை திறந்தாள் வர்ஷினி!

திரும்பி அவளைப் பார்க்கவும்.. உதட்டின் மேல் கைவைத்து “பேசாதே” என்பது போல ஒரு சைகை செய்து.. “உட்கார்” என்பது போலவும் சேரைக் காட்டினாள்.

உடனே அமர்ந்து விட்டாலும் வர்ஷாவை முறைத்துப் பார்த்தான்! “ஹே, என்ன முறைக்கிற! இரு, உங்க பாஸ் கிட்ட சொல்றேன்!” என,

“எங்க பாஸோட பாஸ், இங்க தான் இருக்காங்க! சொல்லப் போனா என்னோட பெரிய பாஸும் அவங்க தான்! அவங்க கிட்ட சொல்லுங்க!” என்றான் அஸ்வின்.

“யாரு உங்க பாஸோட பாஸ்!” என பார்க்க..

“இதோ இவங்க!” என்று வர்ஷினியைக் காட்டினான்.

வர்ஷா பார்க்கவும் “சங்கீதா எங்க ஃபிரண்ட், கூட படிச்சவங்க.. விஸ்வேஸ்வரன் சர் ஃவைவ்” என..

“ஓஹ்! வைஃபா” என்று வர்ஷினியை அவசரமாக ஆராய..

வர்ஷினி தயங்கவேல்லாம் இல்லை, அவளைப் பார்த்து ஒரு அறிமுக புன்னகை பூக்க...

சட்டென்று முகத்தை புன்னகைக்கு மாற்றியவள் “ஹாய்” என,

சரியாக அந்த நேரம் உள்ளே வந்த தாஸ்.. “நம்ம சார் வந்திருக்கார், உள்ள வரட்டுமான்னு

கேட்டாருங்க பாப்பா!" என,

அங்கே எல்லோருக்கும் தாஸை தெரியும் அவன் தானே வர்ஷினியை தினமும் காலேஜ் கொண்டு விடுவான்..

"வந்திருக்காரா" என வர்ஷினி எழ...

"நீங்க இருங்க நான் போறேன்!" என்று அஸ்வின் செல்ல.. கூடவே ப்ரித்வியும் சென்றான்.

"உங்க மேனேஜர் பேசறார், நீங்க ஒன்னுமே சொல்லலை!" என்று கம்ப்ளைன்ட் வாசிக்க..

"அவருக்கு பாஸ் பக்தி அதிகம் அண்ட் அவர் சொன்னதும் சரி தான். எங்க சிஸ்டம்ல பேர் சொல்லிக் கூப்பிடற கார்ப்பரேட் கல்ச்சர் கிடையாது!" என புன்னகையுடனே அவள் சொல்ல.. புன்னகையுடன் சொன்னாலும், அதில் தெரிந்த நிமிர்வு, ஒரு கம்பீரம், நான் தான் இங்கே பாஸ் என்பது போன்ற ஆளுமை! அந்தக் கண்களில் தெரிந்த ஒரு அலட்சியம்.. அந்த அழகான நீல நிறக் கண்களை தான் வர்ஷாவும் பிரமித்துப் பார்த்தாள்.

ஆனாலும் என்னவோ அவமானமாய் தெரிந்தது வர்ஷாவிற்கு!

அதற்குள் ஈஸ்வர் உள்ளே வர.. வர்ஷினியின் பார்வை வர்ஷாவை விட்டு ஈஸ்வரிடம் நிலைக்க..

அருகில் வந்தவனிடம் "வரமாட்டேன்னு சொன்னீங்க!" என..

"அது மீட்டிங்க்கு முன்ன, ரூபாகிட்ட சொல்லிட்டு இருந்தேன்! நீ கூப்பிட்ட, நான் போகலைன்னு! மீட்டிங் ரூம் இழுத்து பூட்டி வெளில போடான்னு சொல்லிட்டா!" என,

"ஹ, ஹ, நம்பிட்டேன்!" என வர்ஷினி சிரிக்க..

ஈஸ்வர் என்ன பேசுகிறான் என்று அங்கிருந்த யாருக்கும் காது கேட்கவில்லை.. மெதுவாக அவளுக்கு மட்டும் தான் கேட்குமாறு பேசினான்.

“பின்னே மீட்டிங்க்கு எல்லாம் அரேஞ்ஜ் பண்ணிக் கொடுத்துட்டு நீயே பார்த்துக்கோன்னு ரூபா கிட்ட சொல்லிட்டு வந்தேனா என்ன? இல்லையே!” என பாவனையாக கண்களில் மட்டும் சிரிப்போடு சொல்ல..

வர்ஷினி வாய் விட்டு சத்தம் போட்டு சிரித்தாள். ஒரு சிறு மென்னகையுடன் ஈஸ்வர் பார்த்திருக்க.. அதனை பார்த்த வர்ஷாவிற்கு ஏனோ எரிச்சலாக வந்தது.. ஏன் என்றே தெரியவில்லை.. ஈஸ்வர் அவளை இன்னும் கவனிக்க கூட இல்லை..

அஸ்வின் பேசியது.. வர்ஷினி அவளிடம் பேசிய ஒரு நீயெல்லாம் எங்களுக்கு ஒரு ஆளா என்பது போன்ற பாவனை.. இப்போது ஈஸ்வர் கண்டுகொள்ளாதது.. “ஓஹ் இவர்கள் பெரிய ஆட்கள், நான் ஒன்றுமில்லாதவளா” என்ற ஒரு சிந்தனையைக் கொடுத்தது.. முன்பு அஸ்வினுக்கு இருந்தது மாதிரியான ஒரு சிந்தனை!

மெதுவாக ஈஸ்வர் அங்கிருந்தவர்களை பார்வையிட வர்ஷினி அவர்களை அறிமுகப் படுத்தியவள்.. வர்ஷாவின் புறம் வர.. “இவங்களை நீங்க தான் எனக்கு அறிமுகம் செய்யணும்” என்று ஈஸ்வரிடம் சொல்ல..

“எஸ், இவங்க நம்ம டீம் அம்பாசிடர் பழைய டீம்ல இருந்து அப்படியே ட்ரான்ஸ்ஃபர் ஆனாங்க” என்று சொன்ன விதமே..

முன்பே அவள் இங்கே இருப்பதை கவனித்து விட்டான் என வர்ஷாவிற்கு காமித்துக் கொடுத்தது.

ஆனாலும் திரும்பிக் கூட பார்க்கவில்லை என்பது இன்னும் இன்னும் அவமானமாய் தெரிந்தது.

“ஹல்லோ சர்” என்ற வார்த்தை தானாக வந்துவிட.. ஒரு தலையசைப்போடு அதனை ஈஸ்வர் ஏற்ற விதம்.. அப்படி நீ இந்த டீமில் இருக்க வேண்டுமா என்ற யோசனையை அவளுக்கு கொடுத்தது!

“உன் பேர் வெச்சிருக்காங்க வர்ஷ்” என வர்ஷினியிடம் சொன்னவன்.. “அதுதான் அவங்க இருக்கட்டுமா வேண்டாமான்ற தாட்டே வரலை” என்றவன்..

வர்ஷாவிடம் “இவங்க என்னோட பாஸ்!” என்று அஸ்வின் சொன்னது போலவே சொல்லி “சங்கீத வர்ஷினி!” என..

“என்ன இவனின் மனைவியின் பெயர் என்பதினால் என்னை வைத்திருக்கின்றானா? இதை விட என்னை யாரும் அவமானப் படுத்த முடியாது” என்று தோன்றியது!

**வருடங்களில் எதிரி உருவாவது வேறு! ஒரு நாளில் எதிரி உருவாவது வேறு! ஒரு நொடியில் உருவாவது வேறு! ஆனால் எப்படி உருவானாலும் எதிரி எதிரி தான்!**

## அத்தியாயம் எண்பத்தி ஒன்று:

**நான் நானாகத் தான் இருப்பேன்! அந்த “நான்” ஐ “நீ” யில் தேடப் போகிறேன்!**

“அந்த மாதிரி ஸ்டுடியோ வா உனக்கு வேணும்” என்று ஈஸ்வர் கேட்க...

“இல்லையில்லை, அதை விட இன்னும் பெட்டரா.. இது வேற.. எனக்கு வேலை ஃபுல்லா கம்ப்யுடர்ல தான்.. அது தெரியற மாதிரி பிக் ஸ்க்ரீன், ஸ்பெசிபிபிகேஷன்ஸ், அங்க யு எஸ் ல இருந்த

மாதிரி கூட கேமராவும் இருந்தா பரவாயில்லை. பட் எனக்கு அதுல யுசேஜ் கம்மி, ஆனாலும் காஸ்ட்லி தான் வேணும் நோ காம்ப்ரமைஸ்" என ஆர்வமாகப் பேசினாள்.

அது பேசும் போது அந்தக் கண்களில் தெரிந்த பாவனை அவளின் வேலையின் மீது அவளுக்கு இருந்த காதலை காட்டியது. இப்படி மிகவும் ஆர்வமாக வர்ஷினி அவளின் வேலையில் இருப்பாள் என்பதே அவனுக்கு புதிய செய்தி தான். வர்ஷினியை

"என்ன பட்ஜெட் ஆகும்?" என,

அவள் சொல்லவும்..

"என்ன?" என்பது போலப் பார்த்தான்... "ஏன் முடியாதா?" என..

"முடியாதுன்னா சொன்னேன், இவ்வளவு ஆகுமா இதுக்கெல்லாம்னு பார்த்தேன்" என,

"தோடா" என்றவள்.. "இந்தியால என்கிட்டே இருக்குற ப்ரொவிஷன்ஸ் அண்ட் லேட்டஸ்ட் டெக்னாலஜி யார் கிட்டயும் இருக்கக் கூடாது.. அண்ட் இப்போ நான் வொர்க் பண்ணின பிலிம்ல என்னோட ரெமுனரேஷன் எவ்வவளவு தெரியுமா?" என்றாள் கண்களில் சிறு கர்வம் மின்ன..

"எவ்வளவு?" என்று மென்னகையோடு வினவியவனிடம்,

அவள் சொன்னதில் நிஜமா என்பது போல நம்ப முடியாமல் பார்த்தான்.

"ஆம்" என்பது போல தலையசைத்தவள், "ஆனா நான் வேண்டாம் சொல்லிட்டேன்!" என்றாள் தலை சரித்து எதோ சாதித்து போல இன்னும் கர்வமாக!

“ஏன்? ஏன் வேண்டாம்னு சொல்லிட்ட?” என்று அவசரமாக கேட்க...

“இந்தியன் டிஸ்ட்ரிபியுஷன் கேட்டிருக்கேன்” என,

“என்ன சொல்லவேயில்லை?” என்று வாயை பிளந்தான்.. எவ்வளவு பெரிய முடிவு என்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை.. கெஞ்சி, கொஞ்சி, மிரட்டி, இப்போது தான் அவளை தன்னிடம் வரவழைத்து இருக்கிறான் என்பது மறந்தே போனது!

“படம் ரிலீஸ் இன்னும் அனௌன்ஸ் பண்ணலை! மூணு மாசம் ஆகும்... இன்னும் ஒரு மாசம் போன பிறகு வொர்க் ஸ்டார்ட் பண்ணலாம்னு இருக்கேன்.. அதுக்கு கிரௌண்ட் வொர்க் பண்ண தான் என் பிரண்ட்ஸ் ஸ்டுடியோ போனேன்”

ஈஸ்வர் மனம் வெகுவாக சுனங்கத் தான் செய்தது. எதையுமே அவள் சொல்லவில்லை! அந்த யோசனையோடே அவளைப் பார்த்தான்.. “என்ன?” என்று அவனின் பார்வையை பார்த்துக் கேட்க..

“இவ்வளவு ப்ளான்ஸ்.. அதுவும் ரொம்பப் பெருசு! என்கிட்டே ஒரு வார்த்தைக் கூட சொல்லலை!”

“சொல்லக் கூடாதுன்னு இல்லை! எதுவும் யார் கிட்டயும் சொல்லி சொல்லி செஞ்சு பழக்கமில்லை.. இது கொஞ்சம் பெருசு தான்.. வந்த உடனே உங்க கிட்ட சொல்ல முடியாம சண்டை!” என்று தன்மையாகவே விளக்கம் கொடுத்தாள்.

“இப்போவும் சண்டையா என்ன?” என்றான் கூர்மையாக.

“இல்லையில்லை! ப்ளான் பண்ணிட்டு சொல்லலாம்னு இருந்தேன்! இப்போ நீங்க

கேட்கவும் சொல்லிட்டேன்! சொல்லக் கூடாதுன்னு எல்லாம் இல்லை!” என்று திரும்பவும் சொல்லி.. அவனின் அருகில் சென்று அமர்ந்தவள்.. “சாரி” என,

ஃபிலிம் இண்டஸ்ட்ரி! டிஸ்ட்ரிபியுஷன்! என ஈஸ்வரின் மனது சற்று சஞ்சலம் தான் கொண்டது!

“ஃபிலிம் இண்டஸ்ட்ரி போகணுமா வர்ஷ்!”

“என்னோட ஃபீல்ட் அதுதானே!” என்றாள் தெளிவாக.

எதோ ஹாலிவுட் படம் வேலை செய்தாள் என்பது வேறு! இப்போது இங்கேயா? அவனுக்கு சற்றும் பிடித்தமில்லை என்பது தான் உண்மை! இதில் பிலிம் டிஸ்ட்ரிபியுஷன்  அது இதென்று போனால்..

யோசனைகலோடே மௌனமாக எழுந்து சென்று விட்டான்.. அவனுக்கு பிடித்தமில்லை என்பதுடன் கூடவே அவளின் அம்மா இருந்த ஒரு துறை!

ஈஸ்வரின் மௌனம் மனதிற்கு கஷ்டமாக இருந்தது.. உடனே பின் எழுந்து போகவும் மனதில்லை.. அன்றைய தினமே மௌனமாக கழிந்தது..

இரவு படுக்கும் போது கேட்டே விட்டாள்... “எதுக்கு இப்போ முகத்தை தூக்கி வெச்சிட்டு இருக்கீங்க?” என,

“நான் முகத்தை தூக்கி வெச்சிருந்தா உனக்குக் கவலையா என்ன?” என,

முறைத்துப் பார்த்தாள்.. “சும்மா முறைச்சா நீ பண்ணினது சரின்னு ஆகிடாது!”

“என்ன? என்ன நான் தப்பா பண்ணினேன்?”

“இவ்வளவு பெரிய டெசிஷன்ஸ் எங்கட்ட ஒரு வார்த்தை கூட சொல்லலை!”

“நான் இங்கே வர்ற பிளான்லயே இல்லை, அப்புறம் எப்படி சொல்ல முடியும்”

“நீ என்ன நினைச்ச? நான் உன்னை விட்டுடுவேன்னா!” என்ற குரலில் இருந்த கோபம்.. வெகு நாட்களுக்கு பிறகு அவனின் கோபத்தை பார்க்கிறாள்..

இப்போது வர்ஷினி மௌனமாக இருக்க.. “எது பண்ணினாலும் சொல்லிட்டு பண்ணு, அது சரிவருமா வராதான்னு யோசிக்க வேண்டாமா!”

அப்போதும் மௌனமாக இருக்க.. “நீ என்னோட மனைவி வர்ஷ்.. எது பண்ணினாலும் எனக்கு தெரியணும்.. புரிஞ்சதா! இன்னும் எவ்வளவு நாள் என்னை தள்ளி தள்ளி நிறுத்துவ! உன் பின்னாடியே சுத்தறேன், ஆனா ஒன்னுமே தெரியறதில்லை எனக்கு! நீ என்ன செஞ்சாலும் பார்த்துட்டு, விட்டுட்டு, எல்லாம் என்னால இருக்க முடியாது புரிஞ்சதா!” என்றவன்..

இருந்தால் இன்னும் பேசுவோம் என்று புரிந்தவனாக “தூங்கு” என சொல்லி ரூமை விட்டு வெளியே சென்று விட்டான். அவளின் அம்மாவின் அடையாளம் எங்காவது யாருக்காவது தெரிந்து விட்டால் என்ற பதட்டமும் கூட இருந்தது.

அப்போதும் மௌனமாக தான் பார்த்திருந்தாள். ஆனாலும் ஏனோ அழுகை வந்தது.. பேசாமல் படுத்துக் கொள்ள.. இரவு இரண்டு மணிவரையிலும் அவன் உள்ளே வரவில்லை! இவளும் வெளியே சென்று என்ன செய்கிறான் என்று பார்க்கவில்லை!

ஆனால் உள்ளே வரும் வரையிலும் விழித்து தான் இருந்தாள்.. வெறுமனே படுத்துக் கொண்டே..

“இன்னும் நீ தூங்கலையா”

பதில் பேசாமல் அவனைப் பார்த்திருந்தாள்.. “என்ன இப்போ?” என அருகில் வர... பேசாமல் கண்களை மூடிக் கொள்ளவும்..

“வர்ஷ் கேட்டா பதில் சொல்லணும்”

“சொல்ல முடியாது போ” என்றவளின் குரலில் அழுதத்தின் சாயல் தெரிய..

“ப்ச், அழுதியா? என்ன இப்போ?”

“நீங்க என்னை திட்டுறீங்க!”

“பின்ன கொஞ்சிட்டே இருப்பாங்காலா?”

“எப்போ நீங்க என்னை கொஞ்சினிங்க?”

“எப்போ நீ என்னை கொஞ்ச விட்ட?”

“போடா” என்றபடி போர்வையை எடுத்து முழுதாக மூடிக் கொண்டாள்.

நேரம் பார்த்தான், கிட்ட தட்ட மூன்று மணிநேரமாக உறங்காமல் இருக்கிறாள் என்பது புரிய..

“சண்டை போட எதுக்கு இவ்வளவு நேரம் முழிச்சு இருந்த, வந்து சண்டை போட வேண்டியது தானே! இவ்வளவு நேரம் சும்மா சுவரைப் பார்த்துட்டு இருந்தியா?” என்றான் சற்று காட்டமாக.

“அது எனக்கு எப்பவுமே பழக்கம் தான்”

போர்வையை ஒரே இழாக இழுத்தவன்.. “சும்மா பழசே பேசிட்டு இருக்கக் கூடாது.. இது உன்னோட வீடு, ஹாஸ்டல் இல்லை!” என அதட்ட..

“இப்போ எதுக்கு என்னை திட்டிட்டே இருக்கீங்க!” என்றவளின் கண்களில் கண்ணீர் கரகரவென்று இறங்க..

“எனக்கு டென்ஷனா இருக்கு! இவ்வளவு பெரிய டெசிஷன் ஏன் சொல்லலை? உனக்கு இந்த ஃபீல்ட் சரி வருமா வராதான்னு யோசிக்க வேண்டாமா? எனக்கு என்னோடதே நிறைய வேலை இருக்கு. அப்போ உன்னை எப்படி பார்க்க முடியும். இந்த ஃபீல்ட்ல உன்னை எப்படித் தனியா விட முடியும்! யோசிக்கணும்!” என..

ஒரு ஆத்திரம் பொங்க... “நீ தனியா விடுவியோ, கூட வருவியோ, எனக்குத் தெரியாது! நான் இதுதான் பண்ணுவேன்! நான் இதுல தான் இருப்பேன்! எப்படி பெஸ்ட்டா செக்யுர்டா பண்ண முடியுமோ பண்ணு!” என்று கட்டளை போலச் சொன்னவள், கண்களை துடைத்து கொண்டு கண் மூட..

என்ன பேசுகிறாள் இவள் என யோசித்து ஈஸ்வர் சண்டையிட ஆரம்பிக்கும் முன் உறங்கியிருந்தாள்! ஆம் உறங்கி தானிருந்தாள்!

ஆம்! மனதில் நினைத்ததை சொல்லி முடித்தவுடன் ஒரு ஆசுவாசம் தோன்ற, அதுவரை வராத உறக்கம் ஒரு நிமிடத்தில் வந்திருந்தது.

உறங்கும் அவளை எழுப்பியா சண்டை போட முடியும்! எவ்வளவு பிடிவாதம் என்னை இவளின் இஷ்டத்திற்கு ஆட்டி வைக்கிறாள் என யோசித்துக் கொண்டே வேறு வழியில்லாமல் அவனும் உறங்கினான்.

காலையில் எழுந்த போது, வர்ஷினி இன்னும் உறங்கிக் கொண்டிருக்க, அவளை எழுப்பாமல் எல்லா வேலையும் செய்து கொண்டிருந்தவனை தொலைபேசி அழைக்க.. எடுத்துப் பார்த்தால் அழைத்தது ரூபா!

“சொல்லு ரூப்ஸ்”

“என்னோட அப்பா தவறிட்டாங்கலாம்” என

“என்ன? எப்படி?”

“தூங்கியிருக்காங்க, காலையில அம்மா பார்க்கும் போது..” என்றவளின் குரலில் அடக்கப்பட்ட அழுகை தெரிய..

“இன்னும் நீ அங்கே போகாம வீட்ல இருக்கியா.. கிளம்பு!” என்று வைத்தவன்.. ஜகனை அழைத்து “போடா என்ன தேவையோ பார்த்து இருந்து செய்.. தயங்கிட்டு இருக்காதே!” எனச் சொன்னவன்..

அப்பாவையும் அழைத்து “அப்பா, பழசை நினைக்க வேண்டாம், போங்க!” என்றான்..

அவர்களை எல்லாம் செல்லச் சொன்னவனுக்கு செல்ல கால்கள் வரவில்லை! ஆனாலும் செல்ல தான் வேண்டும்.. அவன் ரூபாவிற்காக செல்ல வேண்டும்.. வர்ஷினி அஸ்வினிற்காக செல்ல வேண்டும்..

அவனின் மொபைளிற்கு அஸ்வின் அழைக்க.. எடுத்தவன் “அண்ணி இப்போ தான் சொன்னாங்க!” என்று விட.. மேலே பேச எதுவும் இல்லாது அஸ்வின் வைத்து விட்டான்.

பின்பு வர்ஷினியை எழுப்பிச் சொல்ல... “இறந்துட்டாங்களா? ஏன், என்ன ஆச்சு?” என்று கவலையாகக் கேட்க...

“உன்னை அங்கே தான் கூட்டிட்டுப் போறேன், அங்க உட்கார்ந்து இருக்கும் போது யார் கிட்டயாவது கேட்டுக்கோ” என்றான். அவனுக்கு பிரகாசத்தை பற்றி பேச விருப்பமில்லை..

“எழுந்துரு குளி” என்றவன்.. “புடவை கட்டத் தெரியுமா? கட்டுறியா!” என,

“புடவையா? ஏன்?” என,

“உன்னை எல்லோரும் கல்யாணத்தப்போ பார்த்தது, அதுக்கு அப்புறம் இப்போ தான் பார்க்கறாங்க.. நாம பிரிஞ்சு இருந்தது, நீ படிக்கன்னு காரணம் சொன்னாலும் எத்தனை பேர் நம்பியிருப்பாங்க தெரியாது! சோ! நீ இப்போ போனா நிறையப் பேர் உன்னை கவனிக்க வாய்ப்பிருக்கு!”

“ஏன் சுரிதார் போட்டா என்ன?”

“போடக் கூடாதுன்னு எல்லாம் இல்லை.. பட் ரிலேடிவ்ஸ் சர்கிள் போகும் போது இப்படி போறது தான் எனக்கு ஒகே!” என்றவன், “நான் உள்ள வரமாட்டேன், வெளில தான் இருப்பேன். நீ உள்ள போயிட்டு அம்மா இருப்பாங்க, அவங்களோட இருந்துக்கோ!” எனச் சொல்ல..

“முடிஞ்சதா? இன்னும் ஏதாவது இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் இருக்கா!” என்றாள் சற்று கடுப்பாக.

“இப்போதைக்கு அவ்வளவு தான்” என்றான்.. வெளியில் சொல்லாவிட்டாலும் ஐஸ்வர்யாவை வேறு பார்க்க வேண்டுமே என்ற தயக்கம்.. “போனவன் தான் போனான், பொண்ணுக்கு ஒரு கல்யாணம் செஞ்சு வெச்சிட்டு போனானா!” என்று பிரகாசத்தை மனதிலும் திட்டினான்.

அவள் கட்டும் புடவையைக் கூட அவன் தான் தேர்ந்தெடுத்துக் கொடுக்க, “இது கொஞ்சம் ஓவர்” என அவள் சொல்ல..

“பாரு வர்ஷ்! நம்ம கல்யாணம் சிறப்பா நடந்து இருந்தாலும், அதுக்கப்புறம் வந்த பிரிவு அது சொன்னாலும், சொல்லாட்டாலும் கொஞ்சம் தலை குனிவு தான்.. இதுக்கு மேல ஒரு வார்த்தை யாரும்

குறை சொல்றதை நான் விரும்ப மாட்டேன்! புரியுதா!”

“எப்படியும் நீ எல்லோர் கூடவும் பேசுவன்னு தோணலை, அப்போ எல்லோரும் உன் தோற்றத்தை தான் பார்ப்பாங்க! அதுல யாரும் உன்னை க்ரிடிசைஸ் பண்றதை நான் விரும்பலை!” என,

முரளியின் திருமணத்தில் முதல் நாள் பார்த்த ஈஸ்வர் ஞாபகத்தில் வந்தான்.. “என்னவோ இவனும், இவன் ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸும்” என்ற ஒரு பார்வை பார்க்க, அதைக் கண்டு கொண்டாலும் நான் இப்படித் தான் என்று ஒரு பார்வை பார்த்தவாரே..

“வா, வா, பசிக்குது!” என உணவுண்டு அவளை அழைத்து அங்கே சென்றவன்.. வெளியில் இருந்து அம்மாவிற்கு அழைக்க.. அவர் வந்ததும் “வர்ஷினியை உள்ள கூட்டிட்டுப் போங்க!” என விட்டு அங்கே வெளியில் இருந்த சேரில் அமர்ந்து கொண்டான்.

அவனுடன் பேச உறவினர் பலர் ஆர்வமாய் இருக்க.. “எப்போதடா இங்கே இருந்து கிளம்புவோம்!” என அவன் பார்த்துக் கொண்டிருக்க..

உள்ளே யார் போனார் யார் வந்தார் என்றெல்லாம் அவன் கவனிக்கவில்லை.. ஐஸ்வர்யா யாருடனோ பேசியபடி வெளியே வரவும் தான் அவனின் கவனம் அவளின் மீது படிந்தது..

கவனித்ததில் விதார்த்.. கூட சஞ்சய்.. சற்று நேரம் அவர்கள் நின்று பேசிக் கொண்டிருக்க.. அப்போது பார்த்து வர்ஷினியும் வெளியில் வந்தாள் இவனைத் தேடி! கூட சரணும் பிரணவியும்...

“அங்கே ஓடிட்டே சத்தம் போட்டுட்டே இருக்காங்க! ரொம்ப குறும்பு பண்றான்” என வர்ஷினி சொல்ல..

“சரண்” என்ற ஈஸ்வரின் ஒற்றை வார்த்தையில் அடங்கி சரண் அவன் அருகில் அமர.. அண்ணன் அமர்வதைப் பார்த்து பிரணவியும் அமர்ந்தாள்..

“நான் இவங்களை கூட்டிட்டுப் போறேன்! மதியமா எடுக்கப் போகும் போது கூட்டிட்டு வரேன்!” என அவன் எழ..

“அப்போ நானு!” என்று வர்ஷினி கேட்க..

“நீயா.. நோ! நோ! இங்க தான் இருக்கணும்! அம்மா கூட இரு! எல்லாம் நீ பழகணும்!” என்று ஸ்ட்ரிக்ட் ஆஃபிசராய் அவன் பேச..

முகத்தை சுருக்கிய வர்ஷினியிடம் “நோ வர்ஷ்.. நீ சின்னப் பொண்ணு இல்லை பொறுப்பா இருக்கணும். நீ எவ்வளவு பொறுப்பா இருக்கேன்னு தெரிஞ்சா தான் நீ நினைச்சதை செய்ய விடுவேன். ஆனா இப்போ இங்கே  அஸ்வின்காக நீ இருக்கணும். எனக்கு இருக்கப் பிடிக்கலை. ப்ளீஸ் புரிஞ்ஜிக்கோ!” என

“சரி, சரி” என்று மண்டையை ஆட்டியவள் பார்வையில் விதார்த்தும் சஞ்சயும் பட..

“ஹை, நம்ம லூசு டாக்டர்” என்று ஈஸ்வரிடம் சொல்லி அவனின் கண்டனப் பார்வைக்கு ஆளாக,

“ஹேய், என்ன ஓவரா தான் பண்ணறீங்க” என்று மிரட்டல் தொனியில் ஆரம்பித்தவள்… “நீங்க இப்படி இருந்தா உன்னை விட்டு போகமாட்டேன்னு என்னை எப்படி சொல்ல வைப்பீங்க?” என,

“நான் அதை சொல்ல வைக்க எதுவுமே பண்ணப் போறதில்லை. நான் நானா தான் இருக்கப் போறேன்.. உனக்காக எதையாவது செஞ்சு

எப்பவும் எதையாவது சொதப்பி வைக்கிறேன். பொண்ணு பின்னாடி சுத்தறது எல்லாம் நமக்கு செட் ஆகலை.. இனிமே  அதெல்லாம் எதுவும் பண்ண மாட்டேன்” என்றான் தெளிவாக..

“அய்யே ரொம்ப தான் சுத்திட்டீங்க” என்று பழிப்பு காட்ட..

“ப்ச்” என்றவன், “பக்கத்துல சரணும் பிரணவியும் இருக்காங்க.. பார்த்து பேசு.. நானும் லூசு மாதிரி இங்க பேசிட்டு இருக்கேன்” என்று அடிக்குரலில் அதட்டினான்.

அதற்குள் விதர்த்தும் சஞ்சயும் அருகில் நடந்து வந்தவர்கள் இவர்களை பார்த்ததும் தயங்க...

விதார்த் இவர்களிடம் வந்தவன்.. “சாரி” என்று ஈஸ்வரிடம் வர்ஷினியிடமும் கேட்க.. “எதுக்கு சாரி டாக்டர்? இவர் நல்லாகிட்டார்!” என வர்ஷினி சொல்ல,

ஈஸ்வர் அசையாமல் நின்றிருந்தான்.

“நான் அன்னைக்கே வந்தேன், ஆனா பார்க்க விடலை!” என்று விதார்த் வருத்தம் தெரிவிக்க.. ஆம்! வந்தவனை பார்க்க முடியாது ஈஸ்வர் அனுப்பியிருந்தான்.. திரும்பவும் “சாரி” என,

“இட்ஸ் ஒகே டாக்டர்” என்று அப்போதும் வர்ஷினி தான் சொல்லியவள், திரும்பி ஈஸ்வரைப் பார்க்க, அவனின் முகமும் இறுகி இருக்க, “ஏதாவது செய்து விட்டாரா இவர்” என்ற சந்தேகம் வந்தது...

“விது” என்ற சஞ்சயின் குரலுக்கு திரும்பியவனிடம்.. “நீ போ, நான் வர்ரேன்!” என மறு பேச்சு பேசாது அவன் செல்ல..

“உங்களைப் பார்க்க நிறைய முறை அப்பாயின்ட்மென்ட் கேட்டேன், ஆனா

கிடைக்கலை! அதனால் இங்க வெச்சு பேசறதுக்கு ரியல்லி வெரி சாரி!" என்றவன், "மூணு மாசத்துகுள்ள பணம் கட்டச் சொல்லியிருக்கீங்க.. எங்களால கண்டிப்பா முடியாது.. இப்போ தான் ஹாஸ்பிடல் விலைக்கு விட்டிருக்கேன்.. இன்னும் ஒரு ரெண்டு மாசம் சேர்த்து கிடைச்சாப் பரவாயில்லை!" என,

கேட்டதும் அதிர்ந்து தான் நின்றாள் வர்ஷினி.. ஈஸ்வருக்கும் விற்கப் போகிறார்கள் என்பது சற்று அதிர்ச்சியாகத் தான் இருந்தது.

ஈஸ்வரை திரும்பி முறைத்தவள்.. "சாரி டாக்டர், ஐ அம் ரியல்லி சாரி. என்னால தான் இந்த குழப்பம்ன்னு நினைக்கிறேன்.. லோன் எல்லாம் கேன்சல் ஆகாது.. நீங்க விக்க வெல்லாம் வேண்டாம்!" என..

"நோ மேடம்! இன்னும் உங்க கிட்ட எங்களுக்கு லோன் சரி வராது.. என்ன தான் விதார்த் பண்ணினது தப்புன்னாலும், இவர் அவன் மேல கைவெச்சிருக்கார்.. அப்போ எப்படி நான் இங்க லோன் கண்டினியு பண்ண முடியும், முடியாது! நீங்க சொன்னதுக்கு தேங்க்ஸ்!" எனச் சொல்லி அவன் போக...

"அடிச்சீங்களா? தப்பில்லையா? எப்படி நீங்க அப்படி பண்ணலாம்?"

"என் முன்னாடி என் மனைவியை லூசுன்னு அவன் சொல்வான், பார்த்துட்டு இருப்பேனா? அப்படியே நீ லூசா இருந்தாலும் கூட எவனுக்கும் சொல்ற தைரியம் வரக் கூடாது!" என அடிக்குரலில் சீறினான்.

“என்னை யாரும் லூசுன்னு சொல்லக் கூடாது, இல்லை உங்க ஃவைப்ன்றதால சொல்லக் கூடாதா” என முக்கியமான கேள்வியை வர்ஷினி கேட்க..

“ரொம்ப முக்கியம், கிளம்பு நீ!” என,

நின்று நேராய் அவனை பார்த்தாள், பார்வையில் அவ்வளவு தீவிரம்.. “என்ன இப்போ?” என்றான் சலிப்பாக..

கை நீட்டி அவனிடம் “ரொம்ப தப்பு பண்ற நீ” என, நீட்டிய கையை யாரும் பார்த்து விட்டார்களோ என அவசரமாக இறக்கி விட்டான்.. கையை தான் இறக்க முடிந்தது அவளை அல்ல!

“நீ யார் அவனை அடிக்க? செய்யறதையும் செஞ்சிட்டு எவ்வளவு திமிரா பதில் சொல்ற.. என்ன இல்லை உன்கிட்டயும் என்கிட்டயும், ஆனா நம்மளால அனுபவிக்க முடியுதா.. உன்னை விடு.. எனக்கு  இவ்வளவு பணம் இருக்கு, அதை வெச்சு என்ன பண்றேன்.. அம்மா யாருன்னு சொல்ல முடியாது! அப்பா இருந்தும் அப்போ இல்லை, இப்போ இல்லவே இல்லை! பக்கத்துல எப்பவும் என்னை பார்த்துட்டு என் ஹஸ்பன்ட் நீ இருக்க, உன்கூட இருக்கக் பிடிக்கலைன்னு சொல்லி சுத்திட்டு திரியறேன்.. இப்படி ஒரு வாழ்கை எனக்கு!”

“இதுல ஆயிரம் கனவுகளோட அவங்க ஆரம்பிச்ச ஹாஸ்பிடல் என்னால விக்கற மாதிரி வந்துச்சு! உன்னை தொலைச்சிடுவேன்! நீ இதை சரி பண்ற!” என்று ஏகத்திற்கும் மிரட்ட..

“அவன் லோன் அப்படியே இருக்கட்டும் நீ சொன்ன தானே, ஒத்துக்க மாட்டேங்கறான் தானே! நான் என்ன பண்ண முடியும்! அவன் கிட்ட போய் நீ

பணத்தை வெச்சிக்கோன்னு கெஞ்சவா முடியும்" என்றான் கடுப்பாக.

"நீ கெஞ்சுவியோ என்ன பண்ணுவியோ எனக்குத் தெரியாது! நம்மால அவங்க ஹாஸ்பிடல் அவங்க கைய விட்டுப் போகக் கூடாது! புரிஞ்சதா?" என்றாள் அதட்டலாக.

தப்பு செய்த சிறுவனாய், எப்படி சரி செய்வது என்ற யோசனையோடே விழித்து நின்றான்.

"சரி செய்றீங்க!" என்று மரியாதை பன்மைக்கு அப்போது தான் வந்தவள், "அண்ணி வர்றாங்க" எனக் காட்ட...

அங்கே ரஞ்சனி வந்து கொண்டிருந்தவள், விதார்த்தை பார்த்தும் நின்று பேச.. அப்போது அங்கே சஞ்சய் செல்லவும்.. ரஞ்சனி அவனை ஒரு பார்வை பார்ப்பதும், சஞ்சய் அவளைப் பார்ப்பதும் தெரிந்தது.

**கணக்குகள் பழையதோ புதியதோ**
**கூட்டினாலும் கழித்தாலும் பதில் ஒன்றே!**

**அத்தியாயம் எண்பத்திரண்டு :**

**சொல்லுக்கும் தெரியாமல் சொல்லத் தான் வந்தேனே**
**சொல்லுக்குள் அர்த்தம் போல சொல்லாமல் நின்றேனே!**

அஸ்வின் வீடு என்றாலும் அங்கு ரூபாவும் ஐஸ்வர்யாவும் இருந்ததினால் ரஞ்சனிக்கு சென்றே ஆக வேண்டிய கட்டாயம் இருக்க.. ரஞ்சனி வரவும்..

அங்கே தான் விதார்த்தையும் சஞ்சயையும் பார்த்தாள்.. விதார்த்திடம் பேசிக் கொண்டிருந்த போது தான் சஞ்ஜய் வரவும்... "லூசு மாக்கான்

மாதிரி இருப்பான், இவன் இப்போ எவ்வளவு ஹேண்ட்சம் ஆகிட்டான்" என்று சஞ்ஜயைப் பார்த்தவள், பேசுவதா வேண்டாமா என்ற எண்ணத்தில் இருக்க, அந்த எண்ணம் சிறிதும் இல்லாதவனாக, "விது போகலாம்" என்று அவன் காரில் ஏற..

"பாருடா, இவனுங்க பெரிய டாக்டர்சாம்! போங்கடா!" என்று மனதிற்குள் நினைத்தவளாக ரஞ்சனியும் நடந்து விட்டாள்..

உண்மையில் சஞ்ஜய் மனிதர்களுக்கு அவ்வளவு மரியாதை கொடுப்பவன்.. எப்போதும் புன்னகை முகமாய் தான் இருப்பான். ஐஸ்வர்யா அவன் வாழ்வில் வராததற்கு காரணம் ரஞ்சனி என்பது தான் அவனின் எண்ணம்.. உண்மையில் அவன் இதுவரை ஐஸ்வர்யாவிடம் சொன்னதே கிடையாது.. முன்பும் அவளுக்கு தெரியவே தெரியாது.. இப்போது விதார்த் மூலமாகத் தெரியும்.. உடனே அவள் ரிசைன் செய்கிறேன் என்று சொல்லிவிட்டாள்.

திரும்பவும் போகிறாள் என்ற உளைச்சல், ஹாஸ்பிடலிற்கு பணம் ஏற்பாடு செய்ய முடியவில்லை.. அதை மெயின்டெயின் செய்வதே பெரிய வேலையாக இருக்க.. இதில் புதிதாக எங்கு சென்றாலும் பணம் கிடைக்கவில்லை.. வேறு வழியில்லாமல் அதை விலைக்கு விட்டது..

அவனின் அம்மாவையும் கண்கொண்டு பார்க்கவே முடியவில்லை! அவரின் இத்தனை வருட உழைப்பை அதை இப்போது தொலைக்கப் போகிறான்..

மனதளவில் மிகவும் சோர்ந்து இருந்தான்.. புன்னகை முகமும் எங்கோ தொலைந்து விட்டது..

அதனை யாருக்கும் தெரிய விடாமல் இருப்பது இன்னும் கடினமாய் இருந்தது.

ஈஸ்வரின் அருகில் வரவுமே அவளைப் பார்த்தவன் வர்ஷினியிடம், "நீ ரஞ்சியோட போ.. நான் குழந்தைங்களைக் கூட்டிட்டுப் போறேன்" என,

"வேண்டாம் விஸ்வா! அவங்க தாத்தா, குழந்தைங்க இல்லைன்னா நல்லா இருக்காது.. அவங்களை இங்கேயே விடு.. இப்போ பத்து வருவாங்க நான் மேனேஜ் பண்ணிக்கறேன்!" என,

"இவளையும் பார்த்துக்கோ, அண்ட் இவளை இங்கே சாப்பிட விடாதே.. அடுத்த வாரம் நாங்க திருப்பதி போகணும்.. இவளைக் காலையிலயே ஃபுல்லா சாப்பிட வெச்சு தான் கூட்டிட்டு வந்தேன்.. யாராவது கூப்பிட்டா மறந்து போயிடப் போறா" என,

"இவன் என்னடா என்னை சின்னப் பாப்பா மாதிரியே ட்ரீட் பண்றான்" என்று தான் வர்ஷினிக்கு தோன்றியது..

"ஏன் ஏதாவது வேண்டுதலா திருப்பதிக்கு" என ரஞ்சனி கேட்க.,

"ஆம்" என்று தலையாட்டிக் கிளம்பிவிட்டான்..

என்ன முயன்றும் அவனால் இயல்பாக இருக்க முடியவில்லை.. கடந்து வந்த பாதைகள்! அதன் தாக்கங்கள்! எப்படியோ சரியாகிவிட்டது! ஆனால் என்ன வெல்லாம் நடந்து விட்டது.. இந்த இறந்து போன மனிதனின் பங்கு அதில் இருக்கிறதா என்று தெரியாது.. ஆனாலும் அவனால் அங்கே இருக்க முடியவில்லை..

பணத்தின் பின் இந்த ஐந்து வருடங்களாக பைத்தியக்காரன் மாதிரி ஓடிக்

கொண்டிருக்கிறான்.. ஒரு வேலை ஃபைனான்ஸ் மீண்டு இராவிட்டால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை.

சொந்த வாழ்க்கையில் பல தோல்விகளையும் சறுக்கல்களையும் பார்த்து விட்டாலும்.. தொழில் வாழக்கையில் எங்கும் தோல்வியோ சறுக்கலோ இல்லை, சிக்கல்கள் மட்டுமே அதை சரி செய்து விட்டான்! ஒரு வேளை இருந்திருந்தால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

எல்லோரின் ஏளனப் பார்வை.. அவனால் மீண்டே இருக்க முடியாது!

“என்ன வேண்டுதல்?” என்று ரஞ்சனி வர்ஷினியிடம் கேட்க..

“யாருக்குத் தெரியும் அண்ணி! அவர் எதுவுமே சொல்லலை!” என்று ரஞ்சனியிடம் வாய் வார்த்தையாக சொன்னவள்.. “ஆனா நான் சொல்லலைன்னு அப்படிப் பேசறார்” என்று மனதிற்குள் கறுவிக் கொண்டவள், கூடவே “என்ன நீ எல்லாவற்றையும் சரி செய் என்று அவனிடம் கேட்டுக் கொண்டு நிற்கிறாய். உன்னால் முடியாதா? முடியாதென்றால் அவனிடம் போய் நில்! முயற்சி செய்யாமல் போய் நிற்பது சரி கிடையாது.. உன்னால் எல்லாம் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை கொடு! அதற்கு பின்னும் அவன் ரூல்ஸ் பேசினான் என்றால் பார்த்துக் கொள்!” என்ற புதிய முடிவெடுத்தாள்.

ரஞ்சனியுடன் உள் சென்றாலும், பிள்ளைகளை அழைத்துக் கொண்டு போய் மலருடன் அமர்ந்து கொண்டாள். மீண்டும் சரண் எழுந்து ஓடப் பார்க்க.. இந்த முறை சரண் என்ற அவளின் அதட்டல் வேலை செய்ய.. சரண் அமர அவனிடம் தன்

மொபைல் கொடுத்து அமர்த்திக் கொள்ளவும், சரியாக அந்த நேரம் ஜகனின் அக்கா சித்ரா வரவும்.. குழந்தைகள் அவளிடம் தாவின..

அதற்கு மேல் குழந்தைகளின் வேலை அவளதாகிப் போக..

அஸ்வின் ரஞ்சனியைப் பார்த்தவன் தான், திரும்ப அவள் இருக்குமிடம் வராமல் பார்த்துக் கொண்டான். தன்னால் அவள் மனதில் எதுவும் அது கோபமாகினும் வருவதை அவன் விரும்பவில்லை.. இன்றைக்கு வரை தினமும் அவன் நினைத்து வருத்தப் படாத நாள் இல்லை! “என்ன கர்வம் எனக்கு? பெரிய இவன் மாதிரி சென்று மிரட்டி என் வாழ்க்கையில் இருந்த அவள் வருவதற்கான வாய்ப்பை நானே தொலைத்து விட்டேன்” என்பதாக..

ஆம்! மிரட்டாமல் இருந்திருந்தால் ஏதாவது வாய்ப்பு இருந்திருக்க கூடுமோ என்ற எண்ணம் இன்று வரையிலும் எப்போது பொங்கும் என்று தெரியாமல் அவனுள் பொங்கிவிடும்!

இனி எதுவும் மாற்ற முடியாது! ஆனாலும் மனதை அடக்குபவர் யார்! ஆனாலும் பழையதை தான் நினைப்பான்.. இப்போது ரஞ்சனி பத்துவின் மனைவி என்பதை க்ஷணமும் மறந்ததில்லை! இனியும் மறக்க மாட்டான்!

ரஞ்சனி சென்று ரூபாவிடமும் ரூபாவின் அம்மாவிடமும் விசாரித்தவள்.. ஐஸ்வர்யாவின் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள். வெகு சில வருடங்களுக்குப் பிறகு பார்க்கிறாள்..

அமைதியாகத் தான் இருந்தனர் இருவருமே! பேச முயற்சிக்கவில்லை! எப்படி அப்பாவிற்கு இப்படி

ஆனது என்றும் கேட்கவில்லை! சொல்லவும் இல்லை! நீ எப்படி இருக்கிறாய் என்றும் கேட்டுக் கொள்ளவில்லை! ஏழு வருட இணைபிரியா நட்பு! அதன் பிறகு ஐந்து வருட பிரிவு!

வேலைகள் அதன் பாட்டில் நடக்க.. மாலை மூன்று மணிக்கு எடுப்பது என்று முடிவாக.. மதிய உணவு சம்மந்த வீட்டுக்காரர்களினது.. அவர்களது தான், ஆனாலும் வர்ஷினி உண்ணவில்லை..

“பத்து வெளில இருக்காங்கன்னு நினைக்கறேன், நீ அவரோட போய் சாப்பிட்டிட்டு வர்றியா வர்ஷ்! எடுத்துட்டு போயிட்டு அவங்க வந்த பிறகு தான் திரும்ப இங்கே இருந்து கிளம்ப முடியும்!” என,

“பசிக்கலை அண்ணி” என்றவளை விடாது வெளியே அழைத்து வந்தவள்.. “இவ இங்க வந்ததுல இருந்து தண்ணி கூடக் குடிக்கலை.. ஏதாவது சாப்பிட வெச்சு கூட்டிட்டு வாங்க!”

“வா வர்ஷ்” என அவன் எழ.. “பசியில்லை அண்ணா” என்றாள் திரும்பவும்.

“பசிச்சா தான் சாப்பிடணும்னு ஏதாவது இருக்கா, வா!” என அருகில் இருந்த ஹோட்டல் அழைத்துச் சென்று அவளை சாப்பிட வைத்து வந்தான். ஆனால் இருவருக்குள்ளும் வேறு பேச்சுக்கள் இல்லை. ஒரு சகஜ பாவமும் இல்லை!

பத்துவிற்கு எப்போதும் போல வெகுவாக ஒரு தயக்கம்.. வர்ஷினிக்கு பேசக் கூடாது என்றெல்லாம் இல்லை எதுவும் பேசத் தோன்றவில்லை ..

அவளை இறக்கி விட்டவன்.. “நான் கிளம்பறேன்” என,

“நீங்க இருக்க மாட்டீங்களாண்ணா?”

“இல்லை வர்ஷி, ரஞ்சி வரலைன்னா திட்டுவான்னு தான் வந்தேன்.. எனக்கு இங்க அவ்வளவா வர இஷ்டமில்லை.. ஏதாவதுன்னா கூப்பிடு உடனே வந்துடறேன்.. ஈஸ்வர் தான் உனக்கு செய்யணும்னு இல்லை! நாங்க எப்பவும் உன்னோட தான்.. முரளியும் சரி, நானும் சரி, தள்ளித் தள்ளி நிற்காதே! இன்னும் நீ வீட்டுக்கு வரவேயில்லை! அம்மா ரொம்ப அதை நினைச்சு குழப்பிக்கறாங்க.. ப்ளீஸ் அவங்களுக்காகவாவது வா!” என்றான்.

பின்பு “இந்த அஸ்வினை நீ நடுவுல இழுத்து வந்த கோபம்! நான் பேசாமப் போயிட்டேன், சாரி!” என்றான் உணர்ந்து.

“ம்ம் சரி” என்பது போலத் தலையை மட்டும் ஆட்டினாள் பேச வரவில்லை! என்னவென்று சொல்ல முடியாத ஒரு துக்கம்! ஒரு அழுத்தம்! அப்பாவின் ஞாபகம் வந்து, அது உடனே அதிகமாகவும் ஆகிவிட்டது.

பின்பு பிரகாசத்தை எடுத்துப் போனதும் வெளியே வந்தவள் உள்ளே செல்லவில்லை மலரிடம் சொல்லி... தாஸ் இருக்கவும் வீடு வந்து விட்டாள். ஈஸ்வர் காலையில் துக்க வீட்டிற்கு வந்தவன் திரும்ப அங்கே வரவெல்லாம் இல்லை.

குளித்தவள், பின்பு தான் செய்து கொண்டிருக்கும் கார்டூன் வேலையை எடுத்து அமர்ந்து கொண்டாள். நேரம் போனதே தெரியவில்லை..

இருட்டானது தெரியவில்லை! தான் அமர்ந்திருக்கும் ரூமில் லைட் போடாதது கூட தெரியவில்லை.. வேலையில் ஆழ்ந்து விட்டாள்.

ஈஸ்வரும் வரவில்லை! அவளை கைபேசியிலும் அழைக்கவும் இல்லை! அவள் இவ்வளவு விரைவாக

வீட்டிற்கு வந்திருப்பாள் என்று நினைக்கவில்லை.

ஏழு மணி போல தான் ஈஸ்வர் அழைக்க.. அவளின் மொபைல் சுவிச் ஆஃப், சார்ஜ் இல்லாமல் அது ஆஃப் ஆகி இருந்தது..

உடனே செக்யுரிடிக்கு அழைத்தான்.. "மேடம், வீட்ல தான் இருக்காங்க சர்" என, சரி, சார்ஜ் போட்டு இருக்க மாட்டாள் எனப் புரிந்து வீட்டிற்கு சென்று பேசிக் கொள்ளலாம் என்று விட்டு விட்டான்.

உடனே வீட்டிற்கும் கிளம்பி விட்டான்..

அவன் வரவுமே வர்ஷினியின்  தாத்தா பத்துவுடன் வரவுமே சரியாக இருந்தது.. "வாங்க, வாங்க" என்று அவரை உள் அழைத்துப் போனான்..

வீடு இருட்டாக இருக்கவும், "வர்ஷினி" என்று அழைத்துக் கொண்டே லைட் போட...

"உள்ளேயா இருக்கா?" என பத்து கேட்க..

"எஸ், உள்ளே தான் இருக்கணும்!" என்று பெட் ரூமில் பார்த்தவன், பின்பு அவளின் வொர்க் ரூமை போய் பார்க்க, அங்கே தான் வேலை செய்து கொண்டிருந்தாள்.

இங்கே ஹாலில் இருந்து பார்த்தால், அந்த ரூம் கதவு திறந்தவுடன் அவள் அங்கே இருந்து வேலை செய்வது தெரிந்தது..

"என்ன இன்னுமா இவளுக்கு பொறுப்பு வரலை? வீட்ல ஒரு விளக்கு கூட போடாம, யார் உள்ள வர்றான்னு தெரியாம" என்று தாத்தா கேட்க..

எஸ்! பெண்மக்களின் வேலை அதிகமாய் மதிக்கப்படுவது இல்லை.. ஆண்களைப் போல அவர்கள் வேலையில் மூழ்கி விடும் போது நிறைய இடத்தில் இப்படிப் பட்ட பேச்சுக்கள் தான்! அதே

ஆண்கள் என்றால் கருத்தாய் வேலை செய்கிறார்கள் என்ற பாராட்டு!

“அச்சோ தாத்தா, அமைதியா இருங்க.. ஏதாவது பேசிடாதீங்க, அப்புறம் அவளுக்குக் கோபம் வந்துடும்.. இன்னும் அவ நம்ம வீட்டுக்கே வரலை” என எடுத்துக் கொடுக்க...

“என்னவோ போங்க! இப்படித் தான் அவளைப் பார்க்க விடாம செய்துட்டீங்க, இல்லை அவளை யு எஸ் போகவே விட்டிருக்க மாட்டேன். புருஷனோட ஒழுங்கா குடும்பம் நடத்துன்னு சொல்லியிருப்பேன்.. அவளை பார்க்கவே இந்த ஈஸ்வர் விடலை” என்று அவனையும் சேர்த்து கடிந்துக் கொண்டார்.

ஈஸ்வர் வர்ஷினியிடம் “உன் தாத்தாவும் பத்துவும் வந்திருக்காங்க” என்று நேரடியாக விஷயத்திற்கு வர,

“ஒரு ஐஞ்சு நிமிஷம் பேசிட்டு இருங்க.. இப்போ எழுந்தா  நான் பண்ணினது எல்லாம் வேஸ்ட்டா போயிடும்” என்று திரும்ப வேலையில் கவனமாகி விட்டாள். அவன் முகம் பார்த்துக் கூட பதில் சொல்லவில்லை, கம்ப்யுட்டரில் பார்வையை பதித்தே தான் சொன்னாள்.

அவளின் தீவிரம் பார்த்தே, எதோ முக்கியமான கட்டத்தில் இருக்கிறாள் எனப் புரிந்தவன்.. வெளியே வந்தான்.

“ரொம்ப முக்கியமா எதோ பண்ணிட்டு இருக்கா தாத்தா. அஞ்சு நிமிஷம் வந்துடவா” என உள்ளே சென்றவன், அவனே தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து, “என்ன சாப்பிடறீங்க தாத்தா, காஃபி ஆர் டீ” என,

“என்னது எழுந்து கூட இவளால வரமுடியலையா? அப்படி என்ன முக்கியமான வேலை?” என்று கடுப்பில் இருந்த அந்த பெரியவர் ஈஸ்வரின் உபசரிப்பில் சற்று குளிர்ந்தார்.

“வீட்ல வேலைக்கு யாருமில்லையா” என..

“ஆறு மணிக்கு கிளம்பிடுவாங்க” என்றவன், “நான் கொஞ்சம் நல்லா தான் காஃபி போடுவேன், இருங்க வர்றேன்!” என்று உள்ளே சென்றான்.

பின்னே வர்ஷினியின் தாத்தா மட்டுமல்ல, அமைச்சர் கூட அல்லவா!

ஈஸ்வர் காஃபி போடும்போதே வந்துவிட்டவள், “வாங்க தாத்தா” என்று உபசரிக்க,

அதுவரை இருந்த கோபம் எல்லாம் மறைந்து அவளைப் பார்த்ததும் ஸ்தம்பித்தவர், “ஏன் இப்படி இளைச்சு போயிட்ட வர்ஷினி, உடம்புக்கு ஏதாவதா? செக் பண்ணுனியா?” என,

“இல்லையில்லை, ஒண்ணுமில்லை, நல்லா இருக்கேன்! அது ரொம்ப குண்டா இருந்தேன்னு கொஞ்சம் இளைச்சேன்” என,

“என்னவோ போ, இந்த காலத்து பசங்க நல்லா இருக்குற உடம்பை கெடுத்துக்கறது” என்றவர்.. “நல்லா சாப்பிட்டு முதல்ல உடம்பை தேத்து” என,

ஈஸ்வர் காஃபியுடன் வர.. அவனின் கைகளில் இருந்து அந்த ட்ரேயை வேகமாக வாங்கியவள்.. அவளே கொண்டு வந்து கொடுக்க..

என்னவோ அதுவரைக்கும் இவளுக்குத் தெரியுது என்று மனதில் நினைத்துக் கொண்டார்..

எல்லாவற்றையும் வேடிக்கை தான் பார்த்திருந்தான் பத்து.. “எப்படி இவளை கவனித்துக் கொள்கிறான் ஈஸ்வர்” என்று

ஆச்சர்யமாய் இருந்தது.. “ஈஸ்வர் எனும் கர்வி எங்கே போனான்.. ஆனாலும் இப்படி பார்த்துக் கொள்பவனை ஏன் விட்டுப் போனாள்? என்ன அப்படி?” இப்படி யோசனைகள் ஓட அமர்ந்திருந்தான்.

“இவன் ஏன்டா இப்படி பேய் அடிச்சவன் மாதிரி உட்கார்ந்து இருக்கான்” என்று ஈஸ்வர் பார்த்து இருந்தான்..

இருவருக்கும் காபி கொடுத்தவள் “நமக்கு எங்கே” என்று ஈஸ்வரிடம் சைகை செய்ய.. எப்போதும் போல மறந்து விட்டவன் உள்ளே திரும்பப் போக.. “இருங்க, நான் போறேன்!” என்று சென்று இருவருக்கும் காஃபி கலந்து எடுத்து வந்தாள், அதுவரையிலும் எதை எதையோ பேசிக் கொண்டு இருந்தனர் தாத்தாவும் ஈஸ்வரும்...

அவள் வந்து அமரவுமே, “எப்படி இருக்க வர்ஷினி?” என,

“நல்லா இருக்கேன் தாத்தா! நீங்க எப்படி இருக்கீங்க?”

“என் பையனை அனுப்பிவெச்சிட்டு நல்லா கல்லு குண்டு மாதிரி இருக்கேன்” என,

காலையில் இருந்து அப்பாவின் ஞாபகத்தில் இருந்தவளுக்கு மனதிற்கு ஒரு மாதிரி இருக்க, “இப்போ சொல்லி என்ன பண்ண? அவரை நீங்க முன்னமே கண்ட்ரோல் பண்ணியிருக்கணும்” என வர்ஷினி சொல்ல,

“என்ன பண்ணியும் அடக்க முடியலை! என்ன செய்ய? பிடிவாதம்! என் வாழ்க்கை என் இஷ்டம்ன்ற பிடிவாதம்!” என்றவர்.. “இப்போ உங்க அப்பாவுக்கு கொஞ்சமும் தப்பாம நீ.. எதுக்கு

டைவர்ஸ் கேட்டிருக்க இப்போ? என்ன பண்ண போற அதுக்கு அப்புறம்?” என,

“நான் என்ன பண்ணினா உங்களுக்கு என்ன தாத்தா? கண்டிப்பா உங்க வீட்டுக்கு வரமாட்டேன்! உங்களுக்கு எந்த தொந்தரவும் இருக்காது! உங்க பேரன்களோட அடையாளத்தை நான் பறிக்க மாட்டேன்.. உங்க பேரை எல்லாம் எங்கயும் யூஸ் பண்ண மாட்டேன்.. உங்களுக்கு எந்த கவலையும் வேண்டாம்!” என,

“வர்ஷினி” என ஈஸ்வரும் பத்துவும் ஒருங்கே அதட்ட..

இருவரையுமே முறைத்தாள்..

“எதுக்கு இப்படி எப்பவும் எல்லோரையும் கம்ப்ளைன்ட் சொல்ற, இல்லை எடுத்தெரிஞ்சு பேசற” என்று ஈஸ்வர் அதட்ட..

“இவர் என் அப்பாவோட அப்பா தானே! இல்லைன்னு அவர் ஒரு வார்த்தை சொல்லட்டும், நான் பேசலை.. நீங்க இதுல வரவேண்டாம்!” என்றாள் காட்டமாக..

“ரொம்பவும் இர்ரிடேட் பண்ற நீ! சொன்ன பேச்சை கேட்க மாட்டியா?” என ஈஸ்வரும் கோபமாகப் பேச,

“அப்படி இவங்க கிட்ட சும்மா சிரிச்சு பேச வேண்டிய அவசியம் கிடையாது.. இவங்க வெளி ஆளுங்க கிடையாது.. என்னை நானா இருக்க விடுங்க”

“அப்படி உனக்கு சண்டை போடணும்னா அவங்க வீட்டுக்குப் போய் போடு! சும்மா நம்ம வீட்டுக்கு வர்றவங்க கிட்ட சண்டை போடாதே!” என அவனும் விடாமல் பேச,

தாத்தா தான் இடை புகுந்தார்.. “ஈஸ்வர், கோபம் வேண்டாம், என் கிட்ட தானே பேசறா, விடு!” என,

ஆனாலும் முறைத்து அமர்ந்தான்.. நீ முறைத்தாலும் எனக்கொன்றுமில்லை என்ற பார்வையை அவனிடம் வீசி திரும்பினாள்.

“வர்ஷி, நீ இன்னும் சின்னப் பொண்ணு இல்லை” என்றான் பத்துவும்.

“அதுதான் நானும் சொல்றேன், நான் இன்னும் சின்னப் பொண்ணு இல்லை, அப்படி நட, இப்படி நட, இப்படி பேசுன்னு சொல்றதுக்கு, எனக்குத் தெரியும்”

“சும்மா கோபப் படாத வர்ஷி” என்றான்.

“நான் சொன்னதெல்லாம், தாத்தா என்கிட்டே சொன்னது, அதை தான் நான் திரும்ப சொன்னேன்” என்று தாத்தாவை முறைத்துப் பார்த்தவள்.. “சொல்லுங்க நீங்க சொல்லாததையா சொன்னேன்” என,

“நான் சொன்னது சொல்லாதது இருக்கட்டும்! நீ ஏன் இப்போ டைவர்ஸ் நோட்டிஸ் அனுப்பின?” என்றார் அவரும் விடாமல்.

“இத்தனை வருஷமா என்ன கேட்டீங்க என்னை பத்தி? இப்போ வந்து இதை மட்டும் கேட்க வேண்டிய அவசியம்? அக்கறை எல்லா விஷயத்திலையும் இருக்கணும் தாத்தா, சும்மா உங்களுக்கு தோணினப்போ வந்து கேட்கக் கூடாது. அங்கயே ஏதாவது ஒரு ஆக்சிடண்டல நான் செத்திருந்தா கூட, இவரைத் தவிர யாருக்கும் தெரிஞ்சிருக்காது!” என

“ஏய், நீ வாயை மூடவே மாட்டியா” என்று ஈஸ்வர் கத்தியே விட்டான்.

“மாட்டேன்” என்று அவனிற்கும் அசராமல் பதில் கொடுத்து, “சும்மா இப்போ வந்து எல்லோரும் பேசாதீங்க, எங்க அப்பா இருந்தார் என்னைப் பார்த்துக்கிட்டார் அவ்வளவு தான்! திரும்ப நான் இவரை கல்யாணம் செஞ்சு இங்கே வந்துட்டேன்! அதுவும் எங்கப்பா தான் செஞ்சிக் கொடுத்தார்!”

“அதுக்கப்புறம் நீங்க என்ன பண்ணுனீங்க? என்ன பார்த்துக்கிட்டீங்க. என் வாழ்க்கையில சிக்கலை எல்லாம் நீங்களும் உங்க பேரனும் தான் உருவாக்கினீங்க! உங்க பேரனுங்க யாராவது இப்படித் தனியா இருந்தா விட்டிருப்பீங்களா? இல்லை கூடப் பிறந்த தங்கைன்னா பத்துண்ணா விட்டிருப்பாங்களா?”

“இதையெல்லாம் நினைக்கக் கூடாதுன்னு தான் நினைக்கிறேன். எனக்கு நாள் ஆகும் புரிஞ்சதா! சும்மா என்னை வந்து கேள்வி கேட்கற வேலை, அதை செய், இதை செய், ஏன் இப்படி செஞ்சன்னு கேட்கற வேலை எல்லாம் இருக்கக் கூடாது தெரிஞ்சதா?” என

தாத்தா அசந்து தான் அமர்ந்திருந்தார், என்ன மிரட்டல் இது என்பது போல! பத்து கூனிக் குறுகி விட்டான், மனதில்!

ஈஸ்வர் தலையிடவேயில்லை.. இட்டால் இன்னும் பேசுவாள் எனப் புரிந்து!

“உங்களால என்னை பேத்தின்னு சொல்ல முடிஞ்சா சொல்லுங்க! இல்லை வேணாம் விட்டுடுங்க! ஒரு மாசம் கழிச்சு என்னைப் பார்க்க வந்திருக்கீங்க, வந்தவுடனே என்னை கேள்வி கேட்கறீங்க” என ஆவேசமாக பேசி அந்த இடத்தை விட்டு எழுந்து சென்று விட..

“ஐயோ, இது முடியவே முடியாதா?” என்ற எண்ணம் மட்டுமே அங்கிருந்தவர்களின் மனதில்..

“இன்னும் எத்தனை எத்தனை வைத்து இவள் மருகிக் கொண்டிருகிறாள் மனதில்” என்று ஈஸ்வரின் மனது தவித்தது.. கூடவே “என்ன தெரியவில்லை இவளுக்கு என்று நான் அம்மாவின் அருகில் இருந்து கற்று கொள்ள சொல்கிறேன்” என்ற எண்ணமும்..

அவளிடம் இருப்பது தெரியாத தன்மை அல்ல ஒதுக்கம் என்று புரிந்தது.

“சாரி தாத்தா, ரொம்ப கோபம் எப்பவுமே” என,

“அவ சொல்றதும் நியாயம் தானே” எனத் திரும்பி பத்துவை பார்க்க, அவன் தலை குனிந்து தான் அமர்ந்திருந்தான்.

அவன் அப்படி அமர்ந்திருப்பது ஈஸ்வருக்கு ஒரு மாதிரி இருக்க, “விடு சரியாகிடுவா, நீ இவ்வளவு ஃபீல் பண்ண வேண்டிய அவசியமில்லை.. அவளை ஹேண்டில் பண்றது ரொம்பக் கஷ்டம்!” என்று பத்துவின் அருகில் அமர்ந்து ஆறுதலாக தோளை தட்டிக் கொடுத்தான் ஈஸ்வர்.

“இல்லை, நாங்க பண்ணினது தப்பு தான்.. நீங்களும் ரஞ்சனியும் பேசாம இருந்த போது கூட அவளுக்கு எதுவும் நீங்க வரவிட்டதில்லை.. நீங்க அவளோட எப்பவுமே இருக்கீங்கன்ற தைரியம் அவளுக்கு எப்பவுமே உண்டு.. அதனால தான் எங்களுக்குள்ள எதுவுமே சரியில்லாத போது கூட, என்னை நான் தான் பார்த்துக்கணும்ன்ற எண்ணம் அவளுக்கு வந்ததே கிடையாது.. நீங்க உங்க வீடு எல்லாமே அவளுக்கு ரொம்ப ஸ்ட்ராங் ஸ்ட்ரெந்த் கொடுக்குது!

“அந்த ஒரு ஃபீல் நாங்க அவளுக்குக் குடுக்கவே இல்லை” என்றான் கண்களும் கலங்க, குரலும் கலங்க!

“ப்ச், இவ்வளவு வருத்தம் வேண்டாம்!” என்றான் ஈஸ்வர் சமாதானமாக.

“இல்லையில்லை, வருத்தப்படலை, வெட்கப்படறேன்!” என்றான் பத்து உணர்ந்து..

“விடுடா, உங்களை அவ பார்த்துக்குவா, அவளுக்கு அவ்வளவு கெப்பாசிட்டி இருக்கு” என்றார் தாத்தா நல்ல விதமாகவே, “வீட்டுக்குப் போகலாமா?” என,

“என்ன வீட்டுக்கா? அவ வெளில வர்ற வரை நான் வீட்டுக்கு எல்லாம் வரமாட்டேன், நீங்க போறதானா போங்க!” என

“என்ன இப்போ? ஒரு நாள் நாம இங்க இருக்கக் கூடாதா?” என இலகுவாகவே சொல்லி அவரும் இருக்க,

“உங்க கைதடி கால்தடி எல்லாம் வெளில இருக்கும், அவங்களை எல்லாம் அனுப்பிட்டு வாங்க!” என்று பத்து சொல்ல.. அவர் எழுந்து வெளியே சென்றார்.

“நாங்க இங்க இருக்கலாம் தானே” என்று பத்து ஈஸ்வரை பார்த்துக் கேட்க..

“பத்து, நீ எங்க வீட்டு மாப்பிள்ளைடா.. என்ன கேள்வி இது.. என்னை வெளில போன்னு சொல்ற அளவுக்கு உனக்கு உரிமை இருக்கு” எனச் சொல்லி பத்துவின் தோளில் கைபோட்டு ஈஸ்வர் புன்னகைக்க,

பத்துவிற்கு தான் இன்னுமே குற்றவுணர்ச்சியாகப் போய்விட்டது! திருமணதிற்கு பின் அவனால் தானே எல்லாம் ஆரம்பித்தது!

“சாரி” என்றான் மனமுணர்ந்து!

“நடக்கணும்னு இருந்தா எப்படியும் நடந்திருக்கும்.. நடக்கற எதுக்கும் யாரும் பொறுப்பில்லைன்னு நாம தத்துவம் பேசலாம்.. ஆனாலும் நிஜத்துல வர்ஷினி நடந்துக்குற விதத்துக்கு ஒரு வகையில நாம எல்லோருமே காரணம்! விடு சரியாகிடுவா! ஆகலைன்னாலும் ஆக்கிடலாம்!” என்றான் நம்பிக்கையாய்..

“நிஜமா” என்பது போலப் பத்து பார்க்க,

புன்னகைத்தவன்.. “இப்படி தான் அவ கிட்ட சவால் எல்லாம் விட்டுருக்கேன் நீ என்னை விட்டு போகமாட்டான்னு நீயே சொல்லுவன்னு”

பத்துவின் முகத்தில் புன்னகையின் கீற்று எட்டிப் பார்க்க “அதுக்கு என்ன பண்றீங்க” என்றான்.

“ஹ ஹ” என்று வாய்விட்டு சிரித்த ஈஸ்வர், “ஒன்னுமே பண்ணலை.. எல்லாம் ஒரு நம்பிக்கை தான். ஐ லவ் ஹெர் எ லாட்.. கண்டிப்பா அதுக்கு ஒரு பிரதிபலிப்பு இருக்கும்! டைவர்ஸ் எல்லாம் பண்ண மாட்டா.. ஜஸ்ட் ஒரு நோட்டிஸ் தான் அனுப்பியிருக்கா.. இன்னும் ஃபைல் எல்லாம் பண்ணலை.. சும்மா அவக்கிட்ட எல்லோரும் கேட்டுக் கேட்டு பண்ணி தான் ஆவேன்னு கிளம்பிடப் போறா.. சொல்லி வை உங்க தாத்தா கிட்ட.. அட்வைஸ் பண்றேன்னு என் வாழ்க்கையில விளையாடிடாதீங்க” என..

இப்போது பத்துவின் முகத்தில் புன்னகை நன்றாகவே மலர்ந்தது.. இன்னும் அவனின் தோளில் இருந்து ஈஸ்வரும் கையை எடுக்கவேயில்லை! பலவருட சந்தேகமாக பத்து “உங்களுக்கு எப்படி இவ்வளவு அவளைப் பிடிச்சது” என,

ஈஸ்வர் இன்னும் சத்தமாக வாய்விட்டு சிரிக்க.. அப்போது சரியாக.. ரஞ்சனி குழந்தையைத் தூக்கி கொண்டு ஈஸ்வர் வீட்டிற்கு வர.. "ஆ.. என்ன காட்சி இது" என்று பார்த்தது பார்த்த படி நின்றாள்.

ஆம் ஈஸ்வர் பத்துவின் தோளின் மேல் கையை போட்டுக் கொண்டு சிரித்துக் கொண்டிருக்க.. பத்து அவனை பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

அதையும் விட.. ஈஸ்வரின் சிரிப்பு சத்தம் கேட்க "நான் அவ்வளவு டென்ஷனா கத்திட்டு வர்றேன் இவன் எதுக்கு இப்படி சிரிக்கறான்" என்று கோபத்தில் வர்ஷினியும் ரூம் விட்டு வெளியே வந்து பார்க்க..

அவளின் முகத்திலும் புன்னகை தானாகவே மலர்ந்தது! "தோடா, இவனுங்க ஏன் கொஞ்சறானுங்க" என்பது போலப் பார்த்து நின்றாள்.

அவளின் பார்வையை உணர்ந்தவன் "உன்னை கொஞ்ச முடியலை, சோ டைம் பீயிங் உன் அண்ணன்" என்பது போல குறும்பாய் ஒரு லுக் விட..

வர்ஷினிக்குத் தானாக சிரிப்பு வர.. அடக்க முயன்றாலும் முடியவில்லை.. ஒரு விரிந்த சிரிப்போடு ஈஸ்வரை பதிலுக்கு பார்த்தவள்.. "பேச்சுல, பார்வையில மட்டும் தான் நீ கொஞ்சுவ" என்ற கிண்டல் பாவனையைக் காட்ட..

ஈஸ்வர் சிரித்துக் கொண்டே ஒரு வசீகரிக்கும் பார்வையோடு அவளைப் பார்த்தான். அந்த பார்வையில் கவரப் பட்டவளாய் வர்ஷினியும் பார்த்தே நின்றிருந்தாள்.

**ஒரு காதல் என்பது.. உன் நெஞ்சில் உள்ளது.. உன் நெஞ்சில் உள்ளது கண்ணில் வந்ததடி!**

**அத்தியாயம் எண்பத்தி மூன்று :**

## நில் என்று சொன்னால் மனம் நின்றா போகும்!

சூழ்நிலை பத்துவிற்கு ஈஸ்வரோடு எப்படி என்று தெரியாமலேயே இலகுவாகி விட்டது.

ரஞ்சனிக்கு அழுகையே வந்து விட்டது.. கண்களில் நீரோடு நிற்க.. அப்போதுதான் அவளை கவனித்த ஈஸ்வர் அவளிடம் சென்றவன்..

“அம்மா, நீ அழுதா சகிக்கவே மாட்ட, அழுதுடாத”

வேகமாக அருகில் வந்த வர்ஷினி ரிஷிக்காக கை நீட்ட, அவன் அம்மாவின் மீது முகம் புதைக்க.. “ஷ், தூரப் போங்க” என்று ஈஸ்வரை பார்த்து அதட்டினாள் வர்ஷினி.

“என்னை ஏன் திட்டுற” என அவன் கேட்க..

“சும்மா அவங்கம்மாவை அழுக வெச்சா, அவன் எப்படி வருவான். அண்ணி என்னை ஃபிரண்ட் ஆக்குங்க, இல்லை நான் அழுவேன்”

“அச்சோ, ரஞ்சிஈஈஈஈ” என்று கத்துவது போல நடித்தவன், “அந்தக் கொடுமையில இருந்து எப்படியாவது என்னை காப்பாத்திடு” என்று சொல்ல,

“அய்யே! என்னைக் கிண்டல் பண்ணிட்டீங்களா, தேங்க் யூ” என்று பாவனையாக சிரிப்பது போல முகத்தை வைத்து வர்ஷினி சொல்ல..

“அம்மாடி, இதுக்கு நீ அழுதே இருக்கலாம்” என்று ஈஸ்வரும் சொல்ல..

என்ன முயன்றும் முடியாமல் முகத்தை சுருக்கி ஈஸ்வரின் புஜத்தில் கையினை முஷ்டியாக்கி குத்தினாள்.

இன்னும் நடப்பது எதுவும் நம்ப முடியாத போதும் ரஞ்சனியின் முகம் புன்னகைக்கு மாற, எல்லாம் தூர இருந்து வேடிக்கை பார்த்திருந்தான் பத்து...

என்னவோ ரஞ்சனியின் முகம் அவ்வளவு அழகாகத் தெரிந்தது.. அவளையே தான் பார்த்து இருந்தான்... அவளாகத் தேடி வந்து விட்டாள் என்ற ஒரே காரணத்திற்காக.. எல்லாவற்றையும் முயன்று சரியாக்கி கொண்டாள் என்பது தான் உண்மை..

ரஞ்சனியின் வாழ்க்கையில் சில பிரச்சனைகள் முன் நிறுத்தப்படாமல் இருந்தால் அவளோடான தன் திருமணம் என்றுமே சாத்தியமல்ல என்று நன்கு புரிந்தது..

மனைவியாகப் பக்கத்தில் இருந்த போதே அவனால் தானாக அருகில் செல்ல முடியவில்லை.. இதில் தூர இருந்தால் எப்படி முடியும்.. சில மாத வித்தியாசமே இருவருக்கும்.. இப்போது நினைத்தால் சிரிப்பு தான் வந்தது.. “உங்க டேட் ஆஃப் பர்த் என்ன?” என்று அவளிடம் கேட்டது..

வர்ஷினி ரிஷியைக் கையினில் வாங்கிக் கொண்டவள்.. “அண்ணி, பத்துண்ணா உங்களை செமையா சைட் அடிக்கறாங்க” என,

ரஞ்சனிக்கு சிரிப்பு வந்து விட.. அவள் கண்களில் நீரோடு சிரித்தது இன்னும் அழகாகக் காட்டியது...

வர்ஷினியிடம் ஒன்றும் செல்லாமல் பத்துவின் அருகில் சென்று அமர்ந்தவள்.. “வர்ஷி சொல்றா, நீங்க என்னை செமையா சைட் அடிக்கறீங்களாம்! ஹ, ஹ, அவளுக்கு உங்க ரகசியமே தெரியலை.. நீங்க அதை மட்டும் தான் செய்வீங்கன்னு” என,

அதற்கும் பத்து சிரிக்க..

“அச்சோ, வாட் இஸ் திஸ், நான் உங்களைக் கேவலமா திட்டுறேன்! நீங்க ஆக்ஷன்ல இறங்க வேண்டாமா?” என முகத்தை சுளிக்க..

“ஹ, ஹ, இங்கேயா” என வாய்விட்டு சிரித்தான் பத்து..

ரஞ்சனி முகத்தை சுளிப்பதையும், பத்து சிரிப்பதையும், ஈஸ்வரும் வர்ஷினியும் பார்த்து இருந்தனர்... ஏனோ அதைப் பார்த்த போது இருவர் முகத்திலுமே புன்னகை..

அதற்குள் தாத்தா வர.. வேகமாக ரஞ்சனியிடம் வந்த வர்ஷி, “அண்ணி, வாங்க!” என அழைக்க.. என்னவென்று புரியாத போதும் வர்ஷினியின் பின் செல்ல.. அது சமையலறை.. அங்கு சென்றதும்..

“அண்ணி, எல்லோருக்கும் என்ன சாப்பிடக் கொடுக்க பாருங்களேன்!” என.. அங்கே இருவர் மட்டுமே சாப்பிடக் கூடிய அளவு உணவுகள்.

“தோடா, நான் உங்க வீட்டுக்கு வந்திருக்கேன்! நான் சமைக்க மாட்டேன்” என..

“தோடா, நான் எங்க அண்ணியோட அண்ணா வீட்டுக்கு வந்திருக்கேன்” என்று வர்ஷி சொல்ல..

“அட” என்று வர்ஷினியின் பதிலில் அசந்தவள், “சரியான கேடி நீ” என்று அவளின் காதை பிடித்து திருகுவது போல ஆக்ஷன் செய்ய..

“ரிஷிஈஈஈஈ, உங்க அம்மா என்னை அடிக்கறாங்க!” என்று சத்தமாக குழந்தையிடம் புகார் படிக்க.. குழந்தை என்னவென்று தெரியாத போதும் சிரித்தது.

வர்ஷினியின் சத்தம் அவ்வளவு சீரியசாக இருக்க.. பத்துவும் ஈஸ்வரும் விரைந்து வந்தனர் ... அங்கே

வந்த போதே விளையாடுகிறார்கள் எனப் புரிந்து பார்க்க,

“பாரு விஸ்வா, உன் பொண்டாட்டி என்னை சமைக்க சொல்றா?” என,

ஈஸ்வர் என்ன இது என்பது போல வர்ஷினியைப் பார்க்க,

“நான் என் அண்ணியோட அண்ணா வீட்டுக்கு வந்திருக்கேன், அப்போ யார் என்னைப் பார்க்கணும், என் அண்ணி தானே!” என புதிய தியரி பேச..

“இல்லை, உன் அண்ணியோட அண்ணாவோட மனைவி!” என ஈஸ்வர் சொல்ல,

“ப்ச், கடவுள் தான் உங்களை எல்லாம் காப்பாத்தணும், சரி, நானே செய்யறேன்” என்றவள், ரிஷியிடம் திரும்பி “நாம செய்யலாம் வாடா கண்ணா” என அருகில் இருந்த ஷெல்பை திறக்க..

கை எட்டிய ஒரு கண்டெய்னரை, அடுத்த நிமிடம ரிஷி இழுத்து வெளியே விட..

“ரிஷிஈஈஈ” என வர்ஷினி கத்த கத்த.. அவன் கீழ் இருந்த ஒரு டப்பாவை இழுக்க.. அவன் இழுத்ததால் ஒரு டப்பா தான் விழுந்திருக்கும்.. ஆனால் வர்ஷினி அவனின் கையில் இழுத்ததை எடுத்து சரி செய்கிறேன் என்று அதே இடத்தில் வேகமாக நுழைக்க.. அது எந்த முறையில் அடுக்கி வைக்கப் பட்டு இருந்ததோ எல்லாம் வேகமாக வெளியே விழ..

வர்ஷினி தங்கள் மேல் விழுந்துவிடுமோ என்று குழந்தையுடன் தள்ளி நிற்க, அத்தனையும் சரிந்தது..

மூவருமே அவளைப் பார்த்து முறைத்து நின்றனர்..
திரும்பி மூவரையும் பார்த்து “சாரி, கொஞ்சம் ஸ்லிப் ஆகிடுச்சு” என,
மூவருமே இப்போது வர்ஷினியைப் பார்த்து, “நீ சமைக்கவே வேண்டாம்! முதல்ல ரிஷியைத் தூக்கிட்டு வெளிய கிளம்பு!” என,
“அது! அதைத் தானே நான் முன்னமே சொன்னேன்! இப்போ யாருக்கு வேலை, உங்களுக்கு தானே!” என்று கெத்தாக சொல்லி வர்ஷினி போக..
ஈஸ்வரும், பத்துவும், உடனே குனிந்து கடமையாய் அந்த டப்பாக்களை எடுத்து அடுக்க ஆரம்பிக்க..
“என்ன கடமையடா இவர்களுடையது.. இவங்க வாழ்க்கையில ரெண்டு பேரும் சேர்ந்து இந்த வேலையெல்லாம் செய்வோம்னு எப்போவாவது நினைச்சு இருப்பாங்களா?” என்று ரஞ்சனி வயிற்றை பிடித்துக் கொண்டு சிரிக்க ஆராம்பித்தாள்..
“என்ன சிரிக்கற?” என்று ஈஸ்வர் முறைக்க.. பத்து அதற்கும் மேலே “வா! வந்து நீயும் எடு!” என,
“முடியாது” என கிண்டலாய் சிரிக்க..
“சிரிக்கிற நீ!” என அவளின் கை பிடித்து இழுக்க.. இதை எதிர்பாராதவள் அவன் மேலே விழ.. அவன் அதை எதிர்பாராமல் ஈஸ்வர் மேல் விழ..
ஈஸ்வர் எதிர்பாராமல் கீழே அப்படியே சாய்ந்தான்.. அதுவும் அந்த டப்பாக்கள் மேல்! அது ஏக சத்தம் செய்ய..
ஈஸ்வர் கீழே, அவன் மேல் பத்து, அவன் மேல் ரஞ்சனி!
சத்தம் கேட்டு வர்ஷினியும் தாத்தாவும் வர.. இருவருக்குமே சிரிப்பு.. தாத்தா சிரித்துக்

கொண்டே இடத்தை விட்டு அகன்று விட.. வர்ஷினி வாய் விட்டு சத்தம் போட்டு சிரித்தவள்.. தாள முடியாமல் ரிஷியை கீழே அமர்த்தி.. அமர்ந்து சிரித்தாள்.

ரஞ்சனி எப்படியோ எழுந்து நின்றவள், அவளும் சிரிக்க.. பத்து ஈஸ்வரின் மேலிருந்து விலகி கீழேயே உருள..

ஈஸ்வர் அப்படியே படுத்திருந்தான்.. பின்னே இருவர் மேலே விழுந்தால்..

ரஞ்சனி பத்துவிற்கு கை கொடுத்து தூக்க, ஒரு வழியாக எழுந்து நின்ற பத்துவிற்கு முகம் கொள்ளாச் சிரிப்பு.. பத்து ஈஸ்வருக்கு கை கொடுக்கப் போக..

“குடுக்காதீங்க! அங்க ஒருத்தி நம்மளை வெச்சு காமெடி செஞ்சிட்டு இருக்கா! அவளே தூக்கி விடட்டும்!” என்றவள், “வாங்க இதுக்கு மேல எனக்கு சமைக்க முடியாது.. ஏதாவது ஆர்டர் பண்ணுவோம்” என்று ரிஷியை தூக்கிப் போக.. பின்னேயே பத்து சென்றான்.

அப்போதும் சிரித்துக் கொண்டிருந்தாள் வர்ஷினி!

“ஹேய், சிரிச்சது போதும்! வந்து தூக்குடி! அதுக்கு அப்புறம் தான் என்ன டேமேஜ்ன்னு தெரியும்!” எனக் கடுப்பாக ஈஸ்வர் சொல்லவும்..

சிரித்துக் கொண்டே எழுந்து வந்தவள்.. “ம்ம்ம், எழுந்திருங்க!” என்று கையை நீட்ட..

அவளுடைய உற்சாகம் பொங்கும் சிரித்த முகத்தை பார்த்தவன் தானாக இலகுவாகி, “தூக்கு” என்று கையை நீட்டினான்.

ம்கூம்! தூக்க முடியவில்லை! ஏனென்றால் ஈஸ்வர் எழ முயலவேயில்லை… “அச்சோ, எழ

முடியலையா" என்று சிரிப்பை விட்டு அவன் முன் ஏதோ அடி போல என நினைத்து குனிய.. "என்னமா சிரிச்ச நீ! உன்னை..." என்று இழுத்து மேலே போட்டுக் கொண்டான்..

அவன் மேலே விழுந்தவள்...... "ஐயோ, விடுங்க, யாராவது வரப் போறாங்க" எனப் பதற,

"வரலைன்னா பரவாயில்லையா வர்ஷ்" என்றான்.

"அச்சோ என்ன இது?" என வேகமாக எழ முற்பட அவளை விடாது இறுக்கிப் பிடித்தவன்.. "இப்போ சிரி பார்க்கலாம்" என,

"ஏன்? சிரிக்க மாட்டேனா?" என்றாள் விறைப்பாக..

"அதுதான் சொல்றேன் சிரி" என,

சிரிக்கும் வாயை இழுத்துப் பற்றி நிறுத்தினான். என்ன செய்யப் போகிறான் அவன் என வர்ஷினி ஈஸ்வரின் இயல்பை தெரிந்தவளாய் பார்க்க.. "கிஸ் மீ" என அவனின் கண்கள் யாசித்தது சில நொடி அவனை அறியாமல்..

"பார்த்தாயா? இதுதான் நீ!" என்று வர்ஷினி பார்த்திருக்கவும்.. அந்தக் நீல நிறக் கண்களை சரியாக படித்தவன்...

"சாரி" என கண்களாலேயே மீண்டும் யாசித்து.. "கிஸ் பண்ணட்டுமா?" என்று கேட்க..

"வேண்டாம்னு சொன்னா விட்டுடுவீங்களா" என வர்ஷினி ரகசியம் பேசினாள்.

ஈஸ்வரின் முகம் தானாகப் புன்னகை பூசி, அவளின் இதழ்களை நெருங்கிய சமயம்...

"விஸ்வா" என்ற ரஞ்சனியின் குரல் கேட்க..

மின்னல் வேகத்தில் அவளின் இதழ் மீது இதழ் பதித்து.. அவளை கீழே உருட்டி அவன் எழுந்து

நிற்க..

என்ன நடந்தது என்றே வர்ஷினிக்குத் தெரியவில்லை..

அவள் எழ ஈஸ்வர் கைநீட்டி நிற்க..

“போடாங்” என்று எப்போதும் போலக் கெட்ட வார்த்தையில் திட்டினாள்.. அதை வாங்குவதற்கே பிறந்தவன் போலப் புன்னகை முகமாய் அவளுக்கு கை கொடுக்க...

“கொஞ்சம் கூட வெட்கமேயில்லை உங்களுக்கு” என்றபடி அவன் கைபிடித்து எழுந்து நின்றாள்.

“அது எதுக்கு எனக்கு? உனக்கு தான் வர்ஷ் வேணும்!” என..

மீண்டும் அவள் திட்டுவதற்குள் “விஸ்வா” என்ற ரஞ்சனியின் குரல் கேட்க வெளியில் விரைந்தான்..

“லேண்ட் மார்க் கேட்கறாங்க டிஃபன் ஆர்டர் பண்ணினேன், அது கொண்டு வர்றதுக்கு” என,

ஃபோனை வாங்கி அவன் வழி சொல்லவும்.. ரிஷியை மீண்டும் வாங்கிக் கொண்ட வர்ஷினி, அவன் எதோ பெரிய மனிதன் போல அவனிடம் கதை பேசி நின்றாள்..

உணவு வந்து எல்லோரும் உண்டு முடித்து மீண்டும் தாத்தா அவளிற்கு ஒரு வண்டி அட்வைஸ் செய்ய...

“இவரை பேசாம இருக்கச் சொல்லுங்க, இல்லை என்னை ஒரு வழியாக்கிடுவா” என்று பரிதாபமாக ரஞ்சனியையும் பத்துவையும் பார்த்தான்.

“போகலாம் தாத்தா” என ரஞ்சனி சொல்ல..

“நீங்க சொன்னாலும் அவ கேட்கப் போறது இல்லை” என்று பத்துவும் சொல்ல..

அது எதோ ஒரு வகையில் வர்ஷினிக்கு எரிச்சலைக் கொடுக்க.. “அட அண்ணா, நீ கொஞ்சம் புத்திசாலி ஆகிடீங்க போல” என்று பத்துவைக் கீழிறக்கி வர்ஷினி கிண்டல் பேசினாள்.

அவள் பத்துவைப் பேசிய விதம் ரஞ்சனிக்கு கோபம் கொடுக்க.. ரஞ்சனி பேச வரும் போதே ரஞ்சனி முகம் பார்த்தே “அவ அண்ணா கிட்ட அவ பேசறா ரஞ்சி.. நீ என்னோட பேசும் போது வர்ஷினி நடுவுல பேசறது இல்லை” என ஈஸ்வர் சொல்ல ரஞ்சனி அதன் பிறகு வாயே திறக்கவில்லை.

ஆனாலும் பத்துவைக் கிண்டல் செய்தது கோபம் வந்தது.. பிறகு அவர்கள் விடைபெற்றுக் கொள்ள..

“ஏன் பத்துவை கிண்டல் பண்ற? பாரு, ரஞ்சனிக்கு கோபம் வந்துடுச்சு!” என்று ஈஸ்வர் சொல்லவும்..

“அண்ணி ஒரு குரல் கொடுத்தா, அவங்க அண்ணன் பொண்டாட்டியை கிஸ் பண்றதை கூட விட்டுட்டு அடுத்த நிமிஷம் அவங்க முன்னாடி நிக்கறாங்க.. நான் என் அண்ணனை கிண்டல் பண்ணக் கூட உரிமை கிடையாதா?” என,

ஈஸ்வர் பேச்சற்று போனான்..

அப்போது மட்டுமல்ல அதன் பின்னும் அருகிலேயே விடவில்லை.. “ஒரு சேன்ஸ் கொடுத்தேன், மிஸ் பண்ணிட்ட, நான் என்ன பண்ண? போடா?” என்று விட...

“போடி” என சொல்லத் தான் ஈஸ்வருக்கு தோன்றியது..

ஆனால் சொல்ல முடியவில்லை.. பயம்.. பின்னே அதுதான் சாக்கென்று போய்விட்டாள்..

“இப்படி, இதுவல்ல வாழ்க்கை!” என அவளுக்கு புரிய வைக்கப் பேச வர்ஷினி வாய்ப்பே கொடுக்கவில்லை..

ஆரம்பிக்கும் போதே “வேறு பேசுவோம்” என்று விடுவாள்..

உணர்வுகள் இருவருக்கும் பொது என அவனுக்கு ஞாபகத்திலேயே இல்லை.. ஆணாதிக்க சமுதாயம் எல்லாம் அவர்கள் பார்வையில் இருந்து தான் பார்க்கும்..

குடும்பத்தில் பெண்களுக்கு ஆண்கள் செய்து கொடுக்கும் வேலைகள் எல்லாம் என்றுமே அவர்களின் வேலைகள் ஆகாது.. அது பெண்களுக்குச செய்யும் உதவி.. அப்படி செய்யும் ஆண்மகன் தாராள மனம் படைத்தவன்.. பெண்களை மதிப்பவன்.. சரிசமமாக நடத்துபவன்.. பார்த்து பார்த்து கவனித்துக் கொள்பவன்!

தெரிவதேயில்லை! அது அவனின் குடும்பமும் தான்! அது அவனின் வேலையும் தான்! என..

ஈஸ்வருக்கு வாழ்க்கையே சலிப்பாகத் தோன்றியது... இன்னும் வர்ஷினியைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்ற நினைப்பிற்கு அவனே வந்து விட்டான்.

கடவுள் மீது பாரத்தை போட்டு விட்டான்..

“நான் நடந்தே திருப்பதி மலை ஏறுரேன்னு வேண்டியிருக்கேன். அடுத்த வாரம் போகலாமா உனக்கு? அப்போ கோவிலுக்கு வர முடியுமா? இல்லை அதுக்கு அப்புறம் போவோமா?”

“இல்லை, அடுத்த வாரம் போகலாம் எனக்குப் பிரச்சனையில்லை! யாரெல்லாம் போறோம், நீங்க என்கிட்டே எதுவுமே சொல்றதில்லை, அண்ணி

என்கிட்டே கேட்கறாங்க, என்ன வேண்டுதல்ன்னு எனக்குத் தெரியவேயில்லை!”

“இது இப்போ வேண்டினது இல்லை.. ரொம்ப முன்ன.. உங்க வீட்ல நான் வாங்கின பணத்தை நல்ல படியா திரும்பக் கொடுக்கணும்னு.. தொழில் பிரச்சனை எல்லாம் தீரணும்னு.. மூணு வருஷம் மேல ஆகப் போகுது.. நீயில்லாம எனக்கு போக மனசில்லை!” என,

ஈஸ்வர் திருப்பதி சென்று, என்ன என்ன செய்யப் போகிறான் என.. “என்ன?” என்று வியந்தாள்.. பின்னே “நான் என்ன பண்ணனும்?” என,

“என்னோட நடந்து வர்றியா?” என,

“நான் நடந்து வர்றேன்” என்றவள், “யாரெல்லாம் போறோம்” என,

என்னவோ அவளின் குரலில் இருந்தது போலத் தோன்ற, “யாரெல்லாம் போகலாம்” என்றான்.

“நாம மட்டும் போகலாமா?” என,

“அம்மா அப்பா விட்டு எப்படிப் போக” என,

“அத்தை வந்தா, அண்ணி கூப்பிடுவாங்க.. அப்புறம் அவங்க இவங்கன்னு பெருசா ஆகிடும்.. அவங்களோட எல்லாம் போக நீங்க எனக்கு ஏன் வெயிட் பண்ணனும், முன்னமே போயிருக்கலாம்” என,

“வர்ஷ், நாம நடந்து போகப் போறோம். எனக்கு முடி இறக்கணும்.. காணிக்கை செலுத்தணும்.. அடுத்த நாள் காலையில அங்கப் பிரதட்சணம் பண்ணனும், திருகல்யாணம் உற்சவம் பார்க்கணும்..”

“அதெல்லாம் கூட இல்லை.. அவ்வளவு பெரிய காணிக்கை நான் செலுத்தும் போது அம்மா அப்பா

இல்லாம நான் எப்படி செய்வேன்” என்றான் பொறுமையாக.

“ஏன்? எதுக்கு? கோபம் என்மேல தானே! அவங்க எல்லாம் என்ன பண்ணினாங்க.. இப்படி கோபத்தை இழுத்து வெச்சு என்ன பண்ண போற? நீ எப்போ மாறுவ?” என,

“ஏன் நான் மாறுறதைப் பத்தியே யோசிக்கறீங்க? நீங்க ஏன் மாறக் கூடாது? என்னவோ அப்படி ஒரு ஆசை, காதல், என் மேல சொல்லி.. காதல் சொன்ன பொண்ணை கூட விட்டு வந்தீங்க.. ஆனா எனக்காக என்ன செஞ்சீங்க.. ஒன்னுமே கிடையாது.. தனியா என்னை கூட்டிட்டு வந்திருந்தாலும்.. எப்பவும் உங்க குடும்பம் தான்! அம்மா, அப்பா, அக்கா, தங்கை, அண்ணா, அண்ணி, இப்படி.. நான் தனியா வளர்ந்ததால எனக்கு இதெல்லாம் தெரியலை.. தெரியவும் வேண்டாம்.. முதல்ல உங்களை எனக்கு தெரிய வைங்க.. அதுக்கு என்ன செஞ்சீங்க?”

“ஒன்னுமே செய்யாம என்ன?.. ட்ரக் அடிக்ட் பொண்ணை பெரிய மனசு பண்ணி ஏத்துக்கிட்டீங்க, அண்ட் அவ பண்ணின தப்பு எதுவும் சொல்லிக் காட்டுறது இல்லை, வெளில தெரியவும் விடலை, அவ நல்லா இருந்தா போதும்னு பெரிய மனசு பண்ணி அவளை பிரிஞ்சு இருந்தீங்க ரைட்.. அப்போ நீங்க நல்லவங்க இல்லையா” என நிறுத்தினாள்..

ஈஸ்வர் என்ன வரப் போகிறதோ என்று தடதடக்கும் இதயத்தோடு பார்த்திருக்க..

“ஆனா இதுக்கெல்லாம் காரணம் நீங்க? அது பின்ன போயிடுச்சு இல்லையா? ஈஸ்வர்ன்ற ஒருத்தனை நான் பார்க்காம இருந்திருந்தா நல்லா

இருந்திருப்பேன்னு எனக்கு எப்பவும் தோணுதே? அதை நான் என்ன செய்ய? எல்லாம் உன்னால, போ, போ” என்று கத்தியவள் சென்று விட..

வாழ்க்கையில் அவனுக்கு இது முடியவே முடியாது என்று தோன்றியது..

அவனுக்கு இன்னும் அவனின் தவறு புரியவே இல்லை.. “நீதான் எனக்கு எல்லாம், உன் பின் தான் எனக்கு எல்லாம்” என்ற ஒரு வார்த்தை எல்லா ஜாலங்களும் செய்யக் கூடும் என.. உண்மையில் அதுதான் அவன்.. ஆனால் அதை உணரவைக்க இன்னுமே முடியவில்லை..

ஏன் அவள் முன்பு கேட்டதும் அதுதானே!

“இவளுக்கு என்னைப் பிடிக்கவே பிடிக்காதா? என்ன செய்ய?” என்று ஈஸ்வர் யோசிக்க..

“நிறைய, நிறைய பிடித்ததினால் தான் இந்த அவளின் நடத்தை” எனப் புரியவில்லை.. அதனால் தான் எதையும் சரி சரி என்று அவளால் விட முடியவில்லை எனப் புரியவில்லை..

**அவளுக்கும் புரியவில்லை! அவனுக்கும் புரியவில்லை!**

**அத்தியாயம் எண்பத்தி நான்கு :**

**வலிகளும் வாதனைகளும் உடலுக்கு இருக்கும் போது மருந்து கொடுக்கலாம்! மனதிற்கு என்ன மருந்து கொடுக்க?**

அடுத்த நாள் பொறுமையாக அவளுக்கு விளக்கினான்.. “இது என்னோட வேண்டுதல் வர்ஷினி.. குடும்ப தொழில் சம்மந்தப்பட்டது தான்.. இந்த ஒரு முறை எல்லோர் கூடவும் போய்டுவோம்.. அம்மா அப்பா கூப்பிடும் போது.. என்னால பெரியம்மா பாட்டி எல்லாம் கூப்பிடாம இருக்க

முடியாது.. நீ போன நாள்ல இருந்து தனியா தான் நானும் இருக்கேன்” என,

“இல்லை, நான் வரலை, நீங்க போயிட்டு வாங்க” என்றாள்.

“சொன்னா புரிஞ்சிக்கோ, யாரையும் விட்டு என்னால போக முடியாது!” என,

“உங்களை போகவேண்டாம்னு நான் சொல்லலை! நான் வரமாட்டேன்!” என்றாள் பிடிவாதமாக..

தான் செய்வது அதிகப்படி இவ்வளவு பிடிவாதம் தேவையில்லை.. சரி செய்ய வேண்டும் என்று நினைத்தாலும் முடியவில்லை.. தனியாய் இருக்கவும் முடியவில்லை.. எல்லோரோடும் இருக்கவும் முடியவில்லை.. இதெல்லாம் வர்ஷினிக்கு புரிந்து தான் இருந்தது.. அதனால் வாழ்க்கை வர்ஷினிக்கு பிடிப்பற்று போனது தான் உண்மை..

என்னவோ தன்னைச் சேர்ந்தவர்கள் எல்லோரையும் பார்க்கும் போது, அவர்கள் எல்லாம் சந்தோஷமாக இருப்பது போலவும்.. அப்படி தன்னால் தன் வாழ்க்கையை வைத்துக் கொள்ள முடியவில்லை போலவும் ஒரு தோற்றம்.. அதையும் விட எல்லோரும் என்னவோ ஈஸ்வரை அவள் கஷ்டப்படுத்துகின்றாள் என்ற பார்வை பார்ப்பதும் நிச்சயம்..

எல்லாம் கடந்து ஒன்றுமில்லை என்பது போல எல்லோருடனும் போகப் பிடிக்கவில்லை.

இரண்டுமே உண்மை தானே! மற்றவர்களின் பார்வையில் அவள் ஈஸ்வரை கஷ்டப் படுத்துகிறாள் தானே!

ஏன் என்ன என்று அவளுக்காக யோசிப்பவர் யார்?

இப்படி சில எண்ணங்கள் அவளுக்குள் இருக்கும் போது அவளைத் தவிர வேறு ஞாபகங்கள் ஈஸ்வருக்கு இருக்கக் கூடாது.. விட்டால் அவனுக்கும் தானே இழப்பு...

அவள் மாறவேண்டும் என்பது தான் அவனின் எண்ணமாக இருந்தது.. அவளை அவளாய் இருக்க விட வேண்டும் என்று தெரியவில்லை!

இரண்டு நாட்கள் தன்னைப் போல அது செல்ல.. ஈஸ்வரின் வருத்தமான முகத்தைப் பார்த்து அவளே சொல்லி விட்டாள்.. “எதுக்கு இவ்வளவு கஷ்டம்! ரைட் நவ், ஐ டோன்ட் ஹேவ் எனி கம்ப்ளையின்ட்ஸ்.. பேசாம என்னை டைவர்ஸ் பண்ணிட்டு நீங்க ஒரு கல்யாணம் பண்ணிக்கங்க” எனச் சொல்ல..

அதிர்ந்து போனான் மீண்டும் முதலில் இருந்தா.. முடியவே முடியாது எனத் தோன்றியது..

“ஏய் நீ என்ன லூசா.. அடிச்சிடப் போறேன், என் கண் முன்னே வராத” என்று கத்தினான்..

அசையாமல் அமர்ந்திருந்தவள் “நான் சொல்றதை சொல்லிட்டேன்! அப்புறம் என் வாழ்க்கையை நீ ஸ்பாயில் பண்றனு சொல்லக் கூடாது!” என,

இன்னும் பக்குவமாக ஈஸ்வர் கையாண்டு இருக்கலாமோ என்னவோ? ஆனால் ஒரு சலிப்பு அவனைப் பேச வைத்து விட்டது..

“போடி! உன் கூட எல்லாம் மனுஷங்க பேசவும் முடியாது இருக்கவும் முடியாது.. என்ன உன் பிரச்சனைன்னு எனக்குப் புரியவேயில்லை.. என்னவோ என்னைத் தவிர உன்னை யாரும் சமாளிக்க முடியாதுன்னு அவ்வளவு கர்வம் எனக்கு.. இப்போ தான் தெரியுது நான் எவ்வளவு

முட்டாள்னு.. நீயும் என் கூட பேசாதே! நானும் உன் கூட பேசலை! நாம இந்த வீட்ல சேர்ந்து இருக்கோம் அவ்வளவு தான்! எப்போ உனக்கு என்னோட சேர்ந்து வாழலாம்னு தோணுதோ அப்போ சொல்லு!" என்று விட்டான் முடிவாக..

வர்ஷினி திரும்ப எதுவுமே பேசவில்லை வாக்குவாதம் செய்யவில்லை. தன் வேலையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டாள்..

திருப்பதி பயணமும் நின்று விட்டது.. வீட்டின் வேலையும்.. எதையும் செய்வதற்கு ஈஸ்வருக்கு பிடித்தமில்லை.. எல்லாம் அவனே நிறுத்தி விட்டான்.

ஆனால் சொந்த வாழ்க்கை தான் இருவருக்குமே அப்படி.. இருவர் வாழ்க்கையிலும் தொழில் வகையில் இன்னுமே ஏறுமுகம் தான்...

"நான் பண்ணட்டுமா?" என்ற கேள்வியே வர்ஷினியிடம் இல்லை.. "நான் பண்ணப் போகிறேன்" என்ற விஷயம் மட்டுமே ஈஸ்வரிடம் தெரிவிக்கப் பட்டது..

ஆம்! தெரிவிக்கத்தான் பட்டது.. ஈஸ்வர் என்னிடம் பேசாதே என்ற பிறகு அவள் பேச முயலவேயில்லை.. திரும்பவும் பெரிய தப்பை தான் செய்து விட்டான் ஈஸ்வர்.. அவனிடம் மட்டுமே கொஞ்சமாவது பேசிக் கொண்டிருந்தவளிடம் நீ பேசாதே என்றால் என்ன செய்வாள்..

அஸ்வினிடம் சொல்ல.. அவன் வந்து தான் ஈஸ்வரிடம் சொன்னான்.. "என்னவோ ஃபிலிம் டிஸ்டிரிபியுஷன் சொல்றாங்க.. நமக்கு இது தேவையா?" என,

“அதையேன் என்கிட்டே சொல்ற?” என்று சுள்ளென்று விழுந்த ஈஸ்வர்.. “அவ கிட்ட சொல்ல வேண்டியது தானே!” என்றான்.

“சொல்ல முடிஞ்சா உங்ககிட்ட ஏன் வந்து சொல்றேன்” என்றான் ஆதங்கமாக.. “ஃபிலிம் இண்டஸ்ட்ரில எந்த பேக்கிரௌண்டும் இல்லாம எப்படி என்ன செய்ய முடியும்? இவங்க வயசென்ன? யாராவது அட்வான்டேஜ் எடுத்துக்கிட்டா?” என,

“உன்னால ஒரு வார்த்தை அவ கிட்ட சொல்ல முடியுதா? இல்லை என்னால சொல்ல முடியுதா? ஹஸ்பன்ட் என்னாலயே ஒரு அட்வாண்டேஜும் எடுக்க முடியலை.. இன்னும் யாரால முடியும்.. சும்மா நாம பயந்து அவளோட அச்சீவ்மென்ட்ஸ் தடுக்க வேணாம்.. நீ உன் தொழில் எல்லாம் கொஞ்சம் நாள் மூட்டை கட்டி வெச்சிட்டு அவ கூடவே இரு!”

“உனக்கு என்ன லாபமோ, அதை நான் தர்றேன்”

“ப்ச்” என்று சலித்த அஸ்வின்.. “நீங்க சொன்னாலும் சொல்லலைனாலும் அவங்க என்னை துரத்துற வரை நான் அவங்க கூட தான் இருப்பேன்! ஆனா இப்போ அது பிரச்சனையில்லை! எனக்கு பயமா இருக்கு.. அவங்க யங், அழகா இருக்காங்க, எப்படி அந்த ஆட்களை எல்லாம் சமாளிப்பாங்க!” என,

“ஏன் மாட்டா.. அவ விஷ்வேஷ்வரன் மனைவி! ஈஸ்வர் ஃபைனான்ஸ் குடும்பத்தோட மருமக.. அவளால முடியலைன்னா வேற யாரால முடியும்.. இவ்வளவு பேக் கிரௌண்ட் அவளுக்கு இருக்கு.. நம்மை மீறி எதுவும் நடக்காது.. விடு!” என்று அஸ்வினை ஈஸ்வர் தான் சமாதானம் செய்யும் படி ஆகிற்று..

“நீங்க எதுக்குமே வரமாட்டேன்றீங்க, நான் என்ன பண்ண?” என,

“எனக்கு மட்டும் இதை பத்தி என்ன தெரியும்? பார்த்துக்கலாம் விடு!” என்றான்.

“ஒரு பொண்ணை, உங்களால சரி பண்ண முடியாதா? ஏன் இப்படி பண்றீங்க?” என்றான் திரும்பவும் ஆதங்கமாக..

ஈஸ்வர் லேசான முறைப்போடு அமர்ந்திருக்க..

“என்ன பண்ணுவீங்களோ எனக்குத் தெரியாது, அவங்க திரும்ப எங்கயும் போகக் கூடாது! உங்க வாழ்க்கையை விட்டு போகவே கூடாது” என்று டென்ஷனாக பேசியவன் எழுந்து சென்று விட்டான்..

ஈஸ்வர் பார்த்திருந்த போதே.. “அவங்க ஐஸ்வர்யா முதல்ல வேலை பார்த்த ஹாஸ்பிடல்க்கு என்னை கூட்டிட்டு போகச் சொன்னாங்க, ஏதோ நீங்க லோன் கேன்சல் பண்ணிட்டீங்கலாம், என்ன பண்ணட்டும்?” என்று விறைப்பாகக் கேட்க..

“கூட்டுட்டு போகச் சொன்னா கூட்டிட்டுப் போ! ஆனா என்ன நடக்கதுன்னு எனக்கு சொல்லு!” என..

“இதுக்கு நீங்க கூட போக வேண்டியது தானே” என சொல்ல வந்தவன்.. அவனுடைய ஸ்டேடஸிற்கு, அது சரி கிடையாது என்று புரிந்தவனாக.. தலையாட்டி சென்றான்.

“ஐஸ்வர்யாவிடம் ஏதோ லோன் கேன்சல் பண்ணிட்டாங்கலாம், வர்ஷினி மேம், உங்க ஹாஸ்பிடல் எம் டீ பார்க்கணும்னு சொன்னாங்க! எனக்கு டைம் பிக்ஸ் பண்ணிக் கொடு!”

“நான் அங்கே இனிமே போகப் போறதில்லை.. நீயே பண்ணிக்கோ” என..

“ஏன், ஏன் போகலை.. இப்போ தானே மாறின” என..

“ப்ச், போகப் பிடிக்கலை! விடு, சும்மா துருவாதே, நான் வேற பார்த்துட்டு இருக்கேன்” என,

“பேசாம எங்கேயாவது ஒரு கிளினிக் போட்டு உட்காரு, எதுக்கு ஹாஸ்பிடல்க்கு போகணும்னு என்ன?”

“மெயின் ஏரியால ப்ளேஸ் தேடணும், அப்புறம் எல்லாம் அரேஞ் பண்ணனும், அப்புறம் அட்வான்ஸ் கொடுக்கணும், அதை பார்த்துக்க ஆள் போடணும், அவங்களுக்கு சம்பளம் கொடுக்கணும், எடுத்த உடனே பேஷண்ட் வந்திட மாட்டாங்க, எனக்கு இன்னும் வயசாகலை, முக்கியமா கல்யாணமாகலை, என்னை நம்பி டெலிவரி கேஸ் வராது” என பாடம் படித்தவள்..

“சம்பளம் வாங்கிட்டு நிம்மதியா இருக்கலாம்! ரஞ்சனி அவ ஹாஸ்பிடல்க்கு வான்னு சொல்றா! அங்கே ஏற்கனவே ஒரு கைனகாலஜிஸ்ட் இருக்காங்க” என,

“ஏதாவது என்கிட்டே சொன்னியா? எதுக்கு வீட்ல இருக்கேன்னு கேட்டேன் தானே! நீ ஒன்னுமே சொல்லலை! அப்பா இறந்ததினாலன்னு நானே நினைச்சிக்கிட்டேன்” என்றான் சற்று கோபத்துடனே..

“வர்ற மாப்பிள்ளை எல்லாம் வேண்டாம், வேண்டாம், சொல்ற.. முதல்ல எப்படியோ இப்போ நீ என்னோட பொறுப்பு.. அப்பா இப்போ கிடையாது.. உன்னோட மைண்டை கல்யாணத்துக்கு பிக்ஸ் பண்ணிக்கோ ஐஸ்வர்யா.. இப்போவே உனக்கு இருபத்தி எட்டு வயசு..

இன்னும் சிக்ஸ் மனத்ஸ் கழிச்சு கண்டிப்பா பண்ணிக்கணும்!" என,

"நீங்க கொண்டு வர்றது எனக்குப் பிடிக்கலை" என்றாள்..

"என்ன மாதிரி நீ எதிர்பார்க்கிற? டாக்டரா? இல்லை பிசினெஸ் பண்றவங்களா? இதுவே ரொம்ப லேட், இன்னுமே தள்ளிப் போட்டா எதுவுமே அமையறது கஷ்டம்.. படிச்சு முடிச்ச நாள்ல இருந்து சொல்றோம்" என்று அவளின் அம்மா இடையில் வர..

என்ன மாதிரி என எப்படிச் சொல்வாள், ஈஸ்வர் போல என்றா? இல்லை ஈஸ்வரை விட இன்னும் பெட்டராக என்றா?

"ப்ச், எனக்கேத் தெரியலை" எனச் சலிப்பாக சொன்னாள்.

"பழசெல்லாம் நினைக்காதே" என சொல்லி, அதன் மூலம் கூட அவளுக்கு பழையது ஞாபகம் வருவது அஸ்வினிற்கு பிடிக்கவில்லை..

அவனிற்குமே ஈஸ்வரை விட உயர்ந்தவனாக மாப்பிள்ளை பார்க்க ஆசை தான்.. பண விஷயத்தில் முடியாவிட்டாலும் குணத்திலாவது அவனை விட உயர்ந்தவனாக பார்க்க வேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

பின் வேறு பேசாமல் "எங்களை கூட்டிட்டு போறியா" என,

"நானும் இன்னும் ரெசிக்னேஷன் கொடுக்கலை.. ஈவ்னிங் போக முடியுமா, பார்க்கலாம்!" என,

"சரி" என்றவனிடம், சிறிது நேரத்தில், "ஈவ்னிங் போகலாம்" என அவர்கள் இருப்பதை உறுதி செய்து கொண்டு ஐஸ்வர்யா சொல்ல..

ஐஸ்வர்யா அங்கே முன்பே சென்று விட.. அதன் பின் தான் வர்ஷினியும் அஸ்வினும் வந்தனர்..

ஐஸ்வர்யாவை பார்த்து ஒரு அறிமுகப் புன்னகை வர்ஷினி பூக்க.. ஐஸ்வர்யாவும் பதிலுக்கு சிரித்தாள்.. தன்னை பார்த்து அவர்கள் தான் முதலில் சிரிக்க வேண்டும் என்றெல்லாம் எண்ணவில்லை..

அந்த ஒரு பாங்கு ஐஸ்வர்யாவைக் கவர்ந்தது.. அஸ்வின் "அவர் ரூம் போகலாமா?" என,

"வாங்க" என்று உள்ளே அழைத்துப் போக.. சஞ்சயின் ரூமில் யாருமில்லை.. அவர்கள் மூவரும் காத்திருக்க.. ரௌண்ட்ஸ் முடித்து அப்போது தான் வந்தான்..

ஐஸ்வர்யாவை எதிர்பாராதவன் கண்கள் அவளிடம் சில நொடிகள் நிலைத்து திரும்பி எல்லோரையும் பார்த்து பின்பு அவளிடமே நிலைத்தது..

"சொல்லுங்க டாக்டர்" என..

"இவங்க உங்களைப் பார்க்கணும் சொன்னாங்க" என,

"சொல்லுங்க மேம்" என்றான் வர்ஷினியைப் பார்த்து.. "ரியல்லி சாரி, எனக்கு என்ன நடந்ததுன்னு தெரியாது.. என் ஹஸ்பன்ட் சார்பா நான் மன்னிப்பு கேட்டுக்கறேன்!" என்றவள்.. "நான் எந்த வகையிலாவது உங்களுக்கு உதவ முடியுமா?" என்றாள்.

"இல்லை, தேவையில்லை" என்றவன்.. "நாங்க இந்த ஹாஸ்பிடல் விலை பேசிட்டோம், அடுத்த மாசம் சைன் ஆகுது. மோஸ்ட்லி டைம் கூட தேவையிருக்காது!" என,

“என்ன ஹாஸ்பிடல் கைவிட்டு போகப் போகிறதா?” ஐஸ்வர்யாவிற்கும் அதிர்ச்சி..

“நோ ப்ளீஸ், என்னால உங்க லோன் கேன்சல் ஆகி, அதனால உங்க ஹாஸ்பிடல் கைவிட்டு போகற நிலைமை வேண்டாம்” என்றாள் தன்மையாக.

“இது முடிஞ்சு போன விஷயம் மேம்” என்றான் பேச்சு முடிந்தது என்பது போல.

“யோசிக்கலாமே, விக்கறது ரொம்ப பெரிய விஷயம்!” என ஐஸ்வர்யாவும் சொல்ல,

“விக்காம என்ன பண்ண டாக்டர்.. நீங்க இங்க இருப்பீங்களான்னு கேட்டு தானே எல்லா எக்யுப்மென்ட்சும் வாங்கினோம்.. அதுல எவ்வளவு இன்வெஸ்ட் செஞ்சிருக்கோம்.. நீங்க இப்போ ரிசைன் பண்றீங்க”

“யாரை போய் உங்க அளவுக்கு எஃபீஷியண்டா நாங்க திரும்ப சேர்ப்போம்.. தேடினோம் கிடைக்கலை.. இந்த இடம் வாங்கறதுலயே எங்கம்மாவோட சம்பாத்தியம் முழுசும் போச்சு.. கட்டினது முழுசும் பைனான்ஸ் பணத்துல.. இதுல வேற கடனை வாங்கி தான் எக்யுப்மென்ட்ஸ் எல்லாம் வாங்கினோம்”

“எங்களால சமாளிக்க முடியலை, வேற ஆப்ஷன் கிடையாது டாக்டர்” என்றான்.

“ஏன்? ஏன் நீங்க வேலையை விட்டு நிக்கறீங்க” என்று வர்ஷினி ஐஸ்வர்யாவிடம் கேட்க,

“இது என்னடா இவள் இப்படிக் கேட்கிறாள்” என ஐஸ்வர்யா பார்த்து இருந்தாலும் பதில் சொல்லவில்லை...

“நீங்க சைன் பண்ணின காண்ட்ராக்ட் கூட உங்களுக்கு நினைவில்லையா டாக்டர்..

ஆக்சுவலா பார்க்கப் போனா நீங்க எங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கணும்.. நாங்க அதைக் கூட கேட்கலை" என,

அது ஒரு வகையில் ஐஸ்வர்யாவிற்கு கோபத்தைக் கொடுக்க.. "நான் எதுக்கு கொடுக்கணும்.. வொர்கிங் அட்மாஸ்பியர் நல்லா இல்லைன்னா நான் என்ன பண்ண? எல்லாம் எனக்கு டாலரேட் பண்ணனும்னு ஒன்னும் கிடையாது!" என,

அதுவரையில் பேசாமல் இருந்த அஸ்வின் ஐஸ்வர்யாவிடம் "என்ன டாலரேட் பண்ணின நீ, என்ன நடந்தது" என்றான் கோபமாக.

"அச்சோ, இவன் இருப்பதை மறந்து விட்டோமே" என நொந்து கொண்டவள்..

"ஒண்ணுமில்லை" என்று அவசரமாகத் தலையாட்ட,

"என்ன ஒண்ணுமில்லை? சொல்லு!" என்று மிரட்டினான்.

"ஏன் அவங்களை மிரட்டுறீங்க" என சஞ்சய் கேட்க,

"ஏன் அதுல உங்களுக்கு என்ன வந்தது?" என்று அஸ்வின் சஞ்சய்யைக் கேட்க,

"இப்படித் தான் அன்னைக்கு வந்து என் தம்பியை அடிச்சிட்டு போனாங்க உங்க கணவர்.. இப்போ யாரை திரும்ப கூட்டிட்டு வந்து இவங்களை மிரட்டுறீங்க" என்று வர்ஷினியைப் பார்த்து கேட்க..

"நாங்க மிரட்டுறது இருக்கட்டும், நீங்க என்ன பண்ணுனீங்க இவ ரிசைன் பண்ற அளவுக்கு? முதல்ல அதைச் சொல்லுங்க!" என அஸ்வின் எகிற,

"அஸ்வின் என்ன பேசற நீ?" என ஐஸ்வர்யா பதற..

“அஸ்வின்” என்ற வர்ஷினியின் ஒரு அதட்டல் அஸ்வினை நிதானப்படுத்தியது..

“என் கணவர் அடிச்சிட்டார் மட்டும் சொல்றீங்களே, உங்க தம்பி பேசினது நியாயமா? ஒரு டாக்டர் கிட்ட வர்ற பேஷன்ட்சை நீங்க இப்படி தான் கிரிடிசைஸ் பண்ணுவீங்களா? தப்பில்லையா?”

“அது கொஞ்சம் அதிகம் தண்டனையா போச்சு! அது தப்புன்னு புரிஞ்சு தான், நான் சரி பண்ண வந்திருக்கேன்! இப்போ எதுக்கு தேவையில்லாத பேச்சுக்கள்.. என்னால உங்க ஹாஸ்பிடல் கைவிட்டு போறதை என்னால அனுமதிக்க முடியாது டாக்டர்!” என்றாள் வர்ஷினி.

“என் ஹாஸ்பிடல் நான் அதை விப்பேன், என்ன வேணா செய்வேன், நீங்க என்ன பண்ண முடியும்!”

“விக்க வைக்க முடியும்னா? விக்காம இருக்க வைக்க முடியாதா?” என,

“ஹச்சோ” என தலையில் கைவைத்துக் கொண்டாள் ஐஸ்வர்யா.. நேரடியாக வர்ஷினியிடமே “நல்ல புருஷன் நல்ல பொண்டாட்டி” எனச் சொல்லியவள்,

“ஏன் சர் பிடிவாதம் பிடிக்கறீங்க?” என்று சஞ்சயிடம் திரும்பப் பேச..

“வேற என்ன பண்ண முடியும்? விதார்த்தை அடிச்சவங்க ஹெல்பை நான் ஏத்துக்க முடியாது” என தெளிவாகச் சொல்ல..

“உங்க தம்பியை அடிச்சவங்க உதவியை நீங்க ஏத்துக்க முடியாது! ஆனா உங்கம்மாவோட சம்பாத்தியத்தை அழிக்க முடியுமா?” என,

சஞ்சய் அசந்து நின்றான்.

“இது என்னோட ஹஸ்பன்ட் மணி கிடையாது டாக்டர்.. எனக்கு என்னோட சொந்த இன்கம் இருக்கு.. ஈஸ்வர்க்கு கொஞ்சம் கம்மியா, என் அப்பா கொடுத்த பிசினஸ்! அது மட்டுமில்லாம.. என்னோட வேலை இருக்கு.. அதுவுமே ஹெல்ப் பண்ற அளவுக்கு இருக்கு.. சோ இதுல அவர் எங்கேயும் இல்லை! என்னோட ப்ரபோசல் இது!”

“என்னோட மணி தேவையே இல்லைன்னா, இன்னும் ஒரு ப்ரபோசல் இருக்கு.. பேங்க் அப்ரோச் பண்ணுங்க.. நான் சுயுரிடி கொடுக்கறேன், கண்டிப்பா அமௌன்ட் சாங்க்ஷன் ஆகும்!” என்று வர்ஷினி பேச..

அதில் தேர்ந்தெடுத்த ஒரு நிறுவனரின் பேச்சும் ஒரு ஆளுமையும் இருந்தது..

சஞ்சய் தயங்க..

“சரி! இந்த ப்ரபோசல் அப்படியே இருக்கட்டும். இதை நீங்க அக்சப்ட் பண்றதை தவிர வேற சாய்ஸ் நான் குடுக்கப் போறது இல்லை” என வர்ஷினி சொன்ன விதம்.. “இதனால் தான் ஈஸ்வர்க்கு இவளைப் பிடித்ததோ? என்னால் எல்லாம் இப்படிப் பேச முடியுமா?” என நினைத்துப் பார்த்திருக்க..

ஐஸ்வர்யாவைப் பார்த்து “ஏன்? நீங்க ரிசைன் பண்ற அளவுக்கு இவரோட லூசு தம்பி என்ன பண்ணினான்?” என,

“ஐயோ” என்று பார்த்திருந்தனர் ஐஸ்வர்யாவும் அஸ்வினும்..

“என்ன கலாட்டா பண்றீங்களா?” என சஞ்சய் எழுந்து விட..

“உங்களுக்கு வர்ற கோபம் தான் எல்லோருக்கும்! அதுக்கு தான் சொன்னேன்! பொண்ணுன்னு

லிமிட்ல நிக்கறீங்க.. பையன்னா என்னடான்னு கேட்டு இருக்க மாட்டீங்க! சட்டையை பிடிச்சு இருக்க மாட்டீங்க.. அதை தான் என் வீட்டுக்காரர் பண்ணியிருப்பார், அந்தக் கோபம் லோன் கேன்சல் பண்ணியிருப்பார்.. அதை சரி பண்ண ஒரு வாய்ப்போட வந்தா அக்சப்ட் பண்ணிக்கணும், அதை விட்டு என் தம்பியை அடிச்சிட்டாங்கன்னு பேசிட்டு நிற்கக் கூடாது, ஹாஸ்பிடல் விக்கறேன்னு முட்டாள்தனம் பண்ணக் கூடாது!" என வர்ஷினி பேசி,

"ஏன் நிக்கறீங்க? உட்காருங்க!" என சஞ்சயிடம் கை நீட்டி சொன்ன விதத்தில்..

"பா என்ன வகையான மிரட்டல் இது? என்ன ஆளுமை?" அவனிடத்தில் வந்து அவனையே அமரச் சொல்கிறாள்! ஐஸ்வர்யா வர்ஷினியை ஆ என தான் மனதிற்குள் பார்த்தாள்.. இவளிடத்தில் ஈஸ்வர் விழுந்தது தவிர்த்திருக்க முடியாது என தான் தோன்றியது! தவறு செய்த ஈஸ்வரை எப்படி நியாயப் படுத்துகிறாள் என தோன்ற ஐஸ்வர்யாவின் முகத்தில் முறுவலே வரப் பார்த்தது.. இது சிரிக்கும் சமயம் அல்ல எனப் புரிந்து வர்ஷினியை விழி எடுக்காமல் பார்த்தாள்.

"ஹப்பா, இவளின் வீட்டுக்காரனே பரவாயில்லை" என்ற முடிவிற்கு சஞ்சய்யை வர வைத்து விட்டாள்..

**உடல் வலிமை அல்ல! மன வலிமை அல்ல! செய்யும் செயல்களின் திண்மை, நேர்மை!**

## அத்தியாயம் எண்பத்தி ஐந்து :

**யார் எவர் என்று தெரியாமல் க்ஷணத்தில் தோன்றுவது காதல் மட்டுமல்ல நட்பும் தான்!**

வர்ஷினி பேசப் பேச சஞ்சய் அப்படியே நிற்க.. திடீரென்று திரும்பியவள் "வேலையை ரிசைன்

பண்ற அளவுக்கு இங்க என்ன பிரச்சனை தெரியணும் எனக்கு.. ஒரு வேளை இவங்க ஹெல்ப் பண்ற அளவுக்கு டிசர்வ் பண்ணலையோ என்னவோ" என ஐஸ்வர்யாவை பார்த்து கேட்க..

"என்ன நடக்குது? என்ன பண்ணினோம் நாங்க உன்னை?" என்று சஞ்சயிற்கு ஏகத்திற்கும் கோபம் வந்துவிட்டது... "என்ன பண்ணினோம் சொல்லு" என்று ஐஸ்வர்யாவிடம் சண்டைக்குக் கிளம்ப..

"ப்ச், ஒன்னும் பண்ணலை" என்று வர்ஷினியிடம் சொன்னவள், "அஸ்வின் என்ன நடக்குது?" என்று அஸ்வின் மீது பாய..

"அப்போ என்ன நடந்ததுன்னு சொல்லு' என்றான் அஸ்வினும்,

"இவரை கல்யாணம் பண்ணச் சொல்லி விதார்த் கேட்டான், எனக்குப் பிடிக்கலை, அதனால ரிசைன் பண்றேன்" என்று ஐஸ்வர்யா சொல்லிவிட,

இதுவா விஷயம் என்று வர்ஷினியும் அஸ்வினும் பார்த்துக் கொண்டனர்.

"நான் கேட்டேனா? நான் கேட்டேனா? விதார்த் கேட்டதே எனக்குத் தெரியாது.. அதுக்கு நான் சாரி சொல்லிட்டேன்.. பெர்சனலும் ப்ரொஃபஷனும் ஏன் கண்ஃபியுஸ் பண்றீங்க.. அதுக்கு எதுக்கு ரிசைன் பண்ணனும். இப்போ எல்லோரும் வந்து என்னை இப்படி கேள்வி கேட்கணும்" என கோபமாகப் பேசினான்.

"நான் கேட்காம வேற யார் கேட்பா?" என அஸ்வின் நிறுத்தியவன்.. "நான் அவளோட அண்ணன்" என,

"என்ன அண்ணனா?" என்று சற்று தணிந்தான் சஞ்சய்..

பிறகு “பிடிக்கலைன்னா பிடிக்கலை சொல்லிட்டு போகணும்.. அதுக்கு ஏன் ரிசைன் பண்ணனும்.. அவ்வளவு மணி டெஸ்ட் டியுப் பேபி சென்டர்காக இன்வெஸ்ட் செஞ்சிருக்கோம்.. எந்த வகையில நான் இவங்களை டிஸ்டர்ப் பண்ணினேன்”

“எனக்கு விதார்த் இவங்க கிட்ட பேசினதே தெரியாது.. விதார்த்தும் இவங்களும் கிளாஸ் மேட்.. இவங்க யுஜி படிக்கும் போது விதார்தை பார்க்க போகும் போதே இவங்களை எனக்குப் பிடிக்கும்.. அப்போ காலேஜ் செகண்ட் இயரோ தர்ட் இயரோ” என பேசப் பேச..

ஐஸ்வர்யாவிற்குமே இது புது செய்தி...

“சும்மா பார்க்கத் தான் செய்வேன், அதுக்கே இவங்க ஃபிரண்ட் என்கூட சண்டை போட்டு, என்னைத் திட்டி, கொஞ்சம் கேவலமா பேசி.. நான் அதுக்கு பிறகு பார்க்க போனது கூட கிடையாது.. கண்ல படும்போது தான் பார்ப்பேன்”

“இந்த விஷயம் விதார்த்க்கு தெரியும்.. இப்போ இங்க ஜாயின் பண்ணின பிறகு இவங்களுக்கு கல்யாணம் ஆகலைன்னு தெரிஞ்சவுடனே என்னை கல்யாணம் பண்ணிக்கக் கேட்டிருக்கான், அது எனக்குத் தெரியவே தெரியாது”

“இதுக்கு எதுக்கு இவ்வளவு ரியாக்ஷன், இவ்வளவு பில்ட் அப்.. இட் வாஸ் ஜஸ்ட் எ ப்ரபோசல்” என,

அதைப் பற்றி பேசாமல்.. “உங்களை திட்டின ஃபிரண்ட் யாரு” என.. அஸ்வின் கேட்க..

“ரஞ்சனி” என சஞ்சய் பதில் சொல்ல.. திரும்ப மூவருமே பேசவில்லை..

எழுந்து கொண்டு.. “நான் பேசினதை யோசிங்க டாக்டர் என்னோட ஹெல்ப்னாலும் நான் ரெடி..

இல்லை பேங்க் லோன்னாலும் நான் ரெடி! தி சாய்ஸ் இஸ் யுவர்ஸ்! ஆனா இது ரெண்டு மட்டும் தான்! என்னால யாரோடவாவது ட்ரீம் ஷேட்டர் ஆகறது என்னால அக்சப்ட் பண்ண முடியாது!" எனக் கிளம்ப..

"என்னடா இது? வந்தார்கள்! பேசினார்கள்! சென்றார்கள்!" என்பது போல சஞ்சய் பார்த்திருக்க...

அவர்கள் வெளியே சென்றதும்.. "நிஜமாவே உன்கிட்ட ஏதாவது கலாட்டா பண்ணினாங்களா?" என அஸ்வின் கேட்க..

"இல்லையில்லை, எனக்கு தெரியவே தெரியாது என்னோட காலேஜ் டேஸ்ல பின்னாடி வந்தது.. ஏன் விதார்த்க்கு ஒரு அண்ணன் இருக்குறதே தெரியாது! இங்கே வந்த பிறகு தான் தெரியும்!" என, "என் அண்ணா உன்னை நினைச்சி கல்யாணம் பண்ணாமயே இருக்கான், பண்ணிக்கோன்னு சும்மா விதார்த் டார்ச்சர் பண்ணினான்! போடான்னு ரிசைன் பண்ணிட்டேன்! ஆனா அவன் கூட இவர் முன்னாடி என் பின்னே வந்தது எல்லாம் சொன்னதில்லை" என ஐஸ்வர்யா டென்ஷனாகப் பேசினாள்.

"இருங்க" என்று வர்ஷினி திரும்ப சஞ்சயின் ரூம் போக,

"எதுக்கு போறீங்க?" என் அஸ்வின் கேட்க,

"எனக்கு பேசணும்!" என வர்ஷினி சொல்ல,

"தனியா எல்லாம் விட முடியாது, நானும் வருவேன்" என்று அஸ்வினும் போக..

சென்றவுடனே வர்ஷினி கேட்டது, "டாக்டர் இது மேரேஜ் ப்ரபோசலா? லவ் வா?" என,

சஞ்சய் விழிக்கவும்.. “நீங்க அவங்களை கல்யாணம் பண்ண இஷ்டப்படறீங்களா இல்லை லவ் பண்றீங்களா” என விளக்கமாகக் கேட்க,

அஸ்வின் என்ன இது என்பது போல வர்ஷினியை முறைத்துப் பார்த்தான்.

“ஹல்லோ ப்ரோ எதுக்கு முறைக்கறீங்க? வயசுப் பொண்ணு இருந்தா கல்யாணத்துக்கு வரன் வர்றது தான்!” என அவனிடம் சொல்லிக் கொண்டே சஞ்சய்யை பார்க்க..

“லவ் பண்றதால மேரேஜ் பண்ணிக்கக் கேட்கறேன்” என,

“நீங்க கேட்டீங்களா இதுவரை? இல்லை நீங்க சொல்லியிருகீங்களா?” என்ற அடுத்த கேள்வியை வர்ஷினி கேட்க,

“இல்லை” என தயக்கமாகத் தலையாட்டினான்.

“அதுதான் ப்ராப்ளம், நீங்க தானே கேட்கணும், நடுவுல அவங்க ஃபிரண்டை, உங்க தம்பியை எல்லாம் விட்டு என்ன பண்றீங்க?” என,

சஞ்சய் இப்போதும் விழித்து நின்றான், அவன் எங்கே விட்டான். அவர்கள் தான் கபடியும் கதகளியும் ஆடிவிட்டார்கள் என்றா சொல்ல முடியும், அமைதி காக்க,

“சரி விடுங்க” என்று சஞ்சயின் பக்கத்தில் வந்து அவனின் ஸ்க்ரிப்ளிங் பேட் எடுத்து.. “லவ் ஐஸ்வர்யா கிட்ட சொல்லுங்க, மேரேஜ்க்கு அவங்க அண்ணா கிட்ட பேசுங்க.. அவங்க அண்ணா முன்னாடி நான் இந்த சஜஷன் கொடுக்க முடியாது” என, என்ன என்று சஞ்சய் படிக்கும் போதே கிளம்பிவிட..

“என்ன? என்ன?” என்று பார்க்கப் போன அஸ்வினிடம்.. “அட வாங்க ப்ரோ” என்று அவனின் கைபிடித்து வெளியே இழுத்து வந்தாள்.

ஐஸ்வர்யா அஸ்வினின் கையை வர்ஷினி பிடித்து, அவனை இழுத்து வந்ததை பார்த்து நிற்க,

அவளின் கண்களில் ஆச்சர்யத்தைக் கண்டவள்.. “என்ன பார்க்கறீங்க?” என,

“ஈஸ்வர்க்கும் அஸ்வின்க்கும் ஆகவே ஆகாது.. ஆனா எப்படி உங்க கூடவே இருக்கான், உங்க வேலையெல்லாம் பார்த்துக்கறான்” என,

“என்னோட வெரி பெஸ்ட் ஃபிரண்ட் உங்க அண்ணா.. என்னை ஒரு இக்கட்டான சூழ்நிலையில இருந்து காப்பாத்தினாங்க.. அதுக்கு முன்னமே எனக்கு ஃபிரண்ட் தான்.. ஆனா அந்த இன்சிடன்ட்க்கு அப்புறம் ஈஸ்வர்க்கு ஃபிரண்ட் ஆனாங்களோ இல்லையோ சண்டை இல்லை” என வர்ஷினி சொல்ல..

சரியாக அப்போது ஈஸ்வர் வந்து விட்டான். வந்தவன் இவர்கள் எல்லாம் நிற்பதை பார்த்து நின்றவன் ஆசுவாசப்பட்டு “என்ன ஆச்சு உன் போன்க்கு அஸ்வின், அத்தனை ஃபோன் பண்றேன், எடுக்கவேயில்லை, இவ ஃபோன் அடிக்கவேயில்லை, தாஸ் அவன் ஃபோன் சுவிட்ச் ஆஃப்” என அதட்ட,

“அது நான் சைலண்ட்ல போட்டேன், திரும்ப எடுக்கவேயில்லை” என சொல்லி, “பயப்படற அளவுக்கு என்ன இருக்கு?” என,

“ஏதாவது பிரச்சனை ஆகிடுச்சுன்னா?” என,

“என்ன ஆகும், அது தான் நான் கூட இருக்கேன்ல?” என அஸ்வின் சமாதனம் சொல்ல..

“இவனுக்கு எப்படிச் சொல்ல.. இது அவன் பண்ண மாட்டான்.. இந்த வர்ஷினி பண்ணுவா.. இவனுக்கு அது தெரியாதா?” என ஒரு பார்வை பார்க்க.. அது அஸ்வினிற்கு புரியவில்லை.. வர்ஷினிக்கு புரிந்தது. “போடா, போடா” என ஈஸ்வரை ஒரு அலட்சியப் பார்வை பார்த்து நிற்க.. ஈஸ்வர் கவனமாக அவளின் புறம் திரும்பவேயில்லை.

ஐஸ்வர்யா இவர்களைத் தான் பார்த்து நின்றாள், “பகைவனையும் இவளுக்காக நண்பனாக்கி கொண்டுள்ளானா?” என,

இவர்கள் சென்று விட்டார்களா எனப் பார்க்க சஞ்சய் வெளியில் வந்தவன், இவர்களை பார்த்துத் தேங்க..

“போகலாம்” என ஈஸ்வர் கிளம்ப.. “நீங்க இவரோட போங்க, நான் ஐஸ்வர்யாவை வீட்ல விடறேன்” என அஸ்வின் வர்ஷினியிடம் சொல்ல,

“தாஸண்ணா இருக்காங்க” எனச் சொல்லி, வர்ஷினி யாருக்கும் நிற்காமல் சென்று விட.. என்ன இது என்பது போல பார்த்து நின்றாள் ஐஸ்வர்யா.

“ஹாய் ஐஸ்வர்யா” என ஈஸ்வர் சொல்லி அவளின் கவனத்தை திசை திருப்பினான், “நான் கிளம்பறேன்!” என்றும் சொல்லி.. “அப்புறமே எனக்கு ஃபோன்ல பேசு” என அஸ்வினிடம் சொல்லி போய்விட..

தாஸுடன் தனியாக வர்ஷினி செல்ல.. வேறு ஒரு காரில் ஈஸ்வர் செல்ல... அஸ்வினிடம் என்ன நடக்குது என்பதாக ஐஸ்வர்யா கேட்கவும்..

“ரெண்டு பேருக்கும் சண்டை போல”

“இப்போதானே வந்தா” என,

தோளைக் குலுக்கி, “ரெண்டுமே பெரிய அராத்து, யாருக்கும் சொல்ல முடியாது! பிடிக்காம சண்டை போட்டாக் கூட பரவாயில்லை, ஆனா பிடிச்சிருக்கு, அப்போவும் தான் சண்டை போடறாங்க!” என அஸ்வின் சொல்ல..

வர்ஷினி ஈஸ்வரை கடித்தது, இப்போது பேசாதது, இதை எல்லாம் வைத்து, “உன் கிட்ட வந்து ரெண்டு பேரும் சொன்னாங்களா?” என ஒரு கிண்டல் இழையோடக் கேட்க..

“சொல்லணுமா இதை.. சொல்லலைன்னாலும் தெரியும்.. ரெண்டு பேருக்குமே ஒருத்தரை ஒருத்தர் அவ்வளவு பிடிக்கும்.. அவங்க ரெண்டு பேர் கிட்டயுமே பிடிக்காத விஷயத்தை யாராலையும் செய்ய வைக்க முடியாது! டைவர்ஸ்க்கு கேட்டுட்டும் கூட வந்து இருக்குறாங்க” என,

“ஹேய், நீ என்ன அஸ்வின், அந்த பொண்ணுக்கு ஃபேன்ஸ் க்ளப் ஆரம்பிச்சிடுவ போல” என்று இலகுவாகப் பேசினாள்.

“தப்பில்லை.. இந்த உலகத்துல யாருமே என்னை நம்பாத போது நம்பின ஒரு ஜீவன்.. இனி என்னால ஒன்னுமே பண்ண முடியாதுன்னு நான் நினைச்சு இருந்தப்போ எனக்கு அவ்வளவு சப்போர்ட் பண்ணினாங்க.. பணம் விஷயத்துல, நான் அவங்களைப் பார்த்த பிறகு ரொம்ப ஸ்ட்ராங்.. அவங்களோட அப்பா பிசினெஸ் விஷ்வா மேற்பார்வையில நான் பார்த்துக்கறேன்!”

“என்னோட ஃபிரண்ட்ஷிப்னால ரஞ்சனிக்கு ரொம்ப கோபம்.. அதனால வர்ஷினிகிட்ட அவ பேசினது இல்லை, அவ பேசாததால அவங்க வீட்லயும் யாரும் பேசலை.. இங்க இந்தியா வர்ற வரைக்கும்!” என,

“உனக்கு ரஞ்சனிக்கும் என்ன?” என்றாள். அவளிற்கு எதுவுமே தெரியாது.

அஸ்வின் சொல்ல வேண்டாம் என நினைக்கும் போதே.. அவனின் முகத்தை பார்த்தே “கண்டிப்பா நீ சொல்லணும்” என

“நான் ரஞ்சனியை லவ் பண்ணினேன், ஆனா அவகிட்ட சொன்னதில்லை. அந்த ஃபைனான்ஸ் ப்ராப்ளம் வந்த போது, அவங்க வீட்டுக்கும் நம்ம வீட்டுக்கும் சண்டை வந்த போது, அவளை மிஸ் பண்ணிடுவனோன்னு அவளை கூப்பிட்டு என்னை தான் கல்யாணம் பண்ணிக்கனும்னு மிரட்டினேன்... ரொம்பவுமே எக்ஸ்ட்ரீம்மா, அதனால தான் அவ அவசரமா யார் கிட்டயும் சொல்லாம பத்துவைக் கல்யாணம் பண்ணினா, உனக்கும் அவளுக்கும் கூட திரும்ப பேச்சு வார்த்தை இல்லை!” என அஸ்வின் பேசப் பேச அதிர்ச்சி.

“எங்கேயோ எதோ ஒரு புள்ளியில எல்லா பிரச்சனை ஆரம்பிக்கறதுக்கும் நான் தான் காரணம்” என ஒப்புக் கொடுத்தவன்..

“தோ, இந்த பொண்ணு யாரு என்னன்னு கூட எனக்கு அப்போ தெரியாது. ஆனா ஈஸ்வர் மேல இருந்த கோபத்துல இவங்க ரெண்டு பேரும் பேசி நிக்கறதை இளைய தலைமுறையின் டேடிங் கலாசாரம், ரகசிய இரவு சந்திப்புகள்ன்னு, போட்டோ வோட பேப்பர்ல வரவைச்சேன்”

ஐஸ்வர்யாவிற்கு அஸ்வின் பேசப் பேச, அதிர்ச்சி! அதிர்ச்சி மேல் அதிர்ச்சி!

“அதுக்கு தான் அவங்கப்பா என்னை ஜெயில் அனுப்பினார்”

“இத்தனையும் செஞ்சும், நான் தான் செஞ்சேன்னு தெரிஞ்சும், என்னை அவ நம்பினா!” என சொல்ல, ஐஸ்வர்யா பேச்சற்று போனாள்..

“இப்போ அதன் சுவடுகள் தடையங்கள் எதுவும் என்கிட்டே கிடையாது! கிடைக்காமப் போனதுக்கு காரணமும் அவங்க தான்! வாழ்க்கை திரும்ப திரும்ப என்னை தண்டிச்சிருந்தா, நான் திரும்பவும் தடம் மாறியிருக்கக் கூட வாய்ப்பிருக்கு.. அது எதுவும் ஆகாம போனதுக்கு காரணம் வர்ஷினி.. இப்போ என்னோட இந்த சௌகர்யமான வாழ்க்கை அவங்களால”

“அவங்க சொல்லலாம் நான் காப்பாத்தினேன்னு.. அது வர்ஷினின்னு இல்லை யார்னாலும் நான் செஞ்சிருப்பேன்.. அதுக்கு பதிலுக்கு ஏதாவது செஞ்சிட்டு போயிட்டே இருந்திருக்கலாம், இப்படி கூட வெச்சு என்னை உயர்த்தி விடணும்னு எதுவும் கிடையாது.. அதுவும் நான் வர்ஷினிக்கும்.. அதையும் விட விஸ்வாவிற்கு கொடுத்திருக்குற பிரச்சனைக்கு.. பலசமயம் யோசிச்சு இருக்கேன்.. வர்ஷினின்ற ஒரே காரணத்துக்காக விஸ்வா என்னை எதுவுமே பண்ணலை, பண்ணவும் மாட்டான்!”

தன் அண்ணன் எப்போது இவ்வளவு பெரிய மனிதன் ஆகிப் போனான் என ஐஸ்வர்யா பார்த்து இருக்க, சஞ்சய் இவர்களை தான் பார்த்து இருந்தான்... வெகு முன்பே வந்துவிட்டாலும் இருவரும் பேசி நிற்பதை பார்த்து பொறுமையாக நின்றிருந்தான்.

இருவரும் கிளம்புவதை பார்த்தவன் வேகமாக அருகில் வந்து... “உங்க தங்கையை நான் கல்யாணம் பண்ண இஷ்டப்படறேன், நீங்க ஓகே

சொன்னா நான் அவங்க கிட்ட கேட்கறேன்? கேட்கட்டுமா?" என,

அஸ்வின் முகத்தில் தானாகப் புன்னகை மலர்ந்தது.. "ஊர் உலகத்துலயே இப்படி யாரும் ப்ரபோஸ் பண்ணியிருக்க மாட்டாங்க" என சொன்னவன்,

சஞ்சய் ஐஸ்வர்யாவை பார்க்க.. அவள் இன்னும் அஸ்வின் பேச்சிலிருந்தே மீளவில்லை.. இதில் சஞ்சயின் பேச்சு அபஸ்வரமாகத் தான் ஒலித்தது....

"போகலாமா அஸ்வின்" என சொல்லிப் படியிறங்க..

அஸ்வின் தான் சஞ்சய்க்கு பதில் சொல்லும்படி ஆகிற்று... "இங்க யாரும் சின்ன பசங்க கிடையாது, என் தங்கை ஓகே சொன்னா எங்க யாருக்கும் அப்ஜக்ஷன் கிடையாது.. ஆனா நீங்க அவளை டிஸ்டர்ப் பண்ணக் கூடாது" என்றான் தெளிவாக..

"டிஸ்டர்ப் பண்ற அளவுக்கு தைரியம் இருந்தா எட்டு வருஷமா அவங்களை மட்டும் நினைச்சு இருப்பேனா" என பதில் சொல்ல..

ஐஸ்வர்யா நடந்த போதும் இது காதில் விழ.. எட்டு நீண்ட வருடங்கள், ஈஸ்வர் அவளிடம் காதலை சொல்லும்முன், அதை அவள் ஏற்கும்முன்!

இவன் முன்னமே சொல்லியிருந்தால் ஈஸ்வர் என்ற மனிதன் என் வாழ்க்கையில் வந்திருக்க மாட்டானே.. ஐந்து வருடமாகத் தன் தொண்டைக்குள் எதோ சிக்கிக்கொண்ட மாதிரி, துப்பவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், ஒரு அவஸ்தை எப்போதுமே..

ஈஸ்வர்! ஈஸ்வர் மட்டுமே அதற்கு காரணம்.. ஒரு வேளை இவனும் ஈஸ்வர் போலத் தன் பின்னால்

சுற்றியிருந்தால், காதலை சொல்லியிருந்தால், ஏற்று இருப்போமா?

ஈஸ்வரை காதலித்தாளா தெரியாது? அவன் காதலை தானே ஏற்றுக் கொண்டாள்.. ஒரு வேளை இவன் முன்னமே சொல்லியிருந்தால்..

அந்த ஆத்திரம் தோன்ற... “ஏன் அப்போவே சொல்லலை?” என்று கோபமாகக் கேட்க..

இதை சஞ்சய் எதிர்பார்க்கவில்லை.. எப்போதும் போல விழித்து நிற்க..

“நீ வா, என்ன பேசற?” என ஐஸ்வர்யாவை அதட்டி அஸ்வின் தான் இழுத்து போனான்..

**சொல்லுக்கும் அர்த்ததுக்கும் தூரங்கள் கிடையாது**

**சொல்லாத காதல் எல்லாம் சொர்கத்தில் சேராது!**

## அத்தியாயம் எண்பத்தி ஆறு :

**பூபாளமே.. கூடாதெனும் வானம் உண்டோ சொல்...**

வீட்டிற்கு வந்துமே ஐஸ்வர்யாவிற்கு மனதே சமன்படவில்லை.. தன்னைச் சுற்றி என்ன என்னவோ நடந்திருக்கின்றது, தனக்கு எதுவுமே தெரியவில்லை என்ற ஆதங்கம் அதிகமாக இருந்தது..

காதல் என்று ஒருவன் தன் பின்னால் சுற்றியதும் தெரியவில்லை.. அண்ணனையும் தெரியவில்லை.. அவன் செய்த செயல்களும் தெரியவில்லை.. தோழியையும் தெரியவில்லை.. அவளுடைய கடினமான நேரங்களும் தெரியவில்லை.. தன்னை விட்டுவிட்டாள் என தோன்றியிருந்த நினைவு தவறு எனப் புரிந்தது..

எல்லாம் விட காதல் சொல்லி நீ வேண்டாம் போ என்று சொல்லிப் போனவனை நினைத்து, அவனுக்கு இணையாக ஒருவன் வேண்டும் என்று காத்திருப்பது.. “இவ்வளவு முட்டாளா நீ உன் வாழ்கையில்” என்று தான் தோன்றியது..

ஆதங்கம் இருந்த போதும், மனது எதோ ஒரு வகையில் சமனப்பட்டு இருந்தது..

யாரோ ஒருவனுக்காக உன்னுடைய ஐந்து வருட வாழ்க்கையை வீணாக்கியிருக்கிறாய் நீ என அவளை அவளே திட்டிக் கொண்டாள்..

என்னவோ மனதினில் ஒரு புது உத்வேகம் கூட.. சஞ்சயின் அம்மாவிற்கு அழைத்தவள்.. “மேம் நான் ஜாப் ரிசைன் பண்ணலை.. நாளையில் இருந்து வரட்டுமா?” என..

அவருக்கு இத்தனை நாளாக இருந்த டென்ஷனில் “என்னம்மா விளையாடுறீங்களா?” எனக் கத்தியே விட்டார் அவர்..

“சாரி மேம், எனக்கு நான் வராம இவ்வளவு லாஸ் ஆகும்னு தெரியாது” என,

“என்ன? என்ன லாஸ்? பணம் ஒரு பிரச்சனையே கிடையாது.. படிச்சா மட்டும் டாக்டர் கிடையாது, மனசுக்குள்ள அந்த ஃபீல் வரணும்.. நாலு பேஷன்ட் ஃபாலோ பண்ற நீ.. அவங்களோட ஓவம்.. ஸ்பெர்ம்ன்னு எல்லாம் ப்ரிசர்வ் பண்ணியிருக்கோம்.. அது இல்லாம ரெண்டு பேஷன்ட்க்கு இப்போ ரெண்டாவது மாசம்.. வந்த உடனே சக்சஸ் பண்ணி காட்டியிருக்க.. நீ பாட்டுக்கு போறேன்னு சொல்லிட்டுப் போயிட்டா.. இவங்களை யார் பார்ப்பா.. இவங்களுக்கு யார் பதில் சொல்லுவா?”

“நான் பெத்து வெச்சிருக்குற ரெண்டு மடையன்களும் உன்கிட்ட என்னை பேச விட மாட்டேங்கறாங்க.. உயிர்மா இது? உயிரோட விளையாடுவியா?”

“அப்படி என்ன? ஏதாவது டிஃபிகல்டின்னா என்கிட்ட சொல்லியிருக்கலாம்.. உங்களை நம்பி பேஷண்ட்ஸ் வரலை.. என்னை நம்பி தான் வர்றாங்க.. என்னோட இத்தனை வருஷ ப்ராக்டிஸ்க்கு ஒரு அர்த்தம் இல்லாம பண்ணிட்டீங்க!” என பொரிந்தவர் ஃபோனை வைத்து விட..

அவருடைய வார்த்தைகள் சம்மட்டியாய் அடிக்க.. உடனே எழுந்தாள்.. அஸ்வின் இவளை வீட்டில் விட்டு எங்கேயோ வெளியில் கிளம்பிக் கொண்டிருக்க..

“என்னை ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போறியா?” என, எப்போதும் இப்படிக் கேட்கவே மாட்டாள்..

“ஓகே சொல்லவா?” என அஸ்வின் ஆர்வமாகக் கேட்க,

“ம்ம்ம், உன் தலை! கூட்டிட்டுப் போடா!” என்றாள் எரிச்சலாக. இத்தனை நாட்கள் அண்ணன் துணை தேடியதே இல்லை.. இப்போது மனது தேடியது.

அஸ்வின் உடனே அழைத்துக் கொண்டு போகவும்.. லக்ஷ்மியின் கேபின் சென்றவள்.. “நீ இங்கேயே இரு” என்று அஸ்வினிடம் சொல்லி..உள்ளே சென்று “சாரி மேம்.. இனிமே இப்படிப் பண்ண மாட்டேன்” என்று சிறு பிள்ளையாய் மன்னிப்பை வேண்டி நிற்க..

அவளை எதிர்பாராதவர் ஆச்சர்யப்பட்டு “நான் இப்போ பேஷன்ட் பார்த்துட்டு இருக்கேன்”

என்றார்.

“நீங்க பேஷன்ட் பாருங்க, நான் உங்களைப் பார்க்கிறேன்!” என,

அவருக்கு சிரிப்பே வந்துவிட்டது.. “இதென்ன விளையாட்டு பேஷன்ட் பார்க்கும் போது, வெயிட் பண்ணு போ! அவங்களுக்கு ப்ரைவசி வேணும்!”

சிரிப்புடன் திரும்பியவள் “சாரி” என்று அந்த பேஷண்டிடம் சொல்லி வெளியே போய் அஸ்வினுடன் நின்று கொள்ள..

அங்கே இருந்த அட்டன்டரும் சிஸ்டர்களும்.. “உட்காருங்க மேம்” என்று ஆளாளுக்குச் சொல்ல,

“அட, நீ பெரிய டாக்டர் தான் போல!” என்று அஸ்வின் சொல்லவும்..

“பின்ன இல்லையா? உன் மனைவிக்கு நான் தான் பிரசவம் பார்க்கணும்! அந்த பயம் இருக்கணும்!” என,

“நானா? கல்யாணமா?” என்று சிரித்தவன்.. “முதல்ல நீ பண்ணு நீ பெத்துக்கோ?” என அண்ணனாக அதட்ட..

அதற்குள் வெளியே வந்த நர்ஸ்.. “மேம் உங்களை டெலிவரி ரூம் போகச் சொன்னாங்க.. பார்த்துட்டு இருக்கிறதாம், அவங்க வந்து உங்களை ரிலீவ் பண்றாங்களாம்”

“நானே பார்த்துக்கறேன், நான் தேவைன்னா கூப்பிடறேன்னு சொல்லுங்க” என்றவள், “நீ போ அஸ்வின்” என..

“நீ எப்படி வருவ?”

“இங்க ஹாஸ்பிடல் கார் இருக்கும்” என்றவளிடம்,

“சரி” என்பது போலத் தலையாட்டினாலும்.. “ஏதாவதுன்னா எப்போன்னாலும் கூப்பிடு” எனச் சொல்லி சென்று விட்டான்..

சஞ்சயிற்கும் தெரியாது, விதார்த்திற்கும் தெரியாது.. ஆனால் ஐஸ்வர்யா திரும்பவும் ஹாஸ்பிடல் சேர்ந்து விட்டாள்.

வீட்டிற்கு வந்து உண்ணாமல் திரும்ப வேலையில் வர்ஷினி உட்கார்ந்து விட.. ஈஸ்வருக்கு என்னவோ அன்றைக்கு பசித்தது.. அவன் உண்டு உறங்கச் சென்று விட்டான்.. பேசியே சில நாட்கள் ஆகிவிட்டது..

உறங்கியவன் எழுந்து பார்த்தால் மணி பன்னிரெண்டை நெருங்க.. வர்ஷினி இன்னும் ரூமின் உள் வரவில்லை..

சென்று பார்க்க அப்படியே வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.. “எதுக்கு இப்போ இப்படிப் பேய் மாதிரி வேலை பார்க்கிறா? என்ன அவசியம்? இன்னும் சாப்பிடக் கூட இல்லை!” என்ற நினைப்பு வர..

கோபமும் பொங்க.. “இன்னும் சாப்பிடாம என்ன பண்ற நீ? முதல்ல இதை ஷட் டவுன் பண்ணு” என அதட்டினான்.

திரும்பி ஒரு பார்வை பார்த்தவள் திரும்ப வேலையில் மூழ்க..

“என்ன திமிரா? பேசிட்டே இருக்கேன் நீ முகத்தை திருப்புற” என்று வேகமாக அருகில் வர..

“வேற என்ன பண்றது?” என்று பதிலுக்கு கத்தியவள், “நீ தானே பேச வேண்டாம் சொன்ன.. அப்போ நான் என்ன பண்ணட்டும்? நான் உன்கிட்ட பேசுவேன், நீ என்கிட்டே பேசுன்னு கெஞ்ச

சொல்றியா?" என வர்ஷினி ஈஸ்வரை பார்த்த பார்வை.. விட்டால் அடித்து விடுவாள் போல இருந்தது..

அந்த நீல நிறக் கண்களில், அவ்வளவு ஆவேசம், கோபம், எல்லாம் தெரிய, "இப்போ சண்டை வேண்டாம், முதல்ல சாப்பிடு!" என,

"சாப்பிடறது என்னோட இஷ்டம்! அதை நீங்க ஒன்னும் டிக்டேட் பண்ண வேண்டாம்!"

"எதுக்கு உனக்கு இவ்வளவு திமிர்?"

"ஏன்? ஏன் இருக்கக் கூடாது? அப்படி தான் இருக்கும்! எல்லாம் உன்னோட இஷ்டம் கிடையாது!"

"என்ன? என்ன என்னோட இஷ்டம்?"

"என்ன? என்ன இல்லை? முதல் நாள் என்னைப் பார்த்ததுல இருந்து என்னைப் பார்த்துட்டு இருக்க நீ, அதை பத்துண்ணா கூட நோட் பண்ணியிருக்காங்க! ஆனா நான் பேச வந்தப்போ எவ்வளவு அலட்சியமா என்னை நீ ட்ரீட் பண்ணின.. அது உன் இஷ்டம்!"

"அதுக்கப்புறமும் முடியாம என்கிட்டே உரிமை எடுத்த.. அது உன் இஷ்டம்!"

"அப்புறம் என்னை கல்யாணத்துக்கு ஃபோர்ஸ் பண்ணின அது உன் இஷ்டம்!"

"கல்யாணமும் பண்ணிக்கிட்ட அது உன் இஷ்டம்!"

"கல்யாணம் செஞ்சு என்னை உன் இஷ்டத்துக்கு ஆட்டி வெச்ச.. அது உன் இஷ்டம்!"

"என்னை வீட்டை விட்டு கூட்டிட்டு போன.. அது இஷ்டம்!"

“திரும்ப என் கூட டைம் ஸ்பென்ட் பண்ணாம, வெக்காம, என் பக்கத்துல கூட வராம இருந்த.. அதுவும் உன் இஷ்டம்!

“உன் லவ் ஸ்டோரி சொல்லி என்னை உன்னை விட்டு போக வெச்ச.. அதுவும் உன் இஷ்டம்!”

“அப்புறம் உன்கிட்ட வந்தா தான் எனக்கு டைவர்ஸ் குடுப்பேன்னு சொல்லி வர வெச்ச.. அது உன் இஷ்டம்!”

“இப்போ வந்த பிறகு என்னவோ நான் உன்னை டார்ச்சர் பண்ற ஃபீல் எல்லோருக்கும் கொண்டு வர்ற.. அதுவும் உன் இஷ்டம்”

“இப்போ என்னை பேசாதன்னு சொல்லிட்ட.. அதுவும் உன் இஷ்டம்!”

“சொல்லு! என் இஷ்டப்படி நான் ஏதாவது உன்கிட்ட நடந்துக்கிட்டேனா, சொல்லு!” என ஆவேசமாகப் பேச,

செய்தது எல்லாம் அவள் லிஸ்ட் போடவும்.. அவள் இது போல என்ன செய்தாள் என்பதே ஈஸ்வருக்கு ஞாபகத்தில் வரவில்லை.. எதுவும் இருக்கின்றதா என்று தெரியவில்லை!

“இப்போ என்ன பண்ணனும், அய்யய்யோ நான் பண்ணினது தப்புன்னு உன் கால்ல விழுந்து மன்னிப்பு கேட்கறேன்னு சொல்லணுமா? என்ன எதிர்பார்க்கிற நீ?” என,

“ஏன் கேட்டா என்ன? கெஞ்சினா என்ன? என்ன குறைஞ்சு போய்டுவ நீ.. ஆனா அப்படியெல்லாம் செஞ்சிடாத.. எனக்கு உன்னைப் பிடிக்கலை” என அவனை கடந்து போக..

கை பிடித்து நிறுத்தினான்.. என்ன என்பது போல பார்த்தவளிடம்.. “சாரி, பேசாதேன்னு சொன்னது

தப்பு தான்!” என,

“பேசாதேன்னு சொன்னது தப்பு கிடையாது! ஒரு கோபத்துல எல்லோரும் சொல்றது தான். ஆனா திரும்ப நீ வந்து என்கிட்டே பேசினியா?” எனக் கேட்க.. அப்போது அந்த குரலில் ஒரு அடக்கப் பட்ட துக்கம்.

இப்போது வாயடைத்து போனான்..

அடுத்த நிமிடம் சீறினாள், “என்ன நீ அவ்வளவு பெரிய இவனா? நீ செய்யறது எல்லாம் செய்வ, ஆனா சாரி சொல்லிட்டு என் பின்னாடி வந்தா.. ஐ லவ் மை ஹஸ்பன்ட்னு நான் உன் பின்னாடி வந்துடணுமா.. உனக்கு பிடிச்சா நான் உன் பின்னாடி வந்துடணுமா?” எனக் கத்த..

“வராத! எனக்கு பிடிச்சிருக்குன்னு வரவேண்டாம்!. உனக்கு பிடிச்சிருக்கு தானே, அதுக்காக வா.. எனக்காக வராத, உனக்காக வா!” என,

இதை ஈஸ்வர் சொல்லச் சொல்ல, அடுத்த நிமிடம் “பிடிச்சிருந்தாலும் சொல்ல மாட்டேன், போ!” என முகம் அழுகைக்கு மாறியது.

“சொல்லாதே, சொல்லவே வேண்டாம்! ஏன்னா அதுதான் எனக்குத் தெரியுமே!” என்றான் இதமாக.

“ஏய், என்ன நக்கலா? தொலைச்சிருவேன் போடா?” எனச் சொல்ல..

“அதுதான் வாழ்க்கையே தொலைச்சிட்டு இருக்கியே இன்னும் என்ன தொலைக்கணும்?”

“நீ முதல்ல உன்னோட கர்வத்தை தொலை, என்ன நான் டார்ச்சர் பண்ணினாலும் என்னவோ எனக்காக எல்லாம் பார்த்து செய்யற மாதிரி எல்லோரையும் நினைக்க வைக்கறயே அதை தொலை!” என்றாள் ஆங்காரமாக..

“நீ நினைச்சிருந்தா ஒரு நிமிஷத்துல நான் செஞ்சதை சொல்லியிருந்தா.. என்னோட கர்வம் தொலைஞ்சு போயிருக்கும்! நீ அது தொலையாம காப்பாத்தி விட்டிட்டு இப்போ தொலை தொலைன்னா எங்க போய்  தொலைப்பேன்!” என,

அதற்கு பதிலே சொல்லாமல் “நீ எதுக்கு இப்படி செய்யற, எனக்காகவா? கிடையாது, நெவர்! உனக்கு நான் வேணும்னு தானே போடா!” எனச் சொல்லி மீண்டும் லேப்பிடம் போக வேண்டி, என்னோட நேரத்தை வேஸ்ட் பண்ணாதே, எனக்கு வேலையிருக்கு” எனச் சொல்ல..

அவள் கையை விடாதவன், “எனக்கு உன்மேல அக்கறை இல்லைன்னு சொல்றியா வர்ஷ்” என,

“இருக்கு நினைச்சு தான் நான் உன்னைக் கல்யாணம் பண்ணினேன்.. அப்போ என் மனசு முழுக்க நீங்க.. உங்களோட என் வாழ்க்கை மட்டும் தான்! நீங்க என்ன சொன்னாலும் செஞ்சேன்.. உங்க முகம் பார்த்து நடக்க தான் விரும்பினேன், பழகினேன்! ஆனா எல்லாம் மாறிப் போச்சு.. எனக்கு வேலையிருக்கு” என கையினை உருவ..

“ஏன் எதுக்கு இப்படி பேய் மாதிரி உழைக்கிற?”

“என்னோட ஐடென்டிடிக்காக.. பணம் இங்கே விஷயமில்லை.. சேன்ஸ் வரும் போது அதை யூஸ் பண்ணிக்கணும்.. அதை விட்டு நம்ம இஷ்டத்துக்கு வேலை செஞ்சா சேன்ஸ் வராது.. இன்னும் கொஞ்சம் உயரம் போன பிறகு அப்படி டைம் ஃபிக்ஸ் செஞ்சு பண்ணலாம்.. இப்போ முடியாது!” என்றவள்,

“இது கூட நீங்க சொன்னதுனால தான்! நம்ம ஹனிமூன் ட்ரிப் அப்போ சொன்னீங்கன்னு

நினைக்கறேன்.. உனக்கு உங்க அப்பா, அம்மா, என்னோட, யார் ஐடண்டிடியும் வேண்டாம்னு! அதுக்கு தான் வொர்க் பண்றேன்.. அதை நான் அடையறதுல யாரோட உதவியும் வேண்டாம்!" எனச் சொல்லி கம்ப்யுடர் முன் அமர..

"எனக்கு நம்ம ஹனிமூன் டைம்ல என்ன பேசினோம்னு ஞாபகமேயில்லை, வேற சிலது தான் ஞாபகம் இருக்கு பியுட்டி!" என்றான் தன்னால் மெதுவாக பெருமூச்சோடு.

ஈஸ்வர் பேசின வார்த்தை வர்ஷினியின் காதுகளை சென்று அடையவே இல்லை, அதனால் அவள் திரும்பவும் இல்லை..

சிறிது நேரம் நின்று பார்த்தவன் திரும்பச் செல்ல.. அவன் செல்லும் அரவம் உணர்ந்து "போடா" என அவளின் வாய் முணுமுணுத்தது..

ஆனால் வர்ஷினி போடா என்றதற்கு நேர் மாறாக சில நிமிடத்தில் திரும்ப வந்தவன்.. உணவைக் கையில் வைத்திருக்க.. "சாப்பிட்டிட்டு வேலை பார்" என..

"ப்ச்" என சலித்தவள், "மறந்துடுவேன், என்னோட ஐடியா  திரும்ப எனக்கு ஞாபகம் வராது, நானே செம பசில இருக்கேன், என்னை டெம்ப்ட் பண்ணாதீங்க!" என கடுப்பாகச் சொல்ல,

"வாயைத் திற" என அவளின் வாயின் அருகில் சப்பாத்தியைக் கொண்டு போக.. சில நொடி அவனை பார்த்தாள்.. "ஷ், அப்புறம் சண்டை போடலாம் திற" என அதட்ட

"சண்டையே தான் போட்டுட்டு இருப்போமா?" என்றவளின் குரலில் ஆதங்கம் நன்றாகவே வெளிப்பட..

அதையும் விட கண்களில் கண்ணீர் மழுக்கென்று நின்றது.. ஈஸ்வர் பார்க்க பார்க்க வர்ஷினி அவனை பதிலுக்கு பார்க்க பார்க்க அந்த நீல நிறக் கண்கள் நீரில் நிரம்பி அது இறங்க..

“நீ அழுற, என்னால அழ முடியலை, அவ்வளவு தான் அழட்டுமா?” என

“வேண்டாம், வேண்டாம், உன் முகம் அப்புறம் பார்க்கவே சகிக்காது” என,

வர்ஷினி சொன்ன விதத்தில் இருவர் முகத்திலுமே புன்னகை எட்டிப் பார்த்தது.

**தாமரை மேலே நீர்த்துளி போல்**
**தலைவனும் தலைவியும் வாழ்வதென்ன**
**நண்பர்கள் போலே வாழ்வதற்கு**
**மாலையும் மேளமும் தேவையென்ன?**

## அத்தியாயம் எண்பத்தி ஏழு :

**சொந்தங்களே இல்லாமல்**
**பந்த பாசம் கொள்ளாமல்**
**பூவே உன் வாழ்க்கை தான் என்ன.. சொல்......**

அவளின் கண்களை துடைத்து விட்ட ஈஸ்வர்.. வாயினில் உணவை துருத்திக் கொண்டே.. “நீதான் எப்பவும் டைவர்ஸ் அது இதுன்னு பேசற?” என்று சொல்ல

“வேற என்ன பண்ண? எப்படி உங்களை டென்ஷன் பண்ண? உங்களை டார்ச்சர் பண்ண என்கிட்டே அந்த ஒரு வார்த்தை மட்டும் தான் இருக்கு!”

“அம்மாடி” என்று முறைத்தவன், “என்ன பயமுறுத்தவா? அப்போ நிஜம்மாவே டைவர்ஸ் இல்லையா?” என அவன் பேச..

“தெரியலை.. பாதி நிஜம்! பாதி உன்னை டென்ஷன் பண்ண!” என்றாள்.

"நான் டென்ஷன் ஆனா தானே நீ சொல்லுவ, இனிமே ஆக மாட்டேன், எப்படி சொல்லுவன்னு நான் பார்க்கிறேன்" என பேசியபடி அவன் ஊட்ட ஊட்ட வாயினில் வாங்கியவள்.. "இன்னும் கொஞ்சம் குருமா தொட்டு வை" என வேறு சொல்ல..

"நீ சப்பாத்திக்கு குருமா தொட்டுக்கறியா இல்லை குருமாக்கு சப்பாத்தி தொட்டுக்கறியா" என்ற அதி முக்கியமான சந்தேகம் வேறு கேட்க..

ம்கூம் பதில் இல்லை, அவளின் வேலையில் மட்டுமே கவனம்..

அவளையே தான் பார்த்து இருந்தான் ஊட்டி முடித்த பின்பும்..

"ப்ச்" என்று சலித்தபடி திரும்பியவள், "இப்படிப் பார்த்தா நான் எப்படி வேலை செய்ய முடியும்? வேற எங்கயாவது பாருங்க?" என,

"நீ தான் என்னை பார்க்க மாட்ட, நானாவது உன்னை பார்க்கிறேன்" என கெத்தாக சொல்ல..

"நீயும் உன் புத்திசாலித்தனமும்! நான் பார்க்கறனா இல்லையான்னு கூட உன்னால கண்டுபிடிக்க முடியலை! நீயெல்லாம்...?" என திட்ட,

திட்டை எல்லாம் ஒதுக்கி "அப்போ பார்ப்பியா? எப்போ இருந்து? எப்போ எல்லாம்?" என ஈஸ்வர் கேட்க,

"ம்ம்ம்ம்ம்.. உன்னை பார்த்த நாள்ல இருந்து, கடுப்படிக்காதீங்க, முதல்ல கிளம்புங்க!" என,

"இல்லை, நான் உன்னைப் பார்க்கலை!" என்றவன்.. கை அலம்பி, அப்படியே அங்கேயே ஒரு தலையணை போட்டு கீழே படுத்து தலையணையில் முகம் புதைத்துக் கொண்டான்..

அவனையறியாமல் உறங்கியும் விட.. காலையில் எழுந்த போது வர்ஷினியும் அங்கேயே தான் உறங்கியிருந்தாள் அவன் மீது படமால் சற்று தள்ளி.. பார்த்தவுடனே சற்றும் யோசிக்கவேயில்லை.. நெருங்கி அணைத்துக் கொண்டான் இறுக்கமாக..

திடீரென்று அப்படி ஒரு செய்கை.. நல்ல உறக்கத்தில் இருந்தாலும் உடனே விழிப்பை கொடுக்க.. என்ன இது என்பது போல விலக முற்பட.. விடுவேனா என்று இன்னும் ஈஸ்வர் இறுக்க.. “இப்படி இறுக்கமா பிடிச்சா என் தூக்கம் டிஸ்டர்ப் ஆகுது” என்றாள்.

உடனே உறக்கத்தை தொடர்வதற்கு ஏதுவாக அணைப்பை வாகாகப் பிடிக்க.. அப்படியே கைக்குள் அடங்கிக் கொண்டாள்.

திமிருவாள், விலகுவாள், என நினைக்க எதுவுமே இல்லை.. சரி உறங்கிவிட்டாளா எனப் பார்க்க, அதுவும் இல்லை.

“பியுட்டி நீ தூங்கலையா?”

“அது யாரு பியுட்டி புதுசா?” என,

“வார்த்தை தான் புதுசு, ஆள் பழசு” என்றான்.

தன்னைத் தவிர வேறு யாரையும் சொல்ல மாட்டான் எனத் தெரிந்தாலும் “அது யாரு அந்த பழைய ஆள்” என்றாள் வேண்டுமென்றே.

“நீ நம்பினாலும் நம்பாட்டாலும், எத்தனை பேரை சைட் அடிச்சு இருந்தாலும்.. என் கை தொட்ட, தொட ஆசைப்பட்ட, ஆசைப்படற பொண்ணு, நீ தான்! நீ மட்டும் தான்!” என,

“என்ன காலையிலயே டைலாக் பலமா இருக்கு”

“தெரியலை, உன்னை கட்டிப் பிடிச்சவுடனே அருவி மாதிரி கொட்டுது” என்றான் விரிந்த புன்னகையுடன். அவள் முகம் பார்க்க இஷ்டப்பட.. வர்ஷினி முகமும் காட்டவில்லை, பதிலும் பேசவில்லை! அவன் நெஞ்சினில் அப்படியே இருந்தாள்.

“ஏன்? என்ன ஆச்சு இப்போ?”

“ஒன்னுமில்லையே” என பதில் வரவும்..

“பொய் சொல்லாத, உன்னை எதோ டிஸ்டர்ப் பண்ணுது! இல்லை என் கைக்குள்ள நீ இப்படி இருக்க மாட்டா. இந்நேரம் ஒரு சண்டையை ஸ்டார்ட் பண்ணியிருப்ப” என்றான்.

அதுவரை ஈஸ்வரில் முகம் புதைத்து இருந்தவள் நிமிர்ந்து அவன் முகம் பார்த்து, “வாங்கின கடி மறந்துடுச்சு போல” என,

“நீ எவ்வவளவு கடிச்சாலும் நான் தாங்குவேன், விஷயத்தை சொல்லு!”

மீண்டும் அவனுள் முகம் புதைத்துக் கொள்ள, “என்ன பண்ணின வர்ஷ்” என்றான் சிறு அதட்டலோடு.

“அது.. தப்பு பண்ணிட்டனோன்னு ஒரு ஃபீல். அது இந்த சஞ்சய்.. அதுதான் அந்த லூசு டாக்டரோட அண்ணன்..” என வார்த்தையை எடுக்க..

ஈஸ்வர் சிரித்து விட்டான்.. “உன்னை ஒரு லூசு போட்டு அவன் வாழ்க்கை முழுசும் லூசுன்னு பட்டம் வாங்கப் போறான்!” என,

“ப்ச், சொல்ல வர்றதை மறந்துடுவேன்!” என பதிலுக்கு வர்ஷினி அதட்டவும்..

“சரி சொல்லு” என,

“அவங்க அண்ணா ஐஸ்வர்யாவைக் கல்யாணம் பண்ண இந்த லூசு அவங்க கிட்ட கேட்டிருப்பான் போல.. அதனால அவங்க ரிசைன் பண்றாங்க.. நேத்து பேசிட்டு இருக்கும் போது இந்த சஞ்சய் நான் ஒன்னும் பண்ணலை விதார்த் சொன்னது எனக்கு தெரியாது சொன்னாங்களா.. நீங்க சொல்லாம அவங்களை ஏன் சொல்ல விடறீங்க, நீங்க தானே சொல்லணும்னு சொல்லிட்டேன் .. அப்புறம் லவ் ஐஸ்வர்யா கிட்ட சொல்லணும், கல்யாணத்துக்கு அவங்க அண்ணா கிட்ட சொல்லணும்னு சொல்லிட்டு வந்தேன்.. தப்பு தானே!” என,

எதுவுமே பதில் சொல்லாமல் ஈஸ்வர் அமைதியாக இருந்தான்.

“தப்பா?” என அவனின் முகம் பார்த்து கேட்கவும்,

“ஏன் தப்புன்னு நினைக்கற?” என..

“ஒரு வேளை ஐஸ்வர்யாக்கு பிடிக்கலைன்னா”

“ஏன் பிடிக்காமப் போகும்?”

“உங்களை மாதிரி ஒருத்தரை லைஃப்ல எக்ஸ்பெக்ட் பண்ணினா, கண்டிப்பா பிடிக்காது!”

“நான் என்ன அவ்வளவு நல்லவனா?” என்றான் கூர்மையாக.

“பிடிக்கறதுக்கும் எதிர்பார்ப்புக்கும் நல்லவன்ற டெர்மினாலஜி ஒத்து வராது! இது வேற...” என,

இப்போது இறுக்கமாக அணைத்துக் கொண்டான்..
“ஐஸ்வர்யா முட்டாளில்லை வர்ஷ்.. கண்டிப்பா யோசிப்பா!” என,

“இதுல எங்க புத்திசாலித்தனம் வந்தது.. இது வேற!” என்றாள் திரும்பவும்..

“என்ன வேற, எனக்குப் புரியலை?”

“வேற தான்.. உங்களை மாதிரி எதிர்பார்த்தா கண்டிப்பா யாரையும் பிடிக்காது.. நீங்க வேற தான்!”

என்னவோ மனது லேசாக.. “நல்ல மாதிரியா? கெட்ட மாதிரியா?” என சீண்டினான்.

“சொல்லத் தெரியலை எனக்கு, உங்க கிட்ட எவ்வளவு கம்ப்ளையின்ட்ஸ் இருந்தாலும் வேற யாரையும் என்னோட லைஃப்ல நினைச்சு பார்க்கக் கூடப் பிடிக்காது.. அந்த மாதிரி அவங்க மைன்ட்ல ஃபிக்ஸ் பண்ணியிருந்தா?” என,

அது கொடுத்த பயம், இருவரிடமுமே பேச்சுக்கள் நின்று விட்டது!

ஈஸ்வரின் அணைப்பில்.. அவனின் உடலில் ஒரு தளர்ச்சி! தப்பு செய்தவனிடம் காணப்படும் ஒரு தொய்வு!

அதை வர்ஷினி உணரவும்.. இதுவரை ஈஸ்வர் தான் அணைத்திருந்தான், இப்போது பதிலுக்கு வர்ஷினியும் இறுக்கமாக “உன்னை விட மாட்டேன்” என்பது போல அணைத்துக் கொண்டாள் தானாகவே.. எதைப் பற்றியும் யோசனைகள் இல்லாது!

“நான் பண்ணின தப்பை வெளில சொல்லாம ரெண்டு பேருமே என்னை காப்பாத்தி விட்டுட்டீங்க.. வெளில தெரிஞ்சிருந்தா எங்க வீட்ல இருக்குறவங்க பார்வையை கூட என்னால தாங்கியிருக்க முடியாது.. எங்கேயாவது காரை கொண்டு போய் ஆக்சிடன்ட் செஞ்சு.. தானா செத்துப் போற மாதிரி போயிருப்பேன், தற்கொலையை கூட என்னால தைரியமா

செஞ்சிருக்க முடியாது” என்றவனின் குரலில் உணரப் படாத வலி!

இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டவள் “போற மாதிரி இருந்தா என்னையும் கூட்டிட்டுப் போயிடு, நீ இல்லாம கண்டிப்பா என்னால இருக்க முடியாது!” என,

இன்னும் அவளை இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.. முகம் காணாத, முகம் காட்டாத ஒரு அணைப்பு!

வர்ஷினியின் வார்த்தைகளைக் கேட்டதும், ஈஸ்வரின் மனது இத்தனை வருடம் தவித்த தவிப்பில் இருந்து விடுபட்டு.. பறந்தது! சிறகில்லாமல்.. உடலும் மனதும்!

“என்னவோ என்னை விட்டுட்டு போறேன்னு சொல்லிட்டே இருக்க?” என ஈஸ்வர் வர்ஷினியை சீண்ட..

“சொல்லிட்டே தானே இருக்கேன், எங்கே போனேன்? அப்போ போகாம இருந்திருந்தா.. கண்டிப்பா இன்னும் இன்னும் மோசமா ஆகியிருப்பேன்!

என்னால உன்னோட துரோகத்தை தாங்க முடியலை.. நான் என்னைப் பத்தி எல்லாம் சொன்னேன்.. ஆனா நீ காதல் சொன்னதை சொல்லலை.. நான் என்னையே சுத்தி வர்ற கணவன் வேணும்னு உன்கிட்ட சொல்லியிருந்தும் நீ குடும்பத்தை தான் சுத்தி வந்த.. இன்னும் கூட சுத்துற.. அதுதான் போயிட்டேன்” என்றாள் என்னை எனக்குத் தெரியும், உன்னையும் தெரியும் என்ற குரலில்.

"எப்படியும் நீ போவ, இன்னும் இன்னும் சிக்கல் ஆக்க வேண்டாம்னு தான் நானும் உன்னை அனுப்பிட்டேன்" என்றான் தன்னால் எதுவும் செய்திருக்க முடியாது என்ற குரலில்.

"ஆனா இன்னும் நான் போறேன்னு, இந்த வார்த்தை ஏன் சொல்ல வைக்கற?"

"தெரியலை, எனக்குத் தெரியலை.. அப்படி உன்னை சொல்ல வைக்காம ஒரு வாழ்க்கை எப்படி வாழ்றதுன்னு? நீ தான் எனக்கு சொல்லிக்கொடேன்!" என்றான்.

அதுவரை ஈஸ்வரின் முகம் பார்க்காமல் அவனின் நெஞ்சில் முகம் புதைத்தே பேசக் கொண்டு இருந்தவள்.. நிமிர்ந்து அவனை பார்த்து "எனக்கும் தெரியலை" என்றாள் இயலாமை எட்டிப் பார்க்க..

வர்ஷினியின் முகம் காணவும் ஈஸ்வரின் மனநிலை அப்படியே மாற, "நேத்து நைட் என்கிட்டே அவ்வளவு சண்டை போட்டுட்டு இப்படி என்கிட்டே ஒட்டிக்கிட்ட" அவளின் உடலை உரச..

"தெரியலை.. என்னால இப்படி சண்டை போட்டுட்டே இருக்க முடியும்னு தோணலை.. எல்லோர் பத்தியும் குறை சொல்லிட்டே இருக்கேன், எனக்கே ரொம்ப அசிங்கமா இருக்கு.. பேசாம நீ என்ன பண்ணினாலும் உன்கூட சமாதானமாப் போயிட்டா என்னன்னு தோணுது?"

"நீ பேசாதேன்னு சொன்னா நான் எங்கே போவேன்? போக இடமில்லாம இல்லை! பேச ஆளில்லாம இல்லை! ஆனா யாரையும் பிடிக்கலை, எங்கேயும் போகவும் பிடிக்கலை" என நீல நிறக் கண்களில் கண்ணீரை தேக்கி அவள் கேட்ட விதம்..

உயிர் வரை தான் தீண்டியது..

“இதுக்கு பேர் தான் பியுட்டி லவ்.. நீ என்னை லவ் பண்ற” என்றான்.

“ஆனா நான் ஒத்துக்க மாட்டேன்” என முகத்தில் ஒரு பிடிவாதத்தைக் காட்டி சொல்ல..

“ஒத்துக்காதே அதனால என்ன இப்போ.. நான் ஒன்னு சொல்லட்டுமா?” என,

முகம் உயர்த்தாமல் கண் மட்டும் உயர்த்திப் பார்க்க, அந்தக் கண்களில் தன்னை தொலைத்தவன்.

“ஐ லவ் யூ” என..

வர்ஷினியின் முகம் சீரியசாக இருந்த போதும் கண்கள் சிரித்தது..

ஈஸ்வரின் முகம் அவளை நெருங்க.. வர்ஷினியின் கண்கள் தானாக மூடியது.. அந்த மூடிய இமைகளின் மேல் மிக மிக மென்மையாக இதழ் பதிக்க.. வர்ஷினியின் உடலின் சிலிர்ப்பு ஈஸ்வரால் உணர முடிந்தது...

**நாணுமோ! நாணமே!**

**அத்தியாயம் எண்பத்தி எட்டு :**

**மறந்தாலும்.. நான் உன்னை.. நினைக்காத நாளில்லையே!**

அமைதி! அமைதி! இருவர் மனதிலுமே அப்படி ஒரு அமைதி!

ஈஸ்வர் மனதில் சொல்லவே வேண்டாம்.. ஆழ் மனதின் அலைபுருதல்கள் எல்லாம் அடங்கி விட்டன.. அந்த கண்களை ரசித்துப் பார்த்தான்.. அதில் மூழ்க வேண்டும் என்ற எண்ணமே இல்லை.. முதல் முறையாக அது தன்னிடம் என்ன உணர்த்துகிறது என்று பார்த்து இருந்தான்..

ஆனால் அவள் பார்த்தால் தானே! மீண்டும் வேலையில் மூழ்கிவிட்டாள்! பேசி முடித்தவுடன் நேரம் பார்த்து வேகமாக எழுந்தவள்.. "இதை நான் இன்னைக்கு நைட் குள்ள முடிக்கணும்" என அப்படியே கம்ப்யுடர் நோக்கிப் போக..

அவனும் வேகமாக எழுந்து.. "முதல்ல பாத்ரூம் போ" என அதனை நோக்கி தள்ளி விட..

அவனை பார்த்து சிரித்தவள் "எஸ், கரக்ட்" என,

"என்ன கரக்ட்?" என தலையிலடித்துக் கொள்ள..

"இல்லை, சில சமயம் ரொம்ப அர்ஜென்ட் ஃபீல் இருந்தாலும், வேலையை முடிச்சு தான் எழனும்னு பண்ணிட்டே இருப்பேன்" என,

"ஆ" என வாயில் கை வைத்துக் கொண்டான்..

இவள் வேகமாக ஓடி விட.. வாழ்க்கை அதன் மந்திரக் கோலை இருவரையும் நோக்கி சுழற்ற ஆரம்பித்தது.. இவர்கள் பட்டது போதும் என அதுவே நினைத்ததோ என்னவோ..

இவன் வேறு ரூம் போய் ஃபிரெஷ் ஆகி சமையலம்மாவிடம் காஃபி வாங்கி வந்த போது, அதன் முன் அமர்ந்து இருந்தாள்..

"ஏன் வர்ஷ் இப்படிப் பண்ற?" என,

"என்ன பண்றேன்?" என்றாள் பதிலாக.

"இப்படி எதுக்கு வேலை பார்க்கணும், ஐடென்டிடி தேடறேன்னு வாழ்க்கையோட சந்தோஷத்தை தொலைக்காதே" என,

"ப்ச், வாழ்க்கையோட சந்தோஷத்தை நான் தேட வேண்டாம்னு தான் இதுல நேரத்தை கொஞ்சம் அதிகமா தொலைக்கிறேன்" என்று பேசிக் கொண்டே காஃபி பருக,

மீண்டும் உளப்பிக் கொள்கிறாளோ எனப் பார்த்தான்.

முகம் மிகவும் நிர்மலமாக இருந்தது.. அப்படி சஞ்சலங்கள் எதுவுமில்லை!

அவனின் முகத்தினில் கவலையைப் பார்த்தவள்,

“அச்சோ, நிஜமா சொன்னேன்.. இப்போதைக்கு என்னால அதிகமா உங்களோட டைம் ஸ்பென்ட் பண்ண முடியாது.. முதல்ல ஐஷ் விஷயம் முடியட்டும், மென்டலா செட்டில் ஆகுங்க!” என்றாள்.

அவளையேப் பார்க்க.. “பின்ன நான் வந்து இத்தனை நாள் ஆச்சு.. என் பக்கத்துல நீங்க வராமயே இருக்க நீங்க என்ன அவ்வளவு நல்லவரா?” என விளையாட்டு போல பேசுவதாகத் தோன்றினாலும், அவள் உணர்ந்து பேசுகிறாள் எனப் புரிந்தது.

அவன் முகத்தினில் கலக்கம் எட்டிப் பார்க்கவும், “ஐ கேன் கெஸ்.. நீங்க அவங்களோட வாழ்க்கை சரியாகணும்னு நினைக்கறீங்க, அதனால தான் இப்போதைக்கு இப்படியே போகட்டும்னு நினைக்கறீங்க. இல்லை குழந்தை பெத்துக்கலாமான்னு என் கிட்ட பெர்மிஷன் கேட்டுட்டா நிற்பீங்க” என்றாள் உன்னை எனக்கு தெரியும் என்ற பாவனையோடு.

“இல்லையில்லை” என்று அவசரமாக மறுத்தவன், “ஐஷ் விஷயம் இருந்தாலும், இந்த டைம் நான் எதுவும் அதிகப் பிரசிங்கித்தனம் செஞ்சு, உனக்கு பிடிக்காமப் போய்ட விரும்பலை” என்றான் ஈஸ்வருமே உண்மையாக.

அவளின் கண்கள் கிண்டல் மொழி காட்ட.. “நிஜமா” என்று அவளுக்கு உணர்த்தி விடும் வேகத்தில் நின்றான்.

“ப்ளீஸ், எதுன்னாலும் உள்ளதை உள்ளபடி பேசலாம்.. நம்ம தப்புக்கள் நமக்கே தெரியும்!” என வர்ஷினி சொல்லவும்..

“போடி” என்று சொல்லி, அவ்விடம் விட்டு நகர்ந்து விட்டான்.

ஒரு வகையில் வர்ஷினி சொல்வது மிகவும் உண்மை. அப்போது அவனின் சலனங்கள் பெரிய தேடலை வர்ஷினியிடம் தேடிய போதும்.. இப்போது அவன்  பக்குவப் பட்டு விட்டான்.. தன்னால் ஒரு பெண் இதுவரையிலும் தனியாக நிற்கும் போது, தான் மட்டும் சந்தோஷமாக இருப்பதா என்ற ஒரு எண்ணம் அடி மனதில் இருக்கத் தான் செய்தது. வர்ஷினி தன்னிடம் வந்து விட்டால் போதும் என்ற எண்ணம் தான் பிரதானமாக இருந்தது.. குழந்தை பெற்றுக் கொள்ளலாமா என்று கேட்டது கூட அவளுக்கு குழந்தைகளின் மேல் இருந்த பிடித்தத்தினால் தான்..

இப்போது அப்படிச் சொல்ல முடியுமா? முடியாது! எத்தனை போராட்டங்களுக்குப் பிறகு வாழ்க்கையில் இந்த கட்டம்.. இதில் இன்னொரு பெண்ணுக்காக.. அவன் தள்ளி நிற்க முடியாதே.. அது இன்னும் வர்ஷினியை வருத்தி விட்டால்!

“இவ எப்போ பெரிய பொண்ணு? எப்போ சின்ன பொண்ணு? ஒன்னும் தெரியலை” என்று நொந்து கொண்டான்.

வேகமாக தயாராகி வர.. அவனுக்கு முன் டைனிங் டேபிளில் அவனுக்காகக் காத்திருந்தாள்..

“பசிச்சது” என,
“ஏன் வெயிட் பண்ற? சாப்பிட வேண்டியது தானே!” என,
“என்னவோ வெயிட் பண்ணினேன், வேண்டாம்னா எழரேன்” என உடனே எழ,
“உனக்காகத் தான் சொன்னேன்” என்று கை பிடித்து இருத்தவும்..
அமர்ந்தவள் அவன் முகத்தை முகத்தைப் பார்க்க..
“என்ன வர்ஷ்?” என்றான்.
“நான் பரிமாறவா?” என, அவள் கேட்ட விதத்தில் சிரித்து விட்டான்.
“என்ன இது புதுசா?” என,
“அது எப்பவும் சண்டை போட்டுட்டே இருக்கனா. ஐ வான்ட் டு மேக் மை ஃபாமிலி அண்ட் வான்ட் டு பி அன் ஐடியல் வைஃப்” என ஆர்வமாக சொல்ல
“நீ நீயா இரு போதும்.. அதுக்கு எந்த ஸ்பெஷல் ஹோம் வொர்க்கும் தேவையில்லை, உனக்கு அது தானா வரும்.. இப்போ நீ பசியோட இருக்கும் போது நான் மட்டும் சாப்பிட முடியாது, வா!” என்றவன்,
அவளுக்கும் நகர்த்தி தானும் எடுத்துக் கொண்டு..
“நல்லா சாப்பிடு!” என்றான் விஷமமாக.
“ஏன்?” என்பது போலப் பார்த்தவளிடம்,
“ஐ மிஸ் மை வாட்டர் பெட்” எனக் கண்ணடிக்க..
“எவ்வளவு கஷ்டப்பட்டு நான் வெயிட் குறைஞ்சேன் தெரியுமா.. உங்களுக்கு என்னை பிடிக்கலையா?” எனக் கவலையாகக் கேட்க.
“உன்னை நான் வெயிட் குறைன்னு சொன்னேனா?” என அதட்டினான்.

“நான் யோசிச்சேன் உங்களுக்கு ஏன் என்னை பிடிக்காமப் போச்சு, நாம தான் இவர் சொன்னது எல்லாம் செஞ்சோமே, எல்லார் கிட்டயும் நல்ல பொண்ணா தானே நடந்துக்கிட்டோம்ன்னு. அப்புறம் குண்டா இருந்தது பிடிக்கலையோன்னு நினைச்சேன்” என,

உணவு தொண்டைக்குள் இறங்காமல் நின்று விட்டது ..

“ரொம்ப யோசிச்சியோ என்னை?” என்றவனிடம்,

“உங்களை மட்டும் தான் யோசிச்சேன்!” என அவள் சொல்ல..

ம்கூம், உணவு அதற்கு மேல் இறங்குவேனா என்று சண்டித்தனம் செய்தது..

“உனக்கு என் மேல அவ்வளவு லவ் வர்ஷ்” என சூழலை இலகுவாக்க முற்பட்டான்.

“தெரியலை எனக்கு, உங்களை நினைக்க கூடாதுன்னு நினைச்சு உங்களையே தான் நினைச்சு இருந்தேன்.. உங்களை பிடிக்கக் கூடாதுன்னு தான் நினைச்சு இருந்தேன்.. பிடிச்சிருக்கான்னு இப்பவும் தெரியலை! ஆனா வேற யாரையுமே எனக்கு பிடிக்கலை! அது ரொம்ப நிச்சயம்!” என சொல்லி முடிக்கும் போது அவள் உணவை உண்டு முடித்து..

“ஓகே, நான் போறேன்!” என்று கம்ப்யுடர் முன் சென்று அமர்ந்து கொள்ள...

ஈஸ்வருக்கு ஏனோ அதற்கு மேல் உணவு இறங்கவில்லை!

சமையல் அம்மாவிடம் சென்று.. “வேலை பார்க்கும் போது அவளுக்கு சாப்பிட ஞாபகம் இருக்காது.. டைம்க்கு ஏதாவது கொண்டு போய் குடுத்துடுங்க..

மதியம் சாப்பிட வெச்சிடுங்க.. வீட்டை பார்த்துக்கங்க.. நான் வர்ற வரை இருங்க.. எதுக்கும் அவளை தொந்தரவு பண்ணாதீங்க" என சொல்லிச் சென்றான்.

வீட்டின் முன் இருந்த வராந்தாவில் தாஸ் இருக்கவும் அவனிடமும் "பார்த்துக்கோ தாஸ்" என சொல்லிச் சென்றான்.

அவனுமே ஃபைனான்ஸ் ஆஃபிஸ் சென்ற பிறகு வேலைகள் இழுத்துக் கொண்டது... ஐ பி எல் மேட்ச் வேறு இன்னும் சில நாட்களில் ஆரம்பிக்க இருப்பதால் ஜகன் அதில் இருந்தான்.. டீம் ப்ராக்டிஸில் இருக்க.. அவனுமே அதன் மேற்பார்வையில் இருந்தான்.. கோச் வேறு புதிதாக மாற்றி இருந்தார்கள்..

அதனால் அவன் ஆஃபிஸ் வரவில்லை.. ரூபாவும் பிரணவிக்கு காய்ச்சல் என்று வரவில்லை.. இவனுக்கு வேலைகள் சரியாக இருக்க..

அவன் வீடு சென்ற போது.. அங்கே சமையல் அம்மா இருந்தவர்.. "மதியம் இருந்து தூங்கறாங்க" என,

"சரி, நீங்க போங்க!" என்று அவரை அனுப்பி விட்டு.. முன்னிருந்த தாஸிடம் யாரெல்லாம் வந்தார்கள் என்று கேட்க..

"அஸ்வின் தான் ரெண்டு மூணு டைம் வந்தார்.. ஆனா பாப்பா தூங்கறாங்கன்னு சமையல் அம்மா சொல்லிட்டாங்க! எழுப்பச் சொன்னா அய்யாக்கு ஃபோன் பண்ணி கேட்டுட்டு சொன்னா தான் எழுப்புவேன்னு சொல்லிடிச்சு" என,

"ஹ, ஹ" என வாய் விட்டு சிரித்து விட்டான்.. பின் அஸ்வினிற்கு அழைக்க..

“இருங்க, நான் வர்றேன்” என்று நேரிலேயே வந்துவிட்டான்.

“சஞ்சய் பேங்க் லோன்க்கு ஒகே ன்ற மாதிரி ஒருவேளை சொல்லிட்டா, நாம பேங்க்ல என்ன பண்ணனும்னு மேம் கேட்கச் சொன்னாங்க!” என,

“கேட்டுட்டியா?” என்றவனிடம் ஒரு அசட்டு சிரிப்பை உதிர்த்தவன்.. “அது எனக்கு தெரியாது, நேத்தே சொன்னா திட்டுவாங்கன்னு இன்னைக்கு சொல்ல வந்தேன்” என,

ஈஸ்வர் அதற்கும் வாய் விட்டு சிரிக்க.. “என்ன மேம் உங்களை நல்லா பார்த்துக்கறாங்க போல, ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க” என,

அதற்கும் ஒரு மலர்ந்த சிரிப்பு மட்டுமே!

“நான் ஏதாவது பண்ணனுமா?” என,

“என்ன நான் ஏதாவது பண்ணனுமாவா.. வாட் இஸ் திஸ்! நீங்க தான் பண்ணனும்! எனக்கு இந்த பேங்க்ல யாரைப் பார்க்கணும்? என்ன பேசணும்? எதுவும் தெரியாது! நீங்க சொல்றதை மட்டும் தானே நான் செய்வேன்!” என,

“அவங்க எந்த பேங்க் அப்ரோச் பண்றாங்கன்னு பாரு, அப்புறம் என்ன பண்ணனும்னு நான் சொல்றேன்!”

“மேம் உங்க கிட்ட எந்த ஹெல்ப்பும் வாங்க மாட்டோம்னு அந்த சஞ்சய் கிட்ட சொன்னாங்க!”

“இப்பவும் நான் ஒன்னும் பண்ணப் போறதில்லை, என்ன பண்ணனும்னு சொல்லத் தான் போறேன். நீ தான் பண்ணனும்”

“ம்ம், சரி” என்று தலையசைத்துக் கிளம்பவும்..

“ஐஸ்வர்யா மேரேஜ்க்கு ஏதாவது சொன்னாளா?” என்று கேட்க விழைந்த மனதை முயன்று

அடக்கினான்..

அங்கே ஹாஸ்பிடலில் சஞ்சையும் அதை யோசித்து தான் அமர்ந்திருந்தான்.. நேற்றே ஐஸ்வர்யா வந்து ஹாஸ்பிடலில் சேர்ந்தது இன்னுமே அவனால நம்ப முடியவில்லை.. சற்று நாட்களாக எல்லாம் முடிந்தது என்ற ஒரு மனநிலையில் இருந்தவனுக்கு எல்லாம் சரியாகிவிடும் என்ற நம்பிக்கை வலுத்தது..

அப்படியே அமர்ந்திருந்தான்.. பத்து மணியாகும் சமயம் அவனின் ரூம் விட்டு வெளியே வர... ஐஸ்வர்யா அவனின் அம்மாவுடன் பேசிக் கொண்டே வருவதை பார்த்தான்.. பின் நின்று விட..

“எப்படி போவ ஐஸ்வர்யா?” என்று கேட்டுக் கொண்டே வர.. “ஸ்கூட்டி தான் மேம்” என்றாள்.

“நோ, நோ, இந்த டைம் அது சேஃப் கிடையாது. தினமும் அப்படியா போவ” என,

“இல்லை நைன்க்கு மேல ஆகிடுச்சுன்னா ஹாஸ்பிடல் கார் தான்.. அது ரிப்பேர் போல, நேத்து நைட் ஆம்புலன்ஸ்ல போனேனா அம்மாக்கு மனசு ஒப்பலை, அப்பா இப்போ தானே தவறினார்... அதுதான் இன்னைக்கு ஸ்கூட்டில போயிடறேன்” என,

எல்லாம் கேட்கும் தூரத்தில் தான் சஞ்சய் இருந்தான்.. “நீங்க விதார்த் கூட போறீங்களாமா.. நான் இவங்களை டிராப் பண்ணட்டுமா?” என தயங்கித் தயங்கி கேட்க,

தன் மகனா ஒரு பெண்ணை டிராப் செய்கிறேன் எனக் கேட்கிறான் என லக்ஷ்மி வியந்து பார்க்கும் போதே.. விதார்த்தும் வந்து விட..

“நீ அம்மாவை கூட்டிட்டுப் போ, நான் இவங்களை டிராப் பண்றேன்” என ஐஸ்வர்யாவைக் காட்ட..

“மா, வாங்க, வாங்க, செம பசி” என்று அம்மாவை ஒரே நிமிடத்தில் அவ்விடம் விட்டு அகற்ற..

“போகலாமா?” என்று சஞ்சய் ஐஸ்வர்யாவைக் கேட்க.. “எங்கே?” என்றாள் ஐஸ்வர்யா.

“உங்க வீட்டுக்கு தான்” என அவன் சொல்ல,

“கொண்டு போய் விடட்டுமான்னு என்கிட்டே கேட்கணும்.. அதை விட்டு உங்க அம்மா கிட்ட சொன்னா.. நான் வந்துடுவேனா.. எதையும் நேராவே சொல்ல மாட்டீங்களா” என,

“என்னை கல்யாணம் பண்ணிக்கறீங்களா?” என்றான் உடனே.

“நான் கொண்டு போய் விடறதுக்கு கேட்கறதுக்கு தான் சொன்னேன்”

“அதை விடுங்க, என்னை கல்யாணம் பண்ணிக்கறீங்களா?” என்றான் திரும்பவும்..

“இப்படி திடீர்ன்னு கேட்டா.. எனக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியலை”

“யோசிச்சு சொல்லுங்க, ஆனா சரின்னு சொல்லிடுங்க! இப்போ வாங்க” என முன் நடக்க.. வார்த்தை வளர்க்காமல் பின் சென்றாள்.

சஞ்சய் காரின் முன் கதவை திறந்து விட்டு நிற்க.. வெகுவாக ஒரு தயக்கம்.. சில நொடி தயக்கத்தை முகத்தினில் பார்த்தவன்.. பின் கதவை திறந்து விட.. அருகில் சென்று அந்த கதவை பிடிக்கவும்.. சஞ்சய் அதனை விட்டு.. டிரைவிங் சைட் வர.. அவனின் அந்த செய்கையில் கவரப் பட்டு.. பின் கதவை மூடி முன் புறமே ஏறி அமர்ந்தாள்.

சஞ்சயின் முகம் புன்னகையில் மலர்ந்தது..

இரவு நேரத்தில்.. அரவங்கள் குறைந்த சாலையில், ஐஷ்வர்யா அருகில் இருக்க காரோட்டிச் செல்வது, அப்படி ஒரு உவகையை சஞ்சய்க்கு கொடுக்க.. அதனை முழுமையாக அனுபவிக்க முடியாமல் எதோ தடுக்க...

“உங்களுக்கு என்னைப் பிடிக்கலையா? கல்யாணம் பண்ணக் கேட்டா வேலையை விட்டு போறீங்க, அவ்வளவு வெறுப்பா இருக்கா?” என,

திரும்பி சஞ்சயை பார்க்கவும், அவன் சாலையில் தான் கவனம் வைத்திருந்தான், இவள் புறம் திரும்ப வில்லை, திரும்பும் தைரியமும் இல்லை..

“காரை கொஞ்சம் ஓரமா நிறுத்துங்க” என,

“இல்லையில்லை, நான் எதுவும் கேட்கலை, இறங்கிடாதீங்க” என்றான் அவசரமாக.

“ஹச்சோ, கடவுளே! என்று சலித்தவள், “கொஞ்சம் ஓரமா நிறுத்துங்க, இறங்கமாட்டேன்!”

அதன் பிறகு தான் நிறுத்தினான்..

“நீங்க என் கிட்ட சொல்லலை.. விதார்த் சொல்லும் போது என்ன இம்ப்ரஷன் வரும்?”

“நான் சொல்லச் சொல்லலை, அவன் சொன்னதே எனக்கு தெரியாது!”

அவனின் பாவனையில் சிரித்து விட்டாள்..

“எனக்குள்ள கொஞ்சம் பெர்சனல் கான்ஃப்ளிக்ட்ஸ் இருக்கு. அதை முடிச்சிக்கறேன் கொஞ்சம் டைம் குடுங்க” என்றாள் நல்ல விதமாகவே..

“என்ன பெர்சனல் கான்ஃப்ளிக்ட்ஸ், நான் ஏதாவது ஹெல்ப் பண்ண முடியுமா?”

“எதுன்னாலும் நான் சொல்றேன், ப்ளீஸ்..” என்று விட.. பிறகு சஞ்சய் எதுவும் கேட்கவில்லை..

நாட்கள் அதன் போக்கில் வேகமாக செல்ல..

சின்ன சண்டைகள், செல்லச் சிணுங்கல்கள் என்று எதுவும் இல்லாமல், இயல்பாய் தன் வாழ்க்கையை கொண்டு செல்ல ஆரம்பித்தாள் வர்ஷினி..

ஆம்! முதலில் செய்தது குறை சொல்லும் பழக்கத்தை விட்டது தான்!

ஐ பி எல் காரணத்தினால் இப்போது அஸ்வினும் அவளுக்காகச் செய்யும் வேலைகள் குறைந்து விட..

எல்லாவற்றிற்கும் ஈஸ்வரே தான் உடன் இருந்தான்.. தனியாக என்று அவளே செய்துக் கொள்ளும் வேலைகள் கிடையாது.. ஃபிலிம் டிஸ்டிரிபியுஷன் ஒரு வடிவம் பெறவும்..

“எனக்கு உன்னை தனியா விட முடியாது.. உன்னோட இருக்கவும் முடியாது.. என்ன ஆப்ஷன் வெச்சிருக்க..?” எனக் கேட்டான்.. அவனின் குரலில் இருந்த உறுதி தனியாக விட மாட்டான் எனப் புரிய..

சற்று நேரம் யோசித்தவள்.. “பத்துண்ணா அண்ட் முரளிண்ணா என்னோட பார்ட்னர் ஆவாங்களா?” என,

என்ன பேசுகிறாள் இவள் என்பது போல ஈஸ்வர் பார்க்க,

“எதுக்கு அப்படிப் பார்க்கறீங்க?” எனவும்,

“அவங்களோட பார்ட்னர் ஷிப்பா?” என,

“எஸ், அப்பா எப்பவும் நான் அவங்களை விடக் கூடாதுனு கேட்டுகிட்டார், ஐ மீன் அவங்களோட உறவை.. ஏற்கனவே இருக்குற பிஸ்னெஸ் அப்படியே இருக்குன்னாலும்.. புதுசா எல்லாம் என்னால யாரையும் சேர்க்க முடியாது”

“அவங்களும் இன்வெஸ்ட் பண்ணனும், அண்ட் பத்துண்ணா என்னோட கொஞ்சம் அட்ஜஸ்ட் ஆகிடுவாங்க.. முரளிண்ணா உங்களை மீறி எதுவுமே செய்ய மாட்டாங்க, சோ அவங்க தான் ஓகே என் வரைக்கும். அதுவுமில்லாம அவங்க ரெண்டு பேரும் சேர்ந்து இருக்கும் போது நான் ஒருத்தரை ஒருத்தர் பிரிக்க கூடாது!”

“நீங்க என்ன சொல்றீங்க?”

“எனக்கு இதுல ரொம்ப நிம்மதி தான். ஆனா நீ அவங்களை எப்பவும் கம்ப்ளைன்ட் பண்ணக் கூடாது.. உன் அண்ணனுங்க உன் அளவுக்கு ஷார்ப் கிடையாது.. அவங்க எதுவும் செய்யலை, எல்லாம் என்னால தான் அப்படின்ற எண்ணம் உனக்கு வரும்ன்னு தோணினா. பார்ட்னர் ஷிப் வேண்டாம்!” என்றான் கறாராக.

“இப்ப நீங்க அவங்களை புகழ்றீங்களா, இல்லை…” என அவள் இழுக்க,

“ப்ச், வர்ஷ்” என அதட்டினான்.. “ஒரு வேலை ஆரம்பிக்கும் முன் அதோட சாதக பாதகம் நாம பார்க்கணும்.. முரளியும் பத்துவும் நல்ல உழைப்பாளிங்க அதுல சந்தேகம் கிடையாது. உங்கப்பா வளர்த்ததை அவங்க கண்டின்யு பண்றாங்க. ஆனா திறமையானவங்க கிடையாது.. நூறை நூறா எடுப்பாங்க.. ஆனா நூறை ஆயிரமாக்குற திறமை அவங்க கிட்ட கிடையாது!”

“இப்போ பாரு, நீ வேலை செஞ்சதுக்கு அவங்க பணம் குடுத்ததை வாங்கியிருக்கலாம், நல்ல பேமென்ட் கூட.. ஆனா உன்னோட ஏஜ்க்கு தோணாத வகையில நீ டிஸ்டரிபியுஷன் கேட்டிருக்க”

“இதுல சாலிட் லாபம் வரும், நஷ்டம் கிடையாதுன்னு தெரிஞ்சு.. நம்ம இங்க இருக்குற படம் மாதிரி கிடையாதுன்னு தெரிஞ்சு நீ பேசியிருக்க. இப்படி ஐடியாஸ் எல்லாம் அவங்ககிட்ட நீ எதிர் பார்க்க முடியாது!”

“எனக்கு தெரியும் ரஞ்சனி அண்ணி உங்க தங்கை, முரளிண்ணா உங்க ஃபிரன்ட்.. என்னால அதுக்கு பிரச்சனை வராது” என முடித்து கொண்டாள்..

“என்ன பதில் இது?” எனப் புரியாமல் ஈஸ்வர் பார்த்திருக்க..

“இதுக்கு மேல எனக்கு பதில் சொல்லத் தெரியாது” என்றாள் அவனை விடவும் கறாராக.

அவன் சொல்வதற்கு சரி என்றும் சொல்லவில்லை முடியாது என்றும் சொல்லவில்லை..

ஈஸ்வரின் பார்வையை எதிர் கொண்டவள், “நீங்க என்னை நினைக்கறதை விட எனக்கு மத்தவங்களோட இருக்குற ரிலேஷன்ஷிப் தான் அதிகம் நினைக்கறீங்க.. நான் அம்மாவோட எப்படி? அண்ணாவோட எப்படி?.. இப்படி.. இதெல்லாம் சரி வராது.. நான் நல்ல பொண்ணு பேர் எல்லாம் எடுக்க மாட்டேன்” என முறுக்கவும்...

அப்போதும் அவளையேப் பார்த்திருக்க..

“என்ன?” என்பது போல புருவம் உயர்த்தினாள்.

“பேசாம நீ சைக்காலஜி படிச்சிருக்கலாம்?” என்றான்.

“அய்யே” என சிரிப்பது போல பாவனை காட்டியவள்,

“நீங்க முதல்ல என்னை படிங்க, நான் சைக்காலஜி படிக்கறேன்”

அவள் சொன்னதில் ஈஸ்வருக்கு சிரிப்பு வர, சிரித்து விட்டான்.

“அய்யே ,நான் டபிள் மீனிங்க்ள சொல்லலை, சிங்கிள் மீனிங்ல தான் சொன்னேன்!” என்று அசடு வழிந்தவளிடம்.. இன்னும் இன்னும் சிரிப்பு பொங்க பார்த்து இருக்க..

“இப்போ சிரிக்காதீங்கனு சொன்னேன்”

“சிரிப்பு வருது, சிரிக்கிறேன்!” என்று அவனும் விடாமல் சிரிக்க..

“அடி வாங்கப் போறீங்க” என்று, கையில் என்ன கிடைக்கிறது தூக்கி வீச எனப் பார்க்க.. அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் ஈஸ்வர் இன்னும் சிரித்துக் கொண்டே இருந்தான்.

“உங்களை” என்று அருகில் வந்து தோளில் அடிக்கப் போக.. அடிக்க விடாமல் கை பிடித்துக் கொண்டவன்.. அவளை இழுத்து அணைத்துக் கொண்டு..

“நான் உன்னைப் பத்தி தெரியும்ன்னு சொன்னதை விட உனக்கு தான் என்னைப் பத்தி ரொம்ப தெரியுது.. நான் என்ன நினைக்கிறேன்.. நான் என்ன செய்வேன் எல்லாம்!”

“நான் உன்னை நினைச்சதை விட, நீ தான் என்னை அதிகம் நினைச்சிருக்க!” என்றான் உணர்ந்து..

பதிலே பேசாமல் அவனின் அணைப்பினுள் வாகாய் பொருந்திக் கொண்டாள்..

“நான் உன்னையே நினைச்சு இருந்தாலும் உன்னை நான் லவ் பண்ணலை!”

“ஒகே, பண்ணலை! ஆனா நான் பண்றேன்! பண்ணுவேன்! பண்ணிட்டே இருப்பேன்!”

“நான் எப்போ வேணா போறேன்னு சொல்லுவேன்”

“ஒகே, போ! எங்கே வேணா போ! எப்போ வேணா போ!” என,

அணைப்பில் இருந்தவள் நிமிர்ந்து அவனை முறைத்துப் பார்க்க..

புன்னகைத்தவாறே “நீ எங்கே போனாலும், உன்னை நான் போகவேண்டாம்னு சொல்லவே மாட்டேன்! ஏன்னா நான் தான் உன் பின்னாடியே வந்துடுவேனே!” என கண்ணடித்து சிரிக்க..

வர்ஷினியின் முகம் முறைப்பில் இருந்து புன்னகைக்கு மாறியது!

“எஸ், பியுட்டி எஸ்” என்றவன் அவளின் நெற்றியில் முத்தமிட..

“அது என்ன பியுட்டி” என்றவளிடம்,

“அதுவா நான் ப்ராக்டிஸ் பண்றேன்.. நம்ம பொண்ணை கூப்பிட” என,

“நோ, நோ, அது எனக்கு மட்டும் தான்” என்றவள் “வேணும்னா அதை தமிழ்ல கூப்பிடுங்க” என,

“அழகின்னா..”

“இல்லையில்லை..” என்றவள் சொன்ன வார்த்தை, “என்ன?” என்று ஈஸ்வரின் முகம் அஷ்ட கோணல் ஆக..

“அப்படித் தான் கூப்பிடணும்” என்று சொல்ல,

“ஆங்” என விழித்தவனிடம்..

“சிங்காரி.. எப்படி இருக்கு?” எனக் கேட்டு கண்ணடிக்க..

“நல்லா இல்லை, நீ முதல்ல பெத்துக் குடு, அப்புறம் டிசைட் பண்ணலாம்” என..அவனின் முகம் போன போக்கை பார்த்து விடாது சிரிக்க ஆரம்பித்தாள்.

“சிரிக்காத .. சொல்றேன் தானே” என அவன் சொல்லச் சொல்ல சிரித்துக் கொண்டே இருக்க..

“போடி” என சொல்லி, வர்ஷினியைப் பிடித்திருந்த அணைப்பை விடுத்து நகரப் போக, ஈஸ்வரால் நகர முடியவில்லை.. அவனின் அணைப்பில் இருந்தவள் எப்போது திரும்ப அவனை அணைத்தாள் எனக் கூடத் தெரியவில்லை..

அதையும் விழித்துப் பார்க்க..

“ஹ, ஹ” என இன்னும் சிரித்தவள் “இது என்ன ஃபர்ஸ்ட் நைட்ல நான் குடுத்த எக்ஸ்ப்ரஷன் குடுக்கறீங்க”

“நீ இப்படியா குடுத்த, எனக்கு மறந்து போச்சு.. டெஸ்ட் பண்ணட்டுமா?” என,

“அம்மாடி” என நொடியில் விலகி நகர்ந்து நின்று கொண்டாள்..

ஆனால் இருவர் முகத்தில் இருந்த சிரிப்பு மட்டும் மறையவேயில்லை!

**உண்மை சொன்னால் நேசிப்பாயா?**

**மஞ்சத்தின் மேல் மன்னிப்பாயா?**

## அத்தியாயம் எண்பத்தி ஒன்பது :

**கீதம் சங்கீதம் நீ தானே என் காதல் வேதம்**
**பாதம் உந்தன் பாதம்**
**என்னோடு வந்தாலே போதும் எப்போதும்..**

மனதளவில் முன்பை விட இப்போது இன்னும் நெருக்கம் தான். ஆனால் தயக்கங்கள் அப்படியே தான் இருக்க.. வேறு நெருக்கங்களுக்கு ஈஸ்வர் முயலவில்லை.. வர்ஷினிக்குமே அப்படி தான்.. அந்த ஒரு நிலைகள் தங்களை கொண்டு போக விடாமல் இருக்க இருவருமே பழகியிருந்தனர்.

ஜெகனும் அஸ்வினும் ஐ பீ எல் டீமோடு சுற்றிக் கொண்டிருந்தனர்.. விடுமுறையில் அவ்வப் போது ரூபாவும் குழந்தைகளும் கூட..

எல்லாம் ஈஸ்வரால் என்பதை க்ஷணமும் ரூபா மறந்திருக்கவில்லை.. அப்போது ராஞ்சியில் இருக்க.. சரணும் பிரணவியும் அம்மாவோடு அமர்ந்திருக்க.. ஜெகனும் அஸ்வினும் கூட..

இன்னும் ரூபாவும் அஸ்வினும் பேசிக் கொண்டாலும் அப்படி ஒன்றும் சகஜ மனபானமையில் இல்லை.. ஒரு ஒதுக்கம் அவர்களிடம் தானாகவே இருந்தது..

ஆனால் ஜகனோடு திரும்ப அஸ்வின் நன்கு ஒட்டிக் கொண்டான்.. குழந்தைகளும் மாமாவிடம் அப்படியே..

இரவில் ஈஸ்வர் வீட்டினில் சுவரில் சாய்ந்தவாறு கால் நீட்டி அமர்ந்திருந்தான்.. அதுவும் தரையில்.. அப்போது தான் வந்திருந்தான்.. ஈஸ்வர் வந்திருந்ததால் தன்னுடைய வேலைகளை ஏறக்கட்டி இருந்தாள் வர்ஷினி.. ஆம் முடிந்தவரை ஈஸ்வர் இருக்கும் சமயம் வேலை செய்வதை குறைத்துக் கொண்டிருந்தாள். அவனோடு இருக்கும் பொழுதுகளை விரும்ப ஆரம்பித்து இருந்தாள். வாக்குவாதங்களும் சண்டைகளும் வெகுவாக குறைந்து இருந்தது.

இப்போது சமையல் அறையுள் அவனுக்காக காஃபி தயாரித்துக் கொண்டிருந்தாள்.. இரவு உணவே உட்கொள்ளும் நேரம், ஆனாலும் காஃபி என அவன் கேட்டிருக்க.. இருவருக்கும் எடுத்து வந்து அவளும் தரையிலேயே அமர்ந்து கொண்டாள்.

ஈஸ்வருக்கு கொடுத்து அவளும் எடுத்து ஒரு மிடறு குடித்த உடன்.. அவளின் கையினில் இருந்த கப்பை மாற்றிக் கொண்டவன்.. "நான் இன்னும் குடிக்கலை" என்று வேறு சொல்ல.. வர்ஷினிக்கு புன்னகை மலர்ந்தது..

ஆம்! வர்ஷினி எப்போதும் குடிக்கும் போது கப்பை மாற்றிக் கொள்வான்.. ஆனால் ஈஸ்வர் அருந்தியதை வர்ஷினி குடிக்க மாட்டாள்.. அவளின் பழக்கம் அது..

"அப்படி நான் குடிச்சதை குடிச்சா அதுல என்ன வருது?" என்றவளிடம்.. "ஒரு கிக்" எனச் சொல்ல.. சிரிப்பு தான் வந்தது அவளுக்கு..

ஆனால் அவனின் முகத்தினில் அப்படி ஒரு களைப்பை பார்க்க.. "ரொம்ப வேலையா?" என,

"கொஞ்சம் அதிகம்" என அவன் சொல்ல.. "ஆம், அதிகம்!" என்று அவளுக்கு புரிந்தது..
இல்லையென்றால் ஐ பி எல் மேட்ச் கூட போகாமல் இருப்பானா என

எழுந்து டி வீ ஆன் செய்து அவனது அருகே அமர்ந்து கொண்டாள்.. அங்கே ஜகன் ரூபா குழந்தைகள் அஸ்வின் என்று அவர்கள் இருக்குமிடம் ஃபோகஸ் ஆக...

உடனே போன் எடுத்து அஸ்வினிற்கு அழைத்த வர்ஷினி, "ஹேய், உங்களை எல்லாம் நான் பார்த்துட்டு இருக்கேன்" எனக் கத்த..

"நீங்க பார்த்தா என்ன? பார்க்கலைன்னா என்ன? உங்க பக்கத்துல யாராவது அழகான பொண்ணுங்க இருக்காங்களா? இல்லை.. அட்லீஸ்ட் ஃபோன் பண்ணியாவது யாருக்காவது

சொல்லுங்க என்னை பார்க்கச் சொல்லி" என பாவனையாகச் சொல்ல..

"அடேய்" என திட்டி ஒரு வார்த்தை சொல்ல..

"என்ன? என்ன? இங்க லைன் சரியா கிடைக்கலை" என அஸ்வின் பதில் சொல்ல..

ஸ்பீக்கரில் போட்டு இருந்ததால் எல்லாம் கேட்டு ஈஸ்வர் வாய் விட்டு சிரித்தான்.. அந்த சிரிப்பை கேட்ட அஸ்வின் "ஸ்பீக்கர் போட்டு இருக்கீங்களா.. உங்களை..." என்று பல்லைக் கடிக்க,

"ஹே, ரொம்ப பண்ணாத சரண் கிட்ட கொடு" என்றாள் சிரிப்போடு வர்ஷினி.

வாங்கிய சரண் வர்ஷினி பேசும் முன்னே "சித்தி" எனப் பேச ஆரம்பிக்க.. "நானு" என்று பிரணவி பிடுங்க..

"நோ சண்டை" எனக் கத்த கத்த அங்கே ஒரு பெரிய சண்டை நடந்தது.

"விடுங்கடா" என்று அந்த கைப்பேசியை வாங்கிய ரூபா. "வர்ஷி" என,

"ஹாய் அக்கா, எப்படி இருக்கீங்க" என,

"உங்களை விட்டுட்டு ஊர் சுத்திட்டி இருக்கேன், உங்களால"

"அக்கா" என்று அலறியவள்.. "இதுக்கு தான் நான் உங்களோட பேசறதே இல்லை.. இப்படி எல்லாம் பேசக் கூடாது" என அதட்ட,

"இங்க நீங்க தானே இருக்கணும்" என,

"அது, அது" என்றவள், ஸ்பீக்கர் வாய் மூடி, "ஜகன் அவரை என்ன சொல்லணும்" என்று ஈஸ்வரிடம் ரகசியம் பேச.. தலையில் செல்லமாக தட்டிக் கொண்டவன் "மாமா" என,

“ஆங்” என்றவள், திரும்ப ஸ்பீக்கரில் இருந்து கையை எடுத்து, “அது ஜகன் மாமாக்காக இவர் வாங்கினது, இப்படி எல்லாம் பேசக் கூடாது” என,

அந்த நொடியில் நெகிழ்ந்து விட்டாள் ரூபா..
“தற்கொலைக்கு முயன்றவனை காப்பாற்றி, செய்த அனைத்திலும் இருந்து விடுவித்து, அவனுக்கு பிடித்ததை தூக்கி கையில் கொடுத்து இருக்கிறான் ஈஸ்வர்.

“அவரோட அப்பா இருந்தாக் கூட இப்படி அவரை பார்த்து இருக்க மாட்டாங்க” என.. குரலிலேயே நெகிழ்ச்சியை உணர்ந்தார்கள்.. ஈஸ்வர் பேசியவன்.. “ஹே ரூபஸ், என்ன இது? என்ஜாய் தி மொமன்ட்!” என்றான் உளமார.

“நீங்க வரலை, நீங்க அங்க உட்கார்ந்து இருக்கீங்க?” என்று குறை பட..

“நான் இங்கே தான் சந்தோஷமா இருக்கேன்.. பாரு, என் பொண்டாட்டி எனக்கு கால் அமுத்தி விட்டுட்டு இருக்கா!” என சிரிக்க..

“பொய் சொல்லாத நீ அமுத்தி விட்டுட்டு இருப்ப” என ரூபா சொல்ல..

அதனை மறுக்காமல் “சரி. சரி, இந்த ரகசியத்தை நீ மட்டும் வெச்சிக்கோ, யாருக்கும் சொல்லிடாத.. அழுது வடியாத.. உன் முகத்தை தான் உன் குழந்தைங்களும் வீட்டுக்காரனும் பார்ப்பாங்க.. உன் முகத்துல என்ன இருக்கோ அது தான் அவங்களுக்கு.. உன் சந்தோசம் தான் அவங்க முகத்துல வரும்” என,

ஈஸ்வர் சொல்வதை உணர்ந்து பார்க்க.. ஜகனும் சரணும் ப்ரணவியும் அவளின் முகத்தை தான் பார்த்து இருந்தனர்.. முகம் அடுத்த நிமிடம்

புன்னகைக்கு மாற.. “உன் ரகசியத்தை நானும் சொல்லலை, என் ரகசியத்தை நீயும் சொல்லாத” என ரூபா சிரிக்க.. அந்த சிரிப்பு அவளை பார்த்திருந்த மூவர் முகத்திலும் தொற்றியது.

அதற்குள் கிரௌண்டில் யாரோ சிக்சர் அடிக்க “ஹோ” வென்ற சத்தம்.. “ஃபோன் வை” என்று ஈஸ்வர் ஃபோனை வைத்து விட..

“நான் கால் அமுத்தறதை ஊர் முழுசும் சொல்லணுமா? என்று வர்ஷினி முறைக்க.. முறைத்தாலும் அவளின் கைகள் அழுத்துவதை நிறுத்தவில்லை. “சொன்னாலும் யாரும் நம்ப மாட்டேங்றாங்க, நான் உனக்கு அழுத்தறேன்னு சொல்றாங்க” என போலியாக அலுத்துக் கொள்ள.

இருவர் முகத்திலுமே மீண்டும் சிரிப்பு!

ஆம்! தரையில் அமர்ந்திருந்தவன்.. வலியில் கால்களை அவ்வப்போது பிடிப்பதை பார்த்து இருந்தவள், தானாக அவனின் கால்களை இதமாய் அழுத்தி விட ஆரம்பித்து இருந்தாள்.

ஈஸ்வர் அவள் அழுத்த ஆரம்பிக்கும் போதே கைகளை விலக்கி விட முயன்ற போது, அவளின் முறைப்பை பார்த்து “கால் மட்டுமென்ன கை கூட அழுத்தி விடு” என்று நீட்டியிருந்தான்..

“ம்ம், சரி! யாரும் நம்பலை தானே! இப்போ நீங்க அழுத்துங்க” என வர்ஷினி சொல்ல.

சாய்ந்த வாக்கில் அமர்ந்திருந்தவன் அப்படியே வர்ஷினியை இழுத்து தன் மேலேயே அமர்த்திக் கொண்டு.. அப்படியே அவளின் தோள் கை என அழுத்தி விட.. வர்ஷினியை அவனின் தொடுகை அழுத்தம் என்னவோ செய்தது. இன்னும் வேண்டும் வேண்டும் என்ற ஒரு உணர்வு ஒரு அவஸ்தை!

அவ்வளவு தான் “வேண்டாம், வேண்டாம்” என்று அவன் மேல் இருந்து இறங்கி எழுந்து நின்று கொண்டாள்.

“என்னவோ சொன்ன?” என்று சலித்த ஈஸ்வருமே உணர்வுகளின் பிடியில் இருந்து வெளியில் வர சற்று நேரம் பிடித்தது.. “அக்காவும் தம்பியும் இப்படி ஊர் சுத்தப் போயிட்டா.. இவங்க தங்கச்சிக்கு எப்போ கல்யாணம் நடக்க?” என ஈஸ்வர் முணுமுணுக்க..

“இப்போ என்ன மேலே தானே உட்காரணும், ஓகே!” என வர்ஷினி ஈஸ்வர் மேல் திரும்ப அமர்ந்து கொள்ள..

இதமாய் அணைத்துப் பிடித்துக் கொண்டவன்.. “மிஸ் யு வர்ஷ், ரொம்பவுமே!” என..

“நானுமே” என்ற வார்த்தை தொண்டை வரை வந்ததை, அப்படியே விழுங்கிக் கொண்டாள்.. சொன்னால் அவனிற்கு மிகுந்த குற்ற உணர்ச்சியாகப் போய்விடும் என்று அறிந்தவளாக.

இருவராலுமே யாரிடமும் ஐஸ்வர்யாவின் திருமணத்தை பற்றி அவர்களாகப் பேச முடியவில்லை.. சில கணமான நிமிடங்கள்.. அமைதியாக அமர்ந்திருந்தனர்.

சஞ்சய்க்கு பேங்கில் லோன் சாங்க்ஷன் ஆகியிருந்தது.. அந்த பணத்தை ஈஸ்வர் பைனான்சிற்கு திரும்பக் கொடுக்க வந்திருந்தான்.. வர்ஷினி தான் அவனின் ஹாஸ்பிடலுக்கு பேங்கிள் சியுரிடி கொடுத்து இருந்தாள்.. எல்லாம் ஈஸ்வர் மூலமே.. ஆனால் சஞ்சய்க்கு எதுவும் தெரியாத மாதிரி பார்த்துக் கொண்டனர்..

ஈஸ்வர் அலுவலகத்தில் இருக்கும் போது வர்ஷினி வர.. "ஹேய், என்ன திடீர்ன்னு வர்றேன்னு சொல்லவேயில்லை" என்று ஈஸ்வர் ஆர்வமாக வரவேற்க..

"காலையில் பத்து மணிக்கு தான் ஆஃபிஸ் வந்தீங்க, இப்போ பன்னண்டு மணி தான்.. இது என்ன இப்படி ஒரு ஃபீல்" என இடுப்பில் கை வைத்து பாவனையாகக் கேட்க..

அவளை மேலிருந்து கீழ் ரசித்துப் பார்த்தவன் "கொல்றடி" என்றான் கண்களைப் பார்த்து..

தன்னை முழுதாக கவர் செய்யும் ஒரு சுரிதாரில் இருந்தாள்.. ஆம்! க்ளோஸ் நெக் வைத்து, ஃபுல் ஹேன்ட் வைத்து.. காலிலும் கட் ஷூ மாடலில் ஒரு சாண்டல்.. கை விரல்களும், முகமுமே மட்டுமே தெரிய..

தன்னையே குனிந்து பார்த்துக் கொண்டவள்.. "என்ன தெரியுதுன்னு இப்படி ஒரு எக்ஸ்ப்ரஷன்!" என வியந்து கேட்க..

"டிரஸ் குள்ள இருக்குற நீ" என ரசனையாக சொல்லி கண்ணடித்து சிரித்தான்.

"தோடா" என்று இன்னும் முறைக்க..

"சும்மா சொன்னேன், உன் கண்ணு வர்ஷ்! உன் கண்! அது பார்த்த நாள்ல இருந்து என்னை கொல்லுது!"

"ம்ம்ம், நல்லா பார்த்துக்கங்க" என அருகில் வந்து கண்ணை விரித்துக் காட்ட..

அவள் எதிர்பாராமல் பட்டென்று அவளின் இதழில் இதழ் பதித்து விலகினான்.

என்ன நடந்தது என்று உணர்ந்து அவள் இன்னும் முறைக்க.. "அது வீட்ல இந்த மாதிரி பண்ண

முடியாது.. அப்புறம் என்னால என்னை கண்ட்ரோல் பண்ண முடியாது.. இங்கே நானே நினைச்சாலும் ஒன்னும் பண்ண முடியாது, இல்லையா!" என,

"அம்மாடி, எவ்வளவு அறிவு நீங்க.. பொறந்ததுல இருந்தே இவ்வளவு அறிவா?" என போலியாக வியக்க,

"ம்கூம், இந்த அறிவெல்லாம் உன் கூட சேர்ந்த பிறகு தான்!" என ஈஸ்வர் கெத்தாக சொன்னான்.

முகத்தை கொஞ்சலாக சுருக்கிய வர்ஷினி "அப்படியா, எனக்கு இந்த அறிவு பிடிக்கலை.. அதாவது நீ குடுத்த முத்தம் பிடிக்கலை!" என,

"அப்போ திருப்பி என்கிட்டயே குடுத்துடு!"

"நீதானே குடுத்த, நீயே எடுத்துக்கோ!" என்றாள் அவளும்.

"நீ குடு, நீ எடு!" என்ற சண்டையில் ஈஸ்வர், அவளை மிக மிக நெருங்கி.. இடையில் கை கொடுத்து அணைத்துப் பிடித்திருந்தான்.

அப்போது பார்த்து கதவு தட்டும் ஓசை கேட்க.. வர்ஷினியின் கவனம் திரும்ப, மீண்டும் மின்னலென இதழில் இதழ் பதித்து விலகினான்.. "நானே எடுத்துக்கிட்டேன்" என சொல்லியபடி..

வர்ஷினியின் முகத்தினில் ஏமாற்றம் அப்பட்டமாய்த் தெரிய.. அதை உணர்ந்தவன் "சாரி, சாரி, பக்கத்துல வரக் கூடாதுன்னு நினைச்சாலும்.. இவ்வளவு அழகா நீ என் பக்கத்துல வரும் போது என்னால முடியலை" என்று குறை பட்டுக் கொண்டே "சாரி" என்றான் மீண்டும்..

"போடா" என்றவளிடம் ஒரு சலிப்பு..

அவளின் கைகளை சமாதானமாக அழுத்திப் பிடித்தவன்.. "எஸ், கமின்" என,

அங்கே வந்த அட்டண்டர் “சார், உங்களை பார்க்க வந்திருக்காங்க” என்றான்.

“யார்?” என அவன் கேட்கும் போதே, “அதுதான் அந்த லூசோட அண்ணன்” என்று வர்ஷினி சொல்ல,

“ஓஹ் அதுக்கு தான் இங்க வந்தியா?”

“பின்ன, தாஸ் அண்ணா காரோட்டி ரொம்ப நாள் ஆச்சு.. அவர் டிரைவிங் மறந்துட்டா என்ன பண்றதுன்னா வந்தேன்!” என சலிக்க.

“கம் வர்ஷ், சிட், சிட்” என அவனின் இருக்கையில் அவளை அமர வைத்து அவன் அருகினில் நிற்க.. உள்ளே வந்த சஞ்சயின் கண்களில் அதுதான் பட்டது..

வர்ஷினி அமர, அதன் பக்கத்தில் ஈஸ்வர் நின்றிருந்த விதம்.. அன்பு காதல் இதெல்லாம் விட.. அதையும் மீறிய ஒன்றாகத் தான் தோன்றியது..

வணக்கம் சொல்லவும்.. “உட்காருங்க டாக்டர்” என்று ஈஸ்வர் இருக்கையைக் காட்ட.. அதில் அமர்ந்தவன்..

“நான் பார்த்த போட்டோஸ்ல.. இல்லை எங்க வீட்ல இருந்த பழைய போட்டோஸ்ல எல்லாம்.. இப்படி ஜோடியா போட்டோ எடுக்கும் போது, எப்பவும் ஆண் உட்கார்ந்து இருக்க பெண் பக்கத்துல நின்னுட்டு இருப்பாங்க.. ஏன் அப்படின்னு எனக்கு தோணும்”

“அது மாதிரி இல்லாம, இங்க மாறி நின்னு.. இப்படி கேட்டிவேடிவ்வா பார்க்கும் போது, ரொம்ப நல்லா இருக்கு” என,

“தேங்க்ஸ் டாக்டர்” என்றான் ஈஸ்வர் உள்ளார்ந்து.. வர்ஷினி அமைதியாகி விட்டாள்..

பின்பு பக்கவாட்டில் இருந்த சேரில் ஈஸ்வர் அமர.. சஞ்சய் காசோலையை நீட்டியவன்.. “பேங்க்ல இருந்து இன்னும் முழுசா பணம் வரலை... இன்னும் ரெண்டு பேமென்ட்டா குடுக்கறேன்னு சொல்லியிருக்காங்க” என்றவன் அதனை நீட்ட..

வாங்கிக் கொண்டான்..

“ஒரிஜினல் டாக்குமென்ட்ஸ்” என ஈஸ்வர் ஆரம்பிக்கும் போதே,

“அது எல்லாம் கொடுத்துட்டு வாங்கிக்கறேன்” என சஞ்சய் சொல்ல,

மென்னகை புரிந்தவன், “டாக்டர் ஒரிஜினல் டாக்குமென்ட்ஸ் கொடுக்காம யாரு உங்களுக்கு லோன் கொடுப்பா?” என வினவ..

சில நொடி புரியாமல் பார்த்தவன்.. பின்பு புரிந்து.. “குடுத்துட்டீங்களா?” என,

“எஸ், பேங்க்ல இவ குடுத்துட்டா” என,

“தேங்க்ஸ் மேம், தேங்க் யு வெரி மச்” என அவன் சொல்ல,

உண்மையில் அதெல்லாம் வர்ஷினிக்கு எதுவுமே தெரியாது.. ஆனாலும் எதுவும் சொல்லாது “இட்ஸ் ஒகே டாக்டர், என்னால தானே ஸ்டார்ட் ஆச்சு.. ஐ அம் ரியல்லி சாரி அபௌட் வாட் யு ஹேவ் அண்டர்கான்” என்றாள் உண்மையாக..

“மேம் ப்ளீஸ், சொன்னது என் தம்பி! ரியாக்ட் பண்ணினது உங்க வீட்டுக்காரர்! ஆனா நீங்க எத்தனை முறை என்கிட்ட சாரி கேட்டுடீங்க. ப்ளீஸ் கேட்காதீங்க, வேண்டாம்” என்றான் உண்மையாக.

புன்னகைத்தவள் “நான் வேற, இவர் வேற, இல்லை டாக்டர்! நான் கேட்டது இவருக்காகத் தான்!” என்றாள் குரலில் ஒரு கம்பீரத்தோடு.

“தோடா, என்னமா பேசறா இவ!” என பிரமித்து பார்த்து இருந்தான் ஈஸ்வர். அஸ்வினிடம் ஒரு முறை ஈஸ்வர் சொன்ன அதே வார்த்தைகள்.

“இவள் மேல் உள்ள பழைய காதலை தூக்கிப் போட்டு புதிதாய் காதலிப்போமா.. தினமும் இவளை எனக்கு நிறைய நிறைய பிடிக்கிறது.. புதிதாய் பிடிக்கிறது.. நான் இவளிடம் வைத்திருப்பது ஒரே காதலா இல்லை வேறு வேறா.. தினமும் என்னுள் புதிதாய் தோன்றிக் கொண்டே இருக்கின்றதே, இது என்ன மாயம்” மனதினுள் ஈஸ்வர் சொற்பொழிவே ஆற்றிக் கொண்டிருந்தான்.

சஞ்சயுமே “தேங்க்ஸ் மேம், தேங்க்ஸ் மச்” என்றான் மீண்டும்.

“ஆனாலும் இப்படி எதைப் பத்தியும் யோசிக்காம நீங்க ஹாஸ்பிடல் விலை பேசினது தப்பு டாக்டர்!” என வர்ஷினி சொல்ல..

சற்று தயங்கினாலும் சொல்ல ஆரம்பித்தான். “அது விதார்த் பத்து வயசா இருக்கும் போது எங்க அப்பா ஒரு ஆக்சிடண்ட்ல தவறிட்டார்.. அவன் எங்கப்பாக்கு ரொம்ப க்ளோஸ், அவரை ரொம்பவும் மிஸ் பண்ணினான்! அது தெரியாம இருக்க அம்மாவும் நானும் அவனுக்கு ரொம்ப செல்லம் கொடுப்போம்! பார்த்து, பார்த்து கவனிப்போம்.. அப்புறம் என்னோட அவன் ரொம்ப க்ளோஸ் ஆகிட்டான்!”

“அதனால் சில சமயம் அவனுக்கு யார் கிட்ட எப்படி பேசணும் தெரியாது. நான்னு வரும் போது எதையுமே கேர் பண்ண மாட்டான்.. அவனுக்காக நான் சாரி கேட்டுக்கறேன்.. அதனால தான் என்னால திரும்ப இங்க கண்டின்யு பண்ண

முடியலை.. என்கிட்டே வேற ஆப்ஷன் கிடையாது!" என்றான்.

ஈஸ்வர் எதிலும் தலையிடவில்லை பார்வையாளன் மட்டுமே..

"இட்ஸ் ஒகே டாக்டர், இப்ப தான் சரியாகிடுச்சே.. எங்க பெஸ்ட் விஷஸ் உங்களுக்கு.. எதுன்னாலும் எங்களை எப்போன்னாலும் அப்ரோச் பண்ணுங்க. வி ஆர் ரெடி ஹெல்ப் யு" என்றாள்..

"தேங்க் யு மேம்" என்றபடி அவன் எழ. "நானும் சாரி சொல்லலை, நீங்களும் தேங்க்ஸ் சொல்லாதீங்க" என்று பேச்சை சிரிப்புடன் முடித்தாள்.

இத்தனை நாளாக மனதில் இருந்த ஒரு சந்தேகம், "நான் ஒன்னு கேட்கட்டுமா?" என்றான் தயங்கி தயங்கி.

"கேளுங்க டாக்டர்" என வர்ஷினி சொல்ல,

அது மிகவும் அதிகப்ரசிங்கித்தனமாக அவனுக்கே தோன்ற "இல்லை, வேண்டாம்" என்று கிளம்ப..

"அச்சோ, என் மண்டை வெடிச்சிடும், கேளுங்க!"

"இல்லை, வேண்டாம்" என்று வெகுவாகத் தயங்கினான்.

"அட, கேளுங்க டாக்டர்!" என்று ஈஸ்வர் ஊக்கினான், அவன் ஒரளவிற்கு விஷயத்தை கணித்திருந்தான்.

"இல்லை, இவ்வளவு அன்பா தான் இருக்கீங்க, அப்புறம் அந்த கடி எப்படி? வேற யாராவது பண்ணி, மேம் நான்னு சொல்லிக்கிட்டாங்களா?" என்று விட..

"ஹ, ஹ" என்று வாய் விட்டு ஈஸ்வர் சிரிக்க,அதற்கு நேர் மாறாக வர்ஷினியின் முகம் கோபத்தைக் காட்டியது.

“கோபம் வந்துடுச்சு போல, சாரி!” என்று சஞ்சய் வாய் விட்டு சொல்ல,

“அது நீங்க சொன்னதுக்கு இல்லை சஞ்சய்... நான் இருக்கும் போது என் வீட்டுக்காரரை யார் கடிக்க முடியும்? எப்படி நீங்க அப்படிக் கேட்கலாம்னு கோபம்!” என ஈஸ்வர் சொல்லவும்,

“அப்படித்தான்” என்ற பாவனையை வர்ஷினியின் முகம் காட்டியது.

எப்போதும் போல சஞ்சய் விழிக்க..

“அது ஒண்ணுமில்லை சஞ்சய், ரொம்ப லவ் பண்றவங்க கட்டிப் பிடிப்பாங்க, இவ ரொம்ப ரொம்ப லவ் பண்ணறதால கடிச்சி வெச்சிட்டா” என பாவனையாகச் சொன்னான்.

ஈஸ்வர் சொன்ன விதத்தில் சஞ்சய்க்கு சிரிப்பு வந்து விட.. ஒரு அடக்கப்பட்ட சிரிப்பை கொடுத்தவன்..

“தேங்க்ஸ் மேம், தேங்க்யு சர்” என்று சென்று விட..

“அடேய் என் மானத்தை ஏன் இப்படி வாங்கற” என வர்ஷினி கோபமாகக் கேட்க..

“நிஜம் தானே அது! நான் கண்டுபிடிச்சிட்டேன்” என ஈஸ்வர் சொல்ல,

வர்ஷி இருந்த இடத்தை விட்டு எழுந்து வந்து அவன் மேல் பாய.. “சேர் சாஞ்சிடும்” என்று ஈஸ்வர் சொல்லச் சொல்ல.. சேர் சாய்ந்து மெதுவாக கீழே சரிய, அதன் மேல் ஈஸ்வர் சரிய, அவனோடு சேர்ந்து வர்ஷினியும் சரிந்தாள்.

அவளுக்கு அடிபடாமல் அணைத்துப் பிடித்துக் கொண்டான்..

கண்டிப்பாக எங்காவது அவனுக்கு அடி பட்டிருக்கும் எனப் புரிந்து வர்ஷினி பரிதாபமாகப்

பார்த்து இருக்க..

அவளின் முகம் பார்த்து வருந்துகிறாள் எனப் புரிந்து "இல்லை, இல்லை, எனக்கு ஒண்ணுமில்லை" என்றான்.

தட்டு தடுமாறி எழுந்து, அவன் எழ கை கொடுக்க.. எழுந்து நின்றவன்.. இப்படி அப்படியும் உடலை திருப்பி சரி பார்த்து அவளுக்கும் காட்டி.. ஒன்றுமில்லை என்றாலும் முகம் சரியாகவில்லை..

"அட, ஒண்ணுமில்லை, நீ கடிச்சதுக்கு இதெல்லாம் எதுவுமே இல்லை!" என மீண்டும் கிண்டல் மொழி பேச..

"உங்களை" என வர்ஷினி அடிக்க வர..

அவளை அணைத்துப் பிடித்தவன்.. "ம்ம், எவ்வளவு வேணா அடிச்சிக்கோ! இல்லை கடிச்சிக்கோ!" என நின்றான்.

வர்ஷினியின் நீல நிறக் கண்கள் அவனை காதலாகப் பார்த்து இருந்தது.

**காதல் என்னுள்ளே வந்த நேரம் அறியாமல்..**
**நாட்கள் இப்படி ஓடுதே வாழ்வில்...**
**நானும் உன்னுடன் நடக்கிற நேரம் இன்னாளில்..**
**சாலை அத்தனை அழகாய் மாறும்..**

## அத்தியாயம் தொண்ணூறு :

**கல்லுக்குள்ளே சிற்பம் தூங்கிக் கிடக்கும்**
**சின்ன உளி தட்டி தட்டி எழுப்பும்**
**அது கல்லின் தோல்வியா இல்லை**
**உளியின் வெற்றியா**
**யார் சொல்வதோ யார் சொல்வதோ**
**பதில் யார் சொல்வதோ**

ஈஸ்வர் வீட்டின் வேலையை மீண்டும் ஆரம்பித்து இருந்தான்.. வர்ஷினி கேட்டது போல எல்லாம் உள்ளடக்கி அவளின் ஸ்டுடியோவும் வைக்க தோதாக. பிரமாண்டமாய் அங்கே வீட்டின் முன் பகுதியில் அமைக்க, அதற்குத் தக்கபடி மாற்றங்களை செய்து கொண்டிருந்தான்.

தி கான்கரர்ஸ்.. இந்த அவர்களின் ஐ பீ எல் டீம் பேரிலேயே அவர்களின் டிஸ்டரிபியுஷன் கம்பனி ஆரம்பித்தது.. முரளிக்கும் பத்துவிற்கும் இன்னும் நம்ப முடியவில்லை.. "எங்களோட ஏன் பார்ட்னர்ஷிப்" என ஈஸ்வரிடம் கேட்க..

"என்கிட்டே கேட்டா அவ கிட்ட கேளுங்க?" என..

"அதெல்லாம் முடியாது, முடியாது, அவளுக்கு கோபம் வந்துட்டா" என தயங்கித் தயங்கி இருவருமே பேச..

"அட, உங்கள் இருவரின் வீரத்தை நாம் மெச்சினோம்!" என்று ஈஸ்வர் வசனம் பேசினான்.

"டேய்" என்று முரளி கத்த, அதை கூட செய்ய முடியாது பத்து பார்த்து நின்றான்.

"போங்கடா, போங்கடா, சொல்றதை செய்ங்க! அவ்வளவு தான்.. நீங்க மூணு பேரும் தான் பார்ட்னர்ஸ்" என முடித்து விட..

இதோ கோலாகல ஆரம்பம்.. ஆனால் மிக சிறிய அளவில்... "எப்படி அந்த ஃபாரின் கம்பனி நம்மளோட டை அப்க்கு ஒத்துகிட்டாங்க" என்ற கேள்வியும் எழுப்ப,

"நான் அந்தப் படத்துல வொர்க் பண்ணியிருக்கேன் அண்ணா!" என விளக்கம் கொடுத்தாள்.

அதற்கு பிறகே குடும்பத்தில் எல்லோருக்கும் அந்த விஷயம் தெரிய.. "நீ ஏன் சொல்லவேயில்லை" என

எல்லோரும் கேட்க.. “நான் தான் சஸ்பென்ஸ் ஆ இருக்கட்டும்னு சொல்ல வேண்டாம்னு சொல்லிட்டேன்” என்று ஈஸ்வர் சமாளித்தான்.

வேறு என்ன கேட்பார்கள்?

“ஆமாம், எத்தனை நாளைக்கு நீங்க என்னை நல்ல பொண்ணா ப்ரொஜக்ட் பண்ணுவீங்க?” என்று அவனிடம் ரகசியம் பேசினாள்.

“நீ எப்போ நல்ல பொண்ணு இல்லாம போன?” என்று அவளை முறைத்தவன்.. “நீ எல்லோர் கூடவும் தள்ளி நிக்கறது அப்படி ஒன்னும் யாருக்கும் தெரிய வேண்டாம், வாயை திறந்தே” என மிரட்ட..

அதன் பிறகு அவள் ஏன் வாயை திறக்கப் போகிறாள்..

அவளின் நண்பர்களும் வந்திருக்க.. அவர்களுக்கும் ஆச்சர்யம்.. “சொல்லவேயில்லை” என்று நிஷா குறைபட..

“நம்ம சக்சஸ் நம்மளே டமாரம் அடிப்போமா!” என்றாள்.

ஆனாலும் அவர்களுக்குத் தெரியும்.. இது மிகப் பெரிய ஸ்டார் வேல்யு கொண்ட ஒரு விஷயம் என..

“கங்க்ராட்ஸ்” என்றவர்கள்.. “எங்களுக்கு ஏதாவது ஆப்பர்சுனிட்டி வந்தா, எங்களையும் சேர்த்துக்கோ” என சொல்லவும் மறக்கவில்லை..

இப்படியாக அவளின் மற்றொரு பயணமும் துவங்கியது..

“இவ பாருங்க சொல்லவேயில்லை, எத்தனை தடவை நம்ம பார்த்துட்டோம்.. இந்த விஸ்வா கூட வாயைத் திறக்கலை.. அவளோட சக்சஸ் நாம செலப்ரேட் பண்ணாம யாரு பண்ணுவா?” என்று ரஞ்சனி குறைபட..

"அவர் கிட்டயே சொன்னாளோ என்னவோ" என பத்து மனதினில் நினைத்துக் கொண்டவன் வெளியில் சொல்லவில்லை..

உண்மையில் வந்த நாளே பேச்சு வாக்கினில் சொல்லிவிட்டாள் ஈஸ்வரிடம்.. பார்க்கும் வரை இருந்த தயக்கங்கள் எல்லாம் பார்த்த பிறகு எதோ ஒரு வகையில் இல்லை.. கணவனிடம் சொன்னாளா எனத் தெரியாது ஆனால் வர்ஷினியின் விஷயங்கள் ஈஸ்வருக்கு தெரியாதது என எதுவும் கிடையாது..

இந்த ஆரம்ப விழா எல்லாம் முடிந்து மாலை ஈஸ்வரோடு அவனின் வீட்டிற்கு சென்றாள்..

வந்ததில் இருந்து செல்லவேயில்லை.. இப்போது தான் சென்றனர்.. அடுத்த நாள் ரஞ்சனியின் மகனுக்கு மொட்டை அடித்து காது குத்தப் போகிறார்கள்.. அதற்கு அதிகாலையிலேயே கிளம்ப வேண்டும்.. அதனால் அங்கேயே இருந்து கொள்ளலாம் என வந்து விட்டனர்..

பாட்டி "உனக்கு வீட்டுக்கு வர இவ்வளவு நாளா?" என கோபிக்க..

"அவ வர்றேன்னு தான் சொன்னா பாட்டி. நான் தான் கூட்டிட்டு வரலை" என்று ஈஸ்வர் சொல்ல..

"அடேய் நிறுத்துடா, என்கிட்டயே வா!" என டைலாக் பேசினார் சௌந்தரி பாட்டி.

"அவர் அப்படித் தான் பாட்டி! சும்மா சொல்றார்! நான் தான் வரலை!" என்று வர்ஷினி சொல்ல...

"ஏன் வரலை?" என்று அவர் நேரடியாகக் கேட்க..

"நீங்கல்லாம் ஏன் போனேன்னு கேள்வி கேட்டா? அதுக்கு பயந்து தான் வரலை"

"இப்போ மட்டும் கேட்க மாட்டோமா"

“அப்போ எனக்கு கொஞ்சம் தைரியம் கம்மி, இப்போ கேளுங்க பார்ப்போம்”

“சொல்லு ஏன் போன?”

“அதெல்லாம் சொல்ல முடியாதுன்னு சொல்ற அளவுக்கு தைரியம் வந்துடுச்சு”

“ஓஹ், ரொம்ப தைரியம் வந்துடுச்சோ.. உன் வீட்டுக்காரன் குடுத்தானா?” என பாட்டி கிண்டல் செய்ய,

“தெரியலையே” என சொல்லி வர்ஷினி சிரித்தாள்.

“என்னவோ போடிம்மா.. கணவன் மனைவின்னா சண்டை வராம இருக்காது, அதுக்காக பிரிஞ்சு போறது எதுக்குமே தீர்வு கிடையாது” என்றவர்..

“இனிமேலாவது ஒழுங்கா அவளோட குடும்ப நடத்துடா” என்று ஈஸ்வரை அதட்ட..

“நானா?” என்று அவன் பார்க்க..

“பின்ன, நீதான்! நீ அவளோட சரியா நடந்திருந்தா அவ ஏன் போறா.. தப்பு உன் மேல தான் இருக்கும்.. இங்க இருந்த கொஞ்ச நாள் நான் பார்த்திருக்கேண்டா, அவ உன்னை மட்டுமே பார்த்திருப்பா.. நீ என்ன சொன்னாலும் செய்வா.. நீ உன் தங்கைக்காகன்னு சம்பாரிக்க கிளம்பி, இவளை விட்டிருப்ப” என அன்றைய சூழ்நிலையை சரியாகக் கணிக்க.

“அப்படி எல்லாம் இல்லை பாட்டி, எனக்கு பக்குவம் கொஞ்சம் கம்மி.. ஹாஸ்டல்லயே வளர்ந்துட்டேனா உறவுகளோட அருமை தெரியலை” என வர்ஷினி சொல்ல,

“அப்படி சொல்லாதடி குழந்தே.. உனக்கு அதை சரியா இவங்க புரிய வெச்சிருக்க மாட்டாங்க” என சௌந்தரி பாட்டி சொல்லவும்,

என்ன முயன்றும் வர்ஷினியின் கண்களில் நீர் துளிர்த்தது...

ஈஸ்வர் மௌனமாக தான் அமர்ந்திருந்தான்.. கடந்த காலங்கள் திரும்பி வாராதே!

“ஜம்முனு சீக்கிரம் குழந்தை பெத்துக்கோ.. மனசுல இருக்கிற சஞ்சலம் எல்லாம் ஓடிப் போய்டும்.. தாய்மை எல்லாம் மறக்க வைக்கும்” என்றார் அந்த முதிய பெண்மணி..

“ம்ம்” என்பது போலத் தலையாட்டினாள்.. பின்பு உணவு உண்ணும் போது மலர் சமையலறை போகவும், கூட சென்றாள்..

“நீ போ வர்ஷி, நான் செய்யறேன்!” என,

“பரவாயில்லை அத்தை, நான் உங்களோட இருக்கேன்” எனச் சொல்லி.. ஈஸ்வர் உணவருந்தும் போது அவளையும் அழைக்க,“நான் அத்தையோட சாப்பிட்டுக்கறேன்” என்று சொல்லிவிட..

அதை போல இருவரும் தான் அமர்ந்து உணவருந்தினர்.. மலர் வாய் ஓயாமல் பேச.. அவருக்கு பதில் கொடுத்தபடி இவளும் உண்ண.. தூரமாக அமர்ந்திருந்தாலும் இவர்களை தான் பார்த்துக் கொண்டிருந்தான் ஈஸ்வர்..

மனதிற்கு அவ்வளவு நிறைவாய் இருந்தது.. நன்றாக வந்திருக்க வேண்டிய உறவுகள் எல்லாம் தன்னால் தான் கெட்டது என்ற எண்ணம் தோன்றியது.

ஈஸ்வரும் வர்ஷினியும் இருந்ததினால் யாரும் உறங்கப் போகவில்லை.. சரணும் ப்ரணவியும் கூட அங்கே தான் சுற்றிக் கொண்டிருந்தனர்..

“தூங்கவே இவ்வளவு நேரம் பண்ணினா, சீக்கிரம் எப்போ எழறது? போங்க! போங்க!” என்று பாட்டி

அதட்ட..
ஈஸ்வருடன் அந்த அறைக்குள் பல வருடங்களுக்கு பிறகு நுழைகிறாள்..
ஏதோ நினைவுகள்.. மனதிலே..
“நிறைய மிஸ் பண்ணிட்டோம் லைஃப்ல” என்றான் ஈஸ்வர் பெருமூச்சோடு.. கூடவே “என்னால.. சாரி!” என்றும் சொல்ல..
“நீங்க மட்டுமில்லை, நானும் தான்.. ரெண்டு பேருக்குமே அப்போ ஒருத்தரை ஒருத்தர் ஹேண்டில் பண்ண தெரியலை”
“இல்லை, உன் மேல தப்பில்லை, நான் தான்! உன்னோட வயசுக்கு உனக்கு அப்போ இருந்த பக்குவமே அதிகம் வர்ஷ்.. நான் தான், எனக்கு தான் எல்லாம் தெரியும்ன்ற கர்வம், என்னோட மமதை, என்னோட கோபம், என்னோட இழப்பு, என்னோட துரோகம், எல்லாம் மீறின எனக்கு உன் மேல இருந்த ஆசை!”
“உன்னை ஒரு வழியாக்கிட்டேன், சாரி!” என்றான் உள்ளார்ந்து.
“இன்னும் நாம எத்தனை நாள் இதையே பேசிட்டு இருப்போம்?” என்றாள் கண்களில் கலக்கத்தோடு.
“இந்த நினைவுகளை மறந்து போற அளவுக்கு நமக்குள்ள சில நிகழ்வுகள் நடக்கற வரை” என்று சொல்ல..
புரிந்தவளாக.. தூங்குவதற்கு ஆயத்தங்கள் செய்ய..
“ரொம்ப கஷ்டப் படுத்தறேனா வர்ஷ்?” என கேட்டுக் கொண்டே பின் புறம் வந்து அணைத்துக் கொண்டான்.
பதில் எதுவும் சொல்லாத போதும், அவனின் கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்,

அப்படி எதுவும் இல்லை என்பது போல!

அந்த இதமான மனநிலை, அடுத்த நாள் கோவிலுக்கு செல்லும் போதும், அங்கே குழந்தைக்கு மொட்டை அடித்து குளிக்க வைத்து காது குத்தும் வரையிலும் இருக்க.. எல்லோரிடமும் கலகலப்பாக பேசாவிட்டாலும் பேசிக் கொண்டு தான் இருந்தாள்..

இரு குடும்பமும் எப்போதும் பிரித்துப் பார்க்கப் படாததால், ஜகனின் மடியில் அமர்த்தி தான் ரிஷிக்கு காது குத்தினர்.. மலரும், நமஷிவாயமும் தான் சீரும் கொடுக்க.. சீர் வரிசையை இறக்கி விட்டனர் ஈஸ்வரின் வீட்டினர்..

அங்கே ஈஸ்வருக்கோ வர்ஷினிக்கோ தனியாக வேலை இல்லை.. முரளி மட்டுமே வந்திருந்தான் நிஷாந்துடன்.. நேற்றும் அப்படித்தான். ஷாலினி களைப்பாக உணருகிறேன் என்று சொன்னதால்.. கால் வீக்கமுமே அவளுக்கு அதிகமாக இருக்க.. அதோட இன்னும் சில உடல் உபாதைகள். அவளை அழைத்து வரவில்லை..

வர்ஷினி முகத்திலும் ஒரு அமைதி.. அவள் எங்கே இருந்தாளோ, அங்கே தான் கமலம்மாவும் இருந்தார்.. அவளுமே விலக வெல்லாம் இல்லை. அவருடன் அவ்வப் போது பேசியபடி இருக்க..,

சமயம் கிடைத்த போது “சந்தோஷமா இருக்கியா பாப்பா?” என..

“சந்தோஷமா இருக்கேன்மா” என பதில் சொல்ல.. அவர் அப்போதும் விடாமல் பார்க்க,

“அச்சோ, நிஜமா” என்று அவரை தோளோடு அணைத்துக் கொள்ள... எல்லோரும் அவர்களைப் பார்த்தனர்... “நான் வந்ததுல இருந்து எல்லோரும்

என்னை மியுசியம் டிக்கட் மாதிரி பார்க்கறாங்க, எப்போ நான் என்ன பிரச்சனை பண்ணுவனோன்னு" என,

"சே, சே, என்ன பாப்பா நீ"

"எனக்கு அப்போ அப்போ தோணுதும்மா" என சிரிக்க, எல்லோரும் அவர்களை தான் பார்த்து இருந்தனர்.

"முரளி, எல்லோரும் எங்களை ஏன் பார்க்கறீங்க" என அதட்ட... அப்போதும் அவர்களை தான் பார்த்தனர், பின்னே கமலம்மா அதட்டி பேசுவதா? என்பது போல..

வர்ஷினி சிரித்துக் கொண்டே சில நொடி ஈஸ்வரை பார்க்க.. "கிளம்பலாமா வர்ஷி?" என்றான்.. அவனுக்குள் சில கோபம்.

"இல்லை, இன்னும் கொஞ்சம் நேரம் இருக்கலாம்"

அருகில் வந்தவன் "உனக்கு அன்னீசியா இருந்தா நாம போகலாம்" என்றான்.

"வேண்டாம்" என மறுத்து இருந்தவள்.. "எனக்குள்ள காம்ப்ளெக்ஸ் டெவலப் ஆகிடுசோ, எல்லோரும் என்னையே பார்க்கற ஒரு ஃபீல்" என அவனிடம் ரகசியம் பேசினாள்.

"இல்லை" என்று அவன் தலையசைத்த விதம், "நீ கவனிக்கப் படுகிறாய்" என்று சொல்ல,

"ஏன்?" என,

"எப்பவுமே நீ அப்படித் தான் வர்ஷ்" என்றான்.

"எல்லோரும் எங்க ரிலேடிவ்ஸ் தான், ஆனாலும் நான் ஏன் தள்ளி நிக்கறேன்?" என்றும் கேட்க...

"அது ஒரு பீரியட்ல அப்படித் தான். பொண்ணுங்களுக்கு அப்பா வீடு

அன்னியமாகிடும்.. எப்பவும் கூட இருக்குறவங்களுக்கே அப்படி.. நீ இதுல அதிக நாள் இருந்தது இல்லை" என்றும் சொல்ல,

"என்ன விஸ்வா இங்க வந்து ரகசியம்?" என்றபடி ரஞ்சனி வர..

"அது ஒண்ணுமில்லை, அத்தை சீர்ன்னு நான் எதுவும் செய்ய வேண்டாமான்னு கேட்டுட்டு இருக்கா? உன்னோட அப்பா வீட்டு முறை தானே செஞ்சோம், இவ அத்தை கூட இல்லையா" என நீட்டி முழக்கினான்.

ஈஸ்வரின் குரலில் ஏதோ இருக்க, ரஞ்சனி அவனின் முகத்தை பார்த்தாள்.. "அத்தைக்கு இவங்க என்ன செஞ்சாங்க? அதெல்லாம் ஒன்னும் தேவையில்லைன்னு சொல்லிட்டேன்" என..

என்ன குற்றச்சாட்டு இது என ரஞ்சனி விழி விரித்துப் பார்த்தாள். "நீயென்ன இன்னும் சின்னப் பொண்ணா? உனக்குத் தெரியாதா? இந்த வீட்ல இருக்குறவங்களுக்கு என்ன பழக்கம் தெரியும் தெரியாதுன்னு எனக்குத் தெரியாது"

"இவ இங்க வந்து இத்தனை நாள் ஆச்சு? வீட்டுக்கு வா வான்னு கூப்பிடறீங்க.. இத்தனை நாள்ல அவளுக்கு சின்னதா ஏதாவது கிஃப்ட்? எதுவுமே கிடையாது! வெளிநாட்ல இருந்தாலும் பொண்ணுக்கு செய்யற முறை மாறிடுமா?"

"இங்க இருக்குற அப்பா அம்மா வீட்ல ஒரு விஷேசம்ன்னா அவளுக்கு செய்யாம விட்டுடுவாங்களா? ஒன்னு பார்சல் அனுப்புவாங்க, இல்லை இங்க வரும் போது உடுத்திக்கட்டும்னு ஏதாவது எடுக்க மாட்டாங்க? செய்ய மாட்டங்க? என்னவோ அவளோட சண்டைன்னு நீ பேசவே இல்லை? இதுதான் சாக்குன்னு அவளோட

அண்ணனுங்களும் பேசலை? அதனால் எதுவும் செய்யலை” என அவளிடம் பொரிந்தான்..

வர்ஷினியின் தாத்தா பார்த்து இருக்க அவரையும் விட்டேனா என்று “என்னவோ தாத்தா? எல்லாம் எனக்கு தெரியும்னு பேசறீங்க, எப்படி உங்களுக்கு இதெல்லாம் தெரியாமப் போகுதுன்னு தெரியலை, வீட்டையே உங்களால பார்க்க முடியலை, இதுல நாட்டை எங்க பார்ப்பீங்க?” என்று நேரடியாக அவருக்கு மட்டும் கேட்குமாறு சொன்னான்.

மலர் எதோ பேச வர.. “மா, நான் உங்க பொண்ணு கிட்ட பேசலை.. இவளோட வீட்டு ஆளுங்க கிட்ட தான் பேசறேன்.. அதை ஞாபகம் வைங்க” என்று அவரையும் வார்த்தையால் கடித்தான்.

அவர்களிடமாவது பேசி விட்டான்.. முரளியையும் பத்துவையும் “நீங்க எல்லாம் சுத்த வேஸ்ட்டுடா” என்ற பார்வை பார்த்தான்.

வர்ஷினி எதுவும் பேசவில்லை, அமைதியாக இருக்க.. “வா போகலாம்” என்று அவன் நடக்க, பின்னோடு சென்றாள்..

ஈஸ்வருக்கு சற்று கோபம் வந்ததில் இருந்தே.. என்னவோ ஈஸ்வரின் மனைவியாகத் தான் அவள் பார்க்கப் படுகிறாள், அந்த வீட்டுப் பெண்ணாக குறைவு என்பது போல தான்..

காரில் போகும் போது, “என்னை கம்ப்ளைன்ட் பண்ணக் கூடாது சொல்லி, நீங்க ஏன் இப்போ பண்றீங்க?” என்றவள்.. “இப்போ எல்லோரும் என்ன சொல்வாங்க தெரியுமா?” என்று நிறுத்த..

“உன்னை மாதிரி நானும் மாறிட்டேன் சொல்வாங்க” என சிரித்தவன்... “யாரும் நமக்கு செய்ய வேண்டாம், எல்லோருக்கும் நம்ம

செய்வேம் வர்ஷ். ஆனாலும் முறைன்னு ஒன்னு இருக்கு இல்லையா.. இந்த ரஞ்சிக்கு ரொம்ப அலட்சியம்" என தங்கையை திட்ட ஆரம்பித்தான்.

"ஐயோ விடுங்க, நீங்க இன்னைக்குப் பேசியிருக்கக் கூடாது. வேற எப்பவாவது சொல்லியிருக்கலாம்" என..

"ப்ச்" என சலித்தவன்.. "எதுக்குமே உன்னை முன்ன நிறுத்தவேயில்லை.. உங்கப்பா இருந்தா அவர் இப்படி நடக்க விடுவாரான்றது வேற.. இப்படி இவங்களே உன்னை நடத்த மாட்டாங்க.. என்னவோ போ"

"வேணும்னு செய்ய மாட்டாங்க, அவங்களுக்குத் தெரியலை.. எல்லோரும் உங்களை மாதிரியே இருப்பாங்களா?" என கிண்டல் செய்ய,

அதை காதில் வாங்காதவன் "உனக்கு ஏதாவது வேலையிருக்கா?" என

"இப்போதைக்கு எதுவும் இல்லை" என்று வர்ஷினி சொல்லிவிட,

"நாம எங்கேயாவது போகலாமா வர்ஷ்?"

"எங்கே?" என்றவளிடம்.. "யாருமில்லாத இடத்துக்கு!" என்று கண்ணடித்தவன்.. காரை விரட்ட.. அது சென்று நின்ற இடம்.. முன்பு ஒரு முறை குழந்தைகளோடு அழைத்து வந்த இடம்..

இவன் காரை பார்த்ததுமே ஓடி வந்தார்கள் சில இளைஞர்கள்.. "எப்படியிருக்கீங்க தல?" என்று ஆர்வமாகப் பேசினார்கள்.

"நல்லாயிருக்கேன், நீங்க எப்படி இருக்கீங்க?" என ஆரம்பித்து அவர்களிடம் சில நிமிடங்கள் பேச.. ஈஸ்வரையே ரசித்து பார்த்திருந்தாள்.

ஈஸ்வர் அதனை கவனிக்கவேயில்லை.. அவன் பாட்டிற்கு இளைஞர்களுடன் அளவலாவிக் கொண்டிருந்தான்.

இருவர் அவனிற்கு படகை ரெடி செய்ய ஓடினர்.

ஒரு இளைஞன் தான் “தல, அண்ணி உங்களை ரொம்ப நேரமா பார்த்துட்டு இருக்காங்க? ஏதாவது வேணுமோ என்னவோ?” என எடுத்துக் கொடுக்க..

திரும்பி பார்த்து “ஏதாவது வேண்டுமா?” என்று சைகையில் கேட்க,

“ஒன்றுமில்லை, நீங்க பாருங்க” என்று அவளும் சைகையிலேயே சொல்ல..

பார்க்கவே கவிதையாய் இருந்தது.. ஆனாலும் வர்ஷினி பார்வையைத் திருப்பவேயில்லை..

படகு ரெடி ஆனதும் அவர்கள் சொல்ல.. கிளம்பியவன்.. நடந்து கொண்டே “என்ன நீ என்னை அப்படிப் பார்க்கற?” என,

“ஏன் பார்த்தா என்ன? பார்க்கக் கூடாதா?” என பதில் கேள்வி கேட்டாள்.

“பாரு, பாரு, எவ்வளவு வேணா பாரு!” என சொல்லிக் கொண்டே போட் அருகில் வந்து ஏறி அவளுக்கும் கை கொடுக்க.. அவளும் ஏற, அவர்களுடன் இரு இளைஞர்களும் ஏறிக் கொண்டனர்... அவர்கள் படகை செலுத்த..

“இந்த போட் வாங்க அண்ணா தான் அண்ணி காசு குடுத்தார்.. இப்போ என்கிட்டே இந்த மாதிரி இன்னும் ரெண்டு போட் இருக்கு” என ஆர்வமாக சொல்ல,

“இதை விட இன்னும் பெருசா வாங்க என் வாழ்த்துக்கள்” என வர்ஷினி உடனே சொல்ல,

“தேங்க்ஸ் அண்ணி! தேங்க்ஸ்! தேங்க்ஸ்!” என்றான் அவன் முகம் மலர்ந்து..

பின்பு இவர்கள் மேலே ஏறிக் கொள்ள.. அவர்கள் கீழே படகை செலுத்த ஆரம்பித்தனர்..

மாலை நான்கு மணி வெயில் தாழ்ந்து இருந்தது.. சிறிது தூரம் வந்த வந்த பிறகு கண்ணுக்கு எட்டிய வரை கடலின் நீல நிறம் மட்டுமே தெரிந்தது.

வானமும் அன்று நீல நிறத்திலேயே இருக்க.. கடலும் வானமும் எங்கே சேர்கிறது என்றே தெரியாத ஒரு காட்சி..

“லவ்லி இல்லை” என்று ஈஸ்வர் சொல்ல ....

ஈஸ்வர் அதனை பார்த்திருக்க, வர்ஷினி இன்னும் அவனை தான் பார்த்திருந்தாள்.. பதில் இல்லாது போக பார்வையை திருப்பினான். விடாது அவனையே பார்த்திருந்த வர்ஷினி கண்களில் பட..

“அச்சோ, என்ன நீ என்னை இவ்வளவு சைட் அடிக்கற?” என,

“நீங்க தான் அடிக்கலை, நானாவது அடிக்கலாம்னு?” என சொல்ல..

“நான் அடிக்கறது இல்லையா? இது உனக்கே ஓவரா தெரியலை?” என்று நெருங்கி நின்று கொண்டான்..

அவனின் கண்களை சட்டென்று தன் கைகளால் மூடி விட்டவள்.. “என்னோட புடவை கலர் சொல்லுங்க?” என,

இதனை ஈஸ்வர் எதிர்பார்க்கவில்லை.. சற்று யோசித்து நின்று.. “ஞாபகம் வரலை” என்றான் பரிதாபமாக.

“இதுதான் நீங்க சைட் அடிச்ச லட்சணம்” என சுனங்கியவள்.. கைகளை எடுத்த நொடி.. அவளின்

புடவை தலைப்பை அவனின் முகத்தின் மீது போட..

ஈஸ்வரின் கண்கள் தானாக மூடி அதை வாசம் பிடித்தது.. அந்த வாசத்தில் அவளின் வாசத்தை தேடியது.. பின்பு விழி விரித்து அதன் நிறத்தை பார்க்க முற்பட.. அது தெரியவேயில்லை.. நீலமாக இருக்கக் கூடும் என அனுமானித்து.. அதனையே சொல்ல..

“உன்னோட கண்ணோட கலர்” என சொல்லிக் கொண்டே புடவையை விலக்கி தன் கழுத்தில் சுற்றிக் கொண்டு அவளின் கண்களை பார்த்தான்.

“ஹப்பா, ஒரு வழியா என் புடவையைப் பார்த்துட்டீங்க, ஆனா அப்போக் கூட என்னைப் பார்க்கலை” என்று கிண்டல் மொழி பேச,

“காலையிலிருந்து நாம எங்கே ஃப்ரீ” என அவளை இடையோடு அணைத்துப் பிடித்தான்.

“நாம இல்லை, நீங்க.. என்ன ஞாபகத்துல இருந்தீங்க? ஒரே யோசனை” என்று திருத்தியவள், “பார்த்து பார்த்து மேட்ச் பண்ணினேன் எல்லாம். நீங்க பார்க்கவேயில்லை” என்று குறைபட..

இடையை அணைத்து இருந்தவன்.. இறுக்கத்தை அதிகரித்து.. “எனக்கு உன் கண்ணை பார்த்துட்டா, வேற எதையுமே பார்க்கத் தோணாது!” என்று உண்மையை உரைக்க..

ஈஸ்வரின் முகத்தை பார்த்தவாரே அவனின் கண்களோடு தன் நீல நிறக் கண்களை கலக்க விட்டவள், “என்னை பார்த்த நாள்ல இருந்து, என்னை பத்தி என்ன நினைச்சீங்க, அது நல்லதா இருந்தாலும் கெட்டதா இருந்தாலும் எனக்கு தெரியணும்! நீங்க கண்டிப்பா சொல்லணும்!

அதுவும் என்கிட்டே அப்படி ஏன் பிஹேவ் பண்ணுனீங்க சொல்லணும்! ஐஸ்வர்யாவை விட்டு ஏன் வந்தீங்க, எல்லாம் மறைக்காம சொல்லணும்!" என்றாள். கண்களும் பிடிவாதத்தை காட்டியது, குரலிலும் கட்டாயமாக நீ சொல்லியே ஆக வேண்டும் என்ற கட்டளை இருந்தது.

"சொல்றதை பத்தி ஒண்ணுமில்லை, நீ ஹர்ட் ஆனா?"

"சொல்லுங்க, ஹர்ட் ஆனேனா இல்லையான்னு சொல்றேன்" என்றபடி நின்றவாக்கிலேயே அவனின் நெஞ்சினில் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

சொல்ல ஆரம்பித்தான், அவனின் காதல் கதையை எதையும் மறைக்காமல்.. "அவளின் கண்களோடு இருந்த மூச்சு முட்டுதல்.. உடலோடு இருந்த மோகம்.. அது கொடுத்த தாகம்.. வர்ஷினியோடு அவனின் செய்கை.. அது கொடுத்த தாக்கம்.. ஐஸ்வர்யாவிற்கு செய்த துரோகம்.. பைனான்சிற்காக பணத்தின் பின் ஓடியது.. பின்பு அவளை மணமுடித்தது.. அதன் பின்னான அவனின் செயல்கள் அவளோடு.. வேண்டும் வேண்டும் என்ற உணர்வு.. தீராத மோகங்களும் தாகங்களும்.. பின் ரஞ்சனிக்காக ஓடியது.. வர்ஷினியின் மோகத்தில் இருந்து வெளியே வர துடித்தது.. அதனால் வாழ்க்கையை சிதைத்துக் கொண்டது" என அத்தனையும்.. எதனையும் விடவில்லை.

சொல்லி முடித்ததுமே.. அவன் அணைப்பில் இருந்த படியே அவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தவள் "இப்போ அது போச்சா?" என்றாள்.

"எது?" என்றான் புரியாமல்..

“உங்க மோகமும் தாகமும்” என்று வாய்விட்டே சொல்ல..

அணைப்பை இறுக்கி உடலோடு உடலை முழுதாக உராய விட்டவன்.. “இல்லை! இல்லை! இல்லவே இல்லை! நான் இந்த உலகத்துல இருக்குற வரை அது போகாது.. வயசானாலும்!” என்று வர்ஷினியின் கண்களை பார்த்துக் கொண்டே சொன்னவன்..

“ஆனா அதை அடக்கத் தெரிஞ்சிக்கிட்டேன்... ஆசைகளுக்கும் தேவைகளுக்கும் அதுக்கான நேரங்கள் இருக்குது.. இப்போ இந்த நிமிஷம் என்னால ஒன்னுமே முடியலை” என்றவன்.. சில நொடி நின்று.. வர்ஷினியின் இதழ்களில் முத்தமிட.. அவளின் உடல் ஈஸ்வரின் கைகளில் தோய்ந்தது!

வர்ஷினியாக தன் இதழ்களை பிரித்துக் கொள்ளும் வரை விடவில்லை.. மீண்டும் அவனுள் முகத்தை புதைத்தக் கொள்ள..

“அந்த நேரத்துக்காக வெயிட் பண்ணிட்டே இருக்கேன்” என்று நிறுத்தியவன்..

“இந்த மோகமும் தாபமும் உன்கிட்ட மட்டும் தான் பியுட்டி.. உன் கிட்ட மட்டும் தான்.. இது இப்போ நீ என் மனைவின்றதால சொல்லலை.. அப்படி நீ என் வாழ்க்கையில வராம இருந்திருந்தாக் கூட உன் கிட்ட மட்டும் தான் இருந்திருக்கும். அது நிறைவேறி இருந்தாலும் சரி இல்லைன்னாலும் சரி! அதுல மட்டும் உனக்கு எப்பவும் எந்த சந்தேகமும் வரவே கூடாது” என்றான் கிளர்ந்து.

முகத்தை நிமிர்த்தி பேசிக் கொண்டிருந்தவனின் இதழோரத்தில் இதழ் பதித்து விலகியவள் “வராது” என சொல்ல...

மலர்ந்த ஈஸ்வரின் முகம்.. “உன்கிட்ட சொல்லிட்டு வந்தேன் இல்லையா அப்போ.. இந்த மாதிரி தான் சிங்கப்பூர்ல இருக்கும் போது.. அங்க இருக்குற தீவுல ரெண்டு நாள் கூட தனியா கடலுக்கு நடுவுல இருப்பேன்.. இந்த நீல வானத்திலயும் இந்த நீல கடலயும் உன்னை தேடிக்கிட்டே..”

“இந்த கடல் என்னை வா வான்னு கூப்பிடும்.. குதிச்சு ஆழமா உள்ள போய்டுவேன்.. அங்க பார்க்கிறதெல்லாம் உன்னை மாதிரியே.. உன் கண் மாதிரியே தோணும்! மீனை துரத்துவேன்! அந்த மீன் காணாமப் போயிடும், எந்த மீன் அதுன்னு ரொம்ப நேரம் அங்க இருக்குற மீனையெல்லாம் விரட்டுவேன்” என்று ஈஸ்வர் சொல்லிக் கொண்டே வர..

ஒரு மாதிரி அவனின் வர்ணனைகளை பிரமித்து கேட்டுக் கொண்டே இருந்தாள்.. மனதின் எங்கோ ஒரு மூலையில் இருந்த தனிமையும், வாழ்க்கையின் மீது வர்ஷினிக்கு இருந்த குறைகளும் அவளை விட்டு ஓடியேப் போயின!

**மலர்கள் கேட்டேன்**
**வனமே தந்தனை!**
**தண்ணீர் கேட்டேன்**
**அமிர்தம் தந்தனை!**

**எதை நான் கேட்பின்**
**எதை நான் கேட்பின்?**
**உனையே தருவாய்!**

**காட்டில் தொலைந்தேன்**
**வழியாய் வந்தனை!**

**இருளில் தொலைந்தேன்**
**ஒளியாய் வந்தனை!**

**எதனில் தொலைந்தால்**
**எதனில் தொலைந்தால்?**
**நீயே வருவாய்!**

**பள்ளம் வீழ்ந்தேன்**
**சிகரம் சேர்தனை!**
**வெள்ளம் வீழ்ந்தேன்**
**கரையில் சேர்ந்தனை!**

எதனில்  வீழ்ந்தால்

எதனில்  வீழ்ந்தால்?

உன்னிடம்  சேர்ப்பாய்!

**அத்தியாயம் தொண்ணூற்றி ஒன்னு :**

**பாட வந்ததோ கானம்... பாவை கண்ணிலோ நாணம்...**

வர்ஷினியின் மனம் ஆழ் கடலின் அமைதியோடு இருந்தது. ஈஸ்வரின் பேச்சுக்களின் சாராம்சத்தை அணுஅணுவாக மனதினில் ஒட்டிக் கொண்டிருந்தாள். வாழ்க்கையே வண்ண மயமாக ஆகிவிட்டது.

காரில் வரும் போதும், உணவு வெளியில் முடித்த போதும், திரும்ப வரும் போதும், எதுவும் பேசவில்லை. ஈஸ்வரையும் பேச விடவில்லை.. பேசினால், “ப்ளீஸ், பேசாதீங்க, லெட் மீ என்ஜாய் தி மொமென்ட்” என்று விட.. அதை சொல்லும் போது அவளின் முகத்தில் தெரிந்த ஒரு அமைதி, ஒரு கெஞ்சல்.. கண்களில் தெரிந்த காதல்..

ம்கூம்! பின்பு ஏன் ஈஸ்வர் பேசப் போகிறான்.. வர்ஷினியை சைட் அடிக்கும் வேலையை மட்டுமே செய்து வந்து கொண்டிருந்தான்..

வீடு வரும் வரை மட்டுமே.. வரும் போது பத்து மணி.. வந்தால், வெளியில் தாஸ் அமர்ந்திருக்க, உள்ளுக்குள் ஒரு கும்பலே அமர்ந்திருந்தது..

பத்து, முரளி, கமலம்மா, மலர், ரஞ்சனி குழந்தையோடு! ரஞ்சனியின் முகம் அதுவும் அழுது அழுது வீங்கி பார்க்கவே பரிதாபமாக..

“ஏன் இப்படி இருக்க ரஞ்சி?” என பதறி அருகில் ஈஸ்வர் போக..

வர்ஷினிக்கு சிரிப்பு வந்தது... இருந்தாலும் முயன்று அடக்கிக் கொண்டாள்.. பத்துவும் முரளியும் அமர்ந்திருக்க அவர்களுக்கு நடுவில் இடமில்லாத போதும் இடித்துக் கொண்டு அமர்ந்தவள்..

“என்னாச்சு பத்துண்ணா? அவங்கண்ணா திட்டினதுக்கு உங்க வீட்டுக்காரம்மா செமையா அழுதாங்களா?” என கேட்க..

அவள் கேட்கக் கேட்க.. ரஞ்சனியிடம் பேசிக் கொண்டிருந்த ஈஸ்வர் வர்ஷினியிடம் திரும்பி.. “என்ன உட்கார்ந்துட்ட? அம்மா கிட்சன்ல இருக்காங்க.. ஓடு, போய் பாரு!” என அதட்ட..

“இதோ போறேன்!” என்று எழுந்து விரைந்து விட.. முரளி ஈஸ்வரை நேரடியாக முறைத்தான்.. முறைத்தது மட்டுமல்லாமல் “நீ உன் தங்கச்சியோட பேசுவ, நாங்க எங்க தங்கச்சியோட பேசக் கூடாதா.. எதுக்குடா இப்போ அவளைத் துரத்தின.. அவளா இன்னைக்கு தான் எங்க பக்கத்துல வந்து உட்கார்ந்தா, அப்புறம் நாங்க அதை செய்யறது இல்லை, இதை செய்யறது

இல்லைன்னு குறை மட்டும் சொல்லு! எங்களை பிரிக்கறதே நீதான்" என்று கடுப்பாக சொல்ல..

"திடீர்ன்னு நீங்க பாசமலர் ஃபிலிம் ஓட்டறது எனக்கு எப்படித் தெரியும்.. ஆமா நீ இங்க என்ன பண்ற ஷாலினியை அங்க தனியா விட்டுட்டு.. முதல்ல எழுந்துரு, வீட்டுக்கு கிளம்பு! நீ அம்மா இன்னும் எல்லோரும் இங்க தான் இருக்கீங்க.. கிளம்புடா!" என்று அதட்டினான்.

"ஷாலினி தான் என்னை இங்க துரத்தி விட்டா!"

"அதுதானே உனக்கு எப்படி தோணும்!" என்று அதற்கும் ஒரு பேச்சு பேசி.. ஷாலினிக்கு நேரடியாக அழைத்தவன்.. "முதல்ல உன் வீட்டுக்காரனை வீட்டுக்கு கூப்பிடு.. தனியா நிஷாந்த வெச்சிக்கிட்டு நீ என்ன பண்ணுவ, இங்க ஒண்ணுமில்லை! என்னவோ எனக்கு கோபம் பேசிட்டேன்! ஏன் நான் பேசக் கூடாதா?" என,

"பேசலாமே அண்ணா, பேசலாமே!" என்றவள், "அவர் கிட்ட கொடுங்க!" என சொல்லி, "கிளம்பி வாங்க!" என சொல்ல, முரளி வாசல் தாண்டிய பிறகு தான் மற்றவர்களைப் பார்த்தான்..

யாரும் உண்ட மாதிரியும் தெரியவில்லை.. உள்ளே சென்று பார்க்க, அம்மா சமைக்க.. வர்ஷினி உதவிக் கொண்டு இருந்தாள்.

அம்மாவின் முகமே சரியில்லை.. "மா, ஏதாவது வாங்கிக்குவோமா!" என,

"வேண்டாம்!" என்பது போலத் தலையசைப்பு.. "கோவமா இருக்காங்க!" என்று வர்ஷினி உதடு அசைத்து தெரிவிக்க.. "நீ போ" என்று அவளிடம் சைகை காட்டியவன்.. அவள் சென்றதும்.. "மா, என்ன கோபம்?" என்று அருகில் வர,

வர்ஷினி இல்லாததை உணர்ந்தவுடன் கரகர வென்று கண்களில் நீர்.. "என்னமா ரஞ்சினியை திட்டினதுக்கா சாரி, எதோ ஒரு கோபம் பேசிட்டேன்" என பதறினான்.

"அதுக்கில்லை" என்று சொன்னவர்.. "அப்பா திட்டிட்டார்" என அழ..

"அப்பா உன்னை திட்டினாரா? எதுக்கு?" என,

அழுதபடியே "ரஞ்சனிக்கு இவ்வளவு வாங்கினேன் இல்லையா, வர்ஷிக்கு ஒன்னுமே வாங்கலை! வாங்கக் கூடாதுன்னு இல்லை.. எனக்குத் தோணலை.. அப்பா திட்டிட்டார்!" என,

"சரி விடு, டபுளா வாங்கிடுவியாம்" என்று சமாதானம் செய்தான்.

"தப்பு தானே!" என அவர் சொல்லவும்.. "தப்பு தான்! ஆனா ரொம்ப தப்பு இல்லை.. உனக்கு வாங்கினியா?"

"இல்லை" என்பது போல தலையாட்டியவரிடம், "ஒன்னும் தப்பில்லை விடு!" என்று வெகுவாக சமாதானம் செய்தவன், "கடையில டின்னருக்கு வாங்கலாமா" என,

"இல்லை, செஞ்சிட்டேன் விடு.. நம்ம தானே, கூட உன் மாமியார் மட்டும் தான் எக்ஸ்ட்ரா, அவங்க அழுத அழுகைக்கு இன்னைக்கு சாப்பிடுவாங்கன்னு தோணலை!" என,

"அச்சோ! இனிமே நீ யாரையாவது பேசுவ ஈஸ்வரா!" என்று அவனை அவனேத் திட்டிக் கொள்ள.. பார்த்த மலர் சிரித்து விட.. "இப்போ தான் நீங்க அழகா இருக்கீங்க, எங்கம்மா மாதிரி!" என்று சொல்லி அம்மாவின் கன்னத்தில் முத்தமிட்டு விலக..

இன்னுமே அவரின் முகம் மலர்ந்தது!

“பேருக்கு ஏத்த மாதிரியே இருக்கீங்க!” என்றவன்.. அவரை திருஷ்டி எடுக்க.. “போடா டேய் நீ!” என்று செல்லமாக அவனை வெளியில் துரத்தினார்..

வெளியில் வந்தால் கமலம்மா கண் கலங்கி அமர்ந்திருக்க.. வர்ஷினி அவனை பார்த்து முறைத்து அமர்ந்திருந்தாள், எல்லாம் உன்னால் தான் என்பது போல...

“வர்ஷி போ, அம்மாக்கு ஹெல்ப் பண்ணு!” என்று அவளை துரத்தியவன்.. ரஞ்சனியின் கையினில் இருந்து ரிஷியை வாங்கி.. சோர்வாக இருந்தவளைப் பார்த்து.. “போ, போய் முகம் கழுவி வா!” என்றான்..

அவள் எழுந்து செல்ல.. “மா, என்ன இது? எதுக்கு இப்படி கண் கலங்கறீங்க?” என,

“நாங்க என்ன தப்பு பண்றோம்” என அவர் கேட்க..

“தப்பெல்லாம் இல்லை.. சொல்லப் போனா நீங்க வர்ஷியை பார்த்துக்கணும்ன்னு எந்த அவசியமும் கிடையாது தான்.. செய்யலைன்னா, செய்யலை! விட்டுடுங்க! ஆனா செஞ்சா அதை சரியா செய்யணும்!”

“உங்க வீட்டு குழந்தை, அவனுக்கு மொட்டை அடிச்சு காது குத்தப் போறீங்க.. முடிவெடுத்த உடனே எங்கம்மா கிட்ட சொல்லிட்டீங்க.. அவங்களும் அதுக்கு தேவையானது எல்லாம் ரெடி பண்ணிடாங்க”

“ரெண்டு நாளைக்கு முன்ன இன்வைட் பண்ணும் போது தான் அவளுக்குத் தெரியும், அதுவரை தெரியாது.. உங்க வீட்டு பொண்ணு தானே.. அவகிட்ட சும்மா சும்மா பேசலைனாலும்

இதெல்லாம் சொல்ல வேண்டாமா.. நான் எத்தனை நாள் ஃபெவிகால் வெச்சு உங்களோட ஒட்ட வைக்க முடியும்.. இது கண்டிப்பா தப்பு தான்!”

“எங்க வீட்ல ஒரு விசேஷம் ரஞ்சனிக்கு தெரியாம லாஸ்ட் மினிட்ல யாரோ மாதிரி இன்வைட் பண்ணினா விட்டுடுவாளா?”

“வர்ஷி முகம் பார்க்கற கண்ணாடி மாதிரி... நாம எப்படி நடக்கிறோமோ அதைத் தான் நம்மகிட்ட காட்டுவா.. நீங்க எல்லாம் ஷேர் பண்ணினா தானே அவ பண்ணுவா?” .. என்றான் பத்துவை பார்த்து..

ரஞ்சனியைப் பார்க்கவில்லை.. அதுவே சொன்னது இன்னும் அவனுக்கு கோபம் தான் என..

“இனிமே இந்த மாதிரி நடக்காம பார்த்துக்குறோம்.. ஏதாவது தப்பு பண்ணினா சொல்லிக் குடுங்க” என்று பத்து சமாதானக் கொடி பறக்க விட..

“இல்லை, இந்த மாதிரி இனி நடக்காது! சாரி, உங்களோட ஒரு விசேஷத்தை என்னோட பேச்சால டிஸ்டர்ப் பண்ணிட்டேன்.. ரியல்லி சாரி.. தனியா சொல்லியிருக்கலாம்.. அப்போ என்னவோ ஒரு கோபம்!” என..

அதற்குள் வர்ஷினி வந்து சாப்பிட அழைக்க.. “வாங்க” என்று அனைவரையும் எழுப்பிச் சென்றான்.. ரஞ்சனி “வேண்டாம்” என்று முறுக்கிய போதும்.. “நீ சாப்பிடலைன்னா பத்துவும் சாப்பிட மாட்டானாம்” என்று பத்துவை இழுக்க..

“தோடா! நீங்க அண்ணா தங்கை சண்டைல என் அண்ணாவை ஏன் இழுக்கறீங்க” என்று வர்ஷினி பேச..

“நான் எங்க உங்க அண்ணாவை இழுத்தேன், அந்த ரைட்ஸ் எல்லாம் ரஞ்சனிக்கு மட்டும் தான்! அவ

தான் பத்து வோட ஹோல் சோல் ப்ரொபரைட்டர்" என,

ரஞ்சனியின் முகம் புன்னகைக்கு மாற.. "டேய், விஸ்வா சாப்பிட விடு!" என்று மலர் அதட்ட..

"அம்மா! நான் யார் கையையும் பிடிக்கலை! ஏன் வர்ஷ் கையை கூட பிடிக்கலை" என்று பாவனையாக சொல்ல,

எல்லோருமே சிரித்து விட்டனர்.. "சாரி, விஸ்வா!" என ரஞ்சனி சொல்ல..

"சாரி எல்லாம் எனக்கு வேண்டாம். நாங்க அப்படியா வளர்த்திருக்கோம் பொண்ணை.. நாத்தனாரை கூட சரியா பார்க்காம.. இந்த பேச்சு வர்ஷினின்றதால இல்லை.. யார்னாலும் உனக்கு சொல்லுவேன். என்ன மத்தவங்கன்னா தெரிஞ்சிருக்காது. வர்ஷினின்றதால எனக்கு தெரிஞ்சது, அவ்வளவு தான்!" என மீண்டும் சொல்ல..

"அதான் சாரி சொல்லிட்டாள்ல" என்று பத்து பரிந்து வர.. அவனிடமும் ஈஸ்வர் எதோ சொல்லப் போக..

"தெய்வமே! விட்டுடுங்கோ பாவம்! இதுக்கு மேல தாங்க மாட்டாங்க!" என்று வர்ஷினி அவனை நோக்கி பாவனையாக கைகூப்பி சொன்னாள்.

"இவன் தெய்வம் இல்லை! நீ தான் தெய்வம்! இவனோட குப்பை கொட்டற தானே!" என்று ரஞ்சனி சொல்ல.... எல்லோரும் சிரித்தனர்...

"ஹப்பா, இனிமே நீ எதையாவது பேசுவ!" என்ற பார்வையை வர்ஷினி பார்க்க.. "அச்சோ, நான் ஏன் பேசப் போறேன்!" என்ற பாவனையை ஈஸ்வரின் கண்கள் காட்ட.. இருவருமே அதனை வெளியில் காட்டாமல் இருக்க மிகுந்த பிரயர்தனப் பட்டனர்..

“இப்படி பேசி பேசி தான் உன்னை துரத்தி விட்டுட்டானா விஸ்வா” என விளையாட்டு போல கேட்டு விட்டாள். உண்மையில் உணர்ந்தெல்லாம் வரவில்லை, தானாக தான் வந்தது. ஆனால் சொன்ன விதம் பதிலை எதிர்பார்ப்பது போல ஒரு தோற்றம் கொடுக்க,

வர்ஷினியின் முகம் மாறிவிட்டது, “மீண்டுமா?” என்று ஈஸ்வர் பதறி பார்க்கும் போதே,

“பேசி துரத்தலை அண்ணி, பேசாம துரத்திட்டார் என்னை!” என நிறுத்தினாள். அந்த குரல் எல்லோரையும் அசைத்தது. “என்னவோ அவங்க தங்கையோட வீட்டுக்காரர் என்னவோ பேசிட்டாராம். அதனால வீட்ல இருக்குறவங்க கூட பேசாம வெக்காம பணம் பணம்ன்னு ஓடி ஓடி என்னை ஓட வெச்சிட்டார்!” என வர்ஷினி கணமான குரலில் சொல்ல..

அங்கே அப்படியே மௌனம் ஆட்கொண்டது..

எல்லாம் உங்களால் தான் என்ற குற்றச்சாட்டு வர்ஷினியின் பார்வையில் இல்லை. ஆனால் எல்லாம் உங்களுக்காகத்தான் என்ற செய்தி இருந்தது.. அதில் சிறு கர்வம் கூட.. பார் என் கணவன் என்னிடம் மட்டுமே தவறுகின்றவன்.. வேறு யாரிடமும் இல்லை, எதிலும் இல்லை என்பது போல!

அமர்ந்திருந்த அனைவரும் ஸ்தம்பித்து அமர்ந்திருந்தனர்.

பத்துவின் பக்கம் அமர்ந்திருந்த வர்ஷினி அவனின் கை பிடித்துக் கொண்டாள், “இது நான் குற்றம் சொல்றதுக்காக சொல்லலை.. நீங்க தெரிஞ்சிக்கணும்னு சொன்னேன்.. என்னோட

பின்னாடி சுத்திட்டு இருந்தாலும், என்னோட நினைவுகள் அதிகமா இருந்தாலும், இவரோட செயல் எல்லாம் எப்பவும் உங்களுக்காகவும், குடும்பத்துக்காகவும் தான்!”

“இவர் ஒரு வார்த்தை சொன்னா நீங்க இப்படி அழுவீங்களா, என்ன நம்ம கிட்ட தப்புன்னு யோசிக்க மாட்டீங்களா”

“அப்பான்றவர் மட்டும் தான் என்னோட ரொம்ப க்ளோஸ்.. அப்போ அப்பா இறந்த சமயம் தான் பத்துண்ணா இவரைப் பத்தி தெரியாம பிரச்சனை பண்ணிட்டாங்க.. அதோட பாதிப்பு எனக்கு மட்டும் தான்.. நான் இன்னும் தனியாயிட்டேன்” என்றவளின் கண்களில் அடக்க முயன்றும் கண்ணீர் வந்தது..

“எங்களோட வீட்ல எல்லாம் அப்பா அப்பா அப்பா தான்.. எல்லோரும் என்ன அவர் சொல்வாங்களோ அதை மட்டும் தான் செய்வாங்க.. அதனால் தனியா எதையும் யோசிச்சதும் இல்லை செஞ்சதும் இல்லை.. அதோட தாக்கம் இன்னிவரைக்கும் இருக்கு!”

“அதனால் தான் பெரியம்மா என்ன செய்யறதுன்னு தெரியாம தடுமாறிடறாங்க!”

“எனக்கு இந்த நிமிஷம் வாழ்க்கையில் அதிகமான கம்ப்ளைன்ட்ஸ் இல்லை.. திரும்ப ஏதாவது பேசி அதை அதிகமாக்க வேண்டாம்.. யாருமே.. நானுமே! நீங்களுமே!” என பொதுவாக எல்லோரையும் பார்த்து சொன்னவள்..

“சாரி பத்துண்ணா, உங்களை ப்ளேம் பண்ணனும்னு சொல்லலை!” என,

பத்து அமைதியாகத் தான் இருந்தான்.. “விடு, பரவாயில்லை” என்ற வார்த்தை எல்லாம் வரவில்லை.. ஆனால் முகம் மிகவும் இறுகி விட்டது.. முகத்தில் சொல்லொணா ஒரு துயரம் கூட ..

“அண்ணா, ப்ளீஸ்! விட்டுடுங்க!” என்று வர்ஷினி தான் மீண்டும் மீண்டும் சொல்லும் படி ஆகிற்று..

இப்போது ரஞ்சனியை முறைத்து தான் எல்லோரும் பார்த்தனர்.. “ஐயோ” என ஒடுங்கி தான் அமர்ந்திருந்தாள்.. பத்துவின் முகம் பார்க்கவே பயமாக இருந்தது .. மீண்டும் கண்களில் நீர் துளிர்த்தது..

“நான் வேணும்னு ஒன்னும் கேட்கலை, விளையாட்டு போல தான் பேசினேன்” என்று விளக்கம் சொன்னாலும் சூழ்நிலை இலகுவாக வில்லை..

“அண்ணா, ப்ளீஸ், சரியாகிடு! பாரு, அண்ணி அழறாங்க!” என வர்ஷினி சொல்ல,

“அவ அழறா, என்னால முடியலை, அவ்வளவு தான்!” என்றான் பத்து..

“திரும்ப எது யாருக்குள்ள நடந்தாலும், எங்களுக்கு தான் அது திரும்பும்! ப்ளீஸ், அண்ணா, விட்டுடு!” என வர்ஷினி மீண்டும் மீண்டும் சொல்ல..

பிடித்திருந்த வர்ஷினியின் கையை தட்டிக் கொடுத்தவன்.. “விட்டுட்டேன்” என்றான் ஒரு சோர்வான புன்னகையோடு..

ஒரு இயலாமையோடு வர்ஷினி ஈஸ்வரைப் பார்க்க, “விடு, சரியாகிடுவான்” என்பது போல பாவனை காட்டியவன்,

“பத்து, ரொம்ப நேரம் ஆகிடுச்சு! இன்னும் வீட்டுக்கு போக வேண்டாம்.. இங்கயே இருந்துக்கங்க” என,

“இல்லை கிளம்பறோம்” என பத்து எழ,

“பத்துண்ணா, நீங்க இங்க தான் இருக்கீங்க” என்று பேசிக் கொண்டே ரிஷியை கையினில் வர்ஷினி வாங்கிக் கொள்ள..

அந்த செய்கையில் புன்னகை மலர.. “இதென்ன என் பையனை தூக்கிட்டா இருப்பேனா?” என பத்து கேட்க,

“இருக்க மாட்டியா அப்போ, நீ!” என வர்ஷினி முகத்தை சுருக்க..

“நீ சொன்னாலே இருப்பேன்னு சொல்ல வந்தேன்” என,

“அப்போ நான் சொன்னா இருக்க மாட்டியா பத்து?” என ஈஸ்வர் கேட்க..

“ஐயோ, புருஷனும் பொண்டாட்டியும் ஒரு பார்ம்ல தான் இருக்கீங்க போல” என பத்துவே சொல்லி,
“நான் இருக்கிறேன்! இருக்கிறேன்! இருக்கிறேன்! போதுமா!” என..

“ஹப்பா உங்கண்ணன் லாயர், கோர்ட் போறான்னு இப்போ தான் ப்ரூவ் பண்றான்!” என ஈஸ்வர் கிண்டல் செய்ய...
வர்ஷினியின் அருகில் வந்த பத்து, “ஐ கேர் ஃபார் யு பாப்பா.. எனக்கு அதை எப்படி காட்றதுன்னு தெரியாம இருக்கலாம்.. நடுவுல நம்மளும் கொஞ்சம் முட்டிக்கிட்டோம்.. ஆனாலும் நீ எனக்கு ரொம்ப முக்கியம் பாப்பா.. எங்களை விட்டு தள்ளி போயிடாதே!” என தோளோடு அணைத்துக் கொண்டான்..

“பத்துண்ணா!!!!!!” என வர்ஷினி சிரித்தவள்.. “நான் எப்போவும் இதை இல்லைன்னு சொல்லவே இல்லை.. உங்களை நான் கண்டிப்பா குறை சொல்லலை விடுங்க, அண்ட் நான் யாரையுமே எதுக்குமே தேடறது இல்லை.. இனிமே பழகிக்கறேன்!” என்றவள்,

கமலம்மாவிடம் வந்து “பெரியம்மா நோ வொர்ரீஸ்.. தள்ளி தான் நின்னேன், விட்டு விலகி எல்லாம் போகலை, விலகவும் மாட்டேன், சரியா!” என குழந்தைக்கு சொல்வது போல சொன்னவள்..

ரஞ்சனியை பார்த்து “அண்ணி, இவன் தூங்கிட்டான்!” என ரிஷியை காட்டியவள்.. “நான் என்னோட படுக்க வெச்சிக்கட்டுமா” என,

“தூக்கத்துல உருள மாட்டியே” என ரஞ்சனி கேட்க,

“நான் தூங்கின பிறகு நடக்கறது, எனக்கு எப்படித் தெரியும்” .. அவள் கேட்ட பாவனையில் எல்லோர் முகத்திலும் புன்னகை எட்டிப் பார்த்தது.

ஈஸ்வரை ரஞ்சனி பார்க்க.. “உன் பையனை யாரும் இடிக்க மாட்டாங்க, சரியா!” என வாக்குறுதி கொடுக்கவும் ..

“ம்ம், சரி!” என்றாள் ரஞ்சனி.. சரணை எப்போதும் ஈஸ்வர் கூட படுக்க வைத்துக் கொள்வது தானே..

ஆனாலும் மலர் வர்ஷினிக்கு ஒரு கிளாஸ் எடுக்க.. “மா, நான் பார்த்துக்குவேன்!” என்றான் ஈஸ்வர் அவரிடமும்.

வீட்டு ஆளாக எல்லோருக்கும் படுக்க ஆயத்தங்கள் செய்து கொடுத்து ஈஸ்வர் அவனின் ரூம் உள்ளே வந்த போது.. ரிஷியை படுக்க வைத்து அருகில் படுத்திருந்த வர்ஷினி குழந்தையின் கன்னத்தை,

கால்களை, கைகளை என வருடிக் கொடுத்து கொண்டிருக்க..

“அவனை எழுப்பிடாதே” என ஈஸ்வர் சொல்ல..

வார்த்தையாடாமல் உடனே சரி என்றவள், அப்போதும் ரிஷியின் கன்னத்தில் மெலிதாக முத்தமிட்டு விலகி.. “இங்கே வாங்க” என்று ஈஸ்வரை அழைக்க, அருகில் வந்தவனிடம்.. “குனி” என்பது போல சைகை காட்ட.. குனிந்தவனின் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டாள்..

குழந்தையை காட்டி “அவனை இப்படி கிஸ் பண்ணனும் போல இருந்தது.. முழிச்சிக்குவான் இல்லையா?” என..

“ஈஸ்வரை இப்படி உனக்கு கிஸ் பண்ணத் தோணாதா?” என ஈஸ்வர் பாவம் போலக் கேட்க..

“ஈஸ்வரை எல்லாம் இப்படிக் கிஸ் பண்ணத் தோணாது!” என்று சொல்லியபடியே, “வர்ஷினி தூங்கிட்டா” என கண்களை மூடி திரும்பி படுத்துக் கொள்ள..

சில நொடி அமைதி.. பின் மெதுவாக அவளின் காதில் “வேற எப்படி கிஸ் பண்ணத் தோணும்” என்ற குரல் கிசுகிசுப்பாய் கேட்க.. காது மடலில் பட்டும் படாமல் அந்த இதழ்களின் உராய்தல் உடல் உள்ளம் என அனைத்தையும் வர்ஷினிக்கு சிலிர்க்க வைத்தது.

கண்களை திறக்காமலேயே “அதெல்லாம் பண்ணும் போது தெரிஞ்சிக்கங்க” என சொல்லிய வர்ஷினியின் குரல் அப்படி கொஞ்சியது.. அதை அனுபவித்தபடியே அவளின் கன்னத்தில் அழுத்தமாக முத்தம் பதித்து விலகினான்.

பத்து அமைதியாய் படுத்திருக்க.. ரஞ்சனி அவனின் முகத்தை பார்ப்பதும், பின்பு திரும்புவதுமாக இருந்தாள்.. அவள் பார்ப்பது உணர்ந்ததாலும் பத்து திரும்பவில்லை.. சிறிது நேரம் அமர்ந்து அமர்ந்து பார்த்தவள்.. ஒரு இயலாமையில் படுத்துக் கொள்ள.. சில நொடிகளில் பத்துவின் இறுகிய அணைப்பில் இருந்தாள்..

அந்த அணைப்பு ஒரு அழுகையைக் கொடுக்க.. அவனை கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

"என்ன உனக்கு பிரச்சனை? ஏன் இப்படி பண்ற?"

"என்ன பண்ணினேன்?" என்றாள் கலக்கமாக.

"எனக்கு சொல்லத் தெரியலை.. பிசினெஸ் தவிர்த்து எல்லா விஷயத்திலையும் நீ தான் இப்போ கைட் பண்ற.. அப்படி இருக்கும் போது வர்ஷினின்னு வந்துட்டா மட்டும் எதுவும் ஏன் சொல்றது இல்லை, எல்லாம் தப்பாகுது!" என,

"நான் ஒன்னும் பண்ணலை" என,

"ஒன்னும் பண்ணலைன்னா என்கிட்டே நீ வந்திருப்ப. ஏன் இப்படி அப்செட்டா இருக்கீங்கன்னு கேட்டிருப்ப? நான் உன்னை அடிச்சிருக்கேன்.. பணத்துக்காக தான் என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டன்னு மோசமா திட்டியிருக்கேன்.. ஆனாலும் நீ அதை ஒரு கட்டத்துல மன்னிச்சு, என்னை அரவணைச்சிக்கிட்ட.. அதுக்காக தான் அஸ்வின் உனக்கு பிடிக்காதவன்னு தெரிஞ்சு, அவனோட பாப்பாக்கு நட்புன்னு தெரிஞ்சு.. உனக்காக நான் அவ கிட்ட கூட பேசாம இருந்தேன்! என்னோட மனைவிக்கு நான் செய்ய வேண்டிய கடமை அது"

“இங்க அவ வர்றவரைக்குமே பேசலை.. எங்கப்பா ஸ்தானத்துல இருந்து பார்த்துக்க வேண்டிய கடமைப் பட்டவன். ஆனாலும் கடமைல இருந்து தவறினேன்.. உனக்காக மட்டும் தான்!”

“நான் மனைவிக்காகன்னு தங்கையைக் கூட விட்டுடேன்.. ஆனா உங்கண்ணன், அவங்க ரெண்டு பேரும் பிரியற நிலைமை வந்த போதும் உன்னை விடலை!”

“பாப்பா எவ்வளவு கர்வமா நிக்கறா.. நம்மளால நிக்க முடியுதா.. என்னை நீ எவ்வளவு கீழ இறக்கிட்டு இருக்கேன்னு பாரு!”

“இந்த மாதிரி ஒரு நிலமையில, திரும்ப என் தங்கை எனக்கு முக்கியம்! உன்னால தான் எல்லாம்ன்னு உன்னை விட்டுட்டு போனா, அதை விட முட்டாள் தனம் கிடையாது.. அவ வாழ்க்கையில் ஈஸ்வர்ன்ற மனிதன் தான் முக்கியத்துவம் வாய்ந்தவன்!”

“ஆனா.. ஒரு அண்ணனா எனக்குரிய இடம் அவ வாழ்க்கையில இருக்கணும் இல்லையா... அதை சிக்கல் ஆக்கிடாதே... எங்கப்பா எங்க வீட்டு சுவர்ல நாங்க புழுதில விளையாண்ட இடத்தை மாட்டி வெச்சிருப்பார்.. இன்னும் நாங்க அதை எடுக்கலை.. உங்க வாழ்க்கை இவளாலதான்னு காட்டிட்டே இருப்பார்!”

“இன்னைக்கு நாம அவளுக்கு என்ன செய்யறோம்.. ஐ பீ எல் டீம் வாங்கற அளவுக்கு அவங்க பெரியாளுங்க, நாம அவங்களுக்கு வாங்கிக் கொடுக்கறது ஒன்னுமே இல்லை.. ஆனா கொடுக்கறதுன்றது ஒரு அன்பின் வெளிப்பாடு இல்லையா?”

“என்னோட ட்ரெஸ்ல இருந்து, அம்மாவோட ட்ரெஸ் எல்லாம் நீ தான் வாங்கற! ஏன் வர்ஷியை மட்டும் மறந்துட்ட? முதல்ல இருந்தே உனக்கு அவளை அவ்வளவா பிடிக்கறது இல்லை! ஏன்?” என...

என்ன சொல்லுவாள்? வர்ஷினியிடம் அவளுக்கு எந்த கோபமுமே கிடையாது! ஆனாலும் ஐஸ்வர்யாவின் இடத்தில அவள் வந்த போது.. அது கொடுத்த சிக்கல்கள் தானே.. ஒரு உண்மை தோழியாய் அது கொடுத்த கசப்புணர்வுகள் தானே.. அப்போதும் அதில் வர்ஷினியின் தவறு எதுவுமே கிடையாது எனத் தெரியும் தான்..

இதில் பத்து... அவன் வர்ஷினியைக் கொண்டு செய்த செயல்கள்.. பின்பு அஸ்வின்.. என வர்ஷினியுடன் அவளை எதுவுமே நெருங்க விட்டதில்லை.. அவ்வளவே!

“என்னன்னு எனக்கு சொல்லலைன்னா போகுது.. நீ எதுவும் செய்யலைன்னா கூடப் போகுது.. ஆனா என்ன செய்யணும்னு சொல்லிடு, நாங்க செஞ்சிடுவோம்.. எனக்கு நிஜமாவே தெரியலை.. எனக்கே என்னை நினைச்சா ரொம்ப அசிங்கமா இருக்கு”

“முரளிக்கு இந்த மாதிரி கம்ப்ளைன்ட்ஸ் இருக்காது! ஏன்னா அவன் எப்பவுமே பாப்பாவோட க்ளோஸ் கிடையாது, தள்ளி தான் நிற்பான்.. அதுவுமில்லாம ஷாலினி அண்ணி, இப்ப அவங்களுக்கு டெர்ம் டேட் பக்கம் வந்துடுச்சு.. அதனால் அவங்க ரொம்ப சோர்வா இருக்காங்க, எதையும் கவனிக்கறது இல்லை, எங்கேயும் வர்றது இல்லை.. குழந்தை பிறந்த பிறகு ஒரு நாள் வர்ஷினியை பார்த்தாக் கூட அவளை சரி

பண்ணிடுவாங்க!” என பேசி முடித்தவன் அப்படியே படுத்திருக்க..

அழுது முடித்தவள், அவனின் முகம் பார்த்து, “எனக்கே எங்கே தப்பு பண்றேன்னு தெரியலை.. முடிஞ்ச அளவு சரி பண்றேன்!” என்றாள் உண்மையாக.

“தட்ஸ் மை கேர்ள்” என பத்து சொல்லி.. “எதாவது அவளை கேள்வி கேட்டு சீண்டிடாதே.. அடுத்த நிமிஷம் தப்பெல்லாம் நம்மை நோக்கி தான் வரும்.. அதனால் அவ ரொம்ப வருத்தப்படுவா.. நம்மால அவளுக்கு எந்த வருத்தமும் இருக்கக் கூட.. உங்கண்ணா மாதிரி பேசாம இருந்தாலும் பார்த்து பார்த்து உனக்கு செய்வாங்க, அப்படி எல்லாம் எனக்கு வராது!”

“ஆனா குட்டி வர்ஷினியா இருந்த போது இருந்தே அவளை எனக்கு ரொம்பப் பிடிக்கும்.. அடுத்து எனக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தா அவளை மாதிரி தான் எனக்கு வேணும்..”

“அவளோட என்னோட உறவு என்னைக்கும் நல்லா இருக்கணும்! அது உன் கைல தான் இருக்கு.. அவளை உன் அண்ணாவோட மனைவியா பார்க்காதே! என் தங்கையா தான் நீ பார்க்கணும்! அதே மாதிரி நீ அவ கிட்ட ஈஸ்வரோட தங்கையா நடந்துக்கக் கூடாது! என்னோட மனைவியா தான் நடந்துக்கணும்!” எனச் சொல்ல..

“ம்ம்” என்ற ரஞ்சனியின் குரல் ஸ்திரமாய் தான் ஒலித்தது..

“என்னோட வெற்றியும் தோல்வியும் உன்கிட்ட தான் ரஞ்சனி” என சொல்லிக் கொண்டே பத்து

ரஞ்சனியை இன்னும் நெருக்கமாய் அணைத்துக்கொள்ள..

“தோற்க விடமாட்டேன்!” என்பது போல அவளும் அவனை இறுக்கமாய் அணைத்துக் கொண்டாள்.

**நாம் தோற்றாலும் அவள் ஜெயிக்க வேண்டும் என்பதே ஆட்டத்தின் நியதி!**

## அத்தியாயம் தொண்ணூற்றிரண்டு :

**கண்ணன் வந்து பாடுகின்றான் காலமெல்லாம்.. கண்ணில் என்ன சோகம் என்றான் காதல் சொன்னான்.. காற்றில் குழலோசை.. பேசும் பூமேடை மேலே..**

ஐஸ்வர்யாவின் திருமணம் கோவிலில் எளிமையாய் நடக்க.. ரிசப்ஷன் மிகவும் கிராண்டாக நடந்தது.. அஸ்வின் அண்ணனாக சிறப்பாக எல்லாம் செய்தான்.. ரூபாவும் ஜெகனும் தான் முன்னின்று எல்லாம் நடத்தினர்..

ரஞ்சனி மிகவும் நிறைவாக உணர்ந்தாள், தோழியின் திருமணத்தின் போது.. அஸ்வின் அங்கே இருந்த போதும் அவனை கண்டு கொள்ளாமல் ஐஸ்வர்யாவோடு பேசி அங்கே தான் அவ்வப்போது அவளுக்கு தேவையானதை கவனித்து இருந்தாள்..

ஏன் சஞ்சயிடம் கூட தானே வலிய சென்று பேசினாள். அவனுமே முறைத்து நிற்கவெல்லாம் இல்லை. ரூபாவின் மொத்த குடும்பமும் அவளின் தங்கையின் திருமணம் என்று வந்திருக்க..

வராத இரு ஜீவன்கள் ஈஸ்வரும் வர்ஷினியும்.. வர்ஷினி அவள் வேலை செய்த படத்தின் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள அமெரிக்கா சென்றிருந்தாள். ஈஸ்வர் அவனின் வேலை

நிமித்தம் சிங்கப்பூர்.. வெளியீட்டு விழாவிற்கு அவர்கள் அழைத்திருந்தாலும் வர்ஷினிக்கு செல்லும் எண்ணமெல்லாம் இல்லை.. ஐஸ்வர்யாவின் திருமணம் கூடி வரவுமே.. சென்றாள்..

சென்னையில் இருந்தால் திருமணத்திற்கு போகாமல் இருக்க முடியாது.. அஸ்வின் என்ன நினைத்துக் கொள்வான்.. செல்லவும் முடியாது.. ஐஸ்வர்யா அவர்களை பார்த்து பழைய நினைவுகள் எதனையாவது கிளறிக் கொண்டால்!..

ஈஸ்வர் ஒரு புறம் சென்றான்.. இவள் ஒரு புறம் சென்றாள்.. சேர்ந்து செல்ல வெல்லாம் இல்லை.. சேர்ந்து அவளிடம் செல்லவே முடியாது!

வர்ஷினியிடம் எல்லாம் சொல்லி முடித்த பிறகு, அவள் வேண்டும் என்ற எண்ணம் அதிகமாக இருக்க அவளுடனான பயணத்தை ஈஸ்வர் தவிர்த்து விட்டான் என்பது தான் நிஜம்..

ரஞ்சனியிடம் சஞ்சய்.. "நீங்க எங்க கல்யாணத்துக்கு வரவே மாட்டீங்கன்னு நினைச்சேன், உங்களுக்கு தான் நான் இவங்களை பார்த்தா கூடப் பிடிக்காதே" என்று சொல்ல..

"நிச்சயம் அப்போ அப்படித் தான்.. என் பிரண்ட் அவ, அவளை யாரும் டிஸ்டர்ப் பண்றதை நான் விரும்பலை.. இப்போ அவளே உங்களை சூஸ் பண்ணியிருக்கும் போது அதுக்குரிய மரியாதை எப்போவுமே இருக்கும்!" என வாயடிக்க..

ஐஸ்வர்யா எல்லாம் ஒரு புன்னகையோடு தான் பார்த்து இருந்தாள், முகத்திலும் எந்த சஞ்சலமும் இல்லை, மலர்ந்து தெளிவாய் இருந்தது..

ஆம்! அவளின் பெர்சனல் கான்ப்ளிக்ட்ஸ் ஒரு முடிவுக்கு வந்திருந்தது சஞ்சையால்.. இவள் பதில் கொடுக்காமல் இருக்க.. "என்ன உங்க பிரச்சனை?" என்று நேரடியாக கேட்கவும், "அது அப்போ காலேஜ் முடிச்ச டைம் ஒருத்தரோட லவ் அக்சப்ட் பண்ணினேன்.. அப்புறம்.." என ஆரம்பிக்க..

"நீங்க லவ் பண்ணுணீங்களா?" என்றான்.

"தெரியலை! ஆனா அவரை கல்யாணம் பண்ணனும்னு நினைச்சேன்" என,

"ஹ, ஹ" என சிரித்தவன்.. "நான் ஐஞ்சு பொண்ணுங்களை லவ் பண்ணி, இப்போ உங்களை கல்யாணம் பண்ணக் கேட்கறேன். இதெல்லாம் ஒரு விஷயமா.. இதுக்கா இவ்வளவு பதில் சொல்ல தயங்கறீங்க, போங்க!" என்றான் ஈசியாக.

"பொய் தானே சொல்றீங்க!" என்று ஐஸ்வர்யா கேட்க,

"நான் சொல்ற பொய் அவ்வளவு ஈசியா கண்டுபிடிக்கற மாதிரியா இருக்கு" என ஆச்சர்யம் போல வினவ..

சிரித்து விட்டாள் ஐஸ்வர்யா.. எப்போதுமே ஈஸ்வரோடு அவளின் பேச்சு இவ்வளவு இலகுவாய் இருந்ததில்லை. ஐஸ்வர்யா திரும்பவும் பேச வர.. "நாம இதை பத்தி பேசவே வேண்டாம், ப்ளீஸ்!" என்றான் கெஞ்சுதலாக.. "எனக்கு அதை தெரிஞ்சிக்க விருப்பமில்லை.. நான் உங்களை லவ் பண்றேன் ரொம்ப வருஷமா, நீங்க அதை மட்டும் தெரிஞ்சிக்கங்க! நீங்க என் வாழ்க்கையில வர்ற நிமிஷதுக்காக வெயிட் பண்ணிட்டே இருக்கேன்.. யாரை நான் கல்யாணம் பண்ணிக்கிட்டாலும்

உங்களோட இருக்குற சந்தோசம் எனக்கு கிடைக்காது.. விதார்த் மூலமா உங்க கிளாஸ் மேட்ஸ் கிட்ட உங்களை பத்தி தெரிஞ்சிக்குவேன், உங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகலைன்னு தெரிஞ்சு எனக்கு சான்ஸ் இருக்குன்னு நினைச்சு தான் நான் என் கல்யாணத்தை தள்ளி போட்டேன்" என,

"நீங்க விட்டுடுங்க" என்றாள் இலகுவாக.

"என்ன?" என்று அவன் அதிர,

"இந்த இங்க விட்டுடுங்க, வா, போ, பேசுங்க! இப்படி பேசினா, எனக்கு உங்களை க்ளோஸ்சா நினைக்க முடியலை" என சிரிக்க..

"ஊப்ஸ்" என்றவன் பதிலுக்கு சிரித்து "விட்டுட்டேன்" என,

இதோ திருமண வரவேற்பு மேடையில்.. ஐஷ்வர்யா என்றுமே அழகி தான்.. இப்போது இந்த மணப்பெண் அலங்காரங்களில் இன்னும் அழகாய் ஜொலித்தாள், பார்த்த யாரும் பார்வையைத் திருப்ப முடியாதபடி..

இவளை வேண்டாம் என்று சொல்லி வர்ஷினியின் புறம் போயிருக்கிறான் என்ன இருக்கின்றது அவளிடம் என்று எண்ணம் எழுவதை தடுக்க முடியவில்லை.. என்னால் அதை ஏன் கண்டு கொள்ள முடியவில்லை.. எல்லாம் சிக்கலாக்கி கொண்டேன்...

அதையும் விட பத்து என் அம்மா போல ஒரு குழந்தை என்றோ, உன்னை போல ஒரு குழந்தை என்றோ ரஞ்சனியிடம் சொல்லவில்லை! எனக்கு வர்ஷினி மாதிரி தான் ஒரு பொண்ணு வேணும் என்கின்றான்! என்ன சொல்ல?

அதிசயமாய் பொறாமை எழவில்லை.. வர்ஷினியை குறித்து ஒரு முறுவல் எழுந்தது.. இதையெல்லாம் விட அவளுக்கு அவ்வளவு பயம் கொடுத்த அஸ்வின்.. வர்ஷியினியின் ஒரு பார்வையில் அவள் இட்ட வேலையை உடனே செய்கின்றான்.. அது இன்னுமே ஒரு அதிசயம் அவளுக்கு!

அதுவும் அஸ்வின் வர்ஷினிக்கு புடவை எடுக்கக் கேட்க வந்த தினம்.. வர்ஷினி ரிஷிக்காக அவளையும் சேர்த்து வீட்டிற்கு பிடிவாதமாக அழைத்து வந்திருந்தாள்.

அன்று ஈஸ்வரின் வீட்டில் தான் இருந்தாள் ரஞ்சனி.. ஆனால் அவள் இருப்பது அஸ்வினிற்கு தெரியாது.. தெரிந்திருந்தால் நிச்சயம் வந்திருக்க மாட்டான்.

வீட்டின் உள் அவன் வந்த போதே பார்த்து விட்டவள்.. அறையினுள் புகுந்து கொண்டாள். ஈஸ்வர் தான் ஹாலில் அமர்ந்து இருந்தான்..

இவனை பார்த்ததும் "வா அஸ்வின்" என, அப்போது ஐஸ்வர்யாவின் திருமணம் நிச்சயம் ஆகியிருந்தது.. "உங்க கிட்ட ஒன்னு கேட்கணும்" என்றான் தயங்கி தயங்கி.. வர்ஷினி இருக்கிறாளா என்று பார்த்துக் கொண்டே..

அவனின் பாவனைகளைப் பார்த்து "என்ன" என ஆச்சர்யமாய் ஈஸ்வர் வினவ.. "கல்யாணத்துக்கு புடவை எடுக்கறோம்.. ரூபாக்கு எடுக்க போறேன்.. வர்ஷினி மேம்க்கும் ஒன்னு எடுக்கட்டுமா?" என,

"எடேன் அஸ்வின்" என்று ஈஸ்வர் இலகுவாக சொல்ல.. "இல்லை, நீங்க ஏதாவது சொல்வீங்களோன்னு பெர்மிஷன் கேட்டேன்" என்றான் தயங்கியபடியே.

“எதுவும் சொல்ல மாட்டேன்.. நீ எடு.. வர்ஷினிக்கு செய்யறதுக்கு நீ எதுவும் கேட்க வேண்டாம்.. ஆனா மத்த விஷயங்கள் எதுவும் என்னோட பார்வைக்கு வராம இருக்கக் கூடாது.. பாக்கி எல்லாம் நீ நடந்துக்கறதை பொருத்து தான்!” என்றும் சொல்ல..

அஸ்வின் கோபமெல்லாம் படவில்லை.. ஒரு தலையசைப்போடு ஏற்றுக் கொண்டான்.. ஈஸ்வரின் ஆளுமைத்தன்மை அவன் அறிந்தது தானே.. அஸ்வினை பொறுத்தவரை அவனை போன்ற மனப்பான்மை கொண்டவன்.. மனைவியாகினும் கண்ணசைவில் நடக்க வேண்டும், சொல்வதை அப்படியே செய்ய வேண்டும் என்ற எண்ணம் தான் கொண்டிருப்பான்.

ஈஸ்வரின் குணநலன்கள் எல்லாம் அணுஅணுவாய் அறிந்தவன் அஸ்வின்.. ஆனால் அது எல்லாம் வர்ஷினியிடம் மாறிப் போய் தான் இருக்கின்றது.. பிறப்பிலிருந்தே நான், எனது, என் குணம், குலம், பாரம்பர்யம்.. என எல்லாம் பார்ப்பவன்.. அவன் மீதே தவறு என்றாலும் இப்படித் தான் என நிற்பவன்.. ம்ம் என்ன சொல்ல.. வர்ஷினியிடம் இது எதுவுமே இல்லை.

இப்போது அருகில் இருந்து பார்ப்பதால் பல சமையங்களில் நான் இவளின் அடிமை என்பது போல தான் ஈஸ்வரின் செயல்கள் இருக்கின்றது! ஈஸ்வரை பற்றி ஈஸ்வரே முன்னொரு காலத்தில் இப்படி நினைத்திருக்க மாட்டான் என்பது நிச்சயம்.. முகத்தில் முறுவல் மலர்ந்தது!

அதனை மறைத்து “வர்ஷா, அந்த ஆக்ட்ரஸ், நம்ம டீம்ல கண்டிப்பா வேணுமா? தூக்கிடலாமே!”

என்றான்..

“ஏன்?” என,

“இந்த மேட்ச் நடந்தப்போ வரவேயில்லை, நம்ம டீம்க்கு ஒரு போட்டோ ஷூட் எடுத்தோம் அதுக்கும் வரலை.. புதுசா எதோ அவளோட மேனஜர்ன்னு ஒருத்தன் வந்து பேமென்ட் வேற கேட்கறான்” என,

“அவங்களுக்கு நம்ம ப்ளான் எல்லாம் முன்னமே இன்ஃபார்ம்டா, திடீர்ன்னு சொன்னா எப்படி வருவாங்க?” என..

“முன்னமே இன்ஃபார்ம்ட் தான். நான் தான் பெர்சனலா இன்ஃபார்ம் பண்ணினேன்! கிட்ட தட்ட ஒரு மாசம் முன்னமே.. அப்போ எதுவும் அவங்க அந்த டேட்ல அவைலபிள் இல்லைன்ற மாதிரி சொல்லலை! சொன்னா ஷூட் டேட் மாத்தியிருப்போம்!”

“பேமென்ட் குடுத்துருங்க, நிறுத்த வேண்டாம்!” என்ற ஈஸ்வர்... “ஆனா இனிமே அவங்க நம்ம டீம்க்கு வேண்டாம்! அக்ரீமென்ட் கேன்சல் பண்ணிடுங்க!” என்றான்.. அதுவே சொன்னது இனி முடிவை மாற்ற மாட்டான் என..

கூடவே.. “நம்ம தமிழ் நாடு கபடி டீம் ஸ்பான்சர் பண்ணலாம் நாம! அதுக்கு என்னன்னு பாரு!” என்றான்..

“நிஜமா வா” என்று குதூகலித்த அஸ்வின்..

“ஆண்கள் தா, பெண்கள் தா” என,

“ரெண்டுமே பண்ணுவோம்” என்று அவன் சொல்லும் போதே மொபைல் அடிக்கும் சத்தம் கேட்க, ஈஸ்வர் உள்ளே சென்றவன்.. வர்ஷினிக்கு குரல் கொடுத்துக் கொண்டே செல்ல.. ரிஷியோடு

ஐக்கியமாயிருந்த வர்ஷினி அவனை தூக்கி கொண்டே வெளியே வந்தாள்.

கொழுக் மொழுக் கென்று இருந்த குழந்தையை பார்த்துக் கொண்டே “ஹாய் மேம்” என்று அஸ்வின் சொல்ல..

அவனின் அருகில் வந்தவள் சுற்றிலும் பார்வையை ஓட்டி, “ரஞ்சனி அண்ணி குழந்தை” என்று ரகசியம் பேச..

“இருக்காங்களா?” என அஸ்வின் கிளம்பப் போக.. ஆனால் குழந்தையை தூக்கும் ஆர்வமும் இருக்க.. “தூக்கிட்டு குடுங்க” என்று வர்ஷினி சொல்ல.. தூக்கி அணைத்துக் கொடுத்தவன்.. “ஓகே, நான் கிளம்பறேன்!” என்று உடனே கிளம்பி விட்டான் .

எல்லாம் பார்த்து தான் இருந்தாள் ரஞ்சனி.. “எப்படி? தன்னிடம் அப்படி நடந்தான்? அப்படி பேசினான் என்று சொன்ன பிறகும், இவ்வளவு சுமுகமாய் விஸ்வா இவனிடம் நடந்து கொள்கிறான்! ஏன் அப்படி? என்ன  விஷயம்?” மண்டையைக் குடைய ஆரம்பித்தது.. இன்று வரையிலுமே இருந்தது.

பதில் சொல்பவர் தான் யாருமில்லை.. அந்த யோசனைகள் ஓட.. திருமணத்திலும் ஒன்றிரண்டு முறை அஸ்வின் மீது பார்வை படிந்து மீண்டது..

வரவேற்பிற்கு பத்துவும் ரிஷியும் கூட வந்திருந்தனர். குழந்தை தூக்கத்திற்கு சிணுங்க.. “நான் இவனை வீட்ல விட்டுட்டு வர்றேன்” என்று எழுந்தான். “இருங்க, நானும் கிளம்பறேன்” என ரஞ்சனி சொல்லவும்.. “இல்லை நீ இரு.. நீ ரொம்ப என்ஜாய் பண்ற.. நான் இவனை அம்மா கிட்ட விட்டுட்டு வர்றேன்.. எனக்கு ஒன்னும் பிரச்சனையில்லை” என்று பத்து கிளம்ப..

வீட்டில் இரு டிரைவர்கள் இருந்த போதும்.. ரஞ்சனியுடன் எப்போதும் பத்து மட்டுமே வருவான்.. அதை அவன் எப்போதுமே விரும்புவான்.. “ம்ம் சரி” என்று தலையாட்டி விட்டாள் ரஞ்சனி.

சரணும் ப்ரணவியும் கூட தூக்கத்திற்கு சிணுங்கியதால் ஜெகனும் ரூபாவும் கூட கிளம்பினர். மணப்பெண் இப்படியே மணமகன் வீட்டிற்கு செல்ல இருப்பதால் வேறு வேலைகளும் இல்லை! இப்போது சென்றால் தான் நாளை அவர்கள் மணமகள் வீட்டிற்கு வரும் போது ஏற்பாடுகள் செய்ய முடியும் என அவளின் அம்மாவிடம் சொல்லி ரூபா கிளம்பிவிட்டாள்.

வீட்டில் விட்டு அவன் வருவதற்குள் மணமக்கள் கிளம்பும் நேரம் ஆகிவிட.. நண்பர்கள் கிளம்பியவர்களும் “நாங்க ட்ராப் பண்றோம்” என சொல்ல.. மறுத்து விட்டாள் ரஞ்சனி.. பத்துவை எங்கிருக்கிறான் என்று அழைக்கலாம் என்றால் இவளின் மொபைலும் அவனிடம் தான் இருந்தது.

“இல்லை, வந்துடுவார், நீங்க கிளம்புங்க!” என அவர்களிடம் சொல்லி, அவளும் ஐஸ்வர்யாவிடம் மற்ற உறவுகளிடமும் சொல்லிக் கொண்டு மண்டபத்தை விட்டு வெளியே வந்து விட்டாள்..

பத்து வீட்டிற்கு சென்று விட்டது எல்லாம் ஐஸ்வர்யாவிற்கு தெரியவில்லை.. “சரி” என்று விடை கொடுத்து விட.. இவள் இருப்பதை கவனிக்காமல் மணமக்களும் உறவுகளும் கிளம்பிவிட.. சில பேர் இருந்தனர்.. ஆனால் யாரென்று தெரியாத ஆட்கள்.. மனதில் லேசாக ஒரு பயம் எட்டிப் பார்க்க.. சுற்றும் முற்றும் பார்க்க.. அங்கே அவளின் பார்வை வட்டத்தில் அஸ்வின்..

"இருக்கிறானா" என்று ஒரு ஆசுவாசம் எழ.. கூடவே "இவனிடம் பயந்து தான் நீ உன் வீட்டை விட்டு போய் திருமணமே செய்து கொண்டாய்" என்று ஞாபகம் வர.. காலம் எப்படி மாற்றிவிடுகிறது தன் பார்வைகளை என வியந்து அமர்ந்திருந்தாள்.

**ஒரு கதை என்றும் முடியலாம்**
**முடிவிலும் ஒன்று தொடரலாம்**

**அத்தியாயம் தொண்ணூற்றி மூன்று :**

**ரகசியமானது காதல் மிக மிக ரகசியமானது காதல் முகவரி சொல்லாமல் முகம் தனை மறைக்கும் ஒரு தலையாகவும் சுகம் தனை அனுபவிக்கும் சுவாரசியமானது காதல் மிக மிக சுவாரசியமானது காதல்**

அதன் பின்னும் கால் மணி நேரம் கழித்து தான் வந்தான் பத்து.. "ஏன் லேட்? நான் தனியா பயந்துட்டேன்!" என்று அவன் மீது ரஞ்சனி பாய்ந்தாள்.

"தனியா இருந்தியா? அஸ்வின் இல்லை!" என்றான் பத்து..

"ம்ம் இருந்தான்.. அங்க தூரமா.." என்று காட்ட..

பத்துவை பார்த்ததும் அருகில் வந்தான் அஸ்வின்..

"ஒரு ஆக்சிடென்ட் வழில, விட்டுட்டு வர முடியலை.. ஆம்புலன்ஸ் கால் பண்ணி, அவங்க வீட்டுக்கு சொல்லி.. அவங்க வந்ததும் அனுப்பிட்டு வந்தேன்!" என்றான்.

"என்னாச்சு அவங்களுக்கு?" என ரஞ்சனி கேட்க..

"உயிருக்கு ஆபத்தில்லை.. அவங்க கான்ஷியஸ் தான்.. ரெண்டு பொண்ணுங்க ஸ்கூட்டி ல.. நைட் டைம் கூட.. அதான்.. இங்க உனக்கு கூப்பிட்டு

சொல்ல முடியலை.. அஸ்வின் நம்பர் இருந்தது, சொன்னேன்!” என,

“இவனுக்கு என்கிட்டே வந்து சொன்னா என்ன?” என்று திரும்பி அஸ்வினை முறைத்தாள்.

“நீங்க என்னை பார்த்தா எப்பவும் பயப்படுவீங்க, அதுதான் பக்கத்துல வரலை! அங்கேயே இருந்தேன்! சாரி!” என்றவன்..

கூடவே இரு கை கூப்பி “முன்ன எப்பவோ முட்டாள்தனம் பண்ணினதுக்கும் சாரி!” என்றான் பத்து முன்னிலையிலேயே..

“அது அந்த வயசுல அழகான பொண்ணுங்களைப் பார்த்தா கல்யாணம் பண்ண வர்ற இன்ட்ரஸ்ட்.. அதுல கொஞ்சம் மிரட்டலா பேசிட்டேன்! தப்பா எப்பவும் நினைச்சது கூட இல்லை!” என்றவனின் வார்த்தைகளில் மட்டுமல்ல கண்களிலும் உண்மை.

“ரொம்ப நாளா கேட்கணும்னு தோணினது தான்! சந்தர்ப்பமே அமையலை!” என்று உண்மையாக உரைத்தான்.

“இட்ஸ் ஓகே, அந்த கைய கீழ போடு அஸ்வின்!” என்ற ரஞ்சனி.. பத்துவை போகலாமா என்பது போல பார்க்க..

பத்து அஸ்வினை பார்த்து “ஆமா, என் முன்னமே கேட்கறீங்களே, அவ என்கிட்டே இந்த விஷயம் சொல்லாம இருந்திருந்தா, இல்லை நான் ஏதாவது தப்பா எடுத்துக்கிட்டா?” என,

“அவங்களும் உங்க கிட்ட சொல்லாம இருந்திருக்க மாட்டாங்க! நீங்களும் தப்பா எடுக்க மாட்டீங்க.. எனக்கு அப்படி தான் தோணுது!” என புன்னகைத்தான்.

ரஞ்சனி, பத்து இருவர் முகத்திலும் அந்த புன்னகை தொற்றியது.. “சாரி, கல்யாண வீட்டுக்காரரர் உங்களை நிறுத்தி வெச்சிட்டேன்” என் பத்து சொல்ல..

“இவங்க என் சின்ன பாஸோட தங்கை, பெரிய பாஸோட அண்ணி! எனக்கு அவங்க கிட்ட வொர்கிங் டைம் எல்லாம் கிடையவே கிடையாது! நான் இருபத்தி நாலு மணிநரமும் அவங்க ரீச்ல தான்.. இவங்களை பத்திரமா அனுப்பறது என்னோட வேலையும் கூட.. நீங்க கால் பண்ணலைன்னாலும் நீங்க வர்ற வரை இருந்திருப்பேன்!” என்ற நீண்ட விளக்கம் கொடுத்தான்.

“என்ன பதில்டா இது?” என இருவருமே வியந்து போயினர்.. கூடவே பத்து “ஈஸ்வர் உங்களுக்கு சின்ன பாஸ், வர்ஷினி பெரிய பாஸா?” என முறுவலோடு கேட்க..

“கண்டிப்பா! ஏன்னா விஸ்வாவோட பாஸ் அவங்க.. அதனால!” எனச் சொல்ல,

இந்த முறை ரஞ்சனி சிரித்து விட்டாள்.. “விஸ்வாக்கு மட்டுமில்லை, இவருக்கும் அவ தான் பாஸ்!” என சொல்லி.. இருவரும் விடைபெற..

அஸ்வினின் மனம் அப்படி ஒரு நிம்மதியில் இருந்தது.. அவன் வேண்டிய மன்னிப்பு அப்படி ஒரு நிம்மதியை கொடுத்திருந்தது..

கூடவே வர்ஷினியைப் பற்றிய அவனின் நினைவுகள்...

நான்கு வருடங்கள் முன்பு.. அன்று தான் ஈஸ்வர் அவளை தொலைத்திருந்த நாள்.. அஸ்வின் வேலை

பார்க்கும் ஹோட்டலில் அவன் தானே பப் இன்சார்ஜ்..

பத்து மணி இருக்கும் ஒரே சத்தமாக இருந்தது.. அந்த ஹாலில் ஒலித்த பாடல், கூடவே அங்கிருந்த இளைஞர்களின் கூச்சல்.. அங்கே இருந்த பெண்களை கிளப்பலாம் என்று அஸ்வின் சென்று "இட்ஸ் டைம், ப்ளீஸ் மூவ்" என சொல்லிக் கொண்டிருந்தான்..

ஆண்கள் அவனுக்கு பிரச்சனையில்லை, பெண்களை கொண்டு தினமும் ஏதாவது பார்க்க நேரிடுவதால் அவர்களை எப்போதும் பத்து மணிக்கு மேல் விடமாட்டான்..

அங்கே இருந்த கும்பலை பார்வையிட்டு வரும் போது, ஒரு மூலையில் ஒரு பெண் மட்டும் தனித்து கவிழ்ந்து படுத்து இருக்க.. இரு இளைஞர்கள் அவளை தூக்கி நிறுத்த முற்பட்டுக் கொண்டிருக்க.. அருகில் சென்றான், உண்மையில் அவர்களுக்கு உதவுவதற்காக. யாரோ ஒரு பெண் குடித்து மயங்கி விட்டாள் என்ற எண்ணத்தோடு.. அருகில் செல்லவும் தான் அது வர்ஷினி என்று தெரிய.. விரைந்து சென்றவன்.. அவளை அவர்களின் பிடியில் இருந்து விலக்கி பிடிக்க.. அவன் மீதே சாய்ந்தாள்.. சுற்றுப் புறம் உணர்ந்தது போலத் தெரியவில்லை.

அவனின் உடை பார்த்து அங்கே வேலை செய்பவன் என்று தெரிந்த அந்த இளைஞர்கள் "அவ எங்க ஃபிரண்ட் நாங்க தான் கூட்டி வந்தோம்!" என,

அவனுக்கு நிஜமாகிலுமே நண்பர்களா எனத் தெரியவில்லை.. நண்பர்களுடன் தான் எப்போதும்

வருவாள், தனியாக இதுவரை வந்ததில்லை.. ஆனாலும் அந்த நண்பர்களை அவனுக்கு பிடிக்கவில்லை.. அவர்களும் போதையில் இருந்தனர்.

“இருக்கட்டும், இவங்களுக்கு நினைவில்லாம உங்களோட அனுப்ப முடியாது!” என்றான் திட்ட வட்டமாக.

“ஏய், எங்க ஃபிரண்ட் இவ, அனுப்ப உனக்கு என்ன?” என்று அவர்கள் எகிற..

அது ஏனோ மனதிற்கு சரியில்லாமல் பட.. “அனுப்ப முடியாது, போங்கடா!” என்றான் கோபமாக.

அதில் ஒருவன் பணிவாக “எதுக்கு பாஸ் பிரச்சனை, எல்லோருமே ஷேர் பண்ணிக்கலாம்!” என

முதலில் புரியாமல் முழித்தவன்.. பின்பு சொல்வது புரிய.. “என்னடா சொன்ன?” என்றவன், அவனையும் மீறி சொன்னவனின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான்..

இன்னும் கூட அடித்து துவைத்து இருப்பான்.. வர்ஷினி அவனின் கையினில் இருப்பதால் முடியவில்லை.. அவளை திரும்பவும் அந்த இருக்கையில் சாய்த்து அமர வைத்து நிமிர..

அந்த இளைஞர்கள் ஏற்கனவே போதையில்.. “எங்களையாடா அடிச்ச நீ! நாங்க யாருன்னு தெரியுமா?” என்றவன்.. வர்ஷினியை சாய்த்து வைத்து நிமிர்வதற்குள்.. அவர்கள் ஒருவன் கையினில் இருந்த பாட்டிலை உடைத்து அஸ்வினின் பக்க வாட்டில் குத்தி இருந்தான்.

அஸ்வின் இதை எதிர் பார்கவில்லை.. ரத்தம் பீச்சியடிக்க.. வலியில் கத்தி விட்டான்.. ஆனாலும்

அந்த சத்தத்தில் யாருக்கும் கேட்கவில்லை.. அப்படி ஒரு கூச்சல் ஆட்டம் பாட்டம் நடனம்..

அவன் குத்திய இடத்தை அழுத்திப் பிடிக்க.. குத்தியவன் “தூக்குடா அவளை” என மற்றொருவனை பார்த்து சொல்ல..

அவன் தூக்கி கொண்டான்.. அஸ்வினால் கத்தி யாரையும் அழைக்க முடியவில்லை.. சில நொடி சுதாரித்து நிமிர்வதற்குள் அவர்கள் வெளியே போகும் வாயிலை நெருங்கியிருக்க..

“பிடிங்க அவங்களை” என்று கத்தும் நேரம் கதவை திறந்து வெளியேறி இருந்தனர்.. வேகமாக அவனும் வாயில் வந்து, அங்கிருந்த ஹோட்டல் ஆட்களோடு.. அவர்கள் அவளை காரில் போடும் நேரம் பிடித்திருந்தான்..

எதுவுமே எதுவுமே தெரியவில்லை வர்ஷினிக்கு.. ஒரு மாத்திரை எடுத்தாலே போதை.. இவள் மூன்றோ நான்கோ.. கையில் வந்ததை போட்டு இருந்தாள்.. போதைக்காக இல்லை.. உயிர் வாழ விருப்பமில்லை... செத்துவிடலாம் போல ஒரு எண்ணம்..

எடுத்தவளுக்கு போதையும் ஏறவில்லை.. சாவு வருவது போலவும் தெரியவில்லை.. மெதுவாக கதவு திறந்து பார்த்தால் ஈஸ்வர் உறக்கத்தில்.. கதவு திறந்து காரை எடுத்துக் கொண்டு எங்கே போவது என்று தெரியாமல் போக ஆரம்பிக்க.. பல நிமிடங்கள் கழித்து போதையோடு கூடிய மயக்கம் வரும் போல இருக்க.. ஃபோனும் எடுத்து வரவில்லை.. அவள் இருந்த இடத்தில பக்கத்தில் நண்பர்களுடன் போகும் பப் இருக்க.. அங்கே சென்று ஓரிடத்தில் எப்படியோ அமர்ந்து கொண்டாள்.

அங்கே ஒரே கூச்சலும் கும்மாளமுமாய் இருக்க.. எல்லோரும் நடனமாடுவதை பார்த்து இருந்தாள்.. கூடவே நான் ஏன் சாக வேண்டும்? சாக வேண்டாம்! என்ற எண்ணம் தோன்ற.. யாரை அழைக்கலாம் என்று நினைக்கும் போதே போதையை மீறிய ஒரு மயக்கம் அணுகியிருந்தது.

இவள் உள் வந்ததில் இருந்து பார்த்த இரு இளைஞர்கள் தான் அவளை அனுபவிக்கும் ஆசையோடு தூக்க முற்பட.. அப்போது தான் அஸ்வின் பார்த்திருந்தான்..

எப்படியாவது ஈஸ்வரிடம் அவளை சேர்த்து விட வேண்டும் என்ற எண்ணம் தான் அஸ்வினிற்கு..

அவளின் கார் தெரியும், கார் சாவியும் அவளின் கையினில் தான் இணைத்து இருந்தாள்.. யாருக்கும் அவளை காட்சி பொருள் ஆக்க விரும்பாதவனாக.. "அவங்களை கார்ல உட்கார வைங்க" என வர்ஷினியின் லம்பாகினியை காட்டி இருந்தான்..

அதற்குள் அந்த இளைஞர்கள் "நாங்க யாருன்னு தெரியாம பண்ற.. நான் யார் தெரியுமா?" என்று அரசியல்வாதியின் பெயர் சொல்லி. "எப்படி நீ இந்த பொண்ணை காப்பாத்துவ பார்க்கிறேன்" என்று கத்த,

அதற்குள் அங்கிருந்தவர் போலீசிற்கு அழைத்து விட.. "ஐயோ போலிஸா.. வீணாக வர்ஷினியின் பேர் அடிபடுவதை விரும்பாதவனாக, அவளின் மயக்கமும் எதனால் என்று புரியாதவனாக தடுமாறினான். அவளை முதல் முறை பார்த்த போதே அவளின் நீல நிறக் கண்களில் போதையின் மயக்கத்தை உணர்ந்திருக்கின்றான்..

தான் காயப்பட்டிருப்பதையும் பொறுக்காது.. அவளின் காரில் அமர்ந்து காரை கிளப்பினான்.. திரும்ப திரும்ப ஈஸ்வரிடம் அவளை சேர்த்து விட வேண்டும் என்ற எண்ணம் ஒன்றே அவனுக்கு பிரதானமாக இருந்தது.. அவர்களின் வீடு தெரியும், ஆனால் இவர்கள் இப்போது தனியாக இருக்கும் வீடு தெரியாதே..

வர்ஷினியை கையினில் தாங்கி, எதிரில் இருந்தவனை அடித்த போது அவனின் மொபைலும் அங்கே டேபிளில் விட்டிருந்தான்.. காரை ஓட்டிக் கொண்டே அவளை தட்டி தட்டி எழுப்ப முயற்சி செய்தான்.. காரில் இருந்த தண்ணீர் பாட்டில் எடுத்து அப்படியே அவள் மேல் கவிழ்தினான்.. எதற்கும் அவள் அசையவில்லை..

அவனின் குத்துபட்ட இடத்திலிருந்தும் ரத்தம் அதிகமாக வெளியேறி அவன் பலவீனமாக உணர துவங்க.. இதில் அவனின் காரின் அருகில் சத்தம்.. பார்த்தால் அந்த இளைஞர்கள் அவர்களின் காரில் இருந்து எதையோ வைத்து தட்டினர்..

அவர்களுமே ஒரு வெறியில் இருந்தனர்.

அது ஒரு பயத்தைக் கொடுக்க.. அவனுக்கும் மயக்கம் வருவது போல இருக்க.. காரை வேகப் படுத்த.. அவர்களும் துரத்த.. ஒரு திருப்பத்தில் அந்த இளைஞர்களின் கார், இவர்கள் கார் மேல் மோத, அது கட்டுப் பாட்டை இழந்து பாதை தவறி பில்டிங் மேல் மோதி நிற்க.. அவனின் பின் வந்த இளைஞர்கள் கார், பல முறை உருண்டு.. ஒரு மரத்தில் மோதி தீப்பிடித்தது.

இவர்களது லம்பாகினி என்பதால் காரின் ஏர்பேக் ஓபன் ஆகிவிட.. வர்ஷினியை அமர்த்தி இருந்தவர்களும் சீட் பெல்ட் போட்டிருந்ததால்..

வர்ஷினி எந்த சேதாரமுமில்லாமல் தப்பித்து இருந்தாள்.. ஆனால் அதற்கும் அவளின் போதை தெளியவில்லை.

அதிர்ஷடவசமாக தூரமாக அந்த வழியாக வந்த ஒரு போலீஸ் அதிகாரியின் கார் இதை பார்த்திருக்க.. வேகமாக அருகில் வந்து.. அதிகாரி இவர்களை நோக்கி வர, அவரின் டிரைவர் தீ பிடித்த இடத்திற்கு ஓட..

பாதி மயக்கத்தில் இருந்த அஸ்வின்.. கதவை திறந்து கொண்டிருந்தான்.. அதிகாரி அருகில் போகவும், திறக்கவும், அவரை பார்த்தவன் மயக்கத்திற்கு சென்று கொண்டே.. “சர், இவங்க ஹஸ்பன்ட் கிட்ட சொல்லணும் சர்.. ப்ளீஸ் இவங்க பேர் எங்கயும் வரவேண்டாம் சர்” என சொல்லச் சொல்ல.. இல்லை கெஞ்சக் கெஞ்ச  மயக்கமானான்.

அங்கே ஒருவன் இவள் எங்கே என்று தெரியாமல், எங்கே தேடுவது என்று தெரியாமல் பித்து பிடித்து இருந்தான்.

**உயிர் வாழ்வதா இல்லை போவதா.. அமுதென்பதா.. விஷமென்பதா.. இல்லை அமுத விஷமென்பதா..**

## அத்தியாயம் தொண்ணூற்றி நான்கு :

**ஏழை காதல் வாழுமோ**
**இருளும் ஒளியும் சேருமோ**
**நீயோர் ஓரம் நான் ஓர் ஓரம்**
**கானல் நீரால் தாகம் தீராது..**
**தேடும் கண்களே தேம்பும் நெஞ்சமே**
**வீடும் பொய்யடி வாழ்வும் பொய்யடி..**

அந்த கடினமான நாளை தான் ஈஸ்வரும் நினைத்திருந்தான். சிங்கப்பூரில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தான், ஃப்ளைட்டில் அமர்ந்திருந்தவனை அந்த நினைவுகள் தான் ஆக்கிரமித்தன.

வர்ஷினி காணாமல் போய் திரும்பவும் அவளை கண்ணில் காணும் வரை.. அஸ்வின் மட்டும் அன்று அங்கே இல்லாமல் இருந்திருந்தால், நினைக்கவே முடியவில்லை!

ஒரு ஆக்சிடென்ட், என் வீட்டில் இருக்கிறாள், வாருங்கள் என்ற தொலைபேசி அழைப்பு.. எங்கே தேடுவது என்று தெரியாமல் காரில் ஈஸ்வர் சுற்றிக் கொண்டிருந்தான்.. அந்த அழைப்பு வரும் போது ஒரு மணி.. லம்பாகினியின் ரெஜிஸ்ட்ரேஷன் நம்பர் வைத்து.. அவனை அழைத்து இருந்தார்கள்..

சென்றால் வர்ஷினி அப்போதும் போதை மயக்கத்தில்.. பார்த்தவுடன் கண்களில் நீர் தளும்பி விட்டது.. ஆனால் அவனுக்கு போதை மயக்கம் என்று தெரியாது... ஆக்சிடென்ட் மயக்கம் என நினைத்தான்.

அருகில் சென்று பார்க்கவும்.. ஒரு ஆழ்ந்த தூக்கம் போன்ற தோற்றம் தான்.. அவளை அவசரமாக ஆராய்ந்தான். எங்கும் அடிபட்டது போல தெரியவில்லை.

“தேங்க் யு சர், தேங்க் யு வெரி மச்” என்று உணர்ச்சி வசப்பட்டவன்.. “ரொம்ப நேரமா தேடிட்டு இருக்கேன்” என ஈஸ்வர் சொல்ல, அவனின் தோளில் தட்டிக் கொடுத்த அந்த போலிஸ் அதிகாரி.. “இவங்க வந்த கார் ஆக்சிடன்ட் ஆகிடுச்சு.. கூட இருந்த பையன் ஜி ஹெச் ல

இருக்கான்.. என்ன நிலைமைல இருக்கான்னு தெரியலை.. அவனுக்கு கொஞ்சம் இஞ்சுரீஸ்"

"அவன் தான் இவங்க ஹஸ்பன்ட் கிட்ட விட்டுடுங்கன்னு கெஞ்சினான். இவங்க பேர் எதுலையும் வராம இருக்கவும் கெஞ்சினான்.. இன்னொரு கார்ல இருந்த ரெண்டு பேரும் ஸ்பாட் அவுட்" என.. என்ன இவ்வளவு சீரியஸா.. நெஞ்சம் படபடத்தது..

"இவங்க ஏன் மயக்கமா இருக்காங்க தெரியலை.. நான் பயத்துலன்னு நினைச்சு அந்த பையன் ரொம்ப கேட்டதுனால இங்க கொண்டு வந்துட்டேன்" என,

ஈஸ்வர் தண்ணீர் கேட்டு அவளின் முகத்தில் மூன்று நான்கு முறை நன்கு வேகமாக அடித்தான்.. பார்த்திருந்த அந்த அதிகாரியின் மனைவி.. "வலிக்கப் போகுது" என்று பதற..

எதுவும் பேச முடியாதவனாக கன்னம் தட்டினான்.. மெதுவாக கண் விழிக்கவும்.. "வர்ஷி, வர்ஷி என்னை பாரு, என்ன பண்ணுது?" என அவளின் கண்களை பார்க்க அதில் போதை மயக்கம் தான்.. அந்த கண்கள் சில நொடிகள் அவனை பார்த்த போதே காட்டிக் கொடுக்க.. மீண்டும் அவளின் கண்கள் செருகியது.

அதிகாரியும் பக்கத்தில் நின்று பார்த்து.. "இவங்க கண்ணு ஏன் ஒரு மாதிரி இருக்குது" என்றார்.

"இல்லை, அவளுக்கு ப்ளூ ஐஸ்.. கண்ணு நீல நிறமா இருக்கும்"

"டாக்டர் கிட்ட போகலாமா, மயக்கமாகறாங்க?" என்று அதிகாரியின் மனைவி பதற..

“இல்லை, ஒண்ணுமில்லை” என்று ஈஸ்வர் சொல்லி.. “வர்ஷி, கண்ணு திற!” என்று அவளின் கன்னத்தில் வலிக்க அடிக்க..

“என்ன பண்றீங்க?” என்றான் அந்த அதிகாரியும்.. அதற்குள் கண் திறந்தவளிடம் “மாத்திரை எடுத்தியா” என,

“ம்ம், எடுத்தேன்! எனக்கு செத்துப் போகணும்” என்று சொல்ல.. அப்படியே நின்று விட்டான்.. கண்களில் நீர் இறங்குவேனா என நிற்க

அந்த அதிகாரி இவனை சந்தேகமாக பார்க்க.. “நான் விஸ்வேஸ்வரன், ஈஸ்வர் ஃபைனான்ஸ் எங்களோடது.. இது சங்கீத வர்ஷினி என் மனைவி.. கொஞ்சம் டரக்ஸ் எடுத்துப்பா, அந்த ஒரு எஃபக்ட்ல பேசறா.. இது என்னோட அட்ரெஸ், நான் இவளை கூட்டிட்டு போறேன்.. உங்களுக்கு எப்போ சந்தேகம்னாலும் நீங்க என்னை ரீச் பண்ணலாம்.. இவ தெளிவானதும் உங்களோட பேச வைக்கிறேன்” என்றான்.

“அனுப்புவதா, வேண்டாமா” என்ற சந்தேகம்.. அவளின் அப்பா வீட்டினர் பற்றி கேட்க.. விவரம் சொன்னவன்.. “அங்கே போக பிரியப் படமாட்டா, இந்த பழக்கம் யாருக்கும் தெரியாது, ப்ளீஸ்.. என்னோட அனுப்பிடுங்க” என்று கெஞ்சினான்..

“வர்ஷ், எழுந்துரு, எழுந்தரு” என அவளையும் தட்டி எழுப்ப.. “ம்ம்” என கண்விழித்தாள்.. “வீட்டிற்கு போகலாம்” என ஒருவாறு எழுப்பி நிற்க வைக்க.. அங்கிருந்த எல்லோரையும் பார்த்தாள்.. எதோ உருவங்கள் ஆனால் யார் என்ன என்று தெரியவில்லை..

ஆனால் எதிரில் இருந்தவர்களுக்கு இவ்வளவு அழகான பெண்.. ஈஸ்வர் ஃபைனான்ஸ் தெரியாதவர்கள் கிடையாது, ஈஸ்வரின் தோற்றம் பேச்சு என எதிலும் குறைவாகத் தோன்றவில்லை, ஏன் இப்படி? என்ற பரிதாபம் தான் தோன்றியது..

எப்படியோ அவளை அழைத்து வீடு வந்தவன், அவளை வைத்து பூட்டி, காலை ஆறு மணிக்கு அந்த இளைஞன் யார் என பார்க்கப் போனான். ஏதோ அவளின் நண்பன் என நினைத்து.. அஸ்வினை கனவிலும் நினைக்கவில்லை.

கத்தி குத்தப்பட்டு இருந்ததினால் ஆபரேஷனுக்கு ஏற்பாடு செய்ய இருந்தனர்..

இவனை பார்த்ததுமே "வர்ஷினி உங்க கிட்ட வந்துட்டாளா?" என்ற வார்த்தை தான்.

"எங்கே பார்த்த?" என, "பப்ல" என்றான்.. அப்போது ஈஸ்வருக்கு வேறு எந்த விவரங்களும் தெரியாது.. "வர்ஷினி, உங்க கிட்ட வந்துட்டாளா?" என்ற ஒரு வார்த்தைக்காக அவனை வேறு பெரிய ஹாஸ்பிடல் சேர்த்து அவனுக்கு எல்லாம் செய்ய..

மாலை திரும்ப அவனை வந்து பார்த்த போது தான் விவரங்கள்  தெரியும். அஸ்வின் ஆபரேஷன் முடிந்து ஐ சி யு வில் இருந்தான். ஆனாலும் பேச முடிந்தது. எந்த மாதிரி ஆபத்திலிருந்து தப்பித்து இருக்கிறாள். அப்படியே அமர்ந்து விட்டான். இன்னும் விஷயத்தை கிரகிக்க ஜீரணிக்க முடியவில்லை.

அவனின் முகம் பார்த்தே "யார் கிட்டயும் எப்பவும் சொல்ல மாட்டேன்" என்றான் அஸ்வின் அவனாகவே.

“நீ ஹாஸ்பிடல இருக்க, இன்னும் உங்க வீட்டுக்கு சொல்லலை” என்று ஈஸ்வர் சொல்ல,

“வேண்டாம், ஊருக்கு போயிருக்கேன்னு சொல்லிக்கறேன். கொஞ்சம் நல்லா சரியான பிறகு டிஸ்சார்ஜ் ஆகற மாதிரி மட்டும் பண்ணுங்க” என, “ம்ம்” என்று தலையாட்டி வந்தவன் தான்.. இன்னும் அஸ்வின் அவனுக்கு இவ்வளவு பெரிய உதவி செய்ததை நம்ப முடியவில்லை. ஒரு நாள் இரவு முழுவதும் பதிய வைத்துக் கொண்டான்.

ஒரு நாள் முழுதும் போதையில் இருந்து, அடுத்த நாள் காலையில் தான் வர்ஷினி சற்று தெளிவாக..அவளை அழைத்துக் கொண்டு அஸ்வினை காண வந்தான். அவளிடம் அதுவரை விவரம் எதுவும் சொல்லவில்லை.

நடந்தது எல்லாம் அஸ்வின் அவளிடம் சொல்ல, முன்பிருந்தே அஸ்வினை அவளுக்கு பிடிக்கும், அது இன்னும் ஒரு அழுத்தமான நட்பாக மாறியது அப்போது தான்.

ஆனாலும் வர்ஷினி பெரும் மௌனத்தில் ஈஸ்வரிடம்.. “இப்படி ஒரு பப்பில் இருந்திருக்கிறாள், இருவர் அவளை தூக்கி தவறாக நடக்க எண்ணம் கொண்டிருந்தனர்” என்பது அவளை அவளே அந்த சமயத்தில் மிகவும் கீழாக உணர வைத்தது.

ஈஸ்வர் வேறு இந்த பழக்கத்தை “விடு, விடு” என்று சொல்ல.. அந்த தன் தவறை எல்லாம் கோபமாய் அவன் மீது திருப்பினாள்.

இன்னம் யார் யாரோ அவளை தூக்கி இருக்கின்றனர் என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. முதலில் அந்த இளைஞர்கள், அஸ்வின், ஹோட்டல் ஆட்கள், அந்த அதிகாரி, சே

சே எந்த நிலையில் உன்னை நீ வைத்துக் கொண்டாய், தாளவே முடியவில்லை.. எங்கெல்லாம் தொட்டார்களோ என்ற ஒரு நினைவு அவளின் சிந்தனை செயல் எல்லாம் முடக்கியது. எப்போதும் போல யாரிடமும் தன் வேதனையை பகிர முடியவில்லை! அவளே தேடிக் கொண்டது தான்! ஆனாலும் மீண்டும் செத்துப் போகும் எண்ணம் வந்தது.

இதெல்லாம் ஒரு விஷயமா.. உனக்கு உடல் நிலை சரியில்லை.. உனக்கு உதவினார்கள் அவ்வளவே என்ற சமாதான எண்ணத்தை மனதில் பதிய வைத்தாள். அவளுக்கு அவளே எல்லாம்.

ஆனாலும் யாரையும் பார்க்கப் பிடிக்கவில்லை, பேச பிடிக்கவில்லை. ஈஸ்வரை பிடிக்கவேயில்லை. எல்லாம் இவனால், செத்து விடு என்று ஒரு மனம், நான் ஏன் சாக வேண்டும் என்று ஒரு மனம்! தனிமை தனிமை! ஈஸ்வரை பார்க்கப் பார்க்க இவனை கொன்று புதை என்று ஒரு மனம்.தானாக சிதையும் சிந்தனைகள் அல்ல சிதைக்கும் சிந்தனைகள்!

இன்னும் ஈஸ்வருக்கு நடந்ததில் இருந்து வெளியே வரவே முடியவில்லை. இதில் அவளின் மனதில் என்ன இருக்கின்றது என்று பார்த்து எப்படி சமாதானம் செய்வான். எப்போதும் போல அவளின் உணர்வுகளை புரிந்து கொள்ளவில்லை!

எல்லாம் மனதில் வைத்து மறுகி இருந்தவளிடம், அதிலிருந்து வெளியே கொண்டு வராமல் பழக்கத்தை விடு விடு என்று ஈஸ்வர் ஜெபிக்க.. எல்லாம் அவன் மேல் திருப்பினாள்! “உன்னை எனக்கு பிடிக்கலை! நீ என்னை ஏமாத்திட்ட! நான் நினைச்ச மாதிரி நீ இல்லை! என்னை விட்டுடு!

நான் ஹாஸ்டல் போறேன்! இங்கே இருந்தா எனக்கு தேவையில்லாதது எல்லாம் தோணுது! இங்கே இருந்தா திரும்பவும் மாத்திரை எடுக்கத் தோணும்" என பேசப் பேச..

திரும்பவும் தன்னை எதுவும் அவள் செய்து கொள்ளக் கூடாதே என்று தான் ஹாஸ்டல் போக அனுமதித்தான்.

பிரிவென்பது ஆகிவிட்டது இன்னும் ஐஸ்வர்யாவின் விஷயத்தை ஏன் மறைக்க வேண்டும். மீண்டும் சேரும் போது திரும்பவும் இது வாழ்க்கையில் சிக்கல் ஆகிவிடக் கூடாது என்று. ஆம்! ஈஸ்வரை பொறுத்தவரை அவளை விடும் எண்ணம் எல்லாம் இல்லை. ஆனால் அவள் இவ்வளவு சிக்கலை தேடிக் கொள்ளும் போது அவள் வழியில் சென்றால் அன்றி அவளை மீட்க முடியாது என்று மனம் சொல்ல பிரிய முடிவெடுத்தான்.

அதனால் ஐஸ்வர்யாவின் விஷயம் சொல்ல முடிவு செய்து, ஐஸ்வர்யாவிடம் காதல் சொன்னது சொல்லிவிட!

அதுவரை ஹாஸ்டல் போக மட்டும் நினைத்து இருந்தவள் மனதில் பிரளயம்! சொல்லப் போனால் அது அவளை மீட்டு எடுத்தது. இவ்வளவு துரோகம் செய்து விட்டான், நீ இவனுக்காக உன்னை அழித்துக் கொள்வாயா என்பது போல ஒரு எண்ணம்! ஒரு திடம்! "நீ எனக்கு வேண்டாம் இனிமே, நீ என்னை பார்க்கவோ பேசவோ கூடாது" என்று ஸ்திரமாய் மறுத்து விட்டாள்.

அப்போது தான் அஸ்வினுடன் இன்னும் இன்னும் நட்பு பலப் பட்டது!

இவன் வீட்டினரும், அவளின் வீட்டினரும், ஏன், ஏன் என்று மாற்றி மாற்றிக் கேட்க, யாருடைய கேள்வியும் அவளை தாக்கி மீண்டும் எதுவும் செய்து கொள்ளக் கூடாது என யாரையும் அணுக விடவில்லை!

அவளின் மிக நுட்பமான உணர்வுகள் எல்லாம் ஈஸ்வரின் புரிதலுக்கு அப்பார்ப்பட்டு இருக்க.. அந்த பிரிவு வந்து விட்டது.. எல்லாப் பெண் குழந்தைகள் போல அவள் வளரவில்லை என்பதை மறந்து விட்டான். அம்மா அக்கா தங்கை பெண் தோழிகள் காதலி என்று எல்லோரையும் பார்த்து இருந்தவனுக்கு.. இவளை தெரிந்து கொள்ள முடியவில்லை தவறி விட்டான்.

நான் என்ற அகந்தை மமதை, என்னை தவிர யாரும் அவளை சமாளிக்க முடியாது என்ற எண்ணம், வாழ்க்கையில் அப்பாவும் தவறி, அம்மாவும் தவறி, அவளுக்கு என்னை விட சிறந்த வாழ்க்கை யார் கொடுப்பார் என்ற எண்ணம், அதையும் விட அவனின் மோகமும் காதலும், எல்லாம் சேர்ந்து அவளை இந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டது

உண்மையில் ஈஸ்வர் என்ற மனிதனை சந்திக்காமல் வேறு யாரைவது திருமணம் செய்திருந்தால் சங்கீத வர்ஷினி நன்றாக தான் இருந்திருப்பாள். அவளுக்கு இந்த பழக்க வழக்கங்களும் வந்திருக்காது.

இது எதுவும் புரியாதவனாக ஈஸ்வர் வர்ஷினியை அருகில் வைத்துக் கொள்ளவும் முடியாமல், அவளை விடவும் முடியாமல், மிகவும் கடினமான நிமிடங்கள்! அவனுமே அவனின் மனைவியாகப்

பட்டவள் இப்படி இருக்கிறாள் என்பதை கடந்து வர மிகவும் சிரமப் பட்டான்.

வர்ஷினி மீது ஈஸ்வர் வைத்திருந்த அதீத காதலே அவளின் மீது வெறுப்பு வராமல் அவனைக் காப்பாற்றியது. “வர்ஷினி கடந்து வந்தது அப்படி ஒன்றும் பெரிய விஷயம் இல்லையே! வாழ்க்கையில் பல பெண்கள் இதனையும் விட கடினமான விஷயங்களை சந்திக்கிறார்கள்! அவர்கள் எல்லாம் இப்படியா இருக்கிறார்கள், இப்படி பழக்க வழக்கம் பழகுகிறார்களா!” என்ற எண்ணம் அவனுக்கு வரவேயில்லை!

ஈஸ்வரின் எண்ணம் முழுவது வர்ஷினி இதில் இருந்து மீண்டு வந்து விட வேண்டும் என்பது மட்டுமே! அதற்காக எதையும் செய்ய தயாராக இருந்தான், அவளை விடுவது உட்பட! திரும்பவும் அவள் மாத்திரை எதுவும் உட்கொள்ளவில்லை என்ற நம்பிக்கை வரும் வரை செத்து செத்து தான் பிழைத்தான். மனதின் ஓரம் ஏதாவது நடந்து விடுமோ என்ற பயம் அவளை பிரிந்த எப்போதுமே..

எப்படியோ மீண்டும் அவனிடம் வந்து விட்டு விட்டாள். தொலைத்திருந்தால், அவனுமே தொலைந்து தான் போயிருப்பான்.

மீண்டு விட்டான்! மீட்டும் விட்டான்!

ஃபிளைட் இறங்கி அவனின் லகேஜ் எடுத்தவன், எந்த திசை செல்வது என்று தெரியாமல் நின்று விட்டான் அன்று தானே வர்ஷினியும் வருகிறாள். ஆனால் இன்னும் நான்கு மணிநேரம் இருக்கிறது. வீட்டிற்கு போகப் பிடிக்கவில்லை, அமர்ந்து கொண்டான் அங்கேயே.

ஈஸ்வர் அங்கே அமர்ந்திருந்த போது ஆக்ட்ரஸ் வர்ஷா வர.. இவனை பார்த்ததும் “ஹலோ சர்” என்று அருகில் வந்தாள். அவனால் முகத்தை திருப்ப முடியவில்லை. “ஹலோ” என்று மரியாதை நிமித்தம் சொன்னான்.

அவளும் அந்த ஃப்ளைட்டில் தான் வந்திருந்தாள். ஆனால் இவன் கவனிக்கவில்லை, அவளுமே.. இறங்கும் போது தான் கவனித்து இருந்தவள், அவன் அமரவுமே அருகில் வந்து.. “நீங்க ஏன் என்கிட்டே எந்த எக்ஸ்ப்ளனேஷனும் கேட்காம என்னை மேல இருந்து எடுத்துட்டீங்க, ஹௌவ் கேன் யு டூ திஸ்” என்று சற்று போர்ஸாக கேட்க,

அந்த துவனி ஈஸ்வருக்கு ஒரு கோபத்தை கொடுத்தது. தன்மையையாய் கேட்டிருந்தால், பதில் கூட சொல்லியிருப்பானோ என்னவோ. அவளை ஒரு பார்வை பார்க்கவும். அந்த பார்வையே ஒரு கிலியை அவளுக்குக் கொடுத்தது. ஈஸ்வரை அவள் அதிகம் பார்த்ததில்லை. அதனால் அவனைத் தெரியவில்லை.

ஈஸ்வரை விட வர்ஷாவை தெரிந்தவர் அனேகர். அவன் விளம்பரப் பிரியன் அல்ல, தன்னை எதிலும் முன் நிறுத்தவே மாட்டான். சிலர் கவனிக்க.. “என்ன எக்ஸ்ப்ளனேஷன்” என தோரணையாக கால் மேல் கால் போட்டபடி ஈஸ்வர் கேட்க..

அதற்குள் அவளின் மேனஜர் அருகில் வந்தவன்... “வணக்கம் சர்” என்று பெரிய கும்பிடாகப் போட.. அவனை முதல் பார்வையிலேயே ஈஸ்வருக்கு பிடிக்கவில்லை.. அவன் புறம் பார்த்தவன்.. “யார்” என்பது போல வர்ஷாவைப் பார்க்க “என் மேனேஜர்” என,

“அதான் பேமென்ட் கொடுத்துட்டோம்ல.. எதுன்னாலும் ஆஃபிஸ்ல வந்து பாருங்க.. அங்க வந்து கேளுங்க எக்ஸ்ப்ளனேஷன். திஸ் இஸ் நாட் தி ப்ளேஸ் அன்ட் திஸ் இஸ் மை பெர்சனல் டைம்” என்று கடினமாக சொல்லி வர்ஷாவை பார்த்தான். இப்படி ஒரு கடினத்தை வர்ஷா எதிர்பார்க்கவில்லை.

“சரிங்க சர்! சரிங்க சர்! ஆஃபிஸ் வர்றோம்!” என மேனேஜர் பதில் கொடுக்க.. ஈஸ்வர் கண்டுகொள்ளவேயில்லை, பேச்சு முடிந்தது என்பதாக மொபைலை பார்க்க ஆரம்பித்தான்.

வேறு வழியில்லாமல் அவர்கள் கிளம்ப.. வர்ஷாவின் மனம் கனன்று கொண்டிருந்தது.. அப்படி என்ன அலட்சியம் என்பது போல. இதுவரை பார்த்தவர்கள் எல்லாம் மேலே விழுந்து பழக, அப்படி இல்லாமல் இருந்தாலும் ஒரு முக்கியத்துவம் இருக்கும். இவ்வளவு அலட்சியம் இருக்காது.

பணம் இருந்தால் இவர்கள் பெரிய ஆட்கள் நான் ஒன்றுமில்லாதவளா என்ற கோபம் வலுபெற்றது.

அவள் சென்ற பிறகு தான் நினைத்தான். முதலில் செக்யுரிட்டி ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் என

அஸ்வின் சில நாட்களாக சொல்லிக் கொண்டு தான் இருந்தான். இவன் தான் “எனக்கென்ன பயம். வர்ஷி கூட நீயும் தாஸும் இருக்கீங்க” என்று மறுத்து விட்டிருந்தான்.. இன்றைக்கு என்னவோ தோன்றிற்று. யாரோ ஃபோட்டோ எடுத்தது போலவும் கூட இருந்தது. கூடவே என்னை யார் எடுப்பர் அந்த நடிகையாய் இருக்கும் என்று விட்டுவிட்டான்.

பின்பு வர்ஷினி வரும் வரை பொறுமையாய் அமர்ந்திருக்க, வர்ஷினி அவனை எதிர்பார்க்கவில்லை. ஈஸ்வரை பார்த்ததும் மனதில் ஒரு உற்சாகம், குதூகலம்! அவனை பார்த்தும் வேகமாய் அருகில் வந்தவள்.. "நீங்க வீட்டுக்கு போய் இருப்பீங்கனு நினைச்சேன்" என,

"உன்னை விட்டுட்டு வீட்டுக்கு போய் எனக்கு அங்க என்ன இருக்கு?" என ஒரு முறுவலோடு கூற..

ஈஸ்வரை அணைத்துக் கொள்ள துடித்த மனதை அடக்கி கையை மட்டும் பிடித்துக் கொண்டாள். அவளின் தொடுகையில் இடையோடு அணைத்துப் பிடிக்க தோன்றிய மனதை அவனுமே கடிவாளமிட்டான்.

"நீங்களும் வந்திருக்கலாம். இனிமே எல்லாம் தனியா எங்கயும் போக மாட்டேன். வேலையாவது ஒன்னாவது! ஐ டோன்ட் வான்ட் எனிதிங்" என,

"இனிமே எங்கயும் தனியா உன்னை விட மாட்டேன்!" என்றான் அவனும் புன்னகையோடு.

வேகமாக அந்த நேரம் அஸ்வின் ஏர்போர்ட் உள்ளே வந்தான். இருவரையும் பார்த்து ஆசுவாசமானவன். "நீங்க பிக் அப் பண்றேன்னு சொல்லவேயில்லை. தாஸ் ஒரு பக்கம் வர்றான் நான் ஒரு பக்கம் வர்றேன்" என ஈஸ்வரை குறை பட்டு, "ட்ராபிக்ல லேட் ஆகிடுச்சுன்னு டென்ஷன் வேற" என,

"எதுக்கு டென்ஷன், யு எஸ் வரை தனியா போயிட்டு வந்துட்டேன். இங்க வரமாட்டேனா" என வர்ஷினி சொல்ல..

"உங்களுக்கு எதாவதுன்னு டென்ஷன் இல்லை, நீங்க யாரையும் எதுவும் பண்ணிடக் கூடாது

இல்லையா, அந்த டென்ஷன்" என்று அஸ்வின் கிண்டல் செய்ய..

"எஸ், அது என்னவோ கரக்ட் அஸ்வின்!" என்று ஈஸ்வர் ஆமோதிக்க..

"ஹி, ஹி, கிண்டலா" என வர்ஷினி கிண்டலாக கேட்க,

"சே! சே! உங்களை யாராவது கிண்டல் பண்ண முடியுமா?" என அஸ்வின் சொல்ல,

"எஸ், அது என்னவோ கரக்ட் அஸ்வின்" என்று முன்பு போலவே சொன்னவன், "அவளை அவளே பண்ணிக்குவா, வேற யாரும் வேண்டாம்!" என.

ஈஸ்வரின் தோளில் பட்டென்று ஒரு அடி வைத்தவள், கை நீட்டி பத்திரம் என மிரட்ட..

"விஸ்வா நான் எதுவுமே பார்க்கலை" என்று அதற்கும் அஸ்வின் கிண்டல் செய்தான்.

"அடிக்க தானே செஞ்சேன்! நான் என்னவோ உங்களை கிஸ் பண்ணது போல இவன் ஏன் பில்ட் அப் குடுக்கறான்" என்று வர்ஷினி ரகசியம் பேச,

ஈஸ்வருக்கு சிரிப்பே அடக்க முடியவில்லை வாய் விட்டு சிரிக்க.. அதற்கும் தோளில் செல்லமாய் ஒரு அடி வாங்கினான்.

**காலம் சிறிது.. காதல் மனது..**
**தேவன் நீதான் போனால் விடாது..**

## அத்தியாயம் தொண்ணூற்றி ஐந்து :

**ஆழ் மனதின் அடித்தளங்கள் ஆழமானவை!**

என்னவென்று தெரியாத போதும், இருவரின் முகங்களை பார்த்த அஸ்வினின் முகமும் வெகுவாக மலர... அவர்களுக்கான நேரத்தில் தலையிட விரும்பாதவனாக "நான் கிளம்பட்டுமா" எனக் கேட்டான்.

“சரி” என்பது போல தலையசைத்தார்கள் இருவருமே.. கூடவே வர்ஷினி “எப்படி நடந்தது உங்க தங்கை கல்யாணம்” என,

“ரொம்ப நல்லா நடந்தது. நீங்க இல்லாதது மட்டும் தான் எனக்கு குறை” என்று மொபைலில் இருந்த சில போட்டோக்களை காட்டினான்.

இருவருமே ஆர்வமாகப் பார்த்தனர். ஈஸ்வர் ஐஸ்வர்யாவின் முகத்தை வெகுவாக பார்க்க. அதில் அவனுக்கு எந்த சஞ்சலமும் தெரியவில்லை. மிகவும் நிம்மதியாக உணர்ந்தான்.

“உங்க தங்கை ஐஸ்வர்யா ராய் விட அழகா இருக்காங்க” என வர்ஷினி சொல்ல..

“எஸ், அவ ரொம்ப அழகு தான்” என அஸ்வினுமே அதை ஆமோதித்தான்.

“ஒரு நாள் இந்த வாரத்துல கூட்டிட்டு போங்க, நான் விஷ் பண்ணனும்” என்றாள் வர்ஷினி.

“கண்டிப்பா” என சொல்லி அஸ்வின் கிளம்ப, வர்ஷாவை பார்த்ததை இருவரிடமும் சொல்ல மறந்து போனான் ஈஸ்வர்.

தாஸ் வந்துவிட, லக்கேஜ் எல்லாம் எடுத்து வீடு வந்த போது, “மிஷன் அக்கம்ப்ளிஷ்ட்டா” என்றாள் சிறு புன்னகையுடன் வர்ஷினி.

“எஸ், எஸ்” என ஆமோதித்தவன்.. “ரொம்ப ரிலீவ்டா இருக்கு. ஆசை காட்டி ஒருத்தரை மோசம் செஞ்சிட்ட மனநிலை தான் எப்பவுமே. இப்ப ரொம்ப நிம்மதியா இருக்கு” என கால் நீட்டி சோபாவில் அமர்ந்து கொண்டு “வா” என்பது போல கை விரிக்க.. அவனின் கைகளுக்குள் பாந்தமாய் அடங்கிக் கொண்டாள்.

“அதுதான் கல்யாணம் செஞ்சிக்கிட்டாங்க இல்லையா! யாருடைய விருப்பமோ, விருப்பமில்லையோ, எல்லாம் தாண்டி பார்த்தோம்னா வாழ்க்கையில நடக்கறது தான் நடக்கும்! ஒரு வேளை உங்களுக்கு என் மேல விருப்பமில்லாம இருந்து அவங்க மேல தான் விருப்பம் இருந்திருந்தாலும், நான் உங்களுக்கு மனைவியா வரணும்னு இருந்திருந்தா, மாத்தி இருக்க முடியாது! சோ ஐஸ்வர்யா பார்ட் மறந்துடுங்க.. அவங்க நல்லா இருப்பாங்க! நீங்க மிஸ் ஆனது வருத்தப்படாத மாதிரியான வாழ்க்கை அவங்களுக்கு இருக்கும்!” என,

“என்னை சமாதானம் பண்ண இந்த வார்த்தைகளை சொல்றியா” என முறுவலுடன் ஈஸ்வர் கேட்க..

“நோ, நோ, நிஜமா!” என்றாள் உணர்ந்து. “எனக்கு தோணிச்சு” என நிம்மதியாய் ஒரு ஆசுவாசத்தோடு கண்களை மூடிக் கொண்டான்.

“வீடு முடியற ஸ்டேஜ்ல இருக்கு. புண்ணியாஜனம் பண்ண டேட் பிக்ஸ் பண்ணனும். அதுக்கு முன்ன கோவிலுக்கு போகணும்” என..

“போகலாமே, எப்போ வேணும்னாலும்” என உடனே சம்மதம் தெரிவித்தாள். யார் யார் போகிறோம் என்றெல்லாம் இந்த முறை கேட்கவில்லை. ஈஸ்வரோடு இருந்தால் இப்படி தான் அவளின் வாழ்க்கை என்று அனுமானித்து அவளே சுமுகமாய் நடக்க முடிவு செய்து கொண்டாள் மீண்டும்!

தானாக வந்தால் போராடித் தான் ஆக வேண்டும், அவளாக எந்த போராட்டதையும் வைத்துக் கொள்ள இனி விருப்பமில்லை.

தானாகவோ இல்லை நீயாகவோ போராட்டம் முடியவில்லை என்னும் நிலைகள் இன்னும் இருப்பதை அவள் அறியாள்.

வர்ஷினி சிறிது நேரம் உறங்கி எழ, ஈஸ்வர் அதனை கூட செய்யவில்லை.. அம்மாவின் வீடு சென்று அம்மாவை அழைத்து கொண்டு வீட்டின் புண்ணியாஜனதிற்கு நாள் குறிக்கப் போனான்.

பின்பு வீடு சென்று அதனை மேற்பார்வை இட்டு அங்கிருந்த படியே வர்ஷினியையும் கூட அழைத்துக் கொண்டான். இதுவரை ப்ரைவேட் செக்யுரிட்டி எதுவும் இல்லை. இப்போது அதற்கும் ஏற்பாடு செய்தான். அவனிற்கும் வர்ஷினிக்கும்.

“இப்போ எதுக்கு இது” என்று வர்ஷினி கேட்ட போது கூட, “இருக்கட்டும்” என்று விட்டான். வர்ஷாவைப் பற்றி சொல்லக் கூட அவனுக்கு விருப்பமில்லை.

இப்படியாக வேலைகள் சென்று கொண்டிருக்கக.. இரண்டு மூன்று நாட்களில் பத்திரிகையில் ஒரு கிசுகிசு... “இணங்காத நடிகை.. கல்தா கொடுத்த ஐ பி எல் அதிபர்” என்ற வார்த்தைகள்.. கூடவே ஏர்போர்டில் இருவரும் பேசிக் கொண்டு இருக்கும் புகைப்படம்!

அதுவரை பலருக்கு மட்டுமே தெரிந்திருந்த ஈஸ்வர் இப்போது எல்லோருக்கும் தெரிந்தவன் ஆனான்! அப்படி ஒரு விஷயம் வந்தது கூட இவர்கள் யாருக்கும் தெரியவில்லை! நிஷா தான் பார்த்துவிட்டு வர்ஷினிக்கு அழைத்து சொன்னாள்.

தாஸை அனுப்பி அந்த பத்திரிக்கையை வாங்கி வரச் சொல்லி வர்ஷினி பார்த்திருக்க, ஈஸ்வரும் அப்போது தான் ஃபைனான்சில் இருந்து திரும்பினான்.

"என்ன வர்ஷ்?" என்றபடி அருகில் அமர.. மௌனமாக அந்த பத்திரிக்கையை வர்ஷினி கொடுக்க.. பார்த்த அவனுக்குமே அதிர்ச்சி தான். ஆனால் ஒரு சில நொடிகளே.. "தூக்கி போடு வர்ஷ், நாம பாப்புலர் ஆக ஆக இந்த மாதிரி வர்றது எல்லாம் சகஜம் தான்!" என இலகுவாக சொல்ல..

"அதெப்படி இவ்வளவு ஈஸியா விடறீங்க, அந்த பத்திரிக்கை கிட்ட நம்ம கேட்க வேண்டாமா?" என வர்ஷினி கொதிக்க.. இது அவங்களா போட்டாங்களோ? இல்லை அந்த வர்ஷா சொல்லி போட்டாங்களோ? நாம் இதை கவனிச்சம்னா, அவங்க நம்மளை கவனிப்பாங்க! நம்ம ப்ரைவசி போகும், விடு!" என்று சமாதானம் சொன்னான்.

"நீங்க ஏன் அவளை ஏர்போர்ட்ல பார்த்ததை சொல்லலை!" எனக் கோபித்தாள்,

"எனக்கு அது ஒரு விஷயமா தோணவேயில்லை" என்று ஈஸ்வர் விளக்கம் கொடுக்க.. ஆனாலும் வர்ஷினிக்கு மிகவும் கோபம் "எப்படி இவர்கள் அப்படி எழுதலாம்" என,

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே, மலரிடம் இருந்து அழைப்பு, "விஸ்வா, என்ன இது பத்திரிக்கைல!" என,

"உங்க வரைக்கும் விஷயம் வந்துடுச்சா!" என்றவன், "போட்டுட்டாங்க, என்ன பண்ண?" என,

"வர்ஷினி எப்படி எடுத்துகிட்டா?" என்றார் அவர் கவலையாக. அவள் ஏதாவது ஈஸ்வரை பற்றி தப்பாக எடுத்துக் கொள்வாளோ! இப்போது தான் பிரிந்தவர் சேர்ந்து இருக்கின்றனர் என்ற கவலை அவருக்கு.

“அவளா, கோபமா இருக்காம்மா” என பத்திரிகையை மனதில் வைத்து சொல்ல..

மலருக்கு கவலையாகப் போயிற்று.. “அப்படி எல்லாம் ஒண்ணுமில்லைன்னு நீ அவக்கிட்ட சொல்லலலையா” என கவலை தொணிக்கச் சொல்ல..

அதில் சிரித்து விட்டான்.. கோபத்தில் இருந்த வர்ஷினி “என்ன சிரிப்பு?” என.

“அம்மாக்கு பயம் நீ என்னை சந்தேகப்படுவியோன்னு” என,

தலையில் செல்லமாக தட்டிக் கொண்டவள் கைபேசியை வாங்கி, “உங்க பையனுக்கு அந்த அளவுக்கு தைரியமில்லை அத்தை. நான் இந்த உலகத்துல இல்லாம போனாலும் கூட யார் கிட்டயும் போகமாட்டார்!” என,

“என்ன பேசற நீ” என்று ஃபோனில் மலர் கத்த.. இங்கே ஈஸ்வர் “வாயை மூடு” என்று கர்ஜித்தான்.

“ஹி, ஹி” என இருவரிடமும் அசடு வழிந்தவள், “ஒரு வார்த்தைக்கு சொன்னேன்!” என,

“வார்த்தைக்கு கூட சொல்லக் கூடாது. அந்த குப்பையை தூக்கிப் போடு!” என மலர் அதட்ட, அவர் சொல்வதற்கு எல்லாம் “சரி அத்தை, சரி அத்தை” என, கடைசியாக அவர் சொன்னதிற்கும் “சரி அத்தை” எனச் சொல்லி வைத்தாள்.

ஈஸ்வர் கோபமாக இருக்க.. “வாங்க! வாங்க!” என்று அழைத்துப் போய் பூஜை அறையில் நின்று, “ஃபோட்டோ எடுத்து அத்தைக்கு அனுப்பிடுங்க” என்று சொல்லி, தோப்புக்கரணம் போட ஆரம்பிக்க, கோபத்தை விட்டு சிரித்து விட்டான்

ஈஸ்வர். சிறு வயதில் பிள்ளைகள் தப்பு செய்தால் அது மலர் கொடுக்கும் தண்டனை!

அஸ்வினும் கொதித்து வீட்டிற்கு வர, ஈஸ்வர் அவனையும் வெகுவாக சமாதானம் செய்து, அவளை எங்கேயாவது பார்க்க நேரிட்டாலும், இரண்டு பேரும் கண்டு கொள்ளக் கூடாது, சண்டை இடக் கூடாது என வர்ஷினியையும் அஸ்வினையும் மிரட்டி வைத்தான் ஈஸ்வர்.

அந்த வர்ஷாவின் பேட்டி வேறு அடுத்த வார இதழில் வெளியாகி இருந்தது. "நடிகைகள் என்றால் அட்ஜஸ்ட் செய்ய வேண்டும் என்பது நியதியா என்ன? நான் அப்படி கிடையாது. எனக்கு அப்படி எந்த டீமிலும் இருக்க வேண்டிய அவசியமில்லை" என்று ஒட்டு மொத்த நடிகைகளையும் சேர்த்து இழுத்து பிரச்னையை பெரிதாக்கி விட..

ஈஸ்வரை சேர்ந்த எல்லோருமே கொதிக்க, ஈஸ்வர் தான் எல்லோரையும் மீண்டும் சமாதானம் செய்யும் படி ஆகிற்று. "வேண்டாம்! விட்டு விடுவோம்! இப்போதைக்கு இதை பேசினால் மிகவும் சென்சேஷனல் இஸ்ஸூ ஆகிடும்.. இது அடங்கட்டும், பிறகு யோசிக்கலாம்!" என்றான்.

ஆனாலும் வர்ஷினியின் கொதிப்பு அடங்கவேயில்லை!

ஒரு வேலையாக அவளின் நண்பர்களின் ஸ்டுடியோ போக, துரதிஷ்டவசமாக அங்கே அந்த வர்ஷாவும் இருந்தாள். அதுவும் அவளின் நண்பர்களிடம் சண்டையிட்டு கொண்டு!

"எதுக்கு என்னை அந்த விளம்பரத்துல இருந்து எடுத்துட்டீங்க" என,

“எங்களுக்கு விருப்பமில்லை! எங்க காண்ட்ராக்ட் உங்களோட முடிஞ்சது!” என்று அவர்கள் கறாராக பேசிக் கொண்டிருக்க.. அவளின் மேனேஜர் ஏகத்திற்கும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தான்.

வர்ஷினி அஸ்வினுடன் அங்கே வர, “ஓஹ், எல்லாம் இவளால!” என்று வர்ஷா வார்த்தையை விட.. அங்கிருந்த அத்தனை பேருக்கும் கோபம் பொங்கியது.

“என்ன இவளா?” என்று வர்ஷாவை அடிப்பது போல அஸ்வின் செல்ல..

“அடிச்சிடுவியாடா நீ” என்று அந்த மேனேஜர் துள்ள, அந்த மேனேஜரை அடித்தே விட்டான்.

வர்ஷினியின் செக்யுரிட்டி ஆள் வந்து அஸ்வினை பிடித்துக் கொண்டு, “நான் பார்த்துக்கறேன்” என்று மேனேஜர் முன் நின்றான்.

மேனேஜர் பயந்து விட்டான். அந்த இடமே அப்படியே அமைதியாகியது. “சாரி கேள்டா” என அஸ்வின் அப்போதும் கர்ஜிக்க..

சங்கீத வர்ஷினி ஒரு அமைதியான பார்வை பார்த்திருந்தாள். ஆனால் முகத்தினில் ஒரு அழுத்தம் வந்திருந்தது.

“சாரி!” என அந்த மேனேஜர் சொல்ல..

“கூட ஆள் இருக்காங்கங்கற தைரியம்” என்ற வார்த்தையை வர்ஷா, சங்கீத வர்ஷினியை பார்த்து விட..

யாரும் அருகே வர வேண்டாம் என்பது போல சைகை காட்டி.. “என்ன ஆள் இருக்காங்க” என வர்ஷாவின் அருகில் வந்த வர்ஷினி, “இப்போ யாருமில்லை, என்ன பண்ணிடுவ என்னை” என்றாள் இன்னம் அழுத்தமாக.

அவளின் நண்பர்கள் கலவரமாகத் தான் பார்த்திருந்தனர். வர்ஷினியின் கோபம் அவர்கள் அறிந்ததே. மூன்று வருடம் கூடப் பயின்று இருக்கிறார்கள். யாரை பார்த்தும் பயம் என்பது கிடையவே கிடையாது! கையும் நீட்டி விடுவாள்! ஆனால் அஸ்வினிற்கு தெரியாது அல்லவா!

“நீ மேம் எதுவும் பண்ணக் கூடாது” எனக் கத்த,

அவனை திரும்பி பரிதாபமாக ஒரு பார்வை பார்த்தனர். வர்ஷினி கை கட்டி நின்று வர்ஷாவை பார்த்துக் கேட்ட தோரணை ஒரு வகையில் இன்னம் வர்ஷாவை உசுப்பி விட, “பக்கத்துல யாருமில்லைன்னா, உன் கூட உன் புருஷன் இருக்கான்” என,

ஈஸ்வரை அவன் என்று சொன்னதும் கோபம் வர பெற்றவள், “அவன் இவன்னு பேசின, திரும்ப பேச வாய் இருக்காது!” என்றாள் கோபத்தை அடக்கி,

“என்ன மிரட்டறியா?” என வர்ஷா கேட்க,

“நீ எப்படி வேணா வெச்சிக்கோ” என கூர்மையாக அவளைப் பார்த்தபடி சொல்ல..

வர்ஷினியின் கண்களில், அதில் தெரிந்த தீவிரத்தில், அவளை காயப்படுத்தியே ஆக வேண்டும் என்று அந்த நிமிடம் வர்ஷாவிற்கு தோன்ற... அதுவும் இவளின் கணவன் என்னை பார்த்து என்ன சொன்னான்? என் மனைவியின் பெயர் இருப்பதால் டீமில் நீ இருக்கிறாய் என்பது போல.. இவள் என்ன அவ்வளவு பெரிய இவளா?, ஒரு துவேஷம் தோன்ற..

இரண்டு நாட்களுக்கு முன் வர்ஷா நடித்த ஒரு படத்தில் வரும் டைலாக் ஞாபகம் வர, சங்கீத

வர்ஷினியிடம் இருக்கும் மிக அழகான கண்களை இழுத்து....
“இந்த மாதிரி நீல கண்கள் இருக்குற பெண்கள் ஒருத்தனோட திருப்தி ஆகமாட்டாங்களாமே!” என வர்ஷினிக்கு மட்டும் கேட்குமாறு வர்ஷா சொல்ல..
சில நொடி வர்ஷா சொல்ல வந்தது வர்ஷினிக்கு புரியவில்லை! புரிந்த போது.. கோபத்தில் அவளின் முகம் ரத்த நிறமே கொண்டு விட்டது.
“என்ன சொன்ன? தைரியமிருந்தா திரும்பச் சொல்லு!” வார்த்தைகளை கடித்து துப்பினாள்.
வர்ஷினியின் முகம் பார்த்து வர்ஷாவிற்கு பயம் வந்தது, ஆனாலும் சொன்னாள். அடுத்த நொடி வர்ஷினி அறைந்ததில் கீழே விழுந்தாள். அப்படி ஒரு அடி!
வேகமாக நண்பர்கள் ஓடி வர.. அஸ்வின் “என்ன பண்றீங்க” எனக் கத்த .. எதுவும் வர்ஷினியை அசைக்கவில்லை.
வர்ஷாவை நிஷா தூக்க.. அவளின் உதடு கிழிந்து ரத்தம் வந்தது. வர்ஷினியின் கையின் மோதிரம் அவளின் உதட்டை கிழித்து இருந்தது.
“அய்யய்யோ கொல்றாங்க” என அந்த மேனேஜர் ஒரு பக்கம் கத்தினான்.
எழுந்து நின்றவளின் முன் “திரும்ப சொல்லுடி பார்க்கலாம்” என வர்ஷினி நிற்க..
வர்ஷாவிற்கு கோபம், ஆத்திரம், அழுகை, பயம் என அத்தனையும் சேர்ந்து பொங்கியது.
“சங்கீதா எதுன்னாலும் பேசிக்கலாம், இவளை நாங்க சாரி கேட்க சொல்றோம்! அமைதியா இரு!” என நிஷா சொல்லி வர்ஷாவை தள்ளி நிறுத்த..
மோஹித் ஒரு புறம் “அடிக்க வெல்லாம் கூடாது,

என்ன பண்ற?" என வர்ஷினிக்கும் வர்ஷாவிற்கும் இடையில் வந்து மறித்து நின்றான்.

"தள்ளு நீ" என்றாள் அவனையும் பார்த்து கோபமாக,

மோஹித் அப்படியே நிற்கவும், "தள்ளு" என சொல்லி கை வைத்து தள்ளு என்பது போலவும் காட்ட,

"வேண்டாம்! சொன்னா கேளு!" என்று மன்றாடி அவளிடம் சொல்லிக் கொண்டே, "நிஷா, இவங்களை தூர கூட்டிப் போ!" என வர்ஷாவை காட்டிச் சொல்ல,

நொடியில் மோஹித்தை தள்ளி வர்ஷாவின் முன்பு வந்து மீண்டும் நின்று, "சொல்லுடி பார்க்கலாம்!" என சொல்லிக் கொண்டே மீண்டும் அறைந்து விட..

இப்போது வர்ஷினியை பார்த்து பயம் வந்தது வர்ஷாவிற்கு! "இல்லை, இல்லை, சொல்லலை, சொல்ல மாட்டேன்!" என வர்ஷா அழ..

அஸ்வின் வர்ஷினியின் அருகில் வந்து "ஏன் இவ்வளவு கோபம்? என்ன பேசினா? பார்த்துக்கலாம் விடுங்க!" என,

கேட்ட வார்த்தைகளின் தாக்கம் வர்ஷினியுள் சுழன்று அடிக்க யாரிடம் கோபத்தை காட்டுவது என்று தெரியாமல், "வாயை மூடிட்டு போடா!" என்று அஸ்வினையும் அடித்து விடுபவள் போல வர்ஷினி நின்றாள்.

"யு ப்ளடி விச், திரும்ப சொல்லுடி" என நின்றாள். சொன்னால் நீ சாவது உறுதி என்பது போல அந்தக் கண்கள் ஜொலிக்க..

அதற்குள் அந்த மேனேஜர் எதோ காப்பவன் போல அருகில் வந்து "அடிக்கறீங்க, நான் போலிஸ்க்கு

போவேன்" என..

அவன் பேசிக்கொண்டிருந்த போது அவனையும் அறைந்து விட்டாள். அடித்து வர்ஷினி கைகளை உதறிய விதமே அடியின் வேகத்தை சொல்ல.. பார்த்தவர்களுக்கு அவளை எப்படி தடுப்பது என்று தெரியவில்லை. மேனேஜர் தடிமாறி பின்பு நின்றான். "ஆமாண்டா! அடிக்கறேன்! என்ன செய்வ நீ? நீதானே அடிச்சிடுவியான்னு கேட்ட! அடிப்பேன்! இங்க தான் இருப்பேன்! இல்லை எங்க வீட்ல தான் இருப்பேன்!"

"யாரும் என்னோட நிற்க மாட்டாங்க! என் வீட்டுக்காரர், என் ஃபாமிலி, என் ஃபிரண்ட்ஸ்ன்னு யாரும் வரமாட்டாங்க! நீயென்ன நினைச்ச என்னை பத்தி! யாரும் எனக்கு தேவையில்லை. என் பிரச்சனை எனக்கு பார்த்துக்க முடியும்! யாரும் வராம நான் பார்த்துக்கறேன்! என்ன செய்ய முடியுமோ செய்ங்கடா பார்க்கலாம்!" என்று வார்த்தையை அந்த மேனேஜருக்கு கொடுத்தாலும் பார்வை வர்ஷாவிடம் நிலைத்தது!

தேவையில்லாமல் பிரச்னையை இழுத்து விட்டு விட்டோமோ என வர்ஷாவிற்கு பயம் வந்தது.

"என்ன ஒரு குரூர புத்தி உனக்கு? நான் சின்ன வயசுல படிச்ச சூனியக்கார கிழவி மாதிரி பேசற! ஆமா! நீயெல்லாம் உயிரோட இருந்து என்ன பண்ணப் போற? அடுத்தவங்க உன்னை கொல்ற நிலைமையெல்லாம் வெச்சிக்காத! நீயே செத்துப் போயிடு!" என நிற்க..

பார்த்திருந்த எல்லோருக்கும் பயம்! வர்ஷாவிற்கு அப்படி ஒரு பயம்.

இந்த ஒரு வர்ஷினியின் பரிமாணத்தை இதுவரை பார்த்திராத அஸ்வின், பயந்து ஈஸ்வருக்கு கைபேசியில் அழைத்தான்.

## ரௌத்திரம் பழகு!

### அத்தியாயம் தொண்ணூற்றி ஆறு :

## வாழ்க்கையே போர்க்களம்.. வாழ்ந்து தான் பார்க்கணும்.. போர்க்களம் மாறலாம்.. போர்கள் தான் மாறுமா?

ஆனால் ஈஸ்வர் வரும் வரை அவர்கள் இருக்கவில்லை.. வர்ஷினி தன் கவனத்தை வர்ஷா பேசிய வார்த்தையில் வைக்க வர்ஷாவும் அவளின் மேனேஜரும் கிளம்பிவிட்டனர்.

வர்ஷினியின் முகத்தினில் தெரிந்த ஒரு இறுக்கத்தில், அஸ்வின் அணுகும் வகை தெரியாது தூரமாக நின்று பார்த்திருந்தான்.

யாருக்கும் வர்ஷா பேசிய விஷயம் தெரியவில்லை! சிறிது நேரத்தில் தானாக தெளிந்த வர்ஷினி, தன் நண்பர்களிடம், "சாரி, உங்க இடத்துல இப்படி ப்ராப்ளம் பண்ணிட்டேன்!" என மன்னிப்பை வேண்ட..

"என்ன சங்கீதா எங்களை தள்ளி நிறுத்துற?" என்று நிஷா வருத்தம் கொண்டாள்.

"வி ஆர் வித் யு, வர்ஷாக்கு எப்பவுமே பெரிய ஆள்ன்னு நினைப்பு. ஆனா இப்படி காசிப் பேசற ஆசாமி கிடையாது! எல்லாம் அந்த மேனேஜர் வேலையா தான் இருக்கணும்!" என்ற மோஹித்,

"அடிச்சிருக்க வேண்டாம்! கொஞ்சம் பொறுமையா ஹேண்டில் பண்ணியிருக்கலாம். ஏற்கனவே ஈஸ்வர் சர் மேல அவ ஏதேதோ பேசி வெச்சிருக்கா, இந்த மாதிரி விஷயமெல்லாம் ரொம்ப கவனமா

கையாளணும். இப்போ நீங்க அப்பர் ஹேன்ட்ன்றதால, பணம் இருக்குறவங்க, அநியாயம் பண்றாங்கன்னு ஈசியா திசை திருப்பிடுவங்க! அதுவும் மீடியா போனா நமக்கு தான் அசிங்கம்!" என்றான் கவலையாக.

"பார்த்துக்கலாம் விடு மோஹித்!" என்று விட்டாள்.

எவ்வளவு வேகமாக வந்தானோ ஈஸ்வர் சிறிது நேரத்தில் வந்து விட்டான். வந்ததும் வர்ஷினியின் பத்திரத்தை ஒரு பார்வையில் பார்த்தவன், "எங்கே அவங்க?" என்றது தான் அவன் கேட்ட முதல் கேள்வி.

"போயிட்டாங்க!" என அஸ்வின் சொல்ல,

"எதுக்கு போக விட்ட, உனக்கு அறிவில்லை? படிச்சு படிச்சு தானே சொன்னேன்! எந்த பிரச்சனையும் பண்ணக் கூடாதுன்னு" என்று அவனிடம் கத்தியவன்..

அவளின் நண்பர்களிடமும் கடிந்தான் "இவளை பத்தி உங்களுக்கு தெரியாதா! எதுக்கு அவ பக்கம் விட்டீங்க!"

"இப்ப என்ன ஆகும்? எனக்கும் அந்த பொண்ணுக்கும் என்னவோ, அதனால இவ அந்த பொண்ணை அடிச்சிட்டான்னு வரும்!" என்று பேச.. அங்கிருந்த எல்லாருக்குமே அது மாதிரி திரும்பவும் அநேக வாய்ப்புகள் என்று புரிந்தது.

ஒரு கணமான அமைதி.. "எதுக்கு நீங்க இங்க செக்யுரிட்டின்னு" என,

"அவங்களை யாரும் எதுவும் பண்ணாம பார்த்துக்கலாம்! அவங்க யாரையாவது அடிக்கும் போது என்ன செய்ய?" என்றான் அவனுமே..

அத்தனை பேரையும் வறுத்து எடுத்த பிறகு வர்ஷினியை பார்த்தான்.

“அடித்தது நான், நீ என்ன எல்லோரையும் கேள்வி கேட்கிறாய்” என்ற பார்வையை தாங்கி அவள் நிற்க..

“அப்படி என்ன கோபம் உனக்கு! அடிக்கறது தப்பு! அவ பேசினா பதிலுக்கு பேசு. உனக்கு திட்ட வார்த்தையா தெரியாது. எதுக்கு அவங்களை அடிச்ச. இப்ப நாம் காம்ப்ரமைஸ் போனாக் கூட சாரி கேட்கணும். அது தேவையா?” என,

“என்ன? காம்ப்ரமைஸா!!!! போக மாட்டேன்! சாரியும் கேட்க மாட்டேன். இதை நான் பார்த்துக்கறேன். நீங்க எந்த அதிகப் பிரசிங்கிதனமும் பண்ணக் கூடாது. புரிஞ்சதா” என அவள் சொன்ன விதத்தில்,

“முட்டாள்தனம் பண்ணாதே வர்ஷ். அவ மீடியா போனா நமக்கு தான் அசிங்கம்” என்றான்.

“என்ன, என்ன அசிங்கம்? பிரச்சனை ஆகிடுச்சு! இன்னும் அதை பார்த்து என்னால ஓட முடியாது! பின் வாங்கவும் மாட்டேன்! யார் பின்னையும் ஒளிஞ்சு நிற்க மாட்டேன்!” என அழுத்தி சொன்னவள்.. “போகலாமா” என,

“புரியாம பேசாதே! அவ மீடியால என் பேர் சொன்னா எனக்கு ஒன்னுமே கிடையாது! அவ உன் பேர் சொல்றதை நான் விரும்பலை புரிஞ்சதா!” என மிரட்டலாக பேசியவன்..

“அஸ்வின், நீ போ என்னன்னு பாரு! இந்த விஷயம் வெளில வராம பார்த்துக்கோ. எவ்வளவு பணம்னாலும் குடுத்துடு! நீங்க கூட போங்க!” என்று நிஷாவையும் மோஹித்தையும் சொல்ல,

அதுவரை இருந்த அமைதியும் அழுத்தமும் மறைய கோபம் பொங்கப் பெற்றவள்.. “நீ போன அப்புறம் நமக்குள்ள எந்த ஃபிரண்ட்ஷிப்பும் கிடையாது” என்று அஸ்வினை கை நீட்டி மிரட்ட..

அஸ்வின் தயங்கி நின்று விட்டான்.

“அஸ்வின்! உனக்கு அவளோட ஃபிரண்ட்ஷிப் முக்கியமா இல்லை அவ நல்லா இருக்குறது முக்கியமா! வீணா அவ பேரை ஸ்பாயில் பண்ணிக்குவா” என,

அடுத்த நொடி அஸ்வின் யோசிக்கவில்லை, நிஷாவோடும் மோஹித்தோடும் கிளம்பிவிட்டான்.

வர்ஷினியின் முகம் அப்படியே இறுகி விட்டது. அசையாமல் நின்றிருந்தவளை “வீட்டுக்கு கிளம்பு” என ஈஸ்வர் அவளை கைபிடித்து இழுத்து வந்து தான் காரில் தள்ளினான்.

வெளியில் இருந்த தாஸிற்கு எதுவுமே தெரியவில்லை.. “ஏன் பாப்பாவை தள்ளறீங்க?” என்று அவன் ஈஸ்வரிடம் பதறி கேட்க..

“என்னை கேளு! வேற என்ன பண்ணுவ நீ? கார்ல உட்கார்ந்து உட்கார்ந்து தூங்கு! உள்ள என்ன நடக்குதுன்னு கூட தெரிஞ்சிக்காதே!” எனக் கோபப் பட..

“என்னை வேணும்னா அடிச்சிக்கங்க! ஆனா பாப்பாவை தள்ளாதீங்க. நான் உங்க கிட்ட எத்தனை முறை சொல்லியிருக்கேன், பாப்பாவை சிநேகிதப் பசங்களோட சேர விடாதீங்கன்னு” என்று ஈஸ்வரிடம் சண்டை இடுவது போல வாக்கு வாதம் செய்தான்.

“என்ன செஞ்சேன் உங்க பாப்பாவை.. விட்டா அவளை அடிச்சு கொடுமைப்படுத்தற எஃபக்ட்

கொடுக்கற. படிச்சு படிச்சு சொன்னேன் பிரச்சனை வேண்டாம்னு. அவங்களுக்கு ஒன்னும் கிடையாது, நமக்கு மரியாதை இருக்கா இல்லையா" என அவளை திட்டுவதை விட்டு தாஸை திட்டினான்.

யாரு அது என்று தாஸ் கையை முறுக்க..

"தாஸண்ணா" என்ற வர்ஷினியின் ஒற்றை கடினமான அழைப்பில்.. வாயை மூடிக் கொண்டான்.

இவர்கள் காரை கிளப்பிய சில நிமிடங்களில்.. அஸ்வினிடமிருந்து அழைப்பு.. "அவங்க நேரா கமிஷனர் ஆஃபிஸ் போயிட்டாங்க.. மேம் மேல கம்ப்ளைன்ட் குடுக்க போல" என்றான் பதறி.

"என்ன?" என்ற ஈஸ்வர் செய்வதறியாது சில நொடி அப்படியே ஸ்தம்பித்து விட்டான்.

"என்ன?" என்ற அவனின் பதறிய குரலில் ஈஸ்வரின் ஓய்ந்த தோற்றமே தெரிந்தது. "என்ன?" என அவள் கேட்க..

"கமிஷனர் ஆஃபிஸ்க்கு கம்ப்ளைன்ட் கொடுக்க போயிருக்காங்க" என,

"போகட்டும்! அதுக்கு என்ன பார்த்துக்கலாம்?" என்றாள் அலட்சியமாக.

"புரியாம பேசாதே! என்னால நீ கஷ்டப் படறதை எல்லாம் பார்க்க முடியாது! டென்ஷன் ஆகுது!" என இது போல சூழ்நிலைகளை விரும்பாதவனாக அவன் பதட்டத்தில் கண்களை மூடிக்கொண்டான்.

வர்ஷினி என்று வரும் போது ஈஸ்வரால் சிந்திக்கவோ செயல் படவோ முடியவில்லை.

ஈஸ்வரின் பதட்டத்தை பார்த்தவள் "அட, என்ன இது? என்னை யாரும் ஒன்னும் பண்ண முடியாது!"

என அவனை நெருங்கி அமர்ந்து கை பிடித்துக் கொண்டவள்..

“நீங்க எவ்வளவு பெரிய ஆள்! அவங்க யாரு, ஒன்னுமில்லாதவங்கன்ற வார்த்தை எல்லாம் நான் உபயோகிக்க விரும்பலை!”

“நாம தப்பு ஒன்னும் பண்ணலை! பயப்பட வேண்டாம்! எனக்கு ஒன்னும் ஆகாது” என சொல்லும் போதே.. கமிஷனர் ஆஃபிசில் இருந்து போன்.

“மிஸ்டர் விஸ்வேஸ்வரன் வைஃப்ங்களா, ஒரு என்குயரி நீங்க இங்க வர்றீங்களா?” என..

“எஸ் வர்றேன்!” என்றவள்.. “தாஸண்ணா” என்று அங்கே போகச் சொல்லி.. “பத்துண்ணா” என்று அவனையும் கமிஷனர் ஆஃபிஸ் வரச் சொன்னவள்.. “எனக்கு ஒரு பிரச்சனையும் வராது” எனத் திரும்பவும் அவனிடம் சொன்னவள்.. “ஹேய் சியர் அப்” என அவனை பற்றியிருந்த கைகளில் அழுத்தம் கொடுத்தாள்.

ஆனாலும் ஈஸ்வரின் மனம் அடங்கவில்லை.. இப்படி பட்ட சூழ்நிலைகள் பெண் பிள்ளைகளுக்கு வருவதை அவன் விரும்பமாட்டான்.. ஐ பீ எல் எங்குமே வர்ஷினியின் பேர் கிடையாது.. பிலிம் டிஸ்டிரிபியுஷனிலும் அவளின் பேர் பின் தான், பத்துவும் முரளியும் மட்டுமே முன்! மற்ற அவளின் தொழிலுமே இப்போது அப்படி தான்!

நிறைய நிறைய பிரச்சனைகள் தொழில்களில் எப்போதும் வருவதால் அதன் உரிமையாளர் என்ற முறையில் எந்த சிக்கலும் வர்ஷினிக்கு வந்து விடக் கூடாது என்று தான் ஈஸ்வரின் இந்த ஏற்பாடு!

அவன் பார்த்து பார்த்து செய்ய, யாரோ அவளை இழுத்து விடுவதா? ஒரு கோபமும் கனன்ற ஆரம்பித்தது! “இப்போ நீ எதுக்கு போற? நீ வீட்டுக்கு போ! நான் பார்த்துக்கறேன்!” என்றான் கோபமாக.

“நான் தான் போவேன்! நீங்க வரக்கூடாது! அவ சொல்றா, நான் நீங்க இருக்குற தைரியத்துல தான் பேசறேனாம். நீங்க இல்லைன்னாலும் நான் அப்படித்தான்னு காட்டணும்!” என,

“அவளுக்கு உன்னை காட்டி நீ என்ன பண்ண போற? எதுக்கு அவளோட பிரச்சனை பண்ணின? அவ என் பேரை இழுத்து விட்டா விட்டு போறா, அதுக்கு எதுக்கு அடிச்ச?” என்றான் ஈஸ்வர்.

“இன்னும் வர்ஷினியைப் பார்த்து அவள் பேசிய வார்த்தைகள் அவனுக்குத் தெரியவரவில்லை. இப்படி ஏதாவது இருக்கும்” என்ற கோணமும் அவனுக்கு இல்லை.

வர்ஷினிக்கும் அவள் பேசிய வார்த்தைகளை ஈஸ்வரிடம் பகிர்ந்து கொள்ள பிரியமில்லை.

“ப்ளீஸ்! என்னால முடியாதுன்னு தோணினா, அடுத்த நொடி நீங்க என்ன சொன்னாலும் கேட்கறேன்!” என.. அந்த குரலில் இருந்த புரியாத பாவனை, எதோ உணர்த்த, “ஏன் அவளை அடிச்ச?” என்றான் ஈஸ்வர்.

“அடிச்சிட்டேன் விடுங்க! நீங்க இப்படி பயம் கொடுத்தா நான் என்ன செய்வேன்?” என்றாள்.

ஆழ மூச்செடுத்தவன் “ஓகே, ஃபைன் பார்த்துக்கலாம் விடு!” என்று அவளின் கைகளை எடுத்து மடியில் வைத்துக் கொண்டவன், “அவ ஒரு

ஆள்ன்னு! சே! அவள்ளாம் நமக்கு ரைவல்ரியா" என்று அப்போதும் சொன்னான்.

வர்ஷினி பின்பு எதுவும் பேசவில்லை. கமிஷனர் ஆஃபிஸ் வந்து இறங்கி இருவரும் உள்ளே சென்ற போதும், அவள் மட்டும் தான் தனியாக அந்த இன்குயரி நடக்கும் இடம் சென்றாள்.

மிகவும் கடினமான நிமிடங்கள் ஈஸ்வருக்கு!

அவன் அங்கே ஓரிடத்தில் அமர்ந்து கொள்ள.. யாரென்று தெரியாத யுனிபார்ம் போட்ட ஆட்கள் அவனுக்கு வணக்கம் வைத்து போக.. பதிலுக்கு மரியாதையாக அவனும் வணக்கம் செலுத்தினாலும், யாரோடும் பேச விருப்பமில்லாமல் அமர்ந்து கொண்டான்!

அங்கே தான் அஸ்வினும் நிஷாவும் மோஹித்தும் இருந்தனர். ஆனாலும் அவர்களை உள்ளே உட்கார எல்லாம் அனுமதிக்கவில்லை. இப்போது ஈஸ்வர் வரவும் அவர்கள் பக்கத்தில் வர, அவனின் ஆட்கள் என்று தெரிந்த பிறகே அனுமதித்தனர்.

"யார் என்குயரி பண்றா?" என ஈஸ்வர் கேட்க.. அவர்கள் சொன்ன பெயரில் ஒரு ஆசுவாசம் வரப் பெற்றான் ஈஸ்வர். அஸ்வினுமே நிம்மதியாக உணர்ந்தான்.

வர்ஷினி அந்த ரூமின் உள் செல்ல, அதுவரை இருந்த தைரியம் குறைந்து ஒரு கலக்கம் வந்தது.

உள்ளே நுழைந்த வர்ஷினியை தான் அந்த சேரில் அமர்ந்தவன் விடாது பார்க்க.. அவனை வர்ஷினிக்குத் தெரியவில்லை.. அருகில் சென்றவுடனே கை குவித்து வணக்கம் என்பது போலச் சொல்ல.. தலையசைத்து அதை ஏற்றவன்.. "உட்காருங்க" என இருக்கையை காட்டினான்.

அப்போது தான் இன்னொரு இருக்கையில் வர்ஷா அமர்ந்து இருந்ததையே பார்த்தாள்.

“அடிச்சீங்களா” என்றான் நேரடியாக.

“ஆம்” என்பது போல உடனே ஒத்துக் கொண்டாள்.

ஏன்?”

“தப்பா பேசினாங்க, அடிச்சேன்!” என,

“என்ன தப்பா பேசினாங்க?” என்றான்.

வர்ஷினி பதிலே பேசவில்லை. ஆனால் அமர்ந்து இருந்த பாவனையில் அதெல்லாம் சொல்ல முடியாது என்ற பிடிவாதம் தெரிய...

“என்ன பேசினீங்க?” என்றான் வர்ஷாவைப் பார்த்து.. அவன் கேட்கும் போதே வர்ஷினி திரும்பி வர்ஷாவை பார்த்த பார்வை “சொல்லிவிடுவாயா நீ?” என்ற மிரட்டல் அப்பட்டமாய் இருந்தது.

வர்ஷாவுமே அதை எப்படி சொல்லுவாள்? அவளை காயப் படுத்த சொன்னது.. திரும்ப சொல்லும் தைரியம் வரவில்லை.

“ஊருக்குள்ள ஆயிரத்தெட்டு விஷயம் இருக்கு. இதை எனக்கு பார்க்கணும்னு எதுவும் கிடையாது. ஆனாலும் பார்க்கறேன்னா அதுக்கு காரணம் வேற”

“இல்லை, எனக்கொன்னுமில்லை! இவங்க இனிமே என்னை எதுவும் செய்யாம இருந்தாப் போதும்! என்னை விட்டுடச் சொல்லுங்க!” என வர்ஷா சொல்ல,

“ஊருக்குள்ள அவ்வளவு பெரிய ரௌடின்னா நீ ஃபார்ம் ஆகியிருக்க?” என்ற கேள்வி கேட்கப்பட.. கேட்ட த்வனி மிரட்டினாலும், அந்த முகம் அவளை மிரட்டவில்லை.

எதிரில் இருப்பவருக்கு என்னை தெரியுமோ என்ற சந்தேகம் வர.. வர்ஷினி அவனை ஊன்றி கவனித்தாள்! ம்கூம்! அவனை பார்த்தது போலவும் இருந்தது! ஆனால் தெரிந்தது போலவும் இல்லை!

அவனின் பேர் இருந்த பலகையைப் பார்க்க அதில் வெங்கட ரமணன், ஐ பீ எஸ், கமிஷனர் ஆஃப் போலிஸ், என்றிருந்தது. மூன்று நான்கு வருடங்களுக்கு முன்பு சென்னையில் கல்லூரியில் படித்து இருந்த போது இந்த பெயர் மிகவும் பிரசித்தம்.

“கம்ப்ளைன்ட் எல்லாம் இவங்க குடுக்கலை. நீங்க எதுவும் பண்ணாம இருக்க ப்ரொடக்சன் கேட்கறாங்க” என,

“என்ன பண்ணிடுவோம்? நாங்க ஒன்னும் பண்ண மாட்டோம்!” என்றாள்.

“அது எனக்கு தெரியும்! அவங்களுக்கு தெரியாது இல்லையா? சோ, உங்க வாய் மொழியா சொல்ல கேட்டேன்” என்றவன் வர்ஷாவிடம் திரும்பி..

“இவங்க எதுவும் பண்ண மாட்டாங்க! நான் பொறுப்பு! இவங்கனால உங்களுக்கு பயம் வேண்டாம். அண்ட் சீப் பப்ளிசிட்டி எல்லாம் வேண்டாம்! நான் லாஸ்ட் வீக் வந்த காசிப், உங்க பேட்டி எல்லாம் பார்த்தேன்!” என்று நிறுத்தினான். வர்ஷாவின் முகத்தினில் குற்ற உணர்ச்சி அப்பட்டமாய் தெரிந்தது.

“பொதுவா நான் இதை பார்க்கறது இல்லை. என் மனைவி தான் காட்டினா. இதென்ன ஈஸ்வரை பத்தி யாரு இப்படி பேசறான்னு கோபம். அவரை பார்த்த எல்லோருக்கும் அவரை தெரியும். அவர்

ஒரு பொண்ணை ஆசைக்கு இணங்க சொல்றார்ன்றது சுத்தப் பைத்தியக்காரத்தனம்”

“அப்போ உங்களை தான் தப்பா நினைப்பாங்க. கவனமா இருங்க. மேனேஜர்ன்னு எவனாவது சொல்றது கேட்டு நடக்க வேண்டாம். இப்ப நான் அவனை துரத்தி விட்டது துரத்தி விட்டதாவே இருக்கட்டும்!”

“ரெண்டு மாசம் முன்னே ஒரு பிரச்சனைன்னு வந்தீங்க! உடனே சால்வ் பண்ணிக் கொடுத்தேன் இல்லையா?”

“ஆம்” என்பது போல தலையாட்டினாள் வர்ஷா!

ஆம்! விளம்பரத் துறையில் இருந்தவளுக்கு அடிபணிய சொல்லி சில சிக்கல்கள். அந்த நேரம் தான் ஐ பி எல் மேட்ச், விடியோ ஷூட் எல்லாம். அந்த மனஉளைச்சலில் தான் போகவில்லை. அந்த காரணத்தை சொல்லவும் முடியவில்லை. மிகவும் ஒருவன் அவளை தொந்தரவு கொடுக்க...

அப்போது தான் முதல் முதலில் ரமணன் உதவியை நாடினாள். பெண்களுக்கு வரும் தொந்தரவுகளுக்கு உடனே உதவுவான் எனக் கேள்விப்பட்டு! மூன்றே நாட்களில் ரமணன் அதை முடித்திருக்க அந்த தைரியத்தில் இப்போது திரும்பவும் வந்தாள்.

“முன்னே சொன்னீங்க, அது உண்மைன்னு எனக்கு தெரியும் ஹெல்ப் பண்ணினேன்! ஆனா இப்போ நீங்க இவங்க எல்லோர் மேலயும் சொல்றது அபத்தம். ஆனாலும் இவங்க அடிச்சது தப்பு. இனி உங்களை எதுவும் செய்ய மாட்டாங்க!” என,

தலையசைத்த வர்ஷா, ஆனாலும் கலவரமாகப் பார்க்க.. “பயம் வேண்டாம்” என்றவன்.. “இது என்

பெர்சனல் நம்பர், நீங்க என்ன பிரச்சனைன்னாலும் உடனே கூப்பிடுங்க” என்றான்.

“பேசினதுக்கு சாரி கேளுங்க! நீங்க அடிச்சதுக்கு சாரி கேளுங்க!” என பஞ்சாயத்து பேச,

வர்ஷா உடனே “சாரி” என்று விட.. வர்ஷினி அமைதியாக தான் இருந்தாள், சாரி கேட்கும் எண்ணமும் இல்லை!

ரமணன் வர்ஷினியை பார்க்க. “அவங்க திரும்ப எதுவும் பேசாம இருந்தா, அவங்களுக்கு என்னால எந்த பிரச்சனையும் வராது கண்டிப்பா! ஆனா அடிச்சதுக்கு சாரி எல்லாம் கேட்க மாட்டேன்!” என்றாள். குரலிலுமே ஒரு அடக்கப்பட்ட கோபம். அது நேர்மையானவர்களிடம் தென் படும் கோபம்..

மூன்று வருடங்களுக்கு முன்பு மயக்கமாய் பார்த்த வர்ஷினி அவனின் ஞாபகத்தில் வந்தாள். அப்போது அந்த நீல நிறக் கண்களை பார்த்திருந்தான். ஆனால் வெகு சில நிமிடங்கள். இப்போது நன்றாகப் பார்த்தான். அப்போது சொருகிய தெளிவில்லாத கண்கள். இப்போது தெளிவாய் இருந்தது. அதில் ஒரு காந்த சக்தி கூட!

வர்ஷினி அழகான பெண் என்றாலும் “இந்தக் கண்ணை பார்த்து தான் அந்தப்பய பைத்தியமா சுத்தறான் போல, இந்த பொண்ணு மேல” என்று ரமணனிற்கு தோன்றியது.

**வராது வந்த நாயகன் -ஒரே சிறந்த ஓர் வரன்**
**தராதரம் புரிந்தவன் நிரந்தரம் நிறைந்தவன்**
**வரம் தரும் உயர்ந்தவன் கரம் கரம்**
**இணைந்தவன் இவன் தலைவி நாயகன்**

**அத்தியாயம் தொண்ணூற்றி ஏழு :**

## பார்வைகள் கண்கள் பார்த்தாலும் அதை உணருவது மனம்!

“யார் கூட வந்தீங்க?” என்றான் கூர்மையாக.

“என் ஹஸ்பன்ட் வெளியே இருக்கார்”

ஒருவரை அழைத்து ஈஸ்வரை வரச் சொல்ல.. வந்தவன் ரமணனுக்கு மிகவும் மரியாதையாக வணக்கம் சொன்னான். ஒரு சிறு தலையசைப்போடு ஏற்று கொண்டவன், “இவங்க பேசினதுக்கு சாரி கேட்டுட்டாங்க, ஆனா இவங்க அடிச்சதுக்கு சாரி கேட்க மாட்டேன் சொல்றாங்க!” என,

“என்ன கம்ப்ளைன்ட் சர் இவங்களது?” என்றான் வர்ஷாவைக் காட்டி.

“கம்ப்ளைன்ட் எல்லாம் இல்லை, நீங்க எதுவும் பண்ணிடக் கூடாதுன்னு ப்ரொடக்ஷன் கேட்கறாங்க”

“எதுவுமே பண்ண மாட்டோம் சர் கண்டிப்பா. ஏன் இவ சாரி கேட்க மாட்டேன்னு இவ்வளவு பிடிவாதம் பிடிக்கறான்னு தெரியலை. ஆனா சின்ன சின்ன விஷயத்துக்கெல்லாம் நிதானம் இழக்க மாட்டா. அவ சார்பா அடிச்சதுக்கு நான் மன்னிப்பு கேட்டுக்கறேன். இந்த பொண்ணு தேவையில்லாதது எல்லாம் பேசித் திரியுது. இவங்க பப்ளிசிட்டிக்கு நாங்க ஆள் கிடையாது. என்னை பத்தி எதோ பேசினா விட்டுட்டேன். ஆனா வர்ஷினிய இழுத்தா நான் சும்மா விடமாட்டேன்” என தீர்மானமாக கோபமாக சொன்னான்.

யாரோ என்னவோ செய்து கொள்ளுங்கள் எனக்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை என்பது போல அமர்ந்திருந்தாள்.

“இல்லையில்லை, சாரி எல்லாம் வேண்டாம் சர்” என்று வர்ஷா சொல்லி, ஒருவாறு சமாதானமாகி விடைபெற்று கிளம்பினாள்.

அவளை பார்த்த வர்ஷினி.. “நான் அடிச்ச அடி, மேக்சிமம் ஒரு வாரம் இருக்குமா, ஆனா நீங்க சொன்ன வார்த்தை..” என நிறுத்தி நேர் பார்வை பார்வை பார்க்க..

“சாரி” என்றாள் வர்ஷா இரு கை கூப்பி..

“உங்க பேட்டில கூட நடிகைன்னு நாங்க இல்ட்ரீட் பண்ணிட்டோம்னு சொன்னீங்க. நடிகைன்ற டெர்மினாலஜி என் வாழ்க்கைல ரொம்ப முக்கியம். மத்தவங்க அதை தப்பா பேசறதையே நாங்க விரும்ப மாட்டோம். இதுல உங்களை நாங்க பேசுவோமா?”

“நம்ம மரியாதை, நம்ம நடந்துக்கற விதத்துல தான் இருக்கு” என,

“சாரி” என அழுத விழிகளோடு மீண்டும் வர்ஷா கேட்க, ஏனோ அவளை பார்க்க வர்ஷினிக்கு பாவமாக இருந்தது.

“நான் இவங்களை பத்திரமா அனுப்பிட்டு வர்றேன் சர் என வர்ஷினி கேட்க.. வர்ஷாவின் விழிகளில் மிரட்சி,

“ஒன்னும் பண்ணமாட்டாங்க!” என ரமணன் வாக்குறுதி கொடுக்க.. “இவர் என்ன எனக்கு இவ்வளவு பேசுகிறார், என்னை அவ்வளவு தெரியுமா? இல்லை ஈஸ்வருக்காகவா?” என்பது போல வர்ஷினி பார்க்க, “செல்லுங்கள்” என்பது போல ரமணன் தலையசைத்தான்.

அதுவரை இறுக்கமாக போலிஸ் ஆஃபிசராக இருந்த ரமணன் அவர்கள் போகவும், ஈஸ்வரை

பார்த்து சிரித்தான். “ஒரு வழி பண்றாங்க போல” என,

“எஸ் சார், கொஞ்சம்! கொஞ்சம்!” என்றான் தடுமாறியபடி.

“கொஞ்சமா? ஹ, ஹ,” என்று ரமணன் பெரும் குரலெடுத்து சிரித்தான்.. எஸ்! சென்னை சிட்டி கமிஷனர் வெங்கட ரமணன். அப்போது ஜாயின்ட் கமிஷனர். இப்போது கமிஷனர் சட்டம் ஒழுங்கு. நமது தலைவியின் நாயகன்.

இவன் அவ்வளவு காப்பாற்றி விட்ட பெண்ணின் பெயர் திரும்ப இந்த விஷயத்தில் அடிபட வேண்டாம் என்ற எண்ணம் தான் பேச வைத்தது. அதுவுமில்லாமல் வர்ஷா கம்ப்ளைன்ட் செய்யவில்லை. ப்ரொடக்ஷன் தான் கேட்டாள்.

“என்னை அவளுக்கு தெரியவேயில்லை” என சொல்லிய குரலில் சிறிது ஆதங்கம் கூட. வர்ஷினிக்கு எங்கே ஞாபகம் இருக்கும், அவள் தான் போதை மாத்திரையின் பிடியில் இருந்தாளே.

“நாங்க அதுக்கு பின்ன அதை பத்தி பேசினதே இல்லை” என்றான் சற்று இறங்கிய குரலில் ஈஸ்வர். பேசும் சந்தர்ப்பத்தை வர்ஷினி அப்போது கொடுக்கவேயில்லை.

“அந்த பையன் அவன் எங்கே?”

“அஸ்வின் எங்க கூட தான் இருக்கான், அப்போயிருந்தே!” என

அதற்குள் உள்ளே வந்தாள் வர்ஷினி. “நிஷா அண்ட் மோஹித் கூட அனுப்பிட்டேன், என் பிரண்ட்ஸ் அவங்க!” என ரமணனிடம் விளக்கம் கொடுத்தவள், “உங்களுக்கு என்னை தெரியுமா சர்” என,

“நாலு வருஷம் முன்ன ஒரு ஆக்சிடென்ட்ல இருந்து உங்களை ரெஸ்கியூ பண்ணினேன். அஸ்வின் அவனை ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணிட்டு, உங்களை என் வீட்ல வெச்சிருந்தேன். அன்னைக்கு நைட் உங்க கார் வெச்சு உங்க வீட்டுக்காரரை ட்ரேஸ் செஞ்சு, உங்களை ஒப்படைச்சேன்” என நீளமாகப் பேசினான்.

எப்படி இவரை தெரியாமல் போய்விட்டது என யோசித்தபடி “எனக்கு அப்போ கான்ஷியஸ் இருந்ததா?” என.

“இருந்த மாதிரி தான்!” என ரமணன் ஒரு மென்னகை புரிய,

தானாக ஆதரவு தேடி ஈஸ்வரின் கையினில் கை கோர்த்துக் கொண்டவள், “இருந்திருக்காது! கொஞ்சம் ஹெவி டோஸ்! அன்னைக்கு எனக்கு உயிர் வாழற ஆசை இல்லை!” என்றாள் கம்மிய குரலில்.

“இன்னும் அந்த பழக்கம் இருக்கா?”

“இல்லை” என்பது போல தலையசைத்தவளிடம்,

ரமணன் வேறு எதுவுமே கிளறவில்லை.. “இப்போ எப்படி இருக்கு லைஃப்?” என,

“சந்தோஷமா இருக்கேன்! இன்னைக்கு இந்த பொண்ணு என்னை கொஞ்சம் டிஸ்டர்ப் பண்ணிட்டா!” என சொல்லும் போது கரகரவென்று கண்களில் இருந்து நீர் இறங்கியது. அதுவே காட்டிக் கொடுத்தது ஈஸ்வருக்கு வேறு எதோ இன்னும் பெரிதாக என்பது போல,

“ஹேய் வர்ஷ், என்ன இது?” என்று அவளின் கைகளை அழுத்திப் பிடிக்க.. சுதாரித்து கண்களை துடைத்துக் கொண்டாள்.

“இது எனக்கு சின்ன விஷயமா, பெரிய விஷயமா தெரியாது. ஆனா எந்த விஷயமா இருந்தாலும் நம்மை இவ்வளவு கொண்டு போக விடக்கூடாது”

“அன்னைக்கு ஏன் நீ சாகர மனநிலைல இருந்த எனக்கு தெரியாது. ஆனா அப்படி ஒரு நிலைமை உனக்கு அவசியமேயிலை. உன்னை சுற்றி நல்ல மனுஷங்க, உன்னை எங்கயும் விட்டுக் குடுக்காத மனுஷங்க இருக்காங்க”

“நமக்கு எப்பவுமே நம்ம கஷ்டம் தான் பெருசா தெரியும்! ஆனா இதை விட கஷ்டங்கள் இருக்குறவங்க அநேகம் பேர். உனக்கு ஒரு பிரச்சனை வரும் போது உன் பார்வையில பார்க்காதே, அடுத்தவங்க பார்வையில பார்! ஈசியா அதை ஹேண்டில் பண்ண முடியும்!”

“எனக்கு நீ என்ன பண்ணிட்டு இருக்கேன்னு தெரியலை. ஆனா உன் வீட்டுக்காரன் ரொம்ப பெரிய பொசிஷன்ல இருக்கான். சோ, அவனை கவனிக்கறவங்க நிறைய பேர். நீ சின்னதா செய்யற விஷயம் கூட பெருசா எல்லார் பார்வைக்கும் தெரியும்! கவனமா இருக்கணும்!” என,

“ம்ம்” என்பது போல தலையாட்டினாள்..

“ஆண்களோ, பெண்களோ, தனி மனித ஒழுக்கம் ரொம்ப முக்கியம்! உன்னோடது ஒழுக்கம் தவறின செயல்ன்னு நான் சொல்ல வரலை, அது ஒரு தவறான பழக்கம் அவ்வளவு தான்! ஆனா ஒழுக்கம் தவறின ஆண்களுக்கு கிடைக்கற மன்னிப்பு, தவறான பழக்க வழக்கங்கள் கொண்ட பெண்ணுக்கு கிடைப்பதில்லை. ஏன் தவறே எதுவும் செய்யாத பெண்கள் கூட பல பழி சொல்லுக்கு ஆளாகிடறாங்க!”

“குடிப் பழக்கம் இருக்குற ஆண் மகனை சமுதாயம் என்ன கீழயா பார்க்குது, ரொம்ப குடிச்சிட்டு விழுந்தா தான் பார்க்கும். ஆனா எப்போவாவது கூட பெண்கள் குடிக்க முடியுமா, யோசிச்சுப் பார், மத்தவங்க பார்வையில் ரொம்ப கீழ இறங்கி போய்டுவ நீ”

“உண்மையை சொல்லணும்னா, நானே இந்த மாதிரி பழக்க வழக்கம் இருக்குற பொண்ணை மரியாதையா பார்க்க மாட்டேன். அதுக்கு பின்னாடி என்ன காரணமோ ஆராய மாட்டேன். ஆனா உன்னை அப்படி என்னால கொஞ்சமும் நினைக்க முடியலை! இதுக்கும் நீ யார்னே எனக்குத் தெரியாது!”

“வாழ்க்கை உனக்கு குடுத்திருக்கிற பெரிய வரம் இது!”

அவளை விட்டு ஈஸ்வரிட்ம் திரும்பியவன், “எனக்கு என்ன பிரச்சனை? ஏன் அவளுக்கு இந்த பழக்கம் வந்தது? சாக ஏன் விரும்பினா? தெரியலை! ஆனா எதுவா இருந்தாலும் நீங்க தான் காரணம்!” என்றான் ஈஸ்வரை நேர் பார்வை பார்த்து.

ஈஸ்வர் அதை ஏற்றுக் கொள்ளும்படி அமைதியாக இருக்க, வர்ஷினி தான் மறுத்து ஏதோ பேச வந்தாள்.

“நீ தலையிடாதே” என்று ஒற்றை விரல் அசைத்து அவளை அடக்கிய ரமணன், “உங்களை ஹர்ட் பண்ணனும்னு, இல்லை தப்பு சொல்லணும்னு சொல்லலை! உண்மையில் எனக்கு என்னன்னு தெரியவே தெரியாது. ஆனா நான் ஒரு ஆண்மகனா உங்களை தான் சொல்லுவேன். உங்க மனைவி அவளுக்கு இந்த மாதிரி ஒரு யோசனை வந்ததுனா நீங்க தான் நிச்சயம் ரீசன்!”

“இது உங்க ரெண்டு பேர் மேல இருக்குற ஒரு அக்கறையில சொல்றேன். இப்போ சரியாகியிருக்கும்னு நம்பறேன். இந்த மாதிரி இனிமே எப்பவும் வரக் கூடாது!” என்றான் ஈஸ்வரை பார்த்து.

“வராது” என்பது போல ஈஸ்வர் தலையசைத்தாலும் இந்த நேரடி குற்றச்சாட்டில் மனதிற்கு கஷ்டமாக இருந்தது.  ஈஸ்வரை குற்றம் சொல்லவும் வர்ஷினி சற்று ரமணனை முறைத்துப் பார்த்தாள், அந்த பார்வையில் சிரித்து விட்டான் ரமணன்.

“இது ஆணாதிக்க உலகம்ன்றதை விட, ஆண்களை ஆதிக்கவாதிகளா ஏற்றுக் கொள்கிற பெண்களின் உலகம்!” என வர்ஷினியை பார்த்து சொன்னான். இன்னுமே விழிகளில் வர்ஷினி முறைப்பை காட்ட.. “ஹ ஹ” என இன்னும் சிரித்தவன், “உன் வீட்டுக்காரரை நான் எதுவும் சொல்லலை போதுமா” என்றான்.

வர்ஷினி முறைப்பை கைவிட.. “இந்தப் பொண்ணை சந்தோஷமா வெச்சிக்கங்க விஸ்வேஸ்வரன்.. உங்களை சொன்னா என்னை முறைச்சு பார்க்கறா” என,

ஈஸ்வருக்கு மனம் சற்று லகுவாகியது.

“ஒரு நாள் எங்க வீட்டுக்கு லஞ்ச்க்கு வாங்களேன், வரா உன்னை பார்த்தா சந்தோஷப்படுவா. நீ மயக்கமா இருந்தப்போ இந்த பொண்ணு பொம்மை மாதிரி இருக்கான்னு சொல்லிட்டே இருப்பா. அதுவும் நீ கண்முழிச்சப்போ உன்னோட கண் பார்த்துட்டு அவ ஃபிளாட் தான் போ!”

“நாங்க கொஞ்சம் நாள் தான் இருந்தோம், திரும்ப மதுரை ட்ரான்ஸ்பர் ஆனேன்.. திரும்ப இங்க வந்து

த்ரீ மந்த்ஸ் தான் ஆகுது. இங்கேயே இருந்திருந்தா கொஞ்சம் நாள் கழிச்சு நாங்களே வந்து மீட் பண்ணியிருப்போம்!" என நீண்ட விளக்கம் கொடுத்தான்.

அவனுக்கு வர்ஷினியை பிடித்திருந்தது. ஏனென்று சொல்லத் தெரியாமல். பெண்ணாய் போய்விட்டதால், அதனால் நட்பு பாராட்ட முடியவில்லை என்பது தான் உண்மை. அதனால் உதவி செய்த பிறகு அதனை கடந்து வந்து விட்டான். இப்போது பார்க்கவும் நன்றாய் பேசுகிறான்.

அன்றைக்கு அந்த ஆக்சிடென்ட் பார்த்த போது.. ஒரு முறை ஸ்ரீதரும் வராவும் சென்று ஆக்சிடெண்டில் மாட்டி அவன் காப்பாற்றிய நினைவுகள் தான். அதுதான் அஸ்வின் சொல்லவும், இவனும் வர்ஷினியை உடனே தூக்கி யாரென்று தெரியாமலே தன்னுடைய வீட்டிற்கே பத்திரமாக கொண்டு வந்து விட்டான்.

எந்த பிரச்சனையும் அவளை அணுகாமல், அவள் அந்த இடத்தில் இருந்ததே யாருக்கும் தெரியாமல் பார்த்துக் கொண்டான். அந்த இரு இளைஞர்களும் ஆக்சிடண்டில் இறந்து விட, இதில் அரசியல்வாதியின் பையன்கள், அதில் இவர்கள் பெயர் எதிலும் வராமல் பார்த்துக் கொண்டான்.

வர்ஷினியை தூக்க முற்பட்டு தான் எல்லாம் அந்த சமயத்தில் என்பது அஸ்வின், ஈஸ்வர், ரமணன் அண்ட் வர்ஷினி தவிர வேறு யாருக்கும் தெரியாது. அவளுக்கும் தெரிய வந்திருக்காது! ஆனால் போதை அது இதென்று எந்த செயலிலும் வர்ஷினி ஈடுபடக் கூடாது, மற்றும் கத்தி குத்து வாங்கி அவளை காப்பாற்றிய அஸ்வினின் செய்கையும்

அவளுக்கு தெரியாமல் இருக்கக்கூடாது என்று ஈஸ்வர் அதனை சொல்லி விட்டிருந்தான்.

“சாரி சர், எனக்கு எதுவுமே தெரியலை அப்போ! தெரிஞ்சிக்கவும் நான் விரும்பலை! இவர் கிட்ட இருந்து பிரியறதுலயே முழு கவனமா இருந்துட்டேன்!” என்றாள்.

“நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் சங்கீத வர்ஷினி. உன்னை சுற்றி உன்னை எதுவும் அணுகாமல் பார்த்துக்குற நல்ல மனிதர்கள் இருக்காங்க! ஏன் நான் உட்பட! நீ யார் என்னனு எனக்குத் தெரியாது! ஆனாலும் செஞ்சேன்! அன்னைக்கு நீ எங்க பார்வையில எல்லாம் படாம அந்த பசங்ககிட்ட மாட்டியிருந்தா என்ன ஆகியிருக்கும்?”

“பயம் வேணும்! பெண்களுக்கு கண்டிப்பா பயம் வேணும், இந்த மாதிரி விஷயங்கள்ல! வீணா பிரச்சனையில மாட்டிக்கக்கூடாது!”

“அன்னைக்கு இவர் உன்னை தேடி தவிச்ச தவிப்பை நான் பார்த்திருக்கேன். ஒரு வார்த்தை கூட உன்னை குற்றம் சொல்லாம ப்ரொடக்ட் பண்ணினார். அது எல்லோராலும் கண்டிப்பா முடியாது!”

“ஒரு முறை என்னோட வரா டீன் ஏஜ்ல இருக்கும் போது ஒரு டான்ஸ் கிளாஸ் போனா. அங்கே அவ பழகற ஆட்கள், அந்த சூழ்நிலை பார்த்தே அவளை மட்டும் இல்லை, அவளோட அம்மா அண்ணானு எல்லோரையும் ஒரு வழி பண்ணினேன்!”

“நீ என்னடானா ட்ரக்ஸ் எடுத்துட்டு, ஒரு பப்ள போய் உட்கார்ந்து இருக்க! இவர் உன்னை ஒரு வார்த்தை கூட சொல்லலை!” என்று ஈஸ்வரையும் சாட,

“அவ்வளவு நல்லவர் எல்லாம் இல்லை, என்னை அடிச்சிருக்கார், திட்டியிருக்கார், அந்த நேரத்துல ஒன்னும் சொல்லலை, ஏன்னா என்னை பத்தி தெரியும்! திட்டினா திரும்ப செய்வேன்னு!” என்று ஒரு முறுவலோடு ஈஸ்வரின் கைகளை இறுக்கியபடி சொல்ல.. ஈஸ்வர் முகத்திலும் ஒரு புன்னகை!

“என்ன நாம காரணங்கள் சொல்லிக்கிட்டாலும், தப்பு! தப்பு தான்!” என ரமணன் சொல்ல..

“ஆம்” என்பது போல ஆமோதித்தாள்.

“கணவன்னு ஒருத்தன் காதல்ல உனக்காக செய்யறது வேற. ஆனா மத்தவங்களும் உன்னை நல்லா பார்த்துக்கறாங்க!”

“நம்ம கிட்ட எல்லாம் இருக்கும்னு நினைச்சா இருக்கு, இல்லைன்னா இல்லை. நம்முடைய வாழ்க்கை மீதான பார்வைகள் தான் நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்.. இந்த வாழ்வை முடிச்சிக்குற எண்ணம், பிரியற எண்ணம், இல்லை வேற பழக்க வழக்கங்கள் எல்லாம் இனிமே எப்பவும் உனக்கு வரக் கூடாது” என சற்று கடினமாகவே கூறினான்.

“ம்ம்” என அவளும் ஸ்திரமாக ஒரு வாக்குறுதி கொடுக்க, அதன் பிறகே விட்டான் ரமணன்.

பின்பு ஈஸ்வரிடம் கை குலுக்கி, “இன்னும் இன்னும் நீங்க வாழ்க்கையில வளர என் வாழ்த்துக்கள்” என..

வர்ஷினியின் ஹாலிவுட் படம், பிறகு ஃபிலிம் டிஸ்டிரிபியுஷன் என எல்லாம் ஈஸ்வர் பெருமையாக சொல்ல..

“ம்ம், குட் வொர்க்.. இவ்வளவு திறமை இருக்குற பொண்ணு எந்த சின்ன விஷயத்துலையும் சறுக்கக் கூடாது” என்றான்.

“ஓஹ், எஸ்!” என்று ரமணனை பார்த்து கை நீட்ட, அவளின் கைகளை பற்றி ரமணன் குலுக்க, மற்றொரு கையாலும் அவனின் கைகளை பிடித்துக் கொண்டவள், “தேங்க் யு வெரி மச், அன்னைக்கு எனக்கு எதுவும் ஆகாம, என்னோட பேர் எதுலயும் வராம  பார்த்துக்கிட்டதுக்கு” என்றாள்.

வர்ஷினியின் நெகிழ்ச்சியை புரிந்தவன், “இனிமே அந்த மாதிரி எதுவும் ஆகாது. நான் சொல்றேன் நீ நல்லா இருப்ப” என,

“ம்ம்” என தலையசைத்த வர்ஷினியை.. அணைவாய் பிடித்துக் கொண்ட ஈஸ்வர், “அந்த மாதிரி ஆகவே ஆகாது! என அவனும் சொல்ல..

“வீட்டுக்கு வாங்க” என்று அழைப்பு விடுத்தான் ரமணன்.

மீண்டும் பல முறை நன்றி கூறி, வெளியில் வந்தனர்! மனது என்னவோ இருவருக்கும் நிறைவாய் இருந்தது.

தாஸும் அஸ்வினும் காரின் அருகில் நிற்க, பத்து இன்னொரு காரின் அருகில் நின்றான்! வர்ஷாவை அனுப்ப வெளியில் வந்த போதே, “ஒரு பிரச்சனையும் இல்லை” என்று பத்துவிடம் சொல்லி வந்திருந்தாள்.

அவர்கள் எல்லோரையும் பார்த்து பளிச்சென்று புன்னகைத்தாள்.

“ஆமாம்! என்ன எனக்கு குறை? என்னை சுற்றி எல்லோரும் நல்ல உறவுகளே! எல்லாம் நாம்

பார்க்கும் பார்வையில் தான் இருக்கிறது!" எனத் தோன்றியது.

அப்போதும் தாஸ், "என்ன பாப்பா நீங்க? இப்படி போலிஸ் ஸ்டேஷன் வர்ற வேலையெல்லாம் வெச்சிக்கக்கூடாது! அய்யா இருந்தா எவ்வளவு கஷ்டப்படுவார்! சின்னதா ஏதாவதுன்னா சொல்லிடுங்க! நான் அவங்களை கொன்னுட்டு கூட ஜெயில் போய் உட்கார்ந்துக்குவேன்! இனிமே இப்படி பண்ணாதீங்க!" என கறாராகப் பேசினான்.

"ஒரு தடவை பண்ணுவீங்க, அப்புறம்.." என சிரிப்போடே கேட்க..

"தப்பிச்சு வந்து அடுத்ததும் பண்ணுவேன்! எத்தனை கொலை பண்ணினாலும் ஒரு ஜெயில் தான் பாப்பா!" என்றான்.

"அப்படி எந்த அவசியமும் வராது, இனிமே கவனமா இருப்பேன்!" என்று தெளிவாய் சொன்னாள்.

ஆம்! என்னை சுற்றி எல்லோருமே நல்ல மனிதர்கள் என்ற எண்ணம் அழுத்தமாய் பதிய.. எல்லோருமே இன்னும் புதிதாய் தான் அவளின் கண்களுக்கு தெரிந்தார்கள்!

"பத்துண்ணா.. வீட்டுக்கா போறீங்க?" என,

"ஆம்" என்பது போல தலையசைத்த பத்துவிடம், "நான் உங்களோட வீட்டுக்கு வர்றேன்!" என கிளம்பி, ஈஸ்வரிடம் "நீங்க என்னை அப்புறம் பிக்கப் பண்ணிக்கங்க" எனச் சொல்லி, தாஸிடம் தலையசைத்து விடைபெற்று, அஸ்வினிடம் "தேங்க்ஸ்" என்றாள்.

எதற்கு என்று புரியாமல் அவன் விழிக்க, "அவ அப்போ அப்போ லூஸ் ஆகிடுவா அஸ்வின்" என்று

ஈஸ்வர் கடிய.. பழைய விஷயம் என்று புரிந்தது.

“லூஸ் ஆனதுனால தான் விஸ்வா, உங்களை கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க!” என அஸ்வின் வர்ஷினியை சார்ந்து பேச..

“அது” என அஸ்வினுக்கு ஹய் ஃபை கொடுத்து, “நான் தான் ஓட்டுவேன் பத்துண்ணா” என்று பத்துவிடம் கார் சாவி வாங்கி கிளம்பினாள்.

“மெதுவா போ” என்று அப்போதும் அவளை அதட்டி ஈஸ்வர் கூறவும்.

“என்னவோ நீங்க சொன்னவுடனே இவ கேட்டுடற மாதிரி ஏன் இந்த பில்ட் அப்!” என பத்துவும் பேச..

“என்னங்கடா இது, ஊருக்குள்ள அத்தனை பேரும் நம்மை ஓட்டுறானுங்க!” என ஈஸ்வர் முறைத்து நின்றான்.

“உங்க ரகசியம் ஊருக்கே தெரிஞ்சிடுச்சு!” என்று வர்ஷினி கலகலத்து சிரிக்க..

“போடி!” என்று கொஞ்சலாக திட்டி கிளம்பினான் ஈஸ்வர்.

வர்ஷினியின் மனது மாறியிருந்தாலும் தெளிந்திருந்தாலும், அவளின் பிரத்யேக உணர்வுகள் அவளுடனே!

**பூபாளம் இசைக்கும் பூமகள் ஊர்வலம்..**

**அத்தியாயம் தொண்ணூற்றி எட்டு :**

**மாட்சியுற்று மீட்சி கொடுத்தான்!**

இதோ மலையேறிக் கொண்டிருக்கிறார்கள்! திருமலை வாசனை தரிசிக்க.. ஈஸ்வரும் வர்ஷினியும் மட்டும் வீட்டின் ஆட்களாக! ஆனால் அவர்களைச் சுற்றி செக்யுரிட்டி வளையம்! அதில் அவர்களின் ஆளாக அஸ்வினும் தாஸும்! பின்பு அது இல்லாமல் அவர்களின் ப்ரைவேட்

செக்யுரிட்டி! அது இல்லாமல் போலிஸ் ப்ரொடெக்ஷன்!

பின்னே விஷ்வேஸ்வரனின் கைகளில் இருந்தது, அவன் காணிக்கையாக செலுத்தப் போகின்ற திருமலை வாசனுக்குரிய வைர கிரீடம். சில கோடிகளின் பெருமானமுள்ளது!

பாதை ஏறும் இருவர் முகத்திலுமே ஒரு அமைதி! இருவருக்குள்ளும் பேச்சுக்களே இல்லை! பேச்சுக்கள் அற்ற மௌனம், மேலே ஏறி முடிக்க! அங்கே அவர்களுக்காக குடும்பமே காத்திருந்தனர். அம்மா, அப்பா, பெரியம்மா, பாட்டி, ஜகன், ரூபா, சரண், பிரணவி, ரஞ்சனி, பத்து, ரிஷி என எல்லோரும்.

மலரின் கைகளில் இருந்த ரிஷி வர்ஷினியைப் பார்த்ததும் அவளிடம் தாவ, அவனை வர்ஷினி கையினில் வாங்கவும், மலரிடம் அந்த கிரீடத்தைக் கொடுத்தவன், "வெச்சிருங்கம்மா, இங்கேயே இருங்க!" என்று அந்த பாதையிலேயே இருக்க வைத்து, முடிக்காணிக்கை செலுத்தப் போனான்.

யாரும் சொல்லும் முன்னே, ரிஷியை ரஞ்சனியிடம் கொடுத்து, ஈஸ்வர் பின்னே பொறுப்புள்ள மனைவியாய் உடன் சென்றாள் வர்ஷினி!

முடி காணிக்கை செலுத்தி, அவன் குளித்து வந்து மீண்டும் வைர கிரீடத்தை கையினில் வாங்க, வர்ஷினியின் கைக்கு தாவியிருந்த ரிஷி, எட்டி ஈஸ்வரின் மொட்டை தலையை தடவினான்.

"மொட்ட பாஸ்" என்று கிண்டல் செய்து வர்ஷினி சிரிக்க, சரணும் ப்ரணவியும் அதை சொல்ல.. "அச்சச்சோ! சித்தப்பாக்கு கோபம் வந்துடும்!" என்று வர்ஷினி அவசரமாய் அடக்கினாள்.

“சொல்லிக் குடுத்ததே நீ!” என அவளை முறைக்க,

“நானா சரண் மொட்ட பாஸ்னு சொல்லிக் கொடுத்தேன்!” என, “இல்லையே” என அவன் சொல்ல, மலரிடம் “அத்தை நானா மொட்ட பாஸ்னு சொல்லிக் கொடுத்தேன்” என, அவர் “நீ மொட்ட பாஸ்னு சொல்லவேயில்லையே” என,

இப்படி அனைவரிடமும் கேட்கப் போக,

“அம்மா தாயே! எல்லோரையும் சொல்ல வைக்க ப்ளான் பண்ணறியா, பிச்சிடுவேன் பிச்சு!” என ஈஸ்வர் பேச

“ஹி, ஹி, கண்டு பிடிச்சிட்டீங்களா” என அசடு வழிய சிரித்தவள், வாயை கைகளினால் பேசமாட்டேன் என்பது போல மூடிக் கொள்ள..

எல்லோர் மனமுமே நிறைந்து இருந்தது! கோவிலின் உள் செல்லும் நேரம் அஸ்வினை வர்ஷினி தேட, அவன் கண்களில் படவில்லை. எல்லோரும் வரும் போது எதிரில் வரமாட்டான் என்று புரிய, அவர்களோடு செல்ல ஆரம்பித்தாள்.

திருமலை வாசனுக்கு அந்த கிரீடத்தை விஸ்வேஸ்வரனோடு சேர்ந்து சங்கீத வர்ஷினியாகிய அவள் கை பிடித்து காணிக்கையாக கொடுக்க, கூட மலரை “வாங்கம்மா” என ஈஸ்வர் அழைத்தான். “நீ வேறு, நான் வேறா இல்லை, அவளோட நீ கொடு” என வர்ஷினியைக் காட்டி முடித்துக்கொண்டார்.

அதை கொடுத்து, அதை அணிவித்த திருமலை வாசனின் தரிசனத்தை பார்த்து கண்களில் ஆசை தீர நிரப்பி வெளியே வந்த போது, தன்னைத் தானே இன்னம் புது மனுஷியாய் உணர்ந்தாள்!

இறைவனிடம் சரணடைந்தால், பக்தி மார்க்கம் நம்புபவருக்கு அப்படி ஒரு அமைதியை கொடுக்கும்!

இன்னும் பத்து நாட்களில் புதிதாய் கட்டியிருக்கும் வீட்டிற்கு புண்ணியாஜனம் கூட! பின்பு அதற்கான வேலைகள் இழுத்துக் கொள்ள.. ஈஸ்வர் ஒரு புறம் பிஸியாகிவிட.. வர்ஷினி ஒரு கார்டூன் வேலை முடித்துக் கொடுக்கும் நாள் நெருங்க அவளும் பிஸியாகிவிட்டாள்.

“எந்த வேலை இருந்தாலும், அழைப்பை நீங்கள் தான் செய்ய வேண்டும்” என மலர் கட்டளையாகச் சொல்லி விட, வேலை ஒருபுறம் அழைப்பு ஒரு புறம் என அலண்டு தான் போனார்கள் இருவரும். யாரையும் விடவில்லை. பிரம்மாண்டமான வீட்டிற்கு, பிரமாண்டமாய் தான் அழைப்பு, விருந்து என ஜமாய்த்து இருந்தான் ஈஸ்வர்.

கணபதி ஹோமத்தில் கணவனுடன் அமர்ந்த போது இன்னும் இன்னும் நிறைவாய், பொறுப்பாய் உணர்ந்தாள். ஆம் அவளின் கணவன் மிகவும் பொறுப்பானவன் என, இன்னும் இன்னும் தோன்ற ஆரம்பித்து இருந்தது! குறை சொல்ல முடியாதபடி எல்லாம் ஞாபகம் வைத்து செய்வது, அது சரியாக நடக்கிறதா என்று பார்த்துக் கொள்வது, எப்படி இவ்வளவையும் இவன் ஞாபகம் வைத்துக் கொள்கிறான் என பிரமிப்பாய் இருந்தது!

பெருமையாக இருந்தது! உபசரிப்பில் கூட பொம்மையாய் தான் நின்றிருந்தாள். அவளிற்கு அது வரவுமில்லை. எல்லாம், எல்லாம் ஈஸ்வர் பார்த்துக் கொண்டான்.

ஷாலினிக்கு குழந்தை பிறந்திருப்பதால் அவள் மட்டும் இல்லை! இந்த முறையும் ஆண் குழந்தை!

முரளி அவளை பிறந்த வீட்டில் விட்டு வைத்திருந்தவன், எல்லாவற்றையும் அவளுக்கு லைவ் டெலிகாஸ்ட் மொபைலில் செய்ய, இதை செய்யுங்கள், அதை செய்யுங்கள், என்று முரளிக்கு ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தாள்.

அதிலும் வர்ஷினியை கூப்பிடுங்க என்று சொல்லி, அவள் மொபைலில் தெரியவும், "இரு, அழகா இருக்க, கண்ணு பட்டுடப் போகுது! திருஷ்டி எடுக்கறேன்!" என்று சொல்லி மொபைலில் கன்னம் எடுக்க!

"போங்கண்ணி, இங்க எல்லோரும் எவ்வளவு அழகா இருக்காங்க. நீங்க காமெடி பண்றீங்க!" என்று வர்ஷினி வெட்கப் பட,

"உன்னை விட யாரும் கிடையாது!" என்று ஷாலினி சொல்ல.. இன்னுமே அழகாய் வெட்கப்பட்டாள்.

முதல் முறையாக குறை சொல்ல முடியாதபடி, அவளின் பிறந்த வீட்டினரும் சீர் செய்தனர் என்று சொல்வதை விட, எல்லாம் முறையாக செய்தனர்! பத்து வர்ஷினிக்காக பார்த்து பார்த்து செய்ய, ஈஸ்வரின் கௌரவம் காக்க வேண்டியது முரளியின் கடமையாகிப் போனது! தாத்தாவிற்கு அவரின் கௌரவம் காக்க வேண்டி போனது! கமலம்மாவிற்கு ராஜாராம் இருந்தால் என்ன செய்திருப்பாரோ அதை செய்ய வேண்டியது என்பது குறிக்கோளாகிப் போனது!

இப்படி எல்லாம் நல்லபடியாக நடந்தது!

ஐஸ்வர்யாவும் சஞ்சையும் கூட வந்திருந்தனர். ஈஸ்வரும் வர்ஷினியும் அவர்களை நேரில் சென்று தான் அழைத்து இருந்தனர். இப்போது அவர்கள் இருவரையும் மிகவும் மலர்ந்த முகத்தோடு

வரவேற்க, ஐஸ்வர்யாவின் மலர்ந்த முகம் அவளின் சந்தோஷத்தைப் பறைசாற்ற..

கடந்த கால கசடுகள்.. தள்ளிவிடும் வேலையில்லாமல்.. வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது போல ஆனது!

விருந்து முழுக்க அஸ்வினின் வேலையாகிப் போக, எல்லாம் பக்காவாய்ப் பார்த்துக் கொண்டான்.

சீர் கொடுக்கும் போது வர்ஷினி, முதலில் தாத்தாவின் கால்களில், பின்பு அம்மாவின் கால்களில் விழுந்தாள்

ஈஸ்வரோடு. பின்பு தனியாக முரளியின் கால்களில், பத்து ரஞ்சனியின் கால்களில், பின்பு பார்வை ஈஸ்வரை பார்க்க, அவளைப் புரிந்தவனாக "அஸ்வின்" என அழைக்க, எதோ வேலை போல என நினைத்து..

"என்ன விஸ்வா?" என அருகில் வர, வந்தவனிடம் "நில்லு" என சொல்லி, வர்ஷினி காலில் விழுந்து வணங்க வர.. "அச்சோ, என்ன இது?" என்று அஸ்வின் விலக சென்றான்.

"நில்லுடா" என்ற ஈஸ்வரின் அதட்டலில் தனிச்சையாய் நிற்க, வர்ஷினி அவனின் கால்களில் விழுந்து வணங்கினாள். அஸ்வினுக்கு கண்களே கலங்கி விடும் போல ஆகிவிட்டது. "நல்லா இருங்க மேம்" என, எல்லோரும் பார்த்து இருந்தனர்.

இதைவிட அஸ்வினுக்கு என்ன மரியாதை தேடித் தர முடியும்! அஸ்வின் நன்றியாய் ஈஸ்வரையும் வர்ஷினியையும் பார்த்திருந்தான்.

நிறைய ஆட்கள் சென்ற பிறகு தான் வெங்கட ரமணனும் வரமகாலக்ஷ்மியும் ஐந்து வயது

தேஜஸ்வினியுடன் வந்தனர்.

“வாங்க” என்று வேகமாக வந்து ஈஸ்வரும் வர்ஷினியும் வரவேற்க,

“நீங்க தான் அப்பா சொன்ன ப்ளூ ஐ ஏஞ்சலா” என தேஜஸ்வினி கேட்க, “அப்பாக்கு நான் தான் சொன்னேன்!” என்று வரா மகளிடம் போட்டி போட, “இல்லை அப்பா தான்!” என மகள் சொல்ல,

ஈஸ்வர் புன்னகையோடு பார்த்திருந்தான்.

சிரித்த ரமணன் “என்னோட ரெண்டு பாப்பாவும் இப்படித் தான்” என, அந்த சிரிப்பு ஈஸ்வரையும் வர்ஷினியையும் தொற்றியது.

வர்ஷினி தேஜஸ்வினியை கையினில் தூக்கிக் கொண்டு, “அதை இந்த ஏஞ்சல் தான் சொல்லணும்” என,

அவளின் கண்களையும் வராவையும் தேஜு மாறி மாறிப் பார்க்க,

“ம்ம் சொல்லு” என வரா சொல்ல.. “எஸ்” என்ற சின்னவளின் கன்னத்தில் ஆசையாக ஒரு முத்தம் பதித்தாள் வர்ஷினி.

ஒரு மணி நேரம் இருந்தார்கள்! போக அவசரம் காட்டவில்லை.. மொத்த குடும்பத்தையும் வர்ஷினி அறிமுகம் செய்தாள்.

“இங்க எல்லா பொண்ணுங்களும் அழகா இருக்காங்க, எப்படி?” என வரா ரமணனிடம் ரகசியம் பேச, “உன்னை விடவா பாப்பா” என்றான். சொன்னவனின் கண்களில் கரை காணாத காதல் கூட!

ரமணன் குற்றம் சொன்ன போது ஈஸ்வர் ஒத்துக் கொண்டிருந்தாலும், “என் காதல் இவனுக்கு எப்படி தெரியும்” என்ற எண்ணம் இருந்தது.

ஆனால் இருந்த ஒரு மணிநேரத்திலேயே வராவின் கண்பார்வையில் ரமணன் அசைவதாக தான் தோன்றியது. மகளை கண்டு கொள்ளவில்லை, அவனின் மகள் அல்லவா? சின்னக் குட்டியின் தைரியம் ரமணன் அறிந்ததே! அவள் வர்ஷினியுடன் பிள்ளைகளுடன் ஐக்கியமாகிவிட.. யாருடனும் பேசும் ஆர்வம் ரமணனுக்கு இல்லை மனைவியை விட்டு அகலவில்லை.

"என்னை குற்றம் சொல்ல முழு தகுதியானவன்" என புரிந்தது. வாயில் வரை வந்து வழியனுப்ப, ரமணன் எப்போதும் போல அவனின் ஹார்ட்லி டேவிட்சனில், "நான் அப்பா பின்ன உட்கார்ந்துக்குவேன், நீங்க என் பின்னே" என தேஜஸ்வினி பேச..

"அதெல்லாம் முடியாது, உனக்கு என் கூட போட்டி போடறதே வேலை. நான் கார் வேணாம்னு சொல்லி பைக்ல வந்தா, நீ பின்ன உட்காருவியா நோ, நோ" என வரா பேச..

"அம்மா விட மாட்டாடா" என சொல்லிக் கொண்டே ரமணன் மகளை முன் அமர்த்த, எல்லாம் வேடிக்கை பார்த்திருந்தார்கள் ஈஸ்வரும் வர்ஷினியும் புன்னகையுடன். "எப்போவுமே இப்படி தான் அம்மாவும் பொண்ணும்" என சிரிப்புடன் வண்டியைக் கிளப்ப.. "பை வர்ஷினி" என வராவும் கிளம்ப, தேஜஸ்வினி டாடா காண்பித்தாள்.

"செம ஜோடி இல்லை" என ஈஸ்வர் சொல்ல.. "நம்ம கூட தான்" என்ற வர்ஷினி அவனின் கையினில் கை நுழைத்துக் கொண்டவள், "நானும் என் பொண்ணும் உங்க கூட இப்படி தான் சண்டை போடுவோமா?" என,

“அந்த நாளுக்காகத் தான் வெயிட் பண்ணிட்டே இருக்கேன்” என்றான் ஈஸ்வர் கண்களில் காதலுடன்.

எல்லாம் முடித்து மாலை கடந்து இரவு கனிய, வீட்டினரும் அவரின் வீடு சென்றிருக்க, எஞ்சியிருந்தது, மலர், நமசிவாயம், தாஸ், அஸ்வின், ஈஸ்வர், வர்ஷினி!

அஸ்வின் எல்லோருக்கும் பணம் செட்டில் செய்து முடித்து கணக்கு கொடுக்க அமர்ந்திருக்க, “அவரை அனுப்பிடுங்க! நாளைக்கு பார்த்துக்கங்க!” என தாஸ் சொல்ல,

“நீ கிளம்பு அஸ்வின்” என ஈஸ்வரும் சொல்லி, “தேங்க்ஸ் ஃபார் எவ்ரி திங். இன்னைக்கு எல்லாம் பெர்ஃபெக்ட்டா செஞ்ச!” என,

“நான் தேங்க்ஸ் சொல்லலை, சொல்லலை, சொல்ல மாட்டேன்!” என்றாள் வர்ஷினி.

சிரித்துக் கொண்டே அஸ்வின் விடைபெற.. அவனின் பரிமாணத்தை தான் ஈஸ்வர் யோசித்து இருந்தான், “எப்படி இருந்தவன்? எப்படி ஆகிவிட்டான்!” என, அதை வர்ஷினியிடமும் சொல்ல,

“என் ஃபிரண்ட் ஆனாங்க தானே! அப்புறம் எப்படி இருப்பாங்க!” என்று கர்வமாய் சொன்னாள்.

எல்லோரும் சென்ற பிறகு தாஸ் அவர்கள் நால்வரையும் வீட்டின் நடுவில் அமர வைத்து, ஒரு கருப்புக் கோழியை இடமும் வலமுமாய் சுற்றுச் சுற்றி..

“இதை போட்டுட்டு நான் அப்படியே திரும்பிப் பார்க்காம போய்டுவேன்! நீங்க நாளைக்கு

காலையில தான் வெளிய வரணும்!” என்று திருஷ்டி கழித்து சென்று விட்டான்.

அம்மாவிற்கும் அப்பாவிற்கும் படுக்க வசதியிருக்கின்றதா எனப் பார்த்து... படுக்கச் செய்து, கதவை மூடி வெளியில் வந்தால்.. நடு ஹாலில் அப்படியே இதற்கு மேல் தாங்காது என்பது போல நீட்டிப் படுத்திருந்தாள் வர்ஷினி!

அவ்வளவு அலுப்பு! உடல் ஓய்வுக்காக கெஞ்சியது!

ஃபேன் காற்றை அதிகப்படுத்தி, ஷர்ட்டை கழற்றி வீசி, பக்கத்தில் ஈஸ்வரும் நீட்டிப் படுத்துக் கொள்ள,

“கை கால் எல்லாம் வலிக்குது” என்றாள் வர்ஷினி.

“எனக்கும்” என ஈஸ்வர் சொல்லி கவிழ்ந்து படுத்துக் கொண்டவன்.. “மேலே ஏறி படு” என,

“ஆங்” என வர்ஷினி விழிக்க,

“படுடி, வலிக்கு நல்லா இருக்கும்” என்றான்.

“நான் என்ன அவ்வளவு வெயிட்டாவா இருக்கேன்” என வர்ஷினி குறைபட,

“ஹ ஹ” என்று சிரித்து விட்டான். “அப்போ படுக்கறது உனக்கு ப்ராப்ளம் இல்லையா?” என,

“படுக்க வெச்சிக்கற உங்களுக்கே ப்ராப்ளம் இல்லாத போது, எனக்கு என்ன ப்ராபளம் இருக்கும்” என சொல்லிக் கொண்டே அப்படியே உருண்டு அவனின் மேல் ஏற,

அவள் ஏறிய வேகத்தில் “அம்மா” என மெல்லிய குரலில் கத்தினான். அது அந்த  பொருட்கள் இல்லாத வீட்டில் சத்தமாய் கேட்க,

“ஷ், ஷ், ஏன் கத்துறீங்க” என வர்ஷினி கத்த.. இருவருமே அது கொடுத்த சத்தத்தில் வாயை

கப்பென்று மூடிக் கொண்டு அந்த நிமிடத்தை அனுபவித்தனர்.

வர்ஷினி உடலில் ஒரு அழுத்தத்தை கொடுக்க, “இன்னும் அழுத்து” என்றான்.

“இதுக்கு மேல அழுத்தணும்னா ஏறி நின்னு தான் மிதிக்கணும்” என..

“மிதியேன்” என்றான் சளைக்காமல். விட்டேனா என அவளும் மேலே ஏறி நின்று ஒரு காலில் மிதிக்க, “ரெண்டு காலிலேயும் ஏறி நில்லு!” என்றான்.

“ஏதாவது ஆகிடப் போகுது” என,

“ஒன்னும் ஆகாது, ஏறுடி” என,

“சரிடா” என்றவள், “நீங்க டீ போட்டா நான் டா போடுவேன்” என சொல்லிக் கொண்டே, மேலே ஏறி நின்று இதமாய் மிதித்து விட..

“என்ன வேணா கூப்பிட்டுக்கோ” என சொல்லிக் கொண்டே அவள் மிதி கொடுத்த சுகத்தை அனுபவித்து அப்படியே உறங்கிவிட்டான்.

அவன் உறங்கியது தெரிந்ததும், கட்டி இருந்த பட்டுப் புடவையைக் கூட மாற்றாமல் அவளும் பக்கத்தில் படுத்து உறங்கினாள். சில மணிநேரங்களுக்குப் பிறகு, அப்படியே காற்றில் மேலே எழும் உணர்வு! விழித்துப் பார்த்தால், ஈஸ்வர் அவளை கைகளில் தூக்கிக் கொண்டிருந்தான்.

“என்ன?” என்பது போல் பார்த்தவளிடம், “நாலு மணி ஆகிடுச்சு. கொஞ்சம் நேரத்துல அப்பா முழிச்சிக்குவாங்க. வா, ரூம்ல தூங்குவியாம்!” என அவளை தூக்கிக் கொண்டு சென்று ரூமில் இருந்த ஒரு சோஃபா போன்ற அமைப்பில் விட்டான்.

அவனையும் உறங்குவதற்கு பிடித்து இழுத்தவளிடம், “நீ தூங்கு, எனக்கு வேலையிருக்கு!” என்றான்.

“என்ன வேலை அதுவும் இங்கே” என,

“நீ தூங்கி எழும்போது தெரியும்” என்று விட,

அவளுக்கும் தூக்கம் கண்ணை சுழற்ற தூங்க ஆரம்பித்தாள். சில மணித்துளிகளில் உதடுகளில் அழுத்தமான முத்தத்தை உணர்ந்தாள். உறக்கம் களைய களைய. முத்தத்தின் அழுத்தம் அதிகமாக, ஒரு முத்தம் வேட்கையை உணர்த்த முடியுமா? உணர்த்தியது! அதில் உறக்கம் முற்றிலுமாய் களைய கண் திறந்தாள்.

முத்தத்தில் மட்டுமல்ல கண்களிலும் அவ்வளவு வேட்கை தான். பார்த்த போதே உடல் சிலிர்த்தது!

ஈஸ்வரை விலக்கி அவனின் பின் புறம் எட்டிப் பார்த்தாள். என்ன என்பது போல ஈஸ்வர் திரும்பிப் பார்த்து, பின்பு அவளைப் பார்க்க,

“தேடினேன்” என்றாள்.

“யாரை” என்று ஒரு ஆச்சர்யப் பாவனையோடு ஈஸ்வர் வினவ..

“விஸ்வேஷ்வரன்னு ஒரு நல்ல பையன் இருந்தாங்களே, அவரை!!!!” என பாவனையாக சொல்ல,

“இனிமே தேடினாலும் அவன் உனக்கு கிடைக்க மாட்டான்” என ஈஸ்வர் ஒரு மையலோடு சொல்ல.. அவன் சொன்ன பதிலில், பார்த்த பார்வையில், உடல் உள்ளம் என மொத்தமும் சிலிர்த்து இருக்க, ஈஸ்வரின் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் கண்களை மூடிக் கொண்டாள்.

அவளின் காதில் கிசுகிசுப்பாக "இந்த வீட்ல நீ பார்க்காத ஒரு இடம், உனக்காக வெயிட் பண்ணிட்டே இருக்கு! கேன் யு கெஸ்" என,

மெதுவாகக் கண்களை திறந்தவள், ஸ்விம்மிங் பூல் கூட ஒளிச்சு வைக்க முடியுமா?" என்று அவனைப் போலவே கிசுகிசுப்பாய் பதில் சொல்ல,

"ஹேய், உனக்கு தெரியுமா?" என்றான் ஆச்சரியமும் ஏமாற்றமும் கலந்து.

ஒரு மயக்கும் புன்னகை சிந்தியவள் "ஒரு பழமொழி இருக்கு, கழுதை கெட்டா குட்டி சுவர்னு" என,

"எப்போ இருந்து பழமொழி எல்லாம் பேசற? அண்ட் இதுல கழுதை நான், அக்சப்டட்.. குட்டி சுவர் எது? நீயா ஸ்விமிங் பூலா" என்று ரகசியம் பேசினான்.

"அதுதான் என்னால இன்னும் கண்டுபிடிக்க முடியலை!" என வர்ஷினி கிறக்கமாய் சொல்ல, வார்த்தைகள் கூட காதல் பேசியது.

அவளை சோஃபாவில் விட்டு விலக்கி எழுந்தவன், சிறிது தூரம் சென்று சுவர் போலவே இருந்த ஓரிடத்தை தள்ள, அது கதவு! கொஞ்சமும் வித்தியாசம் தெரியவில்லை. அது திறக்க, அவளின் கண்கள் ஆச்சர்யத்தில் விரிந்தது!

எதிரே நீச்சல் குளம். அந்த இருட்டிற்கும், அந்த நீல சுவர்களுக்கும், நீல வானத்திற்கும், தண்ணீர் நீல நிறமாய் தெரிய,

"என்னோட நீல நிற அழகிக்கு என்னோட பரிசு! ஐ மீன் என்னோட நீ இருக்கப் போற நேரத்திற்கான பரிசு! இது உனக்கு, நீ எனக்கு! என சொல்லிக் கொண்டே அவளை நோக்கி வர,

சங்கீத வர்ஷினிக்கு இதயம் துடிக்கும் ஓசை கேட்டது! இந்த விஸ்வேஸ்வரன் அவளுக்கு வேறு மாதிரி தான் தெரிந்தான். இதுவரை அவள் பார்த்ததில்லை.

அவளை தன் மேல் பித்தாக்க நினைத்த ஈஸ்வர் அல்ல இவன், அவளின் மேல் அவன் எவ்வளவு பித்து என காட்டத் துடிக்கும் ஈஸ்வர் இவன்!

வர்ஷினி பார்க்கப் பார்க்க, அவளை நெருங்கி, இரு கைகளிலும் அவளை ஏந்தி, நடந்து சென்று அந்த நீச்சல் குளத்தில் சில்லென்ற தண்ணீரில் அவளை இறக்கி விட்ட போது, அந்த தண்ணீரின் குளிர்ச்சி பட்டுப் புடவையையும் ஊடுருவி, அவளின் உடலை தொட்ட போது, மனதும் வெகுவாக குளிர்ந்தது!

ஈஸ்வரை அப்படியே இறுக்கி அணைத்துக் கொண்டாள்! தண்ணீர் அவளின் உடல் முழுதும் தொட்டதா, இல்லை ஈஸ்வரின் கைகளா, இல்லை உடலா, என்ன என்று ஒன்றும் புரியவில்லை! என்னவோ அவளின் உள் நடக்க, கிரகிக்க முடியாத ஒரு அனுபவம்!

அவளை பித்தாக்க வென்று ஈஸ்வர் என்ன என்ன செய்தானோ? இல்லை செய்ய வைத்தானோ? அப்போது பித்தாகவில்லை.. இப்போது ஆகினாள்!

அன்று அவனின் தாகத்தை தணிக்க முற்பட்டு அவளுக்கு தாகத்தை கொடுத்தவன், இன்று அவளும் அனுபவிக்க வேண்டி ஒரு தாகத்தை கொடுக்க! அது அவனையும் மயக்கியது அவளையும் சேர்த்து!

கலவில் அவன் செய்த தவறுகளை களைய முற்பட்டான்.

**அப்போது காதலில்லாத காமமுண்டு!**

## இப்போது காமமில்லாத காதலில்லை!

### அத்தியாயம் தொண்ணூற்றி ஒன்பது :

## ஆசை மீறும் நேரமே ஆடை நான் தானே!

வீட்டின் உள்ளேயே ஒரு புது உலகம் காட்டிக் கொண்டிருந்தான் வர்ஷினிக்கு ஈஸ்வர்.

“வர்ஷ்!.. “ம்ம்”.. “நீ என்னை லவ் பண்ணறியா?” என்றவனின் குரலில் விடு பட விரும்பாத மயக்கம்.

“இது ஓபன் சீக்ரெட், ஆனா நான் இதுக்கு பதில் சொல்ல மாட்டேன்!” என்றாள் கண் திறக்காமலேயே.

“அப்போ என்னை நீ இன்னும் நம்பலையா?”

பட்டென்று கண்களை திறந்தவள், “எதற்கு இந்த கேள்வி” என்பது போலப் பார்த்தாள்.

“அப்போ அந்த வர்ஷா, உன்னை ஹர்ட் பண்ணினதை என்கிட்டே ஏன் சொல்லலை?” என்றவனின் குரலில் அப்படி ஒரு ஆதங்கம்.

“உங்களுக்கு தெரியுமா?” என கண்கள் கேள்வி கேட்க,

“தெரியும் வர்ஷ், தெரியும்! அது நடந்து ஒன்னு ரெண்டு நாள்ல! ஆனா நீயா சொல்வேனு எதிர்பார்த்தேன், நீ சொல்லவேயில்லை! நானா பலமுறை கேட்டேன், அப்போவும் சொல்லலை, ஏன் சொல்லலை? நீ என்னை நம்பலையா?” என,

“அது ரொம்ப அசிங்கம், எப்படி சொல்வேன்” என்றாள் கம்மிய குரலில், ஆதூரமாக அணைத்துக் கொண்டான் சில நேர மௌனம்..

“அவ எப்படி உங்க கிட்ட சொன்னா? அப்போ எல்லோர்கிட்டயும் சொல்லுவாளா?” என்றவளின் குரலில் வலி.

“இது உன்னை அவ காயப்படுத்த சொன்னது, வேணும்னே வர்ஷ்! எனக்கு தெரிஞ்ச உடனே சே ன்னு ஆகிடுச்சு. அந்த கண்ண அவ எப்படி சொல்லலாம்னு அவளை கொன்னு புதைக்கும் அளவுக்கு ஆத்திரம்!  எனக்கு தெரியும்னு உன்கிட்ட காமிக்க பயம், கேட்க பயம்! நான் கேட்கறது கூட உன்னை காயப் படுத்திடுமோன்னு ரொம்ப பயந்தேன்!”

“அவ சொன்னது குப்பை வர்ஷ்! நமக்கு கிடைக்காத ஒன்னு மத்தவங்களுக்கு கிடைக்கும் போது வெளிப்படற குரூர குணம்!”

“உன் கண் பூஜைக்குரியது! அதை போய் இழுத்தது அவளை சாக்கடைன்னு காட்டுது! அதை அவகிட்ட சொல்லிட்டு தான் வந்தேன்!”

“நீ என்னோட ப்ளூ ஐட் ஏஞ்சல் தான் வர்ஷ்” என,

“சொந்தமா சொல்லணும், அடுத்தவங்கள காபி பண்ணக் கூடாது” என்றாள், அவள் சொன்ன விதமே இலகுவாகி விட்டாள் எனப் புரிந்தது!

“நீ என்னோட ப்ளூ ஐட் ரத்தக் காட்டேரி வர்ஷ்” என்றவன், தன் கழுத்துப் பகுதியைக் காட்டி, “டிராகுலா இங்க தான் ரத்தம் குடிக்கும்” என்றான்.

அவனின் கழுத்தினில் செல்லமாகக் கடித்தவள்.. “ம்ம், அப்புறம்!” என,

திடீரென்று சீரியஸ் ஆனவன் “நீ மனசுல எதையும் வெச்சு குழப்பிக்கலையே” என்றான் கவலையாக.

“இல்லை! இல்லை! இல்லவே இல்லை! விடுங்க, அதான் வந்துட்டேன் இல்லை!” என்றவள், “ஹ, ஹ” என வாய் விட்டு சிரித்தாள்.

“எதுக்கு சிரிக்கற?” என ஈஸ்வர் வியக்க,

“நேத்து ஒரு கவுண்டமணி ஜோக் பார்த்தேன். அதுல வர்ற டைலாக் நமக்கு ரொம்ப பொருந்தும்!” என இன்னும் சிரிக்க,

“கவுண்டமணி ஜோக்கா.. என்ன அது?” என,

ஈஸ்வரின் கழுத்தைக் கட்டி தன்னருகே இழுத்து “நான் யார்ன்னு உனக்கு தெரியும்! நீ யார்ன்னு எனக்கு தெரியும்! நாம யார்ன்னு ஊருக்கே தெரியும்” என பாவனையாக சொன்னாள்.

“அடிப் பாவி! நம்மளை நாமளே இவ்வளவு டேமேஜ் பண்ணுவோமா?” என சொல்லிக் கொண்டே சிரித்தவன்,

“அவ கேள்விக்கு நீ அடிச்ச, ஒகே! ஆனா இன்னொரு பதிலும் நீ குடுத்திருக்கணும்!” என,

“என்ன பதில்?” என்ற கேட்ட விதத்திலேயே அனுமானித்து விட்டாள் என்று புரிய,

“நீ சொல்லு” என்றான் விஷமமாக.

“சொல்லியே ஆகணுமா?”

“ப்ளீஸ், சொல்லிடு” என,

“என் லைஃப்ல ஈஸ்வர் இருக்கும் போது, உன்னோட இந்த ஸ்டேட்மென்ட் தப்பு!” என நிறுத்தி, “ஒகே வா, சொல்லிட்டேன்!” என்றாள் மையலோடு.

அவ்வளவு இறுக்கமாய் வர்ஷினியை அணைத்துக் கொண்டான். “தேங்க்ஸ் வர்ஷ், தேங்க்ஸ்!” என,

“ஆனா இதை விடவும் ஒரு பெஸ்ட் ஆன்சர் இருக்கு, அதை சொல்லட்டுமா?” என மிகவும் ரகசிய குரலில் விஷமத்தை தடவிக் கேட்க,

ஈஸ்வருமே ஒரு வாறாக அனுமானித்து “வேண்டாம், வேண்டாம்!” என்றான் அவசரமாக.

“இல்லை, சொல்லுவேன்!” என பிடிவாதம் பிடிக்க,

“வேண்டாம்” என்று ஈஸ்வர் மறுக்க மறுக்க,

“ஒரு தடவை நீ ஈஸ்வர் கூட இருந்துப் பார், அப்புறம் நீ என்னைப் பார்த்து இதை சொல்வியானு நான் கேட்பேன்”  என்றாள் கிசுகிசுப்பாக கண்ணடித்து.

“சீ, சீ, என்ன பேசற?” என்று ஈஸ்வர் அசூசையில் முகம் சுளிக்க,

“வேற எப்படி அவளுக்கு பதில் கொடுக்க முடியும்” என பெரும் குரலில் சிரித்தாள்.

“விளையாட்டுக்கு கூட இப்படி பேசாதே” என கண்டித்துக் கொண்டே, “வெளில வந்துட்டியா அதுல இருந்து” என்றான்.

“வந்துட்டேன்” என்றாள் புன்னகையுடன்.

“முதல்ல அவ பேசினப்போ, அப்படி ஒரு ஆத்திரம், கோபம், அவளைக் கொல்லணும்னு வெறி! அப்புறம் அவளோட இன்டென்ஷன் என்னை ஹர்ட் பண்ணனும்னு புரிஞ்சது. போடி உனக்கு தோன்றதை எல்லாம் அடுத்தவங்களைப் பார்த்து சொல்லாதே, நீதான் அப்படின்னு சொல்லிட்டு வந்திருப்பேன்”

“ஆனா ஒரு பீரியட்ல நான் உங்களை உடலளவுல ரொம்பத் தேடினேன் இல்லையா, அது சில நொடி என் ஞாபகத்துல வந்து, எனக்கு அந்த நேரம் ரொம்ப கில்டியா போச்சு! அப்புறம் வந்துச்சு பாருங்க ஒரு கோபம், சொல்லுடி பார்க்கலாம்னு சொல்லிச் சொல்லி அடிச்சேன்!” என சிரித்துக் கொண்டே சொல்லிய போதும்,

“அதனால தான் எனக்கு உங்ககிட்ட அதை சொல்ல முடியலை” என்று நிறுத்தினாள்.

“சாரி பேபி” எனச் சொல்லி, அவளின் பாதங்களில் முத்தமிட்டான்.

“அச்சோ, என்ன பண்ணறீங்க” என கூசி கால்களை இழுத்துக் கொண்டவள், எழுந்தும் நின்று கொள்ள,

“கால்ல விழுந்து, சாரி கேட்கறேன்!”

அவள் முறைத்துப் பார்க்க..

“இல்லையில்லை காலை பிடிச்சு சாரி கேட்கறேன்!” என,

அப்போதும் முறைக்க..

“இல்லை, இல்லை, கால்ல முத்தம் கொடுத்து சாரி கேட்கறேன்!” என்றவனைப் பார்த்து வாய் விட்டு வர்ஷினி சிரித்தாள்.

“இவ்வளவு ரொமாண்டிக்கா யாராவது சாரி கேட்க முடியுமா?” என்றான் கெத்தாக ஈஸ்வர்.

“அதெல்லாம் நமக்கு எப்படி தெரியும்? நமக்குள்ள நடக்கறது மட்டும் தானே தெரியும்!” என்று இருபுருவம் உயர்த்தி பாவனையாக வர்ஷினி கேட்க,

இப்போது ஈஸ்வர் சத்தம் போட்டு சிரித்து, “ஒரு ரகசிய வாக்கெடுப்பு நடத்தலாம்! உங்கள் மனைவியை நீங்கள் எந்த இடத்தில் முத்தம் கொடுத்து மன்னிப்பு கேட்பீர்கள் அப்படின்னு” என,

“அய்ய” என தலையில் செல்லமாய் வர்ஷினி அடித்துக் கொள்ளப் போக, அவளின் கைகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அவளை இன்னும் நெருங்கி நின்று, “உண்மையை சொல்லு வர்ஷ்! நீ என்கூட சந்தோஷமா இருக்கியா? உனக்குப் போக இடமில்லை, உனக்கு வேற யாரையும் பிடிக்கலைன்னு என்னோட ஒரு வாழ்க்கை வாழ்ந்தா, அதை விட எனக்கு பெரிய தண்டனை கிடையாது! நீ பல முறை என்கிட்டே

வந்ததுக்கு அதுதான் காரணமா சொல்லியிருக்க!" என்றான் அளவிட முடியாத வருத்ததோடு!

"ம்ம்ம்" என முனக.. "பதில் சொல்லு" என்றான்.

"இவ்வளவு பக்கத்துல நின்னு கேட்டா, என்ன பதில் சொல்வேன்! தள்ளி நில்லுங்க முதல்ல!"

"எனக்கு இப்படி தான் பதில் வேணும்!"

"இப்படி நின்னா, என் பிரைன் செல்ஸ் எல்லாம் ஸ்ட்ரைக் பண்ணும்"

"எதுக்கு?"

"இவ்வளவு பக்கத்துல நிக்கறான். அப்புறம் ஏன் உன்னை ஹக் பண்ணலை, கிஸ் பண்ணலைன்னு. கண்ட்ரோல் பண்ணிட்டு நிக்கற அளவுக்கு நீ கேவலமா இருக்கியா? உன்னால அவனை டிஸ்டர்ப் பண்ண முடியலையா? உன்னோட நீல கண் மயக்கம் தெளிஞ்சிடுச்சான்னு" என காதலாய் ஒரு பார்வை பார்க்க..

"கொல்றடி என்னை, ரத்தக் காட்டேரி டி நீ" என்றவனுக்கு அதற்கு மேல பேசும் பொறுமையே இல்லை! அவள் அவனை எந்த அளவிற்கு டிஸ்டர்ப் செய்கிறாள் என செயல் விளக்கம் கொடுக்க ஆரம்பித்தான்.

காதுகளில் அவளின் வார்த்தைகள் ஒலிக்க ஆரம்பித்தது, "முதல்ல பார்த்தவுடனே பிடிச்சது, அப்புறம் நீங்க அலட்சியம் பண்ணினப்போ பிடிக்கலை! அன்னைக்கே ரொம்ப கேவலமா திட்டினேன். அப்புறம் நீங்க முரளிண்ணா தேடி வீட்டுக்கு வந்தப்போ, உங்க கவலையான முகத்தை பார்த்தப்போ, உங்க கவலையை துடைக்கணும், உங்களுக்காக என்ன வேணா செய்யலாம்னு ஒரு உந்துதல்!"

“அப்புறம் அப்பா உடம்பு சரியில்லாம இருந்தப்போ உங்களை பார்ப்பேன். அப்புறம் ரஞ்சனி அண்ணி கல்யாணம். இந்த பீரியட்ல உங்களையே பார்த்து இருப்பேன்”

“அப்புறம் தான் அந்த ட்ராஜிடி” என நிறுத்தினாள்.

அவன் தவறாக நடந்ததை சொல்கிறாள் எனப் புரிந்தது. “அப்போ திரும்பவும் உங்களை பிடிக்காமப் போச்சு. கொஞ்சம் என்னையுமே, ஏன் இப்படி நடந்தீங்க, அப்போ என்கிட்டே தப்பான்னு, என்னோட குழப்பங்கள் எல்லாம் ஆரம்பிச்சது அப்போதான். ஆனா அதை யார் கிட்டயும் சொல்லலை. ரெண்டு காரணம், ஒன்னு நீ பெரிய ஹீரோ இமேஜ் டெவலப் பண்ணி இருந்த, எனக்கு அதை உடைக்க மனசு வரலை. இன்னொன்னு நீ இப்படி நடந்ததை நம்புவாங்களா, இல்லை அதை எனக்கே திருப்பிடுவாங்களானு”

“அப்புறம் நீங்க என்கிட்டே இன்னொருத்தனை கல்யாணம் பண்ணினாலும், உன்னை நான் விடமாட்டேன் சொன்னீங்க. அப்போ ரொம்ப பயம் வந்துச்சு!”

“அந்த பீரியட்ல ரொம்ப ஸ்ட்ரெஸ் இருக்கும் போது, மாத்திரை பழகினேன். வெளில எல்லாம் எடுத்தது இல்லை. போட்டுக்குவேன் தூங்கிடுவேன். யாருக்குமே தெரியாது. எப்போவாவது தான். உங்க செய்கை வார்த்தைகள் எல்லாம் ஞாபகம் வரும்போது!”

“ஆனா அந்த ஒரு வருஷமும் எப்போ நீங்க வந்து என் முன்ன குதிப்பீங்களோன்ற எண்ணம் மட்டும் இருந்திட்டே இருக்கும். சோ, ஒரு வகையில உங்களை நினைச்சிகிட்டே இருந்தேன்!”

“திரும்ப ஒரு வருஷம் கழிச்சு நீங்க வந்தப்போ, என் கண்ல தெரிஞ்ச வித்தியாசம் பார்த்தீங்க. ஆனா அப்போ கூட இப்படின்னு நீங்க கெஸ் பண்ணலை”

“திரும்ப நீங்க கேட்க, அப்பா பேச, ரஞ்சனி அண்ணி பேச, அப்போவும் உங்களை கல்யாணம் பண்ற அளவு எல்லாம் டிசைட் பண்ணலை. பட், உங்களை பத்தின ஒரு தாட் எனக்குள்ள ஓடிக்கிட்டே இருக்கும்!”

“அப்புறம் அப்பா கன்வின்ஸ் பண்ணி, கல்யாணம் பண்ணிகிட்டேன். அப்போ என் வாழ்க்கை நல்லா இருக்கணும்னு ஒரு வேண்டுதல் எனக்குள்ள இருந்தது. உங்களுக்கு பிடிச்ச மாதிரி நடந்துக்கணும் நினைச்சேன். நீங்க சொன்னது எல்லாம் செஞ்சேன். ஒரு புது அனுபவம் எனக்குள்ள உங்களால! ஒரு பீரியட்ல நீங்க அப்படியே  தள்ளி நிற்கவும். என்னால முடியலை, எனக்கு நீங்க வேணும் வேணும் போல இருக்க, திரும்ப மாத்திரை எடுத்தேன்!”

“ரொம்ப ரொம்ப கஷ்டமான நாட்கள் அது. என் மனசோட தேடலா, உடலோட தேடலா, இனம் காண முடியலை. அதனால் தான் அந்த வர்ஷா பேசின உடனே எனக்கு அப்படியே ஒரு பழைய ஞாபகம். அதனால் தான் என்னால அவ பேசினதை உங்க கிட்ட சொல்ல முடியலை” என்று சொல்லும் போது குரல் அழுகையில் உடைந்தது.

“ம்ம், எங்கே விட்டேன்? போதை மாத்திரை!”

“ஆனா அதனால கூட உங்களோட இடத்தை நிரப்ப முடியலை. ஏன்? ஏன் நீங்க ஏன் என்னை தேடலை? நான் அழகா இல்லையா? குண்டா இருக்கேனா? இன்னும் நிறைய நிறைய எனக்குள்ள யோசனை?”

“நிறைய வேற பிரச்சனைகள் வந்த போதும், பணம் பின்னாடி நீங்க ஓட ஆரம்பிச்ச பிறகும், இதுக்கும் எனக்கும் என்ன சம்மந்தம் ஏன் என் பக்கத்துல வரலை, இதுவே தான் மனசுக்குள்ள ஓடும். ஒரு மாதிரி என்னை நீங்க நிராகரிச்சிட்ட ஃபீல் எனக்குள்ள”

“ஒரு ஒரு சமயம் ஒரு மாதிரி தோணும். யாரையும் பார்க்கப் பிடிக்கலை, பேசப் பிடிக்கலை. அப்போவும் சரியாக்கிக்கணும் தான் நினைச்சேன். நீங்க என்னை பார்த்திருக்கவே வேண்டாம் சொன்னீங்க, அடிச்சீங்க.. பிரச்சனை பெருசாச்சு, ரொம்ப உங்களை பிடிக்காமப் போச்சு. சரி, கொஞ்சம் நாள் நான் ஹாஸ்டல் இருக்கேன்னு சொன்னேன்! எனக்கு தெரிஞ்ச என்னோட வீடு அதுதானே”

“நீங்க ஒத்துக்கலை, அப்போ ஒரு கோபம், ஒரு ஆத்திரம்! நான் செத்துப் போனா தான் உனக்கு பனிஷ்மெண்ட் கொடுக்க முடியும்ன்ற எண்ணம். ஜஸ்ட் சில நிமிஷங்கள்ல தோணினது. அதுக்கு முன்ன எல்லாம் இல்லை!”

“ஆனா சாக பயமா இருந்தது. வலி இருந்தா? அப்புறம் மூணு நாலு மாத்திரை எடுத்தேன். இதனால செத்துப் போயிடலாம்னு. வீட்டை விட்டு வெளியே வந்து கார்ல சுத்தினேன். அப்புறம் அந்த பப்கிட்ட போகும் போது ஒரு மாதிரி தள்ளிச்சு”

“உள்ள போய் உட்கார்ந்துக்கிட்டேன். அங்க குதிச்சிட்டு இருந்தவங்களைப் பார்க்கும் போது, நான் எதுக்கு சாகணும்னு ஒரு எண்ணம். ஆனா மேல யோசிக்க விடாம ஒரு மயக்கம்!”

“அப்புறம் நடந்தது என் வாழ்க்கையில அடுத்த ட்ராஜிடி. என்கிட்டே தப்பா நடக்க நினைச்சு

இருக்காங்க! ஆனா அஸ்வின் தடுத்துட்டாங்க, ஆனாலும் எத்தனை பேர் என்னை தூக்கி இருக்காங்க! அது கூட தெரியாம இருந்திருக்கேன். அந்த பீரியட்ல என்னை நினைச்சு எனக்கே அருவருப்பா இருந்தது! சொல்லும் போதே ஒரு குரல் உள்ளே சென்று விட்டது.

“எனக்கு யாரையுமே பார்க்கக் கூட பிடிக்கலை. முக்கியமா உங்களை, எனக்குள்ள தப்பு பண்ற ஃபீல் கூட. அப்போ ஏதாவது யோசிக்க, செய்யன்னு. ஒன்னுமில்லாத விஷயங்களை பிடிச்சிட்டு தொங்கறேன்னு, வாழ்க்கைனா இப்படித் தான் இருக்கும்னு, நான் தான் தப்பு பண்றேன்னு, ரொம்ப ரொம்ப டிஸ்டர்ப்ட். ஆனா என்னால காம்ப்ரமைஸ் பண்ண முடியலை” என நிறுத்தியவள்,

“இனியும் நான் ரிஸ்க் எடுக்க முடியாது இல்லையா, சோ என்னை ஹாஸ்டல் போக விடுங்க இல்லை, மாத்திரை எடுத்துப்பேன்னு திரும்பவும் மிரட்டினேன். சோ, ஹாஸ்டல் போக கேட்டப்போ, நீங்க ஐஸ்வர்யா பத்தி சொன்னிங்க. அதுக்கு மேல என்னால முடியலை! எப்படி நீ இப்படி செய்யலாம்னு உன்னை கொல்லணும் போல ஒரு ஆத்திரம். இனி நீ என்னை பார்க்கவே கூடாது சொல்லிட்டுப் போயிட்டேன்!”

“வேற யாரையும் பார்க்கப் பிடிக்கலை, பேசப் பிடிக்கலை, ஸ்டடீஸ்ல மனசை திருப்பினேன். வேற வீட்டு ஆளுங்க யாரோட யோசனையும் கூட எனக்கு இல்லை. நீங்க! நீங்க! நீங்க மட்டும் தான்!”

“மனசை எப்படியோ அமைதி படுத்திக்கிட்டேன், அந்த மாத்திரையைத் திரும்ப தொட ஒரு எண்ணம் வரலை. ஆனா உன்னை நான் நினைக்காத நாளில்ல! அது தான் நிஜம்! ஐஸ்வர்யா மேட்டர்

என்னால டைஜஸ்ட் பண்ணவே முடியலை. நீங்க என்னை ஏமாத்தினதை விட, ஒரு பொண்ணை ஏமாத்தி வந்தவன், என் வாழ்க்கையிலான்ற எண்ணம்"

"திரும்ப டைவர்ஸ் கேட்டேன், இங்க என்னை வரவெச்சீங்க. அப்புறம் தான் எல்லாம் உங்களுக்கு தெரியுமே! வந்ததுக்கு அப்புறமும் நிறைய நிகழ்வுகள் நமக்குள்ள!"

"உங்களை பார்த்த நாள்ல இருந்து, இதுல எந்த இடத்துல உங்களை லவ் பண்ணினேன் தெரியாது. லவ் பண்ணறேனான்னு தெரியாது. இதுக்கு பேர் தான் லவ்வா அதுவும் தெரியாது! ஆனா தனியா என்னால இருக்க முடியலை. அப்போ எனக்கு தோணினது உங்க கிட்ட வரணும்னு மட்டும் தான்"

"என்னை மீறி இப்படி எண்ணங்கள் வர வர உங்களை டார்ச்சர் பண்ணினேன், அது தான் நிஜம்"

"இனிமே உங்களை விட்டு என்னால இருக்க முடியும்னு தோணலை. இது காதல் கதையா? இல்லை ரத்தக் காட்டேரி கதையா? இல்லை பேய் கதையா? என்ன கதைன்னு நீங்க தான் முடிவு பண்ணனும்"

"நான் காதலியா இருந்தாலும், ரத்தக் காட்டேரியா இருந்தாலும், பேயா இருந்தாலும், உங்களால தான்! அப்புறம் இந்த கதைல நான் நிறைய சீன்ஸ் மிஸ் பண்ணியிருக்கலாம், இல்லை சொல்ல மறந்திருக்கலாம், இல்லை சொல்ல வேண்டாம்னு நினைச்சிருக்கலாம்"

"ஏதோ ஒன்னு, நான் தப்பாவே இருந்திருந்தாக் கூட, இப்போ இருந்தாக் கூட, இனிமே இருந்தாலும் கூட,

எனக்கு உன்னை விட்டு போகணும்ன்ர எண்ணம் வர விடாதே! என்னால தனியா இருக்க முடியாது! ஐ ஹேட் தட்!" என சொல்லும் போது குரல் உடைய, அழுகிறாள் எனப் புரிந்தது. அவன் கண்களிலும் நீர் நிறைந்தது.

“நான் ஹாஸ்டல் போன போது, பின்ன தனியா யு எஸ் போன போது எல்லாம் உன்னை ரொம்ப மிஸ் பண்ணினேன். அதே சமயம் அப்போ உன்னைப் பத்தி நினைக்க எந்த சுகமான நினைவுகளும் இல்லை. ஏன் எனக்கு மட்டும் இப்படி"

“நீங்க என்னை அவ்வளவு லவ் பண்ணறீங்க, ஆனா நமக்குள்ள ப்ளசன்ட்டா யோசிக்க எதுவுமே இல்லை. ஐ ஹேட் திஸ். எனக்கு நமக்குள்ள ரொம்ப இனிமையான நினைவுகள் வேணும்! குடுப்பீங்களா?" என அந்த வாய்ஸ் மெசேஜ் முடிந்தது. ஈஸ்வரின் கைகளில் வர்ஷினி சுகமான உறக்கத்தில்!

“நீ சந்தோஷமா இருக்கியா? என்னை லவ் பண்ணறியா?" எனக் கேட்ட போது,

இதெல்லாம் என்னால் உன்னிடம் நேரடியாக பகிர முடியாது. மாட்டவும் மாட்டேன்! எனச் சொல்லி, இந்த வாய்ஸ் மெசேஜ் அவனுக்கு அனுப்பியவள், “நான் தூங்கின பிறகு கேளுங்க" எனவும் சொல்லி, அவன் மேலேயே சாய்ந்து உறங்கியிருந்தாள்.

கூடவே “இது நான் இப்போ பேசினது இல்லை. ஒரு முறை நீ எல்லோர் கூடவும் கோவில் போகக் கேட்டு, சண்டை போட்டேன் இல்லையா? அப்போ என்னோட ஃபீலிங்க்ஸ் உங்ககிட்ட ஷேர் பண்ணனும்னு நினைச்சு பேசினேன்" எனச் சொல்லியிருந்தாள்.

இதோ கேட்டு முடித்து விட்டான். மனது மிகவும் கணமாகியது!

ஆம்! எல்லாம் அவனால்! இப்போது சரியாகிவிட்டாலும் கடந்தவைகள் கடந்தவைகள் தானே! அந்த வருடங்களை எப்படி திருப்பிக் கொடுப்பான்! அந்த கசப்பான உணர்வுகளை எப்படி போக வைப்பான்!

எல்லோரிடமும் சண்டையிட்டு இருந்தாலும், யாரைப் பற்றியும் எந்தக் குறையும் சொல்லவில்லை, யாரையும் இழுக்கவும் இல்லை. அவனின் உலகத்தில் அம்மா, அப்பா, தங்கை, உறவுகள் எல்லாம் பிரதானமாக இருந்தாலும், அவளின் உலகத்தில் அவனும் அவளும் மட்டும் தான் என்பது புரிந்தது! அது சீரானால் தான் மற்றவர்கள் அவளின் உள் நுழைய முடியும் என்பதும் புரிந்தது!

“லவ் யு வர்ஷ்” என இறுக்கிக் கொண்டவன்,

மெதுவாக அவளின் காதுகளில், “இப்போ ஏதாவது நமக்குள்ள ப்ளசண்டா ஃபீல் பண்றியா வர்ஷ்” எனக் கேட்க, உறக்கத்தில் இருப்பவளுக்கு எப்படிக் கேட்கும்!

ஆனாலும் விடாமல் கேட்டுக் கொண்டேயிருந்தான்!

ஆம்! காலம் மட்டுமே எல்லா வலிகளுக்கும் மருந்து! நம்பிக்கை இருந்தது, எல்லாம் கடந்து போகும் என்று!

காளிதாசன் ஏடுகள் கண்ணன் ராசலீலைகள் பருவமோகம் தந்தது பாவம் அல்லவே!

**அத்தியாயம் நூறு :**

**கண்ணும் கண்ணும் கலந்து சொந்தம் கொண்டாடுதே**
**எண்ணும்போதே உள்ளம் பந்தாடுதே**
**கண்ணும் கண்ணும் கலந்து சொந்தம் கொண்டாடுதே**
**எண்ணும்போதே உள்ளம் பந்தாடுதே**
**கன்னியென்றேனடி கைகளைப் பிடித்தான்**
**காதலியென்றென்னை கொஞ்சியே அழைத்தான்**
**கண்ணும் கண்ணும் கலந்து சொந்தம் கொண்டாடுதே**
**எண்ணும்போதே உள்ளம் பந்தாடுதே..**

இன்னுமே காதில் கேட்டுக் கொண்டிருந்தான், "உனக்கு ப்ளசன்ட் மெமரீஸ் இருக்கா?" என்று. படுத்திருந்த மனைவியின் அருகில் சரிந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

"ம்ம்! இருக்கு! ஆனா பத்தாது!" எனக் கண்திறக்காமல் வர்ஷினி சொல்ல,

என்ன என்று தெரியாமலேயே, "பத்தாது, பத்தாது" என்று அம்மா சொல்லியதை, சர்வேஸ்வரன் அப்படியே திருப்பிச் சொன்னான்.

இன்னும் வாகாக சரிந்து "என்ன பத்தாது என் ப்ளூ பாய்க்கு?" என்று மகனை தூக்கி தன் மேல் போட்டுக் கொண்டான் ஈஸ்வர்.

ஈஸ்வர் மேல் படுத்தபடியே அம்மாவைப் பார்த்து யோசித்தான், என்ன பத்தாது என்பது போல், "மா, என்ன பத்தாது?" என அப்பாவைப் போலவே அம்மாவின் காதில் ரகசியம் பேசினான்.

மகனின் புறம் திரும்பிப் படுத்தவள், அவளின் கன்னத்தில் யோசிப்பது போல தட்டி

“தெரியலையே, என்ன சொல்லலாம்? நீ சொல்லு!” என,

அம்மாவைப் போலவே கன்னத்தில் தட்டி “சர்வாக்கும் தெரியலை!” என்று உதடுப் பிதுக்க.

ஈஸ்வர் மேலிருந்த மகனை அப்படியே வாரி அணைத்துக் கொண்டாள். முறைத்து பார்த்திருந்தான் ஈஸ்வர் “என்ன லுக்கு, போங்க!” என அதட்ட..

“இருடி உன்னை” என்று மகனின் முன் வாயை மட்டும் அசைத்துக் கட்டினான். பின்னே மகனின் முன் வாடி போடி என டி எல்லாம் போட்டு பேச மாட்டான். ஆனால் வர்ஷினிக்கு அதெல்லாம் கிடையாது, சொல்லுடா டால்டா பேச்சு தான்!

அம்மாவும் மகனும் மதிய உறக்கத்தில் இருந்தார்கள். ஈஸ்வர் அப்போது தான் ஆஃபிசில் இருந்து வந்திருந்தான். “நீ வாடா செல்லம்” என்று மகனை அம்மாவிடம் இருந்து பிரித்து, இதமான மாலை நான்கு மணி வெயிலில், மகனின் உடைகளைக் களைந்து, அவனும் களைந்து, இருவரும் ஷார்ட்ஸில் அவர்களின் பெட் ரூமின் உள் இருந்த நீச்சல் குளத்தில் இறங்கினார்கள்!

மூன்று வயது மகன்! பெயரைப் போலவே சர்வமும் அவனே சங்கீத வர்ஷினிக்கு. மகன் பிறந்த பிறகு எந்த குறைகளும் அவளுக்குள் இல்லை.

சர்வேஷ் நிறைய மாற்றங்களை வர்ஷினியுள் கொண்டு வந்திருந்தான். மிக மிக நல்ல மாற்றங்கள். தனிமை போயிருந்தது. பொறுப்புக்கள் தானாக வந்திருந்தது! எதற்கு இந்த வாழ்க்கை என்ற எண்ணம் போய், இந்த வாழ்க்கை எனக்காக, என் மகனிற்காக, என் ஈஸ்வருக்காக,

என் குடும்பத்திற்காக என்பது மட்டுமல்லாது என் நாட்டிற்காக என்ற எண்ணம் வந்திருந்தது.

“ஆம், மூன்றொருவருக்கு தெரியாமல் நிறைய சமுதாய பணிகள், உதவிகள். ஒரு போதை விடுபடும் மையம் நிறுவி, அதற்கு எல்லாம் செய்தாள்! ஆனால் அவளின் பேர் எங்கும் கிடையாது. ஈஸ்வர்! ஈஸ்வர்! ஈஸ்வர் மட்டுமே!

அதையெல்லாம் விட தன் உணர்வுகளை எந்த தயக்கமுமின்றி ஈஸ்வரிடம் பகிர ஆரம்பித்து இருந்தாள். ராஜாராம் இறந்த போது கூட தனிமையைத் தேடியவள், இப்போது சிறு சிறு விஷயத்திற்கும் ஈஸ்வரை தேடினாள். தனிச்சையாய் எந்த முடிவுகளும் எடுப்பதில்லை.

சர்வா அப்பாவின் பின் கழுத்தை கட்டிக் கொள்ள, மகனுடன் நீரில் இறங்கிய ஈஸ்வர், நீந்த ஆரம்பிக்க, சர்வா அவனின் முதுகில்.

சர்வாவிற்கு மிகவும் பிடித்த விளையாட்டு, அப்பாவின் அகன்ற முதுகில் சவாரி செய்து தன் பிஞ்சுக் கைகளால் அந்த தண்ணீரைத் தள்ளி, என்னவோ அப்பாவை அவனே நீந்தச் செய்வது போல ஆக்ஷன் செய்வான்.

மகனுடன் கிட்டத்தட்ட கால் மணிநேரத்திற்கும் மேல் நீந்தினான். மனைவி வருவதாகக் காணோம்! திரும்ப உறங்கியிருப்பாள் எனப் புரிந்து, மகனுடன் தண்ணீர் விட்டு வெளியே வந்து, மகனுக்கு துவட்டி, அவன் ஈரத்துடன் அப்படியே வந்து தலையை சிலுப்ப, அந்த தண்ணீர் துளிகள் பட்டு வர்ஷினி விழிக்கவும், “போ! இவனைக் கொண்டு போய் அம்மா கிட்ட விட்டுட்டு வா!” என,

“தோடா! முடியாது!” என,

ஈஸ்வர் எதுவுமே பேசாமல் அப்படியே நின்றான். ஆம், இப்போது மலரும் நமஷிவாயமும் அவர்களுடன் தான். வர்ஷினி கர்ப்பம் தரித்த உடனே இனிமேல் அம்மாவை இங்கே தான் இருக்க வேண்டும் என்று அழைத்து வந்திருந்தான். அது ஈஸ்வரின் முடிவு அல்ல, வர்ஷினியின் முடிவு! அதில் ஈஸ்வருக்கு வெகுவாக சந்தோஷம் அவ்வளவே!

அவனை முறைத்தவாறே எழுந்து வெளியில் வந்து, "அத்தை" என.. மலரிடம், சர்வேஷை விட்டு ரூமின் உள் வர.. கதவை தாளிட்ட ஈஸ்வர்.. அப்படியே வர்ஷினியை கையினில் தூக்கியிருந்தான்.

"இப்போ நானா?" என சலிப்பது போலப் பேசினாலும், அவளுக்குமே இது மிகவும் பிடித்தமானது.

"நீதான் நீதான்" என்று ஈஸ்வர் தூக்கிச் சென்றவன், "பாரு, நான் என் பையன் எல்லாம் ஸ்விம் ட்ரெஸ் தான் போட்டோம்!" என,

"அதெல்லாம் என்னால முடியாது!" என கறாராகப் பேசினாள்.

"ஒகே, ஸ்விம் ட்ரெஸ் வேண்டாம், ஒரு டீ ஷர்ட், ஷார்ட்ஸ், இல்லை மினி, இல்லை மிடி என அடுக்கி, அட்லீஸ்ட் ஒரு புடவை!" என்று வந்து நிற்க,

"அடேய் கிராதகா" என்ற ஒரு லுக் வர்ஷினி விடவும்,

"பின்ன இந்த சுரிதார்ல நீ தண்ணீல இறங்கினா, நான் எதைப் பார்க்க" என்று பாவம் போல சொல்லாமல் சீரியசாகவே சொன்னான்.

"என்னது?..... எதைப் பார்க்கவா? என் கண்ணைப் பாருங்க!" என்று மிரட்ட,

“உன் கண் சீசன் எல்லாம் முடிஞ்சு போச்சு” என்று அவளை கடுப்பேற்றியவன், “அதெல்லாம் என் பையன் கிட்டப் பார்த்துக்குவேன். நீ எனக்கு வேற காட்டு” என்றான்.

ஆம்! சர்வேஸ்வரனுக்கு நீல நிறக் கண்கள், அம்மாவைப் போலவே!

“அப்போ சரி, பார்க்காதீங்க” என்று வர்ஷினி கண்களை மூடிக் கொள்ள..

அவளை இழுத்துக் கொண்டு அப்படியே தண்ணீரில் குதித்தான் அவள் எதிர்பாராத போது, “நீயே இதெல்லாம் கழட்டி போடறவரை, உன்னை தண்ணிக்கு மேல விட மாட்டேன்” என தண்ணீருக்குள் அழுத்த,

அவள் தள்ள, இவன் தள்ள, என ஒரு யுத்தமே அங்கு நடந்தது. வேறு வழியில்லாமல் ஈஸ்வரை அணைத்துப் பிடித்து மேலே வந்தாள்.

அவனோடு நீந்தி, சுவரின் ஓரம் பிடித்து நின்று, “உனக்கு ரொம்ப ஓவரா தெரியலை” என மூச்சு வாங்கப் பேச,

“என்ன ஓவர், இதுக்கு பேர் தான் வர்ஷ் ஜலக்ரீடை” என கண்ணடித்து ஒரு விரிந்த சிரிப்புடன் சொல்ல,

“ஜலக்ரீடை! டர்மினாலாஜி நல்லா இருக்கான்னு சர்வாகிட்ட கேட்கறேன்!” என,

“அம்மா தாயே, செஞ்சிடாதடி செஞ்சிடாத. என் பையன் கிட்ட எல்லாம் நீ பேசக் கூடாது. அவனுக்கு நல்ல வார்த்தைகள் மட்டும் தான் கத்து தரணும்!” என,

“அவன் உங்க பையனா? அப்போ எனக்கு யாரு?”

“பங்கெல்லாம் போடாத, நீ ஒரு பொண்ணை பெத்து அவளை என்கிட்டே குடுத்துட்டு இவனை

சொல்லிக்கோ”

“எப்படி, இப்படி” என வர்ஷினி ஆச்சர்யப்படுவது போல ஈஸ்வரை கிண்டல் செய்ய,

இப்படி என அவளை இழுத்து மீண்டும் தண்ணீருக்குள் சென்று, அவன் சொன்ன வார்த்தையின் அர்த்தத்தை காட்ட,

வர்ஷினி திணறியவள், “ஆபிஸ் போகணும், வேலையிருக்கு, அப்புறம் பார்ட்டி டைம் ஆகிடும், இப்போ சர்வா தேடுவான்” என காரணங்களை அடுக்கி ஈஸ்வரிடம் கெஞ்ச,

“அப்போ நைட் ஸ்விம் சூட்ல வரணும், ஓகே வா!” எனக் கேட்டு.. அவள் “ஓகே” என்ற பிறகே விட்டான்.

ஆம்! ஈஸ்வரின் நீல நிறக் கண்களின் மீது காதல் சிறிதும் குறையவில்லை. அதுவும் அவளின் கண்களின் நீலத்தை வானத்தின் நீலத்தோடும், தண்ணீரின் நீலத்தோடும் அனுபவிக்க முற்படுவான்.

ஈஸ்வர் இன்னும் நீந்திக் கொண்டிருக்க, வேகமாக சென்று குளித்து, வேறு உடை அணிந்து, தலையை டிரையரில் காய வைத்து, என மின்னலாய் தயாரான போதும் அரை மணிநேரம் ஆகிவிட, அவள் கதவை திறக்கவும் சர்வேஷ் கதவை தட்ட கை வைக்கவும் சரியாக இருந்தது.

“வாங்க, வாங்க, அண்ணா, அக்கா, எல்லாம் வந்துடுவாங்க!” என மலரிடம் விட்டு, வீட்டின் முன் இருந்த ஆஃபிசிற்கு ஓடினாள். “சாரி கைய்ஸ், ரெண்டு நிமிஷம் லேட் ஆகிடுச்சு” என சொல்லி ஸ்பெஷல் எஃபக்ட்ஸ் செய்து கொண்டிருந்த அவளின் டீமோடு இணைந்து கொண்டாள்.

ஆம்! தன் ஸ்டுடியோ, தன் விருப்பப்படி அமைத்துக் கொண்டிருந்தாள். அவள் செய்யும் ஸ்பெஷல் எஃபக்ட்ஸ் போல பிரமாண்டம். இப்போது ஹாலிவுட் படங்கள் இல்லை. கர்ப்பமான போதே தவிர்த்து விட்டாள். அலைச்சல் ஆகாது என..

ஆனால் இந்தியப் படங்களில் ஒரு நிலையான இடம், இந்த சொற்ப வருடங்களில்! அவளிற்கு என ஒரு பிராண்ட் நேம் க்ரியேட் செய்துக் கொண்டிருந்தாள். ஹாலிவுட் படங்களின் தரத்தை இங்கே கொடுக்க.. இதோ அடுத்த வருடம் செய்யப் போகும் படத்திற்கு இந்த வருடமே புக் செய்திருந்தனர்!

ஆனால் வெளிநாட்டு பட வியாபாரம் அப்படியே இருந்தது. அதில் நல்ல லாபம் கூட!

தன் ஸ்பெஷல் எஃபக்ட்ஸ் மூலம் புதிது புதிதாக ஒரு மாய உலகை படைத்தாள். அவளுக்கு புதிது புதிதாய் ஒரு மாய உலகை காட்டிக் கொண்டிருந்தான் ஈஸ்வர்.

அவளின் கசப்பான நினைவுகள் எல்லாம் போன ஜென்ம நிகழ்வுகளாய் ஒரு தோற்றம் கொடுத்தது.

ஏழு மணி ஆகவும் இடத்தை விட்டு எழுந்தவள், "இந்த வொர்க் முடிச்சிட்டு, எங்களை வந்து ஜாயின் பண்ணிக்கங்க" என அழைப்பு விடுத்து உள்ள செல்ல,

ஐந்து வயது ரிஷி, பதினொரு வயது பிரணவி, பதினான்கு வயது சரண், எட்டு வயது நிஷாந்த், நான்கு வயது அத்வைத் என எல்லோரும் இருந்தனர்.

ரிஷி "அத்தை" என வந்து கட்டிக் கொண்டான்.

“இட்ஸ் பார்டி டைம்” என்ற ஒரு கூச்சல்! ஆம், சர்வேஸ்வரனுக்கு இன்று தான் மூன்றாவது பிறந்த நாள். அதற்காக பார்டி செய்ய எல்லா குழந்தைகளும் வந்திருந்தனர்.

பார்ட்டி எட்டு மணிக்கு, எல்லோரும் சேர்ந்து எல்லாம் ரெடி செய்ய..

ஒரு ஒருவராக எல்லோரும் வந்தனர். யார் வருவர்? தாத்தா, கமலம்மா, முரளி, பத்து, ரஞ்சனி ஷாலினி .. பாட்டி, பெரியம்மா, ரூபா, ஜகன், சித்ரா அக்கா அவளின் குடும்பத்துடன் என எல்லோரும்!

ஈஸ்வர் எல்லாம் பார்த்து தான் அமர்ந்திருந்தான். ஆனால் வர்ஷினியின் பக்கத்தில் எல்லாம் வரவில்லை, அவனின் கொஞ்சல்களும் குலாவல்களும் எல்லாம் அவனின் படுக்கை அறைக்குள், அதனுக்குள் இருக்கும் ஸ்விமிங் பூல் உள் மட்டுமே!

வர்ஷினியின் ஸ்ட்ரிக்ட் ஆர்டர், “நீங்க பக்கத்துல வந்தா என்னால எந்த வேலையும் ஒழுங்கா செய்ய முடியாது” என்பது போல. அதனால் தள்ளியே நிற்பான்.

வெளியில் எதுவுமே தெரியாது. எல்லாம் கெத்தாக அமர்ந்து வேடிக்கை மாட்டும் பார்த்துக் கொண்டிருக்க.. முரளி அவன் அருகினில்.

ஈஸ்வர் உதவாவிட்டால் என்ன? பத்து தான் இருக்கின்றானே! அவன் சென்று வர்ஷினிக்கு உதவ, குழந்தைகளின் சத்தம் காதை பிளக்க, “சரண்” என்ற ஈஸ்வரின் ஒற்றை அதட்டல், எல்லா குழந்தைகளையும் அடக்கியது.

“உங்கண்ணா செமையா டெர்ரர் பீஸ் லுக் குடுக்கறாங்க அண்ணி!” என்று ரஞ்சனியை

வர்ஷினி வம்பு இழுக்க,

“என்னை விட்டுடு, நான் இந்த விளையாட்டுக்கு வரலை!” என்று ரஞ்சனி ஒதுங்க,

“அண்ணி, வாட் இஸ் திஸ்” என வர்ஷனி சிணுங்க,

“அம்மா தாயே, என்னை விடு! உன்கிட்ட பேச ஆரம்பிச்சாவே, எங்கண்ணன், உங்கண்ணன்னு ஒரு படையே என்னை வாட்ச் பண்ணும்” என சிரிப்போடு சொன்னாள்.

“இல்லைன்னா மட்டும், எங்கண்ணா உங்களை வாட்ச் பண்றது இல்லையா” என பத்துவை கிண்டல் செய்து, “ஷாலினி அண்ணி” என கத்திய வர்ஷினி, “இங்க ஒரு பஞ்சாயத்து வாங்க!” என..

பத்து ஒரு புன்னகையோடு ரஞ்சனியை பார்த்திருந்தான். இப்போது நிறை மாத கர்ப்பிணி ரஞ்சனி. இரண்டாவது பெண் குழந்தைக்காக பத்துவும் அவளும் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

“ஷாலினி” என்ற பேர் கேட்டதும், “அம்மா, அவ வந்தா என்னை ஓட்டியே எடுத்துடுவா, நான் எஸ்கேப்!” என்று ரஞ்சனி சென்று ஈஸ்வருடன் அமர்ந்து கொண்டாள்.

இப்படியாக நேரம் ஓட, உறவுகளிடம் குறைகளே தெரியவில்லை, குறை சொல்ல மாட்டாதவளாகி நின்றாள் வர்ஷினி!

ஈஸ்வருக்கு எல்லாம் எல்லாம் ஏறுமுகம் தான்! தொட்டது துலங்கியது! ஐ பீ எல் லில் கடந்தவருடம் சேம்பியன்ஷிப் வென்றிருந்தனர்! கபடியும் ஸ்பான்சர் செய்தனர். ஈஸ்வர் பைனான்சும் அமோகம், கூடவே இன்னும் சில தொழில்கள்! எல்லாம் லாபம் கொழித்தன.

எல்லோரும் வந்து நிற்க, ஈஸ்வர் சர்வாவின் கை பிடிக்க போக, "வேண்டாம் விடுங்க, அவனே பண்ணட்டும்" என வர்ஷினி சொல்லி, அவர்களின் மகன் வெட்டியது கேக்கை அல்ல, அவனின் மலர் பாட்டி செய்திருந்த மைசூர் பாகை!

வர்ஷினி அருகில் நின்று, "ஒரு பீஸ் எடு சர்வா" என, எடுக்கவும்.. "நீ சாப்பிடு" என சர்வாவின் கை பிடித்து அவனின் வாயினில் வைக்கப் போக,

"இல்லை, நீ வா!" என்பது போல மகன் குனிய சொல்ல,

"நீ சாப்பிடு கண்ணா!" என, அப்போதும் பிடிவாதமாய் குனிய வைத்து, வர்ஷினி வாயில் வைக்கவும், அவள் ஒரு கடி கடித்தவுடன், பின்பு அதனை சர்வேஸ்வரன் வாயினில் வைத்தான்.

ஈஸ்வரை ரகசியமாக முறைத்தாள். சர்வா அம்மாவிற்கு கொடுக்கிறான் என்பது போல தோன்றினாலும், உண்மையில் அது ஈஸ்வரின் பழக்கம். யாரும் அறியாமல் ஈஸ்வரின் கையினில் ஒரு கிள்ளுக் கிள்ள, "ரத்தக் காட்டேரி" என முணுமுணுத்து, "நைட் பார்த்துக்கறேன் வாடி" என்று ரகசியம் பேசினான்.

எல்லோருக்கும் கொடுத்து முடித்திருந்தாலும், "ம்மா அஸ்வின் மாமா எங்கே?" என,

"அதானே எங்கே?" என அவள் யோசித்து மொபைல் எடுக்கும் போது, "தோ வந்துட்டாங்க" என, அஸ்வின் ஐஸ்வர்யாவின் மூன்று வயதுப் பெண் ஆருத்ராவை பிடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தான்.

"நானும் வருவேன்னு ரகளை" என,

வர்ஷினி “எதுக்கு இவ்வளவு எக்ஸ்ப்லனேஷன்” என முறைத்து பார்க்க.. அதற்குள் அவளின் பெரியம்மா ரூபா வந்து “வாங்க குட்டி பொண்ணு” கையினில் தூக்கி இருந்தாள்.

“அடி வாங்கப் போற நீ” என்ற பார்வை இன்னம் வர்ஷினி அஸ்வினை பார்க்க.. “தெரியாம சொல்லிட்டேன், தெய்வமே விட்டுடுங்க” என சொல்லிக் கொண்டே, சர்வேஸ்வரனின் அருகினில் சென்று அவனைத் தூக்கி கன்னத்தில் முத்தமிட்டு வாழ்த்து சொன்னான்.

“எங்கே என் கிஃப்ட்?” என சர்வா கேட்க.. “ங்கே” என விழித்தவன், “சீக்கிரம் கொடுத்துடறேன்” என,

“அதெல்லாம் முடியாது, இன்னைக்கு தர்றேன் சொன்னீங்க” என,

வர்ஷினியை பரிதாபமாகப் பார்த்தான்.. அவள் சொன்னாலன்றி சர்வா நிறுத்த மாட்டான். இத்தனையும் ஒரு புன்னகையோடு ஈஸ்வர் பார்த்திருந்தான்.

“கேட்கறான்ல குடுங்க” என்று வர்ஷினியும் நிற்க, “சீக்கிரம் கொடுக்கறேன்” என்று அவளிடமும் வாக்குறுதி கொடுக்க,

“இப்படித் தான் போன பர்த்டேல இருந்து சொல்றீங்க” என,

“நானும் பார்த்துட்டே தான் இருக்கேன், எனக்கு யாரையும் பிடிக்கலை” என்று பரிதாபமாச் சொன்னான்.

ஆம்! சர்வா கேட்ட கிஃப்ட் .. “அத்தை”.. அஸ்வின் திருமணம் செய்து அவனுக்கு அத்தை கொண்டு வரச் சொல்ல,

அஸ்வினும் மாட்டேன் என்பது போல எல்லாம் சொல்லவில்லை, ஆனால் எப்படிப் பார்த்தாலும் யாரையும் பிடிக்கவில்லை. “கண்டிப்பா பண்ணிக்குவேன்” என வர்ஷினியிடம் கெஞ்ச, “சரி, பிழைத்துப் போ” என்பது போலப் பார்த்தவள்,

“மாமாக்கு அத்தை ஆன் தி வே கண்ணா” என மகனை சமாதானம் செய்ய, பின்பு அஸ்வினுக்கு கொடுத்து முடித்தவன் தாஸை தேடி ஓடினான். “தாஸண்ணா” என அம்மாவைப் போலவே அழைத்து, சர்வாவே தாஸின் வாயினில் ஊட்டி விட்டான்.

ஆம்! எல்லோருடனும் இறங்கி, இணங்கி பழகும் வகையில் தான் சர்வேஸ்வரனை வளர்த்தாள். ஈஸ்வர் போல கெத்து காட்டி, பெரிய ஆள் என்ற தோரணை எல்லாம் வரவிடக் கூடாது என்பதில் கவனமாய் இருந்தாள் வர்ஷினி.

மகனும் அவளைப் போல எல்லோருடனும் எளிமையாய் பழகினான். வர்ஷினியின் இந்த எண்ணங்கள் புரிந்தாலும், ஈஸ்வர் எதிலும் தலையிடுவது இல்லை. தன்னை விட நன்றாய் வளர்ப்பாள் என்ற நம்பிக்கை இருந்தது.

பார்ட்டி முடிந்து, எல்லோரும் வீடு சென்று விட.. மகனை உறங்க வைத்து கொண்டிருந்தாள் வர்ஷினி. ஈஸ்வர் அதனை வேடிக்கை பார்த்து அமர்ந்திருந்தான்.

இமைக்காது தன்னைப் பார்த்து அமர்ந்திருந்த ஈஸ்வரை அவளால் முறைக்கக் கூட முடியவில்லை. அவனைப் பார்த்தாலே ஒரு வெட்கம் வந்து தொலைத்தது, அப்படி ஒரு பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

“எதுக்கு இந்த பார்வை” என வர்ஷினி அவனின் காதில் விழும்படி முணுமுணுக்க, எதையும் ஈஸ்வர் காதினில் வாங்கவில்லை பார்ப்பதையும் நிறுத்தவில்லை.

சர்வா உறங்கி விட்டான் எனத் தெரிந்ததும், அவளை அப்படியே தூக்கிக் கொண்டு நீச்சல் குளம் போனவன், அதில் இறக்கி எல்லாம் விடவில்லை.

நீச்சல் குளத்தின் திட்டில் அவளை அமரவைத்து, தானும் அமர்ந்து கொண்டு, தண்ணீரில் கால் விட்டுக் கொண்டான், அவளையும் விட வைத்தான். வர்ஷினி அவனைப் பார்க்க பார்வையை புரிந்தவனாக, “நீச்சல் உடை தானே கொஞ்ச நேரம் போகட்டும்” என்று ஒரு மௌன சிரிப்போடு சொல்ல,

அதை கவனியாதவளாக, “முதல்ல எல்லாம் என்னோட பார்வை உங்களுக்குப் புரியாது. இப்போ நான் பார்த்தாலே ஓரளவுக்கு கெஸ் பண்ணிடறீங்க” என,

தோளோடு அணைத்துக் கொண்டவன், அப்படியே அந்த ஏகாந்தத்தை அனுபவித்து அமர்ந்திருந்தான். வர்ஷினியோடான வாழ்க்கையை ஒவ்வொரு நொடியும் அனுபவித்தான். வாழ்க்கை இதை விட யாருக்கும் சிறப்பாய் இருக்குமா என ஈஸ்வருக்கு தெரியவில்லை.

சிறிது நேரம் பொறுத்தவள், “இன்னம் கொஞ்சம் நேரம் விட்டீங்க, நான் தூங்கிடுவேன்” என்று சிரிக்க,

“அதுக்கு தானே தண்ணிக்குள்ள கால் விட வெச்சிருக்கேன்” என,

“நாங்கல்லாம் தண்ணிக்குள்ளயே தூங்குவோம்” என,

“அப்போ வா” என அப்படியே இழுத்து, மீண்டும் தண்ணீருக்குள் மூழ்க, சிறிது நேரம் நீந்தியவர்கள், “நீங்க ஸ்விம் ட்ரெஸ் போட சொன்னீங்க” என ஞாபகப் படுத்தினாள்.

“நீ இந்த நைட் டிரஸ் குள்ள, ஸ்விம் ட்ரெஸ் போட்டிருப்ப. எனக்குத் தெரியும்” என காதலாகப் பார்க்க,

“எப்படி தெரியும்? ஒளிஞ்சு பார்த்தீங்களா?” என அதிபுத்திசாலித்தனமாகக் கேட்க,

“அட லூசே” என்பது போலப் பார்த்தவன், “உன்னை ஒளிஞ்சு பார்ப்பாங்களாக்கும், போடி! உன் பையன் கூட ஹைட் அண்ட் சீக் விளையாண்டா இப்படி தான் யோசனை போகும்!” என சீண்டினான்.

“ஹி, ஹி” என வர்ஷினி சிரித்து வைக்க,

“நான் கேட்டு நீ எதை மறுத்திருக்க” என்றவன், “தண்ணிக்குள்ள உன் நைட் ட்ரெஸ் எங்க இருக்கு பாரு” என விஷமமாக சிரித்தான்.

அசடு வழிந்தவள் வெட்கத்தில் அவனை அணைத்துக் கொள்ள,

“சர்வாக்கு மூணு வயசாகிடுச்சு வர்ஷ்” என்றவன், “எனக்கு ஒரு பொண்ணை பெத்துக் குடு, உன் மாதிரியே இந்த கண்ணோட” என,

“ம்ம்” என்ற முனகல் மட்டுமே வர்ஷினியிடம், மனைவியின் சம்மதம் ஈஸ்வரை வேறு உலகத்திற்கு அழைத்துச் செல்ல, அவளையும் வேறு உலகத்திற்கு அழைத்து செல்ல ஆரம்பித்தான்.

**ஈஸ்வரின் நெஞ்சில் எங்கும் அவளின் பிம்பம்!**
**அவனில் சிந்தும் சந்தம் அவளின் சொந்தம்!**

சங்கீத வர்ஷினி விஸ்வேஸ்வரனுடன் உடலால் மட்டுமல்ல, மனதால், சொல்லால், செயலால் என்று அனைத்திலும் ஒன்றிவிட்டிருந்தாள்.

கஷ்டங்கள், குறைகள் எல்லாம் அவளை விட்டுப் போயிருந்தன.

சங்கீத ஜாதி முல்லை மலர்ந்து மனம் வீசிக் கொண்டிருந்தது!

**திரைகள் இட்டாலும் மறைந்து கொள்ளாது**
**அணைகள் இட்டாலும் வழியில் நில்லாது**
**பொன்னி நதி... கன்னி நதி... ஜீவ நதி...**

**யாருக்காகவும் எவருக்காகவும் நிற்பதில்லை**
**காலமும் நேரமும் தனி மனித வாழ்க்கை பயணமும்!**

(நிறைவுற்றது)